JL
XMm.11,N09
N09.2
161987

OFFICE OF THE PRESIDENCY
6 MAY 1911
MADRAS.

மதராஸ் புல்லடீன் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் II.] 1910-ம் ஸெப்டெம்பர்மீ 10உ. [இலக்கம் 1.

இந்த வர்த்தமானி.

இந்த இலக்கத்துடன் வர்த்தமானிக்கு இரண்டாம் வருஷம் ஆரம்பமாகிறது; அது எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப் பட்டதோ அந்தக்காரியங்கள் கூடியவரையில் நிறைவேறியிருக்கிறதாகச் சொல்லலாம். இந்த வர்த்தமானியின் பிரதி சஞ்சிகைக்காகவும் ஒவ்வொரு கிராம சங்கத்தாரும் ஆவலாகக் காத்திருந்து, அது வந்தவுடனே அதை எல்லாருக்கும் படித்துக்காட்டி, அது விஷயமாய்த் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டுவருவது ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்குத் தெரிந்தேயிருக்கிறது. அந்தந்த ஊர்களில் பெருத்த தொகைகள் டிபாஸிட் செய்யப்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவென்றால், இந்த வர்த்தமானியில் சமுதாய பிரயோஜனத்தை உத்தேசித்து நடத்தப்படும் கூட்டுத் தொழிலைப்பற்றி விளக்கப்பட்ட திருத்தமான கொள்கைகளைப் பொது ஜனங்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டிருப்பதேயாம். உத்தரவாதம் வரையறுக்கப்படாமலிருப்பதனால் உண்டாகக்கூடும் அபாயங்களைக் குறித்து சங்கங்களுக்கு இடைவிடாமல் நினைப்பூட்டிவருவதற்கும் இந்த வர்த்தமானி பிரயோஜனப்படுகிறது; பணம் பத்திரமாயிருப்பதற்கும் வெளியேயிருப்பவர்கள் புது முதல் கட்டிவைக்கும்படி தூண்டுவதற்கும் மேலேகண்டபடி நினைப்பூட்டிவருவது அவசியமாயிருக்கிறது. இந்த வர்த்தமானியின் இன்னொரு முக்கியமான

நோக்கமென்னவென்றால், டை கூட்டுத்தொழில் முயற்சியைப்பற்றிய சமாசாரங்களைப் பொதுவாய் ஜனங்களுக்குள் பரவச்செய்வதும், அது மூலமாய் அவர்களை அந்த முயற்சியின் அபிவிருத்திக்காக உழைக்கும்படிச் செய்வதுமேயாகும். தனித்தனி சந்தாதாரர்களின் சங்கியை அதிகமாயிருக்கிறது; மேலும், ஜனங்கள் இந்த முயற்சியில் முன்னிலும் அதிகமாய் நம்பிக்கைகொள்ளத் தலைப்பட்டுமிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பணத்தைத் தாராளமாய் இந்த சங்கங்களில் போட்டுவைக்கிறார்கள்; மற்றும் அநேகர் இதற்காக இலவசமாய் உழைக்க முன்வந்துகொண்டிருக்கிறார்கள். இந்த வர்த்தமானியைக் கையில் வைத்துக்கொண்டிருக்கிற எவரும், தமக்கு உதவிசெய்ய மனமிருந்தும், இன்னபடி காரியம் நடத்துவது தமக்குத் தெரியாமையால் அந்தப்படி உதவிசெய்யத் தம்மால் ஆகவில்லையென்று சொல்ல முடியாது. மேலும், இந்த வர்த்தமானியானது இதர சங்கங்கள் எவ்வளவுவரையில் அபிவிருத்தியடைந்திருக்கின்றனவென்பதைத் தனிச் சங்கங்களுக்குத் தெரிவிப்பதற்கும் அச்சங்கங்கள் பரஸ்பரம் தங்கள் அபிவிருத்தியை ஒத்திட்டுப் பார்க்கச் சாத்தியமாயிருக்கும்படி செய்வதற்கும் பிரயோஜனப்படுகிறது. கடைசியாக இந்த வர்த்தமானியைப் படிப்பவர்கள் இது விஷயமாய் இந்த இலாகாவில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளைத் தெரிந்துகொள்வதற்கும் இது உதவியாயிருக்கிறது; டை உத்தரவுகள் படிப்பவர்களுக்குச் சௌகரியமான மாதிரியாகப் பிரசுரிக்கப்படுகின்றன.

சங்கங்களை அனுபவரீதியாய் நடத்திவருவதில், கவனிக்கத்தக்கவைகளாகவாவது பின்பற்றி அனுசரிக்கத் தக்கவைகளாகவாவதுள்ள பல சம்பவங்கள் உண்டாகுமென்பது நிச்சயம். டை கூட்டுத்தொழில் முயற்சியின் க்ஷேமலாபங்களை முன்னிட்டு, அப்படிப்பட்ட சம்பவங்களை இந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அந்தந்த சங்கத்தார் மாத்திரமேயல்லாமல் இன்ஸ்பெக்டர்கள்கூடத் தெரிவிக்கவேண்டும். இது விஷயமாய்ச் சுறுசுறுப்பு அதிகரிக்குந்தோறும், விஷயதானங்களும் வரத்தலைப்படுமென்று எதிர்பார்க்கலாகிறது.

161987

JL
XMm 211, N19
N01.2

6 - MAY 1911
MADRAS.

கூட்டுத்தொழில் நாணயம்.

——(:-:)——

பம்பாயிலுள்ள கோவா யூனியன் பள்ளிக்கூட மண்டபத்தில் மிஸ்டர் எப். எல். டிஸில்வா என்பவர் "ஐக்கிய நாணயச் சங்கங்கள்" விஷயமாய் ஒரு பெருங் கூட்டத்துக்குமுன் ஒரு பிரசங்கம் செய்தார்; அந்த பிரசங்கத்தில் அவர் சொன்னதாவது:—

"சுமார் ஐந்து வருஷங்களுக்கு முன்னே 1904-ம் வருஷத்து ஐக்கிய நாணயச்சங்க ஆக்ட் என்னும் ஒரு சட்டமானது இந்திய சாஸன புத்தகத்திலே சேர்க்கப்பட்டது. ஒரு சட்ட நிருபண சபையாரைச் செய்யும்படி கட்டளையிடக்கூடிய மிகவும் சாமானியமும் ஆடம்பரமற்றதுமான சட்டங்களில் இது ஒன்றாகும்; ஏனெனில், அதன் பீடிகையிலே சொல்லியிருக்கிறபடி, "பயிரிடுகிறவர்களுக்குள்ளும், கைத்தொழிலாளர்களுக்குள்ளும், மிதமான பொருள் வரவுடையவர்களுக்குள்ளும் சிக்கனத்தையும் தன்முயற்சியையும் கூட்டுத்தொழிலையும் தூண்டுவது" அதன் நோக்கமாகும். அப்படியிருந்தும் அது வெகு தூரம் வியாபிக்கும்படியான பிரயோஜனம் நிரம்பியதாயும், இந்த விரிவான தேசத்தில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பான்மையோருக்கு அது முக்கியமானதாயும் இருப்பதால், நம்முடைய ஜீவதசையில் ஜாரிசெய்யப்பட்ட வேறே எந்த சட்டத்தைக்காட்டிலும் இந்தச் சாமான்யமான சட்டத்தினால் தேசத்துக்கு அதிக நன்மை உண்டாயிருக்குமென்று சொல்வது மிகைபடக் கூறுவதாகமாட்டாது. ஏனென்றால், எவர்களுக்கு இந்தச் சட்டம் நேராகவும் பிரயோஜனப்படத்தக்கதாகவும் எட்டவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறதோ அந்த வகுப்பைச் சேர்ந்த ஜனங்களுக்கு வெகுசாய்வி விதிபபதற்குச் சம்பந்தப்பட்ட சட்டத்தைத் தவிர வேறெந்த சட்டமும் ஒருபோதும் எட்டுவதில்லை; அவர்கள் யாரென்றால் தாழ்ந்த பயிரிடுவோரும், ஏழைக் கைத்தொழிலாளிகளும், கிராமக் கடைக்காரரும், அற்ப சாமான்களைக்கொண்டு திரிந்து விற்பவரும், யந்திரவேலைக்காரருமாம்; கூலிவேலை செய்வோரையும் இந்த வகுப்பில் சேர்க்கலாம். இவர்களைவிடச் செல்வமான நிலையிலுள்ள கிராமவாசிக்கும் நாகரிக நிலையிலுள்ள பட்டணவாசிக்குங்கூட இந்த சட்டம் சம்பந்தப்படுகிறது. இந்தச் சட்ட ஏற்பாட்டை எடுத்துச் சொல்லுகையில் இந்தியா கவர்ன்மெண்டார், "ஜனங்களுக்குள் மற்றவர்களைவிட அதிக கல்வி கேள்விகளுடைய வகுப்பார்களை விவேகத்துடன் ஒத்துழைக்கவேண்

டுமென்று" ஆவலாய்க் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் அப்படி ஒத்து ழைப்பார்களென்பதில் கவர்ன்மெண்டாருக்கு அவ்வளவு நிச்சயமிருந்தபடி யால், ஷை சாஸனத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில் கொஞ்சமும் கால தாமதமாவதற்கில்லை; "காரிய சித்திக்கேற்ற ஏற்பாடுகளைச்செய்ய இப்போது சமயம் வந்துவிட்டபடியால், வேலைசெய்யத் தொடங்குவதில் ஆலசியமில்லா மலிருக்கவேண்டுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விரும்புகிறார்." அந்த வேண்டுகோளுக்கு நீங்கள் இணங்கவேண்டுமென்று கத்தோலிக்கு ஐக்கிய சங்கத்தை முன்னிட்டு உங்களைக் கேட்டுக்கொள்வதே இன்று மாலை என்னுடைய உத்தேசமாகும்; அந்தப்படி நீங்கள் இணங்கும் போது, 13-வது லியோ என்னும் போப் குருவானவர்—உயர்தரக் கல்விப்பயி ற்சி யென்னும் பாக்கியம் பெற்றவர்களை ஒத்துழைக்கும்படி ஆஞ்ஞாபித்தெ முதிய அவருடைய மிகப் பிரசித்திபெற்ற சுற்றுத் திருமுகங்களொன்றில் பிரயோகிக்கப்பட்ட அந்த விசேஷமான வார்த்தைகளை ஞாபகத்தில் வையுங் கள். அந்த வார்த்தைகள் எவையென்றால்—"ஏழைகளின் நன்மைக்காகத் தாங்கள் உழைப்பதா அல்லவா என்று நிச்சயிக்கும் சுதந்தரம் அவர்களுக்கில் லையென்பதை அவர்களே யோசிக்கவேண்டுமென்பது நமது விருப்பமாகும்; அது கேவலம் அவர்களுடைய கடமையாய் ஏற்பட்டுள்ள விஷயமே." ஆகவே மதவிஷயத்திலும் ராஜாங்க விஷயத்திலும் ஒருசரியாய் மிக உயர்ந்த அதிகா ரியினால் ஆஞ்ஞாபிக்கப்பட்ட கடமையென்று இதை யெண்ணி, ஐக்கிய நாணயச் சங்கங்களென்றால் என்ன என்பதை நாம் ஆலோசிப்போம்."

பரஸ்பர லாபம்.

மிஸ்டர் டிவில்வா என்பவர் கூட்டுத்தொழில் என்றால் இன்னதென்பதை விளக்கி அதற்கு உதாரணமாக, அவர்கள் சந்தோஷகரமாய்க் கூடியிருந்த கோவா யூனியன் மண்டபத்தையும், அவர்கள் கூடுவதற்குக் காரண பூதமா யிருந்த கத்தோலிக்கு ஐக்கிய சங்கத்தையும் எடுத்துக் கூறினார்; மேலும் அவர் கூட்டுத் தொழில் என்பதற்கு இதைக்காட்டிலும் தொழில்சங்கேத மான இன்னொரு அர்த்தம் உண்டென்றும், அந்த அர்த்தமானது முதலாளி யும் தொழிலாளியும் வாடிக்கைக்காரரும் பரஸ்பர லாபத்துக்காக ஒன்றுசேர் வதனால் சித்திக்கிறதென்றும் சொன்னார். அவர் இப்போதுள்ள வெவ்வேறு வகையான கூட்டுத்தொழில் சங்கங்களைக் கணக்கிட்டுச் சொல்லி, கூட்டுத் தொழிலின் ஒரு அம்சமாகிய கூட்டுத்தொழில் முறையாய்ப் பணம் போட்டு வைப்பதைப்பற்றி மாத்திரம் பேசுவதே தம்முடைய நோக்கமென்றார். ஐக் கிய நாணயச் சங்கங்களின் உற்பத்தியையும் அபிவிருத்தியையும் சுருக்கமாய் எடுத்துக்கூறின பிறகு, அவர் சொல்லியதாவது—"ஆகவே, ஐக்கிய நாண யச் சங்கமென்பதென்ன? உற்பத்தியை உண்டாக்கத்தக்க காரியங்களுக்கா கத் தங்களுக்குள்ளாகவே கடன் கொடுத்துக்கொள்ளும் பொருட்டுத் தங்கள் சமுதாய நாணயம் கூட்டுப்பொறுப்பு ஆகிய இந்த ஈட்டின்மேல் பணம் சே

ரிக்கும் ஏழைகளின் சேர்க்கையே அப்படிப்பட்ட சங்கமாகும். அப்படிப் பட்ட சங்கத்தின் நோக்கமானது அதைச் சேர்ந்தவர்களுக்கு சுலப வட்டிக் குப் பணம் கிடைக்கும்படி செய்து அதைக்கொண்டு அவர்களைத் தங்களுக் குத்தாங்களே பொருள் சம்பாதித்துக்கொள்ளக்கூடியவர்களாய்ச் செய்வதே யல்லாமல், அவர்களின் லாபத்தின் பொருட்டுப் பிறர்களுடன் வர்த்தகம் செய்வதல்ல. பாங்கி அல்லது நிதியில் வட்டிக்குப் பணம் போட்டு ஈவுத் தொகைகள் வாங்குவது போல் லாபம் சம்பாதிப்பதற்காக முயற்சி செய்வது இந்த சங்கத்தின் கருத்தல்ல; பலவீனத்தினாலும் வறுமையினாலும் இன்ன இடத்தில் பணம் கிடைக்குமென்பது தெரியாதவர்களாயும், தெரிந்தாலும் அதற்காக தாங்கமுடியாத வட்டி கொடுக்கவேண்டியவர்களாயும் இருக்கிற வர்களுக்கு அந்தப்பணத்தைக் கிடைக்கும்படி செய்வதே இந்தச் சங்கத்தின் ஒரே தொழிலாகும். கூட்டுத்தொழில், சிக்கனம், தன்முயற்சி ஆகிய இவை களை அபிவிருத்தி பண்ணுவதே அதன் பிரதான லட்சியம். அதை பாங்கி என்று சொல்வது உங்களுக்கு கிஷ்டமானால், அப்படியே பாங்கி என்று சொல் லலாம்; ஆனால், சாதாரணமான ஒரு பாங்கியில் லட்சக் கணக்கான ஐவே ஜுடன் லேவாதேவி நடப்பதாயிருந்தால், இந்த பாங்கியில் நூற்றுக்கணக் கான ஐவேஜுகளுடன்தான் லேவாதேவி நடக்கிறது. பெருத்த லாபம் கிடைக்குமென்று எதிர்பார்த்துச் செய்யப்படும் வர்த்தகங்களில் அதன் பண த்தை உபயோகிப்பதில்லை. அந்தச்சங்கத்தார் கடன் கொடுக்கும் பணமா னது அவர்களின் கண்ணுக்கெதிராகவே உபயோகிக்கப்படுகிறது. சரக்கு களையும் கிடங்குகளையும் ஈடாகக்கொண்டு அந்த சங்கத்தார் கடன் கொடுப்ப தில்லை; யோக்கியதையும் நன்னடக்கையுமே அதற்குப் பொன்போல் விலை யுயர்ந்த ஈட்டுப் பொருள்களாம். ஒரு மனிதன் தான் நம்பத்தக்கவன் என் றும் தான் கேட்கும் கடனைத் துர்வினியோகப்படுத்த மாட்டானென்றும் மாத் திரம் காட்டும் பட்சத்தில், அவன் எவ்வளவுதான் ஏழையாயிருந்தாலும், அவன் கேட்கும் கடன் அவனுக்குக் கிடைக்காமற் போகாது. ஏனென்றால், அப்படிப்பட்டவர்களுக்காகவேதான் அந்தச் சங்கம் ஏற்பட்டிருப்பதே யொழிய மற்றவர்களுக்காக ஏற்பட்டதல்ல." உபந்நியாசகர் பிறகு அப்ப டிப்பட்ட ஒரு சங்கத்தின் வெவ்வேறு லட்சணங்களைக் குறித்து விவரமாய்ச் சொன்னார். அவைகள் எவையென்றால்—விசேஷ விஷயங்களில் தவிர மற்றப் படி உற்பத்தியை உண்டாக்கத்தக்க காரியங்களுக்காகவோ அல்லது செட் டாய்ப் பணத்தைச் செலவிடுவதற்காகவோ மாத்திரமே கடன் கொடுப்பது; சங்கத்தைச் சேர்ந்தவர்களே சங்கத்தை நிர்வாகம் செய்து அதன் விசாரணை யை நடத்துவது; சங்கத்து மெம்பர்களின் நபர்ஜாமீன்மேலும் இன்னும் இர ண்டொரு ஜாமீன்களின்மேலும் கடன் கொடுப்பது; லாபத்தையே பிரதான மாக நாடாமல் எல்லா மெம்பர்களுக்கும் கூடுமான வரையில் சுலபமாகப் பொதுவாய்ச் சகாயம் செய்வதே ஐக்கியநாணயச் சங்கத்தின் நோக்கமாகை யால், லாபம் உண்டாகவேண்டுமென்ற விருப்பமாவது ஆவசியகமாவது இல்

லாமை; இவையல்லாமல், அதற்குத் துரைத்தனத்தார் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் சுதந்தரங்களாலும் மெம்பர்கள் சம்பளமில்லாமல் இலவசமாய்ச் செய்யும் ஊழியத்தினாலும் சங்கத்தின் காரியநிர்வாகச் செலவுகள் கூடி வந்தன. ரிஸெர்ஸ் பண்ட் என்னும் சேமநிதியானது மிகவும் முக்கியமானதென்றும், ஒரு சங்கம் வேலைசெய்வது நின்றுபோனாலும் அந்த நிதி விஷயமாக எவருக்கும் பிரத்தியேகமாய்ப் பாத்தியதை கிடையாதென்றும் மிஸ்டர் டிவில்வா வற்புறுத்திச்சொன்னார். பின்னும் அவர் சொன்னதாவது:—"ஒருவருக்கொருவர் தெரிந்திருப்பது, பரஸ்பரம் உத்தரவாதம் வகித்திருப்பது, ஒருவர் செய்வதை யொருவர் கவனமாய்ப் பார்த்துவருவது, உத்தரவாதம் இவ்வளவென்று நிர்ணயிக்காமலிருப்பது, லாப நஷ்டங்களுக்கு சமுதாயத்தில் பாத்தியப்படுவது, நபர்ஜாமீன், மெம்பர்களுக்குச் சமுதாயத்தில் கிடைக்கும் லாபத்தைத் தவிர தனித்தனியாக லாபமில்லாமை, பலமான ரிஸர்வ் பண்ட் என்னும் சேமநிதி ஏற்படுத்திக் கொள்வது ஆகிய இவைகளே ரெய்பெய்ஸன் (Raiffeisen) சங்கம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய முக்கிய சாதனங்களாகும். உத்தேச காரியம் நிறைவேறுவதற்கேற்ற விதமாய் இந்த சாதானங்கள் ஆச்சரியகரமாக அமைந்திருக்கின்றன வென்றும், அவைகள் எவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டனவோ அவர்களுக்குச் சுலபமாயும் விளங்கக்கூடியவைகளாயும் இருக்கின்றனவென்றும், சந்தேகத்துக் கிடமில்லாத ஈடு அவைகளால் ஏற்படுவதுடன் அவைகளைக்கொண்டு சங்கத்தின் காரியங்களைத் திறமையாய் நடத்தக்கூடியதாயிருக்கிறதென்றும், மிகத்தாழ்ந்த வகுப்பாருக்கும் அவைகளைப் பொருத்தக் கூடுமென்றும், எவர்களுக்குப் பிரயோசனப்படும்படி அவைகள் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்களை மேலான நிலைக்குக் கொண்டுவரக் கூடியவைகளேயன்றி கெடுத்துவிடக் கூடியவைகளல்ல வென்றும், இவைகளெல்லாவற்றுக்கும் மேலாக, பாமர ஜனங்களுக்கு அறிவுபுகட்டி, அது மூலமாக அவர்களைத் தன் முயற்சியையேநாடும்படி செய்து அவர்களுக்குள் பரஸ்பரம் சகாயம் செய்துகொள்ளும் குணமும் ஒத்துழைக்கும் தன்மையும் அவைகளினால் ஏற்படுகின்றனவென்றும் அதனால் மிகவும் பிரயோஜனகரமான பலன்கள் சித்திப்பது நிச்சயமென்றும் நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். நம் தேசத்திலும் கிராமங்களின் தேவைகளுக்கு ரெய்பெய்ஸென் (Raiffeisen) சங்கமே மிகப் பொருத்தமாய் அமைந்திருக்கிறதென்னும் விஷயத்தை உங்களுக்கு எடுத்துக்காட்டி யிருக்கிறேனென்றும் நம்புகிறேன்."

நேர்விண்ணப்பம்.

நகர சங்கத்தை நடத்துவது கஷ்டமா யிராதென்று எடுத்துக்காட்டி ஒரு கத்தோலிக்கு நாட்டுச்சங்கத்தை நடத்தும்விஷயத்தில் கிராமத்திலுள்ள கத்தோலிக்கு கோயிலின் சகாயமும் கிராம கத்தோலிக்கு குருவின்சகாயமும் கூடக்கிடைக்கு மென்பதை விளக்கி, அதன் பிறகு மிஸ்டர் டிவில்வா தமது

பிரசங்கத்தை அடியிற் கண்டபடி முடித்தார்:—"கனவான்களே, பெண்மணிகளே, இப்பொழுது நான் உங்களைச் சில கேள்விகள் கேட்பதற்கு எனக்கு அனுமதி தரவேண்டும். அவை என்னவென்றால்: ஐக்கியநாணயச் சங்கத்தால் எவ்வளவு சொல்லிமுடியாத பாக்கியம் உண்டாகிறதென்று உங்களுக்கு எடுத்துக் காட்டினே னல்லவா? அது உங்களுடைய அத்தியந்தமான ஒற்றுணர்ச்சிக்கும், உங்களுடைய மனப்பூர்வமான ஆதரவுக்கும், உங்களுடைய மிக ஊக்கமான பிரயத்தனங்களுக்கும் பாத்திரமான ஸ்தாபனமென்று உங்களுக்கு நிச்சயமாய் ஏற்பட்டதா? ஒரு சங்கத்தை அமைத்து நடத்த உங்களால் முடியுமென்று உங்களுக்குத் திருப்திகரமாய்த் தோற்றுகிறதா? அதில் உங்களுக்குச் சந்தேகம் இருக்கும் பட்சத்தில், நம்முடைய ராஜதானியிலேயே ஒரு வருஷத்துக்குமுன் 8,477 மெம்பர்களுடனும் ரூ.3,70,000மூலதனத்துடனும் 145 சங்கங்கள் இருந்தன வென்பதை ஞாபகத்தில் வையுங்கள்; படித்தவர்கள் மாத்திர மல்லாமல் ஜோடு தைப்பவர்களும், தையற்காரர்களும், நெசவுக்காரர்களுங்கூட சங்கங்களை ஸ்தாபித்து அவைகளைத் திறமையாய் நடத்திவருகிறார்களென்பதையும் ஞாபகத்தில் வையுங்கள். பெண்மணிகளே, நமக்குள் ஏற்பட்டிருக்கும் கூட்டுத்தொழில் என்னும் இந்தப் பெரு முயற்சியை ஓங்கிவளரும்படி ஆதரிப்பது உங்கள் கடமையல்ல வென்று நீங்கள் எண்ணுவீர்களாகில், ப்ரோச் பட்டணத்திலுள்ள உங்கள் சகோதரிகள் செய்வதைப் பார்த்துக் கற்றுக்கொள்ளுங்கள்; அவர்கள் தாங்களாகவே ஒரு சங்கம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்; அதில் காரியதரிசி உள்பட எல்லோரும் ஸ்திரீகளே. நாட்டுப்புறங்களில் மதசம்பந்தமான காரியம் நடத்தி வரும் குருமார்களே, உங்களை நோக்கி மகா வினயமாய் நான் ஒரு வார்த்தை சொல்லத்துணிகிறேன். நீங்கள் ஜனங்களுக்கு ஆசாரியர்களாகவும் சாதாரணமாய் அவர்களுக்கு வழிகாட்டும் தலைவர்களாகவும் இருக்கிறீர்கள். நாங்களும் அப்படியே உங்களை உயர்வாக எப்போதும் கருதி வருகிறோம். பிரதமத்தில் பொருளாதார சம்பந்த முடையதே யானாலும், நல்லொழுக்கத்துக்குற்ற பெரும் சாதனமுமாயிருக்கிற இந்தமுயற்சிக்கு நீங்கள் கைகொடுத்துதவமாட்டீர்களா? இவ்விஷயத்தில் உங்களை மனதிரங்கச் செய்ய என்னாலாகாத பட்சத்தில், பம்பாயில் கடைசியாக நடந்த கோவாபரேடிவ் கான்பரன்ஸ் என்னும் கூட்டுத்தொழில் மகா சபையிலே, யோக்கியனாயும் ஈவிரக்கமுள்ளவனாயும் உள்ள ஒவ்வொருவனுடைய கடமையாய் அமைந்திருக்கும் இந்தக் காரியத்துக்கு உதவிசெய்ய ஆள்களைத் தேடுகையில், தம்மைப் போல் உடைதரித்திருக்கும் கனவான்களைக் கவனிக்காமலிருக்கக் கூடாதென்று சொன்ன ரெவரெண்ட் பாதர் ஸீதர் அவர்களே உங்களுக்கு அவ்விஷயத்தை எடுத்துரைப்பாராக. சிறப்புற்றோங்கும் கவர்னரவர்களின் பொருத்தமுள்ள வார்த்தைகளை இன்னொரு முறை எடுத்துச்சொல்லி எனது இந்த பிரசங்கத்தை முடிப்பதைவிட நான் இனி செய்யத்தக்கது ஒன்றுமில்லை—"தங்களுடைய சகோதரக் குடிஜனங்களின் வாழ்க்கைநிலையை

உயர்த்தி அவர்களுடைய க்ஷேமத்தை அபிவிருத்திசெய்யக் கோரியவர்களாய் ஒருகாரியமும் செய்யாமல் வீண்பேச்சில் பொழுது போக்குவதைவிடப் பரோபகாரம் புரிவதே பெரிதென்றெண்ணும் உண்மைத் தேசாபிமானிகள் அனைவரும் உதவி புரியும்படியாக நான் மனப்பூர்வகமாய் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். பிறர் நன்மைக்காக அனுஷ்டானத்தில் உழைத்து வருவதே ஒரே உண்மையான சுகத்தை அடைவதிலுள்ள ரகசியமாகும்; ஆகவே, இந்த ராஜதானியிலுள்ள பொறுமைசாலிகளான விவசாயிகளின் க்ஷேமத்தின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட இந்த முயற்சியின் விஷயமாய்த் தங்கள் காலத்தையும் கருத்தையும் வினியோகிப்பவர்கள் பூர்ணமும் நிரந்தரமுமான பலனைப் பெறுவார்கள்."

சென்னை மெயில் பத்திரிகை, 1909-ம் வரு ஜுன்மீ 30உ

ஐக்கிய நாணயச் சங்கங்களால் உண்டாகும் நன்மைகள்.

(திருநெல்வேலிஜில்லா வடமலைபுரம் நாட்டுச்சங்கத்தின் மானேஜர் ஆநந்த ராவ் அவர்கள் எழுதியது.)

நம்முடைய தேசமானது ஓர் அகன்ற பயிரிடும் பிரதேசம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். விவசாயமானது ஒரு காலத்தில் நம் தேசத்திலே உலகத்தோரெல்லாம் கண்டு ஆச்சரியப்படும்படி அவ்வளவு நன்றாய் நடந்துவந்ததென்பது எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கும் சங்கதியேயாம்; இப்போதோ விவசாயமானது சீர் குலைந்து துக்கிக்கத்தக்க நிலைக்கு வந்துவிட்டது. அது அவ்வளவு க்ஷீணதசை அடைந்திருந்தும் நமது ஜனங்களுக்குள்ளே 100ல் 90 பேர் இன்னும் விவசாயத்தையே ஜீவனாதாரமாகக் கொண்டிருக்கிறார்கள். சரிகுபடி வேலை முன்போல் அவ்வளவு நன்றாய் இப்போது நடப்பதில்லை; அதற்காகப் பிடிக்கும் செலவு முன்னிலும் அதிகம்; அறுவடையாகும் மகசூலோ முன்னாட்களில் உண்டானதைவிட மெத்தக் குறைவா யிருக்கிறது. கைக்குக் கிடைக்கும் மகசூல் அவ்வளவையும் பயிரிடுகிறவர் அனுபவிக்கிறதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன; அவைகள் அளவுக்கு மிஞ்சி அதிகமா யிருப்ப

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 MAY 1911
MADRAS.

தால் அவைகளை இங்கே எடுத்துச் சொல்லவில்லை. நாம் விவசாயத்தையே நமது ஜீவனத்துக்குப் பிரதான ஆதாரமாகக் கொண்டிருக்கிறபடியால், அதை மேன்மேலும் லாபகரமாயிருக்கும்படிச் செய்வதற்கு இப்போது நாம் ஒருவழி கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. எப்போதும் லாபமே வரும்படியாகவும் இப்போது நேரிடுவதுபோல் நஷ்டமே வராமலிருக்கும்படியாகவும் பார்ப்பது நம்முடைய கடமையாகிறது. முற்காலத்திலே, பயிரிடுகிறவருக்கு ஒருவித செலவுமில்லாமல் எல்லாச் சௌகரியங்களும் கிடைத்தன. இப்போதோ அப்படியில்லை. முற்காலத்திலே காலமழை பெய்துவந்தபடியால், பயிரிடுகிறவர்கள் ஏராளமாய் மகசூல் அறுவடை செய்தார்கள்; இக்காலத்திலோ காலமழை வெகு அபூர்வமாய் விட்டது பூர்வ காலத்திலே, விவசாயக் கருவிகளுக்கு வேண்டிய சாமான்கள் ரயத்து விஷ்டப்பட்ட பாத்திரத்தில் காடுகளில் கிடைத்துக் கொண்டிருந்தன; இப்போதோ அப்படிப்பட்ட சௌகரியங்கள் கிடைப்பதில்லை. முற்காலத்திலே கால்நடைகள் மெத்த சொற்ப விலைக்குக் கிடைத்து வந்தன; இப்போதோ அந்த விலை ஒன்றுக்குப் பத்துமடங்கு அதிகமாய்விட்டது. எல்லா செலவு பாபத்துகளும் முன் வீதங்களைவிடப் பத்துமடங்கு அதிகமாய் ஏறிவிட்டன. இப்படிப்பட்ட நிலைமைகளிலே, ரயத்தானவன் தன் நிலத்தைத் தன் வரும்படிக்கு மெத்தவும் மிஞ்சின செலவு செய்து பயிரிட வேண்டியவனாயிருக்கிறான்; அப்படி பயிரிடுவதற்கும் அவன் முன்பணத்துக்காக உள்ளூர் ஸாவ்கார்களை நாடி, அவர்களிஷ்டப்படி யெல்லாம் நடந்துகொள்ள உடன்பட்டு, அவர்களிடம் காத்துக் கிடக்கவேண்டியிருக்கிறது. முன்னதாகப் பணத்தைக் கடன்வாங்கி வீட்டில் வைத்தால், சரியான பருவங்களில் மழை பெய்யாமற் போவதனால், அந்தக் கடன்தொகை எதை உத்தேசித்து வாங்கப்பட்டதோ அதற்குப் பிரயோஜனப்படாமல் வேறே காரியங்களுக்காக எப்படியோ செலவாய்ப் போய்விடுகிறது. மழை பெய்கிறபோது, அவன் மறுபடியும் பணத்துக்காக விழிக்கிறான். அப்படிக்கல்லாமல், அவன் மழைக்காகக் காத்திருந்து, மழை பெய்கிற காலத்திலே பணத்துக்காக ஸாவ்காரிடத்தில் வரும்பட்சத்தில், இந்த ஸாவ்கார் இது தான் சமயமென்று பிடித்துக்கொண்டு பிறபாடு பணங் கொடுப்பதாக அவனுக்கு நம்பிக்கை உண்டாக்கித் தன்னுடைய பயிர் வேலையை யெல்லாம் மெ எளியவனால் செய்வித்துக் கொள்ளுகிறான். இந்த வேலையை அவனிடத்தில் வாங்கிக்கொண்ட பிறகு, ஸாவ்காரானவன் ரயத்து கேட்ட தொகையை அடிபிற்கண்ட ஷரத்துகளில் எதன் மேலாவது அவனுக்குக் கடன் கொடுக்கக்கூடும் :—

(1) மாதம் ஒன்றுக்கு 100-க்கு 25 வீதம் வட்டியோடு பணத்தைத் திருப்பிச் செலுத்தி விடுவதென்னும் ஷரத்தின் மேல்;

(2) புரட்டாசி ஐப்பசி மாதங்களில் கடன் வாங்கிய பணத்தைப் பங்குனி சித்திரை மாதங்களிலே, இதனிடையில் செல்

லும் காலத்துக்கு வட்டிக்காக அசலில் கால் பங்கு சகிதமாய் அவன் திருப்பிச் செலுத்துவதென்னும் ஷரத்தின் மேல்;

(3) கடன் வாங்கினவன் அறுப்பு காலத்தில் ஒருவேளை பொதி ஒன்றுக்கு ரூபா 30 விலைபோகக் கூடிய தன் பஞ்சை, கடன்காரனுக்கு புறட்டாசி ஐப்பசி மாதங்களிலே பொதி ஒன்றுக்கு ரூபா 16 வீதம் விற்கிறதென்னும் ஷரத்தின் மேல்;

(4) கடன் வாங்கினவன் (1) குறிப்பிட்ட பகுதியில் சொல்லப்பட்ட வட்டியோடு கூட இன்னும் அதிகமாய், ரூபாய் ஒன்றுக்கு ஒருபடி தானியம் கொடுப்பதென்னும் ஷரத்தின் மேல்.

மேற்சொன்ன ஷரத்துகளுக்குள் ஏதாவதொரு ஷரத்தின்படி பணம் கடன் வாங்கப்பட்டிருந்த போதிலும், பணங்கொடுத்த தேதிக்கும் அது திருப்பிச் செலுத்தப்படும் தேதிக்கும் இடையிலுள்ள காலத்தில், கடன் வாங்கினவனுடைய தோட்டத்தில் உற்பத்தியாகும் காய் கறி கனி முதலியவைகளை, கடன் கொடுத்தவன் தன்னுடையவைகளாய் இருந்தாற்போலவே அனுபவித்துக் கொள்ளும்படி யிருக்கவேண்டும். இந்த ஷரத்துகள் இவ்வளவு கடுமையாயிருந்த போதிலும், கடன் வாங்குகிறவனுக்கு சரியான பருவத்தில் பணம் கிடைப்பதில்லை. அவனுக்குத் தருணம் தப்பின பிறகு அந்தப் பணம் கிடைக்கிறது. அப்போது தரையில் ஈரமிராது; ஆகையால், அவசரமாய் நாற்றங்கால் வேலையைக் கவனிக்கவேண்டி வரும். அப்படிப்பட்ட விதைகள் முளையெடுக்கா. அவ்வளவு கஷ்டப்பட்டும் சாதாரணமாய் எதிர்பார்க்கக் கூடிய பலனில் பாதிதான் கிடைக்கும். விதைப்பதற்கும் அறுப்பதற்கும் மத்தியில் களை பிடுங்குவதற்காகப் பணம் வேண்டியிருக்கும். அந்த சமயத்தில் கடனுக்காக ஸாவ்காரிடம் சென்றால், அவன் தன்னிடத்திலுள்ள தானியத்தை லாபத்துக்கு விற்க எண்ணங்கொண்டு தன்னிடத்தில் பணமில்லையென்றும் தானியமாகத்தான் கடன் கொடுக்க முடியுமென்றும் சொல்வான். அப்போது ஏழை ரயத்துக்கு ஸாவ்காரின் வலையில் சிக்கி அவஸ்தைப் படுவதை விட வேறே வழியில்லை. ஸாவ்கார் இதுதான் தனக்குத் தக்க சமயமென்றெண்ணி, அப்போது தானியம் ஊர் விலைப்படி 10 படி விற்றாலும், தன்னிடத்திலுள்ள தானியத்தை 8 படி வீதம் கடன் கொடுப்பான். ஏழை ஜனங்கள் வேறே வழி யொன்றும் இல்லாமல், தானியமாகக் கடன் வாங்கி, அவ்வளவு கிராக்கியாய் வாங்கின தானியத்தைத் தங்கள் வேலையாள்களுக்குக் கூலியாகக் கொடுப்பார்கள். அதன்மேல் கடன் கொடுத்தவன் கடன் வாங்கினவனுடைய புலம் அறுவடையாகும் சமயத்துக்காக ஆவலாய் எதிர்பார்த்திருப்பான். அவன், அறுப்பறுக்கும் சமயத்துக்குச் சரியாய்,

வண்டி மாடுகளை ஓட்டிக்கொண்டு தானியத்தை நிரப்பிக்கொண்டு போவதற்காகக் கோணிப்பைகள் சகிதமாய் களமேட்டுக்குக் காலஹரணமில்லாமல் வந்து சேருவான். இனியும் கடன் வாங்கவேண்டியதற்காக அவனிடம் போகவேண்டிவருமே என்ற பயத்தினால் மாசூலை அவனுக்கு உடனே அளந்து போட்டுவிடுவார்கள்.

ஏதாவது கொடுபடாமல் மிகுந்திருந்தால் அதுவே அவனுக்குத் திருப்தி; ஸர்க்கார் கிஸ்தி செலுத்துவதற்காக அதை நிறுத்திக்கொள்வான். வண்டி நிறைய தானியம் வரப்போகிறதென்று வீட்டில் எதிர்பார்த்துக்கொண்டிருந்த பெண்டுகளும் சிறுவர்களும் ஏமாந்து விசனமடைவார்கள். தானிய உற்பத்தியின் கதி இப்படி யிருக்க, விசேஷ லாபத்தைக் கொடுக்கிறதென்று சாதாரணமாய் எண்ணப்படும் பருத்தி, வாழை, புகையிலை முதலிய கைத்தொழிலுக்கு உபயோகமான பயிர்களின் ஸ்திதியும் இப்படியே இருக்கிறது. ஏனென்றால், அப்படிப்பட்ட மாசூல்கள் வீடுவந்து சேர்ந்தவுடனே வட்டிக்குக் கடன்கொடுப்பவன் தப்பாமல் அவன் முன் வந்து நின்று பாக்கியைச் செலுத்தும்படிக் கேட்பான். அவன் பாக்கி தீர்ந்தபிறகு மிச்சம் ஏதாவதிருந்தால், அது பயிரிடுகிறவனுடைய ஜீவனத்துக்குச் சொற்ப காலத்துக்கு மாத்திரமே போதுமானதாயிருக்கும். வருஷத்தின் மிகுதி காலத்தையெல்லாம் அவன் கூலி வேலை செய்து அதில் கிடைக்கும் வரும்படியைக் கொண்டே கழிக்கவேண்டியிருக்கும். அவன் பிழைக்கும் வழி இந்த மாதிரியாக இருக்கிறது. இதனிடையில் அவன் நிலங்களில் பின்னும் ஒன்றும் விளையாவிட்டால், அவன்பாடு அதோகதிதான். அப்படிக்கில்லாமல் அவன் வயல்களில் ஏதாவது கொஞ்சம் விளைந்தாலும், அவனுக்கிருக்கும் செலவுக்கு அது போதாது. சடங்குகள் செய்யவேண்டி வரும்பட்சத்தில் அந்தச் சடங்குகளுக்கு வேண்டிய செலவுகளுக்காகக் கடன் வாங்கவேண்டி அவன் தன் ஜீவனாதாரமான நிலத்தை அடமானம் வைக்கவேண்டி வரும். அப்படிப்பட்ட கடன்களைத் தீர்க்க முடியாமல் அவன் கடன்காரனுக்குச் செலுத்த வேண்டிய பணத்துக்காகத் தன் நிலத்தை இழந்து விடுகிறான். இப்படி பெண்டு பிள்ளைகளுடன் குடும்பம் குடும்பமாய் தங்கள் நிலத்தைப் போக்கடித்துக் கொண்டு, கூலி வேலைசெய்து பிழைக்க வேண்டிய ஸ்திதிக்கோ, அல்லது பிழைக்கும் வழி தேடி ரங்கூன் முதலிய அந்நிய தேசங்களுக்குக் குடியேறிப்போகவேண்டிய ஸ்திதிக்கோ வந்து விடுகிறார்கள்.

2. பயிரிடும் வகுப்பாரின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்னும் எண்ணத்துடன் 1904-ம் ஸுத்திலே, இந்தியா கவர்ன்மெண்டார்—(1904-ம் ஸுத்திய இந்து தேசத்து 10-வது ஆக்டாகிய) ஐக்கிய நாணயச்சங்க ஆக்ட் என்று சொல்லப்படும் ஒரு சட்டத்தை இந்தியா முழுவதிலும் செலாவணியாகும்படி ஜாரிசெய்தார்கள்; நமது காருண்ய கவர்ன்மெண்டார் இந்த முயற்சியில் வேண்டிய உதவிசெய்ய இவ்விதமாக முன்வந்திருக்கிறார்கள். கட்டுத்

தொழில், தன்முயற்சி, சிக்கனம், பரஸ்பர நம்பிக்கை, காரிய நிர்வாகத் திறமை, காலந்தவறாமை, காரியங்கள் செய்வதில் சுறுசுறுப்பு ஆகிய இந்த குணங்களை நம்மிடத்தில் குடிகொள்ளும்படித் தூண்டுவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். அப்படிப்பட்ட ஒரு சங்கமானது பிரதி கிராமத்திலும் ஸ்தாபிக்கப்பட்டால், மேலே விவரிக்கப்பட்டவைகளைப் போன்ற கஷ்டங்களை அனுபவிக்காமலே விவசாயக்காரர்களுக்கு முன்னிலும் சுலபமான வட்டி வீதங்களுக்குக் கடன் கிடைக்கும். நாட்டுச் சங்கங்களுக்குப் பணம் கடன்கொடுக்கும் காரியத்துக்காக சில ஸென்ட்ரல் பாங்கிகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நாட்டுச் சங்கங்கள் ஸென்ட்ரல் பாங்கிகளிலிருந்து கடன் வாங்கி, அந்தப் பணத்தை ஏழைக் கிராமத்தார்களுக்கு சுலபமான வட்டி வீதத்துக்குக் கொடுக்கவும், அப்படி கொடுத்த தொகையைக் கடன் வாங்கினவனுடைய சவுகரியப்படி அவனிடத்திலிருந்து வரப் பற்றவும் சுலபமாயிருக்கும்படி தக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஏற்பாடிருப்பதனால், கடன் வாங்கவேண்டியவன் மழை காலம் வருவதற்கு முன்னமே கடன் வாங்கவேண்டிய அவசியம் இராது; அந்தப் பருவத்தில் ஸாவ்காரிடம் போகவேண்டிய அவசியமும் ரயத்துக்குக் கிடையாது. மழை பெய்யத் தொடங்கி பயிரிடுவது ஆரம்பமானவுடனே அவனுக்குப் பணம் வேண்டியிருந்தால், கிராம சங்கத்திலிருந்து அவன் பணம் பெற்றுக்கொள்ளக்கூடும். இதனால் அவன் பயிரிடுவதற்குத் தக்க பருவத்தை நழுவவிடாமல் தன் நிலங்களைப் "பருவத்தே பயிர்செய்"யக் கூடியவனாயிருப்பான். தக்க காலத்தில் அவன் மாசூலை அறுக்கலாம். அவன் ஸாவ்காரிடத்தில் அகப்பட்டுக்கொண்டு படவேண்டியவைகளைப் போன்ற எவ்வித கஷ்டங்களு மில்லாமலே சுகமாய் வாழ்வதற்கு இடமுண்டு.

3. ஐக்கிய நாணயச் சங்கங்களைச் சேர்ந்த கடன் விவகாரங்களுக்கு ஸ்டாம்பு கட்டணங்களாவது ரெஜிஸ்டர் செய்வதற்கான கட்டணங்களாவது வேறே செலவுகளாவது கிடையாது. இந்தப் பக்கங்களிலே கடன் வாங்குகையில் இப்போது பிடிக்கும் அனாவசியமான செலவுகளை யெல்லாம் செய்யாமலிருக்கலாம். நாட்டுச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இவ்விதமாக விவசாய வித்தையைச் சீர்படுத்தலாம் இப்படிப்பட்ட உபாயங்களினால் கிராமத்தைச் செல்வ நிலைக்குக் கொண்டுவரலாம்; சேர்த்து வைப்பதற்குக் கிடைக்கும்படியான விவசாயமாசூலை லாபகரமல்லாத விலைக்கு விற்காமல் நாட்டுக் களஞ்சியங்களில் சேர்த்துவைக்கும்படி அனுப்பி அதன்மேல் வரவேண்டிய பணத்தைக் கிரமமாகவும் நிச்சயமாகவும் பெற்றுவரலாம். இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறோம். வடமலைப்புரத்திலே துவரையும் மிளகாயும் விஸ்தாரமாய்ப் பயிர்செய்யப்படுகின்றன. கிராமத்தார்கள் தங்கள் உபயோகத்துக்கு வேண்டிய தானியத்தை எடுத்துக்கொண்டு, மிகுதி ஏதாவதிருந்தால் அதைக் குறைந்த வீதத்திற்கு விற்கவேண்டியதில்லாமல், மதுரையிலுள்ள

பண்டசாலைக்கு ஒப்பந்தப்படி அனுப்புவதில் லாப மிருக்கிறது; அதற்காகச் சேரவேண்டிய பணத்தையும் சாவகாசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இப்படி செய்யும்பட்சத்தில், கிராமத்தார்களுக்கும் பட்டணவாசிகளுக்கும் லேவாதேவிகள் அதிகரித்து, அவர்களுக்கிடையில் கூட்டுத்தொழிலும் சினேகப்பான்மையும் ஏற்படுவதற்கு மார்க்க முண்டாகும். ஸாவ்கார்களிடமிருந்து பணம் கடன் வாங்கும்பட்சத்தில், அதைக் குறித்த தவணைக்குள் திருப்பிச் செலுத்தி விடவேண்டும்; கிரமமான தேதிக்குமுன் அதைத் திருப்பிக் கொடுத்தால், முதலில் ஏற்படுத்திக்கொண்ட கால முழுவதுக்கும் வட்டி செலுத்தும்படியாகவும் இருக்கிறது. சில ஸாவ்கார்கள் பணம் பெற்றுக்கொண்டு ரசீது கொடுப்பதில்லை. ரசீது கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டால், அப்படி கொடுப்பது தங்கள் கௌரவத்துக்குக் குறைவென்றும் ஆகையால் தாங்கள் ரசீது கொடுக்கமாட்டோமென்றும் அவர்கள் சொல்வார்கள். ஏழை ஜனங்கள் எப்போதுமே ஸாவ்கார்களுடன் விரோதமாயிருக்கச் சரிப்படாது. ஸாவ்கார்களுக்குக் கோபம் வந்து விட்டால், அந்த ஏழைகளின் பாடு துக்ககரமாயிருக்கும். சிலர் சரியான கணக்குகள் வைப்பதில்லை. கடன் வாங்கினவன் கொதுவை வைத்த சொத்தை மீட்கவேண்டி வரும்போது அவன் படும் கஷ்டங்களை இவ்வளவென்று சொல்ல முடியாது. ஒரு ஏழையின் நிலம் பணக்காரனுடைய நிலத்துக்குச் சமீபமாய் இருந்துவிடும்பட்சத்தில், அதை இந்தப் பணக்காரன் எவ்விதத்திலாவது சுவாதீனம் செய்துகொண்டு விடுவான். ஒரு ஏழையானவன் ஒரு பணக்காரனிடத்திலிருந்து கடன் வாங்கிவிடும்பட்சத்தில் அவன் காலம் தள்ளுவது மகா கஷ்டம். பணக்காரனுடைய கணக்குகளைச் சரிபார்த்து, அந்தப்படி பார்த்ததனால ஏற்பட்ட முடிவு இன்னதென்பதைச் சொல்ல ஒரு வருமில்லை. கர்ணம சொலலும் வார்த்தையே வேத வாக்கு. ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்திலிருந்து கடன்வாங்கும்பட்சத்தில், அதைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஒரு கால அளவு நிர்ணயிக்கப்படுகிற தென்பதற்கு சந்தேகமில்லை; ஆனால், அப்படி நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் முழுவதுமாவது சிறிதுமட்டிலுமாவது திருப்பிச் செலுத்தப்படும் தொகைகளுக்காக, கடன் வாங்கினவனுக்கு ரசீதுகள் உடனே கிடைக்கும். பணஞ் செலுத்தினவன் ரசீதை வாங்கிக்கொள்வதில்லை யென்று சொன்னாலும், செலுத்தப்பட்ட பணத்துக்குச் சங்கத்தார் ரசீது பிறப்பித்து அதைப் பெற்றுக்கொள்ளும்படி அவனைக் கட்டாயப்படுத்துவார்கள். கடன்தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தப்படும் பட்சத்தில், அந்த முழுதொகைக்காகவும் அவனுக்கு ரசீது கொடுக்கப்படுவதோடு, கடன் பத்திரத்தை ரத்துசெய்து அதுவும் அவனுக்குத் திருப்பிக் கொடுத்துவிடப்படும். கடன்தொகை முழுவதையும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் திருப்பிச்செலுத்த முடியாவிட்டால், அவன் அந்தக் கடன்தொகையில் ஒரு பாகத்தைச் செலுத்தி மற்றதுக்குப் பின்னும் வாயிதா பெற்றுக்கொள்ளலாம்.

4. சங்கத்துக்கு வேண்டிய கணக்குப் புஸ்தகங்களெல்லாம் நன்றாய் பைண்டுசெய்து பக்கங்களில் இலக்கமிட்டு கவர்ன்மென்டாரால் சர்ப்பரா செய்யப்படுகின்றன. கணக்குகளை இன்னவிதமாய்த் தெளிவாகவும் ஒழுங்காகவும் எழுதவேண்டுமென்பதை கவர்ன்மென்டார் சங்கத்துக்குச் சொல்லிக்கொடுக்கிறார்கள். அந்தக் கணக்குகளைக் கவர்ன்மெண்ட் கணித பரிசோதகர்கள் காலமுறையாய்த் தணிக்கை செய்கிறார்கள். பொதுஜனங்கள் அப்படிப்பட்ட சங்கங்களின் யோக்கியதைக்குத் தக்கபடி அவைகளில் நம்பிக்கை வைக்கும்படியாகவும் அவைகளில் தங்கள் பணத்தைப் போட்டு வைக்கும்படியாகவும் அந்த சங்கங்களுக்கு கவர்ன்மென்டார் சுலப சாதனங்கள் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார்கள். அல்லாமலும், அவர்கள் பணங்களைப் போட்டுவைப்பதற்கு ஐக்கிய நாணயச்சங்கங்கள் தக்க பந்தோபஸ்தும் பத்திரமுமுள்ள சேமிப்பிடமாக இருக்கும்படியாய் கவர்ன்மென்டார் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். ஆகவே, பணக்காரர்கள் தங்கள் பணங்களை இதர நபர்களிடத்திலாவது சங்கங்களிலாவது போட்டுவைத்திருந்தால் நஷ்டமாய்ப்போய் விடக்கூடியதுபோல், அவைகள் நஷ்டமாய்ப் போய்விடாதென்ற நிச்சயத்துடன் அந்தப் பணங்களை இந்த சங்கங்களில் அவர்கள் பயமில்லாமல் போட்டுவைக்கலாம்.

5. முக்கியமாய் ரொக்க லேவாதேவியே செய்யும் நாணயச் சங்கங்களை ஏற்படுத்துவதற்காக விசேஷ சௌகரியங்களை இவ்விதமாய்ச் செய்துகொடுத்திருப்பது மல்லாமல். இந்த ராஜதானியிலே தானிய பாங்கிகளை ஏற்படுத்தவும் ஒரு பிரேரேபணை உண்டாயிருக்கிறது. பின்சொன்ன வகையைச் சேர்ந்த பாங்கிகள் கூட ஸ்தாபிக்கப்படும்பட்சத்தில், விவசாயக்காரர்களின் நிலைமை அதிவிசேஷமாய் விருத்தியாவதுடன், அது ஆதியில் எந்த ஸ்திதியிலிருந்ததோ அந்த ஸ்திதிக்குக் கொண்டுவரப்படுமென்பதில் சந்தேகமில்லை. மேலே சொல்லிய ஆக்ட் ஜாரி செய்யப்பட்டபோது 10-சங்கங்கள்தான் இருந்தன; இப்போதோ கிட்டத்தட்ட 400-சங்கங்கள் இருக்கின்றன. நாளுக்கு நாள் அவை நிலையாய் அதிகரித்துக்கொண்டே வருகின்றன வென்பதற்கும் குறிகள் காணப்படுகின்றன. இதனால் இந்த சங்கங்களினால் உண்டாகும் பிரயோஜனங்கள் எவ்வளவுதூரம் பரவி யிருக்கின்றன வென்பது விசதமாகிறது. ஜனங்கள் இந்த சங்கங்களைப்பற்றி மேன்மேலும் தெரிந்துகொண்டு அப்படிப்பட்ட இன்னும் பல சங்கங்களை ஸ்தாபிப்பார்களாகில் இன்னும் அதிக பிரயோஜனகரமாயிருக்கும். திருச்சினாப்பள்ளி, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம், கடப்பை, கர்நூல் இந்த ஜில்லாக்களில் முறையே இப்போதுள்ள வட்டி வீதங்கள் 36, 18, 18, 24, 75, 30. இந்த வீதங்களிலிருந்து 12, 12, 9, 12, 18, 18¾ இப்படியாகக் குறைந்திருப்பதற்குக் காரணம் முக்கியமாய் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டிருப்பதேயாம். இப்படிப்பட்ட சங்கங்கள் மற்ற பாகங்களிலும் ஏற்படும்பட்சத்தில், அதனால் மெத்த

அனுகூலமுண்டாகும். அப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் கேவலம் விவசாயக்காரர்களுக்கு மாத்திரம் உபயோகப்படுவனவல்ல. கைத்தொழிலாளர்களுக்கும் வர்த்தகர்களுக்குங் கூட அவைகள் உபயோகப்படுகின்றன. இந்த சங்கங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் வெகு சொற்பமாயிருக்கின்றன. இந்த முயற்சியைப் பரவச்செய்வதற்கு மேற்படி ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் முன்வரவேண்டும். இந்த சங்கங்களின் விஷயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிற எந்த சங்கத்தையும் அடியிற் கையொப்பமிட்டிருப்பவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். சகாயச் சட்டங்களின் அச்சிட்ட பிரதிகளும் விண்ணப்ப நமூனாக்களும் உபயோகிப்பதற்குச் சித்தமாக அடியிற் கையொப்பமிட்டவர் தம்மிடம் வைத்திருக்கிறார். அவை வேண்டியவர்களுக்கு இலவசமாய்க் கொடுக்கப்படும். இந்த நமூனாக்களில் எழுதவேண்டியவைகளை எழுதி அவைகளை அடியிற் கையொப்ப மிட்டவருக்காவது திருச்சினாப்பள்ளியிலுள்ள கோவாபரேடிவ் ஸெக்ஷன் டெப்புடி கலெக்டர் அவர்களுக்காவது அனுப்பும்பட்சத்தில், அவை விஷயமாய் அவசியமாய் நடத்தவேண்டிய காரியங்கள் நடத்தப்படும்.

ஆநந்த ராவ்,

மானேஜர், வடமலைப்புரம் நாட்டு நாணயச்சங்கம்,

திருநெல்வேலி ஜில்லா.

விவசாய சங்கங்கள்.

———:—:———

இந்து தேசத்தில் கிருஷிகனுக்கு வேண்டியது மூலதனம் மாத்திரமல்ல. பயிரிடுவதற்கு வேண்டிய நல்ல கருவிகள் அவனுக்குக் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது; அவன் வைத்திருக்கிற ஆடுமாடுகள் மெத்தவும் பீடாயிருக்கின்றன; விதைத்தானியங்கள் வாங்குவதற்காகவும் எரு வாங்குவதற்காகவும் அவன் அதிக விலை கொடுக்கவேண்டியதாயிருக்கிறது; ஜீவிப்பதற்குவேண்டிய சாமான்களை அவன் விசேஷ விலைகொடுத்து வாங்கவேண்டியதாயிருக்கிறது. நம்முடைய கிராமங்களில் ஆடுமாடுகள் மேய்வதற்குப் பூமி கிடையாது; ஆகவே, அவைகளுக்குக் கொடுக்கப்படும் தீனி மெத்தவும் பீடாயிருக்கிறது; விறகு கிடைப்பது அபூர்வமாய் விட்டது. பட்டணங்களுக்கும் ரெயில்வே ஸ்டேஷன்களுக்கும் சமீபமாயுள்ள கிராமங்களில் சாதாரணமான கலப்பைகள் வாங்குவதற்குக்கூட முன் கொடுக்கப்பட்ட விலையைப்போல் மூன்றுபங்கு விலை தற்காலத்தில் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது; மேலும், இந்த கிராமங்களில் வேலையாள்களுக்குக் கொடுக்கப்படும் கூலியானது இப்போது ஏறக்குறைய இரண்டு மடங்கு அதிகமாயிருக்கிறது. சாகுபடி செய்யும் காலத்திலும் அறுவடைக்காலத்திலும் குடியானவர்கள் விசேஷ கூலி கொடுக்கவேண்டியிருக்கிறது. எருவின் விலை மெத்தவும் அதிகப்பட்டு விட்டது; அதனால், அநேக ஏழைக் குடியானவர்கள் எருவில்லாமலே பயிர்செய்து திருப்தியடைய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். கால்நடைகள் மெத்தவும் பலவீனப்பட்டு இருக்கின்றன; மேலும், அவைகளின் ஜாதி விசேஷமும் மெத்தவும் பீடாயிருக்கிறது; அதனால் அவைகள் கொடுக்கும் பால் குறைந்துபோயிருப்பதோடுங்கூட, அது நல்ல பாலாகவும் இல்லை; மேலும், நல்ல நெய் என்பது தற்காலத்தில் கிடைப்பதே கஷ்டமாய் விட்டது. அனேகருக்குப் படிப்பு கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இவைகளையெல்லாம் பார்த்தால் கூட்டுத்தொழில் முயற்சி ஆரம்பிப்பதற்கும், அதனால், ஜனங்களுக்கு உண்டாயிருந்த ஒரு பெருத்த குறைவைப் பரிகரிப்பதற்கும் இதுதான் தக்க சமயமென்று தெரியவருகிறது. இந்த தேசத்திலே கூட்டுத்தொழில் முயற்சியைப் பரவச் செய்வதில் நாம் இனி என்ன முறைகளை அனுசரித்து வேலைசெய்யவேண்டியிருக்கிறதோ அதை இங்கே எடுத்துச்சொல்ல உத்தேசிக்கிறேன்.

ஒவ்வொரு கிராமப் பாங்கியின் சகாயச்சட்டங்களையும் ஒருவகையாகத் திருத்தவேண்டும்; அந்தப்படி திருத்துவதனால், அந்த பாங்கியைச்சேர்ந்த மெம்பர்களுக்கு மூலதனம் உதவுவதும் அவர்கள் கட்டும் டிபாஸிட் தொகைகளை வரப்பெற்றுக் கொள்வதும் ஷை பாங்கின் அலுவலாயிருப்பது மாத்

திரமே யல்லாமல், அந்த பாங்கார் அவர்களுக்கு சாகுபடி செய்வதற்கு வேண்டிய கருவிகளும், ஆடுமாடுகளுக்குத் தீனியும், எருவும், விதைத்தானியங்களும், சாகுபடி செய்வதற்கு வேண்டிய இதர சாமான்களும் சர்ப்பரா செய்யக் கூடியவர்களாயும் இருக்கவேண்டும். தண்ணீர் இறைப்பதற்காகவும் கரும்பைப் பிழிவதற்காகவும் விலையுயர்ந்த மாதிரியான யந்திரங்களைச் சொந்தமாய் வைத்திருப்பதும், நீராவிக் கலப்பைகளையும் நீராவியைக்கொண்டு போரடிப்பதற்கான யந்திரங்களையும் வாங்குவதும் சில சங்கங்களுக்கு சாத்தியமாயிருக்கலாம். எனக்குத் தெரிந்தவரையிலும், இம்மாதிரியான ஏற்பாட்டை அனுசரித்து விருத்தி செய்வதற்கேற்ற சகாயச் சட்டங்கள் செய்யப்பெற்றுள்ள சங்கம் ஒன்றே ஒன்றுதான் நாளதுவரையிலும் இருக்கிறது; அதுதான் ஒத்தக்கடை நாட்டுச்சங்கம் என்பது. இந்த சங்கத்தார் தங்களுடைய வேலையை எம்மாதிரியாய் விருத்திசெய்து, இப்படிப்பட்ட இதர சங்கத்தார் இவர்களைப் பின்பற்றி நடக்கும்படியாகக் காரியம் நடத்த வேண்டுமென்பதை நான் இப்போது சுருக்கமாய் எடுத்துச் சொல்லுகிறேன். இம்மாதிரியான வேலையை ஏற்றுக்கொள்வதில் உண்மையாய் அக்கறையெடுத்துக்கொள்வதாகக் காணப்படுகிற சில புத்திசாலிகள் இந்த சங்கத்துடச் சேர்ந்திருக்கிறார்களென்பதைக் கவனிக்க சந்தோஷகரமாயிருக்கிறது; இந்த சங்கத்திலே சகல ஜாதியார்களும் சேர்ந்திருக்கிறார்கள்; மேலும், இதில் பலவிதமான அந்தஸ்துள்ளவர்களும் மெம்பர்களாய்ச் சேர்ந்திருக்கிறார்கள் அதன் மெம்பர்களுக்குள்ளே, பிராமணர்களும், பட்டுநூல்காரர்களும், சூத்திரர்களும் இருப்பதோடுகூட, அனேக பள்ளர்களும் இருக்கிறார்கள். அதன் மெம்பர்களில் சிலர் விசேஷ பணக்காரர்கள்; சொத்து சிறிதும் இராத மெம்பர்களும் அனேகர் இருக்கிறார்கள்; ஆயினும், அவர்கள் மெத்தவும் யோக்கியர்களாயிருக்கிறபடியால், அவர்களை மெம்பர்களாய்ச் சேர்த்திருக்கிறது. மதுரையிலிருந்து 6 மைல் தூரத்திலிருக்கிற ஒத்தக்கடை என்னுமிடத்தில் அந்த சங்கத்தின் தலைமை ஆபீஸ் இருக்கிறது. அதன் தொழில் முயற்சியை விருத்திசெய்துகொள்வதற்கும் அதன் மெம்பர்களுக்கு மெத்தவும் உபயோககரமாயிருக்கிறதென்று காட்டிக்கொள்வதற்கும் அதற்கு விசேஷ சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நான் இந்த விஷயத்தை ஏழு தலைப்புகளாகப் பிரித்திருக்கிறேன்; அவைகளைக் குறித்து வரிசைக்கிரமமாய்ச் சொல்ல உத்தேசிக்கிறேன். அந்த தலைப்புகள் எவைபென்றால்:—

i. அவர்களுடைய ஆடுமாடுகளை விருத்திசெய்வது எப்படி.

ii. சாகுபடி செய்வதற்குவேண்டிய கருவிகளைச் சம்பாதிப்பது.

iii „ எருவை „

iv. „ விதைத்தானியங்களைச் சம்பாதிப்பது.

v. பயிரிடுகிறவருக்கு மெத்தவும் அனுகூலமாயிருக்கும்படி நிலத்தின் மாசூலை விற்பதற்கு வேண்டிய சௌகரியங்களை ஏற்படுத்திக்கொடுப்பது.

vi. சாகுபடி செய்வதற்கு வேண்டிய யந்திரவகையரா:

vii. ப்ரைமரி (பிரதம) கல்வியைப் பரவச்செய்வது.

கால்நடைகளை விருத்தி செய்வது.—ஒவ்வொரு குடியானவனுக்கும் அத்தியாவசியமானவை அவனுடைய கால்நடைகளே. அவைகளில்லாமல் அவன் ஒரு வேலையும் செய்யமுடியாது. அவைகளைக்கொண்டு அவன் தன்னுடைய நிலங்களை நன்றாய் சாகுபடி செய்யக்கூடியவனாயிருக்கிறான்; மேலும் அவைகளினால் பால் முதலியவைகள் ரூபமாக அவனுக்கு ஆகாரம் கிடைப்பதோடுங்கூட அவனுடைய நிலங்களுக்கும் சிரேஷ்டமான எரு கிடைக்கிறது. ஆகையால், கால் நடைகளை விருத்திசெய்யும் விஷயத்தில் வெகு கவனமாயிருப்பது அவசியமாயிருக்கிறது. இந்து தேசத்திலுள்ள ஒரு குடியானவனுடைய தற்காலத்திய நிலைமை இன்னது என்பதைப்பற்றியும், அவன் போராடவேண்டிய கஷ்டங்கள் இன்னவை யென்பதைப்பற்றியும் முதலில் விசாரிக்கவேண்டியதாயிருக்கிறது. பிற்பாடு, அவனை அந்தக் கஷ்டங்களினின்றும் விடுவிப்பதற்கான வழிகளைச் சொல்ல ஆரம்பிக்கலாம்.

இந்தப் பத்திரிகையின் முந்திய பாகத்தில் சொன்னதுபோல், இந்து தேசத்திலுள்ள ஒரு பயிரிடுங் குடியின் நிலைமையானது மிகவும் கஷ்டமானதாயிருக்கிறது. முதலிலே, அப்படிப்பட்ட குடிகளில் பெரும்பாலார் ஏழைகளாயிருப்பதனால், அவர்களுடைய ஜீவன உபாயங்கள் மெத்தவும் குறைவாயிருக்கின்றன. கால்நடைகளில்லாமல் அவன் தொழில் நடத்தமுடியாது; ஆனால், அவனுடைய ஜீவன உபாயங்கள் குறைவாயிருக்கிறபடியால், நல்ல கால்நடைகள் அவனுக்குக் கிடைப்பது அசாத்தியமாயிருக்கிறது; அதனால், அவன் பீடான ஜாதி கால்நடைகளைக்கொண்டு வேலைசெய்து திருப்தியடைய வேண்டியதாயிருக்கிறது. பெருவாரி வியாதிகள் காணும்போது, இந்த கால்நடைகள் பலமான கால்நடைகளை விட சீக்கிரமாய்ச் செத்துப்போகின்றன; அப்படி செத்துப்போவதனால் அவனுடைய ஸ்திதி முன்னினும் அதிக துக்கரமாய் விடுகிறது. பலவிதமான காரியங்களுக்கு அவன் கால்நடைகளை உபயோகிக்கவேண்டியவனாயிருக்கிறான்; அதனால், அவன் அவைகளின் பலத்துக்குத் தக்கபடி வேலைவாங்காமல், அவைகளினிடம் மெத்தவும் அதிகமாய் வேலை வாங்கவேண்டியவனாயிருக்கிறேன். இதனால் உண்டாவது என்னவென்றால், கால்நடைகள் க்ஷீணதசை அடைந்து நாளாவர்த்தியில் அவனுக்கு உபயோகமற்றவைகளாய்ப் போகின்றன. அவனுக்கு நேரிடும் இன்னொரு கஷ்டம் என்னவென்றால், மேய்ச்சல் பூமி இல்லாததும், கால்நடைகளுக்குத் தீனி கிடைக்காமலிருப்பதுமே. ஒவ்வொரு குடியானவனுக்கும் கிடைக்கும்படி மூலதனம் ஏற்படுத்துவதனாலும், கால்நடைகளுக்கு வேண்டிய தீனியை வாங்குவதற்காகவும், மேய்ச்சலுக்கான பூமிகளைச்சம்பாதிப்பதற்காகவும், நல்ல ஜாதிக் கன்றுகளை உற்பத்திசெய்யும் கால்நடைகளைப் பெறுவதற்காகவும் சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதனாலும் இப்படிப்பட்ட கஷ்டங்களை யெல்லாம் பரிகரிக்கக்கூடும்.

ஒவ்வொரு குடியானவனும் தனித்தனியாய் இந்தப் பொருள்களைச் சம்பாதிப்பது சாத்தியப்படாமலிருக்கலாம்; ஆனால், அவர்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்தால், தேவையான மேற்படி பொருள்களையெல்லாம் மெத்தவும் நயமான விலைக்கு அவர்கள் பெறக்கூடும்.

ஒரு கிராமக்கூட்டுத்தொழில் சங்கத்தார் நல்ல ஜாதிக்கன்றுகளை உற்பத்திசெய்யும் பிராணிகள் இரண்டு மூன்று வைத்திருக்கலாம்; அவைகளை வேண்டுமென்று யாராகிலும் கேட்கும்போது, அவர்களிடமிருந்து ஒரு சுவல்ப கட்டணம் வாங்கலாம்; அந்தப்படி வசூல் செய்யப்பட்ட கட்டணங்களிலிருந்து கிடைக்கும் தொகையானது அவைகளைக் காப்பாற்றுவதற்குப் போதுமானதாயிருக்கும். இம்மாதிரியாகவே, பருத்தி விதைகளையும் வேறே வகையான கால்நடைத்தீனியையும் விலை சரசமாயிருக்கிற காலங்களிலே கிரயத்துக்கு வாங்கிச் சேர்த்துவைத்து, பங்கிட்டுக்கொடுப்பதற்கான ஒரு சங்கத்தில் செய்வதுபோலவே மெம்பர்களுக்கு விற்கலாம். போதுமான அளவுக்கு மேய்ச்சல் பூமி கிடைக்காத கிராமங்களிலே, அக்கம்பக்கத்திலுள்ள கிராமங்களில் அப்படிப்பட்ட நிலம் கிடைக்கக் கூடியதாயிருக்கிற பட்சத்தில், அந்த கிராமங்களிலே மேற்படி சங்கத்தார் குத்தகை மூலமாகவாவது கொதுவை மூலமாகவாவது விற்பனை மூலமாகவாவது மேய்ச்சல் நிலங்களைச் சம்பாதித்து, அந்த நிலங்களை மெம்பர்கள் உபயோகித்துக்கொள்ளும்படி விட்டுவைக்கலாம்; அப்படி விடும்போது, அதற்காக கால்நடை ஒன்றுக்கு ஒரு கட்டணம் விதித்து வாங்கலாம்.

எருமைகளும், பசுக்களும், எருதுகளும், செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும், கோழிகளுமே ஒரு குடியானவனுக்குச் சாதாரணமாய் வேண்டிய ஜீவஜெந்துக்களாகும்; சில இடங்களில் பன்றிகளும் அவைகளோடு சேர்கின்றன. எருமைகளையும் பசுக்களையும் பால் கறப்பதற்காக வைத்திருப்பது மாத்திரமேயல்லாவல், வெகுசாய் ஏர் உழுவதற்காகவும் அவைகளை உபயோகிக்கிறார்கள். அவைகள் கொடுக்கும் பாலை விருத்தி செய்யும் விஷயத்தில் குடியானவன் தற்காலத்தில் கவனம் செலுத்துவதில்லை. கிராமங்களில் பால் நன்றாய் விற்பனையாகாமல், பெரிய பட்டணங்களில் மாத்திரம் அது தேவையாயிருப்பதே இதற்கு ஒரு காரணமாகும்.

தினந்தோறும் தன்னுடைய பண்ணையில் கிடைக்கும் பாலை எடுத்துக்கொண்டுபோய், அதிசமீபத்திலுள்ள பட்டணத்தில் அதை விற்பனை செய்வதனால் ஒரு குடியானவனுக்கு லாபம் கிடைத்து விடாது. ஆனால் ஒரு சங்கத்தார் கிராமத்திலே கிடைக்கிற பாலையெல்லாம் சேர்த்து, அதை அதிசமீபத்திலுள்ள பட்டணத்தில் விற்பனை செய்வித்து, அந்த விற்பனையினால் கிடைக்கும் பணத்தை பாலைக்கொடுத்தவர்களுக்குள் பங்கிட்டுக்கொடுக்கலாம். கால்நடைத் தீனியானது பட்டணத்தில் கிடைப்பதைவிட கிராமத்திலே மிகவும்

விலை சரசமாய்க் கிடைக்கிறபடியால், ஒரு கறவைப்பசு அல்லது எருமையை வைத்துக் காப்பாற்றுவதற்குக் கிராமத்தில் அதிக செலவு பிடிக்காது; பட்டணங்களையும் கிராமங்களையும் ஒத்திட்டுப்பார்த்தால், பட்டணங்களைவிட கிராமங்களில் புல் ஏராளமாய்க் கிடைக்கிறது. ஒரு குடியானவன் கறவைக் கால்நடைகளைத் தன்னுடைய பெண்சாதி அல்லது சிறிய பிள்ளைகள் கவனிக்கும்படியாய் விட்டுவிட்டு, தான் தளைகளிலே போய்த் தன்னுடைய வேலையைச் செய்யலாம். மேலே கண்டபடி சேகரித்துப் பட்டணங்களில் கொண்டுபோய் விற்கப்படுவது பால் மாத்திரமல்ல; நெய், மோர், வெண்ணெய் ஆகிய இவைகளையும் ஒரு கிராமச்சங்கத்தார் மூலமாக இம்மாதிரியே சேர்த்துப் பட்டணங்களில் கொண்டுபோய் விற்கலாம்.

இம்மாதிரி சங்கம் ஏற்பாடுசெய்வதனால் கிராமங்களிலுள்ள குடிஜனங்கள் லாபமடைவது மாத்திரமேயல்லாமல், நல்ல பாலும் நல்ல நெய்யும் கிடைக்காமல் இப்போது கஷ்டப்படுகிற பட்டணஜனங்கள்கூட இதனால் பிரயோசனமடைந்து, தங்களுக்கு வேண்டிய பால் நெய் இவைகளை நேரே சங்கத்தார் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். மதுரையில் சாமான் சர்ப்பரா செய்யும் சாலையார் (Madura distributive stores) இப்போது பீடான நெய்யைத்தான் ஜனங்களுக்கு சர்ப்பரா செய்கிறார்கள்; இவர்கள் ஆறு கிராம நாட்டுச் சங்கங்களைக்கொண்டு, தங்களுக்கு வேண்டிய நெய்யை அவர்களிடமிருந்து பெறக்கூடுமானால் அந்த சபையாருக்கு எவ்வளவு விசேஷ லாபம் உண்டாகுமென்பதை யோசித்துப் பார்த்தால் தெரியும். மதுரையைச் சுற்றிலும் இப்படிப்பட்ட சங்கங்கள் சீக்கிரத்தில் ஏற்பட்டு, மதுரை கோவாபரேடிவ் ஸொஸைடி யென்னும் கூட்டுத்தொழில் சங்கத்தாருடன் சேர்ந்துகொள்ளவேண்டுமென்று விரும்பலாகிறது; ஷை நெய் முதலியவைகள் அந்த சங்கத்தாரால் ஏற்கனவே விசேஷமாய் விற்கப்பட்டுவருகின்றன.

இம்மாதிரியான சங்கங்கள் ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் விசேஷமாயிருக்கின்றன. (1) கால்நடைகளை உற்பத்தி செய்வதற்கும் விருத்தி செய்வதற்கும், (2) கால்நடைகளை விற்பனை செய்வதற்கும், (3) கால்நடைத் தீனியை விற்பது முதலியவைகளுக்கும் பிரத்தியேகமான சங்கங்கள் இருக்கின்றன. பால், வெண்ணெய் முதலியவைகளை விற்பதற்குக்கூட சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன; முட்டைகளில் வியாபாரம் செய்யும் சங்கங்களும் இருக்கின்றன; இவைகளோடுகூட, விவசாய விளை பொருள்களைச் சேகரித்து அவைகளை அதிசமீபமான கடைகளுக்குக் கொண்டுவந்து விற்கும் சங்கங்களும் இருக்கின்றன.

ஒத்தக்கடை நாட்டுச் சங்கத்தாருக்கு நான் சொல்லக்கூடிய தென்னவென்றால்:—

இந்தச் சங்கத்தார் தங்களுக்குள்ளே சுமார் பன்னிரண்டு பேரை ஆள் ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு கறவைப் பசுக்களையாவது எருமைகளையாவது வாங்கும்படி தூண்டி, அதற்காகப் பணம் கடன்கொடுக்கலாம். கடன் கொடுக்கப்பட்ட தொகையை சுவல்ப தவணைத்தொகைகளாக வசூல் செய்யலாம். பாலைத் தினந்தோறும் சங்கத்துக்குக் கொண்டுபோய்க் கொடுக்க மெம்பர்களைச் சம்மதிக்கச் செய்யவேண்டும்; இந்த சங்கத்தார் அதை விற்பனைக்காக மதுரை அர்பன் ஸ்டோருக்கு முதலில் அனுப்பலாம்; அல்லது, மெம்பர்கள் தாங்களே பாலை வைத்திருந்து, வாரத்துக்கு இரண்டு முறை நெய்யைச் சேகரித்து, விற்பனைக்காக மதுரைக்கு அனுப்பிவிடலாம். அப்படி விற்றுவரும் பணத்தில், பாதியைக் கடன் அடைப்பதற்காக உபயோகப்படுத்திக்கொண்டு, மிகுதியை நெய் அனுப்பின மெம்பர்களுக்குக் கொடுத்துவிடலாம். ஷை மதுரை பண்டசாலையார் பருத்திவிதை பிலும் இதர வகையைச் சேர்ந்த கால்நடைத் தீனியிலும் வியாபாரம் செய்கிறபடியால், ஷை சங்கத்தார் தங்களுக்குப் போதுமான அளவுக்கு அந்தத் தீனியைப் பிரதி வாரமும் ஒரே மாதிரியான விலைக்குக் கொடுக்கும்படியாக அந்த சாலையாரோடு ஏற்பாடு செய்துகொண்டு, சாதாரண ஊர்விலையைக் காட்டிலும் மெத்தவும் சரசமான விலைக்கு அதைத் தங்களுடைய மெம்பர்களுக்கு விற்கலாம். இம்மாதிரியான பிரயத்தனம் செய்து பார்ப்பதனால் நன்மை யுண்டாகும்.

மதுரை.

கே. ராமசாமி ஐயர்.

தர்மகோளங்கள்.

———:-:———

1906-ம் வரு கோதாவரி ஜில்லாவில் பெத்தாபுரம் தாலூகாவிலுள்ள ரங்கம்பேட்டா, வடிஸலேரு, முராரி இந்தமூன்று கிராமங்களில் தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டன; இவைகளுக்குத் 'தர்மசாலைகள்' அல்லது 'தர்மகோளங்கள்' என்று பெயர்; 1906-ம் வரு ஏப்ரல்மீ 21உ ரங்கம்பேட்டா மஜராவாகிய நல்லசெருவிலுள்ள லோகல் பண்ட் சத்திரத்தில் அப்போது அந்த தாலூகா தாசில்தாராயிருந்த ம-ா-ா-ஸ்ரீ கொக்கொண்ட ராஜகோபால் ராவுகாரு மேலேசொன்ன மூன்று கிராமங்களிலுள்ள ரயத்துகளின் பொதுக்கூட்டமொன்று கூட்டினார்; அந்தக் கூட்டத்தில் நடந்தேறின நடவடிக்கைகளுக்கொத்தபடி ஷை தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டன.

2. இந்த தர்ம சாலைகளின் வேலையானது மேலே சொன்ன கிராமங்களிலும் அவைகளைச் சேர்ந்த மஜராக்களிலும் மாத்திரம் நடந்து வருகிறது. அந்த தர்ம சாலையைச் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும் அந்தந்த கிராமத்திலேயே குடியிருப்பவராயிருக்கவேண்டும்; மேலும், அவர் அதே கிராமத்திலாவது வேறே யாதொரு கிராமத்திலாவது நிலத்துக்குடையவராகவோ பாயக்காரியாகவோ நிலங்களைச் சொந்தமாகவாகிலும் மற்றப்படியாகிலும் வைத்திருக்க வேண்டும்; மேலும், அவர் தம்முடைய சக்திக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தக்கபடி இலவசமாய் அந்த தர்ம சாலைக்கு தானிய ரூபமாக சந்தா செலுத்த வேண்டும். இந்த சாலையின் காரியங்களை ஐந்து அல்லது ஐந்துக்கு மேற்பட்ட மெம்பர்கள் சேர்ந்த ஒரு பஞ்சாயத்தார் நிர்வாகம் செய்து வருகிறார்கள்; இந்த பஞ்சாயத்தாரை தர்ம சாலையின் மெம்பர்களெல்லாம் சேர்ந்து பிரதி வருஷமும் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும்.

3. இந்த ஸ்தாபனத்தின் நோக்கங்கள் என்னவென்றால், இலவசமான சந்தா மூலமாக தானியம் வசூல் செய்வதும், அப்படி வசூல் செய்யப்பட்ட தானியத்தை அடுத்த அறுவடை மாசூலிலிருந்து தானிய ரூபமாக வட்டியோடுகூட கடனைத் திருப்பிச் செலுத்துவதென்னும் ஷரத்தின்பேரில் "நாங்கு" அல்லது வட்டிக்கு, மெம்பர்களாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி ஏழை ரயத்துகளுக்குக் கடனாகக் கொடுப்பதும், கொடிய பஞ்சம் நேரிடுங் காலத்திலும் மாசூல் முழுவதும் சாவியாய்ப் போகிற காலத்திலும் ஏழை ரயத்துகளுக்கு தர்மத்துக்கு பகிர்ந்துகொடுப்பதற்காக மேலே கண்டபடி சேர்த்துவைக்கப்பட்ட தானியத்தை உபயோகிப்பதுமே.

4. 1906-ம் வரு ஏப்ரல்மீ 21உ நடந்த கூட்டத்திலே ஜாரியான தீர்மானங்களினால் இதர விஷயங்களோடு அடியிற்கண்ட விஷயங்களுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டது:

(1) தானியமாக வசூல் செய்யப்பட்டதைச் சேர்த்துவைப்பதற்காகவும் காப்பாற்றி வைப்பதற்காகவும்;

(2) ஏகரா ஒன்றுக்கு தானிய சந்தா இன்ன வீதமென்று நிஷ்கரிஷை செய்வதற்காகவும்;

(3) தானியக் கடன்வேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களைப் பஞ்சாயத்தாரர்களில் குறைந்தது இரண்டு பேர் பைசல் செய்வதற்காகவும்; பத்து குஞ்சம் தானியத்துக்கு வருஷமொன்றுக்கு ஒரு குஞ்சம்(=4 சேர்) வட்டி வீத மாகும்;

(4) தொடர்ச்சியாய் இரண்டு வருஷங்களில் மாசூல் சாவியாய்ப் போனால் தானியக் கடன்களை வஜாசெய்து கொடுப்பதற்காகவும்;

(5) தானியத்தைச் சேர்த்து வைப்பதற்கு ஒரு கிடங்கு கட்டிக் கொடுப்பதற்காகவும்;

(6) கணக்குகளையும்வந்து பார்ப்பவர் அபிப்பிராயம் எழுதும் புஸ்தகங்களையும் வைத்துவருவதற்காகவும்;

(7) வருஷத்தில் ஒருதரமாவது, இன்னும் குறைந்த காலங்களுக்கு ஒருதரம் கூடுவது அவசியமாயிருந்தால் அத்தனை தடவைகளிலாவது, யாராவது நாலு மெம்பர்கள் எழுதிக் கேட்டுக் கொள்வதன் மேலாவது, மெம்பர்களின் பொதுக் கூட்டம் கூட்டுவதற்காகவும்;

(8) சகாயச் சட்டங்களை மாற்றுவதற்காகவும் திருத்துவதற்காகவும்;

(9) இந்த ஸ்தாபனமானது சிறிதுமட்டில் விருத்திக்கு வந்தபோது அதைக் கம்பெனீஸ் ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்வதற்காகவும்.

ஆனால், இந்த ஸ்தாபனத்தைச்சேர்ந்த மெம்பர்களின் பொதுக்கூட்டமானது 1906-ம் வரு ஏப்ரல்மீ 21உ க்குப் பிறகு கூடி, சகாயச்சட்டங்களை அங்கீகரிக்கவுமில்லை; அல்லாமலும், பஞ்சாயத்தார் கூட்டங்கூடி தங்களுடைய நடவடிக்கைகளை அபிப்பிராயக் குறிப்புப் புஸ்தகத்திலே கிரமப்படி ஒரு

போதும் பதியவுமில்லை. ஒவ்வொரு ஸ்தாபனத்தின் காரியங்களையும் ப்ரெஸிடென்ட் நிறைவேற்றும்படி விட்டுவிட்டிருக்கிறது. ரங்கம்பேட்டா தர்மசாலையார் வேலைசெய்ய ஆரம்பித்த முதல்வருஷத்திலே ஒரேதினத்தில் (அதாவது, 1906-ம்ஞு ஏப்ரல்மீ 23உயில்) 12 நபர்களிட மிருந்து 152 குஞ்சம் நெல் வசூல் செய்தார்கள். இந்த நெல்லை வருஷா வருஷம் கடன்கொடுத்து வந்தார்கள்; மத்தியில் பதினைந்து மாதம் கடன் கொடுப்பது நின்றிருந்தது; 4 குஞ்சத்துக்கு ஒரு குஞ்சமாக, அதாவது நூற்றுக்கு 25 விழுக்காடு நாங்கு அல்லது வட்டி வாங்கப்பட்டது. இதனால் உண்டாவது என்னவென்றால், நாளது வருஷக் கடைசியில் சேர்த்து வைத்திருக்கக் கூடிய தானியமானது $287\frac{1}{2}$ குஞ்சமாகும். வடிஸலேரு தர்ம சாலையார் முதல்வருஷத்தில் 59 பேரிடமிருந்து 400 குஞ்சம் வசூல் செய்தார்கள்; நாளது வருஷக் கடைசியில் அவர்களிடத்தில் 977 குஞ்சம் கையிருப்பு இருக்கும். முராரி தர்மசாலையார் கொடுத்த கடன் விவகாரங்களைப் பற்றி சமாசாரம் எதுவும் கிடைக்கவில்லை. தற்காலத்தில் எவ்வித பரிசோதனை செய்யப்படுவதுமில்லை, கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதுமில்லை. நவம்பர் மாதம் வரையில் தர்மத்துக்குத் தானியத்தைப் பங்கிட்டு கொடுப்பதற்குச் சமயம் ஏற்படவில்லை.

6. இந்த ஸ்தாபனங்கள் உபயோககரமாயிருக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சரியான சகாயச் சட்டங்களை ஏற்படுத்தி அவைகளை அனுசரித்து வேலை நடத்தப்படும்பட்சத்திலே இவை விசேஷமாய் விருத்தியடைய இடமிருக்கிறது. யதார்த்தமாயும் திறமையுடனும் நிர்வாகம் செய்து தக்கபடி தானியத்தைச் சேர்த்துவைத்தால்தான் இப்படிப்பட்ட முயற்சி பலிதமடையக்கூடும்.

7. இந்த ஸ்தாபனங்கள் தர்மார்த்தமாய் ஏற்பட்டவைகளாக இருக்கிறதேயல்லாமல், அவற்றின் நோக்கத்தையாவது அவை வேலை செய்யும் விதத்தையாவது கவனிக்கும்போது அவை எவ்விதத்திலும் சமுதாயப்பிரயோசனத்தை உத்தேசித்து நடத்தப்படுவதாயில்லை. ஆனால், ஒரு தர்மகோளத்தைச் சில காலம் நடத்திவந்து அது ஆதியில் என்ன நோக்கங்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதோ அவை நிறைவேறி அது இன்னும் விஸ்தாரமான காரியங்களை நடத்தக்கூடியதாயிருக்கிற பட்சத்திலே, அதை நிர்வாகம் செய்கிறவர்கள் ஐக்கிய நாணயச் சங்க ஆக்டின்படி அதை ரெஜிஸ்டர் செய்வித்துக்கொள்ள ரெஜிஸ்டராருக்கு விண்ணப்பம் செய்துகொண்டால் நன்றாயிருக்கும். ஒரு தர்மகோளத்தைத் திறமையுடன் நடத்திவந்தால், அதுவே ஒரு கூட்டுத்தொழில் தானியபாங்கை ஏற்படுத்துவதற்கு சாதனமாயிருக்கலாம். இது விஷயமாய் இன்னும் அதிகமாய்த் தெரிந்து கொள்வதற்காக, 1906-ம்ஞு ஏப்ரல்மீ 21உ நடந்த பெதூக்கூட்டத்தின் நடவடிக்கைகளுக்கு ஒரு பிரதியை இந்த வியாசத்துக்கு அனுபந்தமாகக் கீழே எடுத்து எழுதி யிருக்கிறது. அடிஷனல் டெப்யுடி கலெக்டரவர்கள் இப்படிப்பட்ட

தர்மகோளங்களில் இரண்டின் கணக்குகளைப் பரிசோதித்து, அந்தக் கணக்குகள் சரியாய் வைத்துவரப்படவில்லை யென்றும், சகாயச்சட்டங்களின்படி காரியம் நடத்தப்படவில்லையென்றும் குறிப்பிட்டிருக்கிறார். இது பரிதாபகரமான விஷயம்; ஏனென்றால், தர்மகோளங்களை நிர்வாகஞ் செய்பவர்கள் விசேஷ சிரமம் எடுத்துக்கொள்ளாமலே, அந்த தர்மகோளங்களினால் அதிக நன்மை உண்டாவதற்கு இடமிருக்கிறது.

அனுபந்தம்.

1906-ம்ஞு ஏப்ரல்மீ 21உ ரங்கம்பேட்டாவில் நடந்த கூட்டத்தின் நடவடிக்கைகள்:—

1. கிராமத்திலுள்ள ஏழை ரயத்துகள் ஸாவ்காரர்களிடமிருந்து அதிக வட்டிக்குத் தங்களுடைய விவசாயக் காரியங்களுக்காகக் கடன்வாங்கி க்ஷீண தசை அடைந்து போகிறார்கள். ஆகையால், ரயத்துகளின் சக்திக்குத் தக்கபடி தானியம் முதலியவைமூலமாக சந்தா வசூல் பண்ணுவதற்காகவும், அதைச் சேர்த்துவைத்து வேண்டியபோதெல்லாம் ஏழை ஜனங்களுக்குத் தக்க வட்டிக்குக் கடன் கொடுப்பதற்காகவும் நாம் நம்முடைய கிராமத்திலே ஒரு தர்மகோளத்தை ஏற்படுத்தவேண்டும்.

2. இந்த தர்மகோளத்தை அடியிற்கண்ட ஐந்து கௌரவமான மனிதர்கள் நிர்வாகம் செய்துவரவேண்டும். * * *

3. பஞ்சாயத்தார்களுக்குள் பனுகண்டி அக்கன்ன பந்துலுகாரு ப்ரெஸிடென்டாயிருந்து, கணக்குகள் எழுதிவரவேண்டும்.

4. தர்மசாலையைச் சேர்ந்த தானியவசூல் முதலியவைகளைச் சேர்த்து வைத்து, இரட்டைப் பூட்டுசாவி போட்டு பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்; ஒரு சாவி ப்ரெஸிடென்டினிடத்திலும், மற்றொரு சாவி பஞ்சாயத்தார்களிடத்திலும் இருக்கவேண்டும்.

5. சென்ற இரண்டு வருஷகாலமாக தக்க காலத்தில் மழையில்லாமல் மாசூல் சரியாய்க் கிடைக்கவில்லை. ஆகவே, ஒவ்வொருவரும் தம்தம் இஷ்டப்படி சந்தா செலுத்தவேண்டும். அடுத்த வருஷம் நல்ல மாசூல் கிடைக்கிற விஷயத்திலே, ஏகரா ஒன்றுக்கு சந்தாதொகை இவ்வளவென்று நாம் நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

6. தற்காலத்தில் சந்தா மூலமாக வசூல் செய்யப்பட்ட தானியத்திலிருந்து முதலில் சந்தாதாரர்களுக்குள் யார் யாருக்குக் கடன் வேண்டியிருக்குமோ அவர்களுக்கும், பிற்பாடு கிராமத்திலுள்ள இதர ரயத்துகளுக்குள்

யார் கடன் வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறார்களோ அவர்களுக்கும் கடன் கொடுக்கவேண்டும்; அடுத்த அறுவடை மாசூலிலிருந்து பத்து குஞ்சத்திற்கு ஒரு குஞ்சமாக (=4 சேராக) வட்டி சகிதமாய்க் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டுமென்னும் ஷரத்தின்மேல், பஞ்சாயத்தார்களில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்கள் தீர்மானிக்கிற அளவுக்கு மேற்படி கடன் கொடுக்கவேண்டும். அடுத்த மாசூல் முற்றிலும் சாவியாய்ப்போய், கடன் வாங்குகிறவர்கள் திருப்பிச் செலுத்தக்கூடாதவர்களாயிருந்தால், அது வரையிலும் சேர்ந்திருக்கிற முதலையும் வட்டியையும் அடுத்து வருகிற வருஷத்தில் வட்டி சகிதமாகத் திருப்பிச் செலுத்தவேண்டும். அந்த வருஷத்திலுங்கூட கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டியதில்லையென்று பஞ்சாயத்தார்கள் தீர்மானித்தால், வஜா செய்து கொடுக்கும் விஷயத்தைக்குறித்து யோசனை பண்ணவேண்டும்.

7. அடுத்த வருஷத்தில் மிகுதியாய் நிற்கும் பழைய தானியத்தை விற்றுவிடவாவது வேண்டும், மறுபடியும் சேர்த்துவைக்கும் காரியத்திற்காக அதைக் கொடுத்துவிட்டு புது தானியம் வாங்கிக்கொள்ளவாவது வேண்டும்

8. அந்தப்படி சேர்த்துவைக்கப்படும் தானியத்தைப் பெரும் பஞ்சம் உண்டாகும் காலத்திலும், பயிர் முற்றிலும் சாவியாய்ப் போகிற காலத்திலும், மெத்தவும் ஏழைகளாயிருக்கும் ரயத்துகளைக் காப்பாற்றுவதற்காகத் தர்மத்துக்குக் கொடுத்து உபயோகிக்கவேண்டும்.

9. தானியத்தைச் சேர்த்துவைப்பதற்காக ஒரு தகுதியான கிடங்கு கட்டப்படுகிற வரையிலே, மேலே சொன்ன விதமாக அக்கன்ன பந்துலுவின் களஞ்சியத்திலே தானியத்தைப் பத்திரமாய் வைத்திருக்கவேண்டும்.

10. சந்தாதாரர்கள் பிரதி வருஷமும் மேமீ 1உயில் ஒரு கூட்டம் கூடவேண்டும்; அந்தக் கூட்டத்திலே, இந்த தர்மசாலையின் கணக்குகளை வாசிக்கவேண்டும். அவசரத்துக் கேற்றபடி அப்போதைக்கப்போது பின்னும் கூட்டங்கள் கூடவேண்டும்.

11. கடன் வேண்டியவர்கள் ப்ரெஸிடென்டினிடத்தில் எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்ட நான்கு தினத்திற்குள்ளாக, பஞ்சாயத்தார்கள் கூடிக் கடன் கொடுக்கும் விஷயத்தைக்குறித்து தீர்மானம் செய்யவேண்டும். விண்ணப்பதாரர் கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடாதவரென்பதைப் பற்றி ஏதாவது சந்தேகம் உண்டானால், ஜாமீன் கொடுக்கும்படி கேட்கவேண்டும்.

12. ப்ரெஸிடென்டானவர் தம்முடைய வேலையைச் சரியாய்ச் செய்யவில்லையென்னும் காரணமாகவாவது வேறே யாதொரு காரியத்திற்காகவாவது எல்லா சந்தாதாரர்களும் வரும்படி ஒரு கூட்டம் கூட்டவேண்டுமென்று அந்த சந்தாதாரர்களில் எவராகிலும் நான்குபேர் எழுத்து மூலமாக நோடிஸ் கொடுத்தால், அந்த நோடிஸ் வரப்பெற்றுக்கொண்ட தேதிமுதல் ஒரு வாரத்திற்குள்ளாக ப்ரெஸிடென்டானவர் அப்படிப்பட்ட கூட்டம் ஒன்று கூட்டவேண்டும்.

13. இப்போதுள்ள பஞ்சாயத்தைச் சேர்ந்த எந்த மெம்பராவது தாம் அந்த மெம்பர் வேலையைப் பார்க்கமுடியாதென்று சொன்னாலும், ஒரு மெம்பர் இறந்து போனாலும், ஒரு மாதகாலத்துக்குள்ளாக அந்த சந்தாதாரர்களெல்லாம் கூடிப் புதிதாய் ஒரு பஞ்சாயத்தாரை நியமிக்கவேண்டும்.

14. சந்தாவாகக் கொடுக்கப்பட்ட தானியத்தைக் காப்பாற்றி வைக்கும் விஷயத்தில் சந்தாதாரர்களெல்லாம் உத்தரவாதியாவார்கள்.

15. இந்த நடவடிக்கைக்குறிப்புகளுக்கு ஒரு பிரதியைத் தாலூகா தாசில்தாருக்கு அனுப்பவேண்டும். பிற்பாடு நடத்தப்படும் கூட்டங்களின் முடிவையும் அந்த ஆபிஸருக்குத் தெரிவிக்கவேண்டும்.

16. சந்தாதாரர்கள் அவசியமானால் இப்போதுள்ள சகாயச்சட்டங்களை ஒரு பொதுக்கூட்டம் கூடித் திருத்தலாம்.

17. இந்தக் கூட்டமானது சிறிது மட்டிலே விருத்தியடைந்த பிறகு இதைக் கம்பெனீஸ் ஆக்டின்படி ரெஜிஸ்டர்செய்யவேண்டும்.

18. ப்ரெஸிடென்டானவர் அடியிற்கண்ட கணக்குகளைச் சரியாய் வைத்துவரவேண்டும்:—

(1) கிராமத்திலுள்ள சகல ரயத்துகளின் அந்தஸ்தைக் குறித்த ஜாபிதா ஒன்று; அதில் நபரின் பெயர், அவருக்குச் சொந்தமாயுள்ள நிலம், அதன் அளவு, கவர்ன்மெண்டுக்குச் செலுத்த வேண்டிய தீர்வை ஆகிய இவைகள் கண்டிருக்க வேண்டும்.

(2) சந்தாதாரரின் பெயர், சந்தா விவரம், தானியத்தைக் குறித்த விவரமான ஆவர்ஜா.

(3) ரசீது சிட்டா.

(4) செலவு சிட்டா.

(5) வரவு ஆவர்ஜா.

(6) செலவு ஆவர்ஜா.

(7) மொத்த வரவு செலவுக்கு நபர்வாரி ஆவர்ஜா.

(8) கடன் ரெஜிஸ்டர்.

(9) வருஷாந்தரக் கணக்குகள்.

19. கணக்கு நன்றாய்ப் பார்க்கத் தெரிந்த ஒருவரைக்கொண்டு பிரதி வருஷமும் ஒருதரம் கணக்குகளைத் தணிக்கை செய்து, ரிபோர்ட் வாங்கிக் கொள்ளவேண்டும்.

20. தகுதியான எந்த உத்தியோகஸ்தர்களாவது, கௌரவமான மனிதர்களாவது இந்தக் கணக்குகள் முதலியவைகளைப் பார்வையிட விரும்புகிற பட்சத்திலே, ப்ரெஸிடென்டானவர் அந்தக் கணக்கு முதலியவைகளை அவர்களுக்குக் காண்பித்து, வந்து பார்ப்பவர்கள் அபிப்பிராயக்குறிப்பு எழுதுவதற்காக வைத்திருக்கும் புஸ்தகத்திலே அவர்களுடைய அபிப்பிராயம் எழுதிவாங்கிக் கொண்டு, அந்த அபிப்பிராயத்துக்கேற்றபடி என்ன காரியத்தைச் செய்யவேண்டியது அவசியமாயிருக்குமோ அதைச் செய்து, அவசியமானால் பஞ்சாயத்தாரின் அல்லது சந்தாதாரர்களின் கூட்டங்கள் கூட்டி, இன்னும் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும்.

21. பஞ்சாயத்தார்களை ஒவ்வொரு வருஷமும் பொதுக்கூட்டத்திலே நியமிக்கவேண்டும். இப்போதிருக்கிற மெம்பர்களை மறுபடியும் நியமிக்கலாம்.

கொத்தசெருவு கான்பரென்ஸ் என்னும் மகாசபை.

அனந்தபூர் ஜில்லா, பெனுகொண்டா தாலுகா.

—— :-: ——

கொத்தசெருவு நாட்டுச் சங்கத்தின் ப்ரெஸிடென்டானவர் அனுப்பிய அழைப்புப் பத்திரிகையின்படி, அந்த வட்டத்திலுள்ள வெவ்வேறு நாட்டுச் சங்கங்களிலிருந்து அநேக பிரதிநிதிகள் ஷை மகாசபைக்கு வந்திருந்தார்கள்; இந்தக் கூட்டமானது 1910-ம் ஆண்டு மேமீ 30உ பகல் சுமார் 3-மணிக்குக் கூடினது. அப்போது வருஷாந்த தேர் திருவிழா நடந்து கொண்டிருந்தபடியால், கிராமாந்தரங்களிலுள்ள ஜனங்கள் பெருங் கூட்டமாய்க் கூடுவதற்கு அது தக்க காலமாயிருந்தது; இந்த ஜனங்களுக்குள் அனேகர் கூட்டுத்தொழில் முயற்சியில் அக்கறை கொண்டவர்களாயிருந்தார்கள். அடியிற்கண்ட சங்கங்களிலிருந்து சுமார் ஐம்பது பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்; இவர்களைத் தவிர மேற்படி கூட்டத்தில் இன்னும் அநேக ஜனங்களும் வந்திருந்தார்கள்; இவ்வளவு விசேஷமாய் ஜனங்கள் வந்திருந்ததற்கு மேற்படி திருவிழாவே காரணமாகும்:—

1. பெனுகொண்டா.
2. சோமந்தபல்லி.
3. தலமர்லா.
4. புக்கபட்டணம்.
5. கொத்தசெருவு.
6. தர்மவரம்.
7. மண்ட்லி.

2. அந்தக் கூட்டத்திலே வேலை நடத்தப்பட்ட மாதிரியானது வாஸ்தவத்தில் ஆச்சரியகரமாயிருந்தது. அச்சிட்ட அழைப்புப்பத்திரிகைகளில் மேலே குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றி சொல்லியிருந்தது.

1. பஞ்சாயத்துக்கூட்டங்களும் பொதுக்கூட்டங்களும், அவைகளை எப்படி நடத்த வேண்டுமென்பதும் எப்பொழுது நடத்தவேண்டுமென்பதும்.

2. அவ்வவ்விடத்தில் கிடைக்கும் மூலதனத்தை எப்படி வரவழைக்க வேண்டுமென்பது.

3. செலுத்தவேண்டிய தேதிகளில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குச் சம்பந்தப்பட்டதாய் வசூல் வேலையைக்குறித்து அனுபவரீதியாயுள்ள குறிப்புகள்.

4. "வரையறுக்கப்படாத உத்தரவாதம்" என்பதன் அர்த்தமும், அதற்குள்ள ஆவசியகமும்.

5. இப்போதுள்ள சங்கங்களில் காணப்படுகிறபடி இந்த முயற்சியினாலுண்டாகும் பிரயோசனங்கள்.

6. இதர விஷயங்கள்.

பற்பல விஷயங்களைக்குறித்து எந்தப் பிரதிநிதிகள் பேசுவதாய் எதிர்பார்க்கப்பட்டதோ அவர்களின் பெயர்கள் சகிதமாக அந்தக் கூட்டத்தில் இன்னின்ன வேலை நடத்தப்படுமென்று ஒரு கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது; இன்னின்ன தீர்மானங்கள் செய்யப்படுமென்று ஒரு மசோதா தயார்செய்தும் கூட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இங்க்விஷ் வாசித்த எந்த நபருடைய ஒத்தாசையுமில்லாமல் இவைகளெல்லாம் செய்யப்பட்டனவென்று நான் விசாரித்ததில் எனக்குத் தெரியவந்தது.

3. பெனுகொண்டாவில் ப்ளீடராயிருக்கும் டி. சிவசங்கரம் அவர்களை சபைத் தலைவராக ஏற்படுத்தினார்கள். அவர் தெலுங்கில் பேசினார். அவர் கூட்டுத்தொழில் செய்து ஜீவிப்பது தற்காலத்திய வாழ்க்கைநிலைமைக்கு அவசியமென்று அக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் போதித்தார். மேலும், பூர்வீகத்திலிருந்த இந்தியர்களும் அம்மாதிரியே ஜீவிப்பது தகுதியெனக் கொண்டிருந்தார்களென்றும், அக்கொள்கையை மறுபடியும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து, இந்தியர்கள் அந்தக் கொள்கையினால் உண்டாகும் பிரயோஜனத்தைக் கூட்டுத்தொழில் முயற்சி மூலமாய் அடையக்கூடியவர்களாயிருப்பதற்கே, சட்ட முறைப்படி அமைக்கப்பட்டுள்ள ப்ரிடிஷ் துரைத்தனமானது கடவுளால் நமக்கு அனுப்பப்பட்டதென்றும் சொன்னார். பல வருஷகாலத்திற்கு முன்னே அந்த ஜில்லாவில் கலெக்டர் வேலைபார்த்து யாவராலும் மதிக்கப்பட்டும் விரும்பப்பட்டும் வந்த ஸர். எப். ஏ. நிகல்ஸன் அவர்கள் காலம் முதல் அதன் விருத்தாந்தத்தை எடுத்துச்சொல்லி வந்தார். இந்தக் கூட்டுத்தொழில் முயற்சி சித்தியடைவது எவ்வளவு மட்டில் ஜனங்களைப் பொறுத்ததென்பதைக் குறித்து, இம்முயற்சி சம்பந்தமான மசோதா ஆக்டைக் காலஞ்சென்ற ஸர் டென்ஜில் இபெட்ஸன் அவர்கள் ராஜப்பிரதிநிதி அவர்களின் சபையிலே முதலில் கொண்டுவந்தபோது அவர் சொன்ன வார்த்தைகளை அக்கூட்டத்தில் வந்திருந்தவர்களுக்கு ஞாபகப்படுத்தினார். ஒரு அந்நிய துரைத்தனத்தார் தங்களுக்குக் கீழ்ப்பட்ட குடிகளுக்கு இது வரையிலும் செய்த நன்மைகளுக்குள் இந்த ஆக்ட் முதன்மையானதென்றும், மேற்படி குடிகள் அந்த ஆக்டினால் அடையக்கூடிய பிரயோசனத்தை அடையாமல் இந்த சமயத்தைக் கைவிடுவார்களானால் அவர்கள் பாவிகளாவார்களென்றும் அவர் வற்புறுத்திச்சொன்னார். இதர பிரதிநிதிகள் தாங்களே வேலைசெய்து அனுபவம் பெற்று அந்த அனுபவத்தைக்கொண்டு பேசக்கூடிய விஷயங்களைத் தாம் முன்னதாய்ச் சொல்லிவிடக் கூடாதென்றெண்ணி, அவர் தம்முடைய பிரசங்கத்தை அதோடு முடித்துவிட்டார்.

4. அந்தக் கூட்டத்தில்பேசின ஒவ்வொருவரும் தாம் தயார் செய்துவந்த பத்திரிகையை சபைத்தலைவர் கேட்டுக்கொண்டதன்மேல் படித்தார்கள்; அதனால் நாம் தெரிந்துகொண்டதென்னவென்றால், இதர மகாசபைகளில் பிரசங்கம் செய்பவர்களைப் போலல்லாமல், இந்தக் கூட்டத்தில் பிரசங்கித்த ஒவ்வொருவரும் மேற்படி விஷ

யத்தை நன்றாய்க் கவனித்து வந்தார்களென்பதும் தம்முடைய ஜீவன முறைக்குச் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயங்களைக்குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்களென்பதுமே. நடித்தரமாயிருக்கும் இந்தியர்கள் தங்களுடைய க்ஷேமலாபங்களுக்கு அனுகூலமாயேற்படும்போதெலலாம் அவர்கள் புத்திகூர்மையுடன் காரியம் நடத்த ஆரம்பிக்கிறார்களென்னும் நோக்கத்தை ஊர்ஜ்ஜிதப்படுத்துவதில், அந்தக் கூட்டத்தில் பேசின ஒவ்வொருவரும் சொன்ன விஷயம் அவ்வளவு முக்கியமானதாயிராவிட்டாலும் அவர்கள் பேசின விதம் அவ்வளவு முக்கியமானதாயிருந்தது.

இந்தக் கூட்டத்தில் நடவடிக்கை நடந்தபோது அங்கே வந்திருந்தவர்களெல்லாம் விசேஷ கவனத்துடனும் ஊக்கத்துடனும் இருந்துகொண்டிருந்தார்கள்; நிசப்தமாய் நடவடிக்கை நடந்தது; இவைகளையெல்லாம் கவனிக்கும்போது, கூட்டுத்தொழில் முயற்சியானது ஜனங்கள் மனதில் எவ்வளவு மட்டில் குடிகொண்டிருக்கிறதென்பது வெகு நன்றாய்த் தெரியவருகிறது; இது ஒரு நல்ல அடையாளம்.

5. வரவேற்புக் கம்மிட்டிக்குத் தலைவராயிருந்த ம-ா-ா-ஸ்ரீ சிக்கா பளவப்பா அடியிற்கண்டபடி பேசினார்.

கனவான்களே,

முற்காலத்திலே பூர்வீக ஹிந்துக்களாகிய நம்முடைய ஜனங்கள் மெத்தவும் விவேகசாலிகளாயிருந்தார்கள். அவர்கள் ஒருவேலை செய்தால் அந்த வேலை நன்றாயிருந்ததென்றும் பீடாயிருந்ததென்றும் வித்தியாசம் கண்டுபிடிக்கக் கூடியவர்களாயிருந்தார்கள்: அதனால் அவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருந்ததோடுங்கூட கீர்த்தி பெற்றவர்களாயு மிருந்தார்கள். உலகத்திலுள்ள சகலதேசங்களிலு மிருக்கும் ஜனங்களெல்லாம் இவ்வுண்மையை இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி நிலைமைகளுக்குக் காரணம் என்ன இருக்குமென்று சோதித்துப் பார்த்தால், பூர்வீக ஹிந்துக்கள் நம்முடைய தேசத்தின் க்ஷேமத்தையும், ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்யவேண்டு மென்னும் விருப்பத்தையும், தங்களுடைய அரசர்களிடத்தில் விசுவாசத்தையும் பக்தியையும், சிக்கனமாயும் செட்டாயும் ஜீவனம் செய்யவேண்டுமென்னும் தீர்மானத்தையும் மனதில் கொண்டிருந்தார்களென்றும், அவர்களில் ஒவ்வொருவரும் மதசம்பந்தமான ஒரு கடமையைப்போல இக்கொள்கைகளை உறுதியாய் நம்பி அனுசரித்து வந்தார்களென்றும் தெரியவரும். இப்படிப்பட்ட நற்குணங்களெல்லாம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வந்தன; அதனால் உண்டானதென்னவென்றால், என்றும் நீங்காத ஏழைத்தனமானது நாடெங்கும் பரவிவிட்டது. இப்போது நம்முடைய இராஜ்ஜியத்தை ஆளுகிறவர்கள் நம்முடைய நாட்டின் உண்மையான நிலைமையைக் கண்டுபிடித்து விட்டார்கள்; இப்பொழுது நம்முடைய நாட்டில் குடிகொண்டிருக்கும் ஏழைத்தனத்தை நீக்குவதற்குச் சிறந்த பரிகாரமாக, ஐக்கிய நாணயச் சங்கங்களை ஸ்தாபித்திருக்கிறது. இந்தச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக ஒரு ஆக்டும் அப்பிரகாரமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ப்ரிடிஷ் இந்தியாமுழுவதும் இப்போது அப்படிப்பட்ட சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆக்டின்படி எங்களுடைய கிராமத்திலே ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது; சென்ற ஜனவரிமீ ஆரம்பம் முதல் அதில் வேலை நடந்துவருகிறது. இப்போது பெயர் ஜாபிதாவில் நூற்றெழுபத்து நான்கு மெம்பர்கள் இருக்கிறார்கள். பங்குகள் மூலமாய்க் கிடைத்த மூலதனமாக 264 ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. பிரவேசகட்டணம் 66 ரூபாய் ஆயிற்று. சங்கத்தின் விவகாரங்கள் நடப்பதற்காக இம்மாதிரி பணம் வசூல் செய்யப்பட்ட

தோடு கூட, மேற்படி சங்கத்தார் மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்க் லிமிடெட் என்னும் பாங்காரிடமிருந்தும் இதரர்களிடமிருந்தும் 11,900 ரூபாய் வரையில் பணம் கடன் வாங்கியு மிருக்கிறார்கள். அப்படிக் கிடைத்த பணத்திலிருந்து 12,225 ரூபாய் வரையில் 132 மெம்பர்களுக்குக் கடன் கொடுத்திருக்கிறது. அப்படி கடனாகக்கொடுக்கப்பட்ட தொகையிலே, முக்திய கடன்களைத் தீர்ப்பதற்காக 5,730 ரூபாயும் கால்நடைகள் வாங்குவதற்காக 3,005 ரூபாயும் கடன் கொடுக்கப்பட்டது. மேற்படி சங்கத்தார் கடன் கொடுத்திருக்கிற சகல காரியங்களுக்கும், மேலேகண்ட காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்ட கடனானது மற்றவைகளைக் காட்டிலும் மெத்தவும் அதிகமாயிருக்கிறது. இதைப்பற்றி யோசித்துப்பார்த்தால், கிராமத்திலுள்ள ரயத்துகள் விசேஷ கடனாளிகளாயிருக்கிறார்களென்றும் அவர்களுக்குக் கடன்கொடுத்திருப்பவர்கள் அவர்களை மெத்தவும் கஷ்டப்படுத்துகிறார்களென்றும், விவசாயக் காரியங்களுக்காக வேண்டிய சாமான்களைச் சம்பாதிப்பதற்குப் போதுமான பணமில்லாமல் அவர்கள் சங்கடப்படுகிறார்களென்றும் காட்டுவதற்கு இதுவே போதுமான அத்தாட்சியாக இருக்கிறது. இந்தக் கொத்தசெருவு கிராமத்திலிருக்கும் சங்கத்தைத்தவிர, நம்முடைய தாலூகாவிலே வேறே 24 சங்கங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலுங்கூட கடன்பட்டிருப்பது காரணமாக இம்மாதிரியான தொந்தரவுகள் இருக்குமென்பதையும் விவசாய காரியத்தை நடத்துவதற்குப் போதுமான பணமில்லாமல் இம்மாதிரியான அசௌகரியம் உண்டாகுமென்பதையும் எண்ணி, நாமெல்லாம் இன்றையதினம் இங்கே கூடி, மேலே விவரிக்கப்பட்டபடி நமக்குள்ள கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கான பரிகாரங்களைப் பற்றிப்பேசி, ஐக்கிய நாணயச்சங்கங்களை ஏற்படுத்தும்படி தூண்டுவதற்கும் அந்தச் சங்கங்களின் சக்தியையை அதிகப்படுத்துவதற்குமான வழிவகைகளைக் கண்டுபிடிக்க எண்ணங்கொண்டு, நான் உங்களுக்கெல்லாம் அழைப்புக் கடிதங்கள் அனுப்பினேன். கனவான்களே, தூரகிராமங்களிலிருந்து நீங்கள் வரவேண்டியிருந்தும் இந்தப் பிரயாணத்தைக் கஷ்டமாக எண்ணாமல் நீங்களெல்லோரும் நான் வினயமாய்க் கூப்பிட்டதற்கிணங்க இந்தச் சபைக்கு வந்தீர்கள்; நீங்கள் இந்தப்படி அன்புடன் வந்ததற்கு நான் உங்களுக்கு வந்தனமளிக்க வேண்டியவனாயிருக்கிறேன்.

6. அந்தக் கூட்டத்திலே வந்திருந்த இரண்டு பிரதிநிதிகளுக்குள் அடியிற்கண்டபடி ஒரு சம்பாஷணை நடந்தது:—

சுப்பாராவ்—(1) ஐக்கிய நாணயச் சங்கங்களைப்பற்றி ஒரு பிரசங்கம் நடந்ததே; நான் சிறிது தூக்கமயக்கத்திலிருந்தபடியால் அதில் எனக்கு ஒன்றும் கேட்கவில்லை. சங்கங்கள் என்றால் என்ன?

நாராயணராவ்.—ஒவ்வொரு கிராமத்தாரும் தங்களுடைய கிராமத்திலே ஒரு சங்கத்தை ஸ்தாபிப்பதற்காக ஸர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டால், ஸர்க்கார் ஒரு சங்கத்தை ரெஜிஸ்டர் செய்கிறார்கள். மேலும், அவர்கள் அந்தச் சங்கத்தின் மெம்பர்கள் இன்னின்ன வேலை செய்யவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். புக்கபட்டணத்திலும் கொத்தசெருவிலுமுள்ள சங்கங்கள் ஸர்க்காரால் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களைக் கிராமத்தார் கம்பெனிகளென்று சொல்லுகிறார்கள்.

சுப்பாராவ் (2)—இந்தச் சங்கங்களினால் உண்டாகும் பிரயோசனமென்ன?

நாராயணராவ்—இன்னின்ன பிரயோஜனங்கள் உண்டாகுமென்று கணக்கிட்டுச் சொல்லமுடியாது. நம்முடைய கிராமத்திலுள்ள கனவான்கள், அதாவது இது சரி

இது தப்பு என்று தெரிந்துகொள்ளக்கூடிய நபர்கள் இந்தச் சங்கத்தில் சேர்ந்துவிட்டால் இந்தச் சங்கத்தைக் குறித்து உயர்வாகப் பேசப்படும். இந்தச் சங்கத்தில் சேருகிறவர்களுக்குக் கடன் வேண்டுமானால் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைக்கும். பத்துபேர் அல்லது பத்துபேர்களுக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து இதன் வேலையை நடத்தி வருகிறார்கள்; ஆகவே, இதனால் நஷ்டம் எதுவும் உண்டாகாதென்று சகலரும் நம்பியிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தார் மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு பத்தரை வட்டி விழுக்காடு பணம் கடன் வாங்குகிறார்கள்; இந்தச் சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் கடன் கேட்கும்போது இந்தச் சங்கத்தார் மேலே கண்டபடி கடன் வாங்கப்பட்ட தொகையை மாதம் ஒன்றுக்கு ரூபாய்க்கு $1\frac{1}{2}$ தம்படி வட்டி விழுக்காடு அவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். மேலும், இந்த சங்கத்தின் மெம்பர்கள் கூட்டுத்தொழில் நடத்த வேண்டுமென்பதையும், சிக்கனமாய்க் காரியம் நடத்தவேண்டுமென்பதையும், தன்முயற்சியையே நாடவேண்டுமென்பதையும் அதனால் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

சுப்பாராவ் (3)—கூட்டுத்தொழில் என்றால் என்ன?

நாராயணராவ்—சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களெல்லோரும் ஒருவர்க்கொருவர் சிநேகிதபான்மையா யிருக்கவேண்டும். நற்காரியம் செய்யும்படி தூண்டுவதும், களவு, கூட்டுக்கொள்ளை, அரசரிடத்தில் விசுவாஸமின்மை, விரோத எண்ணத்துடன் சண்டையிடுவது ஆகிய இப்படிப்பட்ட கெட்ட காரியங்களைச் செய்ய வொட்டாதபடி தடுப்பதும் கூட்டுத்தொழிலாகும். பத்துப்பேர் சேர்ந்த சபையில் தருமதேவதையும் பிரசன்னமாயிருக்குமென்று சொல்லப்படுவது உமக்கும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

சுப்பாராவ் (4)—சிக்கனம் என்றாலென்ன?

நாராயணராவ்—10 ரூபாய் செலவு பண்ணி நாம் செய்து முடிக்கிற ஒரு வேலையை 8ரூபாய் செலவுபண்ணி செய்து முடிப்பதற்கான நியாயமான சூழ்ச்சியைக் கண்டுபிடிப்பது சிக்கனமாகும். மின்மில்லா சாயப் என்பவர் தம்முடைய பயிர்வேலைக்கு ஒரு ஜதை மாடுகள் வாங்குவதற்காக 100 ரூபாய் கடன் வாங்கினார். 35 ரூபாய்தான் கடன் வாங்கக்கூடிய சக்தி அவருக்கிருக்கிறது. 35 ரூபாய்க்கு ஒரு ஜதை மாடுவாங்கி அவர் தம்முடைய பயிர்வேலையை நடத்தக்கூடும். தாம்வாங்கின 100 ரூபாய்க் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி அவரைக்கேட்டபோது, அவர் தம்முடைய மாடுகளை விற்பதற்காகப் போம்பேசி, அவைகளை 80 ரூபாய்க்குத்தான் விற்றார். மீதி 20 ரூபாய்க்காக இன்னொரு கடன்வாங்கி, அந்த நூறுரூபாய்க் கடனைத் தீர்த்துவிட்டார். அவர் தன்னுடைய நிலங்களில் பயிர் செய்வதற்கு எருதுகளில்லாமல் விழித்துக் கொண்டிருந்து உம்முடைய எருதுகளைக் கொடுக்கும்படி உம்மைக் கேட்டுக்கொண்டபோது, நீர்தான் அவரிடத்தில் பச்சாத்தாபம்கொண்டு நாலு நாளைக்கு எருதுகளை அவருக்குக் கொடுத்து உதவினீர். இப்போது நம்முடைய ஆவசியகத்திற்குக் கண்டிப்பாய் எவ்வளவு வேண்டுமோ அதை மாத்திரம் நாம் செலவழிக்கவேண்டும்; இம்மாதிரி விவேகத்துடன் செலவழிப்பதைத்தான் நாம் சிக்கனம் என்று சொல்வது.

சுப்பாராவ் (5).—தன்முயற்சி என்றாலென்ன?

நாராயணராவ்—கடன் வாங்கி செலவழித்தே நாம் எப்போதும் ஜீவனம் செய்துகொண்டு வருகிறோம்; பணமெவ்வளவும் சேர்த்து வைக்கும் வழக்கம் நமக்கு இல்லவேஇல்லை; சொற்ப தொகைகள்கூட சேர்த்து வைக்கும் வழக்கம் நமக்கு இல்லை. நாம்

சிறு பிள்ளைகளாயிருந்த போது கோமுட்டி கொண்டையா களமேட்டில் சுண்டல் விற்று அதற்குப் பர்த்தியாக நெல்வாங்கி வந்தது உமக்குத் தெரியும். அப்படிப்பட்ட சொற்ப வருமபடியில் அவன் தன்னையும் தன்னுடைய குடும்பத்தாரையும் காப்பாற்றிக் கொள்ளக் கூடியவனாயிருந்ததோடுங்கூட, செலவெல்லாம் போக தம்படி தம்படியாய்ச் சேர்த்துக்கொண்டும் வந்தான். அவன் இப்போது பெரிய ஸாவ்காராயிருக்கிறான். ஹிந்துபூர், பெங்களூர் போன்ற பெரிய பட்டணங்களில் அவன் பெரிய ஸாவ்காரென்று பெயர் வாங்கியிருக்கிறான். நாம் கூட அறுவடையான நெல் மாசூலிலிருந்து நம்முடைய கடன்காரர்களுக்குப் பாக்கியாயிருக்கிற தொகையைச் செலுத்திவிட்டு நம்முடைய ஜீவனத்திற்காக ஒரு பாகத்தை நிறுத்தி வைத்துக்கொண்டு வருஷாவருஷம் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் சேர்த்துவைக்க ஆரம்பிப்போமானால், சில வருஷ காலத்திற்குள்ளே அப்படி சேர்த்து வைக்கப்பட்ட தொகையானது மேலே கண்டபடி அதிகரிக்கும். அப்போது நாம் கடன் வாங்கவேண்டிய அவசியமிராது; நாம் சேர்த்து வைத்திருக்கும் தொகையிலிருந்து நம்முடைய செலவுக்கு வேண்டியதை நாம் எடுத்துக்கொள்ளலாம். கடன் வாங்காமலே நாம் நம்முடைய நிலத்தைப் பயிரிடுவோமானால், பிரதி வருஷமும் நாம் 10 அல்லது 12 ரூபாய் சேர்த்து வைக்கலாம். இம்மாதிரி நாம் செய்து வருவோமானால், கொண்டய்யாவைப்போல நாம் பெரிய ஸாவ்காராகக்கூடாதா? நம்முடைய பணத்தைக்கொண்டே நம்முடைய தொழிலை நடத்தமுடியாதா? இம்மாதிரியான தொழிலுக்குத்தான் தன்முயற்சி என்று பெயர்.

சுப்பாராவ் (6).—நாம் பிரதி வருஷமும் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் சேர்க்கக்கூடுமென்பது வாஸ்தவம்தான்; ஆனால், அப்படிச் சேர்த்து வைத்த பணத்தைக் காப்பாற்றி வருவது கஷ்டம். அதை வீட்டில் எங்கேயாவது வைத்திருந்தால் நம்முடைய பிள்ளைகள் அதை உளவறிந்து எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அண்டை அயலிலிருப்பவர்களிடத்தில் அதை நம்பி வைப்போமானால், அவர்கள் அதைத் தாங்கள் முதலில் வாங்கவே யில்லையென்று சொல்லி விடுவார்கள்.

நாராயணராவ்.—ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் நீர் சேர்த்து வைக்க வேண்டுமானால் உமக்கு உம்முடைய பணத்தைக் காப்பாற்றி வைக்கும்படியான இடம் எதுவும் இல்லையா? நீர் சேர்த்து வைப்பதற்குச் சங்கங்கள் இருக்கிறது. அந்தச் சங்கங்களில் உம்முடைய பணத்தைப் போட்டு வைத்தால், அவர்கள் உமக்கு ரசீது கொடுக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு ஒரு தம்படி வட்டி உமக்கு கொடுக்கப்படும். இந்தச் சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களெல்லாம் உம்முடைய பணத்துக்கு உத்தரவாதியாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்களில் நம்முடைய பணத்தைக் கட்டிவைப்பதற்கு நமக்கென்ன பயம்? குண்டக்கல் சங்கத்திலே அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும் தம்மால் கூடிய பணத்தைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்திலே ஒரு மெம்பர் தாம் கட்டிவைத்திருக்கும் பணத்திற்கு தமக்குக் கிடைத்த வட்டியிலிருந்து ஒரு ஜதை மாடு வாங்கியிருக்கிறதாகத் தெரியவருகிறது. அந்தச் சங்கத்தில் அவர் 500 ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு தொகையை கட்டிவைத்திருக்கலாம்.

சுப்பாராவ் (7).—இப்போது நீர் சொன்னதையெல்லாம் நான் கேட்டுக்கொண்டிருந்தேன். இந்த விஷயங்களெல்லாம் அந்த பிரசங்கத்தில் வந்திருக்கும். அந்த பிரசங்கத்தைக் கவனிக்காமல் நான் தூங்கிவிட்டது மூடத்தனமே.

நாராயணராவ்.— பெரிய மனிதர்கள் யாதொரு விஷயத்தைக் குறித்துப் பேசும் போது அவர்களைக் கவனத்துடன் கேட்பது நம்முடைய கடமை. அவர்களெல்லாம் நம்முடைய நன்மைக்காகப் பாடுபடுகிறார்கள்; ஆகவே நாம் இந்தச் சமயத்தைக் கைநழுவவிடக்கூடாது.

சுப்பாராவ் (8).—இந்த தாலுகாவிலே எத்தனை சங்கங்களிருக்கின்றன?

நாராயணராவ்—இந்த தாலுகாவில் 25 சங்கங்கள் இருக்கின்றன.

7. மேற்படி நோடிஸிற் கண்ட ஒவ்வொரு விஷயத்தைக்குறித்தும் புத்திசாலித்தனமாய்ப் பேசப்பட்டது; இந்த நடவடிக்கையில் ஒரு பாகம் கிரமாசாரமற்ற சம்பாஷணை ரூபமாக நடந்தேறியது; நடவடிக்கை முழுவதும் தெலுங்கில் நடத்தப்பட்டது. அவ்வவ்விடத்திலுள்ள மூலதனத்தை வரவழைப்பதற்குச் சம்பந்தப்பட்ட விஷயத்தைப் பற்றி விசேஷ ஊக்கத்துடன் பேசப்பட்டது. இந்த சங்கங்களில் பணம் கட்டிவைக்க விரும்பினவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவது சம்பந்தமான வசூல் வேலையானது எவ்வளவு மட்டில் விருத்தியடையக் கூடுமென்பதைத் தெரிந்துகொள்ளத்தான் காத்துக்கொண்டிருந்தார்களென்று அங்கே நடந்ததைக்கொண்டு நான் அறிந்து கொண்டேன். சபைத்தலைவர் தம்முடைய முடிவுப் பிரசங்கத்தில், பற்பல பிரதிநிதிகள் பேசின விஷயங்களிலிருந்து கவனிக்கத்தக்க அம்சங்களை மாத்திரம் எடுத்துச் சொல்லி முக்கியமாய்க் கடனைத் திருப்பிச் செலுத்துவது சம்பந்தமான வேலை விஷயமாக சில அருமையான சங்கதிகளை வெளிப்படுத்தினார். கடன் வாங்குகிற ஒவ்வொருவரும் தம்மோடுகூட கடன்வாங்கியிருக்கும் இன்னொருவரைத் தாம் தவணைத்தொகை செலுத்தும்போது அவரும் அவருடைய தொகையைச் செலுத்தும்படி செய்யக்கூடுமானால், இந்தக் கஷ்டம் சுலபமாய் நீங்கிவிடுமென்று அவர் எடுத்துக் காட்டினார். அதனால் ஒருவருக்கும் விசேஷ சிரமம் எதுவுமில்லை. ஆனால் ஒவ்வொருவரும் ஊக்கத்துடன் பாடுபடவேண்டும். இப்படி அவர்கள் ஒன்றுசேர்ந்து பாடுபடுவார்களேயானால் இந்த முயற்சி முற்றிலும் பலிதமாய்விடும். அந்த மெம்பர்கள் தாங்கள் பேசியதெல்லாம் அனுஷ்டானத்தை ஒட்டி மெத்தவும் புத்திசாலித்தனமாயிருந்ததற்கும் அவ்விஷயத்தைக் குறித்து ஒவ்வொருவரும் ஊக்கத்துடன் சிந்தித்து வந்ததற்கும் அவர் தம்முடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தினார். இந்தப் பிரசங்கங்களெல்லாம் முடிந்த பிறகு ஐந்தாவது ஜார்ஜ் மகாராஜா அவர்கள் விஷயமாய் ஆனந்த கோஷம் செய்து சபை கலைந்தது.

என். கிருஷ்ண ராவ்.

குறிப்புகள்.

——:o:——

1910-ம்வரு ஏப்ரல்மீ நடந்த ஒரு கூட்டத்திலே, தருமபுரம் ஜில்லா பெனு கொண்டா தாலூகாவைச்சேர்ந்த 239-ம் நம்பர் பிரம்மசமுத்திரம் நாட்டு நாலையச்சங் கத்தார் ம-ா-ா-ஸ்ரீ——என்பவர் பஞ்சாயத்தில் நியமனம் பெற்றதுமுதல் அந்த பஞ்சா யத்தின் ஒரு கூட்டத்துக்காவது வந்ததில்லை யென்னும் காரணத்தைக் காண்டு அவரை மேற்ப உ பஞ்சாயத்திலிருந்து நீக்கிவிட்டார்கள்.

2. ஸென்ட்ரல் பாங்கிகளிலிருந்து கடன் வாங்குவதற்காகக் கடன்பத்திரங்களு க்குப் பர்த்தியாக ப்ரோநோட்டுகள் எழுதிக்கொடுக்கவேண்டுமென்று சமீபத்தில் வெ ளியான ஸர்க்யுலரின் அர்த்தத்தைச் சில சங்கத்தார்கள் தப்பாய்க் கொண்டிருப்பதாகத் தோற்றுகிறது; கடன் கொடுக்கப்படுமென்று உத்தரவாவதற்கு முன்னமே அவர்கள் முதலில் ப்ரோநோட்டுகளை ரெஜிஸ்டர் செய்தனுப்புகிறார்கள். ஒரு ஸென்ட்ரல் பாங்கியி லிருந்து பணம் வாங்குவதற்காக அனுசரிக்கவேண்டிய சரியான நடவடிக்கை முறை முன்னிருந்ததுபோலவே இப்போதும் இருக்கிறது. கடன் வாங்க விரும்பும் சங்கத்தார் முதலில் ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு எழுதிக்கொள்ளவேண்டும். அப்படி எழுதிக்கொள் ளும்போது, கடன் வாங்குவதற்கு அதிகாரங்கொடுக்கிற தீர்மானத்துக்கு ஒரு நகலையும் அதனுடன்கூட வேண்டியிருக்கும் விவரங்களையும் வர்த்தமானியின் இங்கிலிஷ் பிரதி 2-ம் இலக்கத்து 60-வதுபக்கத்தையும் 3-ம் இலக்கத்து -ம் பக்கத்தையும் பார்க்க) அனு ப்பவேண்டும். அந்தக் கடன்கொடுப்பதற்கு ரெஜிஸ்ட்ரார் அவர்கள் அனுமதிகொடுக்கும் பட்சத்தில் அவர் அந்த அனுமதியை ஸென்ட்ரல் பாங்கிக்கும் கடன்கேட்ட சங்கத்தாக கும் கிரமமாய்த் தெரிவிப்பார். ஸென்ட்ரல் பாங்கியின் டைரெக்டர்கள் ஷேர்களை பட் டுவாடாசெய்ய இஷ்டப்படும்பட்சத்தில், அந்த பாங்கியார் தங்கள் ரெகார்டுகளிலிருந்து ஒரு ப்ரோநோட்டு மசோதாவை எடுத்து அதில் ஒன்றும் எழுதாமல் விட்டிருக்கிற இட ங்களிலே எழுதவேண்டியவைகளை எழுதி, அதை மேற்படி சங்கத்துக்கு அனுப்புவார் கள். ஆயினும், மேற்படி கடன் கொடுக்கப்படமாட்டாதென்று மறுப்பதற்காவது ரெஜிஸ்ட்ரார் அவர்கள் அனுமதி கொடுத்த தொகையைக் குறைப்பதற்காவது ஸென் ட்ரல் பாங்கியாருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. ஸென்ட்ரல் பாங்கியாரால் அனு ப்பப்பட்ட மேற்படி ப்ரோநோட் மசோதா அந்த சங்கத்துக்கு வந்துசேர்ந்தவுடனே, சங்கத்தின் சகாயச் சட்டங்களில் விதிக்கப்பட்ட மாதிரியாய் அதை எழுதிமுடித்து ரெஜிஸ்டர் செய்யவேண்டும். ஸென்ட்ரல் பாங்கி ஆபிஸிலிருந்து பிறப்பிக்கப்படாத எந்த ப்ரோநோட்டின்மேலும் பணம் கொடுக்கப்படமாட்டாது. ப்ரோநோட்டை ரெஜிஸ்டர் செய்தபிறகு, அதில் கண்ட தொகையை எந்த விதமாய் எப்போது அனு ப்பவேண்டுமென்பதைக்கண்டு ஒரு கடிதம் சங்கமாய் மேற்படி ப்ரோநோட்டை நேராக ஸென்ட்ரல் பாங்கிக்கு அனுப்பவேணும். அநாவசியமாய் வட்டி நஷ்டம் உண் டாகாமலிருக்கும்பொருட்டு முதல் வாரம் கடந்துபோனபிறகு எந்த மாதத்திலும் கடன் தொகைகள் செலுத்துவதைச் சங்கங்கள் பெற்றுக் கொள்ளாமலிருப்பது நல்லது.

3. ஐரிஷ் அக்ரிகல்சரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி லிமிடெட் என்னும் சங்கத்தின் 1909-ம்ஆண்டு ஜூன்மீ 30உடன் முடிகிற வருஷத்திய ரிபோர்ட்டிலிருந்து

எடுக்கப்பட்ட அடியிற்கண்ட பாகங்களைப்படித்து ஜாக்கிரதையாய்க் கவனிப்பதனால் பிரயோசனமுண்டாகும்.

ஐர்லாந்து தேசத்துக் கணக்கு விவரங்களிலே மிகச்சிறந்தவைகளா யுள்ளவை கூட சொற்பமாகவே இருக்கின்றன; அப்படி யிருந்தாலும் அவைகள் ஐர்லாந்து தேசத்துக் கூட்டுத்தொழில் முயற்சி செய்கிறவர்களுக்கு மெத்த உபயோககரமானவை களே யாகும். இப்போது கைக்கு வந்திருக்கும் கணக்குகளினால் குறைந்தது ஒரு சந்தோஷகரமான சங்கதியாவது தெரியவருகிறது; அதென்னவென்றால், பெரும்பான்மையான சங்கங்கள் ஒரு சரியாக விருத்தியடைந்து வந்திருப்பதேயாகும். எவர்களுக்கு உதவிசெய்யும் உத்தேசத்துடன் இந்த விவசாயக்கட்டுப்பாடு ஏற்படுத்தப் பட்டிருக்கிறதோ அந்த ஜனங்கள் மேற்படி கட்டுப்பாட்டின் விஷயத்தில் எவ்வளவு மதி ப்பு வைத்திருக்கிறார்களென்பதற்கு மேலேசொன்ன சங்கதியே கூடியவரையில் சிறந்த சாட்சியமாகும். சங்கங்களின் சங்கியை எவ்விதத்திலாவது அதிசீக்கிரமாய் அதிகப் பட்டுவருவதற்காக இனி உழைத்து வருவதைக்காட்டிலும், ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட் டுள்ள சங்கங்களுக்குள்ளாகவே மேற்கண்டபடி அபிவிருத்தி உண்டாவதற்காக இனி உழைத்து வரவேண்டும்; ஏனென்றால், இப்போதுள்ள சங்கங்களைவிட இரண்டத்தனை மூன்றத்தனை சங்கங்கள் ஏற்படுவதற்கு ஐர்லாந்திலே இடமும் வசதியும் வெகுசாய் விஸ் தாரமாயிருக்க, ஏற்கனவேயுள்ள சங்கங்களின் காரிய நிர்வாஹ முறைகளையும் அங்க அமைப்பையும் சீர்திருத்துவதற்கும் அவைகளைக்கொண்டு விஸ்தாரமாயும் வெவ்வேறு வகையாகவும் காரியம் நடத்துவதற்கும் இன்னும் அதிகமான ஆவசியகம் இருக்கிறது. மற்ற தேசங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஐர்லாந்தில் சில சங்கங்களே இருந்த போதிலும் அந்த சங்கங்களின் காரியநிர்வாஹமும் அங்க அமைப்பும் கூட்டுத்தொழி லைத் திறமையாய் நடத்துவதற்கு ஏற்ற உயர்ந்த நிலையை அடைந்திருப்பதனால், அந்த முயற்சி முழுவதற்குமே ஒரு சிறப்புண்டாவதோடுகூட அவ்வளவு விருத்தியடையாத மற்ற சங்கங்கள் பின்பற்றி நடப்பதற்கேற்ற ஒரு பரிமாணமும் ஏற்படுகிறது; ஆகவே கூட்டுத்தொழில் முயற்சி பரவியுள்ள இடங்களிலெல்லாம் ஷை சங்கங்களின் வேலை முறை துரிதமாய்ப் பின்பற்றப்படும். இப்போதுள்ள ஸ்திதியில் ஐர்லாந்து தேசத்துக் குடியானவர்கள் சகலரும் ஒன்றாய்க் கூடாமல் அவர்களில் சிலர் மாத்திரமே ஏகோபி த்து வேலைசெய்யும் பட்சத்தில், அவர்களால் விசேஷமாய் ஒன்றும் செய்துவிட முடி யாது. பாதி வளர்ச்சி யடைந்துள்ள ஒரு கூட்டுத்தொழில் சங்கத்தார் தாங்கள் செய் யக்கூடிய நன்மையில் ஒரு பாகத்துக்குமேல் செய்துமுடிக்க ஒரு போதும் முடி யாது. பிரதான ஆபிஸார் எவ்வளவுதான் தூண்டினாலும் அல்லது போதித்தாலும் அதனால் ஒரு சங்கம் பலிதமாக வேலை நடத்த முடியாது. சங்கங்களை ஒழுங்காய் அமைப்பதில் சமர்த்தராயுள்ள ஒருவர் ஆரம்பக்கூட்டத்தில் ஜனங்களுக்கு உற்சா கத்தை நிறைய உண்டாக்கலாம்; ஆனால், உடனே அந்த சங்கத்தின் காரிய நிர்வாஹ த்தை ஏற்றுக்கொண்டு அதை உருவாக்கிவிடும் வேலையைச் செய்யத்தக்க சிரத்தையும் சாமர்த்தியமு முள்ள யாராவது ஒருவரோ அல்லது பலபேர் சேர்ந்த ஒரு தொகுப் பாரோ இருக்கும் பட்சத்தில், அந்த சங்கத்தின் மெம்பர்களுடைய தொழில்முயற்சியில் ஏறக்குறைய ஒவ்வொரு பிரிவிலும் அம்சத்திலும் அதனால் சகாயமேற்படும்; அப்படிப் பட்டவர்கள் இருந்தாலொழிய, அந்த உற்சாகம் சிறிது காலத்துக்குமேல் நிலைத்திராது. அப்படிப்பட்டவர்கள் காணப்படாத கிராமம் ஐர்லாந்திலே ஒன்று இருப்பது கூட அபூ ர்வமே. ஐர்லாந்து தேசத்துக் குடியானவர்கள் நிலங்களை விலைக்குவாங்கி, அவைகளுக் காக ஸர்க்காருக்குத் தீர்வைசெலுத்த தங்களையும் தங்களுக்குப்பின் வருபவர்களையும் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்; அந்த நிலங்களால் அவர்கள் பிழைக்கவும் விரு

த்தி யடையவும் வேண்டுமானால், அவர்கள் செய்யும் தொழிலின் ஒவ்வொரு பிரிவிலும் சமுதாய பிரயோஜனத்தை உத்தேசித்து கூட்டுத்தொழில் நடத்தவேண்டும். வேறே எந்த விதத்தினாலும் அவர்கள் விவசாயஞ் செய்யும் ஜாதியாராகப் பிழைத்திருக்கமுடியாது.

* * * * *

ஆயினும், இன்னும் திருத்தவேண்டிய விசகுகள் இருக்கின்றன; அவைகளை முந்திய ரிபோர்ட்டுகளிலே கவனித்திருக்கிறது. உதாரணமாக, கடன்களைப் புதுப்பிக்கும் ஏற்பாடு சில சங்கங்களிலே இன்னும் இருந்துகொண்டிருக்கிறது; மேலும், கடன்வாங்கினவர்களைக் காலம் தவறாமல் கடன் தொகைகளைத் திருப்பிச்செலுத்தும்படி கட்டாயப்படுத்துவதிலாவது, திருப்பிச் செலுத்திவிட்ட அல்லது திருப்பிச் செலுத்திவிடப் போகிற கடன்வாங்கினவருக்குப் புதிதாய்க் கடன் கொடுப்பதற்கு முன்னே பழையகடன் எதற்காகக் கொடுக்கப்பட்டதோ அந்தக் காரியம் நிறைவேறிவிட்டதா வென்று தங்களுக்குத் திருப்திகாரமாய்த் தெரிந்துகொள்வதிலாவது அனேக விஷயங்களில் கம்மிட்டியார்கள் போதுமான அளவுக்குக் கண்டிப்பாயிருப்பதில்லை. இப்படிப்பட்ட விஷயங்களிலே முன் தடவை கடன்வாங்கினவருக்கே கடன்கொடுத்து வைப்பதனால் அவருக்கு வாஸ்தவமான அனுகூலம் ஏதாவதிருக்கிறதாவென்பது சந்தேகமாயிருக்கிறது; ஆகவே, கம்மிட்டியார்கள் இந்த அம்சங்களை இது வரையில் கவனித்திருப்பதைவிட இன்னும் அதிக ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.

* * * * *

கடன்களுக்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பங்களைக் குறித்து யோசிக்கும்போது கம்மிட்டியார்கள் அந்தக் கடனை எவ்வளவு காலத்துக்குள் திருப்பிச்செலுத்த வேண்டுமோ அது விஷயமாய்த் தக்கபடி ஜாக்கிரதையாயிருப்பதில்லை யென்னும் சங்கதியைக் குறித்து கவனம் செலுத்தவேண்டும். பன்னிரண்டுமாதக்கடன் கொடுப்பது அநேக சங்கங்களிலே சாதாரணமாயிருக்கிறது; ஆனால் எதற்காகக் கடன் கேட்கப்படுகிறதோ அந்தக் காரியத்தை நோக்கும்போது கடனைத் திருப்பிச் செலுத்த 7முதல் 10 மாதத்தைப் பார்க்கிலும் அதிக காலம் வேண்டியில்லாதிருந்தபோதிலும் அந்த சங்கதியைக் கவனிக்காமலே மேற்கண்ட விதமாய்க் கடன் கொடுக்கப்படுகிறது. இது இப்படியிருக்க, வியாபாரத்துக்குவேண்டிய மூலதனத்துக்காகக் கொடுக்கப்படும் கடன்களை இப்போது கொடுப்பதைவிட ஒருவேளை இன்னும் அதிகமான காலத்துக்கும் இதைப் பார்க்கிலும் அடிக்கடியும் கொடுத்துவரலாம். அந்தக்கடன்தொகைகளை சங்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி தவணைத்தொகைகளாகச் செலுத்தியும் வரலாம், கடன்வாங்கும் ஒரே நபருக்கு வருஷாவருஷம் பன்னிரண்டு மாதகாலத்துக்குக் கடன் கொடுத்து வரும் வழக்கத்துக்கு இடங்கொடுக்கக்கூடாது.

ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகளிலே போட்டிருக்கும் முதலைவிட அதிகமாய்ப் பணம் வாங்கும் ஏற்பாட்டை உள்ளூரில் பணம் கட்டிவைக்கும் ஏற்பாட்டுடன் யுக்தானுசாரமாய்க் கலந்து வேலை நடத்துவதற்கு முதற்சொன்ன ஏற்பாடு பொருத்தமாயிருப்பதால், விவசாய பாங்கிகளைச் சேர்ந்த மெம்பர்களில் எவர்களாவது ஸேவிங்ஸ் பாங்கிகளிலாகிலும் வேறே எங்கேயாகிலும் பணம் கட்டிவைக்கும் வழக்கமுடையவர்களாயிருக்கும்பட்சத்தில் அவர்களை அந்த பாங்கார் தங்களிடத்தில் ஷை பணத்தைக் கட்டிவைக்கும்படி செய்யும் விஷயத்திலே முன்னிலும் அதிகமாய் இப்போது கவனஞ் செலுத்தலாம்.

4. 1910-ம்வரு ஜூன் மாதத்தில் கர்நூலில் நடந்த பதினேழாவது மதராஸ் ப்ரொவின்ஷியல் கான்பரன்ஸ் என்னும் சென்னை மாகாண மகாசபையிலே பி. ஆர். சுந்தரையரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்து செய்த பிரசங்கத்தில் ஐக்கிய நாணயச்சங்கங்களைக் குறித்து அடியிற்கண்ட விதமாய்ப் பேசினார்:—

"ஐக்கியநாணயச்சங்கங்களைக்குறித்த ஆக்ட் என்னும் அதிக முக்கியமான சட்ட ஏற்பாட்டைக் கவர்ன்மென்டார் செய்திருப்பதைப்பற்றி இந்த சந்தர்ப்பத்திலே நான் பேசவேண்டியிருக்கிறபடியால் அதைக்குறித்துச் சிறிது பேசிவிட்டு பிறகு இதர விஷயங்களைக் குறித்துப் பேசுகிறேன். தற்காலத்தில் அந்தச் சட்டமானது கடன்பட்டிருக்கும் விவசாயக்காரர்களின் கஷ்ட நிவர்த்திக்காகவே முக்கியமாக உபயோகப்பட்டு வந்தாலும், உற்பத்தியை அதிகப்படுத்துவதிலும் அப்படி உற்பத்தியானதைப் பகிர்ந்துகொடுப்பதைச் சுலபமாக்குவதிலும் அதனால் உண்டாகும் பிரயோஜனத்தை எவ்வளவு விசேஷப்படுத்திச் சொன்னாலும் அது மிகைபடக் கூறினதாகமாட்டாது. அதனால் உண்டாயிருக்கும் அனுகூலமான பிரயோஜனங்களை அதன் உதவியைப் பெற்றுள்ள ராயத்துகள் அடைந்திருக்கும் செல்வஅபிவிருத்தியில் ஏற்கனவே காணலாம். காஞ்சீபுரத்தில் நடந்த ஐக்கிய நாணயச் சங்கங்களின் மகாசபையொன்றில் நான் செய்த பிரசங்கத்திலே ஐக்கிய நாணய வேலை என்னும் விஷயத்தைக் குறித்துப் பேச சமயம் வாய்த்தபோது ஒருவாறு பூர்த்தியாய் விவகரித்திருக்கிறேன். ஜாதீயக் கல்வி புகட்டுவதற்குக் சாதனமாக அந்த சட்டத்தினால் நேராயல்லாமல் மற்றப்படி உண்டாகக்கூடிய பிரயோஜனங்களைக் கவனிக்கும்படி இப்போது நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சிக்கனத்தையும் சுவய நம்பிக்கையையும் வளரச்செய்வதனாலும், ஐக்கியம், பரஸ்பர நம்பிக்கை இவைகளின் பிரயோஜனத்தை நிரூபிப்பதனாலும், ஜனங்களுக்குள் தேசத்தின் கைத்தொழிலபிவிருத்தி விஷயத்திலும், ராஜரீக முன்னேற்ற விஷயத்திலும் ஒரு சரியாய் திடமான ஒற்றுமை உண்டாக்குவதற்கு அது எவ்வளவோ முக்கியமானதாயிருக்கிறது; அதைப்பற்றி எவ்வளவு விசேஷமாய்ச் சொன்னாலும் அது மிகைபடக் கூறினதாகமாட்டாது. மிஸ்டர் லீஸ்ஸ்மித் சொன்னதாவது:—"இங்கே அவர்களுக்கு (அதாவது இந்து தேசத்து ஜனங்களுக்கு) பிரதிநிதிகளைக் கொண்டு காரியம் நடத்தும் ஸ்தாபனங்களின் மூலாதாரங்கள் ஏற்பட்டிருந்தன. பிரதிநிதி ஸ்தாபனங்களை நடத்தும் சக்தி ஒரு ஜனஸமூகத்தாருக்கு உண்டாக வேண்டுமானால் அந்த ஸ்தாபனங்களை அவர்களுக்கு அளிப்பதுமாத்திரம்போதாதென்று சகல ராஜரீக தத்துவசாஸ்திரிகளும் வற்புறுத்தி யிருந்தார்களென்று அவர்கள் காண்பார்கள். சுய ஆட்சி புரியும் ஸ்தாபனங்களை நடத்துவதில் நேராய்ப் பழகுவதற்காக அவர்கள் எந்த விதத்திலாவது சாதாரணமாய்த் தெரிந்தெடுத்துநியமிப்பவருக்கு (எலெக்டருக்கு) இடைவிடாமல் சமயம்கிடைக்கும்படி செய்துவரவேண்டும் * * * யாதொரு தேசத்தின் ஜனங்கள் சுய ஆட்சி பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களா என்பதற்குப் பெருத்த சோதனைப் பிரமாண மென்னவென்றால்,—கவர்ன்மென்டார் அவர்களுக்காகச் செய்திருப்பதைத் தவிர, அவர்களே தங்களுடைய சொந்த இயற்கை அமைப்பினால் சுய ஆட்சி புரியும் ஸ்தாபனங்களை ஏற்படுத்தினார்களா என்று பார்ப்பதேயாகும். ஐக்கிய நாணயச் சங்கங்களின் வளர்ச்சியை விருத்திசெய்வதையும் அவைகளால் பிரயோஜன முண்டாவதற்கான வசதியை விஸ்தரிப்பதையும்விட ஜனங்களின் க்ஷேமாபிவிருத்தி விஷயமாய்ச் செய்யத்தக்க முக்கியமான காரியம் வேறொன்றிருப்பதாக நான் நினைக்கவில்லை."

5. 134-ம் நம்பர் கம்மாளம்பூண்டி நாட்டு நாணயச் சங்கத்தின் அடியிற் கண்ட ரிபோர்ட்டைப் படிப்பது சுவாரஸ்யமாயிருக்கும்:—

கம்மாளம்பூண்டி கிராமத்திலுள்ள 22-ம் நம்பர் பட்டாநிலங்கள் வெகுகாலத்துக்கு முன் வி—கௌண்டன், எம்—நாய்க்கன் என்னும் இருவர்பேரில் கூட்டாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தன. வி—கௌண்டன் இறந்துபோனபிறகு அவருடைய சட்டசம் மதமான வாரிசாகிய ஏ—கௌண்டன் என்னும் ஒருவருடைய பெயர் ரெஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்டது.

ஏ—கவுண்டனும் எம்—நாய்க்கனும் இறந்துபோனபிறகு அவர்களுக்குப்பின் எஸ்—கௌண்டன் என்—நாயுடு என்பவர்கள் மேற்படி கூட்டுப் பட்டாவிலே சட்டப்படி பாத்தியதை யுடையவர்களானார்கள். ஆனால் கிராமக் கணக்குகளிலே "எஸ்—கௌண்டன் வகையாரா" என்றே பட்டா பதிவு செய்யப்பட்டிருந்தது. சென்ற ஏழு அல்லது எட்டு வருஷ காலமாக இம்மாதிரியே யிருந்தது. என்—நாயுடுவுக்குத் தம் பெயா பட்டாவில் இல்லாத சங்கதி வெகு சமீபகாலம் வரையில் தெரியாமலே யிருந்தது. என்—நாயுடுவின் கூட்டுப்பட்டா நிலங்களை மற்ற உடன்கைப்பற்றுதாராகிய எஸ்—கௌண்டன் என்பவர் வாரத்துக்குப் பயிர்செய்துவருகிறார். இந்த சங்கதி ஊரிலுள்ள எல்லாருக்கும் தெரியும்.

அதன் மேல் மேற்படி என்—நாயுடு என்பவர் கிராமக் கணக்குகளிலுள்ள பிசகை ஸ்பெஷல் ஸெட்டில்மெண்ட் ஆபிஸருக்குத் தெரிவித்தார். ஸ்பெஷல் ஸெட்டில்மெண்ட் ஆபிஸர் அது விஷயத்தை விசாரணை செய்தார். என்—நாயவுக்குக் கூட்டுப்பட்டாவில் பாத்தியதையில்லையென்று எஸ்—கௌண்டன் வாக்குமூலம் கொடுத்தார். நம்முடைய சங்கத்தைச் சேர்ந்த சில மெம்பர்களும் கிராமத்திலுள்ள வேறே சில கனவான்களும் ஸெட்டில்மெண்ட் ஆபிஸரிடம் போய், எஸ்—கௌண்டன் சொன்ன வார்த்தைகள் தப்பென்றும், என்—நாயடு என்பவர் தமக்குப் பட்டாவிலுள்ள பாத்தியதையை அனுபவித்துவந்தாரென்றும் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதன்மேல் ஸெட்டில்மெண்ட் ஆபிஸர் என்—நாயுவின் பெயரைப் பட்டாவில் சேர்க்கும்படி உத்தரவுபண்ணினார்.

நம்முடைய சங்கத்தின் மெம்பர்கள் எஸ்—கௌண்டனுடைய மோசநடத்தையைக் குறித்தயோசித்து, அவரைச்சங்கத்தினின்றும் தள்ளிவிடவேண்டுமென்னும்முடிவுக்கு வந்தார்கள். ஆனால், இதற்கு மத்தியில் எஸ்—கௌண்டன் எங்கள்முன் ஹாஜராகித் தாம்சொன்ன தப்புப்பேச்சுகளுக்காகத் தம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்மேல் மெம்பர்கள் அவரை இந்த சமயம் மன்னிக்கும்படி தீர்மானித்தார்கள். எஸ்—கௌண்டன பஞ்சாயத்தில் ஒரு மெம்பராயிருந்தபடியால், அவருடைய நம்பிக்கைக்குறைவான நடத்தைக்காக ராஜிநாமா கொடுத்துவிடும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள்.

நாம் செய்த இந்தக் காரியத்தினால் இதர மெம்பர்கள் அசத்தியமாய் நடந்துகொள்ளாமலிருப்பதற்கு அவர்களுக்கோர் நல்ல உதாரணம் ஏற்படுவதோடுகூட, கிராமத்தார்கள் சங்கத்தை முன்னிலும் அதிகமாய் மதிப்பதற்கும் இடமுண்டாயிற்று.

ஸர்க்குலர் உத்தரவுகள்.

நம்பர் 2.

ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் வேலை நடக்கும் விஸ்தீர்ணத்துக்குள் அடங்கியுள்ள ஒரு கிராமமானது அந்த விஸ்தீர்ணத்திலிருந்து பிறகு நீக்கப்பட்டால், அப்போது இன்ஸ்பெக்டர்களும் சங்கங்களும் தெரிந்து நடந்துகொள்வதற்காக அடியிற்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. பழைய சங்கங்களின் கணக்குப் புத்தகங்களிலும் புதிய சங்கங்களின் கணக்குப் புத்தகங்களிலும் செய்ய வேண்டிய பதிவுகளை இன்ஸ்பெக்டர் தாமே செய்யவேண்டும்.

(A) ஒரு கிராமமானது விலக்கப்பட்டு, அதில் பிரத்தியேகமான சங்கம் எதுவும் ஏற்படுத்தப்படாவிட்டால்:—

1. விலக்கப்பட்ட கிராமத்தில் வசிக்கிற மெம்பர்கள் நேராகப் பிரதான கடன்காரர்களாயாவது நேராகவல்லாமல் மற்றப்படி ஜாமீன்தாரர்களாயாவது சங்கத்துக்குக் கடன்பட்டாதவர்களாயிருந்தால், அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள கிரமப்படி விண்ணப்பம் அனுப்புகிறவரையில் காத்திராமல், உள்ளபடியே அவர்கள் செலுத்தின பங்குமுதலை அவர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்; அதன்மேல், அவர்களின் பெயர்களை மெம்பர் ஜாபிதாவிலிருந்து எடுத்துவிடவேண்டும். பிரவேச கட்டணங்களை வாபஸ் செய்யக்கூடாது.

2. விலக்கப்படும் காலத்திலே சங்கத்துக்கு நேராகவாவது மற்றபடியாவது கடன்பட்டிருக்கிற மெம்பர்களின் விஷயத்திலே, அவர்களுடைய கடன் தொகைகள் பாக்கியாகும்போது அவைகளை வசூல் செய்யவேண்டும்; அப்படி செய்யும்போது, வைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு எந்த சந்தர்ப்பங்களிலும் வாய்தா கொடுக்காமலிருக்கும்படி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். புதிதாய் எவ்விதக்கடன் கொடுப்பதற்கும் அனுமதி தரக்கூடாது. அவர்களிடத்திலிருந்து சேரவேண்டியவைகளை வசூல் செய்த பிறகு, அவர்களின் பெயர்களை மெம்பர் ஜாபிதாவிலிருந்து நீக்கிவிடவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குச் சேரவேண்டிய பங்குமுதலைஅவர்களிடத்திலிருந்து சேரவேண்டிய தொகைகளுக்குச் செல்லாக வைத்துக்கொண்டு பாக்கியாய் நிற்பதை மாத்திரம் வசூல்செய்ய சங்கத்தாருக்கிஷ்டமிருந்தால் அப்படியே செய்யலாம். பிரவேச கட்டணங்களை அப்படி செல்லுவைத்துக்கொள் கூடாது.

(B) விலக்கப்பட்ட கிராமத்திலே பிரத்தியேகமான ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டால்:—

1. சாதாரணமாக, பழைய சங்கத்தைச் சேர்ந்தவர்களாய் அந்த கிராமத்தில் வசிக்கிறவர்கள் புதிய சங்கத்தில் மெம்பர்களாய்ச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(*a*) அப்படி சேர்த்துக்கொள்ளப்படுவதன்மேல் பிரவேச கட்டணங்களைத் தள்ளிக்கொடுக்கக் கூடாதென்று புதிய சங்கத்தின் பஞ்சாயத்தார் தீர்மானிக்கும் பட்சத்தில், ஏற்கனவே அந்த மெம்பர்கள் செலுத்தின பங்குமுதலைப் பழைய சங்கத்தார் அவர்களுக்கு வாபஸ் செய்ய வேண்டும்; அந்த மெம்பர்களும் புதிய சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதன்மேல், புதிய பங்குமுதல் கையொப்பம் செய்வது மாத்திரமல்லாமல், வழக்கமாய்ச் செலுத்த வேண்டிய பிரவேச கட்டணங்களைச் செலுத்தவும் வேண்டும்.

(*b*) அப்படிக்கல்லாமல் பிரவேச கட்டணம் செலுத்துவதைத் தள்ளிக் கொடுக்கப் பஞ்சாயத்தார் தீர்மானிக்கும் பட்சத்தில், அந்தத்தீர்மானத்துக்கு அனுமதிகொடுக்க ரெஜிஸ்ட்ரார் அவர்கள் சித்தமாயிருக்கிறார். இப்படிச்செய்யும் பட்சத்தில், மெம்பர்கள் புதிய சங்கத்தில் எடுத்துக்கொள்ளும் பங்குகளின்மேல் செலுத்தவேண்டியதாகிற பிரவேச கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து நிவாரணை பெறுவார்கள்; ஆனால், அப்படிச் செலுத்தவேண்டிய பிரவேச கட்டணத்தின் மொத்தத்தொகை பழைய சங்கத்துக்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தைவிட அதிகமாயிருக்கக்கூடாது. அதிகமாயிருந்தால், அவ்விரண்டு தொகைகளுக்குமுள்ள வித்தியாசத்தை மாத்திரம் புதிய சங்கம் வசூல்செய்ய வேண்டும். பழைய சங்கத்திலிருந்து மாற்றப்பட்ட மொத்தப் பங்குமுதலைப் பழைய சங்கத்துக் கணக்கில் வாபஸ் செய்யப்பட்டதாகவும் புதிய சங்கத்துக் கணக்கிலே வரப் பெற்றுக்கொண்டதாகவும் காட்டவேண்டும். அந்த மொத்தத் தொகையைக் கீழே குறிக்கப்படும் கடன் பத்திரத்திலிருந்து கழிக்க வேண்டும்.

2. மெம்பர்கள் பழைய சங்கத்திலிருந்து கடன் வாங்கியிருக்கும் விஷயங்களிலே, சேரவேண்டிய அசல் தொகைக்கு வருஷமொன்றுக்கு 100 க்கு $7\frac{1}{2}$ வீதம் வட்டிகண்டு ஒருகடன் பத்திரத்தைப் புதிய சங்கத்தார் பழைய சங்கத்தாருக்கு எழுதிக் கொடுப்பதன்மேல், மேற்படி மெம்பர்கள் செலுத்தவேண்டிய மொத்தக்கடன் புதிய சங்கத்துக்கு மாற்றப்படும். புதிய சங்கம் வேலைசெய்யத் தொடங்கும் தேதியே கடன் பத்திரத்தில் போடவேண்டிய தேதியாகும். இந்தக் கடன்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதன்மேல், பழைய சங்கத்தார் அது சம்பந்தமான மெம்பர்களின் கடன் பத்திரங்களின்மேலும் ப்ரோநோட்டுகளின்மேலும் அவைகளை ஒப்படை செய்ததாக எழுதி, அந்தப் பத்திரங்களைப் புதிய சங்கத்துக்குக் கொடுத்துவிடவேண்டும். அது முதல் புதிய சங்கத்தார் சேரவேண்டிய தொகைகளை வசூல் செய்வதற்கு உத்தரவாதியாவார்கள். புதிய சங்கத்தார், கடன் வாங்கியவர்கள் செலுத்தவேண்டிய கடன் தொகைகளை வருஷமொன்றுக்கு 100 க்கு $9\frac{3}{8}$ வீதத்தின்படியாவது, அந்தந்த பத்திரங்களிலே குறிப்பிட்டுள்ள வீதங்களின்படியாவது வட்டிசகிதமாய்க் கெடுவு பிரகாரம் அவர்களிடத்திலிருந்து வசூல்செய்து, கடன்வாங்கின தேதிமுதல் புதியசங்கம் வேலைசெய்யத் தொடங்கின தேதிவரையில் மேற்படிகடன் தொகைகளுக்குச் சேரவேண்டிய வட்டித்தொகையைப் பழையசங்கத்துக்குச் செலுத்தவேண்டும்; பாக்கி வட்டியையும் அசல் முழுவதையும் புதிய சங்கத்தின் கணக்குகளில் வரவு வைத்துக்கொள்ள வேண்டும். இன்ஸ்பெக்டருடைய நேர் மேற்பார்வையின் கீழ் மேற்படி தொகை

களை ஜாக்கிரதையாய்ப் பங்கீடு செய்யவேண்டும். கடன் வாங்கினவர் சம்பந்தப்பட்ட மட்டிலே, கடன் ஷரத்துகளை மாற்றாமலிருக்கவேண்டும்; ஆனால், அந்தக்கடனைத் தீர்ப்பதற்குப் பின்னும் கெடுவு கேட்கும்பட்சத்தில், புதிய சங்கத்தின் சகாய சட்டங்களிற் கண்ட நிபந்தனைகளின் பிரகாரமே மேற்படி கெடுவு கொடுக்கப்படும்.

3. மேலே கண்டபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒரு மெம்பரிடமிருந்து வரவேண்டிய கடன்தொகை விஷயத்திலே, அவருடைய ஜாமீன்தார்கள் பழைய சங்கத்தின் விவகாரங்களிலிருந்து விலக்கப்பட்ட கிராமத்தில் வசிப்பவர்களாகவாவது, புதிய சங்கத்தில் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படாதவர்களாகவாவது இருக்கக்கூடும். அப்படிப்பட்ட விஷயங்களிலே, புதிய சங்கத்து மெம்பர்களிலிருந்து நூதனமாய் ஜாமீன்தாரர்களை ஏற்படுத்திக் கொடுக்கும்படி கடன்வாங்குகிறவரைக் கேட்கவேண்டும். அப்படி அவர் செய்யும்பட்சத்தில், மேலேகண்ட B (2) பாராவின்படி காரியம் நடத்தவேண்டும்; இல்லாவிட்டால், A (2) பாராவின்படி நடக்கவும்.

4. புதிய சங்கத்தின் ரொக்க வரவுகளை, அந்த சங்கத்தினால் பழைய சங்கத்துக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட B (2) பாராவில் கண்ட கடன்பத்திரத்திற்கண்ட கடன் தீருகிறவரையில் அதிற்கண்ட கடனை தவணை ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் செலுத்தி வருவதன் பொருட்டு உபயோகப்படுத்தவேண்டும். அதுவரையிலே ரொக்க வசூலை வேறெவ்விதமாகவும் உபயோகிக்கக் கூடாது.

5. பழைய சங்கத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் புதிய சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படாமலிருக்கும் விஷயங்களிலே, A குறிப்பிட்ட தலைப்பின் கீழ்ச் சொல்லியபடி நடக்கவேண்டும்.

நம்பர் 3.

சென்னபட்டணம் ஸென்ட்ரல் அர்பன் பாங்க் லிமிடெட் என்னும் சங்கத்திலிருந்து வாங்கப்பட்ட பிரதி கடன்தொகையும் ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் அவர்களால் அதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட பிறகு மேற்படி தொகைக்கு ஐக்கிய நாணயச் சங்கங்கள் அடியிற்கண்ட ஷரத்துகளைக்கண்டு ஒரு கடன்பத்திரம் எழுதி ரெஜிஸ்டர் செய்து கொடுத்ததன்மேல் மேற்படி சங்கங்களுக்கு பட்வடா செய்யப்பட்டது; அந்த ஷரத்துகள் எவையென்றால்:—

(*a*) கடனை இரண்டு வருஷத்துக்குள் தீர்க்கவேண்டுமென்பது;

(*b*) வருஷம் ஒன்றுக்கு 100-க்கு $7\frac{1}{2}$-வீதம் வட்டி செலுத்தவேண்டுமென்பது;

(*c*) வட்டியை ஆறு மாதத்துக்கு ஒரு தடவை செலுத்தவேண்டுமென்பது;

(*d*) ஒன்று அல்லது பல நூறு ரூபாயாகக் கடன் தொகையில் ஒரு பாகத்தைத் திருப்பிச்செலுத்தினால் அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது;

(*e*) எந்த மாதத்தில் கடன் கொடுக்கப்படுகிறதோ அல்லது எந்த மாதத்தில் திருப்பிச் செலுத்தப்படுகிறதோ அந்த மாதம் ஒரு மாதத்தின் பகு

மாயிருந்தாலும் அதை ஸென்ட்ரல் பாங்கிக்கு அனுகூலமாக முழு மாதமாக வைத்துக்கொள்ளலாமென்பது;

(f) ஒரு மாதத்தின் முதல் தினத்துக்குப் பிறகு கடன் தொகையின் ஒரு பாகத்தைத் திருப்பிச் செலுத்துவதாயிருந்தால், அடுத்த மாதத்து முதல் தினத்திலிருந்தே வட்டியைக் குறைப்பதற்கு அனுமதி கொடுக்கப்படுமென்பது;

(g) வட்டி செலுத்தவேண்டிய தேதிக்குப் பிறகு 15 நாள் வரையில் செலுத்தப்படாமலிருந்தால், எவ்வளவு காலத்துக்குக் கடன் கொடுக்கப்பட்டதோ அந்தக் காலம் முடியும் வரையில் காத்திராமல் அதற்குள்ளாகவே அந்தக்கடனைத் திருப்பிச் செலுத்திவிடும்படி கேட்பதற்குள்ளாவது.

2. கடன் பத்திரங்களுக்குப் பதிலாகப் ப்ரோநோட்டுகளை உபயோகிக்கலாமென்பதற்குள்ள நியாயங்களை ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி அவைகளை அவர் ஒப்புக்கொண்டதன்மேல், மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்க் லிமிடெட் என்னும் சங்கத்தார் அப்படியே உபயோகித்துவருகிறார்கள். ப்ரோநோட்டுகள் கடன் பத்திரங்களைப் பார்க்கிலும் சுலபமான மாதிரியாக எழுதப்பட்டிருந்தபோதிலும், அவைகளின் விஷயத்தில்கூட மேற்படி ஷரத்துகளின்படி நடந்துகொள்ள வேண்டுமென உத்தேசித்திருக்கிறதென்று சங்கங்களுக்குத் தெரிவிக்கலாகிறது.

நம்பர் 4.

ஒவ்வொரு சங்கத்திலும் கடன் வாங்கும் மெம்பர்கள் அசலையாவது வட்டியையாகது செலுத்தவேண்டிய தேதிகளில் செலுத்தத் தவறினால், தண்டனைக்குள்ளாக வேண்டுமென்று விதியேற்படுத்திருக்கிறது. அப்படி தண்டனை விதிப்பதற்கான நிபந்தனைகள் ஏற்படுத்தினதால் உண்டாவதென்ன வென்றால்:—

i. கடன்தொகை முழுவதும் உடனே வசூல் செய்து விடத்தக்கதாகிறது;

ii. ஜாஸ்தி வட்டிவீதம் விதித்து வாங்கப்படுகிறது;

iii. பாகம் பாகமாய்த் திருப்பிச் செலுத்தப்படும் தொகைகளுக்கு வட்டி தள்ளிக் கொடுக்கப்படுவதில்லை.

கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினவரின் பேரில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடர்ந்து டிக்ரி வாங்கினால், சில சமயங்களில் கோர்ட்டார் மேலேகண்ட ஷரத்துகளைவிட அனுகூலமான ஷரத்துகளை ஏற்படுத்துகிறார்கள்; தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சங்கங்களுள் ஒன்றில் சிறிது காலத்துக்குமுன் நடந்த ஒரு கேஸிலே இந்த மாதிரி நேரிட்டது. கடனை வாய்தாத் தொகைகளாகத் திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதி கொடுப்பதோடுகூட, வசூல் செய்யப்பட்ட வாய்தாத் தொகைகளின் பேரில், பாக்கித் தொகைக்கு ஏற்பட்ட வட்டி வீதத்தைவிடக் குறைந்த வீதப்படி வட்டியைத் தள்ளிக் கொடுக்கவும் அனுமதி கொடுக்கிறார்கள். ஆகையால், கடன் செலுத்தத் தவறினவர்கள் மேலே கண்ட அனுகூலமான ஷரத்துகள் கிடைப்பதற்காகத் தங்கள்மேல் வியாஜ்ஜியம் நடக்க வேண்டுமென்று கோரினவர்களாய்த் தாங்களாகவே பாக்கித் தொகைகளைச் செலுத்துவதைப் பார்க்கிலும் தங்களுக்கு விரோதமாய் டிக்ரி பிறப்பதே உத்தமமென்று நினைக்கலாம். அப்படி நினைப்பது பிசகு; ஏனென்றால், கடன் செலுத்

தத் தவறினவர் கோர்ட்டுச்செலவுகளைச் செலுத்தவேண்டியவராவதுமல்லாமல், சங்கத்திலிருந்து விலக்கப்பட்டு மெம்பருக்குள்ள சுதந்தரங்களை யெல்லாம் அதனால் இழந்துவிடுவார். ஆயினும், மேலே கண்ட விதமாய்க் கோர்ட்டாரால் அனுகூலமான ஷரத்துகள் ஏற்படுத்தக்கூடியதை ஒழிப்பதற்காக, சங்கத்தின் வக்கீலாவது சங்கத்தின் தரப்பில் கோர்ட்டில் விவகாரம் நடத்துகிறவராவது சங்கத்தின் சகாயச் சட்டங்களைக் கோர்ட்டாருக்குப் பூர்த்தியாய் விவரித்துச் சொல்லி, சங்கம் ஏற்படுத்தியிருக்கும் ஷரத்துகள் கடுமையானவைகளல்ல வென்பதை எடுத்துக்காட்டி, சங்கத்தின் தண்டனை நிபந்தனைகளால் உண்டாகும் தண்டனை சொற்பமே யென்றும், அந்த நிபந்தனைகள் அங்கங்கே பொதுவாய்க் கடன் கொடுக்கும் இடங்களில் கடன் தொகைகளுக்குச் சாதாரணமாய் ஏற்படுத்தப்படும் ஷரத்துகளைப்போல் அவ்வளவு நிர்ப்பந்தமானவையல்லவென்றும் வற்புறுத்தி, கோர்ட்டார்கள் சங்கத்தின் சகாயச் சட்டங்களில் கண்டிருக்கும் திட்டங்களைவிட அதிக கண்டிதக்குறைவான திட்டங்களை ஏற்படுத்துவதால் உண்டாகும் கெடுதியை எடுத்துச்சொல்லி, யுக்தானுசாரமாய் வட்டியைக் குறைப்பது வருத்திப் பணம் வாங்கும் லேவாதேவிகளில் அவசியமே யொழிய ஐக்கியநாணயச் சங்கங்களைப் போன்ற பொதுக்கூட்டங்களின் விஷயத்தில் அவசியமல்ல வென்றும் வாதிக்க வேண்டும்.

நம்பர் 5.

சங்கங்களின் சகாயச் சட்டங்களின் பிரகாரம், ஒரு சகாயச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றாலும் மாற்றவேண்டுமென்றாலும் ரத்துசெய்யவேண்டுமென்றாலும், அப்படிப்பட்ட யாதொன்றுக்கும் ரெஜிஸ்ட்ரார் அவர்களின் அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொள்ளாமல் அதைக்குறித்துப் பொதுச் சபையார் ஆலோசிக்க முடியாது.

ரெஜிஸ்ட்ரார் அவர்கள் தமது அங்கீகாரத்துக்காக அனுப்பப்படும் பெரும்பான்மையான விஷயங்களிலே பிரேரேபிக்கப்பட்ட மாறுதல்கள் எழுதியிருக்கும் மாதிரியிலோ பாஷையிலோ அவைகள் குறிப்பிடும் அர்த்தத்திலோ அல்லது கூட்டு முயற்சியின் கோட்பாடுகளைத் தெரிந்துகொண்டதாய்க் காட்டும் அம்சத்திலோ அவைகள் குறைவாயிருந்தனவென்றும், ஆகையால் அவைகளைத் திருத்துவதற்காகத் திருப்பியனுப்பவேண்டி யிருந்ததென்றும், அது காரணமாகப் பொதுச்சபையார் இரண்டாமுறை கூடவேண்டியது அவசியமாயிற்றென்றும் கண்டறிந்திருக்கிறார்.

எந்த மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறதோ அவைகளைப் பொதுச் சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவருவதற்கு முன்னே, பஞ்சாயத்தார்கள் அவைகளைப்பற்றி ரெஜிஸ்ட்ரார் அவர்களுடன் முன்னதாய்க் கலந்தாலோசித்து அவருடைய அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வது உசிதமாகுமென்று ரெஜிஸ்ட்ரார் அவர்கள் எண்ணுகிறார்.

டிபார்ட்மென்டார் உத்தரவுகள்.

நம்பர் 6.

இன்ஸ்பெக்டர்கள் ஒரு சங்கத்தைக்குறித்துப் பிரஸ்தாபிக்கும்பொழுதெல்லாம் அதன் ரெஜிஸ்டர் நம்பரைத்தவறாமல் எடுத்துச்சொல்லவேண்டும்.

நம்பர் 7.

லாபத்திலிருந்து கொடுக்கவேண்டிய சகல சம்மானத் தொகைகளையும் ஈவுத்தொகைகளையும், எந்த கோவாபரேடிவ் வருஷத்தில் ரெஜிஸ்ட்ராரால் லாபம் நிர்ணயிக்கப்படுகிறதோ அந்த வருஷம் முடிவதற்குள்ளே அவைகளைப் பெறவேண்டிய நபர்களுக்குக் கூடியவரையில் பட்வாடா செய்யவேண்டும். அப்படி பட்வாடா செய்யும்பொழுது, கொடுக்கப்படும் தொகைகளைக் கணக்கில் செலவாகக் காட்டவேண்டும். பெற்றுக்கொள்ள பாத்தியதையை இழந்ததனால் பட்வாடா ஆகாமல் நின்றுபோய்விட்ட தொகைகளைச் சகாயச் சட்டங்களில் சொல்லியிருக்கும் விதமாய்ப் பைசல் செய்யவேண்டும். எந்த வருஷத்தில் லாபம் நிர்ணயிக்கப்படுகிறதோ அந்த வருஷத்தின் முடிவில் பாக்கியாய் பட்வாடா ஆகாமல் நின்றிருக்கும் தொகைகளை மாத்திரமே கையிருப்புக் கணக்குக் காகிதத்தில் பாக்கியாய்க் காட்டவேண்டும். எந்த வருஷத்திலாவது ரெஜிஸ்ட்ரார் அவர்கள் கணக்குகளைத் தணிக்கைசெய்து லாபத்தை நிர்ணயிப்பதற்கு முன்னே அந்த வருஷத்தில் சேர்ந்து வந்திருக்கும் சம்மானத் தொகைகளையும் ஈவுத்தொகைகளையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த வருஷத்திய பாக்கியாய்க் காட்டக்கூடாது. சங்கத்தின் சகாயச் சட்டங்களில் ஏதாவது காலஅளவு நிச்சயிக்கப்பட்டிருந்தால் அந்தக் கால அளவுக்குள்ளாவது, அப்படிப்பட்ட கால அளவெதுவும் நிச்சயிக்கப்படாதிருந்தால், ரெஜிஸ்ட்ரார் அவர்களின் தணிக்கை உத்தரவுஜில்லா கெஜெட்டில் பிரசுரமான தேதியிலிருந்து இரண்டு வருஷத்துக்குள்ளாவது சுதந்தரித்துக் கேட்கப்படாத எவையேனும் தொகைகளை மற்றப்படி இன்னவிதமாய்ப் பைசல் செய்யவேண்டுமென்று சகாயச்சட்டங்களில் பிரத்தியேகமாய்க் குறிப்பிட்டிருந்தாலொழிய அந்தத் தொகைகளை ரெஜிஸ்ட்ரார் அவர்களின் அநுமதியைப் பெற்றுக்கொண்டு ரிஸர்வ் பண்ட் என்னும் சேமநிதியுடன் சேர்த்துவிடவேண்டும். உதாரணமாக, காஞ்சிபுரம் டௌன் பாங்க் லிமிடெட் என்னும் சங்கத்தார், ஈவுத்தொகைகளை நிர்ணயித்து ரெஜிஸ்ட்ரார் பிறப்பிக்கும் உத்தரவுகளின் தேதியிலிருந்து மூன்றுவருஷ காலத்துக்குள்ளாக சுதந்தரித்துக் கேட்கப்படாமல் நிற்கும் தொகைகளையெல்லாம் பொது

நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட நிதியுடன் சேர்த்துவிடவேண்டுமென்று நிபந்தனைகண்டு ஒரு சகாயச்சட்டம் பிரேரேபித்திருக்கிறார்கள். திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் ஸொஸைடி லிமிடெட் என்னும் சங்கத்தார் ஈவுத்தொகைகள் நிர்ணயிக்கப்படும் தேதியிலிருந்து மூன்றுமாத காலம் வரையில் பெற்றுக்கொள்ளப்படாமல் நிற்கும் தொகைகளையெல்லாம் சம்பந்தப்பட்ட நபர்களின் பங்குக் கணக்குகளில் சேர்த்துவிடுகிறார்கள். சம்மானங்களாவது ஈவுத்தொகைகளாவது பெற பாத்தியதையுள்ள எந்த நபர்களாகிலும் அந்தப்படி சேர்த்தபிறகு அவைகளைக் கொடுக்கும்படி கேட்டால், ரெஜிஸ்ட்ரார் அவர்களின் அநுமதியை எழுத்துமூலமாய்ப் பெறாமல், மேலேகண்டபடி வரவு வைக்கப்பட்ட தொகையிலிருந்து அவைகளைக் கொடுக்கக்கூடாது.

நம்பர் 8.

கிராமச்சங்கங்களின் கணக்குகளும் அவைகளை இன்னபடி வைத்துவரவேண்டுமென்பதும்.

கீழே சொல்லப்பட்ட ரெஜிஸ்டர்களில் முதல் ஒன்பது ரெஜிஸ்டர்களை எல்லா கிராமச் சங்கத்தார்களும் வைத்துவரவேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் அவர்கள் உத்தரவு செய்திருக்கிறார். ஆனால் 10-ம் நம்பர்முதல் 13-ம் நம்பர் வரையிலுள்ள ரெஜிஸ்டர்களை வைத்துவருவதாலும் பிரயோஜனமுண்டு. ரெஜிஸ்டர்களில் தப்புகளிருந்தால் அவைகளை ரப்பரினாலாவது கத்தியினாலாவது அழிக்கக்கூடாது; ஆனால், அவைகளை இங்கிபால் அடித்துவிட்டு, அப்படி திருத்தினதற்கு உத்தரவாதமுள்ள ஒரு நபர் அத்தாட்சியாக இனிஷல் போடவேண்டும்.

ரெஜிஸ்டர்களின் பெயர்கள்.

1. மினிட் புக் என்னும் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புப் புஸ்தகம்.
2. அட்மிஷன் புக் என்னும் பிரவேசப்பதிவு புஸ்தகம்.
3. ரொக்க கணக்கு புஸ்தகம்.
4. ரசீது புஸ்தகம்.
5. கொடுக்கப்படும் கடன் கணக்குப் புஸ்தகம்.
6. வாங்கப்படும் கடன் கணக்குப் புஸ்தகம்.
7. மைல் புக் (கடிதங்களை ஒட்டி வைப்பதற்கு).
8. பைல் புக் (ரசீதுகளை ஒட்டிவைப்பதற்கு).
9. தணிக்கை உத்தரவு புஸ்தகம்.
10. பங்கு விண்ணப்ப ரெஜிஸ்டர்.
11. கடன் விண்ணப்ப ரெஜிஸ்டர்.
12. சொத்து ஜாபிதா ரெஜிஸ்டர்.
13. கடிதப் புஸ்தகம் (ஆபிஸ் நகல்).

ரெஜிஸ்டர்களை இன்னபடி வைத்துவரவேண்டுமென்பது.

மினிட் புக் (கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புப் புஸ்தகம்).—இந்த புஸ்தகத்தில், (a) ஒரு சங்கத்தை ரெஜிஸ்ட்ர் செய்வதற்காகச் செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பம், (b) ரெஜிஸ்ட்ரார் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் சகாயச்சட்டங்கள், (c) ரெஜிஸ்டர் செய்யப்பட்டதைக் குறித்து ரெஜிஸ்ட்ரார் அவர்களால் கொடுக்கப்பட்ட ஸெர்டிபிகேட்—ஆகிய இவைகளின் நகல்களை முதலில் எழுதி, அதற்கு ரெஜிஸ்ட்ரார் ஆபிஸின் முத்திரை போடவேண்டும். அதற்குப் பிறகு, மெம்பர்களின் பொதுக் கூட்டங்களிலும் பஞ்சாயத்தாரின் கூட்டங்களிலும் செய்யப்பட்ட தீர்மானங்களை அவைகள் செய்யப்பட்ட தேதிவாரியாக எழுதவேண்டும். மெம்பர்களின் பொதுக் கூட்டங்களுக்கு ஒரு வரிசைக்கிரமமான நம்பர்களும், பஞ்சாயத்தாரின் கூட்டங்களுக்கு வேறொரு வரிசைக்கிரமமான நம்பர்களுமாக எல்லாக் கூட்டங்களுக்கும் நம்பர் கொடுக்கவேண்டும்; அதே மாதிரியாகப்பொதுக் கூட்டத்தின் தீர்மானங்களுக்கும் பஞ்சாயத்தாரின் தீர்மானங்களுக்கும் தனித்தனியாக நம்பர்கள் கொடுக்கவேண்டும். ஜூலை மீ 1உ யோடு ஆரம்பித்து அடுத்த வருஷம் ஜூன் மாதம் 30உ யோடு முடிவாகிறகோவாபரேடிவ் வருஷத்துக்கு நம்பர்கள் தொடர்ச்சியாய்க் கொடுத்துவரவேண்டும். மெம்பர்களின் பொதுக் கூட்டத்தின் விஷயத்தில், அந்தக் கூட்டம் கூடின தேதியையும் இடத்தையும் மினிட் புக்கில் முதலில் எழுதி, அதன் பின், ப்ரெஸிடெண்ட் ஹாஜராயிருந்தால் அவருடைய பெயரையும் உத்தியோகப் பெயரையும், ஹாஜராயிருந்த சகல மெம்பர்களின் பெயர்களையும் ஒன்றன்பின் ஒன்றாய் எழுதவேண்டும். ப்ரெஸிடெண்ட் ஹாஜராயிராவிட்டால், எல்லா மெம்பர்களின் பெயர்களையும் ஒன்றன்பின் ஒன்றாய் எழுதி, அந்தக் கூட்டத்தில் அக்கிராசனாதிபதியாயிருந்தவரின் பெயரை அதன்பின் எழுதவேண்டும். அதற்குப் பிறகு, எல்லாத் தீர்மானங்களையும் வரிசைக்கிரமமாக எழுதி நம்பர் கொடுத்து, அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் ப்ரெஸிடெண்ட் அல்லது அக்கிராசனாதிபதியாயிருந்த மெம்பர் கையெழுத்து செய்யவேண்டும்.

பஞ்சாயத்தாரின் கூட்டங்களின் விஷயத்திலே, கூட்டம் கூடின தேதியையும் இடத்தையும் முதலில் எழுதி, அதன் பிறகு தீர்மானங்களை வரிசைக்கிரமமாக எழுதவேண்டும். கடைசியாக, ஹாஜராயிருந்த எல்லா பஞ்சாயத்து மெம்பர்களின் கையெழுத்தையும் வாங்கவேண்டும்.

ஒவ்வொரு விஷயத்தையும் ஒரு பிரத்தியேகமான தீர்மானத்தின் மூலமாய்ப் பைசல் செய்யவேண்டும்; விஷயம் ஒன்றாகவே யிருந்து அது சம்பந்தப்பட்ட தீர்மானங்களினால் பாதிக்கப்படும் நபர்கள் வெவ்வேறாயிருந்தால், அந்தத தீர்மானங்களை வெவ்வேறாக எழுதவேண்டும். அதற்குத் திருஷ்டாந்தங்கள் என்னவென்றால்:—

தீர்மானம் 1.—ராமசாமி கௌண்டனுடைய மகனாகிய குப்பண்ண கௌண்டன் தன்னை மெம்பராகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் தனக்குப் பத்து பங்குகள் கொடுக்கவேண்டுமென்றும் விண்ணப்பம் செய்துகொண்டார். அவரை மெம்பராகச் சேர்த்து அவருக்கு மூன்று பங்குகள் கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 2.—தலமர்லா மஜராவிலிருக்கும் நங்கலரேர் கௌண்டன் மகன் 19-ம் நம்பர் மெம்பராகிய சின்ன கௌண்டன் தனக்கு இன்னும் மூன்று பங்குகள் கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார். அப்படியே கொடுக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், பஞ்சாயத்தாராகிய அப்பண்ண கௌண்டன் அப்படி கொடுக்கக்கூடாதென்று வோட்கொடுத்தார்.

தீர்மானம் 3.—ராஜ வீதியிலிருக்கும் கிருஷ்ண கௌண்டன் மகன் ராமசாமி கௌண்டன் தன்னை மெம்பராகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார். இந்த விண்ணப்பம் தள்ளிவிடப்பட்டது.

தீர்மானம் 4.—21-ம் நம்பர் மெம்பராகிய நல்ல கௌண்டன் தான் இதற்குமுன் வாங்கியுள்ள கடன்களைத் தீர்க்கும் பொருட்டு கம்பளியம்பட்டி கிராமத்திலிருக்கும் ஸர்வே 203-ம் நம்பர் உள்ள நிலத்தில் தன்னுடைய பாதியின் கொதுவையின்பேரில் 50 ரூபாய் கடன் கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார். இந்தக் கடன் ஜாரிசெய்யப் பட்டது. இதைத் திருப்பிக் கொடுப்பதற்கு அவருக்கு 9 மாதம் கெடுவு கொடுக்கப்பட்டது; ஏனென்றால் அதற்குள் அவருடைய நெல் மாசூல் அறுவடையாகி விற்பனை செய்யப்படக்கூடும்.

தீர்மானம் 5.—22-ம் நம்பர் மெம்பராகிய பொன்னைய கௌண்டன் மேலேகண்ட கிராமத்திலிருக்கும் 370, 371, இந்த ஸர்வே நம்பர்களுள்ள தன்னுடைய நிலங்களின் கொதுவையின்பேரில், ஒரு எருது வாங்குவதற்காகத் தனக்கு 50 ரூபாய் கடன்கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார். இதற்கு 30 ரூபாய் போதுமானபடியால், 30 ரூபாய் கடன் கொடுக்கும்படி ஜாரி செய்யப்பட்டது. திருப்பிக்கொடுப்பதற்கு 5 மாதம் கெடுவு கொடுக்கப்பட்டது.

தீர்மானம் 6.—24-ம் நம்பர் மெம்பராகிய கருப்ப கௌண்டன் கிஸ்தி கட்டுவதற்காக 100 ரூபாய் கடன் கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார். அவர் 32-ம் நம்பர் மெம்பராகிய வெங்கடகௌண்டனையும் 41-ம் நம்பர் மெம்பராகிய அழக கௌண்டனையும் தனக்கு நபர் ஜாமீனாய்க் கொடுப்பதாகச் சொன்னார். ஜாமீன்தாரர்களும் ஒப்புக்கொண்டார்கள். இந்த மெம்பர் செலுத்தவேண்டிய கிஸ்தி 88 ரூபாயானதால், 88 ரூபாய்

மாத்திரமே கொடுக்கும்படி ஜாரிசெய்யப்பட்டது. திருப்பிக் கொடுப்பதற்கு 4 மாத கெடுவு கொடுக்கப்பட்டது.

தீர்மானம் 7.—25-ம் நம்பர் மெம்பராகிய பழனியப்பன் விவாக செலவுக்காக 50 ரூபாய் கடன் கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார். அவர் 34-ம் நம்பர் மெம்பராகிய கிட்ட கௌண்டனையும் 37-ம் நம்பர் மெம்பராகிய கோவிந்தசாமி படையாச்சியையும் தனக்கு நபர் ஜாமீனுப்க் கொடுப்பதாகச் சொன்னார். அவருக்குக் கடனைத் திருப்பிக்கொடுக்கச் சக்தியிருப்பதாக டைரெக்டர்களுக்கு நம்பிக்கையில்லை. ஆகவே, விண்ணப்பம் தள்ளிவிடப்பட்டது.

தீர்மானங்களுக்கும் கூட்டங்களுக்கும் கொடுக்கப்படும் வரிசைக்கிரமமான நம்பர்கள் ஒவ்வொரு வருஷத்திலும் ஜூன்மீ 30உ முடிவாகி, அடுத்த வருஷம் ஜூலைமீ 1உ முதல் மறுபடியும் நம்பர்கள் ஆரம்பிக்கப்பட்டு வரிசைக்கிரமமாய்க் கொடுத்துவரப்படும். கூட்டங்களுக்கும் தீர்மானங்களுக்கும் வரிசைக்கிரமமான நம்பர்கள் கொடுப்பதன் நோக்கமென்னவென்றால், ஜூன்மீ 30-ம் தேதியோடு முடிவாகிற கோவாபரேடிவ் வருஷத்தில் இத்தனை பொதுக் கூட்டங்களும் பஞ்சாயத்தாரின் கூட்டங்களும் நடந்தனவென்றும் அப்பொதுக் கூட்டங்களிலும் பஞ்சயத்தாரின் கூட்டங்களிலும் முறையே இத்தனை தீர்மானங்கள் ஜாரிசெய்யப்பட்டனவென்றும் பார்க்கும்போதே தெரிந்துகொள்ளக்கூடியதா யிருக்கவேண்டு மென்பதுதான்.

கூட்டங்கள் இன்னின்ன தேதிகளில் கூடலாமென்று நிச்சயிப்பதில் அமாவாசை, ஏகாதசி போன்ற எல்லாருக்கும் தெரிந்த தினங்களையே நிச்சயிப்பது மிகவும் உசிதமாகும்; இது சாத்தியமில்லாவிட்டால், அடுத்த பஞ்சாயத்துக்கூட்டத்தின் தேதியை முன்கூட்டத்திலேயே தீர்மானித்து நிச்சயிப்பது மேலாகும். இப்படி செய்யாவிட்டால், ஸெக்ரெடரியானவர் ஒவ்வொரு கூட்டத்தின் தேதியையும் பஞ்சாயத்தைச்சேர்ந்த இதர மெம்பர்களுக்குத் தெரிவிக்கவேண்டிவரும். ஒரு மாதத்தில் இரண்டு கூட்டங்கள் போதுமானவையாயிருந்தால், பிரதி மாதத்திலும் 1-ம் உயையும் 16-ம் உயையும் நிச்சயிக்கலாம்; அல்லது நான்கு கூட்டங்கள் அவசியமாயிருந்தால், பிரதி வாரத்திலும் குறித்த ஒரு தினத்தை நிச்சயிக்கலாம். ஆனால், இப்படி நிச்சயிக்கப்பட்ட தேதிகளுக் கிடையிலே ஒரு கூட்டம் கூடுவது அவசியமாயிருந்தால், ஸெக்ரெடரியானவர் அதைக்குறித்துப் பஞ்சாயத்து மெம்பர்களுக்குத் தெரிவித்துப் பிறகு அந்தக் கூட்டத்தைக் கூட்டலாம். இந்தக் கூட்டங்களில் செய்யப்பட்ட தீர்மானங்கள் பஞ்சாயத்தாரின் வேலையைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்கான துணைவிதிகளாகும். பிரதி மாதத்திலும் குறைந்தது ஒரு கூட்டமாவது கூடவேண்டும்; அதில் அந்த மாதத்திய கணக்குகள் பார்வையிடப்படவேண்டும்.

2—அட்மிஷன் புக் என்னும் பிரவேசப்பதிவு புஸ்தகமும் பங்கு விண்ணப்பரெஜிஸ்டரும்.—பிரவேசப்பதிவு புஸ்தகமென்பது சங்கத்தில் மெம்பர்களாகச் சேருகிறவர்களைப்பற்றிய விவரங்கள் கண்டிருக்கும் ரெஜிஸ்டராகும். சங்கத்தில் மெம்பராகவரவிரும்பும் ஒவ்வொரு கிராமவாசியும் மெம்பராவதற்காகத் தாம் செய்துகொள்ளும் விண்ணப்பத்தைத் தாமே எழுதி யனுப்புவது கஷ்டமாயிருக்குமாகையால், அக்காரியத்துக்காக ஒரு பங்குவிண்ணப்ப ரெஜிஸ்டர் வைத்துவரலாம். இந்த ரெஜிஸ்டரில் பதியவேண்டிய விவரங்களை ப்ரெஸிடென்டாவது ஸெக்ரெடரியாவது விசாரித்து எழுதலாம்; அப்படிப்பட்ட பதிவுக்கு விண்ணப்பதாரர் அத்தாட்சிக் கையெழுத்து போடவேண்டும். இந்தப் பதிவையே விண்ணப்பமாக பாவிக்கலாம்.

பங்கு விண்ணப்ப ரெஜிஸ்டரில் அடியிற்கண்ட கலங்கள் இருக்கவேண்டும்:—

1. வரிசைக் கிரமமான நம்பர்.
2. விண்ணப்பத்தின் தேதி.
3. விண்ணப்பதாரரின் பெயரும் அவருடைய தகப்பனாரின் பெயரும்.
4. இருப்பிடம்.
5. இத்தனை பங்குகள் எடுத்துக்கொள்ள விரும்புகிறாரென்பது.
6. விண்ணப்பதாரரின் கையெழுத்து அல்லது கைநாட்டு.
7. பஞ்சாயத்தாரின் தீர்மானம்.
8. (விண்ணப்பதாரருக்குக்) கொடுக்கப்பட்ட பங்குகள்.
9. விண்ணப்பத்தின் நம்பரும் தேதியும்.
10. ப்ரெஸிடென்டின் இனிஷல் (பெயரின் முதற்குறிப்பெழுத்துகள்).
11. ஷரா.

சங்கத்தை ரெஜிஸ்டர் செய்வதற்கான விண்ணப்பத்தில் கையெழுத்து செய்திருக்கும் நபர்களைத்தவிர, மெம்பர்களாகச் சேர விரும்பும் மற்றெல்லா நபர்களும் நேரில் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், ப்ரெஸிடென்டாவது ஸெக்ரெடரியாவது 1-முதல் 5-வரையிலுள்ள கலங்களில் எழுதவேண்டியதை எழுதி 6-வது கலத்தில் விண்ணப்பதாரர்களின் கையெழுத்தை வாங்கவேண்டும். ஒவ்வொரு வரியிலும் பிரதி நபரையும்பற்றிய விவரங்களைக் கண்டு, வரிசைக்கிரமமாக ஒவ்வொருவருக்கும் நம்பர் கொடுக்கவேண்டும். விண்ணப்பதாரர்—தாம் எத்தனை பங்குகளுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளுகிறாரோ அத்தனை பங்குகளுக்கான முதற்பணத்தையும் பிரவேசக்கட்டணங்களையும் முன்பணமாகக் கட்டிவிடவேண்டும்; அப்படிக் கட்டப்

பட்ட தொகையை ரொக்க கணக்கு புஸ்தகத்தில் வரவு வைக்கவேண்டும். அவருடைய விண்ணப்பம் தள்ளிவிடப்பட்டாலும், எத்தனை பங்குகள் கொடுக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டதோ அதற்குக் குறைவாகப் பங்குகள் கொடுக்கப்பட்டாலும், அந்தப் பணத்தை வாபஸ் செய்துவிட்டு, தொகையை ரொக்க கணக்குப் புஸ்தகத்தில் செலவாகக் காட்டவேண்டும். பங்குகளுக்கான முதற்பணமும் பிரவேச கட்டணமும் முன்னதாகக் கட்டப்பட்டாலொழிய எந்த விண்ணப்பத்தைக் குறித்தும் யோசிக்கக்கூடாது. அதன் பிறகு இந்த ரெஜிஸ்டரை அடுத்த பஞ்சாயத்துக் கூட்டத்தில் பஞ்சாயத்தார்முன் வைக்கவேண்டும். ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் பஞ்சாயத்தார் செய்யும் தீர்மானத்தைப் பிரதி நபருக்கும் எதிராக 7-வது கலத்தில் கண்டெழுதவேண்டும். மினிட் புக்கில் பஞ்சாயத்து தீர்மானங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நம்பரையும் ஸப்-நம்பரையும் 8-வது கலத்தில் பதிய வேண்டும். பஞ்சாயத்து மெம்பர்கள் யாதொரு நபரை மெம்பராகச் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதி கொடுத்தால், பிரவேசப் பதிவு புஸ்தகத்தில் எழுதவேண்டியவைகளை எழுதலாம்.

பிரவேசப் பதிவு புஸ்தகம்.—1-வது கலத்தில் வரிசைக்கிரமமான நம்பரும் 2-வது கலத்தில் இருப்பிடமும் விண்ணப்பத்தாரின் பெயரும், அவர் தகப்பனாரின் பெயரும், அவர் செய்யும் தொழிலும் கண்டிருக்கவேண்டும். இதர கலங்களிலும் எழுதவேண்டியதை எழுதிப் புது மெம்பரின் கையெழுத்தை அதற்குரிய கலத்தில் வாங்கவேண்டும். அந்த மெம்பருக்குக் கையெழுத்து போடத் தெரியாவிட்டால், அவருடைய கைநாட்டை வாங்கலாம்; ஆனால், சரியான இரண்டு சாட்சிகள் அதற்கு அத்தாட்சிக் கையெழுத்து போடவேண்டும். ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு பக்கம் விடவேண்டும். ஒரு மெம்பருக்கு அவருடைய பங்குகளை அதிகப்படுத்த அனுமதி கொடுக்கப்பட்டால், 3-வது கலத்திலும் அடுத்த கலங்களிலும் எழுதவேண்டிய சகல விவரங்களையும், இதற்குமுன் விவரங்கள் எழுதப்பட்ட பக்கத்திலேயே அவைகள் எழுதியிருக்கும் வரிக்குக் கீழ் எழுதி, அந்த விவரங்களுக்கு எதிராகக் கையெழுத்தாவது இரண்டு சாட்சிகளால் அத்தாட்சிகூறப்பட்ட கைநாட்டாவது வாங்கவேண்டும். ஒரு மெம்பரின் பெயருக்கு எதிராகக் கொடுக்கப்பட்டிருக்கும் வரிசைக்கிரமமான நம்பரே அந்த மெம்பரின் நம்பராகும்.

3. ரொக்கக்கணக்கு புஸ்தகம்.—இது ஒரு முக்கியமான புஸ்தகம். எல்லா வரவுகளையும் செலவுகளையும் பிரதி தினமும் அவை நேரிடும்பொழுதே இதில் பதியவேண்டும். லேவாதேவிகள் நடத்தப்படும் தினங்களில் அவைகளுக்கு மொத்தம்போட்டு இருப்புகட்ட வேண்டும். இந்த இருப்பை இலக்கங்களால் மாத்திர மல்லாமல் எழுத்துக்களாலுமெழுதி, அதற்கு ஸெக்ரெடரியும் (காரியதரிசியும்) ட்ரெஷரரும் (பொக்கிஷதாரரும்) கையெழுத்து

செய்யவேண்டும். கணக்குகள் சரியாய் வைக்கப்படுவதற்கு ஸெக்ரெடரியும், ரொக்கத்துக்கு ட்ரெஷரரும் உத்தரவாதியாவார்கள். சகல கன்டின்ஜென்ட் செலவுகளுக்கும் ஆதாரமாக வௌச்சர்கள் (ரசீதுகள்) வைத்திருக்க வேண்டும்; இவைகளை ரசீது பைலில் தனித்தனியாய் ஒட்டி வைக்க வேண்டும். மெம்பர்களுக்குக் கொடுக்கும் கடன்கள், கட்டிவைக்கப்பட்ட தொகைகளைத் திருப்பிக்கொடுப்பது, சங்கத்தார் கொடுக்கவேண்டிய கடன்களுக்காக வட்டி செலுத்துவது, சங்கத்தார் செலுத்தவேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவது முதலிய இதர செலவுகளின் விஷயத்திலே லேவாதேவியை ரொக்க கணக்கு புஸ்தகத்தில் பதிவு செய்து, அடுத்த வரியில் தொகையை எழுத்துக்களால் எழுதவேண்டும். இந்தப் பதிவின்கீழ் பணம் பெற்றுக்கொள்ளுகிறவர் "பெற்றுக்கொண்டேன்" என்று எழுதி அதனடியில் கையெழுத்து செய்யவேண்டும். பணம் பெற்றுக்கொள்ளுகிறவருக்குக் கையெழுத்து போடத் தெரியாவிட்டால், அவர் தம்முடைய கைநாட்டு போடவேண்டியதல்லாமல் அதற்குக் குறைந்தது ஒரு சாட்சியாவது அத்தாட்சி கூறவேண்டும். எல்லா லேவாதேவிகளிலும் மெம்பரின் வரிசைக்கிரமமான நம்பரைக் குறிப்பிடவேண்டும். ஸப் ரெஜிஸ்ட்ரார்களின் முன்னிலையில் பட்வாடா செய்யப்பட்ட கடன் தொகைகளின் விஷயத்திலே, ரொக்க கணக்கு புஸ்தகத்தில் பதிவு செய்வதே போதுமானது. ஆனால், ஸப்-ரெஜிஸ்ட்ராரின் முன்னிலையிலே பணம் செலுத்தியிருக்கும் சங்கதியைக் கடன் பத்திரத்தில் குறிப்பிடவேண்டும். மேலும் இதர விஷயங்களில் எல்லாம், பணம் பெற்றுக்கொள்ளுகிறவரின் கையெழுத்து அத்தியாவசியமானது. கடன் தொகையையாவது அதற்குச் சேரவேண்டிய வட்டியையாவது சங்கத்தார் தபால்மூலமாய் அனுப்பினால், அதற்காக ஒரு ரசீது வாங்கி அதை ரசீது புஸ்தகத்தில் ஒட்டிவைக்கவேண்டும். சகல பட்டுவாடா விஷயத்திலும் சாத்தியமானவரையில் ரொக்கக்கணக்கு புஸ்தகத்திலேயே, பெற்றுக்கொண்டதற்கு ரசீது எழுதி வாங்கவேண்டும்; இது சாத்தியமில்லாவிட்டால், கொடுக்கப்பட்ட ஒவ்வொரு தொகைக்கும் ஆதாரவௌச்சர் வைத்திருக்கவேண்டும். சரியான வௌச்சரில்லாமல் ஏதேனும் பணம் செலுத்தப்பட்டால், பஞ்சாயத்தார் அதைப் பர்த்தி செய்வதற்குள்ளாவார்கள்.

4. ரசீது புஸ்தகம்.—சங்கத்திலே வாப்பெற்றுக்கொள்ளப்படும் சகல பணங்களுக்காகவும் கொடுக்கவேண்டிய ரசீது நமூனாக்கள் இரட்டைப்பிரதிகளாக இந்தப் புஸ்தகத்தில் இருக்கின்றன. இரண்டு நமூனாக்களிலும் எழுதவேண்டியவைகளை எழுதி அவைகளில் ஒன்றைப் பணங்கட்டினவருக்குக் கொடுக்கவேண்டும். எதிரிடைப் பிரதிகளைக் கிழித்தெடுக்காமல் புஸ்தகத்தில் அப்படியே வைத்துவைத்து, ரொக்கக்கணக்குப் புஸ்தகத்திலுள்ள பதிவுகளுடன் வைத்துத் தணிக்கை செய்யவேண்டும்.

5. (கொடுக்கப்படும்) கடன் கணக்குப்புஸ்தகமும் கடன் விண்ணப்ப ரெஜிஸ்டரும்.—கடன் தேவையாயிருக்கிற மெம்பர்களுக்குக் கடன் விண்ணப்பங்களை எழுத்து மூலமாய் அனுப்பிக்கொள்வது அசௌகரியமாயிருக்குமாகையால், கடன் விண்ணப்ப ரெஜிஸ்டர் ஒன்றை சங்கத்தில் வைத்து வரலாம். ப்ரெஸிடென்ட் அல்லது ஸெக்ரெடரியானவர் சகல விவரங்களையும் எழுதி, விண்ணப்பதாரரின் கையெழுத்தையும் வாங்கவேண்டும். இதையே கடன் விண்ணப்பமாக பாவிக்கலாம்.

இந்த ரெஜிஸ்டரிலே அடியிற்கண்ட கலங்கள் இருக்க வேண்டும்:—

1. மெம்பரின் நம்பரும் பெயரும்.
2. கடன் விண்ணப்பத்தின் தேதி.
3. இன்ன காரியத்துக்காகக் கடன் வாங்கப்படுகிறதென்பது.
4. திருப்பிச் செலுத்துவதற்கான கால அளவு.
5. கடன்தொகை.
6. இன்ன ஈட்டின்மேலென்பது.
7. விண்ணப்பதாரரின் கையெழுத்து.
8. பஞ்சாயத்தாரின் தீர்மானம்.
9. ஜாரிசெய்யப்பட்ட கடன் தொகை.
10. தீர்மானத்தின் நம்பரும் தேதியும்.
11. ப்ரெஸிடென்டின் இனிஷல்.
12. ஷரா.

எந்த மெம்பராவது கடன் வேண்டுமென்று நேராக விண்ணப்பம் செய்துகொள்வதன்பேரில், ப்ரெஸிடென்ட் அல்லது ஸெக்ரெடரியானவர் 1 முதல் 6 வரையிலுள்ள கலங்களில் எழுதவேண்டியவைகளை எழுதி, விண்ணப்பதாரரின் கையெழுத்தை 7-வது கலத்தில் வாங்கவேண்டும். பிரதி விண்ணப்பதாரருக்குமான விவரங்களைப் பிரத்தியேகமான வரியில் எழுதவேண்டும். 3-வது கலத்தில் சொல்லப்பட்டபடி கடன் எந்தக் காரியத்துக்காக வாங்கப்பட்டதோ அது சங்கத்தின் சகாயச் சட்டங்களிற் கண்டவைகளில் ஒன்றாயிருக்கவேண்டும். எந்த ஈட்டின்மேல் கடன் கொடுக்கப்படுகிறதோ அதைப் பற்றி 6-வது கலத்திலே பூர்த்தியான விவரங்கள் கொடுக்கவேண்டும். "வீடு" "பூமி" அல்லது "நபர் ஜாமீன்" என்பது போன்ற சுருக்கமான விவரங்கள் கொடுப்பது போதாது. பூமியை அடமானம் வைத்து வாங்கும் கடன்களின் விஷயத்திலே, கிராமத்தின் பெயரையும், ஸர்வே நம்பரையும், அதன் உட்பிரிவு எழுத்தையும் கண்டெழுதவேண்டும். வீட்டை அடமானமாகக் காட்டும் விஷயத்திலே, எல்லைகளும் வேறே விவரங்களும் காணவேண்டும். நபர்ஜாமீன்மேல் கொடுக்கும் கடன் விஷயத்திலே ஜாமீனாயிருக்கும் மெம்பரின் நம்பரையும் பெயரையும் காணவேண்டும்.

ஏனென்றால், பஞ்சாயத்து மெம்பர்கள் கடன் கொடுக்கத் தீர்மானிப்பதற்கு முன் இந்த விவரங்களைக்குறித்து நன்றாய் யோசிக்கவேண்டும். ஒரே மெம்பருக்காயிருந்தாலுங்கூட வெவ்வேறான இரண்டு காரியங்களுக்காக ஒரே கடன் தொகை கொடுக்கும்படி அனுமதி கொடுக்கக்கூடாது. ஆயினும், எந்த அளவுக்குக் கடன் கொடுக்கலாமென்று ஏற்பட்டிருக்கிறதோ அதற்கு மேற்படாமல் ஒரே மெம்பர் வெவ்வேறு காரியங்களுக்காகப் பல கடன் தொகைகள் வாங்குவதற்கு ஆட்சேபமில்லை. இப்படியிருக்கும்பட்சத்தில் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கான காலத்தைக்குறித்தும் பின்னும் வாயிதா கொடுப்பதைக்குறித்தும் பஞ்சாயத்தார்கள் தகுதியான உத்தரவுகள் ஜாரி செய்யக்கூடியவர்களாயிருப்பார்கள். மேற்படி ரெஜிஸ்டரை அடுத்த பஞ்சாயத்துக் கூட்டத்தில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் வைக்கவேண்டும். மேலே குறிப்பிட்ட விவரங்களைப்பற்றி யோசித்த பிறகு, ஸப் ரெஜிஸ்ட்ராரிடத்திலிருந்து வில்லங்க ஸெர்டிபிகேட் வாங்கவேண்டியது அவசியமானால் அதற்காக விண்ணப்பம் செய்துகொள்ளலாம். மேற்படி ஸெர்டிபிகேட்டை வரப்பெற்றுக்கொண்டதன்மேல், அடமானம் வைப்பதாய் உத்தேசித்திருக்கிற சொத்தின்மேல் வில்லங்க மில்லையென்று காணப்பட்டாலும், மேற்படி ஸெர்டிபிகேட்டின்படி வில்லங்க மிருந்தபோதிலும், அந்த சொத்தானது பிற்பாடு மீட்கப்பட்டதாய் ருஜுவானாலும், பஞ்சாயத்து மெம்பர்கள், சொத்தின் உத்தேசமதிப்பு முதலிய இதர விவரங்களைக்குறித்து யோசித்து, தாங்கள் கடன் கொடுப்பதா இல்லையா வென்றும், கொடுப்பதாயிருந்தால் எவ்வளவு தொகை கொடுப்பதென்றும் தீர்மானிப்பார்கள். தீர்மானம் ஜாரியானபிற்பாடு, அதை மினிட் புக்கிலே தெளிவாய் எழுதவேண்டும். அந்தத் தீர்மானத்திலே, கடன் கேட்கும் மெம்பரின் நம்பரும் பெயரும், கடன் தொகையும், கடனைத் திருப்பிச்செலுத்த வேண்டிய காலமும், அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விவரங்களும், அதாவது, பூமியின் விஷயத்திலே, கிராமமும் ஸர்வே நம்பரும் அதன் உட்பிரிவு எழுத்தும், வீட்டின் விஷயத்திலே அதன் எல்லைகளும் இதர விவரங்களும் அடங்கியிருக்கவேண்டும். நபர்ஜாமீன்மேல் கொடுக்கும் கடன்களின் விஷத்திலே, ஜாமீனாய் நிற்கும் மெம்பரின் நம்பரையும் பெயரையும் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விவரங்களுக்குப் பதிலாகக் காண வேண்டும். பிறகு, கடன் யாருக்குக் கொடுக்கும்படி அனுமதி கொடுக்கப்படுகிறதோ அந்த மெம்பரிடத்திலிருந்து ஒரு கடன் பத்திரம் எழுதிவாங்க வேண்டும். அடமானங்களின் விஷயத்திலே, அடமானக் கடன் பத்திரங்களை ரெஜிஸ்டர்செய்யவும் வேண்டும். அடமானக்கடன் பத்திரங்கள் அடியிற்கண்ட விதமாகவாவது அதுபோன்ற ஏதோ ஒரு விதமாகவாவது இருக்கவேண்டும்.

19 -ம் ஷரு மீ உயில்
தாலூகாவைச்சேர்ந்த -ம் நம்பர் நாட்டு ஐக்கிய

நாணயச் சங்கத்தின் ப்ரெஸிடென்டுக்கு ஜாதி தொழில் ருடைய
குமாரரும் மேற்படி சங்கத்தின் -ம் நம்பர் மெம்பருமாகிய
(இன்னார்) எழுதிக்கொடுத்த அடமானக் கடன் பத்திரமென்னவென்றால்:

இதனடியிற் காட்டியிருக்கிற சொத்தை அடமானமாக வைத்து
காரியத்துக்காக ரூ. (ரூபாய் மாத்திரம்)
கடன் தொகையை (ப்ரெஸிடென்ட் ஹோதாவிலுள்ள) தங்களிடத்திலிருந்து இன்றையதினம் பெற்றுக்கொண்டிருக்கிறேன். இந்தக் கடன் தொகையை மாதமொன்றுக்கு ரூபா ஒன்றுக்கு பை விழுக்காடு அதைத் திருப்பிச்செலுத்த வேண்டிய தேதியாகிய க்குள் சங்கத்தின் சகாயச் சட்டங்களின்படி திருப்பிச்செலுத்தக் கட்டுப்படுகிறேன். அப்படி செலுத்தத்தவறினால், திருப்பிச செலுத்தவேண்டிய தேதியில் என்பேரில் பாக்கியாய் வட்டியுள்பட ஏற்படும் தொகையை அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. ஒன்றுக்கு பை விழுக்காடு வட்டி சகிதமாய், தாங்கள் என் மீதாவது இதனடியில் காட்டியிருக்கும் அடமான சொத்தின்மீதாவது என்னுடைய இதர சொத்துக்களின் மீதாவது சட்டப்படி நடவடிக்கை நடத்தி வசூல் செய்வதற்கு நான் உடன்படுகிறேன். மேலும், இப்போதுள்ள சகாயச் சட்டங்களுக்கும் இனிமேல் செய்யப்படும் சகாயச் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டிருக்கவும் நான் சம்மதிக்கிறேன்.

ஜில்லா தாலூகாவைச்சேர்ந்த
ஸப் டிஸ்ட்ரிக்டிலுள்ள கிராமத்தில்
எனக்கே சொந்தமானவைகளும் என்னுடைய சுவாதீனத்திலும் அனுபவத்திலு முள்ளவைகளுமான நிலங்களை அடியில் விவரித்திருக்கிறது.

அடமானக் கடன் பத்திரங்கள் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பிறகுதான் கடன் தொகைகளைப்பட்டுவாடா செய்யவேண்டும். அந்தத்தொகையை பட்டுவாடா செய்யும்போது, அது சம்பந்தமான மெம்பரின் நம்பரும் பெயரும் கடன் தொகையும் ஆகிய இவைகளைப் போன்ற பூர்த்தியான விவரங்கள் சகிதமாய் அவசியமான பதிவுகளை அதே சமயத்தில் ரொக்கக்கணக்கு புஸ்தகத்தில் செய்துகொண்டு, அவருடைய கையெழுத்தை உடனே வாங்கிக் கொள்ளவேண்டும்.

கடன் கணக்குப் புஸ்தகத்திலுள்ள விவரங்களைப் பிற்பாடு எழுத வேண்டும்.

5. (கொடுக்கப்படும்) கடன் கணக்குப் புஸ்தகம்.—மெம்பர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்ட பிரதி கடன்தொகையையும் தனித் தனியான பக்கங்களிலே பதியவேண்டும். ஒவ்வொரு கடனுக்கும் வரிசைக்கிரமமான நம்பர் கொடுக்கவேண்டும். இந்த நம்பர் கடன் நம்பரென்று சொல்லப்

படும். எந்தக்கடன் தொகையாவது திருப்பிச் செலுத்தப்பட்டால் அதை ரொக்கக் கடன் புஸ்தகத்தில் பதியும்போது, இந்த நம்பரைத் தவறாமல் எப்போதும் எடுத்துக்காட்டவேண்டும். இந்த வரவை அதற்குரிய கடன் பத்திரங்களிலே குறித்துக்கொள்ளவும் வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடன்கள் ஒரு மெம்பருக்குக் கொடுக்கும்படி அனுமதிகொடுக்கப்பட்டால், அவைகளுக்குத் தனித்தனியான வரிசைக்கிரம நம்பர்கள் கொடுத்து, அவைகளைத் தனித்தனியான பக்கங்களிலே பதியவேண்டும். இரண்டு கடன்களை ஒரே பக்கத்தில் எப்போதும் பதியக்கூடாது. கடன்களைத் திருப்பிச் செலுத்துவது சம்பந்தமான வரவுகளை ரொக்கக்கணக்கு புஸ்தகத்தில் பதிந்தபிற்பாடு கடன் கணக்குப் புஸ்தகத்திலே அவைகளுக்கொத்த கலங்களிலும் எழுத வேண்டியவைகளை எழுதவேண்டும். செலுத்தவேண்டிய தேதிக்கு முன் வரப்பெற்றுக்கொள்ளப்படும் சகல தொகைகளையும் அசலுக்குச் செல்லாகவும் அந்தத் தேதிக்குப்பிறகு வரப்பெற்றுக்கொள்ளப்படும் தொகைகளை வட்டிக்குச் செல்லாகவும், மிகுதி ஏதாவதிருந்தால், அதை அசலுக்குச் செல்லாகவும் வைக்கவேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டியதற்காகப் பிரதமத்தில் ஏற்பட்ட கால அளவுக்குமேல் பஞ்சயத்தாரின் தீர்மானத்தினால் வாயிதா கொடுக்கப்பட்டிருந்தால் அந்தப்படி கொடுக்கப்பட்ட வாயிதாவின் காலஅளவையும் அந்தத் தீர்மானத்தின் நம்பரையும் தேதியையும் அந்தப்பக்கத்தின் இடதுகை மூலையில் ஒன்று மெழுதாமல் விட்டிருக்கிற இடத்திலே குறித்துவைக்கவேண்டும்.

6. வாங்கும் கடன் கணக்குப் புஸ்தகம்:—நிலையான டிபாஸிட் தொகைகளையும் சங்கத்தார் கடன் வாங்கும் இதர தொகைகளையும் இந்தப் புஸ்தகத்திலே பதியவேண்டும். அடியிற்கண்ட விவரங்களை இந்தப் புஸ்தகத்தில் காணவேண்டும்.

1. யாரிடத்திலிருந்து கடன்வாங்கப்பட்டதோ அவர் அல்லது டிபாஸிட்செய்தவரின் பெயர்.
2. கடன்வாங்கின அல்லது டிபாஸிட் கட்டிவைத்த தேதி.
3. எழுத்தாலும் இலக்கத்தாலும் தொகை இவ்வளவென்பது.
4. வட்டி வீதம்.
5. திருப்பிச் செலுத்துவதற்கான கால அளவு.
6. வேறே ஷரத்துகள் எவைகளாவதிருந்தால் அவை.
7. திருப்பிச் செலுத்தப்பட்ட அல்லது திருப்பப்பட்ட தேதி.
8. திருப்பிக் கொடுக்கப்பட்ட அசல் தொகையும் செலுத்தப்பட்ட வட்டியும்.

பிரதி டிபாஸிட் தொகையையும் அல்லது கடன்வாங்கப்பட்ட வேறே தொகை ஒவ்வொன்றையும் தனித்தனியான பக்கத்தில் பதியவேண்டும். ஒரே

நபர் பல டிபாஸிட் தொகைகளைக் கட்டினால்கூட அவைகளைத் தனித்தனியான பக்கங்களில் பதியவேண்டும். மாதாந்தமாயும் வருஷாந்தமாயும் கட்டி வைக்கப்படும் நிலையான டிபாஸிட் தொகைகளைக் குறித்த ரெஜிஸ்டர்களை ரெஜிஸ்ட்ராரவர்களால் நிர்ணயிக்கப்பட்ட நமூனாப்படி வைத்துவரவும் வேண்டும்.

7. லெட்டர் பயல்-(கடிதங்களை ஒட்டிவைக்கும் புஸ்தகம்):-ரெஜிஸ்ட்ரார் அவர்களிடத்திலிருந்தாவது வேறே நபர்களிடத்திலிருந்தாவது சங்கத்தில் வரப்பெற்றுக்கொள்ளப்படும் சகல கடிதங்களையும் அவைகள் வரப்பெற்றுக் கொள்ளப்படும் கிரமப்படி இந்தப் புஸ்தகத்திலே ஒட்டிவைக்கவேண்டும்.

8. வௌச்சர் (ஆதரவுச் சீட்டு) ஒட்டிவைக்கும் புஸ்தகம்:—சங்கத்தில் செய்யப்பட்ட கன்டின்ஜென்ட் செலவுகளைக் குறித்த சகல வௌச்சர் (ஆதரவுச்சீட்டு) களையும் பணம் பட்டுவடாவான கிரமப்படி இந்த புஸ்தகத்தில் ஒட்டிவைக்கவேண்டும். தபால் மூலமாய் அனுப்பப்பட்ட பணத் தொகைகளுக்சான ரசீதுகளையும் இதில் ஒட்டிவைக்கவேண்டும்.

9. தணிக்கை உத்தரவு புஸ்தகம்.—இந்த ரெஜிஸ்டரானது ரெஜிஸ்ட்ரார் அவர்களும் அவருடைய கீழுத்தியோகஸ்தர்களும் சங்கத்தைத் தணிக்கை செய்யும்போதாவது பார்வையிடும்போதாவது அவர்களுக்குத் தோன்றும் அபிப்பிராயக் குறிப்புகளைக் குறித்துவைப்பதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்திலே சங்கத்தார் ஒன்றும் எழுதக் கூடாது.

10 & 11. பங்கு விண்ணப்ப ரெஜிஸ்டரும் கடன் விண்ணப்ப ரெஜிஸ்டரும்.—இவைகளைப்பற்றிய திட்டங்கள் முந்திய பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

12. மெம்பர்களின் சொத்து ஜாபிதா ரெஜிஸ்டர்.—ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன் வாங்குவதற்காக விண்ணப்பஞ்செய்துகொள்ளும்போதெல்லாம், மெம்பர்களின் சொத்து ஜாபிதா ஒன்றை ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு அனுப்பவேண்டும். இந்த ஜாபிதா தயார் செய்வதைச் சுலபப்படுத்துவதற்காக, அடியிற்கண்ட நமூனாப்படி ஒரு ரெஜிஸ்டரை வைத்துவரவேண்டும்.

1. மெம்பரின் நம்பரும் பெயரும்.
2. சங்கத்தின் காரியம் நடக்கும் பிரதேசத்துக்குள்ளிருக்கும் பூமியின் விவரங்கள். (நஞ்சையா புஞ்சையா என்பது)
3. விஸ்தீர்ணம்.
4. பூமியின் உத்தேச மதிப்பு.

5. வீடுகளின் உத்தேசமதிப்பு.
6. இதர சொத்தின் உத்தேசமதிப்பு.
7. மொத்த உத்தேச மதிப்பு.
8. அவிபக்தமா விபக்தமா என்பது.
9. அதில் மெம்பருக்குள்ள பங்கு இவ்வளவென்பது.
10. மெம்பருக்குள்ள பங்கின் மொத்த உத்தேச மதிப்பு.
11. மெம்பருக்குள்ள கடன்கள்.
12. நிகரமான உத்தேச மதிப்பு.
13. சங்கத்தின் காரியம் நடக்கும் பிரதேசத்துக்கு வெளியிலிருக்கும் சொத்தின் உத்தேச மதிப்பு.
14. மெம்பரின் கையெழுத்து.
15. ஷரா.

பிரவேசப்பதிவு ரெஜிஸ்டரில் விவரங்களை எழுதி, புதிதாய்ச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மெம்பரிடத்திலிருந்து வரப்பெற்றுக்கொண்ட ஏதாவது பணத்துக்காக ரசீது கொடுத்தபிறகு, இந்த ரெஜிஸ்டரிலே எழுதவேண்டிய விவரங்களை எழுதி 14-வது கலத்தில் மெம்பரின் கையெழுத்து வாங்க வேண்டும். அப்படிச் செய்யும்பட்சத்தில், கடன் விண்ணப்பங்களுடன் கூட சொத்து ஜாபிதாவை அனுப்பவேண்டியிருக்கும்போது இந்தப் பதிவுகளைக் கூட்டி மொத்தம் போடுவது சுலபமாயிருக்கும். அவிபக்தமான சொத்தையுடைய தகப்பனும் பிள்ளைகளுமாவது இரண்டு அல்லது அதற்கதிகமான சகோதரர்களாவது சங்கத்தில் மெம்பர்களாய்ச் சேரும்போது, சொத்தின் விவரங்களைக் குடும்பத்தில் மூத்தவராயுள்ளவரின் பெயருக்கெதிராகப் பதிய வேண்டும். குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களின் விஷயத்தில், அவர்களின் பெயர்களை 1-வது கலத்தில் பதிந்து, மற்ற விவரங்கள் இன்னின்ன மெம்பரின் பெயருக்கெதிராகக் கண்டிருக்கிறதென்று ஒவ்வொரு பெயருக்கெதிராகவும் ஷரா எழுத வேண்டும்.

இந்த ரெஜிஸ்டரிலே மெம்பர்களின் பெயர்களை எழுதுகையில் பிரவேசப் பதிவு ரெஜிஸ்டரில் பெயர்களை எழுதியிருக்கிற வரிசையை ஆக்கிரதையாய் அனுசரிக்க வேண்டும். பிரதி வருஷமும் பதிவுகளைப் புதிதாய் எழுதவேண்டும்.

13. கடிதப்புஸ்தகம் (ஆபீஸ் நகல்):—சங்கத்திலிருந்து ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கும், சென்னபட்டணம் ஸென்ட்ரல் அர்டன் பாங்குக்கும் மற்றவர்களுக்கும் எழுதும் சகல கடிதங்களுக்கும் நகல்கள் இந்தப் புஸ்தகத்தில் அடங்கியிருக்கவேண்டும். வில்லங்க ஸர்டிபிகேட்டுகளுக்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களையும் சுருக்கமாய் இந்தப் புஸ்தகத்திலே எழுதிவைக்க வேண்டும். சகல கடிதங்களுக்கும் வரிசைக்கிரமமாய் நம்பர் கொடுக்கவேண்

டும். இந்த நம்பர்களைச் சகல சுத்த பிரதிகளின் தலைப்பிலும் தவறாமல் எப்போதும் காட்டவேண்டும். வரிசைக்கிரமமான நம்பரைப் பிரதிவருஷமும் ஜூன்மீ 30உயில் முடித்துவிட்டு, ஜூலைமீ 1-ம் தேதியிலிருந்து அந்த நம்பரைப் புதிதாய்த் தொடங்கவேண்டும். கடிதத்தை இந்தப் புஸ்தகத்தில் நகல் செய்துகொண்டபிறகு, அதை ரவாணுசெய்த தேதியுடன்கூட அதற்காகப் பிடித்த தபால் செலவையும் அதில் குறித்துக்கொள்ளவேண்டும். இது ஸ்டாம்ப் கணக்கைச் சரிபார்க்கும்போது அனுகூலமாயிருக்கும். இதைக் குறிப்பதற்குக் கலங்கள் வேண்டியதில்லை. ஆனால், எந்த சங்கத்துக்காவது இஷ்டமிருந்தால் அடியிற்கண்ட கலங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்:—

1. கடிதத்தின் வரிசைக்கிரமமான நம்பர்.
2. இன்னார் விலாசத்துக்கு அனுப்பப்பட்டதென்பது.
3. ஒட்டப்பட்ட தபால்தலைகளின் மதிப்பு.
4. கடிதத்தின் நகல் அல்லது பொழிப்பு.
5. கடிதத்தை ரவாணுசெய்த தேதி.

———:-:———

1909-ம்வரு ஜூலைமீ 1-உயிலிருந்து 1910-ம்வரு ஜூன்மீ 30-உ வரையில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் ஜாபிதா.

நம்பர்.	சுருக்கமான பெயர்.	தாலூகா.	ஜில்லா.
182	வயதானு	நரஸராவ்பேட்டை	குண்டூர்
183	நாகய்ய நெல்லூர்	முசிரி	திருச்சினாப்பள்ளி
184	கம்பிலியம்பட்டி	ஈரோடு	கோயம்புத்தூர்
185	கைக்கோளபாளையம் ...	ஷை	ஷை
186	வாய்ப்பாடி	ஷை	ஷை
187	கோட்டயம்பந்தல் ...	மதுராந்தகம்	செங்கல்பட்டு
188	ஒழையூர்	ஷை	ஷை
189	மங்கலம்	ஷை	ஷை
190	உக்கல்...	ஆற்காடு	வடஆற்காடு
191	அம்மையப்ப நல்லூர் ...	மதுராந்தகம்	செங்கல்பட்டு
192	மதுராந்தகம்	ஷை	ஷை
193	திண்டுக்கல் அர்பன் ...	திண்டுக்கல்	மதுரை
194	மானவாசி	குளித்தலை	திருச்சினாப்பள்ளி
195	தோட்டயம்	முசிரி	ஷை
196	மலையடிபட்டி	குளித்தலை	ஷை
197	மணப்பாறை	ஷை	ஷை
198	உடையார் பாளையம் ...	உடையார் பாளையம்	ஷை
199	கட்டன்பட்டைபாலூர் ...	ஷை	ஷை
200	மின்சுருட்டி	ஷை	ஷை
201	நரஸாபுரம்	கல்யாணதுர்க்கம்	அனந்தபுரம்
202	ராமாபுரம்	பெனுகொண்டா	ஷை
203	கீழகாவத்தான் குரிச்சி ...	உடையார்பாளையம்	திருச்சினாப்பள்ளி
204	முடிகல்லு	கல்யாணதுர்க்கம்	அனந்தபுரம்
205	ஸ்ரீ ரங்கபுரம்	ஷை	ஷை
206	புலவேரி	சேலம்	சேலம்
207	பரமதி...	நாமக்கல்	ஷை
208	கஞ்சநாயகம்பட்டி ...	சேலம்	ஷை
209	நடுப்பட்டி	ஷை	ஷை
210	வெங்கரை	நாமக்கல்	ஷை
211	கன்னேபல்லி	கல்யாணதுர்க்கம்	அனந்தபுரம்
212	பெருநகர்	மதுராந்தகம்	செங்கல்பட்டு
213	கே. பெரியபட்டி	குளித்தலை	திருச்சினாப்பள்ளி
214	புதுக்கோட்டை	ஷை	ஷை
215	சிறுகரும்பூர்	வாலாஜா	வடஆற்காடு
216	துத்திகுளம்	நாமக்கல்	சேலம்
217	பாஸபுரம்	கல்யாணதுர்க்கம்	அனந்தபுரம்
218	புடிகும்ம	ஷை	ஷை
219	மலையனூர்	ஷை	ஷை
220	காளிபட்டி	சேலம்	சேலம்
221	வேடசந்தூர்	திண்டுக்கல்	மதுரை
222	கோயிலூர்	ஷை	ஷை

1909-ம்வரு ஜூலைமீ 1டயிலிருந்து 1910-ம்வரு ஜூன்மீ 30-வ வரையில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் ஜாபிதா.

நம்பர்.	சுருக்கமான பெயர்.	தாலூகா.	ஜில்லா.
223	குரகுலபல்லி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
224	பல்லூரு	ஷை	ஷை
225	சாலவாக்கம்	மதுராந்தகம்	செங்கற்பட்டு
226	களத்தூர்	செங்கற்பட்டு	செங்கற்பட்டு
227	முளகனூரு	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
228	கூடலூர்	திருச்செங்கோடு	சேலம்
229	பொத்தனேரி	சேலம்	ஷை
230	ரொட்டம்	பெனுகொண்டா	அனந்தபுரம்
231	திம்மாபுரம்	கல்யாண துர்க்கம்	ஷை
232	ஏரனுபுரம்	திருச்செங்கோடு	சேலம்
233	குடிமல்லூர்	வாலாஜா	வடஆற்காடு
234	பெருந்துறை	ஈரோடு	கோயம்புத்தூர்
235	ஒழுகூர்	வாலாஜா	வடஆற்காடு
236	ரெண்டடி	ஷை	ஷை
237	சமயபுரம் கண்ணனூர் ...	திருச்சினுப்பள்ளி	திருச்சினுப்பள்ளி
238	இருங்கலூர்	ஷை	ஷை
239	ஆயூர்தர்மம்	ஸ்ரீ வில்லிபுத்தூர்	திருநெல்வேலி
240	வெள்ளைப் பொட்டல் ...	ஷை	ஷை
241	தலமர்லா	பெனுகொண்டா	அனந்தபுரம்
242	கொத்த செருவு	ஷை	ஷை
243	சோமநாதபல்லி	ஷை	ஷை
244	குத்தூரு	ஷை	ஷை
245	ஹம்ஸவரம்	துனி	கோதாவரி
246	ஒண்டிமாமிடி	ஷை	ஷை
247	வெங்கச்சேரி ஆதவாக்கம் ...	மதுராந்தகம்	செங்கற்பட்டு
248	அறுங்குன்னம்	ஷை	ஷை
249	ஊதூர்	ஷை	ஷை
250	சின்னமணத்தூர்	பெனுகொண்டா	அனந்தபுரம்
251	கல்லூரு	ஷை	ஷை
252	தாம்பரம்	சைதாப்பேட்டை	செங்கற்பட்டு
253	ராணிமொக்கலூர் ...	ஊத்தங்கரை	சேலம்
254	பொன்னேரி	ஷை	ஷை
255	வெள்ளிமேடு	சிண்டிவனம்	தென்ஆற்காடு
256	ஆலத்துதியன்பட்டி ...	முசிரி	திருச்சினுப்பள்ளி
257	கரிக்காலி	ஷை	ஷை
258	செருக்கூரு	பெனுகொண்டா	அனந்தபுரம்
259	பிரம்மசமுத்திரம்	ஷை	ஷை
260	சோளிமரி	ஷை	ஷை
261	புச்சர்லா	ஷை	ஷை
262	வெப்பனை	மதுராந்தகம்	செங்கற்பட்டு
263	தீத்தலம்	ஷை	ஷை

1909-ம்வரு ஜூலைமீ 1டயிலிருந்து 1910-ம்வரு ஜூன்மீ 30-வ வரையில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் ஜாபிதா.

நம்பர்.	சுருக்கமான பெயர்.	தாலூகா.	ஜில்லா.
264	சிவமலை	தாராபுரம்	கோயம்புத்தூர்
265	களத்தூர்	முசிரி	திருச்சினுப்பள்ளி
266	லலிகம்	தர்மபுரி	சேலம்
267	எடப்பாடி	திருச்செங்கோடு	ஷை
268	கொமாரபாளயம்	ஷை	ஷை
269	இல்லுபுலி	ஷை	ஷை
270	எடங்கஞ்சாலை	ஷை	ஷை
271	அபினுவரம்	ஆத்தூர்	ஷை
272	எட்டூர்	சேலம்	ஷை
273	வாளாடி	திருச்சினுப்பள்ளி	திருச்சினுப்பள்ளி
274	ரெட்டிபல்லி	பெனுகொண்டா	அனந்தபுரம்
275	நாகலூர்	ஷை	ஷை
276	தொடகட்டா	ஷை	ஷை
277	மானதூரு	ஷை	ஷை
278	துரகலபட்டணம்	ஷை	ஷை
279	ஜூலுகுண்டா	ஷை	ஷை
280	சனிபல்லி	ஷை	ஷை
281	பி. பள்ளிபட்டி	ஊத்தங்கரை	சேலம்
282	மேற்கு கொடிஹல்லி ...	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
283	பைரவநிதிப்பா	ஷை	ஷை
284	பழைய சிறுவாங்கூர் ...	கள்ளக்குறிச்சி	தென்ஆற்காடு
285	கல்லேரி	உடையார்பாளயம்	திருச்சினுப்பள்ளி
286	மண்ட்லி	பெனுகொண்டா	அனந்தபுரம்
287	பெத்தமனதூர்	ஷை	ஷை
288	காலிபி	ஷை	ஷை
289	மனத்தாள்	சேலம்	சேலம்
290	மார மங்கலம்	ஷை	ஷை
291	அமரகுந்தி	ஷை	ஷை
292	திருத்தாங்கல்	சாத்தூர்	திருநெல்வேலி
293	ஏனமலதொட்டி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
294	கரிகனிபல்லி	ஷை	ஷை
295	எடகல்லு	ஷை	ஷை
296	சாந்தகொண்டபுரம் ...	ஷை	ஷை
297	பில்லபல்லி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
298	ராள்ள அனந்தபுரம் ...	ஷை	ஷை
299	சென்னம்பல்லி	ஷை	ஷை
300	முலகலேடு	ஷை	ஷை
301	சிந்தர்லபல்லி	ஷை	ஷை
302	சேத்தூர்	ஷை	ஷை
303	ஊத்திமடுகு	ஷை	ஷை
304	திம்ம சமுத்திரம்	ஷை	ஷை

1909-ம்வரு ஜூலைமீ 1உயிலிருந்து 1910-ம்வரு ஜூன்மீ 30-உ வரையில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் ஜாபிதா

நம்பர்.	சுருக்கமான பெயர்.	தாலூகா.	ஜில்லா.
305	லக்ஷ்மணபல்லி	ஷை	ஷை
306	கங்காவரம்	ஷை	ஷை
307	துட்டேகுண்டா	ஷை	ஷை
308	கொல்லா	ஷை	ஷை
309	எர்ரகொண்டபுரம்... ...	ஷை	ஷை
310	பைர சமுத்திரம்	ஷை	ஷை
311	காயார்	செங்கற்பட்டு	செங்கற்பட்டு
312	திருக்கழுக்குன்றம் ...	ஷை	ஷை
313	பள்ளி அகரம்	மதுராந்தகம்	ஷை
314	குமாரவாடி	ஷை	ஷை
315	ஓட்டி	ஷை	ஷை
316	விஜயமங்கலம்	ஈரோடு	கோயம்புத்தூர்
317	காங்கயம்	தாராபுரம்	ஷை
318	புதுப்பட்டி	கள்ளக்குறிச்சி	தென் ஆற்காடு
319	அரங்கனூர்	சேலம்	சேலம்
320	ஜக்க சமுத்திரம்	கிருஷ்ணகிரி	ஷை
321	குந்துர்ப்பி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
322	பெஸ்தரபல்லி	ஷை	ஷை
323	முட்டிநாயனிபல்லி ...	ஷை	ஷை
324	மணிரேவு	ஷை	ஷை
325	பஞ்சாண்டிக்குளம் நடுசேத்தி.	திருத்துரைப்பூண்டி	தஞ்சாவூர்
326	வண்டுவாஞ்சேரி	ஷை	ஷை
327	மணத்தாள் நல்லகவுண்டன் பட்டி	சேலம்	சேலம்
328	காளப்பநாயகன்பட்டி ...	நாமக்கல்	ஷை
329	சிங்காரபேட்டை	ஊத்தங்கரை	ஷை
330	வீரக்கல் புதூர்	சேலம்	ஷை
331	கோனூர்	ஷை	ஷை
332	பொத்தனேரி நல்லகவுண்டன் பட்டி	ஷை	ஷை
333	பள்ளிப்பாக்கம்	மதுராந்தகம்	செங்கற்பட்டு
334	ஆலப்பாக்கம்	ஷை	ஷை
335	பாபிரெட்டி பட்டி ...	ஊத்தங்கரை	சேலம்
336	வெங்கட சமுத்திரம் ...	ஊத்தங்கரை	சேலம்
337	சோகண்டி	காஞ்சீபுரம்	செங்கற்பட்டு
338	மதுரமங்கலம்	ஷை	ஷை
339	சாத்தாரை	ஷை	ஷை
340	மெனிஸ்	ஊத்தங்கரை	சேலம்
341	பைர்நத்தம்	ஷை	ஷை
342	சேந்தமங்கலம்	நாமக்கல்	ஷை
343	கூவம்	காஞ்சீபுரம்	செங்கற்பட்டு

1909-ம்வரு ஜூலைமீ 1உயிலிருந்து 1910-ம்வரு ஜூன்மீ 30-உ வரையில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் ஜாபிதா.

நம்பர்.	சுருக்கமான பெயர்.	தாலூகா.	ஜில்லா.
344	சுள்ளி பாளையம்	ஈரோடு	கோயம்புத்தூர்
345	நீலமங்கலம்	கள்ளக்குறிச்சி	தென் ஆற்காடு
346	வார்லி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
347	சாபிரி	ஷை	ஷை
348	கம்பதூர்	ஷை	ஷை
349	ஆலங்குடி மாகாணம் ...	கும்பகோணம்	தஞ்சாவூர்
350	சம்புகுத்தபட்டி	கிருஷ்ணகிரி	சேலம்
351	அவனிகெட்டா	திவி	கிருஷ்ணா
352	பெண்ணுலூர்	மதுராந்தகம்	செங்கற்பட்டு
353	பாப்பாரபட்டி	தர்மபுரி	சேலம்
354	மரக்காணம்	திண்டிவனம்	தென ஆற்காடு
355	கர்த்தனபர்த்தி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
356	இரயமங்கலம்	காஞ்சீபுரம்	செங்கற்பட்டு
357	ஆபல்பல்லி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
358	கருடபுரம்	ஷை	ஷை
359	பல்வாய்	ஷை	ஷை
360	காரத்தொழுவு	உடுமல்பேட்டை	கோயம்புத்தூர்
361	கால்வபல்லி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
362	ஜம்புகும்பலா	ஷை	ஷை
363	சிறிபி	ஷை	ஷை
364	ஏரடிகோர	ஷை	ஷை
365	அங்கம்பல்லி	ஷை	ஷை
366	திர்தகல்லு	ஷை	ஷை
367	துக்கிராலா	தெனுலி	குண்டூர்
368	கொலகலூர்	ஷை	ஷை
369	மோபர்ரு	ஷை	ஷை
370	புதுப்பட்டு	காஞ்சீபுரம்	செங்கற்பட்டு
371	பெனுகொண்டா அர்பன் ...	பெனுகொண்டா	அனந்தபுரம்
372	கண்ணம்ப்ரா	பாலக்காடு	மலபார்
373	கும்முடிபூண்டி	பொன்னேரி	செங்கற்பட்டு
374	உதகமண்டலம் அர்பன் கோ-ஆபரேடிவ் ஸ்டோர்ஸ் ...	உதகமண்டலம்	நீலகிரி
375	செங்கற்பட்டு அர்பன் ...	செங்கற்பட்டு	செங்கற்பட்டு
376	எர்ரகுடி	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்
377	நீஜாவல்லி	ஷை	ஷை
378	திருவாரூர் ஸ்ரீ கமலாம்பிகா அர்பன்	நாகப்பட்டணம்	தஞ்சாவூர்
379	கிழக்குகோடிபல்லி ...	கல்யாண துர்க்கம்	அனந்தபுரம்

விளம்பரங்கள்.

பெரிய காஞ்சீபுரம் அர்பன் சாலியர் யூனியன்,
ராஜாதெருவு, பெரிய காஞ்சீபுரம்.

(ஸ்தாபிதமானது டிசம்பர் 1905.)

உத்தேசம்:—சாலியர்களுடைய பிழைப்பையும் குணத்தையும் நேராக்க

வரும் லாபத்தை சாலிய மெம்பர்களுக்கு மட்டும் வீதித்துக்கொடுக்கப்படுகிறது.

நன்றாக நெய்ததும், நாள்கூடி வருவதுமான வேஷ்டி, சோமன் வகைகள் இந்த யூனியனிடமிருந்து பின்வரும் விலை வீதத்திற்கு வாங்கலாம்.

நூல் நெம்பர்	அகலம்	விவரம்.	கஜம் 1—க்கு விலை.	
80	54	ஈர்க்கம்பி, கோரஞ்சு அல்லது சாதா	0	8 6
60	54	,, ,, ,, ...	0	7 6
	49	,, ,, ,, ...	0	6 6
	45	,, ,, ,, ...	0	5 6
40	54	,, ,, ,, ...	0	6 3
	49	,, ,, ,, ...	0	5 9
	45	,, ,, ,, ...	0	5 3

அஞ்சுகளுக்குப்பட்டு அல்லது சரிகையென்றால் தக்கபடி விலை கூடும், வேறுவகை வேஷ்டிவகையாறு கேட்பவரிஷ்டம்போல் செய்து கொடுக்கப்படும். வியாபாரமுறை:—ரொக்கம் அல்லது வால்யூபேயெபிள் போஸ்டு.

யூனியன் பிறப்பித்திருக்கும் பத்திரங்கள் யாரிடமுண்டோ அவர்களுக்கு ரூபாய் 1-க்கு அணா 1 வீதம், மேற்சொல்லிய விலை விகிதங்களிலிருந்து குறைத்துக் கொடுக்கப்படும். மற்ற விவரங்கள் தெரியவேண்டுமானால் அடியிற் கையொப்ப மிட்டவருக்கு எழுதலாம்:—அதாவது, செகர்டெரி.

பி. ராமசந்திரன்.
செகர்டெரி.
22—12—1910.

மதிராசு ஸென்ட்ரல் அர்பன் பாங்கு
(லிமிடெட்.)

1904-ம் வருஷத்திய இந்தியா ஆக்ட்டு 10வதுப்படி ரிஜிஸ்தரானது.)

கணக்குகள்—மதிராசு கோஆபரேடிவ் நாணயச்சங்கங்கள் ரிஜிஸ்திரார் அவர்களால் தனிக்கை செய்யப்படுகிறது

கடன் கொடுப்பது ரிஜீஸ்திராருடைய விசேஷ உத்தரவின்படிதான்.

பாங்கு டிபாசிட்டுகள் வேண்டுகிறது—நிபந்தனைகள் அறியவேண்டுவோர் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

வேண்டியவர், செகர்டெரி, பத்மவிலாஸம், லஸ், மைலாப்பூர் S., என்றெழுதவும்.

மதிராசு புல்லடின் ஆப் கோஆபரேஷனில் விளம்பரம் செய்வோர் கொடுக்க வேண்டிய கட்டணவீதம்.

எப்போதாவது போடுவதற்கு:—

1. பக்கம்	ரூ. 12.
½. பக்கம்	ரூ. 6.
¼. பக்கம் அல்லது குறைந்ததற்கு	ரூ. 3.

நாலு நெம்பர்களில் தொடர்ச்சியாய்ப் போடுவதற்கு:—

1. பக்கம்	ரூ. 40
½. பக்கம்	ரூ. 20
¼. பக்கம் அல்லது குறைந்ததற்கு	ரூ. 10

1904-வருஷத்திய 10-வது ஆக்ட்டுப்படி ரிஜிஸ்தாரான ஸொஸைட்டிகளின்விளம்பரங்கள், ரிஜிஸ்திராரின் சந்தோஷத்தை யனுசரித்துக் கட்டணமில்லாமலே பிரசுரிக்கப்படும்.

எல்லாப்பயிர்களுக்கான உரங்கள்.

தேயிலை, காபி, புகையிலை, சர்க்கரை, அரிசி மற்றுமுள்ள தானியவகைகளுக்கெல்லாம் உரிய விசேஷ வகைகள்

செவ்வனே ஆராய்ச்சி செய்ததற்கு உத்தரவாதம்.

செழுமைக்கான சத்துக்கள் தனியாகவோ அல்லது ஆர்டருக்குத் தகுந்தவாறு கலந்தோ விற்கப்படும்.

	நைட்ரஜன்.	பாஸ்பாரிக் ஆஸிட்.	
எலும்புத்தூள் ...	3½/4%	22/23%	,,
ஸூபர்பாஸ்பேட்		14/15%	,, தண்ணீரில் கரையக்கூடியது
பேஸிக் ஸூபர்பாஸ்பேட் ...		12/13%	ஸைட்ரிக் ஆஸிட்டில் கரையக்கூடியது. இதில் 35% சுண்ணாம்புண்டு.

உயர்ந்த நிலக்கடலைப் புண்ணாக்கு 8%

பொடாஷ் மூரியேட், 80% சுத்தம், சுத்தமான பொடாஷ் 50% அடங்கியுள்ளது.

,, ஸல்பேட், 96o/o ,, ,, ,,

கெய்னிட், இதில் 12½o/o சுத்தமான பொடாஷ் உண்டு.

இதல்லாமல் பொட்டிலுப்பு, சிலிஸால்ட்பீடர், பேஸிக் ஸ்லாக், மீன் எச்சம், பலவித புண்ணாக்குகள் எம்மிடம் அகப்படும். தென்னிந்தியாவிலுள்ள எந்த ஸ்டேஷனுக்கும் எந்தத் துறைமுகத்திற்கும் அனுப்பவேண்டுமானாலும் எழுதிக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் பாரி அண்டு கம்பெனி,

மானேஜிங் ஏஜெண்டுகள்,

ராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, லிமிடெட், மதராஸ்.

விவேகாநந்த ஸ்வாமிகள் செய்த உபன்னியாசங்கள்.

முழுமையும் கொஞ்சங் கொஞ்சமாக சிறு புத்தகங்களாக பதிப்பித்துக்கொண்டிருக்கிறேன். இதுவரையில் தயாராக இருக்கும் புஸ்தகங்கள் ரொக்க விலைக்கு கொடுக்கப்படும். இனி வெளியாகும் புஸ்தகங்களுக்கு அட்வான்ஸாக கொடுப்பவர்களுக்கு விலை ரொம்பவும் சகாயம்.

கைவசமிருக்கும் புஸ்தகங்கள்:—

1. சிக்காகோ உபன்னியாசங்கள் விலை 0 2 0
2. கர்மயோகம் (முதற்பாகம்) ,, 0 2 0
3. என்னுடைய குருநாதர் ... 0 4 0
4. வேதாந்த தத்துவம் ... 0 4 0

1911-ல் வெளியாகும் பாகங்கள்:—பாரதமாதாவின் மகிமை, கர்மயோகம் (இரண்டாம் பாகம்), பக்தியோகம், ஞானயோகம், இன்னும் சிலவும்.

ஆர். நாராயணஸ்வாமி அய்யர், 1/306, திருவொற்றியூர் பெரிய சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

The Swadesi Warehouse, Madras.

சுதேசி வேர் அவுஸ்.

நெ. 3-தம்புசெட்டி வீதி-சென்னை.

தினந்தோறு முபயோகிக்கத் தக்க வஸ்திரங்களும், சோப்புகள், தலைமயிர் எதலங்கள், பற்பொடி, வாசனைகள், செக்குத்துணி, டுவில், டுவில்சர்ட்டு, தலைகுட்டை, ஜமக்காளம், கம்பளி, பனியன், பூட்டுகள் முதலியன கிடைக்கும். விலை அதிக குறைவாகவும் சரக்கு நாணயமுள்ளனவு மாகவிருக்கும். விவரம் மேற்குறித்த விலாசமெழுதி தெரிந்து கொள்வதுடன் ஆர்டருமனுப்ப வேணுமாய்க் கோருகிறோம்.

தமிழ் இந்தியன் பினல் கோட்.

(கஅசுஉ-ஹுத்து சடு-வது ஆக்ட்). விலை ரூபா 2—8—0.

இது வக்கீல்கள் சகாயம் இல்லாமலே ஷை பினல்கோட் பிரிவுகளை அனுசரித்து தீர்மானிக்கப்பட்ட சகலமான லாரிபோர்டுகளை சுலபமாய் அறியும் பொருட்டு தமிழ் பாஷையில் ஹைகோர்ட்டு வக்கீலால் எழுதிப் புதிதாய் அச்சிடப்பட்டது.

இதில் மதிராஸ், பம்பாய், அலஹபாத், கல்கத்தா, நார்த்வெஸ்ட் பிராவின்ஸ், லீக்லி ரிபோர்ட்டு, கிரிமினல் லியர்ஸ்ரூலிங்க்ஸ், இவைகளுடனும் இதுவரையில் ரத்தான பாகங்களை திருத்தப்பட்ட சட்டங்களுடனும் அந்தந்த செக்ஷன்களின் அடியில் நோட்டுகள் விவரமான அர்த்தங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் கிராம முன்சீபு, பிரைவேட் வக்கீல், போலீஸ் உத்தியோகஸ்தர், ஜமீன்தார், மிராசுதார், வர்த்தகர்கள், இன்னும் தமிழ்பாஷை தெரிந்த சகல ஜனங்களுக்கும் இப்புத்தகம் ரொம்பவும் உபயோகமுள்ளது. வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்

பி. எஸ். ரேங்கசாமிராயர், 14, கீழ்மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

வி. ஆர். காமத் அண்டு கோ.,

காபினெட் மேகர்ஸ், 191, மவுண்டுரோட், சென்னை.



Illustrated catalogue Post Free.

The "Buscot" Drawing Room suite in rose wood. Price on application.

The South Indian Press, 18, Linghi Chetty St., G.P. Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
5 - SEP 1911
MADRAS.

மதராஸ் புல்லடீன் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் II.] 1910-ம்ஞு டிஸெம்பர்மீ 10உ. [இலக்கம் 2.

கூட்டுத்தொழில் முறையைப்பற்றி டென்மார்க் தேசத்திலிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள்.

டென்மார்க் தேசமானது விவசாயிகளின் ராஜ்ஜியம். "அதற்கு விவசாயிகள் சேர்ந்த பார்லமென்ட் இருப்பதோடுங்கூட, அதன் மந்திரிகளும் விவசாயிகளாகவே இருக்கிறார்கள்; விவசாயிகளின் க்ஷேமலாபத்தை உத்தேசித்தே அதில் எக்காரியமும் நடத்தப்பட்டு வருகிறது. அதில் சட்ட நிரூபணம் செய்பவர்களும் விவசாயிகளே. டென்மார்க் தேசத்தில் ஜனங்களே ஆளுகிறார்கள். ஆங்கிலேய கிருஷிகன் பிரபுக்களினால் ஆளப்பெற விரும்புகிறான்; இவ்விஷயத்தில் டென்மார்க் தேசத்துக் கிருஷிகன் ஆங்கிலேய கிருஷிகனுக்கு முற்றிலும் மாறுபட்டவனாயிருக்கிறான். சுருக்கமாய்ச் சொல்வோமானால் டென்மார்க் தேசத்தில் கிருஷிகர்களே சர்வாதிகார முடையவர்களாயிருக்கிறார்கள். அதன் ஆளும் வகுப்பார் நாற்பது ஏகரா முதல் அறுபது ஏகராவரையில் பூஸ்திதி யுள்ளவர்களும், வேறொன்றையும் அபேட்சிக்காமல் விவசாயமொன்றையே ஜீவன முகாந்தரமாய் நம்பி யிருப்பவர்களுமான சொற்ப ஐவேஜுள்ள விவசாயிகளேயாவர். "டென்மார்க் தேசத்தைச் சேர்ந்த இந்த கிருஷிகக் குடியானவர்கள் எவ்வளவு பூர்த்தியாய்க் காரியசித்தி பெற்றிருக்கிறார்க ளென்பதைப்பற்றி "ஔட்லுக் ஆவ் ந்யூயார்க்" என்னும் பத்திரிகையில் ப்ரொடெரிக் ஸி. ஹௌ என்பவர் அதி மநோஹரமாய் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அவர் சொல்லும் சங்கதிகளிலிருந்து கூட்டுத்தொழில் முறையைப்பற்றியும் அனேக விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

க்ஷேமத்துக்குக் காரணம்.

மிஸ்டர் ஹௌ சொல்வதாவது: "அந்த பூமி செழிப்புடையதல்ல; சீதோஷ்ண ஸ்திதியும் சிறந்த வகையானதல்ல; மழைக்கால பருவங்கள் மெத்தவும் நீடித்திருக்கின்றன. டென்மார்க்கானது கிருஷிகர்களே நிலத்துக்குச் சொந்தக்காரர்களாயிருக்கும்தேசம். இதுவே அதன் நாகரிகத்துக்குத் திரவிய சம்பந்தமான ஆதாரமாயிருக்கிறது. டென்மார்க் தேசத்துக் கிருஷிகனே அவன் நிலத்துக்கு எசமானனாதலால், ஜனங்கள் நிலமடைவதை ஆதரிக்கும்விஷயத்தில் அவன் கவர்ன்மெண்ட் சகாயத்தை உபயோகித்திருக்கிறான். சுமார் 1850 கடன் கொடுப்பதற்கான சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன; அவைகள் கிருஷிகர்களுக்கு நிலம் வாங்குவதற்கு வேண்டிய மூலதனத்தைக்கொடுத்துதவின. இந்தச் சங்கங்கள் ஐம்பதுமுதல் நூறுவருஷம் வரையில் செல்லும் நீண்ட காலத்துக்குக் கொதுவைப் பத்திரங்கள் எழுதி வாங்கிக்கொண்டன. இந்த ஒப்பந்தங்களின்படி கிருஷிகர்கள் அசலையும் வட்டியையும் தவணைகளாகச் செலுத்தி விடுகிறார்கள். 1899-ம் வருஷத்திலும் 1904-ம் வருஷத்திலும் துரைத்தனத்தார் சட்டங்கள் செய்து இந்த முயற்சிக்கு இன்னும் அதிகமாக உற்சாக மூட்டவே, சொற்ப கிருஷிகர்கள் கைப்பற்று நிலம் வாங்கும் பொருட்டு ஸர்க்கார் பொக்கிஷத்திலிருந்து பணம் கடன் வாங்கக் கூடியவர்களானார்கள். நிலத்தின் மதிப்பு சுமார் 300 பவுனுக்கு மேற்படக்கூடாதென்று ஏற்பாடு செய்திருக்கிறது. அப்படி வாங்கப்பட்ட பூஸ்திதிகளின் விஸ்தீர்ணம் எட்டு ஏகாமுதல் பன்னிரண்டு ஏகாவரையில் இருக்கிறது. நிலம் வாங்குகிறவன் நிலம் வாங்குவதற்கு வேண்டிய தொகையில் பத்தில் ஒரு பங்கு வைத்திருந்தால் போதும். மற்ற ஒன்பது பங்கையும் ஸர்க்கார் கிருஷிகனுக்கு முன்பணமாகக்கொடுத்து, அதைக் கிருஷிகன் 100 க்கு 4 வீதம் கொடுத்து வரும்படி கேட்கிறார்கள். இந்தநாலில் நூற்றுக்கு ஒரு வீதம் முதலுக்குச் செல்லாகும். இப்படி சட்டம் ஏற்படுத்தினதால் பெருத்த பூஸ்திதிக்காரர்களின் நிலத்தினுடைய விலை மதிப்பு அதிகமாயிற்று; க்ரேட் பிரிட்டன் தேசத்திலும் ஸ்மால் ஹோல்டிங்ஸ் ஆக்ட் என்னும் சிறு கைப்பற்று நிலங்களைக் குறித்த ஆக்டினால் இதே பலன்தான் விளைந்தது. ஆனால், இப்படிப்பட்ட சட்டங்களும் பரஸ்பரோபகார நாணயச்சங்கங்களும் ஏற்பட்டதனால் ஜனங்கள் நிலத்தைக் கைவிட்டு வேறே தொழில்களில் இறங்க முயல்வது பொதுவாய்த் தடைப்பட்டிருக்கிறது. இது உண்மையாயிருப்பது டென்மார்க் தேச மொன்றிலேயே என்று அனேகமாய்ச் சொல்லலாம்.

கிருஷிகர் நிலத்துக்குச் சொந்தக்காரராயிருப்பது.

"டென்மார்க்கில் பாயக்காரி பாத்தியதை அபூர்வம். விவசாயிகளில் 100க்கு 89 பேருக்குமேல் தங்கள் பண்ணைகளுக்குத் தாங்களே சொந்தக்காரர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கைப்பற்று நிலங்களைத் தாங்களே

பயிரிடுகிறார்கள். சுமார் 100 க்கு 11 பேர்களே பாயக்காரிகள். அமெரிக்காவிலே பண்ணைக்குச் சொந்தக்காரர்கள் 100க்கு எத்தனைபேர் என்று கணக்கெடுத்தால் இதைவிட மிகவும் கொஞ்சமாகவே யிருக்கிறார்கள். டென்மார்க்கில் நிலத்துக்குச் சொந்தக்காரராயிருக்கும் பாத்தியதையை அனுபவிப்பவர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். மொத்தத்தில் 2,50,000 பண்ணைகள் இருக்கின்றன; இதில் பயிர் செய்யப்படும் பூமியின் விஸ்தீர்ணம் ஒரு கோடி ஏகாவுக்கு மேலிருக்கிறது. முற்காலத்தில் பெரிய மிராசுதாரர்களிடத்திலும் ஜமீன்தாரர்களிடத்திலும் இருந்த பூஸ்திதிகளே அவர்களுக்குப் பின் இக்காலத்தில் மிகப்பெரிய பண்ணைகளாயிருப்பவை. அவைகள் பயிர் செய்யப்படும் விஸ்தீரணத்தில் சுமார் பத்துக்கு ஒரு பங்காயிருக்கின்றன. டென்மார்க் தேசம் இப்பட்டிப்பட்ட ஒப்பில்லா நிலையில் இருப்பதற்கு மூன்று காரணங்களுண்டு. கிருஷிகர்கள் நிலத்துக்குச் சொந்தக்காரர்களா யிருப்பது முதற்காரணம்; இரண்டாவது காரணம் கூட்டுத்தொழில் முயற்சி; இந்த முயற்சி கிட்டத்தட்ட தேசமெங்கும் பரவி யிருக்கிறது; மூன்றாவது காரணம் கிருஷிக வகுப்பாருக்கு ராஜாங்கத்தில் உண்டாயிருக்கும் மேம்பாடு. இவைகளில் இரண்டாவது மூன்றாவது காரணங்கள் முதல் காரணத்தால் உண்டானவை. ஏனென்றால் டென்மார்க் தேசத்தானுடைய பூமி அவனுக்குச் சொந்தமாயிருப்பதே அவனுடைய வெற்றிக்கு மூல காரணமாயிருக்கிறது. டென்மார்க் தேசத்தானே இந்த உலகத்திலுள்ள விவசாயிகளுக்குள் சிறந்தவன். அதி விசேஷமாய்ப் பயிரிடுவதே அவனுடைய வெற்றிக்குக் காரணமாயிருக்கிறது பூமியானது வெகு நுட்பமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது பூமியில் பத்துக்கு ஒன்பது பங்காயிருக்கிற பண்ணைகளின் சராசரி விஸ்தீர்ணம் 39 ஏகா. இவைகளைவிடப் பெரியவைகளாய் 131. 12 ஏகா முதல் 150 ஏகா வரையில் விஸ்தீர்ணமுள்ள பண்ணைகளையுடைய சுமார் ஒரு லட்சம் கிருஷிகர்கள் மொத்த பூமியில் சுமார் பத்தில் ஏழு பங்குக்குச் சொந்தக்காரர்களாய், சற்றுமுன் சொன்ன விவசாயிகளைவிட நன்றாய் வாழ்கிறார்கள். அவர்கள் சிறிது மட்டிலும் கூலியாள்களைக் கொண்டு தங்கள் பண்ணைகளில் பயிர் செய்வதோடு, நன்றாய்ப் படித்தவர்களாகவும் இருக்கிறார்கள்; அவர்கள் ராஜாங்க சம்பந்தமான விஷயங்களைக் குறித்தும், தாங்கள் சம்பந்தப்பட்டுள்ள கூட்டுத்தொழில் காரியங்களைக் குறித்தும் விசேஷகாலம் கழிக்கிறார்கள். அவர்கள் அந்த ராஜ்ஜியத்தில் ஆளும் வகுப்பார்களா யிருப்பது மல்லாமல், பணம் சேர்ப்பதில் சமர்த்தர்களென்று கர்ணபரம்பரையாய்ச் சொல்லப்படும் யூதர்களைப்போல் புத்திசாலிகளாகவும், ஸ்காட்லாண்ட் தேசத்தாரைப்போல் தந்திரசாலிகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஜில்லாவைச் சேர்ந்த ராஜரீக விவகாரங்களைத் தங்கள் விசாரணைக்குள் வைத்துக்கொண்டிருப்பதுடன், பார்லமெண்டிலும் சாய்காலுள்ளவர்களாயிருக்கிறார்கள். இப்போது அனேகமாய் ஒரு தொழில்வித்தையாய் விட்டிருக்கிற விவசாயத்தைப் பற்றிய சகலமும் அவர்களுக்குத் தெரியும்; மேலும்,

அவ்வப்போதுள்ள விலைவாசிகளை அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; அதோடுகூட அவர்கள் திறமையுள்ள யந்திரத் தொழிலாளிகளாகவும் நல்ல ரசாயன விற்பன்னர்களாகவும் இருக்கிறார்கள். விவசாய விஷயமான அறிவு அவர்களிடத்தில் நிரம்பி யிருந்தும் அவர்கள் பணக்காரர்களாக வேண்டுமென்றாவது இன்னும் அதிக பூமி சேர்க்கவேண்டுமென்றாவது ஆசை பிடித்து அழிந்துபோக வில்லை. அவர்களுக்குள்ள ஆசையெல்லாம் நல்ல விவசாயிகளாயிருக்கவேண்டுமென்பதே.

டென்மார்க் தேசம், ஒரு சந்தைத்தோட்டம்.

"டென்மார்க் தேசத்தான் தன் பூமியை பால், வெண்ணெய் முதலியவை உண்டாக்கும் பண்ணையாய்ச் செய்திருக்கிறான். டென்மார்க் தேசம் ஒரு சந்தைத் தோட்டத்தைப்போல் பயிரிடப்படுகிறது. வெண்ணெயும், முட்டைகளும், பன்றியிறைச்சிவற்றலும், வீட்டுப் பறவைகளும், பயிரிடுவதற்கு வேண்டிய நல்ல கால்நடைகளுமே அதில் முக்கியமாய்க் கிடைக்கும் பொருள்கள். ஒரு தலைமுறைக்கு முன், இங்கிலாந்து தேசத்து விவசாயிகளைப்போல் டென்மார்க் தேசத்தாருக்கும் அமெரிகா, ருஷியா, ஆர்ஜென்டைன் குடியரசு இந்த தேசங்களிலுள்ள கோதுமை விளையும் வயல்களால் நாசம் சம்பவிக்கும் என்னும் பயம் உண்டாயிருந்தது. ஆனால், டென்மார்க் தேசத்துக் கிருஷிகனோ தன் சக்தியில் நம்பிக்கை யுடையவன்; வர்த்தகத்துக்கு வரி முதலிய நிர்ப்பந்த மேற்படுத்தக் கூடாதென்பது அவனுடைய திடமான கொள்கை. ஆகவே அவன் தன் சரக்குகளை விலைப்படுத்த வேறே இடங்கள் இருக்கிறதாவென்று சுற்றிப்பார்த்தான். இங்கிலாந்து தேசத்தார் தங்களுக்கு வேண்டிய வெண்ணெயையும் முட்டைகளையும் பன்றியிறைச்சி வற்றலையும் ஐர்லாந்திலிருந்து விலைக்குவாங்குவதாக அவனுக்குத் தெரிந்தது. தெரியவே, இந்தப்பொருள்கள் ஐர்லாந்தில் எப்படி உற்பத்தியாகின்றனவென்று நிச்சயித்தறிந்து வரும்படி அந்த தேசத்துக்குச் சிலரை ஏற்படுத்தி யனுப்பினான். அதன்மேல், பார்லிமென்டாரும் ஜனங்களும் டென்மார்க் தேசத்தை ஒரு சந்தைத்தோட்டமாக்க வேலைசெய்யத் தலைப்பட்டார்கள். அப்படி நடந்தது ஒரு கால்நூற்றாண்டுக்கு முன்புதான். உடனே டென்மார்க் தேசத்தார் ஐர்லாந்த்தேசத்தாரைவிட நல்ல பன்றியிறைச்சிவற்றலும், நல்ல வெண்ணெயும், நல்ல முட்டைகளும் தயார் செய்யலானார்கள். இதை எப்படி செய்கிறார்களென்பதைப் பார்த்துவரும்படி சென்ற சில வருஷங்களுக்குள் நாலு பிரத்தியேக கம்மிஷன்கள் ஐர்லாந்திலிருந்தும் ஸ்காட்லாந்திலிருந்தும் அனுப்பப்பட்டன. ஆங்கிலேய வர்த்தகத்தை டென்மார்க் தேசத்தார் தங்கள் கைவசம் பண்ணிக்கொண்டதே இதற்குக் காரணமாகும். ஐர்லாந்து தேசத்தார்கள் கையாடிவந்த முறைகளைவிடத் திறமையான முறைகளைக் கைக்கொண்டே டென்மார்க் தேசத்தார் மேற்கண்டபடி ஆங்கிலேய வர்த்தகத்தைத் தங்கள் கைவசம் பண்ணிக்

கொண்டார்கள். இப்போது டென்மார்க் தேசத்தார் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் தென் அமெரிக்காவுக்கும் மாத்திரமல்லாமல் பிலிப்பைன் தீவுகளுக்குக் கூட சரக்குகளை ஏற்றுமதிசெய்து வருகிறார்கள். குதிரைகளிலும் கால்நடைகளிலும் பெரும்பாகம் ஜெர்மனிக்குப் போகின்றன. இவை போக ஏற்றுமதிச் சரக்குகளில் பாக்கியாய்நிற்பதில் விசேஷபாகம் இங்கிலாந்துக்குப் போகிறது. மொத்த ஏற்றுமதி வியாபாரம் ஒவ்வொரு பண்ணைக்கும் கிட்டத்தட்ட 75 பவுனுக்கு நடந்துவருகிறது; இப்படிப்பட்ட பண்ணைகள் 2,50,000 இருக்கின்றன; இவைகளிலே 1,33,000 பண்ணைகள் 13·12 ஏகராவுக்குக் குறைந்த விஸ்தீர்ண முள்ளவைகளா யிருக்கின்றன. இவைகளின் சராசரி விஸ்தீர்ணம் சுமார் 36 ஏகரா. சகல பண்ணைகளின் விஸ்தீர்ணமும் தேசமுழுவதினுடைய விஸ்தீர்ணத்திலே சராசரியில் 43 ஏகராவாகிறது. டென்மார்க் தேசத்தான் தனக்கு வேண்டிய விஷயங்களை அவ்வப்போது ஆராய்ந்து தெரிந்து கொள்வதிலும் அக்கறையுள்ளவனா யிருக்கிறான். அவன் குதிரைகளின் ஜாதி லக்ஷணத்தை ஆராய்ச்சிசெய்து, எந்தஜாதிக் குதிரைகளை வளர்த்தால் விசேஷ அனுகூல முண்டாகும் என்பதையும் ஜெர்மனி தேசத்தாருக்கு விசேஷமாய் வேண்டியிருப்பது எது வென்பதையும் தெரிந்து கொண்டிருக்கிறான். கால்நடை, பன்றி, கோழிக்குஞ்சு, இவைகளைப் பற்றியும் இப்படியே தெரிந்துகொண்டிருக்கிறான். உத்தம ஜாதிப்பன்றிகளை உண்டாக்குவதற்குத் தாயப்பன்றியை எந்த விதமாகப் போஷித்து வரவேண்டுமென்பது வெகு நுட்பமாய் அவனுக்குத்தெரியும். அவன் ஒரேதன்மையான வெண்ணெயை உண்டாக்கி ஒரே தன்மையான முட்டைகளை உற்பத்தி பண்ணுகிறான். அவைகளைக் கண்ணுக்கு அழகாய்ச் சிப்பஞ் செய்கிறான். அவனுக்கு ராஜாங்கத்தாரும் பலவகைகளில் சகாயம் செய்கிறார்கள். அவனுக்கு உதவிபுரிய ராஜாங்கத்தார் எப்போதும் சித்தமாயிருக்கிறார்கள்.

கூட்டுத்தொழில் முயற்சி.

டென்மார்க் தேசத்தின் அபிவிருத்திக்கு இன்னொரு பெரிய காரணம் கூட்டுத்தொழில் முறையாகும். அத்தேசத்து விவசாயிகள் செய்யும் உற்பத்தி யெல்லாம் அவர்களே அடைகிறார்கள். அதில் எவ்வளவும் வேறெவருக்கும் போகிறதில்லை. அங்குள்ள இருப்புப்பாதைகள் ராஜாங்கத்தாருக்கே சொந்தமாகையால், அவர்கள் விவசாயிகளின் லாபத்தைப் பிறநாட்டார் அபகரித்துக்கொண்டு போவதற்கு இடங்கொடாமல் பாதுகாக்கிறார்கள். உற்பத்தி செய்வதற்கும் உற்பத்தியானதைப் பிறருக்குக் கொடுப்பதற்கும் அதைக் கொண்டு பண்ட மாற்றுவதற்கும் வேண்டிய சகல காரியங்களையும் அவர்களே செய்து கொள்ளுகிறார்கள். பால், வெண்ணெய் முதலியதைத் தயார் செய்வதற்காக இந்தக்கூட்டுத்தொழில் முயற்சியானது முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஏறக்குறைய 1880-ம்ஆண்டு வரையில் ஒவ்வொரு விவசாயியும் தனக்கு வேண்டிய வெண்ணெயைத்தானே செய்துகொண்டிருந்தான். அதற்கு அதிக செலவு

பிடித்தது; மேலும், அப்படி உற்பத்திசெய்யப்பட்டதெல்லாம் ஒரே மாதிரியாயில்லை. கிட்டத்தட்ட இந்த சமயத்திலே வெண்ணெய் செய்வதற்காக ஒரு புதிய உபாயம் கண்டுபிடிக்கப்பட்டது. பல விவசாயிகள் ஒன்றாய்ச்சேர்ந்து எந்திரங்களில் ஒன்றை வாங்கினார்கள். அது கைமேல் பலன் கொடுத்தது. கொடுக்கவே மற்ற கிராமங்களும் அதே மாதிரி செய்துவந்தன. இப்போது 1087 கூட்டுத்தொழில் டெய்ரிகள் (பால் வெண்ணெய் முதலியவை தயார்செய்யும் சாலைகள்) இருக்கின்றன; அவைகளில் 1,53,000 விவசாயிகள் மெம்பர்களாயிருக்கிறார்கள். இவைகளல்லாமல் இன்னும் 200 தனித்தனி நபர்களின் டெய்ரிகள் இருக்கின்றன. விவசாயிகளிலே 100 க்கு சுமார் 95 பேர் கூட்டுத்தொழில் டெய்ரிகளிலே மெம்பர்களாயிருக்கிறார்கள்; இந்த டெய்ரிகளிலிருந்து வார மொன்றுக்கு சுமார் 2,00,000 பவுன் விலையுள்ள வெண்ணெய் இங்கிலாந்துக்குக் கப்பலில் ஏற்றி யனுப்பப்படுகிறது.

டென்மார்க்தேசத்தாரின் கூட்டுமுயற்சி முட்டை ஏற்றுமதிச்சங்கம் என்பது அடுத்தபடி ஏற்படுத்தப்பட்ட சபையாகும். அது 1895-ம்ஞுத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதில் இப்போது 57,000 மெம்பர்கள் இருக்கிறார்கள். அந்தந்த இடத்திலுள்ள கிராமவட்டத்திலே பிரதி தினமும் முட்டைகளைச் சேர்த்து அவைகளுக்கு முத்திரை போடுகிறார்கள். பிறகு அவைகளை ஏற்றுமதி செய்வதற்காகப் பெரிய வட்டங்களுக்கு அனுப்புகிறார்கள். 1908 ம்ஞுத்தில் முட்டை ஏற்றுமதி வியாபாரம் 13,20,000 பவுனுக்கு நடந்தது டென்மார்க் தேசத்து முட்டைகள் எப்போதும் புதிதாகவும் ஜாக்கிரதையாய்த் தாம்பிரிக்கப்பட்டும் இருக்கிறபடியால், வியாபாரிகள் அவைகளின்மேல் மோஜுபட்டு கேட்கும் விலைகொடுத்து அவைகளை வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள்.

கிருஷிகன் தன் பணத்தைப் போட்டுவைப்பதற்கு வேண்டிய பாங்க் வேலையையும் தானே செய்து கொள்ளுகிறான். அந்த தேசத்திலே கூட்டுத்தொழில் முறைப்படி ஏற்படுத்தப்பட்ட 536 ஸேவிங்ஸ் பாங்கிகள் இருக்கின்றன. இவைகளிலே கிருஷிகன் தான் மிகுத்தின பணத்தைப் போட்டுவைக்கிறான். அவனுக்குக் கடன்வேண்டியிருந்தால் இந்த பாங்கிகளுக்கே போகிறான். இவைகளில் 1906-ம்ஞுத்தில் 1,47,00,000பவுன் டிபாஸிட்டாகக் கட்டிவைக்கப்பட்டது; டிபாஸிட் செய்தவர்கள் (மொத்த ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களாய்) 13,500 பேர் இருந்தார்கள்; இதனால் ஒவ்வொருவரும் சராசரியில் 31 பவுன் கட்டிவைத்தார்கள். ஆனால், இந்தக் கூட்டுத்தொழில் கதை இதோடு முடியவில்லை. விவசாயி தனக்கு வேண்டிய சரக்குகளை சில்லறையாய் வாங்காமல் மொத்தமாகவே வாங்கிவிடுகிறான். சரக்குகள் வாங்கும் இந்த சங்கங்கள் மூலமாய் அவன் தன் கால்நடைகளுக்கு வேண்டிய தீனியை வாங்குகிறான். கிட்டத்தட்ட அவனுடைய உபயோகத்துக்கு வேண்டிய சரக்குகளெல்லாம் அவனுக்குக் கொள்முதலுக்கே கிடைக்கிறது. அங்கங்குள்ள ஏஜண்ட் சங்கத்தார்களின் பிரதிநிதிகள் சேர்ந்த பிரதான ஏஜெ

ன்ட் சங்கத்தார் அந்த சரக்குகளை விலைகொடுத்து வாங்குகிறார்கள். பிறகு அந்த சரக்குகள் ஸ்டோர்ஸ் என்னும் பண்ட சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் அப்படிப்பட்ட பண்டசாலை ஒன்றிருக்கிறது. இவ்விதமாகவே கிருஷிகன் தனக்கு வேண்டிய விவசாயக் கருவிகளைச் சம்பாதித்துக் கொள்ளுகிறான். தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் மற்ற சகல சாமக்கிரிகளையும் இவ்விதமாகவே அவன் வாங்குகிறான். தரகு வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் போகக்கூடிய லாபம் அவர்களுக்குப் போகாமல் இவனுக்கே வந்துவிடுகிறது. சரக்குகள் வாங்கும் சங்கத்தார்கள் 1907-ம் ஞுத்தில் 25,00,000 பவுன் மதிப்புக்கு மொத்தத்தில் சரக்குகள் வாங்கினார்கள்.

இதிலிருந்தெல்லாம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதென்ன? முதலில் விவசாயிகளே நிலச்சுவான்தாரர்களாயிருப்பதனால் அவர்களுடைய மற்ற விவகாரங்களையும் தங்களுக்கு அனுகூலமான விதமாக அவர்கள் நடத்திக்கொள்ளக்கூடியவர்களாயிருப்பார்களென்று இதனால் நிரூபிக்கப்படுகிறது. டென்மார்க் தேசத்தில் ஜனங்களே அதிகாரம்பெற்று நாகரீகமடைந்து சுவராஜ்யம் நடத்துகிறார்கள்; அதற்குக் காரணம் ஜனங்களில் பெரும்பாலார் பூமியில் அக்கறையுடையவர்களாயிருப்பதே. ப்ரான்ஸ், ஹாலண்ட், ஸ்விட்ஸர்லண்ட் தேசங்களிலும் இதே விஷயம் நிரூபிக்கப்படுகிறது. அல்லாமலும், ராஜாங்கத்தார் செய்யும் சகாயத்தாலும் ஜனங்களின் கூட்டுத்தொழில் முயற்சியாலும் வறுமையை மிகக் கொஞ்சமாகக் குறுக்கி, அசேஷ ஜனக்ஷேமத்தை விருத்திசெய்யலாமென்பதும் இதனால் தெரிகிறது. நகரங்களில் கூலியாள்களுக்குக் கொடுக்கும் கூலியைக்கூட விவசாய ஸ்திதியை நோக்கித் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. விவசாயிகள் பண்ணைகளை வைத்துக்கொண்டு சுகஜீவனம் செய்து சொந்தக் கைப்பற்று நிலங்கள் வாங்குவதைக்கண்டு, ஆள்களை வேலைக்கு வைத்துக்கொள்கிறவன் கூடத் தனக்குக் கூலியாள் கிடைப்பதற்காக பூஸ்திதி யுடையவர்களுடன் போட்டி போட வேண்டியவனாகிறான். ஆகவே, கூலியைப்பற்றிய விஷயங்களைத் தீர்மானிப்பதற்கு விவசாய விஷயங்களே ஆதாரமாயிருக்கின்றன.

இதுவுமல்லாமல், டென்மார்க் தேசக் கிருஷிகன் தனக்கு வேண்டிய வஸ்துக்களை உற்பத்தி செய்பவனும் அவைகளின் பலனை அனுபவிப்பவனும் தானே யென்பதை நன்றாய்க் கண்டுகொண்டிருக்கிறான். விவசாயத்தில் அவனுக்குண்டாகும் காரியசித்தி தன்னுடைய சொந்த பிரயத்தனத்தின் பலனே என்பதை அவன் தெரிந்துகொண்டிருக்கிறான். சரக்குகளைக் கிரமமாய் சர்ப்பரா செய்வதற்காக ஏற்பட்ட ட்ரஸ்டுகளென்னும் சபையாராலாவது ஏகவியாபாராதிகாரம் பெற்று வியாபாரம் செய்பவர்களாலாவது உண்டாகும் உபத்திரவம் அவனுக்கில்லை. உலகத்தில் சகல விவகாரங்களி

லும் போதுமான போட்டி நடக்கிறபடியால் அவன் தனக்கு வேண்டியதை இஷ்டப்பட்டு எடுத்துக்கொள்வதற்கும், உலகத்தில் கிடைக்கும் வஸ்துக்களுள் சிறந்த வஸ்துவைத் தான் கேட்கும் விலைக்கே வாங்குவதற்கும் அவனுக்கு சாத்தியமாயிருக்கிறது.

அவனவன் காரியத்தை அவனவன் பார்த்துக் கொண்டால் போதும் என்றிருந்த பழங்கால சம்பிரதாயம் எடுபட்டுப்போயிற்றென்றும், ஜனங்களை ரட்சித்து அவர்களின் சமுதாயமான யோகக்ஷேமத்தைப் பெருகச்செய்வதற்கு ராஜாங்கத்தார் முன்வந்து செய்யும்படியான முயற்சிகள் அனேகம் இருக்கின்றன வென்றும் இந்தச் சிறிய ராஜ்ஜியமாகிய டென்மார்க்கிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுகிறோம்."

ஹிந்து பத்திரிகை, 1910-ம்ஆ ஜூலை ௧௨

ஜப்பானில் நடக்கும் விவசாய வேலையிலிருந்து இந்தியர்கள் கற்றுக்கொள்ளத்தக்க விஷயங்கள்.

"ஜனங்களுக்குள் தெய்வபக்தி முதலிய நற்குணங்கள் ஸ்திரமாய் ஏற்படுவதற்கு கைத்தொழில் வேலையைக்கற்பதும் அதை அபிவிருத்திசெய்வதும் முக்கியமான சாதனங்களென்பதே" இண்டஸ்ட்ரியல் மிஷனெரி அஸோஸியேஷன் என்னும் தொழில்முயற்சி மதப்பிரசாரக சங்கத்தாருடைய பிரசித்தமான நோக்கமாயிருக்கிறது. தொழில் முயற்சி சம்பந்தமான விஷயமாக, அதாவது, விவசாயவேலை விஷயமாக நான் சங்கத்தார்முன் இந்தப் பிரசங்கம் செய்வதற்குக் காரணம் இதுதான். இந்த சங்கத்தார்முன் செய்யப்படும் முதல் பிரசங்கத்திலே ஏன் விவசாயத்தைக்குறித்துப் பேச எடுத்துக் கொண்டேனென்று சிலர் ஆச்சரியப்படலாம். அதற்கு நான் என்ன பதில் சொல்வேனென்றால்,—பைபில் என்னும் கிறிஸ்தவ வேதத்தில் விவசாயம் ஒன்றைத்தான் நடத்திவரவேண்டுமென்று சொல்லியிருக்கிறதென்பதும், அதில் சொல்லியிருக்கிற பல தொழில்முயற்சிகளுள் இது முதன்மையானதென்பதும், நிலத்தை உழுது பண்படுத்துவதும், முட்களையும் நெருஞ்சில்களையும் பெயர்த்து ஒழிப்பதும், இயற்கை நிலைமைகளை அடக்குவதும் மனிதர்களுக்குரிய விசேஷ வேலையென்று சொல்லியிருக்கிறதென்பதுமே. தேகம், அறிவு, குணம், சகோதரத்துவம்-ஆகிய இவை சம்பந்தப்பட்ட வரையிலே மனிதர்கள் நாளாவர்த்தியில் விருத்தியடைந்து வருவதற்கு விவசாய வேலையையே கடவுள் நமக்கு ஒரு பெருத்த சாதனமாய் ஏற்படுத்தியிருக்கிறாரென்று நான் வாஸ்தவமாக நம்புகிறேன்; ஜனசமூக நிர்வாக சாஸ்திரத்தினால் விவசாயத்தி லுண்டாகும் மாறுபாட்டையே அப்படிப்பட்ட சாதனமாய் ஏற்படுத்தி யிருக்கிறதென்று நம்புகிறேன். மனிதர்களுடைய வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் அவர்களுக்கு உதவிசெய்வதே மதப்பிரசாரகர்களின் நோக்கமாயிருக்கிறது; ஜனங்களுடைய ஆத்மார்த்தமான க்ஷேமத்தை உத்தேசித்து மாத்திரமே யல்லாமல், அவர்களுக்கு தேகசௌக்கியத்தையும் செல்வத்தையும் உண்டாக்கச் செய்வதற்கும், அவரவர்களின் அறிவை விருத்திபடுத்துவதற்கும், குணத்தை பலப்படுத்தி திருத்தி உயர்வாக்குவதற்கும், பரஸ்பரசகாயம் ஐக்கியம் சகோதரத்துவம் ஆகிய இவைகளை உண்டாக்கி அபிவிருத்திசெய்வதற்கும், கஷ்டமனுபவித்துக் கொண்டிருந்து தங்களுக்கு

எவராகிலும் சகாயம் செய்வார்களா என்று எதிர்பார்ப்பவர்களைக் கைதூக்கி விடுவதற்கும் கூட மதப்பிரசாரகர்கள் உழைத்து வருகிறார்கள்; இது தான் இவர்களுடைய வேலை யென்று நான் எண்ணியிருக்கிறேன். இதை ஆதாரமாகக்கொண்டுதான் ஷை மகாசபையில் தர்க்கங்கள் நடத்தப்பட்டன; விவசாயவேலையில் இந்த நோக்கங்கள் நிறைவேறி வருகின்றன என்று நான் சொல்லுகிறேன்.

ஏனென்றால், மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 71 பேர் பயிர்த் தொழில் செய்து வருகிறார்கள்; கிராமாந்தரங்களிலுள்ள ஏறக்குறைய எல்லாரும் இந்தத் தொழிலையே செய்துவருகிறார்கள்; விசேஷ உற்பத்தியை உண்டாக்கக்கூடிய தொழில் முயற்சி இது ஒன்று தான்; இதை ஆதாரமாகக் கொண்டுதான் மற்ற தொழில் முயற்சிகளெல்லாம் நடத்தப்பட்டு வருகின்றன. "குடியின் தாற்றுக்கோலே மன்னன் செங்கோல்" என்று ஒரு பழமொழி இருக்கிறது. மாத்திலும் உலோகத்திலும் வேலைசெய்வதில் கைப்பயிற்சி அடைவதனால் கற்றுக்கொள்வதைக் காட்டிலும் விவசாய வேலையைச் சரியாய்க் கற்பிக்கிற பட்சத்திலே அதனால் வெகுநன்றாய் அனேக விஷயங்களைக் கற்றுக்கொள்ளக்கூடும்; ஜீவவர்க்கங்களுக்குள்ளும் விருக்ஷவர்க்கங்களுக்குள்ளும் கடவுள் யாவரும் பார்த்து ஆச்சரியப்படும்படியாக உண்டாக்கியிருக்கும் பேதாபேதங்களைக் கவனிக்கும்போது கடவுளின் வல்லமை இவ்வளவென்பதும் அவர் சகல பொருள்களுக்குள்ளும் விளங்குகிறாரென்பதும் மெத்தவும் நன்றாய்த்தெரிகிறது; சிக்கனம், முன்னுணர்ச்சி, மிதம், யோக்கியத் தன்மை, தன்முயற்சி ஆகிய இந்தகுணவிசேஷங்கள் விவசாய சங்கங்களினால் வெகு நன்றாய் விருத்தியடைகின்றன; இது இப்படியிருக்க, கிராமாந்தரங்களில் சகோதர பாவத்துடன் கூட்டுத்தொழில் நடத்துவதை அபிவிருத்தி செய்வதற்கும் மனிதர்களுக்குள் நல்ல எண்ணத்தை ஓங்கச்செய்வதற்கும் இந்தப் பரஸ்பர சகாய கிராமச்சங்கங்கள் உங்களுக்கு அதிக திடமான சாதனங்களாயிருக்கின்றன. இம்மாதிரியான விரிவான அர்த்தத்தில் விவசாய வேலையானது பூமியிலுள்ளவர்கள் தெய்வபக்தி முதலிய நற்குணங்களை ஸ்திரமாய் அடைவதற்கு முக்கியமான உபாயமென்றும், ஜார்ஜ் எலியட் சொன்னபடி அது கடவுளால் அளிக்கப்பட்ட பாக்கியங்களில் ஒரு நேரான பாக்கியமென்றும் நம்புகிறேன்.

அறிவின் அபிவிருத்தியைக்குறித்துச் சிறிது நேரம் பேசுவோம்; சாதாரணமான ஒரு புஞ்சைத்தளையில் பயிர் செய்வதற்காக சாமானியமாய் நாள்தோறும் அனுசரித்துவரும் தொழில்முறையைச் சரியாய் நடத்தி வருவதற்காக அவசியமாய்க் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்களைக்குறித்து யோசிப்போம். முதலில், பயிர் செய்கிறவன் தன்னுடைய தளையைப்பற்றியும், அதிலுள்ள மண்ணின் லட்சணத்தையும் அதன் அமைப்பையும், அதன் ஆழத்தையும், அதை நல்ல ஸ்திதியில் வைப்பதற்கு என்னென்ன செய்யவே

MADRAS

ண்டுமோ அதையும் கற்றுக்கொள்ளவேண்டியவனா யிருக்கிறான்; பிற்பாடு, மண் அதிசெழிப்பாயிருப்பது அவசியம் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக அவன் பயிரின் வளர்ச்சியைக் குறித்துக் கற்றுக்கொள்ளுகிறான்; அதன்பிறகு இன்னின்ன மண்ணுக்கும் பயிருக்கும் இன்ன எரு அவசியமென்பதைக் குறித்து யோசித்து, எருவின் கூறுகளையும் உபயோகத்தையும் அதை உண்டாக்கிக் காப்பாற்றி வைப்பதற்குச் சிறந்த முறைகளையும் கற்றுக்கொள்ளுகிறான்; பிற்பாடு விதைகள் அனேக வித லக்ஷணங்கள் உள்ளவைக ளென்பதையும், அவை கெட்டுப்போகக் கூடியவைக ளென்பதையும், அவனுக்கு நல்ல மாசூல் கிடைக்க வேண்டுமானால் மிகவும் நல்ல விதைகளையே அவன் பொறுக்கி யெடுக்கவேண்டு மென்பதையும் தெரிந்துகொள்ளுகிறான். பிறகு, நிலத்தைப் பண்படுத்துவதையும், விதை விதைப்பதையும், களை பிடுங்குவதையும், வளர்ந்திருக்கும் பயிரின் மத்தியில் உழுவதையும் அனுபவரீதியாய் இன்னமாதிரி நடத்த வேண்டுமென்பதையும், அந்தப்படி நடத்துவதற்குரிய காரணங்கள் இன்ன என்பதையும் கற்றுக்கொள்ளுகிறான். அனேக உபாதிகளும் நோய்களும் பயிர்களுக்குக் காணுகின்றன என்பதையும் அவைகளோடு போராடி அவைகளை நிவர்த்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும் சீக்கிரத்தில் தெரிந்து கொள்ளுகிறான். தன்னுடைய சரக்குகளை விசேஷ லாபம் உண்டாகும்படியாக எப்படி விற்கலாமென்பதைக் கடைசியாகத் தெரிந்து கொள்ளுகிறான். வாஸ்தவத்தில் இதரமான அநேக விஷயங்களை நான் எடுத்துச் சொல்லாமல் விட்டு விட்டிருக்கிறேன்; முக்கியமாய், பண்ணையில் நடத்தப்படும் தொழில்முறை சம்பந்தமான விஷயங்களை, அதாவது, கணக்குகள் வைப்பதும், மூலதனத்தைச் சரியானபடியும் லாபம் உண்டாக்கத்தக்க விதமாகவும் உபயோகிப்பதும், கூட்டுத்தொழிலின் பிரயோசனங்கள் முதலிய இன்னும் எத்தனையோ விஷயங்களைக் குறித்துச் சொல்லாமல் விட்டுவிட்டேன்; சாதாரணமான விவசாய வேலையைக்கூட சரியாய்க் கற்பித்தால், அதனால் அறிவு விசேஷமான அபிவிருத்தி யடைவதற்கு இடமிருக்கிறதென்று எடுத்துக் காட்டத்தான் நான் இஷ்டப்பட்டேன்.

ஆனால், "நீர் சொல்வதெல்லாம் வெறும் மனோரதமாகவே யிருக்கிறது; கிருஷிகனுடைய மூடத்தனம் உலகப் பிரசித்த மாயுள்ளதே. எருமைக் கடாவுக்கு வால் உண்டு. ரயத்துக்கு வாலில்லை; இதுதான் ரயத்துக்கும் அவனுடைய எருமைக் கடாவுக்கு முள்ள வித்தியாசமென்று தெலுங்கில் ஒரு பழமொழி இருக்கிறது—மூன்று ஏகரா பூமியும் ஒரு பசுவும் வைத்திருக்கிற ஒருவனுக்கு அப்படிப்பட்ட கல்வி உண்டாகுமென்று நீர் எதிர்பார்க்க முடியாது; ராமசாமி கவுண்டன் சின்னப்பரெட்டி, பூறைக்குப்பன் ஏசுதாசன்-ஆகிய இவர்கள் தளையிலுள்ள மண்ணைக் குறித்தும் பயிர்களைக் குறித்தும், நைட்ரொஜினை (உப்புவாயுவைக்) குறித்தும் தளையில் படரும் மாசைக் குறித்தும், விஷப்பூச்சிகளைக்குறித்தும் காளான் வியாதிகளைக் குறித்தும், கணக்கு எழுதிவைக்கும் முறையைக் குறித்தும் கடன்கொடுப்பதைக்

குறித்தும் சகல விவரங்களையும் கற்றுக்கொள்வது சாத்தியமாஎன்பதை நீரே யோசித்துப் பாரும்" என்று நீங்கள் சொல்வீர்கள். இது நிற்க. ஜபான் தேசத்தில் மெத்தவும் ஏழைக் குடியானவனுக்கு இதே முறையை அனுசரித்து என்ன செய்துவரப்படுகிறதென்பதை உங்களுக்குச் சொல்வதே இன்றையதினம் நான் செய்யும் பிரசங்கத்தின் சரியான கருத்து; ஏனென்றால், ஆச்சரியகரமான அந்த தேசத்திலே அனுபவ ஞானத்தைக்கொண்டும் வாடிக்கையான முறையைக் கொண்டும் நடத்திவரப்படும் விவசாயமானது யாவரும் அதிசயிக்கும்படியாய் அவ்வகை உன்னத ஸ்திதிக்கு வந்திருக்கிறபோதிலும் (பயிரிடும் குடிகள் இந்தியாவிலுள்ள குடிகளைப்போல் ஏழைகளாகவே இருந்தும்), அதிக கீழ்ப்படியிலுள்ள குடியானவன்வரையில் ஒவ்வொரு குடியானவனும் அனுசரிக்க இஷ்டப்படுகிற பட்சத்திலே அவனுக்கு ஒரு விதமான சாகுபடி பயிற்சி ஏற்படுத்தியிருக்கிறது; ஷை பயிற்சியைக்கொண்டு அவன் பயிரிடுவது சம்பந்தமான சகல கஷ்டங்களையும் தன் அறிவைச் செலுத்தி நிவர்த்தித்துக் கொள்ளக்கூடியவனா யிருப்பதோடுங்கூட, அந்தப்படி நிவர்த்தித்துக் கொள்ளுகிறான்.

மேலும், ஜனசங்கமானது விவசாய வேலை மூலமாக அளவற்ற வழிகளில் அபிவிருத்தி அடையக்கூடுமென்று நமக்குத் தெரியவருகிறது. பொதுவான கிராம சம்பந்தமான காரியங்களும் சகோதரத்துவமும் ஆகிய இந்தப் பழைய கொள்கைகளைப் புதுப்பிப்பது கிராமத்தில் ஜீவனம் செய்வதற்கு அவசியமானதென்று முறையிடப்படுகிறது. முற்காலத்திலே, கிராமத்திலிருந்த ஜனங்கள் ஒரே தன்மையான உற்பத்தியும் க்ஷேமலாபங்களும் ஆவசியகங்களும் உடையவர்களாயும், பரஸ்பரம் சகாயம் செய்து கொள்பவர்களாயும் ஒரு ஒழுங்கான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாயிருந்தார்கள்; இம்மாதிரியான கிராமவாழ்க்கைக்கு ஒத்தபடியே, மொத்தத்தில் இந்தியர்கள் வாழ்ந்து வந்தார்கள்; கிராம ஜனசமூகத்திற்குமுன் ஏற்பட்டிருந்த பெயரே நாளதுவரையில் வட இந்தியாவில் வழங்கி வருகிறது; அந்தப் பெயர் என்னவென்றால் "சகோதரத்துவம்" அல்லது கூட்டுப்பங்கு என்பதே; இது செங்கற்பட்டு தஞ்சாவூர் இந்த ஜில்லாக்களில் பூர்வீகத்திலே ஏற்பட்டிருந்த மிராஸுக்கு வெகுசாய் ஒத்திருக்கலாம். ஆனால், பொது ஏரியிலிருந்து கூட்டாய் நீர் பாய்ச்சிக்கொள்வது, கூட்டாய் ஏர் உழுவது, பொதுச்செலவுகளுக்காக வசூல் பண்ணுவது, வழக்குகளைத் தீர்ப்பதற்காக பஞ்சாயத்து, திருநெல்வேலியிலுள்ளபடி "கூட்டுச்சீட்டு" அல்லது பணம் சேர்த்து வைப்பதற்கான நிதி ஏற்பாடு முதலிய காரியங்களில் எவ்வளவு கூட்டுத்தொழில் கட்டுப்பாடு இருக்குமென்று எண்ணப்படுகிறதோ அதைக் காட்டிலும் மெத்தவும் அதிகமாக தற்காலத்தில் இருந்தபோதிலும், அது ஒவ்வொருவரும் தன் தன் க்ஷேமத்தையே கருதிச்செய்யும் காரியங்களினால் பிரமாதமாய் பாதிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, மனிதர்களுடைய பிறப்பினாலல்லாமல் யோக்கியதையினாலுண்டாகும் அந்தஸ்தை ஆதாரமாகக்கொண்டு கூட்டுத்தொழில் விவசாய

சங்கங்கள் மூலமாகத் தீர ஆலோசித்து ஐக்கியம் ஏற்படுத்தி இந்தக் கிராம சகோதரத்துவத்தைப் புதுப்பிக்க நாம் விரும்புகிறோம்.

விவசாய சம்பந்தமான காரியங்களினால்தான் இது சித்தியாகும்; கூட்டுத்தொழிலாலும் சங்கத்தினாலும் பயிரிடும் வகுப்பார் பரஸ்பரம் சகாயம் செய்து கொள்ளும் விதமாக ஒன்றாய்ச் சேருகிறார்கள்; விவசாயம் விருத்தி அடைவதில் எவருக்கும் அசூயை இல்லை; ஒருவருக்கொருவர் போட்டியின் மேல் வேலை செய்தால் அந்த வேலை சரியாய் நிறைவேறுமே யொழிய அதற்குக் கெடுதி உண்டாகமாட்டாது; மிகவும் நன்றாய்ப் பயிரிடுகிறவர்களுக்கு ஜன சமூகத்திலுள்ள அந்தஸ்து எதுவாயிருந்த போதிலும் அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர், ஒத்தாசை நாடவும் ஒருவருக்கொருவர் செய்யும் மாதிரியைப் பின்பற்றி செய்யவும் இதனால் கற்றுக்கொள்ளுவதைப் போல வேறே எதனாலும் கற்றுக்கொள்ள முடியாது. நான் வெறும் புத்தக ஞானத்தைக்கொண்டு சொல்லி வரவில்லை; இதர தேசங்களில் சித்தியாயிருக்கும் விஷயத்தைக் குறித்தே நான் மனத்தெளிவுடன் பேசிக்கொண்டிருக்கிறேன்; சென்னை மாகாணத்திலுள்ள கிராமங்களில் கூட்டுத்தொழிலினால் ஏற்பட்ட சிறிது அனுபோகமும் அம்மாதிரியாகவே தான் இருக்கிறது. பேக்கர் துரை தம்முடைய ஜில்லாவிலே பறை தச்சர்களுக்கும் இதரர்களுக்கும் உள்ள செல்வாக்கைக் குறித்து நமக்குச் சொல்லியிருக்கிறார்; ப்ராக் துரையும் கனிகிரியிலுள்ள பாதிகர்களைக் குறித்து அம்மாதிரியே எழுதியிருக்கிறார்; சங்கத்தினால் ஏற்படும் பிரயோசனங்களை இவர்கள் அடைந்தவர்களல்ல; ஆகவே, தனித்தனியாயுள்ள சுதேச கிறிஸ்தவர்கள் சுயப் பிரயத்தனத்தினாலேயே மற்றவர்களுடைய நன்மதிப்பை அடையக் கூடுமானால், அவர்கள் தங்களுக்குள்ளே ஒன்று சேர்ந்து சிநேகப்பான்மையுடன் கூட்டுத்தொழில் நடத்தும் பட்சத்திலே அப்படிப்பட்ட நன்மதிப்பை இன்னும் அதிகமாய் அடைவார்களென்பது நிச்சயம்; அவர்கள் தங்களுக்குள்ளே கூட்டுத்தொழில் நடத்துவதைக்காட்டிலும் தங்களுக்கு அண்டை அயலிலுள்ள பயிரிடும் ஹிந்துக்களோடு சேர்ந்து சிநேகப்பான்மையுடன் கூட்டுத்தொழில் நடத்தி வருவார்களே யானால் இன்னும் அதிகமாக நன்மதிப்பை அடைவார்களென்பதற்குச் சந்தேகமே இல்லை.

விவசாய வேலையினால் ஜன சமூகம் உயர்வடையும் என்பதைக் காட்டுவதற்காக என் நோக்கத்தை இம்மட்டில் விவரமாய் எடுத்துச் சொன்னேன்.

ஜப்பானைக் குறித்து விவரங்கள் சொல்லுவதற்கு முன்னே, சென்னைக்கும் ஜப்பானுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இங்கே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். "ஜப்பான் தேசத்தில் நடத்தப்படும் விவசாயத்தைப்பற்றிய குறிப்பு" என்று சொல்லப்படும் என்னுடைய சிறிய புஸ்தகத்தைக் குறித்துப் பிரசங்க முழுவதிலும் நான் சொல்லிக்கொண்டு வருவேன்; இந்தப் புஸ்தகமானது 1907-ம் வருஷத்தில் சென்னபட்டணத்திலே பிரசுரிக்கப்பட்டது.

முதலாவது,—சென்னைமாகாணத்தில் நம்முடைய கைப்பற்று நிலமானது சராசரியில் 7 ஏகரா விஸ்தீரணமுள்ளதா யிருக்கிறது; ஜப்பானிலோ சாகுபடி செய்யக்கூடிய கைப்பற்று நிலத்தின் விஸ்தீரணமானது சராசரியில் 2½ ஏகராவா யிருக்கிறது. சென்னைமாகாணத்திலுள்ள ரயத்துகளில் மூனறில் ண்டு பங்குபேர் சராசரியில் நபர் ஒன்றுக்கு 3 முதல் 4 ஏகரா வரையில் வைத்துக் கொண்டிருக்கிறார்களென்பது உண்மை தான்; ஆனால், ஜப்பானிலே குடியானவர்களில் பாதிபேர் ஒரு ஏகராவுக்கதிகமாக வைத்திருக்கவில்லை. ஆகவே, ஜப்பான் தேசத்திலுள்ள குடியானவனுக்கு மர மடர்ந்த நிலங்களும் இருந்தபோதிலும், அவனுக்கு இருக்கும் பயிரிடும் நிலத்தைக் காட்டிலும் சென்னையிலுள்ள ரயத்துக்கு சராசரியில் சுமார் மூன்று பங்கு நிலம் இருக்கிறது. ஜப்பானிலுள்ள ரயத்து சென்னையிலுள்ள ரயத்தைக் காட்டிலும் அதிக விசேஷமாக தீர்வை செலுத்துகிறானென்று நான் இங்கே சொல்லலாம்; சாதாரண நிலத்தீர்வையானது சென்னையில் இருப்பதைக் காட்டிலும் மெத்தவும் அதிகமாக இருக்கிறது; மேலும், சண்டை முதலியவை நேரிடும் காலத்தில் அது இரண்டத்தனை ஆக்கப்படலாம்; இம்மாதிரியாக 1906-ம் ஞுத்தில் வாஸ்தவமாய் நடந்தது; அவ்வவ்விடத்திய வரி வீதங்கள் நிலத் தீர்வையைப்போல ஏறக்குறைய அவ்வளவு அதிகமா யிருக்கின்றன; இது இப்படியிருக்க, புகையிலை சாராயவகைகள் வீடுகள் ஆகிய இவைகளுக்கெல்லாம் அதிகமாய் வரி போட்டிருக்கிறது; கிராமந்தரப் பிரதேசங்களில் வீட்டுவரி மாத்திரம் ஒன்பது ரூபாயாகிறது.

இரண்டாவது,—ஜப்பான் தேசத்தில் ஆழமாயும் எங்கும் ஒரேமாதிரியாயும் பூர்த்தியாயும் கூடிய வரையில் சம்பூர்ணமாயும் பயிர் செய்யப்படுகிறது; சென்னையிலோ ஆழமில்லாமலும் சிறு சிறு துண்டு நிலங்களிலும பயிர் செய்யப்படுகிறதுமாத்திரமல்லாமல், அது சாதாரணமாய் கீழ்த்தரமாயுமிருக்கிறது. சுமாராய், சாதாரணமாய்ச் சுமாராகவே, சாகுபடி செய்யப்படுகிற சென்னையிலுள்ள நெற்பயிர் நிலங்களைக் குறித்து நான் இப்போது பேசவில்லை; கிணறுகளிலிருந்து நீர் பாய்ச்சப்பட்டு நன்றாய் உழுது நல்ல மாசூல் கொடுக்கும் தோட்டக்கால் நிலங்களைக் குறித்தும் நான் இப்போது பேசவில்லை; செழிப்பாய்ப் பயிராகும் கரிசல் பூமிகளைப்பற்றியும் நான் பேசவில்லை; கைப்பற்றிலிருக்கும் புஞ்சை பூமிகளில் பெரும்பாகமாக வுள்ள விசேஷ செம்மண் பூமிகளைக் குறித்தும் மஞ்சள் நிற பூமிகளைக் குறித்தும் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த நிலத்துக்கு ஒரு காலமும் நீர் பாய்ச்ச முடியாது; இந்தப் பெருத்த நில விஸ்தீர்ண விஷயத்தில்தான் நமக்கு அதிக பிரமாதமான கஷ்டங்கள் நேரிடுகின்றன. இந்த நிலத்தில்தான் ஆறு அல்லது எட்டு பறை விதை விதைத்து சாகுபடி செய்து வருகிறார்களென்று நாம் சொல்லலாம்; இதே மாதிரியான நிலத்தில் இங்கிலாந்து, பெல்ஜியம், ஜப்பான் இந்த தேசங்களிலே முப்பதுபறை விதை விதைக்கிறார்கள்; இங்கிலாந்திலுள்ள சில சிறு கைப்பற்றுநிலங்களில் சாகுபடிக்காரர்கள் அறுபது பறை

விதையும் விதைக்கிறார்கள். இந்தத்தளைகளில் இருக்கும் பயிரை நீங்கள் கவனித்தால் அவை ஆழமில்லாமல் நிலத்தின் மேற்பரப்பிலேயே பயிராயிருக்கின்றனவென்று உங்களுக்குத் தெரியவரும்; இது இப்படியிருக்க, அடி மண்ணானது சீர் திருத்தப்படாமலே இருக்கிறது; அது செடிகள் பயிராவதற்கு உபயோகமற்றதாயும் இருக்கிறது. மேல் மண்ணானது பீடா யிருப்பதோடுங்கூட, பயிர்கள் செழிப்பாய் வளர்வதற்கு வேண்டிய பொருள்களும் அதில் குறைவாயிருக்கின்றன; இது பெரும்பாலும் பண்படுத்தப்படாமலே தரிசாய்க் கிடக்கிறது; இந்த நிலங்கள் பெரும்பாலும் மரமில்லாமல் புல்லடர்ந்த பூமிகளாய் இயற்கையில் என்ன நிலைமையிலிருந்தனவோ அதே நிலைமையில் இப்போதும் இருந்து வருகின்றன; அதில் உண்டாகும் பயிர்களும் பீடாகவும் குறுகியும் இங்கு மங்கும் வளர்ந்தும் இருக்கின்றன; மேலும், இவை மழைக்குறைவு சற்று மிதமாயிருந்த போதிலும் விசேஷமாக சாவியாய்ப் போகக் கூடிவைகளாய் இருக்கின்றன. இதற்குப் பல காரணங்கள் உண்டு; ஆனால், சென்ற சில வருஷகாலமாகத் தான், சென்ற ஐம்பது வருஷத்துக்குள்ளாகவே தான், இந்த நிலங்களில் சாதாரணமாய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறதென்பது பிரதானமான காரணமென்று எனக்குத் தோற்றுகிறது; சென்ற நூற்றாண்டின் பாதிவரையிலே அவை அனேகமாய் குறுகின செடிகளடர்ந்த காடாயிருந்தன; 1855-ம் ஞுத்தில் சுமார் 120 லட்சம் ஏகரா பூமிதான் கைப்பற்றிலிருந்தது; 1895-ம் ஞுத்திலோ 210 லட்சம் ஏகரா பூமி கைப்பற்றிலிருந்தது; புதிதாய்க் கைப்பற்றுக்குவந்த ஏறக்குறைய இந்த 90 லட்ச ஏகரா பூமியும் பீடான நிலமே. ஆகவே, இந்த பீடான புல்லடர்ந்த பூமிகளின் சாகுபடியை இன்ன விதமாக நடத்த வேண்டுமென்று ரயத்துக்குத் தெரியவில்லை; இதே ரயத்துகள் பழைய நல்லபூமிகளிலே, முக்கியமாய்த்தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்களிலே, நல்லதாயும் சிறப்பாயுங்கூட இருக்கும் பயிர் செய்கிறார்கள் என்னும் விஷயத்தைக் கவனிக்கும்போது மேலே சொன்ன சங்கதி உண்மையென்று என் மனதில் பட்டிருக்கிறது. அடியில் வரும் சங்கதியைக் கவனிக்கும்போது இது அவ்வளவு ஆச்சரியகரமானதா? ஐக்கிய மாகாணங்களிலுங்கூட பல வருஷகாலமாக கைப்பற்று நிலங்களில் அனேகமாய் மாசூலே உண்டாகாதிருக்கிறபோது, பாதி வறண்டுள்ள பூமிகளில் புஞ்சை நிலப்பயிரைச் செய்வது மெத்தவும் கஷ்டத்துக் கிடமாயிருக்கிறதென்று நமக்குத் தெரியவருகிறது; மேலும், ஒரு புதிய எற்பாட்டின்படி இந்த நிலங்களிலேயே நீர்ப்பாய்ச்சலில்லாமல் விசேஷமாகவும் இடைவிடாமலும் மாசூல் கிடைக்கக் கூடுமென்று காம்பல் துரை சிறிது காலத்துக்கு முன்னமேதான் கண்டுபிடித்தார்.

ஜப்பான் தேசத்திலே இப்போது இதற்கு நேர் விரோதமாய் நடந்து வருகிறது; அந்தத்தேச முழுவதிலும் புஞ்சை நிலமானது தோட்டக்காலைப் போலிருக்கிறது; தளையில் ஒரு அடி ஆழம் முதல் இரண்டு அடி ஆழம் வரையிலே எங்கும் ஒரே மாதிரியாய் உழப்படுகிறது; மண்ணின் அமைப்பும்

வளப்பமும் ஒரே மாதிரியாயிருக்கிறது; பயிர் மாசூல்கள் ஆகிய இவை எல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரி லட்சண முடையவைகளா யிருக்கின்றன; ஒவ்வொரு ஏகரா பூமியிலும் பிரதி வருஷமும் ஒரு மாசூல் உண்டாகிறது; தரிசாகவே கிடக்கும் நிலங்கள் இல்லவே இல்லை. தோட்டக்கால் வண்டல் மண்ணைப்போல முழுவதும் கரிசலா யிருக்கும் பூமியைப் பார்க்கும்போது, அப்படி நேர்த்தியாயும் செழிப்பாயுமுள்ள நிலங்களை வைத்திருக்கும் ஜப்பானியர்கள் நல்ல அதிர்ஷ்ட சாலிகளென்று நீங்கள் நினைப்பீர்கள்; அவர்கள் அதிர்ஷ்டசாலிகளென்பது வாஸ்தவந்தான்; ஆனால், அந்த நிலங்கள் இயற்கையிலே நேர்த்தியாயும் செழிப்பாயும் இருக்கவில்லை. இதற்கு நேர் விரோதமாகவே இருந்தன; வெறும் உழைப்பினாலும் எருவினாலுமே ஷை நிலங்கள் இந்தப்படி ஒரே மாதிரியாய் செழிப்பாயிருக்கும் ஸ்திதிக்குக் கொண்டுவரப்பட்டன. பெல்ஜியம் தேசத்திலி நந்ததுபோலவே ஆதியில் இந்த நிலங்கள் பெரும்பாலும் பீடாகவே இருந்தன; ஒரு மலைக்குன்றின் பக்கத்திலுள்ள அதிபீடான அடிமண்ணை நல்ல தளைகளாகச் செய்திருப்பதை நானே பார்த்திருக்கிறேன். ஜப்பானில் நடக்கும் விவசாயத்தைக் குறித்த என்னுடைய சிறு புத்தகத்தில் 8-வது பாராவிலே அதிக சிரேஷ்டமான பிரமாணங்களிலிருந்து அனேக விஷயங்களை எடுத்துக்காட்டியிருக்கிறேன். நம்முடைய தேசத்தில் கோடிக் கணக்காயுள்ள பீடான நிலங்களை ஜப்பான் தேசத்திலுள்ள நிலங்களின் ஸ்திதிக்குக் கொண்டு வருவது எப்படி யென்பதைக் குறித்து நாம் இப்பொழுது யோசிக்கவேண்டியதா யிருக்கிறது.

மூன்றாவது,—இதனால் தேறுகடையான முடிவென்ன வென்றால், சென்னைமாகாணத்தில் பிரதி வருஷத்திலும் ஜனத்தொகையில் ஒவ்வொரு நபரும் ஜீவிப்பதற்கு வாஸ்தவமாய் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலத்தில் ஒரு ஏகராவுக்கு சற்று அதிகமாக வேண்டியிருக்கிறது; ஜப்பான் தேசத்திலோ நபர் ஒன்றுக்கு சரியாய் $\frac{1}{4}$ ஏகரா பூமி வேண்டியதா யிருக்கிறது. இதை வேறே விதமாய்ச் சொல்லுவோமானால், மொத்தத்திலும் சராசரியிலும் சென்னைமாகாணத்தில் ஒரு ஏகரா பூமியில் கிடைப்பதைப்போல் மூன்று பங்கு அல்லது நான்குபங்கு மாசூல் ஜப்பான்தேசத்தில் ஒவ்வொருஏகரா பூமியிலும் கிடைக்கிறது. தோராயமாய்ச் சொல்லுவோமானால் ஜப்பான் தேசத்தில் ஒருஏகரா நஞ்சை பூமியிலே சராசரியில் 3000 ராதல் நெல் கிடைக்கிறது; சில சந்தர்ப்பங்களில் இதைவிட விசேஷ அதிகமான மாசூலும் கிடைப்பதுண்டு; இந்தத் தேசத்திலோ ஒரு ஏகரா நஞ்சை பூமியில் 2000-ராத்தல் தான் கிடைக்கிறது; இதைவிட சில சந்தர்ப்பங்களில் சற்று அதிகமாகவும் கிடைப்பதுண்டு. ஆனால், அந்தப்படி அதிகப்படுவது மிதமாகவே இருக்கிறது; நீர் பாய்ச்சப்படாத ஒரு ஏகரா பூமியிலே சராசரியில் 30 பறைக்கு அதிகமாகக் கிடைக்கிறது; சென்னப்பட்டணத்திலோ சராசரியில் வெகுசாய் 8 அல்லது 10 பறைதான் கிடைக்கிறது.

நான்காவது,—ஜப்பான் தேசத்தின் தென்பாகத்திலே மெத்தவும் அனுகூலமாக மழை பெய்கிறதென்பதும், சென்னை மாகாணத்திலே அவ்வளவு அனுகூலமாக பெய்கிறதில்லை யென்பதும் வாஸ்தவமே. இதனால், காலக்கிரமமாய்ப் பயிர் செய்வதற்கு அனுகூலமாயிருக்கிறது; ஆனால், நிலங்கள் நன்றாய் உழுது பண்படுத்தப்படாமலும் நன்றாய் எருவிடப்படாமலுமிருந்தால் நல்ல மழை பெய்தும் பிரயோசனமில்லை யென்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்; தளையில் ஆழமாக உழுதாலொழிய, மழை ஜலம் உள்ளே இறங்காது; மேலும், தளையில் வருஷா வருஷம் நன்றாய் எரு போட்டாலொழிய, அனுகூலமாக மழை பெய்து விசேஷமாசூல் அறுவடையாவதனால் நல்ல நிலங்களுங்கூட சீக்கிரத்தில் பயனற்றதாய்ப் போய்விடக்கூடும். ஆனால், பூமியை நன்றாய்ப் பண்படுத்தியிருந்தால் மாத்திரமே வருஷம் ஒன்றுக்கு 12 சுழிக்குக் குறையாமலும் 15 சுழிக்கு மேற்படாமலும் வெகு சொற்ப மழை பெய்வதே நல்ல மாசூல் பயிராவதற்குப் போதுமானதென்று நிப்ராஸ்கா முதலிய இடங்களில் காம்பல் துரை காட்டியிருக்கிறார்; இங்கே சென்னை மாகாணத்தில் சாதாரணமாய் 20 சுழிமுதல் 24 சுழிக்குக் குறைவாக மழை பெய்யும் பிரதேசங்களே இல்லை; இது இப்படியிருக்க, அனேக பிரதேசங்களில் 30 சுழிக்கு அதிகமாக மழைபெய்கிறது; இந்த மழை பெரும்பாலும் மேமீ முதல் டிஸெம்பர்மீ வரையில் எட்டுமாதகாலம் பெய்து வருகிறது. சைதாப்பேட்டையில் இருந்தஸர்க்கார் பண்ணையிலே ஆழஉழுது நன்றாய்எரு போடப்பட்ட இலேசான மண்ணையுடைய ஒரு துண்டு நிலத்தில் $\frac{1}{4}$ சுழிக்குக் குறைவாக மழை பெய்திருந்தும் சொற்பதானியமும் மிதமான அளவுக்கு வைக்கோலும் கிடைத்தனவென்றும், 5 சுழிக்குக் குறைவாக மழை பெய்த போது தானியமும் வைக்கோலும் சில பாகங்களில் நன்றாகவும் சில பாகங்களில் சுமாராகவும் கிடைத்தன வென்றும் 1877-ம் வருஷத்தில் நேரிட்ட பெரும் பஞ்சத்திலே, தற்செயலாய் எண்பிக்கப்பட்ட சங்கதி எல்லாருக்கும் தெரிந்திராமலிருக்கலாம். ஆகவே, நமக்கு அதிகமாய் வேண்டியது மழையல்ல; நிலங்களை ஆழமாய் உழுவதும் அவைகளுக்கு எருபோடுவதுமே அவசியமானவை.

ஐந்தாவது,—சென்னை மாகாணத்தில் நீர்ப்பாய்ச்சலில்லாத நிலங்களில் வெகுசாய் இரண்டாம் போகம் பயிர் செய்வதே கிடையாது; ஜப்பானிலோ இரண்டாம் போகப் பயிர் சாதாரணமாயிருக்கிறது; இதற்குக் காரணமென்ன வென்றால், மழை பெய்வதும் எருபோடுவதும், நல்ல சாகுபடி முறைகளை அனுசரிப்பதுமே; இந்த முறைகளில் ஒன்று என்னவென்றால், (ஒரு வரிசைக்கும் இன்னொரு வரிசைக்கும் மத்தியில் 20-அங்குலத்திற்குக் குறையாமலும், 22-அங்குலத்திற்கு மேற்படாமலும்) இடம்விட்டு தூரம் தூரமாகப் பயிர்களை நடுவதும், முதற்போகப் பயிர் முதிர்ச்சி அடையும்போது இரண்டாம் போகப்பயிரை இடையிடையே நடுவதுமாம். இம்மாதிரி செய்வதனால் காலம் விசேஷமாய்க் கூடிவருகிறது. சதாரணமாய், சென்னைமாகாணத்தில்

பயிரிடுவதற்கு ஜூன்மீ முதல் பெப்ரவரிமீ வரையிலே ஒன்பது மாதகால மிருக்கிறபடியால் நான் அதைச் சொன்னேன். விசேஷமான புஞ்சை நிலங்களில் இப்போது ஒரே ஒரு மாசூல்தான் உண்டாகிறது; அதுவும் பீடாயிருக்கிறது; தளையில் சரியாய் உழுது நன்றாய் எருபோட்டு வைத்தால், புஞ்சைபூமியிலே இரண்டு நல்ல மாசூல் கிடைக்குமென்பதே என்னுடைய அபிப்பிராயம். சோளப்பயிர் முதலிய பயிர்களுக்கு வெகு சொற்ப மழை பெய்தாலும், அவை மூன்றுமாதத்திலே வளர்ந்துவிடும்.

ஆறுவது,—சென்னை மாகாணத்தில் ஜப்பான் தேசத்தில் மழை பெய்வதுபோல அவ்வளவு அதிகமாக மழை பெய்யாவிட்டாலும், தொழிலாளிகள் கிடைக்கும் விஷயத்திலும் எரு சம்பாதிக்கும் விஷயத்திலும் சென்னைமாகாணத்துக்கு ஜப்பானைக் காட்டிலும் அதிக விசேஷமான சௌகரியங்கள் உண்டாயிருக்கின்றன. ஜப்பான் தேசத்தில் வெகு சிறிய பிரதேசம் ஒன்று தவிர மற்ற பாகங்களில் உழவு மாடுகளும் கிடையா, செம்மறி யாடுகள் அல்லது வெள்ளாடுகளும் கிடையா; தளைகளிலே ஒரு குதிரை வேலைசெய்து கொண்டிருப்பதை நான் இரண்டு முறைதான் பார்த்தேன்; எருதுகள் வேலை செய்வதை நான் ஒருபோதும் பார்க்கவேயில்லை. சுமார் ஐந்துகோடி ஜனத்தொகையுள்ள ஜப்பான் தேசமுழுவதும் எல்லாவகைகளையும் சேர்ந்த முப்பதுலட்சக் கால்நடைகளும் குதிரைகளும், இரண்டரைலட்சம் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் தான் இருக்கின்றன; விவசாய சம்பந்தமாய் ஏறக்குறைய எல்லா வேலைகளையும் மனிதர்களே செய்து வருகிறார்கள்; ஆகவே வளப்பத்திற்கு முக்கிய காரணமாயிருப்பது இதுவே. இந்த மாகாணத்தில் ஜனத்தொகை நாலு கோடிக்குக் குறைவாயிருந்தும் கொம்புள்ள கால்நடைகள் இரண்டுகோடிக்குக் குறையாமலும், செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் சுமார் இரண்டு கோடியும் இருக்கின்றன; இதைத்தவிர பன்றி முதலிய பிராணிகளும் இருக்கின்றன; இந்தக் கால்நடைகள் நில முழுவதும் உழுது வேலைசெய்துவருகின்றன; மேலும், இந்த நாலு கோடி மாடுகளினின்றும் செம்மறியாடுகளினின்றும் வெள்ளாடுகளினின்றும் கிடைக்கும் சாண எருவானது விவசாயிகளுக்குப்பெருத்த ஆஸ்தியாயிருக்கிறது; ஜப்பான் தேசத்துக்கு இம்மாதிரி பாக்கியமே கிடையாது. அப்படி யிருந்தும் ஜப்பான் தேசத்தில்தான் வருஷப் பிரதி வருஷமும் ஒவ்வொரு ஏகராபூமியும் செழிப்பா யிருப்பததோடுங்கூட நன்றாய்ச் செழிப்பாக்கப்பட்டும் வருகிறது.

ஏழாவது,—நம்முடைய சென்னை மாகாணத்திலுள்ள ரயத்துகள் அதிக கடனாளிகளாக இருக்கிறார்கள்; அவர்கள் அதிகப் பொறுப்பேற்றுக்கொண்டு கடன் வாங்குகிறார்கள். ஆனால், ஜெர்மானியர்கள் விவேகசாலிகளாயும் சாமர்த்தியசாலிகளாயு மிருந்தும், அந்த தேசத்திலுள்ள கிருஷிகர்கள் எப்படி அக்கிரம வட்டிக்குக் கடன்வாங்காமல் இருக்க முடியவில்லையோ, அதே மாதிரி ஜப்பானியர்கள் தீவிரபுத்தி யுள்ளவர்களாயிருந்தும், அந்தத் தேசத்

திலுள்ள கிருஷிகர்கள் கடன் வாங்காமல் இருக்கக்கூடவில்லை யென்னும் சங்கதியைக் கவனியுங்கள்; ப்ரஷியா தேசத்தில் மாத்திரம் பயிரிடும் குடிகள் கொடுக்கவேண்டிய கடனானது ஐம்பதுகோடி பவுன் அல்லது எழுநூற்று ஐம்பதுகோடி ரூபாய் என்று சிறிது காலத்திற்கு முன்னே கணக்கிடப்பட்டது; மேலும், இந்தக் கடன் தொகையானது முன்னிருந்ததைக் காட்டிலும் 7-வருஷ காலத்தில் நாலரை கோடி பவுன் அதிகப்பட்டிருக்கிறது. ஜப்பானிலுள்ள குடியானவன் மெத்தவும் ஏழை; அவன் விசேஷமாய்க் கடன்பட்டிருக்கிறான்; 100-க்கு 20-முதல் 40-வீதம் வரையில் அவன் சாதாரணமாய் வட்டிகொடுத்துவருவதாக ஸர்க்கார்துவாரா தெரிந்திருக்கிறது. சாமானிய நிலைமைகளில் ஒவ்வொரு தேசத்திலுமுள்ள சொற்ப குடியானவன் சாதாரணமாய்த் தன் முன்னோர்களிடமிருந்து அடையும் ஆஸ்தி கடன்தான்; ஒரு மனிதனுடைய பிரதான மூலதனத்தையெல்லாம் அவன் தன் நிலத்தில் போட்டு வைத்திருக்கிற சந்தர்ப்பங்களிலும், பயிர் செய்வதற்கும் மாசூல் அறுவடையாகிறவரையில் தன் குடும்பத்தாரைக் காப்பாற்றுவதற்கும் அவன் கடன்வாங்கிச் செலவழிக்க வேண்டியவனாயிருக்கிற சந்தர்ப்பங்களிலும், கால்நடைகளாவது பயிர்களாவது நஷ்டமாய்ப் போய் அந்த நஷ்டங்களையெல்லாம் அவனே ஏற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களிலும், சாதாரணமாக அவன் கடன் வாங்கியே தீரவேண்டியதாயிருக்கிறது. செலவு விஷயமாய் விந்தையான கொள்கைகள் ஏற்பட்டிருக்கும் சென்னை மாகாணம்போன்ற இடங்களிலும், பணத்தைச் சேர்த்து வைப்பதற்கு எவ்வித சௌகரியமும் தூண்டுதலும் ஏற்பட்டிராத இடங்களிலும், மேலே கண்டபடி கடன் வாங்குவதற்கான ஆவசியகம அதிகமாகவே இருக்கிறது. பயிரிடும் நிலக்காரருக்கு சாதாரணமாய்க் கடன்காரன் கூடவே இருந்துதீரவேண்டுமென்றும், பயிரிடும் குடியின் காணிபாட்சியினால் சாதாரணமாய் ஏற்படுவது கடன்பட்டிருக்கும் நிலைமையே என்றும் சுருக்கமாய்ச் சொல்லலாம். இந்த சந்தர்ப்பத்தில்தான் கிராம நாணயச் சங்கங்கள் மூலமாகக் கூட்டுத்தொழில் முறையை அனுசரிக்க வேண்டியதாயிருக்கிறது; அந்தப்படி அனுசரிப்பதனால், முன்யோசனை யில்லாமல் செலவழிப்பது நின்றுபோய் சிக்கனமாய்ச் செலவிடும்படியும், யாதொரு பலனுமில்லாமல் அழியும் தன்மையாக கடன் வாங்குவது நின்றுபோய் பிரயோசனம் உண்டாகும் விதமாகவும் முன் யோசனையுடனும் இன்ன காரியத்திற்காக என்று கணக்கிட்டும் கடன்வாங்கி உபயோகிக்கும்படியும் ஏற்படுகிறது. ஏனென்றால், முன் யோசனை யில்லாமலும் அறியாமையினாலும் யாதொரு கடன்காரரிடமிருந்து வாங்கி அவருக்கு பாக்கியாயிருக்கும் கடனுக்கும், உற்பத்தி செய்வதற்காகவும் லாபமடைவதற்காகவும் முன்யோசனையுடனும் விவேகத்துடனும் ஒரு கூட்டுத்தொழில் பாங்கியாரிடமிருந்து வாங்கி அவர்களுக்கு பாக்கியாயிருக்கும் கடனுக்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறது: கடன் வாங்கினபணத்தை இன்னகாரியத்துக்காகவென்று யோசனைபண்ணித் தெரிந்து உபயோகித்தால் அப்படிவாங்கும்கடன் பிரயோசனகரமாயிருக்கும்.

எட்டாவது,—சென்னை மாகாணத்திலுள்ள ரயத்துக்குப் பொதுக் கல்வியாவது பயிற்சியடைந்த புத்திசாலித்தனமாவது மெத்தவும் குறைவு; விவசாய சம்பந்தமானதாகவே யுள்ள கல்விப்பயிற்சி அவனுக்கு முற்றிலுமில்லை; அவன் தன் முன்னோர்களிடமிருந்து தெரிந்துகொண்ட முறைமைப்படிதான் ஏறக்குறைய எப்போதும் பயிர் செய்துவருகிறான்; நான் முன்னே சொன்னபடி செழிப்புக்குறைவான அவனுடைய பெருத்த நில விஸ்தீரணத்தின் விஷயத்தில்தான் இந்தப்படி பயிர் செய்வதனால் குறைவு உண்டாகிறது. மேலும், அவன் மற்றவர்களோடு சேராமல் தனிபாகப் பயிர் செய்து வருகிறான்; ரயத்துகள் ஒவ்வொருவரும் தனக்கு வாலாயமான வழக்கப்படியும் தன்னுடைய ஊரிலிருக்கும் இதரர்களுடன் சேர்ந்து பரஸ்பர சகாயம் பெறாமலும் தன்னுடைய சொந்த தலைகளில் வேலைசெய்யும் தனித்தனிநபர்கள் சேர்ந்த கூட்டத்தாராயிருக்கிறார்களே யொழிய மற்றப்படியில்லை; கிருஷிகன் பிறருடன் சேராமல் தனியே இருப்பதனாலும் அவன் தனியே தன்னுடைய கைப்பற்று நிலத்தில் பயிர் செய்வதனாலுமே எவ்வித பலனும் உண்டாகமாட்டாதென்பது நவீன நிலபரிபாலன சாஸ்திரத்திலும் திரவிய சாஸ்திரத்திலும் வேறே அத்தாட்சியைக்கொண்டு நிரூபிக்க வேண்டியதில்லாமலே உண்மையென்று இப்போது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது; அவர்கள் தனித்தனியாய் இருப்பதனால் தாங்களாகவே ஒரு காரியத்தைச் செய்யவும் முடியாது, அவர்களைக்கொண்டு ஒரு காரியத்தைச் செய்விக்கவும் முடியாது. 1870-ம் வருஷத்துக்கு முன்னே ஜப்பான் தேசத்திலும் இம்மாதிரியாகவே தான்இருந்தது; சாதாரண ஜனங்களுக்குக் கல்விப்பயிற்சி வெகு மட்டாகவே இருந்தது; அவர்களுக்கு எவ்விதமான விசேஷ விவசாயப் பயிற்சியுமில்லை; விவசாய காரியத்திற்காகவோ கடன் வாங்குவதற்காகவோ இப்போதுள்ள சங்கங்களைப்போன்ற சங்கங்கள் ஏற்பட்டுமில்லை; வ்விரண்டு விஷயமாகவும் ஏற்பட்ட பெருத்த அபிவிருத்தியானது சிறிது காலத்திற்கு முன்னேதான் உண்டாயிற்று; இது பலிதமானதாகவுமிருக்கிறது; இந்த அபிவிருத்தியைக் குறித்துத்தான் நான் இப்போது பேசப்போகிறேன்.

சென்னை மாகாணத்திலுள்ளவர்கள் சீக்கிரத்தில் நிவர்த்திக்கவேண்டியவைகளென்று மேலே எடுத்துக்காட்டிய பலவித கஷ்டமான விஷயங்களை ஜப்பான் தேசத்திலுள்ளவர்கள் எவ்விதம் கையாடினார்களென்பதை என்னுடைய பிரசங்கத்தின் பிற்பகுதியில் நான் உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வருவேன்; முதலாவது, ஒரு ஒத்தாசையுமில்லாத கிருஷிகன் எவ்விதமாய இளப்பமான நிலங்களை நல்ல நிலங்களாய் மாற்றி, கால் ஏகரா நிலத்திலிருந்து கிடைக்கும் மாசூலே ஒருவனுடைய போஜனத்துக்குப் போதுமானபடி செய்துகொண்டிருக்கிறானென்னும் விஷயத்தையும், இரண்டாவது, நிலைமைகள் மாறுவதற்கு ஏற்றபடி இருக்கும்பொருட்டு, ஜப்பான் தேசத்திலுள்ளவர்கள் எவ்விதமாய்த் தங்கள் தேசத்திலுள்ள கல்விச்சாலைகள் மூலமாகவும்

சங்கங்கள் மூலமாகவும் பாலியர்களுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் ஒரு பூர்த்தியான கல்விப்பயிற்சி முறையை ஏற்படுத்தி யிருக்கிறார்களென்பதையும் நான் உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வருவேன்; ஆயினும், நான் சிற்சில விஷயங்களைக் குறித்து மாத்திரம் இங்கே சுருக்கமாகப் பேசுவேன்; இன்னும் விவரங்கள் வேண்டுமானால், ("ஜப்பான் தேசத்தில் நடக்கும் விவசாயத்தைப்பற்றிய குறிப்பு" என்னும்) என்னுடைய புத்தகத்தைப் பார்க்கலாம்.

ஆழமாய் உழுது பண்படுத்துவது.—ஜப்பான் தேசத்திலுள்ள தலைகள் அதிக ஆழமாயிருப்பதும், அவைகளின்மண் அமைப்பு எங்கும் ஒரேமாதிரியாய் இருப்பதும் மேற்பரப்பிலிருந்து ஒரு அடி அல்லது இரண்டடி ஆழம் வரையில் செழிப்பாயிருப்பதுமே அவைகளின் ஒரு விசேஷ லக்ஷணமென்று நான் மேலே சொல்லியிருக்கிறேன். ஜப்பானியர் சிறிதும் தாமதிக்காமல் தம்முடைய தலைகளிலுள்ள மண்ணை இடைவிடாமல் மேலுங்கீழுமாகப் புரட்டிக்கொண்டிருப்பதே வழக்கமாயிருக்கிறது; ஒரு தடவை பயிர் செய்யும்போது மேற்பரப்பிலுள்ள மண்ணானது அடுத்த தடவை பயிர்செய்யும்போது கீழுக்கு வந்துவிடுகிறது; இம்மாதிரியே மண் மேலுங் கீழுமாக மாறி மாறி வருகிறது. அவர்கள் பயிருக்கு வரப்பேற்படுத்தி உழவு நடத்தி வருகிறபடியால் இம்மாதிரி செய்யவேண்டியது அவசியமாகிறது; பயிர் வரிசை வரிசையாக, இருக்கும்படி சாகுபடி செய்து, கொஞ்சம் கொஞ்சமாக மண்ணைப் பயிருக்கு வரம்பாக ஏற்படுத்திவருகிறார்கள்; இம்மாதிரி செய்வதனால் உயர்வான வரம்புகள் ஏற்பட்டு, ஒரு வரிசைப் பயிருக்கும் இன்னொரு வரிசைப் பயிருக்கும் மத்தியில் ஆழமான உழவுசால்கள் அல்லது பள்ளங்கள் உண்டாகின்றன; இந்தப் பள்ளங்களில் அடுத்த தடவை பயிர் உண்டாக்கி அந்தப்பயிருக்கும் மேலே கண்ட மாதிரியாகவே வரம்பு ஏற்படுத்துகிறார்கள்; ஆகவே, மண்ணானது இடைவிடாமல் விடாம்விட்டு மாறுவதோடுங் கூட மேலுங் கீழுமாக புரண்டும் வருகிறது; அல்லாமலும், பண்படுத்துவதற்கு ஒரே ஆயுதமாகிய நீண்ட கைப்பிடியுள்ள மண்வெட்டியினால் தலை முழுவதும் அதிகஆழத்துக்கு மண்ணை மேலுங்கீழுமாகப் புரட்டிக்கொண்டு வருகிறார்கள்; நான் அனேகதடவைகளில் என் கைக்கோலை இந்தத் தலைகளில் குத்திப்பார்த்திருக்கிறேன்; ஏறக்குறைய அந்தக்கோல் முழுவதும் பூமிக்குள் இறங்கினதுண்டு. பயிர்கள் முளைத்து வரும்போது, இவ்விதமாய் நேர்த்தியாகவும் எங்கும் ஒரேமாதிரியாய் இருக்கும்படியாகவும் தயார் செய்யப்பட்ட தலையானது இடைவிடாமல் மேற்பரப்பில் கொத்தப்பட்டுவருகிறது; தலையை அடிக்கடி கொத்திக்கொண்டு வருகிறார்கள்; அதனால், பூமியின்மேல் உலர்ந்து நேர்த்தியாயுள்ள பாதிஅழுகின வைக்கோல் பரப்பு ஒன்று உண்டாகிறது; இதனால், அடிமண்ணிலுள்ள ஈரம் உலர்ந்துபோகாமல் அப்படியே இருக்கிறது: சாதாரணமாய் ஒரு பயிருக்கு ஆறு அல்லது ஏழு தடவை கொத்திக்கொண்டு வருகிறார்கள்.

சென்னைமாகாணத்திலும் வரம்பேற்படுத்திப் பள்ளமுண்டாக்கிப் பயிர் செய்வதுதான் நல்லதென்று நான் சொல்லவாவில்லை; ஆனால், நிலத்தை ஆழமாய்உழுது பண்படுத்துவதே போதுமென்பது என்னுடைய அபிப்பிராயம் சென்னைமாகாணத்திலுள்ள நம்முடைய தளைகளில் இந்தமாதிரி செய்வது அத்தியாவசியமாயிருக்கிறது; இந்தமாதிரி செய்வதனால் நம்முடைய பயிர்கள் தக்க காலத்தில் மழைபெய்வதை நம்பியிருப்பது மெத்தவும் குறைவாய் விடுமென்பதுநிச்சயம்; எங்கும் ஒரேமாதிரியான மண்ணுள்ள ஒருஆழமான தளையில் முக்கியமாய்ச் சோளப்பயிரைப்போல சாதாரணமான எந்தப் புஞ்சைப் பயிருக்காகிலும் எவ்வளவு ஈரம் எவ்வளவு காலத்துக்கு இருக்கவேண்டுமோ அவ்வளவுஈரம் அவ்வளவுகாலத்துக்கு நீடித்திருக்கும்; தளையின் மேல்மண்ணை நேர்த்தியாகவும் உலர்ந்திருக்கும்படியாகவும் வைத்து சரியான எருவைச் சேர்க்கும்பட்சத்திலே, மழை குறைவாயிருந்தாலுங்கூட ஈரம் அப்படியே இருக்கும். 1877-ம் வருஷத்தில் ஐந்து சுழிக்குக் குறைவாக மழை பெய்த போது சைதாபேட்டைப் பண்ணையில் விளைந்த பயிரைக்குறித்து நான் மேலே சொல்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட அனாவிருஷ்டி வெகு அபூர்வமாய் நேரிடுகிறது; ஆகவே, நிலத்தைச் சரியாய் உழுது பண்படுத்திப் பயிரிட்டால் அந்தப் பயிர் சாவியாய்ப்போவதும் அபூர்வம். பூமியின் மேல்மண்ணில் பாதி அழுகிப்போன உலர்ந்த வைக்கோல் படியும்படி செய்து நிலத்தை ஆழமாய் உழுது பண்படுத்துவது அவசியமென்பதே காம்பல் துரையின் சாகுபடி முறையாகும்; காம்பல் துரை சொல்லுகிறபடி அடிமணலை மூடிவைப்பது உசிதமாயிருக்கலாம்; ஆனால், மண் செழிப்பாகவும் ஆழமாகவும் இருந்து, விசேஷமாக உழுது பண்படுத்தி எருவும் விசேஷமாகப் போடுவோமானால், நம்முடைய ஊரில் மழைபெய்வதைக் கவனிக்கும்போது மேலே சொன்னபடி அடிமண்ணை மூடிவைப்பது அவசியமாவென்பதை நான் சந்தேகிக்கிறேன்.

சாகுபடி முறையில் இப்படிப்பட்ட பெருத்த மாறுதலைச் செய்வது எப்படி யென்பதையும், அதற்காக அனுசரிக்கவேண்டிய சிறந்த வழிவகைகள் இன்னவையென்பதையும் குறித்து இப்போது யோசிக்கவேண்டியதாயிருக்கிறது; இவை சம்பந்தமான விவரங்களைக்குறித்து இங்கே பேசுவதற்கு அரை நாள் பிடிக்கும்; ஆகவே, இவை விஷயத்தில் அக்கறையுள்ள எவர்களோடாவது அடுத்து சில தினங்களுக்குள் சாவகாசமாய் அவைகளைக்குறித்துப்பேச உத்தேசிக்கிறேன். இந்த விஷயங்களைக்குறித்து நான் சில அபிப்பிராயங்கள் கொண்டிருக்கிறேன்; மேலேசொன்னபடி தர்க்கிக்கும்போது, இவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதற்கான மாதிரிகளையும், பலவருஷகாலம் வேலைசெய்வதற்காக வேண்டிய செலவுகளையும், நாம்சொல்லும் முறைப்படி தளைகளை வெகுநன்றாய்ப் பண்படுத்தி அவைகளில் மிகச்சிறந்த மாசூல் பயிராக்கும் சாகுபடிக்காரர் கிறிஸ்தவராயிருந்தாலுஞ்சரி மற்றப்படி யாராயிருந்தாலுஞ்சரி அவருக்குப் பரிசுகொடுப்பதற்காகப் பிடிக்கும் செலவுகளையும்

செய்வதற்கான வழிவகைகளையும் தீர்மானிப்போமென்று இங்கே எடுத்துச் சொல்ல மாத்திரம் விரும்புகிறேன். நான் பின்னும் சொல்லுவதென்னவென்றால், (1) ரயத்தினுடைய உழைப்பைக்கொண்டே நமக்கு ஆகவேண்டிய சகல காரியங்களையும் பூர்த்திசெய்துகொள்ளலாமென்று நம்புகிறேன்; தற்காலத்தில் ரயத்தானவன் வருஷத்தில் பெரும்பாகம் வேலையில்லாமல் சும்மா இருக்கிறான்; அயர்லாந்து தேசத்துக் கிருஷிகன் இப்போது உழைப்பதைக் காட்டிலும் அதிகமாகவும் விசேஷபுத்திசாலித்தனத்துடனும் உழைப்பானானால், அவனுக்கு இப்போது கிடைக்கும் மாசூலைப்போல் இரண்டுபங்கு கிடைக்கலாமென்று பால்டின் பண்டிதரவர்கள் ஒருகாலத்தில் சொன்னார்; (2) மதப்பிரசாரகர்களாவது இதர நபர்களாவது இம்மாதிரி முதலில் நடத்திக்காட்டுவார்களேயானால், அந்த வேலையைச் செய்வதற்குக் கிராமச் சங்கத்தாரும் கடன்கொடுக்கு பாங்கியாரும் விசேஷ சௌகரியம் ஏற்படுத்தி அதை விருத்திக்குக் கொண்டு வருவார்கள்.

எரு.—உங்களுடைய நிலத்தில் உழுது பண்படுத்துவதே விவசாய சம்பந்தமாய்ச் செய்யவேண்டிய முதல் காரியமென்று பூர்வீகத்தி லிருந்த ரோம் தேசத்தார் சொல்லியிருக்கிறார்கள்; இரண்டாந்தரம் அவசியமாய்ச் செய்யவேண்டிய தென்னவென்றால், அதை மறுபடியும் உழுவதே; மூன்றாம் தரம் அவசியமாய்ச் செய்யவேண்டிய தென்னவென்றால் அதற்கு எருவிடுவதே; அல்லது நிலத்தைக் கொத்திக்கொத்தி அதில் சாணம்போட வேண்டுமென்று சொல்லலாம். ஜப்பானியர்களுக்குள் இது தான் வழக்கமாய் அனுசரிக்கப்பட்டு வரும் முறையாகும்—எரு இடாவிட்டால் மாசூல் கிடையாது; இது இப்படி யிருக்க, நம்முடைய நிலங்களில் கோடிக் கணக்கான ஏகரா பூமிகளில் உண்டாகும் எந்தப் பயிருக்கும் பத்து வருஷத்துக் கொருதரங்கூட எரு போடுகிறதே இல்லை; ஆனால், தளைகளிலுள்ள கற்களுக்கு மத்தியில் வளர்ந்திருக்கும் குறுகின புல் பூண்டு முதலிய தழைகளைக் கால்நடைகள் மேயும் போது அவைகள் தற்செயலாயிடும் சாணந்தான் அந்தத்தளைகளுக்குக் கிடைக்கும் எருவாகும். ஜப்பானிலுள்ள கிருஷிகன் தன்னுடைய நிலத்தைப் பயிருக்கு மூலாதாரமாகப் பாவிப்பதில்லை; அது பெரும்பாலும் அவன் நேர்த்துவைக்கும் எருவை மாசூலாய் மாற்றுவதற்குரிய சாதனமாயிருக்கிறது; இதனால்தான் அவனுடைய தளை எப்போதும் செழிப்பாகவே இருந்துவருகிறது. பாஸ்பேட்டு (Phosphate) களைப்போன்ற தாதுப்பொருள் எருவை இன்னும் ஜப்பானியர்கள் கண்டுபிடிக்கவில்லை; வெகுகாலமாக ஜப்பான் தேசத்துக்கு இறக்குமதி என்பதே கிடையாது இப்போதுதான் அங்கே இறக்குமதி நடந்துவருகிறது (அன்னிய நாடுகளோடு வியாபாரம் செய்வதே கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தது); முன்னே சொன்னபடி அவர்களிடத்திலுள்ள ஆடுமாடுகள் வெகு சொற்பமே. ஆகவே, இயற்கையாய்க் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு பூமியை எவ்வளவு மட்டில் செழிப்பாக்கக்கூடுமோ அவ்வளவு மட்டில் செழிப்பாக்குவதற்கு வேண்டிய சகல பிரயத்தனங்களை

ும் செய்யவேண்டியவர்களாயும், பூமியிலிருந்து என்னென்ன பொருள்கள் கிடைக்கின்றனவோ அவைகளை யெல்லாம் அவர்கள் பூமியிலேயே போட வேண்டியவர்களாயும் இருக்கிறார்கள். அங்கவமைப்புள்ள ஒவ்வொரு வகையான பொருள்களையும் அவர்கள் உபயோகப்படுத்திவருகிறார்கள்; இதனால் உண்டாகிற ஒரு குறித்த பிரயோசன மென்னவென்றால், கிராமங்கள் தேக சௌக்கியத்துக்கு ஏற்றவைகளா யிருப்பதோடுங்கூட, அந்த கிராமங்களிலுள்ள மண்ணும் ஜலமும் கெட்டுப்போகமாலு மிருக்கிறது. மேலும், அவர்களுக்கு மீன் கிடைக்கிற பட்சத்திலே, அதை அவர்கள் தலைக்கு எருவாக உபயோகப்படுத்தி தலையைச் செழிப்பாக்குகிறார்கள்; இம்மாதிரி இந்த மாகாணத்தில் இதுவரையிலும் செய்ததுமில்லை, செய்யவும் தெரியாமலிருந்தது; ஆனால், இந்த எருவை உபயோகிக்கும் முயற்சி இப்பொழுது விருத்தியாய்க்கொண்டு வருகிறது. ஜப்பான் தேசத்தில் பச்சைத் தழையையும் விசேஷமாய் எருவாக உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

பொது ஜனங்களுக்குச் செய்யும் பிரசங்கத்திலே நான் இந்த விஷயத்தைக்குறித்துப் பின்னும் விவரமாய்ச் சொல்ல முடியாது; ஜப்பான் தேசத்திலும் சீனா தேசத்திலுமுள்ள வழக்கத்தைக் குறித்துப் பூர்த்தியாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமானால் நீங்கள் என்னுடைய புத்தகத்தைப் படித்துப்பார்க்கவேண்டும்; சென்னை மாகாணத்தில் எந்தப் பொருளானது பொது ஜனங்களுக்கு அசங்கியத்தை உண்டாக்கக்கூடியதாகவும் அபாயகரமாகவும் இருக்கிறதோ அதுவே ஜப்பான் தேசத்தில் தலையை செழிப்பாக்குவதற்கேற்ற பிரதான எருவாயிருக்கிறதென்று மட்டிலும் நான் சொல்லுவேன்; மேற்படி எருவை உபயோகிப்பதனால் நாம் செய்வது என்னவென்றால், பூமியிலிருந்து கிடைத்த பொருளை அந்த பூமியிலேயே போடுவதுதான். ஆனால், சென்னை மாகாணத்திலே நமக்கு ஏராளமாய் ஆடுமாடுகளிருந்தும், நமக்குக் கிடைக்கும் எரு மாத்திரம் குறைவாயிருக்கிறதென்பது நாடறிந்த சங்கதி. இதற்குக் காரணம் என்ன? வறட்டியாக மாத்திரமே யல்லாமல், தரைகளையும் சுவர்களையும் கழுவுவதற்குங்கூட எவ்வளவு விசேஷமாய்ச் சாணத்தை உபயோகிக்கிறார்களென்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயமே; சாணத்தை வறட்டியாக உபயோகிக்காமல் தடுப்பதற்குரிய வழிவகைகளை "விருக்ஷங்கள்" என்னும் தலைப்பின் கீழ் நான் சொல்லுகிறேன். அதுவுமல்லாமல் வெறும் கற்கள் நிறைந்த தரிசுநிலங்களின்மேல் ஆடுமாடுகள் திரியும்போது அவைகளிடும் சாணமானது அனேகமாய் வீணாய்ப் போய்விடுகிறது. ஜெர்மனிதேசத்தில் செய்வதைப் போலவே ஜப்பான் தேசத்திலும் கால்நடைகளுக்கு வேலையில்லாதபோது அவைகளை யெல்லாம் பட்டியிலே வைத்துத் தீனிபோடுகிறார்கள்; அவைகளிடும் சாணம் முதலியவற்றையெல்லாம் ஜாக்கிரதையாய்ச் சேர்த்து புத்திசாலித்தனமாய்க் காப்பாற்றி வருகிறார்கள். ஜப்பான் தேசத்திலுள்ள முப்பது லட்சம் கால்நடைகளிலிருந்து கிடைக்கும் சாண எருவின் மதிப்பானது $3\frac{1}{2}$ கோடி

ரூபாய் ஆகிறதென்று ஸர்க்கார் துவாரா தெரியவருகிறது; அதாவது, கால்நடை ஒன்றுக்கு 11 ரூபாய்க்கு மேற்பட்ட எரு கிடைப்பதாய்த் தெரியவருகிறது; அங்கே, கால்நடைகளுக்கு நன்றாய்த் தீனிபோட்டு அவைகளை நன்றாய்க் கவனித்துவருவதே இவ்வளவு விசேஷ எரு கிடைப்பதற்குக் காரணமாகும்; இம்மாதிரி பார்த்தால், சென்னை மாகாணத்திலிருக்கிற நாலு கோடி மாடுகளாலும் செம்மறியாடுகளாலும் வெள்ளாடுகளாலும் கிடைக்கும் எருவின் மதிப்பானது அதிவிசேஷமாயிருக்க வேண்டும். சென்னை மாகாணத்திலுங்கூட மண்வெட்டியினால் தலையைக்கொத்தி இயற்கையாய்க் கிடைக்கும் இதர பொருள்களை எருவாக உபயோகிப்பதனால் இவ்வளவு மாசூல் உண்டாகக்கூடு மென்பதை அடியிற்கண்ட திருஷ்டாந்தத்தினால் தெரிந்துகொள்ளலாம்; ஒரு பெருத்த பஞ்சம் உண்டான காலத்திலே அரை ஏகரா நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருந்த ஒரு பறையனுக்கு மாத்திரம் சோளம் நன்றாய்ப் பயிராகி விசேஷ மாசூல் கிடைத்தது; இது இப்படியிருக்க, அவனைச் சுற்றிலுமிருந்த ரயத்துகளின் பயிரெல்லாம் சாவியாய்ப் போய்விட்டது; மண்வெட்டியைக் கொண்டு அவன் தன் தலையைக் கொத்தி சாகுபடி செய்து சகல வகையான எருவையும் உபயோகித்தது ஒன்றே இதற்குக் காரணமாகும். சாகுபடி செய்கிறவர்கள் எல்லோரும் இம்மாதிரியே செய்திருந்த பட்சத்திலும், சென்னை மாகாணத்திலுள்ள சில கிராமங்களை நான் சுற்றிப் பார்த்தபோது ஏதோ சிற்சில இடங்களில் நான் கண்டபடி உபயோகப்படாத சகல விதமான கசுமாலங்களையும் போட்டுவைத்து, அவை அழுகினபிறகு காலமுறையாக அவைகளை அப்புறப்படுத்தி வருவதற்குக் கிரமமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் குழிகள் சகல கிராமங்களிலும் கொல்லைகளிலும் இருந்திருக்கிற பட்சத்திலும், எரு சம்பந்தமாகவும் சுகாதார சம்பந்தமாகவும் ஏற்பட்ட கஷ்டங்களை நிவர்த்தித்துக்கொள்ளும் பிரயத்தனத்தில் விசேஷ விருத்தி உண்டாகும்.

விருட்சங்கள்.—இவ்விஷயத்தைக் குறித்துப் பேசும்பொழுது ஓர் அளவுக்குட்பட்டுப் பேசுவது கஷ்டம்; தொழில் சம்பந்தமாய் என் கொள்கையிலுள்ள ஒருவிஷய மென்னவென்றால், சென்னை மாகாணத்தின் விவசாயம் விருத்தியடைவதற்கு முக்கிய ஆதாரமாக "விருட்சங்களில் எனக்கு நம்பிக்கையுண்டு" என்பதாம். (இங்கே விருட்சங்கள் என்னும் வார்த்தையை விரிந்த அர்த்தத்தில் உபயோகப்படுத்துகிறேன்.) இதனால் ஏற்படுவதென்ன வென்பதைக்குறித்து யோசித்துப்பாருங்கள்—பயிரானது ஒருதடவை நிலைத்துப் போய்விட்டால் அது வெகுசாய்ப் பருவநிலையின் வேறுபாடுகளை எதிர்பாராமலே விருத்தியடைகிறது; மொத்தத்தில் விருட்சங்கள் மழைபெய்வதை அதிகப்படுத்தி சீதோஷ்ண ஸ்திதியைச் சீர்ப்படுத்துகிறது; அவைகள் அடிமண்ணிலிருந்து உணவை மேலுக்குக் கொண்டுவந்து, நிலத்தின் மேற்பாகத்தை இவ்விதத்திலும் வேறேவிதங்களிலும் வளப்பமுள்ளதாகச் செய்கின்றன. அவைகளிலிருந்து வீடுகட்டுவதற்கு வேண்டிய மரமும் வீட்டுக்காரியங்க

ளுக்கு வேண்டிய விறகும் கிடைப்பதனால், சாணம் முதலியவைகளை பூமிக்கு எருவாகவே உபயோகிப்பதற்கு இடமுண்டாகிறது; அவைகளிலிருந்து குடும்பத்துக்கு வேண்டிய ஆரோக்கியமான கனிகளும் கால்நடைகளுக்குத் தீனியும் கிடைக்கின்றன; அவைகளிலிருந்து ஏராளமாய்க் கிடைக்கும் தழைகள் பச்சை எருவாய்ப் பிரயோஜனப்படுகின்றன; பகலில் வெயில் காயும்போது அவைகள் கால்நடைகளுக்கு நிழல் தருகின்றன; புழைக்கடைகளில் அவைகளில் வீசும் துர்நாற்றத்தை மாற்றி இனிய புஷ்பங்களையும், பழங்களையும் தருகின்றன; மேலும், நல்ல வாசனைவீசும் பல விருக்ஷஜாதிகள் மின்சாரம் நிறைந்த ஆக்விஜன் என்னும் பிராணவாயுவை உண்டாக்கி உண்மையான ஆரோக்கியமளிக்கின்றன; அவைகளிலிருந்துண்டாகும் பலிதங்கள் பண்ணைமுழுவதற்கும் கட்டவேண்டிய கிஸ்திப்பணம் கட்டவும், வீட்டுக்காரிக்கு வேண்டிய நல்ல வஸ்திரங்கள் வாங்கவும் உதவுகின்றன; அவைகள் வயல்களுக்கு எல்லைக்குறிகளாயமைந்து, எல்லைத்தகரார் உண்டாகாதபடி தடுக்கின்றன; க்ஷாமகாலத்திலும் பஞ்சகாலத்திலும், வெகுசாய் அவைகள் அதிவிசேஷமான மாசூல்கள் தருகின்றன; அவைகளுக்கு நோய்உண்டாவது அரிது; அவைகளால் யாதொரு கஷ்டமும் கிடையாது; ஒருவேளை கஷ்டமுண்டானாலும் வெகு சொற்பமாகவேயிருக்கும்; பணமரத்தைப்பற்றிய பழமொழியில் சொல்லியிருப்பதுபோல், அவைகள் தழைத்திருந்தாலுஞ்சரி பட்டுப்போனாலுஞ்சரி, அவைகள் அனேகமாய்ப் பிரயோஜனகரமாயும் நெடுங்காலம் தாங்கக்கூடியவைகளாயும் இருக்கின்றன.

இப்போது நம் எதிரிலிருக்கும் பெருத்த வரண்ட நிலங்களை நோக்குங்கள்; அவை விருக்ஷங்களின்றி வெட்டவெளிகளாயிருப்பதைப்பற்றி யோசித்துப்பாருங்கள்; ஒரேசரியாய் நூற்றுக்கணக்கான ஏகரா பூமிகளில் ஒரு மரமாவது செடியாவது கிடையாது. சிறிது காலத்துக்கு முன் வரையில் இவைகளும் இவைகளைப்போன்ற மற்ற சமநிலங்களும் காடடர்ந்த பிரதேசங்களாயிருந்தன; மதுரை, கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களின் எல்லைவரையில் காடடர்ந்திருந்ததைப் பார்த்துள்ள கிழவர்களை நான் கண்டிருக்கிறேன். கோயம்புத்தூர் ஜில்லாவிலே இப்போது பயிரிடப்பட்டு வெட்டவெளியான சமபூமிகளாயிருக்கும் இடங்கள் சொற்பகாலத்துக்குமுன்வரையில் ரஸ்தாக்களில்லாமலும் முள்நிறைந்தும் (திருடர் பயம் அதிகரித்தும்)இருந்த அரண்யமாயிருந்தபடியால், அந்தப்பிரதேசத்திலே ப்ரெஞ்ச் பாதிரிமார் பகலில்தான் பிரயாணஞ் செய்யக்கூடியவர்களாயிருந்தார்கள். சிறுசெடிகள் வளர்ந்திருக்கும் காடுகள் இப்போது நம்க்குத் தேவையில்லை; ஆனால் பழந்துக்காகவும் வெட்டுமரத்துக்காகவும் விறகுக்காகவும் எருவுக்காகவும் ஒழுங்காய்வைத்துப் பயிர் செய்யப்பட்ட விருக்ஷங்களும் செடிகளும் நமக்கு வேண்டியே யிருக்கின்றன; சாதாரணமான பயிர் விஷயத்தில் விரோதமாகத்தலையிடநமக்கு இஷ்டமில்லையாயினும், காலியாயும் தரிசாயுமுள்ள பிரதேசங்கள், அல்லது இரண்டு மூன்று வருஷத்துக் கொருமுறை கரம்பாய்ப்

போய்விடும் வயல்களை உபயோகிக்க வேண்டுமென்றே சொல்லுகிறோம்; தானியப்பயிருடன் மரப்பயிரையும் சேர்த்துச் செய்யவேண்டுமென்றே நாம் சொல்லுகிறோம்.

இதுவிஷயமாய் ஜப்பான் தேசத்திலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ளக்கூடும் என்று பார்ப்போம்; அந்தத் தேசத்திலே அவரவர்கள் சொந்தத்திலும் கிராமங்களில் பொதுவாகவும் நட்டிருக்கும் மரங்களைப்பற்றியே பேசுவேனேயொழிய, இராஜாங்கத்தார் வைத்திருக்கும் காடுகளைப்பற்றிப் பேசப்போகிறதில்லை. புஞ்சைநிலம் வைத்திருக்கும் ஒவ்வொரு கிருஷிகனுக்கும் சகஜமாகவே ஒருதுண்டு காட்டுப்பூமி இருக்கிறது. அது அவனுக்குள்ள சாகுபடி செய்யத்தக்க $2\frac{1}{2}$ ஏகரா பூமியில் அடங்கியிருக்க வேண்டுமென்பது அவசியமில்லையாயினும், அவனுடைய கைப்பற்றைச்சேர்ந்த பாகமேயாகும்; அது இல்லாமல் அவன் காலட்சேபம் செய்யக்கனவிலும் நினையான். இந்தத்துண்டு காட்டுப்பூமிகள் சாகுபடி செய்யத்தக்க துண்டு நிலங்களுடன் கலந்திருப்பது வழக்கம்; மேலும் காட்டு நிலங்களை சாகுபடி நிலங்களாகவும் சாகுபடி நிலங்களைக் காட்டு நிலங்களாகவும் அடிக்கடி மாற்றுவதுண்டு; அதாவது, ஒரு கிருஷிகன் பயிர்செய்யத்தக்க நிலத்தின் மண்ணைச் சீர்ப்படுத்துவதற்காவது வேறே லாபத்திற்காவது அந்த நிலத்திலே ஓர்வகை மாறுபயிராக மரசாகுபடி அடிக்கடி செய்வதுண்டு. இப்படி சொந்தத்திலுள்ள காட்டுப்பூமிகளிலிருந்தே அவன் தனக்குவேண்டிய பச்சை எருக்களுக்காக தழை முதலியவைகளைக் கொண்டுவருகிறான்; தனக்கும், தேசப் பொதுஜனங்களுக்கும் வேண்டியதாயும், தீக்குச்சி செய்வது கடுதாசி செய்வதற்கான மரவழுவல் முதலிய அனேக மரத்தொழில்களுக்கு வேண்டியதாயுமிருக்கிற வெட்டுமரங்களையும் விறகையும் மேற்படி காட்டுப்பூமியிலிருந்தே சம்பாதித்துக்கொள்ளுகிறான். இனி பலிதங்களைக் கவனிப்போம். சாமானிய வருஷமாயிருந்த 1905-ம்வருஷத்திலே கிராமக்குடிகளுக்குச் சொந்தமான இந்த நிலங்களிலிருந்தும் கிராமச்சமுதாய நிலங்களிலிருந்தும் கிருஷிகர்கள் 2,000 லக்ஷம் கனஅடியுள்ள வெட்டுமரமும் 200 லக்ஷம் பாரமுள்ள (400 லக்ஷம் வண்டிபளுவுள்ள) விறகும் ஏராளமாய் வெட்டினார்கள்; இவைகளின் மொத்த மதிப்பு 800 லக்ஷம் ரூபாய்க்கு மேலாயிற்று; இவைகளல்லாமல் 23 லக்ஷம் ரூபா மதிப்புள்ள மூங்கில்களும் பச்சை எருவாக உபயோகிக்கப்பட்ட சகல தழைகளும் மரக்கிளைகளுங்கூட வெட்டினார்கள்; இதை யெல்லாம் குடிகளுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வெட்டினார்களே யொழிய இராஜாங்கத்தாரைச் சேர்ந்த காடுகளிலிருந்து வெட்டவில்லை. இப்படி செய்தது அளவுக்குமிஞ்சி வெட்டினதாக நீங்கள் நினைப்பீர்கள். அப்படியானால், இந்த நிலங்களிலே மறு தடவை செடி நட்டனவற்றுக்கு இதோ காட்டுகிறேன்; சமீபத்தில் இரண்டுவருஷ காலத்திலே 80 கோடி நாற்றுகளும் இளஞ்செடிகளும் நாற்றங்கால்களிலிருந்தெடுத்து 10 லக்ஷத்துக்கதிகமான ஏகாபூமிகளில் நடப்பட்டன; இவைகளில் அனேக

லக்ஷக்கணக்கான செடிகள் கர்ப்பூரம், கஷ்கொட்டை முதலிய உயர்ந்த மதிப்புள்ள செடிகளாம். அல்லாமலும், புஞ்சை நிலங்களிலும் அவைகளைச்சுற்றிலும் விசேஷ சங்கியையுள்ள தேயிலைச் செடிகளும், முசுக்கட்டை முதலிய செடிகளும் நடப்பட்டிருக்கின்றன; இவைகளெல்லாம் பெருத்த அளவாக மதிப்பேறிய பலிதங்கள் கொடுக்கின்றன; நிலங்களுக்கு எல்லை யேற்படுத்துவதற்கு இவைகள் உதவுகிறதோடு, இவைகளினால் லாபமும் கிடைக்கிறது; இது போலவே இடலியிலும் இதர தேசங்களிலும் வேலிகளுக்குப் பதிலாக மரப்பந்தல்களின் மேல் படரும் பழவிருக்ஷங்களோ, கம்பிகளின் மேலும் பலகணித் தட்டிகளின் மேலும் படரவிட்ட திராக்ஷைக் கொடிகளோ வரிசையாய் வைத்திருப்பதைக் காண்பீர்கள்; இவைகள் வயல்களைப் பிரித்துக் காட்டுகின்றன.

நாம் இப்படி செய்யமுடியுமா? இந்தக் காரியம் முயற்சி செய்து பார்ப்பதற்குரியதே. நிலத்தீர்வை அல்லது வாடகைத் தொகையை எடுப்பதில் கஷ்டங்கள் இருப்பதாகச் சொல்லக் கேட்கிறோம். ஆயினும், மூன்று ஏகர விஸ்தீர்ணமுள்ள ஒரு பண்ணைக்குச் செலுத்தவேண்டிய தீர்வை முழுவதையும் ஒரே புளிய மரத்தின் பலிதம் கொடுத்துவிடுமென்று நமக்குத் தெரியும். காங்கயத்தில் ஒரு கவுண்டஸ்திரீ தன் புழைக்கடையில் மிகவும் நல்ல ஜாதியான 'பொம்மெலோ' என்னும் பழச்செடியின் விதைகள் ஆறு விதைத்தது எனக்கு ஞாபகமிருக்கிறது; இவைகளில் இரண்டு மூன்று நேர்த்தியான மரங்களாக வளர்ந்து, அவைகளின் திவ்வியமான பழங்கள் ரூபாய்க்கு 8 வீதம் விற்றன. இதனால் அவளது புருஷனுடைய பண்ணையின் தீர்வை முழுவதும் சுலபமாய்க் கிடைத்தது "மூலைக்கரைகூட விளைந்தால் சேலைக்கு உதவும்" என்னும் பழமொழியில் சொல்லிய லாபத்தைவிட இது அதிகமானதே. எனக்குத் தெரிந்தவரையில் அநேக புளியமரங்கள் இவ்விதமாகவே பலன் கொடுக்கத்தக்கவைகளா யிருக்கின்றன; இது இப்படியிருக்க, கிருஷ்ணகிரியிலே வெறும் புழைக்கடைகளில் பலகணித்தட்டிகளில் படர்ந்திருக்கும் திராட்சைக் கொடிகளினால் அவற்றின் சொந்தக்காரர்களுக்கு 30 ரூபா மதிப்புள்ள பலிதம் கிடைப்பதாகத் தெரியவருகிறது. சாமானியமாயிருந்தபோதிலும் பலங்கொடுக்கக்கூடிய இந்த சாதனங்களை விஸ்தாரமாய்ப் பெருகச்செய்து அதன் மூலமாய் ஜனங்களின் ஆகாரத்திரவியங்களையும் செல்வத்தையும், சுகாதார நிலைமையையும், சௌக்கியத்தையும் உயர்த்த முடியாதா?

சென்னை மாகாணத்திலுள்ள ஒரு ரயத்துக்கு இப்போதிருக்கும் நில விஸ்தீர்ணத்திலிருந்து போதுமான விளைச்சல் அவனுக்குக் கிடைக்காததனால், அவன் மரங்கள் நடுவதற்காக எவ்வளவு நிலமும் விடமுடியாதென்று எண்ணப்படலாம். நான் சொல்வது என்னவென்றால், அவனுக்குத் தற்காலத்திலுள்ள நில விஸ்தீர்ணம் அளவுக்குமிஞ்சி மேற்பரப்பிலேயும் தூரம் தூரமாகவும் பயிர் செய்யப்படுகிறதென்னும் காரணத்தினாலேயே போது

மானபடி விளைச்சலுண்டாவதில்லை; உழுவது முதலான வேலைகளையும் எரு போடுவதையும் இப்போதுள்ளதை விடச் சிறிய விஸ்தீர்ணத்தில் நன்றாய்க் கவனஞ் செலுத்திச் செய்யும்பட்சத்திலே, தக்க காலத்தில் சரியாய் மழை பெய்யாமற் போனாலும் அதை அதிகமாய் எதிர்பாராமலே முன்னிலும் ஜாஸ்தியாகவே மாசூல் விளையும்; ஜப்பான் தேசத்தில் இப்படிதான் இருக்கிறது; இப்படியிருக்கும் பட்சத்தில் விருக்ஷங்கள் பயிராவதற்கு இடம் மிகுத்துவதும் சாத்தியமாகும்; இந்த விருக்ஷங்களோ விசேஷ பலிதம் தரும் பயிராயும், தானிய வகைகள் பயிரிடப்படுகிற பூமியைச் சீர்ப்படுத்துவதற்கு அத்தியாவசியமானவைகளாயும் இருக்கின்றன. மேலும், விருக்ஷங்கள் வைக்கும்பட்சத்தில் தரிசாகவேயுள்ள நிலங்கள் விசேஷமாய் எடுபட்டுப்போய்விடுமென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்; நாட்டிலுள்ள புஞ்சை நிலத்திலெல்லாம் சுமார் ஐந்தில் ஒரு பங்கும், பீடான நிலங்களில் அதமம் மூன்றில் ஒரு பங்கும் பிரதிவருஷத்திலும் பண்படுத்தாத தரிசாகவே கிடக்கிறது; ஆகவே, விருக்ஷங்களுக்கும் எருவாகத்தக்க சிறு செடிகளுக்கும் வேண்டிய இடம் இருப்பதுபோக மிகுதியும் நிற்கும். விருக்ஷங்களைப் பயிர்செய்வதாயிருந்தால், கவர்ன்மென்டாரும் பத்து வருஷத்துக்கு எவ்விதத் தீர்வையு மில்லாமல் தரிசான விஸ்தீர்ணங்களைக் கொடுப்பார்கள்; அதோடு, பச்சை யெருவுக்காகச் சிறு செடிகள் நடுவதற்கு அனுகூலமான விதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. கடைசியாக, தரிசாயுள்ளமூலைகள், துர்க்கந்தம் வீசும் புழைக்கடைகள் முதலான இடங்களிலே பழ விருக்ஷங்கள் அல்லது சிறுசெடிகளை நாம் முதலில் நடத்தொடங்கலாம் என்பதைக் கவனத்தில் வைக்கவேண்டும். தலைமுறை தலைமுறையாய் நிழலில்லாமற்கிடந்த ஒரு ரஸ்தாவில் நானே தென்னங்கன்று நட்டிருக்கிறேன். அந்த ரஸ்தாவானது நெல்வயல்கள் மூலமாய் நெடுகப்போட்டிருந்த போதிலும், ரயத்துகள் இம்மாதிரி எண்ணம் எனக்கு உண்டானதற்கே என்னைக் கேலி செய்தார்கள்; இந்த மாதிரி முதலில் அரைமயில்தூரம் நான் நட்டபிறகு, அந்த ரயத்துகள் என்னிடம் வந்து இந்த மரங்களினால் உண்டாகும் லாபத்தைத் தங்களை எடுத்துக் கொள்ளும்படி விடும்பட்சத்தில் அந்த வேலையைத் தொடர்ந்துசெய்யத் தங்களுக்கு அனுமதி கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இப்போது அந்த ஏழு மயில் தூரமுள்ள மரம்வைத்த ரஸ்தாவானது வெகு ஜனங்களுக்கு உபயோகமாயுள்ள திவ்வியமான உணவு கொடுக்கும் மாசூலை விசேஷமாய்த் தருவதுடன், இருபது மயில் நீளமுள்ள ரஸ்தாவைச் சீராய் வைத்திருப்பதற்கு வேண்டிய செலவுக்கும் கட்டிவருகிறது; இன்னும் சில இடங்களிலே ரஸ்தா ஓரங்களில் புளியமரங்கள் இருக்கின்றன; அவைகளின் கீழுள்ள ரஸ்தாவைச் சீராய்வைத்திருப்பதற்கு வேண்டிய பொருள் அவைகளிலிருந்து சுலபமாய்க் கிடைக்கிறது.

இது விஷயமாய் அனேக யோசனைகளை என் சிறு புத்தகத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்; அவைகளிலே சுலபமாய் அனுசரிக்கக் கூடியதும்

நிச்சயமாய்ப் பலனளிக்கத் தக்கதுமான ஒரு யோசனை நீங்கள் கவனிக்கத் தக்கது; அதை நானே செய்து பார்த்திருப்பதால் எனக்குத் தெரியும். அது என்னவென்றால், புழைக்கடைகளிலாவது சௌகரியமான வேறே இடங்களிலாவது சில்லறை நாற்றங்கால்கள் ஏற்படுத்துவதே அந்த யோசனையாகும்; இந்த ஸ்தானங்களிலிருந்து நாற்றுகளை வேண்டிய இடங்களுக்கு எடுத்துக் கொண்டுபோய் நட்டுக்கொள்ளலாம். நல்ல எருவிட்ட ஒரு சிறிய நாற்றங்கால் ஏற்படுத்தி, அதில் 1000 புளிய விதைகளை நடுவதாக வைத்துக்கொள்ளுங்கள்; இவ்விடத்தில் ராணித் தோட்டத்திலே நீங்கள் காணும் நடவுக் கூடைகளைப்போல் 1000 கூடைகளை வைத்திருந்து, நாற்றுகள் இரண்டு மூன்று அங்குல உயரமாயிருக்கும்போது, அந்தக் கூடைகள் நிறைய நல்ல வளமான மண்ணைப்போட்டு, ஒவ்வொன்றிலும் ஒரு நாற்றை நடுங்கள்; அவைகளை முதல் மழை பெய்யும் வரையில் நிழலில் வைத்திருந்தால், அப்போது அவைகள் நீண்ட மூலவேருடன்கூடிய பலத்த இளங்கன்றுகளாயிருக்கும்; பிறகு இவைகளை சரியானவர்களாய் ஆராய்ந்தெடுத்து அவர்களுக்கு விநியோகிக்க வேண்டும்; அப்படி விநியோகிக்கும்போது, அவர்களில் ஒவ்வொருவரும் பிரதி விருக்ஷத்துக்கும் முன்னதாகவே சரியானபடி ஒரு குழி தயார் செய்திருக்கிறாரென்று ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும்; முதலில் கொஞ்சம் தண்ணீர் வார்த்துவரும்பட்சத்தில், சொந்தக்காரன் தனக்கு ஒரு நேர்த்தியான இளமரம் உண்டாயிருக்கிறதென்றும் அது இனி தனக்குத் தானே வளர்ந்து விருத்தியாகுமென்றும் தெரிந்துகொள்வான். ஒரு ரயத்து தானாய்க்கஷ்டப்பட்டு ஒரு நாற்றைப் புதிதாய் உண்டாக்கக்காவிட்டாலும், அது அவன் கைக்குக் கிடைத்துவிட்டால், அதை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்வானென்று எனக்குத் தெரியும். "குழந்தைகளை வளர்ப்பது போல் நாற்றுகளையும் வளர்க்கவேண்டும்" என்று ஒரு பழமொழியுண்டு; சுலபமும் சரசமுமான இந்த உபாயத்தினால் ஆயிரக் கணக்கான பழ விருக்ஷங்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன வென்பதை நான் அறிவேன். விருக்ஷங்களைப்பற்றி வெறுமனே போதிப்பதில் ஒரு பிரயோஜனமுமில்லை; நான் சொன்னதையெல்லாம் ஒரு ரயத்து ஒப்புக்கொண்டு அதை மறுக்க வகையில்லாமல்—"ஐயா, நான் புழைக்கடையில் ஒரு புளியமரம் வைத்துப் பயிராக்கினால், என்றைக்காவது திருடர்கள் அதன் கிளைகளின் மேலேறி என் புழைக்கடையில் குதிக்கிற பட்சத்திலே, அப்போது நான் என்ன செய்வேன்?" என்று ஆட்சேபித்தான்; சாதாரணமாய் இதேமாதிரி ஆதாரத்தைக்கொண்டு அனேக ஆட்சேபனைகள் செய்யப் பலர் கேட்டிருக்கலாம். நீங்கள் செய்ய வேண்டிய தென்னவென்றால், விஷயத்தை நன்றாய் விளக்கி அதனால் பிரதியக்ஷமாய் உண்டாகும் பலனையும் காட்டவேண்டும். நீங்கள் சொல்வதைக் காரியத்தில் செய்து வழிகாட்டினால், ரயத்துகளும் அப்படியே செய்வார்கள். இதையும் இன்னும் அனேக உபாயங்களையும் அனுசரிப்பது நமக்குள் கிராம சங்கங்கள் ஏற்படுமாகில் சுலபமாயிருக்கும்; அப்படிப்பட்ட சங்கங்களைப் பற்றி நான் சிறிது நேரத்துக்கெல்லாம் பேசப்போகிறேன்; ஆனால் ஜப்பான்

தேசத்தில் சிறந்த பழவிருக்ஷம் வைத்துப் பயிராக்குகிறவர்களுக்காவது சிறந்த விதமாய்ப் புழைக்கடைகளைப் பயிர் செய்கிறவர்களுக்காவது சிறு வெகுமதிகள் கொடுப்பது வழக்கமாயிருக்கிறது; விருக்ஷங்கள் வைத்துப்பயிராக்குவதற்கு மாத்திரமல்லாமல், பயிர்சம்பந்தமான மற்றெல்லா விஷயங்களுக்கும் இம்மாதிரி வெகுமதி கொடுக்கப்படுகிறது; இந்தவழக்கத்தையும் நீங்கள் அனுசரிப்பது நல்லது. அன்றியும் ஜப்பான்தேசத்திலே இந்த விஷயத்திலும் கோழி வளர்ப்பது முதலிய இதர விஷயங்களிலும் ப்ரைமரி அல்லது கிராம பாடசாலைகளை விசேஷமாய் உபயோகித்தும் வருகிறார்கள். நாற்றங்கால்களைப் பள்ளிக்கூடத்திலேயே ஏற்படுத்தி, அதில் பிள்ளைகளுக்கு விதை விதைக்கவும் களைபிடுங்கவும் தண்ணீர்பாய்ச்சவும் நாற்றுகளை எடுத்து நடவும் கற்றுக் கொடுக்கலாம்; குழந்தைகளுக்கு சேற்றிலும் தண்ணீரிலும் விளையாடுவது பிரியமாகையால், இந்த இயற்கைபறிவை உபயோகமும் விநோதகரமுமான வழியில் சுலபமாய் உபயோகிக்கக்கூடும்; அதிலும் முக்கியமாய் சிறு வெகுமதிகள் கொடுக்கும் பட்சத்திலே, இப்படி சுலபமாய்ச் செய்யக்கூடும். கிராமங்களில் வெகுமதி கொடுக்கும்படி ஏற்பாடு செய்தால் இது விஷயத்தில் அதிக சிரத்தை உண்டாகுமென்பது எனக்குள்ள நம்பிக்கை; இதைப்பற்றிச் சிறிது நேரத்துக்கெல்லாம் விசேஷமாய்ச் சொல்லுகிறேன்.

நிலத்தைப் பண்படுத்துவதைக்குறித்து இதுவரையில் பேசினேன்; இப்போது மனிதனைப் பயிற்றுவிப்பதைப் பற்றிப் பேசப்போகிறேன். மனிதனுடைய கைப்பற்று நிலத்திலுள்ள எந்த பாகமும் அவனுடைய புத்தியைவிட விவசாய விஷயத்தில் நல்ல பலிதம் கொடுப்பதில்லை யென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். சிறுபிள்ளை வளர்ந்து பெரியவனாகிறபடியால், சிறுபிள்ளையைப்பற்றி முதலில்யோசிப்போம். ஜப்பானிய விவசாயக்கல்வியைப்பற்றிமுழு விவரமும் தெரியவேண்டுமானால், என்னுடைய சிறிய புத்தகத்தின் 77 முதல் 91 வரையிலுள்ள பக்கங்களைப் படிக்கவேண்டும்; இங்கே விஷயங்களைப் பொதுவாய்ச்சொல்வதே போதும். 1904-ம் வருஷத்தில் 27,138 ப்ரைமரி பாடசாலைகள் இருந்தன; அதில் 50 லக்ஷம் வித்திபார்த்திகளுக்கு மேற்பட்டும், (20,0,00பேர்களுக்குப்பயிற்சிசெய்விக்கும் நார்மல்ஸ்கூல்கள்என்னும்போதனா முறைப் பாடசாலைகளில் நாலு வருஷகாலம் பயிற்சிபெற்ற) 108,000 உபாத்தியாயர்களும் இருந்தார்கள். இப்போது பத்து வயதுக்கு மேற்றபட்ட பிள்ளைகள் படிக்கும் சகல உயர்தர ப்ரைமரி பாடசாலைகளிலும், கிரமமாய் போதிக்கப்படும் விஷயங்களிலே பிரகிருதி சாஸ்திரம் ஓர் அம்சமாயிருக்கிறது. செடிகள், ஜந்துக்கள் முதலியவைகளைப்பற்றிய சுலபமான பாடங்களை விவசாயம், ஜலவிருத்தி, அங்கங்கேயுள்ள கைத்தொழில்கள் முதலியவைகளுக்குச் சம்பந்தப்பட்டிருக்கும்படி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பாடசாலைகளிலே விவசாயத்தைத் தொழில் வித்தையாக ஏற்படுத்தி அதையும் மற்றப் பாடங்களுடன்கூடக் கற்பிக்கலாம்; இம்மாதிரியாகவே அவ்விஷயம்

கிரமமாய்ப் படிக்கவேண்டிய பாடங்களுடன் சேர்த்து 1,533 பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டது. இந்த வகுப்புகளுக்குப் பாடஞ்சொல்லும் உபாத்தியாயர்கள் இந்தக் காரியத்துக்காகவென்றே பயிற்சி செய்யப்பெற்றவர்கள்; மேலும், "செடிகளுக்கும் ஜந்துக்களுக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தத்தையும், அவ்விரண்டு வர்க்கங்களுக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தையும் குறித்த பொதுவான கோட்பாடுகள்" போதனாமுறைப் பாடசாலைகளிலே சகல உபாத்தியாயர்களுக்கும் கற்பிக்கப் படுகின்றன என்பதை நான் முக்கியமாய் எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. எவர்களுக்கு விவசாய விஷயம் விசேஷவகையாய்க் கற்பிக்கப்படுகிறதோ அந்த உபாத்தியாயர்களுக்கு விவசாயம், மரப்பயிர் முதலியவைகளைப்பற்றிய கோட்பாடுகள் அனுஷ்டான முறைகள் ஆகிய இவ்விரண்டிலும் பயிற்சி பூர்த்தியாய்ச் செய்விக்கப்படுகிறது; இதுவிஷயமாய் அவர்கள் அனுபோகத்தை யொட்டி மெத்த வேலை செய்கிறார்கள்; அவர்கள் பயிற்சி அடையும் நாலுவருஷ காலத்தில் ஒவ்வொரு வாரத்திலும் அநேக மணிநேரம்வரையில் பாடம் சொல்லப்படுகிறது. அல்லாமலும், எலிமென்டரி பாடசாலை உபாத்தியாயர்களில் பிரதி மூவருக்கும் இரண்டுபேர் விவசாய வகுப்பாரிலிருந்தே நேராய் எடுக்கப்படுகிறார்கள். ஆகையால், அவர்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு நன்றாய்க் கற்பிக்கும் சக்தியுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

இவைகளல்லாமல், ஸப்ளிமென்டரி (சாதாரண பாடசாலைகளில் கற்பிக்கப்படும் விஷயங்களுக் கதிகமாய்) அல்லது கன்டினுயேஷன் (தொடர்ச்சியாய்) கல்வி கற்பிக்கப்படும் கல்விச்சாலைகள் அல்லது வகுப்புகளும் இருக்கின்றன; இவைகள் ஜீவனோபாய வழிகளை அனுசரிப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட பிள்ளைகளுக்காகவென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.(மழைகாலத்தில்மாத்திரம் நடக்கும் பாடசாலைகள் இராக்காலத்தில் மாத்திரம் நடக்கும் பாடசாலைகள் முதலிய பாடசாலைகளைப்போல இவை சாதாரணமாய் சிற்சில பருவ காலங்களில் மாத்திரம் நடைபெறும் பாடசாலை களாயிருக்கின்றன) இவைகளில் பாடஞ் சொல்வதற்கான கால அளவுகளும், மணி நேரங்களும் பாட விஷயங்களும் அந்தந்த இடத்துக்கும் தொழிலுக்கும் பொருத்தமாயிருக்கும்படி ஏற்படுத்தப்படுகின்றன. 1905-ம் வருஷத்தில் விவசாயத்துக்காக மாத்திரம் அப்படிப்பட்ட பாடசாலைகள் 1,436 இருந்தன; அவைகளில் 62,918 பிள்ளைகள் படித்தார்கள். இவைகளில் ப்ரைமரி பாடசாலைக் கல்வி விரிவுபடுத்திக் கற்பிப்பதல்லாமல், அதற்கு மேற்பட்ட விஷயங்களையும் சொல்லிக் கொடுக்கிறார்கள்; ரசாயன சாஸ்திரம், பதார்த்த விஞ்ஞான சாஸ்திரம், பயிர்களுக்கும் விருக்ஷங்களுக்கும் காணும் வியாதிகள் முதலான விஷயங்களெல்லாம் கற்பிக்கப்படுகின்றன. இந்தப் பாடசாலைகளிலே உபாத்தியாயர்களா யிருப்பவர்கள் போதனாமுறைக் கல்விச்சாலைகளில் பூர்த்தியாய் நாலு வருஷகாலம் விவசாயக் கல்விப்பயிற்சி பெற்ற பட்டதாரிகளாயிருக்க வேண்டியதோடுங்கூட, டோக்யோ பட்டணத்திலுள்ள விவசாயக்கலாசாலையில் விசேஷ வகை

யாய் விவசாய வேலையில் ஒரு வருஷகாலம் பூர்த்தியாய்ப் பயின்றவர்களாயிருக்கவும் வேண்டும்; ஷை கலாசாலையில் அப்படிப்பட்ட உபாத்தியாயர்களைப் பழக்குவதற்காக வென்றே ஒரு பிரிவு இருக்கிறது.

இனி, விவசாயங் கற்பிக்கும் கிரமமான பாடசாலைகளும் இருக்கின்றன; இவைகளில் A,B என்னும் இருவகைப்பிரிவுகள் உண்டு; இப்படிப்பட்ட பாடசாலைகள் 1905-ம் வருஷத்தில் 118 இருந்தன; இவைகளில் 12 203 பிள்ளைகளும் 887 உபாத்தியாயர்களும் இருந்தார்கள்; மூன்று முதல் நாலுவருஷகாலம் படிக்கவேண்டும். B பிரிவில் ஒரு வாரத்துக்கு 27 மணி நேரம் புஸ்தகபாடம் சொல்லப்படும்; பாடசாலை திறந்திருக்கும் நாள்களில் மற்ற காலமெல்லாம் பாடசாலைப் பண்ணையில் விவசாய வேலை அனுபோக ரீதியாய்க் கற்பிக்கப்படும்; பிள்ளைகள் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், அப்பர் ப்ரைமரி பரீக்ஷை கொடுத்தவர்களாகவும் இருக்கவேண்டும். 1905-ம் வருஷத்திலே 52 பாடசாலைகள் இருந்தன; அவைகளில் படித்த பிள்ளைகள் 3,927 பேர். இந்த B பிரிவைச்சேர்ந்த பாடசாலைகளில் ஒன்றைப் பற்றி என்னுடைய புஸ்தகத்தில் 136, 137-வது பாராக்களிலே விவரமாய்ச் சொல்லியிருக்கிறது; சுருக்கமாய்ச் சொன்னால், இந்தப் பாடசாலையானது ஒன்பது கிராமங்களைச் சேர்ந்த குடியானவர்களால் ஏற்படுத்தப்பட்டது; பாடசாலைக்குப் பிடிக்கும் செலவில் பாதி செலவை இவர்கள் கொடுக்கிறார்கள்; இவர்களின் பிள்ளைகளே இந்தப் பள்ளிக்கூடத்தின் வகுப்புகளில் படிக்கிறவர்கள்; இதில் படித்த பிள்ளைகளெல்லாம் தங்கள் கிராமப் பண்ணைகளில் வேலை செய்யத் திரும்பிப்போய் விட்டார்கள்.

A என்னும் பிரிவைச்சேர்ந்த பாடசாலைகள் உயர்தர வகுப்பைச் சேர்ந்தவை; அந்தப் பாடசாலைகளோடு ஒரு நல்ல பண்ணையும், தோட்டங்களும், காடும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இவைகளில் படிக்கும் பிள்ளைகள் பதினான்கு வயதுக்கு மேற்பட்டவர்கள்; 1905-ம் வருஷத்தில் 9,732 வித்தியார்த்திகள் இருந்தார்கள்; இந்த வித்தியார்த்திகளெல்லாரும் அவ்வவ்விடத்திலுள்ள குடியானவர்களின் பிள்ளைகள்; இவர்கள் அனேகமாய்ப் பண்ணை வேலை செய்வதற்காவது 12,000 விவசாய சங்கங்களுக்கு நிபுணர்களாகவோ உதவி நிபுணர்களாகவோ விவசாய சம்பந்தமான வேலை செய்வதற்காவது திரும்பிப் போகிறார்கள்; அல்லது உயர்தர விவசாயப் பயிற்சி பெறுவதற்குப் போகிறார்கள். இந்தப் பாடசாலையிலுள்ள உபாத்தியாயர்கள் உயர்தர யோக்கியதை பெற்றவர்களாயும் அனுபோக முள்ளவர்களாயும் இருப்பதால், இந்தப் பாடசாலையானது குடியானவர்களுக்கு விவசாய விஷயமாய் யோசனை சொல்வதற்கேற்ற பிரதான ஸ்தானமாயும் உதவுகிறது. நான் பார்த்து வந்த பாடசாலைகளைப் பற்றி என் புத்தகத்தில் விவரித்தெழுதி யிருப்பதைப் படித்துக்காட்ட எனக்கு அவகாசமில்லை; அங்கே கல்வி கற்பிக்கப்படும் விதத்தையும், புஸ்தக பாடமாகவும் அதைவிட அதிகமாய் அனுபோகத்தையொட்டியும் கற்பிக்கப்படும் விஷயங்களையும், அந்தந்த உபாத்தியாயர்கள்

தம் தம் விசேஷ வகையான வேலையிலே காட்டும் உற்சாகத்தையும் அது போகத் திறமையையும் கண்டபோது எனக்கு ஆச்சரியமாய் விட்டதென்று மாத்திரம் நான் சொல்லக்கூடும்.

எல்லாவற்றையும் விட உயர்ந்த கல்வி டோக்யோ சர்வகலாசங்கத்தின் அங்கமாய் அமைந்திருக்கிற காலேஜ் ஆவ் அக்ரிகல்சர் என்னும் விவசாய கலாசாலையில் கற்பிக்கப்படுவதேயாம். இந்தச் சிறந்த கலாசாலையைப் பற்றி இப்போது நான் விவரித்துச்சொல்ல முடியாது; ஆனால், அந்த தேசத்திலுள்ள பாடசாலைகளுக்கும் பரிசோதனார்த்தமான வேலைகள் நடக்கும் இடங்களுக்கும் வேண்டிய நிபுணர்கள், உபாத்தியாயர்கள், ப்ரொபெஸர்கள் (போதகாசிரியர்கள்) முதலானவர்களை இந்தக் கலாசாலையே அனுப்புகிறதென்று மாத்திரம் சொல்லுவேன். விசேஷ வகையான பயிற்சிபெற இஷ்டப்படும் குடியானவர்களுக்காகவும், ஸப்ளிமென்டரி பாடசாலைகளுக்கனுப்புவதற்காக உத்தேசிக்கப்பட்ட போதனாமுறைக் கல்விச்சாலைகளின் உபாத்தியாயர்களுக்காகவும் பிரத்தியேகமான பிரிவுகளும் இருக்கின்றன. அனுபவத்தையொட்டி இவைகளில் நடத்தப்படும் வேலை வெகு ஆச்சரியகரமாயிருக்கிறது. கிருஷிகர்கள் நாட்டுப்புறத்து விவசாய காரியங்களை நிர்வாகம் செய்வதற்குள்ள விசேஷ வகையான நிலைமைகளையும் கஷ்டங்களையும் பற்றி வித்தியார்த்திகள் தெரிந்துகொள்ளும்பொருட்டு முழுவதும் விவசாயப் பண்ணையாகவே பயிரிடத்தக்க சுற்றி விஸ்தீர்ணமுள்ள பூமியைக் கலாசாலையார் பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருக்கிறார்களா என்று கேட்டதன்மேல், அப்படிப்பட்ட பூமிகள் இரண்டு இருப்பதாகத் தெரியவந்தது; இவைகளிரண்டிலும் ஒன்றுக்கொன்று ஒத்திட்டுப்பார்த்து வேலை நடத்தப்பட்டது; இவைகளில் ஒன்றை ஏராளமான வருவும் சரக்குகள் நன்றாய் விலையாகத்தக்க சந்தையுமுடைய ஒரு பட்டணத்துக்குச் சமீபத்திலிருக்கும் 2½ ஏகர விஸ்தீர்ணமுள்ள பண்ணையாக பாவித்து அதில் வேலை நடத்தி வருகிறார்கள்; மற்றொன்றை அதற்குச் சொந்தமாயுள்ள எருக்களையே ஆதாரமாகக் கொண்டதும் அதில் உற்பத்தியாவதை விலைபடுத்துவதற்கு வேண்டிய சந்தை சௌகரியங்கள் அதிகமாய் இல்லாததுமான நாட்டுப் பண்ணையாக பாவித்து வேலை நடத்தி வருகிறார்கள். இவ்விரண்டு நிலங்களும் அடுத்தடுத்து இருந்தன; விவசாயப் பண்ணைகளைப் போலவே அவைகளில் வேலை நடத்தப்பட்டது. ஆகையினாலேயே மெத்த அருமையான விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கும் அந்த விஷயங்களைக்கொண்டு இன்னும் அதிகமாய் ஊகித்து வேலை செய்வதற்கும் அவைகள் சிறந்த சாதனங்களாயிருந்தன.

இந்த உயர்தர விவசாயப் படிப்பைப்பற்றி இன்னும் அதிகமாய்ச் சொல்வதற்கு அவகாசமில்லை யாகையால், சுருக்கிச் சொல்லுகிறேன். இந்தப் பாடசாலைகள் கொஞ்சகாலத்துக்கு முன் ஏற்பட்டவைகளே யானாலும், அவைகளைச் சேர்ந்த பற்பல வகுப்புகளிலும் அது முதல் 16,323 பிள்ளை

161987

களும் ஸப்ளிமென்டரி பாடசாலைகளில் 2,23,389 பிள்ளைகளும் படித்துத் தேறினார்கள். இவர்களில் பெரும்பாலார்—B பிரிவிலும் ஸப்ளிமென்டரி பாடசாலைகளிலும் உள்ள ஏறக்குறைய எல்லா வித்தியார்த்திகளும் நேராக விவசாயவேலை செய்யவே திரும்பிப்போனார்கள். இந்த வேலையினாலும் இன்னும் அடுத்த இருபது வருஷகாலத்தில் நடக்கும் வேலையினாலும் நாட்டுப்புறத்துப் பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வளவு பிரயோஜனமுண்டாகுமோ யோசித்துப் பாருங்கள்! விவசாய கலாசாலைகள் நீங்கலாக மற்ற எல்லா பாடசாலைகளுக்கும் பிடித்த செலவு 1904-ம் வருஷத்தில் 44 லக்ஷமாயிற்று; இதில் சுமார் 5 லட்சம் ராஜாங்க கஜானாவிலிருந்து சகாயத் திரவியமாகக் கொடுக்கப்பட்டது; மற்றது ஜில்லா நிதிகளிலிருந்தும் கிராம நிதிகளிலிருந்தும் கொடுக்கப்பட்டது.

இந்த விஷயத்திலே நாம் தெரிந்து கொள்ளவேண்டிய சங்கதிகள் இல்லையா? வெறும் சங்கதிகளை மாத்திரம் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்; இனி இச்சங்கதார் அம்மாதிரியான வேலையை இந்த தேசத்திலே முயன்று செய்ய வழிதேடுவார்களென்று நம்புகிறேன். ஜப்பான் தேசத்து நாட்டுப்புற ஜனங்கள் இந்து தேசத்து நாட்டுப்புற ஜனங்களைப் போலவே ஏழைகளென்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

இப்போது வயதுவந்த கிருஷிகர்களுக்குக் கற்பிப்பதைக் குறித்துப் பேசப்போகிறேன்; இந்தக் கிருஷிகர்களை விருத்திக்குக் கொண்டுவரும் விஷயத்தில் ஜப்பான் தேசத்துக் கவர்ன்மென்டார் கவலை கொண்டவர்களாய் கவனம் செலுத்திப் பெரும் சகாயம் செய்து வருகிறார்கள்.

விவசாய ஸ்டேஷன்கள் (ஸ்தலங்கள்) அல்லது பரிசோதனார்த்தமாய் ஏற்படுத்திப் பயிரிட்டுக் காட்டும் பண்ணைகளை ஸ்தாபிப்பது முதலில் அனுசரிக்கவேண்டிய முறையாகும். இந்த எண்ணம் 1886-ம் வருஷத்தில்தான் தோன்றிற்று; அப்போது சில விவசாய வித்யா பட்டதாரிகள் கிருஷிகர்களின் ஒத்தாசையைக்கொண்டு டோக்யோ பட்டணத்துக்குச் சமீபத்தில் சொற்பமாயும் சுலபமாயும் பரிசோதனார்த்தமான பண்ணைகள் வைக்க ஆரம்பித்தார்கள்; இதற்கு ஷை கிருஷிகர்கள் தங்களுடைய நிலங்களில் ஒரு பாகத்தை உபயோகித்துக்கொள்ளும்படி கொடுத்தார்கள்; இது கவர்ன்மென்டின் தலைமை ஸ்தானத்திலிருந்து உண்டாய்ப் பூர்த்தியாக வளர்ந்த எண்ணமாயிராமல், குடிஜனங்கள் தாழ்மையுடன் செய்த பிரயத்தனமாகவே யிருந்தது. இதனால் உண்டான காரியசித்தி காரணமாகத் துரிதமான அபிவிருத்தி ஏற்படவே, 1893-ம் வருஷத்தில் இவ்விஷயத்தைக் கவர்ன்மென்டார் எடுத்துக்கொண்டு அதற்கு வேண்டிய ஐவேஜை ஏராளமாய்க் கொடுத்தார்கள்.

பெரிதாயுள்ள பிரதான விவசாய ஸ்டேஷனையும், அதன் கிளைகளையும் அதிகமான விலைபுயர்ந்த தளவாடத்தையும் பெருத்த எண்ணிக்கையுள்ள

JL
XM m2U 1m09

நிபுணர்களையும் விட்டு விட்டு, அவ்வவ்விடத்திலுள்ள ஸ்டேஷன்களைக் குறித்து யோசிப்போம்; ஏனென்றால், இவைகளாலேயே கிருஷிகர்களுக்கு அதிக சகாயம் கிடைக்கிறது; இந்த ஸ்டேஷன்கள் அவ்வவ்விடத்திய விவகாரங்களை எடுத்துக்கொண்டு, அவ்வவ்விடத்துக்குப் பொருத்தமான சீர்திருத்தங்களைச் செய்து காட்டுகின்றன. இப்படிப்பட்ட ஸ்டேஷன்களை ஸ்தாபிப்பதற்காக ஏறக்குறைய 1897-ம் வருஷத்திலே கவர்ன்மெண்டார் திரவியசகாயம் செய்ய முன் வந்தார்கள்; இப்படிபட்ட சகாய திரவியம் இப்போது 3 லக்ஷத்துக்கு உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறது; இந்தத் தொகையைக்கொண்டு கிட்டத்தட்ட ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ஸ்டேஷன் வீதம் 42 ஸ்டேஷன்கள் ஏற்பட்டிருக்கின்றன; இவைகளை ஏற்படுத்தி நிர்வகிப்பதற்கு 6½ லக்ஷம் செலவு பிடிக்கிறது; ஜில்லா நிதிகளிலிருந்து கொடுக்கப்பட்ட தொகைகளும் கவர்ன்மெண்டார் சகாய திரவியமாய்க் கொடுத்த தொகைகளும் சேர்ந்து ஷை 6½ லக்ஷம் ஆகிறது. இவைகளைத் தவிர சுலபமான வகுப்பு வேலைகளுக்காக அனேக தாலூகா ஸ்டேஷன்களும், கிராமங்கள் அல்லது தொகுப்புகளாய்ச் சேர்ந்த சிறு வயதுள்ள கிருஷிகர்களால் சாதாரணமாய் ஸ்தாபிக்கப்பட்ட வில்லேஜ் டெமன்ஸ்ட்ரேஷன் ப்ளாட்டுகளென்னும் கிராமங்களில் வேலைசெய்து காட்டுவதற்கான துண்டு நிலங்களுங்கூட இருக்கின்றன. இந்த ஸ்டேஷன்கள் வெறும் பரிசோதனார்த்தமாய் ஏற்படுத்தப்பட்டவைகளாய் மாத்திரமிராமல், வேலை செய்து காட்டுபவைகளாயும் அவைகளில் உற்பத்தியாவதைப் பகிர்ந்து கொடுப்பவைகளாயும் கூட இருக்கின்றன; ஆனால், இது விஷயமான விவரங்களுக்கு என் புஸ்தகத்தைப் பார்க்கவேண்டும். அவைகளில் விவசாய சங்கத்தார்களுக்காக விவசாய விஷயமான பாகுபாடுகள் மெத்தவும் சரசமாகவோ அல்லது இலவசமாகவோ நடத்தப்படுகின்றன; விதைகள், நாற்றுகள், முட்டைகள், முதலியவை அவைகளிலிருந்து மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன; அங்கே மியூஸியங்களென்னும் பல பொருட்காட்சி சாலைகளிருப்பது மல்லாமல், பயிரிடும் விஷயத்தைக் குறித்த புஸ்தகங்களும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன; அந்த ஸ்டேஷன்களைச் சேர்ந்த பூமிகளைக் குடியானவர்கள் தாராளமாய்ப் போய்ப் பார்க்கலாம்; வருஷா வருஷம் ஆயிரக்கணக்கான குடியானவர்கள் ஒவ்வொரு ஸ்டேஷனையும் போய்ப் பார்த்து வருகிறார்கள். நான் போய்ப்பார்த்த ஒரு ஸ்டேஷனிலே அதற்கு முந்திய வருஷத்தில் போய்ப் பார்த்தவர்கள் 16,481 பேர்; அனேகமாய் அபிப்பிராயங் கேட்டறிந்து கொள்வதற்காக வந்த கடிதங்களும் அவைகளுக்கு பதிலனுப்பப்பட்ட கடிதங்களும் சேர்ந்து அவற்றின் தொகை 10,321 ஆயிற்று; அந்த ஸ்டேஷனைப் பார்க்கவந்த அனேகர் யாதொரு கூச்சமுமில்லாமல் சகாயமும் யோசனையும் கேட்பதையும், தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லும்படி கேட்பதையும் பார்த்தேன். அவ்வவ்விடங்களில் பிரயாணஞ் செய்து வேண்டிய விஷயங்களை போதிப்பவர்கள் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்;

அவர்களுக்குச் சம்பந்தப்பட்ட ஜில்லாவில் பிரயாணம்செய்து நிபுணத்துவ ஆலோசனை சொல்வதும், பிரசங்கம் முதலானது செய்வதும் ஆகிய இதைத் தவிர அவர்களுக்கு வேறே அலுவலில்லை. நான் போய்ப்பார்த்த ஸ்டேஷன் சம்பந்தமாக 254 ஸெஷனல் (சிற்சில பருவ காலங்களில் நடத்தப்படும்) வகுப்புகள் வைக்கப்பட்டன. சகல விதமான பயிரிடுங் காரியங்களைப் பற்றியவைகளும், கல்விச்சாலைகளிலும் குடிசைகளிலும் தொங்கவிட்டு வைத்திருக்க உத்தேசிக்கப்பட்டவைகளுமான புல்லெடின்களென்னும் வர்த்தமானிகளைப் பிரசுரிப்பது இந்த ஸ்டேஷனில் ஒரு விசேஷமான அம்சமாயிருக்கிறது; அவைகள் சுலபமான நடையில் எழுதப்பட்டிருப்பதோடு, குடியானவர்களுக்கு ஒருதரம் பார்க்கும்போதே சங்கதிகள் நன்றாய்த் தெரியும்பொருட்டு வழக்கமாய் வர்ணமிட்டுள்ள சித்திரங்களும் எப்போதும் அவைகளில் பிரசுரிக்கப்படுகின்றன. நான் போய்ப்பார்த்த ஜில்லா ஸ்டேஷனிலே ஒரு வருஷத்தில் 42,630 பிரசுரங்கள் வெளியிடப்பட்டன; இவைகளல்லாமல் 21,658 பேருக்கு விதைகளும் 2,700 பேருக்குப் பழ நாற்றுகளும் கொடுக்கப்பட்டன.

சங்கங்கள். ஆனால், இதை இம்மட்டுடன் நிறுத்தி நான் சொல்லவேண்டிய விஷயங்களில் கடைசியானதும் மிக முக்கியமானதுமான சங்கங்கள் என்னும் விஷயத்தைக் குறித்து இனி பேச வேண்டும்; ஜனங்களுக்குத் தெரியவேண்டிய சங்கதிகளை மிகவும் விஸ்தாரமாய்க் கற்பிப்பதற்கு இந்தச் சங்கங்களே சிறந்த சக்தியுள்ள சாதனங்களாயிருக்கின்றன. விருத்திகரமான சகல காரியங்களும் இதிலிருந்தேஉண்டாகின்றன; இதனாலேயே அவர்கள் உண்மையான காரியசித்தியும் பெறுவார்கள். காரியம்நடத்தும் முறையிலும், விளைச்சலிலும், தொழிற்படிப்பிலும் செய்யப்படும் சகல சீர்திருத்தங்களினாலும் தொழிலாளி வாஸ்தவமாய் அடியிற்கண்டபடி அபிவிருத்தி யடையாத பட்சத்திலே அவை வீணேயாகும்: எனவே, செல்வத்தில் அபிவிருத்தி அடையவேண்டும்;ஏனென்றால், உங்கள் உழைப்பின் பலித்தத்தை உங்களுக்கே வைத்துக்கொள்ள முடியாதவர்களாய் அது கடன்காரருக்கோ அல்லது மத்தியிலிருந்து பேரம் செய்கிறவருக்கோ போய்விடுவதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதாயிருக்கும் பட்சத்தில், இடைவிடாமல் பாடுபடுவதும் காலையில் எழுந்திருப்பதும் நேரங்கழித்து இளைப்பாறுவதும் ஜாக்கிரதையாய்ச் சம்பாதித்து வைத்த ஆகாரத்தைப் புசிப்பதும் வீணேயாகும்; மேலும், விவேகத்திலும் காரிய நிர்வாகத் திறமையிலும், தன்னுழைப்பில் நம்பிக்கைவைத்து தன்முயற்சி செய்வதிலும், செட்டிலும், மிதப்பான்மையிலும், யோக்கியத்தனத்திலும் அபிவிருத்தியடையவேண்டும்; ஏனென்றால், நடத்தையைச் சீர்திருத்தாமல் செல்வத்தைப் பெருக்குவது நிஷ்பிரயோஜனமே; அல்லாமலும் பரஸ்பரசகாயத்திலும் கூட்டுத்தொழில் முயற்சியிலும் அபிவிருத்தி யடையவேண்டும்; ஏனென்றால், இவைகளெல்லாமிருந்தும் அண்டையிலுள்ளவர்களோடு சினேகப்பான்மையும், பரஸ்பர மரியாதையும், ஜனங்களுக்குள் தர்ம சிந்தையும் இல்லாவிட்டால் இவை ஒன்றுக்கும் உதவாது. கிராமத்தார்கள் பரஸ்பர சகா

யத்துக்காகவும் அபிவிருத்திக்காகவும் சேர்ந்து சங்கங்கள் ஏற்படுத்திக்கொள்வதிலேயே செல்வத்திலும் குணத்திலும் சகோதரப்பான்மையிலும் உண்மையான மேம்பாடடையும் மர்மம் இருக்கிறதென்று நான்சொல்லுகிறேன்.

பழையகாலத்தில் ஜப்பான் தேசத்திலே சங்கங்கள் இருந்ததாகத் தெரியவில்லை; இந்தியாவில் இருந்ததுபோல் கிராமத்தார்கள் ஒன்றுகூடி முயற்சி செய்யும் வழக்கம் அதிசமாயிருந்தது; மேலும், பட்டுமுதலிய விசேஷவகையான தொழில்களை நடத்துவதற்கு வர்த்தக சங்கத்தார்களும் இருந்திருப்பது சாத்தியமே; ஆனால், கிருஷிகர்கள் மற்றப்படி கிராமங்களிலோ பெருத்த நிலச்சுவான்தாரர்களின் கீழோ யாதொரு கட்டுப்பாடு மில்லாமல் தனித்தனி நபர்களாய்ச் சேர்ந்திருந்த வெறுங்கூட்டமாகவே யிருந்தார்கள். கல்விப்பயிற்சியில்லாத நபர்கள் ஒன்றுசேராமல் தனித்தனியாய்ப் பிரிந்திருந்தால் அவர்களை இணக்குவது எந்த துரைத்தனத்தாருக்கும அனேகமாய் அசாத்தியமென்று தற்காலத்து தேசபரிபாலனத்தில் இப்போது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது; முக்கியமாய்க் கிருஷிகர்களில் தனித்தனியாய் ஒவ்வொருவரும் புதிய கருத்துகளை ஏற்கவாவது புதிய மாதிரியாய்ச் சோதனைகள் செய்து பார்க்கவாவது முடியாதபடி அவ்வளவு கூச்சமுள்ளவர்களாயும், சந்தேகப்படுகிறவர்களாயும், பண்டை வழக்கங்களையே அனுசரிக்கும் இயல்புள்ளவர்களாயும் இருக்கிறார்கள்; அல்லாமலும் அவர்கள் தங்கள் நிலத்திலிருந்து உத்தமமானபலனையும், மத்தியபோக்காரனுக்கு மிஞ்சிப்போவதற்கும், வியாபார ஸ்தானங்களில் பொருள்களை மெத்தவும் அனுகூலமான விலைக்கு விற்பதற்கும் முடியாத அவ்வளவு ஏழைகளாயும் சக்தியற்றவர்களாயுமிருக்கிறார்கள். ஆனால்,இப்படி தனித்தனியாய்ப் பிரிந்து நிற்பவர்களைச் சேர்த்து ஒரு கட்டுப்பாட்டுடன் கூடிய சங்கமாய் அமைக்கும் பட்சத்தில், துரைத்தனத்தாராவது மற்ற எவர்களாவது அவர்களைத் தொகுப்பாய் வைத்துப் பிரவர்த்திக்கக்கூடிய ஒரு கூட்டம் உடனே ஏற்பட்டுவிடும்; அப்படி ஏற்படும் கூட்டமானது துரைத்தனத்தாருக்கும் தனித்தனியான குடித்தனக்காரருக்கும் நடுவில் நின்று கருத்துகளை ஏற்கவும் தர்க்கிக்கவும், யுக்தியாய்ப் பேசவும், அப்படிப் பேசுவதைக் கவனிக்கவும், புதிய துறைகளில் இறங்கி வேலைசெய்ய முயல்வதற்கு வேண்டிய மனுஷ்ய சகாயத்தையும் மற்ற சாதனங்களையும் ஐக்கியத்தினாலுண்டாகிற தைரியத்தையும் அமைக்கவும், சரக்குகளை வாங்குவதற்காகவும் விற்பதற்காகவும் கூட்டுத்தொழிலினால் உண்டாகும் அற்புதமான பலனுக்காகவும் வேண்டிய ஐவேஜையும் சரக்கு வாங்குவோரையும் சேர்க்கவும் பிரயோஜனப்படும்; அந்தப் பலன் என்னவென்றால், தனித்தனியாய்க் கடன்வாங்கி வேலைசெய்து தனசேகரம் செய்யக்கூடாதவர்களாய்ச் சக்தியற்றிருக்கும் பலபேர் ஒன்றுகூடிக் கடன்வாங்கி பலமாய் வேலைசெய்யக் கூடியவர்களா யிருப்பதாம். இதையே நன்னடத்தையை மூலதனமாக்கிக்கொள்ளுமுறையென்று பொருத்தமுறக் கூறியிருக்கிறார்கள். அன்றியும், சங்கங்களை

ஸ்தாபிப்பதனால் விவசாயாபிவிருத்தி வேலை குடிஜனங்களாலேயே நிறைவேற்றப்படுவதாகும்; வாஸ்தவத்தில் பிரயோஜனகரமாயிருப்பது ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்வதெதுவோ அதுவேயொழிய, பிறரால் அவர்களுக்குச் செய்யப்படுவதல்ல என்பது நமக்குத் தெரியுமே; உண்மை யபிவிருத்தி ஜனங்களுக்குள்ளாக விருந்துதான் உண்டாகமுடியும்.

சர்வ ஜனங்களுக்கும் சகலவித நன்மைகளும் சம்பூர்ணமாய்க் கிடைக்கும்படியாளும் கற்பிதமான துரைத்தனத்தாரைத் தவிர மிகவும் சிறந்த வகையாக ஒழுங்காய் அமைக்கப்பட்டுள்ள வேறெந்த துரைத்தனத்தாருக்கும் செய்ய சாத்தியமாகாத காரியம் எவ்வளவோ இருக்கிறதென்பது வாஸ்தவமே; அப்படி அவர்கள் செய்வது சாத்தியமாயிருந்தாலும் தன்முயற்சியென்னும் சிறந்த குணம் தேசவாசிகளுக்குள்ளே மறைந்து போய்விடும் என்ற பயத்தை உத்தேசித்து அப்படி செய்வது அயுக்தமாயிருக்கும். ஏற்கெனவே இருப்பதைவிட நல்ல வழியைக் காட்டுவதும், அந்த வழியை ஏற்றுக் கொள்ளும்படி ஜனங்களைப் பயிற்றுவதும் துரைத்தனத்தாரின் வேலையாகும்; ஆனால், ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய பற்பல சீர்திருத்தங்களையும் தாங்களாகவே செய்துகொள்ளவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில்தான் சங்கங்களின் வேலை ஆரம்பிக்கிறது; அவைகளிலுள்ள நிபுணர்களும் அவைகளைச் சேர்ந்த மெம்பர்களில் மற்றவர்களைவிட அதிக புத்தியும் விஷயங்களைக் கிரஹிக்கும் சக்தியுமுடையவர்கள் புதிய விஷயங்களை ஏற்றுப் பொருத்திக்கொண்டு, அவைகளைத் தாங்கள் அனுஷ்டானத்தில் செய்துமுடிப்பது மாத்திரமல்லாமல், தங்களைக்காட்டிலும் விஷயந்தெரியாதவர்களாயும், பண்டை வழக்கங்களையே அனுசரிக்கும் இயல்புள்ளவர்களாயு மிருப்பவர்களைத் தங்களைப் பின்பற்றும்படித் தூண்டவும் செய்கிறார்கள். இப்படி நான் சொல்லுகிறவைகள் வெறும் பொதுப்படையாய்க் கூறும் கொள்கைகளல்ல வென்பதும், வெறும் சித்தாந்த ரூபமான உபதேசங்க ளல்லவென்பதும் ஜப்பான் தேசத்துச் சங்கங்கள் செய்துள்ள வேலையிலிருந்து விளங்கும்.

பொதுவாய்ப் பேசும்பட்சத்தில், இவைகளை ஜில்லா சங்கங்கள், தாலூகாசங்கங்கள், கிராமசங்கங்கள் என்று மூன்று தரமாகப் பிரிக்கலாம்; இவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன; அது எப்படியென்றால், கிராமசங்கத்தார்கள் தாலூகா சங்கத்துக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கிறார்கள்; தாலூகா சங்கத்தார்கள் ஜில்லா சங்கத்துக்குப் பிரதிநிதிகளை அனுப்புகிறார்கள்; ஜில்லா சங்கத்தார்கள் ஸென்ட்ரல் அக்ரிகல்சரல் கௌன்ஸில் என்னும் பிரதான விவசாய ஆலோசனை சபைக்கு மெம்பர்களை அனுப்புகிறார்கள். இப்போது இந்த-17 ஜில்லாக்களில் 1906-ம் வருஷத்திலே 46 ஜில்லா சங்கங்களும், 579 தாலூகா சங்கங்களும், 13,509 கிராமங்களில் 11,968 கிராம சங்கங்களும் இருந்தன; எனக்குக் கணக்குகள் கிடைத்தி

ருக்கிற ஒரு ஜில்லாவிலே சகல வகுப்பினரும் சேர்ந்த 3,08,000 குடும்பங்கள் இருந்தன; அவைகளுக்குள் 2,10,750 பேருக்குக் குறையாமல், அல்லது பிரதி மூன்று குடும்பங்களுக்கும் இரண்டு பேர் விவசாய சங்கங்களில் மெம்பர்களாயிருந்தார்கள்.

மேற்படி ஜில்லா சங்கங்களும் தாலூகா சங்கங்களும் செய்து வரும் வேலை இவ்வளவென்பதைக் குறித்துப் பேச எனக்கு அவகாசமில்லை; ஆனால், அவைகள் விவசாயத்தையும் விவசாய சம்பந்தமான கைத்தொழிலையும் சேர்ந்த ஒவ்வொரு பிரிவிலும் அனுபோகத்தை அதிகமாய் நாடி வேலை செய்யும் சங்கங்களென்று மாத்திரம் சொல்லுவேன்; மேற்சொன்ன பிரிவுகளிலே கிருஷிகர்கள் பயிர்வேலை செய்யாத காலங்களில் நடத்தும் துணைக்கைத்தொழில்களும் அடங்கும். அவர்கள் செய்யும் விசேஷ அலுவல்களில் ஒன்று என்னவென்றால், கிராம சங்கங்களும் விவசாய சம்பந்தமான படிப்பும் சோதனைக் காரியமும் ஏற்படும்படி உற்சாகப்படுத்துவதும், பண்ணைகளுக்குள் போட்டிப் பரீட்சைகள் நடத்துவதும், வெகுமதிகள் கொடுப்பதும் இவைபோன்ற மற்றவைகளுமாகும். தாலூகாசங்கத்தார்கள் அதி விசேஷமாய் அனுபோகத்தை ஒட்டி வேலைசெய்கிறார்கள்; அவர்கள் அனேகமாய்க் காரியத்துக்கு உபயோகமான வேலையிலேயே பிரவர்த்திக்கிறார்கள்; சீர்திருத்தப்பட்ட கருவிகளைச் செய்வதற்கும் பழுது பார்ப்பதற்கும் திறமைபெற்ற கம்மாளர்களைத் தயார்செய்வதும்அந்த வேலையில் அடங்கின ஓர் அம்சமாகும்.

ஆனால், கிராமசங்கங்களே நாம் கவனிக்கத்தக்கவைகளாகும்; ஏனென்றால், சொற்ப ஐவேஜுள்ள கிருஷிகர்கள் தங்கள் கிராமங்களிலேயே தங்களுக்குத் தாமாக எவ்வளவு செய்து கொள்ளக்கூடியவர்களாயிருக்கிறார்களென்பதை இந்த சங்கங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒரு கிராமத்திலுள்ள கிருஷிகர்களில் பெரும்பாலார் இந்த சங்கங்களில் சேர்ந்திருக்கிறார்கள்; அவர்கள் செய்த சிறந்த வேலையை நன்றாய் விளக்குவதற்கு என்னுடைய புஸ்தகத்திலிருந்து இரண்டு கிராமங்களுடைய ரிபோர்ட்டுகளின் சுருக்கத்தைப் படிக்கிறேன். வாஸ்தவமாய்ச் செய்யப்பட்ட வேலை இன்னதென்று இவைகளினால் தெரியவரும்; இவைகள் அபிப்பிராயங்களாகவாவது, சூசனைகளாகவாவது பிரேரணைகளாகவாவது இராமல், மறுக்க முடியாத உண்மை விஷயங்களாம்.

"பின் வருவது ஒரு கிராம சங்கத்தினுடைய ரிபோர்ட்டின் சுருக்கமாகும்; அது ஆபிஸுக்காக ஒரு கட்டிடத்தைக் கொடைக்கூலிக்கு வைத்துக் கொண்டிருக்கிறது; இதைத் தவிர அந்தக் கட்டிடத்திலே கிராம நாணயச் சங்கமும் கிராமக் கல்விச்சங்கமும் இருக்கின்றன. (இந்தக் கல்விச் சங்கம் ஜபானியரால் ஏற்படுத்தப்பட்ட இன்னொரு ஸ்தாபனமாகும்; ஆனால் இந்தக்குறிப்பில் பேசப்படும் விஷயத்துக்குச் சம்பந்தப் பட்டதல்ல). கிராமத்

தலைவர் இந்த சங்கத்துக்கு ப்ரெஸிடென்ட்; இதில் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் வருஷம் ஒன்றுக்கு 180 ரூபாயில் ஒரு நிபுணரும், 60 ரூபாயில் ஒரு உதவி நிபுணரும், 45 ரூபாயில் ஒரு காரியதரிசியுமாவார்கள்; செலவு குறைவாயிருந்தாலும் அதைக்கொண்டு நல்ல வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் கிடைப்பதற்கு இந்த சம்பள விதங்கள் திருஷ்டாந்தங்களாகக் கொள்ளத்தக்கவை. ஒரு வருஷத்துக்கு வரும்படியும் செலவும் 777 ரூபாய் தான்; மெம்பர்களின் சங்கியை 500. இந்த சங்கம் செய்த வேலை என்னவென்றால்: கிராம வளம் முதலியவற்றைக் குறித்தும் திரவிய நிலையைக் குறித்தும் ரிபோர்ட் தயார் செய்தது; இந்த ரிபோர்ட்டுக்கு 200 பிரதிகள் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டன; சங்கத்தின் வர்த்தமானிப் பத்திரிகைகளைப் பிரசுரஞ்செய்தது; இப்படிப்பட்ட வர்த்தமானிகள் இப்போது 60 வரையில் வெளியாகியிருக்கின்றன; விளம்பரப்பலகைகள் ஏற்படுத்தினது (இது ஒரு விசித்திரமான ஜப்பானிய வழக்கம்); 33 பேர்கள் சேர்ந்து படிக்கும் நாலு விவசாய வகுப்புகள் சிறிது காலத்துக்காக ஏற்படுத்தினதும், விஷப்பூச்சிகளைக் குறித்தும் அவைகளைக்கொல்லும் விதத்தைக் குறித்தும் படித்து வரும்படி ஒரு வித்தியார்த்தியை அனுப்பினதும்; விவசாய விஷயமான பிரசங்கங்களுக்காக ஏற்பாடு செய்தது; இந்த சங்கம் 1896-ம் ஆண்டில் ஏற்பட்ட பிறகு இந்த பிரசங்கங்கள் 53 நடந்திருக்கின்றன; காரியசித்தி பெற்ற கிருஷிகர்களுக்கு கௌரவ பட்டங்களும் வெகுமதிகளும் அளித்தது (1896-ம் ஆண்டு முதல் 27 அளிக்கப்பட்டன); விசுவாசத்தோடு வேலை செய்த ஊழியர்களுக்கு (ரூ. 2-4-0 முதல் 12 அணா வரையில்) வெகுமானத்தொகை கொடுத்தது (விசுவாசத்தோடு மூன்று வருஷத்துக்கதிகமாய் ஒரே எஜமானனிடத்தில் வேலைசெய்த ஊழியர்கள் அல்லது உத்தியோகஸ்தர்களுக்கு 1898-ம் ஆண்டு முதற்கொண்டு கொடுத்த வெகுமானங்கள் 11); விஷப்பூச்சிகளைக் கொல்வதில் அதிக சித்திபெற்றவர்களுக்கு, முக்கியமாய் பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கு வெகுமதிகள் கொடுத்தது; மிக நன்றாயிருந்த நாற்றங்கால்களைக் காட்டினவர்களுக்கு விவசாயக் கருவிகள், விசிறிகள் முதலிய பரிசுகள் அளித்தது; உபயோககரமான பட்சிகளைப் பாதுகாத்ததும், பட்சிகள் தங்கியிருப்பதற்கேற்ற நிழல் தரும் மரங்களை வைத்து வளர்ப்பதற்கு நாற்றுகளை இனாமாக ஜனங்களுக்குக் கொடுத்ததும்; மட்டான செலவுடன் உயர்ந்த குணமுள்ள பலிதம் விசேஷமாய்க் கொடுக்கத்தக்க மாதிரி எருக்குவியல்களைச் சேர்த்து வைத்தது; புலங்களைச் கெட்டிப்படுத்தினது; விவசாயம், பட்டுப்பூச்சி வளர்த்தல், வீட்டுப்புறவைகளை வளர்த்தல், கெண்டை மீன்களையும் (முக்கியமாய்க் கவனிக்கத்தக்கது) இளஞ் செடிகளையும் வளர்த்தல் இவைகளில் சோதனை நடத்தினது; ப்ரைமரி கல்விச்சாலைப் பிள்ளைகளுக்கும் கிருஷிகர்களுக்கும் விதைகள், செடிகள், முட்டைகள் இவைகளைக் கொடுத்தது. சோதனை வேலை நடத்துவதற்குத் துண்டு நிலம் ஏற்படுத்தினது; வீட்டுப்புறவைகள் வளர்ப்பது விஷயமாய், ப்ரைமரி கல்விச்சாலையில் நடத்தின

சோதனைகள்; (அஸ்ட்ரகலஸ் உள்பட) விதையும் பழ நாற்றுகளும் வாங்கிப் பகிர்ந்து கொடுத்தது; பட்டுப் பூச்சிக் கொட்டில்களிலிருந்து தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கினது முதலானவை; நாற்றங்கால்கள், அரிசி, காய்கறி பதார்த்தங்கள், பட்டு இவைகளுக்காகவும், வீட்டு வேலை முறைகள், சுசிகரம் முதலியவைகளுக்காகவும், பிரதி வருஷமும் புலம் அல்லது பண்ணை விஷயமாய் நடத்தும் ஐந்து வித போட்டிப் பரீட்சைகள்; முசுக்கட்டைச் செடி பயிராக்குவதற்கான ஒரு பண்ணை ஏற்படுத்தினது. பள்ளிக்கூடப் பிள்ளைகளையும் ப்ரைமரி கல்விச்சாலையையும் உபயோகித்துக்கொண்டது கவனிக்கத்தக்கது.

"வரவு செலவு திட்டக்கணக்கு வெகு பெரிதாயிருப்பதால் அதை இங்கே காட்டவில்லை; ஆனால், அதில் முக்கியமான அம்சம் என்னவென்றால், அதிக பணச்செலவில்லாமலே ஒன்வொன்றும் செய்யப்பட்டு வருகிறது.

"ஒடொரா கிராம சங்கத்தின் (1903-ம் ஹுத்து) ரிபோர்ட்டைப் பார்த்தால், நிலையாயில்லாமல் சிறிது காலத்துக்காக ஏற்படுத்தப்பட்ட பாடஞ் சொல்லும் வகுப்புகள் விடுமுறை நாள்களில் பிரசங்கங்கள் முதலிய சாமானிய விஷயங்களோடு இன்னும் புதுமையும் ஸ்வாரஸ்யமுமான அம்சங்களும் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது; பொதுவாய்ச்சேர்ந்து வேலை செய்யும் வகையை அதிகமாய்க் கைக்கொண்டிருப்பதே இதில் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க அம்சம்.

"(1) பொதுவில் நாற்றங்கால்கள் ஏற்படுத்துவதற்காக. எண்பத்தொன்பது மெம்பர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தார்கள்; இதன் பிறகு சங்கத்தில் ஒரு தர்க்கம் நடந்தது; அதனால் எல்லாருக்கும் பொதுவில் ஏழு நாற்றங்கால்கள் மொத்தததில் ஏழு ஏகரா விஸ்தீர்ண முள்ளவைகளாய் கிராம முழுவதுக்கும் ஏற்படுத்தப்பட்டன. சங்கத்தின் டைரெக்டர் என்னும் விசாரணைக் கர்த்தர் இந்தத் துண்டு நிலங்களை ஒன்பது வருஷத்துக்கு குத்தகையாகப் பேசிக்கொண்டு, அவைகளை மெம்பர்களுக்கு வாடகைக்கு விடுகிறார். ஏப்ரல் மீ 3உயில் உப்புத் தண்ணீர் முறையைக்கொண்டு விதைகள் பரிசோதிக்கப்பட்டன; ஏப்ரல் மீ 17உக்குள் நாற்றங்கால்கள் தயாராகி, ஏகரா ஒன்றுக்கு முப்பது பறை வீதம் விதை விதைக்கப்பட்டது; ஜூன் மீ 8உ முதல் 12உ வரையில் நாற்றங்கால்களிலிருந்து நாற்றுகளை எடுத்து வயல்களில் நட்டார்கள்.

"(2) பலபேர்களிடத்திலிருந்து ஐவேஜை ஒன்றாய்ச் சேகரித்து அதைக்கொண்டு எருவாங்குவது. இது விஷயமாய் 1902-ம் ஹுத்திலே முதலில் பிரயத்தனம் செய்யப்பட்டது; இது கைகூடி. வரவே, சங்கத்தார் 1903-ம் ஹுத்தில் ரூ. 2,250 கடன் வாங்கி, 550 பறை அவரையும், 600

பறை பின்கேக்கும், 8250 ராத்தல் அரிசித் தவிடும், 60 பீப்பாய் மீன் எருவும் (எண்ணெய் இறக்கின பிறகு நிற்கும் திப்பி), இதர விதமான எண்ணெய்ப் பிண்ணாக்கு 1650 ராத்தலும் விலை கொடுத்து வாங்கினார்கள்; இவைகளை மெம்பர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டு, அவற்றின் விலை காலதாமதமில்லாமல் செலுத்தப்பட்டது.

"(3) நெல் வயல்களிலும் மேட்டு நிலங்களிலும் பயிர் வைப்பதற்காக வெகுமதி கொடுக்கும் போட்டிப் பரீட்சைகள். இது (விவசாய) இராப்பாட சாலைகளையும் சிறிது காலத்துக்கான வகுப்புகளையும் சேர்ந்த வித்தியார்த்திகளால் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவந்தாலும், இதை 1901-ம் ஹுத்தில் சங்கத்தார் எடுத்துக்கொண்டார்கள். (போட்டிப் பரீட்சை நடந்த மூன்றாம் வருஷமாகிய) 1903-ம் ஹுத்திலே கிராமத்தில் நெற்பயிர் செய்த (225 ஏகரா) மொத்த விஸ்தீர்ணத்திலே சராசரியில் விளைந்த மகசூலானது தான் ஒன்றுக்கு 2·95 கோகு அல்லது கிட்டத்தட்ட ஏகரா ஒன்றுக்கு 60 பறை குத்தின அரிசியாய்த் தேறினதாகக் காணப்பட்டது.

"(4) மேற்படி வருஷத்தில் ஒருவிதமான விஷப்பூச்சியின் புழுக்கள் 27,04,276 நெற்பயிர்த் தாள்களை அழித்துவிட்டபடியால், அந்தப் பூச்சிகளைக் கொல்வதற்காக பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டது. *

"(5) பட்டுப்பூச்சி முட்டைகளைப் பொதுவில் பாதுகாப்பதும் குஞ்சு பொரிக்கச்செய்வதும். தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கும் காரியமும் செம்மையாய் நிறைவேற்றப்பட்டது; சகல கருவிகளும் தீயில்காய்ச்சி அவைகளிலிருந்து தொத்துவியாதிக் கிருமிகள் நீக்கப்பட்டன; பார்மலினைத்தூவி அறைகளிலிருந்து தொத்துவியாதி சம்பந்தம் நீக்கப்பட்டது.

"(6) பட்டுப்பூச்சிகளை வளர்க்கிறவர்களுக்காக ஒரு போட்டிப்பரீட்சை வைக்கப்பட்டது; 176 வீட்டார்களில் 50 வீட்டார்கள் அதற்கு வந்தார்கள்; போட்டியில் காட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட பூச்சிகளை மத்தியஸ்தர்கள் அவைகளின் ஆரம்ப தசையிலேயே பரிசோதனை செய்தார்கள்.

"(7) சங்கத்து மெம்பர்களில் 79 பேர் சேர்ந்து பட்டுப்பூச்சி வளர்ப்பதற்காக ஒரு சங்கத்தை 1900-ம் வருஷத்தில் ஏற்படுத்தினார்கள்; பட்டுப் பூச்சி வளர்க்குந் தொழிலில் தேர்ந்த நிபுணர்கள் அந்த பூச்சிகளின் நிலைமையைப் பரிசோதித்து தங்களுடைய அபிப்பிராயங்களையும் யோசனைகளையும் சொல்வதற்காகச் சாகுபடிக்காலத்தில் வீடுவீடாய்ப் போகிறார்கள். பட்டுப்

* பூச்சிகளால் உண்டாகும் உபத்திரவம் ஜப்பானில் சாதாரணமென்று தோற்றுகிறது; அவைகளை வரும்படித் தூண்டி வலைக்குள் சிக்கும்படி செய்ய வயல்களில் அங்கங்கே வைக்கப்பட்டிருக்கும் லாந்தர்ப்பொறிகளை இராக்காலத்தில் சாதாரணமாய்க் காணலாம்.

பூச்சி வளர்க்கும் சங்கத்தார் ரூபா 1500 உள்ள ஒரு நிதி ஏற்படுத்தி, அதை அந்தத் தொழிலுக்காகச் செலவழிக்கும்படி மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள்.

"எருவை விருத்திசெய்வதும், நெல்விளையும் நிலத்தை முன்னிலும் ஆழமாக உழுது பண்படுத்துவதும், தான் 1-க்கு 4 கோகு (ஏகரா ஒன்றுக்கு 80 பறை குத்தின அரிசி) விழுக்காடு காணும்படி நெல் மாசூலை அதிகப்படுத்த பிரயத்தனம் செய்வதும், நல்ல பட்டுப்பூச்சிகளை உண்டாக்கி பட்டைப் பொதுவில் விற்பனைசெய்வதும், ரெசவு வேலையைக் குடியானவர்களின் குடும்பங்களுக்கு இரண்டாம் தொழிலாகச் செய்யும்படி உற்சாகப்படுத்துவதும், செட்டை விருத்தி செய்வதும் ஆகிய இவைகளே இனிமேல் செய்யப்படும் காரியங்களாகும்."

மேற்சொன்னவைகளில் சிலவற்றைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லுகிறேன். இந்த சங்கங்கள் செய்திருக்கும் வேலைகளில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைச் சகாயிகளாகக் கொண்டுவந்து அவர்களுள் சிறந்த வேலைசெய்த பிள்ளைகளுக்கு வெகுமதிகள் கொடுக்கும்படி ஏற்படுத்தியிருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்; இப்படி செய்யவேண்டு மென்பதை இந்த சங்கங்களின் ஜெனரல் கான்பரன்ஸ் என்னும் மகாசபையார் விசேஷமாய்ச் சிபாரிசு செய்திருக்கிறார்கள்; மேலும், அவர்கள் அனுபோகத்தை யொட்டிச்செய்யும் விவசாயத்திலும் விவசாய சம்பந்தமான காரியங்களிலும் ப்ரைமரி பாடசாலைகள் முன்னிலும் அதிகமாய்ச் சேர்ந்திருக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். பலிதமாய் வேலைசெய்யும் குடியானவர்களுக்கு வெகுமதிகள் ஏற்படுத்தியிருப்பது இரண்டாவது விஷயமாகும்; இவை ஒரு பெருத்த அளவிலிருந்து சொற்பமான மாதிரி தானியங்களை ஜாக்கிரதையாய்ப் பொறுக்கியெடுத்து விவசாயப் பொருட்காட்சியில் வைத்துக் காட்டுவதற்காகக் கொடுக்கும் வெகுமதிகளல்ல; ஆனால், பொதுவான காரியசித்திக்காகவும், விசேஷவகையான வேலைகளிலே அடையும் காரியசித்திக்காகவும், வயல்களிலாவது பட்டுநூல் கொட்டில்களிலாவது உண்டாகும் சிறந்த பலிதங்களுக்காகவும் கொடுக்கப்படும் வெகுமதிகளேயாகும். இந்த வெகுமதிகள் சிறியவைகளாயிருக்கும்; பல சமயங்களில் மெழுகுவர்ணம்பூசிய பாத்திரம் அல்லது விசிறி முதலிய வஸ்துக்களாயிருக்கும்; ஆனால், அவைகளைப் பெறுகிறவர்களுக்கு கிராமத்தில் அதிக கௌரவமும் மரியாதையும் கிடைக்கிறது; ஆகையினால், சீர்திருத்த அபிவிருத்திக்காக அதிக ஆவலாய்ப் போட்டி போடும்படி தூண்டுதல் உண்டாகிறது. கிராம கௌரவங்களையும் மரியாதையையும் அபிவிருத்திக்குத் தூண்டுகோலாக நாம் போதுமான அளவுக்கு உபயோகிப்பதில்லை; கிராமமே ராஜ்யத்துக்குப் பிரபஞ்சம்; அவனுடைய அந்த சிறிய பிரபஞ்சத்துக்குள் அதிக மரியாதைபெற்று வருவதே அவனுக்கு சர்வமும் கிடைத்தாகும். இண்டஸ்ட்ரியல் மிஷனரி அஸோஸியேஷனென்னும் தொழில்முயற்சி மதப்பிரசாரக சங்கத்தார் கிராமவயல்களுக்கும் அந்த வயல்களில் முளைக்கும் பயிர்களுக்கும், உழுது பண்படுத்தும் காரியங்களுக்கும், எருவைச் சேர்த்துவைப்பதற்கும், மரம் வைத்துப் பயிராக்குவதற்கும் இது போன்ற மற்ற காரியங்களுக்கும் வேலைசெய்யும் முறைகளேற்படுத்திப் போட்டி நடக்கும்படி செய்யக் கூடியவர்களா யிருக்கிற வுடனே, அவைகளுக்காக வெகுமதிகள் கொடுக்க முன் வருவது யுக்தமென்று தோற்றுகிறது.

மூன்றாவது அம்சம் பயிரை விருத்திசெய்வதற்கான பிரயத்தனங்களாம்; கிருஷிகர்கள் தங்கள் நெல் மாசூலை ஏகரா ஒன்றுக்கு விசேஷமாய் சராசரியில் 3600ராத்தலுக் கதிகமாக சுத்தமான அரிசிகிடைக்கும்படி விருத்தி செய்திருந்தார்கள்—இந்த ராஜதானியில் சராசரி மாசூல் ஏறக்குறைய 1,350ராத்தலாகவும், உத்தேசம் 2400ராத்தலுக்கு மேற்படாமலு மிருக்கிறது—ஆனால் இதோடு திருப்தி யடையாமல், அவர்கள் 4800ராத்தல் மாசூல் உண்டாவதற்கு வேண்டிய முயற்சி செய்துகொண்டிருந்தார்கள்.

நாலாவது அம்சம் என்னவென்றால், சில்லரையாக வல்லாமல் மொத்த விலைக்கு எரு முதலியது வாங்குவதற்காகவும், ஒவ்வொரு மெம்பரும் தனக்கு வேண்டிய நாற்றங்கால்களைத் தனியாய் ஏற்படுத்திக் கொள்வதற்குப் பதிலாகப் பொதுவில் நாற்றங்கால்கள் ஏற்படுத்தி விதைகளைச் சிக்கனமாய்க் கையாடுவதற்காகவும் மெம்பர்கள் ஒன்று சேர்வதாகும்.

வாஸ்தவத்தில், பொதுவான நாற்றங்கால்கள் முதலிய வேலை யம்சங்களெல்லாம் அதிவிசேஷ உபயோக முள்ளவைகளாயும் அதிகமாய் அனுபோகத்துக்கு வரக்கூடியவைகளாயும் இருக்கின்றன.

ஆனால், இந்த சங்கத்தார்கள் கூட்டுத்தொழில் முறைகளை யெல்லாம் அனுசரித்து விடவில்லை; தொழில் சமாஜங்கள் என்று நான் சொன்னவைகளை சாமானைச் சில்லரையாக வல்லாமல் மொத்தமாய் வாங்குவதனாலும் மெம்பர்களின் மாசூலை மொத்தமாய் விற்பனை செய்வதனாலுமாவது, கடன் கொடுப்பதற்கான கிராமக்கூட்டுத்தொழில் சங்கங்களைப்போல் மூலதனம் சர்ப்பரா செய்வதனாலாவது விவசாய சம்பந்தமான காரிய நிர்வாக அம்சத்தை விருத்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கங்களாகும். இந்த சமாஜங்களுள், பட்டை உற்பத்தி செய்வதற்காகவும் விற்பதற்காகவும் ஏற்பட்டிருப்பவைகளைப் போன்ற சிலசமாஜங்கள் பூர்வீக ஸ்தாபனங்களாயிருந்தாலும், 1900-ம் ஆண்டுச் சட்டத்தினால் அவைகளுக்குப் புதிய அபிவிருத்தி ஒன்று உண்டாயிற்று. ஆயினும், மெம்பர்களுக்கு நூற்றுக்குப் பத்துவீதம் வட்டிக்கு மூலதனம் உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட கடன் கொடுப்பதற்கான கிராமக் கூட்டுத்தொழில் சங்கங்களைப் பற்றியே நான் இங்கே பேசுவேன்; குடியானவர்களோ 100க்கு 30வீதமுதல் 40 வீதம் வரையில்வட்டி செலுத்துவதுவழக்கம். இந்த சமாஜங்கள் 1900-ம் வருஷத்தில்தான் ஆரம்பமானபோதிலும், அவற்றின் சங்கியை 1904-ம் வருஷத்தின் முடிவில் 1201ஆக விருத்தியாயி

ற்று; இவைகளில் 751 சமாஜங்கள் கூட்டுத் தொழிலுக்காகக் கடன் கொடுப்பதற்காக மாத்திரம் ஏற்பட்டவை; இவைகளிலே 404சமாஜங்கள் மாத்திரம் தங்கள் ஸ்திதியைப்பற்றி தெரிவித்தன; இவைகளில் 31,400மெம்பர்கள் இருந்தார்கள்; செலுத்தப்பட்ட சந்தாக்களின் தொகை 13லக்ஷம்; மெம்பர்களுக்குக் கடன் கொடுத்திருந்த 28 லட்சத்தில், 12லட்சம் திருப்பிச் செலுத்திவிடப்பட்டது; நிகர டிபாஸிட் தொகைகளும் விசேஷமாயிருந்தன. இந்த கிராம சங்கங்களுள் ஒன்றில் செய்யப்பட்ட வேலை என்ன வென்றால்:—

இது கடன்கொடுப்பதற்காக 1901-ம் ஸுத்தில் ஸ்தாபிக்கப்பட்ட உத்தரவாதம் வரையறுக்கப்படாத சங்கமாகும்; இதில் செலுத்தியிருக்கப்பட்ட மூலதனம் பங்கு ஒன்றுக்கு ரூ. 30வீதம், பாதி மெம்பர்களால் செலுத்தப்பட்டும் பாதி லாபத்தொகைகளிலிருந்து சேர்ந்தும் 20,172 ரூபாயாகிறது; டிபாஸிட் செய்யப்பட்ட தொகை 408 ரூபாய்தான்; கடனாகக் கொடுத்திருக்கும் தொகை ரூ. 9,426; கடன் கொடுப்பதன் நோக்கங்கள் பொருளுற்பத்திக் கேற்றவைகளாகவாவது செட்டை அபிவிர்த்தி செய்வதற்கேற்றவைகளாகவாவது இருக்கவேண்டும்; அதாவது, எரு, பட்டுப்பூச்சி, இஞ்சி முதலிய விதைகள் இவைகளை வாங்குவது, பூமியைக் கிரயத்துக்கு வாங்குவது, பழங்கடனைத் தீர்ப்பது என்று இம்மாதிரி யிருக்கவேண்டும். ஒவ்வொரு கடனும் எதற்காகக் கேட்கப்படுகிறதோ அதை விண்ணப்பத்தில் எழுதவேண்டும்; கடன் கொடுத்த பணம் துர்விநியோகமாகாமலிருக்கும்படி ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளப்படுகிறது; விதிகளுக்கு விரோதமாய் நடந்ததற்காகச் சில மெம்பர்களைச் சங்கத்திலிருந்து விலக்கியிருக்கிறது. சாதாரணமாய்க் கடன்கள் கடன்கேட்பவரின் ஜாமின்மேலேயே கொடுக்கப்படுகின்றன; ஆனால், கூட்டு ஜாமின்மேலாவது கொதுவையின்மேலாவது கூடக் கொடுக்கப்படலாம். மெம்பர்கள் இந்த சங்கத்தைச் சேர்ந்திருப்பதனால் அவர்கள் செல்வ நிலையிலிருப்பதாக உறுதியாய்ச் சொல்லப்படுகிறது; அவர்களின் குடித்தனச் செட்டு விருத்தியாய் வருவதோடு கூட, அவர்களுக்குள் (பரஸ்பரம் விஷயங்களைச் சொல்லித் தெரிந்து கொள்வதற்காக) அடிக்கடி கூட்டங்கள் கூடுகிறார்கள்; அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்காக மாலைப் பள்ளிக்கூடம் ஒன்று ஏறபடுத்தி யிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தார் டிபாஸிட் தொகைகள் சீக்கிரத்தில் அதிகமாகுமென்று நம்புவதுமல்லாமல், கடன்கள் இதுவரையில் கேட்கப்பட்டதுபோல் மூன்றத்தனை கேட்கப்படுமென்றும் எதிர்பார்க்கிறார்கள்; அல்லாமலும், இந்தப்படி வாங்கும் கடன்களால் உண்டாகக்கூடும் லாபமவ்வளவையும் உபயோகப்படுத்திக் கொள்வதற்காக, சரக்குவாங்கும் சங்கமொன்றை ஸ்தாபிக்க மெம்பர்கள் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்; அவர்களில் ஒவ்வொருவரும் வாங்க வேண்டிய எருவைத் தனித்தனியாய் வாங்காமல் ஒரே மொத்தமாய் வாங்கும்படி ஒன்றுசேர்ந்து, அதன் மூலமாய் வாங்கும் சரக்குகள் நிச்சயமாக மலிவாயும் தடமாயும் இருக்கும்படிச் செய்து லாபமடையக் கூடும்.''

கடன் கொடுப்பதற்கான இந்த சங்கங்களைத் தவிர, மாசூலை வாங்குவதற்கும் விற்பதற்கும் ஏற்படுத்தப்பட்ட சங்கங்களால் விசேஷ வேலை நடந்து கொண்டிருந்தது; விற்பனைச் சங்கங்கள்மாத்திரம் 1904-ம் ஸுத்தில் இருபது லட்சத்துக்குமேல் அவற்றைச் சேர்ந்த மெம்பர்களுக்காக மாசூல் விற்பனை செய்தன.

இப்போது ஜப்பானிய கிராம சங்கங்களுக்கும் முக்கியமாய் கடன் கொடுப்பதற்கான கூட்டுத்தொழில் சங்கங்களுக்கும் முன்மாதிரியாயுள்ள சங்கங்கள் ஐரோப்பாவிலே இருக்கின்றன; முக்கியமாய் ரெய்பெய்ஸென் முறையை அனுசரித்த கடன் கொடுப்பதற்கான கிராம சங்கங்கள் அப்படிப்பட்ட முன்மாதிரியான சங்கங்களாகும்; இவைகள் 1851–ம் ஸுத்தில் கஷ்டத்துடன் மெதுவாய் ஆரம்பமாகி, இப்போது ஜர்மனியில்மாத்திரம் கிட்டத்தட்ட 10,000சங்கங்கள் இருக்கின்றன; அவைகளில் லட்சக்கணக்கான மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள்; பல லட்ச பவுன்கணக்காய் வருஷ வாரியில் லேவாதேவி நடந்துவருகிறது. இந்தச் சங்கங்கள் செய்த வேலையைப்பற்றி சில நாள்களுக்கு முன் நான் செய்த ஒரு பிரசங்கத்தில் சுருக்கமாய்ச் சொன்னேன்; அப்போது அப்படிப்பட்ட சங்கங்களால், யோக்கியதையையும் போஜனபான முதலியவைகளில் மிதப்பான்மையையும் தன்முயற்சியையும் பரஸ்பர சகாயத்தையும் பரஸ்பர நம்பிக்கை கொண்டு சகோதரத்துவம் பாராட்ட வேண்டுமென்னும் கருத்தையும் அதற் கிசைந்தபடி நடப்பையும் காரிய நிர்வாகத் திறமையையும் உண்டாக்குவதாய், மனிதர்களின் குணத்திலேற்படும் மாறுதலைக் குறித்து முக்கியமாய்ப் பேசினேன். ஆகவே, இந்தியாவில் அப்படிப்பட்ட சங்கங்களிருப்பது அத்தியாவசியக மென்றும் அவைகளால் விசேஷமான பிரயோஜனம் விளையக்கூடுமென்றும் இந்தக் கைத்தொழில் சங்கத்தாருக்கும் அவர்களின் சிநேகிதர்களுக்கும் இன்னொரு முறை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். கூட்டுத்தொழில் சங்க விஷயமான எண்ணத்தை இந்த ராஜதானியில் நாட்டி யிருக்கிறது; ஆகவே, அதனால் உண்டான முதற் பலிதங்கள் ஏற்கனவே அனுபவிக்கப்பட்டு வருவதைப் பார்க்க எனக்குச் சந்தோஷமா யிருக்கிறது.

ஏனென்றால், விவசாய வித்தையை விருத்தி செய்வதற்கான கிராம விவசாய சங்கங்கள் இன்னும் குறைவாயிருந்த போதிலும், இந்தியா முழுவதும் முக்கியமாய் நம்முடைய ராஜதானியிலே கடன் கொடுப்பதற்கான கூட்டுத்தொழில் சங்கங்களின் விஷயமாய் ஒரு ஆச்சரியகரமான முயற்சி ஆரம்பமா யிருப்பது சாதாரணமாய்த் தெரிந்திராது. 1904–ம் ஸுத்து ஆக்டை அனுசரித்துக் கவர்ன்மெண்டார் ரெஜிஸ்ட்ரார்களென்று சொல்லப்படும் உத்தியோகஸ்தர்களை ஒவ்வொரு ராஜதானி அல்லது மாகாணத்திலும் நியமித்தார்கள்; கூட்டுத்தொழில் முயற்சியென்னும் புதிய கருத்தை ஜனங்களுக்குள் பரவச்செய்வதே அவர்கள் வாஸ்தவமாய்ச் செய்ய வேண்டிய பிரதம காரியமாயிருக்கிறது. அவர்களுக் குண்டான காரியசித்தியும், அந்தப்

புதிய கருத்தில் கிராமத்தார்கள் காட்டிய பிரீதியும் எவ்வளவோ அதிகமாயிருந்தன; எப்படி யென்றால், ரெய்பெய்ஸென் என்பவர் ஜெர்மனியில் நாலு சங்கங்களை ஸ்தாபிக்கச் செய்யக்கூடியவரா யிருப்பதற்கு முன் பதினேழு வருஷம் தாமாய் முயன்று வேலைசெய்யவேண்டி யிருந்தும், இந்தியாவிலோ ஐந்து வருஷத்துக்குக் குறைவான காலத்துக்குள்ளாகவே, 1,84,000 மெம்பர்களும், 80 லட்சம் மூலதனமும், 84 லட்சத்துக்குக் கொடுத்த கடன் தொகையும் உள்ளவைகளாய் ஆயிரத்துக் கதிகமாக எத்தனையோ சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சென்னை ராஜதானியிலே 1909-ம்வரு மார்ச் மாதக் கடைசியில் வாஸ்தவமாய் வேலை நடத்திவந்த சங்கங்களின் சங்கியை 180; இவைகள் அனேகமாய் எல்லாம் கிராமசங்கங்களே; இன்னும் சங்கங்கள் ஏற்படுத்தப்படுவதற்காக 300 விண்ணப்பங்களுக்கு மேல் வந்திருந்தன; இவைகளில் சுமார் 16,000 மெம்பர்கள் இருந்தார்கள்; இவர்களில் முக்கால் பங்கு பேர் பயிர்த்தொழில் செய்பவர்கள்; அவர்களிடம் பங்கு மூலதனத் தொகையாக 2 லட்சமும், மெம்பர்களின் டிபாஸிட் தொகையாக 5 லட்சமும், பாங்குகளிலிருந்து கடன் வாங்கின மூலதனத்தொகையாக $6\frac{1}{2}$ லட்சமும், மெம்பரல்லாதவர்கள் கடன் கொடுத்த தொகையாக 3 லட்சமும் ஆக மொத்தம் 18லட்சம் ஐவேஜாக இருந்தது; இதில் $\frac{1}{2}$ லட்சத்துக்குக் குறைந்த தொகை கவர்ன்மெண்டிலிருந்து கிடைத்தது. பணம் மெம்பர்களுக்கு மாத்திரம் கடன்கொடுக்கப்பட்டது; அப்படிகொடுத்த கடன் அனேகமாய் 100ரூபாய்க்குக் குறைந்த தொகைகளாகவும், சரிபாதி பாகம் 50 ரூபாய்க்குக் குறைந்த தொகைகளாகவும் கொடுக்கப்பட்டது; கடன் தொகைகளில் 100 க்கு 60 வெறும் நபர்ஜாமீன்பேரில், அதாவது கடன் வாங்கினவர் இன்னும் வேறே இரண்டு மெம்பர்கள் ஆகிய இவர்களுடைய சொந்த நாணயத்தின்பேரில் கொடுக்கப்பட்டது; மெம்பர்கள் ஒருவரை யொருவர் நம்பத்தெரிந்து கொண்டிருக்கும் பழைய சங்கங்களிலே, கொடுத்த கடன்தொகை 100 க்கு 60 என்னும் அளவைக்காட்டிலும் அதிகமாயிருந்தது; இதனால் யோக்கியமாய் விவகாரம் நடத்துவதும் ஒருவரை யொருவர் சகோதரராகப் பாராட்டி நம்புவதும் விசேஷமாய் விருத்தியடைந் திருப்பதாகத் தெரிகிறது. கிட்டத்தட்ட சகலகடன்களும் உற்பத்தி உண்டாக்கும் காரியங்களுக்காகவே கொடுக்கப்பட்டன; அப்படிப்பட்ட காரியங்களிலே, அக்கிரம வட்டிக்கு வாங்கின கடன்களை (3 லட்சம்) தீர்ப்பது, கால் நடைகள் வாங்குவது, விதை வாங்குவது, நிலச் சீர்திருத்தங்கள் செய்வது முதலானவைகளும் அடங்கியிருந்தன. இந்தக்கடன்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வட்டி மிதமாகவே யிருந்தது; அதாவது, 100க்கு $6\frac{1}{4}$ முதல் $9\frac{3}{8}$க்கு மேற்படாமலிருந்தது. கடன் கொடுப்பதிலும் வேலை நடத்துவதிலும் இந்தச் சங்கங்களின் காரிய நிர்வாகத்திறமை விசேஷமாய் விருத்தியடைந்தது; கடன்கொடுத்த தொகைகளில் அனேகமாய் எல்லாம் ஒரு வருஷத்துக்குக் குறைந்த கால அளவுக்கே கொடுக்கப்பட்டன; அப்படிப்பட்ட கடன்கள் காலந்தவறாமல் சரியாய்த் திருப்பிச் செலுத்

தப்பட்ட படியால், கொடுக்கப்பட்ட 9,313 கடன்களில் 47 கடன் விஷயமாய்த்தான் வியாஜ்ஜியம் நடத்துவது அவசியமாயிருந்தது. இந்த சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டதனால், மெம்பர்களுக்கு அனேக விதங்களில் அனுகூலமுண்டானது மாத்திரமல்லாமல், அவர்களுடைய அக்கம்பக்கத்திலே கடன் கொடுக்கும் ஸாவ்கார்கள் வாங்கும் வட்டியும் விசேஷமாய் இறங்கிவிட்டது; எவ்விடத்திலும் உண்டாகும் அனுபோகத்தைக் கொண்டு இப்படி நடக்குமென்று முன்னதாக அறியப்பட்டது. ஆனால், இதைப் பற்றிய விசேஷ சந்தோஷகரமான பல விஷயங்களில் ஒன்று என்னவென்றால், ஒவ்வொரு மெம்பரின் பங்குத்தொகை சம்பந்தப்பட்ட மட்டிலும் வரையறுக்கப்பட்ட பொறுப்பின் பேரில் ஏற்படுத்தப்பட்ட சில சங்கங்கள் வரையறையில்லாத பொறுப்புள்ள சங்கங்களாக மாறிவிட்டன; அதாவது, இந்த சங்கங்களிலுள்ள ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தின் சகல கடன்களுக்கும் உத்தரவாதிபாக வேண்டியவராவார்; புதிய சங்கங்களெல்லாம் இந்தக் கோட்பாடின்படியே ஏற்படுத்தப்படுகின்றன; ஏனென்றால், இந்த மாதிரி பொறுப்பு இருக்கும் பட்சத்தில், காரிய நிர்வாகம் செய்யும் பஞ்சாயத்தார் மெம்பர்களைச் சேர்த்துக்கொள்வதில் அதிக ஜாக்கிரதையோடும் பகுத்தறிவோடும் நடந்துகொள்வதோடு, கடன் கொடுப்பதிலும் காரிய நிர்வாகம் செய்வதிலும் அதிக ஜாக்கிரதையாயும் இருப்பார்கள். இந்தக் கோட்பாடுதான் ரெய்பெய்ஸன் என்பவருடைய உண்மையான கோட்பாடு; இது குணத்தையும், யோக்கியதையையும், பரஸ்பர நம்பிக்கையையும் விருத்தி செய்வதற்கு சாதனமாயிருப்பதில் விசேஷ முக்கியமானது; இது இந்தியாவில் நிறைவேறுவது அசாத்தியமென்று ஏளனம் செய்யப்பட்டது; ஆனால், அப்படி அசாத்தியமென்று சொல்லப்பட்ட காரியமானது சீக்கிரத்தில் நிறைவேறின காரியமாய்விட்டது. இந்தியர்களின் குணவிசேஷத்தை நாம் மதிப்பிடுவதில் சில சமயம் தவறிப் போகிறோமல்லவா?

செங்கற்பட்டு ஜில்லாவில் ஒரு சங்கமிருக்கிறது; அதைச் சேர்ந்த கனவான்கள்—எல்லாரும் இந்தியர்களென்றே நம்புகிறேன்—கூட்டுத்தொழில் சங்கங்களை நிர்வாகஞ்செய்யுங் காரியத்தில் தாங்களே சேர்ந்திருப்பதோடு ஐக்கிய நாணயத்தினாலுண்டாகும் பல நன்மைகளையும் நன்கறிந்தவர்களாய் தமக்குள்ளாகவே ஒரு பிரசாரகசபை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; அதைச்சேர்ந்த மெம்பர்கள் சகலவிதங்களிலும் இப்படிப்பட்ட நாட்டு நாணய முறையைப்பற்றிப் பிரசங்கஞ் செய்து அதற்கு உதவிசெய்து வருகிறார்கள். சேலத்தில்கூட இதுவிஷயமாய் கௌரவார்த்தமாக யோசனை சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் கிராமசங்கங்களை ஆரம்பித்து, அவைகள் செய்யும் காரியங்களை மேற்பார்வையிட்டு அவைகளுக்குச் சகாயம் செய்து வருகிறார்கள்; செங்கற்பட்டு சேலம் இந்த ஜில்லாக்களிலேயே கிராம சங்கங்கள் அதி விசேஷமாய் விருத்தியா யிருக்கின்றன வென்பது கவனிக்கத்தக்கது.

இப்படிப்பட்ட வேலை உத்தமமான தர்மத்தைப் போதிக்கும் வேலையல்லவா? இது சகல ஜாதியார்களுக்குள்ளும் வகுப்பார்களுக்குள்ளும் ஐக்கியத்தையும் சகோதரப்பான்மையையும் விசேஷமாய்ப் பெருகச்செய்வதும், பொதுவாய் ஜனங்களுடைய க்ஷேமத்தையும் குணத்தையும் அதிகமாக விருத்திபடுத்துவதுமான காரியமல்லவா? இந்தக் கைத்தொழில் சங்கத்தாரும் இதன் சிநேகிதர்களும்—எல்லோரும் சீக்கிரத்தில் மெம்பர்களாவார்கள் என்று நம்புகிறேன்—இப்போது ஆரம்பமாகிவரும் இந்தப் பெரிய முயற்சியை ஆராய்ந்து, அதி உத்தமமான வழிகளில் மாத்திரமல்லாமல் இன்னும் விஸ்தாரமான மார்க்கத்திலும் அதை விருத்திசெய்ய வழிதேடமாட்டார்களா? ஜெர்மனி, இடலி, ஐர்லண்ட் இந்த தேசங்களிலுள்ள குருமார்கள் கூட்டுத்தொழில் முயற்சிக்குத் தலைவர்களாயிருந்து எவ்வளவோ வேலைசெய்திருக்கிறார்கள்; அவர்களைப்போல் மனிதர்களைக் கடைத்தேறச்செய்யும் வேலையை வைத்துக்கொண்டிருக்கிற விஷனரிகளென்னும் மதபோதகர்களும் சிறந்த தருணங்களும் செல்வாக்கும் வாய்ந்தவர்களா யிருப்பதால், அவர்கள் இந்தியாவிலே இப்படிப்பட்ட பரோபகாரமான கிறிஸ்தவ கைங்கரியத்தைச் செய்யக்கூடும்.

என் பிரசங்கம் முடிந்துவிட்டது; நான் இன்று பேசின பல வார்த்தைகளில் சில நல்ல விதைகளும் இருந்திருக்கலாம்; அப்படியிருக்கும் பட்சத்தில் அவை நல்ல நிலத்தில் விழுந்திருக்குமென்று எனக்குத் தெரியும்; ஆகவே, ஸஸ்யாதிபதியாகிய ஸர்வேசுவரனுடைய ஆசீர்வாதத்தால் அப்படிப்பட்ட நிலம் நம்முடைய சகோதரர்களுக்குப் பணிவிடைசெய்யும் விஷயத்தில் பல நூறுமடங்காக மாத்திரமேயல்லாமல் அநந்தமாகவும் பலிதமளிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

எப். ஏ. நிகல்ஸன்.

நாட்டு பாங்கிகள்.

கத்தோலிக்குப் பாதிரியொருவருடன் நான் சில விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன்; அவர் மதபோதனை செய்யும் கிராம வட்டத்தில் ஒரு நாட்டு பாங்கி இருக்கிறது; அவருடன் நான் பேசின விஷயங்கள் உங்கள் பத்திரிகையைப் படிக்கும் சிலர்களுக்கு ஸ்வாரஸ்யமாயிருக்குமென்று நம்பி அவைகளை அடியிற் கண்டபடி உங்களுக்கு எழுதியனுப்புகிறேன்.

"நாட்டு பாங்கி யென்றால் என்ன வென்பதைத் தாங்கள் தயவு செய்து எனக்கு விவரித்துச் சொல்வீர்களா?" என்று நான் முதலில் கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னதாவது: "நாட்டு பாங்கிகளுக்கு ஐக்கிய நாணயச் சங்கங்களென்று பெயர். அவைகள், சிக்கனமாயும் முன்னுணர்ச்சியுடனும் போக்கியமாயும் நடந்துகொள்ளும்படி தூண்டும் நோக்கத்துடன், பாங்கிகளைப்போல் காரியம் நடத்தி, ஏழை ஜனங்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கும் தர்மார்த்தமாகவோ பரோபகாரார்த்தமாகவோ ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களாகும். அவைகள்--பழி பாவத்துக்கு அஞ்சாமல் வட்டிக்குக் கடன் கொடுக்கும் சாவுகார்கள் கையில் அகப்பட்டுத் துன்பப்படும் ஏழைகளின் கதியைக்கண்டு மனதிரங்கின பரோபகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டன; ஆனால், அவைகள் ஜனங்களின் ஏழைத்தனத்தை நிவர்த்திசெய்து அவர்களின் லௌகீக அந்தஸ்தை உயர்த்துவதற்கும் ஏற்றவைகளா யிருக்கின்றன. இந்த இந்து தேசத்திலே விசாரித்ததில், சாதாரண ஜனங்களைப் பிடுங்கித்தின்னும் அநீத வட்டி வாங்குகிற கல்நெஞ்சங் கொண்ட ஸாவுகார்கள் பெரும் பட்டாளக் கணக்காய் இருக்கிறார்களென்று பொது ஜனங்களுக்குத் தெரியவந்திருக்கிறது; மானுட வுருக்கொண்ட இந்த கழுகுகள் நிர்க்கதியான மூட ஜனங்களை வாயில் போட்டுக்கொள்வது மேலும் மேலும் அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது. இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான ஸ்திதியை ஒருவாறு பரிகரிப்பதற்காக, கவர்ன்மென்டார் 1904-ம் ஞுத்து 10-வது ஆக்டென்னும் ஒரு சிறந்த சட்டத்தைச் செய்து அதன் மூலமாய் நாட்டு பாங்கிகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்; இப்படிப்பட்ட சங்கங்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு, பாங்கிகளுக்கு எழுதிக்கொடுக்கப்படும் தஸ்தவேஜுகளுக்கு ஸ்டாம்ப் கட்டணமும் ரெஜிஸ்டர் செய்யும் கட்டணமும் வேண்டியதில்லை யென்று கவர்ன்மென்டார் விதித்திருப்பது மாத்திர

மல்லாமல், ஷை சங்கங்களை ஏற்படுத்தி அவைகளைப் பெருகச் செய்வதற்காக ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அடங்கிய ஒரு பிரத்தியேகமான டிபார்ட்மென்டை உண்டாக்கியு மிருக்கிறார்கள்.

"குறைந்த வட்டி வீதம் ஏற்படுத்துவதனால் ஏழைகளுக்கு உண்டாகும் நன்மை இவ்வளவென்பதை அவ்வவ்விடத்திலுள்ள நிலைமைகளை அனுசரித்து மதிப்பிடவேண்டும்; அந்த நன்மையானது இடத்துக்கு இடம் வித்தியாசப்படுவது அவசியமே. இங்கேம—என்னும் ஊரில் உள்ளூர் ஸாவ்கார்கள் சாதாரணமாய் மாதம் 1 க்கு ரூபா 1 க்கு 3 அல்லது 4 பை வீதம் வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள்; அந்த வட்டியானது வருஷம் 1க்கு 100க்கு $18\frac{3}{4}$ அல்லது 25 வீதம் ஆகிறது. நாட்டு பாங்கார் மாதம் 1க்கு ரூபா 1 க்கு $1\frac{1}{2}$பை வீதம் வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள்; இந்த வட்டியானது வருஷம் 1 க்கு 100 க்கு $9\frac{3}{8}$ வீதம் ஆகிறது; ஸாவ்கார்கள் வாங்கும் வட்டி வீதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மாத்திரமே இந்த வட்டி வீதம் குறைவான தென்று சொல்லலாமென்பது உண்மையேயானாலும், தற்காலத்துக்கு இதுவே பெருத்த உபகாரமாகும்; இது இனிமேல் குறைக்கப்படலாம். நாட்டுபாங்கியாருடன் லேவாதேவி நடத்திக்கொண்டிருக்கும் ஜனங்களுக்குப் பிரதி ஆயிரம் ரூபாயின் பேரிலும் உண்டாகும் லாபத்தை அடியிற்கண்ட விதமாக நாம் கணக்கிடலாம்:—

(1) மாதம் 1-க்கு ரூபா 1-க்கு 3-பை செலுத்தினவர்களுக்கு
ஒருவருஷத்துக்கு லாபம் ரூ. 93—12—0
பத்து வருஷத்துக்கு லாபம் ,, 937— 8—0

(2) மாதம் 1-க்கு ரூபா 1-க்கு 4-பை செலுத்தினவர்களுக்கு
ஒருவருஷத்துக்கு லாபம் ரூ. 155—4—0
பத்து வருஷத்துக்கு லாபம் ,, 1552—8—0

"நாட்டுபாங்கி மூலமாய் உங்கள் ஜனங்கள் பணக்காரர்களாய் விடுகிறார்களா?"

"பணக்காரர்களாய் விடுகிறார்களென்பதல்ல, அவர்களின் வறுமைப் பளுவு குறைந்துபோய் அதற்குத்தக்கபடி அவர்களின் கஷ்டமும் மட்டுப்படும்."

"அவ்வளவு மலிவான வட்டிக்குக் கடன் கொடுக்கும்படியா யிருப்பதற்கு உங்கள் நாட்டு பாங்கியாருக்குப் பணம் அல்லது நிதி எப்படி கிடைக்கிறது? அதைத் தயவுசெய்து சொல்லுங்கள்."

"முதலில் செய்யவேண்டிய தென்னவென்றால், பலபேர் ஒன்றுகூடி ஒரு ஐக்கிய நாணயச் சங்கமாய்ச் சேர்ந்து வேலை செய்யவேண்டும்; அந்த சங்கத்தை 1904-ம் ஸுத்து 10-வது ஆக்டின்படி உத்தரவாதம் வரையறுக்கப்

டாததாய் ரெஜிஸ்டர் செய்யவேண்டும். இதனால் அந்த பாங்கி வேலைசெய்யத் தொடங்குகிறது; இந்த பாங்கி மெத்தவும் சுலபமான பாங்கி யென்பது வாஸ்தவமே யென்றாலும், உண்மையான பாங்கியேயாம்."

"பாங்கியென்றால் என்ன?"—"பாங்கி யென்பது நாணயத்தின்மேல் பண லேவாதேவி செய்யும் ஒரு ஸ்தாபனமாம்; தன்னிடத்தில் பணம் பந்தோபஸ்தாய் இருக்குமென்று அது உறுதி காட்டுவதால் அதில் பணத்தொகை டிபாஸிட்டாகச் சேருகிறது; அந்த டிபாஸிட் தொகைகளில் ஒரு பாகத்தை, திடீரென்று பணங்கொடுக்கும்படி கேட்கப்படுகிறபோது அதைக் கொடுப்பதற்குச் சேம நிதியாக வைத்துக் கொண்டு, மற்றதைப் பலவகையான கடன் கொடுப்பதற்காக உபயோகப்படுத்துகிறது; இப்படிக் கடன்கொடுப்பதிலிருந்து அந்த பாங்கிக்கு லாபம் உண்டாகிறது. இக்காரணத்தினால் பாங்கியானது வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கு உபயோகமா யிருப்பதுமாத்திரமல்லாமல், இன்றியமையாததாகவு மிருக்கிறது; அது அவர்களுக்கு மிகுதிப் பணத்தைப் போட்டுவைக்க லாபகரமான நிதியாய் ஒரு விதத்திலும், கடன் கொடுக்கும் ஸ்தாபனமாக இன்னொரு விதத்திலும் உதவுகின்றது. பணத்தை லாபத்துக்குப் போட்டுவைப்பதற்காகக் கடன் கொடுக்க விரும்புவோருக்கும் பணம் கடன்வாங்க விரும்புவோருக்கும் உண்டாகக் கூடிய கஷ்டமும் தொந்தரவும் பாங்கியினால் வெகுமட்டிலும் குறைகின்றன. இந்த நோக்கத்தைக் மத்திலுள்ள ஜன சமூகத்தாரில் எளிய வகுப்பாரின் பொருட்டு நிறைவேற்ற நாட்டு பாங்கிகள் உழைக்கின்றன.

"வேலை நடத்தும் அளவிலும், சுலபமான லேவாதேவிகள் நடத்துவதிலும், இவை எல்லாவற்றையுங் காட்டிலும் பரோபகாரத் தன்மையிலும் நாட்டு பாங்கிகளுக்கும் சாதாரண பாங்கிகளுக்கும் அதிக வித்தியாசம் இருந்தபோதிலும், நாட்டுபாங்கிகள் வாஸ்தவமான பாங்கிகளேயாம். அவைகளை 'கிரமமாய் பணம் மிகுத்திவரும்படி தூண்டுவதற்காகவும், வட்டி விஷயமாயும் திருப்பிச் செலுத்தும் விஷயமாயும் சுலபமான ஷரத்துகளின் மேல் கடன் கொடுப்பதற்காகவும் ஜனங்களாலேயே ஏற்படுத்தி, ஒழுங்கமைத்து நடத்தப்பட்ட பரஸ்பர உபகார சங்கங்கள்' என்று விவரித்திருப்பது சரியானதேயாகும்.

"இது விஷயமாய்த் தொழில் முறையை யொட்டிய சங்கதி உங்களுக்குத் தெரிய வேண்டுமானால், சென்னை (கூட்டுத்தொழில்) வர்த்தமானியையாவது (சென்னப்பட்டணத்தைச்சேர்ந்த சேபாக்கத்தில் பிரசுரிக்கப்படுவது, வருஷசந்தா ரூ. 1-8), ஸி. டிவைன் என்பவர் இயற்றிய 'பீபில்ஸ் பாங்க்' என்னும் புத்தகத்தையாவது (ஹிக்கின்பாதம் கம்பெனி, 1-ம் பக்கம்) கருத்தாய்ப் படிக்கும்படி சிபாரிசு செய்வேன்."

"அப்படிப்பட்ட சங்கங்கள் கிராமங்களிலே எப்படி பந்தோபஸ்தாய் இருக்கக் கூடுமென்பதும், ஐவேஜு சேர்வதற்காக ஜனங்களைப் பணம் கட்டி

வைக்கும்படித் தூண்ட அவைகளால் எப்படி முடியுமென்பதும் எனக்கு ஆச்சரியமாயிருக்கின்றன. கவர்ன்மெண்டார் அவைகளுக்குப் பணங்கொடுத்து உதவுகிறார்களா ?''

"இல்லை, கவர்ன்மென்டார் அவைகளுக்குப் பணமாவது மூலதனமாவது கொடுத்து உதவுவதில்லை. நாட்டு பாங்கார் தங்கள் சொந்த நாணயத்தையே நம்பி வேலைநடத்த வேண்டும்; அதாவது, தங்களிடம் பணம்கட்டி வைக்கிறவர்களுக்குத் தாங்கள் காட்டும் ஈடு அல்லது பொறுப்பையும், தாங்கள் உத்தரவாதம் வரையறுக்கப்படாத ஐக்கிய நாணயச்சங்கங்களாக 1904-ம் ஆண்டு 10-வது ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பது காரணமாகத் தங்களுக்குச் செய்யப்பட்டிருக்கும் பரோபகார சகாயத்தையுமே நம்பி வேலை நடத்தவேண்டும். மேலே கண்ட நாணயம் என்னும் சங்கேத வார்த்தையின் அர்த்தமென்ன வென்றால், பாங்கைச்சேர்ந்த மெம்பர்களின் சொத்து முழுமையும், பாங்கார் கடன் வாங்கும் பணத்துக்காகவும் பாங்கில் டிபாஸிட்டுகளாக வரப்பெற்றுக் கொண்ட தொகைகளுக்காகவும் ஈடாகக் காட்டப்படுகிறதென்பதாம். ஆகையால், பாங்கார் கடன்தீர்க்க வகையில்லாதவர்களாய்ப் போகும் பட்சத்திலாவது, அவர்கள் வாங்கிய கடன்களைத் தீர்க்கத் தவறிப்போய்விடும் பட்சத்திலாவது, இந்த (பூஸ்திதியான) சொத்தெல்லாம் கோர்ட்டுகள்மூலமாய் விற்பனை செய்யப்படுவதற்குள்ளானதாகும். இங்கே ம——என்னும் ஊரிலே, எங்களுடைய பாங்கார் கண்டிப்பான மதிப்பின்படி ஒன்றரை லட்சம் பெறுமானமுள்ள பூஸ்திதியை ஈடுகாட்டியிருக்கிறார்கள்; எங்கள் கடன்களோ இப்போது 30)(ரூபாய்க்குக் கொஞ்சம் குறைவாயிருக்கிறது; மேலும், ரெஜிஸ்ட்ராரின் விசேஷ அனுமதியில்லாமல் 5,000 ரூபாய்க்கு மேற்பட்டு நாங்கள் கடன்பட்டிருப்பதற்கு இடங்கொடுப்பதில்லை.''

"அப்படியிருக்கும்பட்சத்தில், வாஸ்தவமாகவே உங்கள் பாங்கியில் பணம் கட்டுகிறவர்களுக்கு பயமே கிடையாது.''

"எங்கள் ஊரார் பாங்கியின் திரவியநிலை சரியான ஸ்திதியில் இருக்கிறதென்பதை ஸ்தாபிக்க எப்படிப்பட்ட விசாரணைக்கும் உட்படத் தயாராயிருக்கிறார்கள். எங்கள் பாங்கியில் பணம்போட்டு வைப்பவர்களுக்கு நஷ்டமுண்டாகக் கூடுமென்று அச்சமுண்டாகும் பட்சத்தில், அந்த அச்சத்தை யெல்லாம் அவர்களின் மனதிலிருந்து நீக்குவதற்கு இந்த சங்கதியே போதுமானதா யிருக்கும். உங்கள் பாங்கியானது அது வாங்கின கடன்களைக் கொடாமல் நிராகரித்தால் என்ன சம்பவிக்குமென்று நீங்கள் கேட்கும் பட்சத்தில், அதற்கு பதில்சொல்வது தெரிந்தே யிருக்கிறது; அதாவது, அது காட்டுகிற ஈடானது அதைச் சேர்ந்த மெம்பர்களின் கடன்களைத் தீர்ப்பதற்காக கோர்ட்டு மூலமாய் விற்பனை செய்யப்படுமென்பது தான். அப்

படி செய்யவேண்டியது எந்த நாட்டு பாங்கியிலும் ஒரு போதும் அவசியமாகக் காணப்படவில்லை; ஏனென்றால், அதன் மெம்பர்கள் உத்தம எண்ணங்கள் காரணமாக அல்லாவிட்டாலும், தங்களின் கூட்டான க்ஷேம லாபங்களுக்கு அப்படிப்பட்ட பெருத்த ஆபத்து சம்பவிக்குமேயென்ற பயத்தினாலாவது கண்டிப்பாக யோக்கியர்களாயிருக்கிறார்கள்.''

"நாட்டு பாங்கிகள் இவ்வளவு பந்தோபஸ்தானவைகளாயிருக்கிறபடியால், கடன் கொடுப்பவர்களை யெல்லாம் அவைகளில் பணம் போட்டு வைக்கும்படி தூண்டி அவர்களுக்குப் போதிக்கவேண்டும்; அவர்கள் அப்படி செய்யும் பட்சத்தில், தனி நபர்களுக்குக் கடன் கொடுப்பதால் உண்டாகும் அபாயம் அப்போது உண்டாகாது; மேலும், பெருத்த பாங்குகளுக்கு எப்போதாவது ஒருகால் திடீரென்று சம்பவிக்கும் இடையூறுகளுக்கும் அவர்கள் உள்ளாகமாட்டார்கள். ஆயினும், என்மனதில் இன்னும் ஒரு கஷ்டம் இருந்து கொண்டிருக்கிறது. நாட்டு பாங்கார்கள் தங்கள் கடன்காரர்களுக்கு ஈடுகாட்டுவது போல், அந்த பாங்கார்களிட மிருந்து கடன்வாங்குகிறவர்களும் அவர்களுக்கு ஈடு காட்டுகிறார்களா ?''

"அதே விதமாய் இவர்களுக்கு ஈடு கிடைக்காமற்போனாலும், வேறே விதமாயாகிலும் இவர்களுக்கு ஈடு கிடைக்கக்கூடும், கிடைக்கவும் வேண்டும். தங்களிடம் கடன்வாங்கினவர்களிட மிருந்து ஸ்டாம்ப் கட்டண மில்லாமலும் ரெஜிஸ்டர் செய்வதற்கான கட்டண மில்லாமலும் நில அடமான பத்திரங்களாவது கடன் பத்திரங்களாவது எழுதி வாங்கிக்கொள்வதனால் இவர்களுக்கு அந்த ஈடுகிடைக்கிறது. நடக்கும் லேவாதேவிகள் பந்தோபஸ்தாய்ச் செய்யப்படுவதற்காக, நிர்வாகக் கமிட்டியார்கள் பாங்கைச் சேர்ந்த மெம்பர்களுக்குமாத்திரம் கடன் கொடுக்கிறார்கள்; அந்த மெம்பர்களையும் அண்டையயலிலுள்ள ஒரு கிராமம் அல்லது சில கிராமங்களிலிருந்தே பொறுக்கி யெடுக்கிறார்கள்; ஏனென்றால், கிராமங்களிலே ஒவ்வொருவரும் மற்றவர்களையும் அவர்களைப்பற்றிய சகல விஷயங்களையும் அறிந்திருக்கிறபடியால், அந்த அருமையான சங்கதியைத் தெரிந்துகொள்வதற்காகவே அப்படி செய்கிறார்கள். ஆகவே, இன்னார் நம்பத்தக்கவர்கள் இன்னார் நம்பத்தகாதவர்களென்று பிரித்தறிவது சுலபமாயிருக்கிறது. வியாஜ்ஜியம் தொடரும் சுபாவமுள்ளவர்களையாவது பிறர் பணத்தை வாங்கி கொடுக்காமலே யிருக்கும் வழக்க முடையவர்களையாவது நாட்டு பாங்கியார் ஏற்றுக்கொள்ளமாட்டார்களே யல்லாமல், யோக்கியர்களாயும் கஷ்டப்பட்டு உழைப்பவர்களாயுமுள்ள நபர்களை ஏற்றுக்கொள்வார்கள்; இவ்விதமாகத்தான் யோக்கியதையும் நல்ல நடத்தையும் விருத்தியாகும்படி நாட்டுபாங்கார் உற்சாகப்படுத்தி வருகிறார்கள்.''

"நாட்டு பாங்கார் தங்களிடம் கடன் வாங்குகிறவர்களிடத்திலிருந்து தகுதியான ஈடு பெறுகிறார்களென்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ள

வேண்டும்; அப்படியில்லாவிட்டாலும், இந்தக் காரியத்துக்காக சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிற தென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனால், மானேஜர்களைக் குறித்து அல்லது நீங்கள் சொன்னபடி நிர்வாகக் கம்மிட்டியாரைக் குறித்து என் மனதில் இன்னொரு கஷ்டம் இப்போது தோன்றுகிறது."

"நல்லது, மானேஜர்கள் அல்லது டைரெக்டர்களைப் பிறர் முழுவதும் நம்பக்கூடியதா யிருக்கும்பொருட்டு அவர்கள் போதுமான சொத்துடையவர்களா யிருக்கவேண்டு மென்பதை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். வாஸ்தவத்தில் சொத்து இராவிட்டாலுங்கூட, அவர்கள் தங்கள் நல்லொழுக்கத்தால் தாங்கள் நம்பத் தகுந்தவர்க ளென்பதைக் காட்டவேண்டும். அவர்கள் போதுமான சாமார்த்திய முடையவர்களாகவும், காரிய நிர்வாக முறைகளைக் கூடுமானவரையில் தெரிந்தவர்களாகவும், தாங்கள் செய்யும் சொற்ப வேலையை மிகச்சொற்ப பணம் பெற்றுக் கொண்டாவது ஒன்றுமே பெற்றுக் கொள்ளாமலாவது செய்யும்படியான உதாரசித்தமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டியது மல்லாமல், லஞ்சம் வாங்குகிறவர்களென்று சிறிதாகிலும் சம்சய முண்டாவதற்குக்கூட இடங்கொடாதவர்களாயு மிருக்கவேண்டும். இம்மாதிரியான மனிதர்கள் தங்கள் கிராமத்தார்கள் விஷயமாய் வேலை செய்வதற்குக் கிடைக்கக் கூடுமென்பது அனுபவத்தில் ஏற்கனவே தெரிந்திருப்பதோடு கூட, முன்னிலும் ஸ்பஷ்டமாக இனியும் நிரூபணமாகும்.

"அல்லாமலும், ஐக்கிய நாணயச் சங்கங்களின் பரிபாலனமானது ஒரு ரெஜிஸ்டரார், டெப்யுடி கலெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் இவர்கள் மூலமாக கவர்ன்மென்டாரின் மேல்விசாரணைக் குட்பட்டிருக்கிறது. அவைகளின் கணக்குகளைத் தணிக்கைசெய்ய நிபுணர்களான ஸூபர்வைஸர்களும் கிடைப்பார்கள்; பாங்கில் பணம்போட்டுவைத்திருக்கும் பணக்காரர்களும் தங்கள் லாபாலாபங்களைத் தக்க ஜாக்கிரதையுடன் கவனித்து வருவார்கள். இதை யெல்லாம் யோசித்து இதைவிட எந்த பாங்கில் அதிக பந்தோபஸ்து ஏற்பட்டிருக்கக் கூடுமென்று சொல்லுங்கள்."

"வாஸ்தவமாகவே இது மிகவும் பந்தோபஸ்துள்ளதாகத் தோற்றுகிறது. உங்கள் பாங்கிக்குப் பணம் கடன் கொடுப்பதற்காக உங்களுக்கு ஜனங்கள் எப்படி கிடைத்தார்களோ அதைத் தயவுசெய்து எனக்குச் சொல்லுங்கள்."

"நாங்கள் (திருச்சினாப்பள்ளி ஜில்லா) குளித்தலையிலுள்ள ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன் வாங்கினோம். சென்னபட்டணத்தில் ஒன்றும், சேலத்தில் மற்றொன்றுமாக வேறே இரண்டு ஸென்ட்ரல் பாங்கிகள் இருக்கின்றன; இவ்விரண்டு பாங்காரும் சென்னை ராஜதானியிலுள்ள ரெஜிஸ்டர் செய்யப்பட்ட 254 சங்கங்களுக்கு சுமார் 10 லக்ஷம் ரூபாய் கடன் கொடுக்

கிறார்கள். நாட்டு பாங்கிகளுக்கு நிதிகள் சம்பாதிப்பதற்காகவும் அவைகளை ஒழுங்கான முறைகளில் ஆரம்பித்து நிர்வாகம் பண்ணுவதற்காகவும் சில ஹிந்து பரோபகாரிகள் மிகுந்த உதார சிந்தையுடன் முயற்சிசெய்து வருகிறார்கள். (திருச்சினாப்பள்ளி ஜில்லா) லால்குடியிலுள்ள ஒரு கனவான் அவ்வூர் பாங்கியில் வருஷமொன்றுக்கு 100 க்கு 5 வட்டி வீதம் 10,000 ரூபாய் போட்டு வைத்திருக்கிறாரென்று நான் கேள்விப்பட்டேன்; அப்படி செய்ததனால் இந்த சங்கத்தைச் சேர்ந்த சகல விஷயங்களையும் தாம் தெரிந்து கொண்டதாய்க் காட்டியதோடு, தம்முடைய பரோபகாரத் தன்மையையும் காட்டினார்.

"இதர தேசங்களிலுள்ள கத்தோலிக்கர்கள் நாட்டு பாங்கிகளுக்காகவும் ஏழை ஜனங்களுக்கும் எவ்வளவோ செய்தும் செய்துகொண்டும் இருக்க, இந்த தேசத்திலே ஒரு கத்தோலிக்காவது இது வரையில் இந்தத் துறையில் வேலைசெய்ய வரவில்லை யென்பதைப்பற்றி வெட்கப்படுகிறேனென்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாட்டு பாங்கிகள் வேலை நடத்தும் முறையை உங்களுக்கு நான் விவரித்துச் சொல்லி யிருக்கிறேனல்லவா? அந்த முறையைக் கண்டுபிடித்த ஜர்மன் தேசத்தவராகிய ரெய்பெய்ஸென் துரை ஒரு கத்தோலிக்கரேயாவர்; அவருடைய பெயரைத்தான் இந்தியாவிலே அடிக்கடி புகழ்ந்து வருகிறார்கள். வட்டிக்குப் பணம் கொடுக்கும் யூதஜாதியாரின் கையிலகப்பட்டுக்கொண்டு பரம தரித்திரத்தை அனுபவித்துக் கொண்டிருந்த தம் சுதேசமாகிய ரைன்லண்ட் என்னும் மாகாணத்தை அவர் மேற்சொன்ன பாங்கிகளின் மூலமாய்ச் செல்வ நிலைக்கும் உயர்ந்த நல்லொழுக்கத்தின் விருத்தி நிலைக்கும் கொண்டுவந்தார். கல்வி கற்ற கத்தோலிக்கர்களுக்குள்ளே சாவகாசமும் சிறிது மட்டில் திரவிய சாதனமும் உடையவர்கள் ரெய்பெய்ஸென் துரையின் உதாரச் செய்கைகளைப் பின்பற்றி உழைப்பவர்களாய் ஏற்படும்படி ஈசன் அருள் புரிவாராக. அவர்களால் ஏழைகளுக்கும் கத்தோலிக்க தர்ம காரியங்களுக்கும் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் எவ்வளவு அளவற்ற பாக்கியம் உண்டாகாது?

"நமது கத்தோலிக்க (ப்ராவிடென்ட்) எதிர்கால சகாய நிதிகளின் நிர்வாக கர்த்தர்கள் இவ்விஷயத்தை ஆராய்ந்தறிய வேண்டு மென்பதே என் விருப்பம். அவர்கள் தாங்கள் மிகுத்தியிருக்கும் பணத்தை நாட்டு பாங்கிகளில் போட்டுவைக்கவும், தாங்கள் ஏற்கனவே செய்துவரும் நன்மையை விசேஷ பிரயாசை அதிகமாயின்றி இருமடங்காக்கவும் சம்மதிப்பார்களென்று நம்புகிறேன். நாட்டு பாங்கிகள் உண்மையான கத்தோலிக்க தர்மம் குடிகொண்ட ஸ்தாபனங்களென்று 12-ம் லியோ, 10-ம் பயஸ் என்னும் போப்குருமார்கள் அடிக்கடி புகழ்ந்திருக்கிறார்கள்; அப்படிப்பட்ட பாங்கிகள் இந்தியாவிலுள்ள ஏழைகளுக்குப் பெருத்த பாக்கியமாயிருக்கு மென்பதற்குச்

சந்தேகமேயில்லை. நமது காலத்துக்கு அவசியமான இந்தச் சிறந்த காரியத்தைச் செய்வதற்காக கத்தோலிக்க ஊழியர்களுக்கு உற்சாகம் ஊட்டும்படிக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்; நாட்டு பாங்கிகளைப் பணவுதவிசெய்து ஆதரிக்கச் சக்தியும் சித்தமுமுள்ளவர்களைத் தங்களுக்குச் சகாயம் செய்யும்படி அவர்கள் கேட்டு, அவர்களிடத்துள்ள ஐவேஜைக்கொண்டு எத்தனை பாங்கிகளை ஸ்தாபிக்க முடியுமோ அத்தனை பாங்கிகளை ஸ்தாபிக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட வேலையைச் செய்ய நியமனம் பெறுகிறவர்களுக்கு முற்றிலும் அத்யாவசியகமாய் இருக்கவேண்டிய திட நம்பிக்கையை உண்டு பண்ணுவதற்கு இந்த விஷயத்தை ஏதோ ஒரு சமயத்திலல்லாமல் சிரத்தையோடு ஆராய்ந்தறிவது எல்லாவற்றிலும் முதன்மையான ஆவசியகமாகும்."

1910-ம் வரு ஜூலை ஆகஸ்ட் மாதங்களின் 'மார்னிங் ஸ்டார்', பத்திரிகைக்கு எழுதப்பட்டது.

டிபாஸிட் தொகைகள்.

ஒரு சங்கத்தின் நிதியானது அடியிற்கண்ட வருவாய்களிலிருந்து முக்கியமாய்க் கிடைக்கிறது:—

i. செலுத்திவிடப்பட்ட பங்கு மூலதனம்.
ii. டிபாஸிட் தொகைகள்.
iii. கடன் வாங்கப்பட்ட இதர தொகைகள்.
iv. பலவகைப்பட்ட கட்டணங்கள்.

செலுத்திவிடப்பட்ட மூலதனம் எதுவுமில்லாமலே பல சங்கங்கள் வேலை செய்து வருகின்றன; ஏழைகளுக்குப் பிரயோஜனப்படுவதே கூட்டுத்தொழில் சங்கத்தின் நோக்கமாகையால், மற்ற சங்கங்களின் விஷயத்திலே, அவர்கள் செலுத்தவேண்டிய தொகையைக் கூடியமட்டிலும் சிறியதாயிருக்கும்படி ஏற்படுத்த வேண்டும். பலவகைப்பட்ட கட்டணங்கள் சொற்பத் தொகைகளாகவும் அவைகளை வசூல்செய்வது தொந்தரவுக் கிடமாயுமிருப்பதால், அவைகளின் சங்கியையைக் குறைக்கவேண்டும்.

'டிபாஸிட் தொகைகள்' 'கடன் வாங்கப்பட்ட இதர தொகைகள்' என்னும் இவ்விரண்டும் சம்பந்தப்பட்ட வரையில், இவைகளுக்குள்ள பேதமென்ன வென்றால், டிபாஸிட் தொகைகளைப்பற்றிய ஒப்பந்தத்தின் திட்டங்கள் அடியிற் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கும் சில பிரசித்தமான மாதிரிகளின்படி அமைந்திருக்க, கடன் வாங்கப்பட்ட இதர தொகைகளின் விஷயத்திலோ, சங்கத்தின் சார்பில் பஞ்சாயத்தார் அவ்வப்போது ஏற்படும் தேவைகளைத் தீர்ப்பதற்காகக் கடன் வாங்கப்படும் ஒவ்வொரு தடவையிலும் அதற்கு வேண்டிய ஷரத்துகளைத் தீர்மானிக்கிறார்கள். ஸென்ட்ரல் பாங்கிகளிலிருந்து வாங்கும் கடன்கள் இந்த வகுப்பைச் சேர்ந்தவைகளாகும்; ஆனால் வட்டி வீதமானது வருஷம் 1 க்கு 10 க்கு 7½ யாக அதிகமாயிருப்பதுடன், மற்ற ஷரத்துகள் கூட கடன் வாங்கும் ஒவ்வொரு தடவையிலும் தர்க்கிக்கப்படாமல் தீர்மானிக்கப்படுகின்றன. ஸென்ட்ரல் பாங்கார்கள் இந்த ஷரத்துகளுக்குட்பட்டல்லாமல் மற்றப்படி கடன் கொடுக்கமாட்டார்கள். "கடன் வாங்கப்பட்ட இதர தொகைகள்" என்பதிலுள்ள ஒவ்வொரு பாபத்துக்கும் ரெஜிஸ்ட்ரார் அவர்களின் பிரத்தியேக மான அனுமதி வேண்டியிருக்கிறது. டிபாஸிட் தொகைகளைக் கடையொன ஆதாரமாக நம்பியிருப்பதும், வேறே கடன் தொகைகள் வாங்கவேண்டியதாகக் கட்டாயமாய் ஏற்படும் பட்சத்திலே தற்சமயத்துக்கு மாத்திரம் அப்படி வாங்கி, அப்படி வாங்கப்பட்ட கடனைக் கூடிய சீக்கிரத்தில் டிபாஸிட் தொகைகளிலிருந்து திருப்பிக் கொடுத்து விடுவதுமே நிலையாயேற்பட்டு நன்றாய் வேலைசெய்யும் ஒவ்வொரு சங்கத்தின் கோட்பாடாயிருக்கவேண்டும்.

2. கூட்டுத்தொழில் விஷயமாய் மாத்திரமல்லாமல் வேறே விஷயங்களை உத்தேசித்துப் பார்த்தாலுங்கூட, டிபாஸிட் தொகைகளால் உண்டாகும் பிரயோஜனம் எவ்வளவோ அதிகமாயிருக்கிறது. முதலாவது, ஒரு சங்கத்துக்கு டிபாஸிட் தொகையாகச் சேரும் ஒவ்வொரு ரூபாய்க்கும், அந்த சங்கமானது ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து தாங்கும் பணம் அந்த அளவுக்குக் குறைகிறது; மேலும், அந்த பாங்கியின் நிதி

யானது மற்ற இடங்களில் உபயோகப்படுத்துவதற்குப் பிரயோஜனப்பட்டு, இவ்வித மாக இந்த முயற்சியை வேகமாய்ப் பரவச்செய்கிறது. டிபாஸிட் தொகைகளுக் கேற்படுத்தியுள்ள வட்டி வீதமானது கடன் வாங்கப்பட்ட மற்ற தொகைகளுக்குள் ளதை விடக் குறைவாயிருக்கிறது; ஆகவே, சங்கமானது டிபாஸிட் தொகைகளினால் லாபமடைந்து, அதன் சேமநிதியும் சீக்கிரமாய் அதிகமாகிறது. டிபாஸிட் தொகை களைச் சேர்ப்பதற்காகப் பஞ்சாயத்தார் கொஞ்சம் சுறுசுறுப்பாக உழைக்கவேண்டி யிருக்கிறார்கள்; ஆகவே, ஒரு சங்கத்தில் சேர்த்திருக்கும் டிபாஸிட் தொகைகளின் மொத்தத்தைக்கொண்டு, அந்த சங்க பரிபாலனத்தில் பஞ்சாயத்தார் எவ்வளவு அக் கறை காட்டியிருக்கிறார்களென்பதை சுமாராய்த் தெரிந்துகொள்ளலாம். டிபாடிஸிட் டாகப் பணம் கட்டிவைப்பதனால் செட்டாய்ச் செலவு செய்யும் வழக்கம் ஏற்பட்டு, வீண்செலவு செய்வது நின்றுவிடுகிறது. தவிரவும், அப்படிக் கட்டிவைப்பதனால் டிபாஸிட் கட்டிவைப்பவர்களுக்கு சங்க நிர்வாகத்தில் அக்கறை உண்டாகி, அதன் காரியங்களைத் தங்கள் நன்மையை உத்தேசித்தே அவர்கள் கவனித்து வரவேண்டியவர் களாகிறார்கள்; டிபாஸிட் கட்டிவைக்கும் ஒவ்வொருவரும் பஞ்சாயத்தாரைக் கவ னித்துவரும் ஒருவித பொலீஸ் காவலைப் போலிருக்கிறார். இவ்விதமாகவே கிராம மும் பிரயோசனம் அடைகிறது; எப்படியென்றால், அந்த கிராமவாசிகளுக்கு வட்டி கிடைத்து, அந்தத் தொகையானது சென்னபட்டணத்துக்கு அனுப்பப்படாமல் கிராமத் திலேயே செலவழிக்கப்படுகிறது. மேலும், ஜனங்கள் பணம் லேவாதேவி செய்யும் பாங்க் சம்பந்தமான அனுபோகம் பெறுவதனால், பணமானது பானைகளில் புதைத்து வைக்கப்படாமல் பலனளிக்கத்தக்க விதமாய் உபயோகிக்கப்பட்டு, அதன் சொந்தக் காரருக்கும் அதை உபயோகிக்கிறவருக்கும் ஓரே மாதிரியாய்ப் பிரயோஜனப்படு கிறது. பணம் திருடுபோகும் சமயங்களும் குறைவாகின்றன.

3. சகல டிபாஸிட் தொகைகளுக்கும் அடியிற்கண்ட லட்சணங்கள் பொதுவாய் அமைந்திருக்கின்றன. அவைகளினால் சிக்கனம் விருத்தியாகிறது. அவைகளுக்கு ஒரு காலநிபந்தனை ஏற்பட்டு, பணம் கட்டிவைத்திருப்பவருக்கு அந்த பணத்தின்மேல் ஷை காலத்துக்குள் எவ்வித அதிகாரமும் இல்லாமலிருக்கிறது. இவ்வளவு தொகைகள் வருமென்றும், அவைகளை இன்ன கால கெடுவுகளுக்குள் திருப்பிக் கொடுக்கவேண்டு மென்றும் சங்கத்துக்கு நன்றாய்த் தெரிவிக்கப்படுகிறபடியால், கெடுதல் ஒன்றும் உண்டாகாதபடி சங்கத்தின் கடன் கொடுக்கும் விவகாரங்களைக் குறித்துத் திருத்த மான வரவு செலவு திட்டக்கணக்கை தயார்செய்யக்கூடும். டிபாஸிட் கட்டிவைக்க வேண்டுமென்பது கட்டாயமில்லை யானபடியால், அதை மெம்பர்கள் சங்கத்துக்குச் செலுத்தத்தக்க யாதொரு விதமான வரியென்று தப்பாய்க்கொள்ள இடமில்லை; ஆனால், ஒரு நபர் டிபாஸிட் கட்டுவதற்காகவென்றே குறிப்பிட்டாவது, மெம்பராய்ச் சேர விண்ணப்பஞ்செய்துகொள்வது மூலமாயாவது, டிபாஸிட்தொகை கட்ட ஒரு தடவை சம்மதிக்கும் பட்சத்தில், டிபாஸிட் தொகை கட்டி வைப்பது சம்பந்த மான ஷரத்துகள் கண்டிதமாய் அனுசரிக்கப்படும். எந்த ஷரத்தையாவது மீறி நடந்தால் தண்டனை விதிக்கப்படும். டிபாஸிட் தொகைகளை வாங்க சகாயச் சட்டங் களினால் அனுமதி யேற்பட்டிருக்கும் பட்சத்தில், ரெஜிஸ்ட்ரார் அவர்களின் உத்தர வில்லாமலே அந்தத் தொகைகளைக் கட்டிக்கொள்ளலாம்; மேலும், அப்படிக் கட்டிக் கொள்ளப்படும் தொகைக்கு வரையறையில்லை; ஆனால், மெம்பரல்லாதவர்களிட மிருந்து வாங்கப்பட்ட டிபாஸிட் தொகைகளின் மொத்தமும் கடன் வாங்கப்பட்ட வேறே தொகைகள் எவைகளேனுமிருந்தால் அவைகளும்சேர்ந்து சகாயச் சட்டங்

களிலே நிர்ணயிக்கப்பட்ட உச்சதொகைக்கு மேற்பட்டிருக்கக்கூடாது. இதுவரையில், அடியிற்கண்ட விதமான டிபாஸிட் தொகைகள் கட்டிக்கொள்ளப்பட்டிருக்கின்றன; இதரவகை டிபாஸிட் முறைகளையும் உசிதமாகத் தோற்றினால் அனுசரிக்கலாம்.

(*a*) நிலையானவை. (*b*) நோடிஸ் கொடுப்பதன்மேல் திருப்பிக்கொடுக்கப்படு பவை. (*c*) அடிக்கடி கட்டப்பட்டு வருபவை. (*d*) அறுவடைக்காலத்தில் கட்டப்படு பவை. (*e*) மிருத்தி வைக்கப்பட்டவை. (*f*) எதிர்கால உபயோகத்துக்கானவை. (*g*) சீட்டுப்பண்டு. (*h*) நடைமுதல் கணக்குகள். (*i*) பங்கு மூலதன டிபாஸிட் தொகை கள்.

4. நிலையான (Fixed) டிபாஸிட் தொகைகள்:—நிலையான டிபாஸிட் தொகையை மெம்பர்களிடத்திலிருந்தும் மெம்பர்களல்லாதவர்களிடத்திலிருந்தும் வாங்கலாம். அது-திட்டமாய் ஏற்பட்டுள்ள ஒரு கால அளவுக்கு நிஷ்கரிஷையான ஒரு தொகையை வட்டிக்குப் போட்டு வைப்பதாகும். பொதுவாக 5 ரூபாய்க்குக் குறை ந்த தொகைகளையாவது மூன்றுமாதத்துக்குக் குறைவான கால அளவுக்காவது கட்டிக் கொள்வதில்லை. விட்டி வீதமானது மாதம் ஒன்றுக்கு 100க்கு 10அணாவுக்கு மேற் படக்கூடாது கால அளவு அதிகப்பட்டால், வட்டி வீதமும் ஜாஸ்தியாகும். பற்பல கால அளவுகளுக்கொத்த வட்டி வீதங்களைப் பஞ்சாயத்தார் முன்னதாகப் பிரசுரஞ் செய்ய வேண்டும்; அவைகளை நோடிஸ் கொடுக்காமல் மாற்றக்கூடாது. அடியிற் கண்ட வீதங்கள் மெத்தவும் தகுதியானவைகளாகையால், அவைகளைக் கைக்கொள்ள லாம்:—

3 மாதத்துக்கு	...	...	...	100க்கு 3வீதம்.
6 மாதத்துக்கு	...	...	...	100க்கு 4வீதம்.
ஒரு வருஷத்துக்கு	...	...	...	100க்கு 5வீதம்.
இரண்டு வருஷத்துக்கு		...	...	100 க்கு 6அல்லது $6\frac{1}{4}$வீதம்.

வேறே விதமாய் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தாலொழிய, வட்டியானது வரு ஷப் பிரதிவருஷமாவது கெடுவுகாலம் பூர்த்தியாகும்போதாவது செலுத்தத்தக்கதா கும். டிபாஸிட் கட்டிவைக்கிறவர்கள் மாதந்தோறும் வட்டி கொடுக்கவேண்டுமென்று சில சமயம் விரும்புகிறார்கள்; இப்படி கொடுப்பதனால் சங்கத்துக்கு நஷ்டமுண்டாகிற படியால், வட்டி வீதமானது மற்றப்படி ஏற்படுத்தப்படுகிற வீதத்தைக் காட்டிலும் அத மம் 100க்கு 1விழுக்காடாவது குறைவா யிருந்தாலொழிய, அந்தப்படி மாதந்தோ றும் வட்டி கொடுத்துவர இடந் தரக்கூடாது. நிலையான டிபாஸிட் தொகையைத் தவணைத் தொகைகளாகவாவது பிரதமத்தில் ஏற்பாடாயிருக்கிற கெடுவுகாலம் முடிகிற தற்கு முந்தியாவது எந்த சந்தர்ப்பங்களிலும் திருப்பிக் கொடுக்கக் கூடாது. ஆயினும் சில சங்கங்களில் டிபாஸிட் தொகைகளின் ஆதாரத்தின்பேரில் மெம்பர்கள் கடன் வாங்கிக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற தென்றாலும், அந்தக் கடன் கள் இதர கடன்களுக் கேற்படுத்தப்பட்ட ஷரத்துகளுக்குட்பட்டவைகளாய்ப் பிரத்தி யேகமான விவகாரங்களா யிருக்கின்றன. எந்த காரணத்துக்காகவாவது ஒரு டிபா ஸிட் தொகையை அதன் கெடுவுகாலத்துக்கு முன் திருப்பிக் கொடுக்கும் பட்சத்தில், —அப்படி திருப்பிக் கொடுக்கப்படுமென்று எதிர்பார்க்க டிபாஸிட்தாரருக்கு எவ்வித ஹக்குமில்லை——அசலை மாத்திரம் திருப்பிக் கொடுக்கவேண்டும்; வட்டி எவ்வளவா வது—திருப்பிக்கொடுக்கிற தேதி வரையில் சேரவேண்டிய வட்டியில் ஒரு சிறு பாகக்கூட—கொடுக்கக்கூடாது. டிபாஸிட்தாரர் கெடுவுகாலத்துக்குமுன் டிபா

ஸிட்டைப் புதுப்பித்துக்கொண்டாலொழிய, அந்த கெடுவு கழியும்போது நிலையான டிபாஸிட் தொகைக்கு வட்டியேறுவது நின்றுபோகும்; அப்படி புதுப்பிக்கப்படுகிற விஷயத்தில், அந்த டிபாஸிட்டானது புதிய டிபாஸிட்டாகக் கொள்ளப்பட்டு, எவ்வளவு காலத்துக்குப் புதுப்பிக்கவேண்டுமென்று கோரப்படுகிறதோ அதை அனுசரித்து, புதுப்பிக்கப்படுகிற தேதியன்று ஏற்படுத்தப்படும் வட்டி வீதமே ஷை புதிய டிபாஸிட் தொகைக்கு வட்டி வீதமாகும். டிபாஸிட்டின் கெடுவுகாலம் கழிவதைப்பற்றி நோடிஸ் கொடுக்கச் சங்கத்தார் கடமைப்பட்டிருக்கவில்லை யாயினும், சில சங்கத்தார் மரியாதைக்காக அப்படி நோடிஸ் கொடுக்கிறார்கள். பெருத்த டிபாஸிட்டுகளின் விஷயத்தில், டிபாஸிட்தாரர் டிபாஸிட்டைப் புதுப்பித்துக்கொள்ள இஷ்டப்படுகிறாரா அல்லது திருப்பி வாங்கிக்கொள்ள இஷ்டப்படுகிறாரா என்பதை முன்னதாய் விசாரித்தறிந்துகொள்வது நல்லது; அப்படி அறிந்துகொள்வதனால், அவசியம் நேரிடுகிற பட்சத்திலே, அப்படிச் செலுத்தவேண்டிய தேதியில் ஐவேஜு தயார்செய்து கொள்வதற்குச் சங்கத்தாருக்கு அவகாசம் ஏற்படும்.

5. (*h*) நோடிஸ் கொடுப்பதன்மேல் திருப்பிக்கொடுக்கப்படும் டிபாஸிட் தொகைகள். இந்த டிபாஸிட் தொகையை மெம்பர்களிடத்திலிருந்தும் மெம்பர்களல்லாதவர்களிடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வளவு காலத்துக்கு டிபாஸிட் கட்டிவைத்திருக்க வேண்டுமென்று நிஷ்கரிஷை செய்யப்படுகிறதில்லை. ஆனால், டிபாஸிட் செய்கிறவர் – முன்னதாக ஒரு கால அளவு ஏற்படுத்திக்கொண்டு அந்தக் கால அளவு கழிவதன்மேல் தொகை திருப்பிக் கொடுக்கப்படவேண்டுமென்று ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறார்; டிபாஸிட் செய்கிறவராவது சங்கத்தாராவது கொடுக்கவேண்டிய நோடிஸின் தேதியிலிருந்து ஷை கால அளவு கணக்கிடப்படும். டிபாஸிட் செய்கிறவர் இந்த விதமாக 3 மாதகால நோடிஸ் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளலாம்; அவர் கட்டும் பணத்தொகையானது நோடிஸ் கொடுத்த தேதியிலிருந்து மூன்றுமாதம் கழிகிறவரையில் திருப்பிக் கொடுத்துவிடப் படமாட்டாது; அந்த நோடிஸே இரண்டு வருஷகாலம் வரையில் கொடுக்கப்படாவிட்டால், கட்டப்பட்ட டிபாஸிட் தொகையானது 2 வருஷம் மூன்று மாதம் வரையில் திருப்பிக் கொடுத்துவிடப்படமாட்டாது. வேறே விதமாய் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தாலொழிய, வட்டி வருஷாவருஷம் செலுத்தத்தக்கதாகும்; ஆனால் டிபாஸிட்தொகை திருப்பிக் கொடுத்துவிடப் படும்போது, செலுத்தவேண்டியதான வட்டி முழுவதையும் செலுத்திவிடவேண்டும். வட்டி வீதமானது மாதம் ஒன்றுக்கு 100க்கு 10அணாவுக்கு மேற்படக்கூடாது; மேலும், நோடிஸ் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்ட கால அளவு அதிகமா யிருப்பதற்குத் தக்கப்படி ஷை வட்டி வீதமும் அதிகமாகும். அடியிற்கண்ட வீதங்கள் மிகவும் தகுதியானவைகளாகையால், அவைகளைக் கைக்கொள்ளலாம்:—

3 மாதத்திய நோடிஸுக்கு	100க்கு 4வீதம்.
6 மாதத்திய நோடிஸுக்கு	100க்கு 5வீதம்.
ஒரு வருஷத்திய நோடிஸுக்கு	100க்கு 6அல்லது $6\frac{1}{4}$-வீதம்.

டிபாஸிட் தொகையை, தவணைத் தொகைகளாகவாவது நோடிஸ் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த நோடிஸ் கெடுவு காலம் கழிவதற்கு முன்னாவது எவ்வித சந்தர்ப்பங்களிலும் திருப்பிக்கொடுக்கக் கூடாது. ஒரு தாம் நோடிஸ் கொடுத்தாய் விட்டால், தொகையைப் பெற்றுக்கொள்வது டிபாஸிட் கட்டினவரின் கடமையாகிறபடியால், அந்த நோடிஸிற்கண்ட காலம் கழிவது முதற்கொண்டு டிபாஸிட்தொகைக்கு வட்டி

யேறுவது நின்றுபோகும். யாதொரு காரியத்துக்காக நிதியேற்பாடு செய்வதற்கான தொகைகளையும், உடனே உபயோகிக்கவேண்டிய அவசியமில்லாவிட்டாலும் இனிமேல் எப்போதோ ஒருகாலத்தில் வெகுசாய் வேண்டியிருப்பதாய் சும்மா கிடக்கிற பணத்தொகைகளையும் லாபத்துக்காகப் போட்டுவைப்பதற்கு 'நோடிஸ் கொடுப்பதன் மேல் திருப்பிக்கொடுக்கவேண்டிய டிபாஸிட் தொகைகளாகக் கட்டிவைப்பதே சிறந்த வழியாகும்.

6. அடிக்கடி கட்டப்பட்டுவரும் டிபாஸிட்தொகைகள்.—இதை மெம்பர்களிடத்திலிருந்தும் 4 மெம்பர்களல்லாதவர்களிடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். சில சங்கங்களிலே பங்கு மூலதனமானது அடிக்கடி கட்டப்பட்டுவரும் தொகைகளால் ஏற்படுகிறது; அப்படி செலுத்தப்படும் தொகைகள் டிபாஸிட் தொகைகளாவதில்லை; மேலும், மெம்பர்கள் மாத்திரமே அப்படி செலுத்திவரலாம். அடிக்கடி கட்டப்பட்டு வரும் டிபாஸிட் தொகையென்பது, மாதந்தோறும் கிரமமாய் 1ரூபாய் அல்லது அதைப் பெருக்கி வரும் தொகை வீதமாக 24, 45 அல்லது 84 மாதங்களுக்குச் செலுத்தப்படும் தொகையாகும். அப்படிச் செலுத்தப்படும் தொகையானது மாதந்தோறும் செலுத்தப்பட்ட ஒவ்வொரு ரூபாய்க்கும் அந்தந்த கால அளவுகளின் முடிவில் ரூ. 25-8-0, ரூ. 50 அல்லது ரூ. 100 விழுக்காடு திருப்பி வாங்கிக் கொள்ளப்படும். கணக்குகளிலே, ரூ 24, ரூ 45, அல்லது ரூ 84 டிபாஸிட்டாய்க் கட்டப்பட்ட அசல் தொகையைத் திருப்பிக் கொடுத்ததாகவும், அதுபோக மிகுந்திருக்கும் ரூ 1—8—0, ரூ 5-அல்லது ரூ 16 வட்டி செலுத்தியதாகவும் செலவெழுதப்படும். தென் இந்தியாவில் எவ்வளவோ பிரசித்தி பெற்றிருக்கும் சகல நிதிகளும் அடிக்கடி கட்டப்பட்டுவரும் டிபாஸிட் தொகைகளைக் கொண்டே வேலைசெய்கின்றன. பணம் மிகுத்தச் சேர்த்துவைப்பதற்கு அவை சிறந்த சாதனங்களாயிருக்கின்றன; மாதந்தோறும் சொற்பத் தொகைகளே கட்டிவந்தால் போதும்; அப்படிக் கட்டிவருவதனால் அதிக தொந்தரவில்லாமல் கிட்டத்தட்ட ஒரு பெருமொத்தமான பணம் சேர்ந்துவிடுகிறது. மெம்பர்களின் விஷயத்திலே, அவைகள் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு நல்ல வழிகளாகவும் இருக்கின்றன; ரூ. 50 கடன் வாங்குகிற ஒரு மெம்பர் ஒரு ரூபாய் விழுக்காடு 45 மாதங்களுக்கு அடிக்கடி டிபாஸிட் கட்டுவதாக ஒப்புக்கொள்ளலாம்; அதோடுகூட அந்தக் கடனுக்காகும் வட்டியைமாத்திரம் வருஷத்துக்கொரு தடவையாவது ஆறுமாதத்துக்கொருதடவையாவது செலுத்தவேண்டியவராவார். இந்த ஏற்பாடு நன்றாய் நிலைவேறவேண்டுமானால் மாதந்தோறும் செலுத்தவேண்டிய தொகைகள் கிரமமாய்ச் செலுத்தப்படவேண்டும்; ஆகவே, மாதவரும்படி வரப்பெறாத நாட்டுப்புறத்து ஜனங்களுக்கு இந்த ஏற்பாடு வெகுசாய்ப் பொருந்தினதல்ல; ஆனால், நெசவுக்காரர்கள், நெய் காய்கறிகள் முதலியவை விற்பவர்கள் விசேஷமாய் வசிக்கும் கிராமங்களிலே இந்த ஏற்பாட்டை அனுசரித்துப் பார்க்கக்கூடும். அவசியமானால், மாதப் பிரதிமாதம் ஒவ்வொருவரும் செலுத்தும் தொகையை 8 அணாவாகக் குறைத்து, திருப்பிக்கொடுக்கவேண்டிய தொகைகளைச் சரிபாதிக்குக் குறைக்கலாம். இந்த ஏற்பாடானது பட்டணங்களுக்கும், கம்மியர், சேவகர், ஜட்காவண்டியோட்டுகிறவர்கள், தொழிற்சாலைக் கூலியாள்கள் ஆகிய இவர்களைப் போன்ற ஜனங்களுக்கும் மிகவும் நன்றாய்ப் பொருந்தியிருக்கிறது. தொகையானது ஒரு மாதத்தில் எந்த தேதியில் கிரமமாய்ச் செலுத்தவேண்டியதாகிறதோ அந்தத் தேதியில் செலுத்தப்படாவிட்டால், ஒரு அபராதத் தொகை—சாதாரணமாய் மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றுக்கு 2 தம்பிடி வீதம்.—விதித்து வாங்கப்படுகிறது. இப்படி 4மாதமுதல் 6மாதம் வரையில் தொடர்ச்சியாய்ச் செலுத்தப்படாமலே யிருந்தால், டிபாஸிட் கணக்கை அதுடன் முடித்து, அதுவரையில் செலுத்தப்பட்ட தொகைகளின் மொத்தம் மாத்திரம்

வட்டி எவ்வளவுமில்லாமல் திருப்பிக்கொடுக்கப்படுகிறது: மெம்பர்களின் விஷயத்திலே, மெம்பரிடத்திலிருந்து சங்கத்துக்கு பாக்கியாயிருக்கும் வேறே எவையேனும் தொகைகளையும் இதிலிருந்து கழித்து, டிபாஸிட்கணக்கை யனுசரித்து வேறே கடன் கணக்கு ஏதாவதிருந்தால் அதுவும் அதே சமயத்தில் முடிவுசெய்து விடப்படுகிறது.

7. (*d*) அறுவடைக்காலத்தில் கட்டப்படும் டிபாஸிட்தொகைகள்.—மாதவரும்படி வரப்பெறாத விவசாயிகளுக்கு மாதமாதம் டிபாஸிட்தொகை கட்டுவது கஷ்டமாய் இருக்கலாம்; ஆகவே, அடிக்கடி கட்டப்பட்டுவரும் டிபாஸிட் முறையைச் சிறிது மாற்றி, அறுவடைக்காலத்தில் கட்டப்படும் டிபாஸிட்டுகள் என்னும் பெயரால் அதே முறை அனுசரிக்கப்படுகிறது. அறுவடைக்காலத்து டிபாஸிட் தொகைகளை மெம்பர்கள் மெம்பர்களல்லாதவர்கள் என்னும் இருவகையாரும் கட்டிவரலாம். ஒவ்வொரு அறுவடைக்காலத்திலும், அதாவது, ஆறு மாதத்துக்கொருமுறை ரூ. 2 அல்லது அதற்கு மேற்பட்ட ஒருதொகை சில்லறையில்லாமல் முழு ரூபாயாக டிபாஸிட் செய்யப்படுகிறது. இம்மாதிரி டிபாஸிட் தொகைகளை 10 தடவை, அதாவது, ஐந்து வருஷத்துக்குக் கட்டி வரவேண்டும். அறுவடைப் பருவங்களென்பவை ஜூன் மீ 30உயிலாவது டிஸெம்பர் மீ 31உயிலாவது முடியும் ஆறு மாதங்கொண்ட கால அளவுகளாகும் அறுவடை யொன்றுக்கு ரூ. 2 க்குக் குறையாமல் டிபாஸிட் தொகையாகக் கட்டிவரவேண்டும். டிபாஸிட் செய்கிறவர் ஆரம்பத்திலேயே இன்னுமதிகமாய்க் கட்ட இஷ்டப்படும் பட்சத்தில், அவர் டிபாஸிட் செலுத்தும் கால முழுமைக்கும் அதே தொகை கட்டிவரக் கடமைப்பட்டவராவார்; மேலும், இதைத்தவிர வேறே அறுவடை டிபாஸிட் கணக்குகளை நூதனமாய் அவர் ஏற்படுத்திக்கொண்டாலுங்கூட, மேற்கண்ட தவணைத்தொகையை அதிகப்படுத்தவாவது குறைக்கவாவது அவருக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது. டிபாஸிட் செய்கிறவர், பதினோராவது அறுவடைக்காலம் முடிவாவதற்கு முன் தவணைத்தொகையாய்க் கட்டிய ரூபா ஒன்றுக்கு ரூ. 11-6-6 பெற்றுக்கொள்ள உரியவராவார்; இந்தத் தொகையிலே அசலுக்காக ரூ. 10 கொடுக்கப்பட்டதாகவும் வட்டியில் ஒரு பாகத்துக்காக ரூ. 1-6-6 கொடுக்கப்பட்டதாகவும் பாவிக்கப்படும். ஒவ்வொரு அறுவடைக் காலத்திலும் செலுத்தவேண்டிய தவணைத் தொகை இவ்வளவென்பதை அறுவடைப் பருவம் முடிவதற்கு முன் நிஷ்கரிஷை செய்ய வேண்டும்; அப்படி செய்யத் தவறினால் அந்தப்படி தவறினவர் செலுத்தாமல் பாக்கியாயிருக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் மாதமொன்றுக்கு 2 தம்பிடி வீழுக்காடு அவரிடமிருந்து அபராதம் வாங்கப்படும். பாக்கி ஏற்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதத்துக்கு மேற்பட்டும் பாக்கி செலுத்தப்படாமலே யிருக்கும் பட்சத்தில், டிபாஸிட் கணக்கை அத்துடன் முடித்துவிட்டு, டிபாஸிட் செய்தவர் வாஸ்தவத்தில் எவ்வளவு செலுத்தியருக்கிறாரோ அந்த அசல் தொகையை மாத்திரம் அவருக்குத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும்.

8. (*e*) மீதத்தி வைக்கப்பட்ட பணத்திலிருந்து கட்டப்படும் டிபாஸிட் தொகைகள்.—இந்த டிபாஸிட் தொகைகளை மெம்பர்கள் மாத்திரமே கட்டலாம், அவைகள் தபாலாபிஸ் ஸேவிங்ஸ் பாங்கிகளில் கட்டும் டிபாஸிட் தொகைகளைப் போன்றவை. அவைகள் ஏழைகளாயுள்ள மெம்பர்களுக்காக உத்தேசிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மெம்பர் எவ்வளவு சிறிதாயுள்ள எந்தத் தொகையையாவது கட்டலாம், சில்லறையாயல்லாமல் முழு அணாக்களாய்க் கட்டவேண்டுமென்று சில சங்கத்தார்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். இப்படி கட்டச் செய்வதன் உத்தேசம் என்னவென்றால், சொற்பமாய் மிகுத்தி வைக்கும் தொகைகளைச் சேர்க்க வேண்டுமென்பதே. ஒரு

மாதத்தில் 3உ முதற்கொண்டு அந்த மாதம் முடிகிறவரையில் சில்லறையாயல்லாமல் முழு ரூபாயாகக் கட்டியிருக்கும் தொகைக்கு 100 க்கு $6\frac{1}{4}$ வீழுக்காடு வட்டி கொடுக்கப்படுகிறது. ஜூன் மீ 30உ யுடன் முடிவாகும் வருஷத்துக்காக வட்டி கணக்கிடப்பட்டு, அந்த வட்டியானது ஜூலை மீ 1உயில் ஏற்படும் தொகைகளுடன் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. பணத்தைத் திருப்பி வாங்கிக்கொள்ள வேண்டுமானால், ஒரு குறித்த பணத்தொகைக்கு மேல் ஒரு வாரத்துக்குள் திருப்பி வாங்கிக்கொள்ளக் கூடாதென்று ஒரு விதி நிர்ணயித்தாவது, திருப்பி வாங்கிக்கொள்வதற்கு ஒரு வாரம் முதல் மூன்று மாதம் வரையில் முன்னதாக நோடிஸ் கொடுக்கவேண்டுமென்று விதி உண்டாக்கியாவது, அப்படித் திருப்பி வாங்கிக்கொள்வதற்கு வரையறை ஏற்படுத்தி யிருக்கிறது. இந்த டிபாஸிட் தொகைகள் காரணமாகப் பஞ்சாயத்தாருக்கு அதிக வேலை ஏற்படுகிறது; ஆனால், எந்த வகுப்பார்களுக்குள் சிக்கனம் ஏற்படுவது மெத்த அவசியமோ அவர்களுக்குள் அதை விருத்திசெய்வதற்கு இந்த டிபாஸிட் ஏற்பாடு விசேஷமாய்ப் பிரயோஜனப்படுகிறது; மிகுத்திவைத்த தொகைகள் எந்த சங்கத்தின் கணக்குகளில் விசேஷமாக டிபாஸிட்டாய் வைக்கப்பட்டு அவைகளைக்கொண்டு சுறுசுறுப்பாக வேலை நடத்தப்பட்டு வருகிறதோ அந்த சங்கமானது விசேஷித்த பிரசித்தியடைவதற்கு உரியதாகும்.

9. (*f*) எதிர்கால உபயோகத்துக்காகக் கட்டப்படும் டிபாஸிட் தொகைகள்.—இந்த டிபாஸிட் தொகைகளை மெம்பர்கள் மாத்திரமே கட்டலாம். பிரதி மெம்பரும் பிரதி கோவாபரேடிவ் வருஷத்துக்கும் ஒரு ரூபாய்க்குக் குறையாமல்—சில சங்கங்களிலே பங்கு 1 க்கு ஒரு ரூபாய் வீதம்—டிபாஸிட்டாகக் கட்ட ஒப்புக்கொள்ளுகிறார். சில சங்கங்களிலே எதிர்கால சகாய நிதியாக டிபாஸிட் செய்யத்தக்க தொகை ரூ. 50 அல்லது வருஷ மொன்றுக்கு ரூ. 5 க்கு மேற்படக் கூடாதென்று வரையறை ஏற்பட்டிருக்கிறது. யாதொரு கோவாபரேடிவ் வருஷத்தின் முதல் தினத்திலிருந்து கடைசி தினம் வரையில் தொடர்ச்சியாய் டிபாஸிட்டாகக் கட்டி வரும் ஒவ்வொரு ரூபாய்க்கும், அடுத்த வருஷத்து ஸெப்டெம்பர் மாதத்தில் ஒரு அணா வீழுக்காடு வட்டி கொடுக்கப்படுகிறது. ஒரு மெம்பர் மெம்பராயிருப்பதற்கான யோக்கியதை அற்றுப்போய் விட்டால், அவர் கட்டியிருக்கும் தொகையானது, அவருடைய பெயர் மெம்பர்களின் ஜாபிதாவிலிருந்து நீக்கிவிடப்படும் தேதியில் அவருக்குக் கொடுத்துவிடத் தக்கதாகும்; அந்தத் தொகைக்கு முந்தின கோவாபரேடிவ் வருஷத்தின் கடைசிநாள் வரையில்தான் வட்டி பாக்கியாகிறது. ஒரு மெம்பர் இறந்துபோனால், அந்தத்தொகையை, அவர் இறந்துபோன தேதிக்குமுன் வரையிலும் கேட்கப்படுவதன்மேல் அந்த மெம்பரின் ஆஸ்திதாரருக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும். ஒரு மெம்பர் வலுவில் விலகிக்கொள்ளும் பட்சத்தில், அவர் கட்டியிருக்கும் டிபாஸிட் தொகை உடனே திருப்பிக்கொடுக்கத் தக்கதல்ல; ஆனால் அவர் விலகிக்கொண்ட காலத்துக்கு ஒரு வருஷம் கழிந்த பிறகே கொடுக்கத்தக்கதாகும்; அந்த மெம்பர் எந்த வருஷத்தில் விலகிக்கொள்ளுகிறாரோ அந்த வருஷக் கடைசி வரையில் வட்டிசேரும். தொகை திருப்பிக் கொடுப்பதை இப்படி தள்ளி வைப்பதன் நோக்கமென்ன வென்றால், மெம்பர்களின் கணக்குக்கு வந்திருக்கும் எதிர்கால சகாயநிதி பெருத்த மொத்தமாகும்போது அவர்கள் விலகிக்கொள்வதற்கு இடங் கொடுக்காமலிருக்க வேண்டுமென்பதே. மேற்கண்ட மாதிரியாக வல்லாமல் மற்றப்படி, எதிர்கால சகாயநிதி டிபாஸிட் தொகையானது திருப்பி வாங்கிக்கொள்ளத்தக்கதல்ல. எதிர்கால சகாயநிதிகளின் பிரதான நோக்கமென்ன வென்றால், மெம்பர்கள் தங்கள் வாரிஸுகளுக்கு ஏதோ ஒரு விதமான நிதியைச் சேர்த்துவைக்க

அவர்களுக்குச் சுலபமாய்த் தருணம் வாய்க்கும்படி செய்யவேண்டு மென்பதே. சகாயச் சட்டங்கள் இடங்கொடுத்தால், சரியான ஷரத்துகளுக்குட் பட்டு எதிர்கால சகாய நிதிகளின் பொறுப்பின்மேல் கடன் கொடுக்கலாம். இப்படி சங்கங்கள் வேலை செய்துகொண்டே போனால், அவைகளின் வேலை நடந்தேறுவதற்கு ஆதாரமாக டிபாஸிட் தொகைகள் ஸ்திரமாய் விருத்தியாகிக்கொண்டே வருகின்றன. இந்த ஏற்பாட்டினால் நன்மை உண்டாகுமென்று ஜனங்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டால், மெம்பர்கள் தாங்கள் மிகுத்திவைக்கும் பணத்தைச் சேர்த்துவைப்பதில் ஒருவரோடொருவர் போட்டிப் போடுவார்களென்றும், அப்படி செய்யும் பட்சத்தில் வட்டி வீதத்தை இனிமேல் வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 5 விழுக்காடு குறைக்கக் கூடுமென்றும் நம்பலாகிறது. எந்த சங்கத்திலும் எதிர்கால சகாய நிதிக்காக டிபாஸிட் தொகை கட்டவேண்டுமென்னும் கட்டாயமில்லை; அப்படிப்பட்ட தொகையை ஏற்றுக் கொள்வதற்கு சங்கப்பொதுக் கூட்டத்தாரின் தீர்மானம் அவசியமாகும். அப்படிப்பட்ட தீர்மானத்துக்குச் சங்கத்தைச் சேர்ந்த விசேஷமான பெருந்தொகையார் அனுகூலமாயிருந்தாலன்றி மற்றப்படியும், அதன் நியமங்களை மெம்பர்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறவரையிலும், ரெஜிஸ்ட்ராரவர்கள் அந்தத் தீர்மானத்துக்கு அனுமதி கொடுப்பதில்லை.

10. (*g*) சீட்டுப் பண்டுகள்.—இவைகளில் மெம்பர்கள் மாத்திரமே சேரலாம். பலவிதமான சீட்டுகளும் அவைகளை வினியோகிப்பதில் பலவிதமான முறைகளும் இருக்கின்றன. சீட்டுத்தொகைகள் செலுத்துவதற்குத் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் வழங்கிவரும் ஒரு முறை என்னவென்றால், சீட்டுத்தொகை, கட்டும் ஒவ்வொரு சமயத்திலும் அந்தத் தொகைகளை அதிகப்படுத்துவதாம்; இது மிகவும் ஆக்ஷேபத்திக் கிடமானது. ஒரு கூட்டுத்தொழில் சங்கத்தினுடைய மேல் விசாரணையின் கீழ் ஒரு சீட்டுப் பண்டை ஏற்படுத்தி, அதில் சந்தாதாரர்கள் தவிர வேறெவருக்கும் எவ்வித லாபமும் கிடைக்காதிருக்கும் பட்சத்திலே, அந்த சீட்டுப் பண்டுக்கு அப்படிப்பட்ட ஆட்சேபனை யில்லை. உள்ளபடியே, ஒரு கூட்டுத்தொழில் சங்கத்தின் கீழ் ஏற்பட்ட ஒரு சீட்டுப்பண்டானது—ஒவ்வொரு சீட்டையும் பிரத்தியேகமாய் ரெஜிஸ்டர் செய்வதென்னும் தொந்தரைக்கிடமான கிரமாசாரமில்லாமல், மெம்பர்களே இஷ்டப்பட்டு குறித்த ஒரு காரியத்துக்காக சேர்ந்த ஒரு உபசங்கமாகும். அதற்குச் சந்தாதாரர்களாயுள்ளவர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டவர்களாயிருப்பதனாலும், அவர்கள் ஒரு சங்கத்தின் மெம்பர்களாயிருப்பதனாலும், அந்த சங்கத்தின் பஞ்சாயத்தார் ஷை பண்டின் காரியங்களை மேல்விசாரணை பண்ணுவதனாலும், அந்த பண்டின் விவகாரம் யோக்கியமாகவே நடந்துவருமென்பது உறுதியாய் ஏற்படுகிறது.

11. (*h*) (Current Accounts) நடைமுதல் கணக்குகள்.—இவைகள் மெம்பர்கள் மாத்திரமே சேரக்கூடியவர்களாயிருக்கவேண்டும். நடைமுதல் கணக்குகள் செட்டை விருத்தி செய்வதற்குப் பிரயோசனப்படாததால், அவைகளை டிபாஸிட் தொகைகளென்று திட்டமாய்ச் சொல்வதற்கில்லை. மெம்பர்கள் டிபாஸிட் தொகைகள் செலுத்தி, எவ்வளவுதொகை செலுத்துகிறார்களோ அவ்வளவுவரையிலும் திருப்பி வாங்கிக் கொள்ளுகிறார்கள். டிபாஸிட் செய்கிறவர் கணக்கில் ஒரு மாதத்தின் 3-ம் தேதிமுதல் கடைசி தேதி வரையிலே அதமம் எவ்வளவு தொகைகள் கட்டப்பட்டிருக்கின்றனவோ அவைகளுக்கு வருஷம் 1 க்கு 100 க்கு 2 அல்லது 3 விழுக்காடு குறைந்த வீதமான வட்டி கொடுக்கப்படுகிறது. பணம் திருப்பி வாங்கிக்கொள்வதாயிருந்தால் அதைப்பற்றி நோடிஸ் கொடுக்கவேண்டு மென்றாவது, ஒரு வாரகாலத்தில் மொத்

தமாய் இவ்வளவு தொகைதான் திருப்பி வாங்கிக்கொள்ளலா மென்றாவது சில சங்கங்களில் வற்புறுத்தப்படுகிறது. இப்படி செய்வதனால், கேட்டபோது கொடுப்பதற்காகப் பெருந்தொகைகளைச் சங்கத்தார் வீணே வைத்து வைக்கவேண்டிய ஆவசியகம் சிறிது மட்டில் குறைந்து போகிறது. நடைமுதல் கணக்கு வைப்பது சிறு சங்கங்களுக்கும் முக்கியமாய் நாட்டுச் சங்கங்களுக்கும் ஏற்றதல்ல. பெருத்த நகரசங்கங்களில் அது மிகவும் நன்றாய் நடந்துவருகிறது. சாதாரணமாக கூட்டுத்தொழில் சங்கங்கள் நடைமுதல் கணக்குகள் வைக்காமல் மறுப்பது உசிதமாகும்.

12. (*i*) பங்குமூலதன டிபாஸிட் தொகைகள்.—பங்குமூலதனம் அதிகமாயிருந்தால், முக்கியமாய் ஸென்ட்ரல் பாங்கிகளில், அந்த மூலதனத்தைக் கேட்கும்போது தவணைத் தொகைகளாகச் செலுத்தவேண்டுமென்று சகாயச் சட்டங்களில் நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. பங்குக்காரர்கள் பங்குமூலதனத்தை முன்னதாய்ச் செலுத்தக் கூடாதென்று தடுக்கப்படுகிறபடியால், அசௌகரியமா யிருக்கத்தக்க காலத்தில் தொகைசெலுத்தும்படி கேட்கப்படும் ஆபத்துக்குள்ளாகிறார்கள். அப்படிப்பட்ட விஷயங்களிலே, அவர்கள் செலுத்தப்படாத பங்கு மூலதனத் தொகைமுழுவதையும் பங்கு மூலதன டிபாஸிட்தொகையாக முன்னதாய்ச் செலுத்தலாம். பாகம்பாகமாகச் செலுத்தப்படும் தொகைகளைக் கட்டிக்கொள்ளக்கூடாது. அவைகள் சட்டாயமாய்ச் செலுத்தவேண்டிய தொகைகளல்ல வென்பது வாஸ்தவமே; ஆயினும் ஒருதடவை செலுத்திவிட்டால் அவைகளைத் திருப்பி வாங்கிக் கொள்ளக்கூடாது. டிபாஸிட் தொகை செலுத்தப்படும் காலத்தில் பாங்கிகளிலே கொடுக்கும் வீதங்களில் மிகவும் ஜாஸ்தியான வீதங்களின்படி மேற்படி தொகைகளுக்கு வட்டி கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட வட்டியானது செலுத்திவிடப்பட்ட மூலதனத்தின்மேல் ஏற்படும் ஈவுத்தொகையுடன்கூட கொடுக்கப்படுகிறது. டிபாஸிட் தொகையானது பங்குத்தொகையை யொட்டியிருப்பதால், அந்தப் பங்குத்தொகை இன்னொருவர் பேருக்கு மாற்றப்படும் பட்சத்தில், டிபாஸிட் தொகையைக்கூட மாற்றவேண்டும். இந்த ஏற்பாட்டினால் உண்டாகும் அனுகூலம் என்னவென்றால், ஒரு வாபிதாவுக்குப் பணங்கட்டும்பட்சத்தில், டிபாஸிட்கட்டும் பங்குக்காரர் யாதொரு பணமும் செலுத்தவேண்டியதில்லை. பாங்கார் தாமாகவே அந்தத் தொகையை டிபாஸிட்டிலிருந்து எடுத்துக் கட்டிக்கொண்டு அதைச் செலுத்திவிடப்பட்ட பங்குமூலதனமாகக் கணக்கில் எழுதிக்கொள்வார்கள். பங்கு மூலதனத் தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்டால், டிபாஸிட்தொகையில் ஒன்றும் நிற்காது. பங்குமூலதனத்தின்பேரில் ஏற்படும் ஈவுத்தொகையைவிட டிபாஸிட் தொகையின் பேரில்ஏற்படும்வட்டி மிகக் குறைவானபடியால், பாங்குக்காரர்—பங்குக்காரர்களுக்குள் எவர் இந்த டிபாஸிட்டுகளைச் செலுத்திவிட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு ஷை ஈவுத்தொகையோடுகூட (போனஸ்) லாபத்தொகை கொடுக்கும்படியான அவ்வளவு லாபம் தங்களுக்குக் கிடைத்திருந்தால் அந்த தொகையும் கொடுக்கலாம்.

இந்தியா கவர்ன்மென்டார் ரெவினியு அண்ட் அக்ரிகல்சுரல் டிபார்ட்மென்டிலே செய்த தீர்மானம்.

நெ. 6-256-26, ஸிம்லா, 1910-ம் ஹு மே மீ 6உ

தீர்மானம்.—1904-ம் ஹுத்திலே ஐக்கிய நாணயச்சங்க ஆக்ட் ஜாரி செய்யப்பட்டது முதல் இந்தியாவில் கூட்டுத்தொழில் நாணய முயற்சியானது எதிர்பார்க்கப்பட்டதைக் காட்டிலும் எவ்வளவோ துரிதமாய் அபிவிருத்தி யடைந்திருக்கிறது; அந்த அபிவிருத்தியானது 1908-09-ம் ஹுத்திலும் குறையாமல் அவ்விதமாகவே இருந்தது. சென்ற மூன்று வருஷங்களிலே ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் கணக்கு விவரங்களை அடியிற்கண்ட அட்டவணையில் ஒன்றோடொன்று ஒப்பிட்டுக் காட்டி யிருக்கிறது:—

	1906-07	1907-08	1908-09.
	சங்கங்களின் சங்கியை.		
ஸென்ட்ரல் (பிரதான) சங்கங்கள்	14	7	15
நகர சங்கங்கள்	89	149	227
நாட்டு சங்கங்கள்	740	1,201	1,766
மொத்தம்.	843	1,357	2,008
மெம்பர்களின் சங்கியை.	90,844	149,160	184,889
மூலதனம்.			
இதர மெம்பர்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள்.	6,56,092	12,43,495	24,93,814
இதர சங்கங்களிலிருந்து வாங்கின	2,40,425	5,84,765	15,96,611
பங்கு மூலதனம்.	5,55,805	9,35,928	14,77,254
மெம்பர்கள் செலுத்தின டிபாஸிட் தொகைகள்.	5,76,025	9,19,523	16,18,018
ஸர்க்கார் சகாயம்.	2,84,738	6,51,816	6,86,143
(ரிஸெர்வ்) சேமநிதி.	58,598	78,559	1,93,271
மொத்தம்.	23,71,683	44,14,086	80,65,111
செலவு.			
இதர மெம்பர்களுக்கு திருப்பிச் செலுத்தி விடப்பட்ட கடன்கள்.	1,51,185	4,01,976	14,10,828
மெம்பர்களுக்குக் கொடுத்தகடன்கள்.	28,83,971	36,98,018	59,99,924
விலைசெய்யப்படாத பொருள்களும், பண்டங்களும் வாங்கினது	3,15,679	3,90,655	6,74,383
லாபம்.	1,12,614	1,80,916	3,26,265
மொத்தம்.	29,63,449	46,66,265	84,10,895

2. இந்தக் கணக்கினால் காட்டப்படும் காரியாபிவிருத்தி அற்புதமாயிருக்கிறது; ஆனால், அனேக மாகாணங்களிலிருந்து வந்திருக்கும் ரிபோர்ட்டுகளைப் படித்துப் பார்த்தால், ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக வந்த சகல விண்ணப்பங்கள் விஷயமாகவும் ரெஜிஸ்ட்ரார்கள் காரியம் நடத்தக் கூடியவர்களா யிருந்திருக்கும் பட்சத்தில், இன்னும் அற்புதமான பலிதங்கள் கிடைத்திருக்குமென்று தெரிகிறது. சென்னை மாகாணத்தில் வருஷக் கடைசியில் 300 விண்ணப்பங்களுக் கதிகமாகப் பைசலாகாமல் நின்று விட்டிருந்தன; மேலும், பிரஸ்தாப வருஷத்தில் சங்கங்களின் சங்கியை இரட்டத்தனைக் கதிகமாக விருத்தியடைந்திருந்த போதிலும், அனேக விண்ணப்பங்களின் விஷயமாகக் காரியம் நடத்தக் கூடாமற் போய்விட்ட தென்றும், அந்த விண்ணப்பங்கள் விஷயமாய் அதைரிய முண்டாக்காமலிருந்திருக்கும் பட்சத்தில் அவைகளின் சங்கியை இன்னும் அதிகமாய் இருந்திருக்கு மென்றும் பர்மா ரெஜிஸ்ட்ராரவர்கள் தெரிவிக்கிறார். இதர மாகாணங்களிலும் இதே கஷ்டம் உண்டாயிருக்கிறது; ஆகவே, இந்த முயற்சி இனி சித்தியடைவது—அதற்குத் திரவியசகாயம் கிடைக்கும்படி செய்வதும் அதன் காரியங்களை மேர்ப்பார்வையிடும்படி செய்வதும் ஆகிய இந்த இரண்டு காரியங்களும் எவ்வளவு மட்டில் நிறைவேறுகின்றனவோ அதை இன்னும் அனுசரித்ததாகவே யிருக்கிறது. திரவிய சகாய விஷயமாக, பிரஸ்தாப வருஷத்தில் விசேஷ அபிவிருத்தி உண்டாயிற்று. சங்கங்களின் மொத்த மூலதனம் விசேஷமாய் அதிகரித்தபோதிலும், ஸர்க்காரால் செய்யப்பட்ட திரவிய சகாயம் அனேகமாய் அதிகப்படாமல் முன்னிருந்த அளவிலேயே யிருந்தது; அப்படி சகாயஞ்செய்த தொகையானது இப்போது மொத்த மூலதனத்தில் பன்னிரண்டில் ஒரு பாகமாகத்தான் யிருக்கிறது. ஆனால், மற்ற இடங்களிலிருந்து வாங்கின கடனகளும், பங்குமூலதனமும், மெம்பர்கள் கட்டின டிபாஸிட் தொகைகளும் விசேஷ விருத்தி யடைந்திருக்கின்றன; மேலும், இந்த சங்கங்களிலே ஜனங்களுக்கு நம்பிக்கை அதிகமாய்க்கொண்டே வருகிறதென்று அவைகளைப்பற்றிய கணக்குகளினால் திருப்திகரமாகத் தெரியவருவது மாத்திரமல்லாமல், இந்த சங்கங்களுக்கும் ஊரில கடன்கொடுக்கும் மற்றவர்களுக்கும் பண லேவாதேவி நடக்கத் தொடங்கியிருக்கிறதென்றும் தெரியவருகிறது. பின்சொன்ன சங்கதியானது பிரஸ்தாப வருஷத்தில் நடந்த காரியங்களிலே மிகவும் திருப்திகரமான அம்சமா யிருக்கிறது. பர்மாவிலே ரங்கூன் பாங்கார் இந்த சங்கங்களுக்குத் திரவியசகாயம் செய்ய ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சென்னைமாகாணத்தில சென்னப்பட்டணத்திலும் சேலத்திலும் முறையே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற இரண்டு ஸென்ட்ரல் பாங்கார் இம்மாதிரியான சகாயஞ்செய்ய ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஐக்கிய மாகாணங்களிலே ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகளிலிருந்து கடன்வாங்கப்பட்டு, அப்படிப்பட்ட கடன்களின் தொகை விசேஷமாய்ப் பெருகியிருக்கிறது; இது இப்படியிருக்க, வங்காளத்திலே சுமார் 50 சங்கங்களை ஒன்றாய்ச்

சேர்த்து இரண்டு கூட்டுத்தொழில் யூனியன் சபைகளை ஏற்படுத்தி யிருப்பதனால், திரவியசகாயம் செய்யும் காரியத்தைச் சுலபமாக்குவதில் முக்கியமான அபிவிருத்தி உண்டாயிற்று. பம்பாய் ப்ரெஸிடென்ஸியிலே இருக்கும் ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு திரவிய சகாயம் செய்யும்பொருட்டு ஒரு ஸென்ட்ரல் பாங்கியை ஸ்தாபிப்பதற்காக, ஆனரபில் ஸர் விட்டல்தாஸ் தாகர்ஸேயும் ஆனரபில் மிஸ்டர் லலுபாய் ஸாமல்தாஸும் பிரேரேபித்திருக்கும் ஒரு ஏற்பாட்டை பம்பாய் கவர்ன்மென்டார் அனுப்பியிருக்கிறார்கள். அந்த விஷயம் இன்னும் பைசலாகாமல் யோசனையில் இருக்கிறது. ஆனால், சீக்கிரத்திலேயே ஒரு முடிவு ஏற்படுமென்று நம்பப்படுகிறது. ஆனால், மேற்பார்வையிடும் விஷயத்தைக் குறித்து இன்னும் முடிவாய் ஒன்றும் ஏற்படவில்லை. ரெஜிஸ்ட்ரார்கள் நேராய் எவ்வளவு வேலையை மேற்பார்வையிடக் கூடுமோ அவ்வளவு வேலையும் பூர்த்தியாய் அவருக்கு அனேகமாய் எல்லா மாகாணங்களிலும் ஏற்கனவே ஏற்பட்டு விட்டிருக்கிறது; ஆகவே, மேல்விசாரணைசெய்யும் காரியத்துக்காகச் சங்கங்களை ஒழுங்குபடுத்தி ஒன்றாய்ச் சேர்ப்பதற்கேற்ற ஏதோ ஒரு ஏற்பாடு திருப்திகரமாய் அமைக்கப்படுகிறவரையில், அபிவிருத்தியடைவது தடைப்பட்டுப் போவதுமல்லாமல் அனேக பிரதேசங்களில் இந்த முயற்சி விருத்தியடைவதற்கு வேண்டியபடி ரெஜிஸ்ட்ரார்கள் கவனம்செலுத்த முடியாதவரா யிருப்பதனால், அந்த பிரதேசங்கள் இதுவிஷயத்தில் விருத்திபடையாமலே எப்போதும் இருந்துகொண்டிருக்கும். இவ்விஷயம் திரவியசகாய விஷயத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது; இந்தியா கவர்ன்மென்டாரும் இதுவிஷயமாய்த் தங்கள் அபிப்பிராயத்தை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார்கள்; அவர்களுடைய அபிப்பிராயப்படி, இவ்விஷயத்திலுண்டாகும் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு மிகவும் திருப்திகரமான ஏற்பாடென்னவென்றால்,—சங்கங்கள் அதிகப்பட்டு வருந்தோறும் அவைகளை அந்தந்த பிரதேசங்களிலே யூனியன்களாகச் சேர்த்தும், இந்த பிரதேச யூனியன்களைச் சிறிதுகாலத்துக்குப் பிறகு ஸென்ட்ரல் யூனியன்களாக ஐக்கியப்படுத்தியும் இவ்விதமாகக் கூட்டுத்தொழில் கோட்பாட்டை அனுசரித்து அபிவிருத்தியடைவதைப் பின்னும் விஸ்தாரப்படுத்துவதேயாகும்; இப்படிசெய்வதில் கொள்ளவேண்டிய லட்சியமென்னவென்றால், இந்த யூனியன்கள் அவைகளைச் சேர்ந்த சங்கங்களுக்குத் திரவியசகாயம் செய்யவேண்டியதுமாத்திரமே யல்லாமல், அவைகள் செய்யும் வேலையை மேற்பார்வையிட்டு இம்முயற்சியானது திட்டமாய் ஏற்பட்ட பிரதேசங்களிலே பின்னும் விருத்தியடையும்படியாகவும் உற்சாகப்படுத்தி வரவேண்டும். இந்த விஷயம் எல்லா மாகாணங்களிலும் ஜாக்கிரதையாய் ஆராய்ச்சி செய்யப்பட்டுவருகிறது; அந்தந்தப் பிரதேசங்களின் நிலைமைகளுக்குத் தக்கபடி சில விவரங்களை மாற்ற வேண்டியது அவசியமா யிருந்தாலும், பொதுவாய் மேலே சொல்லப்பட்ட ஏற்பாடு வரவர அங்கீகரிக்கப்பட்டு வருவதாகவே தெரிகிறது. இம்முயற்சியின் ஆரம்ப தசையில் இப்படிப்பட்ட கஷ்டங்கள் நேரிடாமலிருக்க முடி

யாது; இது விஷயமாய் இன்னும் அதிக துரிதமாக அபிவிருத்தி யடைய வேண்டுமென்று ஆசைகொள்வதில், காலம் நெடுகச் செல்லச்செல்ல சங்கங்களின் சிறந்த க்ஷேமத்திற்கு அனுகூலமாயிராத பிரயத்தனங்களைச் செய்யக் கூடுமாகையால் அப்படிப்பட்ட அபாயம் நேரிடாதபடி முக்கியமாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த சங்கங்களுக்கு மேற்பார்வை ஏற்படுத்துவதற்கு ஒரு உபாயம் ஸ்பஷ்டமாய்த் தோன்றுகிறது; அது என்னவென்றால், அந்தந்த பிரதேசங்களிலுள்ள ஆபிஸர்கள் தங்களுடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கும் சங்கங்களை மேற்பார்வையிடும் பொறுப்பை அவர்கள் கிரமமாய்ச் செய்யும் வேலையில் ஒரு பாகமாக ஏற்கும்படி அவர்களிடத்தில் ஒப்பிப்பதேயாம்; ஆனால், அந்தவிதமாய்க் கிரமாசாரமாக திட்டங்கள் ஏற்படுத்துவதனால் முடிவில் காரியசித்தி சிறந்தவகையாய் உண்டாகக்கூடியதா என்னும் விஷயத்தில் இந்தியா கவர்ன்மென்டார் சந்தேகங்கொண்டவர்களாயிருக்கிறார்கள். இந்த வேலையில் அக்கறைகொண்டவர்களாயும், ஐக்கிய நாணயச் சங்கங்களை நிர்வகிக்கவேண்டிய முறைகளை நன்றாய் அறிந்தவர்களாயும் அந்தந்த பிரதேசங்களிலுள்ள குறித்த சில ஆபிஸர்களிடம் இந்த சங்கங்களை மேற்பார்வையிடும் கடமையை ஒப்பிப்பதற்கு ஆட்சேபனை இல்லை; ஆயினும், அடி சங்கங்களைப் பிரதேச ஆபிஸர்களின் உத்தியோகமுறையான விசாரணைக் குட்படுத்தும்பக்ஷத்தில், இந்த முயற்சியை ஸர்க்காரின் அதிகாரபரமாக்கும் தன்மை அதிகப்பட்டே தீருமாகையால், அப்படி செய்வது ஒழுங்கான காரியமுறையாகுமா வென்பது சந்தேகத்துக்கிடமா யிருக்கிறது.

3. மேற்பார்வையிடும் விஷயம் தீர்மானமாகிறவரையில், பெரும்பான்மையான ரெஜிஸ்ட்ரார்கள் இந்த சங்கங்களின் சங்கியையை அதிகப்படுத்துவதைவிட ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சங்கங்களை பலப்படுத்துவதே நல்லதென்றெண்ணி அந்தப்படி காரியம் நடத்திவருகிறார்கள். இப்படி காரியம் நடத்துவதை இந்தியா கவர்ன்மென்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். இந்த சங்கங்கள் மேற்பார்வைக்காகவும் விசாரணைக்காகவும் கவர்ன்மென்டை நம்பி யிருக்கிறவரையில், எந்தப் பிரதேசங்களில் இந்த முயற்சி ஏற்கனவே நிலைகொண்டிருக்கிறதோ, மேலும் எந்த பிரதேசங்களிலிருந்து இந்த முயற்சியானது சகஜமாய் மற்றஇடங்களுக்குப் பரவுமென்று எதிர்பார்க்கக்கூடுமோ அப்படிப்பட்ட பிரதேசங்களே இந்த முயற்சி அபிவிருத்தியடைவதற்கேற்றவைகளாதலால், அவ்விடங்களில் அபிவிருத்தி யுண்டாகும்படி ரெஜிஸ்ட்ரார் அவர்களும் அவருடைய சிப்பந்தியும் கவனம் செலுத்துவது யுக்தமாகும். சிறந்தவகையாய் மேற்பார்வை யிடுவதற்கில்லாமல் வெகுதூரமாயுள்ள ஜில்லாக்களிலே தனிமையான சங்கங்களை ஏற்படுத்தாம லிருப்பதே சாதாரணமாய் விவேகமான காரியமாகும்.

4. கீழ்வங்காளமும் ஆஸாமும் கூடியமைந்த மாகாணத்திலே மிதமிஞ்சின வட்டி வீதங்கள் வாங்குவதென்னும் முக்கியமான விஷயத்தைப் பற்றி ஒரு விசாரணை அந்த மாகாணத்தில் நடத்தப்படுமென்பதை இந்தியா கவர்ன்மென்டார் சந்தோஷத்துடன் குறிப்பிடுகிறார்கள்.

5. கான்பரன்ஸ் என்னும் மகாசபையார் சிபார்சு செய்திருக்கிற விஷயங்களில் ஒன்று நீங்கலாக மற்றவைகளைப்பற்றி இந்தியா கவர்ன்மென்டார் உத்தரவுகள் பிறப்பிக்க உத்தேசங்கொள்ளவில்லை; அவைகள் விஷயமாய் என்னசெய்வது அவசியமென்று எண்ணப்படுகிறதோ அப்படி செய்யும்படி பிரதேச கவர்ன்மென்டார்களுக்கும் பரிபாலன கர்த்தர்களுக்கும் இவ்விஷயத்தை விட்டுவிட இந்தியா கவர்ன்மென்டார் இஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பிரத்தியேகமாய் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ள உத்தேசிக்கிற ஒரே அம்சம் என்னவென்றால், ஐக்கிய நாணயச் சங்கங்களைப் பற்றிய ஆக்டைத் திருத்துவதேயாகும்; இது விஷயமாய் அவர்கள் பிரதேச கவர்ன்மென்டார்களுக்கு ஏற்கனவே எழுதி யிருக்கிறார்கள். ஆயினும், மகாசபையின் நடவடிக்கைக் குறிப்புகளை அதிக பிரியத்துடன் படித்தார்கள்; சென்ற வருஷங்கள் சிலவற்றில் பேசப்பட்டதுபோல், அத்தனை வெவ்வேறான விஷயங்களைப் பற்றி இந்த மகாசபையில் பேசப்படவில்லை; ஆயினும், இதுவரையில் தர்க்கிக்கப்பட்டுவந்த விஷயங்களைப்பற்றி முன்னிலும் அதிக ஸ்பஷ்டமும் திட்டமுமான அபிப்பிராயங்கள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன வென்பதை நோக்கும்போது, பரீட்சார்த்தமாய்க் காரியம் நடத்திவந்த தசை சென்று விட்டதென்று தெரியவருவதைக் குறித்து சந்தோஷிக்கவேண்டி யிருக்கிறது. ஐக்கிய நாணயச் சங்கங்களைப்பற்றிய ஆக்டைத் திருத்துவதற்காக ரெஜிஸ்ட்ரார்கள் அதிக ஜாக்கிரதையுடன் செய்தனுப்பியிருக்கும் பிரேரேபனைகள் இந்த விஷயத்தைப் பைசல் செய்வதற்குப் பிரதானமாய் உதவும்; மேலும், உத்தியோகஸ்தர்களல்லாதவர்களின் சகாயத்தைப் பெறுவதற்கான உத்தமோபாயத்தைக்குறித்த விஷயத்தைப்பற்றியும், உற்பத்தி உண்டாக்குவதற்கும் பகிர்ந்துகொடுப்பதற்குமான சங்கங்களை ஏற்படுத்துவதைக் குறித்த விஷயத்தைப்பற்றியும் மகாசபையில் பேசப்பட்டதென்பதையும் கண்டு இந்தியா கவர்ன்மென்டார் சந்தோஷிக்கிறார்கள். உத்தியோகஸ்தர்களல்லாதவர்கள் செய்யும் சகாயம் முக்கியமானதென்பது சம்பூர்ணமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது; மேலும், கூட்டுத்தொழில் சம்பந்தமான கோட்பாடானது உற்பத்தி உண்டாக்குவதற்கும் பகிர்ந்துகொடுப்பதற்குமான சங்கங்களின் விஷயத்திலும் விவசாயத் தொழில்செய்யும் ஜனங்களுக்கு அதிக பிரயோசனமுண்டாகும் விதமாக மற்ற தேசங்களில் நடப்பதுபோலவே இத்தேசத்திலும் கடைசியாய் அனுசரிக்கப்படுமென்பதில் சந்தேகம் எதுவும் இருப்பதாகத் தோற்றவில்லை.

நீடாமங்கலம் நாட்டுபாங்கி.

(1) நீடாமங்கலம் நாட்டு பாங்கை ஏற்படுத்தினதனால், அவ்விடத்தில் அக்கிரம வட்டிக்குக் கடன் கொடுக்கும் அனேகர்களுடைய தொழிலுக்குப் பெருத்த கேடு உண்டாயிற்று. வருஷ வாரியில் நூற்றுக்கு 9⅜ வீதப்படிக்கான வட்டிக்கு சுமார் 10,000 ரூபாய் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது; இதுவுமல்லாமல், அருமையான அனேக சகாயங்களும் மெம்பர்களுக்குச் செய்து கொடுக்கப்படுகின்றன. இந்த பாங்கி உண்டானதற்கு முன்னமே, மெம்பர்கள் நூற்றுக்கு 12 முதல் 24 வரையில் வட்டி செலுத்திவந்தார்கள். இப்போதோ அவர்கள் நேராக 500 ரூபாய் அளவுக்கும், நேராகவல்லாமல் மற்றப்படி 500 ரூபாய் அளவுக்கும் வருஷப்பிரதி வருஷம் லாபமடைந்து வருகிறார்கள். ஆகவே, அவர்கள் வருஷாவருஷம் சுமார் ஆயிரம் ரூபாய் லாபமடைகிறார்களாகையால், அந்த சிறு அளவுக்காகிலும் நான் ஜன சமூகத்தாருக்கு உபகாரம் செய்து வருகிறேன். என்னுடைய கிராமத்தார்களின் நன்மைக்காகப் பொருளாதார நிலைமையில் என்ன அபிவிருத்தி உண்டாயிருக்கிறதென்று ஒவ்வொரு வருஷமும் கிட்டத்தட்ட ஜூலை மீ முதல் தேதி அன்றைக்கு நான் பார்க்கும்போது, எனக்குண்டாகும் சந்தோஷத்துக்கு அளவே கிடையாது.

(2) மேலே சொன்ன அருமையான சகாயங்கள் எவை யென்றால்:—1904-ம் ஆண்டு 10-வது இந்தியா ஆக்டினால் ஏற்படும் பிரயோஜனங்கள் உள்பட, (a) பகுதி பகுதியாய்த் தொகை செலுத்துவதற்கும் எதிர்வட்டி ஈழித்துக்கொள்வதற்கும் நாங்கள் அனுமதி கொடுக்கிறோம்; (b) வாஸ்தவத்தில் எத்தனை தினங்கள் ஆயிருக்கிறதோ அதற்கு மாத்திரம் நாங்கள் வட்டி வசூல் செய்கிறோம்; (c) செலுத்திவிடப்பட்ட பங்கு மூலதனத்தின் பேரில் நாங்கள் நூற்றுக்கு 7½ வீதம் (போனஸ்) லாபத்தொகை கொடுத்து வருகிறோம்; மேலும், (d) காலந்தவறாமல் தொகை செலுத்திவரும்படி உற்சாகப்படுத்துவதற்காகவும் சிக்கனமாய்ச் செலவிடும் வழக்கத்தைக் கைக்கொள்ளும்படி போதிப்பதற்காகவும் இந்த வருஷமுதல் கூட்டுத்தொழில் முறையை அனுசரித்து நாங்கள் ஒருவிதமான சகாயம் செய்துகொடுக்க உத்தேசிக்கிறோம். யாதொரு கோவாபரேடிவ் வருஷத்தில் தண்டவட்டி நீங்கலாக வாஸ்தவத்தில் வசூலான மொத்த வட்டியில் பத்திலொரு பாகமானது. அந்த வருஷத்திலே ஒரு நாள் தாமதம் கூட உண்டாகாமலே காலந்தவறாமல் வட்டியையும் தவணைத் தொகைகளையும் செலுத்தின மெம்பர்களுக்குள் வசூலான வட்டித்தொகைக்குத் தக்கபடி அந்த வருஷ முடிவிலே பகிர்ந்து கொடுக்கப்படும்.

(3) கிட்டத்தட்ட 1909-ம் வரு டிஸெம்பர் மீ முடிவிலே விவசாய இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஒருவர் என்னிடம் வந்து, நெற்பயிர் பூமிகளுக்குப் பச்சை எரு விடுவதற்காக நான் என்னுடைய பாங்கைச் சேர்ந்த மெம்பர்களை அவுரி விதைகள் வாங்கச்செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பாங்க் விவகாரங்களைத் தவிர, பழைய நீடாமங்கலம், பொரியநார், கொட்டையூர் இந்த கிராமங்களி

லுள்ள மெம்பர்கள் சுமார் 150 ரூபாய் பெறுமான அவுரி விதைகள் வாங்கியிருப பதுடன், சுமார் 300 ஏகரா பூமியில் அந்த விதை விதைக்கப்பட்டு மிருக்கிறது. எவ்வளவு விதை தேவையாயிருந்ததோ அவ்வளவையும் சர்ப்பரா செய்ய இந்த டிபார்ட்மென்டாருக்கு முடியாமலிருந்தது; அப்படி அவர்கள் சர்ப்பரா செய்யக்கூடியவர்களாயிருந்திருக்கிற பட்சத்திலே, சுமார் 1000 ஏகரா பூமிக்கு அவுரி விதைக்கப்பட்டிருக்கலாம். கடன் கொடுக்கும் பிரிவில் வேலைசெய்வதோடு கூட உற்பத்தி யுண்டாக்கும் பிரிவிலும் சிறிதுமட்டில் இந்த சங்கத்தார் வேலை செய்யக்கூடியவர்களா யிருந்தார்கள். உண்டான இந்தக் காரியசித்தியெல்லாம் கூட்டுத்தொழிலினால் உண்டானதேயல்லாமல், வேறெதனாலும் உண்டானதல்ல. பச்சை எருவை உபயோகித்ததன் பலனாக மேலே சொன்ன 300 ஏகரா பூமியிலும் ஏகரா ஒன்றுக்கு சுமார் ஒரு ரூபாய் விழுக்காடு அதிக வரும்படி கிடைக்கக் கூடுமானால், போன வருஷத்து வரும்படியோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது இந்த கிராமங்களில் சுமார் 300 ரூபாய் அதிக வரும்படி கிடைப்பதே பொருளாதார நிலைமையில் உண்டாகும் அபிவிருத்தியாகும். ஆகவே என்னுடைய எண்ணங்கள் இப்போது சிறிதுமட்டில் நிறைவேறி வருகின்றன. இந்தியாவில் அனுசரிக்கப்படும் விவசாய முறையை நீங்கள் சீர்திருத்த விரும்பும் பட்சத்திலே, கூட்டுத்தொழில் வழிகளைத்தான் அனுசரித்து அந்தப்படி செய்யவேண்டும். எவ்வித காரியமாகிலும் சித்திபெற வேண்டுமானால், அது கூட்டுத்தொழில் முறையினாலேதான் நிறைவேறவேண்டியதாகும். சீர்திருத்தமான சாகுபடி முறைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதற்காக ஆள்கள் கிடைப்பது அருமையாயிருக்கிறதென்று விவசாய இலாகாதார் குறை கூறுவது வழக்கமாயிருந்தது கடன் கொடுப்பதற்கான கூட்டுத்தொழில் சங்கம் ஒவ்வொன்றிலும் மிக்க சிரத்தையுடன் வேலைசெய்யக் கூடியவர்கள் ஒருவர் அல்லது இருவர் இருப்பார்கள். விவசாய இலாகாதார் அவர்களைக்கொண்டு, அவர்களால் என்ன செய்யக்கூடுமோ அதை செய்விக்க முயற்சிசெய்யலாம். அனுபோகத்தை யொட்டி ஏதாவது செய்ய விவசாய இலாகாதார் விரும்புகிற பட்சத்திலே, அவர்கள் கூட்டுத்தொழில் பிரிவாரோடு சேர்ந்து வேலை செய்யவேண்டும்.

(4) இந்த கிராமங்களின் பொருளாதார நிலைமையை விருத்திசெய்வதற்காக சிறிது மட்டில் உழைத்திருக்கிற இந்த பாங்கைச் சேர்ந்த அடியிற்கண்ட மெம்பர்களைக் குறித்துப் பிரத்தியேகமாய்ச் சொல்லவேண்டியதாயிருக்கிறது.

[1.] ம-ா-ா-ஸ்ரீ ஆர். சேஷய்யங்கார் சுமார் 6 ஏகரா பூமியில் சவுக்குமரம் வைத்தார்; போன வருஷம் மழை மிகவும் குறைவாயிருந்தபடியால், அவர் அந்தச் சவுக்கு நாற்றுகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக பாங்கிலிருந்து சுமார் 400 ரூபாய் கடன் வாங்கிச் செலவழித்தார். இந்த மெம்பர் இவ்விஷயத்தில் சலியாமல் ஊக்கங்காட்டி வேலைசெய்தது கவனிக்கத்தக்கது.

[2.] என். ஆர். விஜயராகவய்யங்கார் படுகை நிலத்தில் சவுக்குமரம் வைத்துப் பயிராக்கினது மல்லாமல், புகையிலை சாகுபடியும் செய்தார்; இந்த பாகங்களில் இம்மாதிரி சாகுபடி புதுமையானதே.

[3.] கேசவய்யங்கார் சவுக்குமரம் வைத்துப் பயிராக்கினார்.

[4.] சி. ஆர். திருவேங்கடாச்சாரி சவுக்குமரம் வைத்துப் பயிராக்கினார்.

[5.] அடியேன் செய்தது. என்னுடைய பண்ணைவீட்டைச் சேர்ந்த புழைக்கடையில் ஒரு கிணறு தோண்டி, ஒரு தோட்டத்தை விருத்திசெய்தது. அந்தத் தோட்டத்துக்கு நான் பூஜிக்கும் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய பெயரிட்டு, அந்த கிணற்றுக்கு என்னுடைய அரசராயிருந்த மாட்சிமைதங்கிய காலஞ்சென்ற எட்வர்ட் மகாராஜா அவர்களின் பெயரிட்டேன்.

[6.] பஞ்சநத முதலியார். இவர் 1,00,000 சவுக்கு நாற்றுகள் வைத்துப் பயிராக்கினார்.

இன்னும் எத்தனையோ பேர் பொருளாதார நிலைமையை விர்த்தி செய்வதற்காக ஏதோ ஒரு வகையான மரம் வைத்துப் பயிராக்கி ஒருவாறு உழைத்திருக்கிறார்கள்.

நம்முடைய ஜனங்கள் உண்மையாய் ஒருவரோடொருவர் கூடி வேலை செய்யும்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் நம்முடைய நாட்டை ஆசீர்வதிப்பாராக.

நீடாமங்கலம்,
இரணடாவது விஷயமாகிய "கிராமக்கைத்தொழில்களின் பிற்காலகதி" என்பதைக் கடப்பையிலுள்ள லண்டன் மிஷனைச்சேர்ந்த ரெவ். ஜெ. எச். மக்பார்லேன் என்பவர் ஆரம்பித்தார். மிஸ்டர் மக்பார்லேன் எழுதிய ஸ்வாரஸ்யமான வியாசத்திலே, இதுவரையில் விவகரிக்கப்பட்ட விஷயங்கள் தற்காலத்தையும் முன் காலத்தையும் பற்றியவையாயிருந்திருக்க தம்மைப் பிற்காலத்தைப்பற்றி பேசும்படி கேட்டிருப்பதாகவும், வருங்காலத்தைப்பற்றிப் பேசும் தீர்க்கதரிசியின் தொழிலைத் தாம் கொஞ்சம் சமுசயத்துடனேயே ஏற்றுக்கொண்டதாகவும் சொன்னார். இந்தியா பிற்காலத்தில் நல்ல ஸ்திதிக்கு வரக்கூடிய ஒரு தேசமென்றும் அவர் சொன்னார். அதனுடைய மலைகளும், சுரங்கங்களும், காடுகளும், பாசன சம்பந்தமான் வசதிகளும் இந்தியாவின் பிற்காலகதி நன்றாயிருக்கு மென்பதையும், அதற்கு அபிவிருத்திக்கேற்ற ஒரு புதிய வாழ்க்கை வாஸ்தவத்தில் இப்பொழுது ஆரம்பமாகிற தென்பதையும் காட்டுகின்றன. அடியிற்கண்ட மார்க்கங்களில் விருத்தியடைவது சாத்தியம்; (1) இன்னும் விஸ்தாரமாய்ப் பயிரிடுவது;

ஏனெனில், அநேக நிலங்கள் இன்னும் பயிரிடப்படாம லிருக்கின்றன; உதாரணமாக, உபயோகப்படுத்தப்படாத நிலங்களில் நூற்றுக்கணக்கான ஏகராக்கள் துங்கபத்ரா பாசன வேலைகளினால் பயிரிடப்படலாம்; (2) மும்முரமாய்ப் பயிரிடுவது—இந்த மார்க்கத்தில் இன்னும் நல்ல ஸ்திதி அடைவதற்கு இடமிருக்கிறது; (3) ஏற்றுமதி—இது அதிகப்படுவது நிச்சயம்; நீலிமருந்து, பருத்தி, சர்க்கரை, வேர்க்கடலை முதலியவை ஏற்றுமதிச் சரக்குகளாக அதிக லாபத்தைக் கொடுக்கும்; மேலும், (4) கைத்தொழில்களும் விசேஷமாய் விருத்தியடைவது நிச்சயமே. உலகமுழுவதிலும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன; இந்தியர்களும் இந்த மார்க்கத்தில் முன்னிலும் அதி தீவிரமாய் விருத்தியடைந்து வருகிறார்கள். ஆனால், பொருள் விஷயமான அபிவிருத்தி உண்டாவதனால், கஷ்டங்களும் அதிகமாகும். பெரிய கிராமங்கள் உண்டாகும்; ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இதனால் அனுகூல முண்டாவது போய் கேடு விளைந்திருப்பதால் "உழவுக்கே திரும்பு" என்னும் கூக்குரலே எங்கும் உண்டாயிருக்கிறது. ஜீவிப்பதற்கான செலவு அதிகமாகும். இது முன்னமே ஆரம்பித்துவிட்டது; இதன் காரணத்தைப்பற்றி விசாரித்தறிவதற்காக ஒரு கம்மிஷனும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கூலி வீதங்கள் குறைந்தே நிற்கும். பணக்காரர்கள் இன்னும் செல்வவான்களாவார்கள்; ஏழைகள் இன்னும் எளியவர்களாவார்கள். இவைகள் நேரிடாமலிருக்கும்படி ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

கிராமக்கைத்தொழில்களைப்பற்றிப் பேசும்போது, பிரசங்கியார் விவசாயமே பெருந்தொழில் என்று சொன்னார். தச்சுவேலை, கருமார்வேலை, கொல்லத்துவேலை, கூடை முடைவது, பாய் பின்னுவது இவைகளைப்போன்ற சொற்பமாய்ச் செய்யப்படும் சில்லறைக் கைத்தொழில்கள் அநேக மிருக்கின்றன. ஆனால் மிகவும் முக்கியமான ஒரு தொழில் உண்டு; அதுதான் நெசவுத்தொழில். கொடைக்கானலிலுள்ள ஹாக்கர்களின் கூட்டத்தை இந்த சமயத்திற்கேற்ற உதாரணமாக எடுத்துச்சொல்லலாம். பட்டுகள், நாணயமான துணிகள், முரட்டுத்துணிகள், துப்பட்டிகள், படுதாக்கள் முதலியவை கிராமங்களில் அதிகமாய்த் தயார் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் நெசவுத்தொழிலைத் தானே செய்கிறவன் ஒருக்காலும் பணக்காரனா யிருக்கக்காணோம். ஒரு காரணத்தாலோ பல காரணங்களாலோ எல்லாரும் ஏழைகளாகவே யிருக்கிறார்கள்.

நெசவுக்காரர்களின் நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்கு என்ன முறைகளை அனுஷ்டிக்கும்படி மிஷனரிகள் வற்புறுத்தக்கூடும்? முதலாவது, வேலைசெய்வதில் இப்பொழுதைய முறைகளைக்காட்டிலும் சீரான முறைகளை அனுஷ்டிக்கும்படி தூண்டுவதல்லாமல் அவைகளைக் கற்பிக்கவும் வேண்டும். சாத்தியமான இடங்களில் விசைத்தறியை உபயோகத்துக்குக் கொண்டுவரவேண்டும். இரண்டாவது, பாவுநூலைத் தயார்செய்வதற்காக நயமான யந்திரம் வேண்டியிருக்கிறது. மூன்றாவது, நடுவில்நின்று பேரம்செய்கிறவர்களிடத்திலிருந்து

நெசவுக்காரர்களை மீட்கவேண்டும். பிறருதவி வேண்டியதில்லாமல் சுயமாகவே நல்ல ஸ்திதியிலிருக்கும் நெசவுக்காரர்கள் மிகவும் கொஞ்சம்; ஆகையால் அவர்கள் கடன் வாங்கி அதிக நஷ்டமடைகிறார்கள். நான்காவது, நெசவுக்காரர்கள் நூலையும் யந்திரங்களையும் சொந்தமாகத் தாங்களே வாங்கும் பொருட்டு ஒன்று சேர்ந்து வேலையில் கூட்டுத்தொழில் முறையாய் ஒத்துழைக்கும்படிக்கும், நெசவுச்சங்கங்கள் ஏற்படுத்தும்படிக்கும் அவர்களைத் தூண்ட வேண்டும். ஆனால் கூட்டுத்தொழிலானது இந்தியாவுக்குப் புதிதாகையால், அதை வழக்கத்துக்குக் கொண்டு வருவது கஷ்டமாயிருக்கும்.

பெருந் தொழிலாகிய விவசாயத்தைக்குறித்து யோசிக்கையில், இனி அதற்கு வெகு நல்ல காலம் உண்டாகப் போகிறதென்று தோன்றுகிறது. இந்தியாவைத்தொழில் தேசமாவதற்கு என்ன அவசிய மிருக்கிறது? இந்தியாவை விவசாய நாடாகவே வைத்திருக்கும்படி சகலபிரயத்தனமும் செய்யப்படவேண்டுமென்று பிரசங்கியார் வாதித்தார். மிஷனரிகள் சிறு பண்ணைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டுமேயொழிய பெரும் பண்ணைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை; ஏனெனில், இந்தியாவிலுள்ளவர்களில் பெரும்பான்மையோர் சொற்ப நிலத்துக்குடையவர்களா யிருப்பதால், அவர்களெல்லாருக்கும் கடன் வாங்காமல் ஜீவனம் பண்ணுவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. இது விஷயமாய் அநேக கஷ்டங்களிருப்பதால் அவைகளுடன் போராடி அவற்றைக் குறித்து நன்றாய் அறியவேண்டி யிருக்கிறது. முதலாவது, அந்தந்த காலங்களில் மழைபெய்யுமென்ற நிச்சய மில்லை. இந்தக்கஷ்டம் எப்பொழுதும் இருந்துகொண் டிருக்கிறபடியால், அதைப்பற்றி ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். இரண்டாவது, தர்ப்பிட்சமான காலங்களில் உணவு தானியங்களும் விதைகளும் வாங்குவதற்காக முன்பணம் கேட்பது குடியானவனுக்குள்ள ஒரு குறைவாகும்; அவனுக்கு சிக்கனத்தைக் கற்பித்து அந்தக் குறைவை நீக்கும்படி உதவிசெய்ய வேண்டும். வேலைக்காகவும் எருவுக்காகவும் கால்நடைகளை வைத்திருப்பது மூன்றாவது கஷ்டமாகும். சாதாரண நிலைமையிலுள்ள குடியானவனுக்கு எருதுகள் வேண்டியிருக்கின்றன; ஆனால் அவைகளுக்குப் போடுவதற்குப் போதுமான தீனி அவனிடத்திலில்லை. நான்காவது, அரைகுறையாய்ப் பயிரிடுவதால் கஷ்டம் ஏற்படுகிறது. குடியானவர்களில் அநேகர் பண்ணை வேலையிலேயே தங்கள் காலத்தையெல்லாம் கழிப்பதில்லை; ஆகையினால் அந்த வேலை உபேட்சிக்கப்படுகிறது. மழை பெய்யும்போது தான் வேலை நடக்கிறது. தங்களுடைய நிலத்தை ஜாக்கிரதையாய்ப்பார்த்துக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிப்பதெப்படி? இந்த கஷ்டத்தை நிவர்த்திசெய்ய அடியிற்கண்ட வழிகள் சூசிப்பிக்கப் படுகின்றன: (1) நிலங்களைச் சீர்திருத்துவது; கடன் கொடுத்தும் விவசாய முறைகளைக் கற்பித்தும் இதர விஷயங்களைத் தெரிவித்தும் உதவிசெய்ய கவர்ன்மென்டார் தயாராயிருக்கிறார்கள்; (2) விவசாய முறைகளைச் சீர்திருத்துவது; இந்த விஷயத்தில் மிஷனரிகள் அதிகமாய் உதவிசெய்யக் கூடும்; (3) சீர்திருத்தப்பட்ட ஆயுதங்

களையும் யந்திரங்களையும் உபயோகிப்பது; இது ஒரு பெருத்தவிஷயம், ஆனால் ரயத்தானவன் வழக்கத்துக்குக் கட்டுப்பட்டு அபிவிருத்தி யடைவதில் மிகவும் மெதுவா யிருப்பதால் இது விஷயத்தில் பிரவர்த்திப்பது கஷ்டமாயிருக்கிறது;(4)கிணறுகள் வெட்டுவதில் ஒத்துழைப்பது; கிணறுகளுக்காக கடன் கொடுக்க கவர்ன்மென்டார் சர்வசித்தமாயிருப்பதுமல்லாமல், விருப்பமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள்; கடைசியாக (5) விவசாய பாங்கிகள். பிரசங்கியார் இந்த ஏற்பாட்டை அங்கீகரித்தாலும், அது பலிதமடையும் விஷயத்தைப் பற்றித் தமக்குச் சந்தேகமிருப்பதாக ஒப்புக்கொண்டார். தம்முடைய அனுபவத்தில், ஜனங்கள் பாங்கியிலிருந்து பணம் வாங்கிக்கொள்ள அதிகமாய் இஷ்டப் படுகிறார்களே யொழிய பணத்தை பாங்கியில்போட இஷ்டப்படுவ தில்லையென்று ஏற்படுவதாகச் சொன்னார்; இதற்குக் காரணமென்னவென்றால், பணமுள்ளவர்களுக்கு விவசாய பாங்கிகளில் கிடைப்பதைக்காட்டிலும் அதிக உயர்ந்த வட்டிவீதம் சுதேச ஜனங்களிடத்தில் கிடைக்குமென்பதே. ஆயினும், இந்த பாங்கிகளை ஆதரிக்கும்படி ஜனங்களைத் தூண்டுவதனால் எல்லா வகுப்புகளைச் சேர்ந்த ஜனங்களுக்கும் உதவிசெய்ய மிஷனரிகளுக்கு ஒரு பெருத்த சமயம் வாய்த்திருக்கிறது. இப்படி செய்வதனால், மிஷனரிகள்-கவர்ன்மென்டார் இந்தியாவிலுள்ள ஜனங்களை ஆதரிப்பதற்காக எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் உதவி செய்யலாம்.

மேலும், மிஷனரிகள் கிறிஸ்தவர்களுக்காக சுலபமான ஷரத்துகளின் மேல் விவசாய பாங்கிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் அதைக்கொண்டு அவர்கள் ஒருவருக் கொருவர் உதவிசெய்து ஒத்துழைக்கும்படி அவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்றும் மிஸ்டர் மக்பார்லேன் சொன்னார். சோம்பலைவிட்டு உழைத்து வேலைசெய்யும்படி ஜனங்களுக்குக் கற்பிப்பதும் முக்கியமானதே.

(மதராஸ் மெயில், சனிக்கிழமை மாலை, 1910-ம்ஞு மேமீ 14உ)

தர்க்கம்.

1910-ம்ஞு மேமீ 10உ.

அக்கிராசனதிபதியாயிருந்த ரெவ. எஸ். டி. பாடன் தர்க்கத்தை ஆரம்பிக்கையில் முக்கியமாய் விவசாயத்தைப்பற்றியே பேசினார்; மிஸ்டர் மக்பார்லேன் தம்முடைய வியாசத்தில் எடுத்துக்காட்டியபடி அவரும் இந்தியாவில் விவசாயம் போகப்போக அதி உன்னத ஸ்திதிக்கு வருமென்று சொன்னார். ஆனால் இந்தியக்குடியானவர்கள் அநேக விஷயங்களைக் கற்கவேண்டியவர்களாயிருக்கிறபடியால், இந்தியர்களைத் திருத்தமான முறைகளை அனுஷ்டிக்கும்படியும் யந்திரங்களைக் கையாடும்படியும் செய்ய அதிக காலம் பிடிப்பதுந் தவிர அதிக பொறுமையும் வேண்டும். மிஸ்டர் பாடன் அமெரிக்காவிலிருந்து கைத்தொழில் சம்பந்தமான மிஷனரியாக அனுப்பப்பட்டிருக்கிறார் அவர் வங்கவோலில் விவசாயத்தின் விஷயமாய் அநேக சோதனைகள் செய்து வருகிறார். பூமியில் ஈரமானது ஆவியாகப் போய்விடுவதைத் தடுக்

கும் பொருட்டு அதன் மேற்பரப்பை உடைத்து வைத்திருப்பது அவசியமென்பதைப்பற்றி அவர் முக்கியமாய்ப் பேசினார். பூமியின் மேற்பரப்பிலுள்ள மண்ணை அடிக்கடி யுடைப்பதனால் அதன் ஈரத்தில் பெரும்பாகத்தை அதிலேயே இருக்கும்படி சேர்த்து வைக்கக்கூடும். வங்கவோலிலுள்ள சோதனைப் பண்ணையில் மாதத்துக்கொருதரம்தான் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள்; நிலத்தை நன்றாய்ப் பண்படுத்திவந்தால் ஈரம் அதிலே தங்கும்படி செய்யலாம்; அப்பொழுது அடிக்கடி தண்ணீர் பாய்ச்சுவது அனாவசியமாகும். இந்தியக் குடியானவர்கள் சாதாரணமாய் வாரத்துக்கு இருமுறை நீர் பாய்ச்சுவது வழக்கம்; இடையிடையே மண்ணை உடைப்பதற்காக யாதொன்றும் செய்வதில்லை. பூமியை இவ்வளவு ஜாக்கிரதையோடு பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி சாஸ்த்ரீயமான ஞானம் குறையாயிருப்பதனால் இந்தியாவிலே ஏரி ஜலத்தில் பெரும்பாகம் வீணாக்கப்படுகிறதென்று அக்கிராசனாதிபதி சொன்னார். ஜாக்கிரதையாய்ப் பயிரிடுவதனால் எவ்வளவு தூரம் ஈரம் பூமியிலேயே தங்கும்படி பாதுகாக்க முடியுமென்பதைக் காட்டும் பொருட்டு அமெரிக்காவில் செய்யப்பட்ட மனோஹரமான சோதனைகளைப்பற்றி மிஸ்டர் பாடன் சொன்னார்.

பிறகு ஸர் ப்ரெடெரிக் நிகல்ஸன் என்பவர் பேசினார்; அவர் அதிக ஸ்வாரஸ்யமானதும் அறிவு புகட்டக்கூடியதுமான ஒரு உபன்னியாசம் செய்தார். சபையின் முன் கொண்டுவரப்பட்ட விஷயமானது மிகவும் முக்கியமானதென்று அவர் சொன்னார். மிஸ்டர் மக்பார்லேன் அவருடைய வியாசத்தில் அநேக முக்கியமான பிரசினைகளைக் கிளப்பியிருக்கிறார். கிராமங்களிலுள்ள ஜனங்கள் அதிக கடனாளிகளாயிருப்பதைப்பற்றியும் அவர்களைக் கடனிலிருந்து மீளும்படி செய்வதிலிருக்கும் கஷ்டத்தைப்பற்றியும் அவர் பேசியிருக்கிறார் ஜனங்கள் சொற்ப நிலத்துக்குடையவர்களா யிருப்பதனால் அவர்கள் கடனாளிகளாகும்படி அவசியமாய் நேரிடுகிறதென்றும் அதைத் தம்முடைய "நிலசம்பந்தமான பாங்கிகளைப்பற்றிய ரிபோர்ட்" என்னும் புஸ்தகத்தில் தம்மாலான மட்டும் எடுத்துக்காட்டி யிருப்பதாக ஸர் ப்ரெடெரிக் சொன்னார். ஒவ்வொரு தேசத்திலும் பயிரிடும் குடியானவன் கடனாளியாகவே யிருக்கிறான்: ஐரோப்பாவில் அப்படி கடனாளியாயிருப்பது அநேகமாய் எல்லா விஷயத்திலும் அவன் விருத்திக்கு வருவதற்கு ஹேதுவாகிறது; இந்தியாவிலோ அது அவன் நாசமடைவதற்கு ஹேதுவாகிறது. உழவைப்பற்றி யோசிக்கையில், ஒரு பெரிய விஸ்தீர்ணத்தை அரைகுறையாய் உழுவதைக் காட்டிலும் ஒரு சிறு விஸ்தீர்ணத்தை நன்றாய் உழவேண்டுமென்று குடியானவர்களுக்கு உறுத்திச்சொல்லவேண்டும். "கலப்பை வெள்ளியானால் மண் வெட்டி பொன்னாகும்" என்னும் பழமொழியானது எங்கும் பிரயோகப்படுகிறது; இந்தியக் குடியானவர்கள் மண்வெட்டியை இன்னும் அதிகமாய் உபயோகப்படுத்துவார்களேயானால், ஜப்பானில் ஏற்பட்டதுபோல் இப்பொழுது அடைவதைவிட மேலான பலனை அடைவார்கள்; ஜப்பானில்

சிறிது மட்டிலாவது மண்வெட்டியைக்கொண்டு இடைவிடாது கொத்திவருவதனால் ஒவ்வொரு கால் ஏகாபூமியும் ஒரு மனிதன் ஜீவிக்கப் போதுமானதாயிருக்கிறது. ஆனால், முன்னே சொன்னபடி இந்த விஷயம் மனிதனைப் பொறுத்ததே யன்றி பூமியை மாத்திரம் பொறுத்ததல்ல; மனிதர்களைச் சீர்திருத்தினால், அவர்கள் பூமியை அபிவிருத்திசெய்து இப்போதைய முறைகளைக் காட்டிலும் சிலாக்கியமான முறைகளைக்கொண்டு வேலை செய்வார்கள். கூட்டுத்தொழில் விஷயத்தில் இந்த விவசாயத்தைப் பற்றிய சகல அம்சங்களும் அடங்கி யிருக்கிறதென்று ஸர் ப்ரெடெரிக் கூறினார். தாம் ஜப்பானுக்குப் போயிருந்த பொழுது அந்த தேசத்தில் சுமார் 13,500 கிராமங்களில் 12,000 கூட்டுத்தொழில் சங்கங்களுக்குக் குறையாமலும், ஏறக்குறைய 600 தாலூகா சங்கங்களும் 46 ஜில்லா சங்கங்களும் இருக்கக் கண்டதாகச் சொன்னார்.

கூட்டுத்தொழில் பயன்படுகிற அடியிற்கண்ட முக்கியமான அம்சங்கள் எடுத்துக் காட்டப்பட்டன :—

1. பலபேர் தனித் தனியே சொற்ப தொகைகளைக் கடன் வாங்கி அவை அநேகமாய் ஒன்றுக்கும் உதவாமலிருப்பதால் அப்படிப்பட்ட நிலைமையை விட்டு எல்லாரும் ஒன்றுசேர்ந்து காரியாம்சத்தில் அதிக உபயோகரமாயிருக்கக் கூடிய விதமாய்ச் கடன் வாங்கும்படி இதனால் ஏற்படுகிறது. இந்தியாவில் மூலதனம் அதிகமாய் வேண்டியிருந்த போதிலும், சொற்ப நிலத்துக் குடையவர்களிடத்தில் தனித்தனியாயிருக்கும் மூலதனம் மிகவும் கொஞ்சமே; கூட்டுத்தொழிலினால் ஏற்படும் ஒரு நாணயத்தைக் கொண்டு அதிக மூலதனத்தைச் சேகரிக்கலாம்.

2. அதனால், ஒவ்வொரு நபரும் குறைந்த வட்டிக்கு நிர்ப்பயமாய்க் கடன் வாங்கக்கூடும். இட்டலியில் சில வருஷங்களுக்கு முன் வழக்கமாய் வாங்கப்பட்ட வட்டி வீதமானது நூற்றுக்கு அறுபதாயிருந்தது; ஆனால், கூட்டுத்தொழிலின் பயனாக, ஐக்கியநாணய சங்கங்கள் ஏற்படுத்தப்பட்ட இடங்களிலே அது நூற்றுக்கு ஆறாகக் குறைந்து விட்டது.

3. மனிதன் மேன்மேலும் விருத்தி அடையும் விஷயத்தில் அது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது; ஏனென்றால், நாணயத்தைக்கொண்டு கடன் வாங்கி ஒருவன் விருத்தி அடையக்கூடுமென்பதை அதனால் அவன் தெரிந்து கொள்ளுகிறான்.

4. அதனால், கொடுக்கவேண்டிய தொகைகளைத் தவணை தப்பாமல் திருப்பிக்கொடுக்கும் வழக்கம் ஏற்படுகிறதுமன்றி மனிதர்களுக்கு முன் யோசனையும் உண்டாகிறது; தனித்தனியாகவும் கூட்டுத்தொழில் சங்கமாகச் சேர்ந்தும் அவர்கள் வேலை நடத்தும் திறமையும் அதனால் விருத்தியாகிறது; மேலும், அதனால் விஷயங்களைப்பற்றி நன்றாய் அறியவும் முன்யோசனை செய்யவும் அவர்களுக்குள்ள சக்தி அதிகமாகிறது.

5. அதனால், சோதனைகள் செய்துபார்ப்பதற்காக ஒன்று சேரக்கூடிய சில நபர்கள் அடங்கிய சங்கம் ஒன்று ஏற்படுகிறது. ஒரு நபரைக்கொண்டே வேலை செய்ய முயல்வதனால் அதிக பலன் ஏற்படாது; ஆனால், பல நபர்கள் சேர்ந்த ஒரு சங்கத்தில் அவரவருக்குள்ள கூச்சம் போய், தங்களுடைய பூமிகளில் சோதனைகள் செய்துபார்த்து அதன் முடிவுகளைத் தெரிவிக்கும்படி நியமிக்கப்படுவது ஒவ்வொருவருக்கும் கௌரவத்தைக் கொடுக்கும் அம்சமாகக் கருதப்படுகிறது.

6. இந்தக் கூட்டுத் தொழிலினால் மனிதர்களின் குணம் எப்படி பாதிக்கப்படுகிறதென்பதை யோசிக்கையில், அவர்களுக்கும் அவர்களுடைய அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும் ஏற்படும் விவகாரங்களில் யோக்கியதையையும் நேர்மையையும் விருத்திசெய்ய ஐக்கியநாணய பாங்கிகளைப்போல வேறொன்றுமில்லை.

7. ஒரு மனிதனுக்குத் தன் மனம்போனபடியே நடப்பதைவிடத் தன்னுடைய நிலங்களும் வீடும் விருத்தியாவதைப் பார்க்க அதிக சந்தோஷமிருக்குமாகையால், இந்தக் கூட்டுத்தொழிலினால் சிக்கனமும் அன்னபானாதிகளில் மிதப்பான்மையும், அதிகமாய் ஏற்படுகின்றன வென்பது அனுபவத்தில் தெரிந்தவிஷயம்; மேலும், ஒரு மனிதன் மிதப்பான்மையும் நேர்மையும் ஜாக்கிரதையு முடையவனென்று தெரிந்தால் மாத்திரமே அவன் உத்தரவாதம் வரையறுக்கப்படாத ஒரு சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவான்; ஆகவே, அவன் தன்னைத்தானே அடக்கக் கற்றுக்கொள்ளுகிறான்.

8. ஜனசமூக சம்பந்தமாய் யோசிக்கும் பொழுது, கூட்டுத்தொழிலினால் சகோதரத்துவம் விருத்தியாகிறது. இந்தியாவிலே, கிராமங்களிலுள்ள ஜனங்கள் முன்னாளில் சகோதரத்துவத்தையே பாராட்டி வந்தார்கள்; ஆனால், இது அநேகமாய் அழிந்துபோய்விட்டது. கூட்டுத் தொழிலில் கூட்டான ஒரு பாத்தியதை ஏற்படுவதால் ஜனங்கள் ஒன்று சேருகிறார்கள்; அதனால், கிராமத்திலுள்ள சமுதாய வாழ்க்கை விருத்தி அடைகிறது.

இந்தியாவிலுள்ள ஜனங்களுக்குள் கூட்டுத்தொழிலை ஏற்படுத்தி விருத்தி செய்யக்கூடிய நிலைமையிலிருக்கும் மிஷனரிகள் சேர்ந்த ஒரு சபையில் தாம் பேசுவதே கூட்டுத் தொழிலைப்பற்றித் தாம் வற்புறுத்திச் சொல்வதற்குக் காரணமென்று ஸர் ப்ரெடெரிக் சொன்னார். ஐரோப்பாவில் கிராம மதபோதகர் அந்தக்கிராமத்திலுள்ள ஐக்கிய நாணய பாங்கியில் மெம்பராயிருப்பதுந் தவிர, அநேக சந்தர்ப்பங்களில் அந்தக் கிராமத்தில் கூட்டுத் தொழிலையே ஏற்படுத்தியவராகவும் அதற்கு அக்கிராசனாதிபதியாகவும் அதற்காக முன்னிற்பவராகவும் இருக்கிறார். ஐயர்லாந்திலே ஒரு கிராம பாங்கியில் மெம்பராயிருந்த ஒரு ரோமன் கத்தோலிக் கிராம புரோகிதரை அந்த பாங்கியைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகப் பார்த்ததில், அந்த புரோகிதர் அந்த விஷயத்தைப்பற்றி அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ப்ரெஸ்பி

டீரியன் மதபோதகருக்குத் தம்மைக்காட்டிலும் அதிகமாய்த் தெரியுமென்றும் அவரைச்சந்தித்து அவருடன் பேசும் பொருட்டு பிற்பகலில் தேத்தண்ணீர் சாப்பிடுவதற்காக வரும்படியும் ஸர் ப்ரெடெரிக்கைக் கேட்டுக்கொண்டார். ஆகவே, இந்தியாவிலும் மிஷனரிகள் ஒரு கிராமத்திலுள்ள ஐக்கியநாணய பாங்கியில் மெம்பராகி, ஐரோப்பாவிலுள்ள கிராம மதபோதகர் செய்யும்வேலையைச் செய்துவரலாம். இந்த மார்க்கங்களில்உழைத்து ஜனங்களுக்கு உதவிசெய்யும்படி அங்கு வந்திருந்த மிஷனரிகளுக்கு வற்புறுத்திச் சொல்லப்பட்டது.

இந்தியாவில் ஐக்கிய நாணய பாங்கிகள் ஏற்படுத்தி பலிதத்துடன் வேலை நடத்துவதைப் பற்றி ரெவ். மிஸ்டர் மக்பார்லேன் தமக்குச் சந்தேகமிருப்பதாகத் தெரிவித்திருந்தாலும் அந்த விஷயம் மிகவும் நன்றாய் நிறைவேறுமென்று நம்புவதற்கு நியாயமிருப்பதாக ஸர் ப்ரெடெரிக் சொன்னார். இந்தியாவில் ஏற்கனவே அப்படிப்பட்ட கிராம பாங்கிகள், சுமார் 1,300 இருக்கின்றன; சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியில் போதுமான மூலதனத்துடன் 160 பாங்கிகள் இருக்கின்றன; இவைகளெல்லாம் நான்கு வருஷங்களில் ஒரே இந்திய உத்தியோகஸ்தரின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டவை. ஐரோப்பாவிலே, இந்தக் கிளர்ச்சி 1851-ம்ஆண்டில் ஆரம்பித்தது; பதினேழு வருஷங்களுக்குப் பிறகு நாலு பாங்கிகள்தான் ஏற்படுத்தப்பட்டன. அடுத்த பதினேழு வருஷங்களில் சுமார் 300 பாங்கிகள் இருந்தன. இப்பொழுதோ அவைகளின் சங்கியையைப் பதினாயிரக்கணக்காக எண்ணலாம். ஒரே இந்திய உத்தியோகஸ்தர் நாலு வருஷங்களில் 160 பாங்கிகள் ஏற்படுத்தினாரென்றால், கிராமங்களிலுள்ள ஜனங்களுக்கிடையில் வசித்துக் கொண்டிருக்கும் பல மிஷனரிகள் ஜனங்களை இம்மாதிரி பாங்கிகளை ஏற்படுத்தி உபயோகிக்கும்படி தூண்டினால் இந்தக் கிளர்ச்சியானது இன்னும் எவ்வளவோ அதிகமாய்ப் பலிதமடையுமல்லவா ?

பிறகு அச்சபையிலிருந்த ஒரு மெம்பர் எந்த மிஷனரிகளாவது பாங்கிகள் ஏற்படுத்த முயன்றிருக்கிறார்களா வென்று கேட்க, அதற்குஅநேக மெம்பர்கள்—பாபட்லாவில் மிஸ்டர் தாம்ஸன் என்பவர் சதுப்பு நிலத்தை விருத்தி செய்வதற்காக ஒரு ஐக்கிய நாணயச்சங்கம் ஏற்படுத்தி யிருப்பதாகவும், அது முடிவில் வெகுசாய்ப் பலிதமடையக் கூடுமென்றும், பல்லாரியிலுள்ள மிஸ்டர் லியூகஸ் என்பவர் சில வருஷங்களாகக் கிரிஸ்தவர்களுக்குள் ஒரு ஐக்கிய நாணயநிதியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அது நன்றாய் நடந்துவருவதாகவும் சொன்னார்கள். ஜனங்கள் விவசாய பாங்கிகளில் பணம்போடுவதில்லை யாதையால், அந்த பாங்கிகள் நன்றாய் நடந்தேறவில்லை யென்பது பலருடைய அனுபவம்; ஆனால் வங்கவோலில் ஜனங்கள் விவசாயபாங்கியில் பணம் போடுகிறார்களே தவிர அதிலிருந்து பணம் கடன் வாங்குவதில்லையென்று அனுபோகத்தில் ஏற்படுகின்றது.

சில வருஷங்களுக்குமுன் பல சிறிய பாங்கிகள் ஏற்படுத்தப்பட்டதாகவும் பரஸ்பர நம்பிக்கை இல்லாததனால் அவை தலையெடுக்கவில்லை யென்றும் ரெவ். ஏ. ஆண்ட்ரூ சொன்னார். மிஷனரிகள் ஒன்றுசேர்ந்து பாங்கிகள் ஏற்படுத்தி அந்த பாங்கிகளும் சரியான ஆதாரத்தின்மேல் ஸ்தாபிக்கப்பட்டு பலிதமாக வேலை செய்வதாய்க் காணப்படுவதன்மேல் அவைகளை இந்தியர்கள் சேர்ந்த ஒரு விண்டிகேட்டி (அத்தியட்ச சபையி) னிடத்தில் ஒப்பித்துவிட்டால், அதிக நன்மை உண்டாகும். பூமியில் ஈரம் தங்கும்படி செய்யும் விஷயத்தைப்பற்றி மறுபடியும் பேசப்பட்டது. மிஸ்டர் பாடன் என்பவர் அது விஷயத்தில் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்ததாக மிஸ்டர் ஆண்ட்ரூ அபிப்பிராயப்பட்டு அதை வெளிப்படுத்தினார். இந்தியாவில் சூரிய வெப்பம் மிதமிஞ்சி இருப்பதால் ஈரமானது அதி சீக்கிரம் ஆவியாகப் போய்விடுகிறது. மே மாதத்திலும் ஜூன் மாதத்திலும் பூமிமட்டத்துக்குக் கீழுள்ள ஜலமானது பூமியின் மேற்பரப்புக்கு 24 அடிக்குக் கீழ் போய்விடுகிறது; மழை பெய்தாலும் ஆறு வாரம் பெய்தாலொழிய பூமிமட்டத்துக்குக் கீழுள்ள ஜலத்தை அது பாதிப்பதில்லை; ஏனெனில் தரையில் காற்று நிறைந்திருக்கிறபடியால் அது வெளியேறும் வரையில் ஜலம் ஊறுவது சாத்தியமில்லை.

ரெவ். எஸ். பி. பாடன் தாம் தரையின் மேற்பரப்பிலுள்ள ஈரத்தைப் பற்றியே யன்றி தரையின் கீழுள்ள ஜலத்தைப் பற்றிப் பேசவில்லை யென்று பதில் சொன்னார். நிலத்தை அடிக்கடி பயிர்செய்தால் தரையின் ஒவ்வொரு பாகத்திலும் ஈரம்தங்கியிருக்கும். இதற்கு உதாரணமாக மிஸ்டர் பாடன் சொன்னதாவது—1907ம் ஆண்டு டிஸெம்பர்மீ 12உ வங்கவோலில் நாலு அங்குலம் மழை பெய்தது. பூமியின் ஓர் பாகத்தை உடனே உழுது பாம்படித்து அதன் மேற்பாகத்தை அடிக்கடி உடைத்து அதிஜாக்கிரதையாய்ப் பண்படுத்தினார்கள். ஜூலைமீ 15உ வரையில்—ஏழுமாத காலத்துக்கு—மழையே பெய்யவில்லை; இப்படி இருந்தும் அந்தக் காலத்தின் முடிவில் இரண்டடி ஆழத்திற்கு நிலம் அதிக ஈரமாயிருக்கக் காணப்பட்டது. அடுத்திருக்கும் ஏரிகளிலிருந்து ஜலம் ஊறுவதனாலும் ஜலசலனத்தின் அழுத்துதலினாலும் (hydraulic pressure) பூமி ஈரமாகவே இருக்குமென்பது நன்றாய்த் தெரிந்த விஷயமாகையால், இது அடுத்துள்ள ஒரு ஏரியினால் நேர்ந்திருக்கலாமென்று மிஸ்டர் ஆண்ட்ரூ வாதித்தார். அதற்கு, அரைமைல் தூரத்திற்கு ஏரி ஒன்றுமில்லை யென்றும், தாம் பிரஸ்தாபித்த நிலமானது ஏரியின் அடித்தரையைக் காட்டிலும் உயரமான மட்டத்திலிருக்கிறதென்றும் மிஸ்டர் பாடன் பதில் சொன்னார்.

ஸர் ப்ரெடெரிக் சொன்னதாவது:—நான் கோயம்புத்தூர் ஜில்லாவிலிருந்தபொழுது சிறிதுமட்டில் துர்ப்பிட்சமாய்விட்ட ஒரு வருஷத்திலே சோளம் பயிரிட்டிருந்த ஆயிரக்கணக்கான ஏகராக்களைப் பார்வையிட்டதில் சில இடங்களில் அரைவாசி சாகுபடியாயிருந்தாலும், அநேகமாய் முழுவதும் உலர்ந்து

போயிருக்கக் கண்டேன். அதற்குப் பிறகு அரை ஏகராவில் சோளம் ஆறடி உயரம் வளர்ந்திருக்கப் பார்த்தேன்; அந்த நிலமானது ஒரு கிணற்றிலிருந்து நீர்பாய்ச்சப்பெற்றிருக்கலாமென்று நினைத்தேன்; ஆனால் விசாரித்ததில் அது நீர்பாய்ச்சப்பெற்ற நிலமல்லவென்றும், ஒரு பறையனுடையதென்றும் தெரிய வந்தது; அவன் அதற்கு மலமுட்பட சகல விதமான எருபோட்டு மண் வெட்டியைக்கொண்டு அதை நன்றாய் உழுவதாக ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். இதனாலும் இதுபோன்ற அநேக விஷயங்களாலும், நிலத்தை ஆழமாய் உழுது அதற்குச் சரியாய் எரு விட்டால் மிகவும் சொற்ப மழை பெய்தாலுங்கூட நல்ல சாகுபடி செய்வது சாத்தியமென்று ஏற்படுகிறது. மேலும், காலக் கிரமத்தில் அதிக லாபத்தைக் கொடுக்கத்தக்க புளிய மரங்களையும் இதர பல விருட்சங்களையும் நடும்படி ஜனங்களைத் தூண்டவேண்டுமென்று ஸர் ப்ரெடெரிக்கும் ஆண்ட்ரூவும் சிபார்சு செய்தார்கள். "காணியின் கோடியும் சேலைக்காம்" என்ற ஓர் தமிழ்ப் பழமொழியை ஸர் ப்ரெடெரிக் எடுத்துச் சொன்னார்.

மேல்ரோசாபுரத்தில் பலாமரத்திலிருந்தும் மாமரத்திலிருந்தும் அதிக லாபம் கிடைத்ததென்று ரெவ். ஏ. ஆண்ட்ரூ சொன்னார். இதர பலவிருட்சங்களும் லாபத்தைக் கொடுத்தன. ஜபானில் பண்ணையின் ஒரு பாகத்தில் செடிகள் நட்டு, அவைகளைச் சில வருஷங்களுக்குப்பிறகு வெட்டிவிட்டு பூமியை மறுபடியும் உழுகிறார்கள். இம்மாதிரியாக பூமியைப் புதுப்பித்து உழுது விருத்திசெய்கிறார்கள்.

ஸர் ப்ரெடெரிக் எழுதின புஸ்தகங்களின் பெயர்களைச் சொல்லும்படி கேட்கப்பட்டபோது, அவர்-பூமி சம்பந்தமான பாங்கிகளைக் குறித்த தம்முடைய பெரிய புஸ்தகமும் "ஜபான் தேசத்தில் நடக்கும் விவசாயத்தைப் பற்றிய ஓர் குறிப்பும்" காலை நடந்த தர்க்கத்தின் அம்சங்களை அனுசரித்திருக்கின்றன வென்று சொன்னார்.

சீட்டுப் பண்டுகள்.

——(.o:)——

சேலம் ஜில்லாவில் கூடிய முதல் மகாசபையிலே 1910ம் ஞு மார்ச்மீ 19உ யன்று ஐக்கிய நாணயச் சங்கங்களின் இன்ஸ்பெக்டராகிய ம-ா-ள-ஸ்ரீ. வி. என். கிருஷ்ணசாமி அய்யர் அடியிற்கண்ட வியாஸத்தைப் படித்தார்.

1. ஐக்கிய நாணயச் சங்கங்களின் நோக்கங்கள்.—ஐக்கிய நாணயச் சங்கங்களின் நோக்கங்களுக்குள் அடியிற்கண்டவை அதி முக்கியமானவையாகும்:—

(i) உபயோககரமான காரியங்களுக்காக மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கும் பொருட்டுப் பணம் கடன் வாங்குவது;

(ii) மெம்பர்களுக்குள் சிக்கனத்தையும் தன்முயற்சியையும் ஒத்துழைக்கும் குணத்தையும் விருத்திசெய்வது.

2. நம்முடைய சங்கங்கள்.—நம்முடைய ராஜதானியிலுள்ள சங்கங்கள் சிக்கனத்தைக் கற்பிக்கும் விஷயத்தைக் காட்டிலும் கடன் கொடுக்கும் வேலையையே அதிகமாகச்செய்துவந்திருக்கின்றன. முதல் ரெஜிஸ்ட்ரார்ராயிருந்தவர் தம்முடைய கடிதங்களில் ஒன்றிலே இந்தச்சங்கங்கள் "முக்கியமாய்க் கடன் வாங்குபவர்கள் சேர்ந்த ஸ்தாபனங்கள்" என்று அவைகளைக் குறித்துச் சொல்லியிருந்தார். நம்முடைய சங்கங்களில் சிக்கனத்தை விருத்தி செய்பவை மிகவும் கொஞ்சமே.

3. நகர சங்கங்களிலும் சில கிராமச்சங்கங்களிலும் பணம் சேமித்து வைப்பதற்கான ஏற்பாடு.—அநேக நகர சங்கங்களிலும் சில கிராமச் சங்கங்களிலும் மெம்பர்கள் மிகுத்துவைக்கும் பணத்தை மறுபடியும் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை; இந்தச் சங்கங்களில் சாதாரணமாய்ச் சேமித்துவைக்கும் தொகைகளுக்கு அடிக்கடி கட்டப்படும் அல்லது மிகுத்தி வைக்கப்படும் டிபாஸிட் தொகைகள் என்று பெயர்; இவைகளின் விஷயத்தில் முழு ரூபாய்களாகவர்வது முழு ரூபாய்களைப் பெருக்கிவந்த தொகைகளாகவாவது ஒவ்வொரு மாதமும் கிரமமாய்க் கொடுக்கப்பட்டு சந்தர்ப்பத்துக் கேற்றபடி 24 மாதங்களுக்கோ அல்லது 45 மாதங்களுக்கோ கட்டப்பட்டு வரும் டிபாஸிட் தொகைகளின்மேல் சங்கத்தார்கள் 100 க்கு 6 வீதம் வட்டி கொடுப்பதாக உத்தரவாதம் செய்கிறார்கள். பிரதி

மாதமும் ஒரு ரூபாயாக 24 மாதங்களுக்கோ அல்லது 45 மாதங்களுக்கோ தொகைகட்டும் ஒரு நபர் 24 மாதங்கள் கழிந்தபிறகு ரூ. 25-8-0 உம் 45 மாதங்கள் கழிந்தபிறகு 50 ரூபாயும் பெறுகிறார்.

4. அடிக்கடி கட்டப்பட்டுவருகிற டிபாஸிட் தொகைகள் கிராமப் பிரதேசங்களுக்குப் பொருந்தமாட்டா என்பது.—கிராமப் பிரதேசங்களில் வசிக்கும் மெம்பர்கள் இம்மாதிரி பிரதிமாதமும் தொகை கட்டிக்கொண்டே போவது சாத்தியப்படாத விஷயம். மேல் நாடுகளில் கூலிக்கு வேலைசெய்யும் உழைப்பாளிகளைப்போல் அல்லாமல் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டிருக்கும் நம்முடைய மெம்பர்கள் விவசாய மாசூலையே நம்பி யிருக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள்; இந்த மாசூலும் ஒரு வருஷத்தில் ஒரே பருவத்திலோ இரண்டு அல்லது பல பருவங்களிலோ அவர்களுக்குக் கிடைக்கிறது; அதுவும் பருவங்களின் மாறுதலை அனுசரித்து வெவ்வேறு காலங்களில் கிடைக்கின்றனவேயன்றி, கிரமமாய் இன்ன காலங்களில் தான் கிடைக்கிறதென்று நிச்சயமில்லை.

5. சீட்டுப் பண்டுகள்.—இந்த விவசாய மெம்பர்களையும் மாதாந்த வரும்படி இல்லாத மற்றவர்களையும் அவர்கள் மிகுத்தும் பணத்தை பத்திரமாய்ப் போட்டு வைத்திருப்பதற்காக எவ்வித ஏற்பாடும் செய்யாமல் விட்டுவிடுவதா? ஒருக்காலுமில்லை; சீட்டு ஏற்பாடு நமக்கு முற்றும் புதிய ஏற்பாடு அல்ல என்பதை, நமக்குள் அநேகரில்லாவிட்டாலும் நம்முடைய நாட்டிலுள்ளவர்கள் பணம் மிகுத்துவைக்கும் சுபாவத்தை உடையவர்களென்பதைச் சிறிதுமட்டில் கவனித்தவர்களாவது தெரிந்துகொள்ளத் தவறிப் போயிருக்க மாட்டார்கள். நம்முடைய ஸ்திரீகளுக்குள்ளும் இந்த ஏற்பாடு அதிகமாய் வழங்கிவருகிறது. அப்படியிருக்க நம்முடைய சங்கங்களில் இம்மாதிரி மிகுத்தி வைக்கும் மார்க்கத்தை அனுசரிக்கும் சங்கத்தார்கள் மிகவும் கொஞ்சமாயிருப்பது வாஸ்தவத்தில் ஆச்சரியகரமாகவே இருக்கிறது. ஐக்கிய நாணயச் சங்கங்களைப்பற்றிய ஆக்ட் அமுலுக்குவந்து இப்பொழுது ஏறக்குறைய ஆறு வருஷம் ஆகிறது. முதல் இரண்டொரு வருஷங்களுக்குள் சீட்டுப் பண்டுகள் ஆரம்பித்து நடத்திவந்த சங்கம் திருவல்லிக்கேணி சங்கம் ஒன்றுதான். மதுரை சங்கம் அனேகமாய் இரண்டாவதாய் வரும்; இன்னும் சில சங்கங்களும் கடந்த இரண்டொரு வருஷங்களில் இதை அனுஷ்டித்திருக்கலாம்.

6. சீட்டுவிதிகள்.—அப்படியானால் இந்தச் சீட்டுகள் என்றால் என்ன? இவைகளை ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தில் நடத்துவது எப்படி?

பொதுவிதிகள்.—

பத்து அல்லது அதற்கு மேற்பட்ட மெம்பர்கள் (அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும் நமூனாவில்) எழுத்துமூலமாய் விண்ணப்பம் செய்துகொள்

வதன்மேல், நிர்வாக கம்மிட்டியார் மிகுத்திவைக்கப்படும் பணத்தைச் சேமித்து வைக்கும் பொருட்டு சீட்டுப் பண்டுகள் ஆரம்பித்து நடத்தலாம்; மேலும், அந்தக் காரியத்துக்காக அடியிற்கண்ட ஷரத்துகளுக்குட்பட்டு விதிகள் ஏற்படுத்தலாம்:—

(a) ஒவ்வொரு சீட்டுப் பண்டிலும் உள்ள மெம்பர்கள் 10 க்குக் குறையாமலும் 30 க்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

(b) சீட்டு நடந்துவரவேண்டிய காலமானது 10 மாதங்களுக்குக் குறையாமலும் 30 மாதங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

(c) எந்தச் சீட்டின் மொத்த தொகையும் 2,000 ரூபாய்க்கு மேற்பட்டிருக்கக்கூடாது.

(d) எந்த மெம்பரும் ஒரு பங்குக்குக் குறைந்தும் 3 பங்குகளுக்கு மேற்பட்டும் எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கக் கூடாது.

(e) சீட்டுத் தொகையை இன்னாருக்குக் கொடுக்க வேண்டுமென்று நிச்சயிக்கையில் கழிவுத் தொகையை நிர்ணயித்து திருவுளச்சீட்டு போடும் ஏற்பாட்டையாவது ஏலம்போடும் ஏற்பாட்டையாவது அனுசரிக்க வேண்டும்.

(f) சீட்டுப் பண்டைச்சேர்ந்த மெம்பர்கள் தாங்கள் நடந்துகொள்ள சடமைப்பட்டிருக்கிறபடி நடக்காததனால் நேரிடும் எவ்வித நஷ்டத்திற்கும் அந்தச் சீட்டுப்பண்டை ஆரம்பிக்குப்படி விண்ணப்பம் செய்துகொண்ட மெம்பர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் உத்தரவாதிகளாவார்களே யன்றி, அப்படிப்பட்ட நஷ்டத்திற்குச் சங்கத்தார் மொத்தத்தில் உத்தரவாதிகளாகமாட்டார்கள்.

(g) சீட்டுத்தொகையைப் பெறும் மெம்பர்களிடமிருந்து ஜாமீன் வாங்கும் விஷயத்தில் நிர்வாக கம்மிட்டியாருக்கு யுக்தப்படி நடக்க பூர்ண அதிகாரமுண்டு.

(h) வசூலிக்கப்பட்ட கழிவுத் தொகைகளிலிருந்து ரூபாய்க்கு ஒரு அணாவீதம் ஆகும் தொகையை, சங்கத்தின் பொதுப் பிரிவிலுள்ள சிப்பந்திச் செலவுக்காக எடுத்துக்கொள்ள வேண்டும்; மிகுதியைச் சீட்டுப்பண்டைச் சேர்ந்த மெம்பர்களுக்குள் அவரவர்கள் எத்தனை பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்களோ அதற்குத் தக்கபடி பகிர்ந்து கொடுக்கவேண்டும்.

விசேஷ விதிகள்:—

1. இந்தப் பண்டை நிர்வகிக்கும் காரியம் முழுவதையும் சங்கத்தின் நிர்வாக கம்மிட்டியாரிடத்தில் ஒப்பிக்கவேண்டும்; மேலும், இந்தப் பண்டின் தரப்பில் காரியதரிசியானவர் பிறர்மேல் வியாஜ்ஜியம் தொடருவதற்கும் பிறரால் வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்கும் உரியவராவார்.

2. பங்குகளின் சங்கியையையும், பிரதி பங்குக்காகச் சேரவேண்டிய தொகையையும், அத்தொகைகளைச் செலுத்தவேண்டிய தேதிகளையும், சீட்டுத் தொகையையும், திருவுளச்சீட்டு போடப்படும் அல்லது ஏலம் நடத்தப்படும் தேதிகளையும் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் அட்டவணையில் கண்டிருக்கிறது.

3. ஒவ்வொரு தவணையிலும் பாக்கியாகும் தொகையை குறிப்பிட்ட தேதிகளில் செலுத்திவிட வேண்டும்; அப்படி செலுத்தாவிட்டால் சந்தாவுடன்கூட தினமொன்றுக்கு ரூபாய்க்கு $\frac{1}{10}$ தம்பிடி வீதம் வட்டியும் கொடுக்க வேண்டியதாகும்; மேலும், அந்தத் தேதிக்குப் பிறகு 15 தினத்துக்குள் அதைச் செலுத்தாவிட்டால், அப்படி செலுத்தத் தவறினவரின் பாத்தியதையை ஏலத்தில் விற்றுவிட காரியதரிசிக்கு அதிகாரமுண்டு.

4. சீட்டுப்பண்டில் சேராத யாதொரு மெம்பர்-சீட்டுப் பண்டிலுள்ள இதர மெம்பர்கள் ஒப்புக்கொண்டால், அப்படி தொகை செலுத்தத் தவறிப் போன மெம்பருக்குப் பர்த்தியாக ஏலத்தில் கேட்டு அவருடைய பேபருக்குப் பர்த்தியாகத் தம்முடைய பெயரைப் பதிந்து கொள்ளலாம்.

5. நோடிஸில் கண்ட தேதியிலாவது மெம்பர்களின் சம்மதியை முன்னதாகப் பெற்று ஒற்றிவைக்கப்பட்ட வேறே யாதொரு தேதியிலாவது ஏலத்தை நடத்தவேண்டும் அல்லது திருவுளச்சீட்டு போடவேண்டும்.

6. ஏலமாவது திருவுளச்சீட்டு போடுவதாவது காரியதரிசி அல்லது அவருடைய உதவி உத்தியோகஸ்தர்களில் ஒருவரின் முன்னிலையிலாகிலும் அவரால் பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு மெம்பரின் முன்னிலையிலாகிலும் மாலை 6 மணிக்குத் தொடங்கவேண்டும். ஏலச்சீட்டில் மாலை $7\frac{1}{2}$ மணி வரையில் ஒருவரும் கேட்காமலிருக்கும் பட்சத்திலே, கேட்கும் பாத்தியதையுள்ள மெம்பர்களுக்குள் திருவுளச்சீட்டு போட்டு யாருக்குச் சீட்டு விழுந்ததென்பதை நிர்ணயிக்கவேண்டும்.

7. யாதொரு மெம்பர் தமக்குப் பதிலாக ஏலத்தில் கேட்கும்படி வேறே யாதொரு நபரை அனுப்பினால், அந்த மெம்பரிடத்திலிருந்து எழுத்து மூலமான அதிகாரப் பத்திரத்தைக் காட்டுவதன்மேல் அப்படி கேட்க அவருக்கு அனுமதி கொடுக்கப்படும்.

8. விழுந்த சீட்டுத்தொகையை, எவருக்கு அது விழுந்ததோ அல்லது எவர் அதை வாங்கினாரோ அவர் சீட்டுப்பண்டின் மெம்பர்களும் நிர்வாகக் கம்மிட்டியாரும் அங்கீகரிப்பதற்குட்பட்டு நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாக ஒரு ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுப்பதன்மேல், ஏலம் அல்லது திருவுளச் சீட்டு போடப்பட்ட தேதியிலிருந்து 15 தினத்துக்குள் அவருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

9. அந்தத் தொகை 15 நாள்கள் கழிந்தும் வாங்கப்படா விட்டால், அது சீட்டுப்பண்டுக்கு வரவாக நடைமுதல் டிபாஸிட்டாய்க் கட்டிவைக்கப்படும்.

10. ஒவ்வொரு சீட்டிலும் நிர்ணயிக்கப்படும் கழிவுத் தொகையில் ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணாவீதம் சகாயச்சட்டத்தின்படி சங்கத்துக்குக் கம்மிஷனாகச் செலுத்திவிட்டு, மிகுதி யிருப்பதைச் சீட்டுப்பண்டு மெம்பர்களுக்குள் சமமாய்ப் பங்கிடவேண்டும்.

11. பகிர்ந்து கொடுக்க முடியாத தொகைகளையும் வசூலிக்கப்பட்ட தண்டவட்டியையும் பொதுப்பிரிவுக்காக எடுத்துக்கொள்ளவேண்டும்.

12. ஒவ்வொரு பங்குக்காகவும் ஒரு தடவைதான் ஏலத்தில் கேட்க வேண்டும், ஒரு தொகையைத்தான் ஏலத்தில் எடுக்கவேண்டும்.

7. மதுரைச் சங்கத்தில் சீட்டுகள் நடத்தும் விதம்.—மேலே சொன்னதிலிருந்து பொதுவாய் இந்தச் சீட்டுகளை நடத்தும் விதம் இன்னதென்று உங்களுக்கு ஏற்படும். ஆனால், வாஸ்தவத்தில் வேலைசெய்யும்பொழுதுதான் விதிகளை இன்னும் நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம். சட்டத்தைப் பிரயோகித்தால்தான் அதன் உபயோகம் ஏற்படும். ஆகையினால் மதுரை சங்கத்தில் இந்தச் சீட்டுகள் நடத்தும் விதத்தைப்பற்றி சுருக்கமாய்ச் சொல்லுவது நல்லதென்று நம்புகிறேன். ஏனெனில் சீட்டுகள் நடத்துவது சம்பந்தப்பட்டவரையில் எனக்கு அனுபோகம் இந்தச் சங்கத்தில்தான்.

8. சீட்டுகள் மதுரைசங்கத்தில் முதல்முதல் 1907-08-ம் ஸுத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அந்த வருஷத்தில் மூன்று சீட்டுகள்தான் நடத்தப்பட்டன. இவைகளில் ஒன்று திருவுளச்சீட்டு—அதாவது சீட்டுகளைக் குலுக்கிப்போட்டு அவைகளில் ஒன்றை எடுப்பதனால் சீட்டு இன்னாருக்கு விழுந்ததென்பதை நிர்ணயிப்பது: மற்ற இரண்டும் ஏலச்சீட்டுகள்; இவைகளின் விஷயத்தில் சீட்டின் நாமகார்த்தமான மதிப்பின்மேல் மிகவும் குறைந்த தொகைக்கு அல்லது மிகவும் உயர்ந்த கழிவுத் தொகைக்கு எவர் ஏலத்தில் கேட்கிறாரோ அவருக்கே சீட்டு விழுந்ததாக நிர்ணயிக்கப்படும். 1907-08-ம் ஸுத்தில் சந்தாதாரர்களிடத்திலிருந்து ரூ. 2,740 வசூலிக்கப்பட்டது; அதில் ரூ. 2,600 சீட்டு எடுத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது; இந்தச் சீட்டுகளிலிருந்து ஐக்கிய நாணயச் சங்கத்தார் இவைகளை நடத்தினதற்காகப் பிடித்த செலவின் பொருட்டுக் கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 5.

1907-08-ம் ஸுத்தில் போடப்பட்ட சீட்டுகள் மூன்றாயிருக்க அடுத்த வருஷமாகிய 1908-09-ம் ஸுத்தில் ஏழு சீட்டுகள் போடப்பட்டன; இவை

களில் இரண்டு திருவுளச் சீட்டுகள், ஐந்து ஏலச்சீட்டுகள். இரண்டாவது வருஷத்துக் கணக்குகளின் பிரகாரம் 29,300 ரூபாய் வசூலிக்கப்பட்டு, அதிலிருந்து 29,000 ரூபாய் சீட்டெடுத்தவர்களுக்கும், 207 ரூபாய் வேலை செய்ததற்காகக் கமிஷனாகவும் கொடுக்கப்பட்டதென்று ஏற்படுகிறது. 1909-ம் ஆண்டு டிஸெம்பர்மீ 31உ யோடு முடிவாகிற அரைவருஷத்துக் கணக்குகள் அடியிற்கண்டபடி யாகும்:—

வசூலிக்கப்பட்டது	...	ரூ 24,800
சீட்டு எடுத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது	...	,, 24,900
கமிஷனாகக் கொடுக்கப்பட்டது	...	,, 170

மேற்கண்ட கணக்கிலிருந்து இந்தச் சீட்டுகள் எல்லாராலும் விரும்பப்படுகின்றன வென்றும் நன்றாய் நடந்தேறி வருகின்றன வென்றும், ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

9. இந்தச் சீட்டு ஏற்பாட்டை நம்முடைய சங்கங்களில் அனுசரிப்பதற்காக அதை எந்த விதமாய்ச் சீர்திருத்தி யிருக்கிறதென்பதை உங்களுக்குச் சுருக்கமாக அடியில் சொல்லுகிறேன்:—

(i) முதலாவது, ஐக்கியநாணயச் சங்கத்துக்கு வெளியில் நடத்தப்படும் சீட்டுகள் மெம்பர்கள் பணம் மிகுத்திவைப்பதற்கு ஓர் சாதனமாக ஆரம்பிக்கப்பட்டாலும், அநேகமாய் நஷ்டத்திலேயே முடிந்திருக்கின்றன வென்பது எவருக்கும் நன்றாய்ப் புலப்படும் விஷயம். ஆனால், அவைகள் கூட்டுத்தொழில் முயற்சி சம்பந்தமாய் நடத்தப்படுவதாய் விட்டால் அம்மாதிரி நஷ்டம் ஏற்படும் என்னும் பயமே போய்விடுகிறது.

(ii) இச்சீட்டு ஏற்பாட்டை நாம்அனுசரிப்பதில் மற்றொரு திருப்திகரமான அம்சமென்ன வென்றால், ஒரு சங்கத்தின் வேலையை ஒரு சிறு கிராம விஸ்தீரணத்தைப் பற்றிய மட்டில் செய்து வருவதனால் எப்படி அந்த வேலை மெத்த சுலபமாய் நடந்தேறுவதாகத் தெரியவருகிறதோ அப்படியே சாதாரணச் சீட்டுகளில் விசேஷ் பகுத்தறிவில்லாமலே சாதாரணமாய்ப் பெருத்த சங்கியையுள்ள சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொள்ளும் வழக்கத்தைக் கூட்டுத்தொழில் சீட்டுகளில் அநேகமாய் ஒழித்து விட்டிருக்கிறது. கூட்டுத்தொழில் சங்கத்தில் மெம்பர்கள் சேர்க்கப்படும் பொழுதே அதிக ஜாக்கிரதையுடன் சேர்க்கப்படுகிறார்களென்பது உங்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம்; ஆகையால் சீட்

டில்சேரும் மெம்பர்கள் பொறுக்கியெடுத்த ஒரு வகுப்பாரிலிருந்து வெகுசாப் மறுபடியும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாயிருக்கிறார்கள். சாதாரணமாய் ஒரு திருவுளச் சீட்டுக்கு 20 பேர் வரையில் சந்தாதாரர்கள் இருக்கலாமென்றும், ஒரு ஏலச்சீட்டுக்கு 10 பேர் வரையிலும் இருக்கலாமென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

(iii) ஒரு கூட்டுத்தொழில் சங்கத்தினால் ஏற்படும் இதர உரிமைகளுடன்கூட அதில் நடத்தப்படும் சீட்டுகளில் வெளியில் நடத்தப்படும் சீட்டுகளைக் காட்டிலும் அதிக பத்திரமுண்டு. வெளியே நடத்தப்படும் சீட்டுகளில் அநேகமாய் ஒரே நபர் அவைகளை நடத்துகிறாரென்பது அனுபவத்தில் தெரிந்த விஷயம்; மேலும், அவைகள் கடைசிவரையில் சரியாய் நடத்தப்படாமல் நின்று போவதும் சர்வ சாதாரணமாயிருக்கிறது.

(iv) சில டைரெக்டர்கள் ஒன்று சேர்ந்து முதன்மையாயிருந்து நடத்தி வந்த ஒரு சீட்டில் சீட்டு கிடைத்தவர்களுக்குத் தொகை கொடுக்காமலே, மாதக்கணக்காய்த் தள்ளிவைத்துக் கொண்டுவந்ததை நானே பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட விஷயங்களில், அந்தச் சீட்டுகள், சந்தாதாரர்களுக்கு யாதொரு பிரதிப் பிரயோசனத்தையும் உண்டாக்காமல் டைரெக்டர்கள் சம்பந்தப் பட்டவரையில் விசேஷ லாபம் சம்பாதிப்பதற்காக வென்றே நடத்தப்படும் ஸ்தாபனங்களாய் விடுகின்றன. இச்சீட்டுகளை நடத்துவதில் அவ்விதமான கஷ்டங்கள் ஒன்றும் நேராமல் தடுப்பது நம்முடைய சங்கங்களுக்குச் சாத்தியமாயிருந்து வருகிறது.

(v) நம்முடைய சீட்டுகளில் கவனிக்கத்தக்க மற்றொரு அம்சமானது விசேஷமாய் திருவுளச் சீட்டுகளைப் பற்றியதாகும். சாதாரணச்சீட்டுகளில் கரஸ்வான் அல்லது அதை நடத்துபவர் முதல்மாத வசூலைத் தாமே யெடுத்துக் கொள்வதுமல்லாமல், அநேக சமயங்களில் அதற்குப் பிறகு சீட்டை நடத்தும்விஷயத்தில் தம் மனோபீஷ்டம்போல் செய்கிறார்; கூட்டுத்தொழில் சங்கத்தைச்சேர்ந்த சீட்டிலோ முதல் தவணையில் வசூலிக்கப்படும் தொகையானது மெம்பர்களுடைய வரவுக்குரிய பணமாகக் கூட்டுத்தொழில் சங்கத்திலேயே கட்டிவைக்கப்படுகிறது. சிற்சில சமயங்களில் மெம்பர்கள் தொகை செலுத்தத் தவறிப்போனால் அப்ப

டிப்பட்ட அவசர சந்தர்ப்பங்களில் இந்தப் பணத்திலிருந்து எடுத்துச் சரிப்படுத்தப்படுகிறது. முதல் தடவை எவருக்குச் சீட்டு விழுகிறதோ அவருக்குச் சீட்டின் கடைசிமாதத்தில், சங்கத்தின் விதிகளை அனுசரித்து கணக்கிடப்பட்ட சொற்ப வட்டியுடன் இந்தப்பணம் கொடுக்கப்படுகிறது.

(vi) மற்றொரு அனுகூலம் விசேஷமாய் ஏலச்சீட்டுகளுக்குச் சம்பந்தப்பட்டதாகும். சாதாரணமான ஏலச்சீட்டுகளிலே ஏலம் கேட்பது சீட்டின் நாமகார்த்தமான மதிப்பிலிருந்து ஆரம்பித்து போட்டி அதிகமாக ஆக குறைந்துகொண்டே வருகிறது. ஆகவே, இந்தச் சீட்டுகளில் ஏலத்தில் கேட்பவர்களுக்குள் போட்டி இல்லாவிட்டால் ஒரு நபருக்கே அநியாயமாய் விசேஷ அனுகூலம் ஏற்படுகிறது. கூட்டுத்தொழில் சங்கத்தைச் சேர்ந்த சீட்டுகளிலோ ஒவ்வொரு தவணைக்கும் ஒரு அதம மதிப்பை நிஷ்கரிஷை செய்துவிடுவதனால் இம்மாதிரி நேரிடுவதற் கிடமில்லை. இந்த அதம மதிப்பானது—சீட்டு இன்னும் எத்தனைமாத காலம் நடக்கவேண்டியிருக்கிறதோ அதை அனுசரித்து ஏற்படும் தற்கால மதிப்பின்மேல் கணக்கிடப்படுகிறது. இந்த அதம மதிப்பிலிருந்தே சீட்டை ஏலத்தில் கேள்வி கேட்க ஆரம்பமாகிறது.

10. மேலே சொன்ன கடைசி அம்சத்தைப்பற்றித்தான் நான் ஒரு விஷயத்தை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஏலம் ஆரம்பிப்பதற்கு ஒவ்வொரு தவணைக்கும் ஓர் அதம மதிப்பு ஏற்படுத்திவிடுவதனால் போட்டி இல்லாதிருக்கும் பட்சத்தில் ஒரு நபருக்கே அநியாயமாய் அனுகூலம் உண்டாவதைத் தடுப்பதுபோலவே, மிதமிஞ்சி போட்டி ஏற்படுவதனால் நேரிடும் அபாயத்தையும் நாம் தடுப்பது அவசியமல்லவா? குறித்த ஓர் அளவுக்கு மேல் போட்டி போடக்கூடாதென வரையறுக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்; அப்படியே நீங்களும் நினைப்பீர்களென்று நம்புகிறேன். அப்படி ஒரு ஏற்பாடு செய்யப்பட்டால், அந்தச் சீட்டுகளை நடத்தும் வேலை மிகவும் சுலபமாய்விடும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

11. திரும்பச் சொல்லுவது—கூட்டுத்தொழில் கிளர்ச்சியை ஆரம்பித்து விருத்தி செய்துவருகிற நாம் நம்முடைய மெம்பர்களைச் சிக்கனமாயிருக்கும்படி அடிக்கடி கட்டப்பட்டுவரும் அல்லது மிகுத்தி வைக்கப்பட்ட தொகையைக் கட்டிவரும் டிபாஸிட்டுகளைக் கொண்டோ அல்லது சீட்டுகளைக் கொண்டோ அல்லது முற்றும் புதிய வேறே எந்த ஏற்பாட்டையாகிலும் கொண்டோ, அதை எந்த விதமாய்ச் செய்தாலும் சரி—செய்வதற்கு நம்மாலான

முயற்சி யெடுத்துக்கொண்டா லொழிய, நாம் நம்முடைய கடமையை எவ்வளவும் நிறைவேற்றினவர்களாகமாட்டோமென்று நான் சொல்லுவேன்.

12. புத்திமதி.—நம்முடைய சங்கங்களை நடத்துவதில், பிறருதவியை எதிர்பாராமல் நம்மாலானதைக்கொண்டு தன்முயற்சியே மிகவும் சிறந்ததென்று நம்பி வேலை செய்யவேண்டுமென்றும் நான் சொல்லுவேன்—தன்முயற்சியே கூட்டுத்தொழிலுக்கு முக்கிய ஆதாரமாகும். ஒரு முயற்சியாவது ராஜாங்கமாவது நடப்பதற்கு வேண்டிய உபகரணங்களும் அமைப்பும் ஏற்பட்டிருப்பதனாலேயே அந்த முயற்சியாவது ராஜாங்கமாவது முன்னுக்கு வருமென்று நம்பியிருப்பது அபாயகரமானதென்று சொல்லியிருப்பது சரியே. ஆகவே, நாம் விழித்துக்கொண்டு வேலைசெய்துகொண்டிருப்போமாக; ஒவ்வொரு தினத்திலும் முந்தின தினத்தை விட நாம் அபிவிருத்தியடைந்துவருமாறு நம்முடைய கோரிக்கை ஈடேறும்வரையில் உழைத்துக்கொண்டேயிருப்போமாக.

குறிப்பு:—மேலே சொல்லப்பட்டதன் சம்பந்தமாய், திருவல்லிக்கேணியிலிருக்கும் அர்பன் கோவாபரேடிவ் (நகரக்கூட்டுத்தொழில்) சங்கத்தில் சீட்டுப் பூண்டுகள் நடத்தப்படும் விதத்தைப்பற்றி அடியிற்கண்ட விவரமானது அதன் காரியதரிசியால் எழுதியனுப்பப்பட்டது:—

"சுருக்கமாய்ச் சொன்னால் அந்த ஏற்பாடு அடியிற்கண்டபடியாகும்:- குறித்த ஒருசங்கியையுள்ள நபர்கள்சேர்ந்து ஒவ்வொருவரும் காலமுறையாய் ஒரு தொகையைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள்; இதற்கு சென்ற சில காலமாய் நடந்துவரும் ஒரு ஏற்பாட்டை உதாரணமாக எடுத்துச்சொல்லலாம்; அதாவது, 16பேர் (எல்லோரும் நம்முடைய சங்கத்தின் மெம்பர்களே) சேர்ந்து ஒவ்வொருவரும் மாதம் 25 ரூபாய் விழுக்காடு 16 மாதங்களுக்குக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். இம்மாதிரி பிரதிமாதமும் 400 ரூபாய் கட்டப்படுகிறது; ஒவ்வொரு தடவையிலும் இந்தத் தொகையை எப்படி பைசல் செய்வதென்று கேள்வி பிறக்கிறது. அதைப் பைசல் செய்வதற்கு சாத்தியமான மார்க்கங்கள் மூன்றுண்டு.

1. திருவுளச் சீட்டு ஏற்பாடு— இந்த ஏற்பாட்டில் முன்னமே சீட்டு எடுத்திராத மெம்பர்களின் பெயர்களை எழுதிச் சீட்டுபோட்டு எவருடைய பெயர் எடுக்கப்படுகிறதோ அவருக்கு முழுதொகையும் கொடுத்துவிடப்படுகிறது. இந்த ஏற்பாட்டுக்கு ஆட்சேபனை என்னவென்றால், முதலிலேயே சீட்டு எவருக்கு விழுகிறதோ அந்த மெம்பர் அதற்குப் பிறகு சீட்டு விழும் நபர்களைக் காட்டிலும் அநியாயமாய் அதிக அனுகூலத்தை அடைகிறாரென்பதே.

(2) "கழிவுத்தொகை" ஏற்பாடு அல்லது "கழிவுத் தொகையை நிர்ணயித்து திருவுளச்சீட்டு போடும்" ஏற்பாடு:— இதில் சீட்டு எடுப்பவருக்கு

நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஒரு வீதப்படி வட்டி கணக்கிட்டு அது போக மிகுதித்தொகை கொடுக்கப்படுகிறது; இப்படி செய்வதனால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் லாபமானது சமமாயிருக்கிறது. மேலேகண்டபடி கழிக்கப்பட்ட தொகைகள் சீட்டின் முடிவில் அதைச்சேர்ந்த பல மெம்பர்களுக்குள் பங்கிடப்படுகின்றன. னால், இந்த ஏற்பாட்டில் எவருக்கு அத்தியாவசியமாய்ப் பணம் வேண்டியிருக்கிறதோ அவர் தமக்குச் சீட்டு விழும்வரையில் விதியில்லாமல் காத்துக்கொண்டிருக்க வேண்டிவரும். இந்தக் குறையும் அடுத்த ஏற்பாட்டில் நிவர்த்தி செய்யப்படுகிறது.

(3) "ஏலச்சீட்டு" ஏற்பாடு:—இதில் திருவுளச்சீட்டு போடப்படுவதில்லை; ஆனால், சந்தாவாய்க் கொடுக்கப்பட்ட தொகையானது யார் அதிக உயர்ந்த கழிவுத் தொகைக்குக் கேட்கிறாரோ அவருக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படி கேட்டவர் அந்தத் தொகையில் மேலேகண்ட கழிவுத்தொகை போக மிகுதியைப் பெறுகிறார். இன்னும்கூட போட்டி அதிகமாக இருந்தால் மிகவும் அதிகமாய்த் தொகை கழித்துக் கேட்கப்படுகிறது; அதனால், இந்த ஸ்தாபனங்களுக்கு மூலாதாரக் கொள்கையான ஒத்துழைப்பு என்னும் விஷயம் போய் அக்கிரம வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஏற்பாடு உண்டாய்விடுகிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காக டைரெக்டர்கள் 55 (vi)-ம் சகாயச் சட்டத்தில் கழிவுத் தொகையானது 100க்கு 4க்குக் குறையாமலும் 9க்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே, மேலே உதாரணமாக எடுத்து சொன்ன சீட்டுப்பண்டில் நான்காவது மாத ஏலத்தில், அதாவது இன்னும் பன்னிரண்டு மாதங்கள் இருக்கும் பொழுது, கழிவுத்தொகையானது 400ரூபாயின்மேல் 100க்கு 4க்குக் குறையாமலும் 9க்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்; அதாவது 16ரூபாய்க்குக் குறையாமலும் 36 ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்; ஆகவே, நான்காவது மாதத்தில் மிகவும் உயர்ந்த கழிவுத்தொகைக்கு கேட்பவர் 364 ரூபாய் பெறுவார். இந்த ஏற்பாட்டினால், சீட்டுப்பண்டு முறை விஷயமாய் மேலே சொல்லப்பட்ட குறைகள் எவையும் இருப்பதற்குச் சாத்தியமில்லாமல் அதனால் மெம்பர்கள் எவ்வளவு அனுகூலத்தை அடையக்கூடுமோ அவ்வளவு அனுகூலத்தையும் அடைவார்களென்று நம்பப்படுகின்றது. நம்முடைய சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் தங்கள் இஷ்டப்படி "கழிவுடன் கூடிய திருவுளச் சீட்டையோ ஏலச்சீட்டையோ" எடுத்துக் கொள்ளும்படி விதி ஏற்படுத்தி யிருக்கிறது வாஸ்தவமேயாயினும், பின்கண்ட சீட்டுதான் அமுலிலிருந்து வருகிறது.

மெம்பர்கள் சொற்ப காலத்துக்குமுன்னே தெரிவித்து சிறு தொகைகள் கடனாகப் பெற முடியாதென்பதை இந்தச் சீட்டுப்பண்டு ஏற்பாட்டுக்கு ஒரு ஆட்சேபனையாக எடுத்துச் சொல்லக்கூடும். இதையும் நிறைவேறும்படி செய்வதற்காக டைரெக்டர்கள் மேல்நாட்டு பாங்கியின் முறைகளை அனுசரித்துக் கடன் கொடுப்பதற்காகவும் ஒரு பிரிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஐக்கிய நாணயச்சங்கங்கள்.

[வா. பஞ்சாபகேசய்யரால் 'பிழைக்கும் வழி'யில் எழுதப்பட்ட திலிருந்து எக்ஸ்ட்ராக்ட்.]

இந்தச் சங்கங்களால் உண்டாகும் நன்மைகளையும் பிரயோஜனங்களையும் பற்றிக் கவனிப்போம். இவைகளை யுண்டுபண்ணிய கவர்ன்மென்டாரின் நோக்கம் "விவசாயக்காரர்களும் சுவல்ப வருமானமுள்ள கைத்தொழிலாளிகளும் மற்றவர்களும் சிக்கனமாய்ச் செலவுசெய்து தங்களுக்குத் தாங்களே உதவி பண்ணி ஒற்றுமையோடு இருக்க அவர்களை உற்சாகப்படுத்துவது" என்று சட்டத்தில் காணப்படுகிறது. இந்த நோக்கங்கள் முழுமையும் சித்தியடைகின்றன என்பதை அந்தச் சங்கங்களில் அனுபவமுள்ளவர்கள் நன்றாய் அறிவார்கள். அவைகளை அடியில் சுருக்கமாய் விவரிப்போம்.

சிக்கனம். பொருளை வீணில் செலவழிக்காமல் பிரயோஜனமான வழிகளில் உபயோகப்படுத்தி செட்டாயிருப்பதற்குச் சிக்கனம் என்று பெயர். இந்தச் சங்கங்களிலிருந்து இது சித்தியடைகிற விதத்தைப் பார்ப்போம் சாதாரணமாய் ஒரு விவசாயியோ, தொழிலாளியோ, வியாபாரியோ, தன்னுடைய உழைப்பிலிருந்து தகுந்த பலனையடைய விரும்பினால் ஆரம்பத்தில் முதல் வேண்டியது அவசியம். முதலிருந்தால்தான் மாடுகள், ஏரு, விதை, ஆயுதங்கள், தளவாடங்கள், வியாபாரத்துக்கு வேண்டிய சாமான்கள் முதலியவைகளை வாங்கி உழைப்பினால் பிழைக்கலாம். இல்லாவிட்டால் முடியாது. அதற்காகக் கடன் வாங்கவேணும். இந்த நிலைமையிலுள்ளவர்கள், ஐக்கிய நாணயச்சங்கங்களைத் தவிர, வேறு எந்த இடத்தில் கடன் வாங்கினாலும் அவர்கள் நிலைமை துக்கிக்கத்தக்கதாகிவிடும். கடன் வாங்குபவர்களின் சவுகரியப்படி கடனுக்குத் தவணையும், வட்டியும், மற்ற நிபந்தனைகளும் ஏற்படுத்திக்கொண்டு அவர்கள் முன்னுக்கு வரவேணுமென்ற கவலையுடன் கடன் கொடுப்பவர்கள் நடந்து கொண்டாலல்லாமல் கடன் வாங்கியவர்கள் ஒருபோதும் நல்ல ஸ்திதியை அடையமாட்டார்களென்பது நிச்சயம். கடன் வாங்குகிறவர்கள், வாங்கும்போது, பிந்தி இந்த விதமான கஷ்டங்களில் சிக்கிக்கொள்ளப் போகிறோமென்பதை யோசியாமலே, எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டு விடுவார்கள். ஒரு கெடுவில் 60 ரூ. கொடுக்கவேண்டிய ஒருவன், கெடுதவறினால் மீ 1க்கு ரூ. 1க்கு கால்ரூபாய் வீதம் வட்டியும் பிரதி 6 மீ க்கிலும் காம்பவுண்டு அதாவது, விசை வட்டியும் சேர்த்துக் கொடுப்பதாக ஒரு பத்திரம் எழுதிக்கொடுக்க, அது மூன்று வருஷத்துக்குள் ரூபா

12,000 க்கு மேலாயிற்று. மூன்று கோர்ட்டுவரையில் இருகட்சிக்காரர்களும் வியாச்சியமாடி கடைசியாக, வாதிக்குப் பிரதிவாதி அசல் தொகை ரூபா 60-ம் அதற்கு வருஷம் 1 க்கு 100 க்கு 24 வீதம் வட்டியும் கொடுக்கும்படி சென்னை ஹைகோர்ட்டில் சமீபத்தில் ஒரு தீர்மானமாகி யிருப்பதாக பத்திரிகைகளில் வெளியாயிருந்தது. இருவர்களும் முன்னாலேயே பின் வரக்கூடிய ஸ்திதியை நினைத்து நடந்து கொண்டிருந்தால் மூன்று கோர்ட்டுகளிலும் இரண்டுபேர்களும் செலவு செய்த ஏராளமான பணத்தை நஷ்டப்படவேண்டிய அவசியம் இருந்திராதல்லவா? சாதாரண முதலாளியிடம் கடன் வாங்குவதைப்பற்றி ராவ் பகதூர் எம். ஆதிநாரணய்யா அவர்கள், செங்கல்பட்டு கூட்டத்து அக்கிராசனப் பிரசங்கத்தில் சொல்லுகிறார். "விவசாயத்துக்குப் பண உதவி யெல்லாம் இப்பொழுது லேவாதேவி செய்யும் முதலாளிகளால் பண்ணப்படுகிறது. அனேகம் கேஸ்களில், அவர்களால் உண்மையான விவசாய முயற்சிக்கு பிரயோஜனமில்லை யென்று சொல்லும்படியாய் அவர்களுடைய நிபந்தனைகள் அவ்வளவு அநியாயமாயும் கண்டிப்பாயுமிருக்கின்றன." லேவாதேவி செய்கிறவர்களிடம் கடன் வாங்குவதில் உள்ள கஷ்டங்கள் என்னவென்றால், அதிக வட்டியும், செலவும், இவைகளைக் காட்டிலும் வாங்குகிறவர்களுக்கு மிகுந்த கெடுதலை விளைவிப்பதும் நயமாயிருந்து அவர்களை யடியோடு கெடுப்பதுமான கெடு நிபந்தனையுமே. கடன் வாங்கும்போது கடன் கொடுக்கிறவர்கள் ஒரு தவணையைக் குறித்துக்கொண்டு அந்தத் தேதியில் முழுத்தொகையையும் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். கடன் தொகையை 2 தடவையாகத் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்குக்கூட லேவாதேவி செய்கிறவர்கள் சம்மதியார்கள். வாங்கின தொகையைச் சில்லரையாகச் செலுத்துவது கடன்பட்டவர்களுக்கு சவுகரியமென்றால், முதலாளிகள் அப்படி வாங்கிக்கொள்ளுவதில் தங்கள் முதல் கரைந்து உருவாகாமல் போய்விடுமென்று நினைக்கிறார்கள். கடன் வாங்கினவர்கள் கடனை ஒரு குறித்த தேதியில் ஒரே மொத்தமாகக் கொடுப்பதென்றால் அது ஒரு நாளும் சாத்தியமாகாத காரியம். இதனால் என்ன ஆகிறது? வாங்கின கடன் ஒருபோதும் ஈடாகிறதில்லை. கடன் வாங்கினவரிடம் அப்போதப்போது சேரும் தொகைக்கு ஏதாவது செலவு ஏற்பட்டு விடும். அவர்களிடம் பணமிருந்தால் செலவுக்கா இடமில்லை? எப்படியாவது அனாவசியமான வழிகளில் செலவாகிவிடும். கடைசியில் கடன் தொகை தலைமட்டம் கொண்டு நிலத்தையும் இன்னும் மற்ற சொத்தையும் விழுங்கிவிட்டு ஆளையும் விழுங்கப்பார்க்கும்.

ஐக்கிய நாணயச் சங்கங்களின் விஷயத்திலோ அப்படியில்லை. இந்தச் சங்கங்களுக்கு எழுதிக் கொடுக்கப்படும் பத்திரங்களுக்கு ஸ்டாம்புக் கிரயம், ரிஜிஸ்ட்ரேஷன் பீஸ் முதலிய செலவுகள் இல்லை. கடன் வாங்குகிறவர்கள் கடனைத் திருப்பிக்கொடுக்க அவர்களுக்கு சவுகரியமானபடி ஒரு கெடுவை ஏற்படுத்திக்கொண்டு அந்தத்தவணைக்குள் எப்போதாவது சில்லரை சில்லரையாக தங்களிடம் சேரும்போதெல்லாம் தொகையைச் செலுத்தி கடனை தீர்த்துவிடலாம். கெடுவுக்குள் முழுத்தொகையும் செலுத்த முடியாதவர்கள், அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் விதிகளை யனுசரித்து, ஒவ்வொரு வருஷத்திலும் வட்டியையும் முதலில் ஒரு பாகத்தையும் செலுத்திவந்து சில வருஷங்களில் கடனைத் தீர்த்துவிடலாம். கடன் வாங்கினவர்கள் வாங்கிய கடனை யடைக்காமல் வீண்செலவு செய்யும்பட்சத்தில் அவர்களை நெருக்கி கடனைத்தீர்க்கும்படி கட்டாயப்படுத்தலாம். இப்படியாக இந்தச் சங்கமானது அதன் மெம்பர்கள் வீணில் கடன்படாமலும் வீண்செலவு செய்யாமலும், வீண் நஷ்டப்படாமலும் பாதுகார்க்க ஒரு ரட்சகனாயிருக்கிறது. மிஸ்டர் கிளின் பார்லோ என்பவர் "இண்டஸ்ட்ரியல் இந்தியா" என்னும் புஸ்தகத்தில் எழுதுகிறார். "வறுமை யடைந்த கிருஷிகனுக்கு பெந்தகப்பத்திரத்தைக் கையெழுத்து செய்யக் கொடுத்து அதில் ஏற்படுத்தியிருக்கும் அதிக வட்டியாலும், வஞ்சனையான ஷரத்துக்களாலும் அந்த கிருஷிகனுடைய நெல் வயல் சீக்கிரத்தில் தன்னுடையதா யிருக்குமென்று நினைத்துக் கொக்கரிக்கும் சாவுகார், பணம் சம்பாதிப்பதில் தேசாபிமானத்தோடு கூடினவனாக ஆகமாட்டான். அப்படிப் பணம்சம்பாதிப்பது சட்டத்துக்கு விரோதமில்லாமலிருந்தாலும் அது எல்லா விதத்திலும் வெறுக்கத்தக்கதாகவும், தேசாபிமானத்துக்கு விரோதமாகவுமிருக்கிறது." இந்த விதமாக சாதாரண முதலாளிகளிடம் கடன் வாங்குவதற்கும் ஐக்கிய நாணயச்சங்கங்களில் கடன் வாங்குவதற்குமுள்ள வித்தியாசத்தைக் கொண்டு சிக்கனம், அதாவது, செட்டு எப்படி யுண்டாக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளலாம். மேலும், கடன் வாங்கவேண்டிய அவசிய மில்லாதவர்கள் தங்களிடம் அப்போதப்போது சேரும் பணத்தை வீணாக்காமல் இந்தச்சங்கங்களில் போட்டு வைத்து கவலை யில்லாமலிருக்கலாம். இந்த மாதிரி சில்லரையாக சேகரித்து வைத்த பணம் வட்டியுடன் மொத்தமாகச் சேர்ந்து அவசியமுள்ள காலத்தில் கடன் வாங்காமல் உபயோகப்படுத்திக்கொள்ள உதவும்.

சுய உதவி.—எல்லா வழிகளிலும் இதரர்களுடைய உதவியையே தேடாமல் பரஸ்பரம் உதவி செய்துகொள்ளுவதற்கு சுய உதவி என்று பெயர். இந்தச் சங்கங்களின் ஏற்பாடும் நிர்வாகமும் இந்த நோக்கத்தையே முக்கியமாகக் கொண்டவைகள். மெம்பர்களெல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்தால் இந்தச் சங்கம் ஏற்படுகிறது. மெம்பர்கள் சேர்ந்து தங்களால் கூடுமானமட்டில் முதல் ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவசியமான விதிகளை சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி தாங்களே ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். தங்களுக்குள் பணம் தேவையாயிருக்கும்போது வேண்டிய தொகையை கடனாக வாங்கிக் கொள்ளுகிறார்கள். வரும் லாபங்களை எல்லாரும் பங்கு விதப்படி அடைகிறார்கள். தேவையாயிருக்கும் பணத்தை தங்களுக்குள்ளேயே பணமுள்ளவர்கள் உதவ, தேவையுள்ளவர்கள் வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். வெளியிலிருந்து கடன் வாங்கவேண்டிய அவசியம் நேரிட்டாலும்,

எல்லாருடைய பொறுப்பிலும் வாங்கி உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள். இந்த மாதிரியாக இந்தச் சங்கங்களின் நடவடிக்கைகளெல்லாம் சுய உதவியை நாடினதாக இருக்கின்றன.

ஒற்றுமை.—தற்காலம் நம்முடைய தேசம் முன்னுக்குவர ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையுமே முக்கிய சாதனங்களாக வேண்டியிருக்கின்றன. பரஸ்பர நம்பிக்கை யில்லாமையே ஒற்றுமைக் குறைவுக்கு முக்கிய காரணம். இந்தச் சங்கங்கள் பரஸ்பர நம்பிக்கையில்லாமையைத் தொலைத்து ஒற்றுமையை விருத்தி செய்வதற்கு மிகுந்த அனுகூலமாக இருக்கின்றன. அனேகமாக எல்லாச் சங்கங்களிலும் ஒரு மெம்பர் கடன் வாங்கவேணுமானால் அதற்கு மற்றொரு மெம்பர் ஜாமீனாக இருக்கவேண்டுமென்ற விதி அனுஷ்டானத்திலிருக்கிறது. புதிதாய் சங்கம் ஏற்படுத்தப்படும்போது இந்த முன்ன சங்கத்தின் விருத்திக்கு இடைஞ்சலென்று நினைத்தவர்களெல்லாம் அதனால் பின்னிட்டு சவுகரியமுண்டாயிருப்பதை அனுபவத்தில் அறிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி ஒருவருடைய கடனுக்கு மற்றொருவர் ஜாமீனாயிருப்பதென்கிற விதியை ஒவ்வோரிடத்திலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமம் இருந்தாலும், அந்த மாதிரிதான் கடன் கொடுக்கப்படுமென்று கண்டிப்பாய் விதிசெய்துகொண்டு முதலில் ஒருவருக்கொருவர் ஜாமீனாயிருந்து கடன் வாங்கிக் கொள்ளும்படி செல்வாக்குள்ளவர்கள் தூண்டினால் உடனே நல்ல விருத்தியை யடையாவிட்டாலும் நாளாக நாளாக இந்த வழக்கம் சர்வ சாதாரணமாகிவிடும். இந்த அனுஷ்டானத்தால் விளையும் பயன் என்ன? ஒருவருக்கொருவர் பணத்தின் மூலமாய் பிணைக்கப்படுவதால் பரஸ்பரமிருந்த அசூயையும் நம்பிக்கை யில்லாமையும் கண்டிப்பாய் விடுபட்டு ஒருவருடைய க்ஷேமலாபங்களில் மற்றவருக்கு சிரத்தையும் கவலையுமுண்டாகி விடுகின்றன. இன்னும் இந்தச் சங்கங்களின் நிர்வாகத்தில் எல்லா வழிகளிலும் நம்பிக்கை யில்லாமையைக் களைந்து ஒற்றுமையை விருத்தி செய்யத் தகுந்த சாதனங்களிருக்கின்றன.

விவசாய விருத்தி.—நம்முடைய தேசத்திற்கு விவசாயமே முக்கிய ஜீவாதாரம். பெரும்பான்மையானவர்கள் விவசாயம் வரவர க்ஷீணதசையடைந்து வருவதையும் நிலத்தின் வளம் குறைந்து வருவதையும் நன்றாயுணர்ந்து, கவர்ன்மென்டாரும் பல தேசாபிமானிகளும் அதை நிவர்த்திக்க முயற்சித்து வருகிறார்கள் என்பது 'பிழைக்கும் வழி'யைப் படிப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியும். முன்னே சென்னையிலிருந்தவரும், இப்போது ஜுனாகாத் ஸமஸ்தானத்தில் விவசாய டைரெக்டரா யிருப்பவருமான கென்னி யென்பவர் "இந்தியாவின் விவசாய உயிர்ப்பிப்பு" என்ற புஸ்தகத்தில் எழுதுகிறார்: "இந்தியாவின் வழியத்துக்காக தங்களுடைய ஆயுளைச் செலவிடுவதாக மெம்பர்கள் பிரதிக்ஞை செய்துகொண்டு தேசம் முழுவதும் கிளைகளுடன் புனவில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லையா? அவர்கள் பிரதிக்ஞை செய்துகொண்ட தேசத்துக்கு கிருஷிகர்களை உன்பா

ரத்திலிருந்து நீக்கவும், அவர்கள் வயல்களுக்கு அத்தியாவசியமான எருக்களை வாங்கவும், மொத்தமாய் வாங்கி தங்கள் செலவுகளைக் குறைத்துக்கொள்ளுவதற்காகவும், தானியங்களைச் சேர்ந்து விற்று தங்கள் வரும்படிகளை அதிகப்படுத்திக் கொள்ளுவதற்காகவும், அவர்களை ஒன்றாய்ச்சேர உதவும்படிக்கும், கடைசியாக ஒவ்வொரு மெம்பருக்கும், முழுசமூகத்துக்கும் அளவற்ற பிரயோஜனப்படுகிற ஒரு பொதுக்காரியத்துக்காக அவர்களை ஒன்று சேரும்படி கற்பிக்கிறதுமான ஐக்கிய நாணயச்சங்கங்களை ஏற்படுத்துவதைக் காட்டிலும் வேறு பெரிய ஊழியமிருக்கக்கூடுமா' என்று கேட்கிறார். செங்கல்பட்டு கூட்டத்தின் அக்கிராசனப் பிரசங்கத்தில் ராவ்பகதூர் ஆதிநாரணய்பா அவர்கள் விவசாயிகள் சாதாரணமாய் எங்கும் கடன்பட்டவர்களாக இருக்கிறார்களென்றும் நம்முடைய தேசத்தில் அவர்களின் நிலைமை மிகவும் கெடுதலாக இருக்கிறதென்றும் சொல்லுகிறார். சாதாரணமாய் கடன் கொடுத்து வாங்கும் முதலாளிகளிடமிருந்து விவசாயிகள் கடன் வாங்குவதற்கும், இந்தச் சங்கங்களிலிருந்து கடன் வாங்குவதற்கும் உள்ள தாரதம்மியத்தை மேலே சிங்கனமென்கிற தலைப்பில் விவரித்திருக்கிறதிலிருந்து சற்று நிதானித்தால் விவசாயத்தின் மேலேசொல்லிய நிலைமையை நிவர்த்தி செய்ய ஐக்கிய நாணயச்சங்கங்களைத் தவிர வேறு வழியில்லை யென்பது தெளிவாய் விளங்கும்.

தொழில் விருத்தி.—நம்முடைய தேசம் பூர்வீக நிலைமையிலிருந்து மாறி வறுமையடைந்திருப்பதற்கு அதன் பூர்வீகத்தொழில்கள் நசித்துப் போயிருப்பது முக்கிய காரணமென்றும், அது செல்வத்தோடு விளங்குவதற்கு மறைந்த தொழில்களை உயிர்ப்பித்துப் புதியவைகளை உண்டாக்கவேணுமென்றும் ஞானமுள்ளவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். முந்தி விவசாய விருத்தி என்ற தலைப்பில் சொல்லப்பட்டவைகளெல்லாம் தொழில் விருத்திக்கும் பிரயோகப்படுகின்றன. சமீபத்தில் பம்பாய் கவர்ன்மென்டார் பிறப்பித்த ஒரு தீர்மானத்தில் அடியில் கண்டபடி சொல்லுகிறார்கள்: "ஐக்கிய நாணயச்சங்கங்களை ஏற்படுத்துவதால் நெசவுகாரர்களின் பொருளாதார நிலைமை விருத்தி அடையும். அதிலிருந்து வேலை செய்கிறவன் தன்னுடைய பயிற்சியாலும் உழைப்பாலும் சம்பாதிக்கக்கூடிய முழு லாபத்தையும் அடையவும் புது முறைகளையும் கருவிகளையும் உபயோகிக்கவும் வழி உண்டாகிறது."

நிர்வாக சக்தி.—ராஜ்ய விவகாரங்களில் தேசத்து ஜனங்களுக்கிருக்கும் ஸ்வதந்திரங்களைப் பரிபாலிப்பதற்கு தேசத்து ஜனங்களெல்லாருக்கும் பிரதிநிதி நியமனங்களில் பழக்க மில்லாமையும் அறிவில்லாமையும் காரணங்களாக சில சமயங்களில் சொல்லப்படுகிறது. ஸ்வதந்திரங்களை பரிபாலிப்பதற்கும் அடைவதற்கும் எல்லா ஜனங்களுக்கும் பழக்கமும் அறிவும் வேண்டியது அவசியமா என்கிற கேள்வி தனியாயிருக்கட்டும். அறிவும் பழக்கமுமில்லை யென்பதில் கொஞ்சம் உண்மையில்லாமல் போகவில்லை. இதை நிவர்த்தி செய்ய இந்தச் சங்கங்களால் முற்றிலும் சாத்தியமாகிறது. இந்தச்சங்கங்களில்

அனுபவமில்லாத சாதாரண ஜனங்களுக்கு பிரதிநிதி அரசாட்சி இன்னதென்று சொன்னால் அவர்களுக்கு அர்த்தமாகிறதில்லை. இந்தச் சங்கங்களிருக்கும் இடங்களிலுள்ளவர்களுக்கு இவைகளை உதாரணமாகக் காட்டி ப்ரஜாதிபத்தியத்தைப் பற்றிச் சொன்னால் சீக்கிரத்தில் அறிந்து கொள்ளுகிறார்கள். இது ப்ரத்தியட்ச அனுபவம். பலபேர்கள் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுகிறது. அதற்கு வேண்டிய விதி முதலியவைகளை எல்லாரும் சேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதை நிர்வகிக்க பஞ்சாயத்தார்களை தாங்களே நியமிக்கிறார்கள். அவர்கள் நிறைவேற்ற வேண்டிய காரியங்களை எல்லாரும் ஒன்று கூடி கவனிக்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்தார்கள் இத்தனை காலம் அனுவலிருக்கவேணுமென்று நியந்தனை ஏற்படுத்தி அந்தந்த சமயத்துக்குத் தகுந்தபடி நியமனம் செய்கிறார்கள். இதில் அனுபவமும் பழக்கமுமுண்டாகவே எல்லாக்காரியங்களையும் இந்த மாதிரியே நிர்வகிப்பதில் சவுகரியமுண்டென்று அறிந்து கொள்ளுகிறார்கள். இந்த விதமாய் அனுபவமூலமான அறிவை உண்டுபண்ணுவதைக் காட்டிலும் சாதாரணமான போதனையாலும் கற்பனையாலும் உண்டு பண்ணப்படும் அறிவு சிலாகிக்கத்தக்கதாகாது. ஆகையால் இந்தச் சங்கங்களினால் சாதாரண ஜனங்களுக்கும் பொது ஸ்தாபனங்களைப் பிரதிநிதித்வமாய் நிர்வகிக்க பழக்கமும் அறிவும் உண்டாகிறது.

இந்த மாதிரி பல வழிகளிலும் நன்மையைத் தருகிற இந்தச் சங்கங்கள் ஒவ்வொரு இடத்திலும் ஏற்படவேண்டியது அவசியம். கவர்ன்மெண்டாரும் உத்தியோகஸ்தர்களும் கொஞ்சங்கூட பின்வாங்காமலும் அல்பவிஷயங்களில் பிடிவாதம் காட்டாமலும் சமயத்துக்கும் இடத்துக்கும் தகுந்தபடி நடந்துகொள்வார்களானால் கவர்ன்மெண்டு, ஜனங்கள் ஆகிய இரண்டு பேர்கள் நிலைமையும் மேன்மேலும் விருத்தியடைந்து தேசமும் செல்வப்பெருக்கத்துடன் தழைத்தோங்கும்.

சென்னை ஸென்டரல் அர்பன் பாங்க், லிமிடெட்.

தணிக்கை உத்தரவு.

சென்னை ஸென்டரல் அர்பன் பாங்க் லிமிடெட் என்னும் பாங்கியின் 1910-ம் ஹு ஜுன்மீ 30உயோடு முடிவாகிற வருஷத்துக் கணக்குகளை ஸ்பெஷல் டெப்யுடி கலெக்டர் விவரமாய்த் தணிக்கை செய்திருக்கிறார். வழக்கமாய் அனுப்பப்படும் மூன்று ஸ்டேட்மெண்டுகளை, அதாவது (a) வருஷத்தின் வரவுகளும் செலவுகளும், (b) வருஷத்துக்கு லாபநஷ்டக்கணக்கு, (c) 1910-ம் ஹு ஜுன்மீ 30உ யன்றைய (பாலன்ஸ்ஷீட்) கையிருப்புக் கணக்குச் சீட்டு ஆகிய இவைகளை அவர் அனுப்பியிருக்கிறார்.

2. இந்த வருஷத்தில் பாங்கியார் பங்கு ஒன்றுக்கு 100 ரூபாய் பெயர் மதிப்புள்ள 500 பங்குகளை அதிகமாய் வெளிவிட்டார்கள்; இந்த பங்குகள் ஆரம்பத்தில் 100-க்கு 10 விழுக்காடுள்ள மேல்வாசியுடன் கொடுக்கப்படுமென்று ஜனங்களுக்குத் தெரிவித்திருந்தும், வெளிவிட்ட பங்குகளைக்காட்டிலும் இரட்டத்தனைக் கதிகமான விண்ணப்பங்கள் ஒரு மாதத்திற்குள்ளாகவே வந்து சேர்ந்தன. இந்த பாங்கி எல்லாராலும் நன்கு மதிக்கப்படுகிறதென்பதற்கு இதைவிட பலமான அத்தாட்சி வேறே வேண்டியதில்லை. நிர்வாக சபையார் இந்தப்படி மேல்வாசியாகக் கிடைத்த 5000 ரூபாயையும் சேமநிதியுடன் வரவாய்ச் சேர்க்க தீர்மானித்திருக்கிறார்கள்.

3. இந்தத் தொகையல்லாமல் இந்த வருஷத்தில் பாங்கிக்கு ரூ. 14,070-11-10 நிகர லாபமாகக் கிடைத்தது. அதில் கால் பங்கை, அதாவது ரூ. 3,517-11-0 யை சேமநிதிக்கு வரவாகச் சேர்த்து விடவேண்டும். இதையும் முன்னமே சேமநிதியாகச் சேர்ந்திருக்கும் ரூ 2,330-5-0 யும் சேர்த்தால் பாங்கியின் சேமநிதியானது ரூ. 10,848 ஆகிறது. இந்தமொத்தத்தொகையை ரெஜிஸ்ட்ரார்ரால் அங்கீகரிக்கப்படும் முறைகளில் எதிலாவது வட்டிக்குப் போட்டு வைக்கும்படி பாங்கியாரைக் கேட்டுக் கொள்ளலாகிறது. நிகரலாபத்தில் எட்டிலொரு பங்காகிய ரூ. 1,758-13-6 யும் நிர்வாக சங்கத்தார் கட்டளையிடுகிறபடி காரியதரிசிக்கோ அல்லது உதவிக் காரியதரிசிக்கோ கொடுக்கவேண்டும். மிகுதி நிற்கும் ரூ. 8,794-3-4 யை பாங்கியாருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி ஈவுத்தொகைகளாகவோ மற்றப்படியோ பங்கிடுவதற்கு உபயோகப்படுத்தலாம்.

4. ரிபோர்ட்டிற்கண்ட வருஷத்தில் பாங்கி முன்போலவே அபிவிருத்தியடைந்து வந்ததுமல்லாமல், இந்த வருஷத்தில் கேட்கப்பட்ட தொகைகள் மிகவும் அதிகமாயிருந்தனவென்று ரெஜிஸ்ட்ராருக்குத் தெரிந்திருந்தும், அவைகளை யெல்லாம் பாங்கியார் சுலபமாய்க் கொடுத்துவந்தார்கள். அது இப்பொழுது நன்றாய் நிலையுன்றி யிருப்பதுமல்லாமல் அது சாசுவதமான ஒரு கீர்த்தியையும் அடைந்திருக்கிறது; ஆகவே அதன் நிர்வாகத்தைப் பற்றி ரெஜிஸ்ட்ரார் புகழ்ந்து பேசுவது அவசியமாகிறது. பாங்கியின் காரியங்களைத் திறமையுடனும் ஒற்றுணர்ச்சியுடனும் பிறருக்குப் போதிக்கும் விதமாகவும் விடாமல் நடத்திக்கொண்டே வந்ததற்காக நிர்வாக சபையாரும் முக்கியமாய்க் காரியதரிசியாகிய கைட்பட்டதாரியான ஸர். வி. ஸி. தேசிகாசாரியாரவர்களும் வாழ்த்து கூறி புகழப்படுவதற்குப் பாத்திரர்களாயிருக்கிறார்கள்.

5. வருஷமுழுவதற்கும் சிப்பந்தி செலவு ரூ. 484-14-5 ஆயிற்று. இதனால், பாங்கி எவ்வளவு சிக்கனமாய் நடத்தப்பட்டுவருகிறதென்பதும், காரியதரிசியானவர் அதற்காகத் தாமே எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறாரென்பதும் ஏற்படுகிறது. சிப்பந்திகள் அவர்கள் செய்யக்கூடிய வேலையைக்காட்டிலும் அதிகமாய்ச் செய்கிறார்களென்றும் அச்சிப்பந்தியை அதிகமாய்ப் பலப்படுத்துவது அவசியமென்றும் குறிப்படுவது ரெஜிஸ்ட்ராருக்கு இன்றியமையாததாகத் தோன்றுகிறது.

6. கணக்குகளில் முக்கியமாய் ஏற்படும் ஒரு அம்சம் என்னவென்றால், இந்த வருஷத்தில் வசூலிக்கப்பட்ட அபராதங்களின் தொகை மிகவும் கொஞ்சமென்பதே. இதன் மொத்தம் ரூ. 50-0-0 தான் ஆகிறது; இது மிகவும் கொஞ்சமே. தக்ககாலங்களில் ஞாபகக் கடிதங்கள் போடும் சிறந்த ஏற்பாடும் ஸென்ட்ரல் பாங்கைத் திறமான காரியக்கிரமப்படி நிர்வகித்து வந்ததுமே இந்தத் திருப்திகரமான நிலைமைக்குக் காரணமாகும்; இதன் பொருட்டு ரெஜிஸ்ட்ரார் தாம் மிகவும் நன்றி பாராட்டுவதாகத் தெரிவிக்கிறார்.

ஐக்கியகாணயச்சங்கங்களின்
ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ், சென்னை,
1910-ம் வரு ஜூலை 24உ

ஆர். ராமசந்திரராவ்,
ரெஜிஸ்ட்ரார்.

OFFICE OF THE REGISTRAR, MADRAS.

சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்க், லிமிடெட், என்னும் பாங்கியின் விவகாரங் களைப்பற்றிய ஸ்டேட்மென்ட்.

1910-ம் வரு ஜூன்மீ 30உ வரையில் வரவுகளும் செலவுகளும்.

வரவுகள்.	ரூ.	அ.	ப.
1. வசூல் செய்யப்பட்ட பங்கு தவணைத்தொகைகள் ...	67,000	0	0
2. பிரவேச கட்டணங்களும், பங்கை மாற்றிக் கொள்வதற்கான கட்டணங்களும்	1,005	0	0
3. டிபாஸிட் தொகைகள்.	618,829	2	4
4. திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன் தொகைகள். ...	117,100	0	0
5. வசூலிக்கப்பட்ட வட்டி	39,644	2	0
6. புதிதாய் வெளிவிடப்பட்ட 500 பங்குகளின் மேல் 100-க்கு 10 விழுக்காடான மேல்வாசி	5,000	0	0
7. பலவகைப்பட்டவை.	455	14	9
	849,034	3	1
ஆரம்பக் கையிருப்பைச்சேர்க்க	8,958	7	3
மொத்தம்	857,992	10	4

செலவுகள்.	ரூ.	அ	ப.
1. வாபஸ் செய்யப்பட்ட டிபாஸிட் தொகைகள்	248,406	14	2
2. கொடுக்கப்பட்ட கடன் தொகைகள்	577,050	0	0
3. செலுத்தப்பட்ட வட்டி	23,066	13	3
4. பங்குக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஈவுத் தொகைகளும் ஊதியமும்	2,085	10	6
5. சிப்பந்திச் செலவும் கன்டிஜென்ஜென்ட் செலவுகளும் ...	1,306	5	10
6. சேமநிதியுடன் சேர்க்கப்பட்டது	1,568	2	9
	853,483	14	6
முடிவுக் கையிருப்பைச் சேர்க்க	4,508	11	10
மொத்தம்	857,992	10	4

1910-ம் ஞு ஜூன்மீ 30உ யன்றிருந்தபடி கையிருப்புக் கணக்குச் சீட்டு.

ஆஸ்தி.	ரூ.	அ.	ப.
1. இன்னும் வசூலாகாமலிருக்கும் கடன்கள் ...	921,650	0	0
2. வசூலிக்கப்படாமலிருக்கும் கடன்களில் மேல் வட்டி ...	17,965	10	4
3. முடிவுக் கையிருப்பு	4,508	11	10
4. மைலாபூர் போஸ்ட் ஆபிஸில் கட்டியிருக்கும் சேமநிதி வட்டி உள்பட	2,334	9	4
மொத்தம். ...	946,458	15	11

கடன்.	ரூ.	அ.	ப.
1. சேர்க்கப்பட்ட பங்கு மூலதனம்	82,000	0	0
2. டிபாஸிட்தொகைகள்	816,125	15	0
3. இன்னும் செலுத்தப்படாமலிருக்கும் வட்டி ...	23,586	3	8
4. இன்னும் செலுத்தப்படாமலிருக்கும் சிப்பந்திச்செலவு	43	0	0
5. ஈவுத்தொகைகளை சமப்படுத்துவதற்கான நிதி ...	3,302	12	4
6. புதிதாய் வெளிவிடப்பட்ட 500 பங்குகளுக்கு 100க்கு 10 விழுக்காடு மேல்வாசி கணக்கிட்டு சேமநிதியுடன் சேர்க்க வேண்டிய தொகை	5,000	0	0
7. நிகர லாபம்	14,070	11	10
8. சென்ற நான்கு வருஷத்திய சேமநிதி	2,330	5	0
மொத்தம். ...	946,458	15	11

1910-ம் ஞு ஜூன்மீ 30உயோடு முடிவாகிற வருஷத்தின் லாப நஷ்ட கோஷ்வாரா.

லாபம்.	ரூ.	அ.	ப.
1. கிடைத்த வட்டி			
(a) இந்த வருஷத்தில் வசூலிக்கப்பட்டது ...	39,644	2	0
(b) வருஷக்கடைசியில் வசூலிக்கப்படாமல்நின்றிருந்தது	17,965	10	4
(c) வருஷ ஆரம்பத்தில் வசூலிக்கப்படாமல் நின்றிருந்த தொகையைக் கழிக்க ...	8245	14	2
	49,663	14	2
	49,363	14	2
2. பிரவேச கட்டணங்களும் பங்கை மாற்றுவதற்கான கட்டணங்களும்	1,005	0	0
3. புதிதாய் வெளிவிடப்பட்ட 500 பங்குகளின் மேல் 100க்கு 10 விழுக்காடு மேல்வாசி	5,000	0	0
4. பலவகைப்பட்டவை	455	14	9
	55,824	12	11

நஷ்டம்			ரூ.	அ.	ப.
1. கொடுக்கப்பட்ட வட்டி			23,066	13	3
2. இன்னும் செலுத்தப்படாமலிருக்கும் வட்டி. ...			23,586	3	8
			46,653	0	11
3. வருஷ ஆரம்பத்தில் செலுத்தப்படாமல் நின்றிருந்த தொகையைக் கழிக்க			11,220	5	8
	35,432	11 3	35,432	11	3
4. சிப்பந்திச் செலவுகளும் கன்டின் ஜென்ட் செலவுகளும் ...			1,321	5	10
5. சேம நிதியுடன் சேர்க்கப்பட்டது.			5,000	0	0
6. வருஷத்தின் நிகரலாபம்			14,070	11	10
			55,824	12	11

விஜயராகவாசாரியார்,
ஸ்பெஷல் டெப்யுடி கலெக்டர்,
தனிக்கை உத்தியோகஸ்தர்.

(நிர்வாக சபையாரின் உத்தரவுபடி)
வி. ஸி. தேஸிகாசாரி,
காரியதரிசி.

சென்னை, 1910-ம் ஞு ஜூலைமீ 7உ.

சேலம் ஜில்லா அர்பன் பாங்க் (லிமிடெட்).

1909-1910-ம் வருஷத்துக்காக.

தணிக்கை ரிபோர்ட்.

——(:)——

1910-ம் வருஷ ஜூன் மீ 30உயோடு முடிவாகிற பன்னிரண்டு மாதத்திற்கு 151-ம் நெம்பர் சேலம் ஜில்லா அர்பன் பாங்கி (லிமிடெட்)யின் கணக்குகளைத் தணிக்கை செய்ததைப்பற்றி அடியிற்கண்ட ரிபோர்ட்டை வினயத்துடன் அனுப்புகிறேன். இந்த ரிபோர்ட்டில் கண்ட காலமானது சங்கம் ஏற்பட்டு இரண்டாவது வருஷமாகிறது.

2. இந்த வருஷ ஆரம்பத்திலே இதில் 91 மெம்பர்கள் இருந்தார்கள். இவர்களில் ஒருவர் இறந்துபோகவே, அவருக்குப் பிரதிநிதியான அவருடைய புத்திரர் அவருக்குப் பதிலாக சேர்க்கப்பட்டார். பன்னிரண்டு நபர்கள் தங்களுடைய பங்குகளை வேறு ஆறு நபர்களுக்கு மாற்றிவிட்டார்கள். ஆகவே, இந்த வருஷத்தின் முடிவில் 85 மெம்பர்களிருந்தார்கள். இந்த வருஷத்தில் 22 பங்குகள் விட்டுவிடப்பட்டன அல்லது மாற்றிவிடப்பட்டன; இந்தப் பங்குகள் முன்னமே மெம்பராயிருந்தவர்களாலோ புதிதாக மெம்பராய்ச் சேர்ந்தவர்களாலோ ஆலசியமில்லாமல் எடுத்துக் கொள்ளப்பட்டன.

3. 1909-ம் வருஷ ஜூன் மாதம் 30உயோடு முடிவாகிற கோ ஆபரேடிவ் வருஷத்தில் பங்கு ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் ஒரு தவணைத்தொகை செலுத்தும்படி கேட்கப்பட்டது; அதனால் அந்த வருஷத்திலே 10,000 ரூபாய் பங்கு மூலதனமாக வசூல் செய்யப்பட்டது. நிர்வாக சபையார் பின்னும் இரண்டு தவணைத் தொகைகளைச் செலுத்தும்படி நடைமுதல் வருஷத்தில் நோடிஸ் விடுத்தார்கள். இரண்டாவது தவணைத்தொகை முழுவதும் முன்னமே செலுத்தியாய்விட்டது; மூன்றாவது தவணைத் தொகை விஷயத்தில், 97 பங்குகளுக்குச் சேரவேண்டிய பணம் கைக்கு வந்திருக்கிறது. மிகுதிப் பணத்தை, அதைச் செலுத்தவேண்டிய கடைசி தேதியாகிய ஜூலை மீ 31உக்குள் வசூல் செய்துவிடலாமென்று நிர்வாக சபையார் எதிர்பார்க்கிறார்கள். இவ்வருஷக் கடைசியில் மெம்பர்களின் பங்கு மூலதனமாக ரூ. 24,900 சேர்ந்திருந்தது; அதில், வாபஸ் செய்துவிடப்பட்ட ஒரு பங்குக்காக 50 ரூபாய் திருப்பிக் கொடுத்துவிடவேண்டியதாயிருக்கிறது.

4. போனவருஷம் இருந்ததைப் போலவே, இந்த வருஷத்திலும், ஒவ்வொரு கடனும் ரெஜிஸ்ட்ராரால் ஜாரி செய்யப்பட்டவுடனே கிராம சங்கங்களுக்கு வேண்டிய கடன்களைக்கொடுப்பது இந்த பாங்கிக்குச் சாத்தியமாயிருந்ததென்பது சந்தோஷத்துக்கிடமான விஷயமே. ரிபோர்ட்டில் கண்ட வருஷத்திலே அடியிற்கண்ட தொகைகள் பாங்கியாரால் கடனாக வாங்கப்பட்டன:—

	ரூ.	அ.	ப.
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	5,620	0	0
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட் தொகைகள்	19,338	4	3
இந்த ஜில்லாவிலுள்ள கிராம சங்கங்களின் சேமநிதி	7,479	15	10
இந்தியன் பாங்க் (லிமிடெட்)	1,62,000	0	0
சேலம் அர்பன் கோ ஆபரேடிவ் ஸொஸைடி (லிமிடெட்)	6,900	0	0
மொத்தம்	2,01,338	4	1

கடன் வாங்கின தொகைகளுக்காக அடியிற்கண்ட தொகைகள் இந்த வருஷத்தில் திருப்பிக் கொடுக்கப்பட்டன:—

	ரூ.	அ.	ப.
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	500	0	0
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட் தொகைகள்	6,300	0	0
சென்னை ஸெண்ட்ரல் அர்பன் பாங்க் (லிமிடெட்)	38,000	0	0
இந்தியன் பாங்க் (லிமிடெட்)	13,000	0	0
சேலம் அர்பன் கோ ஆபரேடிவ் ஸொஸைடி (லிமிடெட்)	4,850	0	0
	62,650	0	0

ரிபோர்ட்டில் கண்ட வருஷத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் இதரர்களுடைய மூலதனம் எவ்வளவு பாங்கியின் வசத்திலிருந்ததோ அது அடியிற்கண்ட கணக்குகளிலிருந்து ஏற்படும்:—

1908-09-ம் வருஷ ஆரம்பத்தில்—

	ரூ.	அ.	ப.
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	10,750	0	0
ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியிலிருந்து	90,800	0	0
சேலம் அர்பன் கோ ஆபரேடிவ் ஸொஸைடி (லிமிடெட்) யிலிருந்து	...	...	
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட் தொகைகள்	9,262	4	8
இந்தியன் பாங்க் (லிமிடெட்)	80,000	0	0
மொத்தம்.	1,90,812	4	8

1909-10-ம் வருஷ முடிவில்—

	ரூ.	அ.	ப.
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	15,870	0	0
ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியிலிருந்து	52,800	0	0
சேலம் அர்பன் கோ ஆபரேடிவ் ஸொஸைடி (லிமிடெட்)யிலிருந்து	2,050	0	9
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட் தொகைகள்	*29,780	8	0
இந்தியன் பாங்க் (லிமிடெட்)	2,29,000	8	0
மொத்தம்.	3,29,500	8	9

* இதில் கிராமசங்கங்களின் சேமநிதியாகிய ரூ. 7479-15-0 அடங்கியிருக்கிறது.

5. போன வருஷத்தைக் காட்டிலும் நடைமுதல் வருஷத்திலே மெம்பர்களின் டிபாஸிட் தொகைகளில் 5000 ரூபாயும் மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட் தொகைகளில் 11,000 ரூபாயும் மாத்திரமே அதிகமாயிருக்கிறதென்று மேலே சொல்லப்பட்டதிலிருந்து ஏற்படும். இது மிகவும் குறைந்த தொகையென்பது வாஸ்தவமே. இதற்கு ஒரு சமாதானம் சொல்லுவது அவசியமாயிருக்கிறது. சிறிதுமட்டில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இதைப்போலுள்ள பாங்கிகளில் டிபாஸிட்டுகள் கட்டும் விஷயமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் பெரும்பாலும் இந்த ஜில்லாவுக்குள் பெரிய மூலதன முடையவர்கள் குறைவாயிருப்பது காரணமாகவும் இப்படி நேர்ந்திருக்கிறதென்று நிர்வாக சபையார் சமாதானம் சொல்லுகிறார்கள். சுவல்ப மூலதன மிருப்பதாகச் சொல்லிக்கொள்ளுபவர்கள் பணம் கடன் கொடுத்து அநியாயமாய விசேஷ வட்டி சம்பாதிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஜில்லா அர்பன் பாங்கியில் போதுமான அளவுக்கு அனுகூல மேற்பட்டிருப்பதாக இப்போது தோற்றுது. கூட்டுத்தொழில் கிளர்ச்சி பின்னும் பரவப் பரவ, அவ்வவ்விடங்களின் நிலைமைகளும் விர்த்தியாகலாம். ஆகவே, இன்னும் சில காலத்துக்கு இதராளுடைய மூலதனம் அவசியமாக இருக்கலாம்.

இரண்டு வருஷ டிபாஸிட்டுகளின்மேல் 100 க்கு 6 வீதமும் மற்றவைகளின்மேல் 100 க்கு, 3,4,5,5¼ வீதமும் இந்த பாங்கியார் இப்பொழுது வட்டி கொடுக்கிறார்கள். இந்தியன் பாங்கி (லிமிடெட்) க்கு நூற்றுக்கு 7 வீதமும் சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கு (லிமிடெட்) க்கு 100 க்கு 7¼ வீதமும் பாங்கியார் வட்டி கொடுக்கிறார்கள்.

வாங்கியிருக்கும் கடன் தொகைகளின்மேல் இந்த வருஷத்தில் கொடுத்திருப்பதும் கொடுக்கவேண்டியதாய்ச் சேர்ந்திருப்பதுமான வட்டி எவ்வளவென்றால்:—

	கொடுக்கப்பட்டது ரூ. அ. பை.	இன்னும் கொடுக்கப்படாமல் நின்றிருப்பது. ரூ. அ. பை.
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	463 2 0	564 12 8
கிராம சங்கங்களின் சேமநிதி உட்பட மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கப்பட்ட கடன் தொகைகள்.	426 0 0	879 15 10
சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்க்	6,232 9 4	978 8 10
இந்தியன் பாங்க் (லிமிடெட்)	7,542 9 9	2,736 8 11

6. வருஷ ஆரம்பத்திலே இந்த ஜில்லாவில் 42 சங்கங்கள் இருந்தன; அவைகள் இப்பொழுது இரட்டத்தனையாயிருக்கின்றன. மொத்தத்தில் 1,73,000 ரூபாய் மதிப்புள்ள 117 கடன்கள் இவ்வருஷத்தில் இதர சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டன; ஆகவே, சென்ற இரண்டு வருஷத்திலும் மொத்தத்தில் 3,73,675 ரூபாய் மதிப்புள்ள 240 கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் 9,850 ரூபாய் தொகையுள்ள 11 கடன்கள் முழுமையும் தீர்த்து விடப்பட்டன; கடனில் ஒரு பாகத்துக்குச் செல்லாக 14,085 ரூபாய் வாங்கிக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வருஷக்கடைசியில் 3,49,740 ரூபாய் மதிப்புள்ள 229 கடன்கள் ஷை சங்கங்களால் வாஸ்தவத்தில் பாக்கியாய் நின்றிருந்தன.

7. 6,450 ரூபாய் மெம்பர்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டது; இதில் கடனை முழுவதும் தீர்த்தோ அல்லது அதற்குச் சிறிதுமட்டில் செல்லுவைத்தோ 3600 ரூபாய் அவ்வருஷத்திலே திரும்பச் செலுத்திவிடப்பட்டது; வருஷக் கடைசியில் 2850 ரூபாய் மதிப்புள்ள 7 கடன்கள் மெம்பர்களிடத்திலிருந்து பாக்கியாய் நின்றிருந்தன.

இந்த பாங்கியிருந்து கடன் வாங்கின எந்த சங்கத்தாரும் இந்த வருஷத்தில் அசலைக் கொடுக்கத்தவறவில்லை; ஆனால், அரை வருஷத்திற்கொருதரம் வட்டி செலுத்தும் விஷயத்தில் மாத்திரம் சிற்சில சந்தர்ப்பங்களிலே காலதாமத மேற்பட்டது; அப்படிப்பட்ட விஷயங்களில் ஜில்லா அர்பன் பாங்கியாரால் விதித்து வசூல் செய்யப்பட்ட சொற்ப அபராதமானது மிகவும் பிரயோசனகரமாயிருந்தது. இந்தத் தலைப்பின்கீழ் ரூ. 23-8-0 வசூலாயிற்று.

8. கொடுக்கப்பட்ட கடன்களின்மேல் கிடைத்த வட்டியானது ரூ. 17,883-1-7 ஆயிற்று; வருஷக் கடைசியில் வசூலிக்கப்படாமல் நின்ற தொகை 5,785 ரூபாய் பிந்திய தொகையில் ரூ. 401-4-0 1910-ம் ஆம் ஜூன் மீ 30உ யன்றோ அல்லது அதற்கு முந்தியோ செலுத்தவேண்டியதாயிருந்தும், செலுத்தப்படாமலேயிருந்தது.

பாக்கியாயிருக்கும் சகல தொகைகளுக்காகவும் பாங்கியார் சரியான காலத்தில் ஞாபகக் கடிதங்கள் அனுப்புகிறார்கள்; பாக்கியை வசூல் செய்வதற்காகவும் பாங்கியார் தீவிரமான ஏற்பாடு செய்கிறார்கள்.

9. சிப்பந்தி செலவுகளுக்காக ரூ. 24 தான் பாங்கியாரால் செலவழிக்கப்பட்டது. போதுமான சிப்பந்தியை ஏற்படுத்தும் விஷயத்தை இன்னும் தள்ளிவைத்துக்கொண்டே போகக்கூடாது. போன தணிக்கை உத்தரவின் 3-வது பாராவிலுள்ள கடைசி வாக்கியத்தை முக்கியமாய்க் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளலாகிறது.

இந்த வருஷத்தில் சன்டின் ஜென்ட் செலவுகளுக்காக ரூ. 213-5-4 பிடித்திருக்கிறது. இது நியாயமான செலவேயாகும்; மேலும் பாங்கியின் நன்மையை உத்தேசிக்கும் விஷயத்தில் இந்த செலவு செய்யாமலிருந்திருக்க முடியாது. ஒவ்வொரு விஷயத்திலும் வௌச்சர் (ஆதாரவுச்சீட்டு) வாங்கப்பட்டிருக்கிறது. மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் வாங்குவதற்காக ரூ. 62-8-0 செலவு செய்யப்பட்டது.

10. பாங்கிக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 2882-1-0. இத்தொகையில், கால் பாகத்தை அதாவது ரூ.720-8-3யை சேமநிதிக்கு வரவாக வைத்து, 300 ரூபாயை 19-ம் நெ. சகாயச் சட்டத்தின்படி காரியதரிசிக்கு கௌரவ சன்மானமாகக் கொடுக்க வேண்டும். மிகுதியிலிருந்து, செலுத்தப்பட்டிருக்கிற பங்கு மூலதனத்தின் மேல் நூற்றுக்கு 9 வீதம் ஈவுத்தொகை கொடுக்கவேண்டுமென்று அத்தியட்சசபையார் சிபாரிசுசெய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த ஈவுத்தொகையை டைரெக்டர்களின் அத்தியட்சர்களின் தீர்மானங்களை யனுசரித்து அடியிற்கண்டபடி கொடுக்கலாம்:—

(a) 10,000 ரூபாயின் பேரில்-அதாவது 1909 ம் ஆம் ஜூன் மீ வீதம் 30உக்கு முன் வசூலான முதல் தவணைத்தொகையின்மேல் 12

(b) 3,600 ரூபாயின் பேரில்-அதாவது 1910-ம் ஆம் ஜனவரி மீ 31உக்குமுன் வசூலான இரண்டாம் தவணைத்தொகையின்மேல் ப

(c) 5,550 ரூபாயின் பேரில்-அதாவது 1910-ம் ஆம் பிப்ரவரி மீ 28உக்குமுன் வசூலான இரண்டாம் தவணைத்தொகையின்மேல்

(*d*) 750 ரூபாயின் பேரில்-அதாவது 1910-ம் ஆ மார்ச் மீ 31உ க்கு முன் வசூலான இரண்டாவது தவணைத் தொகையின் மேல் 3

(*e*) 160 ரூபாயின் பேரில்-அதாவது 1910-ம் ஆ ஏப்ரல் மீ 30உ க்கு முன் வசூலான இரண்டாவது தவணைத் தொகையின் மேல் 2

(*f*) 100 ரூபாயின் பேரில்-அதாவது 1910-ம் ஆ ஏப்ரல் மீ 30உ க்கு முன் வசூலான இரண்டாவது தவணைத் தொகையின் மேல் 2

(*g*) 3,850 ரூபாயின் பேரில்-அதாவது 1910-ம் ஆ மே மீ 31உ க்கு முன் வசூலான மூன்றாவது தவணைத் தொகையின் மேல் 1

மேலேகண்டபடி கணக்கிட்டால் ஈவுத்தொகையாகக் கொடுக்கவேண்டிய மொத்தமானது ரூ. 1,246-6-0 ஆகிறது. மிகுதி நிற்கிற ரூ. 615-2-9யையும் "ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதி" என்னும் தலைப்பின் கீழ் வரவாக வைத்து, போன வருஷத்தில் அந்த தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட தொகையாகிய ரூ. 536-10-7 யுடன் சேர்க்கலாம்.

11. ரிபோர்ட்டில்கண்ட வருஷத்திலே பாங்கியின் காரியங்கள் மொத்தத்தில் நன்றாகவே நிர்வகிக்கப்பட்டு வந்தன. அத்தியட்ச சபையார் இச்சங்கத்தின் விஷயத்தில் உண்மையாய் அக்கரையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; இந்த வருஷத்தில் அநேக விஷயங்களை அவர்கள் நேரில் பார்வையிட்டிருக்கிறார்கள். சங்கத்தின் ப்ரெஸிடென்டாகிய ம-ா-ா-ஸ்ரீ, பி.வி. நரசிம்மய்யரும் காரியதரிசியாகிய ம-ா-ாஸ்ரீ, டி. ஆதிநாராயண செட்டியாரும் மிகவும் நல்ல வேலைசெய்து வருகிறார்கள். இந்த பாங்கியை நன்றாய் நடத்திவரும் விஷயத்தில் டைரெக்டராகிய ம-ா-ாஸ்ரீ, என். வி. கிருஷ்ணய்ய செட்டியாரவர்கள் காட்டிவரும் உற்சாகத்தைப்பற்றியும் ஊக்கத்தைப்பற்றியும் பிரத்தியேகமாய்ச் சொல்லவேண்டியிருக்கிறது. இவ்வருஷத்தில் இரண்டு பொதுக் கூட்டங்களும், 18 கம்மிட்டி கூட்டங்களும் கூடின; பின் சொன்ன கூட்டங்களில் இரண்டு-கூட்டத்துக்கு எத்தனைபேர் வந்திருப்பது அவசியமோ அத்தனைபேர் வராததனால் நடக்கவில்லை. அனேகமாய்க் காகிதங்களை டைரெக்டர்களுக்கு அனுப்பி, அவைகளின் விஷயமாய் உத்தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

12. வரவு செலவையும், லாப நஷ்டத்தையும் பற்றிய ஸ்டேட்மெண்டும் கையிருப்புக்கணக்குச் சீட்டும் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.—

வரவுகள்.

	ரூ.	அ.	பை.
பங்குகளுக்காகக் கொடுக்கப்பட்ட பணம்	16,550	0	0
பிரவேச கட்டணங்கள்	66	0	0
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	5,620	0	0
இதர சங்கங்களிலிருந்து வாங்கிய கடன்கள்	6,900	0	0
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கிய கடன்கள் ...	1,88,818	4	1
மெம்பர்களால் திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன்கள் ...	3,600	0	0
சங்கங்களால் திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன்கள்... ...	23,935	0	0

600 009

	ரூ.	அ.	பை.
வரப்பெற்ற வட்டி	17,883	1	7
சரிக்கட்டுவதற்கான தலைப்புகள்	2,803	0	7
இதர வரும்படி	52	15	2
ஆரம்பக் கையிருப்பு	20	0	0
	3,16,248	5	0

செலவுகள்.

	ரூ.	அ.	பை.
வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்ட பங்கு மூலதனம்	1,650	0	0
வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்ட டிபாஸிட் தொகைகள் ...	500	0	0
சங்கங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் ...	42,850	0	0
மெம்பரல்லாதவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள்	19,300	0	0
மெம்பர்களுக்குக் கொடுத்த கடன்கள்	6,450	0	0
சங்கங்களுக்குக் கொடுத்த கடன்கள்	1,78,000	0	0
கொடுக்கப்பட்ட வட்டி	14,668	7	1
கொடுக்கப்பட்ட ஈவுத்தொகையும் ஊதியமும்	377	12	6
சரக்கு வாங்கினது	62	8	0
சிப்பந்தி செலவுகளும் கண்டின்ஜென்ட் செலவுகளும் ...	237	5	4
சரிக்கட்டுவதற்கான தலைப்புகள்	52,280	10	6
சேமநிதியுடன் சேர்க்கப்பட்டது	305	0	0
	3,11,681	15	5
முடிவுக் கையிருப்பு	4,566	5	7
	3,16,248	5	0

லாபம்.

	ரூ.	அ.	பை.
கிடைத்த வட்டி	20,097	11	10
இதர பாபத்துகள்	118	15	2
மொத்தம்.	20,216	11	0

நஷ்டம்.

	ரூ.	அ.	பை.
செலுத்தப்பட்ட வட்டியும் செலுத்தவேண்டிய வட்டியும் ...	17,069	8	8
சிப்பந்தி செலவுகளும் கண்டின்ஜென்ட் செலவுகளும் ...	237	5	4
சரக்கு மதிப்புக் குறைவது	27	12	0
மொத்தம்	17,334	10	0
நிகர லாபம்	2,882	1	0
	20,216	11	0

ஆஸ்தி—

	ரூ.	அ.	பை.
கையிலிருக்கும் ரொக்கம்	4,566	5	7
சேமநிதிக்கு மேற்பட்டு ஸென்ட்ரல் பாங்கியிலுள்ள ரொக்கம்	0	3	0
மதராஸ் பாங்கியில் வட்டிக்குப் போட்டிருப்பது	2	10	3
மெம்பர்களிடத்திலிருந்து வரவேண்டிய கடன்கள் ...	2,850	0	0
இதர சங்கங்களிடத்திலிருந்து வரவேண்டிய கடன்கள் ...	3,49,740	0	0
இன்னும் வசூலாகாமலிருக்கிற வட்டி	5,785	9	9
கையிலிருக்கும் சரக்கின் விலைமதிப்பு	35	0	0
மொத்தம்	3,62,979	12	7

கடன்—

	ரூ.	அ.	பை.
இதர சங்கங்களிலிருந்து வாங்கிய கடன்கள்	54,850	0	0
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கிய கடன்கள் ...	2,58,780	8	9
மேலேகண்ட இரண்டு பாபத்துகளிலும் கொடுக்கவேண்டிய வட்டி	4,595	11	7
பங்கு மூலதனம்	24,900	0	0
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	15,870	0	0
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகளுக்காகச் சேரவேண்டிய தாய் இன்னும் கொடுக்கப்படாமலிருக்கும் வட்டி ...	564	12	8
ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதி	536	10	7
மொத்தம்	3,60,097	11	7
லாபம்	2,882	1	0

முகாம் சேலம்,
1910-ம் ஜூலை மீ 30உ

ஏ. இராமானுஜாசாரி,
இன்ஸ்பெக்டர்.

தணிக்கை உத்தரவு.

சேலம் ஜில்லா அர்பன் பாங்கி (லிமிடெட்) என்னும் பாங்கியின் 1909-1910-ம் ஆண்டுக் கணக்குகள்—ஐக்கியநாணயச் சங்கங்களின் ஸீனியர் இன்ஸ்பெக்டராகிய ம-ா-ா-ஸ்ரீ, ஏ. இராமானுஜாசாரியாரவர்களால் தணிக்கை செய்யப்பட்டபடி ஜாரி செய்யப்படுகின்றன. இந்த உத்தரவு சம்பந்தமான வருஷத்தில் இந்த பாங்கிக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 2,882-1-0; இந்தத் தொகையை 19-ம் செ. சகாயச்சட்டத்தின்படி அடியிற்கண்ட பிரகாரம் பங்கிடவேண்டும்:—

	ரூ.	அ.	பை.
(a) சேமநிதி (கால் பங்கு)	720	8	3
(b) காரியதரிசியிடத்திலிருந்து ரசீது பெற்று அவருக்குக் கொடுக்கவேண்டிய கௌரவ சன்மானம் (ரூ. 300 க்கு மேற்படாமல் எட்டிலொருபங்கு)	300	0	0
(c) ஈவுத்தொகையாகக் கொடுக்கக்கூடிய தொகை ...	1,861	8	9
மொத்தம்.	2,882	1	0

2. அத்தியட்ச சபையார் நூற்றுக்கு 9 வீதம் ஈவுத்தொகை கொடுக்கும்படி தீர்மானித்திருப்பதாக ரெஜிஸ்ட்ராருக்குத் தெரிகிறது; இதற்கு ரூ. 1,246-6-0 வேண்டியிருக்கும்; பிறகு, மிகுதி நிற்கும் ரூ. 615-2-9யையும் ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதியுடன் சேர்த்துவிடவேண்டும்; அப்படி செய்வதனால் அந்த நிதியின் மொத்தமானது ரூ. 1,151-13-4 ஆகும்.

சேமநிதி.—ரூ. 720-5-3யை சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியில் வட்டிக்குப் போட்டு வைப்பதற்காக அனுப்பும்படி பாங்காருக்கு அறிவிக்கலாகிறது. அப்பொழுது சேமநிதியின் மொத்தவரவானது ரூ. 1,025-5-3 ஆகும்.

ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதி.—போன வருஷத்துக் கணக்குகளில் இந்த நிதிக்கு ரூ. 536-10-7 வரவு வைத்திருக்கிறது. இப்பொழுது பங்கிடப்பட்ட தொகையையும் சேர்த்தால் அந்த நிதியின் மொத்தமானது ரூ. 1151-13-4 ஆகும்.

3. சிப்பந்தியை உடனே பலப்படுத்த வேண்டும்.

4. இந்த வருஷத்தில் பாங்கியின் வேலை விசேஷமாய் மெச்சக்கூடியபடி நடந்திருக்கிறது. ப்ரெஸிடென்டும், காரியதரிசியும், இதர டைரெக்டர்களில் சிலரும் சிலாகிக்கத்தக்க விதமாய் அதிகமாக வேலை செய்திருக்கிறார்கள்; அதற்காக ரெஜிஸ்ட்ரார் தாம் நன்றி பாராட்டுவதாகத் தெரிவிக்கிறார். ஜில்லா சபை யொன்று பலிதமாய் நடத்தப்பட்டதே இந்த வருஷத்தில் கவனிக்கத்தக்க அதி முக்கியமான ஒரு அம்சம் ஆகும். ஒவ்வொரு கடனுக்கும் பூரணமான ஈடு வாங்கியிருக்கிறது; அந்த ஈடும் போதுமானதாய்; வேலையும் நல்ல வர்த்தக முறைப்படியே செய்து வரப்படுகிறது. டிபாஸிட் தொகைகள் முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமாயிருந்தும், இதரர்களுடைய மூலதனத்தை நீக்கிவிடத்தக்க அவ்வளவு திரவியம் இன்னும் சேரவில்லையென்பதுதான் ஒரு குறைவு. இம்மாதிரி பாங்கி ஒன்று இருக்கிறதென்னும் விஷயம் அநேகருக்குத் தெரியாமலிருப்பதும், இந்த பாங்கியார் அதில் போடும் பணத்துக்குத் தக்க ஈடு கொடுக்கிறார்களென்னும் விஷயம் ஜனங்கள் அறியாதிருப்பதுமே இதற்கு முக்கிய காரணங்களென்று நான் நினைக்கிறேன். காலக்கிரமத்தில் இந்த ஈட்டின் தன்மை இன்னதென்று ஜனங்களுக்குத் தெரியவந்தால், டிபாஸிட்டுகள் மேன்மேலும் சட்டப்பட்டுவருமென்பதில் சந்தேகமில்லை.

ஐக்கியநாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்,
சேமாக்கம், சென்னை, முகாம் பெருந்துறை,
1910-ம் ஜூலை மீ 30உ.

ஆர். ராமசந்திரராவ்,
ரெஜிஸ்ட்ரார்.

குளித்தலை ஜில்லா அர்பன்பாங்க், லிமிடெட்.

1909-1910-ம் ஆண்டிய தணிக்கை ரிபோர்ட் (சுருக்கம்).

திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள குளித்தலை ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட் என்னும் பாங்கியின் கணக்குகளைத் தணிக்கை செய்ததில் அடியிற்கண்ட ரிபோர்ட்டை வணக்கத்துடன் அனுப்புகிறேன்.

2. இந்த இராஜதானியில் ஏற்படுத்தப்பட்ட இம்மாதிரியான பாங்கிகளில் இது இரண்டாவது; சேலம் ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட், என்பதுதான் முதலாவது. இது 1909-ம் ஆண்டு பெப்ரவரி மீ 24உ யில் பிறந்த 520-ம் நம்பர் கவர்ன்மென்ட் உத்தரவின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டு 1909-ம் ஆண்டு ஏப்ரல் மீ 11உ வேலைசெய்யத் தொடங்கிற்று. ஆயினும், 1909-ம் ஆண்டு ஜூன் மீ 30உ பூர்த்தியாகிற கோ ஆபரேடிவ் வருஷம் முடிவாகிறவரையிலே இது சரியாய் வேலைசெய்யும் ஸ்திதியில் இல்லை; அதனால்தான் 1908-09-ம் வருஷத்து நிர்வாகத்தைப் பற்றிய ரிபோர்ட்டில் அதன் விவகாரங்களைச் சேர்க்கவில்லை. ஆகையால் இந்த ரிபோர்ட்டில் 1909-ம் ஆண்டு ஏப்ரல்மீ 11உ முதல் 1910-ம் ஆண்டு ஜூன் மீ 30உ வரையிலுள்ள 14 மாதங்கள் 20 நாள்களுக்கும் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களும் அடங்கியிருக்கின்றன.

3. தஞ்சாவூர் ஜில்லாவிலும் திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுமுள்ள கிராம நாணயச்சங்கங்களுக்கு வேண்டிய திரவிய சகாயம் செய்யும் பொருட்டே இந்த பாங்கி ஏற்படுத்தப்பட்டது; ஆனால் அதன் முதல் கூட்டத்திலேயே அதன் வேலைகள் திருச்சினாப்பள்ளி ஜில்லாவுக்குச் சம்பந்தப்பட்டமட்டில் தான் நடத்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

4. ரிபோர்டிலடங்கிய காலத்தில் 45 நபர்கள் பாங்கியில் மெம்பராகச் சேர்ந்தார்கள்; அவர்கள் 2-வது சகாயச் சட்டத்தின்படி மொத்தத்தில் ஜாரி செய்யப்பட்ட 100 பங்குகளில் 64 பங்குகளை எடுத்துக்கொண்டார்கள். மிகுதி பங்குகளைப் பகிர்ந்துகொடுப்பதற்காக இப்போது விண்ணப்பங்கள் வந்துகொண்டிருக்கின்றனவென்றும் இந்தப்பங்குகள் சீக்கிரத்திலேயே எடுத்துக்கொள்ளப்படுமென்று நிர்வாக சபையார் எதிர்பார்க்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

5. ஒவ்வொரு பங்கும் 500 ரூபாய் பெறுமானமுள்ளது; இவைகளின் தொகையைத் தவணைகளாக வசூல் செய்வதைக்குறித்து நிர்வாக

சபையார் யுக்தப்படி நடந்துகொள்ளலாம். ரிபோர்ட்டில் அடங்கிய காலத்தில் ஒவ்வொரு பங்குக்கும் 50 ரூபாய் வீதம் ஒரே தவணைத் தொகைதான் கொடுக்கும்படி கேட்கப்பட்டது; இது விஷயமாய்ப் பாங்கியார் மெம்பர்களிடத்திலிருந்து பங்கு மூலதனமாக ரூ. 3200-வசூல் செய்தார்கள். முப்பத்தாறு பங்குகள் இன்னும் எடுத்துக் கொள்ளப்படாமலே இருக்கின்றன.

6. இந்த பாங்கியார் இதுவரையில் உள்ளூரில் கிடைக்கும் மூலதனத்தையே நம்பியிருந்திருக்கிறார்கள்; ரெஜிஸ்ட்ராரின் முயற்சியினால் சென்னையிலுள்ள இந்தியன் பாங்கியிலிருந்து பணம் வாங்கும் சுதந்தரம் இந்த பாங்காருக்கு ஏற்பட்டிருந்தும் அதை உபயோகிப்பதற்கு அவர்களுக்குச் சமயம் ஏற்படவில்லை. அப்படியிருந்தும் இந்த பாங்கியார் கேட்டவர்களுக்குத் தாமதமில்லாமல் பணம் கொடுத்து வந்தார்கள். ரிபோர்டிலடங்கிய காலத்தில் ரூபாய்-75,350 மெம்பர்களிடத்திலிருந்து டிபாஸிட்டாகவும், ரூபாய் 4,000 லால்குடி கிராமநாணயச் சங்கத்திலிருந்தும், ரூ. 5,029-12-8 மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து டிபாஸிட்டாகவும் பாங்கியில் செலுத்தப்பட்டது; ஆகவே, பாங்கியின் கடன் மொத்தம் ரூ. 84,379-12-8 ஆகிறது. இதற்காக மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகளிலிருந்து அவர்களுக்கு ஷை வருஷத்தில் 19,250 ரூபாயும் மெம்பரல்லாதவர்களுக்கு 550-ரூபாயும் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆகவே, வருஷ முடிவில் மெம்பர்களின் டிபாஸிட்டுகள் விஷயமாய் பாங்கியார் கொடுக்கவேண்டிய தொகையானது ரூ. 5,61,000 ஆகவும், ஐக்கிய நாணயச் சங்கங்களிலிருந்து வாங்கிய கடனுக்காக கொடுக்கவேண்டிய தொகையானது ரூ. 4,000 ஆகவும், மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகள் விஷயமாய்க் கொடுக்கவேண்டிய தொகையானது ரூபாய் 4479-12-8 ஆகவும் நின்றது. இதுதக் கடைசி பாபத்தில், ஜில்லாவிலுள்ள கிராமநாணயச் சங்கங்களின் சேமநிதி டிபாஸிட்டாக ரூ. 1329-12-8-அடங்கியிருக்கிறது.

7. பாங்கியானது டிபாஸிட்டுகளின்மேலும் இதர கடன் தொகைகளின்மேலும் நூற்றுக்கு 3 முதல் 7 வரையில் பற்பல வீதங்கள்படி வட்டி கொடுக்கிறது. வாஸ்தவமாய் வட்டியாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 162-8-0; வருஷத்தின் முடிவில் பாங்கி கொடுக்கவேண்டியதாய்ப் பாக்கி நின்ற வட்டி ரூ. 1395-8-0.

8. இந்த வருஷத்தில் இந்த ஜில்லாவிலே நடத்தப்பட்டுவரும் சங்கங்களுக்கு ரூ. 67,400-0-0 கடனாகக் கொடுக்கப்பட்டது. கிராம நாணய சங்கங்கள் கேட்கும் தொகைகளைக் கொடுப்பதில் ஆரம்பத்திலே சிறிது கஷ்டமிருந்ததே யொழிய பிறகு எவ்வித விசேஷ கஷ்டமும் ஏற்படவில்லை; இது சந்தோஷப்படத்தக்க ஓர் விஷயமே. ரூபாய் 30,000 இந்த பாங்கியில் டிபாஸிட்டாகக் கட்டியிருக்கிற ப்ரெஸிடெண்ட் ம-ா-ா-ஸ்ரீ ஆர். கே. பிரசன்ன வெங்கடராம் அவர்களின் சிரத்தை மிகவும் சிலாகிக்கத்தக்கது. நிர்வாக

சபையார் தாங்கள் இனிமேல் நடத்தவேண்டிய விவகாரங்களுக்குப் போதுமான மூலதனத்தை அந்த ஜில்லாவிலேயே வசூல்செய்யக்கூடுமென்று எண்ணுகிறார்கள்; ஆயினும் மற்றொரு பாங்கியில் பணம் வாங்குவதற்காக கணக்கேற்படுத்திக் கொள்வது உசிதமாகும்; அப்படி செய்தால் கேட்கப்படும் கடன்களை இந்த பாங்கியார் துரிதமாகக் கொடுக்கக்கூடும் என்பதல்லாமல், வியாபாரம் மந்தமாயிருக்குங்காலத்தில் டிபாஸிட்டுகள் கொண்டுவந்து கட்டப்பட்டால், அவைகளை வேண்டாமென்று தள்ளிவிடாமலிருப்பதும் ஸாத்யமாகும்.

9. இந்த வருஷத்தில் பாங்கியால் கொடுக்கப்பட்ட கடனில் ரூ. 180 அதற்குத் திருப்பிச் செலுத்திவிடப்பட்டது. கோ ஆபரேடிவ் வருஷத்தின் முடிவுக்கு முன் வேறெந்த தொகையும் பாக்கியாகவில்லை. வருஷக் கடைசியில் சங்கங்களிலிருந்து பாக்கியாய் நின்ற தொகைகளின் மொத்தமானது ரூ. 67,050.

10. கிராம நாணயச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட சகல கடன்களின்மேலும் 100-க்கு வருஷத்துக்கு 7½-வீதம் வட்டி விதிக்கப்படுகிறது. இந்த வருஷத்தில் வட்டி விஷயமாகச் சங்கங்களிலிருந்து ரூ 1,357-10-0 வசூலிக்கப்பட்டது; பின்னும் அவைகளிடத்திலிருந்து பாக்கியாயிருந்த ரூ. 1,192-8-0 வருஷக்கடைசியில் வசூல் செய்யப்படாமலிருந்து. பிந்திய தொகையில், ஐந்து கிராம சங்கங்கள் அசலுக்காகச் செலுத்தவேண்டிய தவணைத் தொகைகளை நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் செலுத்தாததனால் பாக்கியாய் நின்ற ரூ. 250-12-0ம் அடங்கியிருக்கிறது.

11. இம்மாதிரியே இந்த வருஷத்திலும் சிலர் பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு பாங்கியார் வெறும் ஞாபகக் கடிதங்கள் மாத்திரமே அனுப்பினார்கள். இது போதாது. சேலம் ஜில்லா அர்பன் பாங்கி லிமிடெட் என்னும் பாங்கியிலும் சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி லிமிடெட் என்னும் பாங்கியிலும் இப்போது நடந்து வருவதைப்போல், நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் செலுத்தப்படாமலிருக்கும் வட்டித்தவணைத் தொகைகளின்மேல் அபராதம் விதிக்கும் வழக்கத்தை இந்த பாங்கியிலும் அனுஷ்டிக்கவேண்டும்; இப்படிச் செய்தால் தொகை செலுத்தத் தவறுகிறவர்கள் தொகைகளைச் செலுத்த வேண்டிய காலத்தில் தவறாமல் செலுத்திவருவதில் முன்னிலும் அதிக ஜாக்கிரதையாயிருப்பார்கள்.

12. இந்த பாங்கியில் இப்பொழுது எவ்வித சிப்பந்தியுமில்லை. காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆர். டி. வரதய்யங்கார் அவர்கள் தம்முடைய பல அலுவல்களின் இடையில் இந்த பாங்கியின் கணக்குகளையும் வைத்து வந்திருக்கிறார்; அப்படி அவைகளைச் சரியாயும் சீராயும் அவர் வைத்து வந்திருப்பது மிகவும் சிலாகிக்கத்தக்க விஷயமாகும். தொழில் அபிவிருத்தி யாவதற்கேற்றபடி பாங்கியின் வேலை சரிவர நடந்தேறும் பொருட்டும், அந்த வேலையைக் காரியதரிசியானவர் திறமையுடன் மேற்பார்வையிடக் கூடியவராயிருக்கும்பொருட்டும் தகுந்த குமாஸ்தா ஒருவரை நியமிப்பது மிகவும் அவசியம்.

13. இந்த வருஷத்தில் அடியிற்கண்ட விவரப்படி ரூ. 41-14-0 கன்டின்ஜென்ட் செலவுக்காக உபயோகிக்கப்பட்டது; இந்தச் செலவு எவ்வளவு குறைந்திருக்கக் கூடுமோ அவ்வளவு குறைந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

	ரூ.	அ.	பை
கணக்குப் புஸ்தகங்களின் விலை	14	15	0
தபால் செலவுகள்	9	7	0
புல்லடீன் செலவுகள்	1	9	0
கடுதாசி, பேனா முதலியவைகளுக்காகவும் அச்சிடுவதற்காகவும்	8	3	6
உள்ளூரில் டிபாஸிட்டர்களைச் சேர்ப்பதற்காக காரியதரிசிக்கு பிரயாணவர்த்தனை. ...	7	11	6
	41	14	0

14. வருஷ முடிவில் நிகர லாபம் ரூ. 1283-6-0. இந்த வருஷத்தில் நடத்தப்பட்ட விவகாரங்கள் மிகவும் சொற்பமாயிருப்பதை உத்தேசித்தால், கிடைத்திருக்கும் லாபம் அதிகமே. இந்தத் தொகையில் கால் பங்கை அதாவது ரூ. 320-13-6-யை 17-ம் நம்பர் சகாயச் சட்டத்தின்படி சேம நிதியுடன் சேர்க்கவேண்டும்; அதில் எட்டில் ஒரு பங்காகிய ரூ. 160-6-9 யைக் காரியதரிசிக்குக் கௌரவசன்மானமாகக் கொடுக்கவேண்டும். மிகுதியிருக்கும் ரூ. 802-1-9-யை மெம்பர்களுக்கு ஊதியமாய்ப் பங்கிடுவதற்காக உபயோகப்படுத்தலாம். செலுத்தப்பட்டிருக்கும் பங்கு மூலதனத்தின்மேல் நிர்வாக சபையார் 100 க்கு 9 வீதம் ஈவுத்தொகை நிர்ணயித்து அதை இந்தத் தொகையிலிருந்து கொடுத்து, மிகுதி யிருப்பதை "ஈவுத் தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதி" என்னும் விசேஷ தலைப்பின்கீழ் மாற்றுவது யுக்தமாகும். இப்படி செய்வது சரியென்று தோற்றினால் அடியிற்கண்ட வீதத்தின்படி பங்கிடு செய்யலாம்.

30-4-1909 க்கு முன் செலுத்தப்பட்ட 350 ரூபாயின்பேரில்	பங்கு ஒன்றுக்கு 14	பாகம்
15-5-1909 க்கு முன் செலுத்தப்பட்ட 1,250 ரூபாயின்பேரில்	,, 13½	,,
30-5-1909 க்கு முன் செலுத்தப்பட்ட 650 ரூபாயின்பேரில்	,, 13	,,
15-6-1909 க்கு முன் செலுத்தப்பட்ட 350 ரூபாயின்பேரில்	,, 12½	,,
30-6-1909 க்கு முன் செலுத்தப்பட்ட 50 ரூபாயினபேரில்	,, 12	,,

15-7-1909 க்கு முன் செலுத்தப்பட்ட 100 ரூபா
யின்பேரில் ... ... பங்கு ஒன்றுக்கு 11½ பாகம்

31-7-1909 க்கு முன் செலுத்தப்பட்ட 150 ரூபா
யின்பேரில் ... ... „ 11 „

31-8-1909 க்கு முன் செலுத்தப்பட்ட 100 ரூபா
யின்பேரில் ... ... „ 10 „

31-3-1910 க்கு முன் செலுத்தப்பட்ட 50 ரூபா
யின்பேரில் ... ... „ 3 „

15-5-1910 க்கு முன் செலுத்தப்பட்ட 100 ரூபா
யின்பேரில் ... ... „ ½ „

15-6-1910 க்கு முன் செலுத்தப்பட்ட 50 ரூபா
யின்பேரில் ... ... „ ½ „

மேலே கண்டபடி கணக்கிட்டால் 786½ பாகங்களுக்கும் நூற்றுக்கு வருஷத்துக்கு 9 வீதம் அல்லது பாகமொன்றுக்கு 6 அணா வீதம் மெம்பர்களுக்குப் பங்கிடுவதற்காக வேண்டிய மொத்தத் தொகையானது ரூ. 294-15-0 ஆகும். மிகுதியை ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதிக்காகப் பிரத்தியேகமாய் வைக்கவேண்டும்.

15. நிர்வாக சபையார் இப்பொழுதிருக்கிறபடி பரிபாலன சம்பந்தமான எந்த வேலையையும் எடுத்துக்கொள்ளக் கூடியவர்களாயில்லை; ரெஜிஸ்ட்ராரும் அச்சபையாருக்கு இன்னும் அவ்விதம் அதிகாரமெதுவும் கொடுக்கவில்லை. இந்த வருஷத்தில் இரண்டு பொதுக்கூட்டங்களும் இரண்டு கம்மிட்டி கூட்டங்களும் தான் நடந்தன; இது திருப்திகரமான விஷயமல்ல. நிர்வாக சபையைச் சேர்ந்த மெம்பர்கள் ஜில்லாவில் பற்பல பாகங்களிலிருப்பதால் அவர்களை ஒன்று சேர்ப்பது கஷ்டமாயிருக்கிறதென்பதே இதற்குக் காரணமாகச் சொல்லுகிறார்கள். ஆயினும் டைரெக்டர்களின் சங்கியையை அதிகப்படுத்தியும் உள்ளூரிலிருப்பவர்களையே அதிகமாய் டைரெக்டர்களாக நியமித்தும் இந்தக் குறைவுக்குப் பரிகாரம் தேடுவது அவசியம்.

16. ப்ரெஸிடென்டாகிய ம-ா-ா-ஸ்ரீ. ஆர். கே. பிரசன்ன வெங்கடராவ் அவர்களும் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆர். டி. வரதய்யங்கார் அவர்களும் பாங்கியின் காரியங்களை நடத்துவதிலும் அதன் அபிவிருத்தியிலும் ஊக்கங்காட்டி மிகுந்தசிரத்தை யெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

வரவு செலவைப் பற்றிய ஸ்டேட்மென்ட்.

வரவுகள்.

	ரூ.	அ.	பை.
பங்குக்காகச்செலுத்தப்பட்ட பணம்	3,200	0	0
பிரவேச கட்டணம்	320	0	0
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	75,350	0	0
இதர சங்கங்களிலிருந்து வாங்கிய கடன்கள் ...	4,000	0	0
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கிய கடன்கள்	5,029	12	8
சங்கங்களால் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் ...	350	0	0
வரப்பெற்ற வட்டி	1,370	10	0
இதர வரும்படி	0	2	0
மொத்த வரவுகள் ...	89,620	8	8
ஆரம்பக் கையிருப்பு ...	ஒன்றுமில்லை.		
பெரு மொத்தம்	89,620	8	8

செலவுகள்.

	ரூ.	அ.	பை.
வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்ட டிபாஸிட்தொகைகள்	19,250	0	0
சங்கங்களுக்குக் கொடுத்த கடன்கள்	67,400	0	0
மெம்பரல்லாதவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள்	550	0	0
கடன்களின்மேலும் டிபாஸிட்டுகளின்மேலும் கொடுக்கப்பட்ட வட்டி	162	8	0
சிப்பந்தி செலவுகளும் கன்டின்ஜென்ட் செலவுகளும்	41	14	0
	87,404	6	0
முடிவுக் கையிருப்பு ...	2,216	2	8
	89,620	8	8

லாப நஷ்டத்தைப் பற்றிய ஸ்டேட்மென்ட்.

லாபம்.

கைத்த வட்டி	2,563	2	0
இதர பாபத்துகள்	320	2	0
	2,883	4	0

நஷ்டம்.

செலுத்தப்பட்ட வட்டியும் செலுத்தவேண்டிய வட்டியும்	1,558	0	0
செலுத்தப்பட்டதும் செலுத்தவேண்டியதுமான சிப்பந்திச் செலவுகளும் கன்டின்ஜென்ட் செலவுகளும்	41	14	0
	1,599	14	0
நிகர லாபத்தையும் சேர்க்க	1,283	6	0

ஆஸ்தியையும் கடனையும் பற்றிய ஸ்டேட்மெண்ட்.

ஆஸ்தி.

கையிலிருக்கும் ரொக்கம்	2,216	2	8
சங்கங்களிலிருந்து பாக்கியாயிருக்கும் கடன்கள் ...	67,050	0	0
சங்கங்களுக்குக் கொடுத்திருக்கும் கடன்களின்மேல் பாக்கியாயிருக்கும் வட்டி	1,192	8	0
மொத்தம்.	70,458	10	8

கடன்.

இதர சங்கங்களிலிருந்து வாங்கிய கடன்கள் ...	4,000	0	0
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கிய கடன்கள்	4,479	12	8
ஷை கடன்களின்மேல் பாக்கியாயிருக்கும் வட்டி ...	128	5	4
பங்கு மூலதனம்...	3,200	0	0
மெம்பர்களின் டிபாஸிட் தொகைகள்	56,100	0	0
ஷை தொகைகளின்மேல் பாக்கியாயிருக்கும் வட்டி...	1,267	2	8
	69,175	4	8
நிகர லாபம்	1,283	6	0

முகாம் குளித்தலை,
1910-ம் ஆ ஜூலை மீ 17உ.

(ஒப்பம்) ஏ. ராமானுஜாசாரி,
இன்ஸ்பெக்டர்.

தணிக்கை உத்தரவு.

திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள 171-ம் நம்பர் குளித்தலை ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட், என்னும் பாங்கியின், 1909-ம் ஆ ஏப்ரல் மீ 11உ முதல் 1910-ம் ஆ ஜூன் மீ 30உ வரையிலுள்ள காலத்துக்குரிய கணக்குகள்-ஐக்கியநாணயச் சங்கங்களின் ஸீனியர் இன்ஸ்க்டராகிய ம-ா-ா ஸ்ரீ ஏ. ராமானுஜாசாரியார், பி. ஏ, அவர்களால் தணிக்கை செய்யப்பட்டபடி ஜாரி செய்யப்படுகின்றன. இந்த உத்தரவுக்குச் சம்பந்தப்பட்ட காலத்தில் பாங்கிக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 1283-6-0 ; 17-ம் நம்பர் சகாயச்சட்டத்தின்படி ரூ 320-13-6 சேமநிதிக்குச் சேரவேண்டியதாகிறது. அதைச் சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்க், லிமிடெட் என்னும் பாங்கியில் வட்டிக்குப் போட்டு வைப்பதற்காக அனுப்பும்படி பாங்காருக்குச் சொல்லலாகிறது. 17-ம் நம்பர் சகாயச் சட்டத்தின்படி ரூ. 160-6-9 காரியதரிசிக்குச் சேரவேண்டியதாகிறது ; அதை அவருடைய ரசீது பெற்றதன்மேல் அவருக்குக் கொடுக்கவேண்டும். மிகுதியிருக்கும் ரூ. 802-1-9- யை மெம்பர்களுக்குள் ஊதியமாகப் பங்கிடுவதற்கு உபயோகப்படுத்தலாம்.

2. இந்த பாங்கிக்கு ஆரம்பத்தில் நேரிட்ட கஷ்டங்களைப்பற்றியோசித்தால், இது மிகவும் நன்றாகவே வேலை நடத்தி வந்திருக்கிறதென்று ரெஜிஸ்ட்ரார் அபிப்பிராயப்படுகிறார். கடைசிவரையில் இந்த பாங்காருக்கு உள்ளூரிலேயே மூலதனம் கிடைத்து வந்ததென்பது விசேஷமாய் சந்தோஷிக்கத்தக்க ஒரு விஷயமாகும். ஆயினும், வேலை தீவிரமாய் நடந்தேறும் பொருட்டு வேறொரு பாங்கியில் பணம் வாங்குவதற்காகக் கணக்கு ஏற்படுத்திக்கொள்வது உசிதமாகும் ; இந்த விஷயத்துக்காகப் பாங்கியார் ஏற்பாடு செய்யவேண்டும். டைரெக்டர்களின் சங்கியையை அதிகப்படுத்தவேண்டும். இன்னும் எடுத்துக் கொள்ளப்படாமலிருக்கிற 36 பங்குகளைப் பகிர்ந்து கொடுப்பதற்காக முயற்சிசெய்ய வேண்டும். போதுமான சிப்பந்திகளை வைத்துக்கொள்ள வேண்டும்.

3. ப்ரெஸிடென்டாகிய ம-ா-ா-ஸ்ரீ பிரஸன்ன வெங்கடராவ் அவர்களும் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ வரதய்யங்கார் அவர்களும் இந்த பாங்கியின் வேலையை இவ்வளவு நன்றாய் நடத்திவந்தது மிகவும் மெச்சத்தக்கதே.

ஐக்கிய நாணயச்சங்கங்களின்
ரெஜிஸ்ட்ரார் ஆபிஸ்,
சேப்பாக்கம், சென்னை
1910ம் ஆ ஜூலை மீ 31உ.

(ஒப்பம்) ஆர். ராமசந்திர ராவ்,
ரெஜிஸ்ட்ரார்.

வெஸ்ட்ரல் அக்ரிகல்சுரல் கம்மிட்டி

சென்னை.

———.-:———

சில விவாசாயக்குறிப்புகள்.

விவசாய டிபார்ட்மெண்ட் தென் இலாகா டெப்டி டைரெக்டர் மெஸ்தர் சாம்சன் துரையவர்களால் எழுதப்பட்ட இக்குறிப்புகள் இந்த இராஜதானியிலுள்ள எல்லா விவசாயிகளும் தெரிந்து அனுஷ்டிக்கும்பொருட்டு எழுதப்பட்டிருக்கிறது. இவைகள் முக்கியமாய்த் தென் ஜில்லாக்களிலும் மேல்சமுத்திரக்கரை ஜில்லாக்களிலுமுள்ள விவசாயிகள் கையாடி அனுஷ்டிக்கத்தக்கவை:—

நன்செய் நிலங்கள்.

I.—நெல்.

1. நாற்றங்காலில் நாற்றைக் கலக்கிவிதைக்கவேண்டும். ஒரு சென்ட் விஸ்தீர்ணத்தில் ஒரு பட்டணம்படி விதையைத் தெளித்தால் போதுமானது. நாற்று வீரியமாய்ச் செழித்துவளரும்படி, நாற்றங்கால்களில் வேண்டும் உரம் போடவேண்டும்.

2. நாற்றை ஒவ்வொன்றாய்ப் பிடுங்கி நடவேண்டும். இந்த வேலையை செய்யும்போதுதானே, நேரில் மேல்பார்வை பார்க்கவேண்டும் அல்லது வேலையாரம்பத்திலாவது தான் கிட்டவிருந்து தான் சொல்லும்படி நடச்செய்யவேண்டும். இக்காரியத்தை செய்யச்சொல்வதிலாவது தான் வீட்டிலிருந்துகொண்டு தன் ஏஜன்டுகளை அல்லது நடவுநடத்தும் ஆட்களை அப்படி நடவேண்டுமென்று வாய்மொழி உத்தரவாய்ச் செய்யச்சொல்வதிலாவது யாதொரு பிரயோஜனமுமில்லை. ஒற்றை நாற்றுநடவு விஷயத்தைப்பற்றி விவசாய டிபார்ட்மெண்டார் அச்சிட்டிருக்கும் பத்திரிகைகளை வேண்டியவர்கள் இனாமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. நன்றாய்க் கிளைத்துப்பயிராயிருக்கும் செடிகளைக் குறிப்பிட்டு அவைகளிலிருந்து நல்ல கதிர்களைப் பொறுக்கி தனியாயடித்து சுத்தஞ்செய்து அடுத்த வருஷத்திய வெள்ளாமைக்கு வேண்டிய விதையாகப் பத்திரப்படுத்திவைக்க வேண்டும்.

4. நன்செய் நிலங்களில் நெல் அறுவடையான்பின் நெல்பயிருக்கு உரமாகும்படியான பசுந்தாள் பயிர்களை விதைத்து உண்டாக்கி நெல் நடுமுன்

எருவாக உழுதுவிடவேண்டும். இப்படி பசுந்தாள் எரு பயிரிடவேண்டுமானால், அந்நிலங்களில் மாட்டழிவில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இது பின்குறிப்பிட்ட பிரகாரம் செய்துகொள்ளலாம்:—

(1) நன்செய் நிலங்கள் வைத்திருப்பவர்கள் ஒன்றுசேர்ந்து அவர்களுக்கு வேண்டிய பசுந்தாள் எருவை ஓர் அடக்கமான இடத்தில் பயிர்செய்தால் அதை எளிதில் மாட்டழிவில்லாமல் காப்பாற்றக்கூடும்.

(2) கட்புபோன்ற தண்ணீர்தட்டு தாங்கக்கூடிய புன்செய் தானியப் பயிரைப் பசுந்தாள் எருப்பயிருடன் கலந்து பயிர்செய்தால் மாடு மேய்ப்பவர்கள் அப்பேர்ப்பட்ட இடங்களில் மாடுகள் மேய்த்தல் தடைப்படும்.

(3) மாடுகளை தொழுவில்கட்டி தீவனம் போடுவதற்கென்று தீவனப்பயிர்களைப் பயிர்செய்வதால் இது தடைப்படும். நெல் அறுவடையாகிறதற்கு இரண்டு மூன்று நாளைக்குமுன் நெல்பயிரிருக்கும்போதே சடம்புவிதையை விதைத்தால் நெல் அறுவடைக்குப்பின் பயிராகி சுமார் இரண்டுமாத காலத்தில் நல்ல மாசூல் கிடைக்கும். இதை அறுத்துக் காயவைத்து படப்படைத்து வைத்துக்கொண்டு வைக்கோலுடன் சேர்த்து மாடுகளுக்குத் தீவனமாய் உபயோகிக்கலாம்.

பசுந்தாள் எருப்பயிர்களை ஒரு ஏக்கா விஸ்தீர்ணத்திற்குக் குறையாத இடத்தில் விதைத்துப் பரீட்சிக்கவேண்டும். இப்படிச் செய்யாமல் கொஞ்ச விஸ்தீர்ணத்தில் பயிர்செய்தால் அது பூச்சிகளாலும் நோய்நொடிகளாலும் பீடிக்கப்படும். இந்தப்பயிர் சொல்பமாய் சென்டுகணக்கான விஸ்தீர்ணத்தில் பயிர்செய்யும்போது பூச்சிகளால் அழிமதிசெய்யப்படுவதைப்போல் ஜாஸ்தி பரப்பான விஸ்தீர்ணத்தில் பயிரிடும்போது அழிமதியாவதில்லை. அந்தந்தப் பிரதேசங்களுக்கு லாயக்கில்லாத பசுந்தாள் எருப்பயிர்களைப் பயிர்செய்தால் அவைகள் பலிதம் கொடுக்கமாட்டாது. நெல்பயிர் அறுவடைசெய்த காலமுதல் மறுபடி அதே இடத்தில் நெல்பயிர்செய்ய ஐந்துமாத சாவகாசமிருக்கும் இடங்களில் பசுந்தாள் எருவுக்காக சடம்புப்பயிர் செய்வதால் பிரயோஜனமிருக்கமாட்டாது. ஏனென்றால் சடம்புப்பயிர் சுமார் மூன்றுமாத காலத்திற்குள் முற்றிக் காய்ந்துபோகும். இதேபிரகாரம் நெல்நடுவைக்கு இரண்டு மாத சாவகாசமிருக்கும்போது அங்கே கொளுஞ்சி (காட்டவுரி)ப்பயிரை விதைப்பதிலும் பிரயோஜனமில்லை. ஏனென்றால் இந்த இரண்டு மாதத்தில் கொளுஞ்சிப்பயிர் சிறு முளைப்பயிர்களைப்போலிருக்குமேதவிர பெரிதாக வளர்ந்திராது. தஞ்சாவூர் ஜில்லாவின் காவேரிதீர நிலங்களில் நீர்வடிவுக்கிடமில்லாமல் சதுசதுப்பாயுள்ள இடங்களில் சடம்புப்பயிரை பசுந்தாளெருவுக்காகப் பயிர்செய்வதில் பிரயோஜனமில்லை. ஆனால் அப்பேர்ப்பட்ட இடங்களில் தக்கைப்பூண்டை விதைத்தால் அது அவ்விடங்களில் சரியானபடி முளைத்துப் பயிராகும்.

நெல்பயிர் நடுகை செய்வதற்குக் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன் பசுந்தாள் எருப்பயிர்களை நிலத்துக்குள் உழுது மட்கவைக்க வேண்டும். தஞ்சாவூர் ஜில்லாவிற் சில பாகங்களில் வெகுவாய் நன்செய்ப் பயிருக்கு எருவாவது அல்லது பசுந்தாள் எருவாவது அல்லது இலைத்தழைகளாவது உரமாகப் போட்டுப் பயிர்செய்யாத இடங்களிலிருக்கும் கிருஷிகருக்கு இந்த யோசனை சொல்லப்படுகிறதே தவிர மற்றவர்களுக்கு இது அநேகமாய்த் தெரிந்தவிஷயம். பசுந்தாள் எருப்பயிர்செய்யும் காலத்திற்குமுன் பெய்யும் மழைப்பதத்தை வீணாக்காமல் நிலங்களை முன்கூட்டி உழுது பண்படுத்திவைத்து பின்னால் காலமழைகள் பெய்தவுடன் பசுந்தாள் பயிர்விதைக்க நிலத்தைத் தயார் செய்து வைக்கவேண்டும். பசுந்தாள் பயிர்செய்ய முயன்றவர்களில் அநேகர் அப்பயிர்விதைக்கும் நாள்வரை அங்கே போவதில்லை. இப்படிச் செய்வதால் விதைக்கும் நிலம் போதுமானபடி முன்னமே உழுது பக்குவப்படாமல் அதில் விதைக்கும் விதை சரியானபடி பயிராக இடமிருக்கிறதில்லை. மேலும், இந்த விதை விதைக்கும் காலத்தில் மற்ற புன்செய்ப் பயிர்கள் விதைக்கவேண்டிய காலமாகிறபடியாலும் இந்தப்பசுந்தாள் எருப்பயிருக்குத் தக்க பருவம்செய்ய இடமிராமல் பயிர் ஓங்கிவளர்கிறதற்கு இடமில்லாமல் போகிறது.

விவசாய டிபார்ட்மென்டார் பசுந்தாள் எருப்பயிர்களைக்குறித்து ஒரு பத்திரிகை பிரசுரித்திருக்கிறார்கள். விவசாயப்பஞ்சாங்கத்திலும் மேற்படி விஷயத்தைக்குறித்து வியாசங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பசுந்தாள் பயிர்களை சரியானபடி பயிரிட்டு தெரிந்துகொண்ட மெம்பர்கள், அந்தந்த விவசாயச்சங்கங்களுக்குத் தெரிவிப்பார்களாகில் அந்தச்சங்கத்துக்காரியதரிசி, விவசாய டிபார்ட்மென்டாருடனாவது மற்ற வியாபாரிகளுடனாவது ஒப்பந்தம் பேசி விதைகளைச் சேகரித்துவைக்க ஏற்பாடுகள் செய்வார்கள்.

11.—கரும்பு.

விவசாயச்சங்கங்களின் மெம்பர்களும் மற்றும் அனேகரும் அடிக்கடி விவசாய டிபார்ட்மென்டாருக்கு விதைக்கணுக்கள் அனுப்பும்படி மனு செய்துகொள்ளும் பயிர்களில் இது ஒன்று. இப்படி அவர்கள் மனுசெய்துகொள்ளும்போதே அதன் செலவு என்னவாகுமென்று அவர்களுக்கு நிதானம் தெரிகிறதில்லை. கரும்புப்பயிர்செய்ய ஜாஸ்தி விடுமுதல் வேண்டும். அதாவது ஜாஸ்தி செலவுபிடிக்கும். கரும்புப்பயிர் பூசாரத்தை ரொம்பவும் கிரகிக்கிற குணமுடையதாகையால் அதற்கு ஜாஸ்தி எரு தேவை. இந்தப்பயிரை சரியானபடி சாகுபடி செய்யத்தெரிந்த கிருஷிகர், ஒரு ஏக்கர் கரும்புப்பயிருக்கு சுமார் ரூபாய் 50 முதல் 70 ரூபாய் கிரயமுள்ள முத்துக்கொட்டை புண்ணாக்காவது நிலக்கடலை புண்ணாக்காவது வாங்கி எருவாக உபயோகிக்கிறார்கள். இந்தப்பயிருக்கு சரியான நீர்வடிவும், கவனத்துடன் நீர்ப்பாய்ச்சலும் செய்ய வேண்டியதவசியம். அநேக கிருஷிகர் கரும்புச் சாகுபடி செய்யும்போது இவ்விஷயங்களைக் கவனிக்காததால், அவர்களுடைய பயிர் ஏங்கி கறுகறுத்து

வீரியமாய் வளராமல் வெளிறிப்போய் நோய்தாக்கியதுபோல் மஞ்சள் நிறமடைகிறது. அநேகமாய் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அப்பயிர் செய்திருக்குமிடத்தில் நீர்வடிவு சரியானபடி இல்லாமலிருப்பதாயும், பயிரில் கட்டியிருக்கும் தண்ணீரை வெளிப்படுத்த சாதனங்கள் சரியானபடி செய்யாமலுமிருக்கக் காண்பதுடன் சாதாரணமாய் அப்பேர்ப்பட்ட பயிருக்கு அடிக்கடி ஜாஸ்தி ஜலம் பாய்ச்சுவதாயும் தெரியவரும். இப்படிப் பயிர் செய்பவர்கள் அந்தப் பயிருக்குப் போதுமானபடி ஆகாரமில்லாமலிருக்கும்படி செய்கிறார்கள். ஏனென்றால் நீர் வடிவில்லா நிலங்களில் கரும்புக்கு ஜாஸ்தி தண்ணீர் நிலத்தில் கட்டியிருப்பதால், அதன வேர்கள் கீழே போக மார்க்கமில்லாமல், மேல்பரப்பிலேயே வந்துவிடுகிறது. நீர்வடிவுள்ள இடங்களிலோ வேர்கள் கீழ்நோக்கிச் சென்று ஜாஸ்தி இடத்திலிருக்கும் ஆகாரத்தை வேர்கள் அருந்த இடமுண்டு.

கரும்பு சாகுபடி செய்யும் நிலம் நீர்வடிவுள்ளதாயும் சரியானபடி எருப்போட்டதாயுமிருப்பதுடன் அதில் நட்ட கரும்புப் பயிருக்கு வேண்டும் போது ஜலம் பாய்ச்சப்பட்டுவந்தால் அதில் தக்கப்படி லாபம் கிடைக்கும்.

தோட்டக்கால் நிலங்கள்.

1. முகடுகளிலும் கால்களிலும் கேழ்வரகு பயிர் செய்தல்.—கிணற்றிறவையில் மழை காலங்களில் பயிர் செய்யும் கேழ்வரகுப் பயிரை முகடுகளும் கால்களும் போட்டுப் பயிர் செய்யலாம். இவைகளை மண்வெட்டியாலாவது கலப்பைகளாலாவது செய்து ஒவ்வொரு முகட்டின் இருபக்கங்களிலும் நடலாம். இப்படிச்செய்வதால் பயிருக்குப் பாய்ச்சும் தண்ணீரைச் சற்று மட்டுப்படுத்தக்கூடும். இதனால் பயிருக்கு நீர்வடிவுண்டாகிறது. பயிர்களின் வேர்கள் ஆழமாய் பரவிச்சென்று ஆகாரம் தேடுவதால் நல்ல மாசூலும் கிடைக்கும்.

2. கம்போடியா பருத்தி.—நல்ல நீர்வடிவுள்ள தோட்டக்கால் நிலங்களில் இந்தப் பயிர் செய்யலாம். இதற்குத் தண்ணீரிறவை அவ்வளவு ஜாஸ்தி வேண்டியதில்லை. இது ஜாஸ்தி செலவில்லாமல் செய்யக்கூடிய பயிர். இதைக்குறித்து விவசாய டிபார்ட்மென்டார் ஒரு பத்திரிகை பிரசுரம் செய்திருக்கிறார்கள்.

விவசாய சங்கங்களின் மெம்பர்கள் தோட்டக்கால்களில் பயிர்களை விருத்திசெய்ய அபிப்பிராயமிருந்தால் ரொம்பவும் அபிவிர்த்திசெய்ய இடமிருக்கிறது. சாதாரணமாய்த் தோட்டக்கால் பயிர்செய்யும் கிருஷிகன் ஐவேஜுள்ளவனல்ல. தன்னிடமிருக்கும்சொற்ப ஐவேஜை தன்னுடைய நிலத்தில் கிணறுவெட்டுவதிலும், கவலைமாடுகளை வாங்குவதிலும், கரம்பை, எரு முதலானவைகளை அந்நிலத்திற்கு அடித்துச் சேர்ப்பதிலும் செலவுசெய்துவிடுகிறான். ஆகையால் சாதாரணமாய் அப்பேர்ப்பட்ட கிருஷிகன் தன் நிலத்தில் டிபார்ட்மென்டார் நூதனமாய்ப் பயிர்செய்யும்படி சொல்லும் பயிரைச் செய்ய

மனமில்லாதவனுயிருக்கிறான். அப்படி நூதனமாய்ச் சிபார்சுசெய்யும் பயிரை தானே சாகுபடி செய்யும்வரை தன் வரும்படி அபிவிருத்தியாகுமென்ற நிச்சயம் அவனுக்கில்லை.

புன்செய் நிலங்கள்.

செவ்வல், மணல்பாங்கு நிலங்களின் பருவம்.—வேர்வாரிப்படல் (Harrow), மழைக்குப்பின் உறைந்து கெட்டியாகும் மேல்மண்ணைக்கிளறிப் பொசுபொசுப்பாய் நெகிழ்ப்பிவிப்பதற்கு ஒரு சிலாக்கியமான கருவி. களை வெட்டுவதினுல் உண்டாகும் ஜாஸ்திச் செலவை விதை உபயோகிப்பதால் குறைக்கலாம். இதைப்பற்றி விவசாய டிபார்ட்மென்டார் ஒரு பத்திரிகை பிரசுரம் செய்திருக்கிறார்கள். அநேக விவசாயச் சங்கங்களில் இக்கருவியிருக்கிறது.

2. ஜாஸ்தி மழைகள் பெய்யாத இடங்களிலுள்ள கரிசல் நிலங்கள்.—கொர்ரு கலப்பை என்று சொல்லப்பட்ட விதைக் கலப்பையால், விதையை விதைத்து அப்பால் வளர்ந்த பயிரினூடே, தந்துலு என்னும் கருவிகளால் களை எடுப்பதால் அநேக அனுகூலங்களிருக்கின்றன. இவைகளைக் குறித்து விவசாயப் பஞ்சாங்கத்தில் விபரமாய் ஒரு வியாசம் எழுதப்பட்டிருக்கிறது. விவசாயச் சங்கங்களின் மெம்பர்கள் எவராவது மேற்சொன்ன கருவிகளைக் கையாடிப் பயிர்செய்ய விருப்பமுள்ளவர்கள், புன்செய்ப்பயிர் விஷயத்தில் பழக்கமுள்ள தங்கள் ஆட்களில் ஒரு புத்திசாலியாயுள்ள வேலைக்காரனை, எந்த வருஷத்திலாவது செப்டம்பர் மாதத்தில் கோவில்பட்டி சர்க்கார் விவசாயப் பண்ணைக்கு அனுப்பினுல் அங்கே அவனுக்கு அக்கருவிகளை உபயோகிக்கும் விதத்தைப் பழக்கிவைப்பார்கள். விதைச்செய்ய விருப்பமுள்ளவர்கள், தென் இலாகா விவசாய டெப்டி டைரக்டர், அந்தப்பாரம் மானேஜருக்கு தக்க காலத்தில் இந்த சங்கதியைக் குறித்து நோட்டீஸ் கொடுக்கக்கூடியதாய், முன் கூட்டியே அவருக்கு எழுதி உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

பொது விஷயங்கள்.

லாபத்தைத் தருவதாய்த் தெரிந்த புதுதினுசுப் பயிரிடுவதையாவது, நூதன சாகுபடி முறைகளையாவது, மறு வருஷம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவராமல் கைவிடக்கூடாது.

டிபார்ட்மென்டிலிருந்து கரும்பு விதைக் கணுக்களை வாங்கிப் பயிரிட்ட அநேகர் அடுத்த பசலியில் தங்களுக்கு விதைகூட வைத்துக் கொள்ளாமல் பயிர் பூராவையும் விற்றுவிட்டு மறுபடியும் டிபார்ட்மென்டார் விதைகளை வருஷாவருஷம் கொடுத்துக் கொண்டிருப்பார்களென்று எதிர்பார்க்கிறார்கள். சிலரோ, தங்களுக்கு அடுத்த பசலியில் வேண்டிய கணுக்களை மீதிவைத்துக் கொள்ளுவதுடன் அந்தப்பயிர் நன்ருய் அந்த இடத்தில்

லாபத்தைத் தருகிறதென்று தெரிந்துகொண்ட தாங்கள் அக்கம்பக்கத்தாருக்கும் விதைக் கணுக்களை விற்றுமிருக்கிறார்கள். முதல் குறிப்பிட்டவர்கள் அந்தப் பயிரை பரீட்சை செய்யாமலிருந்ததைப் போலாகிறார்கள். ஆனல் பின் குறிப்பிட்டவர்களோ தாங்கள் சாசுவத லாபத்தை அடைந்தது மல்லாமல் தங்கள் நிலத்திற்குச் சமீபத்திலிருப்பவர்களின் விவசாயத்தையும் சற்று விருத்திசெய்வதில் பிரயாசையும் எடுக்கிறார்கள்.

கோயம்புத்தூர் விவசாயக் கலாசாலையைச்சேர்ந்த விவசாயப் பண்ணையைச் சேர்க்காமல், தென் இலாகாவில் மூன்று விவசாயப் பண்ணைகளிருக்கின்றன. ஒன்று தென் ஆற்காடு ஜில்லாவில் நெல்லிக்குப்பத்திலிருந்து 5 மைல் தூரத்தில், பாலூருக்குச் சமீபத்திலிருக்கிறது. இவ்விடத்தில் ஜூன், ஜூலை மாதங்களில், தென் மேற்குச்சாரல் மழைகளின் உதவியால், புன்செய் நிலங்கள் சாகுபடியாகின்றன. தோட்டக்கால் நிலங்களில், இறவைப் பயிர்கள், நவம்பர் மீ முதல் ஜூன் மீ வரை சாகுபடி செய்யப்படுகிறது. அங்குமிங்குமுள்ள நன்செய் நிலங்கள் வருஷம் முழுவதும் சாகுபடியாகின்றன. பசுந்தாள் எருப்பயிர்கள் கோடைகாலத்திலும் கார்பருவத்திலும் பயிரிடப்படுகிறது. முதல்போகம் நெல், ஜூன் மீ முதல் செப்டம்பர் மீ வரையும், இரண்டாம்போகம் நெல், அக்டோபர் மீ முதல் பிப்ரவரி மீ வரையும், கரும்பு, ஏப்ரல் மீ முதல் மறு ஏப்ரல் மீ வரையும் பயிரிடப்படுகிறது. நெல்லிக்குப்பத்துக்கடுத்த பாலூர் சர்க்கார் பண்ணை மானேஜர் அவர்களுக்கெழுதினுல், அவர் விவசாய சங்க காரியதரிசியவர்களுக்கு எந்தப் பயிரை எந்தத் தருணத்தில் பார்க்க சரியான காலமென்று எழுதித் தெரிவிப்பார்

இன்னொரு பண்ணை திருநெல்வேலி ஜில்லா கோவில்பட்டியிலிருக்கிறது. அங்கே புன்செய் பயிரும் தோட்டக்கால் பயிரும் செய்யப்படுகிறது. செவ்வல் நிலமும், கரிசல் நிலமும் உண்டு. செவ்வலில் செய்யும் பயிரைப் பார்ப்பதற்குத் தகுந்த காலம் டிசம்பர் மீ. கரிசலில் செய்யும் சாகுபடியைப் பார்ப்பதற்குத் தகுந்த காலம் ஜனவரி, பிப்ரவரி மீ.

வடமலபார் ஜில்லாவில், தாளிபரம்பாவிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் மூன்றுவது பண்ணையிருக்கிறது. இந்தப் பண்ணையைப் போய் பார்க்கத் தகுந்த காலம் செம்டம்பர் மீ. பசுந்தாள் எருப்பயிரில் நோக்கமுள்ளவர்கள் இந்தப் பண்ணையை மே மாதக்கடைசியில் போய்ப் பார்க்கவேண்டும்.

மேற்சொன்ன விவசாயப் பண்ணைகளை போய்ப்பார்க்க விருப்பமுள்ள விவசாயச் சங்கங்களும் அல்லது சங்கங்களின் மெம்பர்களை அனுப்ப விரும்பும் சங்கங்களும் மேற்படி பண்ணை மானேஜரவர்களுக்கு தக்க காலத்தில் தெரியப்படுத்தினுல், அவர் வேண்டியவர்களுக்குப் போகவர வண்டி முதலான தகுதிகளும் அவ்விடத்தில் தக்க இடமும் சௌகரியப்படுத்துவார்.

எச். இ. ஹௌட்டன்,
மு. ஆதிநாராயண அய்யர்,
கூட்டுக்காரியதரிசிகள்.

குறிப்புகள்.

——(:o:)——

உத்தரமல்லூர் கூட்டுத்தொழில் யூனியன் நெ. 1:—செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த மதுராந்தகம் தாலூகாவிலுள்ள உத்தரமல்லூருக்கருகாமையிலிருக்கும் பதினொரு சங்கங்கள் ஒரு யூனியனாக சேர்ந்திருக்கின்றன; இந்த இராஜதானியில் மேற்பார்வையிடும் காரியங்களுக்காக ஒன்று சேர்ந்திருக்கும் கூட்டுத்தொழில் யூனியன்களில் இதுதான் முதலாவது. தன்னோடு சேர்ந்திருக்கும் எல்லா சங்கங்களும் வாங்கின சகல கடன்களுக்கும் அப்படிப்பட்ட எல்லா சங்கங்களும் சேர்ந்து கூட்டாய் ஜாமீனாயிருப்பதாக இந்த யூனியன் உத்தரவாதம் செய்கிறது. தற்காலத்தில் அதிக தொகையுள்ள கடன்களை ரெஜிஸ்ட்ராரே ஜாரி செய்கிறார்; ஆனால், பொதுவான சில நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு சாதாரணமான கடன்களை ஜாரிசெய்யும் அதிகாரம் இந்த யூனியனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த யூனியனைச் சேர்ந்த சங்கங்கள் ரெஜிஸ்ட்ராருடன் இந்த விஷயமாய்ப் பூர்த்தியாக ஆலோசனை செய்த பிறகு உற்சாகத்துடன் இந்த அபாயகரமான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆயினும், ஒவ்வொரு சங்கமும் இவ்வளவுக்கு மேல் கடன் வாங்கக்கூடாதென்று சகாயச் சட்டங்களால் வரையறுக்கப்பட்டிருக்கிறது; ரெஜிஸ்ட்ராருடைய உத்தரவின்றி அந்த அளவுக்குமேல் கடன் வாங்கக்கூடாது; இதனால் இதராளுடைய மூலதனத்தைச் சிறிதேனும் யோசனையின்றி கடன்வாங்குவதைத் தடுக்கக்கூடும். கூட்டுத்தொழில் பாங்கிகளின் வேலை சரியாய் நடந்தேறுவதற்கு அதைச்சேர்ந்த சங்கங்கள் சமீபத்தில் இருப்பது அவசியமாகையால், இந்த யூனியனைச் சேர்ந்த சங்கங்களெல்லாம் அதைச்சுற்றிலும் ஏழுமைல் தூரத்திற்குள் இருக்க வேண்டுமென்று சகாயச்சட்டங்களில் கண்டிருக்கிறது. பலவகைப்பட்ட பாபத்துகளைத் தவிர, சென்னை ஸெண்ட்ரல் அர்பன் பாங்க் லிமிடெட் என்னும் பாங்கியும் அதைச்சேர்ந்த சங்கங்களும் கொடுக்கும் தொகைகளே இந்த யூனியனின் வரும்படிக்குப் பிரதான ஆதாரமாகும். சென்னை ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியார் பின்வருமாறு தீர்மானம் செய்திருக்கிறார்கள்:—

"இந்த யூனியன் வேலைசெய்ய ஆரம்பித்தபிறகு அதைச் சேர்ந்த சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களின்மேல் தண்டவட்டிபோக பாக்கியாகும் வட்டியின் மொத்த தொகையில் முப்பதில் ஒரு பாகத்தை அந்த யூனியனுக்குச் சிறிது காலத்துக்குக் கழித்துக்கொடுக்க பாங்கியார் தயாராயிருக்கிறார்கள்".

ஸெண்ட்ரல் பாங்கிக்குக் கிடைக்கும் லாபமானது மொத்தத்தில் வருஷத்துக்கு 100 க்கு $1\frac{1}{2}$ வீதமாகிறபடியால், அந்த பாங்கியார் உபகரிப்பதாகச் சொல்லும் தொகையானது அந்த பாங்கியின் மொத்த வரும்படியில் சுமார் ஆறிலொரு பங்காகிறது; இந்த தாராளமான நன்கொடைக்காக ஸெண்ட்ரல் பாங்கியார் வந்தனம் செலுத்தப் பெறுவதற்குஅர்ஹராவார்கள். இன்னும் வேண்டியிருக்கும் பணத்தை இதனுடன் சேர்ந்திருக்கும் சங்கங்களால் குறிப்பிட்டு கொடுக்கப்பட்ட தொகைகளைக்கொண்டு சேகரிக்கவேண்டும்; ஆனால், இம்மாதிரியாய்க் கொடுக்கப்படும் தொகைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காக விதிகள் செய்வதற்கு இன்னும் காலம் வரவில்லை. இம்மாதிரியான ஏற்பாடு சரிவர நடந்தேறுவது ஸூபர்வைஸரைப் பொறுத்ததாகும்; ஏனென்றால், தன்னுடைய முழுசாவகாசத்தையும் இதற்காக உபயோகப்படுத்துபவராய் சரியான ஒருவரை ஸூபர்வைஸராக நியமிக்கும் பட்சத்தில், இந்த சங்கங்கள் விட்டு விட்டு வேலை செய்யாமல் ஒழுங்காக வேலை நடத்தும் ஸ்தாபனங்களாக வெகு சீக்கிரத்திலே விருத்தியடையும். ஸூபர்வைஸர் தன்னுடைய காலத்தை வீணே கழித்துவிடாமலிருக்கும் பொருட்டு அவர் செய்ய வேண்டிய வேலைகள் இன்னவையென்று வரையறுக்கப்பட்டிருப்பதுமல்லாமல், அவர் இன்ன மாதிரியாக தன்னுடைய தினசரி புஸ்தகத்தை வைத்துவரவேண்டுமென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த யூனியனுடைய விவகாரங்களை நடத்தும் நிர்வாக சபையார் இதைச்சேர்ந்த சங்கங்களால் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்; பொதுவான நிர்வாக காரியத்தில் ஒவ்வொரு சங்கத்துக்கும் இவ்வளவு சம்பந்தம் இருக்கவேண்டுமென்பது முறையே அந்தந்த சங்கத்தின் கடன் வாங்கும் சக்தியைப் பொறுத்ததாகும்; மேலும், இந்தச் சபையில் இரண்டு மெம்பர்களுக்கு மேல் ஒரே சங்கத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கக் கூடாதென்று விதி ஏற்படுத்தியிருக்கிறபடியால், அக்கிரமமாய் ஏதாவதொரு சங்கம் பிரபலமடைவதற்கு இடமில்லாமலிருக்கிறது.

1910-ம் வரு ஜூலைமீ 14உ ரெவினியு இலாகாவில் பிறந்த 2339-ம் நெ. கவர்ன்மென்ட் உத்தரவின்படி இந்த யூனியன் ரெஜிஸ்டர் செய்யப்பட்டு, சென்ற ஸெப்டெம்பர்மீ 5உயன்று இது வேலை செய்ய ஆரம்பித்தது. அனேக சங்கங்கள் தங்களுக்குப் பிரதிநிதிகளாக டெலிகேட்டுகளை நியமித்து, இப்படி நியமிக்கப்பட்ட டெலிகேட்டுகள் திடமுள்ள நிர்வாக சபையாரைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். வருஷம் ஒன்றுக்கு 1 ரூபாய் அதிகரிப்பு வீதம் ரூ. 25 வரையில் உயரலாமென்ற நிபந்தனையுடன் ரூ. 20 சம்பளத்தில் தன்னுடைய முழு சாவகாசத்தையும் இதற்கே உபயோகிக்கக்கூடிய ஒரு ஸூபர்வைஸர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஹெட்குவார்டர்ஸுக்கு அதாவது, ஆபிஸ் தலைமை ஸ்தானத்துக்கு வெளியே தங்கும் ஒவ்வொரு இரவுக்கும் அவருக்குப்படியும் கொடுக்கப்படுகிறது. அவருடைய வேலையை நிர்வாக சபையார் கவனித்து வரவேண்டியது மல்லாமல், இதைச் சேர்ந்த பல சங்கங்களின் செய்கைகளையும் நன்றாய்ப்பார்வையிடும் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

2. கோயம்புத்தூர் ஜில்லாவில் 386ம் நெ. பாலக்கரைச் சங்கம்.—386-ம் நெ. உள்ள பாலக்கரைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டதைப்பற்றி இன்ஸ்பெக்டர் தம்முடைய ரிபோர்ட்டில் பின்வருமாறு எழுதுகிறார்:—

"நாற்பத்திமூன்று மெம்பர்கள் இந்த சங்கத்தில் சேர்ந்து 166 பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் இந்தச் சங்கம் விருத்தியடையுமென்று தோற்றுகிறது. இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் பஞ்சாயத்திலுள்ளவர்கள் இந்தச் சங்கத்தின் அபிவிருத்தி விஷயமாக மிகுந்த ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். குடிக்கும் வழக்கமுள்ள இரண்டு நபர்கள் இச்சங்கத்தில் சேருவதற்காக ஒருநாள் விண்ணப்பம் கொடுத்துக்கொண்டார்கள். முதலில் இவர்களை மெம்பர்களாக எடுத்துக்கொள்ள பஞ்சாயத்தாருக்கு இஷ்டமேயில்லை; ஆனால், அவர்கள் அங்கு சேர்திருந்தவர்களெல்லோருக்கும் முன்பாக தாங்கள் குடியை விட்டுவிடுவதாக பிரமாணம் பண்ணினார்கள். அந்த ஷரத்தின்மேல் பஞ்சாயத்தார் அவர்களைச் சேர்த்துக்கொண்டு மறுபடியும் எப்பொழுதாவது குடித்திருக்கக் காணப்பட்டால் சங்கத்தினின்றும் தள்ளிவிடப்படுவார்களென்றும் ஏச்சரிக்கை செய்தார்கள்."

3. தென் ஆற்காடு ஜில்லாவில் 46-ம் நெ. திண்டிவனம் அர்பன் பாங்க், லிமிடெட்.—46-ம் நெ. உள்ள திண்டிவனம் அர்பன் பாங்கியார் தங்களுடைய 1909-10-ம் ஞுடத்து ரிபோர்ட்டின் முடிவில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்கள்:—

"தொகை செலுத்தத் தவறின பாபத்துக்கள் இருக்கக்கூடிய அளவுக்குக் கொஞ்சம் மிஞ்சியே இருக்கின்றன. தொகை செலுத்தத்தவறினவர்களின்மேல் சட்டப்படி நடவடிக்கை நடத்தும் பட்சத்தில் ஜனங்கள் சங்கத்தில் சேர பயப்படுவார்களென்று நிர்வாக சபையார் ஆரம்பத்தில் அபிப்பிராயப்பட்டு, சட்டப்படி விவகாரம் நடத்தும் விஷயத்தில் கொஞ்சம் நிதானமாயிருந்ததே இதற்குக் காரணமாகும். ஆகையினால், அதிக நாட்பட்டதும் வசூலிப்பது வெகுகஷ்டமாயிருப்பதுமான பாபத்துக்களைப் பொறுக்கி எடுத்து அவைகள் விஷயமாய் வியாஜ்ஜியங்கள் தாக்கல்செய்யப்பட்டன. ஆனால், நிர்வாக சபையார்-தாங்கள் நடவடிக்கை நடத்தாமல் விட்டிருந்த விஷயங்களில் பாத்திரமறிந்து அப்படிச் செய்யவில்லை யென்றும், உடனே நடவடிக்கை நடத்துவதே மெம்பர்கள் தொகை செலுத்தத் தவறுவதைத் தடுப்பதற்கு மிகவும் சரியான மார்க்கமென்றும் அனுபவத்தில் தெரிந்துகொண்டார்கள்."

* * *

4. இம்மாதிரி சங்கத்தை என் ஏற்படுத்தவேண்டும்:—ஒரு சங்கத்தை ரெஜிஸ்டர் செய்வதைக்குறித்து ரிபோர்ட் அனுப்பும் பொழுது, உத்தரமல்லூர் லர்க்கிலைச் சேர்ந்த இன்ஸ்பெக்டரானவர் அடியிற்கண்டபடி எழுதுகிறார்,—

இம்மாதிரி ஒருசங்கத்தை ஏற்படுத்துவதற்கு ஐந்து காரணங்கள் உண்டு. அவையாவன: (1)கிராமவாசிகள் அதிக கடன்பட்டிருக்கிறார்கள், (2)வேண்டிய பொழுது அவர்களுக்குக் கடன் கிடைப்பதில்லை, (3) உள்ளூரில் ஸாவகாரிகள் வாங்கும் வட்டியானது கடன்வாங்கும் நபரின் ஸ்திதியை அனுசரித்ததாகும்; அது எந்தவிஷயத்திலும் வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 12-வீதத்துக்குக் குறைவதில்லை, (4) கடன் கொடுத்தவர், பணம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தேதிவரையில் சும்மாயிருந்துவிட்டுக் கடைசி சமயத்தில் அதாவது அந்தத் தேதிக்குச் சில நாள் முன்னதாக கடனாளியைக் கோர்ட்டுக்கு இழுப்பதாக பயமுறுத்துகிறார் அல்லது அவனுடைய நிலங்களில் மிகவும் சிரேஷ்டமான தொன்றை தனக்கு விற்று விடுவதாக விக்கிரய பத்திரமெழுதிக் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கிறார், (5) அக்கம்பக்கத்தில் இம்மாதிரி சங்கங்களிருப்பதைப் பார்த்துஜனங்களுக்கு தங்களுக்காகவும் ஒன்று இருக்க வேண்டுமென்ற ஆவலுண்டாகிறது."

5. ஐக்கிய நாணயச்சங்கம் எவ்வளவு செய்யக்கூடும்.—"ஒரு ஐக்கிய நாணயச் சங்கமானது—கிராமத்தில் அதன் காரியங்களைப் பல வழிகளில் பலிதமடையும் படியாகச் செய்யக்கூடு மென்றும், அது சரியான நோக்கத்துடன் நடத்தப் பட்டால் அதன் காரியங்கள் அவசியம் பலிதமடையு மென்றும், அப்படிப்பட்ட சங்கங்கள் காலக்கிரமத்தில் முழுவதும் பொருளாதார சம்பந்தமாய் மாத்திரமேயன்றி இதர விஷயங்களிலும் அனுகூலம் செய்யக்கூடியவையென்றும் வங்காள கவர்ன்மென்டார் அபிப்பிராயப்படுகிறார்கள்; இது சரியான அபிப்பிராயமே. இம் முயற்சியினால் இது வரையில் ஏற்பட்டிருக்கும் பிரயோசனகரமான முடிவைப்பார்த்தால், உத்தியோகஸ்தரல்லாதவர்களில் சிலரே இப்போதும் இதற்காக உழைக்கிறார்களென்றும், ஜில்லாக்களில் செல்வாக்குடையவர்கள் மொத்தத்தில் இதைப்பற்றி சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை யென்றும் கவர்ன்மென்டார் வருத்தப்படுவதற்குப் போதுமான நியாயமிருக்கிறது. எங்கள் வரையில், பொருளாதார சம்பந்தமாயும் சமூக வாழ்க்கையிலும் ராயத்தின் க்ஷேமத்தைப் பாதிக்கக்கூடிய விஷயத்தைக் காட்டிலும் ஒரு ஜன சமூகத்துக்கு அதிக முக்கியதையுடையது வேறொன்றுமில்லை யென்று நாங்கள் நினைக்கிறோம். கிராமவாசிகளை சரியானவழியில் கொண்டுபோகும் பட்சத்தில் அவர்கள் பொது நன்மைக்காக ஒன்று சேர்ந்து உழைக்கக் கூடியவர்களாயிருக்கிறார்களென்று ஐக்கிய நாணய முறையினால் ஏற்படுகிறது. பொது ஜனங்கள் சுய ஆட்சியின் உண்மையான கோட்பாட்டை அறிந்து கொள்ளக்கூடியவர்களாயிருப்பதற்கு இம்மாதிரி பயிற்சியானது எவ்வளவோ பிரயோஜனகரமாயிருக்கும். பொருளாதார சம்பந்தமாய் மாத்திரமல்லாமல் இராஜரீக சம்பந்தமாயும் யோசிக்கும்போது, படித்தவகுப்பாரும் செல்வாக்குள்ள மற்றவர்களும் இந்த ஐக்கிய நாணயக் கிளர்ச்சி பலிதமடைவதற்கு வாஸ்தவத்தில் ஒற்றுணர்ச்சியுடன் உதவிபுரிவது அவசியமே."—இந்தியன் மிர்ரர்.

6. **ஸென்ட்ரல் கூட்டுத்தொழில் பாங்க்.**—சிறிது காலத்துக்குமுன் ஸ்டேட் ஸெக்ரெடரியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டின்படி, பம்பாய் மாகாணத்திலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு மூலதனம் சேகரித்துக் கொடுப்பதற்காக கௌரவம் பொருந்திய ஸர் விடல்தாஸ் தாமோதர் ஸே என்பவரும் மிஸ்டர் லலுபாய் ஸாமல்தாஸ் என்பவரும் பம்பாயில் ஒரு பாங்கி ஏற்படுத்தப்போகிறார்கள். இதற்கு வேண்டிய மூலதனம் பகிரங்கமாய்க் கடன் வாங்கியே சேகரிக்கப்படும்; மேலும், இந்த பாங்கிக்குத் தன்னுடைய பங்கு மூலதனத்தைத் தவிர டிபெஞ்சர்கள் என்னும் கடன்பத்திரங்களின்மேல் கடன் வாங்கவும் அதிகாரங்கொடுக்கப்படும்; இந்த டிபெஞ்சர்பத்திரங்களின் மேல் கொடுக்கவேண்டிய வட்டிக்காக பம்பாய்கவர்ன்மெண்டார் உத்தரவாதம் செய்வார்கள். பாங்கியின் பணமானது கூட்டுத் தொழில் சங்கங்களுக்கு முன்பணம் கொடுப்பதற்காகவே உபயோகிக்கப்படும்; ரெஜிஸ்ட்ராரின் சிபாரிசுமேல்தான் இந்தப்படி முன்பணம் கொடுக்கப்படும். இந்த பாங்கியின் வேலைகளைப் பல வழிகளில் மேற்பார்வையிடும் அதிகாரத்தைக் கவர்ன்மெண்டார் தங்கள் கையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; மேலும், சிறிது காலத்துக்குக் கட்டிவைக்கப்படும் தொகைகளை வாங்கிக்கொள்வதைப்பற்றி விசேஷ நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

7. **காலஞ்சென்ற மிஸ்டர் கெ. ரங்கய்ய கௌண்டன்.**—நம்முடைய இராஜதானியில் கூட்டுத்தொழில் ஏற்பாடானது அதிசயிக்கத்தக்கவிதமாய்ப் பலிதமடைந்திருப்பதற்கு ஸர்க்கார் உத்தியோகஸ்தரல்லாதவர்கள் சிரத்தையுடன் புரிந்த மதிப்பற்ற உதவியே முக்கியகாரணமாகும். ஐசுவரியமுடைய ஒருவர் தம்முடைய பெரிய ஆஸ்தியிலிருந்து சுலபமாய்க் கொடுக்கக் கூடிய சில ஆயிர ரூபாய்களை இந்த சங்கங்களில் கட்டிவைப்பதனாலேயே கூட்டுத்தொழில் விஷயத்துக்கு அனுகூலம் செய்கிறாரென்பதில் சந்தேகமில்லை; ஆயினும் கூட்டுத்தொழில் விஷயத்தைப் பற்றி மஜராக்களிலும் கிராமங்களிலும் வீடுவீடாய்ப்போய் பிரசங்கிக்கும் அதிக சிலாக்கியமான வேலையையும் செய்துவந்திருப்பவர் மற்றும் அநேகர் இருக்கிறார்கள். இம்மாதிரி வேலை செய்து உதவிபுரிகிறவர்கள் மற்றவர்களைக்காட்டிலும் ஏழைகளாயிருப்பதனால், அவர்களைவிட அதிக பணக்காரராயும் கற்றறிந்தவர்களாயு முள்ளவர்களைக்காட்டிலும் அவர்களிடத்திலேயே கல்விகற்காத எளிய ரயத்துகளுக்கு அதிகநம்பிக்கை யுண்டாகிறது. தன்னலத்தை வெறுத்துழைக்கும் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்தான் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள கம்பிளியம்பட்டியிலிருந்து ஏப்ரல்மீ 26வ யன்று இவ்வுலக வாழ்க்கையை விட்ட ரங்கய்ய கௌண்டன் என்பவர். அவர் ஒரு கிராம முன்ஸிப்தான்; ஆனாலும், அவர் இஷ்டத்துடன் எடுத்துக்கொண்ட வேலை விஷயமாய் தம்முடைய முழுகாலத்தையும் உபயோகித்து தம்மாலானவரையில் அதை வஞ்சனையின்றி செய்துவந்தார். 1910–ம் ஹு ஜூலை மாதத்தில் பெருந்துரையில் பலிதத்துடன் நடத்தப்பட்ட தாலுகா கூட்டுத்தொழில் சபையும் இப்பொழுதும் நன்றாய்

வேலை செய்து கொண்டிருக்கும் அனேக கிராமச் சங்கங்களும் அவருக்குப்பின் அவர் விட்டுப்போன ஞாபகச் சின்னங்களாகும். அவருக்கு நேரிட்ட அகால மரணத்தால் கூட்டுத்தொழில் விஷயத்தில் யதார்த்தமாய் உழைத்து வந்த ஒருவரை இழந்துவிட்டோம். ஆனால், சிறிது காலத்துக்கேயாயினும் மிகவும் பிரயோசனகரமாயிருந்த அவருடைய வாழ்நாளிலிருந்து, சில வருஷங்களுக்குள்ளே தாழ்ந்த அந்தஸ்திலுள்ளவனும் எவ்வளவு வேலை செய்யக்கூடுமென்று நாம் அறியலாம்.—(ஹிந்து பத்திரிகையிலிருந்து எடுத்து சிறிது மாற்றி எழுதப்பட்டது).

1911–ம் ஹு ஜூன் மீ 20வ இந்தியா கவர்ன்மெண்டாரால் ஸிம்லாவில், பிறப்பிக்கப்பட்ட ஹோம் இலாகா–பப்ளிக் 2025–ம் நெ. விளம்பரம்.

——(:)——

1908-ம் ஹு நவம்பர் மீ 6வ பிறந்த 2520-ம் நெ. ஹோம் இலாகா விளம்பரத்தை ரத்து செய்தும், (1904-ம் ஹுத்து 10-வது ஆக்டாகிய) 1904-ம் ஹுத்திய ஐக்கிய நாணயச் சங்கங்களைப்பற்றிய ஆக்டின் 25-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (c) அடையாளமிட்ட பகுதியினாலும் (2) குறிப்பிட்ட உட்பிரிவினாலும் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டும், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள்—ரெஜிஸ்டர் செய்வதைப்பற்றி அந்தந்தகாலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் சட்டத்தின்படி செலுத்தத்தக்க அடியிற்கண்ட கட்டணங்களை வஜாசெய்ய இஷ்டப்படுகிறார்கள். அவையாவன:—

(a) ஷெ ஆக்டின்படி அந்தந்த காலத்தில் ரெஜிஸ்டராயிருக்கும் யாதொரு ஐக்கிய நாணயச்சங்கத்தாலாவது அந்தச் சங்கத்துக்காகவாவது செலுத்தத்தக்க சகல கட்டணங்களும்;

(b) அப்படிப்பட்ட சங்கத்தின் விவகாரத்துக்குச் சம்பந்தப்பட்டதாய் அதைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது மெம்பரால் எழுதிக்கொடுக்கப்பட்ட யாதொரு ஆதாரவின் விஷயமாய்ச் செலுத்தத்தக்க சகல கட்டணங்களும்.

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டார் யாதொரு சங்கம் அல்லது யாதொரு வகுப்பைச் சேர்ந்த சங்கத்தின் விஷயமாய் ஷெ நிவாரணையை முழுவதுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் எந்தக்காலத்திலாவது ரத்துசெய்யலாம்.

இந்த வர்த்தமானியின் (1-வது வால்யும் 1-ம் நம்பர்) 32-வது பக்கத்திலே பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இதனால் ரத்துசெய்யப்படுகிறது.

1910-ம் ஞு ஜூலை மீ 20 உ சென்னை கவர்ன்மென்டாரால் ரெவினியு இலாகாவில் பிறப்பிக்கப்பட்ட 2395-ம் நம்பர் விளம்பரம்.

———:—:———

1910-ம் ஞு ஜூன் மீ 20 உ இந்தியா கவர்ன்மென்டாரால் ஹோம் இலாகாவில் பிறப்பிக்கப்பட்டு, 1910-ம் ஞு ஜூலை மீ 12 உ யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் 1-ம் பாகத்தின் 784-ம் பக்கத்தில் மறுபடியும் பிரசுரிக்கப்பட்ட 2025-ம் நம்பர் (பப்ளிக்) விளம்பரத்திற்கண்ட விலக்கான நிபந்தனையை அனுசரித்து, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்—ஷை விளம்பரத்தில் ஜாரி செய்யப்பட்ட நிவாரணையானது ரெஜிஸ்டர் செய்வதைப்பற்றி அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் சட்டத்தின்படி செலுத்தத்தக்க அடியிற்கண்ட வகைகளைச் சேர்ந்த கட்டணங்களுக்குப் பிரயோகப்படக்கூடாதென்று கட்டளையிடுகிறார்கள். அவை என்னவென்றால்:—

(1) யாதொரு தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்வதன் விஷயமாய் ஒருவருடைய வீட்டுக்காவது ஒரு ஜெயிலுக்காவது போவதற்கான கட்டணங்களும், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தருக்குமுன் ஹாஜராக இஷ்டப்படாத கோஷா ஸ்திரீகளை விசாரிப்பதற்காக ஒரு ஸ்திரீயை அமர்த்திக்கொள்வதற்கான கட்டணங்களும்.

(2) ரெஜிஸ்டரான பிறகு பதினைந்து தினங்களுக்குமேல் சுதந்தரித்துக் கேட்கப்படாமலிருக்கும் ஒரு தஸ்தவேஜைப் பத்திரமாய் வைத்து வைப்பதற்கான கட்டணம்.

(3) ஸம்மன்களும் கம்மிஷன்களும் பிறப்பிப்பதற்கான கட்டணங்கள்.

(4) ஒரு தஸ்தவேஜை ஹாஜர்ப்படுத்துவதிலாவது கட்சிக்காரர்கள் ஹாஜராவதிலாவது காலதாமத மேற்பட்டால் அதற்காக 1908-ம் ஞு த்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் 25-வது பிரிவின்படியும் 34-வது பிரிவின்படியும் விதிக்கத்தக்க அபராதம்.

சென்னை கவர்ன்மென்டாரின் விளம்பரம்.

சென்னை இராஜதானியிலுள்ள சகல ஸென்ட்ரல் கூட்டுத்தொழில் பாங்கிகளிலும் பணம் வட்டிக்குப் போட்டுவைக்கவாவது டிபாஸிட்டாகப் பணம் கட்டவாவது ஒவ்வொரு வகுப்பைச்சேர்ந்த கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்கும் சர்வ சுதந்தரமுண்டு. (1910-ம் ஞு ஜூலை மீ 12உ யுள்ள 599-ம் நம்பர், பப்ளிக், கவர்ன்மெண்ட் உத்தரவு.)

ஸர்க்குலர் உத்தரவு.

நம்பர். 10.

எந்த ஷரத்துகளின்மேல் சங்கங்களின் சேமநிதிகள் ஸென்ட்ரல் பாங்கிகளில் வட்டிக்குப் போட்டுவைக்கப்படுகின்றனவோ அந்த ஷரத்துகள்—சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி 1-ம் வால்யும் 2-ம் நம்பர் இங்கலிஷ்பதிப்பில் 59,60-வது பக்கங்களிலே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன; இந்த ஷரத்துகளைச் சங்கங்கள் கவனிக்க வேண்டும். (e) குறிப்பிட்ட திட்டத்தின்படி ஸென்ட்ரல் பாங்கிகள் பிரதி வருஷமும் ஸெப்டெம்பர் மீ 30 உ யன்று அப்படி வட்டிக்குப் போட்டுவைக்கப்பட்டிருக்கும் தொகைகளின் மேல் பாக்கியாகும் வட்டியைக் கணக்கிட்டு ஷை தொகைகளைக்கட்டியிருக்கும் சங்கத்துக்குச் சேரவேண்டியதாயிருக்கும் பாக்கியுடன் அதைச்சேர்க்க வேண்டும்.

நடக்கும் கோஆபரேடிவ் வருஷமுட்பட இனிமேல் அப்படி கட்டிவைக்கப்பட்ட தொகைகளின்மேல் ஜூன் மீ 30 உ யன்று வட்டி கணக்கிட்டு, அந்த தேதியில் பாக்கியாகும் தொகைகள் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட சங்கங்களின்பேரில் வரவு வைக்கப்படும். அப்படி வரவு வைக்கப்பட்ட தொகைகளைப்பற்றிய ஒரு ஸ்டேட்மெண்டை ஜூலை மீ முதல் வாரத்தில் ஸென்ட்ரல் பாங்கிகளிலிருந்து ரெஜிஸ்ட்ரார் வரப்பெறுவார்; சேமநிதியின் விஷயமாய் பாக்கியாகும் தொகைகளை இனிமேல் கொடுக்கும்படி கேட்பதில் ரெஜிஸ்ட்ராரானவர் முந்தியவருஷத்தின் லாபத்திலிருந்து சேமநிதியுடன் சேர்க்கவேண்டிய தொகைக்கும் மேலேகண்ட ஜாபிதாவை அனுசரித்து ஸென்ட்ரல் பாங்கிகளால் சங்கத்தின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட வட்டித் தொகைக்கும் உள்ள வித்தியாசத்தை மாத்திரமே அனுப்பும்படி கேட்கவேண்டும். அனேகமாய்த் தணிக்கை உத்தரவுக்கு முன் அனுப்பப்படும் சேமநிதியைப்பற்றிய உத்தரவில் முழுவிவரங்களும் கண்டிருக்கவேண்டும். அந்த உத்தரவு அடியிற்கண்ட நமூனாப்படி இருக்கவேண்டும்:—

-ம் நம்பர்.. ....சங்கத்துக்கு.

191 -ம் ஞு ஜூன் மீ 30உ முடிவாகிற கோஆபரேடிவ் வருஷத்துக்கு உங்களுடைய சங்கத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்தாய்விட்டது. வழக்கமாய் அனுப்பப்படும் விவரமான ரிபோர்ட்டும் தணிக்கையைப்பற்றி ரெஜிஸ்ட்ராரின் அபிப்பிராயமும் பின்னால் அனுப்பப்படும். இந்த வருஷத்தின் லாபத்திலிருந்து சேமநிதியுடன் சேர்க்கவேண்டிய தொகை ரூ X. முன்னமே சேர்த்திருக்கும் உங்கள் சேமநிதிக்கு வரவுவைக்கப்பட்ட வட்டித்தொகை ரூ Y என்று ஸென்ட்ரல் பாங்கியார் மூலமாய் எனக்குத் தெரியும். கிடைத்த வட்டியை அதிலிருந்து கழித்து, 4 பிரசுரங்களடங்கிய -ம் நம்பர் வால்யும் சென்னைக்கூட்டுத்தொழில் வர்த்தமானிக்காக வால்யுமொன்றுக்கு வருஷத்துக்கு ரூ1-8-0-வீதம் உங்கள் சங்கத்தால் பாக்கியாகும் சந்தாத்தொகையாகிய Z ரூபாயையும் சேர்த்தால் இந்த உத்தரவின்படி நீங்கள் செலுத்தவேண்டிய தொகையானது ரூ ஆகிறது; ஷை தொகையை இந்த உத்தரவின் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள் அர்பன் பாங்கியாருக்குத் தயவுசெய்து அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

2. மேலே கண்ட விவகாரத்தின் விஷயமாய் உங்களுடைய கணக்குகளில் பின்வருமாறு பதிவுகள் செய்யவும்:—

ரொக்க கணக்கு புஸ்தகத்தில், "வரவுகள்" என்னும் தலைப்பின் கீழ் Y என்பதை சேமநிதியாகக் கட்டப்பட்டிருக்கும் டிபாஸிட் தொகைகளின்மேல் கிடைத்த வட்டியாகவும், "செலவுகள்" என்னும் தலைப்பின் கீழ் X என்பதையும் Y என்பதையும் சேர்த்து சேமநிதிக்காக அனுப்பிய பணமாகவும் Z என்பதை வர்த்தமானிக்குச் சந்தாத்தொகையாகவும் காட்டவேண்டும். இத்தொகைகளை அனுப்புவதற்காகப் பிடிக்கும் செலவுகளை இவைகளுடன் சேர்க்கக்கூடாது. செலவு பக்கத்தில் "தபாற் செலவுகள்" என்னும் தலைப்பின் கீழ் அவைகளைப் பிரத்தியேகமாய்க் காட்டவேண்டும்.

3. இந்த ஏற்பாட்டை அனுசரித்தால் எழுத்து வேலை குறைவது மல்லாமல், கணக்கு வைப்பதும் சுலபமாகும்.

நம்பர் 11

ஜில்லா பாங்கிகளுக்குக் கொடுக்கும் கடன்களின்மேல் வருஷமொன்றுக்கு நூற்றுக்கு ஏழுவீதம் வட்டி விதிப்பதாகவும் அந்த வட்டியை தினசரி இருப்பின்மேல் கணக்கிடுவதாகவும் சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியார் தீர்மானித்திருக்கிறார்கள்.

நம்பர் 12

ஸென்ட்ரல் சங்கங்களுட்பட ஐக்கிய நாணயச் சங்கங்களிலிருந்து வருஷமொன்றுக்கு நூற்றுக்கு $6\frac{1}{4}$ வீத வட்டிக்கு இரண்டு வருஷத்துக்கு டிபாஸிட்டுகள் வாங்கிக்கொள்ள சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியார் தயாராயிருக்கிறார்கள்.

2. இந்த ஏற்பாட்டினால் ஸென்ட்ரல் பாங்கியாருக்குச் சிறிது நஷ்டம் நேரலாம்; ஏனெனில், அவர்களுக்குப் பணம் அவசியமில்லாமலிருக்கும் போது கூட அவர்கள் அதை வாங்கிக்கொள்ளவேண்டியிருக்கும். ஆனால் தனி சங்கங்களிடத்தில் மிகுதிப் பணம் சேர்ந்திருந்து அதை வினியோகப்படுத்தும் மார்க்கமில்லாமலிருந்தால், அவைகள் டிபாஸிட்டுகள் வாங்கிக்கொள்வதில்லையென்று மறுக்க இஷ்டப்படலாம். இனிமேல் டிபாஸிட்டுகளைத் தாராளமாய் வாங்கிக்கொள்ளலாம். இந்த பணத்தை மெம்பர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக உடனே உபயோகிக்கக்கூடியதாயிருந்தால் மிகவும் நல்லது; இல்லாவிட்டால் அதை ஸென்ட்ரல் பாங்கிக்கு அனுப்பிவிடலாம். ஆகவே தனி சங்கங்கள் தங்களுக்கு நஷ்டம் நேராமல் தப்பித்துக்கொள்ளலாம்.

3. சங்கங்கள் 2 வருஷத்துக்குத் தங்கள் பணத்தை நிர்ப்பயமாய் டிபாஸிட் செய்யலாம். ஏனென்றால், ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து அவைகள் கடன் வாங்கவேண்டியிருந்தாலுங்கூட, அப்படி பாங்கியில் டிபாஸிட் செய்வது அவைகளுக்கு லாபகரமாயிருக்கிறது. ஒரு சங்கமானது வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 6 வீதம் ரூ 2000 வாங்கிக்கொண்டு அதை வருஷமொன்றுக்கு நூற்றுக்கு $6\frac{1}{4}$ வீதம் கட்டிவைக்கிறது. இந்தத் தொகையைக் கட்டி ஆறு மாதமான பிறகு அதற்கு ரூ 1000 வேண்டியிருக்கிறது; இதை வருஷமொன்றுக்கு நூற்றுக்கு $7\frac{1}{2}$ வீதம் கடனாக வாங்கி வருஷமொன்றுக்கு நூற்றுக்கு $9\frac{3}{8}$ வீதம் கடன் கொடுக்கிறது. மொத்தத்தில், 2000 ரூபாயின்மேல் வருஷமொன்றுக்கு நூற்றுக்கு $6\frac{1}{4}$ வீதம் 2 வருஷத்துக்கும், 1000 ரூபாயின்மேல் நூற்றுக்கு $9\frac{3}{8}$ வீதம் ஒருவருஷத்துக்கும் அதற்கு வட்டி கிடைக்கிறது; 2000 ரூபாயின்மேல் வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 6 வீதமும், 1000 ரூபாயின் மேல் நூற்றுக்கு $7\frac{1}{2}$ வீதமும் ஒரு வருஷத்துக்கு அது வட்டிகொடுக்கிறது. இதில் ஏற்படும் லாபம் ரூ. 38-2-0. இந்த ஸர்க்குலரின் சுற்றுவிளம்பரத்தின் 3-வது பாராவின்படி சங்கங்கள் லாபத்தை விர்த்திசெய்து கொள்வதற்கு யாதொரு தடையுமில்லை.

4. சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியார் என்னென்ன சகாயம் செய்து கொடுக்கிறார்களோ அவைகளையெல்லாம் ஜில்லா பாங்கியாரும் செய்து கொடுப்பார்கள்.

டிபார்ட்மெண்ட் உத்தரவுகள்.

1910-ம் வரு அக்டோபர் மீ 9உ யுள்ள 13-வது நம்பர்.

1910-ம் வரு ஜூன் மீ 16உ பிறந்த இந்த ஆபிஸ் ரெப். ஆன். கர். பெட்ன். 315-ம் நம்பர் உத்தரவைச் சிறிது மட்டில் மாற்றி, அதில் நிர்ணயிக்கப்பட்டவைகளும் வர்த்தமானி 1-வது வால்யும் 4-வது நம்பரில் விவரிக்கப்பட்டிருப்பவைகளுமான கேள்விகளுக்கு ஒரு வருஷத்துக்கொருதரம் பதில் சொன்னால் போதுமென்று இன்ஸ்பெக்டர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. பிரதி மூன்று மாதங்களுக்கொருதரம் அவைகளுக்குப்பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. இடையிடையே சங்கங்களைப் பார்வையிடும்பொழுது, இது வரையில் அனுப்பிவந்தது போலவே, நடந்துள்ள விஷயங்களை உள்ளபடியே கண்டெழுதி ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டும்.

1910-ம்வரு அக்டோபர் மீ 7உ யுள்ள 14-வது நம்பர்.

ஐக்கிய நாணயச் சங்கங்கள் டிபாஸிட்டாகக் கட்டிவைக்கும் சேம நிதியை ஸென்ட்ரல் சங்கத்தார் தற்காலத்திலே அடியிற்கண்ட திட்டங்களின்படி வைத்துக்கொள்ளுகிறார்கள்:—

i. சேமநிதி டிபாஸிட்டுகள் இவ்வளவு காலத்துக்குத்தான் கட்டிவைக்கப்படுகின்றனவென்னும் நிஷ்கரிஷையில்லை; ஆகவே இதரவகை டிபாஸிட்டுகள் விஷயத்தில் செய்வதுபோல புதுப்பிப்பதற்கு நோடிஸ் கொடுப்பது அவசியமில்லையென்று தள்ளிவிடப்பட்டிருக்கிறது.

ii ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரெஜிஸ்டிராரின் வெளிப்படையான உத்தரவில்லாமல் டிபாஸிட்டுகள் முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது திருப்பிக்கொடுக்கப்படமாட்டா. சாதாரணமாய் ரெஜிஸ்ட்ரார் இவைகளைத் திருப்பி வாங்கிக்கொள்வதற்காக ஒரு வருஷ நோடிஸ் கொடுப்பார்.

iii. டிபாஸிட்டுகள் விஷயத்தில், ஒரு மாதத்தின் 4உ முதல் அந்த மாதக் கடைசி வரையில் வாங்காமல் கட்டிவைக்கப்பட்டிருக்கும் ஐந்து ரூபாய் அல்லது அதனால் பெருக்கிவந்த தொகைக்கு வருஷ மொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதம் வட்டி கொடுக்கப்படுகிறது.

iv. டிபாஸிட்டுகளில் அணாக்களும் தம்பிடிகளும் சேர்ந்திருக்கலாம்.

v. டிபாஸிட்டுகளுக்கு ரசீது கொடுக்கிறதில்லை: ஒவ்வொரு விஷயத்திலும் அவைகள் வந்து சேர்ந்தனவென்று ஒப்புக்கொண்டு ஒரு கடிதம் மாத்திரமே அனுப்பப்படுகிறது.

vi. பிரதி வருஷத்திலும் ஸெப்டெம்பர் மீ 30உ யன்று கட்டிவைக்கப்பட்ட டிபாஸிட்டுகளின்மேல் அன்றைய தேதிவரையில் வட்டி கணக்கிட்டு, அது சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியில் இருக்கும் அசல் தொகையுடன் சேர்க்கப்படுகிறது; அப்படி வட்டி வரவு வைக்கப்பட்டதைப்பற்றி சம்பந்தப்பட்ட சங்கங்களுக்குக் கிரமமாய்ச் சங்கதி தெரிவிக்கப்படும்.

2. இப்போதைய ஏற்பாட்டின்படி, பிரதி வருஷம் அக்டோபர் மீ 1உ வரையில், ஒரு சங்கம் முந்திய வருஷங்களில் டிபாஸிட்டாகக் கட்டி சேர்ந்திருக்கும் சேம

நிதியின்மேல் அதற்கு எவ்வளவு வட்டி கிடைத்திருக்கிறதென்று அதற்குத் தெரியாது. இதனிடையில், ஜூன் மீ 30உ முடிவாகிற கோ ஆபரேடிவ் வருஷத்துக்கு சங்கங்களின் கணக்குகள் ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் போடப்படுகின்றன; இன்ஸ்பெக்டர்கள் அனுப்பும் தணிக்கைக் குறிப்புகளை, அவைகள் வந்து சேரும்பொழுதே பார்வையிட்டு, ஒவ்வொரு தணிக்கைக் குறிப்பையும் ரெஜிஸ்ட்ரார் ஜாரி செய்தவுடனே, அதாவது ஸென்ட்ரல் பாங்கியில் ஏற்கனவே கட்டியிருக்கும் தங்கள் சேமநிதியின்மேல் இவ்வளவு வட்டி தங்களுக்குச் சேரவேண்டுமென்று சங்கங்கள் அறிவதற்கு வெகு காலத்துக்கு முன்னேயே, சேமநிதிக்குப் பணம் அனுப்பும்படி ரெஜிஸ்ட்ரார் உத்தரவு செய்கிறார்; சில சங்கங்கள்-ரெஜிஸ்ட்ரார்ின் உத்தரவுகள் சேர்ந்தவுடனே உத்தரவில் கண்ட தொகையை ஸென்ட்ரல் பாங்கிக்கு அனுப்பிவிடுகின்றன; இதனால், சேமநிதிக்குச் சேரவேண்டிய தொகையைக் காட்டிலும் அதிகமாகவே செலுத்தப்படுகிறது

3. மேலும், ஜூன் மீ 30உ யன்று ஸென்ட்ரல் சங்கத்தின் கையிருப்புச்சீட்டைச் சரியாய்த் தயார்செய்யும் பொருட்டு, சேர்ந்திருந்தும் இன்னும் பாக்கியாகாத வட்டியைப்பற்றியும் சேர்ந்திருந்தும் இன்னும் செலுத்தப்படாத வட்டியைப்பற்றியும் ஒரு ஸ்டேட்மென்ட் அதனால் தயார் செய்யப்படவேண்டியதாயிருக்கிறது; ஆனால், மேலே கண்ட vi குறிப்பிட்ட ஷரத்தின்படி ஸெப்டெம்பர் மீ 30உ வரையில் சரியான இருப்பு இவ்வளவென்று முடிவாய் அறிவது சாத்தியமில்லை.

4. வேலையைப் பாதி குறைக்கும் பொருட்டும், பிற்பாடு கணக்குகளைச் சரிக்கட்டுவதையும் கணக்குகளில் சிக்கல்கள் ஏற்படுவதையும் தடுக்கும் பொருட்டும், சேர்ந்திருக்கும் சேமநிதியின்மேல் கிடைத்த வட்டியை அக்டோபர்மாதத்தில் பிரதிசங்கத்துக்கும் தெரிவிப்பது அவசியமில்லாமலிருக்கும் பொருட்டும், ஸென்ட்ரல் பாங்கிகள் 1910 ம் ஆண்டு ஜூன் மீ 30உ யன்று சேமநிதிகளின் மேல் பாக்கியாகும் வட்டியைப்பற்றி ஒரு ஸ்டேட்மென்ட் தயார் செய்து, அந்தத்தொகைகளை முறையே அந்தந்த சங்கத்தின் கணக்குப்புஸ்தகங்களில் வரவு வைக்கவேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் இஷ்டப்படுகிறார். இந்த ஸ்டேட்மென்டைத் தணிக்கை உத்தியோகஸ்தர் மேற்பார்வையிட்டு கடைசியாக தணிக்கை செய்தபிறகு, அதில் கண்டிருக்கும் வட்டித் தொகைகள் பணம்கட்டி வைத்திருக்கும் சங்கங்களின் கணக்குகளில் ஜூலை மீ 1உ வரவு வைக்கப்பட்டனவென்று ஸென்ட்ரல் பாங்கியாரிடத்திலிருந்து ஒரு ஸெர்டிபிகேட்டுடன் அதை ஜூலை மாதத்தில் முதல் வாரத்துக்கு மேற்படாமல் ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும். சேமநிதியில் வரவு வைப்பதற்காக பணம் அனுப்பும்படி சங்கத்தாருக்கு உத்தரவு செய்யும் பொழுது, ரெஜிஸ்ட்ரார் சேமநிதிக்குச் சேரவேண்டிய தொகைக்கும் ஸென்ட்ரல் பாங்கியில் சேர்ந்திருக்கும் சேமநிதியின் மேல் ஜூன் மீ 30உ வரையில் பாக்கியாகும் வட்டிக்கு முன்ன வித்தியாசத்தை மாத்திரமே சேமநிதிக் கணக்கில் சங்கங்கள் செலுத்தும்படி பார்த்துக்கொள்வார்.

5. நடவடிக்கை முறையில் ஏற்படும் இந்த மாறுதலானது-வருகிற கோ ஆபரேடிவ் வருஷ ஆரம்பத்திலிருந்து அமுலுக்கு வரும். அதாவது, ஸென்ட்ரல் சங்கத்தார் சேமநிதிக்குக் கிடைக்கும் வட்டியைப்பற்றிய ஸ்டேட்மென்டை, 1911-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்தில் ரெஜிஸ்ட்ரார்ின் ஆபீஸில் அதுபோய்ச் சேருவது சாத்தியமாயிருக்கும் பொருட்டு, 1911-ம் ஆண்டு ஜூன் மீ 30உ வரையில் தயார் செய்யவேண்டும். அதற்குள் நிஷ்கரிஷையான காலங்களுக்கு—முன்னே 2 வருஷமாக நிஷ்கரிஷை செய்யப்பட்டிருந்த காலங்களுக்குச்—சேமநிதியைக் கட்டிவைக்கும் ஏற்பாடானது அற்றுப்போய்விடும்.

6. இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள ஸ்டேட்மென்டுகளுக்கு, அடியிற்கண்ட நமூனாவை அவசியமான இடங்களில் மாறுதல்கள் சகிதமாக உபயோகித்துக் கொள்ளலாம்.

வரிசைக்கிரமமான எ.	சங்கத்தின் பெயரும் ரிஜிஸ்ட்ரர் நம்பரும்.	போனஸ் ஒதுக்கு முந்திய ஜூன் மீ 30உ யன்று கட்டிவைக்கப்பட்டிருந்த சேமநிதியின் தொகை.	தணிக்கை செய்யும் வருஷத்தில் அனுப்பப்பட்ட தொகை.	தணிக்கை செய்யும் வருஷத்தில் வட்டியாக வரவைக்கப்பட்ட தொகை.	ரிபோர்ட்டுக்குச் சம்பந்தமான வருஷத்தில் ஜூலை மீ 1உ யன்று வரவு வைக்கப்பட்ட தொகை.

குறிப்பு:—ஜூலை மீ 1உ க்குமுன் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் சேரவேண்டியது. தணிக்கை உத்தியோகஸ்தர் அனுப்பவேண்டியது.

1910-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 6உ யுள்ள 15-வது நம்பர்.

இன்ஸ்பெக்டர்களால் அனுப்பப்படும் மாதவாரி பிரயாணவர்த்தனைக் குறிப்புகளில் அநேக குறிப்புகளிலே ரஸ்தாமூலமாகச் செய்த பிரயாணவிஷயமாய் இன்ன மணிநேரங்களில் பிரயாணஞ் செய்யப்பட்டதென்று காணவில்லையென்பதை அடியிற் கையொப்பமிட்டிருக்கிறவர் கவனித்திருக்கிறார். இனிமேல் அனுசரித்து நடந்துகொள்வதற்காக அடியிற்கண்ட விதிகளைக் கவனிக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளலாகிறது.

(1) தொடர்ச்சியாய் இரண்டு நாட்களுக்கு மேற்படாமல் ஹெட்க்வார்ட்டர்விலில்லாததற்காக இரண்டு நாட்களுக்கு அன்றாட வர்த்தனை கேட்கும்பொழுதும்,

(2) மைலுக்கு இவ்வளவென்று வர்த்தனையாவது அதற்குப் பதிலாக வாஸ்தவமாய்ப் பிடித்த செலவையாவது கேட்கும்பொழுதும்,

(3) ரெயில் மூலமாய்ப் பிரயாணஞ் செய்து உடனே ரஸ்தாமூலமாகவும் பிரயாணஞ் செய்திருக்கும் விஷயத்தில் (வாய்க்கால்களில் படகுகள் மூலமாய்ப் பிரயாணஞ் செய்வது ரஸ்தா மூலமாய்ப் பிரயாணஞ் செய்ததாகவே பாவிக்கப்படும்) ரெயில்சத்தமும் அன்றாட வர்த்தனையும் சேர்த்துக் கேட்கும்பொழுதும்,

இன்ன மணிநேரங்களில் பிரயாணம் செய்யப்பட்டதென்பதைக் காண வேண்டும்.

இன்ஸ்பெக்டர்களுக்குச் சுற்று விளம்பரம்.

அனந்தபூர் ஜில்லாவிலுள்ள சங்கங்களைப்பற்றி.

அனந்தபூர் ஜில்லாவில் கல்லியாணதுர்க்கம் தாலூகாவிலே ஐக்கிய நாணயச் சங்கங்கள் தீவிரமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டு வந்திருக்கின்றன; அநேகமாய் அந்தத் தாலூகா விஸ்தீரணம் முழுமையிலும் இச்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று சொல்லலாம். ஐக்கிய நாணயச்சங்கங்களால் ஏற்படும் சுலபமாய்க் கடன் வாங்குவதற்கான வசதிகளை அந்த தாலூகாவிலுள்ளவர்கள் ஆவலுடன் ஏற்றார்களென்பதே இதற்குச் சிறிதுமட்டில் காரணமாகும். ரயத்துகளின் கஷ்டங்களை நிவர்த்திக்க கவர்ன்மெண்டார் செய்திருக்கும் ஏற்பாடுகளைக் குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு சிரமத்தைப்பாராமல் உழைத்துவந்த தாசில்தார் ம-ா-ா-ஸ்ரீ, ஏ. எஸ். பொன்னுசாமி அய்யரவர்களுடைய இடைவிடா முயற்சியுங்கூட இதற்குக் காரணமாகும். ஐக்கிய நாணய விஷயமாய் இந்த தாசில்தாரரின் உழைப்பைப்பற்றியும் அந்த உழைப்பினால் அவர் ஏழைவிவசாயிகளுக்குச் செய்திருக்கும் உதவியைப்பற்றியும் தாம் சிலாகிப்பதாக ரெஜிஸ்ட்ரார் எழுதிவைக்க விரும்புகிறார்.

---

2. அடியிற்கண்ட காரணங்களுக்காக ரெஜிஸ்ட்ரார் இந்த தாலூகாவில் சங்கங்களைத் தாராளமாய் ரெஜிஸ்டர் செய்ய இஷ்டப்பட்டார். மெம்பர்கள் உயர்ந்த வீத வட்டிக்கு முன்னமே வாங்கியிருக்கும் கடன்களைத் தீர்க்கக்கூடியவர்களாயிருக்கும்பொருட்டு அவர்களுக்குக் கடன் கொடுப்பதே இந்த சங்கங்கள் அடிக்கடி செய்துவரும் ஒருவிதமான உதவியாகும். எந்த ஸாவ்காரிகளின் கடன் தொகைகள் இம்மாதிரி திருப்பிக் கொடுத்துவிடப்பட்டனவோ அவர்கள் அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குள் எந்த கிராமங்களின் நிலைமையைப்பற்றி தங்களுக்கு நன்றாய் தெரிந்திருக்கிறதோ அவைகளில் தங்களுடைய வேலையைச் செய்துவருவதாகக் கண்டறியப்பட்டது. ஆனால் அநேக கிராமங்கள் சேர்ந்த ஒரு பெருக்கமான விஸ்தீரணத்தில் முழுமையிலும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அந்த கிராமங்களிலுள்ள யோக்கியர்களெல்லாம் அதில் மெம்பர்களாகச் சேர்ந்துவிட்டால், ஸாவ்காரின்தொழில் அற்றுப்போய், அவன் தன்னுடையபணத்தைக் கட்டுத்தொழில் சங்கங்களில் கட்டவேண்டியவனாகிறான். ஆகவே இதனால் இரண்டுவித அநுகூலம் ஏற்படுகிறது; அந்த விஸ்தீரணத்திலுள்ளவர்கள் வெளிக்கடனிலிருந்து விடுவிக்கப்படுகிறார்களென்பது ஒன்று; கடன்பட்டிருக்கும் வழக்கம் பரவுவதும்

தடுக்கப்படுகிறதென்பது மற்றொன்று. ஜனங்களும் பணம் லேவாதேவி செய்வதில் பயிற்சி பெறுவது மல்லாமல் திரவியம் சரியான வழியில் வினியோகிக்கப்படுகிறதா வென்று பார்க்கவும் ஆரம்பிக்கிறார்கள். இந்த தாலுகாவிலுள்ள கூட்டுத்தொழில் சங்கங்களின் மெம்பர்களெல்லாம் உள்ளூரிலேயே டிபாஸிட்டுகள் கிடைக்கும்படி முயற்சி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

---

3. சங்கங்கள் தீவிரமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டு வருவதையும், சிப்பந்தி குறைவாயிருப்பதையும், இந்த தாலுகாவில் தபால்வசதிகள் அவ்வளவு நன்றாயில்லையென்பதையும் உத்தேசித்து, சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியார் சங்கங்களுக்குப் பணம் அனுப்புவதற்காக அங்காமியான ஒரு ஏற்பாடு செய்துகொண்டார்கள். இந்த பாங்கியார் பணத்தைத் தாசில்தாருக்கு அதாவது ஸர்க்கார் தாலுகா கஜானாவுக்கு அனுப்பினார்கள்; தாசில்தார் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு பணம் வந்திருப்பதாகத் தெரிவித்து, அவைகளின் காரியதரிசிகளைத் தாலுகா ஹெட்க்வார்ட்டர்ஸுக்கு வரவழைத்துப் பணத்தை அவர்களுக்குப் பட்டுவாடா செய்துவந்தார்கள். இந்த ஏற்பாட்டையே இன்னும் அனுசரித்து வரலாம்; ஆனால் சங்கங்கள் பணத்தை வரப் பெறுவதற்கும் அனுப்புவதற்கும், அடியில் (ii),(iii) குறிப்பிட்ட பகுதிகளின் முதற்பாகங்களில் சொல்லியிருக்கிற ஏற்பாட்டை அனுசரிப்பது நல்லது; ஏனெனில், நாளடைவில் ஸர்க்கார் கஜானா மூலமாய்ப் பிரவர்த்திப்பதைக் காட்டிலும் இதுவே சௌகரியமாயிருக்கும்.

i. சென்னை ஸென்டரல் அர்பன் பாங்கியிலிருந்து ஒரு சங்கத்துக்குக் கடன்வேண்டியிருந்தால், அது-நிர்ணயிக்கப்பட்ட விவரங்களுடன் அதற்காக ஒரு விண்ணப்பத்தை ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும். அது சம்பந்தமாய்க் கேட்கப்படும் விஷயங்களுக்கு உடனுக்குடனே பதிலனுப்பவேண்டும். யாதொரு கடன் ஜாரிசெய்யப்பட்டால், ரெஜிஸ்ட்ரார் அதை ஸென்ட்ரல் பாங்கிக்குத் தெரிவிப்பார்; அதன்மேல் அந்த பாங்கியார் தெ சங்கத்துக்கு ஒரு ப்ரோநோட் என்னும் பத்திரமனுப்புவார்கள். இந்தப்பத்திரத்தை சகாயச்சட்டங்களில் சொல்லியிருக்கிறபடி எழுதிமுடித்து ஒரு ஸப்ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் ரெஜிஸ்டர் செய்யவேண்டும். இந்த பத்திரத்தை, சங்கத்தார்-என்ன ரூபமாய்ப் பணத்தை அனுப்பவேண்டுமென்று ஒரு கடிதத்தில் கண்டெழுதி அதனுடன் ஸென்ட்ரல் பாங்கிக்கு அனுப்பவேண்டும். அதில் சங்கத்தின் தபால் மேல் விலாசத்தைத் தவறாமல் எழுத வேண்டும்.

ii. ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து சங்கங்களுக்குப் பணம் அனுப்பும் பொழுது, தபாலாபிஸ் மூலமாகவாவது ஸர்க்கார் கஜானா மூலமாகவாவது அனுப்பலாம். தபால் ஆபிஸ் மூலமாக அனுப்பினால் அதை நோட்டுகளாகத் தபாலில் இன்ஷ்யூர் செய்தாவது தபால் மணியாடராகவாவது அனுப்பலாம்.

இன்ஷ்யூர் செய்வதனால் சாதாரணமாய் காலம் கூடிவருவது மல்லாமல் செலவும் குறைகிறது; ஆகவே ரூ. 50-க்குக் குறைந்த தொகைகளின் விஷயத்தில் தவிர மற்றப்படி மணியார்டர் ஏற்பாட்டைவிட இன்ஷ்யூர் செய்வதே சிலாக்கியம். சங்கங்களிலுள்ள உத்தியோகஸ்தர்கள் இன்ஷ்யூர் செய்தனுப்பப்பட்ட சாமான்களை வாங்கிக்கொள்வதில் எவ்வித காலதாமதமும் செய்யக் கூடாது; ஏனெனில், அப்படி தாமதம் செய்வதால் சங்கத்துக்கு வட்டி நஷ்டமாகிறது; மேலும் அந்த நஷ்டத்துக்கு சங்கத்தின் உத்தியோகஸ்தர்களே ரெஜிஸ்ட்ரார்தான் நேரில் உத்தரவாதிகளாக்கப் படுவார்கள். ஸர்க்கார் கஜானா மூலமாய்ப் பணம் அனுப்பப்பட்டால், ரெமிட்டன்ஸ் ட்ரான்ஸ்பர் ரசீதை ஸென்ட்ரல் பாங்கியார் சங்கத்துக்கு அனுப்பவேண்டும். சங்கத்தார் அதை எண்டார்ஸ் செய்து (அதில் இன்னாருக்குக் கொடுப்பதென்று எழுதி) ட்ரெஷரி டெப்யுடி கலெக்டருக்கு அனுப்புவதுமல்லாமல், தாலுகா கஜானாவில் அதற்குத் தொகைசெலுத்தும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவும் வேண்டும். ட்ரெஷரி டெப்யுடி கலெக்டரானவர் சங்கத்தாருக்கு ஒரு செக் (cheque) அனுப்புவார். அந்த செக்கை வரப்பெற்றவுடனே சங்கத்தார் அதை ரொக்கமாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கவர்ன்மெண்டார் எவ்வித கட்டணங்களும் விதித்து வாங்குவதில்லை; ஆனால் இந்த ஏற்பாட்டில், முக்கியமாய் தபால் வசதிகள் குறைவாயிருக்குமிடங்களில் அதிக காலம் பிடிக்கிறது. சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியார்-தாங்கள் ரெமிட்டன்ஸ் ட்ரான்ஸ்பர் வெளிவிட்ட ரசீதை மாதத்தின் 1-உயிலிருந்து வட்டி கணக்கிட்டு வாங்குகிறார்கள்; ஆகையினால் இந்த ரசீதை ரொக்கமாக மாற்றுவதில் அது வெளிவிடப்பட்ட மாதத்துக்குமேல் அதிக காலதாமதம் ஏற்பட்டால், சங்கத்தார் அந்த மாதத்துக்கு வட்டி நஷ்டபடைவார்கள்.

iii. சங்கங்கள் ஸென்ட்ரல் பாங்கிக்குப் பணம் அனுப்ப விரும்பும் பொழுதும் இதே முறையைத்தான் அனுசரிக்கவேண்டும். சென்னைக்கூட்டுத் தொழில் வர்த்தமானி 1—வது வால்யூம் 1-ம் நம்பர், இங்க்லிஷ் பதிப்பின் 22-வது பக்கத்திலே 'ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைகளை எப்படி அனுப்புவது' என்று தலைப்பிட்ட விஷயத்தைக்கவனிக்கவும். தாலுகா கஜானாவானது சங்கங்களுக்கு எவ்வளவு தூரம் சகாயம் செய்யக்கூடுமோ அவ்வளவு செய்தாலும், சங்கங்களுக்குக் கரென்ஸி நோட்டுகள் கிடைக்காதகாரணத்தால் தபால் மூலமாய் இன்ஷ்யூர் செய்தனுப்புவது எப்பொழுதும் சாத்தியமில்லாமலிருக்கலாம். ஒருசங்கம் ஸர்க்கார் கஜானாமூலமாய்ப் பணம் அனுப்ப விரும்பினால் அடியிற்கண்டபடி செய்யவேண்டும். அது-பணத்தைத் தாலுகா கஜானாவில் செலுத்தி முழுவிவரங்களுடன் ஒரு சலான் பெறவேண்டும். அந்த சலானைச் சங்கமானது ட்ரெஷரி டெப்யுடி கலெக்டருக்கு அனுப்பி, ஒரு ரெமிட்டன்ஸ் ட்ரான்ஸ்பர் ரசீது கொடுக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். டெப்யுடி கலெக்டர் இந்த ரசீதைச் சங்கத்துக்கு அனுப்புவார்;

அதன்மேல் சங்கமானது-அதை ஸென்ட்ரல் பாங்கியாருக்கு அனுப்பவேண்டும். இதற்கெல்லாம் சாதாரணமாய் அதிக காலம் பிடிக்கிறது. ரெமிட்டன்ஸ் ட்ரான்ஸ்பர் ரசீதைச் சென்னையில் ரொக்கமாக மாற்றினபிறகுதான் ஸென்ட்ரல் பாங்கியார் அந்த தொகையைக் கணக்கில் வரவு வைக்கிறார்கள்; மேலும், எந்த மாதத்தில் அந்த ரசீது வந்து சேருகிறதோ அந்த மாதக் கடைசிவரையில் சங்கத்தினிடத்திலிருந்து வட்டி கணக்கிட்டு வாங்கப்படுகிறது. ஆகையினால், வட்டி விஷயமாய் ஏற்படும் செலவைக் குறைக்கும்பொருட்டும் தவறாமல் வரவு வைக்கும்படி செய்யும்பொருட்டும் ஸென்ட்ரல் பாங்கியாருக்குச் சேரவேண்டிய பாக்கிகளை அனுப்புகையில் போதுமான சாவகாசமிருக்கும்படி செய்யவேண்டும்.

iv. சங்கங்கள்-இனிமேல் தாசில்தாராவது ட்ரெஷரி டெப்யுடி கலெக்டராவது தங்களுக்காக தபால்வேலை செய்யும்படி எதிர்பார்க்கக்கூடாது.

v. சங்கங்கள் மாதத்தின் ஆரம்பத்தில் பணம் கடன்வாங்குவதும் மாதத்தின் முடிவில் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதும் நல்லது. திருப்பிக் கொடுக்கப்பட்ட பணமானது மாதத்தின் கடைசிக்குள் ஸென்ட்ரல் பாங்கியாருக்குப்போய்ச் சேரவேண்டும். ஸென்ட்ரல் பாங்கியின் மேல்விலாசம்:—பத்ம விலாஸம், லஸ், மைலாப்பூர், சென்னை S.

---

4. சங்கங்களை நெருக்கமாய்ச் சேர்ப்பதில் முக்கியமான அனுகூலமென்னவென்றால், கூட்டுத்தொழில் முறையாய் மெம்பர்களுக்குக் கற்பிப்பதற்கு வசதி ஏற்படுகிறதென்பதே. கூட்டுத்தொழில் முறையைக் கற்பிப்பது அதி முக்கியமான விஷயம் இந்த விஷயத்தை இன்ஸ்பெக்டர்கள் விசேஷமாய்க் கவனிக்கவேண்டும். கூட்டுத்தொழிலைப்பற்றிய விஷயங்களைக் கற்பிக்கும் பொருட்டு, கல்லியாணதுர்க்கம் தாலூகாவிலுள்ள சில பெரிய மனிதர்கள் தாங்கள் ஒரு சங்கமாகச் சேர விரும்பினார்கள்; ஆனால் ரெஜிஸ்ட்ரார் தான் இந்த பிரேரேபணையை அங்கீகரிக்கக்கூடவில்லை யென்று வருத்தப்படுகிறார் இதைவிட விரிவாயும் திடமாயுமுள்ள ஒரு கல்விமுறையை அனுஷ்டிக்க வேண்டும். கூட்டுத்தொழில் முயற்சியானது வாஸ்தவமாய் ஜனங்களின் சொந்த முயற்சியாகும் வரையில் பலிதமடையாது. ஒவ்வொரு சங்கத்திலும் எல்லா மெம்பர்களுக்கு மில்லாவிட்டாலும் சில மெம்பர்களுக்காவது கற்பிக்கவேண்டும். உள்ளூரிலே டிபாஸிட்டுகள் கிடைக்கும்படி செய்வது முக்கியமென்பதைப்பற்றி முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. மெம்பர்கள்-வரையறுக்கப்படாத பொறுப்பைத் தாங்களாகவே ஏற்றுக்கொண்டபடியால், வேலையை இடைவிடாமல் ஜாக்கிரதையாய்க் கவனித்து வருவது அவசியமென்று தெரிந்துகொள்ளவேண்டும். சிக்கனமாயிருப்பதற்குக் கற்றுக்கொடுக்க வேணடும். அந்தந்த வேலையை அதற்கு நிச்சயிக்கப்பட்ட காலத்தில் செய்ய வேண்டுமென்றும் கற்பிக்கவேண்டும். மூன்றுமாதத்திற் கொருமுறை யெல்லாரும் வர்த்தமானிகளை வாசித்து அவைகளிலுள்ள விஷயங்களை விவரமாய்

எடுத்துச் சொல்லவேண்டும். ஒவ்வொரு மாதத்திலும் கணக்குகளைப் பூர்த்தி செய்து பரிசோதிக்கவேண்டும். தொழில் முறைக்குரிய வழக்கங்களை விருத்தி செய்யவேண்டும். வருஷாந்த ரிபோர்ட்டுகளில் பதில் சொல்லுவதற்காக சில கேள்விகள் அடங்கிய நமூனா ஒன்று தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்விகளிலிருந்து அந்த வருஷ முழுமையையும் இன்ன விஷயங்களில் மெம்பர்களைப் பயிற்றுவிக்கவேண்டுமென்பது ஏற்படும்.

---

5. கூட்டுத்தொழில் சங்கங்களே பணம் கடன்கொடுக்கும் விவகாரம் முழுமையையும் செய்யவேண்டுமென்று உத்தேசிக்கப்படவில்லை. ஸாவ்காரிகள் சங்கத்தின் விதங்களின்படியோ அவைகளுக்கும் குறைந்தோ பணம் கடன் கொடுத்துக் கடன் வாங்குபவர்களுக்குச் சங்கங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதுபோலவே வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது மல்லாமல் அக்கிரமமாய் யாதொரு தண்டத்தொகையும் வசூலிக்காமலிருக்கும் பட்சத்தில், அவர்களை, பொதுஜன சௌகரியத்துக்காக உழைக்கும் நண்பர்களாக வரவேற்கவேண்டும்; ஏனெனில், அவர்களும் கடன்வாங்கும் விவசாயிக்கு உதவிசெய்கிறார்கள்.

சாவ்காரிகளை எவ்வளவும் விரோதித்துக் கொள்ளவேண்டுமென்பது நம்முடைய விருப்பமல்ல வாகையால், கூட்டுத்தொழில் முயற்சியின் இந்தக் கொள்கையை அடிக்கடி வற்புறுத்திக்காட்ட வேண்டும்.

6. இன்ஸ்பெக்டர்கள் இந்த கூற்று விளம்பரத்தை ஜாக்கிரதையாய்ப் படித்து அதன்படி சங்கங்களுக்குக் கற்பிக்கவேண்டும். ஆனால் அவர்கள் எப்பொழுதும் உபாத்தியாயர்களாகவும் சங்கங்களை கட்டாயப்படுத்தும் விலைமையிலும் இருப்பது சாத்தியமுமல்ல, உசிதமுமாகாது. சங்கங்களுக்குத் தங்களிடத்திலேயே நம்பிக்கை விழும்படி அனுஷ்டானத்தில் முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு சங்கமும் ஸர்க்கில் இன்ஸ்பெக்டருடன் கலந்து யோசித்து, சங்கத்தின் காரியதரிசியல்லாத வேறே ஒரு மெம்பரை, (பெருத்த சங்கங்களில் இரண்டு அல்லது மூன்று மெம்பர்களைத் தெரிந்தெடுக்கலாம்), தெரிந்தெடுத்து, அப்படி தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர் இன்ஸ்பெக்டரின் உதவியுடன் தமிழ் வர்த்தமானியில் அச்சிட்டிருக்கும் இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டிலுள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்லட்டும். கடைசியாக மெம்பர்கள் தாங்களாகவே பிறருடைய உதவியில்லாமல் அந்த பதில்களை யெழுதி அவைகளை ரெஜிஸ்ட்ராருக்கு நேரே அனுப்பவேண்டும். இந்தக் கேள்விகளின் முழு அர்த்தமும் அவைகளுக்குப் பதில் சொல்லும் விதமும் மெம்பர்களுக்கு நன்றாய்த் தெரியும்படி செய்யவேண்டுமென்பதை இன்ஸ்பெக்டர் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். பதில்களைப் பதிவுசெய்த பிறகு அசல் பிரதியைச் சங்கத்தின் ரெகார்டுகளிலேயே இருக்கும்படி விட்டுவிட்டு, இன்ஸ்பெக்டர் - அந்த கிராமத்தை விட்டுப்போவதற்குமுன் அதை பதத்துக்குப் பதம் இங்கிலீஷில் மொழிபெயர்த்து ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும்.

7. மேற்பார்வையிடும் வேலையில் மெம்பர்களை ஊக்கத்துடன் ஒத்துழைக்கும்படி செய்வதால் காலக்கிரமத்தில் யூனியன்களைப் பலிதத்துடன் நடத்துவதற்கு வழியுண்டாகுமென்று ரெஜிஸ்ட்ரார் எதிர்பார்க்கிறார். மேலும், கூட்டுத் தொழிலின் நன்மைகளை ஜனங்கள் அறிவார்களானால், அவர்கள்-டென்மார்க்கிலும் இதர இடங்களிலும் அதிகமாய்க் காணப்படுகிற விவசாய சங்கங்களைப் போன்ற வேறு மாதிரியான சங்கங்களை ஏற்படுத்தி அபிவிருத்தி செய்வார்கள்.

8. மெம்பர்களுக்குள் கூட்டுத் தொழிலுக்குரிய கோட்பாடுகளைப்பற்றிய அறிவை இன்ஸ்பெக்டர் எவ்வளவு தூரம் பரவச் செய்திருக்கிறாரென்பதைக் கொண்டு அவர் எவ்வளவு வேலை செய்திருக்கிறாரென்று நிதானிக்கப்படும், மேலும், சேகரிக்கப்பட்ட டிபாஸிட்டுகளினாலும், கட்டப்படவேண்டிய தொகைகள் காலந்தவறாமல் கட்டப்படுவதனாலும், சங்கங்களின் மெம்பர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களின் வேலையை உள்ளுக்குள்ளேயே மேற்பார்வையிட்டுவருவதனாலும் இன்ஸ்பெக்டரின் முயற்சிகள் எவ்வளவு வரையில் பலிதமடைந்திருக்கின்றனவென்று நன்றாய் ஏற்படும். ஒரே இன்ஸ்பெக்டரின் கீழுள்ள அநேக சங்கங்களில் ஒரே விதமான பிசகுகள் அடிக்கடி நேர்ந்து, பஞ்சாயத்தாரின் அசிரத்தைதான் அதற்குக் காரணமென்று சொல்லப்பட்டு வந்தால், பஞ்சாயத்தார்களின் மனதில் இன்ஸ்பெக்டர் போதுமான உற்சாகத்தை உண்டாக்காததனால்தான் இப்படி நேர்ந்ததென்றும், ஆகையால் இதற்குப் பிரதமத்தில் இன்ஸ்பெக்டரே உத்தரவாதியாவாரென்றும் ரெஜிஸ்ட்ரார் அபிப்பிராயப்படாமலிருக்க முடியாது.

1909-1910-ம் வருஷத்துக்கு

(சங்கவாரியாக)

வரவையும் செலவையும் பற்றிய ஸ்டேட்மெண்ட்.

ஜில்லா.	சங்கத்தின் சுருக்கமானபெயர்	வரவுகள். பங்குக்காக செலுத்தப்பட்ட தொகைகள்.			பிரவேச கட்டணங்கள்			மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட் தொகைகள்.			இதர இடங்களிலிருந்து கடன்கள். கவர்ன்மென்ட்.			இதர சங்கங்கள்.			மெம்பரல்லாதவர்கள்.			மெம்பர்களால் திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன்கள்.		
1	2	3			4			5			6			7			8			9		
		ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.
அனந்தபூர்.	14 பக்கபட்டனம் ...	...	...	...	96	0	0	152	0	0	...	...	...	7000	0	0	...	...	...	2187	8	0
	32 கொத்தகோடா ...	...	...	...	12	0	0	...	...	...	...	...	...	500	0	0	...	...	...	1560	0	0
	47 தர்மாவரம் ...	31	0	0	7	12	0	5	0	0	...	...	...	...	...	...	...	...	...	5236	0	0
	54 வஜ்ரகரூர் ...	...	...	...	4	0	0	40	0	0	...	...	...	...	...	...	...	...	...	1176	0	0
	55 குந்தக்கல் ...	...	...	...	13	0	0	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	2461	0	0
	57 தம்மன்சர்லா ...	30	0	0	0	12	0	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	3032	0	0
	60 உரவக்கொண்டா ...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	2074	0	0
	74 எர்ரபொம்மனஹள்ளி ...	90	0	0	7	8	0	...	...	...	...	...	...	1000	0	0	262	0	0	2290	0	0
	88 நிம்பகள்ளு ...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	840	0	0
	90 ஹரேசமுத்ரம் ...	84	0	0	5	4	0	20	0	0	...	...	...	...	...	...	...	...	...	2731	8	0
	136 பெலுகுப்பா ..	...	...	...	86	0	0	...	...	...	...	...	...	...	...	...	...	...	...	2495	0	0
	137 பாமிடி ...	...	...	...	33	0	0	100	0	0	...	...	...	2000	0	0	...	...	...	1086	10	6
	177 கல்யாணதுர்க் ...	...	...	...	93	0	0	...	...	...	...	...	...	8000	0	0	1500	0	0	1793	0	0
	201 நர்ஸாபுரம் ..	...	...	...	126	0	0	92	0	0	...	...	...	4500	0	0	84	0	0	104	0	0
	202 ராம்புரம் ...	210	0	0	52	8	0	10	0	0	...	...	...	4000	0	0	...	...	...	381	3	9
	204 முதகல்லு ...	...	...	...	124	0	0	40	0	0	...	...	...	1000	0	0	...	...	...	...	...	...
	205 ஸ்ரீரங்கபுரம் ...	...	...	...	160	0	0	64	0	0	...	...	...	3000	0	0	...	...	...	...	...	...
	211 கன்னேபல்லி ...	...	...	...	107	0	0	...	...	...	...	...	...	2500	0	0	...	...	...	...	...	...
	217 பஸாபுரம் ...	...	...	...	64	0	0	25	...	...	...	...	...	3000	0	0	...	...	...	18	0	0
	218 போதுகம்மா ...	...	...	...	71	0	0	...	...	...	...	...	...	1100	0	0	5	0	0	...	...	...
	219 மலையனூர் ...	...	...	...	79	0	0	...	...	...	...	...	...	4000	0	0	...	...	...	5	0	0
	223 குரகுலபல்லி ...	...	...	...	41	0	0	...	...	...	...	...	...	1000	0	0	...	...	...	...	...	...
	224 பல்லூரு ...	...	...	...	83	0	0	291	0	0	...	...	...	500	0	0	...	...	...	...	...	...
	227 முலகனூர் ...	...	...	...	86	0	0	...	...	...	...	...	...	2500	0	0	...	...	...	20	0	0
	230 ரொட்டம் ...	430	0	0	107	8	0	400	0	0	...	...	...	5000	0	0	200	0	0	478	0	0
	231 தம்மாபுரம் ...	...	...	...	70	0	0	...	...	...	...	...	...	3000	0	0	...	...	...	14	0	0
	241 தலமர்லா ...	229	0	0	57	4	0	...	...	...	...	...	...	4000	0	0	...	...	...	1176	0	0
	242 கொத்தசெருவு ...	371	0	0	92	12	0	200	0	0	...	...	...	10000	0	0	1900	0	0	1695	0	0
	243 சோமாண்டபல்லி ...	257	0	0	64	4	0	237	0	0	...	...	...	8000	0	0	...	...	...	3420	0	0
	244 குட்டூரு ...	262	0	0	65	8	0	...	...	...	...	...	...	8000	0	0	350	0	0	345	0	0
	250 சின்னமனட்டூர் ...	73	0	0	18	4	0	5	0	0	...	...	...	1000	0	0	...	...	...	160	0	0
	251 நல்லூரு ...	79	0	0	19	12	0	...	...	...	...	...	...	2000	0	0	...	...	...	50	0	0
	258 செருகூரு ...	91	0	0	22	12	0	...	...	...	...	...	...	1500	0	0	...	...	...	40	0	0
	259 பிரஹ்மசமுத்ரம் ...	48	0	0	12	0	0	8	0	0	...	...	...	1500	0	0	...	...	...	41	0	0
	260 சொளிமர்ரி ...	160	0	0	40	0	0	...	...	...	...	...	...	4000	0	0	...	...	...	85	0	0
	261 பூச்சர்லா ...	168	0	0	42	0	0	20	0	0	...	...	...	4000	0	0	...	...	...	200	0	0
	274 ரெட்டிபல்லி ...	93	0	0	23	4	0	17	0	0	...	...	...	2000	0	0	...	...	...	50	0	0

	வரவுகள்.											
	இதர சங்கங்களால் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள்.			வரப்பெற்ற வட்டி.			சரக்கை விற்று வந்த தொகை.			இதர வரும்படி.		
2	10			11			12			13		
	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.
14	...	...	...	259	4	9	...	...	...	54	0	0
32	...	...	...	150	0	11	...	...	...	39	11	8
47	...	...	...	675	15	7	...	...	...	44	11	7
54	...	...	...	384	7	6	...	...	...	6	9	3
55	...	...	...	482	0	9	...	...	...	...	...	...
57	...	...	...	356	2	4	...	...	...	27	9	9
60	...	...	...	874	0	1	...	...	...	20	0	0
74	...	...	...	256	15	5	...	...	...	17	6	1
88	...	...	...	425	0	3	...	...	...	...	...	...
90	...	...	...	430	2	9	...	...	...	23	8	8
136	1400	0	0	376	7	11	...	...	...	37	1	1
137	...	...	...	274	6	6	...	...	...	...	...	...
177	850	0	0	687	14	6	...	...	...	22	10	10
201	...	...	...	...	...	...	...	...	...	1	9	0
202	...	...	...	159	7	4	...	...	...	...	...	...
204	...	...	...	28	2	0	...	...	...	...	...	...
205	...	...	...	...	...	...	...	...	...	...	...	...
211	...	...	...	23	7	0	...	...	...	...	...	...
217	...	...	...	0	12	2	...	...	...	...	...	...
218	1100	0	0	20	10	0	...	...	...	13	8	10
219	...	...	...	0	0	8	...	...	...	...	...	...
223	...	...	...	...	...	...	...	...	...	...	...	...
224	...	...	...	...	...	...	...	...	...	...	...	...
227	...	...	...	0	10	0	...	...	...	...	...	...
230	...	...	...	136	2	6	...	...	...	...	...	...
231	...	...	...	1	9	9	...	...	...	...	...	...
241	...	...	...	200	0	0	...	...	...	...	...	...
242	...	...	...	244	15	9	...	...	...	...	...	...
243	...	...	...	89	9	0	...	...	...	...	...	...
244	...	...	...	160	14	9	...	...	...	...	...	...
250	...	...	...	1	0	3	...	...	...	...	...	...
251	...	...	...	2	6	9	...	...	...	...	...	...
258	...	...	...	0	8	9	...	...	...	...	...	...
259	...	...	...	0	10	3	...	...	...	0	5	0
260	...	...	...	1	5	3	...	...	...	...	...	...
261	...	...	...	5	10	0	...	...	...	1	6	4
274	...	...	...	1	8	7	...	...	...	...	...	...

வரவுகள்.											
வருஷத்தின் மொத்த வரும்படி.			ஆரம்பக் கையிருப்பு.			ஆரம்பக் கையிருப்பைச்சேர்த்து வரவுகளின் பெரு மொத்தம்.					
14			15			16					
ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.			
9748	12	9	141	0	9	9889	13	6			
2261	12	7	3	6	10	2265	3	5			
6000	7	2	522	9	6	6523	0	8			
1611	0	9	207	13	10	1818	14	7			
2956	0	9	9	0	0	2965	0	9			
3446	8	1	284	14	1	3731	6	2			
2968	0	1	412	9	8	3380	9	9			
3923	13	6	160	2	7	4084	0	1			
1265	0	3	58	1	0	1323	1	3			
3294	7	4	175	2	6	3469	9	10			
4394	9	6	14	1	0	4408	10	6			
3494	1	0	37	3	0	3531	4	0			
12946	9	0	30	11	0	12977	4	0			
4907	9	0	...	...	...	4907	9	0			
4813	3	1	...	...	...	4813	3	1			
1192	2	0	...	...	...	1192	2	0			
3224	0	0	...	...	...	3224	0	0			
2630	7	0	...	...	...	2630	7	0			
3107	12	2	...	...	...	3107	12	2			
2310	2	10	...	...	...	2310	2	10			
4084	0	8	...	...	...	4084	0	8			
1041	0	0	...	...	...	1041	0	0			
874	0	0	...	...	...	874	0	0			
2606	10	0	...	...	...	2606	10	0			
6781	10	6	...	...	...	6751	10	6			
3085	9	9	...	...	...	3085	9	9			
5662	4	0	...	...	...	5662	4	0			
14504	11	9	...	...	...	14503	11	9			
12067	13	0	...	...	...	12067	13	0			
9183	6	9	...	...	...	9183	6	9			
1257	4	3	...	...	...	1257	4	3			
2151	2	9	...	...	...	2151	2	9			
1654	4	9	...	...	...	1654	4	9			
1604	11	3	...	...	...	1604	15	3			
4286	5	3	...	...	...	4286	5	3			
4437	2	4	...	...	...	4437	2	4			
2184	12	7	...	...	...	2184	12	7			

ஜில்லா.	சங்கத்தின் சுருக்கமானபெயர்.	வரவுகள். பங்குக்காக செலுத்தப்பட்ட தொகைகள்.			பிரவேச கட்டணங்கள்.			மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள்.			இதர இடங்களிலிருந்து கடன்கள். கவர்ன்மெண்ட்.			இதர சங்கங்கள்.			மெம்பரல்லாதவர்கள்.			மெம்பர்களால் திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன்கள்.		
1	2	3			4			5			6			7			8			9		
		ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.	ரூ	அ.	ப.	ரூ.	அ.	ப.
அனந்தபூர்.	275 நாகலூர் ...	138	0	0	33	4	0	69	0	0	...	...	...	4500	0	0	...	...	...	80	0	0
	276 தொட்டகட்டா ...	67	0	0	16	12	0	...	0	0	...	...	...	1800	0	0	...	...	...	...	...	...
	277 மொனட்டேர் ...	180	0	0	45	0	0	52	0	0	...	...	...	3500	0	0	...	...	...	185	0	0
	278 திருவேசலபட்டணம் ...	192	0	0	48	0	0	...	0	0	...	...	...	4000	0	0	...	...	...	56	0	0
	279 ஜுலுவேசுண்டா ...	161	0	0	40	4	0	96	0	0	...	...	...	3000	0	0	...	...	...	622	0	0
	280 சோணிப்பள்ளி ...	95	0	0	23	12	0	19	0	0	...	...	...	2000	0	0	...	...	...	165	0	0
	282 மேற்கொடிஹள்ளி ...	...	0	0	97	0	0	...	0	0	...	...	...	2000	0	0	...	...	...	200	0	0
	283 பைரவனிதிப்பா ...	...	0	0	155	0	0	500	0	0	...	...	...	2000	0	0	...	...	...	...	...	...
	286 மாண்ட்லி ...	142	0	0	35	8	0	...	0	0	...	...	...	3000	0	0	...	...	...	117	0	0
	287 பெத்த மொனட்டேர் ...	121	0	0	30	4	0	...	0	0	...	...	...	3000	0	0	...	...	...	...	...	...
	288 கலிபி ...	266	0	0	66	8	0	25	0	0	...	...	...	4000	0	0	10	0	0	146	0	0
	293 எனுமலதொட்டி ...	...	...	...	24	0	0	10	0	0	...	...	...	2000	0	0	...	...	...	80	0	0
	294 கரிகானிபல்லி ...	...	...	...	36	0	0	...	0	0	...	...	...	1900	0	0	...	...	...	70	0	0
	295 யாதகல்லு ...	...	...	...	88	0	0	...	0	0	...	...	...	3000	0	0	...	...	...	...	...	...
	296 சாந்தகொண்டாபுரம் ...	...	...	...	72	0	0	...	0	0	...	...	...	2000	0	0	...	...	...	25	0	0
	297 பில்லாபில்லி ...	...	...	...	47	0	0	20	0	0	...	...	...	2000	0	0	...	...	...	...	...	...
	298 ராள்ளா அனந்தபுரம் ...	...	...	...	57	0	0	...	...	...	...	...	...	2000	0	0	...	...	...	...	...	...
	299 சென்னம்பல்லி ...	...	...	...	35	0	0	...	...	...	...	...	...	1500	0	0	...	...	...	...	...	...
	300 மொலகலேடு ...	...	...	...	90	0	0	...	...	...	...	...	...	3000	0	0	...	...	...	50	0	0
	301 சிந்தார்லபல்லி ...	...	...	...	20	0	0	...	...	...	...	...	...	800	0	0	...	...	...	...	...	...
	302 சேத்தூர் ...	...	...	...	65	0	0	...	...	...	...	...	...	3000	0	0	...	...	...	...	...	...
	303 நுட்டிமடுகு ...	...	...	...	57	0	0	...	...	...	...	...	...	3000	0	0	...	...	...	...	...	...
	304 திம்மசமுத்திரம் ..	...	...	...	102	0	0	...	...	...	...	...	...	2000	0	0	...	...	...	...	...	...
	305 லக்ஷுமணபல்லி	...	...	...	93	0	0	...	...	...	...	...	...	3000	0	0	...	...	...	...	...	...
	306 கங்கவரம் ...	...	...	...	97	0	0	...	..	...	...	...	..	800	0	0	1000	0	0	...	...	...
	307 தட்டகுண்டா ...	...	...	...	70	0	0	...	...	...	...	...	...	800	0	0	...	...	...	...	..	...
	308 கெல்லா ...	...	...	...	56	0	0	...	...	...	...	...	...	800	0	0	...	...	...	...	...	...
	309 எரைசொண்டாபுரம் ..	...	...	...	49	0	0	...	...	...	...	...	...	1000	0	0	...	...	...	...	...	...
	310 பைரசமுத்ரம் ...	...	...	...	101	0	0	...	...	...	...	...	...	2300	0	0	...	...	...	...	...	...
	321 குண்டுர்பி ...	...	...	...	55	0	0	...	...	...	...	...	...	2000	0	0	...	...	...	...	...	...
	322 பெஸ்தாரபல்லி ...	...	...	...	42	0	0	...	...	...	...	...	...	500	0	0	...	...	...	...	...	...
	323 முதத்நாயனபல்லி ...	...	...	...	25	0	0	...	...	...	...	...	...	1600	0	0	...	...	...	...	...	...
	324 மாசிரேவு ...	...	...	...	51	0	0	...	...	...	...	...	...	2000	0	0	...	...	...	...	...	...
	346 வார்லி ...	...	...	...	66	0	0	1	0	0	...	...	...	2500	0	0	4	0	0	25	0	0
	347 சாபிரி ...	...	...	...	61	0	0	108	0	0	...	...	...	1000	0	0	...	...	...	...	...	...
	348 கம்பாடேர் ...	...	...	...	126	0	0	...	...	...	...	...	...	4000	0	0	...	...	...	32	0	0
	355 கர்த்தனபர்த்தி ...	...	...	...	47	0	0	...	...	...	...	...	...	2000	0	0	...	...	...	...	...	...

	வரவுகள்.											
	இதர சங்கங்களால் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள்.			வரப்பெற்ற வட்டி.			சரக்கை விற்று வந்த தொகை.			இதர வரும்படி.		
2	10			11			12			13		
	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப	ரூ.	அ	ப	ரூ.	அ.	ப.
275	...	...	...	1	15	6	...	...	...	...	...	...
276	...	...	...	...	...	...	...	...	...	...	...	...
277	...	...	...	5	9	1	...	...	...	...	...	...
278	...	...	...	1	5	0	...	...	...	6	12	4
279	...	...	...	13	15	11	...	...	...	...	...	...
280	...	...	...	3	7	8	...	...	...	...	...	...
282	...	...	...	...	...	...	...	...	...	...	...	...
283	...	...	...	...	...	...	...	...	...	...	...	...
286	...	...	...	5	4	2	...	...	...	...	...	...
287	...	...	...	...	...	...	...	...	...	...	...	...
288	...	...	...	5	8	10	...	...	...	0	3	4
"அவர்கள் தங்களுடைய திரவிய சாதனங்களை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்க்கவும் தங்கள் சம்பாதனையை மிகுத்தி வைக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று வர்ஜில் கவி எழுதிய ஈனியிட் என்னும் காவியத்தில் சொல்லியிருக்கிறது; கூட்டுத் தொழில் என்பதை இதைவிட நன்றாய் விளக்கி யுரைக்க என்னால் முடியுமென்று நான் நினைக்கவில்லை. சகலவிதமான திரவிய சாதனங்களையும் ஒன்றாய்ச் சேர்ப்பதும், சிக்கனத்தைப்பற்றிய சரியான கொள்கைகளைப் போதிப்பதும் ஆகிய இவ்விரண்டும்தான் வாஸ்தவமாய்க் கூட்டுத்தொழிலின் பிரதான நோக்கங்கள். "கூட்டுவியாபார சங்கங்கள்" என்றும் "கம்பெனிகள்" என்றும் பொதுப்பெயர் பெற்று வர்த்தக சம்பந்தமாயும் கைத்தொழில் சம்பந்தமாயும் நடந்துவரும் வெவ்வேறு வகையான சங்கங்களைப்பற்றி நமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஜனங்கள் தாங்கள் மிகுத்திவைக்கும் தொகைகளை வட்டிக்குப் போட்டுவைக்கும் பாங்கிகளைப்பற்றியும் நமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆனால், இப்பொழுது நான் சொன்ன கூட்டு வியாபார சங்கங்கள், கம்பெனிகள், பாங்கிகள் என்னும் இந்த ஸ்தாபனங்களெல்லாம் விளைபொருள்களை உற்பத்தி செய்கிறவர், சிற்பர் அல்லது பணத்தை வட்டிக்குக் கொடுத்து வைக்கிறவர் என்னும் இவர்களை மூன்றும் மனிதர்களாகவைத்து விவகரிக்கின்றவைகளாயிருக்கின்றன; அதாவது முறையே அவர்கள் தங்களுடைய விளைபொருள்களின் மதிப்புக்காகவோ, செய்யும் கைவேலைக்காகவோ அல்லது வட்டிக்குப் போட்டு

* ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய திவான் பஹதூர் ம-ள-ா-ஸ்ரீ எல். டி. ஸ்வாமிகண்ணு பிள்ளை எம். ஏ., பி. எல்., எல் எல். பி. அவர்களால் திருச்சினாப்பள்ளியிலே பழையமாணவர் சங்கத்தில் செய்யப்பட்ட உபந்நியாஸம்.

வைக்கும் பணத்தை உபயோகிப்பதற்காகவோ அவரவர்களுக்கு இவ்வள வென்று கொடுக்கப்படுகிறது; இந்த வியாபாரத்தில் வரும் லாபத்திலே அவர்களுக்கு மிஞ்சிமிஞ்சிக் கிடைப்பது வெகு சொற்ப பாகமே; அந்த லாபத்தில் பெரும் பாகமானது மைக்கம்பெனிக்கோ, கைத்தொழிலுக்கோ அல்லது பாங்கிக்கோ டைரெக்டர்களாயும் வேலைக்காரர்களாயு முள்ளவர்கள் தாங்களாகவே இந்த வியாபாரத்துக்குச் சொந்த பணம் எதுவும் போட்டிராவிட்டாலும் அவர்களுக்கே போகிறது. இந்தக் காரியஸ்திதியைப் பொதுவாய் விவரிக்கும்போது, அப்படிப்பட்ட வியாபாரத்தில் வரும் லாப மானது பெரும்பாலும் அல்லது முக்கியமாக மத்தியதாரருக்தே போகிற தென்று சொல்வதுண்டு. கூட்டுத்தொழில் சங்கத்திலோ மத்தியதாரரே கிடை யாது; தங்கள் விளைபொருள்களையோ உழைப்பையோ அல்லது பணத் தையோ ஒன்று சேர்த்து உபயோகிப்பவர்களே இந்தக் காரியமுழுவதையும் நிர்வகிக்கிறவர்களாயும் அதன் லாபத்தையெல்லாம் பங்காசாரமாய்ப் பெறு கிறவர்களாயும் இருக்கிறார்கள். நாட்டுச் சங்கத்தைப்போன்ற ஒரு சிறு சங் கத்திலே சம்பளம்பெற்று வேலைசெய்யும் ஏஜெண்டுகளென்பதே கிடையாது; இந்த காரியத்தை நடத்துவதற் கவசியமான வேலையெல்லாம் இலவசமாகவே செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட சங்கத்தில் இந்த தேசத்தில் நடக்கும் காரியம் பணத்தைக் கடன் வாங்குவதும் கடன் கொடுப்பதுமாகவே இருப்ப தால், இதில் காரியம் நடத்துவதற்காகப் பிடிக்கும் செலவு அநேகமாய்ப் பூஜ்ஜியமென்று ஸ்பஷ்டமாகத் தோற்றுகிறது. அப்படிப்பட்ட சங்கத்தின் மெம்பர்கள் தங்கள் நாணயம் செல்லுமிடத்திலெல்லாம் கடன்வாங்கி, அதை ஒருவருக்கொருவர் பரஸ்பர ஜாமீனின்பேரில் கடன் கொடுத்துக் கொள்ளு கிறார்கள். அவர்கள் யாரிடத்திலிருந்து கடன் வாங்கினார்களோ அவர்களு க்கு அதைக் காலம் தவறாமல் திருப்பிச் செலுத்துவதற்கு உத்தரவாதிகளா யிருக்கிறார்கள்; மேலும், அவர்கள் தங்களிடத்திலிருந்து கடன் வாங்குகிற வர்களையும் அம்மாதிரியான உத்தரவாதத்துக்கு உட்படுத்துகிறார்கள்; அதாவது, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளுகி றார்கள்.

(2) கூட்டுத்தொழில் முறையில் கடன் வாங் குவதனால் உண்டாகும் பிரயோஜனங்கள்.

விஷயத்தைச் சுலபமாய் விளங்கவைப்பதற்காக, நான் கூட்டுத்தொழில் நாணயம் என்னும் கூட்டுத்தொழிலின் ஒரு ரூபத்தைக்குறித்தே இப் போது உங்களுக்குச் சொல்லப்போகிறேன்; இந்த ரூபத்தில்தான் கூட்டுத் தொழில் முறையானது இந்த தேசத்தில் வாஸ்தவமாய் அனுசரிக்கப்பட்டு வருகிறது; பொருளுற்பத்தி, உழைப்பு, கைத்தொழில் இவைகளின் சம்பந்த மாய்க் கூடி வேலை செய்கையில், கூட்டுத்தொழிலென்னும் கோட்பாட்டை அனுசரித்து எவ்வளவோ அதிகமாக மேலான வகையில் வேலைசெய்ய

வேண்டியிருக்கிறது; அதுகாரணமாக ஐரோப்பாவிலே கூட்டுத்தொழில் சங்கங்கள் மிக விஸ்தாரமாய் ஏற்பட்டிருக்கின்றன; இந்த சங்கங்கள் அபரி மிதமான சிறு கூட்டுத்தொழிலம்சங்களினால் அமைக்கப்பெற்று, லக்ஷத் தணக்கான பவுன் விலைமதிப்புள்ள சொத்தைக்கொண்டு வேலைசெய்து வரு கின்றன; ஆனால் அவ்வளவு பிரமாண்டமான அளவில் கூட்டுத்தொழிலை இத்தேசத்தில் நடத்திவர வெகுகாலம் செல்லும். பரஸ்பரம் பணத்தைக் கடன்வாங்கிக் கடன்கொடுக்கும் ஐக்கிய நாணயச்சங்கங்களும், அவைக ளோடுகூட, சில பங்கீட்டுச் சங்கங்களும், அதாவது, அவைகளைச் சேர்ந்த மெம்பர்களுக்குச் சாதாரணமாய் வேண்டியிருக்கிற சாமான்களையும் வீட்டுச் சாமக்கிரிகளையும் வாங்கிவிற்கும் சங்கங்களும் இருக்கும் பட்சத்தில், அவை களைக்கொண்டே நாம் தற்சமயம் திருப்தி யடையவேண்டி யிருக்கிறது. நமது பங்கீட்டுச் சங்கத்தார்களுங்கூட கடன் கொடுக்கும் பிரிவுகள் ஏற்படு த்தி வேலைசெய்து வருகிறார்கள்; ஆகவே அது கூட்டுத்தொழில் சம்பந்த மாய்க் கடன்கொடுக்கும் அம்சங்களை விவரமாய் விசாரித்தறிவதுடன் தற் சமயம் நாம் திருப்தியடையலாம்.

கூட்டுத்தொழில் முறையில் கடன் வாங்குவதனால் உண்டாகும் அனு பவ சித்தமான அனுகூலங்கள் எவையென்றால்—(1) வட்டி குறைவதும், (2) சிக்கனம் விருத்தியாகும்படி உற்சாகப் படுத்துவதுமேயாம். கூட்டுத்தொ ழில் முறைப்படியான கடனின் முக்கியமான ஓர் அம்சம் விவசாய சம்பந்த மான கடனாகும்; விவசாய சம்பந்தமான கடனென்பது—விவசாயக்காரர்க ளுக்குச் சொந்தமான நிலம் அல்லது சொத்தின்பேரில் பணம் கடன்கொடுப் பதென்று அர்த்தமாகும்; இப்படிக் கடன்கொடுப்பதனால் கடும் வட்டி வாங்கி ஜீவிக்கவேண்டிய ஸாவ்கார் இந்த விவகாரத்தில் இல்லையாகையால், கடன் கொடுக்கும் சங்கத்தார் செலுத்தவேண்டியதெல்லாம் பணத்தை உபயோகிப்ப தற்காகக் கொடுக்கும் தொகையேயாகும். அவர்கள் காட்டும் ஈடானது ஈடு காட்டக் கூடியவைகளில் சிறந்ததான பூமியாயிருப்பதால், அவர்கள் செலுத் தத்தக்க வட்டி வீதம் ஊரில் நடப்பிலிருக்கும் வட்டி வீதங்களுக்கெல்லாம் குறைந்ததாகவே யிருக்குமென்று ஏற்படுகிறது. வட்டி வீதமானது சாதா ரணமாய் உண்டாகக்கூடிய அபாயத்தை அனுசரித்ததாயிருக்கிறது; இந்த அபாயத்துக்கும் ஈடாகக் காட்டப்பட்ட சொத்துக்கும் சம்பந்த மில்லையெ ன்று, இப்போது நாம் பேசிவரும் காரியங்கள் சம்பந்தப்பட்டமட்டில், வைத் துக் கொள்ளலாம். உங்களிடத்தில் கடன் வாங்குகிறவர் நிலத்தை ஈடாகக் காட்டலாம்; ஆனால், அந்த ஈட்டுப்பொருளை நீங்கள் பணமாக்க முடியாவிட் டாலும், அதாவது அதிக செலவுகொள்ளும்படியான வியாஜ்ஜியம் தொடரா மல் உங்களுடைய பணம் திருப்பிச் செலுத்தப்படாவிட்டாலும், அல் லது, இந்த தேசத்திலே அடிக்கடி நேரிடுவதுபோல், உங்களுக்கு ஈடாகக் காட்டப்பட்ட நிலம் உங்களிடம் கடன் வாங்கினவருக்குச் சொந்தமாயிருப் பதோடு மற்றவர்களுக்கும் சொந்தமாயிருந்து அவருக்கு அதில் சரியாய் எவ்

வளவு பாகம் சொந்தமாயுள்ளதென்று உமக்குத் தெரியாமலிருந்தாலும் உங்களுடைய பணம் திரும்பக் கைக்கு வருவதற்கு வெகு காலம் செல்லுமாகையால், உங்களுக்கு ஈடுகாட்டப்படும் சொத்து நிலமாயிருந்தபோதிலும் நீங்கள் அதிக வீதமான வட்டி கேட்பது நியாயமாகும். கடன்கொடுப்பதற்கான ஒருநாட்டுச்சங்கத்தில் இப்படிப்பட்ட அபாயங்கள் அநேகமாய் இல்லை. அதைச்சேர்ந்த மெம்பர்களில் யாராகிலும் ஒருவர் கடன் வாங்கினபோதிலும், அந்தக்கடன் பணத்துக்கு சகல மெம்பர்களின் நிலமும் ஈடாயிருக்கிறது; மேலும் சரியான ஈடு இருந்தாலன்றி கடன் கொடுக்காமலிருக்கும்படி மெம்பர்களே அதிக ஜாக்கிரதையாயிருப்பதனால், ஈடு காட்டின சொத்து எந்த விஷயத்திலாகிலும் குறைவாய்ப் போனாலும், மற்ற மெம்பர்கள் அந்தக்குறைவைப் பரிகரிக்க வேண்டியிருக்கிறபடியால், கடன் கொடுத்தவருக்கு ஏமாற்ற முண்டாவதில்லை. கடன் கொடுப்பதற்கான நாட்டுச் சங்கங்களுக்கு வேண்டியிருக்கும் பணமுழுவதையும் கொடுத்துதவ கவர்ன்மெண்டார் ஆரம்பத்தில் இஷ்டமுள்ளவர்களாயிருந்த போதிலும், ஈடு காட்டப்பட்ட சொத்து சிறந்ததா யிருப்பதையும், அபாயமென்று சாதாரணமாய் எண்ணப்படுகிறவை இவைகளில் அடியோடு இல்லாமலிருப்பதையும் பார்த்து, வட்டிக்குப்பணம் போட்டு வைப்பவர்கள் நமது நாட்டுச் சங்கங்களுக்குத் திரவிய சகாயம் செய்ய ஏராளமாய் முன்வந்திருக்கிறார்களென்று நமக்கு அனுபவத்தில் தெரிந்திருக்கிறது; ஊரார் பணத்தில் சுமார் 15 லக்ஷம் ரூபாய்த் தொகையை வருஷமொன்றுக்கு 100 க்கு $7\frac{1}{2}$ வட்டிவீதம் இந்த மாகாணத்திலுள்ள கிட்டத்தட்ட 600 நாட்டு நாணயச் சங்கங்களுக்கு வாஸ்தவத்தில் கடன் கொடுத்திருக்கிறோம்; இந்தச் சங்கத்தார்கள் தங்கள் மெம்பர்களுக்கு 100 க்கு $9\frac{1}{2}$ வட்டிக்குக் கொஞ்சம் குறைவான வீதத்துக்குக் கடன் கொடுத்து வருகிறார்கள். நாம் இப்போது பேசிவரும் சிறு கடன் தொகைகளுக்கு இந்த மாகாணத்தில் சாதாரணமாய் நடப்பிலிருக்கும் வட்டி வீதம் 100 க்கு 12 க்குக் குறையாமலும் 18 க்கு மேற்படாமலுமுள்ள ஒரு தொகையாகும்; ஆகவே, நமது விவசாயிகள் வழக்கமாய்ச் செலுத்தி வந்திருக்கும் வட்டியைவிட எவ்வளவோ அதிகக்குறைவான வட்டி வீதத்துக்கு அவர்களுக்குக் கூட்டுத்தொழில் முயற்சியால் கடன் சுலபமாய்க் கிடைக்கிறதென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

ஆயினும், கூட்டுத்தொழில் முறையில் கடன் வாங்குவதனாலுண்டாகும் பிரயோசனம் இதுமாத்திரமே அல்ல. அநேக வட்டி என்பது இருபக்கத்திலும் கூர்மையாயுள்ள ஒருவாளுக்கு ஒப்பாகும்; ஏனென்றால், கடன் வாங்குபவருடைய ஈடு தகுதியானதாயிருந்தாலும் இராவிட்டாலும், அவரைக் கெடுத்து விடுவதே அதன் சுபாவமாயிருக்கிறது. அவருடைய ஈடு பீடானதாயிருக்கிற பட்சத்திலே, அப்படிப்பட்ட அதர்ம வட்டி கொடுக்கிறதனால் அவர் முழுகிப்போகிறார்; அவருடைய ஈடு தகுதியானதாயிருக்கிற பட்சத்திலே, அவருடைய சொத்து முழுமையும் முழுகிப் போகிறவரையில் கடன்

கொடுத்தவர் பொறுமையாய்க் காத்துக்கொண்டிருக்கிறார். பணத்தை யாரிடத்திலிருந்து திரும்பப்பெறுவது சந்தேகமாயிருக்கிறதோ அவரை மாத்திரமே காலம் தவறாமல் பணம் செலுத்தி வரும்படி அதர்மவட்டி வாங்குகிறவர் கட்டாயப்படுத்துவார்; அப்படிப்பட்ட சந்தேகம் எதுவும் இராதபட்சத்திலே, அவர் தவணை கடந்து போகும் வரையில் கடன்வாங்கினவர் பணம் செலுத்தாமலே இருக்கும்படி பார்த்துக் கொள்ளுவார். ஆனால், கடன் கொடுப்பதற்கான ஒரு நாட்டுச் சங்கத்தாரோ சகல விஷயங்களிலும் காலம் தவறாமல் பணம் செலுத்திவரும்படி கட்டாயப்படுத்துகிறார்கள்; இவ்விஷயத்தில் அவர்கள் தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்கிறார்கள்; ஆகவே, காலம் தவறாமல் பணம் செலுத்திவரும் வழக்கத்தை யுடையவர்களும், மெதுவாய்ப் பணம் செலுத்தும் வழக்கத்தையுடையவர்களும் தங்களுடைய கடன்களை சீக்கிரத்தில் திருப்பிச் செலுத்தி கடனிலிருந்து மீளும்படி அவ்விருவர்களையும் ஒரேமாதிரி கட்டாயப் படுத்துகிறார்கள். இன்னொரு பிரயோசனமும் உண்டாகிறது. அதர்மவட்டி வாங்குகிறவர் தாங்கள் கொடுத்த கடன் தொகைகளை நிஷ்கரிஷையான தவணைகளாக வாங்குவர்களேயொழிய மற்றப்படி வாங்கிக்கொள்ளமாட்டார்கள்; கடன் கொடுக்கும் சங்கத்தாரோ கடன் கொடுத்த தொகை சில்லறைச் சில்லறையாகத் திருப்பிச் செலுத்தப் பட்டாலும் அதை வாங்கிக்கொண்டு, அதற்கு எதிர்வட்டி கழித்துக் கொடுக்கிறார்கள்; ஆகவே, சொற்ப விவசாயிகள் தாங்கள் ஏதாவது தனித்தனியாய், ரூபாய் மிகுத்தக் கூடியபோதெல்லாம் அதைச் செலுத்தி, அதி தயாளுவான ஒரு ஸாவ்காரிடத்தில் தாங்கள் எவ்வளவு காலத்துக்குள் பணம் திருப்பிக் கொடுத்துக் கடனைத்தீர்த்துக்கொள்ள முடியுமோ அதைவிட இன்னும் சொற்ப காலத்திற்குள்ளாகவே தங்களுடைய கணக்கைத் தீர்த்துக்கொள்ளலாம்.

கடன்கொடுப்பதற்கான நாட்டுச் சங்கத்தார் தங்களுடைய மெம்பர்களிடமிருந்தே டிபாஸிட் தொகைகள் கட்டிக்கொள்வதனால், அவருடைய சம்பாதனையிலிருந்து பணம் சேர்த்துவைக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள்; மேலும், இந்தப்பணத்தை மறுபடியும் இதர மெம்பர்களுக்குக் கடனாகக் கொடுக்கிறபடியால், டிபாஸிட் தொகைகளின்மேல் நல்ல வட்டி கொடுக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

(3) இன்னவிதமாய் சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன வென்பது.

தற்காலத்துக்கும் ஜனங்கள் தாங்களே ஸ்தாபனங்களை நிர்வகிக்கக் கற்றுக்கொள்ளுகிறவரையிலும் கவர்ன்மெண்டார் ஒரு பெரிய சிப்பந்தியை ஏற்படுத்திப் பராமரித்து வருகிறார்கள்; இந்தச் சிப்பந்தியில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு ரெஜிஸ்ட்ராரும், அவருக்கு உதவி உத்தியோகஸ்தர்களும் அவர்களைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள்; 30 சங்கங்

களுக்கு ஒரு இன்ஸ்பெக்டர் வீதம் சென்னை மாகாணத்தில் இன்ஸ்பெக்டர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஜனங்கள் சங்கங்கள் ஏற்படுத்தும் காரியத்துக்காக ஒன்றுசேர இஷ்டப்படும் இடங்களிலெல்லாம் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்படுத்துவதும், கணக்கு வைப்பதையும் கடவடிக்கை முறையையும் அவர்களுக்குக் கற்பிப்பதும் அவர்களுடைய விவகாரங்களைக் கவனித்து மேற்பார்வையிட்டுத் தணிக்கை செய்வதுமே இந்த சிப்பந்தியின் கடமையாகும். இந்த வேலைக்கெல்லாம் கவர்ன்மென்டாருக்கு அதிகபணம் பிடிக்கிறது; இதற்குச் சங்கத்தார் ஒன்றும் கொடுப்பதில்லை; இது மாத்திரமே யல்லாமல், சாதாரணமாய்ப் பணம் கடன் கொடுக்கும் லேவாதேவிகளில் சட்டப்படி செலுத்தவேண்டிய முத்திரைக் கட்டணங்களையும் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணங்களையும் இந்த சங்கத்தின் மெம்பர்கள் செலுத்தவேண்டியதில்லை யென்று நிவாரணையும் செய்திருக்கிறது; ஒரு கிராமத்தில் குடியிருக்கும் ஜனங்களில் சிலர் ரெஜிஸ்ட்ராருக்காகிலும் அந்த சிப்பந்தியைச் சேர்ந்த யாதொருவருக்காகிலும் சங்கம் ஏற்படுத்திக்கொடுக்கும்படி விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்; ஒரு சங்கம் ஏற்படுத்துவதற்காகச் செய்யவேண்டிய காரியமெல்லாம் இதுவே. சாதாரணமாய் ஒரு கிராமமானது இதர கிராமங்களோடு, முக்கியமாய் தூரத்திலுள்ள கிராமங்களோடு, ஒரு சங்கத்தை ஏற்படுத்தும் காரியத்துக்காகச் சேரமுடியாது; ஏனென்றால், கடன் கொடுப்பதற்கான நாட்டுச் சங்கங்களின் அந்தியாவசியமான கோட்பாடு என்னவென்றால், பரஸ்பரம் ஜாக்கிரதையாய் இருந்து வருவதே; மேலும், ஜனங்கள் தங்களுடைய கிராமத்திலுள்ள இதர நபர்களின் திரவிய சம்பந்தமான நிலைமையைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருந்தாலும், அவர்கள் தங்களுக்கு அடுத்த கிராமமாயிருந்தபோதிலும் அந்த கிராமத்தில் என்ன நடக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டிராமல் இருக்கலாம் என்று அனுபவ மூலமாய்க் கண்டறியப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்தாரும் தங்கள் கிராமத்திலேயே ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொள்ளும்படி அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறது; அப்படியிருக்கச் சுற்றிலும் ஆறு அல்லது ஏழுமைல் தூரத்துக்குள்ளே அந்தக் கிராமத்துக்கு அக்கம்பக்கத்தில் எத்தனை கிராமங்கள் இருக்குமோ அத்தனை கிராமங்களிலே அத்தனை சங்கங்களை ஸ்தாபிக்கும்படி உற்சாகப்படுத்துவதும் நல்ல ஏற்பாடுதான்; ஏனென்றால், ஒருதொகுதியாக 10 அல்லது 12 சங்கங்கள் சேர்ந்திருப்பது எந்த தாலூகாவில் அந்தபடி சேர்ந்திருக்கிறதோ அந்த தாலூகாவி லுள்ளவர்களுக்கு நல்ல பொருட்பாடமாயிருக்கிறது; மேலும் அக்கம்பக்கத்தில் தாங்கள் பின்பற்றி நடக்கக்கூடிய மாதிரிச் சங்கங்கள் உடையதாயும் தங்களுடைய அக்கம்பக்கத்திலுள்ள இதரசங்கங்களுக்குத் தாங்களே மாதிரிச் சங்கங்களாய் இருப்பதுமான சங்கங்கள் கூட்டத்தொழில் சம்பந்தமானகோட்பாடுகளை முன்னிலும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகின்றன.

இந்தச் சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களும் தங்களுடைய அதிகாரவரம்புக்குள்ளே சங்கங்கள் ஏற்படுத்த விரும்பும் இதர நபர்களும் சங்கங்கள் ஏற்படுத்துவது சம்பந்தமாய் அனுபவரீதியாயுள்ள இந்த விஷயங்களை ஞாபகத்தில் வைத்திருப்பது நல்லது.

கூட்டுத் தொழில் சம்பந்தமாய்க் கடன்வாங்குவது.

("சிறு கைப்பற்று நிலக்காரர்களை"ப்பற்றி மிஸ்டர் ப்ராட் எழுதிய புஸ்தகத்திலிருந்து எக்ஸ்ட்ராக்ட்.)

"போதுமான மட்டில் குறைந்தவட்டிக்கு மூலதனம் சுலபமாய்க் கிடைக்கும்படி செய்யக்கூடிய ஒரு பிரயோசனகரமான ஏற்பாடானது வியாபாரிகளைக் காட்டிலும் விவசாயிகளுக்கு இன்னும் அதிக அவசியமானதா யிருக்கிறது.

நிலத்துக்குரியவர் பண்ணை ரஸ்தாக்களிலும் கட்டிடங்களிலும் வடிகால்களிலும் சீர்திருத்த முதலியவைகளிலும் அனேகமாய் விசேஷபணத்தைச் செலவு செய்தபிறகு தமக்குக் கிடைக்கும் வாடகைக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டியவராயிருக்கிறார்; பயிரிடும் குடியானவனும் தன்னுடைய நிலத்தை உழுது பண்படுத்தி விதை விதைத்த பிறகு தன்னுடைய பயிர் சுபாவமாய்க் காலக்கிரமத்தில் வளர்ந்து முதிருகிறவரையிலே காத்துக்கொண்டிருக்கவேண்டியவனாயிருக்கிறான்; ஆனால், பண்ணைக்கு உபயோகமாகக் கால் நடைகளை வைத்து வளர்க்கிறவனோ அம்மாதிரி கஷ்டத்துடன் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை; சந்தை கூடும்போது அவனுக்கு லாபம் கிடைக்கத் தொடங்கி விடுகிறது. ஆகவே, ஆரம்பத்தில் மூலதனம் அவசியமாய் வேண்டியிருக்கிறது; ஷை வாடகை அல்லது லாபம் கிடைக்கிற வரையிலே வீட்டுச்செலவுகள் முதலிய செலவுகளுக்காகவும், (கிருஷிகர் விஷயத்திலே) ஆயுதங்கள், உழவுக் கால்நடைகள், உணவுப் பொருள்கள், எரு முதலியவைகளைப்போன்ற பண்ணைக்கு அவசியமான புதிய சாமான்களுக்காகவும் பணம் வேண்டியதாயிருக்கிறது. அல்லாமலும், அறுவடையான பிறகுங்கூட, பயிரிடுகிறவர் ஊர்வலை மெத்தவும் அனுகூலமாயிருக்குங் காலங்களிலே தம்முடைய மாசூலை விற்கும் பொருட்டு அதைச் சிறிது காலம் வைத்திருப்பது பிரயோசனகரமாயிருக்குமென்று எண்ணலாம்; ஆனால் அவருக்குப் போதுமான திரவியம் இருந்தால்தான் அவர் அந்தப்படி செய்யக்கூடும்.

சாதாரண ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகள் மூலமாகப் பணம் கடன்வாங்குவதற்கு நடுத்தரமாயுள்ள பயிரிடும் கிருஷிகருக்கோ அல்லது சொற்ப விவசாயிக்கோ இருப்பதைக்காட்டிலும் நடுத்தரமாயுள்ள நிலத்துக்குடையவருக்கு சுபாவத்திலே அதிக சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன; அப்படியிருந்தும்

ஐரோப்பாவிலுள்ள சில தேசங்களில் அதிக பெரிய நிலத்துக்குடையவர்களுக்கும் அதிக பெரிய கிருஷிகர்களுக்குங்கூட வெகு காலமாக பிரத்தியேகமாய்ப் பாங்கிகள் இருந்திருக்கின்றன. உதாரணமாக, ஹங்கேரி என்னும் தேசத்தில், அவ்விடத்திய விவசாய நிலைமைகளுக்குத் திருஷ்டாந்தமாயுள்ள மிகப் பெரிய பூஸ்திதிகள் விஷயமாய் விவசாய சம்பந்தமான கடன் கொடுக்கும் ஏற்பாடு ஆதியிலேயே அமுலிலிருந்துவந்தது. ஹங்கேரியிலுள்ள பெரிய பண்ணைகள் அல்லது சொத்துக்களின் சொந்தக்காரர்கள் அனுபோகதாரர்கள் ஆகிய இவ்விருவர்களும் தங்கள்தங்களுக்குரிய காரியங்களுக்குப் பொருந்தும்படியாக பணவிலைவாதேவி நடத்தும் சௌகரியங்களைப் பெற விரும்பினார்கள்; ஆகவே 1862-ம்வருஷத்தில் அவர்கள் நாஷனல் லாண்ட் பாங்க் என்று ஒரு பாங்கை ஏற்படுத்தினார்கள்; இந்த பாங்கானது வரையறுக்கப்படாத பரஸ்பர உத்தரவாதத்தை ஆதாரமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது; நிலச்சொத்தின் பேரில் அவர்களுக்கு சுலபமாய்ப் பணம் கடனாகக் கிடைக்கும்படி செய்வதே அந்த பாங்கின் நோக்கமாயிருந்தது. இந்த பாங்கானது மெத்தவும் பலிதமாய் வேலை செய்யவே, அதற்குப்பின் 1879-ம்வருஷத்தில் இன்னொரு பாங்க் ஏற்படுத்தப்பட்டது; அந்த பாங்குக்கு ஸ்மால் பார்மெர்ஸ் நாஷனல் க்ரெடிட்பாங்க் என்றுபெயர். நிலத்துக்குடையவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கான சங்கங்கள் ஒருநூற்றாண்டுக்கதிகமானகாலமாக ஜெர்மனிதேசத்தில் ஏற்பட்டிருக்கின்றன. ப்ரான்ஸ் தேசத்தில் க்ரெடிட் பான்ஸியர் (Credit Foncier) என்னும் பாங்கானது 1852-ம்வருஷத்திலே ஸ்தாபிக்கப்பட்டது; இதனால் நிலத்துக்குடையவர்களும் சொத்துக்குரியவர்களும் கொதுவை மூலமாகக் குறைந்த வட்டிக்குப் பணம் கடன்வாங்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள்; மேலும், இந்த பாங்கியிலே மூலதனத்தை மீட்டுக்கொள்ளுவதுபட வாங்கினகடன் தொகையை வருஷாந்த வர்த்தனையாகத் திருப்பிச் செலுத்துவதற்குச் சௌகரியங்கள் ஏற்படுத்தியிருக்கிறது.

நிலத்துக்குடையவர்கள் விஷயத்திலும் சொத்துக்குரியவர்கள் விஷயத்திலும் பெருத்த கிருஷிகர்கள் விஷயத்திலுங்கூட இந்த விசேஷ பாங்கிகள் இருப்பது உசிதமென்று கண்டறியப்பட்டிருக்கிறபட்சத்திலே, பயிரிடும் சொந்தக்காரர்களுக்கும் வேலை செய்யும் கிருஷிகர்களுக்கும் சொற்ப விவசாயிகளுக்கும் இந்த பாங்கிகள் ஏற்பட்டிருப்பதற்கு இன்னும் விசேஷ ஆவசியகம் இருப்பதாகத் தோற்றும்; ஏனென்றால், பின் சொன்னவர்களுக்கு அனுகூலமான ஷரத்துகளின்படி புதிதாய் ஒரு சிறு மூலதனத்தைக் கடன் பெறுவது சாத்தியமாயிருந்தால், அது அவர்களுக்கு அநேகமாய் ஒரு சிரேஷ்டமான உதவியாயிருக்கலாம். இம்மாதிரி கடன்வாங்க இஷ்டப்படுகிற ஒருவருக்கு அடியிற் கண்டபடி ஒரு கஷ்டம் ஏற்படக்கூடும்; அந்தக் கஷ்ட மென்னவென்றால், சாதாரணமாய்க் கடன் கொடுக்கும் ஒரு ஸாவ்காருக்குத் திருப்திகரமாயிருக்கக்கூடிய ஈடாக எதையும் அவர் காட்ட முடியாமலிருப்பதே; இன்னொரு கஷ்டமென்னவென்றால், ஈடுகாட்டும் விஷயத்திலே சாதாரண ஸாவ்காருக்குத்

திருப்தியுண்டாகும்படி செய்யக்கூடுமானாலுங்கூட, இந்த விவகாரமானதி மெத்தவும் சொற்பமானதாயிருப்பதனாலே அது விஷயத்தில் கஷ்ட மெடுத்துக்கொள்ள அவருக்குப் பிரிய மில்லாமலிருக்கலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சொற்ப விவசாயிகள் வெகு சிறிய கடன் தொகை பெற்றவேண்டியதாயிருந்தாலுங்கூட அதற்கும் தங்களுடைய நாணயத்தைத் தவிர வேறே ஈட்டுப் பொருள் எதுவும் இல்லாதவர்களாயும் இதர வகைகளில் பணம் கிடைப்பதற்கு வகையில்லாதவர்களாயும் அனேக தடவைகளில் அதர்ம வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் கையிலாவது சிக்கிக்கொள்ளுகிறார்கள்; இல்லாவிட்டால், வியாபாரிகளின் தாட்சிணியத்துக் குட்பட்டவர்களாய் அவர்களிடமிருந்து கடனுக்குச் சாமான்வாங்கவேண்டியவர்களாகவாவது இருக்கிறார்கள்; இந்த வியாபாரிகள் தங்களுக்கு லாபம் கொடுக்கக்கூடிய ஷரத்துக்களின்மேல் அவர்களுக்கு நீண்ட காலத்துக்குக் கடன் கொடுப்பதோடுகூட, அனேகமாய் நிர்ப்பந்த மேற்படுத்தித் தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு சாமான் கொடுத்து கீழ்த்தரமான சாமான்களுக்கு அதிக விலைபோட்டுப் பின்னும் லாபம் சம்பாதித்தும் வருகிறார்கள்.

இவ்விதமான சந்தர்ப்பங்கள் காரணமாக ஜெர்மனிதேசத்திலே ஒரு விதமான ஐக்கிய நாணய ஏற்பாடு சுமார் அரைநூற்றாண்டுக்கு முன்னே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது; நாளது தேதியில் இந்த தேசத்திலே நூதனமாய் ஏற்பட்டு வரும் சிறு கைப்பற்று நிலக்காரர்களின் க்ஷேமத்தில் அக்கறையுள்ள சகலர்களும் இந்த ஏற்பாட்டைக் கவனிக்கும்படி விசேஷமாய் விமரிசை செய்யலாம்.

பிரஸ்தாப ஏற்பாட்டின்படி இரண்டு பிரதானவகையைச் சேர்ந்த ஐக்கிய நாணய பாங்கிகள் ஏற்படுத்தப்பட்டன; அவைகளை முறையே கண்டுபிடித்தவர்களின் பெயர்களை அனுசரித்து அவைகளுக்கு (Schulze Delitzsch) ஷுல்ஸ் டெலிட்ஸ்ச் பாங்கிகள் என்றும் (Raiffeisen) ரைபைஸென் பாங்கிகளென்றும் பெயரிடப்பட்டது.

சொற்பகடன் தொகைகள் வேண்டியிருக்கிற சிற்பர்களுக்காகவும் வியாபாரிகளுக்காகவும் உத்தேசித்து ஷுல்ஸ் டெலிட்ஸ்ச் நாணய பாங்கிகள் முதலியமாய் ஏற்படுத்தப்பட்டன; மூன்றுமாதமுதல் ஒன்பதுமாத காலத்துக்கு ப்ராமிஸெரி நோட்டுகளென்னும் கடன்பத்திரங்களின் மேலாகிலும் பில்லுகளின் மேலாகிலும் இந்தக்கடன் கொடுக்கப்படும்; பங்குகளுக்காக சந்தாவெனவுமிருக்கும் மெம்பர்களின் உத்தரவாதமானது இப்போது பெரும்பாலும் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

சிறு விவசாய சமூகத்தாரின் ஆவசியகங்களைப் பூர்த்தி செய்வதற்காகவென்றே உத்தேசித்து ஏற்படுத்தப்பட்ட பாங்கிகள் ரைபைஸென் பாங்கிகள்தான்; ஆகவே, அவைகள் சம்பந்தமாகத்தான் நாம் இங்கே பேசப்போகிறோம். இந்த வகையைச் சேர்ந்த பாங்கிகளில் பங்குகள் வெளியிடுவதில்லை; மேலும், பிரவேச கட்டணங்கள் மூலமாகவும், சந்தா தொகைகள் மூலமாக

வும், மெம்பர்கள் அல்லது வெளியார் கட்டும் டிபாஸிட் தொகைகள் மூல மாகவும், அவசியமானால் கடன் தொகைகள் மூலமாகவும் மூலதனம் சேகரிக் கப்படுகிறது. டிபாஸிட் தொகைகளின் மேலாவது வாங்கியிருக்கும் கடன் தொகைகளின் மேலாவது செலுத்தும் வட்டிக்கும் மெம்பர்களுக்குக் கடன் கொடுத்திருக்கும் தொகைகளின்மேல் வாங்கப்படும் வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தினால் சொற்ப லாபம் கிடைக்கிறது; ஈவுத்தொகைகள் செலுத் தப்படுவதில்லை யாகையால், இந்த லாபமானது சேமநிதியுடன் சேர்க்கப் படுகிறது. உத்தரவாதம் வரையறுக்கப்படாம லிருக்கிறது; மேலும், வாஸ் தவமாய் உண்டாகக்கூடிய அபாயமானது மெத்தவும் குறைந்து போயிருந் தும், ஏதாவது நஷ்டமுண்டானால் அதற்கு மெம்பர்கள் கூட்டாகவும் தனித் தனியாகவும் உத்தரவாதிகளா யிருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ரைபை ஸென் பாங்காரும் ஒரு சிறு விஸ்தீரணத்தில்தான், சாதாரணமாய் ஒரே ஒரு கிராமத்தில் தான் வேலை நடத்திவருகிறார்கள்; அங்கே கடன் வாங்குகிற வருடைய யோக்கியதையும் ஆவசியகங்களும் நிலைமையும் அவருடன்கூட அந்தக்கிராமத்தில் வசிக்கும் மற்றவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும்; ஏதேனும் நஷ்டமுண்டானால் அந்த நஷ்டத்துக்கு இவர்களே உத்தரவாதி யாவார்கள். யாராகிலும் ஒருவரைப்பற்றி அவருக்கு அக்கம் பக்கத்திலுள் ளவர்களுக்கு நம்பிக்கை யில்லா திருக்கும் பட்சத்திலே, அவர் அந்த சங்கத் தைச் சேருவதற்கு அனுமதி கொடுக்கப்படவே மாட்டாது. ஆகையால், ரைபைஸென் பாங்கியினால் திரவியலாபம் கிடைப்பதோடுங்கூட நல்லொழுக் கம் விருத்தியாவதற்கும் இடமிருக்கிறது. கடன்வாங்குபவருடைய அந்தஸ்து சீரடையும் என்றும், அவர் தமக்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தக் கூடியவரா யிருப்பாரென்றும் ஒரு நியாயமான பொறு ப்பு ஏற்படக் கூடியதாய் உற்பத்தி யுண்டாக்கத்தக்க காரியங்களுக்காக வென்றே கடன் கொடுக்கப்படுகிறது இதுவுமல்லாமல், சாதாரணமாய் கடன் வாங்குகிறவர் தம்மோடுகூட வசிக்கும் ஒருவர் அல்லது இரு வரைத் தமக்கு ஜாமீன்தாரர்களாயிருக்கும்படி ஏற்படுத்த வேண்டியவரா யும் இருக்கிறார். ஆகவே, இந்த சங்கங்களுக்கு வெகுசாய் நஷ்டமென்பதே ஏற்படுவது கிடையாது.

யோக்கியதையையே மூலதனமாகக் கொள்வதுதான் இவ்விதமாய் லேவா தேவி நடத்தும் ஏற்பாட்டின் சாராம்சமென்று நன்றாய்ச்சொல்லி யிருக்கி றது. நம்பத்தக்க ஒரு மனிதனுக்கு தன்னுடைய நற்பெயரைவிட வேறே ஈடு எதுவும் காட்டுவதற்கு இல்லாம லிருக்கிறபோது அவருடைய யோக் கியதைக்கு இந்த ஏற்பாட்டினால் ஊர் விலைப்படி ஒருமதிப்பு ஏற்படுகிறது. ஒரு ரைபைஸென் பாங்கியிலிருந்து சொற்பதொகை கடன்வாங்க விரும்பும் சிறு கைப்பற்று நிலக்காருக்கோ அல்லது உழைப்பாளிக்கோ இந்த நற்பெயரே வாஸ்தவத்தில் ஆஸ்தியாய்விடுகிறது; நிலம் அல்லது சொத்தின் சொந்தக் காரர் ஒருவர் பூஸ்திதியின் மேலாவது கல் சுண்ணாம்பு இவைகளின் மேலா

வது ஆயிரம் பவுனோ அல்லது அதற்கதிகமாகவோ கடன்வாங்கவேண்டி யிருந்தால் சாதாரண ஒரு ஸாவ்காரர் அந்த ஆஸ்தி முதலியவைகளை எவ்வ ளவு மதிப்பாரோ அவ்வளவுமதிப்பு ஷை நற்பெயருக்கும் ஏற்படுகிறது.

ஆயினும், ரைபைஸென் பாங்கிகள் தனித்தனியாய் வேலை நடத்திக்கொ ண்டிருக்கிறவரையிலே அவைகளுக்கு இருக்கும் பிரதிகூலமானது பயிரிடுகிற வர் பிறரோடு சேராமல் தானே தனியாய்ப் பயிரிடுவதனால் எவ்வளவு பிரதி கூலம் உண்டாகுமோ அதற்குக் குறைவாயில்லை யென்று இந்த பாங்கிகள் வாஸ்தவத்தில் வேலைசெய்வதனால் உண்டான அனுபவத்திலிருந்து சீக்கிரத் தில் தெரியவந்தது; பயிரிடுகிறவர்கள் சேர்ந்து வேலைசெய்வது எவ்வளவு அவசியமோ அவ்வளவு இந்த பாங்கிகளும் சேர்ந்து வேலைசெய்வது அவ சியமாயிருக்கிறது. மாகாண ஸென்ட்ரல் பாங்கிகளை ஏற்படுத்தி கூட்டான உத்தரவாதத்தை ஆதாரமாகக்கொண்டு அந்த பாங்கிகளுக்கு வேண்டியிருக் கிற தொகை முழுவதையும் சர்ப்பரா செய்வதற்கு அவசியமான பணத் தைச் சேகரிப்பது முன்னிலும் அதிக சுலபமா யிருப்பதாகக் கண்டறியப் பட்டது. இந்த ஸென்ட்ரல் பாங்கார் தாங்களும் இன்னும் பெரிய சங்கங்க ளாகச் சேர்ந்து கொள்ளலாம். ப்ரஷ்ஷியாதேசத்திலே ப்ரஷ்ஷியன் ஸென் ட்ரல் ஸ்டேட் பாங்கார் கூட்டாய் ஏற்பட்ட இந்தச் சங்கத்தாரோடு மாத்தி ரமே, 24,00,000 பவுனிலிருந்து கடன் கொடுக்கும்போது ஏதேனும் லேவா தேவிகள் நடத்திவருவார்கள்; ப்ரஷ்ஷியாதேச துரைத்தனத்தார் பிரதேச விவசாய நாணய பாங்கிகளை (இடையிலுள்ளவர்கள் மூலமாய்) நாளாவர்த்தி யில் ஆதரித்து வருவதற்காக (முதலில் 2,50,000 பவுனையும் பிற்பாடு 10,00,000 பவுனையும் அதன்பிறகு) மேலேசொன்ன 24,00,000 பவுனையும் ஷை பாங்கார்வசம் கொடுத்துவைத்திருக்கிறார்கள்.

இவ்விஷயமானது கேட்பவர்கள் மனதைக் கவரத்தக்க விஷயமாயிரு ந்த போதிலும், விவசாய சம்பந்தமாய்க் கடன் கொடுப்பது விஷயமாயும், இதனால் உண்டாயிருக்கிற துன்பங்களையும் கஷ்டங்களையும் ஒரே சரியாய்ப் பரிகரிக்கும் பொருட்டு—முக்கியமாய்க் கவர்ன்மென்டார் உற்சாகத்தோடு செய்த ஒத்தாசையைக்கொண்டு—அனுசரிக்கப்பட்ட ஏற்பாடுகள் விஷயமா யும் ஐரோப்பாகண்டத்திலுள்ள பற்பல தேசங்களின் நிலைமையைக் குறித்து என்னிடத்திலுள்ள விஸ்தாரமான விவரங்களை இங்கே மறுபடியும் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இரண்டொரு உதாரணங்களை வெகு சுருக்கமாய் எடுத்துச் சொன்னால் போதும்.

பற்பல தேசத்தாரும் கூட்டுத் தொழில் சம்பந்தமாய் உடன்பட்டு 1907 -ம் ஆண்டு ஸெப்டெம்பர் மாதத்தில் நடத்தின க்ரிமோனா காங்க்ரெஸ் என்னும் மகா சபையிலே ஹங்கரி தேசத்தில் ரைபைஸென் பாங்கிகளை ஏற்படுத்துவ தற்கு இருந்த அத்தியாவசியகம் இன்ன தென்று காட்டப்பட்டது; அந்த

சமயத்தில், விவசாய பாங்கிகள் சம்பந்தமான முயற்சியில் விசேஷ சிரத்தை பாராடிக்கொண்டு வருகிற மிஸ்டர் எச். டபில்யு. உல்ப் என்பவர் — "ஹங்கரி தேசத்திலுள்ள நாட்டு ஜனங்கள் கிராம வியாபாரிக்கு அதர்மவட்டி கொடுத்து அதனால் பாழடைந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள்" என்று காலம் சென்ற கவுன்ட் அலெக்ஸாந்தர் கரொலி என்பவர் தமக்கு சுவ்விதமாய் உறுதியாய்ச் சொன்னாரோ அதை வெளிப்படுத்தினார். லம்பார்டி, வெனிஷியா, பீட்மான்ட் ஆகிய இவைகளில் பெரும்பாகம் முழுவதும் கிராமபாங்கிகள் ஏற்பட்டு விட்டதனால் "அதர்மவட்டிக்குக் கடன் கொடுக்கிறவர்கள் நாட்டை விட்டே ஓடிப்போய் விட்டார்கள்" என்று மிஸ்டர் போல்டன் கிங் என்பவரும் மிஸ்டர் தாமஸ் ஓக்லி என்பவரும் தாங்கள் எழுதிய "நாளது தேதியில் இடலி" என்னும் புத்தகத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆஸ்திரியா தேசத்தில் விவசாய சம்பந்தமாயுள்ள கூட்டுத் தொழில் பாங்கியாரெல்லாம் சேர்ந்து வருஷம் ஒன்றுக்கு சுமார் 2,00,00,000 பவுனுக்கு லேவாதேவி நடத்திவருகிறார்கள். ப்ரான்ஸ் தேசத்திலே கவர்ன்மென்டார் (Crédit Mutuel Agricole) க்ரெடிட் ம்யூசுவல் அக்ரிகோல் என்னும் சங்கத்தாருக்கு 100 க்கு 3 வட்டி வீதம் பணம் கடன் கொடுக்கிறார்கள்; (1908-ம் ஆண்டிலே மொத்தத்தில் 16,41,000 பவுன் கடன் கொடுக்கப்பட்டது); இந்தச் சங்கத்தார் குடியானவர்களுக்கு 100 க்கு 4 வீதம் கடன் கொடுக்கிறார்கள்; பண்ணை வேலை திறமையாய் நடந்ததனால் உண்டான பிரயோசனம் "மதிப்பிட முடியாத"தென்று 1909-ம் ஆண்டு மார்ச் மீ 19உ வெளிவந்த டைம்ஸ் பத்திரிகையின் நிருபநேசர் ஒருவர் சொல்லியிருக்கிறார்.

1909-ம் ஆண்டு பெப்ரவரி மீ வெளிவந்த "பத்தொன்பதாம் நூற்றாண்டும் அதற்குப் பின்னும்" என்னும் பத்திரிகைக்கு "நிலமதிப்பு ஏறபடுத்துவது" என்னும் விஷயத்தைப்பற்றி பார்லமென்ட் சபையில் மெம்பரான மிஸ்டர் ஹாரோல்ட் காக்ஸ் என்பவர் எழுதியனுப்பிய வியாசத்திலே இதன் பொதுவான தன்மை இன்னதென்று நன்றாய்த் தொகுத்துக் கூறியிருக்கிறார். அந்த வியாசத்தில் அவர் சொல்லுவதாவது:—

"நமக்கு வேண்டியது நிலத்தைச் சுலபமாய் அடைவதல்ல; மூலதனம் முன்னிலும் சுலபமாய் கிடைப்பதே நமக்கு வேண்டியதாகும். எவராகிலும் அட்லான்டிக் சமுத்திரத்தை தாண்டக்கூடிய தைரியமும் துணிவும் உடையவராயிருந்தால் அவர் கனடா தேச துரைத்தனத்தாரிடமிருந்து 150 ஏகர நிலம் இல்வசமாய் அடையலாம்; ஆனால் கனடா தேசத்திலாகிலும் இங்கிலாந்து தேசத்திலாகிலும் நிலம் கிடைப்பதாயிருந்தால் அதைப் பயிர் செய்வதற்கு மூலதனம் கிடைக்காத பட்சத்திலே, அந்த நிலம் பிரயோசன மற்றதாயிருக்கும். ஆள்களை வேலைக்கு வைத்துக்கொள்வதைக் கவனிக்கும் போது வாடகையை அடியோடு ஒழித்து விடுவதைவிட வட்டி வீதத்தைச் சிறிது மட்டில் குறைப்பதுவிசேஷமாய் முக்கியமானதாகும்."

ஐக்கிய ராஜ்ஜியத்திலே, விவசாய காரியங்களுக்காகக் கடன் கொடுப்பது சம்பந்தமாய் என்னென்ன வேண்டுமோ அவைகளை யெல்லாம் பூர்த்திசெய்யும் விஷயத்தில் அயர்லாந்திலே விசேஷ அபிவிர்த்தி உண்டாயிருக்கிறது; வெகுசீராய் அயர்லாந்தில் தான் அப்படிப்பட்ட அபிவிருத்தி விஷயமாய் விசேஷ குறைவு ஏற்பட்டிருந்தும், அவ்விடத்தியே அந்த அபிவிருத்தி உண்டாயிருக்கிறது.

விவசாய சம்பந்தமாய் அயர்லாந்து தேசத்தில் ஏற்பாடாயிருக்கும் ஐரிஷ் அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் சங்கத்தார் அந்த தேசத்துக் குடியானவர்களைப் பலவித துக்ககரமான நிலைமைகளினின்றும் மீட்டுக்கொண்டிருக்கிறார்கள்; அப்படிப்பட்ட நிலைமைகளில் அதிவிசேஷ அழிவுக்கு ஹேதுவான அம்சமென்னவென்றால், அந்தக் குடியானவர்கள் அயர்லாந்து தேசத்திலே * "காம்பீன் மனுஷர்" என்று சொல்லப்படும் வியாபாரிகள் கையில் சிக்கிக்கொண்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்ததே; அயர்லாந்து தேசத்திலே ஏலங்கூறுகிற, பேரம் பேசி தரகு சம்பாதிக்கிற அல்லது மளிகைச் சரக்குகளில் வியாபாரம் செய்கிற தொழிலோடு கூட வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழிலையும் நடத்துகிற வர்த்தருக்கு காம்பீன் மனுஷர் என்று பெயர். இந்தக் குடியானவர்களுக்கு அடிக்கடி சிறு கடன் தொகைகள் வேண்டியிருந்தபடியால் அவர்கள் ஷை வியாபாரியினிடம் பணம் கடன் வாங்குவது வழக்கமாயிருந்தது; மேலும், அவர்கள் இந்த வியாபாரியினிடத்திலே தங்களுடைய மாசூலையும் பேரம் பேசிக் கொடுத்து, விவசாய சம்பந்தமாகவோ அல்லது வீட்டுக் காரியங்களுக்காகவோ தாங்கள் அவரிடத்தில் வாங்கின சாமான்களுக்காக அவருக்குக் கடன் பட்டும் வந்தார்கள். ஆனால் அந்தக் குடியானவர்கள் கணக்குகள் ஒன்றும் வைப்பதில்லை; ஆகவே, ஷை வியாபாரியானவன் எவ்வளவு வரையில் தன்னுடைய பணத்தை திருப்பிக் கேட்காமலே யிருப்பது தனக்கு நல்லதென்றோ உசிதமாயிருக்குமென்றோ எண்ணுகிறானோ, அவ்வளவு வரையில் கேட்காமல் இருந்துவிட்டு பிற்பாடு இந்தக் குடியானவர்களை தொகை பூராவும் செலுத்தும்படி கேட்கிற வரையில், அவர்கள் தங்களுக்கு இவ்வளவு கடன் இருக்கிறதென்று சாதாரணமாய்த் தெரிந்து கொள்ளுவதில்லை. இம்மாதிரி சந்தர்ப்பங்களிலே கடனாகக் கொடுக்கப்பட்ட தொகைக்கு வாங்கப்படும் வட்டியானது 100 க்கு 60 வீதம் இருக்குமென்று தெரியவருகிறது. குடியானவர்கள் வாங்கின கடனை திருப்பிச் செலுத்த முடியாவிட்டால், இந்த வியாபாரியானவன் அவர்களுடைய நிலத்தையும் உழவுக் கால் நடைகளையும் தன் சுவாதீனப்படுத்திக் கொள்ளுவான்; அப்போது அந்தக்குடியானவர்கள் யுனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் ஐக்கிய மாகாணங்களுக்குக் குடியேறிப்போய் அங்கே புதிதாய் ஜீவனம்

* அயர்லாந்து தேசத்து 'காம்பீன் மனுஷர்' என்பவர் தென்னிந்தியாவிலே அநேக கிராமங்களிலுள்ள லப்பை அல்லது மகம்மதிய கடைக்காரரும் சாவுகாரும் சேர்ந்த ஒருவருக்குச் சரிசமானமாவாரென்று அநேக தடவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

செய்ய ஆரம்பிப்பதைவிட வேறேவழி யில்லை. அயர்லாந்து தேசத்தின் மேற்கு பாகத்திலுள்ள ஒரு பிரதேசத்திலே வியாபாரி யொருவர் இருக்கிறார்; அவர் இப்படிப்பட்ட உபாயங்களினால் தான் இருக்கும் இடத்தைச் சுற்றிலும் சுமார் இருபது மைல் தூரத்துக்குள்ளே ஜில்லா முழுவதையும் அநேகமாய்ச் சொந்தமாகவே அடைந்திருக்கிறார்.

ஒருகாலத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த இன்னொரு ஏற்பாட்டின்படி அயர்லாந்து தேசத்துக் குடியானவர்கள் ஜாயின்ட் ஸ்டாக் பாங்க் ஒன்றிலே கடன் வாங்கிவந்தார்கள்; அங்கே அவர்களைக் கருணையுடனே நடத்திவந்தார்கள்; அப்படியிருந்தும் அவர்கள் சிக்கனத்துக்குச் சிறிதும் ஹேதுவாயிராத ஷரத்துகளின்படி கடன் வாங்கி வந்தார்கள். இதற்கு உதாரணமாக ஒரு குடியானவன் ஐந்து பவுன் கடன் வாங்க வேண்டியிருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அப்போது அவன் லேவாதேவி நடக்கும் பட்டணத்திலிருக்கிற பாங்கிக்குப் போகையில் இரண்டொரு நபரைத் தனக்கு ஜாமீன்தாரர்களாக அழைத்துக் கொண்டுபோக வேண்டியிருந்தது (தன்னோடு கூடவருகிறவர்களுக்கு ஒருசரியாய்ப் பிரயாணச் செலவும் சிற்றுண்டிச் செலவுகளும் தான் கொடுக்கவேண்டியிருந்ததோடுங்கூட, ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்களுக்கு ஒருநாள் வேலை நஷ்டமானதற்காக பிரதிபலன் கட்டிக் கொடுக்க வேண்டியவனுமிருந்தான்); மேலும், மூன்று மாத வாய்தாவுக்குள்ளாகவே அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுக்கும்படியாய் ஏற்பாடு செய்துகொண்டு, ஐந்து பவுனில் இரண்டு ஷில்லிங் ஆறு பென்ஸ் செலவு போக மிகுதியைப் பெறுவது வழக்கம். கடை வாய்தா முடிவில் அந்தக் கடனைப் புதிப்பித்துக்கொள்ள அவனுக்கு இஷ்டமிருக்கிறபட்சத்திலே, அவன் மேலே கண்டபடி யெல்லாம் மறுபடி செய்யவேண்டியிருந்ததோடுங்கூட, அந்தப்படி செய்யும் ஒவ்வொரு சமயத்திலும் மேலேகண்டபடி செலவு செய்யவேண்டியவனுமிருந்தான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பன்னிரண்டு மாத கால வாய்தாவுக்கு ஒரு குடியானவன் ஐந்து பவுன் கடன் வாங்குகிற பட்சத்திலே, அவன் செலவு முதலியவைகளை சேர்ந்து மொத்தத்தில் 100 க்கு 30 வீத வட்டிக்குச் சமானமான ஒரு தொகையைக் கொடுக்கவேண்டி வரலாமென்று அயர்லாந்து தேசத்திலுள்ள நிபுணர் ஒருவர் மதிப்பிட்டிருக்கிறார்.

அயர்லாந்து தேசத்தில் விவசாய சம்பந்தமாய் ஏற்பாடாயிருக்கும் ஐரிஷ் அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் சங்கத்தார் 1894-ம்வருஷத்திலே அந்த தேசத்தில் ரைபைஸென் பாங்கிகளை ஸ்தாபித்தார்கள். இந்தப்பாங்கிகளை ஸ்தாபிப்பதற்கு முன்னிருந்த நிலைமைகளுக்கும் இப்போதைய நிலைமைகளுக்கு முள்ள வித்தியாசமானது அதிவிசேஷமாயிருக்கிறது. நாளது தேதியில் அயர்லாந்து தேசத்திலுள்ள குடியானவனொருவன் ஐந்து பவுன் கடன் வாங்க விரும்பினால் அவன் பிரதேச சங்கத்தைச் சேர்ந்த கம்மிட்டியாரிடத்தில் மனுவு செய்து கொண்டு, தனக்கு

இரண்டு ஜாமீன்தாரர்களைத் தன்னோடு கூட்டிக் கொண்டு தன்னுடைய கிராமத்திலேயே மாலையில் நடத்தப்படும் கூட்டத்திற்கு வந்து ஹாஜராகிறான். ஆகையால், முதலில் அவனுக்கு வேலை நஷ்டமாவது மில்லை; அவன் பிரயாணச் செலவு கொடுக்கவேண்டியது மில்லை, மற்றவர்களுக்கு போஜனத்துக்காக ஏற்பாடு செய்யவேண்டியதுமில்லை. உற்பத்தி செய்விக்கும் பாதொரு காரியத்துக்காகத் தனக்குப் பணம் வேண்டி யிருக்கிறதென்று அவன் கம்மிட்டியாருக்குத் திருப்திகரமாய் எண்பிப்பதன்மேல் அவனுக்குக் கடன் கிடைக்கிறது; சில சந்தர்ப்பங்களில் (மாதம் ஒன்றுக்கு பவுனுக்கு ஒரு பெனிக்குச் சரியான) வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 5-வீதமும், இதர சந்தர்ப்பங்களில் (மாதம் ஒன்றுக்கு பவுனுக்கு $1\frac{1}{4}$-பெனி வீதமும் அதாவது) 100-க்கு $6\frac{1}{2}$-வீதமும் அவன் வட்டி செலுத்தவேண்டியதா யிருக்கிறது.

எந்தக் காரியத்துக்காகக் கடன்வாங்கப் படுகிறதோ அந்தக் காரியத்தை யனுசரித்து கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கான வாயிதா நிச்சயிக்கப்படுகிறது. கடன் வாங்குகிறவன் அந்த பணத்தை எதில் உபயோகிக்கிறானோ அதிலிருந்து அவன் லாபம் அடைகிறதற்குள், அவன் கடன் தொகையையும் வட்டியையும் சாதாரணமாய்த் திருப்பிச்செலுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது; ஆனால், எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் அவன் பதினெட்டுமாத காலத்துக்குள்ளாகத் திருப்பிச் செலுத்திவிடவேண்டும். கடன் வாங்கும் தொகையானது ஜில்லாவுக்கேற்றபடி 2-பவுனுக்குக் குறைபாமலும் 5-பவுன், 10-பவுன் அல்லது 20-பவுன் வரையிலுங்கூடப் போகும். ஐந்து மாத காலத்துக்குள் செலுத்தும்படியாய் ஒருவன் 10-பவுன் கடன் வாங்கினால், அவனுக்கு 4 ஷில்லிங் 2 பென்ஸ் செலவு ஏற்படும். விதைத் தானியங்கள், எரு அல்லது பன்றிகள் வாங்குவதுபோன்ற காரியங்களுக்காகவே பெரும்பாலும் கடன் கொடுக்கப்படுகிறது; அதனால், நேரகவும் மற்றப்படியும் கிடைக்கும் லாபமானது அனேகமாய்ப் பிரயோசனகரமாகவே இருக்கிறது.

இதனால், கடன் வாங்குகிறவர்கள் முதலில் சிக்கன வழிகளைக் கைக்கொள்வது மாத்திரமே யல்லாமல், காம்பின் மனுஷர் என்று சொல்லப்படும் வியாபாரியின் கையிலோ, நம்பகத்தின்பேரில் சாமான்கொடுத்துத் தன் வசப்படுத்திக்கொள்ளும் வியாபாரியின் கையிலோ சிக்கிக்கொள்ளாதபடியும் மீட்கப்படுகிறார்கள். மேலும், அவர்கள் தாங்கள் வாங்கும் சாமான்களையெல்லாம் ரொக்கத்துக்கே வாங்குகிறார்கள்; இது மாத்திரமே யல்லாமல், அவர்கள் பிரதேச விவசாய சங்கத்தார் மூலமாகச் சரக்குகளை வாங்குவதனால், அவர்கள் முன்னே ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிருந்த உபயோகமற்ற சாமான்களுக்குப் பர்த்தியாக நல்ல சாமான்களென்று உத்தரவாதத்துடன் கொடுக்கப்படும் சாமான்களையும் பெறுகிறார்கள். ஒரு பெண்பன்றி வாங்கும் பொருட்டு ரைபைஸென் பாங்கியிலிருந்து கடன் வாங்கும் குடி

யானவனொருவன் ஓரீற்றுக் குட்டிகள் விற்பதற்குத் தயாராயிருக்கும் போது அவைகளை விற்று, அந்த விவகாரத்திலே 100-க்கு 25-க்குக் குறையாமலும் 75-க்கு மேற்படாமலும் லாபம் சம்பாதிக்கக்கூடும். தன்னுடைய கால்நடைகள் நல்ல ஸ்திதிக்கு வருகிறவரையில் அவைகளைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டிருக்க இஷ்டப்படுகிற இன்னொரு குடியானவன், அவைகளுக்குத் தீனி வாங்குவதற்காகப் பணம் கடன்வாங்கி, அவனுக்கு மற்றப்படி கிடைக்கும் விலையைக் காட்டிலும் அதிக உயர்ந்த விலைக்கு அவன் நாளாவர்த்தியில் அவைகளை விற்கக்கூடும்.

அயர்லாந்து தேசத்தில் விவசாய சம்பந்தமாய் ஏற்பாடாயிருக்கும் ஐரிஷ் அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் சங்கத்தோடு சேர்ந்தவைகளாய் அந்த தேசத்திலுள்ள ரைபைஸென் நாணய பாங்கிகளுள் இப்போது 260 பாங்கிகள் வேலை நடத்திவருகின்றன. அவைகளிலே 1907-ம் ஞூத்தில் 14,875 மெம்பர்கள் இருந்தார்கள்; மொத்தத்தில் 53,112 பவுன் கடன் கொடுக்கப்பட்டது. அயர்லாந்து தேசத்திலே விவசாய சம்பந்தமாய் ஏற்பாடாயிருக்கும் ஷை சங்கத்தார் சிபாரிசு செய்ததன்பேல், விவசாய இலாகாதாரரும் கன்ஜெஸ்டெட் டிஸ்ட்டிரிக்ட்ஸ் போர்ட் என்னும் சங்கத்தாரும் சேர்ந்து இந்த பாங்கிகளுக்குப் பெருத்த தொகை கடன் கொடுத்திருக்கிறார்கள்; சாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் இந்தச்சங்கங்கள் வேலை செய்வதற்கு வேண்டிய மூலதனத்துக்காக ஸர்க்கார் இலாக்காக்களிலிருந்து வாங்கும் கடன் தொகைகளை நம்பியிருப்பதைக்காட்டிலும், டிபாஸிட் தொகைகளையாவது ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகளிலிருந்து அதிகவாரவாக கடன் வாங்கும் தொகையையாவது நம்பியிருப்பது நல்லதென்று பிரதேச நாணயச் சங்கங்கள் ஏற்படுத்துகிறவர்கள் சொல்லுகிறார்கள்; ஏனென்றால், அயர்லாந்து தேசத்திலே ஸர்க்காரால் கொடுக்கப்படும் கடன் தொகையை ஸர்க்கார் தானமாகக் கொடுத்த தொகையாகக் கொள்ளும் சுபாவமானது அதி விசேஷமாயிருக்கிறது.

இந்த பாங்கிகளில் சில உள்ளூரிலேயே கிடைக்கும் டிபாஸிட் தொகைகளைக் கொண்டே முற்றிலும் வேலை செய்து வருகின்றன; இதர பாங்கார் ஜாயின்ட் ஸ்டாக் பாங்காருடைய வட்டி வீதங்கள் அடிக்கடி மாறிக்கொண்டிருந்த போதிலும் பாதகமில்லாமலே நிஷ்கரிஷையான வட்டி வீதமாகிய 100 க்கு 4 வீதம் ஷை ஜாயின்ட் ஸ்டாக் பாங்கார் சொடுக்கும் பணத்திலிருந்து அனேகமாய்த் தங்கள் மூலதனம் முழுவதையும் சேகரிக்கிறார்கள். அயர்லாந்து தேசத்தில் விவசாய சம்பந்தமாய் ஏற்பாடாயிருக்கும் ஐரிஷ் அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் சங்கத்தார் கேட்டுக்கொண்ட தன்பேரில் சில வருஷங்களுக்கு முன்னே ஷை ஜாயின்ட் ஸ்டாக் பாங்கார் இவ்விதமான சகாயம் செய்துகொடுக்க ஒத்துக் கொண்டார்கள்; ஆனால், அயர்லாந்து தேசத்திலுள்ள ஜாயின்ட் ஸ்டாக் பாங்கார் பெரும்பாலும் தங்க

ளுக்கு வேண்டிய மூலதனத்தைச் சிறு தொகைகளாகவோ பெருந் தொகைகளாகவோ டிபாஸிட் கட்டுகிறவர்களிடமிருந்தே பெற்று, அவர்களுக்கு வெகு குறைந்த வீதப்படி வட்டி கொடுத்து வருகிறார்களாகையால், அந்தப் பாங்கிகளில் சில பாங்கார் பிரஸ்தாப சகாயம் செய்துகொடுத்த காலத்திலே, பிரதேச நாணயச் சங்கத்தார் தாங்களே டிபாஸிட் தொகைகள் கட்டிக்கொள்ளக் கூடாதென்று உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

அனேக சந்தர்ப்பங்களிலே கன்ஜெஸ்டெட் டிஸ்ட்ரிக்ட்ஸ் போர்டைச் சேர்ந்த இலாகாதாரரால் தங்களுக்குக்கொடுக்கப்படும் கடன் தொகையானது இனி வாஸ்தவமாய்த் தங்களுக்கு வேண்டியிராதிருந்தபோதிலும் நாணயச் சங்கத்தார் அதை வாங்கிக்கொண்டே வருகிறார்கள். அவர்கள் அந்தப்படி செய்வதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்களென்றால், ஒரு ஸர்க்கார் இலாகாதாரர் தங்களை நம்பி ஸர்க்கார் பணத்தைத் தங்களுக்குக் கடனாகக் கொடுத்திருப்பதே பொதுஜன நம்பிக்கையைப் பெறுவதற்குத் தங்களுக்கு விசேஷ மதிப்பு வாய்ந்த ஒரு நற்சாட்சிப்பத்திரமாகுமென்று சொல்லுகிறார்கள்; மேலும் நடுத்தரமான அந்தஸ்திலுள்ள அயர்லாந்து தேசத்துக் குடியானவனைப் போல அனுபோக மற்றவனும் கோழைத் தனமுள்ளவனுமான ஒருவன் பாங்கியில் வட்டிக்குப் பணம் போட்டுவைக்கும்போது பெரும்பாலும் இப்படியேதான் இருக்கும்.

1907-ம் ஞூத்திலே அயர்லாந்து தேசத்திலுள்ள நாணயச் சங்கங்களின் மொத்த மூலதனமானது 48,718 பவுன்; இந்தத் தொகையில் 31,629 பவுன் வாங்கின கடன் தொகைகள் மூலமாகவும், 17,093 பவுன் இந்தச் சங்கங்களிலுள்ள மெம்பர்கள் கட்டின டிபாஸிட் தொகைகள் மூலமாகவும் சேர்ந்திருந்தது.

நடுத்தரமான பணக்காரராயிருக்கும் ஒருவர், ரைபைஸன் முறைப்படி ஏற்படுத்தப்பட்ட பிரதேச நாணயச் சங்கங்கள் சிறிதும் சரியான ஸ்திதியிலில்லையென்று எண்ணக்கூடும்; ஏனென்றால், பொருள் வாய்ந்த பல நபர்கள் வரையறுக்கப்படாத பொறுப்புள்ளவர்களாய்க் கட்டுப்பட்டு வேலை செய்து வருவார்களேயானால், அவர்களின் திரவிய ஸ்திதி திருப்திகரமான நிலைமைக்கு வந்து விடுமென்பது நவீன கொள்கை. ஆனால், தொகை கட்டாமல் பாக்கி வைத்திருப்பவருக்காக ஜாமீன்தாரர்களைப் பணம் செலுத்தும்படி கேட்டோ, அல்லது சேமநிதியிலிருந்து பணம் எடுக்க வேண்டியதாகவோ உள்ள சந்தர்ப்பங்கள் நேரிட்டது வாஸ்தவமாயிருந்தாலும், எந்த விஷயத்திலும் சங்கத்தார் எவ்வித நஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியர்களாயில்லையென்று அயர்லாந்து தேசத்திலுள்ள இந்த சங்கங்களில் வாஸ்தவத்தில் நாம் அடைந்த அனுபவத்தினால் தெரியவருகிறது; இது இப்படியிருக்க, ஆயிரக்கணக்கான திருஷ்டாந்தங்களில் கடன் வாங்கினவர்கள் அந்த கடன் தொகையினால் ஈடேறியிருப்பதாகத் தெரியவருகிறது.

அல்லாமலும், திரவிய சம்பந்தமான லாபத்தை உத்தேசித்தே அந்த சங்கங்களினால் உண்டாகும் பிரயோஜனம் இப்படிப்பட்டதென்று பார்ப்பது கூடாது. அயர்லாந்து தேசத்தில் விவசாய சம்பந்தமாய் ஏற்பாடாயிருக்கும் ஐரிஷ் அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் சங்கத்தின் காரியதரிசியாகிய ஆர். ஏ. ஆண்டர்ஸன் துரையவர்கள் டப்ளின் என்னும் இடத்திலுள்ள ப்ளங்கெட் ஹவுஸ் என்னும் மாளிகையில் தம்முடைய அறையிலே இவ்விஷயத்தைக் குறித்து என்னோடு தர்க்கம் செய்துகொண்டிருந்த போது சொன்னதாவது: "அனேக ஜில்லாக்களில் ரஸ்தாக்கள் சீர்கேடாயிருப்பது காரணமாகவும் கோடை காலம் முதலிய காரணமாகவும் குடியானவர்கள் ஒருவருக்கொருவர் சந்திப்பது வெகு அபூர்வம்; ஆனால், அவ்வவ்விடங்களிலுள்ள பாங்காரால் நடத்தப்படும் கூட்டங்களுக்குப் போவதற்காக அவர்கள் மைல் கணக்காக நடந்துபோவார்கள்; அந்தக் கூட்டங்களும் அவர்களுக்கு ஒருவாறு விவசாய சம்பந்தமான கல்விகற்பிப்பதற்கான ஸ்தானங்களாய் விடுகின்றன. கல்விப்பயிற்சியில்லாத பல குடியானவர்கள் ஒன்றுச் சேர்ந்து தத்தம் அபிப்பிராயங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்வார்களேயானால் அவர்களும் இயற்கையில் விவேக முள்ளவர்களாவார்கள். நிர்வாக சபையைச் சேர்ந்த மெம்பர்கள் கடன் வாங்குகிறவருக்கு அனேகமாய் அனுபவரீதியான புத்திமதி சொல்லக்கூடியவர்களாயிருப்பதோடுங்கூட, கடன்வாங்குகிறவர் அந்த பணத்தைச் சரியான ஈட்டின்மேல் போட்டுவைப்பதற்கும் அவருக்கு ஒத்தாசை செய்கிறார்கள்; ஆயினும், அவர்கள் தாங்களே அனேக விஷயங்களை, முக்கியமாய் பணம் சம்பாதிப்பதற்காகக் கடன் வாங்குவதற்கும் செலவழிப்பதற்காகக் கடன் வாங்குவதற்கு முள்ள வித்தியாசத்தைக் குறித்து தெரிந்து கொள்ளவுங்கூடும். அயர்லாந்து தேசத்திலே நடுத்தரமான ஸ்திதியிலிருக்கும் குடியானவன் கணக்குகள் வைப்பதில்லை; ஆனால் நிர்வாக சபையில் மெம்பராயிருப்பவர் ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தில் வைத்துக்கொண்டிருக்கும் சம்பந்தத்தினாலே பொருளைச் சிக்கனமாய்ச் செலவிடும் முறையைக் கற்றுக்கொள்ளுகிறார்; அதை அவர் தன் சொந்த பணியின் விஷயத்திலே அனுஷ்டிக்கலாம்."

கூட்டுத்தொழில் கோட்பாட்டைக் கைத்தொழில்கள் சம்பந்தமாய்ப் பிரயோகப்படுத்துவது.

ப்ரயோனீர் பத்திரிகைக்குக் கல்கத்தாவில் வியாபார சம்பந்தமான விஷயங்களைக் குறித்து எழுதிவரும் நிருபநேசர் அடியிற்கண்டபடி எழுதுகிறார்:—

கூட்டுத்தொழில் சம்பந்தமாய்க் கடன் கொடுக்கும் விஷயமானது மறுபடியும் சிறிதுகாலமாக பிரஸ்தாபத்துக்கு வந்திருக்கிறது; அதன் வேலையைக் குறித்து வெளியாகி வரும் பற்பல ரிபோர்ட்டுகளினால் அவ்விஷயம் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்த பாங்கிகள் வேலை நடத்தும் வியாபகமும் அது அடைந்திருக்கும் அபிவிருத்தியும் ஆகிய இவ்விரண்டையும் கவனிக்கும்போது, மொத்தத்தில் இந்த பாங்கிகள் திருப்திகரமாகவே வேலை செய்திருப்பதாகச் சொல்லவேண்டும்; ஆனால் நிர்வாகத்திறமைக் குறைவுதான் இதிலுள்ள ஒரு குறை யென்று தோற்றுகிறது. இவ்வகையான எந்த சங்கத்தின் க்ஷேமத்தையும் உத்தேசிக்கும்போது, அதைத் திறமையுடன் நிர்வாகம் செய்வது அவசியமே; ஏனென்றால் அப்படி நிர்வாகம் செய்யாத பட்சத்திலே, மெம்பர்களின் சங்கியை அதிகப்படுவதாயிருந்தாலும், அப்போதுள்ள மெம்பர்கள் அப்படியே இருந்து வருவதாயிருந்தாலுங்கூட, அவசியம் வேண்டியதாயிருக்கும் பொதுஜன நம்பிக்கையானது இம்முயற்சிக்குக் கிடைக்காமற் போய்விடுமென்பதும், கணக்குவில் வாஸ்தவமாய் மோசம் நடப்பதற்கு எப்போதும் இடமிருக்குமென்பதும் நிச்சயம்; மேலும், கடன் கொடுக்கும் விஷயத்திலும் புத்தியுக்தப்படி காரியம் நடத்தப்படமாட்டாதென்பதைப் பற்றிச் சொல்லவேண்டியதேயில்லை. அதிக பிரமாதமான அதிகாரம் எதுவும் எவ்விடத்திலாகிலும் நடந்திராதது நம்முடைய அதிர்ஷ்டமே; ஆனால், துரைத்தனத்தார் இடைவிடாமல் முன்னினும் அதிகமாக அதை மேற்பார்வையிட்டு வருவது அவசியமென்று எண்ணிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, அவ்விதமே மேற்பார்வையிட்டுவரப்படும். இந்த சங்கங்களை ஸர்க்காரைச் சேராத இதர நபர்களைக்கொண்டு எவ்வளவு மட்டில் நடத்திவருவது சாத்தியமோ அவ்வளவு மட்டில் அந்தப்படி நடத்திவரவேண்டுமென்பதே எப்பொழுதும் அதிகாரிகளின் நோக்கமாயிருந்து வருகிறது; அப்படி யிருந்தும் அவ்விடங்களிலே இவ்விஷயமாய் வலியவந்து வேலைசெய்பவர்கள் கிடைக்காததனாலே, இவ்வளவு காலத்துக்கென்று வரையறை எதுவுமில்லாமல் அவைகளைத் துரைத்தனத்தார் நடத்திக் காட்டிக்கொண்டு வருவதைத் தவிர வேறே

வழி எதுவுமில்லை. நம்மைச் சுற்றிலும் நடக்கும் விவகாரங்கக்கொண்டு நிதானிக்கும்போது, இந்தியாவில் மட்டுக்கு மிஞ்சின ஊக்கமிருக்கிறதென்றும் அதற்கு வெகுசாய் அளவே கிடையாதென்றும் தெரிய வருவதோடுங்கூட, சுதேசத்துக்கு உதவி புரிவதில் விசேஷ விருப்பமிருப்பதாக மெத்தவும் நிர்ப்பயமாய் வெளியிடப்படுவதாகவும் தெரியவருகிறது; இவ்விதமாய் இவர்களுக்கு விருப்பமிருப்பது வாஸ்தவமாயிருக்கிற பட்சத்திலே, அதைக் காட்டுவதற்குக் கூட்டுத்தொழில் முயற்சியை முன்னுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் ஒத்தாசை செய்வதைவிட வேறே நல்ல வழி எதுவுமில்லை. ஏற்கனவே அனேக சங்கங்கள் ஏற்பட்டிருந்தாலுங்கூட, இன்னும் அனேக சங்கங்கள் ஏற்படுவதற்கு அதிக இடமிருக்கிறது; முதல் முதல் செய்யவேண்டிய வேலை என்னவென்றால், இன்னும் அச்சங்கத்தில் சேராதவர்களுக்கு அவைகளின் பிரயோசனத்தைக் குறித்து விவரித்துச் சொல்வதும், கமிட்டியையும் புதிதாய் ஏற்படுத்தப்படும் சங்கத்தையும் நிர்வகித்து மேல்விசாரணைசெய்து வருவதுமே; இக்காரியங்களையெல்லாம் துரைத்தனத்தார் செய்வதைக் காட்டிலும் ஜனங்களே செய்து வரவேண்டும்.

இக்கூட்டுத்தொழில் முயற்சியைக்கொண்டு சுதேச கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவும், விளை பொருள்களை விசேஷமாய் உற்பத்திசெய்யும் பொருட்டும் அவைகளின் லட்சணத்தை சீர்ப்படுத்தும் பொருட்டும் நூதன கைத்தொழில்களை நடத்த ஆரம்பிக்கவும், பலவிதமான விளை பொருள்களைக் கொண்டு வேலைசெய்வதற்குச் சம்பந்தப்பட்ட கைத்தொழில்களை ஆதரித்து விருத்திசெய்யவும் ஸர் ஜான் ஹூவெட் என்பவர் விரும்புவதாக எனக்குத் தெரியவருகிறது; அவர் இந்த மாகாணத்திலே பல பட்டணங்களில் இவ்விதமான வேலைகளைச் செய்யும் சங்கங்களை சுமார் நூறுக்குக் குறையாமல் எடுத்துக்காட்டக் கூடியவராயுமிருக்கிறார். சர்க்கரை செய்யும் விஷயத்தில் தற்காலத்திலே கூட்டுத்தொழில் முயற்சி அத்தியாவசியமாய் வேண்டியிருக்கிறபடியால், அதன் விஷயத்திலே நான் சொன்னமாதிரி யோசனை உடனே பிரயோகப்படுவதாய்த் தோற்றுகிறது. சர்க்கரை செய்யும் தொழிலிலே ஐக்கிய மலேய இராஜ்ஜியத்தார் வெகுசாய் ஜாவா தேசத்தாருக்குப் போட்டியாய் நிற்கக்கூடுமென்று சிறிது காலத்துக்கு முன்னே ஒரு பத்திரிகையில் எழுதப்பட்டிருந்ததை நான் கவனித்திருக்கிறேன்; இது இந்தியா தேசத்தில் செலவாகும் சர்க்கரையின் அளவைக்கொண்டு பார்க்கும்போது எப்படிப்பட்டதாயிருந்தபோதிலும், இந்தியாவே சர்க்கரை உற்பத்திசெய்யும் தேசமாயிருக்கிறபடியால், இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில் இது நிறைவேறுவது நல்லதென்று எவரும் கோரவே மாட்டார்கள். ஆயினும், தற்காலத்தில் அத்தேசத்தின் நிலைமைகளும் இத்தேசத்தின் நிலைமைகளும் ஒரேமாதிரியாய் இருக்கின்றன; அவ்விடத்தில் அநேக சொற்ப விவசாயிகள் வசித்துவருகிறார்கள்; அவர்களுக்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தும் சக்தியுமில்லை, அப்படி ஏற்படுத்தினு

லும் அதைப் பிரயோஜனகரமாய் நடத்தக்கூடிய வல்லமையுமில்லை; ஆகவே, கரும்பின் லக்ஷணத்தை சீர்ப்படுத்துவதற்காகவும், வெகு சிறந்த சர்க்கரை உற்பத்தி செய்வதற்காகவும் சரியான ரீதியான ஏற்பாடுகளுடன் சரியான முஸ்தீதுகள் அமைக்கப்பெற்றுள்ள ஒருபெரிய தொழிற்சாலை இருப்பது அவசியமென்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. சென்ற சில வருஷகாலமாக இவ்விஷயங்களெல்லாம் இந்தியாவிலும் எடுத்துக்காட்டப்பட்டன; அப்படியிருந்தும் உண்டான அபிவிருத்தியோ வெகு சொற்பமாயிருப்பதாகவே தோற்றுகிறது; சரியான முஸ்தீதுகள் அமைக்கப் பெறாத ஆலைகளில் நடுத்தரமான கரும்பைக்கொண்டே டழையபடி வேலை செய்து வருகிறார்கள்; இதனால் ஏற்படுவதென்ன வென்றால், சர்க்கரை உற்பத்தி செய்யும் வெளிதேசத்தாரின் உபயோகமற்ற சரக்குகள் சுலபமாய் விற்பனையாவதற்கு இந்தியாவானது ஏற்ற தேசமாய் விடுகிறது. பம்பாய் கவர்னமென்டார் திட்டமாய் ஏற்பட்ட ஷரத்துகளின் பேரில் விவசாயிகளுக்கு முன்பணம் கொடுத்து அதற்கு நூற்றுக்கு 9-வீதத்துக்கு மேற்படாமல் வட்டி வாங்கி சர்க்கரை உற்பத்திக்கு ஒருவாறு தாங்கள் சகாயம் செய்ய ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வேலையை ஆரம்பித்துப் பலிதமாய் நடத்திவருகிறார்களென்று ஸ்பஷ்டமாய்த் தோற்றுகிறது; இந்த வேலையைத் தகுதியான ஒரு சங்கத்தாரிடத்தில் ஒப்பித்து அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால், கூட்டுத்தொழில் சங்கத்தார் பிரவர்த்திப்பதற்காவது விவசாய சம்பந்தமான ஒரு பாங்கியை ஏற்படுத்துவதற்காவது இதுவே சிறந்த சமய மென்பதற்குச் சந்தேகமில்லை; வாஸ்தவமாய் விவசாய சம்பந்தமான பாங்கி ஏற்படுத்தும் விஷயமானது ஆலோசனையிலிருந்து வருவதாகத் தோற்றுகிறது. உற்பத்தி செய்வதற்கான கைத்தொழில்களுக்காகவும் விவசாயத்துக்காகவும் வேண்டிய மூலதனத்தைக் கூட்டுத்தொழில் சங்கத்தார் சவதரிப்பதனால் ஏற்படும் பிரயோஜனத்தோடு கூட, அந்த சங்கத்தைச்சேர்ந்த மெம்பர்களுக்குள்ளாவது, எப்படிப்பட்ட விஷயத்திலும் அதைச் சரியானபடி உபயோகிக்கும் நபர்களுக்குள்ளாவது சிக்கனம், தன்னடக்கம் என்னும் குணங்கள் அபிவிருத்தியாகிறபடியால், அதனால் அவர்களுக்குண்டாகும் பிரயோசனம் நன்மையேயன்றி தீமையல்ல; மேலும், அவர்கள் இச்சங்கத்தின் மூலமாக விவசாய இலாகாதாரர்களோடு சலபமாய்க் கடிதப் போக்குவரத்து செய்யக் கூடியவர்களாயிருப்பது மல்லாமல், அந்த இலாகாதாரர் கற்பிக்க உத்தேசிக்கும் நூதன சீர்திருத்தமான முறைகளை முன்னிலும் சீக்கிரமாகத் தெரிந்துகொள்ளக் கூடியவர்களாயும் இருக்கிறார்கள்.

மதராஸ் மெயில், 22-12-10.

ஈஜிப்ட் தேசத்தாரிடமிருந்து கற்றுக் கொள்ளத்தக்க ஒரு விஷயம்.

"இந்து தேசத்துக் குழப்பங்களைமை" என்பதைக்குறித்து எம்-சிரோல் என்பவர் எழுதியிருக்கும் புத்தகத்திலே ஒரு பிழை விழுந்திருக்கிறதென்றும், அதைத் திருத்துவது நல்லதென்றும் ஸிவில் அண்ட் மிலிடேரி கேஜட் என்னும் பத்திரிகை கூறுகிறது. இந்தியாவிலுள்ள ரையைஸன் பாங்கிகளைக் குறித்து அவர் எழுதியிருப்பது என்னவென்றால்:—"இம் முயற்சியை ஆதியில் ஆதரித்து அதற்காகப் பரிந்து பேசிவந்தவர் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்பவர் தான் என்று நான் நம்புகிறேன்." வாஸ்தவத்தில் இந்து தேசத்திலுள்ள குடியானவன் கடன்பட்டிருப்பதை நிவர்த்திப்பதற்காக ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்பவர் பிரேரேபித்த ஏற்பாடானது இப்போதைய ஏற்பாட்டினின்றும் முற்றிலும் வேறுபட்டதாயும், அதைவிட மெத்தவும் பூர்ணக்குறைவுள்ளதாயும் இருந்தது. மேற்படி ஏற்பாடானது ஸர்க்காரைச் சேராத இதர நபர்களால் உண்டாக்கப்பட்டு கவர்ன்மென்டாரால் உத்தரவாதம் செய்யப்பட்டதாயும், சிறிது பரோபகாரத்தன்மையுள்ளதாயும், சிறிது வியாபாரரீதியை யனுசரித்ததாயும் இருப்பதாக இருந்தது. பரிசோதனார்த்தமாய் ஒரு தொகையளவுக்குள்ள கடனைக் கவர்ன்மென்டார் ஒழிப்பதும், முத்திரைக் கட்டணத்தையும் கோர்ட் கட்டணம் முதலியவைகளையும் வஜா செய்வதும், பாங்கிக்குச் சேரவேண்டிய கடன்களைத் தீர்வைபாக்கி யாயிருந்தால் எப்படியோ அப்படியே ரெவினியு ஆபிஸர்கள் மூலமாய் வசூல் செய்வதும் மேற்படி பிரேரேபணையில் சேர்ந்திருந்தன. ஆகவே, இதனால் பாங்கியாருக்கு ஒரு விதமான ஏகவுரிமை உண்டாயிற்று. இது அபாயகரமானதாயும் பிரதிபந்தமானதாயும் இருந்தது. கடனை வசூலிப்பது சம்பந்தமாய்ப் பிரயோஜனமற்ற வேலையை யெல்லாம் கவர்ன்மென்டார் செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள். அப்படி யிருந்தும் ஸர் ஸ்டேவர்ட் பெய்லி, (இப்போது லார்ட் க்ரோமர் என்று சொல்லப்படும்) மேஜர் பேரிங் இவர்களைப் போன்ற பெருத்த நிபுணர்கள் அந்த ஏற்பாடு விருத்தியாக வேண்டுமென்று விரும்பினார்கள்; ராஜப்பிரதிநிதி அவர்களின் ஆலோசனை சபையாரும் அதை ஜாரி செய்துவிட்டார்கள்; அப்போது ஒரு பெருத்த குழப்பம் உண்டாயிற்று; அச்சமயத்தில் ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்கள் அதை ஜாரிசெய்ய மாட்டேனென்று நிராகரித்து விட்டார்கள்; அந்தப்படி அவர் செய்தது மெத்தவும் தகுதியே.

தம்முடைய கொள்கைகளை வெளியிடும் தைரியமாகிலும் மேஜர் பேரிங் என்பவருக்கிருந்தது; ஏனென்றால், அவர் ஈஜிப்ட் தேசத்துக்குப் போன போது, அவர் மேலே சொன்னதைப் போன்ற ஒரு ஏற்பாட்டை ஆதரித்த

தோடுங்கூட அதற்குக் கவர்ன்மென்டாருடைய ஆதரணையும் உண்டாக்கிக் கொடுத்தார். ஈஜிப்ட் தேசத்திலுள்ள விவசாய பாங்கியானது அதிசிரேஷ்டமான உத்தேசத்துடன் ஏற்படுத்தப்பட்டது. அதைப் பிரிபாலனகர்த்தர்களும் பரோபகாரிகளும் விசேஷமாய்ப் புகழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அப்புறம்சியானது நாளாவர்த்தியிலே குறைந்து வருவதோடுங்கூட, அது விஷயமாய்ச் சந்தேகமும் கண்டனமும் அதிகமாய்க்கொண்டே வருகிறதென்றும் நமக்குத் தெரியவருகிறது. ஆகவே, 1909-ம் வருஷத்துக்காக கான்ஸல் ஜெனரல் அவர்கள் எழுதிய ரிபோர்ட்டிற் கண்ட கணக்கின்படி, இவ்வைபாக்கியானது 1904-ம் வருஷத்திலே 100-க்கு 3 வீதமாயிருந்து 1909-ம் வருஷத்தில் 100-க்கு 17.7 வீதமாய் அதிகரித்திருந்ததென்று தெரியவருகிறது. ஜனவரிமாதக் கடைசியிலே 40,000 பாக்கிதாரர்களுக்குக் குறையாமலிருந்தார்கள் ஆகவே பாங்கியில் கடன் வாங்கியிருப்பவர்கள் கடன் தொகையைக் காலஹரணமின்றி செலுத்தும்படி கட்டாயப்படுத்தும் விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைத் தெரிந்துகொண்டு விட்டார்களென்றும், அதுகாரணமாக கடன்காரர்கள் வாங்கின கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தக்கூடிய ஸ்திதியிலிருந்தாலுங்கூட தங்களுடைய கடமையை நிறைவேற்றாமல் தள்ளிக்கொண்டேபோய் பிரயோஜனமடைய சிலசமயங்களில் அவர்கள் இஷ்டப்படுவதாகத் தான் நம்புவதாயும், ஸர் எல்டன் கார்ஸ்ட் என்பவர் எழுதிய அபிப்பிராயக்குறிப்பைப் பார்க்கும்பொழுது நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. 323 பாக்கிதாரர்களின் பேரில்தான் பாங்கியார் டிக்ரி பெற்றிருந்தார்கள்; அப்படிப்பிருந்தும் தங்களுடைய கடன்களை ஒழிப்பதற்காக இவ்வளவு சாந்தமாய் அவர்கள் பிரயத்தனம் செய்ததற்காக, அவர்கள் "பொதுஜன கண்டனத்துக்கு உள்ளாக்கப்பட்டார்கள்; இதுவோ மெத்தவும் அநியாயமென்று நான் எண்ணுகிறேன்." "முன்பணமாகக் கொடுக்கப்பட்ட கடன் தொகையில் ஒருபாகமானது புத்தியில்லாமல் செலவழிக்கப்பட்டிருக்கிறதென்றோ உற்பத்தி செய்வதற்கல்லாத காரியங்களுக்காக உபயோகப்படுத்திருக்கிறதென்றோ," ஸர் எல்டன் கார்ஸ்ட் என்பவர் சந்தேகிப்பதற்குத் தக்க நியாயம் இருப்பதாகத் தோற்றுகிறது "கடன் கேட்கப்படும் பொழுது அது தக்க காரியத்துக்காக கேட்கப்படுகிறதாவென்றும் தகாத காரியத்துக்காகக் கேட்கப்படுகிறதாவென்றும் பகுத்தறியும் விஷயத்தில் அனுபவரீதியாய் ஏற்படும் கஷ்டமானது மெத்தவும் அதிகமென்றும்" அவர் முறையிடுகிறார். இந்நிலைமையோ பிரமாதமானது; ஏனென்றால், (1909-ம் ஞாத்தில்) இருந்த கடன் தொகை 1,36,000 பவுனுக்கும்; கடனாளிகள் 2,38,000 பேர்; சில பாக்கிதாரர்களின்மேல் நடவடிக்கை நடத்துவது சம்பந்தமாக இவ்வளவு அதிகமாய்க் கஷ்டம் கொடுக்கப்பட்டிருக்கிறதைப் பார்த்தால், பாங்கியாரின் நாணயத்தைக் காப்பாற்றுவதற்காகத் தக்க ஏற்பாடுகள் செய்யும்புட்சத்திலே பயங்கரமான கலகம் உண்டாகக்கூடுமென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. பிந்தி வெளியான ரிபோர்ட்டுகளும் திடப்படுத்தக்கூடியவையாயில்லை. ஈஜிப்ட் தேசத்திலுள்ள ஜாதியவாதிகள் தங்களுடைய சொந்த காரியங்களை

உத்தேசித்தே குடியானவர்களைக் கடனைச் செலுத்தாமல் பாக்கி வைத்துக் கொண்டிருக்கும்படி வற்புறுத்துகிறார்களென்றும், அதை வசூலிப்பதற்காகக் கவர்ன்மெண்டார் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் விசேஷப்படுத்தி உண்மையை மாற்றி, கவர்ன்மெண்டார் பலாத்காரமாய் அபகரிக்கும் செயல்களுக்கு ஓர் உதாரணமாக நாட்டில் அதைக்குறித்து சமாசாரம் பரவ விடுவார்களென்றும் நாம் நிச்சயமாகக்கொள்ளலாம். தொந்தரப்படுத்தி கடனை வசூலிக்கும் வேலையானது ஒருபோதும் பொது ஜனங்களின் பிரீதிக்கிடமான வேலையாய் இருக்கமாட்டாது; அப்படி யிருக்கையில் ஒரு அந்நிய துரைத்தனத்தைச் சேர்ந்த காரியஸ்தர்கள் அதில் சம்பந்தமுள்ளவர்களாயிருக்கும் பட்சத்திலே, அதனால் எவ்வளவு அபகீர்த்தியும் வெறுப்பும் உண்டாகக்கூடுமோ அவ்வளவு உண்டாகுமென்பது நிச்சயம். பரோபகார சிந்தையுடனும் காரிய நிர்வாக முறைமையிலும் செய்யப்படும் எந்த வேலையும் திறமைக் குறைவானதாகவே யிருக்குமென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். செட்டு விஷயமாயும் பரோபகார விஷயமாயும் ஈஜிப்ட் தேசத்திலுள்ள விவசாய சம்பந்தமான பாங்கியினால் ஏற்படும் பிரயோஜனத்தைக் குறித்து என்னசொன்னபோதிலும் சரி, அதனால் ராஜாங்க சம்பந்தமாய்க் கெடுதி செய்வதற்கு சாத்தியமாயிருக்கு மென்பதைக் குறித்துச் சந்தேகமேயில்லை.

திறமைக்குறைவான ஒரு ஏற்பாடு.—ஈஜிப்ட் தேசத்தில் அனுஷ்டானத்திலிருந்துவரும் ஏற்பாட்டின் குறைகள் இன்னவை யென்று ஸ்பஷ்டமாய்த் தெரிந்திருக்கிறது. கடன்வாங்கின பணத்தை இன்ன காரியத்துக்காக உபயோகிக்கிறார்கள் என்பதை மேற்பார்வை யிடுவதில்லை: ஆகவே, இந்த ஏற்பாட்டினால் ஜனங்கள் விஷயங்களைப் புதிதாய்த் தெரிந்துகொள்ளும்படியான பிரயோசனம் எதுவும் உண்டாகமாட்டாது. குறைந்த வட்டிக்கு கடன் கொடுப்பதே பெருத்த சகாயமாய்விடமாட்டாது; அதனால் பல தீமைகளும் விளையக்கூடும். விவேகமில்லாமல் பணத்தைச் செலவிடுவதற்கு அநேகவட்டி கொடுப்பதே இயற்கையில் தண்டனையாய் ஏற்பட்டிருக்கிறது; வட்டியை மாத்திரம் குறைத்து அதற்குத்தக்கபடி செலவை எவ்விதமாகவேனும் குறைக்காமலிருக்கிற பட்சத்திலே, கடன் வாங்குகிறவர்களுடைய பிந்திய ஸ்திதியானது முந்திய ஸ்திதியைக் காட்டிலும் குறைவாயிருக்கலாம். இராஜாங்க சம்பந்தமாய் பாங்கிக்கு உண்டாகும் அபாயமானது நாம் ஏற்கனவே காட்டியிருக்கிறபடி முன்னினும் அதிக பிரமாதமாயிருக்கிறது; மேலும், கடனை வசூலிக்கும் விஷயத்தில் அதிக கண்டிப்பாய் நடவடிக்கை நடத்துவதனால் அந்த அபாயம் அதிகமாகிறதே யொழிய குறைவதில்லை. அப்படியிருந்தும் விவசாய சம்பந்தமான அந்த பாங்கை மூடிவிட்டு, ஈஜிப்ட் தேசத்திலுள்ள குடியானவன் பழையபடி அநேகவட்டி கொடுத்துக் கடன் வாங்கும் முன்னிருந்த கெட்ட ஏற்பாட்டையே மறுபடியும் அநுஷ்டிக்க வேண்டியதாய் விட்டால், அது துரதிர்ஷ்டமான காரியமாகவே முடியும். முற்றிலும் சிறந்த ஏற்பாடு என்னவென்றால், பணத்தைச் சரியான விதமாய்

உபயோகிக்கும்படி கடன் வாங்குகிறவருக்குத் சுயமாகவே போதிக்கத்தக்க ஷரத்துகளின் பேரில் நியாயமான வட்டி வீதம் ஏற்படுத்திக் கடன் கொடுப்பதும், கிராமத்தாருடைய பொதுஜன அபிப்பிராயத்தையே—அதாவது அவன் தன்மரியாதையையும் நற்பெயரையுமே—பணத்தை வாபஸ் பண்ணுவதற்கு தக்க பொறுப்பாகச் செய்வதுமே. ரைபைஸன் ஏற்பாட்டின்படி காரியம் நடத்திவந்தால் இவை யெல்லாம் சித்தியாகும்; அதாவது சரியான ரைபைஸன் முறைப்படி, தருமார்த்தமாகவோ கபடமாகவோ எவ்விதச் சகாயமும் செய்து கொடுக்காமல் அதை உண்மையாய் நடத்திவருகிற பட்சத்திலே இவைகளை யெல்லாம் அடையக்கூடும். ஆகவே, இவ்விதமாய் சித்தியடையும் விஷயத்தைக் குறித்து ஈஜிப்ட் தேச துரைத்தனத்தார் ஆலோசித்து வருகிறார்களென்பதைக் கவனிக்க சந்தோஷகரமாயிருக்கிறது. "கூட்டு உத்தரவாதிகளேற்பாட்டை உண்டாக்குவதும், பாங்கியார் நேரே காரியம் நடத்தக்கூடிய கிராமக் கூட்டுத்தொழில் சங்கங்கள் ஏற்படுத்துவதும் சாத்தியமாயிருக்கலாமென்றும் எண்ணப்படுகிறது. கூட்டு உத்தரவாதிகளை ஏற்படுத்துவதனால் கடன் தொகையைத் தக்க காலத்தில் தவறாமல் திருப்பிச் செலுத்திவருவது சாத்தியமாவதோடுங்கூட, உற்பத்தி செய்யும் காரியத்துக்கல்லாமல் மற்றப்படி வேறே எந்தக் காரியத்திற்காகவும் கடன் கொடுக்காமலிருக்கும்படிச் செய்வதும் சாத்தியமாகும்" என்று ரிபோர்ட்டில் எழுதியிருக்கிறது. பாங்கியாரையும் ஈஜிப்ட்தேச துரைத்தனத்தாரையும் அவரவர்களுடைய கஷ்டங்களினின்றும் நிவர்த்தி செய்வதற்கான இந்த முறையானது சிரேஷ்டமாயிருப்பதாகத் தோற்றுவதோடுங்கூட, அதனால் காரிய சித்தி தவறாமல் உண்டாகக் கூடுமென்றும் தோற்றுகிறது. ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்பவர் பிரேரேபித்த ஏற்பாட்டை ஸ்டேட் ஸெக்ரிடெரி அவர்கள் அங்கீகரிக்காமல் தள்ளிவிட்ட காலத்திலே இந்தியாவில் நாம் தப்பித்துக்கொண்ட பெருத்த அபாயத்தைக்குறித்து நமக்கு நினைப்பூட்டுவதற்கும் இது ஹேதுவாயிருக்கிறது. மேற்படி ஏற்பாடானது ஜாரிசெய்யப்பட்டு அமுலுக்கு வந்திருக்கிற பட்சத்திலே, இந்துதேச துரைத்தனத்தார் கடனை வசூல் செய்யும் ஒரு துரதிர்ஷ்டமான வேலையை இப்போது செய்துகொண்டிருக்க நேரிட்டிருக்கும்; இது இராஜாங்கப் புரட்சிக் கட்சிக்காரர்களுக்கு மிகவும் சந்தோஷகரமாயும், லாபகரமாயுமிருக்கும். இப்போதிருக்கிறபடி நாம் அநுஷ்டித்துவரும் ஏற்பாட்டை சரியான முறைப்படி அநுஷ்டித்து வருகிற பட்சத்திலே, அதனால் குடியானவன் சிக்கனமுறையைக் கற்று, க்ஷேமகரமாயும் திருப்தி யடைந்தவனாயும் ஜீவித்து வருவான்; இதனால் கவர்ன்மெண்டாருக்கு ஒருகாலத்திலும் துன்பமென்பதே உண்டாகமாட்டாது.

மதராஸ் மெயில், 1911-ம் ஹு ஜனவரி மீ 13உ.

——(:)——

கூட்டுத்தொழில் சங்கங்கள். 1909-10-ம் வருஷம்.

ஐக்கிய நாணயச் சங்கங்களைக்குறித்த ஆக்டானது 1909-10-ம் வருஷத்திலே இந்தியாவில் செலாவணியாய் வந்ததைக்குறித்து ஒரு ரிபோர்ட் வெளியாயிருக்கிறது. அந்த வருஷக்கடைசியிலே சகல வகைகளையுஞ்சேர்ந்த சங்கங்களின் மொத்தம் 3,493 என்று தெரிய வருகிறது; இதனால் மேற்படி வருஷத்தில் 100 க்கு 74 வீதம் அதாவது 1490 சங்கங்கள் முன்னிலும்அதிகமாய் ஏற்பட்டனவென்று தெரிய வருகிறது. 1319 கிராமச் சங்கங்களும், 94 நகரச்சங்களும் 17 ஸென்ட்ரல் சங்கங்களும் புதிதாய் ஏற்பட்டன. மெம்பர்களின் சங்கியை 100 க்கு 25 வீதம் அதிகரித்தது; அதாவது அந்த சங்கியை 1,84,889 ஆக இருந்து, பிரஸ்தாப வருஷத்தில் 2,31,000 ஆயிற்று. மேலும், மூலதனமானது 100 க்கு 53 வீதம் அதிகரித்தது; அதாவது 80,65,111 ஆக இருந்து, பிரஸ்தாப வருஷத்தில் 124, 00,000 ஆயிற்று. ஒவ்வொரு விஷயத்திலும் இம்முடிவுகள் திருப்திகரமாகவே யிருக்கின்றன; முக்கியமாய் 1904-ம் வருஷத்து ஆக்டின்படி அனேகமாய்க் கூட்டுத்தொழில் முயற்சி ஆரம்பமானது முதல் அந்த முயற்சியைப் பரவச் செய்யும் விஷயத்தில் எவ்விதமாக வாகிலும் தகாதபடி அவசரப்பட்டுக் காரியம் நடத்தாதபடி. ரெஜிஸ்ட்ரார்கள் அனேக மாகாணங்களிலே வெகுசரியாய்த் தடுத்திருக்கிறார்களென்பதைக் கவனிக்கும்போது, மேலே சொன்ன முடிவுகள் திருப்திகரமாகவேயிருக்கின்றன.

ரெஜிஸ்ட்ரார்களின் ஐந்தாவது வருஷமகாசபையானது 1911-ம் வருஷ ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்டது. இந்திய கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானத்திலிருந்து தூரமாக கூடின மகா சபைகளில் இது தான் முதலாவது; கைப்பொருட் காட்சி சம்பந்தமாய் இது அல்லஹாபாத்தில் நடந்தது. இதற்கு பர்மாவைத்தவிர மற்ற சகல மாகாணங்களையுஞ் சேர்ந்த ரெஜிஸ்ட்ரார்கள் வந்திருந்தார்கள். இதைப் பார்ப்பதற்காக இன்னும் அநேகரும் வந்திருந்தார்கள். பற்பல மாகாணங்களிலே கூட்டுத்தொழில் முயற்சியின் பொதுவான அபிவிருத்தியைக்குறித்து வெளியான ரிபோர்ட்டுகளினால், இந்தியாவின் பற்பல பாகங்களில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் அபிவிருத்தி முறைகளிலே அசாதாரணமான வித்தியாசமிருந்ததாகத் தெரியவந்தது; மேலும், ஒரு மாகாணத்தைச் சேர்ந்த நிபுணர்கள் இது விஷயமாய் நேரில் தெரிந்துகொள்வதற்காகவும், இதர இடங்களில் உண்டான விசேஷ விருத்தியைக் குறித்து பின்னும் விசாரித்தறிந்து கொள்ளுவதற்காகவும் இந்த மகா சபைகளினால் தக்க சமயம் வாய்க்கிறபடியால், அவைகளினால் உண்டாகும் அனுகூலம் சொற்பமானதல்ல. தற்காலத்தில் இராஜாங்கத்தாருடைய சகாயம் வேண்டியதில்லாமலே அனேக மாகாணங்களிலுள்ளவர்கள் போதுமான பணத்தைத் தாங்களாகவே சேகரிக்கக் கூடியவர்களா யிருக்கிறார்கள்; கீழ் வங்காளம் ஆஸாம் இந்தப் பிரதேசம் தவிர மற்ற பிரதேசங்களிலே, இராஜாங்கத்தார் செய்யும் திரவிய சகாயமானது இதர இடங்களோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது கொஞ்சமாகவே யிருக்கிறது. பல மாகாணங்களில், முக்கியமாய் சென்னை மாகாணத்திலும் மைசூரிலும், கடன் கொடுக்கும் விஷயத்தைத் தவிர இதர விஷயங்களிலும் கூட்டுத்தொழில் நடத்த ஆரம்பித்திருக்கிறது; சிறிது காலத்துக்குமுன்னே கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டானது சட்டமாய்விடுகிற பட்சத்திலே, இது விஷயமாய்த்துரிதமாக முயற்சி செய்யப்படுவதற்கு ஹேதுஉண்டாகும். சங்கங்களின் சங்கியை அதிகமாய்க் கொண்டு வர வர ஸென்ட்ரல் சங்கங்களையும் யூனியன்களையும் சட்டப்படி அமைக்கும் விஷயமானது அதிமுக்கியமானதாய்விட்டிருக்கிறது. அனேகமாய் எல்லாம் பெரிய மாகாணங்களிலும் ஏதோ ஒரு விதமாய் யூனியன் அல்லது ஸென்ட்ரல் பாங்க் ஏற்படுத்துவதற்காக முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட யூனியன்களாலும் பாங்கிகளாலும் சங்கங்களின் நிலைமை பலப்படுவது மாத்திரமே யல்லாமல், ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நுட்பமாய் மேற்பார்வை யிடுவதைக்காட்டிலும் சிரேஷ்டமான ஒரு காரிய நிர்வாக முறையும் ஏற்படக்கூடும். அனேக மாகாணங்களில், கௌரவார்த்தமாய் சங்கங்களை ஏற்படுத்துகிறவர்கள் முன்னிலும் சுலபமாய்க் கிடைக்கக்கூடியவர்களா யிருப்பதோடுங்கூட, இத்தொழிலில் அமர்ந்திராதவர்களுடைய சகாயமும் முன்னிலும் சுலபமாய் கிடைக்கக்கூடியதா யிருக்கிறது; வெளியார்கள் செய்யும் இந்தச் சகாயமானது நிபுணர்களிடமிருந்து விஷயங்களைத் தெரிந்து கொண்டு செய்யப்படுகிற பட்சத்திலே அது மெத்தவும் பிரயோஜனகரமாகவே முடியும். பம்பாய் ப்ரெஸிடென்ஸியில் கௌரவம் பொருந்திய ஸர். வி. டி. தாகர்ஸே என்பவரும், மிஸ்டர் எல். சாமல்தாஸ் என்பவரும் ஒரு ஸென்ட்ரல் பாங்கை ஏற்படுத்துவதற்காக அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது; சகல வகைகளையும் சேர்ந்த கூட்டுத்தொழில் சங்கங்களுக்குத் திரவிய சகாயம் செய்வதே இந்த பாங்கின் நோக்கமாகும்.

(சென்னை டைம்ஸ் பத்திரிகையிலிருந்து எடுத்துப் பொருத்தி எழுதப்பட்டது.)

சங்கங்களைக் குறித்து.

கடன் தொகையைத் தகாதபடி உபயோகிப்பது.

226-ம் நம்பர் களத்தூர் நாட்டு நாணயச் சங்கத்தைக் குறித்து ரிபோர்ட் அனுப்புகையிலே, இன்ஸ்பெக்டர் அடியிற்கண்டபடி எழுதியிருந்தார் :—

"எந்தக் காரியங்களுக்காகக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காரியங்களுக்காகக் கடன் உபயோகப்படும்படி நிர்வாக சபையார் சிரத்தையுடன் பார்த்து வருகிறார்கள். உதாரணமாக, பழைய கடனைத் தீர்த்துக் கொள்ளும் காரியத்திற்காக 1910-ம் ஆகஸ்ட் மீ 3உ 90 ரூபாய் கடன் (30-ம் நம்பர் கடன்) கொடுக்கப்பட்டது; அதன்மேல் அந்தத்தொகையைச் செலுத்தினபிறகு தீர்த்துவிட்ட பழைய கடன் பத்திரத்தைக் கொண்டுவந்து காட்டும்படி கடன் வாங்கினவரைக் கேட்டார்கள். பழைய கடன் பத்திரத்தைப் பார்வையிட்டதில் இந்தக் காரியத்திற்காக 84 ரூபாய் தான் உபயோகிக்கப்பட்டிருந்ததாய்த் தெரிய வந்தது; அதன்மேல் சங்கத்தாரிடமிருந்து கடன் வாங்கி மேலே சொன்ன காரியத்திற்காக உபயோகிக்கப்படாமல் மிகுந்திருக்கும் 6 ரூபாயையும் வாபஸ் செய்துவிடும்படி கடன் வாங்கினவரை உடனே கேட்டார்கள்."

பிரசங்கங்களிலிருந்து எடுத்த எக்ஸ்ட்ராக்டுகள்.

I.

கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்த கௌதவரத்தில் நவம்பர் மீ 26, 27, 28-ம் தேதிகளில் கூடின கம்மவார்களின் மகாசபையிலே அக்கிராசனாதிபதியாயிருந்த நாகதிப்பா வாசியாகிய மகா-ா-ா-ஸ்ரீ கந்தமானி ரங்கய்யகாரு தம்முடைய ஆரம்பப் பிரசங்கத்தில் கூட்டுத்தொழில் பாங்கிகளைக் குறித்து அடியிற்கண்டபடி பேசினார் :—

"நம்முடைய தேசத்திலே விவசாயமும் வர்த்தகமும் கைத்தொழில்களும் விருத்தியடையாதிருப்பதற்குக் காரணமென்ன? சாமானிய ஜனங்களின் ஏழ்மைத்தனமே. கடன் சிறிது மில்லாத ரயத்து நூற்றில் ஒருவர்

கூட இருப்பது அபூர்வம். கடன் கொடுக்கும் ஸாவ்காரானவன் ரயத்தின் ஜீவாத்தத்தை உறிந்துவிடுகிறான். பயிரிடுகிறவர் தம்முடைய எருதுகளையும் உழவுக்குரிய ஆயுதங்களையும் மாற்ற வேண்டியராயிருப்பதோடுங்கூட, எருவையும் விதைத்தானியத்தையுங்கூட வாங்கவேண்டியவராயிருக்கிறார். இதற்காக அவருக்குப் பணம் தேவையாயிருக்கிறது. ரொக்கமாய் அவரிடத்திலோ பணமில்லை. ஆகவே அவர் ஸாவ்காரைத் தேடிச் செல்லுகிறார்; ஸாவ்காரோ ரயத்தின் ஆவசியகத்தை அறிந்து அதனால் லாபம் சம்பாதிக்க எண்ணி, மட்டுக்கு மிஞ்சின வட்டி வீதப்படியும் ரயத்துக்கு நாசகரமாயும் தனக்கு அனுகூலமாயு முள்ள ஷரத்துகளின்படி அவருக்குக் கடன் கொடுக்கிறார். பயிர் அறுவடையாகத் தயாராயிருப்பதற்கு முன்னே கவர்ன்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய முதல் தவணைத் தீர்வையானது செலுத்த வேண்டியதாகிறது. அறுவடை முடிவாகுங் காலத்துக்குள்ளே இரண்டாவது தவணைத் தீர்வையும் செலுத்த வேண்டியதாகிறது; மாசூலின் ஊர் விலை நிஷ்கரிஷை செய்யப்படுவதற்கு முன்னமே, இதர தவணைத் தீர்வைகளும் செலுத்தவேண்டிய காலம் கடந்துவிடுகிறது. ஸாவ்காரின் உதவியை நாடுவதையும், ஊர்விலை தாழ்ந்திருக்கிற காலத்திலே தம்முடைய மாசூலுக்கு எவ்வளவு பணம் கிடைத்தாலும் சரி அதற்கே அந்த மாசூலை விற்பதையுந் தவிர ரயத்துக்கு வேறே வழி ஒன்றுமில்லை. காருண்ய கவர்ன்மெண்டார் கூட்டுத்தொழில் பாங்கிகளை ஸ்தாபித்து நம்மை இவ்வித கஷ்டத்தினின்றும் நிவர்த்திப்பதற்காக உபாயம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நம்முடைய நன்றியறிதலைக் காட்டுவதற்குச் சிறந்த மார்க்கம் எதுவென்றால், நாமே ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பாங்கை ஏற்படுத்தி கிராமக் கல்விச்சாலைப் பணத்தை அதில் போட்டுவைப்பதே. கல்விச்சாலைகள் விவசாயம் ஆகிய இவ்விரண்டிற்கும் இதனால் லாபம் உண்டாகும்.

* 2. முன்னிருந்த ரெஜிஸ்ட்ரார் கலியாண துருக்கத்தில் செய்த பிரசங்கம்.

கலியாண துருக்கத் தாலூகாவிலுள்ள சங்கங்களைச் சேர்ந்த பல பஞ்சாயத்துகளிலுள்ள முக்கியமான மெம்பர்கள்—முன்னே ரெஜிஸ்ட்ரார் யிருந்த திவான் பகதூர் ஆர். ராமசந்திரராவ் அவர்கள் செய்த பிரசங்கத்தைக் கேட்பதற்காக கலியாணதுருக்கத்தில் கூடினார்கள். அவர் 1910-ம் ஆண்டு அக்டோபர் மீ 17உ முதல் அக்டோபர் மீ 23உ வரையில் இடையிடையே அவர்களுக்கு அயிற்கண்டபடி பிரசங்கம் செய்து வந்தார் :—

A. பீடிகை.

நீங்களெல்லாரும் சங்கங்களை நடத்திவரும் விஷயத்தில் அனேகமாய் அமர்ந்திருக்கிறீர்கள். இது விஷயமாக எனக்குத் தெரிந்திராமலிருக்கக்

* இது 16-ம் ந. ஸர்க்குலராக வெளிவிடப்பட்டிருக்கிறது.

கூடிய அனேக கஷ்டங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால், சுமார் 35 சகாயச் சட்டங்களிருக்கின்றன; அவைகள் தனித்தனியாயிருக்கிறபடியால் அவைகளை ஞாபகத்தில் வைத்திருப்பது வெகு கஷ்டமாயிருக்கிறது. அவைகளுக்கு ஆதாரமான கோட்பாடுகள் இன்னவையென்று அறியும் பட்சத்திலே, அவைகளை முன்னிலும் நன்றாய்த் தெரிந்துகொள்ளக் கூடும். அடிக்கடி நான் சில உத்தரவுகள் ஜாரிசெய்து கொண்டுவருகிறேன்; அவை ஒற்றுணர்ச்சி யென்பது சிறிதுமில்லாமல் செய்யப்பட்ட உத்தரவுகளாகவே தோற்றலாம்; ஆனால் வாஸ்தவத்தில் அவைகளெல்லாம் உங்களுடைய நன்மையை உத்தேசித்தே செய்யப்பட்டவைகளாகும். என்னுடைய பிரசங்கத்தை நீங்கள்கவனித்து வரும்பட்சத்திலே, நான் ஏன் அப்படிப்பட்ட உத்தரவுகளை ஜாரிசெய்கிறேனென்பதை நீங்கள் தெரிந்துகொள்ளக் கூடும். நான் சொல்லுவதை நீங்கள் தெரிந்துகொள்ளாத பட்சத்திலே, நீங்கள் தாராளமாய் என்னை எந்தக் கேள்விகளாகிலும் கேட்டு உங்களுடைய சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாம். என்ன விஷயங்களைக் குறித்து நான் விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமென்று நீங்கள் விருப்புவீர்களோ அதே விஷயங்களை நான் முக்கியமானவைகளல்ல வென்று விட்டு விடக்கூடும். அப்போது நீங்கள் என்னை நிறுத்தி, உங்களுடைய சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ள வேண்டும்.

2. நாம் அதிபிரமாண்டமான ஒரு வேலையை எடுத்துக் கொண்டிருக்கிறோம்; அதன் பெரும்பாகத்தை நாம் வாஸ்தவத்திலே செய்து முடிக்கிற வரையில், அது இவ்வளவு பெரியதென்று நாம் தெரிந்துகொள்ள முடியாது. வியாதிக்குச் சிகிச்சை செய்வதற்கு முன்னமே அதன் தன்மை இன்னதென்று தெரிந்துகொள்ள வேண்டும். முதலாவது, நாம் என்ன செய்துகொண்டு வருகிறோமென்பதை யோசித்துப் பாருங்கள். ஸாவ்காரர் வாங்கும் வட்டியைவிட குறைவாயுள்ள வட்டி வீதப்படி கடன் கொடுப்பது. ஸாவ்காரர் வாங்கும் வட்டியானது ஏன் அதிகமாயிருக்கிறது? இதற்கு மூன்று காரணங்களிருக்கின்றன. இவைகளில் முதலாவது, விவசாயிகளுக்கு ஒரு வருஷத்தில் பல தடவைகளிலே பணம் வேண்டியிருக்கிறது; மேலும், அவர்களெல்லோருக்கும் பணம் தேவையா யிருப்பதோடுங்கூட ஏககாலத்திலே, அதாவது விதை விதைக்கும் பருவம் சாகுபடிசெய்யும் பருவம் முதலிய பருவங்களிலே கிஸ்திபணம் கட்டவேண்டிய காலத்தில் அந்தப்பணத்தில் பெரும்பாகம் தேவையாயிருக்கிறது. அவர்களெல்லோருக்கும் கடன் கொடுப்பதற்குப் போதுமான பணம் ஸாவ்காரிடத்திலில்லை. ஆகவே ஸாவ்காரர் தன்னுடைய பணத்தைக் கொடுக்கும்போது தனக்கு மெத்தவும் அநுகூலமான ஷரத்துக்கள் ஏற்படுத்திக்கொள்ளுகிறான். வியாபார விஷயத்திலே ஒரு சாமான் சர்ப்பரா குறைவாயிருந்து அது அதிகமாய்த் தேவையாயிருக்கும்போது, அந்த சாமானின் விலையானது எப்படி அதிகமாகிறதோ, அப்படியேதான் இதுவுமிருக்கிறது. சென்ற மூன்று வருஷ

காலமாக பற்பல இடங்களில் வாங்கப்படும் வட்டி வீதங்கள் இன்னவையென்று தெரிந்துகொண்டிருக்கிறேன்; அவைகளில் சில உங்களுக்கு ஆச்சரியகரமா யிருக்கலாம். சில இடங்களில் சாதாரண வட்டி வீதமானது நூற்றுக்கு 75 வீதமாகவும், இதர இடங்களிலே அது 180 வீதமாகவு மிருக்கிறது; ஏதோ சிற்சில இடங்களில் இதைவிட இன்னும் அதிகமான வீதப்படியும் வட்டி வாங்கப்படுகிறது. மெத்தவும் அநீதவட்டி வாங்கப்படுவதற்கு உதாரணமாக, ஒரு இடத்திலே நாளொன்றுக்கு ரூபாய்க்கு 4 அணா வீதம் வட்டி செலுத்தப்பட்டு வந்தது. பணம் தேவையாயிருக்கிறவர்களுக்குக் கடன் கொடுப்பதற்குப் போதுமான பணம் கடன் கொடுக்கிறவர்களிடத்தில் இல்லாமலிருப்பதே இதற்குக் காரணமாகும். பணம் எவ்விடத்தில் அதிகமாயிருக்கிறதோ அவ்விடத்தில் வட்டிவீதம் குறைந்துபோகிறது; சில தேசங்களிலே வட்டி வீதமானது குறைவாயிருக்கிறது. அதாவது, வருஷமொன்றுக்கு நூற்றுக்கு இரண்டாயிருக்கிறது. ஆகவே மூலதனம் குறைவாயிருப்பதே உயர்ந்த வட்டிவீதம் வாங்குவதற்கு முக்கிய காரணமாகும்.

3. ஸாவ்காரர் தான் கொடுத்த பணத்தைத் திரும்பப்பெறும் விஷயத்தில் ஏற்படும் கஷ்டமே இன்னொரு காரணமாகும். ஒவ்வொருவரும் யோக்கியராயிருக்கிற இடங்களில் வட்டி வீதம் குறைவாயிருக்கிறது. பத்து பேர்களில் ஒவ்வொருவருக்கும் நூற்றுக்கு 6 வட்டிவீதம் ஒரு ஸாவ்காரர் 100 ரூபாய் கடன் கொடுப்பதாகவும், அவர்களில் ஒருவர் அயோக்கியராய்ப் போய் அதனால் 100 ரூபாய் இழந்து விடுவதாகவும் வைத்துக் கொள்வோம். இந்த நஷ்டத்தைச் சரிப்படுத்திக் கொள்ளும்பொருட்டு அந்த ஸாவ்காரர் மற்ற ஒன்பது பேர்களிட மிருந்து முன்னிலும் அதிகமான வீதப்படி வட்டி வாங்கவேண்டியவனாயிருக்கிறான். ஆகவே, மற்ற ஒன்பதுபேர்களிடமிருந்து வட்டித் தொகையாக எப்படியாகிலும் 106 ரூபாய் வசூல் செய்ய வேண்டியதாயிருக்கிறது. இதனால் அவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் வட்டியானது 100 க்கு 6 வீதத்திலிருந்து சுமார் 13 வீதமாக உயர்கிறது. அதாவது, ஸாவ்காரர் தான் கொடுத்த கடன் தொகை திரும்பிவராமல் போகிற பட்சத்தில் அந்த நஷ்டத்தைச் சரிப்படுத்திக்கொள்ளும்பொருட்டு வட்டி வீதத்தை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டியவனாயிருக்கிறான். அசல் தொகை இழந்துபோகிற விஷயத்தில் பாத்திரமே நஷ்ட முண்டாவதில்லை - ஏனென்றால், அனேகமான இதர வழிகளிலும், எனவே கோர்ட் செலவு, வண்டி சத்தம் முதலிய பலவகைப்பட்ட செலவு மூலமாக நஷ்டம் உண்டாகலாம். சாதாரணமாய் வக்கீலுக்குக் கொடுக்கப்படும் தொகையானது சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் அதிகமாகவே யிருக்கிறது. டிக்ரி பெற்ற பிறகுங் கூட அனேக கஷ்டங்கள் இருக்கின்றன; ஏனென்றால், டிக்ரியான தொகைகளெல்லாம் வசூலாவதில்லை. ஸாவ்காருக்குண்டாகும்

இந்த நஷ்டங்களை அவரிடத்தில் கடன் வாங்கியிருப்பவர்களில் நல்லவர்களாயும் யோக்கியர்களாயு மிருப்பவர்களே சரிப்படுத்திக் கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

4. கடைசியாக ஸாவ்காரும் மனுஷனாகப்பிறந்தவனே; அவனும் நம்மைப்போல் ஒரு குடும்பத்தை ஆதரிக்கவேண்டியவனாயிருக்கிறான். கடன் கொடுத்துப் பணம் சம்பாதிப்பதையே அவன் முற்றிலும் நம்பியிருக்கிறான்; ஆகவே, அவன் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளப் பார்க்கிறான்.

5. அளவற்ற திரவிய வருவாயுள்ளவராயும், கடன் வாங்குகிறவர்களின் யோக்கியதையைக் குறித்தும் அவர்கள் தனக்குக் கொடுக்கவேண்டிய கடன்களைத் தொந்தரைக்கிட மில்லாமல் கொடுக்கக்கூடிய சக்தியைக்குறித்தும் தெய்வதிருஷ்டியு முள்ளவராயும், தான்கொடுத்த பணத்துக்குத் திரவிய சாஸ்திரப்படி ஏற்படும் நகுதியான மதிப்பைக் காட்டிலும் அதிகமாகப் பணம் வசூலிக்கும் இஷ்டமில்லாதவராயும் ஒரு ஸாவ்கார் கலியாண துருக்கத்திலிருப்பதாக வைத்துக் கொண்டால், அப்படிப்பட்ட ஸாவ்காரை தெய்வானுக்கிரகமாய்க் கிடைத்தவராக பாவித்துக் கொண்டாடலாம்; ஐக்கிய நாணயச்சங்கமானது அப்படிப்பட்ட ஸாவ்காருக்கு ஒப்பாகும். ஆகவே, சரியான ஸாவ்காரிடத்தில் இந்த மூன்று குணங்களும் சேர்ந்தாற்போலிருக்கவேண்டும். அவையாவன:—

1. அளவற்ற பணம்;

2. கடனாளி யோக்கியனா என்றும், வாங்கின கடனைத் திருப்பிச் செலுத்துவானா என்றும் நிதானித்தறிவதற்கு, வெகுசாய்த் தெய்வீகத்தன்மையுள்ள ஒரு சக்தி;

3. சுயப்பிரயோசனத்தை விருத்திபண்ணும் விருப்பமில்லாமை.

இம்மூன்று நோக்கங்களையும் நிறைவேறச் செய்வதை உத்தேசித்தே ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தின் சகல சகாயச் சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நான் உங்களுடைய சொந்த சகாயச் சட்டங்களையே ஒவ்வொன்றாகப் படித்துக் காட்டி, அவைகள் இந்தக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன வென்று எண்பிக்கிறேன். அவைகளை உங்களுக்கு விவரித்துக் காட்டினபிறகு, நீங்கள் அவைகளெல்லாவற்றின்படியும் நடந்து கொள்வது அவசியமென்பதை அறிந்து கொள்வீர்கள்.

6. கிராமவாசிகள் கொடுப்பதாகச் சொல்லும் ஈடு என்ன? நிலமே சகலவித வரும்படிக்கும் முடிவான ஆதாரமாயிருக்கிறது; மேலும், சித்தாந்தப்

படி பார்க்கும்போது அது தான் சகல ஈடுகளுக்குள்ளும் சிறந்தது. சகல விதமான இதர வியாபாரங்களும் தொழில்களும் எவ்வளவு பந்தோபஸ்தானவைகளாயிருந்த போதிலும், கடைசியாக நிலத்தைப் பொறுத்தவைகளாயிருக்கின்றன. ரயத்துகளுக்கு நிலத்தில் சரியான பாகுல் கிடைக்காமற் போய் அந்த ரயத்துகளில் எவரும் உடுப்புகள் வாங்குவதற்கு சக்தியற்றவர்களாயிருந்தால், துணி வியாபாரி தன்னுடைய கடையை மூடிவிடவேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட ஈட்டை வைத்திருந்தும் ரயத்து ஏழையாயிருப்பதைப் பார்த்தால் பரிதாபகரமாயிருக்கிறது. யாரிடத்தில் பணமிருக்கிறதோ அவர்களோடு அவனுக்கு நேரே சம்பந்தமில்லாதபடியால் அவன் ஏழையாயிருக்கிறான். ஒரு ரயத்துக்கு 30 ரூபாய் வேண்டியதாக வைத்துக் கொள்வோம். சென்னையில் போதுமான பணமிருக்கிறது. கடன் வாங்கும் ரயத்தானவன் சரியான ஈடுகொடுப்பானென்று சென்னையிலுள்ள ஸாவ்காருக்குத் தெரிந்தால், அவன் அந்த ரயத்துக்குக் கடன்கொடுக்கச் சந்தோஷப்படுவான். ஆயினும், அப்படிப்பட்ட சிறு கடன் தொகைகளுக்காக கொடுப்பதாகச் சொல்லப்படும் ஈடானது சரியானதுதானா வென்று விசாரித்தறியும் பொருட்டு எந்த ஸாவ்காரும் ஒரு ஏஜெண்டை அனுப்பமாட்டான்; ஏனென்றால், அதற்குப் பிடிக்கும் செலவானது அதிகமா யிருப்பதோடுங்கூட அந்த கடன் தொகை அதைத்தாங்க முடியாததாயுமிருக்கும். அப்படிப்பட்ட ஒரு ஏஜெண்டை அனுப்பினாலும், அவர் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவராயிராதபடியால், கடன் வாங்கினவர் கடன் தீர்க்க சக்தியுள்ளவரா அல்லவா என்பதை அவர் வெகுசாய்ச் சரியாக நிதானித்தறியக் கூடியவராயிருக்கமாட்டார்; ஆகவே, அவர் தனக்கு இதரர் தெரிவிக்கும் சமாசாரத்தையே நம்பவேண்டியவரா யிருப்பார். எவ்வளவோ விசாரணை செய்து பார்த்த பிறகுதான் கவர்ன்மெண்டார் கடன் கொடுக்கிறார்களென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்; அப்படி யிருந்தும் ஆயிரக்கணக்காய் ரூபாய் வசூலிக்க முடியாததென்று கணக்கிலிருந்து அடித்துவிட வேண்டியதா யிருக்கிறது. ஒரு ரயத்துக் கிருக்கும் ஈட்டுப்பொருளானது மற்றவர்களின் பொருளைக் காட்டிலும் சிரேஷ்டமானதாயிருந்தும், அவன் வசிக்கும் கிராமத்திற்கு வெளியே உள்ள ஜனங்களுக்கு அது அப்படிப்பட்டதென்று தெரியாமலிருக்கலாம்.

7. தனித் தனியாக ஒவ்வொரு ரயத்தும் கடன் தீர்க்கச் சக்தியுள்ளவரா அல்லவா என்று உள்ளூரிற் போய்த் தெரிந்துகொள்வது சென்னையிலுள்ள ஸாவ்காருக்கோ மதராஸ் பாங்கியாருக்கோ பிரதான பாங்கியாருக்கோ அசாத்தியமான காரியம். ரயத்து கடன் தீர்க்கச் சக்தியுள்ளவராயும் யோக்கியராயு மிருக்கலாம். அவர் கடன்தீர்க்கச் சக்தியுள்ளவராயிருப்பதும் யோக்கியராயிருப்பதும் பணம் வைத்துக்கொண்டிருப்பவருக்குத் தெரியாமலிருப்பதே இதிலுள்ள கஷ்டமாகும்.

ஐக்கிய நாணயச்சங்கத்தால் இக்குறைவு பரிகாரமாகிறது. அச்சங்கத்தார் அயோக்கிய ஜனங்களோடு எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை. 2) நபர்கள் சேர்ந்து தங்களுடைய சொத்தை யெல்லாம் அடகு வைப்பதாக வைத்துக் கொள்ளுவோம். ஸெண்ட்ரல் பாங்கியார் அவர்களுக்குள் தனியாய் எவராகிலும் ஒருவருக்குக் கடன் கொடுக்கமாட்டார்கள்; ஆனால் அவர்கள் 20 நபர்கள் சேர்ந்த ஒரு சங்கத்தாரின் கூட்டுப் பொறுப்பின் மேலேயே கடன் கொடுப்பார்களென்பது நிச்சயம். 20 நபர்கள் சேர்ந்த ஒரு கூட்டத்தார் ஐக்கியநாணயச் சங்கத்தால் ஒன்றாகக் கட்டுப்பட்டவர்களாயிருக்கிற பட்சத்திலே அவர்கள், தங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ அதை ஸெண்ட்ரல் பாங்குகளிலிருந்து அடைய முடியாமலிருப்பது மெத்தவும் அபூர்வமே. ஆனால், பணம் இருந்தால் மாத்திரம் போதாது. இதர பந்தோபஸ்துகளும் ஏற்பட்டிருக்க வேண்டும். மெம்பர்கள் ஒருவரையொருவர் நன்றாய்த் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இக்காரணத்தினாலேயே சிறு விஸ்தீர்ணங்களில் வேலை நடத்தப்பட்டு வருகிறது. கிராமங்களை மொத்தமாய்ச் சேர்க்காமல் தனித்தனியாய் ஒவ்வொரு கிராமத்திலும் வேலை செய்து வருவது நல்லது. ஆதியிலிருந்து வேலை செய்துவரும் சங்கத்தார் இந்தக் கொள்கையை நன்றாய்த் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள சென்னிமலை நாட்டு நாணயச் சங்கத்தார் தாங்கள் வேலைசெய்யும் விஸ்தீர்ணத்தை விசேஷமாய்க் குறைத்துக் கொண்டார்கள்.

8. இதர பந்தோபஸ்துகளையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். கடன் ஜாரிசெய்யும்போது யுக்தா யுக்தப்படியும் ஜாக்கிரதையுடனும் நடந்துகொள்ள வேண்டும். சங்கத்தாரெல்லோரும் சேர்ந்து இந்த வேலையைச் செய்ய முடியாது. ஆகவே, பொறுப்பேற்றுள்ள சிலரையே இவ்வேலையைச் செய்யும்படி ஏற்படுத்துகிறார்கள். இவர்களுக்குத்தான் பஞ்சாயத்தாரென்று பெயர்; இவர்களைப் பொதுச்சபையார் தெரிந்தெடுத்து நியமிக்கிறார்கள். பஞ்சாயத்தாருடைய அஜாக்கிரதையினாலே நஷ்டமுண்டாகிற பட்சத்தில் அதற்கு அவர்களே உத்தரவாதிகளாவார்கள். பஞ்சாயத்தார் தப்பிதம் செய்கிற பட்சத்திலே, அவர்களை நீக்கி வேறே பஞ்சாயத்தாரை நியமிப்பது யுக்தமென்று பொதுச் சபையாருக்குத் தோற்றினால், அவர்கள் அந்தப்படி நீக்கப்படுவதற்குள்ளாவார்கள். பொது ஜன நன்மைக்காகப் பஞ்சாயத்தார் வேலைசெய்ய வேண்டும். பணக்காரர்களே பஞ்சாயத்தாராயிருக்க வேண்டுமென்பது அவசியமல்ல.

ஒருவர் ஐக்கியநாணயச்சங்கத்தில் மெம்பராயிருப்பதே அவருடைய யோக்கியதைக்கு நற்சாட்சிப் பத்திரமாகும்; ஏனென்றால், ஒருவர் அந்த சங்கத்தில் மெம்பராயிருப்பதனாலேயே அவர் யோக்கியரென்றும் நம்பத்தக்கவரென்றும் அமைதியுள்ளவரென்றும் ஏற்படுகிறது. ஒருவர் பஞ்சாயத்து மெம்பராகவுமிருக்கிற பட்சத்திலே, இக்குணங்களெல்லாம் அவரிடத்தில் பொருந்தியிருப்பதாக இன்னும் உறுதியாய்க் கொள்ளப்படுகிறது.

உள்ளூர் ஜனங்களே பஞ்சாயத்தாரைத் தெரிந்தெடுத்து நியமிப்பதோடுங்கூட, அவர்களை வேலையினின்றும் நீக்குகிறார்கள். நஷ்டங்களுக்கு அவர்களே நேரில் உத்தரவாதிகளா யிருக்கிறார்கள். ஆகவே, கொடுக்கப்படும் கடன் தொகைகளெல்லாம் திருப்பிச் செலுத்தப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை.

9. ஒரு கடனை ஜாரி செய்வதற்கு முன்னமே, உற்பத்தி செய்யும் காரியத்திற்காக அந்தக் கடன் வேண்டியிருக்கிறதா என்பதை முதலில் விசாரித்தறிய வேண்டும். லாபம் சம்பாதிப்பதற்காக ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட வில்லை. இதனால் தான் ஈவுத்தொகை யெதுவும் கொடுப்பதில்லை. சேமநிதியானது எவருக்கும் சேருவதில்லை. ஒரு சங்கமானது கலைந்து போனாலுங்கூட, சேமநிதியைப் பங்கிடு செய்யாமல், அந்தக் கிராமத்திலேயே ஏதாகிலும் பொதுக் காரித்திற்காக அதை உபயோகிக்க வேண்டும். சங்கமானது அழிந்து போகாமல் ஸ்திரமாய் வேலை நடத்தி வரும்படி செய்வதற்காகவே சேமநிதி சேர்க்கப்படுகிறது.

10. ஒரு ஐக்கியநாணயச் சங்கமானது பலிதமாய் வேலைசெய்து வருவதற்கான ஷரத்துகளென்னவென்றால்:—

(1) உத்தரவாதம் வரையறுக்கப்படாமலிருப்பது;

(2) சிறு விஸ்தீரணம்;

(3) ஈவுத்தொகை கொடாதிருப்பது;

(4) கௌரவார்த்தமாய் நிர்வாகம் செய்வது;

(5) உற்பத்திசெய்யும் காரியத்திற்காகக் கடன்தொகைகளை உபயோகிப்பது;

(6) சன்மார்க்க போதனை.

இந்த ஆறு அம்சங்களும்—மேலே அவசியமாயிருக்க வேண்டுமென்று சொல்லியுள்ள மூன்று திட்டங்களினின்றும் ஏற்பட்டவைகளாகும். சகாயச் சட்டங்களெல்லாம் இந்த ஆறு ஷரத்துகளினின்றும் ஏற்பட்டவைகளாகவும் அவைகளின் விவரணபாகங்களாகவுமே இருக்கின்றன.

மேலே சொன்னதை யெல்லாம் சுருக்கமாய்த் தொகுத்துச் சொல்வோம். ஒரு ரயத்துக்குப் போதுமான ஈடு இருக்கிறது; ஆகவே, 100 க்கு 8 அல்லது 9 வீதப்படி வட்டி ஏற்படுத்திக் கடன் கொடுத்தால் அது அவனுக்குப் பெருத்த சகாயமாயிருக்கும். இது இப்படி யிருக்க, தங்களுடைய

பணத்தை பந்தோபஸ்தான ஈட்டின்மேல் போட்டுவைப்பதற்கு வழியில்லாதவர்களாய் தங்களுடைய மூலதனத்தின் பேரில் 100 க்கு மூன்று அல்லது மூன்றரை வீதப்படி வட்டி பெற்று திருப்தியடையவேண்டியவர்கள் அனேகர் இருக்கிறார்கள். இவ்விருதிறத்தாரையும் ஒன்று சேர்ப்பதுதான் நாம் செய்யவேண்டிய விஷயம். ரயத்துகள் ஸாவ்கார்களுக்கு உயர்ந்த வட்டி வீதப்படி வட்டி கொடுத்து வருவதற்குக் காரணங்களென்னவென்றால்:—1. போதுமான மூலதனம் குறைவாயிருப்பது. 2. கடன் வாங்குகிறவர்களுடைய யோக்கியதையைப் பற்றி சம்சயம் உண்டாயிருப்பது. 3. சமயம் பார்த்து விசேஷ லாபம் சம்பாதிக்க விருப்பம் கொள்வது. மேலே சொன்ன ஆறு ஷரத்துகளும் நிறைவேறியிருக்கும் ஐக்கிய நாணயச் சங்கத்தை ஸ்தாபிப்பதுதான் இந்த கஷ்டத்தை நீக்குவதற்குச் சரியானவழி. அநுபவரீதியாய் வேலை செய்வதவற்காக சகாயச் சட்டங்களை வெவ்விதமாய் மாற்றிக்கொண்ட போதிலும், அவைகள் இந்த ஆறு ஷரத்துகளுக்கு விரோதமாயிருக்கக் கூடாது.

கடன் கொடுக்கும் வகையில் மாத்திரமே யல்லாமல் மற்ற சகல விஷயங்களிலும் கூட்டுத்தொழில் நடத்தி வருவது அவ்வவ்விடங்களிலே அவசியமாய்ச் செய்ய வேண்டிய சொற்ப வேலையாயிருக்கிறது. "ஒரு தம்பிடி போனால் பிரமாதமில்லை" என்று எவனொருவன் சொல்லுகிறானோ அவன் சரியாய்க் கூட்டுத்தொழில் முறையை அனுசரிக்கிறவனல்ல; சித்தியாய் வேலை செய்யவேண்டுமானால் ஒவ்வொரு விவராம்சத்தையும் கவனிப்பது அவசியமாயிருக்கிறது. கூட்டுத்தொழில் சங்கத்தைப் பரிபாலனம் பண்ணுவதென்பதே முக்கியமாய் விவராம்சங்களைக் கவனிக்கும் விஷயமாகத் தானிருக்கிறது; ஆகவே, அது ஸ்வாரசியமற்றதாயிருக்கலாம்; ஆனால் விவரமான விஷயங்களைக் கவனிக்காமல் நல்ல வேலை யெதுவும் செய்ய முடியாது. கலியாணதுருக்க சங்கத்தின் சகாயச் சட்டங்களைப் படித்துக்காட்டி அவை விஷயமாய் என்னுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்துக்கொண்டே போகிறேன்.

B. கலியாணதுருக்க சங்கத்தின் சகாயச்சட்டங்கள்.

சகாயச்சட்டம் 1:—177-ம் நம்பர் சங்கமாகிய "ஸர் ப்ரெடெரிக் நிக்கல்ஸன் நாட்டு நாணயச் சங்கமானது" 1904-ம் வருஷத்திய இந்துதேசத்து 10-வது ஆக்டின்படி ஒரு நாட்டுச் சங்கமாக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அந்தபூர் ஜில்லாவிலுள்ள கலியாணதுருக்கத் தாலூகாவிலிருக்கும் கலியாணதுருக்க கிராமம் அதன் மேல்விலாசம். கலியாணதுருக்க கிராமத்திலும் அதைச் சேர்ந்த மஜராக்களிலுமே அதன் வேலை நடந்தேறும். கலியாணதுருக்கத்தைச் சுற்றிலுமிருந்து 5 மைல் தூரத்துக்குள்ளிருக்கும் அசையாப்பொருளைக் கொதுவைவைப்பதன்மேல் மெம்பர்களுக்குக் கடன்கொடுக்கலாம்."

வியாக்கியானம்.

"ரெஜிஸ்டர் செய்வது"—ரெஜிஸ்டர் செய்யப்படாமலிருந்தால், எல்லா மெம்பர்களும் சேர்ந்து கோர்ட் விவகாரத்தை நடத்தவேண்டியதாயிருக்கும். ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால், காரியதரிசியாவது அக்கிராசனாதிபதியாவது சங்கத்தின் சார்பிலே கோர்ட்டுகளுக்குப் போய் ஹாஜராகலாம். அல்லாமலும், இருபது பேருக்கு அதிகமாய்ச் சேர்ந்துள்ள ஒரு ஸ்தாபனமானது ரெஜிஸ்டர் செய்யப்படாமலிருந்தால் அந்த ஸ்தாபனத்தால் செய்யப்படும் காரியமானது சட்டப்படி சரியானதாகாது.

"நாட்டு".—இந்த ஆக்டானது நகரச்சங்கங்களென்றும் நாட்டுச்சங்கங்களென்றும் இருவகைச் சங்கங்களுக்குச் சம்பந்தப்படுகிறது. சங்கங்கள் சரியாய் வேலை செய்வதற்கு, உத்தரவாதம் வரையறுக்கப்படாமலிருப்பது அவசியமாகும். உத்தர வாதம் வரையறுக்கப்படாமலிருக்க வேண்டுமானால், ஒருவரை யொருவர் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். பட்டணங்களிலே ஒருவருடைய பெயர் அவருக்கு அண்டை அயலில் உள்ளவருக்குத் தெரியாது; அவருடைய நடவடிக்கை யோக்கியதைகளைக் குறித்துத் தெரிந்திராமலே இருப்பது சகஜம். ஆகவே, பட்டணங்களிலுள்ள சங்கங்களுக்கு உத்தரவாதம் வரையறுக்கப்படாமலிருப்பது கூடாதென்று சொல்லப்படுகிறது. பட்டணங்களிலுள்ள ஏழை ஜனங்களுக்குங்கூட ஐக்கிய நாணயச் சங்கங்கள் மூலமாய் ஒத்தாசை செய்யலாம்; ஆனால், இதர முறைகளை யனுசரித்து அந்தப்படி செய்ய வேண்டும். ரைபைஸன் முறைப்படிக்கான மேற்கண்ட ஆறு ஷரத்துகளும் நகரப் பிரதேசங்களுக்குப் பிரயோகப் படமாட்டா.

"ஐக்கிய நாணயச் சங்கங்களைக் குறித்த ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்வது".—சங்கங்களை ரெஜிஸ்டர் செய்வதற்கு இதர ஆக்டுகளு மிருக்கின்றன; ஆனால், அவைகளெல்லாவற்றின்படியும் ரெஜிஸ்டர் செய்வதற்கான கட்டணம் செலுத்தவேண்டியதாயிருக்கிறது. ஐக்கிய நாணயச் சங்கங்களைக் குறித்த ஆக்டின்படி கட்டணமெதுவும் செலுத்த வேண்டியதில்லை. இதர ஆக்டுகளின்படி சகாயக் சட்டங்களில் செய்யப்படும் திருத்தங்களுக்கு ஹைகோர்ட்டார் அனுமதி கொடுக்கவேண்டி யிருக்கிறது; அதற்குச் செலவு பிடிக்கும்; ஆனால், அவசியமானபோதெல்லாம் திருத்தங்களைச் சுலபமாய்ச் செய்துகொள்வதற்கு ஐக்கிய நாணயச் சங்கங்களைக்குறித்த ஆக்டினால் அனுமதி ஏற்படுகிறது. ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் வேறே சில சகாயங்களும் செய்து கொடுக்கிறார்கள். கூட்டுத்தொழில் முயற்சியின் ஆரம்பத்தில் தான் இந்த சகாயங்கள் அவசியமாயிருக்கும். அந்த சகாயங்கள் எப்போதும் இருக்கவேண்டு மென்று எதிர்பார்க்கக்கூடாது. வெகு காலம் வேலைசெய்த பிறகுங்கூட ஒரு ஐக்கிய நாணயச் சங்கமானது மேற்

படி சகாயங்களில்லாமல் வேலைசெய்ய முடியாமற் போனால், அது ஒரு ஐக்கிய நாணயச் சங்கமாயிருப்பதற்குத் தகுதியானதல்ல. இந்த சகாயங்கள் இன்னவையென்று சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி 1-வது வால்யும் 3-வது இலக்கத்தில் விவரமாய்ச்சொல்லி யிருக்கிறது.

ஒரு சகாயம் வேண்டியிருப்பதாகத் தோற்றலாம். அது என்னவென்றால், சங்கத்தார் கோர்ட்டுக்குப் போகவேண்டியதில்லாமலே பாக்கித் தொகைகளைச் சுருக்கவகையாய் வசூல் செய்துகொள்வதற்கான பாத்தியதை தான். கணக்குகள் பகிரங்கமாய் வைக்கப்பட்டு வருவதால், மோசம் நடப்பதற்கு இடமிராது. அப்படியிருந்தும் இந்த சகாயம் செய்து கொடுக்கக்கூடாதென்பது என்னுடைய அபிப்பிராயம். அது செய்து கொடுக்கப்பட்டால், கடன் தொகைகளை ஜாரி செய்வதில் பஞ்சாயத்தார் அஜாக்கிரதையா யிருப்பார்கள்; அந்த அஜாக்கிரதையானது அதிகப்பட்டுக்கொண்டே வரும். கொடுக்கப்பட்ட கடன் தொகையானது திருப்பிச் செலுத்தப்படாத பட்சத்திலே, ஸாவ்கார் எம்மாதிரி கோர்ட்டுக்குப்போய் கஷ்டப்படவேண்டியவனாயிருப்பானோ அம்மாதிரியே அவர்களும் கஷ்டப்படவேண்டி வருமென்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

"வேலைநடத்தும் விஸ்தீர்ணம்"—இது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 2-வது சகாயச்சட்டத்தில் கண்ட விஸ்தீர்ணத்துக்குள் ஒவ்வொரு மெம்பரும் வாசஞ்செய்ய வேண்டும். கொதுவை வைக்கப்பட்ட சொத்தானது பின்னே விவரித்துச் சொல்லப்படும் வேலை விஸ்தீர்ணத்துக்குள்ளே இருக்கலாம். சாதாரணமாய் இவ்விரண்டு விஸ்தீர்ணங்களும் ஒன்றுதான். ஆனால், மெம்பர்கள் எந்த விஸ்தீர்ணத்தில் வாசஞ் செய்கிறார்களோ அந்த விஸ்தீர்ணத்திற்கு வெளியே இருக்கும் நிலங்களைக் கொதுவை வைப்பதற்கு அனுமதி ஏற்படும்படியாக, கலியாணதுருக்கத்திலிருப்பதைப்போல விசேஷ சகாயச்சட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உத்தரவாதம் வரையறுக்கப்படாதுள்ள பல பாங்கிகளில் ஒருவர் மெம்பராயிருக்கலாம்; ஆனால், உத்தரவாதம் வரையறுக்கப்படாத பாங்கிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பாங்கிகளிலே அவர் மெம்பாயிருக்கக் கூடாது. நபர் ஜாமீன்பேரில் கொடுக்கப்படும் கடன்களைக் குறித்து தக்கபடி ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், அவை கொதுவையின் பேரில் கொடுக்கப்படும் கடன்களைப்போலவே பந்தோபஸ்தானவைகளா யிருக்கின்றன; ஏனென்றால், கடன் வாங்கினவர் எந்த சங்கத்துக்காக வரையறுக்கப்படாத பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறாரோ அந்த சங்கத்துக்கு அவருடைய சொத்தெல்லாம் ஆரம்பத்திலிருந்தே உட்பட்டதா யிருக்கிறது.

சகாயச்சட்டம் 2:—யாதோரு நபர் 18 வயதுக்கு மேற்பட்டவராயும் சித்தஸ்வாதீனமுள்ளவராயு மிருந்து, இந்த சகாயச்சட்டத்திற் கண்ட கிராமங்களில்

வாசஞ்செய்கிறவரா யிருந்தால், அவர் சங்கத்தின் மெம்பராய்ச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுள்ளவராவார். ஆனால், அந்தப்படி மெம்பராய்ச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று எவரும் பாத்தியதை கொண்டாடக்கூடாது. மேலும், சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொத்த மெம்பர்களில் ஐந்தில் நாலுபங்கு பேருக்குக் குறையாதவர்கள் விவசாயிகளா யிருக்க வேண்டும்.

வியாக்கியானம்.

"18 வயதுக்கு மேற்பட்டவராயும் சித்தஸ்வாதீன முள்ளவராயும்".—(மைனர்களும்) வயது வாராதவர்களும் பைத்தியக்காரர்களும் மெம்பர்களாக முடியாது. அந்த நபர்களுடைய க்ஷேமத்தையும் சங்கத்தின் க்ஷேமத்தையும் ஆகிய இவ்விரண்டையும் யோசிக்கையில் இந்த நிபந்தனை அவசியமாக இருக்கிறது. ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கும் இதர சங்கங்களுக்குமுள்ள வித்தியாசங்களில் இது ஒன்று. அங்கே வயது வாராதவர்கள் முதலியவர்கள் மெம்பர்களாகலாம். சென்னை சர்வகலா சங்கத்தைப்போன்ற ஸ்தாபனங்கள் இதர கம்பெனிகளில் பங்குகள் எடுத்துக்கொள்ளலாமே யொழிய, ஐக்கிய நாணயச்சங்கங்களில் பங்குகள் எடுத்துக் கொள்ளலாகாது. மனிதர்கள்தான் மெம்பர்களாகலாம். ஏனென்றால், அவர்கள் நேரில் சங்கங்களிலே அக்கறை கொண்டவர்களாய் அவைகளின் விவகாரங்களைக் கவனித்து வருவது நமக்கு அவசியமாயிருக்கிறது.

"யாதோரு நபர்."—புருஷனாயிருந்தாலும் ஸ்திரீயாயிருந்தாலும், பறையனாயிருந்தாலும் சக்கிலியாயிருந்தாலும், கிறிஸ்தவராயிருந்தாலும் மகம்மதியாராயிருந்தாலும், அந்த நபர் எவ்வித வித்தியாசமு மில்லாமலே ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தில் மெம்பராகலாம். இதுமெத்தவும் அவசியமானது. எளிய ஜனங்களைச் சேர்த்துக் கொள்வதனால் நாம் அதிக நன்மை செய்யக் கூடியவர்களாயிருக்கிறோம். பணக்காரர்களுக்குச் சுலபமான ஷரத்துகளின் பேரில் பணம் கடனாகக் கிடைக்கும்; எளியவர்களுக்கோ ஐக்கிய நாணயச்சங்கங்கள் தவிர மற்ற எந்த இடத்திலும் சுலபமான ஷரத்துகளின்பேரில் கடன் கிடைக்காது. மேலும் திட்டமாய் ஒரு தொகை வைத்துக்கொண்டு எத்தனை பணக்காரர்களுக்குக் கடன் கொடுக்கலாமோ அதைவிட அதிகமாய் ஏழைகளுக்கு கடன் கொடுத்து உதவலாம்; அதே தொகையைக் கொண்டு சில பணக்காரர்களுக்குத் தான் கடன் கொடுக்கமுடியும்.

வாசஞ்செய்கிற.—ஒரே மஜராவில் வேலை நடத்தும் சங்கங்களுமிருக்கின்றன; 9 அல்லது 10 கிராமங்களில் வேலை நடத்தும் சங்கங்களு மிருக்கின்றன. மேலும், சில ஜாதியார்களுக்கென்றே உத்தேசிக்கப்பட்ட சங்கங்களும் இருக்கின்றன. மதராஸ் தென்மஹாராஷ்ட்ரா ரெயில்வே உத்தியோகஸ்தர்களின் பாங்கானது அந்த ரெயில்வே விஸ்தீர்ணம் முழுவதும் வேலை நடத்திவரு

கிறது. யாதொரு சங்கத்தார் வேலை நடத்தும் விஸ்தீரணத்தை நிர்ணயிப்பதில் அடங்கியுள்ள கோட்பாடு என்ன வென்றால், அந்த மெம்பர்கள் பரஸ்பரம் நன்றாய்த் தெரிந்துகொள்வது சாத்தியமாயிருப்பது தான். காவேரிப்பாக்கம் சங்கத்தார் முதலில் 58 கிராமங்களிலே வேலை நடத்த ஆரம்பித்தார்கள்; ஆனால், அவர்கள் இப்போது தங்களுடைய வேலை விஸ்தீர்ணத்தைக் குறைத்துக் கொண்டு இரண்டு கிராமங்களில் தான் வேலை செய்துவருகிறார்கள்; மேலே நீக்கிவிடப்பட்ட கிராமங்களில் 13 அல்லது 14 கிராமங்களிலே புதிதாய்ச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வேலை நடத்தும் விஸ்தீர்ணத்தைப் பிரித்து விடுவதனால் முன்னிலும் அதிக ஜனங்கள் ஒத்தாசை பெறுவதோடுங்கூட, ஏழைக் குடியானவர்களுக்கு முன்னிலும் அதிக சுலபமாய்க் கடனும் கிடைக்கிறது.

சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகுதியுள்ள.—எந்த நபராகிலும் அதமம் 18 வயதானவராயிராவிட்டாலும் சித்த ஸ்வாதீனமுள்ளவரா யிராவிட்டாலும், அவ்விடத்திலேயே வாசஞ் செய்பவராயிராவிட்டாலும் அவர் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகுதியுள்ளவரல்ல. யாதொரு நபர் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகுதியுள்ளவராயிருந்தாலும், பஞ்சாயத்தார் அவரைச் சேத்துக்கொள்ளக் கடமைப்பட்டவரல்ல; எனவே, ஒருவர் தம்மைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பாத்தியதை கொண்டாட முடியாது. ஒருவர் ஐக்கிய நாணயச்சங்கத்தில் மெம்பராயிருப்பது அவருடைய யோக்கியதைக்குநற்சாட்சிப்பத்திரமாகும். மெம்பர்களைச்சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் பஞ்சாயத்தார் முற்றிலும் யுக்தானுசாரமாய் நடந்துகொள்ளலாம்; சென்னைமாகாணத்திலே இப்படிப்பட்ட சங்கத்தில் சேர மனுசெய்துகொண்ட ஒருவரை அக்கிரமமாய்த் தள்ளிவிட்டதற்காகப் பஞ்சாயத்தார்மேல் தாக்கல் செய்யப்பட்ட பிரியாதானது தள்ளிவிடப்பட்டபோதிலும், பஞ்சாயத்தார் தக்கபடி யுக்தானுசாரமாய் நடந்துகொள்ளவேண்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்வதனால் தெரியவருவதென்னவென்றால், ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தில் மெம்பராயிருப்பதைப் பொது ஜனங்கள் அடைய விரும்பும் ஒரு ஸ்வதந்திரமாய் மதிக்கிறார்களென்பதே. ஒரு நபர் சங்கத்தில் சேருவதற்காக விண்ணப்பம் செய்துகொள்ளும்போது, அந்த விண்ணப்பத்தை எப்போதும் தக்ஷணமே தள்ளிவிடவேண்டியதுமில்லை, அப்படி எப்போதும் தள்ளிவிடவுங் கூடாது. தம்முடைய நடத்தையை சீர்திருத்திக்கொள்ளும்படி விண்ணப்பதாரருக்குச் சொல்லலாம்; அவர் அப்படி சீர்திருத்திக்கொள்வதில் சதா விருப்பமுள்ளவராயிருக்கிறாரென்று எண்பிக்கப்படுகிற பட்சத்திலே அவரைச் சேர்த்துக்கொள்ளலாம்.

சகாயச்சட்டம் 3:—சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும்—அச் சங்கத்தார் வாங்கியிருக்கும் சகல கடன்களுக்காகவும் மற்ற ஒவ்வொரு மெம்பரையும் போலவே கூட்டாகவும் தனித்தனியாகவும் உத்தரவாதியாவார்.

வியாக்கியானம்.

வரையறுக்கப்படாத உத்தரவாதம்.—வேண்டிய மூலதனம் சேகரிப்பதற்காக இது மெத்தவும் அவசியமானது. உத்தரவாதம் வரையறுக்கப்படாமலிருப்பதனால் உள்ள அபாயத்தைக் குறித்தும் அப்படிப்பட்ட அபாயம் உண்டாகாதபடி தடுப்பதற்காகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைக் குறித்தும் விவரமாய்ச் சொல்லியிருக்கிறது.

அவசியமான காரியங்களுக்குத்தான் கடன்வாங்கவேண்டும். வேண்டிய அளவுக்கு மிஞ்சி ஒருரூபாய் கடன் வாங்குவதாயிருந்தாலும் அது கெடுதியே. யாதொரு நபர் சிக்கனக் கொள்கைகளைச் சிற்சில சந்தர்ப்பங்களில் கவனிக்காம லிருக்கக்கூடியவரா யிருந்தபோதிலும், அந்த சங்கத்தைச் சேர்ந்த மற்ற சகல மெம்பர்களும்-அவர் மட்டுக்கு மிஞ்சி செலவழிப்பதனால் ஏற்படும் நஷ்டத்திற்குத் தாங்கள் உத்தரவாதியாவார்களாகையால் தங்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்து, அவர் அவ்விதம் மட்டுக்கு மிஞ்சி செலவழிக்காதபடி பார்த்துக்கொள்வார்கள். ஒரு ஸாவ்கார் உத்தரவாதம் வரையறுக்கப்படாமலுள்ள சங்கங்களுக்குப் பணம் கடன்கொடுக்கும்போது, இது தான் அவருக்குள்ள சரியான ஈடாகும்.

சகாயச்சட்டம்:4.—ஒவ்வொருவரும் மெம்பராய்ச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்போழுது ஒரு ரூபாய் பிரவேச கட்டணம் செலுத்தவேண்டியவராவார். அவர் வேறே கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.

வியாக்கியானம்.

லாபம் சம்பாதிக்கும் உத்தேசத்துடன் பிரவேச கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. அந்த கட்டணம் வசூலிக்காவிட்டால், மெம்பராய்ச் சேருவதற்காக அனேகர் யோசனையின்றி முன்வருவார்கள். கட்டணம் செலுத்தவேண்டியதாயிருக்கிற பட்சத்திலே, விண்ணப்பதாரர் தீரயோசனை செய்த பிறகு மெம்பராய்ச் சேருவார். சில பஞ்சாயத்தார் பிரவேச கட்டணம் வாங்குவதில்லை; ஆனால் யார் கடன் வாங்குகிறாரோ அவருக்கு கொடுக்கும் முதல் கடன் தொகையிலிருந்து அதைக் கழித்துக்கொள்ளுகிறார்கள். இது பிசகு; அவர்கள் செய்யவேண்டிய தென்னவென்றால், மெம்பராய்ச் சேர உத்தேசிக்கும் ஒவ்வொருவருக்கும் சிக்கனமுறையைக் கற்பித்து, பிரவேச கட்டணத்துக்கு வேண்டிய தொகையை மிகுத்திவைக்கும்படி செய்து, பிறகு அவரை மெம்பராகச் சேர்த்துக்கொள்ளவும் வேண்டும். ஒருவர் சிக்கனமாய்ச் செலவுசெய்து தான் கட்டவேண்டிய சொற்ப கட்டணத் தொகையை மிகுத்தக் கூடாதவராயிருக்கிற பட்சத்திலே, அவர் ஒரு கூட்டுத்தொழில் சங்கத்தில் மெம்பராவதற்கு ஒருபோதும் யோக்கியதையுள்ளவராமாட்டார்.

சகாயச்சட்டம் 5.—மெம்பராய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிறகு ஐந்து வருஷத்திற்குள்ளாக சங்கத்திலிருந்து விலகிக்கொள்ள ஒருவருக்கும் அனுமதி

கொடுக்கப்படமாட்டாது. ஆனால் பஞ்சாயத்தாருக்கு எழுத்துமூலமாக நோடிஸ் கொடுத்து அப்படிப்பட்ட காலத்துக்குப் பிறகு விலகிக்கொள்ளலாம்; மேலும், அவர் சங்கத்தாருக்குக் கொடுக்கவேண்டியதாய்க் கடன் எதுவும் அவர்பேரில் இருக்கக்கூடாது; அல்லாமலும், சங்கத்துக்குச் சேரவேண்டிய எந்த கடனுக்காக தான் ஜாமீன்தாரராயிருக்கிறாரோ அந்த தொகை இன்னும் பாக்கியிலிருக்கவுங் கூடாது. யாதொரு மெம்பர் சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளும் காலத்திலே அந்த சங்கத்துக்கிருந்த பொதுக்கடனுக்காக அப்படி விலகிக்கொள்ளும் மெம்பருக்கு 3-வது சகாயச் சட்டத்தின்படி ஏற்படும் உத்தரவாதமானது அவர் விலகிக்கொண்ட தேதி முதல் ஒரு வருஷகாலத்துக்கு இருந்துகொண்டிருக்கும்.

வியாக்கியானம்.

ஐந்து வருஷம்.—ஒருவர் மெம்பராய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிறகு ஐந்து வருஷத்துக்கு மெம்பராயிருக்கக் கடமைப்பட்டவராவார். அதற்குமுன்னே, சங்கத்திலிருந்து விலகிக்கொள்வதற்கு அவருக்கு அனுமதிகொடுக்கப்படமாட்டாது. இது முற்றிலும் அவசியமானது; ஏனென்றால், ஒரு சங்கத்தை ரெஜிஸ்டர் செய்து வேலை நடத்த ஆரம்பித்த பிறகு, மெம்பர்கள் சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளுகிற பட்சத்திலே, அந்த சங்கமானது சித்தியாய் வேலை நடத்த முடியாததாய்விடக்கூடும். ஸென்ட்ரல் பாங்கியாரும் டிபாஸிட் தொகை கட்டுகிறவர்களும் ஐவேஜுள்ள மெம்பர்களின் சொத்தை ஈடாகக்கொண்டு கடன்கொடுக்கிறார்கள். அவர்கள் சங்கத்திலிருந்து விலகிக்கொண்டால், சங்கமானது கடன் தீர்க்கும் சக்தியற்றுப்போய் பிறர் நம்புவதற்கிடமில்லாததாய்விடக்கூடும். கூட்டுத்தொழில் முயற்சியானது ஒருநூதன முயற்சியானபடியாலே, அதனால் உண்டாகும் பிரயோசனங்களைச் சொற்ப காலத்திற்குள்ளே தெரிந்துகொள்ள முடியாது. ஒருவர் ஐந்து வருஷம் வரையிலே மெம்பராயிருந்து வருவாராகில், அவர் சங்கத்திலிருந்து விலகிக்கொள்வது அபூர்வமென்று அனுபவமூலமாய்த் தெரியவருகிறது; ஆகவே, இச்சங்கம் நிலைத்திருக்குமென்னும் உறுதி ஏற்படுகிறது.

சங்கத்திலிருந்து விலகிக்கொண்ட பிறகு ஒரு வருஷகாலத்துக்கு உத்தரவாதம்.—கூட்டுத்தொழில் சம்பந்தமான காரியத்தினால் எவ்விதநஷ்டமும் உண்டாக மாட்டாது. அப்படியிருக்க பணக்காரராயுள்ள ஒருவர் சங்கத்திலிருந்து ஏன் விலகிக்கொள்ளவேண்டும்? அவர் உள்ளூரிலேயே இருப்பவர். அவர் விலகிக்கொண்டால் அது-அந்த சங்கத்தில் ஏதோ சில ஊழல்கள் இருப்பதைக் காட்டுகிறது. நஷ்டம் வரக்கூடுமென்று எந்த க்ஷணத்தில் அவருக்குத் தெரிய வருகிறதோ, அந்த க்ஷணத்திலேயே அவர் சங்கத்திலிருந்து விலகிக்கொண்டு, நஷ்டமுண்டாகிற பட்சத்திலே தமக்குள்ள உத்தரவாதத்தினின்றும் தம்மை விலக்கித்துக்கொள்ளப் பிரயத்தனப்படுவார். வெளியூரில் வசிக்கும் டிபாஸிட்தாரருக்கு முன்னதாக இவருக்கு சங்கத்தில் உண்டாகும் நஷ்டத்தைக் குறித்து வெகுசாய்த் தெரியலாம். ஆகவே, ஒருவர் சங்கத்திலிருந்து விலகிக்கொண்ட பிறகு ஒரு வருஷகாலத்துக்கு உத்தரவாதம் இருந்துகொண்டிருப்பது அவசியமாகிறது. அப்போது பணக்காரராயிருப்பவர் விலகிக்கொள்வதனால், நஷ்டம் கடன்கொடுத்திருப்பவரை பாதிக்கும்படியும் தன்னுடைய நிலைமை எவ்விதத்திலும் பந்தோபஸ்தாயிருக்கும்படியும் செய்துகொள்ள முடியாது; ஆகையால், அவர் சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளுவதற்குப் பார்த்தியாக பிழைகளைத் திருத்தி சங்கத்தின் நாணயத்தை உறுதியாய் ஸ்தாபிக்க பிரயத்தனப்படுவார்.

சகாயச்சட்டம் 6.—ஒரு மெம்பர் இறந்துபோனால் அவர் இறந்துபோவதனாலேயே மெம்பர் வேலையானது நின்றுபோய்விடும். ஆனால் அவர் இறந்துபோன காலத்திலே அந்த சங்கத்துக்கிருந்த பொதுக்கடனுக்காக, அவர் இறந்துபோன தேதி முதல் ஒரு வருஷகாலத்துக்கு அவருடைய சொத்தானது 3-வது சகாயச் சட்டத்தின்படி பொறுப்புக்குட்பட்டதாகும்.

வியாக்கியானம்.

நின்றுபோவது.—கம்பெனிகளைப் போலல்லாமல் இந்த சங்கத்திலே ஒரு மெம்பருக்குள்ள பாத்தியதையானது அவருக்குப்பின் அவருடைய வாரிசுக்குப் போகிறது. வாரிசு மெம்பராவதற்கு யோக்கியதையுள்ளவராயிருந்து மெம்பராக இஷ்டப்படுகிற பட்சத்திலே, அவரை வழக்கப்படி மெம்பராகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இறந்துபோன மெம்பரின் சொத்து பொறுப்புக்குள்ளாவது.—5-வது சகாயச் சட்டத்தின் கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க.

சகாயச்சட்டம் 7.—சங்கத்திலே ஒரு மெம்பர் தமக்குள்ள பாத்தியதையை வேறே யாதொரு நபருக்கு மாற்ற அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

வியாக்கியானம்.

இன்னொருவருக்கு மாற்றத்தகாத.—பங்குகள் ஒருவர் பெயரிலிருந்து இன்னொருவர் பெயருக்கு மாற்றக்கூடியவையாயிருந்தால், ஒரு மெம்பர்-சங்கத்தில் தனக்குள்ள பாத்தியதையை, பஞ்சாயத்தார் தகுதியற்றவரென்று அபிப்பிராயப்படுகிற இன்னொரு நபருக்கு மாற்றக்கூடும். அப்போது பஞ்சாயத்தாருடைய ஸ்திதி மெத்தவும் கஷ்டமானதாயிருக்கும். ஆகவே பங்குகளை அந்தப்படி மாற்றுவதற்கு அனுமதி கொடுப்பதில்லை. எவராகிலும் ஒருவர் அந்தப்படி மாற்றப்பட்ட ஒரு பங்கை வாங்க இஷ்டப்படுகிற பட்சத்திலே, அவர் பஞ்சாயத்தாருக்கு நேரே மனுசெய்துகொண்டு அவர்கள் தம்மை மெம்பராகச் சேர்த்துக்கொள்ளுகிற பட்சத்திலே மெம்பராகச் சேரட்டும்.

சகாயச்சட்டம் 8.—மெம்பர்களிட மிருந்தாவது மெம்பர்களல்லாதவர்களிடமிருந்தாவது பஞ்சாயத்தாருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி டிபாஸிட் தொகைகளைக் கட்டிக்கொள்ளலாம்; ஆனால் ஒரு வருஷத்துக்குக் குறைந்த காலத்துக்கு டிபாஸிட் தொகை கட்டிக்கொள்ளக் கூடாது; மேலும் டிபாஸிட்தொகைகளின் மேல் கொடுக்கும் வட்டியானது மாதமொன்றுக்கு ரூபாய்க்கு ஒரு தம்படிக்கு மேற்படக்கூடாது.

வியாக்கியானம்.

டிபாஸிட் தொகைகள்.—ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு வேலை செய்வதற்காகப் பணம் வேண்டியிருக்கிறது. அந்தப் பணத்தை (1) டிபாஸிட்டுகளின் மூலமாகவும், (2) வேறே தொகைகளைக் கடன்வாங்குவது மூலமாகவும் சேகரிக்கலாம். இந்த சகாயச் சட்டம் டிபாஸிட் தொகைகளுக்கும் அடுத்த சகாயச் சட்டம் கடன்வாங்கும் இதர தொகைகளுக்கும் சம்பந்தப்படுகின்றன. அனேக வகையான டிபாஸிட்டுகள் இருக்கின்றன. டிபாஸிட் தொகை கட்டுவதனாலும் அனேக பிரயோஜனங்கள் உண்டாகின்றன. கூட்டுத்தொழில் வர்த்தமானி இரண்டாவது வால்யூம் இரண்டாவது பிலக்கத்தில் டிபாஸிட் தொகைகளைக் குறித்து எழுதியிருக்கும் வியாசத்தை ஜாக்கிரதையாய் வாசிக்கவும். டிபாஸிட் தொகையைச் சேகரிப்பதனால் பஞ்சாயத்தாருடைய முயற்சி இவ்வளவென்று ஏற்படுகிறது; ஏனென்றால் சங்கத்தை ஸ்தாபித்தவுடனேயே பஞ்சாயத்தாருடைய முயற்சியில்லாமல் டிபாஸிட் தொகைகள் சேகரிக்க முடியாது. டிபாஸிட் தொகைகள் கட்டும் விருப்பத்தினால் ஜனங்கள் சிக்கனமாய்ச் செலவுசெய்யக் கற்றுக்கொள்ளுகிறார்கள். மேலும் டிபாஸிட் கட்டுகிறவர்கள் சங்கத்தின் விவகாரங்களைக் கவனமாய்ப் பார்த்து வருகிறார்கள்.

டிபாஸிட் தொகை கட்டுகிறவர் தாம் டிபாஸிட் கட்டுவதனாலே சங்கத்துக்கு ஒரு அனுகூலம் செய்து வருவதாக சில சமயங்களில் எண்ணுகிறார். உண்மை அப்படியல்ல; சங்கத்தார் சிறிதும் சந்தேகத்திற்கு இடமில்லாத ஈட்டை அவருக்குக் கொடுப்பதனால் அவருக்கு அனுகூலம் செய்து வருகிறார்கள். சண்டை சச்சரவு செய்யக்கூடிய நபர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் டிபாஸிட்டுகள் பெற்றுக்கொள்ளமாட்டோமென்று மறுக்க பஞ்சாயத்தாருக்கு இஷ்டமிருந்தால் அவர்கள் அந்தப்படியே செய்யலாம்.

மெம்பர்களிடமிருந்தும் மெம்பரல்லாதவர்களிடமிருந்தும்.— மெம்பரல்லாத ஒருவர் டிபாஸிட் தொகை கட்டினால் அவர் சங்கத்தின் விவகாரங்களை கவனிப்பவர்களில் இன்னொருவராவார். ஒரு மெம்பருடைய பணமானது சங்கத்தில் டிபாஸிட்டாகக் கட்டப்பட்டாலும் கட்டப்படாவிட்டாலும், அது சங்கத்தின் கடன்களுக்கு உட்பட்டதாயிருக்கிறது; ஆகவே அது சங்கத்தின் ஆஸ்தியோடு சேர்த்துக் கணக்கிடப்படுகிறதே யொழிய கடனாக பாவிக்கப்படுவதில்லை. டிபாஸிட் தொகைகள் மெம்பர்களிடமிருந்து கட்டிக்கொண்டாலும் சரி, மெம்பரல்லாதவர்களிடமிருந்து கட்டிக்கொண்டாலும், சரி அவைகளுக்குக் கொடுக்கும் வட்டி வீதமானது ஒரே மாதிரியாயிருக்கவேண்டும்; ஏனென்றால், இந்தப்படி யிருப்பது மெம்பரல்லாதவர்களை டிபாஸிட்டுகள் கட்டும்படி உற்சாகப்படுத்துவதற்குச் சிறந்த மார்க்கமாகும்.

கால அளவு.—டிபாஸிட்டுகள் கட்டிவைப்பதற்கான காலமானது ஒரு வருஷத்துக்குக் குறைபாமலிருக்கவேண்டுமென்று கலியாணதுருக்கம் தாலூக்காவிலே நிர்ணயித்திருக்கிறது. இது பிசகு; மூன்று மாதத்திற்குக் குறையாமலிருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கவேண்டும். எவ்வளவு காலத்துக்கு டிபாஸிட் கட்டிவைக்கப்படுகிறதோ அதற்குத் தக்கபடி வட்டி வீதத்தை குறைப்பது அல்லது அதிகப்படுத்துவதுதான் சரியான மார்க்கமாகும்; காலம் எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அதற்குத் தக்கபடி வட்டி வீதமும் அதிகமாயிருக்கவேண்டும்.

சகாயச்சட்டம் 9.—அவசியமானபோது பஞ்சாயத்தார் டிபாஸிட் தொகைகள் கட்டிக்கொள்வது மூலமாகவல்லாமல் மற்றப்படி கவர்ன்மெண்டாரிடமிருந்தாவது மெம்பரல்லாதவர்களிட மிருந்தாவது இதர ஐக்கிய நாணயச் சங்கங்கத்தாரிடமிருந்தாவது கடன் வாங்கலாம். ஆனால் சங்கத்தார் பட்டிருக்கும் மொத்த கடன் தொகையானது எந்தக்காலத்திலும் 25,000 ரூபாய்க்கு மேற்படவுங்கூடாது; டிபாஸிட் தொகைகள் மூலமாகவல்லாமல் மற்றப்படி கடன் வாங்கின பணத்தின் பேரில் கொடுக்கப்படும் வட்டி வீதமானது எந்தக் காலத்திலும் வருஷத்துக்கு 100 க்கு ஏழரைக்கு மேற்படவுங் கூடாது.

வியாக்கியானம்.

டிபாஸிட் தொகைகள் மூலமாயல்லாமல் மற்றப்படி கடன் வாங்கும் போது சாதாரணமாய் ஸென்ட்ரல் பாங்கியாரிடமிருந்து கடன் வாங்கப்படுகிறது. மற்ற இடங்களிலிருந்து கடன் வாங்குவதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லை; மெம்பர்களிடமிருந்து கடன் வாங்குவதற்குங்கூட ஆட்சேபணை இல்லை. ஸென்ட்ரல் பாங்கியாரிடமிருந்து இதர தொகைகளை கடன் வாங்கும் விஷயத்திலே அடியிற்கண்ட ஷரத்துகளின்படி கடன் கொடுக்கப்படுகிறது; ஆகவே, இதர இடங்களிலிருந்து கடன் வாங்கப்படும்போது அம்மாதிரியான ஷரத்துகளின்படியே கடன் வாங்கவேண்டும். கடன் வாங்குவதற்கு ரெஜிஸ்ட்ராருடைய அனுமதியை முன்னதாகப் பெறவேண்டியதா யிருக்கிறது. முதலில் ஏற்படுத்தும் கால அளவானது இரண்டு வருஷத்துக்குக் குறையாமலிருக்கவேண்டும். அந்தக் கால அளவு கழிவதன்மேல் பிரதி வருஷமும் 10-ல் ஒரு பங்கு திருப்பிச் செலுத்தப்பட்டால், ரெஜிஸ்ட்ரார் உத்தரவு செய்கிற பட்சத்திலே, கடன் கொடுத்தவர் மிகுதித் தொகையை சங்கத்திலேயே வைத்திருக்கக் கடமைப்பட்டவராவார்; இம்மாதிரி செய்வதனால் அந்தக்கடன் பன்னிரண்டுவருஷ காலம் வரையில் இருக்கிறது. கடன் கொடுத்தவர் மத்தி

யிலே தொகையைக் கொடுத்துவிடும்படி கேட்கக்கூடாது; ஆனால், பஞ்சாயத்தார் திருப்பிக் கொடுக்கவேண்டிய தேதிக்கு முன்னும் முன்னதாய்த் தெரிவிக்காமலும் அந்தப்பணம் முழுவதையுமாகிலும் அதில் ஒரு பாகத்தையாகிலும் திருப்பிக் கொடுத்துவிடலாம். அம்மாதிரி திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகையை அசலுக்காக வரவு வைத்துக்கொண்டு எதிர் வட்டி கழித்துக்கொடுக்கவேண்டும். கடன் கொடுத்தவருக்குப் பிரதிகூலமாயிருக்கும் இந்தக் கண்டிப்பான ஷரத்துகளின் காரணமாகத்தான் கடன் வாங்கின இதர தொகைகளின்மேல் கொடுக்கப்படும் வட்டியானது டிபாஸிட்டுகளின்மேல் கொடுக்கப்படும் வட்டியைக் காட்டிலும் அதிகமாயிருக்கிறது. ஆனால், ஸெண்ட்ரல் பாங்கியாருக்கு ஏற்கனவே கடன் பட்டிருக்கும் ஒரு சங்கத்தின் விஷயத்திலே, கடன் வாங்க வேண்டிய இதர தொகைகளைக் கடன் கொடுப்பவருக்குப் பிரதிகூலமாயுள்ள ஷரத்துகளில்லாமலே வாங்கலாம்.

உச்ச அளவு.—சங்கத்தார் யோசனையின்றி கடன் வாங்குவதைத் தடுக்கும்பொருட்டு இவ்வளவு தொகைக்கு மேற்பட்டு கடன் வாங்கக் கூடாதென்று ஒரு அளவு ஏற்படுத்தியிருக்கிறது. பொதுச் சபையாருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு இந்த அளவை அடிக்கடி அதிகப்படுத்திக் கொள்ளலாம்; அந்தப்படி அதிகப்படுத்திக்கொள்வதற்கு சங்கத்தார் தகுதியுள்ளவர்களாயிருந்து சொத்து ஜாபிதாவைப் பார்க்கும்போது அந்தப்படி நியாயமாயிருக்கிற பட்சத்திலே அந்தப்படி அதிகப்படுத்துவதற்கு ரெஜிஸ்டரார் அனுமதி கொடுப்பார். மெம்பரல்லாதவர்களிடமிருந்து கடன் வாங்கும்போது மாத்திரமே இவ்வளவுக்கு மேற்பட்டு கடன் வாங்கக்கூடாதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குமேல் கடன் வாங்கப்பட்டிருக்கிறதா வென்பதை நிதானிக்கும்போது மெம்பர்களிடமிருந்து கட்டிக்கொள்ளப்படும் டிபாஸிட் தொகைகளையும் பங்கு மூலதனத்தையும் கணக்கில் சேர்க்கவேண்டியதில்லை.

சகாயச்சட்டம் 10.—பஞ்சாயத்தாருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி மெம்பர்களுக்கு மாத்திரமே கடன்கொடுக்கலாம். ஆனால், எந்த மெம்பரும் தனக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று பாத்தியதை கொண்டாடக்கூடாது.

வியாக்கியானம்.

மெம்பரல்லாதவர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டால் சங்கமானது கூட்டுத் தொழில் முறையாய் நடத்தப்படுவது நின்றுபோகிறது. மெத்தவும் பொறுக்கி யெடுத்தே மெம்பர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்களென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். மெம்பர்கள் கடன் கேட்கிறார்களென்பதனாலேயே அவர்களுக்குக்கூட கடன்கொடுத்து விடக்கூடாது; கடன் ஜாரிசெய்வதற்குமுன்னமே, மெம்பர்களின் அவசரம் இன்னதென்பதையும், கடன்தொகை

துர்விநியோகப்படுத்தப்படுவதற்குள்ள சந்தர்ப்பங்களையும் கடன் வாங்க உத்தேசிக்கிறவரின் திரவிய நிலைமையையும் குறித்துத் தக்கபடி யோசிக்க வேண்டும்.

சகாயச்சட்டம் 11.—எந்த மெம்பரும் அசல் தொகையாக நாணூறு ரூபாய்க்கு மேற்பட்டு எக்காலத்திலும் சங்கத்திற்குக் கடன்பட்டிருக்கக்கூடாது. மெம்பர்களின் அந்தஸ்துக்குக் கேற்றபடி, பஞ்சாயத்தாருக்கு யுக்தமாகத் தோற்றினால் இந்த அளவுக்குட்பட்டு மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கலாம்.

வியாக்கியானம்.

ஐக்கிய நாணயச் சங்கமானது முக்கியமாய் ஏழைகளுக்காக உத்தேசித்தே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; ஆகவே, கடன் கொடுக்கும் விஷயத்தில் பணக்காரர்களை விட ஏழைகளுக்கு முன்னதாய்க் கொடுக்கவேண்டும். ஒரு மெம்பரின் நிலைமைக் கேற்றபடி கடன் கொடுக்கப்பட்டால், பணக்காரர்கள் ஒவ்வொருவரும் பெருந் தொகையாகக் கிடைக்கக்கூடிய பணத்தை யெல்லாம் கடன் வாங்கிக் கொள்வார்கள்; அதனால், சிலருக்கே பணம் உதவும். ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வதற்காகப் பணம் கிடைக்கமாட்டாது. ஏழை ஜனங்களுக்கு ஒத்தாசை செய்கிறபட்சத்திலே இன்னும் அதிக நபர்கள் பிரயோசனம் அடைவார்கள்.

எவ்வளவு மட்டில் மெம்பருக்கு கடன் கொடுக்கலாமோ அது.—இது அவ்வவ்விடத்திய நிலைமைகளைப் பொறுத்ததாக இருக்கிறது. சங்கத்தின் காரியங்களைத் திறமையாய் நிர்வாகம் செய்து கடன் தொகைகளைக் கண்டிப்பாகவும் காலந்தவறாமலும் வசூலிக்கிறபட்சத்திலே இதை அதிகப்படுத்திக்கொள்ளலாம். அவசியமானபோதெல்லாம் வியாஜ்ஜியங்கள் தாக்கல் செய்யப்படுகின்றன; மேலும், கொடுக்கப்பட்ட கடன் தொகைகள் தக்கபடி உபயோகிக்கப்படுகிறதா வென்பதைக் கவனத்துடன் பார்த்துவருகிறார்கள். ஒரு மெம்பருக்குக் கொடுக்கப்படும் கடன் தொகைகளின் மொத்தமானது சகாயச் சட்டங்களின்படி அதிகமாக எவ்வளவுமட்டில் கொடுக்கலாமோ அதற்கு மேற்படாமலிருக்கிற பட்சத்திலே, அவருக்கு எத்தனை தடவையாகிலும் கடன் கொடுக்கலாம்.

பஞ்சாபத்தார் தப்பிதமாய் நடந்துகொண்டால், அவர்கள்மேல் நஷ்டஈட்டுக்காக வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்கு அவர்கள் உள்ளாவார்கள்; அப்படி செய்யப்படுகிற தப்பிதமானது மோசமென்று ஏற்படுகிற பட்சத்திலே, அவர்கள்மேல் க்ரிமினல் விவகாரம் நடத்தப்படுவதற்கும் அவர்கள் உள்ளாவார்கள்.

ஜெர்மனி தேசத்திலே பஞ்சாயத்தைச் சேர்ந்த எந்த மெம்பரும் தனக்காக கடன் வாங்கிக்கொள்ளக்கூடாதென்று ஒரு விதி ஏற்பட்டிருக்கிறது. இது நல்ல விதிதான்; ஆனால் இந்தியாவில் அந்தவிதியைக் கட்டாயமாய்

அமுலுக்குக் கொண்டுவருகிறபட்சத்திலே, நமக்குப் பஞ்சாயத்தாராயிருந்து வேலை செய்வதற்குப் போதுமான ஆள்கள் கிடைப்பது கஷ்டமாய்விடக் கூடும். இங்கே இதர மெம்பர்களுக்குக் கொடுக்கப்படுவதைக் காட்டிலும் பஞ்சாயத்தாருக்கு விசேஷ தொகை கடன் கொடுக்கப்படுகிறபட்சத்திலே, நிர்வாகமானது சரியாயில்லை யென்றே எண்ணவேண்டும்.

சாயச்சட்டம் 12.—கொடுக்கப்படும் கடன் தோகைகளுக்கு மாதமொன்றுக்கு ரூபாய்க்கு $1\frac{1}{2}$ தம்படி விழுக்காடு தற்காலத்திலே வட்டி வாங்கப்படும்; ஒரு மாதத்திற்குக் குறைந்த காலமானது ஒரு முழு மாதமாக பாவிக்கப்படும்.

வியாக்கியானம்.

ரூபாய்க்கு $1\frac{1}{2}$ தம்படி.—கணக்கிடும்போது சௌகரியமா யிருப்பதற்காக இந்த வீதத்தை ஏற்படுத்தி யிருக்கிறது.

தற்காலத்திலே.—காலக்கிரமத்தில் வட்டி வீதமானது குறைக்கப்படலாம். இது பஞ்சாயத்தார் எப்படி வேலை செய்கிறார்களோ அதைப் பொறுத்ததாகும். திறமையுடன் நிர்வாகம் செய்வது காரணமாக ஏராளமாய் டிபாஸிட்டுகள் கட்டப்பட்டு சேமநிதியானது கணிசமாய் அதிகப்படுகிறபட்சத்திலே வட்டியைக் குறைக்கலாம். இன்னும் நூறு வருஷம் ஆனபிறகு, வட்டி வீதமானது ஏறக்குறைய பூச்சியமாயிருக்கும்படி அதைக்குறைப்பதற்கு இடமுண்டாகும்படியாக சேமநிதியானது அவ்வளவு அதிகமாகக்கூடும். கணக்கு போடுவதை சுலபப்படுத்துவதற்காக ஒரு மாதத்துக்குக் குறைந்த காலமானது முழு மாதமாக பாவிக்கப்படுகிறது. இந்த சகாயச் சட்டத்தின் காரியங்களுக்காக ஒரு மாதமானது ஒரு சௌரமாதத்தின் ஆரம்ப முதல் முடிவு வரையில் மாத்திரமே கணக்கிடப்படாமல், கடன்கொடுத்த தேதி முதல் அடுத்த சௌரமாதத்தில் அதே தேதிவரையில் கணக்கிடப்படும்.

சகாயச்சட்டம் 13.—மெம்பர்கள் தாங்கள் வாங்கியிருக்கும் கடன் தோகையை அதன் பேரில் பாக்கியாயிருக்கும் வட்டி சகிதமாய் ஒரு வருஷத்துக்குள்ளே சாதாரணமாகத் திருப்பிச் செலுத்தவேண்டும். ஆனால், கடன் வாங்கினவர் தம்முடைய கடன் தோகையின் பேரில் பாக்கியாய்ச் சேர்ந்திருக்கும் வட்டியையும் அசல் தோகையில் ஐந்தில் ஒரு பாகத்துக்குக் குறையாமலிருக்கும் ஒரு பாகத்தையும் கடனுக்காக நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலத்துக்குள்ளே அதைத் தீர்ப்பதற்காகச் செலுத்தியிருந்து, இன்னும் அதிக காலம் கொடுக்க வேண்டுமென்று அவர் மனுசெய்து கொள்ளுகிற பட்சத்திலே, பஞ்சாயத்தார் அந்தக் கடன் தோகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக அவருக்கு ஒரு வருஷத்துக்கு மேற்படாமல் அதிக காலம் ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஆயினும், இந்தப்படி அதிகப்படுத்திக் கொடுக்கப்படும் கால அளவுக்கெல்லாம் சேர்ந்து கடன் தோகையைத் திருப்பிச்செலுத்துவதற்கான மொத்த கால அளவானது எந்த விஷயத்திலும் ஐந்து வருஷத்துக்கு மேற்படக் கூடாது. நபர்ஜாமீன்

பேரில் கொடுக்கப்படும் கடன் விஷயத்திலே நபர் ஜாமீன்தாரர்களின் எழுத்து மூலமான சம்மதி இல்லாமல் அதிக காலம் ஏற்படுத்திக்கொடுக்கவே கூடாது.

வியாக்கியானம்.

இந்தச் சகாயச்சட்டம் சரியானபடி செலாவணியாய் வருவதே ஒரு சங்கம் நன்றாய் நிர்வாகம் செய்யப்பட்டு வருவதற்கு அடையாளமாகும்.

கால அளவு ஒரு வருஷத்துக்கு மேற்படக் கூடாது.—ஒவ்வொரு கடனையும் எப்போதும் ஒரு வருஷ வாயிதாவுக்கே கொடுக்கவேண்டுமென்று பொருள் படுவதாக சில சங்கத்தார் இதற்கு அர்த்தம் பண்ணுகிறார்கள்; இது சரியல்ல; எந்தக் காரியத்துக்காக கடன் வாங்கப்படுகிறதோ அதற்குத் தக்கபடியும் அவ்வவ்விடங்களின் நிலைமைகளுக்குத் தக்கபடியும் வாயிதா காலத்தை நிர்ணயிக்கவேண்டும். எந்தக்காரியத்துக்காக கடன் வாங்கப்படுகிறதோ அந்தக் காரியத்துக்குத் தக்கபடி கால அளவை மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் சில சங்கங்களின் சகாயச் சட்டங்களில் அடங்கியிருக்கின்றன. ஆனால், அனுபவரீதியாய்ப் பார்க்கும்போது இது தகுதியற்றதென்று தெரிந்திருக்கிறது. சாதாரணமாய் சகல மெம்பர்களுக்கும் வருஷத்தின் ஒரே பருவத்தில் பணம் வேண்டியதாயிருக்கிறது. ஒருகடன் தொகையைத்திருப்பிச் செலுத்துவதற்காக ஒரு வருஷ வாயிதா நிர்ணயிக்கப்படுகிறபட்சத்திலே, அதைத்திருப்பிச் செலுத்த வேண்டிய காலமானது அடுத்த வருஷத்தில் அதே பருவமாயிருக்கும்; அப்போது கடன் வாங்கினவர் முன் ஏற்பட்டமாதிரியான செலவுகளையே செய்ய வேண்டியவரா யிருப்பார். இது கடன் வாங்கினவருக்குக் கஷ்டமா யிருக்கும். ஆயினும், மத்தியகாலத்தில் அவருக்கு வருஷாந்தர வரும்படி வந்திருக்கலாம்; அப்போது அவர் கடன் தொகையில் ஒரு பாகத்தையாவது சுலபமாய்த் திருப்பிச் செலுத்தி இருக்கக் கூடும். கடன் வாங்கினவர் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அவருக்குள்ள சக்திக்குத் தக்கபடி வாயிதா காலம் நிர்ணயிக்கப்படாத பட்சத்திலே, கடனைச் திருப்பிச் செலுத்துங் காலத்தில் அவருக்குக் கஷ்டம் நேரிடக் கூடும். ஆகவே, கடன் வாங்கினவருடைய க்ஷேமத்தை உத்தேசித்தே வாயிதாகாலமானது கடன் கொடுக்கும் காரியத்துக்குத் தக்கபடி நிர்ணயிக்கப்படவேண்டும். கடன் கொடுக்கப்பட்ட தேதிக்கும் வாங்கின கடன் தொகையை உபயோகிப்பதனால் எந்தக் காலத்தில் பலிதம் உண்டாகலாமென்று எதிர்பார்க்கக் கூடுமோ அந்தக் காலத்துக்கும் இடையிலுள்ள கால அளவுக்குச் சரியாய் வாயிதாகாலமும் இருக்கவேண்டுமே யொழிய அதைவிட அதிகமாய் இருக்கக் கூடாது. ஆகவே, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலமானது கடன் வாங்கினவர் அதைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பணம் வைத்திருக்கும் காலத்துக்குச் சரியாய் இருக்கும்படி செய்யவேண்டும்.

சாதாரணமாய்.—கால அளவை நிர்ணயிக்கையிலே பஞ்சாயத்தார் புத்தாலுசாரமாய் நடந்துகொள்ளவேண்டும். செலுத்துகாலத்துக்குள் திருப்பிச் செலுத்துவதாய் முதலில் பணம் கடன் கொடுக்கவேண்டும்; கடன் வாங்கினவர்கள் தகுதியானவர்களாயிருக்கிற பட்சத்திலே வாயிதா காலத்தைப் பிற்பாடு அதிகப்படுத்தலாம். தக்கபடி காலம் அதிகப்படுத்திக் கொடுத்து வந்தால், ஒரு ஐக்கிய நாணயச் சங்கமானது சன்மார்க்க பேதனையைச் செய்யும் விஷயத்தில் மிகவும் பிரயோசனகரமான சாதனமாய் இருக்கும். காலத்தை அதிகப்படுத்திக் கொடுக்கும்படி விண்ணப்பம் செய்து கொடுக்கும்போதெல்லாம் பஞ்சாயத்தார் அந்த விண்ணப்பதாரரின் யோக்கியதையைக் குறித்து யோசனை பண்ணவேண்டும்; அதிகப்படுத்திக் கொடுக்கப்பட்ட காலத்திலே அந்த விண்ணப்பதாரரின் விவகாரங்களைக் கவனமாய் பார்த்துவரவேண்டும்.

கொடுக்கலாம்.—வாங்கின கடன் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு கிரமமாய் செலுத்தப்பட்டிருந்தாலும் கூட, சங்கத்தார் காலத்தை அதிகப்படுத்திக் கொடுக்க கடமைப்பட்டவரல்ல. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாங்கின கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படுகிறவரையில் கடன் வாங்கினவருடைய திரவிய நிலைமையைக் குறித்தும் அவருடைய நடத்தையைக் குறித்தும் யோசனை பண்ணவேண்டும்.

நபர் ஜாமீன்தாரர்களின் எழுத்து மூலமான சம்மதி.—பஞ்சாயத்தார் மாத்திரமேயல்லாமல் நபர் ஜாமீன்தாரர்களுங்கூட கடன் வாங்கினவரின் நடத்தையைக் கூர்மையாய்க் கவனித்து வருகிறார்கள். அதிகப்படுத்திக் கொடுக்கப்பட்ட காலத்திலுங்கூட நபர் ஜாமீன்தாரர்கள் கடனுக்காக உத்தரவாதிகளாயிருக்கும்படி கடன் தஸ்தவேஜு எழுதவேண்டும். நபர் ஜாமீன்தாரர்களின் எழுத்துமூலமான சம்மதியைப் பெறத் தவறியதனாலேயே அவர்கள் உத்தரவாதத்தினின்றும் நிவாரணை பெற்றவர்கள் ஆகமாட்டார்கள். நபர் ஜாமீன்தாரர்கள் கடன் வாங்கினவரின் நாணயத்தைக் குறித்து இன்னும் நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்பதை அவர்கள் தெரிவிப்பதற்கு சமயம் வாய்க்கும் பொருட்டே எழுத்து மூலமான சம்மதி வேண்டியதாயிருக்கிறது.

சகாயச் சட்டம் 14.—அடியிற் கண்ட மூன்று வகைகளில் ஏதன்படி யாவது கடன் கொடுக்கலாம்:—

1. கடன் வாங்கினவருக்கு வரவாக ஏதாகிலும் டிபாஸிட் தொகை கட்டப்பட்டிருந்தால், அதை ஈடாக வைத்துக் கொண்டு அப்படி வரவாக உள்ள தொகையில் 100 க்கு 90 வீதத்துக்கு மேற்படாமல்;

2. முழுவதும் கடன் காரருக்கே சொந்தமாக உள்ள வில்லங்கத்துக்குட்பட்டிராத அசையாப்பொருளைக் கொதுவை வைத்துக்கொண்டு, அப்படிப்

பட்ட சொத்தின் ஊர் விலை மதிப்புப்படி ஏற்படும் தொகையிலே 100 க்கு 50 வீதத்துக்கு மேற்படாமல்; அல்லது

3. விண்ணப்பதாரரும் அவருக்கு நபர் ஜாமீன்தாரராக நிற்கும் வேறே இரண்டு மெம்பர்களும் கூட்டாகவும் தனித்தனியாகவும் உத்தரவாதம் ஏற்றுக் கொள்வதன் மேல்; ஆனால், யாதோரு மெம்பர் 200 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு நபர் ஜாமீனாக இருப்பதற்கு எக்காலத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

வியாக்கியானம்.

மூன்று வகைகள்.—மேலே கண்டபடிக்கன்றி மற்றப்படி கடன் கொடுக்கப்பட மாட்டாது. நகைகளைப்போன்ற அசையும் பொருளை அடகுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கக்கூடாது; ஏனென்றால், அவைகளின் சரியான மதிப்பைத் தெரிந்துகொள்வது கஷ்டமாயிருக்கிறது; மேலும், அசையாப் பொருளை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்வதற்குத் தக்க ஏற்பாடு செய்ய எந்த கூட்டுத்தொழில் சங்கத்தாலும் முடியாது. நம்முடைய தேசத்திலே நகைகளைக் கொதுவை வைத்துக்கொண்டு கடன் கொடுப்பது சர்வ சாதாரணமாய் இருக்கிறது; ஆகவே, ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தார் அந்தப்படி கடன் கொடுக்கக் கூடாதென்று தடைசெய்தால் அதை ஜனங்கள் துன்பமாய் எண்ணக்கூடும்; வாஸ்தவத்திலே கஷ்டம் ஒன்றுமில்லை. அடகு வைப்பதற்கு யாரிடத்தில் நகைகள் இருக்கிறதோ அவர் தம்முடைய திரவிய நிலைமையைக் குறித்தும் அவருடைய யோக்கியதையைக் குறித்தும் தம்முடைய அக்கம்பக்கத்தி லுள்ளோருக்குத் திருப்திகரமாகக் காட்டக்கூடும்; அவர் அந்த நகைகளை சங்கத்தில் கொண்டுவந்து வைக்கவேண்டியதில்லை; தமக்கு அக்கம்பக்கத்திலுள்ளோருக்கு அவர் அவைகளை ஈடாகக் கொண்டு வந்து காட்டலாம். அந்தப்படி செய்வதனால் அவருடைய நாணயத்துக்கு தோஷம் உண்டாகாதது மாத்திரமேயல்லாமல், அசையும் பொருள்களை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டிய கஷ்டமும் நீங்குகிறது.

டிபாஸிட் தொகையை ஈடாக வைத்துக்கொண்டு.—மெம்பர்கள் ஏதேனும் டிபாஸிட் தொகை கட்டியிருந்தால் அதன் ஈட்டின்பேரில் கடன் வாங்குவதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி அடிக்கடி நேரிடாது; ஏனென்றால், டிபாஸிட் கட்டுவதற்காக யாரிடத்தில் பணமிருக்கிறதோ அவர் கடன் வாங்குவதற்கு சந்தர்ப்பம் நேரிடாது. ஆயினும், டிபாஸிட் செய்யப்பட்ட காலத்திலே ஏதிர்பாராத சில சம்பவங்கள் காரணமாக சிற்சிலர் கடன்வாங்க வேண்டியதாக நேரிடக்கூடும். டிபாஸிட்டுகளை ஈடாகவைத்துக்கொண்டு கடன் கொடுப்பதற்கு சங்கத்தார் அனுமதி தராதபட்சத்திலே, டிபாஸிட் கட்டுவதற்குப் பணம் வைத்திருக்கும் ஒரு மெம்பர் எதிர்பாராத காரியங்களுக்காக உபயோகிக்கும் பொருட்டு அதை அப்படியே தன்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்க இடையப்படலாம்.

டிபாஸிட் தொகையில் 100 க்கு 90 வீதத்துக்கு மேற்படாமல்.—கடன் தொகையின்மேல் ஏற்படும் வட்டியை செலுத்துவதற்கு இடமிருக்கும்படி உத்தேசித்தே 100 க்கு 10 வீதம் கழித்து கொடுக்கப்படுகிறது; ஆகவே அந்தக் கடன் தொகையை திருப்பிச் செலுத்தவேண்டிய காலத்தில் டிபாஸிட்தாரர் ரொக்கமாய்ப் பணமெதுவும் செலுத்த வேண்டியதாயிராது.

கோதுவை.—கொதுவையின் பேரில் கடன் கொடுப்பதனால் சங்கத்துக்கு விசேஷ அனுகூலம் உண்டாகமாட்டாது. பணத்தை வசூல் செய்வதற்காகக் கொதுவைச் சொத்தை விற்கவேண்டியதா யிருந்தால், சங்கத்தார் விசேஷ கஷ்டத்தை யனுபவிக்க வேண்டியவர்களாவார்கள். கோர்ட்டார் மூலமாய்ப் பணத்தை வசூல் செய்யவேண்டியதா யிருக்கலாம். இதனால் கஷ்டமும் செலவும் ஏற்படுவதோடுங்கூட சம்பந்தப்பட்ட மெம்பருக்கு நஷ்டமும் உண்டாகிறது; சங்கத்தாருக்கு அதற்குச் சரியாய் நன்மை யெதுவும் உண்டாவதில்லை. சில காலங்களிலே நிலத்தை வாங்குவதற்கு ஆள்கள் இல்லாமற் போய் சங்கத்தார் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கும். சரியானபடி வேலை செய்துவரும் ஐக்கிய நாணயச்சங்கங்களில் கொதுவையின் பேரில் கடன்கொடுப்பதற்கு அனுமதி கொடுப்பதில்லை. வரையறுக்கப்படாத உத்தரவாதக் கோட்பாட்டை நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிற பட்சத்திலே, கொதுவை வைத்துக்கொண்டு கடன் கொடுப்பதற்கு அவசியமிராது. சொத்து சங்கத்தாரிடத்தில் கொதுவை வைக்கப்பட்டாலும் சரி கொதுவை வைக்கப்படா விட்டாலும் சரி இரண்டும் ஒன்றே; ஏனென்றால், வரையறுக்கப்படாத உத்தரவாதக் கோட்பாட்டின்படி சொத்து சங்கத்தாருக்கு உட்பட்டதாயிருக்கிறது. கடன் வாங்கினவர் நிலத்தை ஏற்கனவே ஒரு அந்நிய மனுஷனிடத்தில் கொதுவை வைத்திருந்தால், சங்கத்தாரைவிட அந்நிய மனுஷனுக்கு முந்திய பாத்தியதையுண்டு என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் ஒரு சொத்தைக் கொதுவை வைப்பதைக் குறித்துப் பலநாள் முன்னதாகப் பஞ்சாயத்தாருக்குத் தெரியாமலே ஒரு கிராமத்தில் அப்படி கொதுவை வைப்பது அசாத்தியமான காரியம்; கடன் வாங்கினவருடைய செய்கை காரணமாக சங்கத்தாருக்கு வெகுசீக்கிரம் பிரதிகூல முண்டாகிற பட்சத்திலே, கொதுவை வைக்கப்படுவதற்கு முன்னமே பஞ்சாயத்தார் அந்த கடன் தொகையை வசூல் செய்துகொள்ளலாம். கடன் பூர்த்தியாய் தீர்க்கப்படாமலிருக்கிற வரையிலே கடன் வாங்கினவர் தன்னுடைய சொத்துக்களில் எதையும் கொதுவை வைக்கக்கூடாதென்று சில சங்கத்தார் கடன் பத்திரத்திலே வெளிப்படையாய் ஒரு திட்டத்தை யெழுதி சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இம்மாதிரி செய்வதனால் சட்டப்படி விசேஷமாய் எவ்வித பர்தோபஸ்தும் ஏற்படமாட்டாது; ஆனால் இந்தப்படி செய்வதனால் கடன் வாங்கினவருக்கு உத்தரவாதம் இன்னதென்று நன்றாய்த் தெரிய வருவதோடுங்கூட, அவர் மோசம் பண்ணுகிற விஷயத்திலே அந்தக் குற்றத்துக்கு அவரும் உள்ளானவராகிறார். கொதுவையின் பேரில் கடன்கொடுக்கும் ஏற்பாடானது ஜனங்களுக்கு நன்றாய்த்தெரிந்திருக்கிறபடியால் அப்படிப்பட்ட கடன்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. மேற்படி முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளை நன்றாய்த் தெரிந்துகொண்டாலன்றி மற்றப்படிக்கும் அந்தப்படி தெரிந்து கொள்ளுகிறவரையிலும், கொதுவையின் பேரிலல்லாமல் மற்றப்படி கடன் கொடுக்கும்போது அஜாக்கிரதையாய்க் கடன் கொடுப்பதற்கு இடமிருக்கிறது. ஆயினும் இரண்டு அல்லது மூன்று வருஷம் அனுபோக சித்தியாய் வேலை செய்தபிறகு சங்கத்தாரே கொதுவைக் கடன்களைக் காட்டிலும் நபர் ஜாமீன் பேரில் கொடுக்கும் கடன்களை சிலாக்கியமாகக் கொள்ளுகிறார்களென்று தெரியவருகிறது.

அசையாப் பொருள்.—கொதுவை வைப்பதாகச் சொல்லப்படும் சொத்தானது 1-வது சகாயச் சட்டத்திற்கண்ட வேலை விஸ்தீர்ணத்துக்குள்ளேயிருக்கவேண்டும்.

நபர் ஜாமீன்.—நபர் ஜாமீன் பேரில் கொடுக்கப்படும் கடன்தான் சகல வகைக் கடன்களுக்குள்ளும் மிகச் சிறந்ததாயும் அதி பர்தோபஸ்தானதாயும் இருக்கிறது. இவ்விதம் கடன் கொடுக்கும் ஏற்பாடு புதிதானதல்ல; ஏனென்றால் ஸால்கார்கள் கூட இதை அனுஷ்டிக்கிறார்கள். ஆனால் ஐக்கிய நாணயச் சங்கத்திலே நபர் ஜாமீனிலுள்ள ஒரு விசேஷம் என்னவென்றால், நபர் ஜாமீன்தாரர்கள் அதே கிராமத்தில் வசிக்கும் மெம்பர்களாகவும் இருக்க வேண்டுமென்பதே; அப்படியிருக்கும் பட்சத்தில் இவர்கள் கடன் வாங்குகிறவர்களுடைய நடத்தையைக் கவனித்து வருவார்கள். அப்போது நஷ்டமுண்டாகுமென்னும் அபாயமே யில்லை. ஐக்கிய நாணயச் சங்கங்களிலே, சொத்து உடைத்தாயிருப்பதைக் காட்டிலும் நடத்தையே முக்கியமாகும். இரண்டு நபர் ஜாமீன்தாரர்கள் இஷ்டப்பட்டு முன்வருவதே கடன் வாங்க உத்தேசிக்கிறவரின் நல்ல நடத்தைக்கும் போக்கியதைக்கும் அத்தாட்சியாயிருக்கிறது.

இவ்வளவு மட்டில் தான் ஒரு மெம்பர் நபர் ஜாமீன்தாராயிருக்கலாமென்பதற்கு ஓர் அளவு இருக்கிறது. இந்த அளவை யேற்படுத்தும்போது அவருடைய சொத்தைக் கவனிக்க வேண்டியதில்லை. நபர் ஜாமீன் வாங்குவதன் முக்கியமான நோக்க மென்னவென்றால், அந்த ஜாமீன்தாரர் கடன்வாங்கினவரின் நடத்தையைக் கவனித்து வரவேண்டுமென்பதே. பண்க்காரராயிருக்கிற ஒருவர் பலபேருக்கு நபர் ஜாமீன்தாரராயிருக்கக் கூடுமாகையால் அவர் அந்தப்படி பலபேருக்கு நபர் ஜாமீன்தாரராயிருந்தால், அவர்களெல்லாரையும் கவனிப்பதற்கு அவருக்கு சமயம் வாய்க்காது.

இரண்டு நபர் ஜாமீன்தாரர்கள்.—ஒரு கடனுக்கு அதமம் இரண்டு நபர் ஜாமீன்தாரர்களாகிலும் இருக்கவேண்டியது அவசியம்; ஏனென்றால் ஒரு ஜாமீன்தாரர் அசட்டையா யிருந்தாலும் இன்னொருவராவது கடன் வாங்கினவரைக் கவனித்து வருவாரென்று நம்பலாம். முப்பது ரூபாய்க்குக் குறைவா

யுள்ள கடன் தொகைகளைப்போன்ற சொற்ப கடன் தொகைகளின் விஷயத்திலே, சங்கத்தார் ஒரு நபர் ஜாமீன்தாரர் இருந்தாற் போதுமென்று அதோடு திருப்தியடையலாம்; இக்கொள்கை சரியானதென்று சங்கத்தாருக்குத் தோற்றுகிற பக்ஷத்திலே, சகாயச்சட்டங்களைத் திருத்தவேண்டியதா யிருக்கிறது. ஒரு மெம்பருக்கு அதிகமாய் எவ்வளவுமட்டில் கடன் கொடுக்கலாமோ அதுவும், ஒருவர் அதிகமாய் எவ்வளவு தொகைக்கு நபர் ஜாமீன்தாரராயிருக்கலாமோ அதுவும் ஒன்று யிருக்கும்படி செய்யப்பட்டால், மெம்பர்களில் பாதிபேர்தான் நபர் ஜாமீன் ஏற்பாட்டின்படி கடன் வாங்கக்கூடும். ஆகவே அதிகமாய் எவ்வளவு மட்டில் கடன் கொடுக்கலாமோ அதில் இரண்டு பங்கு இருக்கும்படி நபர் ஜாமீன் அளவை நிர்ணயிப்பது இன்னும் நன்றாயிருக்கிறது. உச்ச அளவு வரையில் ஒவ்வொருவரும் நபர் ஜாமீன்தாரராயிருப்பதற்கு அனுமதிகொடுக்கப் பஞ்சாயத்தார் கடமைப்பட்டவரல்ல. மேலும் இப்போதுள்ள சகாயச் சட்டங்களின் படியுங்கூட நபர் ஜாமீன்தாரர்கள் இரண்டு பேருக்கு மேலிருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த பஞ்சாயத்தாருக்கு இஷ்டமிருந்தால், அவர்கள் அந்தப்படியே செய்யலாம்.

சகாயச் சட்டம் 15.—அடியிற்கண்ட காரியங்களுக்காக மாத்திரமே கடன் கொடுக்கவேண்டும்.

1. விதைத்தானியம், ரு, விவசாய சம்பந்தமான கருவிகள் ஆகிய இவைகளை வாங்குவதும் விவசாய சம்பந்தமான இதர காரியங்களும்.

2. கால் நடைகளையும் அவைகளுக்காகத் தீனிகளையும் வாங்குவது.

3. குடியிருக்கும் வீடுகள் அல்லது கால்நடைக் கொட்டில்களை வாங்குவது, கட்டுவது அல்லது மராமத்து செய்வது.

4. நகட்டுப்புறத்துக் கட்டைவண்டிகள் செய்வது அல்லது வாங்குவது.

5. கிணறுகள் தோண்டுவதும் புதிதாய் நிலங்களை வாங்குவதும் போன்ற நிலத்துக்குச் செய்யப்படும் சீர்திருத்தங்கள்.

6. கிராமக் கைத்தொழிலாளிகளுக்கு வேண்டிய கைத்தொழில் சம்பந்தமான வேலை செய்யப்படாத சாமான்களையும் கைத்தொழிலாளிகளின் ஆயுதங்களையும் வாங்குவது.

7. உணவுத் தானியங்களையும் ஜீவிப்பதற்கு அவசியமாய் வேண்டிய இதர பொருள்களையும் வாங்குவது.

8. வியாபார காரியங்களுக்காக சொற்ப வியாபாரிகளுக்கு முன்பணம் கொடுப்பது.

9. சர்க்காருக்குச் சேரவேண்டிய நிலத் தீர்வையைச் செலுத்துவது.

10. முந்திவாங்கின கடன் தொகைகளைச் செலுத்துவது.

வியாக்கியானம்.

மாத்திரம்.—வேறே எந்தக் காரியத்திற்காகவும் கடன் கொடுக்கக் கூடாது. எந்தக் காரியத்துக்காக கடன் வாங்கப்படுகிறதோ அதை நடவடிக்கைக் குறிப்புப் புஸ்தகத்திலே எழுதிவைக்கவேண்டும். உற்பத்தி உண்டாக்கத்தக்க வேறே நல்ல காரிய மெதுவாகிலு மிருந்தால், சகாயச் சட்டத்தைத் திருத்தி அதையும் சேர்த்துக்கொள்ளலாம்.

காரியம்.—என்னென்ன காரியங்களுக்காகக் கடன் கொடுக்கலாமோ அவைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்:—

1. கிஸ்தி, விதைத்தானியம் வாங்குவது முதலியவைகளைப்போல வருஷவாரியில் வேண்டியிருப்பவை. இந்தக் காரியங்களுக்காக செலவழிக்கப்படும் தொகை ஒருவருஷ காலத்துக்குள்ளே மறுபடியும் கிடைத்துவிடும். ஆகவே அப்படிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுக்கப்படும் கடன் தொகையை ஒரு வருஷகாலத்துக்குள்ளே வசூல் செய்யவேண்டும். அவைகளை லாபஸ் செய்வதற்கான வாயிதாவை அதிகப்படுத்திக் கொடுக்கக் கூடாது.

2. கால்நடைகள் வாங்குவது முதலியவைகளைப் போல சிற்சில வேளைகளில் பணம் வேண்டியிருக்குங் காரியங்கள். ஒரே வருஷத்து மாசூலிலிருந்து பணம் வசூலாகாம லிருக்கலாம். ஆனால் செலவழித்த தொகையைச் சரிப்படுத்திக்கொள்வதற்கு இரண்டு அல்லது மூன்று வருஷம் பிடிக்கலாம். வாயிதாவை அதிகப்படுத்திக் கொடுப்பது சம்பந்தமான சகாயச் சட்டத்தினால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே பணத்தைத் திருப்பிச்செலுத்தும் விஷயம் சுலபமாகிறது.

3. கிணறு தோண்டுவது, நிலம் வாங்குவது முதலியவைகளைப் போன்ற விசேஷ மூலதனம் பிடிக்கும் காரியங்கள். அப்படிப்பட்ட கடன் தொகைகளை 5 வருஷத்திலுங்கூட திருப்பிச் செலுத்த முடியாமலிருக்கலாம். அந்தக்கடன் தொகையானது வட்டி சகிதமாய் திருப்பிக் கிடைக்கிற வரையிலே வாயிதாவை அதிகப்படுத்திக் கொண்டே வருவதுதான் சரியான மார்க்கமாகும். ஆனால் இந்த தேசத்திலே கூட்டுத் தொழில் முறைப்படி காரியம் நடத்துவது இப்பொழுதுதான் ஆரம்ப மாயிருக்கிறது; ஆகவே கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு மேலே கண்டபடி நீண்ட கால அளவுகள் ஏற்படுத்திக்கொடுப்பது இவ்வளவுசீக்கிரத்தில் சரியானதாரியமல்ல; இனிப் போகப்போக 5 வருஷகால அளவை அதிகப்படுத்தலாம். சங்கத்தார் மன்றாய் வேலை செய்யு மிடங்களிலே, வசூல் வேலை தீவிரமாய் நடப்பதோடுங்கூட, காரிய நிர்வாகம் திருப்தி கரமாயிருந்து, மெம்பர்களும் சங்கத்தின் விஷயத்தில் தங்களுக்குள்ள உத்தரவாதத்தைத் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

இரண்டாவது மூன்றாவது வகைகளைச் சேர்ந்த கடன் தொகைகளைக் காட்டிலும் முதல் வகையைச் சேர்ந்த கடன்தொகைகளை முன்னதாய்க்கொ

டுக்கவேண்டும்; மூன்றாவது வகைக் கடன்தொகைகளைக் காட்டிலும் இரண்டாவதுவகைக் கடன்தொகைகளை முன்னதாய்க் கொடுக்கவேண்டும்.

முந்தி வாங்கின கடன் தொகைகள்.—முந்தின கடன்தொகைகளைத் தீர்ப்பதற்காகக் கடன்வாங்குவது மெத்தவும் நல்லதென்பதற்கு சந்தேகமில்லை. அப்படிப்பட்ட கடன் வேண்டுமென்று மெம்பர்களெல்லோரும் கேட்கிறார்கள்மேலும் இந்தகாரியத்திற்காகக் கொடுக்கப்பட்ட கடன்தொகைகளை 5வருஷத்துக்குள்ளே வசூல் செய்வது கஷ்டமாயிருக்கும். கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும்படி நெருக்கினால் அது தொந்தரவாக எண்ணப்படுவதோடுங்கூட சங்கத்தாருக்குள் ஜனங்களுக்குள் கெட்டபேர் வரும். ஆகவே முதலில் எல்லாருடைய கடன்களையும் தீர்ப்பது சாத்தியமான காரியமல்ல.

முந்தின கடன் தொகைகளைத் தீர்ப்பதற்காக கொடுக்கப்படும் கடன் விஷயத்திலே, தீர்த்துவிடப்பட்ட கடன் பத்திரங்களை சங்கத்தில் சேர்த்து வைக்கவேண்டும். இது சங்கத்தாருக்கு மாத்திரமே யல்லாமல் கடன் வாங்குகிறவருக்குங்கூட பிரயோசனகரமாயிருக்கும். வாங்கின கடன் தொகையானது சரியாய் உபயோகிக்கப் பட்டிருக்கிறதென்பதை சங்கத்தாருக்கு எண்பிப்பதற்கு இது சாதனமாயிருக்கிறது. இனிமேல் ஸாவ்காரானவன் எழுதப் படிக்கத் தெரியாத மெம்பரை மோசம் பண்ணுவதற்கு சமயம் வாய்க்காது. கடன் வாங்கினவர் தான் செலுத்தியிருக்கும் தொகையைக் காட்டிலும் அதிகமாய் ஒன்றும் செலுத்த வேண்டியதில்லை யென்று தெரிந்து கொள்ளுகிறார். மெம்பருக்கு ஏற்படும் அனுகூலம் இன்னொன்றிருக்கிறது. சாதாரணமாய் ஒரு ரயத்து ஸாவ்காருக்குக் கொடுக்கவேண்டிய தொகையானது வாஸ்தவத்தில் வாங்கின கடன் தொகையைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாயிருக்கும். சங்கத்தார் இது விஷயத்தில் தலையிடுகிற பக்ஷத்திலே விவகாரமானது மெம்பருக்குப் பிரயோசனகரமாகவே பைசல் செய்யப்படலாம். அப்படிப்பட்ட மத்தியஸ்தம் கூடவே கூடாதென்று ஸாவ்கார் எண்ணமாட்டான்; ஏனென்றால் சில வேளைகளில் அவன் கோர்ட்டுக்குப்போகிற பக்ஷத்திலே, தொகை பூராவும் வசூலாகாமலிருக்கலாம்.

ஒரு காரியம், ஒரு கடன்.—ஒன்றுக்கு மேற்பட்ட காரியங்களுக்காகக் கடன் ஜாரிசெய்யக் கூடாது. கடன் தொகைகளைத் திருப்பிச்செலுத்துவதற்கான காலங்களை நிர்ணயிக்கும்போதும் வாய்தாவை அதிகப்படுத்திக் கொடுக்கும்போதும் பற்பல காரியங்களுக்காக கொடுத்திருக்கும் கடன் தொகைகளைக் குறித்து தனித்தனியாய் யோசனைபண்ண வேண்டும். எவ்வளவுதொகைக்கு மேற்பட்டு கடன் வாங்கக்கூடாதென்று நிர்ணயித்திருக்கிறதோ அதற்குட்பட்டு ஒரு மெம்பர் பல தடவைகளில் கடன் வாங்கலாம்; ஆனால் ஒவ்வொரு கடனும் ஒரே ஒரு காரியத்திற்காகத்தான் வாங்கப்பட்டிருக்க வேண்டும். இந்தக் கடன்பத்திரங்களுக்கு முத்திரைக் கட்டணமில்லையாகையால் இம்மாதிரி வாங்குவதனால் கஷ்டமெதுவுமில்லை.

வசூல்.—வேலை அதிகமாயிருக்கிற காலத்திலே வசூல் செய்யும் விஷயத்தில் ஒரு ஐக்கியநாணயச் சங்கத்தார் ஸாவ்காரைப் போலவே வேலை நடத்த வேண்டும். இவர்களுக்கும் ஸாவ்காருக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால், செலுத்தப்பட்ட தொகையை யெல்லாம் ஸாவ்கானவன் வட்டிக்காகவே வரவு வைத்து வருவான்: அதனால் எத்தனை வருஷமானாலும் அசல் தொகை அப்படியே பாக்கியாய் நிற்கும். ஆனால் ஒரு ஐக்கிய நாணயச்சங்கத்திலோ செலுத்தப்படும் தொகையானது வட்டிக்கும் அசலுக்கும் வரவாக வைக்கப்படும்; அதனால் கடன் சுலபமாய்த் தீர்ந்துவிடும். தவணையாக வசூல் செய்வதன் நோக்கம் இதுதான். கடன் வாங்குகிறவர் ஸாவ்காருக்கும் மெம்பர்களுக்கும் தவணைகளாய்ச் செலுத்துவது வழக்கமா யிருக்கிறது. அந்த ஏற்பாட்டை அனுஷ்டிப்பதில் கஷ்டம் எதுவுமில்லை. அந்தப்படி செய்யாவிட்டால் கடன் வாங்குகிறவர் முயற்சியற்றவராய்ப் போவார். அதனால் ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தார் கொடுக்கும் கடன் தொகையினால் உண்டாகும் பலன் என்னவென்றால் அவருக்கு சோம்பல்தனம் உண்டாக்குவதே

சகாயச்சட்டம் 16.—ஒருகடன் தோகையானது துர்விநியோகம் செய்யப்பட்டிருக்கிறதென்று பஞ்சாயத்தார் அபிப்பிராயப்பட்டால், அந்தக் கடனை ரத்து செய்து அதை உடனே வசூல் செய்ய அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

வியாக்கியானம்.

துர்விநியோகம்.—துர்விநியோக மென்பது ஒரு கெட்ட காரியத்திற்காக கடன் தொகையை செலவழிப்பதாகும்; மேலும் ஒரு கடன் வாங்கி அதை ஒரு காரியத்திற்காக என்று வெளிக்குச் சொல்லி அதை இன்னொரு காரியத்திற்காக உபயோகிப்பதும் துர்விநியோகமாகும். இந்த சகாயச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதனால் மெம்பர்கள் சத்தியமாய் நடந்து கொள்ளக் கற்றுக்கொள்வார்கள். கடன் தொகைகள் சரியாய் உபயோகிக்கப்பட்டிருக்கிற தென்பதற்கு பஞ்சாயத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் உறுதிமொழி கூறவேண்டும். அந்தப்படி உறுதிமொழி கூறுவதற்குமுன் அது விஷயமாய் ஜாக்கிரதையாய் விசாரணை செய்யவேண்டியதா யிருக்கிறது. கடன் தொகையில் எவ்வளவு பாகமாவது இன்னும் உபயோகிக்கப்படாமலிருக்கிறதா என்பதை உறுதிமொழி கூறுகிறவர் தவனிப்பார். மிகுதியை வாபஸ் செய்யும்படி மெம்பர்களுக்குக் கற்பிக்க வேண்டும்; அப்படிக் கற்பிக்காவிட்டால் இம்மிகுதியை அவர்கள் உபயோகமற்ற வழிகளில் உபயோகிக்கூடும். இது பஞ்சாயத்தாருடைய பிரதான அலுவலாயிருக்கிறது. பஞ்சாயத்தாருடைய நோக்கமானது கடன் கொடுக்கிறவருக்கு சகாயம் செய்து கொடுக்கவேண்டுமென்பதே யொழிய அவரிடத்திலிருந்து பலவந்தமாய்ப் பணம் வாங்கவேண்டுமென்பதல்ல. ஆகவே தம்முடைய சொந்த க்ஷேமத்தை உத்தேசித்தே அவர் அந்த மிகுதித் தொகையை வாபஸ் பண்ணும்படி செய்யவேண்டும். வசூல் செய்யப்பட்ட பணத்தைக் கொண்டே ஒரு நல்ல பஞ்சாயத்தாருடைய வேலை இப்படிப்பட்டதென்று நிதானிக்கப்படும்.

சகாயச்சட்டம் 17.—திருப்பிச் செலுத்தவேண்டிய தேதிக்கு முன்னமே ஒரு கடன் தொகையை முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது திருப்பிச் செலுத்த கடன்வாங்கினவருக்கு இஷ்டமிருந்தால் அவர் அந்தப்படியே செய்யலாம்; ஆனால் சிறிது பாகமாகத் திருப்பிச் செலுத்தும்போது அணா பைசாவாக வல்லாமல் முழு ரூபாய்க் கணக்காய்த் திருப்பிச் செலுத்தவேண்டும். மேலும் சிறிது பாகம் திருப்பிச் செலுத்தப் படுவதன்மேல் வட்டி கழித்து கொடுப்பது—அந்தப்படி திருப்பிச் செலுத்தப் படுவதற்கு பிந்தியுள்ள மாதத்தில் முதல் தேதியிலிருந்துதான் ஆரம்பமாகும்.

வியாக்கியானம்.

சிறிதுமட்டிலாவது.—நோடிஸ் கொடுக்காமலே கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்தலாம். இது ஐக்கிய நாணயச் சங்கத்தின் சிரேஷ்டமான கோட்பாடுகளில் ஒன்றாகும்; சிக்கன முறை முக்கியமாய் இதையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. கடனைத் திருப்பிச் செலுத்தும் விஷயத்தில் தனித்தனியாக ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்பட்டால், அதைச் சங்கத்தார் வாங்கிக்கொள்ள மறுக்கிற பக்ஷத்திலே, அந்த ரூபாய் திருப்பிச் செலுத்த வேண்டிய தேதிக்கு முன் வீண் செலவு செய்யப்பட்டு, கடன் வாங்கினவர் தொகையைத் திருப்பிச் செலுத்தக் கஷ்டப்படுவதற்கும் இடமிருக்கிறது. பஞ்சாயத்தார் இன்னொரு காரியமும் செய்யவேண்டும்; அதாவது கடன் வாங்கினவரிடத்தில் ரொக்கபணம் ஏதாவது மிகுதி யிருக்கிறதாவென்று கவனமாய்ப் பார்த்திருந்து, அந்தப்படி மிகுதி யிருப்பதாகத் தங்களுக்குத் தெரியவந்தவுடனே அதை அவரிடத்திலிருந்து பற்றிக்கொள்ள வேண்டும்.

மாதம் — மாதமென்பது கடன் கொடுக்கப்பட்ட தேதிமுதல் அடுத்த மாதத்தில் அதே தேதி வரையிலுள்ள காலமென்று அர்த்தமாகும்.

சகாயச்சட்டம் 18.—ஒரு மெம்பர் வாங்கியிருக்கும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலவரையறையானது கழிந்து போய், அவருக்குப் பஞ்சாயத்தார் வாயிதாவை அதிகப்படுத்திக் கொடுத்திராவிட்டால் கடன் கணக்கை உடனே முடிவு செய்யவேண்டியதோடுங்கூட, ஆலசிய மில்லாமல் கடன் தொகையை வசூலிப்பதற்குப் பஞ்சாயத்தார் நடவடிக்கை நடத்தவும் வேண்டும்.

வியாக்கியானம்.

வாயிதாவை அதிகப்படுத்திக் கொடுப்பது, கடன் தொகையில் ஒரு பாகத்தை மாத்திரம் திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதி கொடுப்பது முதலியவைகளைப் போன்ற சகாயங்கள் எத்தனையோ செய்யப்பட்டிருந்தும், கடன் வாங்கினவர் தொகை செலுத்தத் தவறினால், கணக்கை முடிவு செய்து உடனே வசூல் செய்வதற்காக நடவடிக்கை நடத்த வேண்டும்.

கணக்கைக் கண்டிப்பாய் முடிவு செய்யவேண்டும். அந்தப்படி கண்டிப்பாய் நடத்தினால், மெம்பர்கள் தக்க காலங்களில் தவறாமல் தொகை செலுத்தி வருவார்கள். கண்டிதக் குறைவுதான் ஐக்கிய நாணயச் சங்கத்திலே எப்போதுமுள்ள குறையாகும்.

அநேக சங்கங்களில் பாக்கி செலுத்தத்தவறின பிறகு தண்டவட்டி வாங்குவதற்காக நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது; ஆனால் ஸாவ்காரைப்போல லாபம் சம்பாதிக்கும் உத்தேசத்துடன் சங்கத்தார் தண்டவட்டி வாங்குவதில்லை; ஆனால் அந்த மெம்பர் காலந்தவறாமல் தொகை செலுத்திவரும் வழக்கத்தைக் கற்றுக்கொள்ளும் படியாக யோக்கியமான ஒரு ஐக்கியநாணயச் சங்கத்தாரால் தமக்கு தண்டம் விதிக்கப்பட்டிருக்கிறதென்பதை அவர் தெரிந்துகொள்ளும் பொருட்டு சங்கத்தார் தண்டவட்டி வாங்குகிறார்கள்.

சகாயச்சட்டம் 19.—வருஷப் பிரதி வருஷம் ரெஜிஸ்ட்ராரால் வெளியிடப் படுகிறபடி சங்கத்தின் நிகர லாபமுழுவதையும் சேமநிதிக்கு வரவாகச் சேர்க்கவேண்டும். சேமநிதியானது ஒரே தொகையாய் மற்றவர்களுக்குப் பங்கீடு செய்யத்தகாததாய் இருக்க வேண்டியதோடுங்கூட, அது ஒரு மொத்தமாய் சங்கத்தாருக்குச் சொந்தமாயிருப்பது மல்லாமல், எதிர் பாராத நஷ்டங்கள் நேரிட்டால் அவைகளைச் சரிப்படுத்திக் கொள்வதற்காக உத்தேசிக்கப் பட்டுமிருக்கிறது. அதில் குறிப்பாய் ஒருபாகம் தனக்குச் சேர வேண்டுமென்று எந்த மெம்பரும் தாவா செய்யக்கூடாது. அதைக் கவர்மெண்ட் ஸேவிங்ஸ் பாங்கியிலாவது ரெஜிஸ்ட்ராரால் நிர்ணயிக்கப்படும் வேறே எந்த மாதிரியாகவாவது வட்டிக்குப் போட்டுவைக்க வேண்டும். ரெஜிஸ்ட்ராருடைய அநுமதியிருந்தாலன்றி மற்றப்படி சேமநிதியிலிருந்து தொகை வாங்கக் கூடாது.

வியாக்கியானம்.

நிகரலாப முழுவதும்.—ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்திலே மெம்பர்கள் ஈவுத் தொகையில் நாட்டம் வைக்கக் கூடாது. சேமநிதி தீவிரமாய் விருத்தியாகும்படிச் செய்யவேண்டும். சேமநிதி எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவு அதிகமாக சங்கத்துக்குக் கியாதி உண்டாவதோடுங் கூட நிர்வாகம் நன்றாயிருக்கிறதென்பதற்கு முன்னிலும் அதிக திடமான அத்தாட்சியும் டிபாஸிட் தொகை கட்டும்படி செய்வதற்கு முன்னிலும் அதிகமாய் இடமும் ஏற்படுகின்றன. சேமநிதி சேர்த்து வைக்கப் பட்டிராவிட்டால், ஏதேனும் நஷ்டமுண்டாகிற பட்சத்தில் அதை மெம்பர்களே ஏற்றுக்கொள்ள வேண்டியவராவார்கள்.

சங்கமானது கலைத்துவிடப்பட்டாலுங்கூட சேமநிதியை மெம்பர்களுக்குள் பங்கீடு செய்யக்கூடாது. சேமநிதியில் பங்கு பெறவேண்டுமென்னும் விருப்பத்தைக் கொண்டு மெம்பர்கள் சங்கத்தைக் கலைக்கவொட்டாமல்

தடுப்பதற்காகவே இந்த நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும், சங்கம் கலைந்து போகிற காலத்திலே சேமநிதியை மெம்பர்களுக்குள் பங்கிடு செய்வதில் நியாயமில்லை. இந்த மெம்பர்கள் சொந்தப் பிரயத்தனத்துடனும் சுய நஷ்டத்தைக் கவனிக்காமலும் அந்த நிதியைச் சேர்த்தவர்களாகவே யிருக்க மாட்டார்கள்.

சேமநிதி.—இதை எப்போதும் சங்கத்துக்கு வெளியே ஒரு பந்தோபஸ்தான இடத்தில் வட்டிக்குப் போட்டுவைக்க வேண்டும். வட்டிக்குப் போட்டு வைப்பதற்கான இடங்களெல்லாவற்றிலும் மிகச் சிறந்தது கவர்ன்மென்ட் ஸேவிங்ஸ் பாங்கியேயாகும். ஸென்ட்ரல் பாங்கும் ஷெ ஸேவிங்ஸ் பாங்கைப்போலவே பந்தோபஸ்தான இடமாயிருப்பதுடன், ஷெ ஸேவிங்ஸ் பாங்கில் கிடைக்கும் வட்டியைக் காட்டிலும் ஸென்ட்ரல் பாங்கியிலே அதிகமான வட்டியும் கிடைக்கிறது; அதனால் தான் சாதாரணமாய் சங்கங்களின் சேமநிதியானது அங்கே கட்டிவைக்கப்படுகிறது. இதைப்பற்றி இன்னும் சமாசாரம் தெரியவேண்டுமானால், வர்த்தமானி 1-வது வால்யூம் 1-ம் இலக்கத்திலே சேமநிதியைக் குறித்து எழுதியிருக்கும் வியாஸத்தைப் பார்க்கவும்.

சகாயச்சட்டம் 20.—சங்கத்தின் விவகாரங்களை நிர்வாகம் செய்யும் அதிகாரமானது பத்து மெம்பர்களுக்கு மேற்படாமலுள்ள பஞ்சாயத்தாரிடம் சங்கிரமிக்கவேண்டும்; இந்த மெம்பர்கள் தங்களுக்குள்ளாகவே அக்கிராசனாதிபதி ஒருவரையும் காரியதரிசி ஒருவரையும் தெரிந்தெடுத்து நியமித்துக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்தார்களை மெம்பர்களெல்லாம் சேர்ந்து இரண்டு வருஷத்துக்கு இருக்கும்படியாக தெரிந்தெடுத்து நியமிப்பார்கள்.

வியாக்கியானம்.

எல்லா மெம்பர்களும் சேர்ந்து சங்கத்தின் காரியத்தைச் செய்யமுடியாது. ஆகவே அதைச் செய்வதற்காக ஒரு பஞ்சாயத்தை அல்லது கம்மிட்டியைத் தெரிந்தெடுத்து ஏற்படுத்தவேண்டும். கம்மிட்டி மெம்பர்களின் சங்கிபையானது அவ்வவ்விடத்திய நிலைமைகளுக்கேற்றபடி இருக்கிறது. அழுஞ்சிவாக்கத்தில் ஒரு சங்கம் இருக்கிறது. அதில் ஒரே ஒரு பஞ்சாயத்தார்தான் இருக்கிறார். ஜெர்மனி தேசத்திலே கௌன்ஸில் ஆவ் ஸூபர்விஷன் என்னும் மேற்பார்வை யிடுவற்கான சபை ஒன்று இருக்கிறது; ஆனால் இந்த மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்திலே பஞ்சாயத்திலும் ஷெ மேற்பார்வையிடும் சபையிலும் இருந்து வேலை செய்வதற்காக படித்தவர்கள் போதுமான பேர் நமக்கு கிடைப்பது கஷ்டம். பொதுச் சபையார் பஞ்சாயத்தாரைத் தெரிந்தெடுத்து ஏற்படுத்தவேண்டும். ஆனால், இந்த பஞ்சாயத்தார் தங்களுக்குள்ளாகவே சிலரை உத்தியோகஸ்தர்களாகத் தெரிந்தெடுத்து ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்; ஏனென்றால் அவரவர்களின் வேலைக்கேற்றபடி மெம்பர்களின் யோக்கியதாம்சங்களைப் பொதுச் சபையாரைக் காட்டிலும் பஞ்சாயத்தாரே வெகுசாய்த் தெரிந்திருக்கக் கூடியவர்களா யிருக்கிறார்கள்.

பஞ்சாயத்தார் வேலைபார்க்கும் கால அளவானது அதமம் இரண்டு வருஷமாகவாவது இருக்கவேண்டும். வேலையின் விவரங்களை நன்றாய்த் தெரிந்து கொள்ளுவதற்கு ஒரு வருஷம் போதாது; ஆனால், அதிக நீண்ட கால அளவு ஏற்படுத்தினால் பஞ்சாயத்தார் சிரத்தைபற்றவர்களாய்ப் போவதோடுங் கூட, பொதுச் சபையார் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதும் கஷ்டமாய்விடும்.

சகாயச்சட்டம் 21.—பஞ்சாயத்தார் சங்கத்தில் வேலை நடத்துவதற்காக மாதத்துக்கு ஒரு தரத்துக்குக் குறையாமலாவது பல தடவைகளிலாவது கூட்டம் கூடவேண்டும். ஒரு பஞ்சாயத்துக் கூட்டத்துக்கு ஐந்து பேருக்குக் குறையாமல் வந்திருந்தால்தான் வேலை நடத்தலாம். மெம்பர்களில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயமே முடிவானதாகும்.

வியாக்கியானம்.

பஞ்சாயத்தாருக்குக் குறிப்பாய் எவ்வித வேலையு மிராவிட்டாலும், மாதாந்தர விவகாரங்களைக் குறித்த ஸ்டேட்மென்டைப் பற்றியாவது சபையிலே ஆலோசிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஸ்டேட்மென்டினால் சங்கம் இவ்வளவு வேலை செய்திருக்கிறதென்று தெரியவரும்; மேலும் அது காரியதரிசியின் வேலையை மேற்பார்வை யிடுவதற்கும் அனுகூலமாயிருக்கும். பஞ்சாயத்து சபையானது கூடுவதற்கு எத்தனை பேர் வந்திருக்கவேண்டுமோ அத்தனை பேர் வராதிருந்து பஞ்சாயத்து சபை கூடாமலிருப்பது சங்கத்துக்கு அகௌரவமாகும். பஞ்சாயத்து சபைகளிலே ஒவ்வொரு மெம்பரும் வந்திருக்க வேண்டியது அவசியமென்று போதுமான மட்டிலே வற்புறுத்தி சொல்ல வேண்டியதில்லை; ஏனென்றால், சில மெம்பர்கள் சபைக்கு வாராமலிருக்கையிலே சபைக்கு வந்திருக்கும் மற்ற மெம்பர்கள் சங்கத்துக்குப் பிரதிகூலமாக ஒரு தீர்மானத்தை ஜாரிசெய்து விடக்கூடும்; எல்லா மெம்பர்களும் வந்திருக்கிற பட்சத்திலே அந்தத் தீர்மானம் ஜாரிசெய்யப்படாமலிருக்கக் கூடும். ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்திலே ஒரு விஷயத்துக்கு விரோதமாக வெகு சிலரே அபிப்பிராயம் தெரிவித்தாலுங்கூட, அதைக் குறித்தும் ஜாக்கிரதையாய் யோசனை பண்ணவேண்டும்.

அக்கிராசனாதிபதியே பஞ்சாயத்தில் விசாரணை புரியும் அதிகாரியாவார். உத்தியோகம் வகித்திருக்கும் மெம்பர்களுக்குள்ளே விரோத முண்டாகாதபடி தடுப்பது அவருடைய வேலையாயிருக்கிறது. நன்றாய் வேலைசெய்யும் ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்திலே இது அவசியமாயிராது. பிழைகளைக் கண்டுபிடித்துத் திருத்தும் காரியத்தை சுலபப்படுத்தும்பொருட்டு பஞ்சாயத்திலுள்ள பல மெம்பர்களின் அலுவல்களும் இன்னின்னவை யென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சகாயச்சட்டம் 26.—பொதுச் சபையார் சங்கத்தின் வேலையை நடத்துவதற்காக வருஷத்துக்கு ஒரு முறைக்குக் குறையாமலாவது இன்னும் பல

தடவைகளிலாவது கூட்டம் கூடவேண்டும். அந்தக் காலத்திலே பெயர் ஜாபிதாப்படி மொத்தத்தில் எத்தனை பேர் இருக்கிறார்களோ அவர்களில் காற் பங்கு பேருக்குக் குறையாதவர்கள் வந்திருந்தால்தான் பொதுச்சபை கூட வேண்டும். அக்கிராசனாதிபதி சபைக்கு வந்திருக்கும்போது அவராவது, அவர் சபைக்கு வராத பட்சத்திலே அந்தச் சபைக்கு வந்திருக்கும் மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட எந்த மெம்பராவது பொதுச் சபையிலே அக்கிராசனம் வகிக்கவேண்டும். ஒரு பொதுச்சபைக்கு வந்திருக்கும் மெம்பர்களில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயமே அந்தப் பொதுச்சபையில் முடிவானதாகும். இதர விஷயங்களோடுகூட அடியிற்கண்ட விஷயங்களைக் குறித்தும் பொதுச்சபையார் காரியம் நடத்தவேண்டும்.

1. பஞ்சாயத்தார்களைத் தெரிந்தெடுத்து நியமிப்பது.

2. ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராருக்குப் போய்ச் சேர வேண்டிய வருஷாந்த ரிபோர்ட்.

3. ரெஜிஸ்ட்ராருடைய தணிக்கை உத்தரவு.

4. இப்போதுள்ள யாதொரு சகாயச்சட்டத்தைத் திருத்துவது அல்லது புதிதாய் யாதொரு சகாயச்சட்டத்தை ஏற்படுத்துவது.

5. ஒரு மெம்பரை நீக்கி விடுவது.

6. யாராகிலும் ஒரு மெம்பர் பஞ்சாயத்தார்மேல் கொண்டுவரும் ஏதேனும் பிராது. பொதுச் சபைகள் வருஷத்துக் கொருதரமாகிலும் கூட வேண்டும். பொதுச் சபையானது இன்னும் அதிக தடவை கூடினால் மெத்தவும் நல்லதே; வாரத்துக்கு ஒருதரம் கூடினாலுங்கூட அது அதிகமாகமாட்டாது.

சகாயச்சட்டம் 27.—ரெஜிஸ்ட்ராருடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக் கொள்ளாமல் யாதொரு சகாயச் சட்டத்தில் எதையும் சேர்க்கவோ மாற்றவோ அல்லது திருத்தவோ கூடாது. ரெஜிஸ்ட்ராருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு மாற்றப்பட்ட அல்லது திருத்தப்பட்ட சகாயச் சட்டமானது சங்கத்தார் வாங்கின கடன்களுக்காக மெம்பர்கள் ஏற்கவேண்டிய பொறுப்பின் தன்மைக்கும் வியாபகத்துக்கும் சம்பந்தப்பட்டால், அந்த மாறுதல் அல்லது திருத்தத்தை கவர்ன்மெண்டார்கூட அங்கீகரிக்கிற வரையில், அது சட்ட சம்மதமாகமாட்டாது.

வியாக்கியானம்.

பொதுவாக எல்லாத் திருத்தங்களுக்கும் முதலில் பொதுச் சபையாருடையதும் பிறகு ரெஜிஸ்ட்ராருடையதுமான இருவகை அனுமதி வேண்டியிருக்கிறது. திருத்தமானது அவ்வவ்விடங்களின் நிலைமைகளுக்கு இசைந்திருக்கிறதென்பது பொதுச் சபையாரின் அனுமதியினால் தெரியவருகிறது.

அது ஐக்கிய நாணயச் சங்கங்களைக் குறித்த ஆக்டுக்கு விரோதமாயில்லையென்பதை உறுதிப் படுத்துவதே ரெஜிஸ்ட்ராருடைய அனுமதியைப் பெறுவதன் உத்தேசமாகும். கவர்ன்மெண்டாரின் அனுமதி வேண்டியிருப்பது ஒரே ஒரு திருத்தத்தின் விஷயத்திலேயே; அதாவது மெம்பர்களின் பொறுப்பு சம்பந்தப்படும் விஷயத்திலாம்.

சகாயச்சட்டம் 28.—யாதொரு மெம்பர் எவ்விதத்திலாவது சங்கத்தை மோசஞ் செய்கிற பட்சத்திலாகிலும், பொதுவாய் அவருடைய நடத்தையானது சங்கத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து அவரை நீக்கிவிடுவது அவசியமாகும்படியான தன்மையுடையதா யிருக்கும் பட்சத்திலாகிலும், அப்படிப்பட்ட மெம்பரைத் தள்ளிவிட பொதுச் சபையாருக்குச் சுதந்தரமுண்டு; ஆனால், யாதொரு மெம்பரைத் தள்ளிவிடுவதற்கான எந்தத் தீர்மானமும்-ஜாபிதாவில் கண்ட மெம்பர்களின் மொத்த சங்கியையில் பாதிக்குக் குறையாத மெம்பர்கள் கூட்டத்துக்கு வந்திருந்தாலன்றி மற்றப்படி, சட்ட சம்மதமாக மாட்டாது. தள்ளிவிடப்பட்ட யாதொரு மெம்பரிடமிருந்து சங்கத்துக்கு வரவேண்டிய சகல பணத்தொகைகளையும் உடனே வசூல் செய்வதற்கு அவசியமான பிரயத்தனங்களைப் பஞ்சாயத்தார் செய்யவேண்டும். தள்ளிவிடப்பட்ட யாதொரு மெம்பரின்மேல் சங்கத்தின் பொதுக்கடனுக்காக 3-வது சகாயச் சட்டத்தில் விவரித்திருக்கிறபடி உள்ள பொறுப்பானது அவர் தள்ளிவிடப்பட்ட காலத்தில் இருந்த மாதிரியாகவே அவர் தள்ளிவிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருஷ காலம் வரையில் இருந்துகொண்டே யிருக்கும்.

வியாக்கியானம்.

ஒரு மெம்பரைத் தள்ளிவிடுவதானது அவருக்குப் பெருத்த அபகீர்த்தியாகையால், அது விஷயமாய்த் தீர்க்காலோசனை செய்யவேண்டி யிருக்கிறது; ஆனால், அத்தியாவசியமான விஷயங்களிலே அப்படிச் செய்வதற்குப் பின்வாங்கக் கூடாது.

சகாயச்சட்டம் 30.—பஞ்சாயத்தார் இலவுசமாய் வேலைசெய்யவேண்டும்; ஆனால், சங்கத்தின் வேலையைச் செய்வதில் வாஸ்தவமாய்ப் பிடிக்கும் ஏதேனும் செலவை சங்கத்தின் செலவாய் எழுதலாம்.

வியாக்கியானம்.

சங்கத்தை நிர்வாகம் செய்யும் வேலை இலவசமானதா யிருக்கவேண்டும். அதற்குச் சம்பளம் ஏற்படுத்தும் பட்சத்திலே, பஞ்சாயத்துக்கு நபர்களைத் தெரிந்தெடுப்பது மெம்பர்களின் திறமையை அனுசரித்ததா யிராது.

C. இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டில் கண்ட கேள்விகளுக்கு விடை யெழுதுவது.

கூட்டுத்தொழில் சங்கத்தின் பொதுக் கோட்பாடுகளைப் பற்றியும் அதை இன்னவிதமாய் நடத்தவேண்டு மென்பதைப்பற்றியும் நான் ஒருவாறு விஸ்

தாரமாய் எடுத்து விவரித்திருக்கிறேன். சங்கம் சரியாய் வேலைசெய்து வருகிறவரையிலும் இதைவிட அதிகமான விதிகள் எவையும் அவசியமில்லை. ஆனால், சங்கம் நன்றாய் வேலைசெய்யாம லிருக்கக்கூடும். சங்கம் சரியாய் வேலைசெய்து வருகிறதாவென்று அடிக்கடி பரீட்சை செய்வதும், அது தவறிப்போகும்போதெல்லாம் அதைத் திருத்துவதும் அவசியம். ஆகவே, கல்யாணதுர்க்கம் தாசில்தாரரின் உதவியைக்கொண்டு சில கேள்விகளை நிர்ணயித்திருக்கிறது; அவைகளுக்குச் சொல்லும் பதில்களிலிருந்து சங்கம் இன்ன நிலைமையிலிருக்கிறதென்று வெளியாகும்.

முதலாவது, இதுவரையில் சொல்லிவந்த விஷய விவரணத்தால் ஐக்கிய நாணயச் சங்கங்கள் வேலைசெய்யும் தன்மை இன்னதென்று விவரமாய்த் தெரியவரும். கவர்ன்மெண்ட். இன்ஸ்பெக்டர்கள் 25 சங்கங்கள் முதல் 30 சங்கங்கள் வரையில் கவனித்து வரவேண்டியவர்களா யிருக்கிறபடியால், அவர்கள் அந்த சங்கங்களைப் போதுமான கவனத்துடன் மேற்பார்வையிடக் கூடியவர்களாயிருப்பது அசாத்தியம்; ஒவ்வொரு சங்கத்துக்கும் ஒரு இன்ஸ்பெக்டர் இருந்தால்கூட அவருக்கு அந்தப் பிரதேசத்தைப்பற்றிய விஷயங்கள் தெரிந்திருக்க முடியாதாகையால், அவர் அவ்வேலையைத் திறமையாய்ச் செய்யமுடியாது. ஆகவே, மேற்பார்வையிடும் வேலையில் உதவிபுரிவதற்கு எத்தனை மெம்பர்களைப் பழக்குவது சாத்தியமோ அத்தனை மெம்பர்களைப் பழக்குவது முக்கியமாகும். ஆகையால், இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டில் கண்ட கேள்விகளுக்கு பதில் எழுதுகையில் இன்ஸ்பெக்டர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஒரு மெம்பரைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ளும்படி அவர்களுக்கு கட்டளையிட்டிருக்கிறது. இரண்டு மூன்று வருஷங்களுக்குப்பிறகு கவர்ன்மெண்ட் இன்ஸ்பெக்டர்களிடமிருந்து யாதொரு உதவியுமில்லாமல் மெம்பர்கள் தாங்களாகவே ரிபோர்ட்டில் கண்ட கேள்விகளுக்கு பதில் எழுதவேண்டு மென்பதே இந்த நிபந்தனையின் நோக்கமாகும்.

இரண்டாவது, ஒரு சங்கத்தின் முக்கியமான தேவைகள் இன்னவையென்று ஸ்பஷ்டமாய் வெளியாகும்படியாகக் கேள்விகளின் வார்த்தைகளைப் பிரயோகித்திருக்கிறது. சங்கத்தின் வேலை நன்றாய் நடந்தேற வேண்டுமானால், இவ்விஷயங்களைக் கால முறையாய்ச் சோதித்துவரவேண்டியது அவசியம். எதுவும் ஜாக்கிரதையில்லாமல் மாமூல்படி நடந்து வரும்படியான ஸ்திதிக்கு வந்து விடக்கூடாது.

இது வரையில் வந்திருக்கிற பதில்களைப் பார்க்கும்போது, கேள்விகளின் நோக்கம் நன்றாய்த் தெரிந்து கொள்ளவில்லையென்று எனக்குத் தோற்றுகிறது. கீழே சில விதிகளை எழுதியிருக்கிறேன்; அவைகளை இன்ஸ்பெக்டர் ஜாக்கிரதையாய் வாசித்தறிந்துகொள்ளவேண்டும்.

பொது 1.—ரிபோர்ட்டிலே இன்ஸ்பெக்டரும் அவருக்கு உதவியாயிருக்கும் மெம்பரும் கையெழுத்து போடவேண்டும்.

2. கால் வருஷத்திய ரிபோர்ட்—மூன்று மாதத்துக்கொரு தடவை இன்ஸ்பெக்ஷன் (பார்வையிடுவது) நடக்க வேண்டுமென்று ஒரு காலத்தில் உத்தேசிக்கப்பட்டிருந்தது. அச்சிட்ட ரிபோர்ட்டை வருஷத்துக் கொரு தடவை அனுப்பிக்கொண்டால் போதுமென்று இப்பால் நான் உத்தரவு பண்ணியிருக்கிறேன். மற்ற இன்ஸ்பெக்ஷன்களைக் குறித்துத் தெளிவாகக் கதா ரூபமாய் ரிபோர்ட் எழுத வேண்டும்.

3. இன்ஸ்பெக்ஷன் தேதி.—இன்ஸ்பெக்ஷன் வேலையை ஒரே நாளைக்குள் செய்து முடிப்பது அசாத்தியம். அது விஷயமாய் இன்ஸ்பெக்டர் பஞ்சாயத்தாருக்கும் இதர மெம்பர்களுக்கும் தெரிய வேண்டியதை போதிக்க இரண்டு மூன்று நாள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

4. முந்தின இன்ஸ்பெக்ஷன் தேதி.—முந்தின அச்சிட்ட ரிபோர்ட் அனுப்பப்பட்ட பிறகு அனுப்பப்பட்ட சகல ரிபோர்ட்டுகளையுமாவது, நடந்த சகல இன்ஸ்பெக்ஷன்களையுமாவது குறிப்பிட வேண்டும்; முந்தின ஜூலை மீ 1உக்குப் பிறகு அனுப்பப்பட்டவைகளை அல்லது நடந்தவைகளை மாத்திரம் குறிப்பிடுவது போதாது.

5. இன்ஸ்பெக்டரானவர் பிசகாயிருப்பதைக் கண்டுபிடிக்க மாத்திரமல்லாமல், தாம் அந்த கிராமத்தை விட்டுப்போவதற்கு முன் கூடியமட்டிலும் பிசகைத் திருத்துவதற்கும் முயற்சிசெய்ய வேண்டும்.

கேள்வி 1.—சங்கத்தின் வேலை விஸ்தீர்ணம் எவ்வளவுக் கெவ்வளவு சிறியதாயிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நன்றாய் அந்த சங்கம் வேலை செய்யும்; குக்கிராமங்களில் கூட சங்கங்கள் இருக்கலாம். ஒரு சங்கத்தின் வேலை விஸ்தீர்ணம் பெரிதாயிருப்பதனால் அந்த சங்கத்தின் வேலை நன்றாய் நடப்பதற்குத் தடையுண்டாகும் பட்சத்தில், அந்த விஸ்தீர்ணத்தைக் குறைத்து விடலாம். அப்படிக் குறைப்பதனால் விலக்கப்படும் பிரதேசத்தில் ஒரு புதிய சங்கத்தை ஏற்படுத்தலாம். விலக்குவதாக உத்தேசிக்கப்படுகிற பிரதேசத்தில் ஒரு சங்கத்தை நிர்வாகம் செய்யத்தக்க சாமர்த்தியமுள்ள மனுஷ்ய சாமக்கிரி இராதபட்சத்தில் ஒரு புதிய சங்கத்தை ஏற்படுத்த முடியாமற்போன போதிலும், ஏற்கனவே யிருக்கும் பழைய சங்கத்தின் வேலை செய்யும் திறமையாவது பாதுகாக்கப்பட்டிருக்கும்.

II. (*f*) பறையர்களையும் சக்கிலிகளையும் திருஷ்டாந்தமாகக் காட்டியிருக்கிறது.

II. (*h*) லேவாதேவித் தொழில் செய்பவர்களைச் சேர்த்துக்கொள்ள முயற்சிசெய்ய வேண்டுமென்பது இதன் உத்தேசமல்ல; அது விஷயமாய் சங்கதி தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே இந்தக் கேள்வியின் உத்தேசம்.

III. (a) நிஷ்கரிஷையான எந்த தினமாவது போதும். ஒரு கிராமத்தில் செய்யவேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கிறபடியால், ஒரு திறமையுள்ள பஞ்சாயத்தார் வாரத்துக்கு இரண்டொரு தடவை சபை கூடுவது நலம்.

(b) கூட்டத்திற்கு வராமலிருப்பது முதலியவைகளுக்கான காரணங்களைக் குறித்துப் பூர்த்தியாய் சமாசாரம் தெரிந்து கொள்வதற்காகப் பொதுக்கூட்டத்திலே முயற்சி செய்ய வேண்டும்; அதன்மேல் அப்படித் தவறிநடந்தவர்களின் குற்றங்களை நிர்த்தாட்சிணியமாய்ப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

(c) (d) இன்ஸ்பெக்டரானவர் எத்தனை ஜனங்களைக் கூட்டுவது சாத்தியமோ அத்தனை ஜனங்களைக் கூட்டி அவர்களுக்குச் சங்க விஷயங்களைத் திருஷ்டாந்தங்களைக்கொண்டு கற்பிக்கவேண்டும்.

IV. (c) மெம்பர்களுக்கு உச்சத்தொகையான கடன் பட்டுவாடா செய்திருந்தால் அப்படிப்பட்ட சகல கடன்களுக்கும் ஒரு ஜாபிதா கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட கடன்களில் ஒவ்வொன்றையும் இன்னவிதமாய் உபயோகித்திருக்கிறதென்பதைப்பற்றி இன்ஸ்பெக்டர் விசாரிக்கவேண்டும்.

(d) இதற்கு ஜாக்கிரதையாய்ப் பதிலெழுத வேண்டும்.

(f) (h) இதில் காட்டியிருக்கும் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் மெத்த முக்கியமானவைகளானதால், அவைகளை மெம்பர்களின் மனதில் அழுந்தும்படி செய்வதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

V. (a) இன்ஸ்பெக்டர் குறைந்தது இரண்டு கேஸுகளைக் குறித்தாவது விவரமாய் விசாரித்து, அப்படிப்பட்ட விசாரணையினால் ஏற்படும் முடிவுகளைப் பூர்த்தியாய் எழுதிவைக்க வேண்டும்.

(b) செல்லாய்ப்போன தஸ்தவேஜுகள் சேகரிக்கப்படவில்லையென்று இன்ஸ்பெக்டர் பதிலெழுதுவது போதாது. அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளில் எத்தனை இன்னும் இருக்கின்றனவென்பதையும், அவர் அந்த கிராமத்தில் தங்கியிருந்தபோது எத்தனை தஸ்தவேஜுகளைச் சேகரித்தாரென்பதையும் குறிக்கவேண்டும்.

(d) பிரதி கடன் விஷயத்திலும் அதன் முழுத்தொகையும் எந்தக் காரியத்துக்காகவென்று உறுதி கூறி வாங்கப்பட்டதோ அதற்காகவே செலவழிக்கப்பட்டிராது, இதை நன்றாய் விளக்கிக் காட்டும் பொருட்டு, இன்ஸ்பெக்டரானவர் செலவாகாமல் நின்றிருக்கும் மிகுதித் தொகையை இரண்டொரு விஷயங்களிலே வசூல் செய்யவேண்டும்.

(g) வசூலாகாமல் பாக்கியாயிருக்கிற என்பதற்கு தவணை கடந்து பாக்கியாயிருக்கிற என்று அனேக இன்ஸ்பெக்டர்கள் தப்பாக அர்த்தம் செய்கிறார்கள். பூராவாகவோ சிறிதுமட்டிலோ பாக்கியாயிருக்கிற ஒவ்வொரு கடனையும் பற்றிய கணக்கை ஒரு பொதுக் கூட்டத்திலே விவரமாகப் படித்துக் காட்டவேண்டும். அப்படிப் படித்துக்காட்டுவதன் நோக்கம் என்னவென்றால், கடன் தொகை ஏதாவது துர்வினியாகம் செய்யப்பட்டிருந்தால் அதைப் பற்றி அந்தக் கூட்டத்திலுள்ள யாராகிலும் தெரிவிக்கக்கூடுமென்பதே.

VI. இன்ஸ்பெக்டர் கூட்டம் வைத்து அதில் அனுபோகத்தில் பிரயோஜனப்படக்கூடிய விஷயங்களைப் போதிக்கவேண்டும்.

(c) விவரங்கள் குறைவாயிருந்தால் அப்படி விடுபட்டுப் போனவைகளை இன்ஸ்பெக்டர் முன்னிலையில் நடக்கும் கூட்டத்திலே பூர்த்தி செய்வித்துக் கொள்ளவும்.

VII. (b) டிபாஸிட் தொகைகள் வரவு வந்ததைப் பஞ்சாயத்தாரின் தீர்மானங்களில் எழுதிவைக்கவேண்டும். முழுவிவரங்களுடன் கூடிய மாதவாரி ஸ்டேட்மெண்டுகளை வாசித்துக் காட்டவேண்டும்.

(i) சென்ற வருஷம் நடந்துகொண்டிருக்கையில் இருந்த மெத்தவும் அதிகமான ரொக்கக் கையிருப்பைக் குறிப்பிடவும். ரூ. 100 க்கு மேற்பட்ட கையிருப்பு இருந்த கால அளவுகளைத் தேதியுடன் பூர்த்தியாக ரிபோர்ட் செய்யவேண்டும்.

IX. ஒவ்வொரு மெம்பரின் பெயரைக் காட்டுவதும், எவைகளிலே அந்த மெம்பர் பிரதான கடன் வாங்கினவராயிருக்கிறாரோ அந்தக் கடன்களையும், எவைகளில் அவர் ஜாமீன்தாரராக மாத்திரமிருக்கிறாரோ அந்தக் கடன்களையும் எழுதியிருக்கிற பக்கங்களைக் காட்டுவதற்கான இரண்டு அலங்கள் அடங்கியதுமாயுள்ள ஒரு பட்டியலானது கடன் பேரேட்டுப் புஸ்தகத்தில் இருக்க வேண்டும்.

(a) கடன் வாங்கினவர் ரொக்க கணக்குப் புஸ்தகத்தில் கையெழுத்து செய்திருக்கிற பட்சத்திலே, அவர் கடன் பேரேட்டுப் புஸ்தகத்தில் கையெழுத்து செய்ய வேண்டிய அவசியமில்லை.

(b) டைரெக்டர் உறுதி மொழி கூறவில்லை யென்று மாத்திரம் சொல்லுவது போதாது. இன்ஸ்பெக்டரானவர் டைரெக்டர்களைக் கொண்டு இரண்டு மூன்று கேஸுகளிலே விசாரணை பண்ணி உறுதிமொழி கூறும்படி செய்யவேண்டும்.

(f) ஜாமீன்தாரர்களின் எழுத்து மூலமான சம்மதி வாங்கப்படவில்லை யென்று சொல்வது போதாது. அப்படி வாங்காமல் விடுபட்டுப் போனதைச் சரிப்படுத்திக் கொள்ளவும்.

(h) பஞ்சாயத்தார் யாதொரு நடவடிக்கையும் நடத்தாதிருக்கிற பட்சத்திலே, இன்ஸ்பெக்டர் அந்த கிராமத்தை விட்டுப் போவதற்குமுன் பஞ்சாயத்தாரை நடவடிக்கை நடத்தும்படி கட்டாயப்படுத்தவேண்டும்.

XI. (b) பதிலனுப்பும்படி பார்க்கவும்.

(d) எல்லாக் கடிதங்களையும் ஒரு கூட்டத்திலே படிக்கும்படி பஞ்சாயத்தாருக்குத் திட்டம் பண்ணவும். அனுஷ்டானத்தில் பஞ்சாயத்தாருக்குக் கற்பிக்கும் விதமாக இந்தக் காரியத்தைச் செய்யவும்.

XII. (b) இன்ஸ்பெக்டரானவர் குறைந்தது ஒரு ரூபாயாவது டிபாஸிட்டாக வசூல் செய்யவேண்டும்; அப்படிச் செய்வதானது-பஞ்சாயத்தாருக்கு அவர்கள் செய்யவேண்டியது இன்னதென்று நன்றாய் விளங்கும்படி போதிப்பதாயும், கணக்குகளில் இன்ன விதமாய்ப் பதிவுகள் செய்யவேண்டுமென்பதை அவர்களுக்குக் கற்பிப்பதாயும் இருக்கும். டிபாஸிட்தொகை சேர்க்க முடியாத எந்த இன்ஸ்பெக்டரும் தம் உத்தியோகத்தை வகிக்கத் தகுதியுள்ளவரல்ல.

XIII. (a) சேமநிதி இருசால் செய்யப்படாமலிருந்த பட்சத்தில், சாத்தியமானால் அதை, இன்ஸ்பெக்டர் அந்த கிராமத்தை விட்டுப் போவதற்கு முன், இருசால் செய்யவேண்டும். கவர்ன்மெண்ட் கடன்கள், ஸென்ட்ரல் பாங்கிக்குச் செலுத்தவேண்டிய பணம் முதலியவைகளை வாபஸ் செய்வதற்கு இந்தப் பிரிவு பிரயோகப்படுகிறது.

XIV. (a) இந்தக் கூட்டத்தை எப்போதும் தவறாமல் நடத்துவதோடு, இன்ஸ்பெக்டரானவர் – தாம் செய்யும் யோசனையை ஸ்ப

ஷ்டமாயும் ஸ்வாஸ்யமாயும் இருக்கும்படி செய்ய வேண்டும்.

(c) இந்த வர்த்தமானியின் சிற்சில பாகங்களை வாசித்து அவைகளை வியாக்கியானம் செய்வதுடன், அப்படிப் படித்ததை அடுத்த கூட்டங்களிலே பூர்த்தி செய்யும்படி அக்கிராசனாதிபதி அல்லது காரியதரிசிக்குச் சொல்ல வேண்டும்.

(d) மாதவாரி ஸ்டேட்மெண்ட் காட்டப்படாமலிருந்தால், இன்ஸ்பெக்டர் கிராமத்தை விட்டுப் போவதற்கு முன் அதைக் காட்டும்படி செய்யவேண்டும். அவர் - அது காட்டப்படவில்லை யென்றாவது அதைக் காட்டும்படி பஞ்சாயத்தாருக்கு திட்டம் செய்திருக்கிற தென்றாவது சொல்வதோடு திருப்தி யடையக்கூடாது.

XV. சொத்து விஷயமான ஸ்டேட்மெண்டுக்கு ஒரு நகல் வைக்கும்படி சங்கத்தாருக்குச் சொல்லவேண்டும். அதற்கொரு நகலை ரெஜிஸ்ட்ராராபிஸுக்கு வருஷா வருஷம் அனுப்பவேண்டும்.

XVI. குறைவுகளைக் குறிப்பிடுவதுமாத்திரம் போதாது. சாத்தியமான மட்டில் அவைகளைச் சரிப்படுத்துவதற்கு இன்ஸ்பெக்டர் பிரயத்தனப்பட வேண்டும்.

XXIII. இன்ஸ்பெக்டர் ஒரு மெம்பருடன் கணக்குகளைப் படித்துப்பார்த்து, அந்த மெம்பரைப் பழக்கவேண்டும்.

XXIV. கூட்டங் கூடுவதற்குப் பொதுவான ஓர் இடம் சம்பாதிப்பதற்காக இன்ஸ்பெக்டர் முயற்சி செய்யவேண்டும். அடிக்கடி கூட்டம் கூடும்படி கிராமத்தார்களைப் பழக்கினாலொழிய, சங்கம் அபிவிருத்தி யடையாது.

XXV. நகலொன்று வைத்திருக்கப்படாத பட்சத்தில், இன்ஸ்பெக்டரானவர்-தாம் அந்த கிராமத்தை விட்டுப் போவதற்குமுன் நாளது தேதிவரையில் திருத்தப்பட்டபடிக்கான ஒரு நகலைத் தயார் செய்விக்கவேண்டும்.

XXVI. இந்தக் கேள்வி தப்பாய் அச்சிடப்பட்டிருக்கிறது. அது பின் வருமாதிரி இருக்கவேண்டும்:—

பஞ்சாயத்தார்களுக்கே மட்டுக்கு மிஞ்சி கடன்களை ஜாரிசெய்யும் தன்மை பஞ்சாயத்தாரிடத்தில் இருக்கிறதா? அப்படி ஜாரிசெய்யப்பட்ட நகல் கடன்களைப் பற்றிய விவரங்களையும் கொடுப்பதுடன், அந்த கடன் தொகைகள் சரியாய் உபயோகிக்கப்பட்டிருக்கின்றனவா என்று விவரமாய்க் கோதித்துப் பார்க்கவும்.

D. கூட்டுத்தொழிலின் இதர வகைகள்.

அடியிற்கண்ட காரியங்களுக்காக நடத்தப்படும் கூட்டுத்தொழிலின் இதர வகைகளைப்பற்றி ரெஜிஸ்ட்ரார் பிறகு பேசினார்:—

(a) பொதுவாய் விவசாய உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வது.

(b) பொதுவாய் விவசாயத்துக்கு வேண்டியவைகளை வாங்குவது.

(c) கூட்டுத்தொழில் முறைமையாய் எருவைச் சேகரித்து உபயோகிப்பது.

(e) விறகு தொட்டிகள் ஏற்படுத்துவது.

(f) கட்சிப் பிரிவுகளை நீக்குவது.

(g) கூட்டுத்தொழில் விஷயமாய்க் கடன்வாங்குவது சம்பந்தமான கொள்கைகளை போதிப்பதற்காக வகுப்புக்களுள்ள பாடசாலைகளை ஸ்தாபிப்பது.

(h) செடி நடுவது.

கடிதங்கள்.

5. சேலம் ஜில்லா அர்பன் பாங்க் லிமிடெட் என்னும் பாங்கின் காரியதரிசியானவர் முதல் சேலம் ஜில்லா மகாசபை ரிபோர்ட்டின் பிரதியொன்றை டாக்டர் உல்வ் (Dr. Wolff) என்பவருக்கு அனுப்பினார்; இவர் அதற்கு அடியிற்கண்டபடி பதில் எழுதியிருக்கிறார். அது வாசிப்பதற்கு மெத்தவும் ஸ்வாரஸ்யமாயிருக்கும்.

"உங்களுடைய சேலம் ஜில்லா கூட்டுத்தொழில் மகாசபையின் ரிபோர்ட்டை எனக்கு அனுப்பியதற்காக நான் உங்களுக்கு வந்தனம் அளிக்கிறேன்; இந்த ரிபோர்ட்டை வாசித்ததனால் எனக்கு மெத்தவும் சந்தோஷமுண்டாயிற்று. கூட்டுத்தொழில் முறைப்படி கடன் கொடுப்பது சம்பந்தமான விஷயங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்விக்க வேண்டுமென்று முதலில் எண்ணங்கொண்டவர் என்னுடைய சிநேகிதராகிய லார்ட் வென்லாக் துரை அவர்களே; இவர் சென்னை கவர்னராயிருந்த காலத்தில் அம்மாதிரி எண்ணங் கொண்டார். இது காரியத்துக்காக அவர் ஸர் எப். நிக்கல்ஸன் துரையை நியமித்தார். ஆனால், இந்த விஷயமானது காலஞ்சென்ற ஸர் சார்லஸ் பெர்னார்ட் துரையின் முயற்சியினால் அனுஷ்டானத்துக்கு வந்தது; அவரில்லாவிட்டால் அது வெகுசீக்கிரம் அனுஷ்டானத்துக்கு வராமலே போயிருக்கக் கூடும்.

நீங்கள் இம்மாதிரியான ஜில்லா மகாசபைகளை நடத்திக்கொண்டே வருவீர்களென்று எண்ணுகிறேன். ஜனங்களுக்கு இவ்விஷயத்தில் ஊக்கமுண்டாக்கி அதை நன்றாய்த் தெரிந்து கொள்ளும்படிச் செய்வதில் மகாசபைகள் மெத்தவும் பிரயோசனகரமாயிருக்கின்றன.

மேலும், கூட்டுத்தொழில் சம்பந்தமான காரியங்களை மேல்விசாரணை புரியும் விஷயத்திலும் அவைகளைச் சோதித்துப் பார்க்கும் விஷயத்திலும் நீங்கள் இவ்விதம் திடமனது கொண்டிருப்பதைப் பார்க்க எனக்குச் சந்தோஷகரமாக இருக்கிறது; இந்தப்படி மேல்விசாரணை புரிவதும் சோதித்துப் பார்ப்பதும் அத்தியாவசியமாய்ச் செய்யவேண்டிய காரியங்களே.

கடன் வாங்கும் விஷயந்தான் வெகுசீக்கிரம் இந்தியாவில் பிரதான விஷயமாயிருந்து வருமென்று நான் ஒத்துக்கொண்டபோதிலும், இதர வகையான கூட்டுத்தொழில்களையும் நீங்கள் கவனித்து வருவீர்களென்று எண்ணுகிறேன். ஆனால், சரக்குகளை உற்பத்தி செய்யும்விஷயம் பங்கீடு செய்யும் விஷயம் ஆகிய இவ்விரண்டும் மெத்தவும் பிரயோசனகரமாயிருக்கின்றன.

கடன் கொடுப்பதற்காக எவ்வளவு சீக்கிரமாய் பணம் கிடைத்ததோ அதையும் டிபாஸிட்டாகக் கட்டப்பட்டிருக்கும் தொகைகளையும் கவனிக்கும்போது சேலத்தில் ஏற்பட்ட முடிவுகள் ஸ்பஷ்டமாய் சந்தோஷகரமானவைகளே."

——(:o:)——

ஆராய்ச்சிக் குறிப்புகள்.

1909–1910-ம் வருஷத்துக்காக வெளியிடப்பட்ட மாகாண ரிபோர்ட்டுகளிலிருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ட்ராக்டுகள்.

மத்திய மாகாணங்கள்.

ஸர்க்காரைச் சேராத நபர்கள் புதிய சங்கங்களைப் பரிசோதனை பண்ணுவது.

1. ஜப்பல்பூரிலுள்ள புதிய சங்கங்களை யெல்லாம், விண்ணப்பங்கள் என்னுடைய ஆபிஸுக்கு வந்து சேருவதற்கு முன்னமே ஸெஹோரா (Sehora) பாங்கியார் பரிசோதனை செய்தார்கள். ஸர்க்காரைச் சேராதவர்களாய்த் திரவிய சகாயம் செய்து வரும் நபர்கள் இம்மாதிரி பரிசோதனை பண்ணுவது மெத்தவும் முக்கியமானதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்; உள்ளூரிலேயே யிருக்கும் ஒரு டைரெக்டர் சிக்கனக் கொள்கைகளைப்பற்றி பிரசங்கம் செய்யும் விஷயத்திலும், சங்கத்தில் சேர்த்துக் கொள்ளத்தகாத வீண்செலவு செய்பவர்களைப் புதிய சங்கத்தில் சேர்த்துக்கொள்ளாதபடி தடுக்கும் விஷயத்திலும் சக்தியுள்ளவரா யிருக்கிறார்; இது மாத்திரமே யல்லாமல் அவர் விசாரணை செய்வதனாலும், சிபாரிசுகள் பண்ணுவதனாலும் அந்தப் புதிய சங்கத்துக்கு ஆதியிலிருந்தே காரிய நிர்வாக நிலைமை ஏற்படுகிறது. இது விஷயமாய் ஸெஹோரா பாங்கியார் செய்யும் வேலையானது மிகப்பூர்த்தியானதா யிருக்கிறது: சந்தேகத்துக்கிடமான நபர்கள் விண்ணப்பம் செய்து கொள்ளும்போது அந்த விண்ணப்பங்களை அங்கீகரிக்கமாட்டோமென்று இந்த பாங்கியார் மறுக்கிறார்கள்; இது மாத்திரமே யல்லாமல், ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டு முற்றிலும் திருப்திகரமாயிராமலிருந்த சில சங்கங்களைத் திருத்தக்கூடியவர்களாயும் இருந்திருக்கிறார்கள். ஸெண்ட்ரல் பாங்கியார் இம்மாதிரி வேலையை ஏற்றுக் கொள்வதைக்குறித்து எந்த விதிகளிலாவது சட்ட திட்டங்களிலாவது பிரஸ்தாபம் எதுவும் இல்லை. இதர பாங்கியார் அந்த வேலையை ஏற்றுக்கொள்ளாததற்கு ஒருவேளை அதுவே காரணமாயிருக்கலாம். இது அவர்கள் செய்யவேண்டிய வேலையில்தான் அடங்கியிருப்பதாக அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்: அவர்கள் சரியான யோக்கியதை யுள்ளவர்களைத்தான் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அவர்களுடைய வேலையானது மெத்தவும் புகழத்தக்கதாயிருக்கிறதென்று ரெஜிஸ்ட்ரார் அபிப்பிராயப்படுகிறார்; ஏனென்றால், இது காரியத்துக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சிப்பந்திகள் ஜில்லா உத்தியோகஸ்தர்களுடைய சகாயத்தைப் பெற்றுங்கூட இந்த வேலையை அவ்வளவு பூர்த்தியாகவோ துரிதமாகவோ செய்ய முடியவில்லை யென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. இந்த வருஷம் முடிவானபிறகு நூதன ஹார்டா (Harda) பாங்கியார் இந்த வேலையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்: இப்போது முடிவு செய்யப்பட்டுவருகிற பெரிய சார்வா (Charva) சங்கத்துக்குப் பர்த்தியாக, பங்கு மூலதனமில்லாத அநேக சிறு கிராமச் சங்கங்கள் ஷெ பாங்கியைச் சேர்ந்த டைரெக்டர்களின் உதவியைக்கொண்டு இப்போது ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

நகரச் சங்கங்கள் கைத்தொழில்களுக்காகவும் வியாபாரங்களுக்காகவும் திரவிய சகாயம் செய்யும் ஏற்பாடு.

2. பாலாகாட்டிலுள்ள (Balaghat) ஹட்டா (Hatta) சங்கத்தார் குறித்த சில கைத்தொழில்களுக்கு திரவிய சகாயம் செய்வதற்கான ஏற்பாட்டை ஆரம்பித்திருப்பதற்காக நாம் சந்தோஷிக்க வேண்டியதாயிருக்கிறது; அவர்கள் காஸார் (Kasar) வகுப்பாருக்கு உதவிசெய்ய ஏற்றுக்கொண்டு, பித்தளை பாத்திர வியாபாரம் நடத்துவதற்காகவும் அந்த வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும் கூட்டுப் பொறுப்பின் மேல் அவர்களுக்குக் கடன் கொடுத்து வருகிறார்கள். இது சரியான வகையில் கூட்டுத்தொழில் நடத்துவதை உண்மையாய் மதிப்பதைக் காட்டுகிறது: இம்மாதிரியான ஏற்பாடுகளும் ஏற்பாடும் சகல சங்கங்கள் விஷயமாகவும் சகல வியாபாரங்கள் விஷயமாகவும் காட்டப்பட்டும் அனுசரிக்கப்பட்டும் மாத்திரம் வந்தால், மிகவும் உசிதமான ஒரு ஒழுங்கை நாம் சீக்கிரத்திலேயே அடையக் கூடும்; இந்த ஒழுங்கு என்னவென்றால், குயவர்கள் முதல் தட்டார் வரையில் ஒவ்வொரு வகுப்பாரும் பட்டணத்தில் மேல் விசாரணை புரிவதற்காக ஏற்பட்டுள்ள ஒரு பிரதான அதிகாரியிடமிருந்து தங்களுக்கு வேண்டிய பணத்தைக் கடனாக வாங்கிவருவதும், அப்படிப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களை ஒன்று சேர்க்கும் கட்டுப்பாட்டின் காரணமாக கடன் தொகைகளைச் செலுத்த வேண்டிய காலத்தில் திரும்பிச் செலுத்தி வருவதுமே.

சிறிய சங்கங்களை விசேஷமாய்க் கவனிப்பது.

3. இந்த ஒன்பது மாத காலத்தில் அர்பன் பாங்கிகளில் செய்யப்பட்ட வேலையைக் கவனிக்கும் போது, அது அடியிற்கண்ட மூன்று காரணங்களுக்காக விசேஷ ஸ்வாரஸ்யமுள்ளதா யிருக்கிறது: முதலாவது, கொதுவையின் பேரில் பணம்கொடுக்கவோ அல்லது பொதுவாய்ப் பண லேவாதேவி நடத்தும் வேலையைச் செய்து வரவோ இருந்த உத்தேசமானது குறைந்துகொண்டே வருகிறது; இந்த வேலையானது நஷ்டத்தை உண்டாக்கக் கூடிய வேலையென்று கம்மிட்டியார் அபிப்பிராயப்படுகிறார்கள்: தங்களுடைய சொந்த அனுபவத்தைக் கொண்டே சங்கத்தார் பணத் தொகைகளைப் பங்கீடு செய்வதும் வசூல் செய்வதும் கலபமாயிருக்கும் பொருட்டு மெம்பர்களைச் சிறு சிறு வகுப்புகளாகப் பிரிக்க யதார்த்தமாய் எத்தனம் செய்து வருகிறார்கள்: மூன்றாவது, காரிய நிர்வாக சம்பந்தமான விவராம்சங்கள் சாதாரணமாய்க் கண்டிப்பாக கவனிக்கப்பட்டு வருகின்றன; உண்மையான பரோபகாரமானது சரியான முறைப்படி பண லேவாதேவி செய்வதற்கு விரோதமா யிராதென்றும், ஆனால் தாட்சிண்யமாய் வேலை நடத்துவது கூடாதென்றும் முக்கியமாய் பாலாகாட், ஹட்டா, ஹரீடா இவைகளைச் சேர்ந்த நிர்வாக சபையார் காட்டி வருகிறார்கள்.

சிறு சங்கங்களின் குண விசேஷங்கள்.

4. இவ்விதமான சிறு சங்கங்களினால் கிராமத்தாருடைய ஒழுக்க முறையிலும் சிக்கன முறையிலும் உண்டாகும் அபிவிருத்தியைக் காட்டும் திருஷ்டாந்தங்கள் நாளாவர்த்தியில் வெளியாகி வருகின்றன. பாலாகாட்டிலே நாட்டுச் சங்கத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர், இன்னொரு நபர் தம்முடைய பெண்ணை விவாகம் செய்து கொடுக்க மாட்டேனென்று மறுத்ததற்காக அந்த நபருக்கு விரோதமாய்ப் பொய்யான ரிபோர்ட் கொடுக்கும்படி தம்முடைய அர்கம்பக்கத்தில் இருப்பவர்களிலொருவரைத் தூண்டினார்களாயினும், ஷெ சங்கத்தார் அந்த பெண்ணை நிலைநிறுத்தி விட்டார்கள்; அதே ஜில்லாவிலுள்ள இன்னொரு சங்கத்திலே அந்த சங்கத்தின் அதிகாரத்தை

பதியின் சரக்குகளை பணியர் ஒருவர் ஜப்திசெய்தார்; ஷி அக்கிராசனாதிபதி உள்ளூரில் தையல் வேலை செய்பவர்; மெம்பர்கள் தலைக்கு ஒரு ரூபாய் சந்தா செலுத்தி அந்தச் சரக்குகளை ஜப்தியினின்றும் விடுதலை செய்தார்கள்; மெம்பர்கள் செலுத்தின சந்தா தொகை பிற்பாடு அவர்களிடத்தில் கொடுத்துவிடப்பட்டது. அநேக சங்கங்களில் புதிதாய்ச் சேர்ந்த மெம்பர்கள் சங்கத்தின் காரியங்களை ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்து வருவதே அந்த சங்கம் விருத்தி அடைவதைக்காட்டும் அடையாளங்களில் இன்னொரு அடையாளமாகும்; (Piparia) பைபேரியாவிலும் (Harda) ஹர்டாவில் இப்போது ஏற்பாடாகிவரும் புதிய சங்கங்களிலும் அநேக விண்ணப்பதாரர்கள் மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கிறார்கள்; ஒருவரை மெம்பராகச் சேர்த்துக் கொள்ளும்போது கவனிக்கவேண்டிய தென்னவென்றால், அவருடைய நடத்தையே யொழிய அவருடைய செல்வமல்ல. சிறு சங்கத்திலுள்ள மெம்பர்கள் பிரதிதினமும் குளிர்ச்சியாயுள்ள சாயங்கால வேளையில் உள்ளூரிலிருக்கும் அரச மரத்தின் கீழாவது அதைப்போன்ற வேறே யொரு மரத்தின் கீழாவது சந்திக்கக் கூடுமாகையாலும் அந்தப்படி சந்தித்து வருகிறபடியாலும், இந்தப்படி நன்றாய்த் தெரிந்தெடுத்து மெம்பர்களைச் சேர்த்துக் கொள்வது சிறு சங்கத்தில் உண்டாகும் பிரயோஜனங்களில் ஒன்றாகும்: இதைவிடப் பெரிய சங்கங்களிலே மெம்பராய்ச் சேருவதற்கு விண்ணப்பம் கொடுத்துக் கொள்வதுடன் கடன் வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்படுகிற பட்சத்திலே, அப்படிப்பட்ட விண்ணப்பங்களைப் பஞ்சாயத்தார் பைசல் செய்ய வேண்டும்; பெட்டியில் பணமிருந்தால், பஞ்சாயத்தார் விண்ணப்பதாரர்களைச் சேர்த்துக்கொண்டு பணத்தைக் கொடுத்து வருகிறார்கள்; பெட்டியில் பணமில்லாத பட்சத்திலே, விண்ணப்பங்களைத் தள்ளிவிடுகிறார்கள்; சாதாரணமாய்ப் பெட்டியில் பணமில்லாமல் தான் இருக்கிறது; விண்ணப்பதாரர்களில் பாதிபேர் சபைகூடும் தினத்தன்று சபைக்கு வராதிருக்கும் பஞ்சாயத்து மெம்பர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தபோதிலும், சபைக்கு வந்திருக்கும் பஞ்சாயத்து மெம்பர்களுக்கு சிறிதும் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள்,

சங்கங்களின் வெவ்வேறான நோக்கங்கள்.

மேலும், பால ராட்டிலும் ஜபல்பூரிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற அநேக சங்கங்களின் நோக்கங்கள் வெவ்வேறாயிருக்கின்றன வென்பதைக் கவனிப்பது ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. அந்தந்த வருஷத்துக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளைச் சவதரித்துக் கொள்வதும், நடுத்தரமாயுள்ள கிருஷிகனுக்கு அத்தியாவசியமாய் வேண்டியிருக்கிற மூலதனத்தை ஏற்படுத்திக் கொள்வதுமே போதுமானதென்று ஆரம்பத்தில் திருப்தி அடையும் சங்கங்களைத் தவிர, நிலவிருத்தி செய்யும் நோக்கத்துடனும், பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்தும் நோக்கத்துடனும், ஈன ஸ்திதியிலிருக்கும் பாயக்காரியின் அந்தஸ்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடனும் ஆரம்பத்திலிருந்து வேலை செய்துவரும் சங்கங்களும் இப்போது ஏற்பட்டிருக்கின்றன; யாவரும் விரும்பத்தக்க இப்படிப்பட்ட கம்பெனிகள் தாமாகவே ஏற்பட்டிருக்கின்றன: இவைகளை ஏற்படுத்தும்படி உத்தியோகஸ்தர்கள் எவரும் தூண்டவில்லை.

உத்தியோகஸ்தர்களுடைய உதவியினால் நேரிடக்கூடிய அபாயங்கள்.

5. ஹோஷங்கபாத் (Hoshangabad) டெப்யுடி கம்மிஷனர் சங்கங்களை மட்டுக்கு மிஞ்சி மேற்பார்வையிடுவதனால் உண்டாகக் கூடிய அபாயம் இன்னதென்று அந்த ஜில்லா ரிபோர்ட்டிலே சொல்லுகிறார். இவ்விதமான அபாயத்தினால் உண்டாகும்

தீமைகளை எப்போதும் தெரிந்து கொண்டிருக்கிறார்களா வென்று நான் சந்தேகிக்கிறேன்; ஜில்லா அதிகாரிகள் மெம்பர்களோடு இவ்விஷயங்களைக் குறித்துப் பேசி அவர்களுக்கு ஆலோசனை சொல்லி சங்கத்துக்கு விசேஷமாய் உதவி செய்யலாம்; ஆனால், சங்கத்தை "மேற்பார்வையிடும்படி" தாசில்தாரருக்கு அனேகமாய் உத்தரவு செய்யக்கூடாது. மேற்பார்வை யிடுவதனால் பாக்கிதாரர்களின் ஜாபிதாக்களைப் பரிசோதிக்க வேண்டியதாயிருக்கிறது; அதனால், "செலுத்தவேண்டிய தொகையைத் திருப்பிச் செலுத்திவிடும்படி ஆலோசனை" சொல்ல வேண்டியதாயிருக்கிறது; தீர்வை வசூல்செய்யும் உத்தியோகஸ்தரே அந்தப்படி ஆலோசனை சொல்லுகிற நபராயிருக்கிற பட்சத்திலே, எத்தனை தடவை ஆலோசனை சொல்லவேண்டுமோ அதைவிட அதிகமாய்ச் சொல்லும்படி சங்கத்தைச் சேர்ந்த கம்மிட்டியார் அவரைக் கேட்பார்கள்; உத்தியோகஸ்தர்கள் பிரவேசிப்பதனால் பணம் வசூலாவதை மெம்பர்கள் பார்க்கும் போது, அவர்கள் தங்களுடைய கூட்டு உத்தரவாதத்தை மறந்து விடுவார்கள்.

கவர்ன்மெண்டார் நேரே திரவியசகாயம் செய்வதனால் தீங்கு உண்டாகக்கூடும்.

6. இந்த மாகாணங்களில் கவர்ன்மெண்டார் நேரே திரவிய சகாயம் செய்ய வேண்டிய அவசியமில்லை யென்பதும், அந்தப்படி செய்தால் ஸ்பஷ்டமாய்த் தீங்கு உண்டாகக் கூடுமென்பதும் நிச்சயம். ஒரு ஸென்ட்ரல் பாங்கியார் தங்களுடைய சொந்த பணத்தை நிர்வஹிக்கக்கூடிய சக்தி தங்களிடத்திலிருப்பதாக காண்பித்தவுடனே, அவர்களுக்கு விசேஷமாய்க் கடன் கிடைக்கக்கூடும்; ஏனென்றால், அந்த பாங்கியாரின் கீழ் வேலை நடத்திவரும் நாட்டுச் சங்கத்தார் பெரிய ஜாயின்ட் ஸ்டாக் பாங்கியார்களுக்காவது விசேஷமாய் லேவாதேவி நடத்திவரும் யோக்கியர்களாயுள்ள ஸாவ்கார்களுக்காவது முன்னமே தெரிந்திராத பல நபர்களைத் தங்களுடன் லேவாதேவி நடத்தும் ஸ்திதிக்குக் கொண்டுவருகிறார்கள். நடுத்தரமாயுள்ள ஜாயின்ட் ஸ்டாக் பாங்கியார் நடுத்தரமாயுள்ள பாயக்காரியுடன் எக்காலத்திலும் லேவாதேவி நடத்தக் கூடியவர்களாயில்லை; பெரிய ஸாவ்காருங்கூட தம்முடைய வேலையைப் பிரிவினை செய்துதான் அந்தப் பாயக்காரியுடன் லேவாதேவி நடத்தக் கூடியவரா யிருந்திருக்கிறார்; இம்மாதிரி செய்வதனால் பெருத்த நஷ்டமுண்டாவதற்கு இடமிருப்பதோடுங் கூட, சிற்சில சந்தர்ப்பங்களில் வாஸ்தவமாகவே நஷ்டம் உண்டாகியிருக்கிறது; இப்படிப்பட்ட லேவாதேவி நடத்துபவர்களின் பணமும் ஸாவ்கார்களின் பணமும் நஷ்டமுண்டாவதற் கிடமில்லாமல் பாயக்காரிகளுக்கு உதவும்படி செய்வதற்கு ஸென்ட்ரல் பாங்கியார் சுலபமான மார்க்கம் ஏற்படுத்துகிறார்கள்: ஆகவே, வேலையை விருத்திசெய்து வருவதற்காக அவர்களை உற்சாகப்படுத்தி வரவேண்டும். மேலும், கூட்டுத்தொழில் முறைப்படி லேவாதேவி நடத்துவதனால் பணம் பந்தோபஸ்தாயிருப்பதுடன், அதனால் சாதாரணமாய் லேவாதேவி தொழில் நடத்தி வருகிறவர்களுடன் போட்டியும் ஏற்படாது: கூட்டுத்தொழில் முறைப்படி லேவாதேவி நடத்துவதுடன் கவர்ன்மெண்டார் காலக்கிரமமாகக் கணக்குகளைத் தணிக்கை செய்து வருவார்களாகில், அதனால் கடைசியில் அந்த பாங்கியாரின் நாணயம் உறுதியாய் ஏற்படுமென்பதற்குச் சந்தேகமில்லை.

7. ஜப்பல்பூரிலே இன்னொரு வருவாய் ஆதாரமும் நேராகவல்லாமல் மற்றப்படி கிடைக்கும்படி செய்திருக்கிறது. ஸேட் ஜீவன்தாஸுக்குச் சொந்தமான சில கிராமங்களிலே சில பாயக்காரிகளின் கடன்கள் கடன் கொடுத்தவரின் சம்மதியின் மேல் நியாயமான அளவுக்குக்குறைக்கப்பட்டது. அந்த பாயக்காரிகளின் சங்கமொன்று

ஏற்படுத்தப்பட்டது; பழைய கடன்களைத் தீர்ப்பதற்காகவும் வருஷத்துக்குத் தேவை யான சாமான்களைச் சவதரித்துக் கொள்வதற்காகவும் புதிதாய்க் கடன்கள் கொடுக்கப் பட்டன. கடன் கொடுத்தவர் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கடன்தொகைகள் தன் பெயரில் ஸெண்ட்ரல் பாங்கியிலே டிபாஸிட்டாய் இருந்து வருவதற்குச் சம்மதிக்கிற பட்சத்திலே, இந்த ஏற்பாட்டினால் அநேக பிரயோசனங்கள் உண்டாகும்: தற்காலத் திலே இந்த வேலையானது பரிசோதனார்த்தமாய்ச் செய்யப்பட்டு வருகிறது; ஆனால், அதனால் விசேஷ பிரயோசனம் உண்டாகலாமென்று எதிர்பார்க்கக் கூடியதாயிருக்கி றது; அது சித்தியாகிற பட்சத்திலே, இதர சௌகார் நிலக்காரர்களுக்கும் அதை அநு ஷ்டிப்பது சௌகரியமாயிருப்பதாகக் காணப்படும்.

8. உத்தியோகஸ்தர்களாகவும் உத்தியோகஸ்தரல்லாதவர்களாகவுமிருந்து இவ் விஷயத்தில் வேலை செய்பவர்களின் ஜாபிதாவானது வருஷத்துக்கு வருஷம் பெரி தாய்க்கொண்டே வரும்: ஏனென்றால், இந்த வேலையானது, ஒருவர் ஒரு கடனை இதைச் செய்ய ஏற்றுக்கொண்ட பட்சத்திலே, வேண்டுமென்று விட்டுவிடக் கூடிய தல்ல.

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் இந்த முயற்சிக்கு எவ்விதம் உதவி செய்யலாமென்பது.

9. அநேக கிராமங்களிலே பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கணக்குகள் வைத்து வருவதோடுங்கூட, சங்கங்களின் வேலையிலே விசேஷ சிரத்தை பாரா ட்டியும் வருகிறார்கள். இம்மாதிரியே மற்ற இடங்களிலெல்லாம் வேலை நடத் தப்படுமென்று நான் நம்புகிறேன். ஏனென்றால், பள்ளிக்கூட உபாத்தியாயரான வர் வெகுசாய் தனக்கும் தெரியாமலே பிள்ளைகளின் தந்தைகளிடத்தில் விரு த்திசெய்து வருகிற சிக்கனக் கொள்கையை பிள்ளைகளுக்கு மாத்திரம் கற்பி த்து வருகிற பட்சத்திலே, அவருடைய முயற்சியினால் பொதுவாய் அவர்க ளுடைய நடத்தையும் ஒழுக்க முறையும் சீர்திருத்தமடையும்.

பர்மா.

கூட்டுத்தொழில் யூனியன்களின் பிரயோசனம்.

10. சட்டப்படி யூனியன்களானவை வரையறுக்கப்பட்ட பொறுப்பேற் றுள்ள நாட்டுச்சங்கங்களேயாகையால், இந்த ஆக்ட் திருத்தப்படுகிறவரை யிலே அப்படிப்பட்ட யூனியன்களை ரெஜிஸ்டர் செய்வதற்கு கவர்ன்மென் டார் பிரத்தியேகமாக அனுமதி கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஒரு சங் கத்தார் வாங்கின கடனுக்காக இன்னொரு சங்கத்தார் உத்தரவாதம் ஏற்பதாய் இப்படி பரஸ்பரம் உத்தரவாதம் ஏற்றுக்கொண்டு கட்டுப்பாடின்றி ஒன்று சேர்ந்துள்ள பலசங்கங்களிலிருந்து மேற்படி யூனியன்கள் உண்டாயிருக் கின்றன; இப்படிப்பட்ட யூனியன்களைப் போன வருஷம் மிஸ்டர் க்ரான்ட் என்பவர் முதலில் உண்டு பண்ணினார்; இவைகளைக் காட்டிலும் இன்னும் சரி யான முறைப்படி கூட்டுதொழில் நடத்தும் சங்கங்களுக்குள்ளே யூனியனாக ச்சேரும் எண்ணத்தை உண்டாக்கினதற்காக அவர் விசேஷமாய் சிலாகிக்கப் படுதற்கு உரியவராவார். அவைகள் ஸெண்ட்ரல் பாங்கிகளல்ல; ஆனால், ஜெர்

மனி தேசத்திலிருப்பதுபோல அவைகள் மேல்விசாரணை புரிவதற்காகவும் பார்வை யிடுவதற்காகவும் கூட்டுத்தொழில் கொள்கைகளைப் பரவச்செய்வதற் காகவும் ஏற்பட்ட சங்கங்களே. அவைகள் தங்களுடன் சேர்த்துக்கொள்ளப் பட்ட சங்கங்களின் நாணயத்தையும் ஆவசியகங்களையும் மதிப்பிட்டு, புது சங்கங்களை ரெஜிஸ்டர் செய்வதற்காக சிபாரிசுபண்ணி, கூட்டுத்தொழில் கோட்பாடுகளையும் முறைகளையும் விளக்கிக்காட்டி, மெம்பரல்லாதவர்களிட மிருந்து கடன் வாங்குவதற்கான ஈட்டை விருத்திசெய்து வருகிறார்கள். யூனியனில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சங்கத்தாரும் முந்தின வரு ஷத்துக்குள் தாங்களே கடன் வாங்கியிருக்கும் பணத்தின் உச்ச தொகைக்கு மேற்படாமல் அதே யூனியனில் அடங்கியிருக்கும் இதர சங்கங்களின் கடன் களுக்காக உத்தரவாதம் செய்கிறார்கள். இப்படி வரையறை செய்திருப்ப தால், விசேஷமாய்க் கடன் வாங்காதபடி ஒரு விதமான தடை தானாகவே ஏற் படுகிறது.

முன் செய்யப்பட்டதைப்போலவே, தனித்தனியாய்ச் சங்கங்களுக்கு நேரே பணம் கொடுக்கப்படுகிறது. யூனியனானது தன்னுடன் சேர்த் துக்கொள்ளப்பட்ட சங்கங்கள் வைத்திருக்கும் மூலதனத் தொகையில் 100 ரூபாய்க்கு நாலணாவுக்குக் குறையாமலும் எட்டணாவுக்கு மேற்படாமலும் அந்த சங்கங்களுக்கு வரிவிதித்து வாங்கி மேற்படி சங்கங்களைப் பார்வையிடு வதற்காகப் பிடிக்கும் செலவையும், காரிய நிர்வாக விஷயமாய் அதற்கே பிடி க்கும் செலவுகளையும் செய்து வருகிறது. யூனியன்களாகச் சேருவதற்கு நல்ல சங்கங்கள் சந்தோஷமாய் முன்வருவது ஏதோ ஒரு நவீனக் காட்சியாயிருக் கிறது.

அவைகள் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருந்தாலும், அவைகள் பேருக்கு மாத்திரம் ஏற்பட்ட சங்கங்களாயில்லை. யூனியனில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சங்கத்துக்காகவும் இரண்டு பிரதிநிதிகள் சேர்ந்து ஏற்பட்ட யூனியன் பொதுச்சபைக்கு நான் போயிரு ந்து அதன் நடவடிக்கைகளைக் கவனித்திருக்கிறேன்; அவைகள் கடனுக்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களைத் திறமையுடன் பரிசோதிக்கின்றன வென்றும் ரெஜிஸ்டர் செய்துகொள்வதற்காகவும் யூனியனில் சேர்த்துக்கொள் வதற்காகவும் செய்யப்படும் விண்ணப்பங்கள் திருப்திகரமாயிராவிட்டால் அப் படிப்பட்ட விண்ணப்பங்களை அவைகள் தாட்சிணியமின்றி தள்ளிவிடுகின்றன வென்றும் நான் உறுதியாய்ச் சொல்லுவேன்; அவைகளுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் சங்கங்கள் கணக்கு வைக்கும் விஷயத்தில் அவைக ளினால் உண்டாகும் பிரயோசனமானது ஏற்கனவே ஸ்பஷ்டமாய்த் தெரிந் திருக்கிறது.

ஒரே கிராமத்தில் ஒருவர் இன்னொருவருடன் நடத்தும் விவகாரங்களி லிருப்பதைக் காட்டிலும், ஒரு கிராமத்தார் இன்னொரு கிராமத்தாருடன்

நடத்தும் விவகாரங்களிலே கோழைத்தனமும் மனதிளக்கமும் குறைவாயிருப்பதுடன், வேலைத்திறமையும் அதிகமாயிருக்கிறது. தனித்தனியாயுள்ள சங்கங்களின் காரியங்களைக் காட்டிலும் யூனியன் காரியங்கள் அதிக வேலைத் திறமையுடன் நிர்வாகம் செய்யப்படக்கூடியவைகளாயிருக்கின்றன.

ஆகவே, யூனியன்கள் ஏற்படுத்துவது நிச்சயமாய் முன்னேற்றத்தைக் காட்டும் காரியமென்றே நான் அபிப்பிராயப்படுகிறேன்; போதுமானபடி திறமையாய் மேல் விசாரணை புரிவதற்காக ஏற்பாடு செய்யும் விஷயத்தில் உண்டாகும் கஷ்டமானது மேற்படி யூனியன்களினால் எவ்வளவோ நிவாரணையாகும்.

பர்மாகாரர் நிலத்தையே கைக்கொள்ளவேண்டுமென்னும் பிடிவாதம் உள்ளவரல்ல வென்பது

11. மேலும், ப்யின்மானா (Pyinmana) என்னும் இடத்திலும் இதர இடங்களிலும் பர்மாதேசத்து மூலதனக்காரர்கள் நிலத்தையே கைக்கொள்ள வேண்டுமென்னும் பிடிவாதம் உள்ளவர்களல்லவென்பதற்கும், பணத்தை வட்டிக்குப் போட்டு லாபம் சம்பாதிப்பதற்கான வகைகளில் நிலத்தை வாங்கும் விஷயத்தில் பணத்தை உபயோகிப்பதுதான் சரியான வகையென்று அவர்களுக்குத் தோன்றியிருந்தபடியால் அவ்விதமாகவே அவர்கள் இது வரையிலே தங்களுடைய பணத்தை நிலத்தின்மேல் போட்டு வந்தார்களென்பதற்கும் ஸ்பஷ்டமான அத்தாட்சி இருக்கிறது. நல்ல ஈடும் நியாயமான வட்டியும் கொடுப்பதாகச் சொல்லப்படுகிற பட்சத்திலே, ஐக்கியநாணயச் சங்கங்களைப் போல தங்களுக்குப் பிரத்தியட்சமாய்த் தெரிந்திருக்கும் எந்த ஸ்தாபனத்திலாகிலும் அவர்கள் தங்களுடைய பணத்தைப் போட்டுவைப்பார்கள். ஆகவே, மூலதனக்காரர்கள் அப்படிப்பட்ட மூலதனக்காரர்களிடமிருந்து நிலத்தை மறுபடியும் வாங்குவதற்காக மிகவும் நியாயமான ஷரத்துகளின்மேல் சங்கங்களுக்குத் திரவிய சகாயம் செய்து வருவதாக ஏற்படுகிறது; இது பார்ப்பதற்குச் சற்று விசித்திரமாயிருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களினால் நிலத்தின்மேல் விசேஷ பணம் போடுவது நீங்குவதோடுங்கூட, நிலமில்லாத விவசாயிக்கு பரிகாரமும் ஏற்படுகிறது. ஆகவே, ஐக்கிய நாணயச் சங்கங்கள் என்பவை இருபுறமும் கருக்குள்ள ஆயுதத்துக்கு ஒப்பாகும். மூலதனக்காரர் ஒருவர் (இதர ஆதாரங்களிலிருந்து இந்த சந்தர்ப்பத்தில் கிடைக்கும்) கிரயத்தொகையில் பாதியை இத்தனை வருஷங்கள் சேர்ந்த ஒரு கால அளவு கழிந்த பிறகு திருப்பிச் செலுத்தி விடும்படியாக கிரயத்துக்கு வாங்கும் சங்கத்திலே நிஷ்கரிஷையான டிபாஸிட் தொகையாக விட்டு வைக்கிறார்.

மேலும், ஸாகு (Sagu) என்னுமிடத்தில் ஒரு ஸெண்ட்ரல் பாங்கியை ஏற்படுத்துவதற்காக ஸாகுவிலிருக்கும் மூலதனக்காரர்கள் சொல்லும் முக்கிய காரணமென்னவென்றால், நிலமல்லாமல் வேறே வகையில் தங்களுடைய பணத்தைப் போட்டுவைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்காக என்பதே.

சிப்பந்திகள் முன்னிலும் அதிக திறமையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

பர்மாகாரரின் திரவிய நிலைமையையும் அவர்களுக்கு உண்டாகக்கூடிய லாபத்தையும் முன்னிலும் நன்றாய்த் தெரிந்துகொள்வது அதாவது அவருடைய நிலைமையையும் ஆவசியகங்களையும் முன்னிலும் நன்றாய் அறிந்துகொள்வது கூட்டுத்தொழில் ஏற்பாட்டைப் பலிதமாய் தேசத்திலே உண்டாக்குவதற்கு முக்கியமானதாக நான் எண்ணியிருக்கிறேன்; இந்த வழிகளில் அபிவிருத்தி உண்டாயிருப்பதாக நான் அபிப்பிராயப்படுகிறேன். சற்றறிந்த ஒருவர் ஐரோப்பாவில் கூட்டுத்தொழில் விஷயமாகப் பிரசுரமாயிருக்கும் மூன்று நான்கு புஸ்தகங்களைப் படித்து சுருக்கமாகக் கூட்டுத்தொழிலைப் பற்றிய முக்கியமான கோட்பாடுகளைக் குறித்து நன்றாய்த் தெரிந்துகொள்வது சுலபமாய் இருக்கிறது. ஆயினும், அவ்விஷயத்தை அனுபவரீதியாய் அவர் இன்னும் தெரிந்து கொள்ளாமலிருப்பார். அனுபவரீதியாய்க் கூட்டுத்தொழில் முறையை உபயோகிப்பது வேறே விஷயம்; அது இதைவிட அதிக கஷ்டமானதாயும் இருக்கிறது; அதன் நிலைமைகளும் அதற்கேயுரிய சந்தர்ப்பங்களும் கீழ் தேசத்தில் நன்றாய்த் தெரிந்துகொள்ளப்படவில்லை யாகையால் கீழ் தேசத்திலே அவ்வித கஷ்டமிருக்கிறதேயொழிய ஐரோப்பிய தேசங்களில் அந்தப்படி இராது. இந்த விஷயத்தை நன்றாய்த் தெரிந்துகொள்வதிலேயே சென்ற ஐந்து வருஷ காலத்தில் பெரும்பாகம் சென்றிருக்கிறது.

இப்போதுள்ள திரவிய நிலைமையைக் குறித்தும் அந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணமான விஷயங்களைக் குறித்துமட் விசாரிப்பதற்காகவும், இப்போது அதற்குள்ள சுபாவங்களைக் குறித்தும் இனிமேல் உண்டாகக்கூடிய அபிவிருத்திகளைக் குறித்தும் யோசிப்பதற்காகவும், கடன் பட்டிருக்கும் அளவையும் அதற்குரிய பற்பல காரணங்களையும் அதை நிவர்த்திப்பதற்கான பற்பல பரிகாரங்களையுங் கண்டு பிடிப்பதற்காகவும், ஒருவருடைய தப்பான கொள்கைகளைத் திருத்தி புதிதான கொள்கைகளை உண்டாக்குவதற்காகவும், கடன் கொடுப்பதற்காகத் தற்காலத்தில் அனுசரிக்கப்பட்டு வரும் ஏற்பாட்டைக் குறித்தும், தற்காலத்தில் பொன் நாணயத்தின் உபயோகத்தைக் குறித்தும், வட்டிக்குப் போட்டு வைப்பதற்காகக் கிடைக்கக்கூடிய பணம் தேசத்தில் இருக்கிறதா இல்லையா என்னும் விஷயத்தைக் குறித்தும் விசாரித்து அறிவதற்காகவும், பர்மாவில் வியாபார சம்பந்தமாகவும் விவசாய சம்பந்தமாகவும் உண்டான புரட்சியினால் ஏற்பட்ட திரவிய நிர்வாக விஷயமான பலன்களை இதர தேசங்களில் ஏற்பட்ட அப்படிப்பட்ட பலன்களோடு ஒத்திட்டுப் பார்ப்பதற்காகவும், இப்போதைய ஸ்திதிக்குக் கொண்டுவந்துவிட்ட பற்பல காரணங்களின் முக்கியத் தன்மையை ஒத்திட்டுப் பார்த்து நிதானித் தறிவதற்காகவும் காலம் கழிக்கவேண்டியது அவசியமாயிருந்திருக்கிறது.

கூட்டுத்தொழில் இதர இடங்களில் பிரயோசனகரமா[illegible]
தென்று உறுதியாய்ச் சொல்லி அஸத இங்கே பலவந்தமாய் [illegible]
னால் மாத்திரமே இந்த தேசத்தின் கடன் கொடுப்பதற்கான [illegible]
லே உண்மையாய் சித்திபெறக்கூடிய புரட்சி ஒன்று உண்டாய் விடக்கூடு
மென்று நான் எண்ணவில்லை. இது ஜெர்மனி தேசத்திலே சிறிது சிறிதாக
இயற்கையாய் உண்டான அபிவிருத்தியின் பலனாகவே பெரும்பாலும் உண்
டாயிருக்கிறது; இவ்விடத்திலோ அது ஒரு புரட்சியாக உண்டாக்கப்பட்
டிருக்கிறது. பிந்திய தசைகளில் இயற்கையாகவே சரியான முறைப்படி
அபிவிருத்தி உண்டாகக்கூடிய விதமாக இம்மாதிரி புரட்சி உண்டாகும்படி
பார்த்துக்கொள்ளவேண்டும். வியாதிஸ்தரின் வியாதி இன்னதென்று நாம்
அறியவேண்டியவர்களாயிருப்பதோடுங்கூட ஔஷதம் சவதரித்துக் கொடு
க்கவேண்டியவர்களாயுமிருக்கிறோம்; அதாவது, நாம் வைத்தியராயிருப்ப
தோடுங்கூட ஔஷத வியாபாரியாகவும் இருக்கவேண்டியதாயிருக்கிறது.

13. இந்த சங்கங்களைப்பற்றி நாம் பிரசங்கம் செய்யவேண்டிய ஏற்பாடு
சித்திபெறவேண்டுமானாலும் அதனாலுண்டாகும் முடிவுகள் பிரயோசனகரமா
யிருக்கவேண்டுமானாலும், குறித்த ஒரு பிரதேசத்திலே எப்படி பிரசங்கம்
செய்யவேண்டுமென்பதையும் எப்போது பிரசங்கம் செய்யவேண்டுமென்
பதையும் என்ன விஷயங்களைக் குறித்து பிரசங்கம் செய்யவேண்டுமென்
பதையும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். இந்த விஷயங்களிலே
நாம் மற்றவர்களைக்காட்டிலும் அதிக திறமையுள்ளவர்கள் என்பதற்குச் சந்
தேகமில்லை. ஆகவே, இந்த விஷயங்களைக் கேட்டுக்கொண்டிருப்பவர்
களைத் துண்டு பத்திரிகைகள் மூலமாகக் கவனிக்கும்படி செய்யமுடி
யாமல் போய்விட்டபடியால், அந்தப் பத்திரிகைக்குப் பார்த்தியாக விஞ்
விடை ரூபமாக இவ்விஷயம் வெளியிடப்பட்டுவருகிறது. இவ்விஷயக்
கோட்பாடுகளை மாத்திரம் கூறுவதற்குப் பார்த்தியாக திருஷ்டாந்தங்கள் மூல
மாகவும் உவமைகள் மூலமாகவும் இவ்விஷயம் விளக்கிக் காட்டப்படுகிறது.
இது சம்பந்தமாய் சகாயங்கள் செய்து கொடுப்பதைவிட கண்டிப்பான நியம
னைகள் ஏற்படுத்துவது மெத்தவும் பிரயோசனகரமாயிருக்குமென்று தெரிய
வந்திருக்கிறது; சகாயம் செய்து கொடுக்கவேண்டுமென்று சங்கங்களைக்
கேட்பதனால் உண்டாகும் அபாயங்கள் இன்னவை யென்று முன்னிலும் நன்
றாய்த் தெரியவந்திருக்கிறது.

14. சிப்பந்திகளின் ஞானமும் அவர்களுக்கு இருக்கும் திரவிய நிர்வாகப்
பயிற்சியும் வாஸ்தவமாய் விருத்தியாயிருக்கிறதென்று நான் எண்ணுகிறபடி
யால், அந்த அபிவிருத்தியை இந்த வருஷத்தில் நடந்த வேலையின் ஒரு முக்கி
யமான அம்சமாகவே எண்ணத் துணிந்தேன். இவ்விஷயம் சுலபமானதென்று
றாம் இதை எவரும் போதிக்கக் கூடுமென்றும் அநேகர் எண்ணுகிறபடியால்,
அபிவிருத்தி உண்டாவது மெத்தவும் விரைவாயில்லை யென்று [illegible]

படுவதை அவர்கள் வெளிப்படையாய்க் காட்டுகிறார்கள். நமக்கு வேண்டியது உண்மையான முறைப்படிக்கான கூட்டுத்தொழிலேயொழிய போலிக் கூட்டுத் தொழில் அல்ல; அதை சரியான முறைப்படி அனுசரித்து வரவேண்டுமானால், போதிப்பதற்கான சிப்பந்திகளும் மேற்பார்வை யிடுவதற்கான சிப்பந்திகளும் போதனை பெறுகிறவர்களைக் காட்டிலும் அனேக விஷயங்களை அதிகமாய்க் கற்றுக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறார்கள். சங்கங்கள் சித்திபெறாமல் போகிற எல்லாச் சந்தர்ப்பங்களில் அல்லாவிட்டாலும் அனேக சந்தர்ப்பங்களிலே அந்தப்படி சித்திபெறாமல்போனது நம்முடைய அனுபவக்குறைவினாலும் அறிவின்மையினாலுமே யொழிய, சங்கத்தின் மெம்பர்களின் புத்திப்பிசகினாலல்ல.

விஷயத்தைக் கற்றுக்கொள்வதற்குக் காலம் பிடிக்கிறது; நம்மைத் திறமையுடன் போதிக்கக் கூடியவர்களாய்ச் செய்துகொள்வதற்குச் சென்ற ஐந்து வருஷகாலத்தில் பெரும்பாகம் செலவாயிருக்கிறது. இனி மெத்தவும் துரிதமாக அபிவிருத்தி அடையக்கூடுமென்று நாம் அனேகமாய் இப்போது எண்ணலாம்.

சரக்குகளைப் டங்கீடு செய்வதற்காகக் கூட்டுத்தொழில் நடத்துவது.

15. கூட்டுத்தொழில் முறைப்படி மாண்டலேயில் நெல் விற்பனையும், மௌபன் போலீஸ் சங்கத்தில் அரிசி வாங்கினதும், விதைத் தானியமும் சரக்குகளும் வாங்கினதும் பிரயோசனகரமாய் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்த முயற்சியானது பர்மாவில் விசேஷமாய் அபிவிருத்தியா யிருக்கிறது.

16. எந்தக் கெடுதியை நிவர்த்திப்பதற்காகக் கூட்டுத்தொழில் முறை ஏற்படுத்தப்பட்டதோ அந்தக் கெடுதியானது இன்னும் சிறிதுகூட கூட்டுத் தொழிலினால் நிவர்த்திக்கப்படவில்லை யென்று சொல்லுவதும், ஐக்கிய நாணயச் சங்கங்களில் மெம்பராயிருப்பவர்களைத் தவிர மற்ற எவருக்கும் அந்தச் சங்கங்களினால் பிரயோசனம் எதுவுமில்லை யென்று எண்ணுவதும் வழக்கமாயிருக்கிறது.

இது சரியல்ல; பர்மா முழுவதுக்கும் 283 சங்கங்கள்தான் இருக்கின்றன; ஆயினும், சென்ற ஐந்து வருஷகாலத்திலே அனேக இடங்களில் இவ்விஷயத்தைக் குறித்துப் பிரசங்கம் செய்யப்பட்டிருக்கிறது; இதைக்குறித்த சமாசாரம் சுதேசபாஷா பத்திரிகைகள் மூலமாகப் பரவியிருக்கிறது; இதனால் ஜனங்கள் விஷயத்தைக் கிரகித்துக்கொள்ளும் நிலைமையை அடைந்திருக்கிறார்கள்; ஆகவே தன்முயற்சிக் கூட்டுத்தொழில் கொள்கையானது 283 கிராமங்களிலாகிலும் பட்டணங்களிலாகிலும் பரவி யிருப்பதைக்காட்டிலும் மெத்தவும் பெரிய விஸ்தீரணத்தில் பரவி யிருக்கிறதாகவே சொல்லக்கூடுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

வருஷ ஆரம்பத்தில் 4 சங்கங்கள்தான் இருந்தன; இப்போது ப்யின்மானு (Pyinmana) ஸப்டிவிழனில் 15 சங்கங்கள்தான் இருக்கின்றன. இந்தச் சங்கங்களின் காரணமாக ப்யின்மானுவிலுள்ள மூலதனக்காரர்களின் மனநிலைமையும் அவர்கள் அனுசரித்து வரும் ஏற்பாடு முழுவதும் மாறி வருகிறதென்றே சொல்லத்துணிவேன்.

சங்கங்கள் ஏற்பட்டிருக்கும் கிராமங்களிலே, செட்டிகள் வாங்கும் வட்டியை, சங்கத்தில் சேருவதாக பயமுறுத்துவதனால், (100-க்கு 6-வீதமாக, அதாவது) 8-அணா அளவுக்குச் சாதாரணமாய்க் குறைக்கக்கூடும்.

இந்தச் சங்கத்தினால் உண்டாகும் பிரயோசனம் நாடெங்கும் பரவியிருக்கிறதென்பது அனேக இடங்களிலே, உதாரணமாக சாங்கு (Chaungu) என்னுமிடத்திலே பர்மா தேசத்து ஸாவ்கார்கள் தீவிரமாய் எதிர்த்து வருவதனால் தெரியவருகிறது.

தனித்தனி சங்கங்கள்கூட பலமும் அந்தஸ்தும் பெற்று விருத்தி அடைந்து வருகின்றன; அனேக சங்கங்களுக்கு பாலதசை மாறி, அவை காரியங்களைப் பிரயோசனகரமாய் நடத்தக் கூடியவைகளாயிருக்கின்றன; மேலும், சென்ற பன்னிரண்டு மாதகாலத்தில் ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் நீங்கலாக மற்ற சங்கங்களில் மூன்றில் ஒருபங்கு சங்கியையுள்ள சங்கங்களாவது அதற்குமேற்பட்ட சங்கியையுள்ள சங்கங்களாவது அவைகளின் காரியங்களைத் தாமாகவே நிர்வகிக்கக் கூடியவைகளாய் பிருப்பதோடுங் கூட அந்தப்படியே நிர்வகித்தும் வருகின்றன; அவைகளின் கணக்குகளை வருஷவாரியில் தணிகை செய்வதைத் தவிர அவைகளை அதிகமாய் எவ்வளவும் நான் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. நான் மேலே சொல்லியிருக்கிறபடி, எந்த சங்கங்களினால் எனக்கு விசேஷ பிரயாசை உண்டாகிறதோ அந்த சங்கங்களை முடிவுசெய்து விடவேண்டும்; அவைகளும் அப்படியே முடிவுசெய்து விடப்படும். அந்தச் சங்கங்கள் சரியான கூட்டுத்தொழில் முறைப்படி அபிவிருத்தியடைய தவறிப் போகக் கூடுமென்பதி விருப்பதைப்போல, அவைகள் பாங்கியாருடனாவது இதர டிபாஸிட்தாரருடனாவது வைத்துக்கொண்டிருக்கும் கணக்குகளிலும் விவகாரங்களிலும் அவைகள் தவறிப்போகும் என்பதிலே அவ்வளவு பயமில்லை * * * * ஜெர்மெனி தேசத்திலிருக்கிற சங்கங்களிலுங்கூடக் கூட்டுத்தொழில் கோட்பாட்டை அனுசரிக்காமல் விட்டுவிடும் சுபாவம் இருக்கிறது; முக்கியமாய், ஷல்ஸ் (Schulze) சங்கங்களின் விஷயத்திலே கூட்டுத்தொழில் முறைப்படியிராத சங்கங்களாய் விடக்கூடிய சுபாவம் இருக்கிறது; இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கூட்டுத்தொழில் சம்பந்தமான சிறந்த கொள்கைகளை அனுசரித்துவரும்படிச் செய்வதில் விசேஷ ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியது அவசியம்.

* * * *

பர்மா தேசத்திலுள்ள ஜனங்களிடத்திலே வெளிப்படையாய்க் காட்டப்படாமல் உள்ளடங்கியிருக்கும் உற்சாகத்தைக் கவனிக்கும்போது, பர்மா

தேசத்தில் நடத்தப்படும் கூட்டுத்தொழிலானது கிரவியநிலைமை சம்பந்தப்பட்டமட்டிலே இப்போது கவனிக்கத்தக்க ஒரு அம்சமாயிருக்கிறதென்பதற்கும் விவசாயசம்பந்தமான கடனென்றும் நிலப்பராதீனமென்றும் இம்மாதிரியாய்த் தற்காலத்திலுள்ள தீங்குகளை நிவர்த்திப்பதற்குக் கூட்டுத்தொழிலினால் போதுமான பரிகாரம் ஏற்படுமென்பதற்கும் சிறிதும் சந்தேகமில்லை; ஆனால் இவ்விஷயத்தில் வழிகாட்டிகளாய் இருப்பவர்கள் நடத்திவரும் காரியங்களை அந்தப்படி நடத்திவரும்படி விடுவதும், கால்நடைகளைப் பரிபாலித்துவரும் விஷயத்தில் காலந்தப்பின முறைகளை அனுசரிப்பதும் விவசாயம் தவிர இதர கைத்தொழில்களை அனுஷ்டானத்துக்கு வாராதபடி செய்துவிடுவதும்போல பிரதிபந்தமாயிருக்கும் அம்சங்களை நீக்கியும், பொன் நாணயவழக்கம், தபாலாபிஸ் ஸேவிங்ஸ் பாங்கிகள் இவைகளைப் போன்ற தற்காலத்திய வியாபார சௌகரியங்களை ஏககாலத்தில் பிரயோசனகரமாய் உண்டாக்கியும் இவ்விஷயசம்பந்தமான சகலவித சஷ்டங்களையும் நியாயமாய் நிவாரணை செய்யவேண்டும். கூட்டுத்தொழிலோ நல்ல பிரயோசனம் கொடுக்கும் சிறந்த ஏற்பாடாகும்; ஆனால், இந்தக்கூட்டுத்தொழில் மூலமாக நிரந்தரமாக இருக்கக்கூடியதாய் மிகவும் சிறந்த முடிவுகள் ஏற்படவேண்டுமென்றால், அந்தக் கூட்டுத்தொழிலுடன்கூட மேலேகண்ட இதரவகையான ஸ்பஷ்டமான பரிகாரங்களையும் செய்யவேண்டும். இதனால் உண்டானதென்று உத்தியோகஸ்தர்களாலும் இதர நபர்களாலும் எனக்குத் தெரிவிக்கப்பட்ட சொற்ப பிரயோசனங்களுக்குள்ளே, இந்தக்கூட்டுத் தொழிலினால் சூதாட்டம் விசேஷமாய் நின்றுபோயிருக்கும் விஷயமும் ஒன்றே.

சாதாரணமாய் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக வரப்பற்றின விண்ணப்பங்களினின்றும் நிதானிக்கும்போது, இக்கூட்டுத் தொழில் காரணமாக தேசத்திலே ஜனங்களுக்குள் ஒத்துழைக்கவேண்டுமென்னும் விருப்பம் விசேஷமாய் உண்டாயிருக்கிறதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்; இந்த விருப்பமானது கூட்டுத்தொழில் வரையறையில்லாமல் விருத்தியாவதற்குக் காரணமாகும். அப்படி விருத்தியாக வேண்டுமென்றே நாம் மனப்பூர்வமாக கோரவேண்டியதாயிருக்கிறது: ஏனென்றால், கிராமத்தில் பொறுக்கியெடுத்தவர்களெல்லாம் சேர்ந்து ஏற்பட்டிருக்கும் இந்த சங்கங்களினால் இராஜாங்க சம்பந்தமாகவும் நல்லொழுக்க சம்பந்தமாகவும் உண்டான பிரயோஜனம் இவ்வளவென்று மதிப்பிடமுடியாது. மிகச் சிறந்த நபர்கள் நடத்தும் ஸ்தல சுய ஆட்சிக்கு இந்தச் சங்கங்களே மிகவும் சரியான ஆதாரங்களாயிருக்கின்றன.

17. சங்கங்களைச் சீர்திருத்தாமல் முடிவுசெய்து விடுவதற்குள்ள காரணங்கள் சுருக்கமாய் அடியிற்கண்டவைகளாகும்; இனி விசேஷ லாபம் கிடைக்குமென்னும் உத்தேசத்துடன் வியாபாரம் செய்யவேண்டுமென்று திருப்தியடையாத ஆசையும், பரஸ்பர நம்பிக்கையின்மையும்; சூதாடுவதற்கு முக்கியமான ஸ்தானமாயிருக்கிறதென்று விடாமல் பெயர் வந்திருப்பது; கிராமத்தில்

கட்சிப்பிரிவினைகள்; கௌரவம் பொருந்திய மனிதர்களும் அற்பர்களும் ஒன்று சேர்ந்திருப்பது; அனுபவரீதியாயல்லாமல் மட்டுக்கு மிஞ்சி சித்தாந்தத்தை ஒட்டியே பேசிவருவதனால் ஏற்படும் தொந்தரையும் முன்னே பணம் குறைவாயிருப்பதும், முக்கியமாய் வேண்டியது தன்முயற்சியே யன்றிக் கவர்ன்மென்டாருடைய சகாயமல்லவென்பதைத் தெரிந்துக்கொள்ளத் தவறிப்போவதும்.

18. மெம்பர்கள் அபோக்கியர்களாயிருந்ததாக எக்காலத்திலும் கண்டு பிடிக்கப்படவில்லை; பரோபகாரமாய் வேலை நடத்திவரக்கூடிய வரையிலே, அயோக்கியத்தனமாய் நடந்துகொள்வதற்கு வெகுசாய் இடமிருக்காது.

சீர்திருத்தம் செய்வதற்கு இடமிருப்பதோடுங் கூட அந்தப்படி செய்வது அவசியமாயு மிருக்கிறது.

19. சங்கத்தாரிடத்தில் இன்னும் இருந்துவருகிற ஒரு குறைவு என்னவென்றால், அவர்கள் கூட்டுத் தொழில் சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமலிருப்பதே. சில சங்கங்களிலே கம்மிட்டியார் மூலாதாரக் கொள்கைகளைத் தெரிந்து கொண்டிருந்தும், மெம்பர்கள் அந்த விஷயங்களைச் சாதாரணமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதில்லை. கையைக்பி (Kyaikpi) என்னும் சங்கத்தைப்போன்ற சில சங்கங்கள் ஒரே நபரால் நிர்வாகம் செய்யப்பட்டுவரும் சங்கங்களாயிருக்கின்றன. அப்படிப்பட்ட சங்கங்கள் சரியான கூட்டுத்தொழில் முறைப்படி ஏற்பட்ட சங்கங்களல்ல வென்பது பிரத்தியக்ஷம். சகல மெம்பர்களும் கூட்டுத்தொழில் விஷயங்களை நியாயமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமென்று, நான் அடுத்த வருஷத்திலே இன்னும் உறுதியாய்க் கட்டாயப்படுத்த உத்தேசிக்கிறேன். ஆயினும், வெகு சிலரே தங்களுடைய பொறுப்பு இன்னதென்பதையும் தங்களுடைய கிரேகிதர்கள் சேர்ந்து தங்களுக்காக ஈடுகொடுக்கிறபடியால் குறைந்த வட்டிக்குத் தங்களுக்குக் கடன் கிடைக்கிறதென்பதையும் தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்கள்.

இவ்விஷயத்திலே போதிக்கிறவர்களிடத்தில் எவ்வளவு பிசகு இருக்கிறதோ அவ்வளவு பிசகு போதனை பெறுகிறவர்களிடத்திலும் இருக்கிறது; முக்கியமான கோட்பாடுகளை எவ்வகைபாய் ஜனங்களுக்கு வெகு நன்றாய் உபதேசிக்கலாமோ அதையும், என்ன விஷயங்களைச் சொல்லவேண்டுமோ அதையும், என்ன விஷயங்களைப் பிற்பாடு சொல்லுவதற்காக நிறுத்திவைக்கவேண்டுமோ அதையும் அதாவது சுருக்கமாய்ச் சொல்லும்போது தொந்தரவு அதிகமில்லாமல் பிரயோசனம் விசேஷமாய் உண்டாகக்கூடியபடி எவ்விதம் செய்யலா மென்பதையும் சிப்பந்திகள் இப்போதுதான் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

கூட்டுத் தொழிலைக் குறித்த விஷயங்கள் நன்றாய்த் தெரியத்தெரிய சபைகளுக்கு ஜனங்கள் நாளாவர்த்தியில் அதிகமாய் வந்துகொண்டிருப்பார்கள். ஆகவே, சீர்திருத்தம் அடைவதற்கு இடமிருக்கிறது.

உத்தியோகஸ்தர்களுடைய அபிமானம்.

20. கூட்டுத் தொழில் முறைப்படி லேவாதேவி நடத்தும் விஷயத்தில் உத்தியோகஸ்தர்கள் காட்டிவரும் சிரத்தை அதிகமாய்க்கொண்டே வருகிறது. இதற்குமுன் செய்து வந்ததைப் போலத் தம்முடைய வேலையை முடித்து விடுகிற அல்லது தாம் செய்யவேண்டியதைச் செய்துவிடுகிற அதிகாரியானவர் அதனால் வெகுசாய் அதிக வேலைக்கு இடமுண்டாகலாமென்று அது விஷயமாய் சமுசயம் கொள்ளுகிறார். அதனால் இவ்விடத்தில் உண்டாகக்கூடிய பிரயோசனங்களையாவது இதர இடங்களில் உண்டாயிருக்கும் பிரயோசனங்களையாவது அவர் தெரிந்துகொள்ளக் கூடியவராயிருப்பதற்கு அவருக்கிருக்கும் கல்விப்பயிற்சி அனேகமாய்ப் போதாததாயிருக்கிறது. திரவியநிலைமையில் ஒரு புரட்சி உண்டாக வேண்டுமானால், உற்சாகம் தேவையாயிருக்கிறது; உற்சாகம் இல்லாத உத்தியோகஸ்தர்கள் கூட்டுத்தொழில் சம்பந்தமாய் உதவி செய்கிறவர்களோடு வெளித்தோற்றத்துக்கு மாத்திரம் சேர்ந்திருந்தாலும் சரி, உத்தரவின்படி சேர்ந்திருந்தாலும் சரி, அவர்கள் பிரயோஜனமற்றவர்களாயிருப்பதோடுங் கூட இடைஞ்சலாகவு மிருக்கிறார்கள்.

மிகவும் திறமையுள்ள உத்தியோகஸ்தர்களிட மிருந்து எனக்கு விசேஷ உதவி கிடைத்திருக்கிறது; இவ்விஷயத்தை ஜனங்கள் முன்னிலும் நன்றாய்த் தெரிந்துகொண்டு அதனால் உண்டாகும் பிரயோஜனங்கள் ஜனங்களுக்குப் பிரத்தியட்சமாய்த் தோற்றுமானால், அப்படிப்பட்ட அபிமானமும் ஒத்தாசையும் அதிகமாய்க்கொண்டு வருமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

உத்தியோகஸ்தரல்லாதவர்கள் சகாயம் பண்ணுவது.

உத்தியோகஸ்தரல்லாதவர்கள் இவ்விஷயத்தில் காட்டிவரும் சிரத்தையுங் கூட அதிகமாய்க்கொண்டே வருகிறது; கௌரவார்த்தமாய் சங்க ஏற்பாடு செய்யக்கூடியவர்கள் முன்வருவதைக்கொண்டு இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளலாம். அவர்கள் சாவகாசமும் நிஷ்கரிஷையான வரும்படியும் உடையவர்களாய், ஒரு பெரிய பிரதேசத்திலே சங்கங்களை ஏற்படுத்தும் விஷயத்தில் கௌரவார்த்தமாய் வேலை செய்யும் வகுப்பைச் சேர்ந்தவர்களல்ல; ஆனால், வேலை செய்யவேண்டியவர்களாயிருந்தும் சங்கத்தை ஏற்படுத்தும் விஷயத்தில் காலம் செலுத்திவர சித்தமாயிருக்கும் வகுப்பைச் சேர்ந்தவர்களாவார்கள்.

* * * *

அப்படிப்பட்டவர்கள் சங்கங்களை விசேஷமாய் ஏற்படுத்துவதில்லை; ஆனால், ஏற்படுத்தும் சங்கம் சரியானதாயிருக்கவேண்டும்; இந்த முயற்சியி

னால் இரண்டுவித லாபமுண்டாகிறது; அதாவது சங்கங்களின் சங்கியை அதிகமாவதும், வேலைசெய்யும் வகுப்பார்களுக்குள் கூட்டுத்தொழில் ஞானத்தைப் பரவச் செய்வதுமே.

(பைனான்ஷியல் கம்மிஷனருடைய அபிப்பிராயக் குறிப்புகளினின்றும் எடுக்கப்பட்ட எக்ஸ்ட்ராக்ட்.)

சங்கத்தின் போதனா சக்தி.

21. சங்கத்துக்கு வெகு தூரத்திலிருப்பவர்கள் கடன் கொடுக்கும் போது அவர்கள் ரெஜிஸ்ட்ரார் சங்க விஷயங்களை மேற்பார்வை யிடுவதையே முழுவதும் நம்பியிருக்கிறார்களென்று சொல்லப்பட்டு வருவதை பைனான்ஷியல் கம்மிஷனர் அங்கீகரிக்க இஷ்டப்படவில்லை. கடன் கொடுப்பவர்களுக்கு கூட்டுத்தொழில் ஏற்பாட்டிலேயே பிரதமத்தில் ஈடு ஏற்படுகிறதென்பதை அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்களென்று அவர் அபிப்பிராயப்படுகிறார். ரெஜிஸ்ட்ரார் மேற்பார்வையிடுவதனால், கடன் வாங்கின பணத்தை வீணே செலவழிப்பது நின்றுபோகமாட்டாது. அந்தப் பணத்தைப் பிரதிபலன் கொடுக்கும் காரியத்துக்காக உபயோகிக்கவேண்டியவர்கள் அந்தச் சங்கத்தாரே யொழிய வேறெவருமல்ல.

பஞ்ஜாப்.

22. இந்தக் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு இன்னொரு வழி என்னவென்றால், சங்கத்தாரே அவைகளைப் பார்வை யிடுவதற்காகப் பிடிக்கும் செலவை சந்தா மூலமாய்ச் செலுத்திவருவதே; அதமம் ஒரு ஸென்ட்ரல் பாங்கியாவது யூனியனாவது இது காரியத்துக்காக ஸப் இன்ஸ்பெக்டர் ஒருவரை நியமித்ததாக எப்போது ரிபோர்ட் செய்யக்கூடுமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். ஒரு ஸென்ட்ரல் பாங்கியார் இப்போது அவ்விதம் செய்யக்கூடிய ஸ்திதியில் இருக்கிறார்களென்று அபிப்பிராயப்படுகிறேன்; அடுத்த வருஷத்திலே குறைந்தது இரண்டு ஸப் இன்ஸ்பெக்டர்களாவது ஏற்படுத்தப்பட்டிருப்பார்களென்று நான் எண்ணுகிறேன்; இவர்களுக்காகப் பிடிக்கும் செலவைக் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிராது.

சுஹேகி (Chuheke) சங்கத்தார் செய்திருப்பது.

23. முந்தின ரிபோர்ட்டுகளில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சுஹேகி சங்கத்தாரிடத்தில், இந்த மாகாணத்திலுள்ள எந்தக் கிராமச் சங்கத்தாரிடத்திலாகிலும் இருக்கும் மூலதனத்தைக் காட்டிலும் அதி விசேஷமான மூலதனம் இப்போது இருக்கிறது; அதாவது, அவர்கள் 52,180 ரூபாய் மூலதனம் வைத்திருக்கிறார்கள்; இதில் 42,900 ரூபாய் அநேகமாய் லாவ்கார்களிடத்திலிருந்து கிடைத்த டிபாஸிட்டாகும். இயற்கையிலே சுஹேகி என்பது அரா

யின்ஸ் (Arains) என்பதைச் சேர்ந்த ஒரு சிறுகிராமம்; (இந்த பாங்கானது 20 ரூபாய்க்குச் சற்று குறைந்த மூலதனத்துடன் வேலைசெய்ய ஆரம்பித்தது); அல்லாராசியைப்போன்ற இரண்டொரு மெம்பர்களும், முக்கியமாய் அக்கிராசனாதிபதியாகிய ஹபிஸ் நூர் மகமத் என்பவரும், பாட்வாரி மிகிராம் என்பவரும் உற்சாகத்துடன் எடுத்துக்கொண்ட கஷ்டத்தினாலும், அவர்கள் ஜனங்களுக்கு உண்டாக்கின நம்பகத்தினாலுமே இந்தச் சங்கம் சித்தி பெற்றிருக்கிறது மேலும், இந்தப்பாங்கியிலே வித்தியா விஷயமாகவும் நிதி வைக்கப்பட்டிருக்கிறது; ஏழை ஜமீன்தாரர்களின் பிள்ளைகளில் சிலர் அக்கம்பக்கத்திலுள்ள மத்தியதர கல்விச்சாலைக்குப்போய்ப் படித்துக்கொண்டு வருவதற்கு ஒத்தாசைபாக ஷை நிதியிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது; மேலும், இந்தபாங்கியில் ஒரு மத்திபஸ்த பஞ்சாயத்தும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; அல்லாமலும், இன்னும்அனேக வகையாகவும் அந்த பாங்கியினால் அதன் மெம்பர்கள் பிரயோசனம் அடைந்திருக்கிறார்கள். மேலும், இந்த பாங்கியார் இதர கிராமச்சங்கங்களுக்கும் பணம் கடன் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு சிறந்தவேலை முழுவதும் செய்ததற்காகப் பிடித்த செலவோ மெத்தகுறைவு; அதாவது ரூபாய் 2—6—3.

இந்தியாவில் குவிந்துகிடக்கும் செல்வத்தை வருவிப்பது.

24. மெம்பரல்லாதவர்களால் கட்டப்படும் டிபாஸிட் தொகைகளை, "மெம்பரல்லாதவர்களிடமிருந்து வாங்கின கடன் தொகைகள்" என்னும் தலைப்பின்கீழ் காட்டியிருக்கிறது; இந்தத் தலைப்பு தகுதியான தலைப்பல்ல; ஷை டிபாஸிட்டுகள் உயர்ந்த வருமான ஆதாரமா யிருப்பதோடுங்கூட ஒரு பாங்கியார் அடைந்திருக்கும் கீர்த்தியும் நற்பெயரும் இவ்வளவென்று காட்டுவதற்கு மற்றவைகளைக் காட்டிலும் சரியான சாதனமாயும் இருக்கின்றன. இவ்விதமான வருமான ஆதாரவிஷயத்தை ஜலந்தர் என்னும் பிரதேசத்திலுள்ளவர்கள் அதிவிசேஷமாய்க் கவனித்திருக்கிறார்கள்; இந்தப் பிரதேசத்திலே லாவ்கார்களைத் தவிர, ஆஸ்ட்ரேலியா முதலிய இடங்களில் குடியேறி யிருக்கும் மெம்பர்களின் சிநேகிதர்களும் பந்துக்களுங்கூட தாங்கள் மிகுத்திவைத்திருக்கும் தொகைகளைக் கிராம பாங்கிகளில் போட்டுவைக்கிறார்கள். பூமியில் புதைத்து வைத்திருந்து பூஞ்சு பிடித்துப்போயிருந்த பல ரூபாய்ப் பைகள் நான் அந்தப் பாங்கியைப் பரிசோதனை செய்தகாலங்களில் பாங்கிக்குக் கொண்டு வந்து டிபாஸிட்டாகக் கட்டப்பட்டது ஒருவிசேஷமல்ல; இந்தியாவில் குவிந்துகிடக்கும் செல்வத்தை நாம் இவ்விதமாய் வருவித்துக் கொள்ள ஆரம்பம் செய்துவருகிறோமென்றே தோன்றுகிறது.

சங்கங்களினால் விவசாயம் அபிவிருத்தியாயிருக்கிறது.

25. அதுபோலவே 5 லட்சம் ரூபாய் விவசாயத்துக்குப் பிரதம அவசியமாயிருக்கிற விவசாய காரியங்களுக்கான கால்நடைகளுக்காகச் செலவழி

க்கப்பட்டிருக்கிறதென்று நாம் கணக்கிட்டுச் சொல்லலாம். இதிலிருந்து, டாங்கிகள் இருக்கும் கிராமங்களில் விவசாய விஷயமாய் உண்டான அபிவிருத்தி கொஞ்சநஞ்ச மல்லவென்று ஊகிக்கலாம்; வாஸ்தவத்திலும் இப்படித்தான் நடந்திருக்கிறது. விவசாயமானது முன்னிலும் அதிக ஜாக்கிரதையாய்ச் செய்யப்பட்டு வருகிறது; முன்னிலும் உயர்ந்த வகையான தானியங்கள் விதைக்கப்படுகின்றன; எருவிடுவதற்கு முன்னிலும் அதிகமான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. விவசாயம் அபிவிருத்தியாக வேண்டுமானால் திரவிய ஸ்திதியிலும் அபிவிருத்தி உண்டாகவேண்டியது அவசியமென்று நான் உள்ளபடியே நினைக்கிறேன். எந்தக் காரியத்துக்கும் பணம் வேண்டியிருக்கிறது; விவசாயிகள் தாங்கள் செய்யும் சீர்திருத்தங்களின் லாபத்தைத் தாங்களே அனுபவிப்பார்களென்று நிச்சயமாய் ஏற்படவேண்டுமென்றால், அவர்களுக்குப் பணம் இருக்கவேண்டியது இன்னும் அத்தியாவசியகமாகும்.

26. கடன் வாங்கப்படும் தொகைகளில் 100 க்கு 12 பாகம் ஸர்க்கார் தீர்வை செலுத்துவதற்காக வாங்கப்படுகிறதென்று காணப்படும். சுவல்ப நிலத்துக்குடையவர்கள் ஸர்க்கார் கிஸ்திபை வாய்தாப்படி செலுத்தவேண்டுமானால் தங்கள் மாசூலில் ஒரு பாகத்தை அவசர அவசரமாய் விற்கும்படி நேரிடுவது வழக்கமாயிருக்கிறது. அவர்கள் கிஸ்திக்காக வேண்டிய பணத்தைத் தங்கள் பாங்கியிலிருந்து கடன்வாங்கி விலைவாசிகள் இன்னும் அனுகூலமாயிருக்கும்காலத்தில் அதைத் திருப்பிச்செலுத்தக் கூடியதாயிருந்தால் அவர்களுக்கு மிகவும் பிரயோசனகரமாயிருக்கும்.

கடன் வாங்குவதிலும் கொடுப்பதிலும் எந்தக்காரியத்துக்காக அப்படி வாங்குவதனாலும் கொடுப்பதனாலும் அதிக லாபமுண்டாகுமென்பதைத் தீர்மானிப்பதில் அத்தியந்தம் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். பழைய கடனைத் தீர்த்தவிட்டு அதன்மூலமாய் வட்டிப் பளுவிலிருந்து தப்பித்துக் கொண்டு வேலையாரம்பிப்பது நல்லதா அல்லது முன்னிலும் நல்ல விளைச்சல் கிடைப்பதற்காகப் புதிதாய் ஒருஜதை மாடுகள் வாங்கி வேலை ஆரம்பிப்பது நல்லதா என்று தீர்மானிப்பதற்கு விஷயங்களைச் சீர்தூக்கி நிதானிக்கும் சக்தி அதிகமாய் வேண்டியிருக்கிறது.

சங்கங்களும் வியாஜ்ஜியங்களும்.

27. நெடுங்காலமாய் ஏற்பட்டிருக்கும் சங்கங்களுள் பெரும்பான்மையானவற்றிலே வழக்குகளைத் தீர்மானிப்பதற்காக நிர்வாகக் கமிட்டியார்கள் பஞ்சாயத்தாக ஏற்பட்டிருக்கிறார்கள். ஆயினும், கிராம பாங்கிகள் ஏற்பட்டிருப்பதால் வியாஜ்ஜியங்கள் எம்மட்டிலும் குறைந்து போயிருக்கிறதென்று காட்டுவதற்கு என்னிடத்தில் கணக்கு விவரங்கள் எவையும் இல்லை.

28. * * * ஆனால் அநேக ஸாவ்கார்கள் கிராம பாங்கிகளிலே பணம் டிபாஸிட் செய்திருக்கிறார்கள்; அந்த பாங்கிகள் விஷயமாய் அவர்களுக்கு துவேஷம் இருப்பதாய்த் தோற்றவில்லை.

உத்தியோகஸ்தர்களின் அபிமானம்.

இந்த முயற்சியில் உத்தியோகஸ்தர்கள் காட்டிவரும் சிரத்தை விரைவாய் அதிகரித்து வருகிறது. அவர்கள் செய்யும் சகாயம் எப்போதுமே மதிக்கத்தக்கதா யிருந்தாலும் ஒரு ஜில்லாவில் இது விஷயமான வேலை புதிதாய் ஆரம்பிக்கப்படும்போது அந்த சகாயம் அத்தியந்தம் மதிக்கத்தக்கதா யிருக்கிறது.

வங்காளம்.

குமாஸ்தாக்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சங்கங்கள்.

29. குமாஸ்தாக்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சங்கங்களின் சங்கியை கிரமக்கிரமமாய் விருத்தியாய் வருகிறது; இந்தச்சங்கங்களைச் சேர்ந்த மெம்பர்களுக்கு இவைகளால் மெத்த பிரயோஜனமுண்டென்பதற்கு எவ்வித சந்தேகமும் கிடையாது. ஸர்க்கார் ஆபிஸ் குமாஸ்தாக்களும் வர்த்தக கம்பெனிகளின் குமாஸ்தாக்களும் அநியாயவட்டிக்கு அடிக்கடி ஸாவ்கார்களிடத்திலிருந்து கடன் வாங்குகிறார்களென்பதும், ஆகையால் அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திசெய்யவேண்டி யிருக்கிறதென்பதும் எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே. ஆயினும் இவ்விதமான பாங்கிகளினால் லாபம் உண்டாகவேண்டுமானால் அவைகளின் மூலதனம் துரிதமாய் விரிவாகத்தில் புரண்டு கொண்டேவர வேண்டும்; ஆகவே அந்த பாங்கிகளில் லேவாதேவி செய்கிறவர்களின் சங்கியை அதிகமாயிருக்கவேண்டிய தவசியம்.

ஏராளமான ஈவுத்தொகைகள் நிர்ணயிப்பதனால் உண்டாகும் அபாயங்கள்.

30. இந்தச் சங்கங்களின் சம்பந்தமாய்ச் சில குறைபாடுகளும் அபாயங்களும் இருப்பதனால் அவைகளை மர்மமாய் வைக்காமல் வெளிப்படையாய் எடுத்துச் சொல்லிவிடுவது நலமாகும். வெகுகாலமாய் ஏற்பட்டு விருத்திமுகம் காட்டிவரும் சில சங்கங்களைச் சேர்ந்த மெம்பர்களுக்குள்ளே வியாபார முறையைஅனுசரித்து லாபம் சம்பாதிக்கும் சுபாவம் காணப்படுகிறது; கூட்டுத்தொழிற் கோட்பாடுகளைப் புறக்கணித்து மெத்த அதிகமான ஈவுத்தொகைகளை வாடுத்தன்மையில் இந்த சுபாவம் வெளிப்படுகிறது. இப்படி நேரிடாமற்படி தடுப்பதற்குத் தகுந்த ஒரே சாதனம் என்னவென்றால், சகாயச் சட்டங்களில் கண்ட குறிப்பிட்ட ஒரு விதத்துக்கு மேற்படாமலிருக்கும்படி ஈவுத்தொகைகளை வரையறை ஏற்படுத்துவதேயாகும். கடன்வாங்கப்படும் தொகைகளை எந்தச் காரியங்களுக்காக உபயோகிக்கப்படுமென்று சரியாய் விசாரிக்காமலே கடன்கொடுப்பது இன்னொரு பெருத்த அபாயமாம். அப்படி விசாரிக்காவிட்டால், அநுகூலமான வட்டிவிதத்தின்பேரில் கடன்கிடைப்பது சுலபமாயிருப்பதனால், மெம்பர்கள் விசேஷமாய்க் கடன்படுவதற்கு ஆர்வமுண்டாகிறதென்பது யாவர்க்கும் தெரிந்ததே.

ஆயினும் இதுவிஷயமாய் நிர்வாகக்கம்மிட்டியார் கொஞ்சங்கூட கவனம்செலுத்துவதாகத் தோற்றவில்லை; கடன்வாங்குகிறவர்கள் தாங்கள் இன்ன காரியத்துக்காக அந்தக்கடனை வாங்குகிறோமென்று குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று அநேக விஷயங்களில் ஷை கம்மிட்டியார் அவர்களைக் கட்டாயப்படுத்துவதுமில்லை. சில சங்கங்களிலே ஐவேஜு விருத்தியானது காரணமாகவிசேஷ கடன் தொகைகள் கொடுக்கும் சுபாவமும் மேலிட்டிருக்கிறது.

31 கேலார் யூனியன்.—சேர்த்துக்கொள்ளப்பட்ட சங்கங்களின் வேலையை மேற்பார்வையிடும் காரியம் திறமையாய் நடத்தப்பட்டிருக்கிறது. சேர்த்துக்கொள்ளப்பட்ட சங்கங்கள் ஒழுங்காய் வேலைசெய்து வருவதிலும், அவைகளைச்சேர்ந்த மெம்பர்கள் கூட்டுத்தொழிற் கோட்பாடுகளை முன்னிலும் அதிகமாய்க் கிரஹித்துவருவதிலும் ஷை யூனியனால் உண்டான பிரயோஜனம் தெரியவருகிறது. கம்மிட்டி மெம்பர்களில் ஒருவரும் ஸூபர்வைஸர்களில் ஒருவரும் – சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சங்கத்தின் பொதுக்கூட்டத்திலும் போயிருக்கும்படி ஷை சங்கங்களின் கடைசியான பொதுக்கூட்டத்தில் அனுப்பப்பட்டார்கள். பார்வையிடும் வேலையைக் குமாஸ்தாமாத்திரமே செய்வதில்லை; அக்காரியத்தைச் செய்வதற்காக கம்மிட்டி மெம்பர்கள்கூட அடிக்கடி வெளியே புறப்பட்டுப்போகிறார்கள். ஜனங்கள் தங்கள் வழக்குகளுக்கு மத்தியஸ்தம் செய்துகொள்வதற்காகக்கூட இந்த யூனியனுக்குப் போகிறார்கள். ஒரு தடவை நிலவிஷயமாய்ச் சிக்கான ஒருவழக்கை ஷை யூனியன் பஞ்சாயத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். இன்னொரு தடவையில், அவர்கள் ஒரு குடும்பவழக்கைத் தீர்மானம்செய்தார்கள்; அன்றியும் சச்சரவு பட்டுக்கொண்டிருந்த இரண்டு சகோதரர்களின் நிலபாகப் பிரிவினையை ஒரு பஞ்சாயத்துச் சபையார் சமாதானமாய் முடிவுசெய்தார்கள். மேற்படி யூனியன் சபையார்வழக்கம்போல் ஆடம்பரமில்லாமல் அடக்கமாய் வேலைசெய்து பற்பலவழிகளில் தம்மால் அனுகூலமுண்டாகும்படி செய்திருக்கிறார்கள்.

32. பங்கி தோம்பாரா யூனியன் (கடகம்). * * * யூனியன்சபையார்கள் தங்கள் சபைகள் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக விண்ணப்பங்கள் அனுப்பிக்கொள்வதற்குமுன்னே, ஜாக்கிரதையாய் விசாரணை செய்யப்பட்டது. பிரதி டைரெக்டருக்கும் அவருக்கு அக்கம்பக்கத்திலுள்ள புதிய சங்கங்களைக் குறித்து அந்தந்த இடங்களில் விசாரித்தறியும்படியான வேலை ஒப்புவிக்கப்பட்டது. அவர்கள் அனுப்பின ரிபோர்ட்டுகளில் சிலவற்றை நான் படித்துப்பார்த்ததில், அவர்கள் கேவலம் சூத்திரப்பாவைபோல் விசாரணைசெய்யவில்லையென்று தெரிந்துகொண்டேன். அவர்கள் மெம்பர்களாய் இருக்கத்தகாதவர்களை நீக்கியும், கிராமத்தில் யோக்கியர்களாயும் கடன்தீர்க்கச் சக்தியுள்ளவர்களாயும் இருப்பவர்களைச் சேர்த்துக்கொண்டும் இந்தவிதமாக சபையில் மெம்பராவதற்கேற்ற ஒழுங்கைப் பலவிஷயங்களில் மாற்றியமைத்தது மல்லாமல், மெம்பர்களின் பூஸ்திதிகளையும் கடன்களையும் குறித்த ஸ்டேட்மெண்டையும்

திருத்தம் செய்தார்கள். * * * சேர்மனானவர் சுற்றுப்பிரயாணம் செய்து சங்கங்களைப் பார்வையிட்டுவருகிறார்; மற்றப் பஞ்சாயத்தார்களும் அவ்விதமே செய்துவருகிறார்கள். இதுவிஷயத்தில் அவர்களுக்குள்ள ஆவலினால் யூனியன் நல்ல ஸ்திதிக்கு வரக்கூடுமென்று ஊஹிக்கலாம்.

தக்கி (Taki) சங்கம்.

33. தக்கி சங்கம் ஏற்பட்டு ஆறுமாதகாலமேயாயிருந்தாலும், அது இந்த மாகாணத்திலிருக்கும் சிறந்த ஸ்தாபனங்களில் ஒன்றாய்விட்டது. ஜமீன்தார் முதல் எல்லாவகுப்பு ஜனங்களும் இதில் மெம்பர்களாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். மேலும் மெம்பர்களிடத்திலிருந்தும் மெம்பர்களல்லாதவர்களிடத்திலிருந்தும் ஒரேசீராய் டிபாஸிட்டுத் தொகைகள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. ஜனங்கள் பாஸிர்ஹாட் போஸ்ட் ஆபிஸிலும் ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிலும் சேர்த்துவைத்திருந்த தொகைகளை இந்தசங்கத்தில் டிபாஸிட்டாகக் கட்டிவைப்பதற்காக வாபஸ் பெற்றுக்கொண்டதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. அக்கம்பக்கத்தில் புதிய சங்கங்களை ஏற்படுத்துங் காரியத்தையும் ஷை சபையார் ஏற்றுக்கொண்டிருப்பதனால், அவர்கள் செய்த முயற்சியினால் இரண்டு புதிய சங்கங்கள் உண்டாயிருக்கின்றன.

கேலார் பிரதேசத்திலுள்ள சங்கங்கள் ஐரோப்பியச் சங்கங்களை மிஞ்சி யிருக்கின்றன.

34. கேலார் பிரதேசத்திலே 18 சங்கங்கள் இருக்கின்றன; இவைகளெல்லாம் கேலார்-பலராம்பூர் யூனியனில் சேர்ந்தவை. இந்த பிரதேசமே வங்காளத்தில் சிறந்ததாயிருக்கிறது. இதிலுள்ள சங்கங்களில் நடக்கும் வேலையானது ஐரோப்பாவிலுள்ள சங்கங்களின் வேலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிரேஷ்டமாகவே இருக்கிறது. இந்த சங்கங்களில் எதிலும் ஒரு தனி மெம்பருக்கே சர்வாதிகாரம் இடையாது. அங்கங்குள்ள ஜனங்கள் இந்த சபைகளில் நம்பிக்கை வைத்து, தங்கள் பணத்தை பந்தோபஸ்தாக வைத்து வைப்பதற்குச் சௌகரியமான இடமென்று அவைகளைப் பெரிதும் மதித்து வருகிறார்கள். வட்டிக்குக் கடன்கொடுத்து ஜீவிப்பவர்களின் வியாபாரம் அநேகமாய்த் தொலைந்து போய்விட்டது. அது ஒரு பிரதான ஜீவனோபாயமாயிருந்ததும் இந்தப் பிரதேசத்திலே நின்றுபோய் விட்டது. கிராமவாசிகளுக்கு இந்த சங்கங்களால் உண்டான பிரயோஜனத்துக்கு விளக்கிக்காட்டப் பல திருஷ்டாந்தங்கள் கூறலாம். ஒரு கிராமத்தில் இந்தச் சங்கத்தினால் பிரத்தியக்ஷமாய் விளைந்த பெரும்பயனாக மத்தியதர ஆங்கில பாடசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது; இந்தப் பாடசாலையை ஆதரித்து வரும்பொருட்டு ஷை சபையார் தங்களுக்கு வரும் லாபத்தினின்று மாதமொன்றுக்கு ரூபா 5 விதம் உதவிவருகிறார்கள். இந்த சங்கங்களால் சித்தித்த இன்னொரு பலன் யாதெனில், கிராமவழக்குகள் அநேகமாய்க் கோர்ட்டுகளுக்குப் போகாமல் பஞ்சாயத்தார்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

கூட்டுத்தொழிலால் விளையும் சன்மார்க்கப் பயன்கள்.

35. கிராமச்சங்கங்களின் வேலையைப்பற்றி விமர்சனஞ் செய்துகொண்டுவருகையில், கூட்டுத்தொழிலால் விளையும் சன்மார்க்கப்பயன்களை விளக்கிக் காட்டுவதற்காகப் பல திருஷ்டாந்தங்கள் கூறியிருக்கிறேன். குல்னு என்னும் ஊரில் இராத்திரிப்பாடசாலைகளும் சுதேசபாஷைப் பாடசாலைகளும் ஸ்தாபிக்கவேண்டுமென்னும் விருப்பம் அதிகரித்துவருவதை இந்த சங்கங்களால் விளைந்த பயன்களுக்குள் ஒன்றெனச் சொல்லலாம். அநேக ஜில்லாக்களிலே இந்த சங்கங்கள் கிராமவழக்குகளில் மத்தியஸ்தம் செய்யும் உயர்ந்த நிலைமைக்கு வந்திருக்கின்றன. இரண்டொரு சங்கங்கள் கிராம சுகாதார விஷயமாய்க் காரியசித்தியாகும்படி முயன்றிருக்கின்றன. இந்த ஸ்தாபனங்களின் வாயிலாக பழையகாலத்து கிராம சமுதாய அதிகாரம் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியிருப்பதைக் காணலாம்; இந்த தேசத்தின் ராஜாங்க அமைப்பில் இந்த அதிகாரம் ஓர் அம்சமாயிராததைப்பற்றி ஒவ்வொருவரும் விசனிக்கிறார்களல்லவா? சரியான நோக்கத்துடன்கூடிய கூட்டுத்தொழிற் சங்கங்களின்மூலமாய் கூட்டுத்தொழில் புரியும் முயற்சி கிராமங்களிலே பற்பல மார்க்கங்களில் பரவக்கூடுமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

யூனியன் சங்கத்தார்கள் பார்வையிடுவது முக்கியமென்பது.

36. சேர்த்துக்கொள்ளப்பட்ட சங்கங்களின் காரியத்தை யூனியன் சங்கத்தார்கள் மேற்பார்வையிடுவதைக் குறித்து நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன்; சாதாரணமாக, அப்படிப்பட்ட பார்வையிடும்வேலைகள் திறமையாகவே நடத்தப்பட்டுவருகின்றன. யூனியன் பஞ்சாயத்தாராவது அடுத்த ஊரிலிருக்கும் சங்கத்தைச்சேர்ந்த விவேகமுள்ள பஞ்சாயத்தாராவது மேற்பார்வையிடுவதனால் ஜனங்கள் கூட்டுத்தொழில் கொள்கைகளைக் கற்றுக்கொள்வதைப் போல் மற்ற அதிகாரிகள் மேற்பார்வையிடுவதனால் அவர்கள் கற்றுக்கொள்வதில்லை யென்று நான் கண்டிருக்கிறேன்.

இந்த முயற்சி இன்னும் பிரபலமாக வேண்டுமென்பது.

37. கூட்டுத்தொழில் முயற்சி வங்காளத்தில் ஏற்பட்டு இப்போது ஐந்து வருஷமாகிறது. இதுவரையில் இம்முயற்சியில் உண்டாயிருக்கும் அபிவிருத்தியை நோக்கும்பட்சத்தில், பரீட்சார்த்தமாய் வேலைசெய்து பார்க்கும் தசையில் காணப்படும் அநிச்சயமான நிலைமைகளைத் தாண்டி இந்த முயற்சி வந்துவிட்டதாக ஒவ்வொருவர் மனதிலும் நிச்சயமாய் ஏற்படும். நமது கிராமவாசிகள் ஒன்றாய்ச் சேர்வதற்குத் தயாராயிருப்பவர்கள் என்பதையும் ஏகோபித்து வேலைசெய்யச் சக்தியுள்ளவர்கள் என்பதையும் காட்டியிருக்கிறார்கள்; இந்த குணங்களில்லாவிட்டால், எவ்வித அபிவிருத்தியும் உண்டாவது சாத்தியமாயிருக்திராது. அவர்கள் தங்கள் கிராமசங்கங்களை நிர்வாகம்செய்யத் தங்களுக்குப் பூர்ணசாமர்த்தியம் இருக்கிறதென்பதையும் மெய்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் கிராமத்துக்குள் கூடிமுயல்வதிலிருந்து சங்கங்களை ஒரு

பெருத்த ஐக்கியக்கூட்டமாக ஒன்றுசேர்க்கும் சாமர்த்தியம் தங்களுக்குண்டென்பதை மெய்ப்பித்திருக்கிறார்கள்; இப்படி சங்கங்கள் ஒருமிக்கச் சேர்ந்தமைவதனால் சங்கங்களின் காரியங்களை மேற்பார்வையிட்டு அவைகள் விஷயமாய் மேல்விசாரணை புரியும் வேலை சுலபமாய்விடுகிறது; இந்த வேலையைஎப்படி நடத்தலாமென்று நாம் எப்போதும் யோசித்துக்கொண்டிருக்கிறபடியால், இதைக் கைகூடிவரும் விதமாய்நடத்திவரும் வழியைத் தீர்மானிக்கும் பட்சத்தில் இந்தமுயற்சி விருத்தியடைவதற்கு இது முக்கிய சாதனமாகும். நம்முடையசங்கங்களின் நாணயம் நன்றாய் நிலையூன்றிவிட்டபடியால், அவைகள் கஷ்டமில்லாமலே மூலதனம் சேகரிக்கக்கூடியவைகளா யிருக்கின்றன. ஆனால் கூட்டுத்தொழில் முயற்சியானது ஜனங்களின் விசுவாசத்தைப்பெற்று ஜனங்களாலேயோடத்தப்படும்படியான சம்பூர்ண ஜனபிமானம்பெற்ற முயற்சியாகிறவரையில், இந்த நாட்டில் அதற்கு ஒருகாலமும் அதிகாரம் ஏற்படாதென்று அநேகசமயங்களில் ஏற்கனவே எடுத்துக்காட்டியிருப்பதையே நான் மீண்டும் எடுத்துச்சொல்லுகிறேன். இந்த முயற்சியை மஹாஜனங்கள் முன்னிலும் அதிகமாய்க் கவனித்து வருகிறார்களென்பதற்குச் சாட்சியம் இருந்தபோதிலும், இந்தமுயற்சியில் நன்மைசெய்வதற்குள்ள சக்தியும் சாதனங்களும் எவ்வளவோ விசேஷமாய் அடங்கியிருக்கின்றன வென்பதைத் தெரிந்துகொள்வதில் இந்திய ஜனசமூகத் தலைவர்கள் மொத்தத்தில் வெகு மந்தமாயிருப்பதையோசிக்க மெத்தவும் உற்சாகக் குறைவு உண்டாகிறது. ஸர்க்கார் உத்தியோகஸ்தரல்லாதவர்கள் கூடிமுயல்வதை என்னவிதமாய் ஒழுங்குபடுத்தி அவர்களை ஒத்துழைக்கும்படி எந்தவிதமாக ஒன்று சேர்க்கலாமென்பதும், மாகாண முழுவதும் பரவியிருக்கும் வலுவில் இழைக்கும் நபர்களை ஒரு கூட்டமாக எப்படி சேர்த்தமைக்கலா மென்பதுமே இப்போது நாம் செய்யவேண்டிய வேலையாகும். இந்த வேலை நிறைவேறிவிட்டால் கூட்டுத்தொழில் முயற்சியானது தேசத்தில் வேகமாய்ப் பரவி, அதன் சக்தியும் இன்னதென்று சீக்கிரமாய் எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.

ஜில்லாக்களில் சபைகள் ஏற்படுத்துவதற்கான கம்மிட்டிகள் அவசியமென்பது.

38. இந்த முயற்சியை ஜனங்களுக்குள் பரவச்செய்து, ஜனங்களின் சிரத்தை உற்சாகம் என்னும் இயக்கும் சக்தியைக்கொண்டு இதை நடத்தும் காரியத்தில் இந்த வருஷம் ஓர் ஆரம்பப் பிரயத்தனம் செய்திருக்கிறோம். ஜில்லாக்களில்சபைகள் ஏற்படுத்துவதற்கான சில கம்மிட்டிகளை பரீட்சார்த்தமாய் ஸ்தாபித்திருக்கிறோம். மிஸ்டர் புதான் என்பவர் ஐர்லாந்து தேசத்து அக்ரிகல்சரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் சங்கத்தில் வேலைநடக்கும் முறையை ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியை ஆதாரமாகக்கொண்டு ஒரு குறிப்பு தயார்செய்து சென்றவருஷத்தில்நடந்த ரெஜிஸ்ட்ரார்களின் கான்பரென்ஸ் என்னும் மகாசபைக்கு அனுப்பினார். அந்தக் குறிப்பிற்கண்ட முறைகளை அனுசரித்தே பரீட்சார்த்தமான கம்மிட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்

பட்ட கம்மிட்டிகள் ஹஸாரிபாக், ஜெஸ்ஸோர், மித்னபூர் என்னும் மூன்று ஜில்லாக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜில்லாவில் சபைகளை வலுவில் ஏற்படுத்தும் பல நபர்களே வாஸ்தவமாய் இந்தக்கம்மிட்டியில் மெம்பர்களாயிருப்பவர்கள்; இவர்களில் ஒவ்வொருவரும் தம்தம் சாய்கால் செல்லும் பிரதேசங்களில்சங்கங்கள் ஸ்தாபித்துக்காலமுறையாய் ஒன்றுகூடி ஆலோசனை பண்ணித் தங்கள் முயற்சிகளை ஒருமைப்படுத்துவார். இந்த ஏற்பாட்டின் சிறந்த அம்சம் என்ன வென்றால், வியாபகக் குறைவான சிற்சில பிரதேசங்களில் முதலில் சங்கங்களை ஏற்படுத்திப் பிறகு அவைகளைப் பிரதேச யூனியன்களாகத்தொகுப்பதும் அதன்பிறகு இந்த பிரதேச யூனியன்களைத்தலைமைக்காரியஸ்தானத்தில் ஒரு ஸென்ட்ரல் யூனியனாக ஒன்றுபடுத்தி அமைப்பதும், ஆக இவ்விதமாய் இந்தக்கூட்டுத்தொழில் முயற்சியை ஒரு ஜில்லாவில் ஒழுங்காய் விசாலிக்கச் செய்வதற்கேற்ற காரியங்களைச் செய்வதேயாம். கூட்டுத்தொழில் முயற்சியில் அதை நடத்தும் மனிதரின் அதிகாரம் பலமாயிருப்பதனால், கம்மிட்டியில் மெம்பர்களா யிருப்பவர்களை அனுசரித்தே இந்த ஏற்பாட்டுக்கு ஜயாபஜயங்கள் சித்திக்கும். அந்தந்த ஜில்லா உத்தியோகஸ்தர்கள் மெம்பர்களை எந்தவிதமாய் நடத்திக்கொண்டு போகிறார்களோ அதுவும் இந்த ஏற்பாட்டினால் பலனுண்டாவதற்கு எவ்வளவோ முக்கியமானதா யிருக்கிறது.

(கவர்ன்மெண்டாரின் ஆராய்ச்சிக் குறிப்பிலிருந்து

எடுக்கப்பட்ட விஷயங்கள்,)

39. கிராமசங்கங்களால் உண்டாகும் சன்மார்க்கப் பயன்களை விளக்குவதற்காகக் காட்டப்பட்ட திருஷ்டாந்தங்கள் ஸ்வாரஸ்யமா யிருக்கின்றன. கூட்டுத்தொழில் சங்கத்தால் கிராமத்தில் பலவிதங்களில் நன்மை உண்டாகக் கூடுமென்பதிலும், சரியானமுறையாக அந்த சங்கத்தை நடத்தும்பட்சத்தில் அப்படிப்பட்ட நன்மை கட்டாயமாய் உண்டாகுமென்பதிலும் சந்தேகமில்லை, மேலும் கேவலம் பொருளாதார விஷயத்தில் மாத்திரம் அல்லாமல் இதரவிஷயங்களில்கூட இப்படிப்பட்ட சங்கங்களால் காலக்கிரமத்தில் அனுகூலமுண்டாகுமென்று நம்புவதற்கு வேண்டிய நியாயமிருக்கிறது.

ஆக்ராவும் அயோத்தியும் சேர்ந்த ஐக்கிய மாகாணங்கள்.

சில சங்கங்கள் விழுந்துபோனதற்குக் காரணங்கள்.

40. * * * இந்த வருஷத்தில் இருபத்துமூன்று சங்கங்களுக்கு ரெஜிஸ்டர்செய்தது ரத்து செய்யப்பட்டது. இவை சரியான முறைப்படி சங்கமாய் அமைக்கப் படாமையினாலோ, அவைகளைச் சேர்ந்தவர்கள் வெகு தூரப்பிரதேசங்களில் வசிப்பவர்களா யிருப்பதனாலோ, சங்கத்தில் சிரத்தை வகிக்காத ஸர்பான்ச் ஆகிய சேர்மன் ஒருவரையே ஆதாரமாக நம்பியிருப்பதனாலேயோ, அவைகள் தனித்தனியே ஒதுக்குப்புறமாயிருந்து அதிகாரணமாக அவைகளின் வேலையைத் தக்கபடி மேல்விசாரணை செய்வோரில்லாமலும் மெம்பர்கள் செய்யவேண்டிய அலுவல்களை அவர்களுக்கு போதிப்பவர்கள் இல்லாமலும் போவதனாலேயோ, சரிவர வேலைசெய்யத் தவறிப்போன நாட்டுச் சங்கங்களாயிருந்தன. சில சங்கங்களின் விஷயத்தில் அதிக லாபம் கிடைத்ததாக கணக்குப் புஸ்தகங்களில் காட்டியிருந்தபோதிலும், லாபமாய் மிகும் தெகைகளை சரியாய் உபயோகிக்கும் வழியை ஜனங்களுக்குக் கற்பித்தால்லொழிய லாபம் மிகுத்துவதில் பிரயோஜனமில்லை. அடிக்கடி மேற்பார்வையிட்டும் புத்திமதி சொல்லியுங்கூடக் கேளாமல் ஒரு சங்கமானது, கொடுத்தக் கடனை வசூல் செய்வதையும், இன்னின்ன காரியங்களுக்கென்று நிர்பந்தமாய்க்கண்டு பின்னும் கடன்கொடுப்பதையும் விட்டு, முன்கொடுத்த கடனுக்கே மறுபடியும் பத்திரம் எழுதிவாங்கிக்கொண்டோ அல்லது அதை வசூல்செய்யாமலே இருந்துவிட்டோ வேலைசெய்துவரும் வழக்கத்தைப் பிடிவாதமாய் அனுசரித்துவருவதாகத் தெரியவரும்பட்சத்தில், முடிவில் அந்த சங்கத்துக்குக் காரியம் கைகூடுமென்று நம்புவது வீணேயாகும். வாங்கின கடனைத் திருப்பிச்செலுத்தும்படி மெம்பர்களை நிர்ப்பந்தப்படுத்தாமலே ஒரு சங்கத்தார் ஒரு தடவை இருந்துவிடும்பட்சத்தில், அவர்களுக்குக் காலம் தவறாமல் சரியாய்க் காரியம் நடத்தும் பழக்கம் ஒருகாலும் உண்டாகமாட்டாதென்று அனுபவத்தில் தெரியவருகிறது; மேலும், சென்ற வருஷத்தில் சொன்னதுபோல, அப்படிப்பட்ட சங்கத்தை எடுத்துவிடாமல் இருந்துகொண்டே வரும்படி எவ்வளவு காலம் விட்டுவைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வசூலாகாமல் நின்றுபோகக் கூடிய பாக்கித்தொகைகளும் ஜாஸ்தியாய்க்கொண்டேவரும். இப்படிப்பட்ட சங்கங்களைக் கத்துவிடுவதனால் மற்ற சங்கங்களுக்கும் புத்திவரும்.

கைத்தொழிலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்குமான சங்கங்கள்.

41. கைத்தொழிலாளிகளுக்காகவும் வர்த்தகர்களுக்காகவும் சிறிய நகரச் சங்கங்கள் ஏற்படுத்துவதில் அபிவிருத்தி யுண்டாயிருக்கிறது. இவைகளின் சங்கியையானது காசியில் பதின்மூன்றிலிருந்து இருபத்துநாலாகவும், ரெய்பரேலியில் எட்டிலிருந்து பதினெட்டாகவும் விருத்தியாயிருக்கிறது. இந்த ஜில்லாக்களிலே இந்த சங்கங்கள் அடியிற்கண்ட வகுப்பார்களுக்குள் ஏற்பட்டிருக்கின்றன:—

பழங்களும் காய்கறிகளும் விற்பவர்கள், பால் விற்பவர்கள், செருப்பு தைக்கிறவர்கள், தோல் பதனிடுகிறவர்கள், சுண்ணும்பு உற்பத்தி செய்கிறவர்கள், பித்தளைவேலை செய்கிறவர்கள், மேஜை நாற்காலி முதலிய சாமான் செய்கிறவர்கள், துணி நெய்கிறவர்கள், சில்லரைக்கடை வியாபாரிகள், கசாப்புக்காரர்கள், வண்டி ஓட்டுகிறவர்கள்.

42. ஒரு சங்கத்தில் சேர்ந்திருந்த ஒரு மெம்பர் பாரியாய்ப் போய்விட்டான்; இன்னொரு சங்கத்தைச்சேர்ந்த ஒரு மெம்பருக்கு வியாபாரத்தில்

நஷ்டம் வந்துவிட்டதனால் தான் வாங்கின கடனைச் செலுத்தமுடியாமல் போய்விட்டான்; இந்த சங்கங்களைச் சேர்ந்த இதர மெம்பர்கள் காலந்தவறாமல் காரியம் நடத்தும் விஷயத்தில் சங்கத்தின் கௌரவத்தைக் காப்பாற்றும் பொருட்டும் அதன்மூலமாய்ப் புதியகடன்கள் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் அதற்கு யோக்கியதை உண்டாகும்பொருட்டும் ஷை கடன்களைத் தீர்க்கத் தங்களுக்குள்ளேயே சந்தா போட்டுக்கொண்டார்கள். பழம் விற்பவர்கள் சேர்ந்த சங்கங்களுக்குள் ஒருசங்கத்தார் வாய்தாப்படி தொகைசெலுத்தத் தவறிப்போகிறவருக்கு வாய்தா கடந்த முதல்தினத்துக்கு 5 ரூபாய் வீதமும், அதன்பிறகு ஒவ்வொரு தினத்துக்கு 1 ரூபாய் வீதமும் தண்டனை அபராதம் விதிக்கும்படி தீர்மானித்திருக்கிறார்கள். செருப்பு தைக்கிறவர்கள் கொஞ்சம் ஐவேஜைத் தங்கள் சங்கத்தில் டிபாஸிட்டாக நிறுத்திவைத்துக்கொண்டு, அதைத்தங்கள் ஜாதி சம்பந்தமான காரியங்களுக்காகப் பணம் வேண்டியிருக்கும்போது வாங்கி உபயோகித்துக் கொள்வதற்காக பிரந்தாரி நிதி ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள்.

சங்கங்களுடன் சம்பந்தம் வைத்திருப்பவர்கள் அவைகளுக்கு அதிக தூரத்தில் வாசம்செய்யாமல் கூடியமட்டில் சமீபமான இடங்களிலிருப்பதும், பஞ்சாயத்தார்களை ஜாக்கிரதையாய்ப் பொறுக்கி நியமிப்பதும் அவசிய மென்பது.

43. ஆரம்பத்தில் ஏற்பட்ட சங்கங்களுள் பெரும்பான்மையானவற்றிலே, அந்த சங்கங்களை யேற்படுத்தியவர்கள் சமீபமான இடங்களில் வசிக்கிறவர்களாயும் ஜாக்கிரதையாய்ப் பொறுக்கி யெடுக்கப்பட்டவர்களாயு முள்ள மெம்பர்களைச் சேர்க்கவேண்டியதவசிய மென்பதைத் தெரிந்துகொள்ளவில்லை. அந்தச் சங்கத்தார்கள் பல கிராமங்களிலிருந்து விசேஷமான ஜனங்களை, மனம்போனபடி சேர்த்துக்கொண்டு வேலைசெய்யலானார்கள். சங்கத்தை நிர்வாகம்செய்வதில் மெம்பர்களுக்கேயாவது அவர்களின் பிரதிநிதிகளுக்காவது சம்பந்தமில்லாமற் போயிற்று; சேர்மனு யிருக்கும் ஒருவரையே சங்கத்தின் காரியம் பெரும்பாலும் பொறுத்ததாயிருந்தது இப்போது அப்படியில்லை ஒரு பாங்கியாரின் விவகாரங்களுக்குச்சம்பந்தப்பட்ட பிரதேசம் ஒருரெவினியு கிராமத்தின் எல்லைகளுக் குட்பட்டே யிருக்கவேண்டுமென்றும், அந்த பிரதேசத்துக்குள் வாசம் செய்பவர்களில் அதிக நம்பிக்கைக்குரியவர்களிலிருந்து பஞ்சாயத்தார்களை ஜாக்கிரதையாய்ப் பொறுக்கி யெடுத்தேற்படுத்தவேண்டுமென்றும், மெம்பர்களைக்கூட ஜாக்கிரதையாய்ப் பார்த்துச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒரு கோட்பாட்டை ஏற்படுத்தி அதை அனுசரித்தே சாதாரணமாய் இப்போது காரியம் நடந்துவருகிறது. கடன் வாங்கிக் கொள்வதற்குச் சித்தமாயுள்ள ஜனங்கள் எத்தனைபேரானாலும் சுலபமாய்க் கிடைப்பார்கள்; ஆனால் மிகவும் தகுதியான மனுஷ்யர்களுக்கு இதுவிஷயமாய் அக்கறை யுண்டாகும்படி செய்வதும், கூட்டுத்தொழில் முறையினால் உண்டாகும் பிரயோஜனங்களை அவர்களுக்குப் போதித்து ஐக்கியநாணயச் சங்கத்தை

கிராமங்களில் என்ன நிபந்தனைகளின்படி ஸ்தாபிக்கக்கூடுமோ அந்த நிபந்தனைகளை நன்றாய்க் கிரஹித்து அவைகளை ஒப்புக்கொள்ள இஷ்டப்படும்படி அவர்களுக்குச் சொல்வதும் அவ்வளவு சுலபமானதல்ல. மேற்கண்ட பத்திகளை அனுசரித்து ஒரு கிராமச்சங்கம் ஏற்பட்டுவிடுமானால், பிறகு அந்த சங்கமானது நான்(இன்னோரிடத்தில் சொல்லியிருப்பதுபோல) அந்தகிராமத்தில் நிலைபெற்ற ஸ்தாபனங்களில் ஒன்றாகிவிடுவதோடுகூட ஸ்தல சுய ஆட்சியின் விசேஷமான அதிகாரங்களைக் காலக்கிரமத்தில் வகிக்கக்கூடிய ஒரு பஞ்சாயத்துக்கு மூலகாரணமாயும் அமையும். யுனேயோவிலே பெரிய சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மெத்த சகாயம் செய்தார்கள்; கடன் தொகைகளை வசூல்செய்யுங் காலத்தில் அப்படிப்பட்ட சகாயம் கிடைக்காதென்று தெரியவந்தபோது ஸர்பாஞ்ச், என்னும் சேர்மன் அலுவல்களைச்செய்ய ஏற்றுக்கொண்ட கனவான்களுக்குக் கடன் தொகைகளை வசூல் செய்வது மகா கஷ்டமாயிருந்தது. இப்படிப்பட்ட பெருத்த சங்கங்களிலே அவற்றின் காரியங்களை மெம்பர்கள் தங்கள் சொந்த காரியம்போல் சிரத்தையாய்க் கவனிக்கக்கூடாமற் போய்விடுகிறார்கள்; சங்க விவகாரங்களுக்குத் தாங்கள் கூட்டாய் உத்தரவாதம்பண்ண வேண்டியவர்களென்னும் எண்ணமும் குறைந்துபோய் விடுகிறது. சேர்மனுக்குக்கூட மெம்பர்களின் அந்தஸ்தைக் குறித்தும் திரவியஸ்திதியைக் குறித்தும் நன்றாய்த்தெரிந்திராது; அப்படித் தெரியாமலிருக்கும்போது, மெம்பர்களுக்குப் பூராவாசத் தேவையாயிருப்பவைகளை ஆலோசித்து அதற்குத் தக்கபடி சகாயஞ் செய்வதற்கும், அவர்கள் முன்யோசனையின்றி மட்டுக்கு மிஞ்சிக் கடன்வாங்குவதற்கு இடங்கொடாமலிருப்பதற்கும் அந்த மெம்பர்களுக்கு இவ்வளவு கடன் கொடுக்கவேண்டுமென்று சேர்மன் தெரிந்துகொள்ளமுடியாது. ஆகவே அவர்களுக்கு தைரியமாய்க் கடன்கொடுக்கவு முடியாது; மெம்பர்களும் தங்களுக்குக் கடன் கொடுக்கும் ஸாவ்கார்களைச் சாதாரணமாய் விட்டுவிடமாட்டார்களாகையால், பாங்கியின் வேலை நன்றாய் விருத்தியடைய வேண்டுமென்பதில் அவர்களுக்கு தீவிரமான அக்கறை உண்டாவதில்லை. சரியானமுறைகளை அனுசரித்து நடத்தப்படும் கிராமசங்கத்திலோ விவகாரங்கள் இப்படி இராமல் எவ்வளவோ வேறுபட்டிருக்கும். அதிலுள்ள மெம்பர்கள் அந்த சங்கம் தங்களுடையதே யென்று அதில் சிரத்தை பாராட்டி வருவார்கள்; பஞ்சாயத்தாரும் கடனுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் ஒவ்வொருவருடைய ஸ்திதியையும் நன்றாய்த் தெரிந்திருப்பார்களாகையால், எவ்வளவுமட்டில் கடன்கொடுக்கலாமென்று தீர்மானிப்பதற்குத் தகுந்த சாமர்த்திய முடையவர்களா யிருப்பார்கள். இத்தியாதி காரணங்களால், யுனேயா முதலிய இடங்களிலே உள்ள பெரிய பாங்கிகளின் விவகார பிரதேசம் வெகுதூரப்வரையில் பெருகிப்போயிருப்பதை உத்தேசித்து, அவைகளை எடுத்துவிட்டோ அல்லது சிறு சிறு கிராமசங்கங்களாகப் பிரித்தோ அவைகளுக்குத் தனித்தனியாய்ப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தி வேலைநடத்தி வருகிறார்கள்; அப்படிப்பட்ட சங்கங்கள்

புடான், மெயின்புரி முதலிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு வெகு நன்றாய் நடந்துவருகின்றன.

ஜாதிச் சங்கங்கள்.

இந்த சங்கங்களிலே வெவ்வேறு ஜாதியைச்சேர்ந்தவர்கள் மெம்பர்களாய்ச் சேர்ந்திருக்கிறார்கள்; அப்படிப்பட்ட ஜாதி ஒவ்வொன்றுக்கும் பஞ்சாயத்தில் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இந்த ஜாதிச்சங்கங்கள் வெகு சிறியவைகளாய் இருக்கிறபடியாலும், அவைகளைச் சேர்ந்த மெம்பர்களின் தேவைகளெல்லாம் யாதொரு பேதமுமின்றி ஏகமாயிருப்பது காரணமாக சங்க நிர்வாகக் கம்மிட்டியார் தாட்சிணியப்பாராமல் விவகாரம் நடத்துவது கஷ்ட சாத்தியமாய் இருப்பதாலும், அதோடுகூட, ஒரு கிராமச்சங்கத்தை தனித்தனி ஜாதிச் சங்கங்களாக ஒருதரம் பிரித்துவிடும் பட்சத்தில், இப்படி பிரிந்துகொண்டே போவதற்கு அநேகமாய் யாதொரு முடிவுமே யில்லாமற் போய்விடுமாகையாலும், இப்படிப்பட்ட ஜாதிச்சங்கங்கள் ஏற்படுவதற்கு இடங்கொடாமல் கண்டித்து வந்திருக்கிறேன்.

பிரயோஜனகரமான காரியங்களுக்காகவே கடன் கொடுப்பது.

44. சங்கங்களில் பெரும்பான்மையானவை நன்றாய் நிர்வாகஞ்செய்யப்பட்டு வருகின்றன; அப்படிப்பட்ட சகல சங்கங்களிலும் கடன்தொகைகள் குறிப்பிட்ட காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டு அக்காரியங்களுக்காகவே உபயோகிக்கப்படுகின்றன. பணம் எதற்காகக் கொடுக்கப்பட்டதோ அந்தக் காரியத்துக்காகச் செலவிடப்படாவிட்டால் அதை உடனே திருப்பிச் செலுத்திவிடவேண்டுமென்று புரோநோட் என்னும் கடன் பத்திரத்திலே நிபந்தனை ஏற்படுத்தி யிருக்கிறது. இந்தக் காரணத்தைபபற்றியே யுனேயோவிலுள்ள சங்கங்களுள் இரண்டு சங்கங்களிலே முதலில் கொடுக்கப்பட்ட கடன்களை வாஸ்தவத்தில் வாப்ஸ்செய்து விடும்படி உத்தரவு செய்யப்பட்டது. ஒரு கடன் எதற்காக வாங்கப்பட்டதோ அந்தக் காரியத்தை உண்மையாகக் கூறி அதை அந்தப் பிரகாரமே உபயோகிக்க வேண்டியது முக்கியமானதென்பதை சங்கத்தார்கள் தெரிந்து கொள்ளும்படி இடைவிடாமல் உறுத்திச் சொல்லியிருப்பது மல்லாமல், கடனைத் திருப்பிச் செலுத்துவது சம்பந்தமான ஷரத்துகளையும் மேற்படி காரியங்களுக் கனுகுணமாக ஜாக்கிரதையாய் நிஷ்கரிஷை செய்திருக்கிறது. கடன்வாங்குவதன் நோக்கமாக மிகச் சாதாரணமாய்க் கூறப்படும் காரியங்கள், கால்நடைகளும் விதைகளும் வாங்குவதும், களைபிடுங்குவது நீர்ப்பாய்ச்சுவது முதலிய பயிரிடுவதற்கான செலவுகளுமேயாம். கலியாணங்களுக்காகவும், லாபகரமா யில்லாவிட்டாலும் அவசியமாய்ச் செய்யவேண்டியிருக்கிற இதர செலவுகளுக்காகவுங்கூட கடன் வாங்கப்பட்டதாகவும் கண்டிருக்கிறது. ஒரு சங்கத்தை முதலில் ஏற்படுத்தும்போது, பழைய கடன்களைத் திருப்பிச்செலுத்தும் சங்கதியைப்பற்றி சாதாரணமாய் யோசனை செய்கிறதில்லை; அப்போது, மிதமிஞ்சி கடன்பட்டிருப்பவர்களாகக் காணப்

படுகிறவர்களை மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்வதுமில்லை; ஆனால் மிதமான அளவுக்குக் கடன்பட்டிருப்பவர்களின் விஷயத்திலே, அந்தக் கடன்களை சங்கத்தாரே தீர்த்து விட்டு அந்தத் தொகையைப் பல வருஷங்களில் தவணைத் தொகைகளாக வசூல் செய்துகொள்வதாக ஏற்பாடு செய்கிறார்கள். பழைய சங்கங்களின் விஷயத்திலே பழைய கடன்களுக்கு ஜாபிதா தயார் செய்யப்பட்டிருக்கிறது; அவைகளைத் தீர்த்துவிட நாளாவர்த்தியில் பிரயத்தனம் செய்யப்படும். கைப்பற்று நிலங்கள் கடனுக்கு ஈடாக ஸ்வாதீன அடமானம் வைக்கப்பட்டிருக்கும் விஷயங்களிலே, வட்டிவீதம் மெத்த குறைவாயிருப்பதனால், அடமானம் வைத்தவர் தம்முடைய கைப்பற்று நிலத்தை மீட்கும் பொருட்டு வேண்டிய பணத்தைத் தாம் சேர்ந்திருக்கும் சங்கத்திலிருந்து கடன் வாங்குவது அவருக்கு லாபகரமாயிராது.

சங்கங்களில் உத்தியோகம் வகித்து நல்ல வேலை செய்தவர்களுக்கு வெகுமதிகள்.

45. ஜில்லா பாங்கார்களில் பலர் பஞ்சாயத்தார்களைக் கூட்டமாய்ச் சேர்த்து வெகு நன்றாய் வேலை செய்த ஸர்பாஞ்சுகளுக்குத் தலைப்பாகைகள் சிலருக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் சிலருக்கும் வெகுமதி யளித்தார்கள். காரியதரிசிகளுக்குள் மிகவும் திறமையாய் வேலை செய்தவர்களுக்கும் வெகுமதிகள் அளிக்கப்பட்டன.

பம்பாய்.

கௌரவார்த்தமாய் சங்கம் ஸ்தாபிப்பவர்கள்.

46. இக்காலத்தின் ஆரம்பத்தில் கௌரவார்த்த சங்க ஸ்தாபகர்கள் 5 பேராயிருந்தார்கள், முடிவில் 8 பேரானார்கள். இவர்கள் இந்த முயற்சியில் உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் நடுவில் இருப்பது உபயோகரமாயிருக்கிறது. சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பதசையில் ஒவ்வொருவரும் தாமாகவே வேலை செய்வது எவ்வளவோ முக்கியமானபடியால், அந்த தசையில் உத்தியோகஸ்தர்களால் மட்டுக்கு மிஞ்சின நிர்ப்பந்த முண்டாய் விடாதபடி இவர்கள் தடுக்கிறார்கள். உத்தியோகஸ்தர்களாயிருந்தும் உத்தியோக முறைமையினாலல்லாமல் தங்கள் சொந்த இஷ்டத்தின்பேரில் இதில் வேலை செய்து வருபவர்களின் பெயர்கள் தனியாய் ஒரு ஜாபிதாவில் குறிப்பிட்டுக் காணாவிட்டாலும், அவர்கள் அந்தப்படி வேலைசெய்து வருவதனாலேயே கௌரவார்த்த சங்கஸ்தாபகர்களே யாவார்கள். ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சங்கங்களின் வேலையை மேற்பார்வையிடுவது சங்கஸ்தாபகர்களென்று சொல்லப்படுவோர் செய்யவேண்டிய அலுவலில் மிகவும் முக்கியமான அம்சமென்று இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சங்கங்கள் நிலைபெற்று நன்றாய் வேலைநடந்து வருமானால் அவற்றின் பெருமை தானே பிரசித்தமாகும். கூட்டுத்தொழில் சங்கங்களால் உண்டாகும் நன்மைகளைக் குறித்துப் பிரத்தியேகமாய் ஒருவரும் பிரசங்கம் செய்யாமலே, இந்த சங்கங்க

ளில் புதிதாய்ச் சேர்வதற்காக அநேகரிடத்திலிருந்து விண்ணப்பங்கள் ஏற்கனவே வந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் உள்ளூர் விஷயங்களைப்பற்றி நன்றாய்த் தெரிந்தவர்கள் இருக்கும் பட்சத்தில் இந்த விண்ணப்பங்களைப்பற்றி அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள மெத்தவும் அனுகூலமாயிருக்கும்; இதனிடையில் ஒருவர் ப்ரெஸிடென்ஸியின் மற்றொரு கோடியில் இருந்து கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட கௌரவார்த்த சங்க ஸ்தாபகர்களுடன் சேர்ந்து வேலைசெய்வது எவ்வளவோ சந்தோஷகரமாய்த் தானிருக்கும்.

பிரஸ்தாப வருஷத்தில் நடந்த காரியங்கள் பல விஷயங்களை போதிப்பவைகளாய் இருந்தனவென்பது.

47. பிரஸ்தாப வருஷத்தில் நடந்த நமது வேலையைத் தொகுத்துக் கூறுகையில் சங்கங்களின் வரவு செலவுகளையும் மற்றக் கணக்கு விவரங்களையும் குறித்துப் பேசுவதைக்காட்டிலும், போதிக்கப்பட்ட விஷயங்களால் விளைந்த பயன்களைப்பற்றிப் பொதுவாய்ப் பேசுவதே உசிதமாகு மென்று என் மட்டிலும் சொல்லுவேன். ஊக்கமாயும் யோக்கியமாயும் வேலைசெய்ய முடிவில் ஜனங்கள் விரும்புவதோ அல்லது விரும்பாமலிருப்பதோ அது அவர்களுடைய பாரம். ஆனால் அது விஷயமாய் அவர்களுக்கு போதிப்பது நம்முடைய கடமையாகும்.

போதிக்கப்பட்ட விஷயம் இவ்வளவென்றும் அது சிறந்த வகையாய் போதிக்கப்பட்டதாவென்றும், அது எவ்வளவுமட்டில் அங்கீகரிக்கத்தக்கதாயிருந்ததென்றும் எவ்வளவு மட்டில் அனுஷ்டிக்கப்பட்ட தென்றும் நிஷ்கரிஷையாய்க் கணக்கிட்டுச் சொல்வது அநேகமாய் அசாத்தியமாயிருக்கும். ஆனால் (சற்றுமுன் நடந்த) டிவிஷன்மகாசபைகள் மூன்றில், எதற்காவது வந்திருந்த வர்களெவரும் இந்த முயற்சியில் ஜனங்களுக் குண்டாயிருக்கும் உற்சாகத்தைப் பற்றியும் அதில் சேர்ந்து வேலைசெய்தவர்கள் விவேகத்துடன் பாராட்டும் சிரத்தையைப்பற்றியும் சாட்சியம்கூறச் சித்தமாய் முன்வருவார்கள்.

கிராமங்களுக்குச் சென்றோ அல்லது சங்கங்களுடன் கடிதப் போக்கு வரவு வைத்துக்கொண்டோ இருப்பவர்களும், இந்த முயற்சியைப்பற்றி ஜனங்கள் தெரிந்துகொள்வதிலும் அதன் விஷயமாய் அவர்கள் பக்தி சிரத்தை பாராட்டுவதிலும் உண்டாய் வரும் அபிவிருத்தியை நோக்காமலிருக்க முடியாது. சங்கங்கள் ஏற்படத் தவறிப்போகும் இடங்களிலும் ஏற்பட்டாலும் அபிவிருத்தியடையாமற் போகும் இடங்களிலுங்கூட, இது விஷயமாய் கிராமங்களில் செய்த போதனை வீணாய்ப் போய்விடவில்லை யென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. உலகத்தில் ஒரு குழந்தையானது எவ்வித ஞானமுமில்லாமல் பிறந்து சிறிதுகாலம் வளர்ந்தபிறகு செத்துப் போவதைப்போல, கூட்டுத்தொழில் முறைகளைப்பற்றிய ஞானமே யில்லாமல் ஒரு சங்கம் ஏற்

பட்டு சிறிது காலம் இருந்த பிறகு விழுந்து போனாலும், அப்படிப்பட்ட சங்கமொன்று ஏற்பட்டு வேலை செய்து வந்ததனால் மொத்தத்தில் சிற்சில நபர்களின் குணங்களும் கிராம வழக்கங்களின் தன்மையும் மாறி நன்மை உண்டாவது தெரியாமற்போகாது. இப்போது நாம் சங்கங்களை ஏற்படுத்திவிட்டிருப்பதைக் கண்டு, அவைகளைத் தங்கள் சுயப் பிரயோஜனத்துக்காக உபயோகித்துக்கொள்ள அநேகர் கிளம்புவார்களென்பதற்கு சந்தேகமில்லையாயினும், அவைகள் மூலமாய் ஜனங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களை அபாவமாய்ப் போய்விடும்படி செய்ய அவர்களால் முடியாது; யோக்கியதையுடன் பிரவர்த்தித்து விவகாரம் நடத்த வேண்டுமென்பதில் ஜனங்களுக்குண்டாயிருக்கும் ஆவலை அபகரிக்கவும் அவர்களால் முடியாது.

சங்கங்களால் பொருளாதார விஷயமாய் மாத்திரமல்லாமல் சன்மார்க்க விஷயமாயும் நன்மை உண்டாயிருக்கிறதென்பது.

48. ஐரோப்பிய தேசங்களிலே ரெய்ப்பெய்ஸ்ன் சங்கங்களால் கேவலம் பொருளாதார சம்பந்தமாய் மட்டிலும் பிரயோஜன முண்டாயிருக்கவில்லை; அநேகமாய் தெய்வபக்தி யென்று சொல்லக்கூடிய அளவுக்கு சன்மார்க்கமும் சிறிது மட்டில் விருத்தி யடைந்திருக்கிறது. வரையறையற்ற உத்தரவாதமும், பாகித்துக்கொள்ள முடியாத சேமநிதியு முடையவைகளாய் வேலை செய்து வரும் நமது கிராம சங்கங்கள் சன்மார்க்காபிவிருத்திக்குக்கூட அனுகூலமா யிருக்கின்றன. * * * *

இன்னமும், பரஸ்பரம் பொறுமையுடனும் உபசாரத்துடனும் விவகாரம் நடத்த வேண்டுமென்னும் விஷயமாய் இதற்குமுன் எப்போது மில்லாத விதமாக இப் போது போதிக்கப்பட்டு வருவது சந்தேகமின்றி அனுபவசித்தமாயிருக்கிறது. இதனால் மனிதன் பிறப்பதும் இறப்பதும் தன் பொருட்டேயல்லவென்னும் உணர்ச்சி அதிகரிக்குமென்பது நிச்சயம். பிறருடைய யோக க்ஷேமத்தில் நல்லெண்ணத்துடன் சிரத்தை கொள்ளும்படி செய்துவரவேண்டும். அல்லாமலும் யோக்கியமாய் நடந்துகொள்வதன் ஆவசியகமும் படிப்பினாலுண்டாகும் அனுகூலங்களும் நாளுக்குநாள் அதிக முக்கியமாகிக் கொண்டு வருபவைகளா யிருக்கின்றன.

49. ஒரு ஊரில் அங்குள்ள ஸாவ்கார் ஒருவர் சங்கத்துக்குத் தான் கடன் கொடுப்பதற்குமுன் அதன் கணக்குகளைப் பார்வையிடும் உரிமை தனக்கு இருக்க வேண்டுமென்று ஷரத்து ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டார். இந்த எண்ணமே உபபக்ஷத்தாருக்கும் சரியானதா யிருக்கும். குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதைக் காட்டிலும் சங்கத்தின் கணக்குகளை எல்லாரும் பார்க்கக்கூடிய விதமாப் பகிரங்கமாக வைத்திருப்பதே தேசத்தின் மற்ற பாகங்களைப் பார்க்கிலும் இந்த பாகத்தில் அதிக அவசியமாயிருக்கிறது. சங்கத்தார் இதற்கு ஒப்புக்கொண்டார்கள். ஸாவ்கார்கள் இப்படி ஒப்புக்கொள்வார்களா?

முனிஸிபாலிடி வேலையில் அமர்ந்திருப்பவர்களுக்கான சங்கங்கள்.

50. சாம்பார்களுக்காகவும் (தோல்வேலை செய்வோருக்காகவும்) நெசவுத்தொழில் செய்வோருக்காகவும் செய்யும் வேலையோடுகூட, ஸதாரா நகரத்தில் அஸிஸ்டன்ட் கவர்ன்மென்ட் ப்ளீடராகிய மிஸ்டர் சிர்முலே என்பவர் செய்து வருவதைப்போன்ற வேலையையும் செய்துவரலாம். அவர் முனிஸிபல் பங்கிகளுக்காக (குப்பைகூட்டுகிறவர்களுக்காக) ஒரு சங்கம் ஏற்படுத்தி அதோடு நிறுத்திவிடாமல், முனிஸிபாலிடியிலுள்ள இதர ஊழியர்கள் முதலானவர்களுக்காகவும் ஒரு சங்கம் ஸ்தாபித்தார். கூட்டுத்தொழில் முறைப்படி கண்டிப்பாய் நோக்கும்போது அந்த சங்கங்களின் அமைப்பில் சில குறைவுகள் இருக்கக் கூடுமாயினும், அவைகளை ப்ரா விடென்ட் (எதிர்கால சகாய) சங்கங்களாகக் கொண்டால் கூட, அப்படிப்பட்ட சங்கங்களை ஸ்தாபிப்பதனால் விசேஷ நன்மை உண்டாகக்கூடும். முதல் சொன்ன சங்கத்தில் முதலில் செய்யவேண்டிய வேலையாயிருந்தது எது வென்றால், மூலதனத்தை வசூல் செய்து, பட்டானியர் என்னும் வட்டி வியாபாரிகள் ஒப்புக்கொண்ட ஒரு தொகையை அவர்களுக்கு மொத்தமாய்க் கொடுத்துவிட வேண்டியதாயிருந்தது. இப்படி செய்ததனால் பங்கிகளில் தலைக்கு சுமார் ரூ 30 விழுக்காடு 20 பங்கிகளின் கடன்கள் தீர்ந்து போயிற்று அவ்விடத்திய பட்டானியர் மாதமொன்றுக்கு ரூபாய்க்கு சுமார் 2 அணா வீதம் வட்டி வாங்குகிறார்கள்; இந்த வீதப்படி மேற்கண்ட கடன்தொகை ஒவ்வொன்றுக்கும் வட்டி மாதத்துக்குக் கிட்டத்தட்ட 4 ரூபாயாகிறது. இதில் அசல் தொகை சேருவதில்லையாகையால், மாதமொன்றுக்கு உத்தேசம் 8 ரூபாய் சம்பாதிக்கு மொருவன் தன் சம்பளத்திலிருந்து இவ்வளவு வட்டி செலுத்துவதனால் அதிக கஷ்டத்துக்குள்ளாக வேண்டியதுதான். சங்கத்தார் மொத்தமாகத் தொகை செலுத்திவிடுவதனால் மெம்பர்கள் செலுத்தவேண்டிய கடன் தொகையில் கொஞ்சம் தள்ளப்படுவதோடுகூட, 100க்கு 150வீதம் வட்டி செலுத்தவேண்டியகடனை 100க்கு 9$\frac{3}{8}$வீதம் வட்டி செலுத்தவேண்டிய கடனாக மாற்றிக்கொண்டதனால் ஒவ்வொரு மெம்பருக்கும் விசேஷலாபமும் கிடைக்கிறது. இப்போது வட்டிக்காக பட்டிலும் மாதந்தோறும் செலுத்தப்படும் தொகையில் அரைவாசி மாத்திரம் கொடுத்துக்கொண்டு வரும்பட்சத்தில், பின்சொன்ன 9$\frac{3}{8}$வட்டி வீதப்படி அசலும் வட்டியும் 1$\frac{1}{2}$வருஷத்துக்குள் பூர்த்தியாய்த் தீர்ந்துபோய் விடும்.

சங்கங்கள் பட்டணங்களிலும் பரவலாமென்பது.

51. இது விஷயமாய்ப் பட்டணங்களில் பிரயத்தனம்செய்து கூட்டுத்தொழில்முறையை விவசாயக்காரர்களா யிராதவர்களுக்குள் பரவச்செய்வதைச் சிலர் புறக்கணித்துப் பேசுவதாகக் காணப்பட்டாலும், நான்மட்டும், மேலே எடுத்துக்காட்டினதுபோல, பட்டணங்களிலிருப்பவர்களே இதுவிஷயத்தில் தங்கள் நடுவிலிருக்கும் கிராமவாசிகளுக்கு வழிகாட்டிகளாயிருந்து,

அவர்களுக்கு நம்பிக்கையுண்டாக்கி நன்றாய் போதிப்பார்களென்று இன்னமும் நினைக்கிறேன். சிறப்பாய் வேலைசெய்துவரும் கிராமங்கள் இருக்கின்றன வென்பது வாஸ்தவமே; ஆனால் கிராமத்தார்கள் அநேகமாய் வழக்கத்தையும் அனுபவத்தையும் அனுசரித்து நடக்கிறவர்களேயொழிய யுக்தியைக்கொண்டாவது உண்மையான அறிவைக்கொண்டாவது நடப்பவர்களல்லவென்று மொத்தத்தில் சொல்லலாம்.

தாழ்ந்தவகுப்பார்களை உயர்த்துவதற்காகச்செய்யும் முயற்சிகளில் பொருளாதார அம்சத்தை ஞாபகமாய்க் கவனிக்கவேண்டுமென்பது.

52. ஆயினும், தாழ்ந்த வகுப்பாருக்காகச் செய்யும் சகாயமானது பரோபகாரமா யிருப்பதோடுகூட கண்டிப்பாய் விவகாரரீதியை யனுசரித்ததாகவும் இருக்கவேண்டுமாகையால், ஐக்கிய நாணயச் சங்கங்கள் அப்படிப்பட்ட சகாயம்செய்ய ஏற்றுக்கொள்ளும்போது ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். சகல ஜனங்களுக்கும் பிரியமாயிருக்கும்படி தானதர்மம்செய்வதைவிட வரவு செலவுகளை ஒழுங்காய் வைத்துவருவதே தேசத்துக்கு அதிக நன்மைசெய்வதாகும். நம்முடைய சங்கங்களில் வேலைசெய்பவர்களுக்குள் அநேகர் இவ்விஷயத்தை நன்றாய் அறிந்துகொண்டிருப்பதாகக் காணப்படுவதே இந்த முயற்சியால் அதிக நன்மை விளையுமென்பதைக் காட்டும் நல்ல சூசனைகளில் ஒன்றாகும்.

சங்கங்களில் ட்ரஸ்ட் பணத்தை வட்டிக்குப் போட்டுவைப்பது.

53. கோர்ட் ஆவ் வார்ட்ஸாரின் பணத்தை வட்டிக்கு வாங்க ஆரம்பம் செய்துவருகிறோம்; கவர்ன்மென்டாரும் இதுவிஷயமாய் தயவுகூர்ந்து கட்டளைகள் பிறப்பித்திருக்கிறார்கள். மாண்ட்வியிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு பாடசாலைக்காக வசூல் செய்யப்பட்ட 1000 ரூபாயை அடுத்த கிராமத்திலுள்ள ஒரு சங்கத்தில் 100க்கு 5வீதம் வட்டிக்குப்போட்டு வைத்திருக்கிறார்கள்.

இன்னொரு ஜில்லாவிலே ஒரு "ஏழைகளின் சகாயநிதியார்" தங்கள் பணத்தை 100க்கு 3வீதம் வட்டி கொடுக்கும் தபாலாபீஸில் போட்டுவைப்பதைக்காட்டிலும் இந்த சங்கங்களில் 100க்கு 6வட்டி வருவதை விசேஷமாக எண்ணி அவைகளில் போட்டுவருகிறார்கள்.

மைனர்களின் பணத்தை இந்த சங்கங்களில் வட்டிக்குப் போட்டுவைக்கும் விஷயத்தை அவர்களின் சம்ரக்ஷகர்கள் தங்கள் இஷ்டப்படி தீர்மானிக்கும்படி அவர்களுக்கே கண்டிப்பாய் விட்டுவிடவேண்டும்.

கிழக்கு வங்காளமும் ஆஸாமும்.

கூட்டுத்தொழில் சங்கங்களினால் அதர்மவட்டி வீதங்கள் குறைந்துவருவது.

54. * * * வட்டி வியாபாரிகள் வாங்கும் வட்டிவீதங்களைக்குறித்து கூடியவரையில் பூர்த்தியான விசாரணை மூன்று வருஷங்களிலே நடத்த

ப்பட்டு அதனுடைய முடிவுகள் என்னுடைய 1907-08-ம் ஆண்டு ரிபோர்ட்டிலே 38வது பாராவில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அதுமுதல் அந்த விசாரணை பிரதிவருஷமும் நடந்துவருகிறது: அப்போது கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்கள் இன்னும் மாறாமலே இருப்பதாகத் தெரியவருகிறது. சாதாரணமாய் வழக்கத்தில் இருக்கும் வட்டிவீதம் வருஷத்துக்கு 100க்கு $37\frac{1}{2}$ ஆகவும், மிகவும் குறைந்தவீதம் 100க்கு 24 ஆகவும் இருக்கிறது. இவ்வளவு வட்டிவீதத்தைவிட அதிகமான வீதம் வாங்கக்கூடாதென்னும் நியமம் இருப்பதாகத் தெரியவில்லை. என்னுடைய முந்திய இரண்டுவருஷ ரிபோர்ட்டுகளிலே அதிக வட்டிவீதங்கள் வாங்கப்பட்டதற்கு பல திருஷ்டாந்தங்கள் விவரிக்கப்பட்டன; இந்த வருஷத்தில் அதைவிட அதிக ஜாஸ்தியான வீதப்படி வட்டி வாங்கப்பட்ட சந்தர்ப்பம் எதுவும் எனக்குத் தெரியவரவில்லை; ஆனால் அநேக சந்தர்ப்பங்களில் 100க்கு 150வீதமாகவும் அதற்கு அதிகமாகவும் வட்டி வாங்கப்பட்டதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல தடவைகளில் வட்டிக்கு வட்டி வாங்கப்படுவதனால் வட்டிவீதங்கள் பேதைக்கடனாளிகள் கனவில்கூட நினைக்காத அவ்வளவு ஜாஸ்தியாய்ப் போய்விடுகின்றன. இவை வெண்ணோலைப்பத்திரங்களின்பேரில் வாங்கப்படும் வீதங்கள். கொதுவைகளின் விஷயத்திலே வட்டி வீதங்கள் சாதாரணமாகக் குறைந்தவைகளா யிருக்கின்றன; இப்போது வழக்கத்திலிருக்கும் வட்டி வீதம் 100க்கு 24 ஆனால் இது விஷயத்தில் கூட வட்டிக்கு வட்டி வாங்குவதுண்டு; அப்படி வாங்குவதனால் வட்டியாகவே கட்டவேண்டிய தொகை விசேஷமாய் அதிகரித்துப் போய்விடுகிறது. இதற்கு திருஷ்டாந்தமாக பாரிஸாலில் நடந்து வரும் ஒரு கேஸைச் சொல்லலாம். அதில் 100க்கு 24 வீதம் வட்டிகண்டு 200 ரூபாய்க்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கொதுவைப் பத்திரத்தின் பேரில் வருஷா வருஷம் வட்டிக்கு வட்டிபோட்டு கடைசியாக ரூ. 3,800க்கு டிக்ரி பெறுவதற்காக வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சில இடங்களிலே வட்டி வியாபாரிகள் வாங்கும் வட்டி வீதங்கள் விசேஷமாய்க் குறைந்து போயிருக்கிற தென்று மிகவும் நம்பத்தகுந்தவர்கள் பலர் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதர்ம வட்டிபாலுண்டாகும் தீமைகளை ஒழிப்பதற்கு மிகவும் காரிய சாதகமான சிறந்த மார்க்கம் ஐக்கிய நாணயச் சங்கங்களை ஸ்தாபிப்பதே யென்று எனக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறது.

படித்த வகுப்பார்கள் இது விஷயத்தில் காட்டும் அபிமானம் அதிகரித்து வருவது.

55. இந்த ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்திலே, கூட்டுத் தொழில் விஷயமாக, படித்த வகுப்பார்களின் அபிப்பிராயம் அனுகூலமாய் மாறியிருக்கிறது; இதற்கு அத்தாட்சியாக இந்த மாகாணத்தின் சகல பாகங்

களிலுமுள்ள ஹிந்துக்கள் மகம்மதியர்கள் என்னும் இரு வகுப்புகளிலுமுள்ள கனவான்கள் மற்றெந்த விதமாக இல்லாவிட்டாலும் திரவிய சகாய மூலமாயாவது எங்களுக்கு உதவிபுரிய இப்போது முன்வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அபிமானமும் சகாயமும் மதிக்கத்தக்கவை. அவர்களுடைய சகாயத்தினால் நாட்டுச் சங்கங்களை மேல் விசாரணை செய்யும் சிக்கு தீர்ந்துபோகுமென்று நம்புகிறேன். ஐக்கியநாணயச் சங்கங்களைக் குறித்த சமாசாரம் வெகு தூரத்திலுள்ள கிராமங்களுக்குப் போய்ப் பரவிவிட்டிருக்கிறபடியால், பயிரிடுகிறவர்கள் சங்கங்கள் ஸ்தாபித்துக்கொள்ள இப்போது அதிக ஆவலாயிருக்கிறார்கள். சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டுமென்று இம்மாகாணத்தின் சகல பாகங்களிலிருந்தும் அபரிமிதமான விண்ணப்பங்கள் என்னிடம்வந்து குவிந்துபோயிருக்கின்றன; போதுமான சிப்பந்தியில்லாமையால் அவைகளைக் கவனிக்க முடியவில்லை. எங்கு பார்த்தாலும் இந்த சங்கங்கள் ஏழை ஜனங்களுக்குக் கிடைத்த லக்ஷ்மி கடாக்ஷமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். முந்தின வருஷங்களிலே இது விஷயமாய்க் காட்டப்பட்ட அவநம்பிக்கை விரைவில் குறைந்து வருகிறது.

வடஸர்க்கார் ஜில்லாக்களில் பிரசுரமாகும் "விவசாயம்" என்னும் தெலுங்கு பத்திரிகை.

நிடதவோல் மேடீர் எஸ்டேட்டுகளுக்கு ரிஸீவராயிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ஜி. நாராயணஸ்வாமி நாயுடு, பி. ஏ., அவர்களால் ஏலூரில் தெலுங்கில் பிரசுரிக்கப்படுகிற "விவசாயம்" என்னும் மாதாந்தர விவசாயப்பத்திரிகையின் 2வது சம்புடம் 10-ம் இலக்கமான அக்டோபர் மாதத்து சஞ்சிகையில் கூட்டுத்தொழில் சங்கங்களைக் குறித்து மநோஹரமான வியாசமொன்று காணப்படுகிறது. இந்தப் பத்திரிகை அநேகமாய் வடஸர்க்கார் ஜில்லாக்களிலே விசேஷமாய்ப் பரவுகிறபடியால், இந்த வியாசத்தினால் அதிகமான காரியசித்தி உண்டாகுமென்று நம்பலாம்.

"தக்கணத்திலுள்ள பம்பாயில் கிராமச்செட்டு".

"இந்துதேசத்து விவசாயப்பத்திரிகை"யின் 6-வது சம்புடம் இரண்டாம்பாகமாகிய ஏப்ரல் மாதத்துச் சஞ்சிகையில் மேற்கண்ட தலைப்பெயருடன் மிகவும் மநோஹரமும் நல்விஷயங்களை போதிப்பதுமான ஒரு வியாசம் அடங்கியிருக்கிறது. அதை எழுதியவர் பம்பாயில் விவசாய டைரெக்டராயிருக்கும் மிஸ்டர் ஜி. எவ். கீடிங், ஐ. வி. எஸ்., என்பவர். இந்த வியாசத்தின் தொடக்கத்தில் மூலதனத்தின் லட்சணம் இன்னதென்று பொதுவாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் பொருளுற்பத்திக்கு உதவும்பொருட்டு பிரத்தியேகமாய் எடுத்துவைக்கப்பட்ட செல்வம் மூலதனமெனப்படும். இதைச்சொந்தக்காரரும் பிறரும் இந்தக்காரியத்துக்காக உபயோகிக்கத்தகும். இந்த மூலதனத்தினால் உண்டாகும் பிரயோஜனத்துக்கு விலையாகக் கொடுக்கும்

தொகையே வட்டியென்பது. அசல்தொகை எந்த அளவுக்குக் கிடைக்கிறதோ அதையும் எந்த அளவுக்கு வேண்டியிருக்கிறதோ அதையும் அனுசரித்து இந்தவட்டி ஏறுவதும் குறைவதுமாயிருக்கும்.

2. ஐரோப்பாவிலே சென்ற ஆயிரம் வருஷங்களுக்குள் வட்டிவீதம் குறைந்து வந்துகொண்டிருக்கிறது.

கி. பி. 1400-ம்ஆண்டு	...	...	நூற்றுக்கு 10
,, 1500 ,,	...	...	,, 8
,, 1600 ,,	...	...	,, $6\frac{1}{2}$
,, 1700 ,,	...	...	,, 5
தற்காலத்தில்	...	...	,, 4

3. இந்தியாவிலே பம்பாய் மியுனிஸிபாலிடியைப்போன்றபொதுச் சங்கத்துக்கு நூற்றுக்கு 4 வட்டிவீதத்தின்பேரில் கடன் பிறக்கிறது. நல்ல பூமியுடையவர்கள் தங்கள் நிலங்களை அடமானம் வைத்தால் நூற்றுக்கு 9 வட்டிவீதத்தின்பேரில் அவர்களுக்குக் கடன்கிடைக்கும் சிறிதுகாலத்துக்குப் பணம் வேண்டியிருந்தால் 100க்கு 15வீதம் வட்டி செலுத்தவேண்டும். இந்த வீதமானது சுமார் 100வருஷகாலமாக மாறாமல் கிட்டத்தட்ட அப்படியே இருந்துவருகிறது. கொதுவையாகக் காட்டும் சொத்து கொஞ்சம் பிடாயிருந்தால், வட்டியானது சில சமயங்களில் நூற்றுக்கு 24ஆக ஏறிவிடுகிறது. ஸபர் ஜாமீனின்பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்குச் சிலசமயத்தில் நூற்றுக்கு நூறுவிழுக்காடு அபரிமித வட்டி கிடைக்கிறதென்று மிஸ்டர் கீபுங் சொல்லுகிறார். இந்த அதிகவீத வட்டிக்கு அடியிற்கண்டவைகளே காரணங்களென்று அவர் எண்ணுகிறார்:—

(1) மூலதனம் கிடைப்பது அரிதாயிருப்பது;

(2) விவசாயக்காரர்களுக்குள் ஒழுங்கின்மையும் அதுகாரணமாக அவர்களுக்கு பட்டணங்களிலுள்ள ஸாவ்காரர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாமலிருப்பதும்;

(3) பயிரிடுகிறவர்கள் காட்டிவரும் தீவிரமான துவேஷத்தினால் கடன் கொடுக்கிறவர்களுக்குண்டாகும் அபாயமும் கஷ்டமும் ஒரு நூற்றாண்டுக்குமுன் தக்கணத்திலுள்ள ஒரு கிராமக்கோமுட்டி ஒரேவீட்டில் சேர்ந்தாற்போல் இரண்டுநாளைக்குத் தூங்கத் துணியான்;

(4) மூலதனம் கொடுத்து உதவுகிற மனிதன் மானிடவர்க்கத்துக்கு உண்மையான உபகாரியென்று செல்வநூல் போதித்தபோதிலும், வட்டிவியாபாரியினிடம் ஜனங்கள் எப்போதும் விசேஷ துராபிமானம்காட்டி வந்திருக்கிறார்கள். ஆதி

காலத்து மகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் எவ்வளவு சுவல்ப வட்டியும் வாங்கக்கூடாதென்று விதிகள் செய்தார்கள்.

பிறகு பலவிதமான மூலதனங்களைப்பற்றி அந்த வியாஸத்தில் பேசியிருக்கிறது.



"பூமி" என்னும் தலைப்பின்கீழ்வரும் வகையைச்சேர்ந்த மூலதனமானது இதரவகைகளைச்சேர்ந்த மூலதனத்தின் சகாயமில்லாமல் உபயோகப்படாதென்றும், அப்படிப்பட்ட இதர மூலதனம் பூமியுடன் நிலையாய்ச் சேர்த்துக் கட்டப்பட்டவைகளேயென்றும் அவர் கடைசியில் எடுத்துக்காட்டுகிறார்.

குறிப்புகள்.

பம்பாய் ப்ரெஸிடென்ஸியிலே நடந்துவரும் தோல் தொழிலைப்பற்றி விசாரணை நடத்தவேண்டுமென்று பம்பாய் கவர்ன்மெண்டார் தீர்மானித்து அதற்காக ஒரு நிபுணரை நியமிக்க, அவர் ஒரு விரிவான ரிபோர்ட் அனுப்பியிருக்கிறார். அந்த ரிபோர்ட்டை எழுதிக்கொண்டு போகையில் அவர் பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவிக்கிறார் :—

"தோல் தொழிலாளிகளாகிய தோல்பதனிடுவோர், ஜோடு தைப்போர் என்னும் இருவகுப்பாருக்குள்ளும் சில ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சங்கங்களிலே இந்த ஜனங்களுக்குள், வேறிடங்களில் இவர்களைப்போன்றுள்ள வகுப்பாருக்குள் இருப்பதைவிட அதிக அந்யோந்யபாவம் இருப்பதாக இந்த ரிபோர்ட் எழுதுகிறவர் கவனித்தார் இந்தக் கூட்டுத்தொழில் சங்கத்தார்கள் மற்றவர்களைவிட அதிக லாபகரமாய்ச் சரக்குகளை வாங்கவும் விற்கவும் கூடியவர்களா யிருந்தார்கள். காரணம் என்னவென்றால், தோல்தொழிலாளிகள் அடிக்கடி உள்ளூர் வட்டியாபாரிக்குக் கடன்பட்டு சகல சரக்குகளையும் அவனிடத்திலிருந்தே வாங்க வேண்டி யிருப்பதால் அவன் கேட்கும் விலையைக்கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது."

அவர் கடைசியில் செய்யும் சிபாரிசுகளில் ஒன்று என்னவென்றால், சாத்தியமான இடங்களிலெல்லாம் ஐக்கிய நாணயச் சங்கங்களை ஸ்தாபித்து அங்குள்ள தோல்தொழிலாளிகளுக்குச் சகாயம்செய்ய வேண்டுமென்பதே. இந்த சங்கங்களை ஆராய்ந்து பம்பாய் கவர்ன்மெண்டார் பிறப்பித்திருக்கும் உத்தரவிலே, ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட இடங்களில் விசேஷ அபிவிருத்தி உண்டாயிருக்கிறதென்று குறிப்பிடுகிறார்கள். ஏஜெண்டுகள் விஸ்தாரமாய்ச் சரக்குகளை வாங்குகிறபடியாலும், செத்துப்போன ஜெந்துக்களின் தோல்களைச் சேகரிக்கும் வகுப்பார்களுக்கு முன்பணம் கொடுத்து இதுவிஷயமான வியாபார முழுவதையும் தங்கள் வசத்தில் வைத்திருக்கிறபடியாலும், அவர்களுடன் போட்டிபோட்டு வேலைசெய்ய அநேக இடங்களிலுள்ள தோல் பதனிடுவோர்களுக்குக் கஷ்டமாய்த் தோற்றுகிறதாம். ஆயினும் அந்தந்த இடங்களிலுள்ள தோல் பதனிடுவோர்களுக்குள்ளாகவே சங்க ஏற்பாடு செய்யும் பட்சத்தில் இந்தப்போட்டிக்கு ஈடுகொடுக்கமுடியுமென்று பன்வேலில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாணயச் சங்கத்தில் உண்டான அனுபவத்தால் ஏற்படுகிறது.

ஸர்க்யுலர் உத்தரவுகள்.

16-ம் ந. ஸர்க்யுலர்.

இதற்கு முன்னிருந்த ரெஜிஸ்ட்ரார் கல்லியாணதுர்க்கத்தில் செய்த பிரசங்கம் வேறோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது 16-ம் ந. ஸர்க்யுலராக வெளிவிடப்பட்டிருக்கிறது.

17-ம் ந.

கடன்களை வரப்பெற்றுக்கொண்டதற்கான ரசீதுகளை அந்தக் கடன்களைப் பட்டுவாடாசெய்யும் ஸென்ட்ரல் பாங்கிக்கு அனுப்பவேண்டும். அவைகளை ரெஜிஸ்டர் தபால் மூலமாய் அனுப்பவேண்டியதில்லை; அவைகளை சாதாரண தபால் மூலமாய் அனுப்பினால் போதும். நகல்களை ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டியதில்லை.

18-ம் ந.

ஒரு கூட்டுத்தொழில் சங்கமானது இரண்டாகப் பிரிந்து அதனால் பிரத்தியேகமாய் ஏற்பட்ட புதிய சங்கமானது, தாய்ச்சங்கத்திலிருந்து பிரிந்திவந்த மெம்பர்களால் அந்த தாய்ச் சங்கத்துக்குப் பாக்கியாயிருக்கும் கடன்களை அதற்குத் திருப்பிக் கொடுக்கும்பொருட்டு கடனுக்காக விண்ணப்பம் செய்துகொண்டிருந்து, புத்தகங்களில் சரிக்கட்டிப் பதிவு செய்வதனாலேயே அந்த விவகாரத்தை முடிப்பது சாத்தியமா யிருக்கும்பட்சத்தில், சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி, லிமிடெட் என்னும் பாங்கியார் வட்டி கணக்கிடும் காரியத்துக்காக மாதத்தின் பாகங்களை முழுமாதமாக பாவிக்காமல் வாஸ்தவமாய் எத்தனை தினங்களுக்கு வட்டி விதித்து வாங்கவேண்டுமோ அத்தனை தினங்களுக்கு மாத்திரமே வட்டி வாங்கவேண்டுமென்று செய்து சொள்ளப்படும் யாதொரு விண்ணப்பமானது ரெஜிஸ்ட்ராரால் சிபாரிசு செய்யப்பட்டால் அது ஸென்ட்ரல் பாங்கியாரால் சாதகமாக கவனிக்கப்படுமென்று ஸென்ட்ரல் பாங்கியார் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

ஜில்லா பாங்கிகளும் இதே முறையை அனுசரிக்கவேண்டும்.

19-ம் ந.

பல சங்கங்கள் ரெஜிஸ்ட்ராருக்கென்று உத்தேசிக்கப்பட்ட கடிதங்களில் தவறாக மேஸ்ஸிலாசம் எழுதுவதனால், அந்தக் கடிதங்கள் சரியாய்ப் போய்ச்

சோமல், சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி திருவல்லிக்கேணி ஐக்கிய நாணயச் சங்கம் முதலிய இடங்களில் தவறாகக் கொடுக்கப்படுகின்றன. ரெஜிஸ்ட்ராருக்கென்று உத்தேசிக்கப்பட்ட கடிதங்களுக்கு அடியிற்கண்டபடி மேல்விலாசம் எழுதவேண்டும்:—

ஐக்கியநாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார்,

சேப்பாக்கம், மதராஸ்.

சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கிக்கென்று உத்தேசிக்கப்பட்ட கடிதங்களுக்கு அடியிற்கண்டபடி மேல்விலாசமெழுதவேண்டும்:—

சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்க், லிமிடெட் என்னும் பாங்கியின் காரியதரிசி,

பத்மவிலாசம், லஸ், மைலாப்பூர், மதராஸ்.

20-ம் ந.

ஒரு சங்கத்தின் வேலையானது எவ்வளவு விஸ்தீர்ணத்துக்கு வியாபித்திருக்கிறதோ அது குறைக்கப்பட்டால், விலக்கப்பட்ட விஸ்தீர்ணத்தில் ஒரு புதிய சங்கம் ஏற்படுத்தலாம்; ஆனால் அதற்குச் சந்தர்ப்பங்கள் அனுகூலமாயிருந்தாலொழிய மற்றப்படி புதிய சங்கம் ஏற்படுத்தக்கூடாது. விலக்கப்பட்ட விஸ்தீர்ணத்தில் ஒரு புதிய சங்கம் ஏற்படுத்தப்பட்டால், சேர்ந்திருக்கும் சேமநிதியின் மொத்தத் தொகையை, எந்தப் புதிய சங்கம் பழைய சங்கத்தின் பெயரையே கொண்டிருக்கிறதோ அது தன்னிடத்திலேயே வைத்திருப்பது வழக்கம். விலக்கப்பட்ட விஸ்தீர்ணத்தில் ஒரு புதிய சங்கம் ஏற்படுத்தப்படும் விஷயங்களில் மேலே கண்டபடி செய்வது அநியாயமென்று ரெஜிஸ்ட்ரார் அபிப்பிராயப்படுகிறபடியால், இனிமேல் அனுசரிப்பதற்காக அடியிற்கண்ட நடவடிக்கை முறையை நிர்ணயித்திருக்கிறது.

2. சங்கம் இரண்டாகப் பிரிந்ததற்கு முந்திய ஜூன்மீ 30உயன்று தாய்ச்சங்கத்தில் மெம்பர்களாயிருந்த நபர்களின் ஜாபிதாவைப் பரிசீலனை செய்யவேண்டும்; எந்த வருஷத்தில் அந்த சங்கம்பிரிந்ததோ அந்த வருஷத்தின் ஜூன்மீ 30உயோடு முடிவாகிற பன்னிரண்டு மாதங்களில் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட நபர்களையெல்லாம் அந்த ஜாபிதாவிலிருந்து விலக்கவேண்டும். குறைக்கப்பட்ட ஜாபிதாவிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையானது S என்பதாக வைத்துக்கொள்வோம். அப்படி குறைக்கப்பட்ட ஜாபிதாவிலிருந்து புதிதாய் ஏற்படுத்தப்பட்ட சங்கத்தின் விஸ்தீர்ணத்தில் வசிக்கும் மெம்பர்களைப் பிரித்து இலக்கமிடவேண்டும்; அப்படிப்பட்ட மெம்பர்களின் சங்கியை D என்று வைத்துக்கொள்வோம்.

ஜூன்மீ 30உ வரையில் சேர்ந்திருக்கும் சேமநிதியின் மொத்தத்தொகை, அந்தத் தேதிவரையில் அதன்மேல் வட்டியும்சேர்த்து எவ்வளவாகிறதென்று தெரிந்துகொள்ளவேண்டும்; இந்த மொத்தத்தொகையில் ஜூன்மீ 30உயோடு முடிவாகிற வருஷத்தில் கிடைத்து, சங்கம் பிரிந்த வருஷத்தில் வரவுவைக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கக்கூடிய சேமநிதி சேராது. அப்பொழுது, இந்த மொத்தத்தில் $\frac{D}{S}$ என்னும் பாகத்தை புதியசங்கத்துக்கு வரவுவைத்து, மிகுதியை தாய்ச்சங்கத்தின் பெயரை வைத்துக்கொண்டிருக்கும் சங்கத்திலேயே நிறுத்திக்கொள்ளவேண்டும்.

3. ஒரு சங்கத்தைப் பிரிப்பதற்காக பிரேரேபனைகள் அனுப்பும்பொழுது, இனிமேல், இன்ஸ்பெக்டர்கள் சேமநிதியைப் பங்கிடுவதில் மேலேகண்ட முறைப்படி கணக்கிட்டு, அம்மாதிரி பங்கிடுவதற்கு தாய்ச்சங்கம் ஒப்புக்கொள்ளுவதாக அதன் தீர்மானமொன்றை மேலே அனுப்பவேண்டும்.

விளம்பரங்கள்.

---

1. திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள 178-ம் ந. குளித்தலை ஜில்லா அர்பன்பாங்கி லிமிடெட் என்னும பாங்கியானது அதனுடைய தலைமைஸ்தானத்தை குளித்தலையிலிருந்து திருச்சினாப்பள்ளிக்கு மாற்றியிருக்கிறது. அது இனிமேல் "திருச்சினாப்பள்ளி ஜில்லா அர்பன்பாங்கி, லிமிடெட்" என்று சொல்லப்படும். இந்த பாங்கிக்கென்று உத்தேசிக்கப்பட்ட கடிதங்கள் முதலியவைகளிலெல்லாம் அடியிற்கண்டபடி மேல் விலாசமெழுதவேண்டும்:—

திருச்சினாப்பள்ளி ஜில்லா அர்பன்பாங்கி, லிமிடெட் என்னும் பாங்கியின்

காரியதரிசி, திருச்சினாப்பள்ளி.

(1) மதுரை ஜில்லாவிலுள்ள சங்கங்களுக்கு மதுரை ஹிந்து சாசுவத நிதி, லிமிடெட், என்னும் சங்கமானது அடியிற்கண்ட ஷரத்துகளின்படி பொருளுதவிசெய்யத் தயாராயிருக்கிறதென்று அவைகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது:—

1. ரெஜிஸ்ட்ராரின் சிபாரிசின்மேல் கடன்கள் கொடுக்கப்படும்.

2. கடன்களைச் சாதாரணமாய் இரண்டு வருஷங்களில் திருப்பிக் கொடுக்கவேண்டும்; ரெஜிஸ்ட்ராரின் சிபாரிசின்மேல் தவணைநீடித்துக் கொடுக்கப்படும். வட்டியை அரை வருஷத்துக் கொருமுறை செலுத்தவேண்டும்.

3. 100 ரூபாய் அல்லது அதைப்பெருக்கி வரும் தொகைகள் கடனுக்காகச்செலுத்தப்பட்டால் அதை வரவுவைத்து, பாக்கி நிற்கும் கடன்மீது வட்டி வாங்கப்படும்.

4. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ப்ரோநோட் என்னும் கடன் பத்திரங்களின் மேலோ அல்லது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பாண்டுகளின் மேலோ நிதியின் இஷ்டப்படி கடன்கள் கொடுக்கப்படும்.

5. வட்டி கணக்கிடும் காரியத்திற்காக மாதங்களின் பாகங்கள் முழு மாதங்களாகக் கொள்ளப்பட்டு, "மாதம்" என்பது "நிதிமாதம்" என்று அர்த்தஞ்செய்யப்படும்; "நிதிமாதம்" ஒரு சௌர மாதத்தின் 21-ம் தேதியில் ஆரம்பித்து அடுத்த மாதம் 20-ம்தேதியில் முடிவாகும்.

6. நிதியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு சங்கங்களின் கணக்குகளைப் பார்வையிடும் சுதந்தரம் இருக்கவேண்டும்.

7. சங்கங்களின் நிர்வாக கம்மிட்டியிலுள்ள நபர்களில் யாதொரு மாறுதல் நேரிட்டால் அதை நிதிக்குத் தெரிவிக்கவேண்டும்.

8. வருஷவாரி தணிக்கை ரிபோர்ட்டுக்கும் அதன்மேல் ரெஜிஸ்ட்ரார் செய்யப்பட்ட உத்தரவுக்கும் நகல்களை நிதிக்கு அனுப்பவேண்டும்.

9. முதலில் செய்யப்பட்ட சகாயச் சட்டங்களின் நகலொன்றை நிதிக்கு அனுப்பவேண்டும். சகாயச் சட்டங்களைப் பிற்பாடு எப்போதாவது மாற்றினாலும் அவைகளுடன் வேறு சகாயச்சட்டங்களைச் சேர்த்தாலும் அப்படி செய்யப்பட்ட உடனே அதை நிதிக்குத் தெரிவிக்கவேண்டும்.

(2) ஒப்பந்த உடன்படிக்கையை ரெஜிஸ்ட்ரார் அங்கீகரித்து விட்டார். இனிமேல் இன்ன கடன்கள ஜாரிசெய்யப்பட்டிருக்கின்றனவென்று நிதிக்குத் தெரிவிக்கப்படும். நிதியில் பணமில்லாவிட்டால்தான் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியைப் பணம் கொடுக்கும்படி கேட்கப்படும். ஸென்ட்ரல் பாங்கி வருஷமொன்றுக்கு நூற்றுக்கு $7\frac{1}{2}$ வீதம் விதித்து வாங்குகிறது; நிதியோ வருஷ மொன்றுக்கு நூற்றுக்கு $6\frac{3}{4}$வீதம் தான் விதித்துவாங்குகிறது.

(3) 5-வது ஷரத்தை சங்கங்கள் விசேஷமாய்க் கவனிக்கவேண்டும். சங்கங்கள் சாத்தியமானவரையில் ஒரு மாதத்தில் 20உ க்கும் 25உ க்கும் இடையில் கடன் வாங்குவதும் 15உ க்கும் 20உ க்கும் இடையில் கடனைத் திருப்பிக்கொடுப்பதும் நலம்.

(4) சங்கங்கள் நிர்வாகக் கம்மிட்டியின் மெம்பர்களில் நேரிடக்கூடிய எவையேனும் மாறுதல்களை நேராக நிதிக்குத் தெரிவிக்கவேண்டும். இந்த ஸர்க்யுலர் அவைகளுக்குச் சேரும் தேதியில் அந்தக் கம்மிட்டியிலிருக்கும் மெம்பர்களின் பெயர்களை உடனே தெரிவிக்கவேண்டும்.

(5) நிதியின் காரியதரிசியினால் கையெழுத்திட்டு எழுத்து மூலமான அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு நபருக்கு, கடன் வாங்கும் சங்கங்களின் கணக்குகளைப் பார்த்தவுடன் பரீக்ஷிக்கவும், அவைகளைக் காட்டும்படி வற்புறுத்தவும், அவைகளிலிருந்து சில பாகங்களை எடுத்தெழுதிக்கொள்ளவும், அக்கம்பக்கத்தில் விசாரிக்கவும் பூர்ண அதிகாரம் உண்டு.

(6) நிதிக்கு அனுப்பப்படும் கடிதங்களில், மதுரையில் மேல் நகர வீதியிலே 230-ம் ந. உள்ள ஹிந்து சாசுவத நிதி, லிமிடெட், என்னும் நிதியின் காரியதரிசிக்கு என்று மேல் விலாசமெழுதவேண்டும்.

1911-1912ம் வருஷத்தில் வசூலித்தும் திருப்பிக்கொடுத்ததும் வாங்கிய கடன்களின் பட்டி.

வரிசை எண்.	ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கத்தின் பெயர்.	ஜில்லா.	மாதவருமானமாக வசூலானது.		மாதவருமானமாகத் திருப்பிக்கொடுத்தது.		மாதவருமானமாகத் திருப்பிக்கொடுத்தது.		மாதவருமானமாகத் திருப்பிக்கொடுத்தது.		மாதவருமானமாகத் திருப்பிக்கொடுத்தது.		ஏதாவது.
			ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.	
1	தொத்தேகாட்	அந்தியூர்	60	0	21	9	7	81	9	7	7	7	7—11
2	தொழுர்	செங்கற்பட்டு	10	0	3	9	7	13	9	7	23	7	7—11
3	புதுப்பட்டணம்	அந்தியூர்	85	0	27	3	4	112	3	4	29	7	7—11
4	[illegible]	செல்லூர்	60	0	21	9	7	81	9	7	22	8	8—11
5	[illegible]	செங்கற்பட்டு	15	0	4	12	10	19	12	10	27	8	8—11
6	[illegible]	,,	40	0	11	3	3	51	3	3	30	8	8—11
7	[illegible]	,,	200	0	56	0	0	256	0	0	7	9	9—11
8	[illegible]	வடார்காடு	185	0	48	3	3	178	3	3	26	9	9—11
9	[illegible]	குண்டூர்	200	0	72	0	0	272	0	0	9	11	11—11
10	[illegible]	சேலம்	200	0	64	0	0	264	0	0	10	11	11—11
11	[illegible]	செங்கற்பட்டு	200	0	72	0	0	272	0	0	22	11	11—11
12	கலியாம் பூண்டி	,,	100	0	36	0	0	136	0	0	27	11	11—11
13	பாக்கல் பட்டு	சேலம்	100	0	36	0	0	136	0	0	5	12	11—11
14	பனமரத்துப்பட்டி	,,	200	0	72	0	0	272	0	0	7	12	11—11
15	காவேரி பாக்கம்	வடார்காடு	200	0	56	0	0	256	0	0	24	12	11—11
16	சாமிநாதம்	அந்தியூர்	105	0	37	12	10	142	12	10	8	1	1—12
17	மேல்மலையனூர்	தென்னார்காடு	125	0	45	0	0	170	0	0	9	1	1—12
18	[illegible]	சேலம்	200	0	72	0	0	272	0	0	18	1	1—12
19	[illegible]	செங்கற்பட்டு	195	0	54	9	7	249	9	7	19	1	1—12

1911-1912-ம் கோ-ஆபரேடிவ் வருஷத்தில் ஸர்க்கார் கடன்களைத் திருப்பிக்கொடுத்ததைக் காட்டும் பட்டி.

வரிசைக்கிரமமான நம்பர்.	ரெஜிஸ்டர் நம்பரும் சங்கத்தின் சுருக்கமான பெயரும்.	ஜில்லா.	பாக்கியாயிருக்கும் அசல் தொகை.			இத்தனையாவது தவணையென்பது.	பாக்கியாயிருக்கும் வட்டித் தொகை.			பாக்கியாயிருக்கும் அசல், வட்டி இவைகளின் மொத்தத் தொகை.			பாக்கியான தேதி.	ஷரா.
			ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.		
20	23 சூரேபள்ளி ...	குண்டூர்	200	0	0	மூன்றாவது	61	0	0	264	0	0	21—1—12	
21	77 தூதி குண்டாபள்ளி ...	கடப்பை	20	0	0	முதலாவது	8	0	0	28	0	0	27—1—12	
22	6 வீளாத்திகுளம் ...	திருநெல்வேலி	85	0	0	நான்காவது	23	12	10	108	12	10	30—1—12	
23	51 சள்ளிப்பத்து ...	செங்கற்பட்டு	100	0	0	இரண்டாவது	36	0	0	136	0	0	31—1—12	
24	53 பியாபள்ளி ...	கர்நூல்	55	0	0	,,	19	12	10	74	12	10	4—2—12	
25	7 நீடாமங்கலம் ...	தஞ்சாவூர்	200	0	0	நான்காவது	56	0	0	256	0	9	5—2—12	
26	54 வஜ்ரகரூர் ...	அநந்தப்பூர்	200	0	0	இரண்டாவது	72	0	0	272	0	0	7—2—12	
27	55 குண்டக்கல் ...	,,	200	0	0	,,	72	0	0	272	0	0	8—2—12	
28	9 மெலட்டூர் ...	தஞ்சாவூர்	115	0	0	நான்காவது	32	3	2	147	3	2	11—2—12	
29	85 சாவிலிப்பாடு ...	கிருஷ்ணா	5	0	0	முதலாவது	2	0	0	7	0	0	11—2—12	
30	24 கூடூர் ...	நெல்லூர்	200	0	0	மூன்றாவது	64	0	0	264	0	0	19—2—12	
31	10 நந்தலூர் ...	கடப்பை	120	0	0	நான்காவது	33	9	7	153	9	7	14—3—12	
32	56 நாகயலங்கா ...	கிருஷ்ணா	200	0	0	இரண்டாவது	72	0	0	272	0	0	15—3—12	
33	57 திம்மன்செர்லா ...	அநந்தப்பூர்	200	0	0	,,	72	0	0	272	0	0	27—3—12	
34	11 நெம்மிலி ...	செங்கற்பட்டு	40	0	0	நான்காவது	11	3	3	51	3	3	18—4—12	
35	30 வால்குடி ...	திருச்சினாப்பள்ளி	200	0	0	மூன்றாவது	64	0	0	264	0	0	1—5—12	
36	61 போந்தவாக்கம் ...	செங்கற்பட்டு	200	0	0	இரண்டாவது	72	0	0	272	0	0	1—5—12	
37	12 வடநாங்கூர் ...	வடார்காடு	100	0	0	நான்காவது	28	0	0	128	0	0	6—5—12	
38	13 கம்பிபுரம் ...	திருநெல்வேலி	45	0	0	,,	12	9	7	57	9	7	30—6—12	

1911-1912-ம் கோ-ஆபரேடிவ் வருஷத்தில் ஸர். டி. எம். ஹாமில்டன் என்பவரின் கடன் நிதியைத் திருப்பிக்கொடுத்ததைக் காட்டும் பட்டி.

வரிசைக்கிரமமான நம்பர்.	ரெஜிஸ்டர் நம்பரும் சங்கத்தின் சுருக்கமான பெயரும்.	ஜில்லா.	பாக்கியாயிருக்கும் அசல் தொகை.			இத்தனையாவது தவணையென்பது.	பாக்கியாயிருக்கும் வட்டித் தொகை.			பாக்கியாயிருக்கும் அசல், வட்டி இவைகளின் மொத்தத் தொகை.			பாக்கியான தேதி.	ஷரா.
			ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.		
1	53 பியாபள்ளி ...	கர்நூல்	30	0	0	முதலாவது	6	0	0	36	0	0	6—7—11	
2	6 வீளாத்திகுளம் ...	திருநெல்வேலி	30	0	0	இரண்டாவது	5	6	5	35	6	5	7—9—11	
3	1 திரூர் ...	செங்கற்பட்டு	50	0	0	,,	9	0	0	59	0	0	9—11—11	
4	47 தர்மாவரம் ...	அநந்தப்பூர்	23	12	0	முதலாவது	4	12	0	28	8	0	20—12—11	
5	32 கொத்தகோட்டா ...	,,	20	0	0	இரண்டாவது	3	9	7	23	9	7	18—12—11	
6	2 கீழச்சேரி ...	செங்கற்பட்டு	50	0	0	,,	9	0	0	59	0	0	31—1—12	
7	11 நெம்மிலி ...	,,	30	0	0	மூன்றாவது	4	12	10	34	12	10	23—2—12	
8	16 அவிஞ்சிவாக்கம் ...	,,	50	0	0	,,	8	0	0	58	0	0	23—2—12	
9	14 புக்கபட்டணம் ...	அநந்தப்பூர்	30	0	0	,,	4	12	10	34	12	10	28—2—12	
10	10 நந்தலூர் ...	கடப்பை	30	0	0	,,	4	12	10	34	12	10	9—3—12	
11	37 ஐமீன் துங்கம்பாக்கம் ...	செங்கற்பட்டு	20	0	0	இரண்டாவது	3	9	7	23	9	7	25—3—12	
12	24 கூடூர் ...	நெல்லூர்	50	0	0	மூன்றாவது	8	0	0	58	0	0	5—4—12	
13	13 கம்பிபுரம் ...	திருநெல்வேலி	30	0	0	,,	4	12	10	34	12	10	9—4—12	
14	48 மேல் மலையானூர் ...	தென்னார்க்காடு	30	0	0	இரண்டாவது	5	6	5	35	6	5	26—4—12	
15	31 ஆனைக்காடு ...	தஞ்சாவூர்	25	0	0	,,	4	8	0	29	8	0	20—5—12	

சேலம் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்க்
(லிமிட்டெட்)

(1904-ம் வருஷத்திய இந்தியா ஆக்ட்டு 10-வதுப்படி ரிஜிஸ்தரானது.)

(மூலதனம் 100000 ரூபாய்கள்)

முழுதும் கொடுக்கப்பட்டுள்ளது.

வருஷந்தோறும் கணக்குகள் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களால் பரிசோதிக்கப்பட்டு வரவு செலவு கணக்கு சேலம் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யப்படுகிறது. வாங்கும் கடன் ஒன்றொன்றும் ஐக்கிய நாணய சங்க ரிஜிஸ்ட்ராரால் ஆமோதிக்கப்படுகிறது.

பாங்க் டிபாசிட்டுகள் பெற்றுக்கொள்ளுகிறது: நூற்றுக்கு ஆறுவீதம் வட்டி கொடுக்கிறது. டிபாசிட்டுகள் சேலத்து பாங்கு ஆபீசிலும் பட்டணம் இந்தியன் பாங்கிலும் செலுத்தலாம். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் இந்த பாங்கில் செலுத்தலாம்.

மற்ற ஏற்பாடுகள் கீழ் குறி, தவருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

செக்ரிடரி.

சேலம் ஜில்லா அர்பன்பாங்க், லிமிட்டெட், சேலம்.

Printed at the South Indian Press, 18, Linghi Chetty St., G.T., Madras.



மதிராசு புல்லடீன் ஆப் கோ-ஆபரேஷன்

டிசம்பர்மீ 10உ, 1911.

ஸொஸைடிகளால் நடத்தப்பட்ட கிரீடதாரண வைபவக் கொண்டாட்டம்.

அனந்தபூர் ஜில்லா.

நெ. 14 புக்கப்பட்டணம்.—ஏழைகளுக்கு அன்னமிடுதல், தேவாலயங்களில் உற்சவங்கள் செய்தல், ராஜாராணி படத்துடன் ஊர்கோலம், ராஜாங்கத்தைப்பற்றியும் ராஜபக்தியைப் பற்றியுமான பிரசங்கத்துடன் அந்த நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 47 தர்மாவரம்.—இந்த சமயத்திற்காக ஏற்பட்டுள்ள கொட்டகையில் 800 பேர்கள் கூடினார்கள். 800 ஏழை ஜனங்களுக்கு திருப்தியாக அன்னமளித்தார்கள். ஆங்கிலேய அரசாட்சியின் நன்மைகளைப் பற்றி டிவிஷனல் ஆபீசர் உபந்நியசித்தார். பிள்ளைகளுக்குத் தின்பண்டமளித்தார்கள். விளையாட்டுக்களில் ஜயித்தவர்களுக்கு வெகுமான மளித்தனர். கிராமம் முழுமையும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது. பாணவேடிக்கைகள் நடந்தேறின. பெரிய ஊர்கோலம் ஏற்பட்டது. எல்லா ஜாதிகளும் சேர்ந்து பஜனைகளும் உற்சவங்களும் செய்து கொண்டாடினார்கள்.

நெ. 55 குண்டக்கல்.—ஏழைகளுக்கு அன்னமிடுதல், பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல், தேவாலயங்களில் பூஜைகள், ராஜபடத்தை வைத்து அலங்கரித்து மிகுந்த பாணவேடிக்கைகளுடன் ஊர்கோலம் இவைகள் நடந்தேறின.

நெ. 57 திம்மன் சேர்லா.—அந்நாளில் நடந்த விஷயங்களாவன :—ராஜாங்கத்துக்குத் தந்தி கொடுத்தார்கள்; அதற்கு பதில் வந்தது. 150 ஏழைகளுக்கு சாப்பாடு போட்டார்கள். பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தார்கள். வாத்திய கோஷத்துடன் ஊர்கோலம். ஆலயங்களில் பூஜைகள், கொடிகளும் தோரணங்களும் போடப்பட்டன.

நெ. 74 எர்ரபோம்மன ஹள்ளி.—ஏழைகளுக்கு அன்னமளித்தல். சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல். விளையாட்டுகளில் வென்றவர்களுக்கு பரிசளித்தல்.

நெ. 88 நிம்பகல்லு.—பிள்ளைகளுக்கு மிட்டாய் முதலியவை கொடுத்து முடிசூட்டின வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 90 ஹரிசமுத்திரம்.—கற்கண்டு, பிஸ்கோத்து முதலானதுகள் பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டன. தேவாலயங்களில் உற்சவங்கள் நடந்தேறின.

நெ. 201 நரசாபுறம்—வீடுகளெல்லாம் சுத்திசெய்து வெள்ளை யடிக்கப்பட்டன. வீதிகளில் தோரணங்கள் கட்டி விளக்குகள் ஏற்றப்பட்டன. செடிகள் நடப்பட்டன, கோயில்களில் பூஜைகள் நடந்தேறின. மங்கள வாத்தியத்துடன் புரோக்ளமேஷன் வாசிக்கப்பட்டது. ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப் பற்றியும் ராஜபக்தியைப் பற்றியும் உபந்நியாசம். காரனேஷன் ஸ்கூல் கட்டுவதற்கு அஸ்திவாரம் போட்டார்கள். விளையாட்டுப் பந்தயங்கள். பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு மிட்டாய் மெடல் முதலியவைகள் கொடுக்கப்பட்டன. பாண வேடிக்கைகளுடன் ஊர்கோலம்.

நெ. 202 ராம்புறம்சங்கம்.— பானகங்கள் கொடுத்துக் கொண்டாடினார்கள்.

நெ. 211 கன்னேபள்ளி.—ஊர் முழுதும் தோரணங்களால் அலங்கரித்து பூஜைகள், சாப்பாடுகள், போட்டனர். ராஜாவைப்பற்றிப் பாடல்கள்பாடி ஊர்கோலம் செய்து நீடித்து வாழ்க எனக் கொண்டாடினார்கள்.

நெ. 243 சோமண்டப்பள்ளி.—முடிசூட்டின வைபவத்தின் ஞாபகத்திற்காக ஓர் சத்திரம் கட்டினார்கள். தேவாலயங்களில் பூஜைகள். ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றிப் பிரசங்கம். பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல், ஏழைகளுக்கு அன்னமிட்டு வஸ்திர மளித்தல், ஆட்டம் பாடல்களுடன் பாண வேடிக்கைகள் நடந்தேறின.

நெ. 244 குட்டூர்—தேவாலயங்களில் பூஜைகள் பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் மேளவாத்தியத்துடனும் பாண வேடிக்கைகளுடனும் ஊர்கோலம்.

நெ. 246 ஒண்டிமாமிடி.—ஏழைகளுக்கு அன்னதானம் தீபாராதனை, தேவாலயங்களில் உற்சவங்கள் முதலியவைகளுடன் கொண்டாடினார்கள்.

நெ. 250 சின்னமனத்தூரு.—சுவாமிக்கு வேஷ்டி வாங்கி அலங்கரித்து பூஜைசெய்து அந்நாளை கொண்டாடினார்கள்.

நெ. 258 சேருகூரு.—மங்கள வாத்தியங்களுடன் மிட்டாய் வகையறா கொடுத்து அத்தினத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 260 சோளமாரி.—தேவாலயங்களில் அபிஷேக முதலானவைகளுடன் பிள்ளைகளுக்குத் தின்பண்டங்கள் கொடுத்து கொண்டாடினார்கள்,

நெ. 276 தோட்டகட்டா.—முடிசூட்டின தினம் கோவில்களில் அபிஷேகங்கள் செய்யப்பட்டன.

நெ. 277 மாவேத்தூர் சங்கம்.—பிள்ளைகளுக்குத் தின்பண்ட மளித்தனர். தேவ பூஜைகள் நிறைவேறின, பட்டாபிஷேகக் கொண்டாட்டங்கள் பாண வேடிக்கைகள் நடந்தன.

நெ. 278 துராகுலப்பட்டணம்.—சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்து ஏழைகளுக்கு அன்னங் கொடுத்தனர்.

நெ. 282 வெஸ்ட்கோடி ஹல்லி.—கிராமத்திலுள்ள வீடுகளெல்லாம் வெள்ளையடித்து விளக்குகள் போடல். புதிய செடிகள் வைக்கப்பட்டன. ஏழைகளுக்கு அன்னதானம் வாத்திய முதலானதுகளுடன் ராஜபடத்தையும் கோவில்களிலுள்ள சுவாமிகளையும் வைத்து கொண்டாடினார்கள்.

நெ. 283 பைரவானிதிப்பா.—கிராமத்திலுள்ள வீடுகளெல்லாம் வெள்ளை யடித்து விளக்குகள் ஏற்றினர். ஏழைகளுக்கு அன்னமிட்டனர். ராஜபடத்தைவைத்துப் பூஜித்துக் கொண்டாடினார்கள்.

நெ. 293 எனுமுலதோட்டி.—தேவாலயங்களில் பூஜைகள். ஊர்ப் பிரதக்ஷணம். ஊரை முழுதும் சுத்தமாய்வைத்தல். விளக்குகள் வைத்து அலங்கரித்தல், பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல். 385 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது.

நெ. 294 கரிகானபள்ளி சங்கம்.—தேவாலயங்களில் பூஜைகள், ஏழைகளுக்கு அன்னமிடுதல், கிராமத்திலுள்ள வீடுகளெல்லாஞ் சுத்தஞ் செய்து வெள்ளை யடித்தல், செடிகள் வைத்தல், மத்தாப்பு, பாணவேடிக்கை, பாட்டு, ஊர்கோலங்கள்.

நெ. 297 ஸ்ரீகண்டாபுரம்.—கிராமச்சாவடியை அலங்கரித்து ராஜபடத்தை வைத்துப் பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்து, பாணவேடிக்கைகளுடன் ஊர்கோலம் நடந்தேறியது.

நெ. 299 சேன்னப்பள்ளி சங்கம்.—தேவாலயங்களில் பூஜைகள்; ஏழைகளுக்கு அன்னமிடுதல்; பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல்; ஊர்கோல பிரதட்சணம் முதலியவைகள் செய்து கொண்டாடினார்கள்.

நெ. 301 சிந்தார்லபள்ளி.—கிராமத்திலுள்ள வீடுகளைச் சுத்திசெய்தார்கள். ஏழைகளுக்கு அன்னதானம், ஊர்கோலம், பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு விளையாட்டுகள். லட்டு பத்தாசு மெடல் கொடுத்தல்.

நெ. 309 எர்ரகோண்டாபுரம்.—வீடுகளில் தோரணங்கள்கட்டி விளக்குகள் போடப்பட்டன. ஏழைகளுக்கு அன்னமிடப்பட்டது. சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. ஆடல் பாடல்களுடனும் பாண வேடிக்கைகளுடனும் ஊர்கோலம் நடந்தேறிற்று.

நெ. 321 கண்டுருப்பி சங்கம்.—கிராமம் முழுமையும் சுத்தப்படுத்தி அலங்காரம் செய்தார்கள். தேவாலயங்களில் பூஜை செய்தனர். செடிகள்

கட்டார்கள். சுவாமியுடன் போய் வனபோஜனம் செய்தார்கள். பாட்டு மேளங்கள் முழங்கின. ஏழைகளுக்கு அன்னமளித்தார்கள். பாணவேடிக்கைகள் நடந்தன.

நெ. 346 வார்லி சங்கம்.—இந்த ஊர் கொண்டாட்டங்களிற் சிலவைகளாவன:—வீடுகள் வெள்ளையடித்து விளக்குகள் ஏற்றப்பட்டன. 25 செடிகள் வைக்கப்பட்டன. 320 ஏழைகளுக்குத் திருப்திகரமான போஜன மளித்தார்கள். சிறுபிள்ளைகளுக்கு மிட்டாய்கள் இராஜபடத்தை அலங்கரித்து பாணவேடிக்கைகளுடன் ஊர்கோலம் நடத்தினர். கிருஷ்ணன் கோவில் கட்டுவதற்காகவும், புதிய பாடசாலை ஒன்று வைப்பதற்காகவும் கட்டிடம் கட்ட ஆஸ்திவாரம் போட்டார்கள். ராஜாங்கத்தின் நன்மைகளைப்பற்றிஉபன்யாசம்.

நெ. 347. சாப்பிரி.—கிராமத்தை சுத்தியுடன் அலங்கரித்தார்கள். செடிகள் நடப்பட்டன. தேவாலயங்களில் பூஜைகள், ஏழைகளுக்கு அன்னதானம் பிள்ளைகள் பாடின பிறகு மிட்டாய்கள் கொடை. 1000 விளக்குகள் ஏற்றப்பட்டன. பாணவேடிக்கைகள்.

நெ. 348. கம்பதூர் சங்கம்.—கிராம முழுமையும் விளக்குகளால் ஜொலித்தது. ஏழைகளுக்கு அன்னமிடுதல், சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய்; ஆட்டம் பாடல் முதலிய சந்தடிகளின் ஆர்ப்பாட்டங்கள்.

நெ. 362. ஜம்புகும்புலா சங்கம்.—சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியின் படத்தைவைத்து பூஜைசெய்து கொண்டாடினார்கள். சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுத்து, பாணவேடிக்கைகநடத்திக் கொண்டாடினார்கள்.

நெ. 376. எற்குடி சங்கம்.—443 ஏழைகளுக்கு சாப்பாடு. 453 விளக்குகள் ஏற்றப்பட்டன. பாட்டுகளுடன் கூடிய ஊர்கோலம் நடந்தது. குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் கொடுத்தார்கள்.

நெ. 377. நிஸாவல்லி சங்கம்.—தேவாலயங்களில் பூஜைகள், விளையாட்டுகள், மிட்டாய் கொடுத்தல். பாணவேடிக்கைகளுடன் கூடிய ஊர்கோலம்.

நெ. 390. பண்டிபாத்தி ஐக்கிய நாணய சங்கம்.—இந்த ஊர் கொண்டாட்டங்களாவன :—அந்தஸ்துள்ள ஊர்கோலம். ஆங்கிலேய அரசாட்சியைப் பற்றி கனம் வியாசராவின் உபந்நியாசம்.

நெ. 429 கானிசெட்டிபள்ளி.—ராஜபடத்தை வைத்து உற்சவம்செய்து பானகம், மிட்டாய்களுண்டு கொண்டாடினார்கள்.

நெ. 431. கோகீரா சங்கம்.—ஆலயத்தில் பூஜைகள் செய்து, விருந்துடன் கொண்டாடினார்கள்.

நெ. 446. வெங்கட்டரெட்டிபல்லி.—தேவாலயங்களில் பூஜைகள், ஏழைகளுக்கு அன்னமிட்டு வஸ்திரமளித்தல், சிறு பிள்ளைகளுக்குத் தின்பண்டமளித்தில்.

நெ. 491. ஹிந்துப்பூர் கோடி ஹள்ளி :—சர்க்கார் கிராம சாவடியில் படத்தைவைத்து விளக்கு ஏற்றி வைத்தார்கள். தேவாலயங்களில் பூஜைகள்.

பாணவேடிக்கைகளுடன் கூடிய ஊர்கோலம். கற்கண்டு, பழம் முதலியவை கொடுத்தல். ராஜ்ஜிய பரிபாலன பூஷித உபந்நியாசம்.

நெ. 490. இண்டுப்பூர் கள்ளூர்.—பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல்; ஏழைகளுக்கு அன்னமிடுதல் தேவாலயங்களில் பூஜைகள். எல்லாவிடங்களிலும் விளக்குகளேற்றல். பாணவேடிக்கைகள்.

நெ. 492. சோலசமுத்திரம் :—சாவடியின் அலங்காரம். போர்ட்ஸ்கூல் உபாத்தியாயர், கே. வெங்கட்ட ராவ் அவர்கள் ராஜபக்தியையும் ஆங்கிலேய அரசாட்சியைப்பற்றியும் உபந்நியாசம். ஐக்கியத்தைப்பற்றி அசுவத்த நாராயணராவ், காரியதரிசியின் பிரசங்கம். பிள்ளைகளுக்கு தின்பண்டமளித்தல். ஊர்கோலம்.

நெ. 493. மைடேகோல அக்கிரஹாரம்.—ஆஞ்சநேயர் கோவில் மெம்பர்களெல்லோரும் ஒன்றுகூடிப் பிள்ளைகள் எல்லோருக்கும் மிட்டாய் கொடுத்தார்கள். பாணவேடிக்கைகளுடன் கூடிய ஊர்கோலம் நிறைவேறியது. ஆங்கிலேய அரசாட்சியைப்பற்றியும் ஐக்கியத்தைப்பற்றியும் பிரசங்கம். பூஜைகளும் நிறைவேறின.

நெ. 495. லேப்பாக்ஷி.—தேவாலயங்களில் அபிஷேகங்கள், கிராமச் சாவடியில் எல்லாரும்சேர்ந்து தெய்வபக்தி ராஜபக்தி பிரஜைகளுக்கு ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றியும், கோவாபரேடிவ் சொசைடிகளின் ஏற்பாட்டினால் ஏழைகளுக்கு உண்டாயிருக்கும் சௌகரியத்தைப் பற்றியும் பேசினார்கள்.

நெ. 502. இண்டுப்பூர்.—தேவாலயங்களில் பூஜைகள். வெகு நேர்த்தியான சாப்பாடுகள் எல்லோருக்கும் போடப்பட்டன.

நெ. 504. பரிசி சங்கம்.—தேவாலயங்களில் பூஜைகள்; பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன.

நெ. 508. சிறுகோலம் சங்கம்.—அன்றயதினம் நடந்தவைகளாவன :—ஆலயங்களில் பூஜைகள், சிறுவர்களுக்குத் தின்பண்டமளித்தல். கிராமச் சாவடி அலங்காரம். சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினியாருடைய படத்திற்கு பூஜை.

நெ. 518. மனசமுத்திர சங்கம்.—பிள்ளைகளுக்கு தின்பண்டமளித்தல்; ஏழைகளுக்கு அன்னதானம்., ஆலயங்களில் பூஜைகள். ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றி உபந்நியாசம்.

நெ. 515. உடுகூரு.—கிராமச்சாவடியில் ராஜபடத்தை அலங்கரித்து விளக்குகள்போட்டுப் பிள்ளைகளுக்கு மிட்டாய்கள்கொடுத்துக் கொண்டாடினார்கள்.

நெ. 574. மலுகூரு.—ராஜபடத்தை சந்தனம், புஷ்பம் முதலானதுகளுடன் அலங்கரித்துக் கிராமமுழுவதிலும் விளக்குகள் போட்டு, மேளவாத்தியங்களுடன் அத்தினத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 620. தனகல்லு.—பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தனர்.

வட ஆற்காடு ஜில்லா.

நெ. 4. காவேரிப்பாக்கம்.—சொசைடியின் மெம்பர்கள் ஊரிலுள்ள ஜனங்களுடன் சேர்ந்து முடிசூட்டு வைபவத்தைக் கொண்டாடினார்கள். பாடல்களுடன் ஊர்கோலங்கள் நடந்தேறின. வாழைப்பழம் மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன.

நெ. 12. வடநாங்கூர்.—தேவாலயங்களில் அபிஷேகம், பிள்ளைகளுக்குத் தின்பண்டங்கள் ஊர்கோலம் முதலியன.

நெ 17. சாலவேடு.—தேவாலயங்களில் அபிஷேகங்கள். பிள்ளைகளுக்கு சிற்றுண்டி அளித்தல். ஜனங்கள் எல்லோரும் சக்கிரவர்த்தினியாருக்கும் சக்ரவர்த்திக்கும் நன்மையுண்டாக வேண்டியதென்று தெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டார்கள்.

நெ. 164 வள்ளுவம்பாக்கம்.—ராஜாபடத்தை அலங்கரித்து ஊர்ப்பிரதக்ஷணம். ராஜா விளம்பரத்தைப் படித்து எல்லோருக்கும்தாம்பூலம் சர்க்கரை சுண்டல் முதலியவை அளித்து முடிசூட்டின வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 190. ஊக்கல்.—தேவாலயங்களில் அபிஷேகங்கள். சிறியோர் பேரியோர் எல்லோருக்கும் சர்க்கரை, வெற்றிலை முதலியவை கொடுத்தும் முடிசூட்டின தினத்தைச் சந்தோஷமாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 235. ஒழுகூர்.—கிராமத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் பூசைகள் நிறைவேறின. சிறியோர்களுக்குக் கற்கண்டு மிட்டாய் பழம் முதலியவைகளும் பெரியோர்களுக்கு சந்தனம் தாம்பூல முதலியனவும் அளித்தனர்.

நெ. 455. சேரி ஐயம்பேட்டை.—தேவாலயங்களில் எல்லாம் அபிஷேகம் செய்து அத்தினத்தைச் சந்தோஷமாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 456. வாலாஜா ஆலப்பாக்கம்.—தேவாலயங்களில் அபிஷேகங்கள். புரோக்ளமேஷன் வாசித்தல். பிள்ளைகளுக்குத் தின்பண்டமளித்தல்.

நெ. 457. திருப்பாற்கடல் சங்கம்.—உள்ளூரில் உள்ள ஆலயங்களுக்கு அபிஷேகங்கள் செய்யப்பட்டன. அவ்வூரில் 3-விளக்கு எப்போதும் ஏற்றும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

நெ. 473. சுமைதாங்கி.— தேவாலயங்களில் அபிஷேகம் பூஜைகள் நடந்தேறின. கவர்ன்மெண்டாரவர்களுடைய காருண்ய சீர் திருத்தங்களைப் பற்றி அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமான் பி. மார்க்கபந்து சர்மா அவர்களால் ஓர் உபந்நியாசம் செய்யப்பட்டது. ஜனங்களுக்குத் தாம்பூலம், தின்பண்டங்கள் முதலியவைகள் கொடுத்தனர்.

நெ. 22. தேன்னலி அர்பன்பாங்கு.—முடிசூட்டுதலை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். பாங்கு கட்டிடத்தை அலங்கரித்து விளக்குப் போட்டார்கள்.

நெ. 23. சூரப்பள்ளி.—முடிசூட்டின வைபவத்தை ஊர்கோலமுதலானதுகளுடன் மிட்டாய் கனிவர்க்கங்கள் கொடுத்துக் கொண்டாடினர்.

நெ. 39. தூமாபூடி.—பிள்ளைகள் பாடல்கள், சர்க்கரை பரிமாறுதல்.

நெ. 367. துக்கிராலா.—ஜார்ஜ் மெமோரியல் ஸ்கூல் என்னும் பேர் பிள்ளை பாடசாலைக்கு கொடுத்து அதற்கு ஓர் கட்டிடம் கட்டத் தீர்மானித்தார்கள். மெம்பர்கள் 705-ரூபாய் நன்கொடை கொடுத்தார்கள். போதிபூடி காந்தையா 1000 ரூபாய் கொடுத்தார். சூப்பர்வைசர் நாராயணமூர்த்தி 500-ரூபாய் பெறும்படியான புஸ்தகங்கள் கொடுத்தார். பெண்கள் பாடல்கள். பள்ளிப்பிள்ளைகளுக்கு பரிசு. ஏழைகளுக்கு அன்னமளித்தல். பஞ்சம பாடசாலை மாணுக்கர்களுக்குப் புஸ்தகங்கள் கொடுக்கப்பட்டன. ஆட்டம், பாட்டு, மேளம், பாண வேடிக்கைகளுடன் கூடிய ஊர்கோலம்.

நெ 368. கோலகலூர்.—தேவாலயங்களில் பூஜைகளுடன், மிட்டாய் முதலியவைகளைக் கொடுத்துக் கொண்டாடினார்கள்.

நெ. 373. சின்னகடலவாரு.—சிறுபிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல், பாடசாலைப் பிள்ளைகளின் விளையாட்டுகள், பலபத்ர பாத்தினி அநுமந்தராவ் அவர்கள் ஆங்கிலேய ராஜாங்கநன்மையைப்பற்றி உபந்நியாசம். ஜார்ஜ் காரனேஷன் ஹால் என்னும் கட்டடத்தைக் கட்ட கவர்மெண்டார் அடிஸ்தலம் இனமாகக் கொடுத்தால் கட்டுவதாக தீர்மானம். ஊர்கோலம் நடந்தது.

தென்னாற்காடு ஜில்லா.

நெ. 46. திண்டிவனம்.—300 பேர்களுக்கு T. K. வெங்கடராமய்யர் அவர்கள் வீட்டில் ஓர் விருந்து நடந்தது. பாண்டு (Band) முதலிய கீத வாத்தியங்கள்; பாங்கில் வெகு நேர்த்தியாக அலங்கரித்து விளக்குகள் போடப்பட்டன.

நெ. 71. முடியனூர்.—முடிசூட்டின வைபவத்தை மிகவும் சந்தோஷமாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 150. சங்கராபுரம்.—ஆங்கிலேய அரசாட்சியின் நன்மைகளைப்பற்றி பிரசங்கித்தார்கள். ராஜாராணி வைபவமாக நீடித்து வாழ்கவென மங்களங்களினால் முடிசூட்டின தினத்தைக் கொண்டாடினார்கள். தேவாலயங்களில் பூஜைகள். ராஜபடத்தை வைத்து ஊர்கோலம்.

நெ. 170. சாலான்குரிச்சி.—சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினியாருடைய படத்தை அலங்கரித்து நேர்த்தியான ஊர்கோலம் கொண்டாடப்பட்டது.

நெ. 255. வெள்ளிமேடு.—300 ஏழைகளுக்கு சாப்பாடு போடப்பட்டது. ஆங்கிலேய ராஜாங்கத்தின் நன்மைகளும் ஏழைக்குடியான ஜனங்களுக்கு கோ ஆப்ரேடிவ் சொசைடியால் உண்டான நன்மைகளைச்சொல்லி

மஹாராஜா இன்னும் நன்மை செய்வார்களென்று எல்லாரும் நம்புகிறோமென்றனர்.

நெ. 284. பழையசிறுவாங்கூர்.—ஊர் முழுமையும் விளக்குகளேற்றி அலங்கரிக்கப்பட்டது. ஜனங்களின் பொதுநன்மைக்கு வசூலான தொகையை உபயோகிக்கத் தீர்மானிக்கப்பட்டது. தேவாலயங்களில் அபிஷேகங்கள்,

நெ. 318. புதுப்பட்டு.—மாட்சிமைதங்கிய நமது சக்ரவர்த்தியார் அவர்கள் சக்ரவர்த்தினியார் அவர்களுக்கும் முடிசூட்டின வைபவத்தை மிக சிரேஷ்டமாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 354. மர்க்காணம்.—தேவாலயங்களில் விமரிசையான அபிஷேகம் செய்து ஏழைகளுக்குச் சாப்பாடுபோட்டனர்.

நெ. 381. வடக்கனந்தல்.—கிராமக் கோவில்களில் தீபங்கள் போட்டு பாட்டுக்கச்சேரி நடந்தேறியது. பூஜைகள் நடந்தேறின. சிறுவர்களுக்கும் சபா ஜனங்களுக்கும் தாம்பூலம் வழங்கப்பட்டது. பாணவேடிக்கைகள், பந்தயங்கள் நடந்தன.

நெ. 382 கோட்டாளம் :—கோயில்களில் பூஜைகளும், கிராமத்தில் அதிர்வெடிகளும் போடப்பட்டன. கிராமச்சாவடியண்டை பந்தல் போட்டு சக்கிரவர்த்தியின் படத்தை வைத்தனர். ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் பாட்டுப்பாடினார்கள். மிட்டாய்களும், மெடல்களும் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டன. தெருவுகள் சிங்காரிக்கப்பட்டன. ஊர்கோலம்.

நெ. 383 விலாம்பார்.—எவ்வித ஆலயங்களிலும் பூஜைகளும் அபிஷேகங்களும் நடந்தன. கனிவர்க்கங்கள், சர்க்கரை முதலானதுகள் பரிமாறப்பட்டன.

நெ. 384 மோகூர்.—கோவில்களிலெல்லாம் அபிஷேகங்கள். சிறுவர்களுக்குச் சிற்றுண்டி.

நெ: 387 அசகளத்தூர்.—பட்டாபிஷேக மகோற்சவ தினத்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

நெ. 388 வாரஞ்சாரம்.—ஒரு மகாசபை கூட்டி, ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டது. 101 அதிர்வெடிகள் போடப்பட்டன. ஒரு பள்ளிக்கூடமும், ஒரு பஜனைக்கூடமும் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. ஒரு விளக்கு ஸ்தம்பம் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டது. சக்கிரவர்த்தியினுடைய படத்தை யேந்திப் பஜனையுடன் ஊர்கோலம் வந்தார்கள். பிறகு ஏழை ஜனங்களுக்கு சாப்பாடும் போடப்பட்டது.

நெ. 397 விரியூர்.—கவர்ன்மெண்டார் குடிகளுக்குச் செய்யும் நன்மைகளையும் கோவாபரேடிவ் சொசைடிகளின் நன்மைகளையும் பற்றி உபந்நியாசம். சிறுவர் சிறுமியர்களுக்குச் சிற்றுண்டி தேவாலயங்களில் பூஜைகள் ஊர்கோலம்,

நெ. 529 நாகலூர்.—தேவாலயங்களில் பூஜைகள் நடந்தேறின வீடுகள் தோறும் சுசிகரம் செய்வித்தும், அதிக சந்தோஷகரமாய் முடிசூட்டின நாளைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

நெ. 547 தியாகராஜபுரம்.—இந்த சொசைடியார் அத்தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். ஊர்கோலம், பாட்டுக்கச்சேரி, சிறுவர்களுக்கு தின்பண்டம் அளித்தல், ஆலயங்களில் பூஜைசெய்தல் இன்னும் சகலவித கொண்டாட்டங்களும், கொண்டாடப்பட்டன.

நெ. 570 திருவண்ணமலை—இந்த ஊர் டிராமா கொட்டகையில் மெம்பர்கள் கூடி பழம் பாக்கு வெற்றிலை பறிமாறிக்கொண்டனர்.

பல்லாரி ஜில்லா.

நெ. 67. ஹிரேஹடகல்லி.— கோவில்களில் விளக்குப்போடுதல், பிள்ளைகளுக்கு மிட்டாய்கொடுத்தல், பாணவேடிக்கைகள் முதலியவை நடந்தன.

செங்கற்பட்டு ஜில்லா.

நெ. 1. திரூர்.— மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தியார் படத்தை அலங்காரம் செய்து, ஊர்கோலம், சங்கீதம் இவைகளுடன் ஜனங்கள்கொண்டாடி சந்தோஷித்தார்கள். மாணவர்களுக்கு மிட்டாய், பழங்கள் முதலியன கொடுக்கப்பட்டன.

நெ. 2. நீழச்சேரி.— சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினியார் அவர்களுக்கு டில்லிக்கு தந்திகொடுத்து மகுடாபிஷேகத்தைக் கொண்டாடினார்கள்:— கிராமத்தில் ரோமன்காதொலிக் சர்ச்சில் பூஜை நடத்தப்பட்டது. ஜார்ஜ் சக்ரவர்த்தியாரவர்களின் ஞாபகத்திற்காக ஜார்ஜ் ரோட் என்னும் கிராம் ரோட்டு கிராமத்தாரின் சொந்த கஷ்டத்தாலும் சொந்த திரவியத்தாலும் செய்துகொள்ள ரெவரெண்டு ஏ. மெக்லானி அவர்களால் வேலை துவக்கப்பட்டது. பள்ளிச் சிறுவர்களாலும் சிறுமிகளாலும் வேடிக்கைகள் ஆட்டங்கள் பாட்டுகள் முதலியவைகள் நடந்தன. சிறுவர்களுக்கு தின்பண்டமளித்தல், 600 ஏழை ஜனங்களுக்கு அன்ன மளித்தல், இந்துமத ஆலயங்களில் உற்சவங்கள் ஆகிய இவை நடத்தப்பட்டன.

நெ. 3. காஞ்சீபுரம் டவுன்பாங்கு.—முடிசூட்டுதலின் கொண்டாட்டங்களாவன:—ஒரு பந்தல் பாங்குக்கு முன் போடப்பட்டது. கொடிகள் அதின்மேல் நடப்பட்டன. பாங்கின் கட்டிடம் அலங்கரிக்கப்பட்டது. ராஜா, ராஜபத்தினி இவர்கள் படத்தை வைத்துக் கொண்டாடப்பட்டது. வெற்றிலை பாக்கு சந்தனம் கொடுக்கப்பட்டன; தேவாலயங்களில் பூஜைகள்,

நெ. 5. தாமல் விவசாய பாங்கு.—கிராமச் சாவடியில் ராஜபடத்தை வைத்து அலங்காரம் செய்து, கோவிலில் ஸ்வாமிக்குப் போடும் பெரியபட்டுக் கொடை முதலியவைகளுடனும் மேளம் நாகசுரம் முதலிய வாத்தியங்களுடனும் ஊர்கோலம். பிள்ளைகள் பாடல்கள். பிள்ளைகளுக்கு மெடல்கள் அளித்தல். சந்தனம் தாம்பூலமளித்தல்; ஆபீசில் 100 விளக்குக்குமேல் போடப்பட்டது. பாங்கின் காரியதரிசியால் சக்ரவர்த்தியவர்கள் பேரால் ஒரு தோப்பு வைக்கப்பட்டது.

நெ. 33. தோழூர்.—புரோகிளமேஷன் வாசிக்கப்பட்டது. பாட்டுகளுடன் ஊர்கோலம். 125 ஏழைகளுக்கு அன்னதானம் செய்யப்பட்டது. தேவாலயங்களில் அபிஷேகங்கள். எல்லா மதத்தைச்சேர்ந்த பிள்ளைகளுக்கும் தின்பண்டங்கள் கொடுக்கப்பட்டன. சந்தனம், தாம்பூல முதலியவை கொடுத்து அந்நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 37. ஜமீன் நங்கம்பாக்கம்.—தேவாலயங்களில் பூஜைகள். 50 பேருக்குமேல் அன்னதானம்; தாம்பூலம் சர்க்கரை, பழம், முதலியவை கொடுத்தார்கள். ஏராளமான விளக்கு முதலானவைகளுடன் ஊர் கோலம். முடி சூட்டும் நாள் கொண்டாட்டமாயிருந்தது.

நெ. 41. உத்தரமல்லூர் பாங்கு.— வாத்தியம். ராஜ விஸ்வாச பிரசங்கம். சிறுவர்களுக்குத் தின்பண்டம் கொடுத்தல். சங்கீதக் கச்சேரி. சந்தனம் தாம்பூலம். ஆபீசில் தீபாலங்காரம் செய்தல் முதலியன.

நெ. 51. கள்ளிப்பட்டு.—ராஜ படத்தை வைத்து ஊர்கோலம் வந்து ஏழைகளுக்கு அன்ன வஸ்திரமும் கொடுத்துக் கொண்டாடினார்கள்.

நெ. 61. போந்தவாக்கம்.—60 ஏழை ஜனங்களுக்கு சாப்பாடு போடப்பட்டது. சங்கத்தின் ஆபீசில் சாயந்திரம் விளக்குகள் போடப்பட்டன.

நெ. 91. திருப்பந்தியூர்.—விடியற் காலையிலேயே கோவில்களில் அதிர்வெடி போட்டார்கள், ஊரெல்லாம் சுத்தப்படுத்தப்பட்டது. ஏலிமெண்டரி பாடசாலையை அலங்கரித்திருந்தனர். தேவாலயங்களில் பூஜைகளும் அபிஷேகங்களும் நிறைவேறின. டெல்லியின் பிரபாவத்தைப்பற்றியும் ராஜபக்தியைப்பற்றியும் ஸ்ரீ ஸு. பாபய்ய நாயுடு பிரசங்கித்தார்.

நெ. 92. மோலசூர் ஐக்கிய நாணயச்சங்கம்.—கோயில்களில் பூசைகள் செய்யப்பட்டன. அதிர்வெடிகள் போடப்பட்டன. 150 ஏழை ஜனங்களுக்குச் சாப்பாடு போடப்பட்டது. பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. ஊர்கோலம்.

நெ. 97. அக்கமாபுரம்.—கிராமத்திலும், வீடுகளிலும், ஆலயங்களிலும் தீபங்கள் ஏற்றினார்கள். அபிஷேகங்கள் செய்யப்பட்டன. பாடசாலை மாணக்கர்களுக்குத் தின்பண்ட மளித்தல். 100 ஏழைகளுக்கு சாப்பாடு.

நெ. 99. நரசிங்கபுறம்.—தேவாலயங்களில் பூஜைகள். பிள்ளைகள் பாடல், பிள்ளைகளுக்கு வெகுமானங்கள் முதலியவை யளிக்கப்பட்டன.

நெ. 100. கருங்குழி ராஜகோபாலாசாரி கிராம நாணயசங்கம்.—ராஜபக்தியைப் பற்றியும், ராஜாங்கத்தின் நன்மையைப்பற்றியும் பிரசங்கம். ஏழைகளுக்கு அன்னவஸ்திர மளித்தல். பிள்ளைகளின் விளையாட்டுகள். கால க்ஷேபம், ஊர்கோலம் முதலியன.

நெ. 134. கம்மாளம்பூண்டி.—கிராமத்திலுள்ள வீடுகள் அலங்கரிக்கப்பட்டன. கோவில்களில் அபிஷேகங்கள் நடந்தேறின. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுடைய விளையாட்டு நடந்தது. ஆண், பெண் பிள்ளைகளுக்குத் தின்பண்டங்கள் கொடுக்கப்பட்டன. ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றிப் பிரசங்கமும் நடைபெற்றது.

நெ. 146. கப்பங்கோட்டூர் கிராம நாணயச் சங்கம்.—கிராமத்திலுள்ள அனைவரும் ஒன்றுகூடி ராஜபடத்தை அலங்கரித்து வாழ்த்திப் பிள்ளைகளைக் கோலாட்டம் போடச்செய்து தின்பண்டமளித்தனர். ஏழைகளுக்குச் சாப்பாடு போடப்பட்டது. தேவாலயங்களில் பூஜைகள். ஊர்கோலம்.

நெ. 154. மேல்தண்டரை.—சர்க்கரை முதலியவைகள் வழங்கி, முடி சூட்டின வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 155. சேரப்பாக்கம்.—தேவாலயங்களில் அபிஷேக உற்சவங்களாகி, ஜனங்களுக்குத் தளிகை முதலியவை கொடுத்தனர்.

நெ. 158. நெல்வாய்.—ஒவ்வொரு வீட்டிலும் தோரணங்கள் கட்டி வீதிகளைச் சுத்தம்செய்து இழைகோலம்போட்டு அலங்காரங்கள் செய்தார்கள். வேட்டுகள் போடப்பட்டன. தேவாலயங்களில் பூஜைகள் நடந்தன. சிறுவர்களுக்குத் தின்பண்ட மளித்தனர்; எல்லா விடங்களிலும் விளக்குகள் ஜொலித்தன. ஊர்கோலம் நடந்தது.

நெ. 175. ஓரகடம் ஐக்கிய நாணயச் சங்கம்.—11-கோயில்களில் பூசைகள் நடந்தன. அதிர்வெடிகள் போடப்பட்டன. சாயந்திர வேளையில் பாட்டுக் கச்சேரிகள் நடந்தன. ஊர்கோலம்.

நெ. 187. காட்டயாம்பந்தல்.—ஈசுவரன் கோயிலில் பூஞ்செடிகள் வைக்கப்பட்டன. ஏழைகளுக்கு அன்னமிட்டார்கள். கோயில்களில் அபிஷேகங்கள் நடந்தேறின. ஊர்கோலம் நடந்தது.

நெ. 188. ஒழையூர் ஐக்கிய நாணயச்சங்கம்.—சங்கத்தில் சக்ரவர்த்தி பட்டாபிஷேகம் விமர்சையாய்க் கொண்டாடப்பட்டது.

நெ. 191. அம்மையப்பநல்லூர்.—தர்மம் முதலியவைகள் செய்து மிகவும் சிரேஷ்டமாய் முடிசூட்டின நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 192. மதுராந்தகம் சங்கம்—முடி சூட்டுக் கொண்டாடல் வெகு விமரிசையாய் நிறைவேறிற்று. ஏழைகளுக்கு அன்ன வஸ்திரங்களளிக்கப்பட்டன. கட்டிடங்களில் விளக்குகள் போட்டார்கள்.

நெ. 212. பெருநகர் ஐக்கியநாணயச் சங்கம்.—6-மணியிலிருந்து 10-மணி வரையிலும் கோயில்களில் பூசைகள் நடந்தன. 12-மணியிலிருந்து 3-மணி வரையில், பிள்ளைகளுக்கு மிட்டாய்களும் பென்சில்களும் கொடுக்கப்பட்டன.

நெ. 225. சாலபாக்கம்.—தேவாலயங்களில் விசேஷ அபிஷேகம் ஆராதனைகள் நடத்தியதோடு திருவிளக்குகளும் வைக்கப்பட்டன. அநேக வாத்தியங்களுடன் ஊர்கோலம். மிஷின் ஸ்கூலில் கிருஸ்து ஆராதனைகள் விமரிசையாய்ச் செய்விக்கப்பட்டன. மகம்மதியர்களின் பள்ளிவாசலில் நமாஸ் முதலானதும் செய்விக்கப்பட்டது. 650-ஏழை ஜனங்களுக்கு அன்னம் அளித்து, பிள்ளைகளுக்குத் தின்பண்டம் கொடுத்தனர். இந்திய சக்ரவர்த்தியாருடைய விளம்பரத்தை வாசித்து ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றி உபந்நியாசஞ் செய்தார்கள்.

நெ. 226. களத்தூர்.—பாண வேடிக்கை ஊர்கோலத்துடனும், வேட்டுகள் முதலியவைகளுடனும், கொண்டாடினார்கள். ஜார்ஜ் சொசைடி ஹால் என்னும் ஓர் கட்டிடம் கட்டவுந் தீர்மானித்தார்கள்.

நெ. 247. வேங்கச்சேரி ஆதபாக்கம் சங்கம்.—கோவில்களில் அபிஷேகமும், ஊர்கோலம் முதலிய வேடிக்கைகளும் அன்று நடந்தன.

நெ. 262. வைப்பணை.—சிறுவர்களுக்குச் சிற்றுண்டிகள். ஏழைகளுக்குத் தர்மம் செய்தனர். ராஜபடத்தைப் பிரதக்ஷணம் செய்து கொண்டாடினார்கள்.

நெ. 311. காயார்.—ஆலயங்களில் அபிஷேகம். பாடசாலைப் பிள்ளைகளுக்கு தின்பண்டம். மேள வாத்தியம்.

நெ. 312. திருக்கழுக்குன்றம் சங்கம்.—இந்தவூரில் ஜனங்கள் கொண்டாடின வைபவங்கள் வெகு விமரிசையாயிருந்தன. சங்கத்தின் கட்டிடத்தை நேர்த்தியாய் அலங்கரித்து விளக்குகள் போட்டிருந்தார்கள்.

நெ. 313. பள்ளியகரம்.—பிள்ளைகளுக்குக் கற்கண்டு மிட்டாய் அளித்தல். ஆலயங்களில் பூஜைகள். கிராமமுழுவதும் விளக்குகள் போட்டுப் பட்டாபிஷேக மஹோற்சவத்தைக் கொண்டாடல்.

நெ. 314. குமாரவாடி ஐக்கிய நாணயச்சங்கம்.— சக்கரவர்த்தியின் படம் பூக்களால் சிங்காரிக்கப்பட்டது. ஏழை ஜனங்களுக்குச் சாப்பாடு போடப்பட்டது. சாயந்திரத்தில் பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. கோயில்களில் பூஜைகள் செய்யப்பட்டன. தேவாத்தியங்களுடன் சக்ரவர்த்தியார் படத்தை ஊர்கோலம் கொண்டுவந்தார்கள்.

நெ. 315. ஓரத்தி.—ஸர்வ ஆலயங்களில் அபிஷேகம், பாட்டுக்கச்சேரி முதலியவைகளுடன் முடிசூட்டின வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 333. புலிப்பாக்கம்.—தேவாலயங்களில் பூஜை நடந்தேறியது.

நெ. 335. அரியப்பெருமானூர்.—புரோக்ளமேஷன் வாசிக்கப்பட்டது. ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றியும், ஐக்கியத்தின் நன்மையைப்பற்றியும் உபந்நியாசம். தேவாலயங்களில் பூசைகள் நிறைவேறின. வீடுகளெல்லாம் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. பாட்டுக்கச்சேரியும் ஊர்கோலமும் நடந்தேறின.

நெ. 338. மதுரமங்கலம்.—தேவாலயங்களில் பூஜைகள், ராஜபடத்தை அலங்கரித்து சந்தோஷப் பாடல்கள்பாடிக் கற்கண்டு தாம்பூலம் முதலியவைகளைக் கொடுத்து முடிசூட்டின வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 339. சத்தரை.—சங்கத்தின் மெம்பர்கள், கிராமவாசிகள், ஜமீன்தார் இவர்கள் பின்வருமாறு கொண்டாடினார்கள்:—

கோயில்களில் அபிஷேகஞ் செய்தார்கள். 6-மணியிலிருந்து 11-மணி வரையிலும் சக்ரவர்த்தி சக்ரவர்த்தியினுடைய படங்களைத் தூக்கிக்கொண்டு ஊர்கோலம் வந்தார்கள். ஜமீன்தார் கச்சேரியில் 70 ஏழைஜனங்களுக்குச் சாப்பாடு போட்டார்கள்.

நெ. 343. கூவம்.—சங்கத்தின் செக்ரிடரி மஹாதேவ குருக்கள் ஐக்கியநாணய சங்கத்தைப்பற்றி உபந்நியாசம் செய்தார். பள்ளிப் பிள்ளைகளுக்கு தின்பண்டமளித்தல். ராஜவாழ்த்து பாடல்கள் பாடுதல். ஏழைகளுக்கு அன்னமளித்தல். ராஜபடத்தை அலங்கரித்து ஊர்கோலம். போர்ட் ஸ்கூல் மாஸ்டர் வெங்கோபய்யர் அவர்களால் ஆங்கிலேயர் ஆதீனத்தில் இந்தியாவின் நிலையின் பெருமையைப் போற்றினர்.

நெ. 356. இறையமங்கலம் ஐக்கியநாணயச்சங்கம்.— சங்கத்தின் மெம்பர்கள் சுமார் 100 பேயர் சங்கத்தின் ஆபீசில் டிசம்பர்மீ 12உ சாயந்திரம் 6-மணிக்கு சக்ரவர்த்தி பட்டாபிஷேகத்தைக் கொண்டாடக்கூடினார்கள். சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி படங்களை சிங்காரித்து ஜபித்தார்கள். பிறகு ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டது. காலக்ஷேபம் நடத்தப்பட்டது. மிட்டாய்களும் பழங்களும், வெற்றிலை பாக்குகளும் வந்திருந்தவர்களுக்குக் கொடுத்தபிறகு பகல் 12-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

நெ. 370 புதுப்பட்டு ஐக்கியநாணயச்சங்கம்.—பன்னிரண்டு மணிக்கு கோயில்களில் பூஜைகள் நடந்தன. ஏழை ஜனங்களுக்கு சாப்பாடுபோடப்பட்டது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு மிட்டாய்களும், பழங்களும், கொடுக்கப்பட்டன. 9-மணிக்கு சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி இவர்களுடைய படங்களை பந்தங்கள் பிரகாசிக்க பஜனைகளுடன் ஊர்கோலம் நடத்தப்பட்டது. இவ்வைபவங்களெல்லாம் மறுநாள் காலை 2-மணிவரையிலு மிருந்தன.

நெ. 373. கும்மிடிபூண்டி.—பிரசிடெண்டு வீட்டில் 300 பேர்கள் கூடினார்கள். தேவாலயங்களில் பூஜைகள் நடந்தேறின. பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன.

நெ. 375. செங்கற்பட்டு அர்பன் கோ-ஆபரேடிவ் சொசைடி.—சிறுபெண்கள் பாடசாலை பாலிகைகளுக்குத் தின்பண்ட மளிக்கப்பட்டது.

நெ. 380. **உத்தரமல்லூர் யூனியன்** :—இதனுடன் எல்லா சொசைடிகளும் முடிசூடும் வைபவத்தை வெகு விமரிசையாக கொண்டாடினார்கள். 11-வது 12-வது தேதிகளில் உத்தரமல்லூர் பாங்கு வெகு உற்சாகமாக கொண்டாடியது. சிறுபிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. ஒரு பாட்டுக்கச்சேரி நடந்தேறியது. சொசைடி கட்டிடங்களிலெல்லாம் விளக்குகள் ஏற்றப்பட்டன. இதற்காக வென்றே கவனஞ்செய்த பாடல்கள் பாடப்பட்டன.

நெ. 381. **சிறிய காஞ்சீபுரம் பாங்கு.**—பாங்கின் கட்டிடத்தை அலங்கரித்து விளக்குகள் போட்டிருந்தனர். ராஜா ராணிப் பட்டத்தைவைத்து ஆராதித்தார்கள். தாம்பூலம் பழம் முதலியவைகள் கொடுக்கப்பட்டன.

நெ. 406. **மாம்புதூர்.**—சிறுபிள்ளைகளுக்குச்சிற்றுண்டி யளித்தல். ஏழைகளுக்கு அன்னமளித்தல் முதலியவை செய்து அத்தினத்தைச் சந்தோஷமாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 437. **சோமங்கலம்.**—அபிஷேகம், பிள்ளைகளுக்கு மிட்டாய்கள், கிராம முழுமையும் விளக்குகள் முதலியவைகள் போட்டு முடிசூட்டின நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 445. **சானூர்.**—இதற்காக அமைக்கப்பட்ட பந்தலின்கீழ் ஒன்றுகூடி ராஜ உருவப்படத்தை அலங்கரித்தும் ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றிப் பிரசங்கம் செய்தும் ஊர்கோலம், அன்னதானம், கிராமாலங்காரம் முதலியவைகள் நடத்தியும் கொண்டாடினார்கள்.

நெ. 449. **புத்தளி ஐக்கிய நாணயச்சங்கம்.**—கோயில்களில் பூசைகள் நடந்தன. சக்கரவர்த்தியின் படத்தைப் பூக்களால் அலங்கரித்துக் கீத வாத்தியங்களுடன் ஊர்கோலம் கொண்டுவந்தார்கள். பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன.

நெ. 457. **திருப்பாற்கடல்.**—தேவாலயங்களில் விளக்குகள்போட்டுப் பூஜைகள் நடந்தேறின. கிராம முழுவதும் அலங்கரிக்கப்பட்டன.

461. **புட்ளூர்.**—முடிசூட்டின வைபவம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நெ. 468. **பட்டாளம்.**— கிராம முழுமையும் தோரணம், கொடி இவைகளினாலும் தீபங்களினாலும் அலங்கரிக்கப்பட்டது. தேவாலயங்களில் பூஜைகள் நிறைவேறின. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு வாழைப்பழம் அளிக்கப்பட்டது. பிள்ளைகளினால் விளையாட்டுகள், பாட்டுகள் நடந்தேறின. ஊர்கோலம். இராஜபக்தி விஷயமான காலக்ஷேபமுஞ் செய்யப்பட்டது.

நெ. 475. **வில்லிவாக்கம் சங்கம்.**—கோவில்களில் பூஜை முதலியவைகள்; பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு மிட்டாய்கள். 300 ஏழைகளுக்கு

நேர்த்தியான அன்னதானம். ராஜபடத்தை அலங்கரித்து மங்களவாத்தியங்களுடன் ஊர்கோலம் கொண்டாடினார்கள்.

நெ. 482 **பாக்கம் சங்கம்**—பாண்டு முதலிய மங்களவாத்தியங்களுடன் ஊர்கோலம் நடந்தேறியது. சந்தனமும் வெற்றிலைபாக்கும் பரிமாறப்பட்டன.

நெ. 483.—**பருத்திப்பட்டு ரூரல் கிடிட் சொசைடி.**—ஊர்முழுதும் அலங்காரம் செய்யப்பட்டது. ராஜ விளம்பரத்தைப்பற்றியும், ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றியும் பிரசங்கம் செய்யப்பட்டது. ராஜபடத்தை அலங்கரித்து வாத்தியத்துடன் ஊர்கோலம் வந்தனர். சொசைடி செக்ரிடரியான எ. வி. ஸ்ரீனிவாசாசாரியர் அவர்கள் டில்லிப் பட்டணத்தின் பூர்வீக விசேஷத்தைப்பற்றியும் ஜார்ஜ் சக்ரவர்த்தியாரைப்பற்றியும் உபந்நியாசம்செய்தார்.

நெ. 525. **ஸ்ரீபெரும்பதூர் ஐக்கிய நாணயச்சங்கம்.**—சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி இவர்களிருவரும் நெடுநாள் பெரும்பாக்கியத்துடன் வாழ்ந்திருக்க சங்கத்தின் மெம்பர்கள் சக்கிரவர்த்தி பட்டாபிஷேக தினத்தில்கூடி ஜபித்தார்கள். பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் அளிக்கப்பட்டன. சந்தனம், வெத்திலைபாக்குகள் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

535. **வங்காரம்.**—தேவாலயங்களில் அபிஷேகம். ராஜபடத்தை அலங்கரித்து சங்கீத மேளவாத்தியத்துடன் ஊர்கோலம். சந்தனம், சக்கரை வினியோகம் செய்யப்பட்டது.

நெ. 539. **பேரம்பாக்கம் ஐக்கிய நாணயச்சங்கம்.**—காலையில் 11 இந்து கோயில்களில் பூசைகளும் மகம்மதியர்கள் கோயில்களில் ஜபங்களும் நடந்தன. அன்றபதினத்தில் 300 ஏழைஜனங்களுக்கு சாப்பாடு போடப்பட்டது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குத் தின்பண்டங்கள் கொடுக்கப்பட்டன. பிள்ளைகளுக்கு விளையாட்டில் பந்தயம்வைத்துப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி இவர்களுடைய படங்களை கீத வாத்தியங்களுடனும், விளக்குகளுடனும் அன்றய சாயந்திரம் ஊர்கோலம் நடத்திவந்தார்கள். வீடுகள்தோறும் தெருக்கள்தோறும் விளக்குகள் போடப்பட்டன.

நெ. 540. **மப்பேடு.**—ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. பிள்ளைகளுக்குக் கற்கண்டு முதலியவை கொடுக்கப்பட்டன. தேவஸ்தானங்களில் பூஜைகள் நடந்தேறின. ஏழைகளுக்கு அன்ன முதலியவைபோட்டு அந்நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 541. **இருளஞ்சேரி ஐக்கிய நாணயச்சங்கம்.**—கோயில்களில் பூசைகள் செய்யப்பட்டன. 50 ஏழை ஜனங்களுக்குச் சாப்பாடு போடப்பட்டது. 100 பிள்ளைகளுக்கு மிட்டாய்களும், அப்பங்களும் கொடுக்கப்பட்டன. சாயந்தரம் கீதவாத்தியங்களுடன் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி இவர்களுடைய படங்களுக்குப் புஷ்பமாலைகள் போட்டு ஊர்கோலம் வந்தார்கள்,

நெ. 542. **குமாரச்சேரி.**—தேவாலயங்களில் அபிஷேகம்; சக்கரவர்த்தி அவர்களின் படத்தைவைத்து ஊர்கோலம்செய்து கொண்டாடினார்கள்.

நெ. 563. **ஆலத்தூர்.**—பஜனை, பூஜை முதலானவைகளினால் முடிசூட்டின நாள் கொண்டாடப்பட்டது.

நெ. 565 **காட்டங்குளம்.**—தேவாலயங்களில் பூஜைகளும் அபிஷேகங்களும் நிறைவேறின. விளக்குகள்போட்டு அத்தினத்தை திருவிழாவாகக் கொண்டாடினார்கள்.

நெ. 566. **பிள்ளையார்குப்பம்.**—ஏழைகளுக்கு அன்னமளித்தல். சிறுவர்களுக்குத் தின்பண்டமளித்தல் முதலியவை செம்மையாய் நிறைவேறின. ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார்கள். பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தார்கள்; சந்தோஷத்துடன் அந்நாள் கொண்டாடப்பட்டது.

நெ. 567. **ஜமீன் முதுகூர்.**—தேவாலயங்களில் அபிஷேகங்கள்; பெருமாள் புறப்பாடு, ஜனங்களுக்கு சர்க்கரை கடலை முதலியவை கொடுக்கப்பட்டன. முடிசூட்டலைச் சந்தோஷமாகவே கொண்டாடினார்கள்.

நெ. 591. **சுண்ணும்புக்குளம்.**—தேவாலயங்களில் பூஜைகள்; 300 ஏழைகளுக்கு அன்னமளித்தல். ராஜபடத்தைவைத்து ஊர்வலம் வந்து வெகு சிரேஷ்டமாய் முடி சூட்டினதினத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 604. **பொன்னேரி சங்கம்.**—ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்து அந்நாள் கொண்டாடப்பட்டது.

நெ. 623. **திருவள்ளூர்.**—சங்கத்தின் கட்டிடங்களில் விளக்குகள் போட்டார்கள். கற்கண்டு புஷ்பம் முதலியவை பறிமாறினார்கள்.

நெ. 627. **நெல்லிக்குப்பம் ரூரல் கிரேடிட் சொஸைடி.**—தேவாலயங்களில் அபிஷேகம், பிள்ளைகளுக்குத் தின்பண்டம், இவைகளுடன் பட்டாபிஷேக வைபவத்தைப்பற்றியும் ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றியும் பிரசங்கித்துக் கொண்டாடினார்கள்.

நெ. 628. **ஈக்காடு.**—தேவாலயங்களில் பூஜைகள். பிள்ளைகளுக்கு மிட்டாய்கள்; சிறிய செடிகள் நடப்பட்டன.

நெ. 632. **திருமழிசை.**—200 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. தேவாலயங்களில் அபிஷேகங்கள். நமது சக்ரவர்த்தினியும் அவர் பத்தினியும் நீடூழி வாழவேண்டுமென்று ஆசீர்வதிக்கப்பட்டது.

நெ. 2. **கீழச்சேரி கோவாபரேடிவ் யூனியன்.**—தேவாலயங்களில் பூஜைகள். 150 சிறுபிள்ளைகளுக்கு சாப்பாடு போடப்பட்டது. 100 சிறுபிள்ளைகளுக்குத் தின்பண்ட மளிக்கப்பட்டது. பிறகு ராஜாங்க அறிக்கை வாசித்து இத்தினத்தைக் கொண்டாடினார்கள்.

சித்தூர் ஜில்லா.

நெ. 77. **தாட்டிகுண்டபல்லி.**—பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு மிட்டாய் முதலியவை கொடுத்தார்கள். இராஜ படத்தைவைத்துப் பாட்டுகள் பாடிப் பேரானந்தத்தை அடைந்தார்கள்.

நெ. 103. **சந்திரகிரி சங்கம்.**—சிறு பிள்ளைகளுக்கு தின்பண்டமும் பெரியோர்களுக்கு சந்தனம் வெற்றிலைபாக்கு முதலியவைகளுமளித்தார்கள்; சங்கத்தில் அன்றிரவு வெகுஜொலிப்பாக விளக்குப் போட்டார்கள்; தேவ பூஜைகள் நடந்தேறின.

கோயம்பத்தூர் ஜில்லா.

நெ. 26. **கோயமுத்தூர் அர்பன் பாங்கு.**—பாங்கின் கட்டிடத்தை சுத்தப்படுத்தி வெள்ளை யடித்து விளக்குகள் போட்டனர்.

நெ. 73. **புதுப்பாளையம்.**—100 ஏழைகளுக்கு அன்னதானம். பிள்ளைகளுக்கு மிட்டாய்கள். தேவாலயங்களில் பூஜைகள்.

நெ. 184. **கம்பிளியாம்பட்டி.**—மாணாக்கர்களுக்குள் பந்தய விளையாட்டு. சிறு பிள்ளைகளுக்கு சிற்றுண்டிகளும் கற்கண்டு வாழை பழமுமளித்து, தேவாலயங்களில் பூஜைகள் நிறைவேற்றினர்.

நெ. 185. **கைக்கோள பாளையம்.**—கோவில்களில் அபிஷேகங்கள். பிள்ளைகளுக்குச் சிற்றுண்டிகள். ஏழைகளுக்கு வஸ்திர முதலியவை யளித்தல். ராஜபடத்தை அலங்கரித்து பாணவேடிக்கையுடன் ஊர்கோலம்.

நெ. 186. **வாய்பாடிசங்கம்.**—100 ஏழைகளுக்கு அன்ன மளித்தார்கள். வேஷ்டிகள் தர்மும், எல்லாக்கோயில்களிலுமுள்ள சுவாமிகளுக்கு அபிஷேகமும், நிறைவேறின.

நெ. 231. **பெருந்துரை ஐக்கிய நாணயச்சங்கம்.**—26 பஞ்சமர் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குத் துணிகள் கொடுக்கப்பட்டன. சாயங்திரத்தில் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி படங்களை ஊர்கோலம் கொண்டு சென்றனர்.

நெ. 316. **விஜய மங்கலம்.**—ஐக்கியத்தின் நன்மைகள் நன்றாய் உபந்நியசிக்கப்பட்டன. ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. ஊர்கோலம் நடந்தேறி மிகவும் சிரேஷ்டமாய் கொண்டாடப்பட்டது.

நெ. 317. **காங்கயம்.**—ஊர்கோலம்; ஜனங்களுக்கு சர்க்கரை வினியோகம் செய்து முடி சூட்டின நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 344. **சுள்ளிபாளையம்.**—ஏழைகளுக்கு சாப்பாடுபோடல், பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல், ராஜபக்தியைப் பற்றி உபன்யாசம் முடி சூட்டின நாளை வெகுசிரேஷ்டமாக கொண்டாடினார்கள்.

நெ. 344. கள்ளிப்பாளையம்.—தேவாலயங்களில் அபிஷேகம், ஏழைகளுக்கு சாப்பாடு, பிள்ளைகளுக்கு மிட்டாய் வகையறா இவைகளுள்பட அளிக்கப்பட்டன.

நெ. 360. காரத்தொழுவு.—சக்ரவர்த்தி அவர்களின் உருவப் படத்தை வைத்து வெகு விமரிசையாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 386. பாலக்கரை.—சுவாமிகளுக்கு அபிஷேகங்கள் தீபாராதனைகள் நிறைவேறின. ஊர் பிரதட்சனம். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு தின்பண்டம், இனாம் முதலானது கொடுத்தனர்.

நெ. 390. மூங்கில் பாளையம்.—ஐக்கிய நாணயச்சங்கங்களின் விஷயமாய் கவர்ண்மெண்டார் செய்திருக்கும் நன்மைகளைப்பற்றி உபந்நியாசம், ஏழைகளுக்கு அன்ன மளித்தல், முதலியவைகளை செய்து எல்லோரும் ஒன்று கூடி முடி சூட்டின வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 391. சின்னபுறம்.—ராஜபடத்தை அலங்கரித்தார்கள். பிள்ளைகளுக்குக் கற்கண்டு மிட்டாய் வகையறாக்கள் கொடுக்கப்பட்டன. ஜனங்களுக்கு சந்தனம், வெற்றிலை பாக்கு, புஷ்பம் பழவர்க்கங்கள் கொடுத்தனர்.

நெ. 409. மேட்டு புத்தூர்.—தேவாலயங்களில் அபிஷேகம். எல்லோரும் ஒன்று கூடி அத்தினம் சந்தோஷித்தனர்.

நெ. 411. வரப்பாளையம்.—கோவில்களில் ஆராதனை. ஏழைகளுக்கு அன்னதானம். சிறுபிள்ளைகளுக்குச் சிற்றுண்டி.

நெ. 416. காஞ்சிக் கோவில்.—சிறுவர்களுக்கு கற்கண்டு சர்க்கரை மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. தேவாலயங்களில் பூஜைகள். ஊர் முழுவதும் விளக்குகள் போட்டனர்.

நெ. 433. துடுப்பதி.—தேவாலயங்களில் அபிஷேகம் ஊர் கோலம் முதலியவை செய்து அத்தினம் களித்தனர்.

நெ. 501. மாக்கஸ புதுயூர்.—பூஜை, அபிஷேகம் முதலியவை தேவாலயங்களில் நிறைவேறின. தேவாலயங்களும், வீடுகளும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. பாணவேடிக்கைகளும் நடந்தன.

நெ. 546. ஆலூர்.—கோவில்களில் அபிஷேகங்கள். 100 ஏழைகளுக்கு அன்னதானம். பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு புஸ்தகங்களும் பொம்மைகளும் கொடுக்கப்பட்டன. ஐக்கியத்தின் நன்மையைப்பற்றி பிரசங்கம். ஜனங்களுக்கு தாம்பூலம், சந்தனம் மிட்டாய் முதலியவை கொடுக்கப்பட்டன.

கர்னூல் ஜில்லா.

நெ. 53. பியாபல்லி.—அந்நாளை ஏழைகளுக்கு வஸ்திரமளித்து கொண்டாடினார்கள்.

நெ. 109. கர்நூல் அர்பன்பாங்கு.—பாங்கில் கொடிகள் போட்டப்பட்டன. பாடசாலைப் பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. தேவாலயங்களில் பூஜைகள் நடந்தேறின.

நெ 572. பெத்த போடில்லா.—ராஜகாரியங்களைப் பற்றிப் பிரசங்கித்து ராஜாராணி எந்நாளும் நீடித்து வாழ்க என்று மங்களம் செய்து கொண்டாடினார்கள்.

கோதாவரி ஜில்லா.

நெ. 65. கடியம்.—சிறு குழந்தைகளுக்கு மிட்டாய்களும் மெடல்களும் கொடுக்கப்பட்டன. புரோக்ளமேஷன் வாசிக்கப்பட்டது. ராஜபக்தியைப்பற்றி உபந்நியாசம். ஊர்கோலம்.

நெ. 86. தேவகுப்தம்.—எல்லா ஆலயங்களிலும் பூஜைகள் நடந்தேறின. 200 ஏழைகளுக்கு அன்னம் கணக்கப்பிள்ளை, பிரசிடெண்டு இவர்களால் அளிக்கப்பட்டது. போலா ஜமீன்தாருடைய ராஜபக்தி உபந்நியாசங்கள், பாடசாலையில் வாசித்தார்கள்.

நெ. 87. கோமரகிரி பட்டணம்.—ஏழைகளுக்கு அன்ன மிட்டு வஸ்திரமளித்தல், சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல் விளக்குபோடுதல். ஜனங்களுக்கு விருந்தளித்தல், அபிஷேகம் ஆட்டம் முதலியவைகளுடன் ஊர்கோலம் பாணவேடிக்கைகளுடன் வெகு விமரிசையாய் அத்தினத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 245. அம்ஸாவரம்.—ஏழைகளுக்கு அன்னதானம் பிள்ளைகளுக்கு தின்பண்ட முதலியவைகளுடன் அந்நாளை வைபவமாக கொண்டாடினார்கள்.

கிருஷ்ணா ஜில்லா.

நெ 56 நாகய்யலங்கா.—பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல். தேவாலயங்களில் அர்ச்சனைகள் சாப்பாடுகள். ராஜபடத்தையும், பெருமாள் விக்கிரங்களையும் அலங்கரித்து ஊர்கோலம்.

நெ. 70. வட்லமன்னடு.—பள்ளிக்கூடமும் கோவிலும் அலங்கரிக்கப்பட்டன. பிள்ளைகள் பாடினார்கள். ராஜாராணி படத்துடன் ஊர்கோலம்.

நெ. 83. கவுதாரம்.—பிள்ளைகளும், பெண்களும் பாடினார்கள். மெடல், புஸ்தகங்கள், பட்சணங்கள் கொடுக்கப்பட்டன. 200 ஏழை ஜனங்களுக்கு அன்னமளிக்கப்பட்டது. பாட்டு பஜனை முதலிய கோஷ்டிகளுடன் ஊர்கோலங்கள். கோவில்களில் அபிஷேகங்கள் நடந்தன.

நெ. 84. வெங்கடாபுறம்.—நெ. 580, போட்டாறு நெ. 581. கள்ளபாளயம் சங்கங்கள்.—தேவாலயங்களில் பூஜைகள், விளையாட்டுகள் நடந்தன. மாணாக்கர்களுக்குப்பரிசளித்தனர். ஏழைகளுக்கு அன்னம் கொடுத்தார்கள். குரு

டர்களுக்கு வஸ்திர மளித்தார்கள். இதைத்தவிற ஆங்காங்கு விருந்துகள் செய்தலும் பாட்டுக் கச்சேரிகளும் டிராமாக்களும் ஊர்கோலங்களும் செய்து மகிழ்ந்தனர்.

நெ. 85. சாவலிப்பாடு.—பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தார்கள்.

நெ. 577. கைய்கலூர் நரசய்யபாளையம்.—சங்கம் முடிசூட்டின வைபவத்தை கொண்டாடியது. சங்கம் செலவை அடைய ஏதுவில்லாததினால் மெம்பர்கள் எல்லோரும் சேர்ந்து செலவழித்தார்கள்.

நெ. 578. ஆச்சாவரம் சங்கம்.—முடிசூட்டின விஷயத்தைப்பற்றி சங்கம் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது.

நெ. 569. சேன ருத்ராவரம் சங்கம்.—தேவாலயங்களில் பூஜைகள். பாண வேடிக்கை முதலியவைகளுடன் பெருமாள் புறப்பாடு, ஊர்கோலம். ராஜாவின் புரோகிளமேஷனை வாசித்தார்கள். ராஜாபக்தியின் விஷயமாகவும் ராஜாராணியின் விஷயமாகவும் Mrs. J. W. மெய்டன் எழுதினது வாசிக்கப்பட்டது. சிறு பிள்ளைகளுக்குத் தின்பண்டங்கள் கொடுக்கப்பட்டன. ஊர் முழுதும் விளக்குகள் போடப்பட்டிருந்தன.

நெ. 582. காலிதிண்டி.—சமாராதனைகள். பழங்கள் கொடுத்தல். பாட்டுக் கச்சேரி. ஆட்டக்கச்சேரிகள். ராஜபடத்தை சிங்காரித்தல்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா.

நெ. 19. நாமக்கல் அர்பன் பாங்கு.—ஏழைகளுக்கு வஸ்திர மளிக்கப்பட்டது. முடிசூட்டின் விஷயத்தைப்பற்றி பாங்கின் கட்டிடம் விளக்குகளால் ஜோடிக்கப்பட்டது.

நெ. 30. லால்குடி.—ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப் பற்றியும் ஐக்கியத்தின் நன்மையைப் பற்றியும் உபந்நியசித்து ராஜாராணி நீடூழி வாழ்கவென மனக்களிப்புக் கொண்டாடினார்கள்.

நெ. 68. ஜெயங்கொண்டசோழபுறம்.—ராஜாராணி உருவ மடங்கிய ஓர் படத்தை அலங்கரித்து வாத்தியத்துடன் புகழ்ந்து கொண்டாடினார்கள். பிரிடிஷ் ராஜாங்கத்தின் வரலாற்றையும் அதனால் நாம் அடைந்த நன்மையைப் பற்றியும் ஓர் பத்திரிகை வாசிக்கப்பட்டது.

நெ. 93. திருமலவாடி.—சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய் பழ மளித்தல். தேவாலயங்களில் அபிஷேகம்.

நெ. 183. நாகய நல்லூர்.—பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு சர்க்கரை பழம் முதலியவை அளித்தல்; மற்றவர்களுக்கு சந்தனம் தாம்பூலம் அளித்தல். கொய்யா, மாதுளை, சம்பங்கி, பன்னீர், வாழை முதலிய செடிகள் நடப்பட்டன. ஊர்கோலம்.

நெ 195 தோட்டியம்.—பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. சக்ரவத்தி, சக்கரவர்தினி இவர்களுடைய படங்களைப் பூக்களால் அலங்கரித்து கீதவாத்தியங்களுடனும், அதுர்வெடிகளுடனும் ஊர்கோலம் கொண்டுவந்தார்கள்.

நெ. 199. தாத்தாம்பட்டி.—சக்ரவர்த்தியார் படம் பூக்களால் சிங்காரிக்கப்பட்டது. போர்டு ஸ்கூல் பிள்ளைகள் வாழ்த்துப் பாட்டுகள் பாடினார்கள் ஐக்கிய சித்தாந்தத்தைபற்றி அக்கிராசனாதிபதி யவர்கள் ஓர் உபந்நியாசஞ் செய்தார். பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. வந்திருந்தவர்களுக்கு வெத்திலைப்பாக்கு கொடுக்கப்பட்டது.

நெ. 178. திருச்சினாப்பள்ளி டிஸ்டிரிக்ட் அர்பன்பாங்கு.—ராஜாராணி நெடுநாள் வாழ்க என கொடி போடப்பட்டது. விளையாட்டுகள் நடந்தேறின. 300 பேர்களுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. வெகு விமரிசையான அலங்காரங்கள் செய்யப்பட்டன.

நெ. 179. கொளகுடி.—கோவில்களில் அபிஷேகங்கள். எல்லா பிரஜைகளுக்கும் சர்க்கரை கற்கண்டு தாம்பூலம் முதலியவை கொடுத்து ராஜாராணி நீடித்து வாழ்கவென வேண்டினார்கள்.

நெ. 196. மலையடிப்பட்டு.—ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டது. ஏழைகளுக்கு அன்ன மளிக்கப்பட்டது. தேவாலயங்களில் அபிஷேகங்கள். ஜனங்களுக்கு தின்பண்டங்கள் கொடுத்தார்கள்.

நெ. 216. துத்திகுளம்.—கோயில்களில் பூசைகள் நடந்தன. பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. ஆங்கிலேய அரசாட்சியின் நன்மைகளையும், சக்கரவர்த்தியின் குணத்தையும் பற்றி அங்கு கூடியிருந்தவர்களுக்கு அக்கிராசனாதிபதியால் விவரமாய் எடுத்துச் சொல்லப்பட்டது.

நெ. 237. சமயபுரம்-கண்ணனூர்.—சிறு பிள்ளைகளுக்குத் தின்பண்ட மளித்தல். ஏழை ஜனங்களுக்கு அன்னமளித்தல். ராஜபடத்தை அலங்கரித்து ஊர்வலம் வந்து முடிசூட்டின வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 238. இருங்களூர்.—ஏழைகளுக்கு அன்னமிட்டு வஸ்திரம் கொடுக்கப்பட்டது. சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் பறிமாறப்பட்டன. தேவாலயங்களுக்கு விளக்கு போட்டார்கள். கனம் ஆர். சாமிநாத பாதிரியாரும் எம். ஜானும் பிரசங்கம் செய்தார்கள்.

நெ. 256. ஆலத்துடையம்பட்டி.—பல வாத்திய கோஷங்களுடன் 16 கால் பந்தலின்கீழ் சிங்காரித்து சிம்மாசனத்தில் ராஜபடத்தை வைத்துப் பட்டாபிஷேகம் கொண்டாடினார்கள். சந்தனம், தாம்பூலம் கற்கண்டு வர்க்கங்கள் வினியோகம் செய்தார்கள்.

நெ. 257. கர்காலி.—தேவாலயங்களில் அபிஷேகம் செய்து பிரசாத மளித்து முடிசூட்டன வைபத்தை மிகவும் சிரேஷ்டமாகக் கொண்டாடினார்கள்.

நெ. 273. வாளாடி.—தேவாலயங்களில் அபிஷேகம். புரோக்ள மேஷன் வாசித்தல். பிள்ளைகளுக்குத் தின்பண்ட மளித்தல். ராஜபடத்தை வைத்து சகல வேடிக்கைகளுடனும் ஊர்கோலம்.

நெ. 353. பாபாரப்பட்டி.—தேவாலயங்களில் அபிஷேகம். சிறுவர்களுக்குத் தின்பண்ட மளித்தல். பாட்டுகச்சேரி, சங்கீதக்கச்சேரி நடந்தன. ராஜபடத்தை அலங்கரித்து ஊர்கோலம். ராஜாராணி வாழ்த்து.

நெ. 531. கோடாலிகருப்பூர்.—ஏழைகளுக்கு அன்னமிடல். தேவாலயங்களி லெல்லாம் அபிஷேகம். பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர்களுக்கு தின்பண்ட மளித்தல். ராஜாராணி படத்தை அலங்கரித்து ஊர்கோலம். சு. மு. நாரயணஸாமி செட்டியாரால் ஓர் பிரசங்கம்.

நெ. 598. வாங்கல் ஐக்கிய நாணயச் சங்கம்.—கோயில்களில் பூசைகள் நடந்தன. 21 அதுர்வெடிகள் போடப்பட்டன. பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. ஏழை ஜனங்களுக்கு சாப்பாடு போடப்பட்டது. பள்ளிக்கூடத்து பிள்ளைகள் வாழ்த்து பாட்டுகள் பாடினார்கள். பிள்ளைகளுக்கு மிடாய்கள் கொடுக்கப்பட்டன. சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி படங்களைப் பூக்களால் அலங்கரித்து ஊர்கோலம் நடந்தது.

நெ. 621. ஓரவந்தூர் சங்கம்.—ஏழைகளுக்கு அன்னமும், பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு தின்பண்டங்களும், தேவாலயங்களில் பூஜைகளும் நிறைவேறின. கோவாபரேடிவ் சொசைடியின் பயன்களைப் பற்றி பிரசங்கங்களும், ராஜபக்தியினுடைய பிரசங்கமும் நடந்தேறின.

நெ. 622. நஞ்சைமோகனூர்.—கிராமம் முழுமையும் அலங்கரித்து தேவாலயங்களில் பூஜைகள் அபிஷேகங்கள், பிரசங்கங்களும் பாட்டுகளும் நடந்தேறின. ஊர்கோலம்.

சேலம் ஜில்லா.

நெ. 25. சேலம் அர்பன் கோ-ஆபரேடிவ் சங்கத்தில்.—12உயில் ஆபீஸ் கட்டடம் விளக்குகளாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு கற்கண்டு விநியோகம் செய்தார்கள்.

நெ. 50. கன்னண்ட அல்லி.—தேவாலயங்களில் பூஜைகள். ஏழைகளுக்கு அன்னதானம். ஊர்கோலம்.

நெ. 75. ஜம்மனஹல்லி.—400 பேர் ஏழைகளுக்கு அன்னமளித்து, பிள்ளைகளுக்கு பட்சணம் கொடுத்தனர்.

நெ. 94. ஆத்தூர்.—தேவாலயங்களில் அபிஷேக முதலியவைகள் வெகு விமரிசையாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 104. தாராமங்கலம்.—தேவாலயங்களில் பூஜை முதலியவைகள் செய்து முடிசூட்டின வைபவத்தைச் சிறப்பித்தனர்.

நெ. 110. மேச்சேரி.—புரோக்ளமேஷன் வாசித்தல். ஸ்கூல் பிள்ளைகளாலும் ஜனங்களாலும் ராஜாவுக்கு மங்கள வாழ்த்து. பிள்ளைகளுக்கு கற்கண்டு முதலியவைகள் கொடுத்தல். ராஜபடத்தை வைத்து ஊர்கோலம்.

நெ. 115. பொட்டிபுரம் ஐக்கிய நாணயச்சங்கம்.—மாரியம்மன் கோவிலுக்கு எதிரிலுள்ள மைதானத்தில் சங்கத்தின் மெம்பர்கள், கிராமத்தார்கள் சுமார் 250 ஜனங்கள் கூடினார்கள். ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டது. சக்கிரவர்த்தி படத்தை கிராமத்திலுள்ள தெருக்கள் தோறும் ஊர்கோலம் கொண்டுவந்தனர். 50 ஏழை ஜனங்களுக்கு சாப்பாடு போடப்பட்டது. துணிகள் கொடுக்கப்பட்டன.

நெ. 116. ஜலகண்டாபுரம் ஐக்கிய நாணயச்சங்கம்.—சக்கிரவர்த்தி பட்டாபிஷேக தினத்தில் கோயில்களில் பூஜைகள் நடந்தன. சக்கிரவர்த்தியின் படம் புஷ்பங்களால் சிங்காரிக்கப்பட்டது. ராஜவிளம்பரத்தை வாசித்த பிறகு ராஜ வாழ்த்துக்கள் பாடப்பட்டன. பிள்ளைகளுக்கு மிட்டாய்களும், ஏழை ஜனங்களுக்கு துணிகளும், கிராமத்தார்களுக்கு சந்தனமும், வெற்றிலை பாக்குகளும் கொடுக்கப்பட்டன.

நெ. 119. பாலக்கோடு.—ஜனங்களுக்கு சந்தனம் தாம்பூல மளித்தல். ஸ்கூல் பிள்ளைகளுக்கு தின்பண்டங்களளித்து கோலாட்டம் போடச்செய்து ராஜபக்தி விசுவாசத்தைப் பற்றி உபந்நியாசம்.

நெ. 120. கிருஷ்ணபுறம்.—முடிசூட்டின நாளை வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது.

நெ. 121. அதமன்கோட்டை.—சிறுவர்களுக்குத் தின்பண்ட முதலியவை அளித்து சகல வைபவமும் நடந்தது.

நெ. 123. அதிகாரப்பட்டி.—சிறுவர்களுக்கு மிட்டாய் முதலியவை அளித்து அதிக ஆனந்தப்பட்டார்கள்.

நெ. 124. கள்ளிப்பட்டி, 126. கொண்டரம்பட்டி.—ஜமீந்தார் இராமச்சந்திரராவ், இச்சங்கங்கள் வெகு விமரிசையாய் கொண்டாடினதாகத் தந்தி கொடுத்தார்.

நெ. 131. மதியம்பட்டி.—ஏழைகளுக்கு அன்ன மிட்டு வஸ்திரமளித்தல். சிறு பிள்ளைகளுக்கு தின்பண்டம். ராஜபடத்தை அலங்கரித்து மேளவாத்தியம், சதுர் பாணவேடிக்கைகளுடன் ஊர்கோலம்.

நெ. 151. சேலம் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்கில்.—12உயில் ஆபீஸ் கட்டடம் விளக்குகளாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்குக் கற்கண்டு விநியோகம் செய்தார்கள்.

நெ. 169. தோளசம்பட்டி.—வீடுகளில், கோவில்களில் கிராமங்களில் ஏராளமான விளக்குகள் போடப்பட்டன. கோவில்களில் அபிஷேகங்கள். பிள்ளைகளின் விளையாட்டுகள் கெலித்தவர்களுக்கு இனாம், மேளவாத்தியம் பாட்டுகளுடன் ஊர்கோலம்.

நெ. 172. சமுத்திரம்.—ஏழைகளுக்கு சாப்பாடு போடல். வேஷ்டி கொடுத்தல். வீடுகள் எல்லாம் சுத்திசெய்து வெள்ளை யடிக்கப்பட்டன. பிள்ளைகளுக்குத் தின்பண்டங்கள். தேவாலயங்களில் அபிஷேகங்கள்.

நெ. 194. மனவாசி.—ஜனங்களுக்கு தாம்பூலம் முதலியவை அளித்தல். பிள்ளைகளால் கோலாட்டம்முதலிய வேடிக்கைகள் செய்யப்பட்டன. புரோக்கிளமேஷன் வாசிக்கப்பட்டு எல்லோரும் ஒன்றுகூடிக் கொண்டாடினார்கள்.

நெ. 208. கஞ்சநாயகன்பட்டி.—6-மணியிலிருந்து 9-மணி வரையில் கோயில்களில் பூஜைகள் செய்யப்பட்டன. 11-30 மணியிலிருந்து 1-மணி வரையில் ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டது. சந்தனம், புஷ்பங்கள் வெத்திலை பாக்குகள் கூட்டத்தாருக்கு கொடுக்கப்பட்டன. 2-மணியிலிருந்து 4-மணி வரையில் சக்கரவர்த்தி சக்கரவர்த்தினி படங்களை பஜனையுடன் ஊர்கோலம். 4-மணியிலிருந்து 5-மணிவரையில் ஏழை ஜனங்களுக்கு சாப்பாடும் துணிகளும் கொடுக்கப்பட்டன.

நெ. 210. வேங்கரை.—புரோக்ளமேஷன் படித்த பிறகு பான்சுபாரி சந்தன முதலியவைகளை ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்.

நெ. 220. காளிப்பட்டி.—தேவாலயங்களில் அபிஷேகங்கள். பிராக்ளமேஷன் வாசித்தல். ராஜபடத்தை அலங்கரித்து ஊர்கோலம் ஜனங்களுக்கு தாம்பூலம்.

நெ. 226. கூடலூர்.—தேவாலயங்களில் அபிஷேகம் செய்யப்பட்டது. சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன.

நெ. 229. பொட்டநேரி.—கோயில்களில் பூசைகள் நடந்தன. சக்கரவர்த்தியின் படத்தை ஊர்கோலம் கொண்டுவரப்பட்டது. பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன.

நெ. 266. லலிகம்.—சிறுவர்களுக்குத் தின்பண்ட முதலியவைகளும், பெரியோர்களுக்கு தாம்பூலம் சந்தன முதலியவையும் கொடுத்து முடிசூட்டின தினத்தை ஆனந்தத்தோடு கொண்டாடினார்கள்.

நெ. 268. கோமர பாளையம்.—ஏழைகள் எல்லோருக்கும் அன்னதான வஸ்திரமும் பிள்ளைகளுக்கு மிட்டாய்களும் கொடுக்கப்பட்டன.

நெ. 269. இலுப்பிலி.—ஏழைகளுக்கு அன்னம்; பள்ளிகூடத்து பிள்ளைகளை பாடவைத்து, விளையாட்டுகள் விட்டு இனிமளித்து, தின்பண்ட மளித்தார். ஊர்கோலம்.

நெ. 270. எடங்கன்சாலை.—ராஜ ராணி படத்தைப் புஷ்பங்களால் அலங்கரித்து, பாணவேடிக்கை முதலானதுடன் ஊர்கோலம். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குத் தின்பண்ட மளிக்கப்பட்டது. ஏழைகளுக்கு அன்ன மிட்டு வஸ்திர மளித்தல். வீடுகளெல்லாம் அலங்காரம்.

நெ. 271. அபினவம்.—முடிசூட்டின நாள் ரொம்பவும் சந்தோஷகரமாயிருந்தது.

நெ. 272. எத்தாப்பூர்.—சிறு பிள்ளைகளுக்குத் தின்பண்ட முதலியனவையளித்து, சமூகத்துக்குவந்தவர்களுக்கு சந்தனம் தாம்பூல முதலியவையளித்து மகுடாபிஷேக தினத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 289. மானத்தாள்.—தேவாலயங்களில் அபிஷேகங்கள். ஊர்கோலம்; ஏழைகளுக்கு அன்னதானம் வேஷ்டிகளும் தானம் செய்யப்பட்டும் சக்கரவர்த்தி அவர்கள் வாழ்த்திமகுடாபிஷேக தினத்தைச் சிரேஷ்டமாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 290. மாரமங்கலம் ராமகிருஷ்ணபாளையம்.—1. பிள்ளைகளின் விளையாட்டுகள். 2 ஊர்கோலம். 3 ஏழைகளுக்கு அன்னதானம். எல்லோரும் ஒன்றுகூடி முடிசூட்டினதினத்தை வெகு சந்தோஷகரமாக கொண்டாடினார்கள்.

நெ. 291. அமரகுந்தி.—ஏழைகளுக்கு அன்னவஸ்திரமளித்து பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்குச் சிற்றுண்டி அளித்து ஊர்கோலத்துடன் அந்நாளை வெகு மேன்மையாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 319. அரங்கனூர்.—1 தேவாலயங்களில் பூஜைகள். 2 வீடு கிராமம் முதலியவைகளை சுத்திசெய்து அதிக தீவட்டி பாணவேடிக்கைகளுடன் ஊர்கோலம் நடத்தி ராஜா ராணி நீடித்துவாழ்க என முடிசூட்டின நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 527. மானத்தாள் நல்லகவுண்டன்பட்டி.—கோவில்களில் அபிஷேகங்கள் பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு மிட்டாய்வகையறாக்களும் ஜனங்களுக்கு தாம்பூல முதலியவை கொடுத்து ஊர்கோலத்துடன் கொண்டாடினார்கள்.

நெ. 330. வீரக்கல்புத்தூர்.—தேவாலயங்களில் பூஜைகள் நடந்தேறின. இந்துஸ்தான் ஆட்டம் நடந்தது, பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் கற்கண்டு கொடுத்துக் கொண்டாடினார்கள்.

நெ. 329. சிங்காரப்பேட்டை.—1. கோயிலில் அபிஷேகம்: 2. வெங்கட சுப்பிரமணிய ஐயரும் இன்மெல் சாயபுவும் ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றி உபன்யாசம் செய்தார்.

நெ. 331. கோனூர்.—கிராமத்தை வெகு விமர்சையாய் ஒழுங்கு படுத்தி ஊர்கோலத்துடன் நீடூழிவாழ்கவென கொண்டாடினார்கள்.

நெ. 332. பொட்டனேரி நல்லகவுண்டன் பட்டி.—தேவாலயங்களில் அபிஷேகத்துடனும் குழந்தைகளுக்குக் கற்கண்டு கொடுத்தலுமாய் அந்நாளை களித்தனர்.

நெ 336. வேங்கடசமுத்ரம்.—1. 8 மணியிலிருந்து 10 மணி வரையில் கோயில்களில் பூஜைகள் நடந்தன. 2. 11 மணியிலிருந்து 1 மணி வரைக்கும்—சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி இவர்களுடைய படங்களும் சிங்காரித்து பந்தலில் வைக்கப்பட்டன. ராஜபக்தியைப் பற்றியும், ஆங்கிலேயருடைய கவர்ன்மென்டால் உண்டான நன்மைகளைப் பற்றியும் பிரசங்கங்கள் கொடுக்கப்பட்டன. 3. 1 மணியிலிருந்து. 5 மணி வரையில் ராஜபக்தி கீர்த்தனைகள் பாடப்பட்டன. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் விநோதமான ஆட்டங்கள் ஆடினார்கள் பிள்ளைகளுக்கு பரிசுகளும், தின் பண்டங்களும் கொடுக்கப்பட்டன. 4. 6 மணியிலிருந்து 7 மணி வரையில் கோயில்களிலும், வீடுகள்தோறும் விளக்குகள் ஏற்றப்பட்டன. 5. 7 மணியிலிருந்து 9 மணிவரையில் சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி இவர்களுடைய படங்களைச் சிங்காரித்து ஓர் ரதத்தில்வைத்துப் பஜனைகளுடன் ஊர்கோலம் வரப்பட்டது.

நெ. 340. மேனிசி.—ஜனங்களுக்குத் தாம்பூல தின்பண்டங்கள் முதலியவைகொடுத்து ஒன்றுகூடி முடிசூட்டின வைபவத்தை வெகு விமரிசையாய் கொண்டாடினார்கள்.

நெ. 341. பைர்நத்தம் ஐக்கிய நாணயச் சங்கம்.—பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி படங்களை எடுத்துக்கொண்டுபோய் அழகாய் சிங்காரித்த பந்தலில் வைத்தார்கள். ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டது. பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் விநோதமான ஆட்டங்கள் ஆடினார்கள். ஆட்டங்களில் கெலித்தவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. சங்கத்தின் ஆபீசில் விளக்குகள் போடப்பட்டன.

நெ. 342. சேந்தமங்கலம்.—கோவாபரேடிவ் சொசைடி போஷிக்கப்படுவதையும் அதன் நன்மைகளையும் பற்றி முடிசூட்டின வைபவத்தைப்பற்றியும் சிரேஷ்டமாகக் கொண்டாடினார்கள்.

நெ. 350. ஜம்புகுட்டபட்டி.—1. ஏழைகளுக்கு அன்னதானம், 2. சிறுவர் சிறுமிகளுக்கு கற்கண்டுமுதலியவை யளித்தல் பெரியோர்களுக்கு வெற்றிலைபாக்கும், 3. தேவாலயங்களில் அபிஷேகம், 4. ஊர்கோலம்.

நெ. 510. கோபாலபுறம்.—ஊர் அலங்காரமும், அன்னதானம், தேவாலய பூஜையும், ஊர்கோலமும் நடந்தன.

நெ. 601. மெட்டகிரி அர்பன் பாங்கு.—பாங்கு அலங்கரிக்கப்பட்டது. தேவாலயங்களில், மசூதிகளில், மாதாகோவில்களில் பூஜைகள் செய்யப்பட்டன, விளையாட்டுகள் நடந்தேறின, சிலபேருக்குச் சாப்பாடுகள் போடப்பட்டன.

கஞ்சம் ஜில்லா.

நெ. 40. பெராம்புரம் அர்பன் பாங்கு தந்தி.—ஒரு வளைவுபந்தல் போட்டார்கள். பாங்கில் விளக்குகள் போடப்பட்டன. பிள்ளைகளுக்குத் தின்பண்டங் கொடுத்தார்கள்.

மதிராஸ்.

நெ. 15. திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சொசைடி.—1 அதிக உற்சாகத்துடன் அந்நாளை கொண்டாடினார்கள், 2 எட் ஆபீஸ்களும் பிராஞ்சு ஆபீசுகளும் விளக்குகளால் அலங்கரிக்கப்படடன, 3 சொசைடியின் வேலைக்காரர்களுக்கு விருந்து கொண்டாடப்பட்டது, 4 கனம் K. B. இராமநாதய்யர் ராஜபக்தியைப்பற்றி பேசினார், 5 கனம் N. A. வேதாந்தசாரியார் அவர்களால் தமிழில் பிரசங்கிக்கப்பட்டது.

நெ. 18. மத்ராஸ் சென்ட்ரல் அர்பன்பாங்கு லிமிடெட்.—ஆபீஸ் முழுமையும் புஷ்ப வகையறாக்களினால் அலங்கரித்து விளக்குகள் போடப்பட்டன, புரோக்ளமேஷன் வாசிக்கப்பட்டது. மிட்டாய்களும் பழங்களும் பாங்கியின் வேலைக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டன.

மதுரை ஜில்லா.

நெ. 28. மதுரை.—ராஜாங்கத்துக்குத் தங்கள் பக்தியைத் தெரிவித்தார்கள். சங்கத்தின் கட்டிடம் அலங்கரித்து விளக்கேற்றப்பட்டது. வேலைக்காரர்களுக்குத் தின்பண்டங்கள் பரிமாறப்பட்டன.

நெ. 145. பெரியகுளம்.—ராஜபக்தியைப்பற்றியும், ஐக்கியத்தைப்பற்றியும் உபந்நியசித்து புரோக்ளமேஷனை வாசித்து அந்நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 198. திண்டுக்கல்.—ராஜாவின் நல்வரவைக் கோறி வாழ்த்துகள் அனுப்பினார்கள்.

நெ. 221. வடசாந்தூர் ஐக்கிய நாணயச் சங்கம்.—சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி பட்டாபிஷேக தினத்தை நன்றாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 222. கோயிலூர் ஐக்கிய நாணயச் சங்கம்.—கோயில்களில் பூஜைகள் செய்யப்பட்டன. பிள்ளைகளுக்கும், கிழவர்களுக்கும் அப்பங்கள் முதலியவை கொடுக்கப்பட்டன. மெம்பர்களுக்கும், வேறு ஜனங்களுக்கும் சந்தனம், பழங்கள், வெத்திலைபாக்குகள் கொடுக்கப்பட்டன. சில ஏழைஜனங்களுக்கு வயிறார சாப்பாடு போடப்பட்டது. சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி இவர்கள் நெடுநாள் பெரும் பாக்கியத்துடன் வாழ்திருக்க தோத்திரங்கள் செய்த பிறகு மெம்பர்கள் கலைந்தார்கள்.

நெ. 442. மெக்கிலார்பட்டி ரூரல் கிரேடிட் சோஸைடி.—மாக்ஷிமை தங்கிய நமது சக்கரவர்த்தியார் 5-வது ஜார்ஜ் பிரபுவுக்கும் அவருடைய அருமை பத்தினியான சக்கிரவர்த்தினியார் அவர்களுக்கும் ஆசிமொழி கூறினர். சுவாமிக்கு அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகள் சம்பூர்ணமாய் நடந்தேறின. ஜனங்களுக்கு சந்தனம் வெற்றிலைபாக்கு கொடுக்கப்பட்டன.

நெ. 448. வேள்ளமலைப்பட்டி.—பட்டாபிஷேக மகோற்சவங்கள் பின் வருமாறு கொண்டாடப்பட்டன:—மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியாரவர்கள் தம்பதிசமேதராய் நீடூழி வாழவேணுமாய் வாழ்த்தினர்கள். கோவில்களில் அர்ச்சனை, பூஜைமுதலியவைகள் நிறைவேறின. வெற்றிலை பாக்கு முதலியவை ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டன.

நெ. 466. அயன்மேட்டுப்பட்டி —பட்டாபிஷேக மஹோற்சவ வைபவம் பின்வருமாறு கொண்டாடப்பட்டது:-மாக்ஷிமைதாங்கிய நமது சக்கிரவர்த்தியாரவர்கள் தம்பதி சமேதராய் நீடூழிவாழவேணுமாய் வாழ்த்தினர்கள். தேவாலயங்களில் பூஜைமுதலானதுகள் நிறைவேறின. சந்தனம் வெற்றிலை பாக்கு முதலியவை கொடுக்கப்பட்டன.

நெ. 551. நாட்டாபட்டி ஐக்கிய நாணயச் சங்கம்.—சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி இவர்களிருவரும் நெடுநாள் பெரும்பாக்கியத்துடன் வாழ்ந்திருக்க கோயில்களில் பூஜைகள் நடந்தன. இப்பூஜை நடக்கும்பொழுது கோயிலுக்கு வந்திருந்தவர்களுக்கு சந்தனமும், வெத்திலைபாக்கும் கொடுக்கப்பட்டன.

நெ. 552. அய்யநாகுளம்.—கோவில்களில் அபிஷேகங்கள் செய்யப்பட்டன. மாக்ஷிமை தங்கிய ராஜாராணி அவர்கள் நீடூழிவாழ் எனக் கொண்டாடி அந்நாளில் சந்தோஷமடைந்தார்கள்.

நெ. 557. திருமங்கலம் பாப்பரப் பட்டி.—மாக்ஷிமைதங்கிய நமது சக்கரவர்த்தியாரவர்கள் தம்பதி சமேதராய் நீடூழிவாழ வேணுமாய் வாழ்த்தினர்கள். கிராமத்திலுள்ள தேவாலயங்களில் பூஜைகள் சம்பூர்ணமாய் நிறைவேறின. சந்தனம் வெற்றிலைபாக்கு முதலியவை கொடுக்கப்பட்டன.

நெ. 561. நல்லத்தேவன் பட்டி.—தேவாலய அபிஷேகத்துடன் ராஜாவின் நெடுநாள் வாழ்வை வேண்டி அந்நாளைக் கொண்டாடினர்கள்.

நெ. 562. திருமங்கலம் மலைப்பட்டி.—1. தேவாலயங்களில் அர்ச்சனை தீபாராதனை நடந்தேறின 2. சக்கரவர்த்தினி யாரவர்கள் தம்புதி சமேதராய் நீடூழிவாழ பிரார்த்தனை செய்துக் கொண்டார்கள். 3. ஜனங்களுக்கு வெற்றிலைபாக்கு சந்தன முதலியவைகள் கொடுக்கப்பட்டன.

நெ. 563. நாவார்பட்டி ரூரல் கிரடிட் ஸோஸைடி.—1. தேவாலயங்களில் அபிஷேகம் நடந்தேறியது. 2. மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியார் அவர்கள் நீடித்துவாழ்க என மங்களம் கொண்டாடினர்கள் 3. ஜனங்களுக்கு சந்தனம், வெற்றிலைபாக்கு முதலியவை கொடுக்கப்பட்டன.

நெ. 564. வலையப்பட்டி.—1. தேவாலயங்களில் அபிஷேகம் நடந்தேறின 2. மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்தினியார் அவர்கள் நீடித்து வாழ்க என மங்களம் கொண்டாடினர்கள். 3. ஜனங்களுக்கு சந்தனம், வெற்றிலை பாக்கு முதலியவை கொடுக்கப்பட்டன.

நெ. 556. குறவகுடி.—1 மாக்ஷிமை தங்கிய நமது சக்ரவர்த்தியார் அவர்கள் நீடித்து வாழ்க எனக் கோறி, சந்தனம் வெற்றிலைபாக்கு முதலியவை ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டன. 2 தேவாலயங்களில் அபிஷேகம் செய்யப்பட்டது.

நெ. 558. மிக்கலரப்பட்டி ஐக்கியநாணயச் சங்கம்.—1 கோயில்களில் பூஜைகள் நடந்தன. சக்கரவர்த்தி சக்கரவர்த்தினி நெடுநாள் பெரும் பாக்கியத்துடன் வாழ்ந்திருக்க தோத்திரங்கள் செய்யப்பட்டன.

நெ. 560. பெரும்பட்டி ஐக்கியநாணயச் சங்கம்.—சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி இவர்கள் நெடுநாள் கீர்த்தியுடன் ஆளுகைசெய்ய பூசைகள் நடந்தன. இப்பூசைகள் நடக்கும்பொழுது கோயிலண்டை வந்திருந்தவர்களுக்கு சந்தனமும், வெத்திலைப்பாக்குகளும் கொடுக்கப்பட்டன. சங்கத்தின் மெம்பர்கள் 72 பேர்கள் கோயிலண்டை கூடினர்கள்.

நெல்லூர் ஜில்லா.

நெ 24. கூடூர் சங்கம்.—ஆலயங்களில் பூஜைகள். 300 ஏழைகளுக்கு அன்னமளித்தல். ஊர் முழுவதும் பிரகாசமாக விளக்குகள் போட்டார்கள். சிறு பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தார்கள்.

நெ. 34. கந்துகூர்.—ஏழைகளும் பணக்காரர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து கொண்டாடி 5 ரூபாய் வஸ்திரத்துக்காகக் கொடுத்தார்கள்.

ராமநாதபுரம் ஜில்லா.

நெ. 13. நம்பிபுறம்.—சந்தோஷகரமாய் அத்தினத்தில் அலங்காரம் செய்தனர். ராஜாராணிபடத்தைப் புஷ்பங்களுடன் அலங்கரித்து, பாட்டுகள் பாடப்பட்டன, ராஜபக்தியைப்பற்றி பிரசங்கம் செய்தார்கள். M. R. வெங்கடராமய்யர் ஆங்கிலேயே அரசாட்சியின் நன்மையைப் பற்றி உபன்னியசித்தார். வீடுகளெல்லாம் விளக்குகளால் ஜொலித்தன. அத்தினம் மழையாயிருந்ததினால் அடுத்த விடியற்காலை ஊர்கோலம் நடந்தது. சிறு பிள்ளைகளுக்கு பந்தயங்கள் விடப்பட்டன.

நெ. 147. வடமலைப்புறம்.—101 வேட்டுகள் போடப்பட்டன. 6 தேவாலயங்களில் பூஜைகள். அலங்கரித்திருந்த ஒரு மண்டபத்தில் பிள்ளை

களும் ஜனங்களும் ஒன்று கூடினார்கள், கொடிகள் போடப்பட்டன. ராஜ படத்தை வைத்து அலங்கரித்து அதற்காக செய்யப்பட்ட ரதங்களில் வைத்தார்கள். சங்கத்தின் அக்கிராசனாதிபதி ராஜபக்தியின் விஷயத்தையும், அரசாட்சியைப் பற்றியும் உபந்நியாசம் செய்தார். புரோகிளமேஷன் வாசிக்கப்பட்டு விவரிக்கப்பட்டது. நாஷனல் ஆந்தம் பாடப்பட்டது. கர்னாடக வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன. பள்ளிக்கூடத்து பிள்ளைகள் மெடல்கள் பெற்றார்கள் பாட்டுக்கச்சேரிகள் நடந்தேறின. மிட்டாய், வெற்றிலை சந்தனம் கொடுக்கப்பட்டன. சிலம்பத்துடன் ஊர்கோலம் நடந்தது. தேவாலயங்கள், கட்டடங்களுள்ள முதலிய விடங்களில் விளக்குகள் போட்டிருந்தன. பள்ளிக்கூடத்து பிள்ளைகள் டிராமா ஆடினார்கள், சம்பாஷணை செய்தார்கள். சொசைடியின் வாசலில் ஊர்கோலம் நின்றதும், சொசைடியின் மானேஜர் ஐக்கியத்தின் நன்மையைப் பற்றி ஓர் உபந்நியாஸம் செய்தார்.

நெ. 239. ஆயுள்தர்மம்.—ராஜபடத்தை அலங்கரித்து மிட்டாய்கள் கொடுத்தனர்.

நெ. 412. ஆலமரத்துப்பட்டி.—ஆலயங்களில் பூஜைகள் நடந்தன. வாத்தியகோஷம், சங்கீதம், பாண வேடிக்கைகளுடன் ஊர்கோலம், பள்ளிகூடத்து ப்பிள்ளை பாடல்கள், பிள்ளைகளுக்கு மிட்டாய், பழம் முதலானவை அளித்தல் பெரியோர்களுக்குத் தாம்பூலம், சந்தனம், சர்க்கரை அளித்தல் முதலியவற்றோடு கொண்டாட்டம் நிறைவேறியது.

நெ. 413. பெத்துசெட்டிப்பட்டி சங்கம்.— சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியின் திருவுருவப் படத்தை அமைத்து பலவித வாத்தியங்களுடனும் பிரசங்கம் செய்தார்கள். 20 ஏழைகளுக்கு அன்னமளித்தார்கள். ஐக்கிய நாணய சங்கத்தின் நன்மையைப் பற்றியும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் நன்மையைப் பற்றியும் உபந்நியாசம் செய்தார்கள். சிறுவர்களுக்கு சிற்றுண்டி அளித்தார்கள். தேவாலயங்களுக்கு தீபங்கள் போட்டு, வெகு ஆடம்பரத்துடன் ஊர்கோலம் நடத்தினார்கள்.

நெ. 420. செங்கமலப்பட்டி.—இதற்காகப் போட்ட கொட்டகையில் ராஜபடத்தை வைத்துக் கொண்டாடினார்கள். ஊர்கோலம் நடந்தது.

நெ. 450. மெலமத்தூர்.—தேவாலயங்களில் பூஜைகள், எல்லா விடங்களிலும் விளக்குகள் போடப்பட்டன. ஏழைகளுக்கு அன்னமிடுதல், பிள்ளைகளுக்கு மிட்டாய்கள் முதலியவை கொடுத்து அந்நாளைக் கொண்டாடினார்கள்.

நெ. 583. கள்ளவனயக்கன் பட்டி சங்கம்.—கொண்டாடப்பட்ட விஷயங்களாவன:—சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினியினுடைய படங்கள் வைக்கப்பட்டு அவைகளுக்கு முன்பு பாட்டு மேளங்களால் ஆனந்திக்கப் பட்டன. மிட்டாய்கள் பறிமாறப்பட்டன. ஆலயத்தில் கட்டடங்கள் கட்டி அலங்காரம் போடப்பட்டது. ஊர்கோலம்.

நெ. 584. பூவனந்தபுரம் சங்கம்.—மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தி சக்ரவர்த்தினி படத்தை சிம்மாசனமாகப் பூண்டு மகுடாபிஷேகம் கொண்டாடினார்கள். ஆங்கிலேய அரசாட்சியின் நன்மைகளையும் ஐக்கியத்தின் நன்மைகளைப்பற்றியும் பிரசங்கித்தார்கள். குழந்தைகளுக்கு மிட்டாய் சர்க்கரை கொடுக்கப்பட்டன. ஏழைகளுக்குச் சாப்பாடுகள் போடப்பட்டன. சக்ரவர்த்திபார் நீடூழிவாழ்க என்று ஏகோபித்து ஜனங்களெல்லாம் கைகூப்பி, மங்களங் கூறினார்கள்.

நெ. 589. சலுவார்பட்டி சங்கம்.—இவ்வூரில் ஓர் அலங்காரமான கொட்டகை போட்டு திருவுருவப்படத்தைப் புஷ்பங்களாலலங்கரித்து, மாக்ஷிமைதங்கிய மகுடாபிஷேக மகோற்சவத்தை மிகவும் பக்திபுடன் கொண்டாடினார்கள். சிறுபிள்ளைகளுக்கு மிட்டாய் முதலியவை அளித்தார்கள். கோவில்களில் திருவாக்கு முதலியவைகளை வாசித்துக்காட்டி மங்களகரமாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 614. கோல்வார்ப்பட்டி சங்கம்.—ஏழைகளுக்கு சாப்பாடுபோடப்பட்டது. சிறுபிள்ளைகளுக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. பாங்கு ஆபீசுக்குமுன், லாந்தர் வைக்கும்படியாக ஒரு கல்தூண் நடப்பட்டது.

தஞ்சாவூர் ஜில்லா.

நெ. 7. நீடாமங்கலம் விவசாய பாங்கி.—1 பாங்கின் கட்டடம் வெள்ளை யடிக்கப்பட்டு, விளக்குகள் போடப்பட்டன. 2 சப் ரிஜில்தரார், சப் மாஜில்டிரேட் அவர்களும் இதர ஜனங்களும் காரியதரிசியினுடைய தோட்டத்தில் கூடினார்கள். அந்த மஹோற்சவத்திற்காகத் தென்னைகள் நடப்பட்டன, கற்கண்டு விநியோகம்செய்யப்பட்டது. கனம் சேதுராமய்யர் மாம்வைத்து வளர்க்கும் விவரத்தைப்பற்றி உபந்நியாசம் செய்தார்.

நெ. 8. நிக்கோல்ஸன் டவுன் பாங்கு.—மெம்பர்கள் விருந்துண்டு பன்னிரண்டாந்தேதி கொண்டாடினார்கள். ராஜா, ராணி நன்மையை வேண்டினார்கள்.

நெ. 27. மன்னார்குடி சங்கத்தில்.—1. ஒரு பொது வீதியில் ஒரு கலை கட்டப்பட்டது, அதில் விளக்குகள் வைக்கப்பட்டன.

நெ. 31. ஆனைக்காடு.—ஏழைகளுக்கு அன்னவஸ்திர மளித்தல், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு தின்பண்டமளித்தல். ஊர்கோல முதலியவைகளுடன் மூடி சூட்டின வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

நெ. 35. ராஜாமடம்.—ஐக்கியத்தைப்பற்றி கனம் வ. கிருஷ்ணஸ்வாமி அய்யரால் உபந்நியாசம், விளையாட்டுகள் விடப்பட்டன, ஊர்கோலம் நடந்தேறின.

நெ. 76. சேங்காலிபுரம் சங்கம்.—மெம்பர்களில் எல்லாரும் அலங்கரிக்கப்பட்டிருந்த கோவிலில் கூடினார்கள். புரோக்ளமேஷன் வாசிக்கப்பட்டு வேட்டுகள் போடப்பட்டன. சமஸ்கிருத பாஷையில் சங்கத்தின் மெம்பர்களால் சுலோகங்கள் வாசிக்கப்பட்டன. ராஜபக்தியின் விஷயத்தைப்பற்றி உபந்நியாசம் செய்தார்கள். கற்கண்டு முதலியவைகள் கொடுத்து ஊர்கோலம் நடந்தது. அன்றிரவு ஒருவிருந்து சாப்பாடு நடந்தேறியது. எல்லாவீடுகளிலெல்லாம் விளக்குகள் போட்டிருந்தார்கள்.

நெ. 79. வள்ளுவக்குடி.—பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு தின்பண்டங்கள் கொடுக்கப்பட்டன, 2. ஆங்கிலேய அரசாட்சியின் நன்மையைப்பற்றியும் ஐக்கியத்தின் நன்மைகளைப்பற்றியும் உபந்நியாசம், 3. பிள்ளைகளின் விளையாட்டுகளுக்கு பரிசளித்தனர், 4. ராஜா ராணி படத்தை அலங்கரித்து ஊர்கோலம், 5. ராஜ விசுவாசத்தைக் கொண்டாடி முடிசூட்டினநாளை சந்தோஷித்தனர்.

நெ. 89. அணைக்குடி—பாட்டுகளுடனும் தீவட்டிகளுடனும் நேர்த்தியான ஊர்கோலம் நடந்தது. சர்க்கரையும் புஷ்பமும் கொடுக்கப்பட்டன.

நெ. 326. வண்டுவாஞ்சேரி.—தேவாலயங்களில் அபிஷேகம். சிறுவர் சிறுமியர்கள் முதலானவர்களுக்குச் சிற்றுண்டி முதலிய சாப்பாடுகளளிக்கப்பட்டன; மத்தாப்பு அதிர்வெடி முதலானவைகளுடன் ஊர்கோலம், நமது ஜீவகாருண்ய மகாராஜா ஆயுளோடு பல்லாழிகாலம் சீவித்து வாழவேண்டுமென்று வாழ்த்தி மிகவும் சிரேஷ்டமாய்க் கொண்டாடினார்கள்.

நெ. 349. ஆலங்குடிமாகாணம்.—சர்க்கார் சாவடியில் ராஜாபடத்தை அலங்கரித்து, ராஜபக்தியைப்பற்றியும், ஐக்கியத்தைப்பற்றியும் உபந்நியசித்தனர். மெம்பர்கள் ரூபா 100 வசூலித்து ஏழைகளுக்கும், பிள்ளைகளுக்கும் மிட்டாய்கள் கொடுத்தனர். 200 பஞ்சமர்களுக்கு அன்னமளித்தார்கள், காரனேஷன் எலிமெண்டரி பாடசாலைக்காக அஸ்திவாரம் போட்டார்கள்.

நெ. 378. திருவாலூர் ஸ்ரீ கமலாம்பிகா அர்பன் பாங்கு.—பாங்கில் கூடி மெம்பர்கள் ராஜபக்தியைப் பற்றியும் ஐக்கியத்தைப் பற்றியும் உபந்நியாசங்களைக் கேட்டார்கள், அவர்களுக்கு பழங்களும் வெற்றிலைப் பாக்கும் கொடுக்கப்பட்டன, தேவாலயங்களில் பூஜைகள் நடத்தப்பட்டன.

நெ. 421. மருதூர்.—கோவில்களில் அபிஷேகங்களாயின. நமது அரசரும் அரசபத்தினியும் ஸகல வைபவத்துடன் நீடூழிவாழ்கவென எல்லாரும் கொண்டாடினார்கள்.

நெ. 426. பிராண்டியன்காரை.— தேவாலயங்களில் அபிஷேகம், ஜனங்களுக்கு வாழைப்பழம், சந்தனம், தாம்பூலமளித்தல் ஐக்கியத்தின் நன்மையைப்பற்றியும் ராஜாங்கத்தின் நன்மையைப்பற்றியும் பிரசங்கித்து வெகு விமரிசையாய்க் அத்தினத்தை கொண்டாடினார்கள்.

நெ. 489. ஆயக்காரம்பலம்.—1 தேவாலயங்களில் அபிஷேகம். 2. சிறுவர் சிறுமியர்களுக்கு சிற்றுண்டிகள். எல்லோரும் ஒன்றுகூடி மகுடாபிஷேக தினத்தை மிகவும் வைபவத்துடன் கொண்டாடினார்கள்.

நெ. 564. முள்ளூர்பட்டிக்காடு.—1 தேவாலயங்களில் அபிஷேகம். 2. பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்தல். 3. ஜனங்களுக்கு வாழைப்பழமளித்தல். பாட்டுகளுடனும், அதிர்வேட்டுக்களுடனும் ஊர்கோலம் முதலியவை அத்தினத்தில் நடந்தன.

விசாகபட்டணம் ஜில்லா.

நெ. 101. குருப்பம்.—புரோக்ளமேஷன் வாசிக்கப்பட்டது. வேட்டுகள் போடப்பட்டன. பிள்ளைகளும் பெண்களும் பாடினார்கள். மிட்டாய்கள், பென்சல்கள், பேனாக்கள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கொடுத்தார்கள்.

நெ. 102. மங்காவரம் சங்கம்.—தேவாலயங்களில் பூஜைகள், ஏழைகளுக்கு வஸ்திரமளித்தல், பாணவேடிக்கைகள், பஜனை முதலிய ஆர்ப்பாட்டங்கள் நடந்தேறின.

ஐக்கிய நாணயச் சங்க ரிஜிஸ்ட்ரார் விடுத்த ஸர்க்யுலர்.

D. Dis. நெ. 1642 of 1911.

"மாட்சிமைதங்கிய நமது சக்கரவர்த்தியார் ஜியார்ஜ் V. பிரபுவுக்கும் அவர் அருமை பத்தினி நமது சக்கரவர்த்தினியாருக்கும் நடக்கப்போகும் முடிசூட்டு விஷயமாய் ஆங்காங்கு ஊர்களில் 1911ஆ டிசம்பர் 7உ, 12-ம் தேதிகளில் அந்த வைபவத்தைக் கொண்டாடும்படி காருண்ய கவர்ன்மெண்டார் உத்தரவிட்டதை அனுசரித்து இந்த சர்க்குலர் எல்லா ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

323	காளப்பநாய்க்கன்பட்டி ...	1090	1574	...	5500	8164	3872	230	385	...	...	
342	சேந்தமங்கலம் ...	292	50	200	2000	2542	350	69	96	5	300	
	மதுரை ஜில்லா.											
	திண்டுக்கல்தாலூகா.											
221	வடசந்தூர் ...	74	...	...	1500	1574	320	15	15	5	260	

* கவர்ன்மெண்டாரிடமிருந்து பெறப்பட்ட கடன் ரூபா உள்பட.

† ,, ,, ,, 1600 ,,

ரிஜிஸ்டர் நெம்பர்.	ஜில்லா. தாலூகா. சங்கத்தின் பெயர்.	1911ஆ ஜூன்மீ 30உயிலிருந்த தொகை. பங்குத் தொகை.	மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்களும்.	மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்களும்.	இதர சங்கங்களிலிருந்து கடன்.	இவ்விதமாக சங்கத்தினது தொழிலில் நடத்தக் ஏற்பட்ட தனம்.	1910-11ம் ஆண்டு மெம்பர்களுக்கு அல்லது வெளியாருக்கு பட்டுவாடா செய்த கடன்களின் மொத்தம்.	1910-11-ம் வருஷத்திற்கான நிகரலாபம்.	1910-11-ம் வருஷத்து ஆயிட்டுக்குப் பிறகு உள்ள மேலுமநிதி.	தவணை தவறின. மேலுமகளின் சங்கிலை	தொகை.	வசூரா.
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
	திண்டிக்கல் தாலூகா.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.		ரூ.	
222	கோயிலூர் ...	146	...	...	5000	5146	4529	46	46	...	...	
	பெரியகுளம் தாலூகா.											
145	பெரியகுளம் ...	2350	3300	7076	...	10375	12206	433	745	7	475	
	திருமங்கலம் தாலூகா.											
439	வேலந்தூர் ...	133	...	3500	...	3633	3631	55	55	...	...	
440	சிந்துப்பட்டி ...	151	...	...	3000	3151	3150	43	43	1	50	
441	உசிலம்பட்டி ..	181	...	...	10000	10181	12525	95	95	1	300	
442	மேய்க்கிலார்பட்டி ...	208	...	...	5000	5208	5583	91	91	...	...	
447	அரியப்பட்டி ...	116	...	4000	...	4116	4120	55	55	...	...	
448	வெள்ளை மலைப்பட்டி ...	23	...	...	500	5231	5777	80	80	...	...	
463	வேப்பனத்து ...	104	...	...	2500	2604	2606	27	27	...	...	
464	வள்ளப்பட்டி ...	120	...	...	4000	4120	4110	46	46	...	...	
465	காட்டாட்டான்பட்டி ...	163	...	...	4000	4163	4115	51	51	1	50	
466	ஆயன்மேட்டுப்பட்டி ...	85	...	...	3000	3085	3280	21	21	...	...	
467	போட்டம்பட்டி ...	126	...	...	3500	3626	3625	17	17	..	...	
551	நாட்டம்பட்டி ...	83	...	1500	...	1583	1575	—4	...	...	...	நஷ்டம்.
552	ஆயன்குளம் ...	114	...	4000	...	4114	4111	—5	...	..	...	நஷ்டம்.
553	முட்டியம்பட்டி ...	120	...	2500	...	2620	2735	— 2	...	...	...	நஷ்டம்.
554	அய்யம்பட்டி ...	107	...	3500	...	3607	3605	—14	...	...	...	நஷ்டம்.
555	காரக்காட்டன்பட்டி ...	112	...	3000	2050	5162	5225	1	1	...	...	
556	தருவக்குடி ...	63	...	2000	...	2063	2050	—12	...	...	...	நஷ்டம்.
557	திருமங்கலம் பாபாபட்டி ...	159	...	4000	...	4159	4177	9	9	...	...	
558	மேக்கிலார்பட்டி ...	100	...	3000	...	3100	3145	...	...	1	50	
560	பெருமாபட்டி ...	202	...	4000	...	4202	4195	35	35	...	...	
561	நல்லதேவன்பட்டி ...	110	...	3000	...	3110	3100	1	1	...	...	
562	திருமங்கலம் மலைப்பட்டி. ...	200	...	3000	...	3200	3215	31	31	...	...	
563	நாவர்பட்டி ...	96	...	2500	...	2596	2578	—7	...	...	...	நஷ்டம்
564	வள்ளயபட்டி ...	100	...	2500	...	2600	2662	1	1	...	...	
	மதுரை தாலூகா.											
81	ஒத்தக்கடை ...	830	...	4000	3500	8330	6900	128	607	8	585	

ரிஜிஸ்டர் நெம்பர்.	ஜில்லா. தாலூகா. சங்கத்தின் பெயர்.	1911ஆ ஜூன் மீ 30உயிலிருந்த தொகை பங்குத்தொகை.	மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும்	மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும்.	இதரசங்கங்களிலிருந்து வாங்கின கடன்கள்.	இவ்விதமாக சங்கத்திற்கு தனது தொழிலை நடத்த ஏற்பட்ட தனது.	1910-11-ம் ஆண்டில் மெம்பர்களுக்கு அல்லது கொண்டைக்கடன்கள் பட்டுவாடாசெய்த கடன்களின் மொத்தம்.	1910-11-ம் வருஷத்திற்கான மிகாலாபம்.	1910-11-ம் வருஷத்து ஆடிட்டுக்குப் பிறகு உள்ள நிகரமிதி.	தவணைதவறின. கேஸுகளின் சங்கியை.	தொகை.	வகை.
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
	ராமநாதபுரம் ஜில்லா. சாத்தூர் தாலூகா.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ	ரூ.	ரூ.		ரூ.	
13	கம்பிபுரம் விவசாயபாங்க*	1280	...	240	200	2035	2264	139	772	4	107	
147	வடமலைபுரம் ...	928	414	228	4500	6065	9049	170	257	...	...	
292	திருத்தாங்கல் ...	232	...	...	3500	3732	8405	73	75	2	150	
412	ஆலமரத்துப்பட்டி ...	189	62	4	3500	3755	4084	26	26	...	...	
413	பெத்தசேத்திப்பட்டி ...	97	20	...	2000	2117	3110	4	4	4	140	
420	சிங்கமலைப்பட்டி ...	110	3	5	1500	1518	2115	—5	...	...	...	கஷ்டம்.
433	வெற்றிலையூறணி ...	109	10	...	1500	1619	1565	6	6	6	215	
434	ராமலிங்கபுரம் ...	86	4	...	2000	2090	2075	— 8	...	2	75	கஷ்டம்.
435	மார்வேரி ...	328	30	...	4500	4858	5050	16	16	1	25	
450	மேலமாத்தூர் ...	89	...	...	1000	1089	1010	—2	...	...	...	கஷ்டம்.
458	ஆமத்தூர் ...	78	...	...	1500	1578	1765	1	1	...	...	
474	தாயுலூபட்டி ...	212	...	...	2500	2712	3580	24	24	...	...	
477	தாண்டாக்கம் ...	193	4	60	4000	4257	4250	3	3	...	...	
484	வெள்ளயபுரம் ...	195	13	...	4000	4208	4550	12	12	...	...	
532	கள்ளசென்னுப்பட்டி ...	127	20	...	3000	3147	1150	19	19	...	...	
559	பெரியவாடியார் ...	132	...	...	1500	1632	1625	15	15	...	...	
588	கள்ளவளவகம்பட்டி ...	80	4	...	...	84	77	4	4	...	...	
584	பூவனுதபுரம் ...	171	25	...	2000	2196	2200	18	18	...	...	
586	சாத்தூர்அணைகுட்டம் ...	81	...	...	1500	1581	1575	—4	...	...	...	கஷ்டம்.
589	சாளுவர்ப்பட்டி ...	170	...	...	...	170	190	31	31	...	...	
590	சுப்ரமண்யபுரம் ...	83	...	...	...	83	75	8	8	...	...	
	ஸ்ரீவில்லிபுத்தூர்தாலூகா.											
239	ஆயர்தனம் ...	80	2	...	1500	1582	454	23	31	...	...	
240	வெள்ளைப்பொட்டல் ...	128	...	...	1700	1828	651	27	37	...	...	
443	ஸ்ரீவில்லிபுத்தூர்மங்கலம்	377	117	...	4000	4494	4535	34	34	10	131	
444	களஞ்சக்குரிச்சி ...	119	...	...	2500	2619	2766	1	1	...	...	
451	தாசக்குடி ...	144	...	...	2000	2144	2778	14	14	1	27	
452	வேதப்பட்டி ...	155	...	...	1500	1655	1655	24	24	1	25	
533	சுக்ரவாரப்பட்டி ...	107	16	3	2500	2626	2645	11	11	...	...	
	திருநெல்வேலி ஜில்லா. ஓட்டப்பிடாரம் தாலூகா											
6	விளாதிகுளம் விவசாய பாங்க்† ...	725	482	712	1400	3914	3765	155	1024	1	100	

* கவர்ன்மெண்டாரிடமிருந்து பெறப்பட்ட கடன் 315 ரூபா உள்பட.

† " " " 595 "

ரிஜிஸ்டர் நெம்பர்.	ஜில்லா. தாலூகா. சங்கத்தின் பெயர்.	1911ஆ ஜூன் மீ 30யிலிருந்த தொகை. பங்குத்தொகை.	மெம்பர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும்.	மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து சங்கம் வாங்கின கடன்களும் டிபாஸிட்டுகளும்.	இதரசங்கங்களிலிருந்து கடன்கள்.	இவ்விதமாக சங்கத்து இருப்பிலுள்ள நடப்பு தொழிலை எறப்பட்ட தனம்.	1910-11-ம் ஆண்டில் மெம்பர்களுக்கு ஒவ்வொரு பட்டுவாடா செய்த கடன்களின் மொத்தம்.	1910-11-ம் வருஷத்திற்கான நிகரலாபம்.	1910-11-ம் வருஷத்து ஆடிட்டுக்குப் பிறகு உள்ள நிகரம்.	தவணை தவறின. கோஷாகளின் சங்கிலை.	தொகை.	ஷரா.
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
	தஞ்சாவூர் ஜில்லா.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ	ரூ.		ரூ.	
	தஞ்சாவூர் தாலூகா.											
9	மெலட்டூர் விவசாயபாங்க்*	4166	25	...	2500	7496	7612	493	1879	3	250	
78	திட்டை ...	396	1295	2360	...	4021	3030	41	154	1	50	
	கும்பகோணம் தாலுகா.											
82	பௌண்டரீகபுரம் ...	1270	2804	6350	...	10424	4505	258	702	2	483	
89	அணைக்குடி ...	465	...	...	600	1065	516	53	166	16	439	
349	ஆலங்குடிமாகாணம் ...	564	21	8	1800	2893	2199	45	63	...	...	
408	பட்டீசுவரம் ...	251	...	...	2500	2451	2745	49	49	...	...	
	சீயாழி தாலுகா											
79	வள்ளுவக்குடி ...	515	...	...	2500	3015	3040	190	307	3	154	
	நன்னிலம் தாலுகா.											
76	சேங்காலிபுரம் ...	1415	1818	1770	...	5003	1900	154	479	10	920	
	மன்னார்குடி தாலுகா											
7	நீடாமங்கலம் விவசாய பாங்க்† ...	3372	2334	4488	...	11194	14025	245	1885	7	276	
	திருத்துறைப்பூண்டி தாலுகா.											
325	பஞ்சந்திகுளம் நடுசேத்தி.	248	...	...	4200	4448	800	99	152	...	...	
326	வடுவஞ்சேரி ...	195	...	...	2500	2695	280	65	83	...	...	
421	மரத்தூர்தெற்குசேத்தி ...	327	...	...	4000	4327	4300	98	98	...	...	
426	பேராண்டியங்கரை ...	138	...	...	1500	1638	1780	23	23	...	...	
489	ஆயக்காரம்பலம் ...	150	...	...	2000	2150	2100	17	17	...	...	
	பட்டுக்கோட்டைதாலுகா.											
31	அணைக்காடு ...	...	130	425	4800	5355	2975	129	746	23	1452	
35	ராஜாமடம் ...	...	10	...	2800	2810	75	43	322	40	2427	
480	ஆலத்தூர் ...	231	...	...	4500	4731	4730	34	34	...	...	
481	பலத்தாலி ...	126	...	...	2400	2526	3585	18	18	...	...	
	மலையாளம் ஜில்லா.											
	பாலக்காடு தாலுகா.											
372	கண்ணம்ப்ரா ...	590	2090	2605	...	5285	9194	51	153	2	26	
	தென் கன்னடம் ஜில்லா.											
	உப்பினங்காடி தாலுகா.											
181	புட்டூர் ...	677	1155	2426	...	4257	8190	201	257	...	...	

* கவர்ன்மெண்டாரிடமிருந்து பெறப்பட்ட கடன் 805 ரூபா உள்பட.

† ,, ,, ,, 1400 ,,

MADRAS

மதராஸ் புல்லடின் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் III.] 1911-ம்ஞு ஸெப்டெம்பர்மீ 10உ [இலக்கம் 1.

இந்தியாவில் நாணய பாங்கிகள்.

(ம-ா-ா-ஸ்ரீ கே. ராமஸ்வாமி ஐயர் பி. எ., பி. எல். எழுதியது.)

நாணய பாங்கிகள்-கிருஷிகர்களுக்கும் கைத்தொழிலாளிகளுக்கும் சுலபமான வட்டி வீதத்தின் பேரில் மூலதனம் கொடுத்துதவுவதோடு, அந்த பாங்கிகளைச் சேர்ந்த மெம்பர்கள் தாங்கள் மிகுத்தும் பணத்தை டிபாஸிட் செய்துவைப்பதற்காக அவர்களுக்கு சுலப சாதனங்கள் செய்துகொடுத்து அதன் மூலமாய் அவர்களுக்குள் சிக்கனம் விருத்தியாகும்படியும் செய்யும் நோக்கத்துடன் இந்த தேசத்தில் ஏற்படுத்தப்படுகின்றன. இந்து தேசத்துக் கிருஷிகராயினுஞ்சரி உழைப்பாளியாயினுஞ்சரி, அவர்களின் ஸ்திதி இன்னதென்று நம் எல்லோருக்கும் தெரியும். அவர்களில் பெரும்பாலாருக்கு, அவர்கள் நிலத்தைப் பயிரிடுங்காலம் வரும்போது கையில் மூலதனம் இருப்பதில்லை. அவர்கள் தங்களுக்கு மிகவும் சமீபத்தில் வசிக்கும் வட்டிவியாபாரியினிடம் பணம் கேட்டுக் கடன் வாங்குகிறார்கள். அப்படி வாங்கும் கடனுக்கு வட்டி ஒரு நிஷ்கரிஷையான வீதப்படி பணமாகவோ மாசூலாகவோ கொடுக்க வேண்டியதாகிறது.

வட்டிவீதம் நூற்றுக்கு 12க்குக் குறைந்திருப்பது அபூர்வம். அது சராசரியில் நூற்றுக்கு 18க்குக் குறையாமலும் 24க்கு மேற்படாமலும் இருக்கிறது; அதனுடன் சேரும் அபாரதவட்டியோ நூற்றுக்கு 18 முதல் 30 வரையில் இருக்கிறது. நிலத்தில் விளையும் மாசூலாக வட்டி செலுத்த

வேண்டியிருக்கும் விஷயங்களிலே, அந்த வட்டி வீதத்தைப் பணமாக மாற்றினால், அது நூற்றுக்கு 18முதல் 75வரையிலுள்ள எந்த வீதமாகவாவதிருக்கும். சில சந்தர்ப்பங்களிலே வட்டியை முன்னதாய்ச் செலுத்தவேண்டுமென்று கேட்கிறார்கள். வட்டி வீதமும் கடன்வாங்குபவரின் தேவைகளுக்கும் அந்தஸ்துக்கும் தக்கபடி மாறுகிறது; சொத்து கொஞ்சங்கூட இல்லாதவன் உயர்ந்த வீதப்படி வட்டி கொடுக்கவேண்டியிருக்க, கொஞ்சம் சொத்தாதாரமுடைய ஜனங்களுக்கு அதைவிட சுலபமான வட்டி வீதத்தின் பேரில் பணம் கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. சாதாரணமாய் துர்ப்பிக்ஷ காலங்களில் கஷ்டப்படாமலிருக்கும்பொருட்டு பணத்தை மிகுத்திவைப்பது இந்து தேசத்துக் கிருஷிகர்களுக்காவது கைத்தொழிலாளிகளுக்காவது கஷ்ட சாத்தியமாயிருக்கிறது. தபாலாபிஸ் ஸேவிங்ஸ் பாங்கியில் பணம் போட்டு வைப்பதில் அவர்களுக்கு அதிக இஷ்டமில்லை.

இந்த ராஜதானியிலுள்ள சில முக்கியமான பட்டணங்களிலும் பெரிய கிராமங்களிலும் நாட்டுக்கோட்டை செட்டிமார் பாங்கிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகள் அவ்வவ்விடத்திலுள்ள ஜனங்களுக்குப் பணம் கடன் கொடுப்பது மல்லாமல் அவர்களிடத்திலிருந்து டிபாஸிட்டுத் தொகைகளும் வாங்கிக்கொள்ளுகின்றன. அந்தப் பாங்கிகளில் கட்டப்படும் டிபாஸிட்டுத் தொகைகளின்மேல் நூற்றுக்கு 6 முதல் 9 வரையில் தான் வட்டி கொடுக்கப்படுகிறது; ஆனால் நூற்றுக்கு 15 முதல் 18 வரையிலுமுள்ள வட்டி வீதத்துக்குக் குறைவாக அவைகள் ஒருபோதும் கடன் கொடுப்பதில்லை. அவைகளுக்கு விசேஷலாபம் கிடைக்கிறது; டிபாஸிட் செய்கிறவர்களுக்கு இந்த லாபத்தில் துளிகூடக் கிட்டுவதில்லை; கடன வாங்குகிற ஏழையும் தன் திரவிய நிலைமைக்குத் தக்கபடி எவ்வளவு பங்கு கொடுக்க முடியுமோ அதைவிட அதிகமாகக் கொடுக்கும்படி வருகிறது. வட்டிக்குப் பணம் கொடுப்பதையே ஜீவனோபாயமாகவுடைய இந்த செட்டிமார்களுக்கு விசேஷ வரும்படி கிடைப்பதற்கு மேற்கண்ட சங்கதிகளே காரணமாகும்.

இந்த வகுப்பு ஜனங்களுக்குக் கூட்டுத்தொழில் முறையாய் நடந்துவரும் கிராம பாங்கிகளாலும் பட்டண பாங்கிகளாலும் கஷ்ட நிவர்த்தி உண்டாகுமென்று நம்பலாகிறது. ஒரு கூட்டுத்தொழில் பாங்கியின் விசேஷ லட்சணங்களெவ வென்றால்:—

(1) அதைச் சேர்ந்த மெம்பர்களே பாங்கியில் அதிகாரம் செலுத்தி அதன் காரியங்களை நிர்வாகம் செய்கிறார்கள்.

(2) கடன் கொடுப்பது, கடன் வாங்குவது என்னும் இரண்டு வேலைகளையும் ஒவ்வொரு மெம்பரும் தாமொருவரே செய்துகொள்ளுகிறார்.

இந்த தேசத்திலுள்ள கூட்டுத்தொழில் கிராமபாங்கிகள் ஜெர்மனி தேசத்து ரெய்பெய்ஸன் பாங்கிகளின் மாதிரியை அனுசரித்து ஏற்படுத்தப்

பட்டன. சென்னை இராஜதானியில் மாத்திரம் இப்போது 600 க்கு மேற்பட்ட பாங்கிகள் இருக்கின்றன; இந்த சங்கியை தீவிரமாய் அதிகரித்து வருகிறது. மற்ற ஜில்லாக்களிலிருப்பதைவிட செங்கற்பட்டு, அனந்தபுரம், சேலம், திருச்சினாப்பள்ளி இந்த ஜில்லாக்களில் தான் இது விஷயமாய் அதிக சுறுசுறுப்பாக வேலை நடந்துவருகிறது.

கூட்டுத்தொழில் முறையை அனுசரித்து பாங்கிங் வேலை நடத்தும் ஏற்பாட்டுக்கு ஜன்மஸ்தானம் ஜெர்மனிதேசமாம். இப்போது ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இரண்டு வகையான ஸ்தாபனங்களுக்கும் அவைகளை முதலில் ஏற்படுத்தி நடத்தினவர்களான ஷுல்ஸ், ரெய்பெய்ஸன் என்பவர்களின் பெயர்களே வைக்கப்பட்டிருக்கின்றன. 1905-ம் வருஷத்திலே ஷுல்ஸ்-டெலிட்ஷ் வகையைச் சேர்ந்த பாங்கிகள் 1020 இருந்தன (இந்தக் கூட்டுப் பெயர்ச் சொல்லிலே டெலிட்ஷ் என்பது ஷுல்ஸ் என்பவரின் பிறப்பிடமாம்); இந்த பாங்கிகளில் 5,86,595 மெம்பர்கள் இருந்தார்கள்; அதே வருஷத்தில் 13,181 ரெய்பெய்ஸன் பாங்கிகள் இருந்தன; அவைகளில் 9,54,473 க்கதிகமான மெம்பர்கள் இருந்தார்கள்.

இடலி, ஸ்விட்ஸர்லண்ட், பெல்ஜியம், ப்ரான்ஸ் இந்த தேசங்களிலே ஷுல்ஸ்-டெலிட்ஷ் மாதிரியை அனுசரித்த பாங்கிகளும், ரெய்பெய்ஸன் மாதிரியை அனுசரித்த நாட்டுப் பாங்கிகளும் இருக்கின்றன. இங்கிலாந்திலே 1906-ம் வருஷம் வரைக்கும் நாட்டு பாங்கிகளாவது நகர பாங்கிகளாவது எதுவும் கிடையாது. இதற்குக் காரணம் என்னவென்றால், தொழில் சம்பந்தமான புரட்சியானது ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசங்களில் காட்டிலும் இங்கிலாந்திலே ஜாஸ்தியாக பூர்த்தியடைந்திருக்கிறபடியால், கடன் வாங்காமலே ஜீவனம் செய்யக்கூடிய கூலியாட்கள் அந்த தேசத்திலே அதிகமாயிருக்கிறார்கள்; மேலும் தனி நபர்களால் ஏற்படுத்தப்பட்ட பாங்கிகள் ஸ்வல்ப ஐவேஜுள்ளவர்களுக்குத் தேவையான அளவுக்குக் கடன்கொடுத்து உதவியிருக்கின்றன. பாங்கிகளைப் பற்றியோ வென்றால், இங்கிலாந்து தேசத்துக்குடியானவர்களுக்கு வேண்டிய மூலதனம் வேறே இடங்களில் கிடைக்கிறபடியால், அவர்களுக்கு பாங்கிகளைப் பற்றிய ஆவசியகமே யில்லை; இப்படி இருப்பதற்குக் காரணம் அந்த தேசத்தில் வழங்கிவரும் விசேஷவகையான நிலபாத்தியதையே யாகும்.

ஜெர்மனி, ப்ரான்ஸ், இடலி, ஸ்விட்ஸர்லண்ட் இந்த தேசங்களில் இருப்பதுபோலவே இந்தியாவிலும் பூமியானது அநேகமாய் விவசாயவேலை செய்யும் சுவான்தார்களின் வசத்தில் இருக்கிறது. பாங்கிகள் ஏற்படுவதற்கு முன் அந்த தேசத்திய விவசாயஸ்திதியானது இந்நாளில் நம் தேசத்தாரின் ஸ்திதியைப்போலவே இருந்தது. ஐரோப்பாகண்டத்தில் எவ்வளவோ விசேஷகாரியசித்தியாக அபிவிருத்தியடைந்த பத்ததியானது இந்த தேசத்தில்கூட ஆழ

மாய் வேறுன்றுமென்று நம்ப நமக்குத் தக்க நியாயமிருக்கிறது. ஆகவே ஐரோப்பிய தேசங்களிலே என்னென்ன விதமான சங்கங்கள் அமைந்திருக்கின்றனவோ அவைகளைத் தெரிந்துகொள்ளுவது நம் தேசத்தாருக்கு லாபகரமாயிருக்கும். இந்த வியாசத்திலே அவைகளைப் பற்றி விஸ்தாரமாய் விவரித்துப் பேசுவதாய் உத்தேசமில்லை. இதுவிஷயமாக இன்னும் அதிகமாய்த் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் "கோவாபரேடிவ் (கூட்டுத்தொழில் முறையான) பாங்கிங்கை"ப் பற்றி ஊல்வ் என்பவர் எழுதியிருக்கும் புஸ்தகத்தையும், "அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன்" என்னும் விவசாய சங்கஸ்தாபனத்தைப்பற்றி ப்ராட் என்பவர் எழுதியிருக்கும புஸ்தகத்தையும் படிக்கலாம்.

"ஸ்வதேசத்திலும் வெளிநாடுகளிலும் நடக்கும் கூட்டுத்தொழில்" என்பதைக் குறித்து மிஸ்டர் பே (Mr. Fay) என்பவர் எழுதிய புஸ்தகத்திலே ரெய்பெய்ஸன் பாங்கின் லட்சணத்தைப்பற்றியும் அப்படிப்பட்ட பாங்கள் ஜெர்மனியில் செய்திருக்கும் வேலையைப்பற்றியும் சொல்லியிருப்பதை இங்கே எடுத்துக் காட்டுகிறேன்.

"இதர பாங்கிகள் செய்திராத என்ன வேலையை ரெய்பெய்ஸன் பாங்கிகள் செய்திருக்கின்றனவென்று கடைசியாகக் கேட்கும்பட்சத்தில், கதிமோட்சமின்றித் தாறுமாறான ஸ்திதியிலிருந்த சுவல்ப விவசாயிகளுக்குக் கடன் கொடுத்துதவக்கூடிய ஒரே வகைச் சங்கத்தை ஸ்தாபித்துக்கொடுப்பதுதான் சாத்தியமாகையால், அந்த உதவியை ரெய்பெய்ஸன் அவர்களுக்குச் செய்தாரென்று டை கேள்விக்குப் பதில் சொல்லலாம். கைத்தொழிலானது வியாபாரிகளைச் சிறிதுமட்டில் ஒன்றாய்க் கூடும்படி செய்கிறது. விவசாயத் தொழிலை மாத்திரம் ஒருவன் செய்துவரும்பட்சத்தில், அந்தக் குடியானவன் தனித்துநின்று உலக சங்கதிகளைக் குறித்து ஒன்றுமறியாதவனாய் இருப்பதனால், ஊராரைத் திரிந்துகொண்டிருக்கும் ஸாவ்காரின் வலையில் சிக்கிக்கொள்ளுகிறான். ஜெர்மனியில் விவசாயத்தினால் சுதந்தரஜீவனம் செய்பவர்களில் 100க்கு 50 பேருக்கு மேற்பட்டவர்கள் இப்பொழுது நாட்டு பாங்கிகளைச் சேர்ந்த மெம்பர்களா யிருக்கிறார்கள்; இவர்களல்லாமல் இன்னும் 100ல் 10பேர் முக்கியமாய் பெருத்த குடியானவர்களா யிருப்பவர்கள் நகர பாங்கிகளில் மெம்பர்களா யிருக்கிறார்கள். கூட்டுத்தொழில் சங்கங்களில் சேராத விவசாயிகள் வரவர அபூர்வமாய்க்கொண்டு வருகிறார்கள். சுவல்ப நிலத்துக்குடையவர்களான குடியானவர்களின் இருப்பிடமாகிய ஜெர்மனி தேசத்துத் தென்மேற்கு பாகத்தில் தான் இதர இடங்களிலிருப்பதைவிட ரெய்பெய்ஸன் பாங்கிகள் அதிகமாயிருக்கின்றன. இந்த கிராமங்களிலே பெரும்பான்மையானவற்றில் உண்டாயிருக்கும் மாறுதலானது வாஸ்தவத்தில் ஒரு பெரும் புரட்சிக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல. ஆதியில் ஏற்பட்ட கிராமபாங்கியில் உண்டாயிருக்கும் அனுபோகத்தை இதற்கு நிதர்சனமாகக் காட்டலாம்.

"ரைன் நதிக்கரையிலுள்ள நியுவீய்ட் என்னும் ஊரிலிருந்து சுமார் ஒரு மணிநேரத்தில் நடந்துபோய்ச் சேரக்கூடிய இடத்திலே வெஸ்டர்வால்டின் ஓரமாய் ஆர்ன்ஹாஸன் என்னும் சிறு கிராமமாகிய பீடபூமி இருக்கிறது. இது இருக்கும் ஜில்லாவானது அதிக செழிப்பானதல்ல; அதில் வசிக்கும் ஜனங்கள் அநேகமாய் சொற்ப நிலத்துக்குடையவர்களான குடியானவர்கள்; அவர்களுள் சிலருக்கு ஒரே ஒரு எருது அல்லது பசுவை மேய்ப்பதற்குப் போதுமான நிலம்தான் உண்டு. 10-ஏகரா சொந்தத்திலுடையவன் பணக்காரன். 1862-ம்ஞுத்துக்குமுன் அந்த கிராமம் வெகு பரிதாபமான நிலையிலிருந்தது; விழுந்துபோகும் ஸ்திதியிலுள்ள பழங்கட்டிடங்களுள்ளதாயும், சீர்கேடான முற்றங்களுள்ளதாயும் மழைகாலத்தில் அழுக்குநீர்ப் பெருக்கமுள்ளதாயும் இருந்தது; ஒழுங்காய்க் குவிக்கப்பட்ட எருக்குவியலை ஒரு போதும் காணமுடியாது; அங்கு வசிக்கும் ஜனங்களோ கந்தல்களைத் தரித்தவர்களாயும் விபசார நடத்தையுள்ளவர்களாயும் இருந்தார்கள்; குடிப்பதும் சண்டைபோடுவதும் சர்வசாதாரணமா யிருந்தது; குதிரைகளும் எருதுகளும் அநேகமாய் யூத வியாபாரிகளுக்கே ஸ்வாதீனமாயிருந்தன. விவசாயக் கருவிகள் சொற்பமா யிருந்தன; வயல்களைச் சரியானபடி பண்படுத்தாததனால் விளைச்சல் குறைவாகவே யிருந்தது; கிராமத்தார்களுக்கு நல்ல காலம் பிறக்குமென்னும் நம்பிக்கையும் ஆசையும் போய்விட்டது; அவர்கள் வர்த்தகர்களுக்கும் வட்டி வியாபாரிகளுக்கும் அடிமைகளா யிருந்தார்கள்.

"இப்பொழுதோ ஆர்ன்ஹாஸன் என்னும் கிராமம் சுத்தமா யிருக்கிறது; குடிகள் சண்டை சச்சரவில்லாமல் சிநேகபாவத்துடன் வேலைசெய்து வருகிறார்கள்; கட்டிடங்கள் நல்ல ஸ்திதியில் வைக்கப்பட்டிருக்கின்றன; பண்ணை முற்றங்கள் வேலை நடக்கும் நாள்களில்கூட சுத்தமாயிருக்கின்றன; ஒவ்வொரு பண்ணையிலும் எருக்குவியல்கள் ஒழுங்காய்ச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன; கிராமவாசிகள் தரிக்கும் உடைகள் சாமான்யமாயிருந்தாலும் நன்றாயிருக்கின்றன; அவர்களுடைய பழக்க வழக்கங்களும் கொண்டாடத்தக்கவைகளா யிருக்கின்றன. அவர்களுடைய தொழுவங்களில் உள்ள ஆடுமாடுகள் அவர்களுக்கே சொந்தமா யிருக்கின்றன. வர்த்தகர்களுக்கும் வட்டி வியாபாரிகளுக்கும் அவர்கள் கடன்படாம லிருக்கிறார்கள்; அநேகமாய் ஒவ்வொரு குடியானவனும் நவீன கருவிகளை உபயோகப்படுத்தி வருகிறான். பண்ணைகளின் விலை அதிகரித்திருப்பதுமல்லாமல், வயல்கள் ஜாக்கிரதையாயும் பூர்த்தியாயும் பயிர்செய்யப்பட்டு மாசூல் விசேஷமாய்க் கிடைக்கிறது. கணக்கு விவரங்களைக்கொண்டு விளக்கக்கூடியதைக்காட்டிலும் கொஞ்சம் அதிகமாகவே யிருக்கிற இந்த மாறுதலானது சாமான்யமாயுள்ள ஒரு ரெய்பெய்ஸன் பாங்கியினால் உண்டான பலனேயாகும்.

"ஒரு மெம்பருக்குக் கொடுக்கப்படும் சராசரி கடன்தொகை 500மார்க் (அதாவது 375ரூபாய்) ஆகும். சராசரி வட்டிவீதம் 100க்கு 4முதல்

5வரையில் இருப்பதாகத் தெரிகிறது. கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் விவசாயத்தின் தேவைகளுக்குத் தக்கப்படி ஒரு வருஷமுதல் பத்து வருஷம்வரையில் எவ்வளவு காலமாகவாவதிருக்கலாம். கடன் தொகைகளை அசலும் வட்டியுமாகச் சேர்த்துத் தவணைத் தொகைகளாகத் திருப்பிச் செலுத்தலாம்; ஒரு மெம்பர் இஷ்டப்பட்டால் மொத்தமாகவும் திருப்பிச்செலுத்தலாம். கடன் தொகையை எப்போதும் நாலு வாரநோடிஸ் கொடுத்துத் திருப்பிச் செலுத்தும்படி கேட்கலாம்; ஆனால், கடன் வாங்கினவர் தம் சொத்தைக் கெட்டுப்போகும்படி விட்டுவைத்தாலும், மிதமிஞ்சின செலவினால் கடன் தீர்க்கச் சக்தியற்றிருந்தாலும், ஒரு குறித்த காரியத்துக்காகத் தமக்குக் கொடுக்கப்பட்ட கடனை துர்விநியோகம் செய்தாலுமன்றி மற்றப்படி, அந்தக் கடன்தொகையைத் திருப்பிச் செலுத்தும்படி அவரைக் கேட்பது ஒருபோதும் வழக்கமில்லை. கடன்தொகையைக் காலந்தவறாமல் செலுத்திவருவது ஒரு சன்மார்க்கக் கடமை யென்று போதித்ததே ரெய்ப்பெய்ஸன் துரை செய்த காரியங்களில் மிகவும் கஷ்டமானது; அவருக்கு அதிக வெற்றி உண்டானதும் இந்தக் காரியத்தில்தான்."

சென்னை இராஜதானியிலுள்ள நாணயச்சங்கங்களில் பெரும்பான்மையானவை வேலை நடத்துவதற்குவேண்டிய மூலதனத்தைச் சென்னப்பட்டணத்திலுள்ள ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியிலிருந்துபெறுகின்றன. அவைகளில் அநேக சங்கங்களுக்குச் சொந்தமாக சொற்ப பங்கு மூலதனம் உண்டென்பதிலும், அது போதாமல் இன்னும் அதிகமான தொகை வேண்டியிருந்தால் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியிலிருந்து 100க்கு $7\frac{1}{2}$ வட்டிவீதம் கடன் வாங்கிக்கொள்ளப்படுகிற தென்பதிலும் சந்தேகமில்லை. மிகவும் சொற்ப சங்கங்களுக்கே உள்ளூரில் மூலதனம் கிடைத்திருக்கிறது. ஒரு சங்கத்துக்கு உள்ளூரிலேயே மூலதனம் கிடைப்பது எவ்வளவு சாத்தியமோ அவ்வளவுக்கு அது பலப்பட்டுக் காரியசித்தி பெறுவதாகும். அப்படியிருந்தால்தான் அந்த பாங்கியில் வட்டிக்குப் பணம் போட்டுவைக்கும் உள்ளூராருக்கு அதில் நம்பிக்கை உண்டாயிருப்பதாகச் சொல்லலாம்; இப்படி பணம் போட்டுவைப்பவர்கள் உள்ளூராராயிருப்பதால், அவர்கள் அந்த பாங்கியைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் நடத்தும் நடவடிக்கைகளைப் பிரயோஜனகரமாகக் கவனித்து வரக்கூடும். பாங்கியானது அதைச்சேர்ந்த மெம்பர்களுக்கு சுலபவட்டி வீதத்தின்பேரில் கடன் கொடுத்து உதவுவது மாத்திரமல்லாமல் அவர்கள் மிகுத்தும் தொகைகளை அதில் டிபாஸிட்செய்து வைக்கும்படியாகவும் செய்யவேண்டும். ஒவ்வொரு சங்கத்திலும் டிபாஸிட்பிரிவை விருத்திசெய்யவேண்டும். பணத்தை டிபாஸிட் செய்யும்படி நம்தேசத்தார்களைத் தூண்டவேண்டியிருக்கிறது. அவர்களைச் சிக்கன மற்றவர்களென்று சொல்லமுடியாது. ஏழை ஜனங்கள் தாங்கள் மிகுத்தும் சிறு தொகைகளை அண்டைவீட்டானிடம் வட்டிக்குக்கொடுத்து இவ்விதமாகத் தங்கள் சிறுமூலதனத்தை விருத்திபண்ணியிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம்; அப்படி கொடுத்தவர்களில் அநேகர் நஷ்டமடைவதும்

உண்டு. அநேகமாய் ஒவ்வொரு முக்கியமான கிராமத்திலும் பட்டணத்திலும் சீட்டுக் கம்பெனிகள் ஏராளமாயிருப்பதே பணம் மிகுத்துவதில் ஏழை ஜனங்களுக்குள்ள ஆவலுக்கு அறிகுறியாயிருக்கிறது. ஐவேஜு ஒன்றுமில்லாமலே பழிபாவத்துக் கஞ்சாமல் ஆகாசவர்த்தகம் செய்பவர்களின் கையில் அநேகமாய் இந்தச் சீட்டுச் சங்கங்கள் சிக்கிக்கொண்டிருப்பது நமது தேசத்தின் துரதிருஷ்டமே; இந்த நிதிகள் நடந்துவருவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் காலவரையறை முடிவதற்கு முன்னமே இவைகளில் அநேகம் கலைந்துபோய் விடுகின்றன. கூட்டுத் தொழில் கிராம பாங்கிகளிலும் நகர பாங்கிகளிலும் அவைகளைச் சேர்ந்த மெம்பர்களுக்குள் டிபாஸிட் பிரிவை விருத்தி செய்து சீட்டுப் பண்டுகள் ஏற்படுத்தலாம். இம்மாதிரியான தொழிலை விருத்தி செய்வதற்கான இயற்கையறிவு நம்மவர்களுக் கிடையாதென்று சொல்வதற்கில்லை. சில பழைய சங்கங்களிலே இவ்விரு பிரிவுகளையும் சேர்ந்த வேலைகளில் உண்டாயிருக்கும் ஆச்சரியகரமான காரியசித்தியானது, இவ்வித சங்கங்கள் ஏற்படவேண்டுமென்று ஜனங்களுக்குள் மேன்மேலும் அதிகப்பட்டுவரும் விருப்பத்தைக் காட்டுகிறது. இவ்வித சங்கங்களின் மூலமாய்க் கிராமங்களில் நன்றாய் வேலை நடந்துவரும் பட்சத்தில், நகைகளிலும் லாபமுண்டாகாத காரியங்களிலும் பணம் முடங்கியிருக்கும் சங்கதி இனி நம் காதில் படவேபடாது. இது விஷயமாய் நம்மவர்கள் இந்த பாங்கிகளினால் என்னவிதமாய்ப் பிரயோஜன மடைகிறார்களென்று காட்டுவதற்கு ஒரு திருஷ்டாந்தம் போதுமானது. மதுரையிலுள்ள நாணயச் சங்கத்திலே இப்பிரிவுகள் இரண்டிலும் சென்ற ஒன்றரை வருஷ காலத்தில் ஆச்சரியகரமாய் வேலை நடந்திருக்கிறது. நடைமுதல் டிபாஸிட் தொகைகளைப் பற்றிய விதிகள் 1908-ம் ஷு ஜனவரிமாத ஆரம்பத்தில் செய்யப்பட்டு, மெம்பர்களை டிபாஸிட் தொகைகள் கட்டும்படி கேட்கலாயிற்று. நாளது வரையில் 116 டிபாஸிட்டுகள் வந்திருக்கின்றன. சொற்பத் தொகைகளுக்கும் கொஞ்ச காலத்துக்குங்கூட மெம்பர்களுக்கு வட்டி வரக்கூடியதாயிருப்பது ஒருபக்க மிருக்க, சங்கத்துக்கு அதின் வேலை நடப்பதற்கு வேண்டிய மூலதனத்தின் பெரும்பாகம் வெகு சுலபமான வட்டி வீதத்தின் பேரில் கிடைக்கக்கூடியதா யிருக்கிறது. அதே காலத்தில் சீட்டுப் பண்டுகளும் ஷை சங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்டது; இப்போது 100-மெம்பர்கள் சேர்ந்த 12-சீட்டுப்பண்டுகள் வேலை நடத்திவருகின்றன. இந்த சீட்டுப்பண்டுகள் நாளுக்குநாள் ஜனங்களுக்குள் பிரபலமாய் வருகின்றன. மற்ற பாங்கிகளிலும் கடன் கொடுக்கும் வேலை நடந்து வருவதோடுகூட, இந்த வேலைப் பிரிவுகளிரண்டும் விருத்தியாய் வரவேண்டு மென்பதும் என்னுடைய கோரிக்கை. ஆனால் இந்தப் பிரிவுகளை ஆரம்பிப்பதில் நிர்வாக சங்கத்தார் விசேஷ எச்சரிக்கையாய் நடந்துகொள்ள வேண்டுமென்பது வாஸ்தவமே.

சென்னப்பட்டணம், சேலம், குளித்தலை, (திருச்சினாப்பள்ளி,) கோயமுத்தூர், தெனாலி—இந்த இடங்களிலே ஸெண்ட்ரல் பாங்கிகள் ஏற்படுத்தப்

பட்டிருக்கின்றன. அவைகளைச் சேர்ந்த ஜில்லாவிலுள்ள மற்ற நாணயச் சங்கங்களுக்கு மூலதனம் கடன் கொடுப்பதே அவைகளின் நோக்கம். மொத்தத்தில் சென்னை இராஜதானியிலுள்ள கிராமசங்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டிலே ஐவேஜு கிடைப்பதில் அநேகமாய் ஒரு கஷ்டமும் இல்லை. கடன் கொடுக்கும்படி ரெஜிஸ்ட்ரார் சிபார்சு செய்யும் பட்சத்தில், அப்படி கடன் கொடுக்க ஸென்ட்ரல் சங்கங்கள் தயாரா யிருக்கின்றன. இந்தியாவைச் சேர்ந்த இதர மாகாணங்களிலே, கிராமசங்கங்களுக்கு ஐவேஜு கொடுத்து உதவுவதற்குப் பலவகையான ஸ்தாபனங்கள் இருக்கின்றன.

இந்தியாவிலே கூட்டுத்தொழில் முயற்சியானது சிறிது காலமாகத்தான் உண்டாயிருக்கிறது. இதுவரையிலே அதன் மூலமாய் தேசமுழுவதிலும் ஏராளமான நாணயச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விவசாய சங்கங்களையும் கைத்தொழிற் சங்கங்களையும் பற்றியோவென்றால், இங்குமங்கும் ஸ்டோர்களென்னும் சரக்குசேகர சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தபோதிலும், வெகு சங்கங்கள் இனிமேல்தான் வேலைநடத்தத் தொடங்கவேண்டி யிருக்கின்றன.

கூட்டுத்தொழில் முயற்சியானது ஐரோப்பாவைச் சேர்ந்த பற்பல தேசங்களிலும் வெவ்வேறான பல துறைகளில் பரவி வேலை நடந்து வருகிறதென்பதை இங்கே குறிப்பிடுவது நலமாகும். அது ஐரோப்பாவில் விருத்தியான விதத்தை ஆராய்ந்தறியும்பட்சத்தில் இந்த தேசத்திலே பற்பல வகையான சங்கங்களை ஸ்தாபித்துக் காரியம் கைகூடும்படி இன்னவிதமாய் வேலைசெய்யக் கூடுமென்பதைக் குறித்து ஒருவாறு தெரிந்துகொள்வதற்கு நமக்கு உதவியாயிருக்கும்.

இங்கிலாந்திலே கோவாபரேடிவ் ஸ்டோர்கள் சரக்குகளை உற்பத்தி செய்வது சம்பந்தமாகவும் அவைகளை மெம்பர்களுக்கு விற்பது சம்பந்தமாகவும் ஆச்சரியகரமான காரியசித்தி உண்டாகுமளவுக்கு விருத்தியடைந்திருக்கின்றன. சரக்குகளைச் சேகரம் செய்யும் சங்கங்களை ஏற்படுத்தி விசேஷ அபிவிருத்திக்குக் கொண்டுவந்திருப்பதில் இங்கிலாந்து தேசம் ஒப்புயர்வற்று விளங்குவதாகச் சொல்லப்பட்ட போதிலும், அது விவசாய சங்கங்களை விருத்திசெய்வதில் ஐரோப்பிய தேசங்களுக்குள்ளே கடைப்பட்டிருப்பதனால், இது விஷயமாய் அந்த தேசத்தில் காணப்படும் அபிவிருத்தி மற்ற தேசங்களில் உண்டாயிருப்பதுடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது வெகு சொற்பமாயிருக்கிறது.

ஜெர்மனி தேசத்திலே கடன் பாங்கிகள், விவசாய சங்கங்கள் என்னும் இருவகை ஸ்தாபனங்களும் ஆச்சரியகரமான அபிவிருத்தி யடைந்திருக்கின்றன.

டென்மார்க் தேசத்திலே விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழிலில் அதிவிசேஷமான காரியசித்தி உண்டாயிருந்தபோதிலும், அங்கே நாட்டு பாங்கிகள் இல்லை.

இது மாதிரியாகவே மற்ற தேசங்களிலும் பற்பல விதமான அபிவிருத்தி யுண்டாயிருப்பதாகக் காணப்படுகிறது.

இந்தியாவிலுள்ள குடியானவர்களின் நிலைமை ஜெர்மனியிலும் இடலியிலும் உள்ள குடியானவர்களின் நிலைமையைப்போன்றிருப்பதனால், பின் சொன்ன தேசங்களிலுள்ள சங்கங்களைப் பார்த்து அவைகளைப்போலவே இனி இந்த தேசத்தில் நாம் வேலை செய்யலாம்.

ப்ரிடிஷ் கூட்டுத்தொழில் காங்க்ரெஸ்.

——(:-:)——

ப்ரிடிஷ் கூட்டுத்தொழிலாரின் நாற்பத்து மூன்றும் வருஷாந்தக் கூட்டம் ப்ராட்போர்ட் என்னும் இடத்திலே 1911-மீஷு ஜூன்மீ 5-உ திங்கட்கிழமையன்று மிஸ்டர் ஜார்ஜ் தோர்ப் என்பவரின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் நடந்தது. 1200 டெலிகேட்டுகளுக்கதிகமாய் வந்திருந்தார்கள். நார்வே, ஸ்வீடன், ஜெர்மனி, இடலி, ஸ்விட்ஸர்லண்ட், ருமானியா, ஜப்பான் இந்த தேசங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இந்தக் காங்க்ரெஸ் சம்பந்தமாக ப்ராட்போர்ட் கொலீஸியத்தில் கூட்டுத்தொழிற் பொருட்காட்சி யொன்று நடந்தது. அந்தக் காட்சியானது வருஷப் பிரதிவருஷம் நடக்கும் கூட்டங்களில் வைத்துக் காட்டப்படும் சகல காட்சிகளிலும் சிறந்ததென்பதற்கு சந்தேகமில்லையென்று சொல்லுகிறார்கள். இப்படி ஒவ்வொரு வருஷமும் கூடுவதனால் அதற்கு முந்தின வருஷத்தில் நடந்த வேலை இவ்வளவென்று மதிப்பிட்டு அறிந்துகொள்ள உலகத்தாருக்குச் சமயம் வாய்க்கிறது; மேலும் வருஷாவருஷம் க்ரேட் ப்ரிட்டன் தேசத்திலும் வெளிதேசங்களிலும் கூட்டுத்தொழில் சம்பந்தமான பெருத்த சங்கங்கள் பெருகிவருவது சந்தோஷிக்கத்தக்கதாகும். ப்ராட்போர்ட்டில் நடந்த காங்க்ரெஸானது ஒவ்வொருவிதத்திலும் விசேஷ சிறப்புவாய்ந்து விளங்கிற்று; ஆனால், கூட்டுத்தொழிலுக்குரிய லக்ஷ்யங்களை ஸ்தோத்திரம் பண்ணுவதைவிட்டு அநுபவத்தில் ஏற்படும் சிக்கான விஷயங்களைப் பரிஷ்கரிப்பதைப்பற்றி சிரத்தையுடன் கவனித்ததற்காக இந்தக் காங்க்ரெஸை விசேஷித்துக் கொண்டாட வேண்டியிருக்கிறது. இந்தக் காங்க்ரெஸைக் கூட்டிவைப்பதற்குத் தலைமை பூண்ட கோவாபரேடிவ் யூனியன் சங்கத்தின் நிர்வாககாரிய சம்பந்தமான விவரங்கள் பரிஷ்காரமாய் ஆலோசிக்கப்பட்டு அதன் விதிகள் பூர்த்தியாய் மாற்றியமைக்கப்பட்டன. இப்படி திருத்தப்பட்ட ஒழுங்குகளை மீறாமல் கண்டிப்பாய் அனுசரித்து நடக்கவேண்டுமென்று இந்தக் கூட்டம் முடிந்தபோது எல்லோர்மனதிலும் பொதுவாய் ஓர் உவர்ச்சி உண்டானது கவனிக்கத்தக்கது.

மொத்தத்தில் இந்தக் காங்க்ரெஸுக்கு வந்திருந்தவர்கள் சிறந்தகுணம் வாய்ந்தவர்களாய் ஆழ்ந்த கருத்தமைந்த கொள்கைகளை விளக்கிப்பேசினர். அக்கிராசனாதிபதி தமது பேச்சின் தொடக்கத்தில் அதுவரையில் கூட்டுத் தொழில் முயற்சி அடைந்துள்ள அபிவிருத்தியைக்குறித்துச் சொன்னார். 1910-ம் வருஷமுடிவில் 25,85,293 மெம்பர்கள் இருந்தார்கள்; அதாவது 1909-ம் வருஷத்தைக்காட்டிலும் 76,506 பேர் அதிகமாயிருந்தார்கள். அதே வருஷத்தில் விற்பனையால் வந்த தொகை 11,15,82,779 பவுன்; அதாவது அதற்கு முந்திய வருஷத்திய தொகையைவிட 26,70,515 பவுன் அதிகம்; லாபமாய்க் கிடைத்தது 1,20,24,816; அதாவது முந்திய வருஷத்தியதை விட 13,693 பவுன் அதிகம். கூட்டுத்தொழிலின் அபிவிருத்தியை முழுவதும் இப்படிப்பட்ட கணக்குகளைக்கொண்டே நிதானிப்பது கேவலம் குறைவான அளவைக்கொண்டு நிதானிப்பதாகுமென்று மிஸ்டர் தோர்ப் அபிப்பிராயப் பட்டார். இந்த முயற்சி ஏற்பட்டதனால் அது சம்பந்தமான ஊழியத்தில் அமர்ந்து வேலை செய்தவர்களின் நிலைமை செவ்வைப்பட்டிருப்பதோடு கூட தொழிலாளிகளின் விஷயத்தில் முன்னிலும் அதிக கருணையுடன் கூடிய சட்டங்கள் உண்டாகும்படி செய்வதில் இந்த முயற்சி சிறிது மட்டிலும் உதவிபுரிந்ததென்று சொல்வதற்கும் நியாயமிருக்கிறதென்றும், தொழிலாளிகள் கைத்தொழில்செய்து ஜீவிப்பதில் நேர்ந்திருக்கும் கஷ்டங்களில் சில ஷை சட்டங்களால் குறைந்துவருகின்றனவென்றும் அக்கிராசனாதிபதி சொன்னார். ஆயினும் தொழிலாளிகளின் நிலைமையைச் சீர்ப்படுத்தும் விஷயத்தில் இதைவிட அதிகமாக ஒன்றும் செய்ய முடியவில்லை; ஏனென்றால், அப்படிச் செய்யவேண்டுமானால், பொருளுற்பத்திக்காகப் பிடிக்கும் செலவை அதிகப்படுத்த வேண்டிவரும்; அல்லாமலும், பொருள்கள் கூட்டுத்தொழில் முறையால் செய்யப்பட்டதானாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, ஜனங்கள் சரசமாய் விற்கும் இடத்திலேதான் அவைகளை வாங்குவார்கள். யந்திரங்களை உபயோகத்துக்குக் கொண்டுவருவதனால் கையால் வேலைசெய்து ஜீவிப்பவர்களின் பிழைப்பு போய்விடுகிறது; இதனால் உண்டாகும் தீமைகளை ஒழிப்பதற்கு கூட்டுத்தொழில் விருத்திசெய்வதுதான் வழியென்று அவர் வற்புறுத்திக்கூறினார். கடைசியாக கூட்டுத்தொழிலினால் விளையக்கூடிய நன்மைகளையெல்லாம் தக்கபடி எடுத்துக்காட்டி மிஸ்டர் தோர்ப் தமது உபந்நியாசத்தை முடித்தார். ஜீவனத்துக்கு வேண்டிய வழிவகைகள் சிலருக்கு மாத்திரம் சொந்தமாயிருப்பதனால், தேசத்தின் பொருளாதார நிலையில் உண்டாகும் தீமைகளை நிவர்த்திப்பதற்குக் காலாந்தரத்தில் கூட்டுத்தொழில் முறையே சிறந்த சாதனமாகுமென்றார்.

"கூட்டுத்தொழில் முறையிலே ஜாதி பேதமாவது வர்ண பேதமாவது கிடையாது; அதற்குக் கடல்களும் மலைகளும் போக்கு வரவுக்குரிய பெரிய ராஜபாட்டைகளாயிருக்கின்றன; அவைகளின் மேலும் அவைகளின் மூலமாகவும் மாதாவான பூமிதேவியின் பலிதங்கள் சுங்கச்சுவர்களாலாவது சுயநலத்தை நாடும் உரிமைகளாலாவது தடைப்படாமல் செல்லும்; அதனால் சகல ஜனங்களுக்கும் புஷ்கலமாய் உதரபோஷணம் கிடைக்கும்; அப்படிப்பட்ட காலம் வரும்போது ஸ்வர்க்கலோகம் சமீபத்தில் வந்திருப்பதாக ஜனங்கள் கண்டுகொள்வார்கள்."

இந்தக் காங்க்ரெஸில் ஜாரிசெய்யப்பட்ட பற்பல தீர்மானங்களுக்குள்ளே இரண்டு தீர்மானங்கள் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கவை. அவற்றுள் ஒரு தீர்மானத்திலே விவசாய சங்கங்களும் சரக்குகளை விற்பனைசெய்யும் சங்கங்களும் தமக்குள் ஊக்கமாய் ஒத்துழைத்துவருவதைப்பற்றி அந்த காங்க்ரெஸ் கூட்டம் சந்தோஷப்படுவதாயும் அவ்விதமான சிநேகபாவம் வளர்ந்துவரவேண்டுமென்று விரும்புவதாயும் தெரிவிக்கப்பட்டது. மற்றொரு தீர்மானமானது, மூர்க்கத்தனமாய் நடந்துகொண்ட பெஸ்விக் சங்கத்தை விலக்கிவிட்டதற்குச் சம்பந்தப்பட்டது; அந்த சங்கத்துக்கும் மான்செஸ்டர்-ஸால்போர்ட் சங்கத்துக்கும் எல்லையைப்பற்றி வெகுகாலமாய் ஏற்பட்டிருந்த விவாதத்தை முடிவுபண்ணும் உத்தேசத்துடன் கோவாபரேடிவ் யூனியன் சங்கத்தார் எடுத்துச்சொன்ன ஆலோசனைகளில் எதையும் ஒப்புக்கொள்ளும்படி அந்த சங்கத்தைத் தூண்ட முடியாமற்போனதே அதை விலக்குவதற்குக் காரணமாயிற்று.

கூட்டுத்தொழில் பொருட்காட்சியானது ஆல்டர்மன் ப்ரீஸ்ட்மன் என்பவரால் திறக்கப்பட்டது; அவர் அப்போது செய்த பிரசங்கத்திலிருந்து கோவாபரேடிவ் தொழிற்சாலைகளுக்கும் பண்டசாலைகளுக்கும் 45லக்ஷம் பவுன் சேமநிதியிருந்ததாகத் தெரியவருகிறது. இவைகளிலே டிஸெம்பர் 31உபில் வேலைபிலமர்ந்திருந்தவர்கள் 1,22,000 பேர். பிரஸ்தாப வருஷத்தில் கொடுக்கப்பட்ட லாபத்தொகை 120 லட்சம் பவுனுக்குமேலிருந்தது.

இந்த வருஷத்திய கூட்டுத்தொழில் கான்பரன்ஸுகள்.

1911-ம்ஞு ஜூன்மீ 30உ யுடன் முடிவாகும் கூட்டுத்தொழில் வருஷத்திலே, இந்த ராஜதானியின் பற்பல பாகங்களாகிய, அநந்தபுரம் ஜில்லாவைச் சேர்ந்த திம்மன்செர்லாவிலும், செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த மதுராந்தகத்திலும், தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த நீடாமங்கலத்திலும் கூடின மூன்று கூட்டுத்தொழில் கான்பரென்ஸுகளும் விசேஷ சிறப்பாய் நடந்தேறின. ஒவ்வொரு கான்பரன்ஸ் கூடின சமயத்திலும் பிரசித்திபெற்ற இந்திய கனவான்களை அக்கிராசனாதிபத்தியம் வகிக்கும்படி செய்து கூட்டுத்தொழில் சம்பந்தமான ஸ்வாரஸ்யமுள்ள பற்பல விஷயங்களைக் குறித்து ஒவ்வொரு கான்பரன்ஸிலும் தர்க்கம் நடந்தது. கூட்டுத்தொழிற் கோட்பாடுகளை ராஜதானி முழுவதிலுமுள்ள ஜனங்கள் ஏற்கனவே நன்றாய் அறிந்து அவற்றின் அருமையைப் பெரிதும் புகழ்ந்து வருகிறார்களென்று இந்தக் கான்பரன்ஸுகளால் ஸ்பஷ்டமாய் விளங்கிற்று. ஒவ்வோரிடத்திலும் கூடின ஜனங்கள் சுவல்ப வட்டிக்குக் கடன் கிடைப்பதற்குச் சுலபமான வழிகளுக்கு வாய்க்கும்படி செய்ததற்காக கவர்ன்மெண்டாரிடத்தில் தாங்கள் பாராட்டும் நன்றியை வெளியிட்டார்கள்.

2. 1911-ம்ஞு பெப்ரவரிமீ 25உ யிலும் 26உ யிலும் நடைபெற்ற மதுராந்தகம் கான்பரன்ஸ் செங்கற்பட்டு ஜில்லாவில் கூடின இது போன்ற சபைகளில் மூன்றாவதாகும். இதில் ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வி. சங்கரன் நாயர் வி. ஐ. இ. அவர்கள் அக்கிராசனம் வகித்தார். ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவருமாக விசேஷ ஜனங்கள் வந்திருந்தார்கள். இந்த ஜில்லாவிலுள்ள 97-சங்கங்களுக்குள்ளே 95-சங்கங்களின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். சபைக்கு வந்திருந்த டெலிகேட்டுகளின் மொத்த சங்கியை 163. கான்பரன்ஸுக்கு விருந்தாளிகளாய் வந்தவர்களை வரவேற்பதற்கும் அதன் காரியக் கிரமத்தை நிறைவேற்றுவதற்கும் பிடித்த செலவு சுமார் ரூ. 550; இந்த தொகையை இந்தக் கான்பரன்ஸில் கூடிய சங்கத்தார்கள் தமக்குள்ளாகச் சந்தாபோட்டுக்கொண்டு கொடுத்தார்கள். அக்கிராசனாதிபதி ஊக்கமும் தைரியமும் புகட்டத்தக்க பிரசங்கமொன்று செய்தார். அவர் பிரசங்கம் செய்துகொண்டு போகையில், கூட்டுத்தொழில் முயற்சி தீவிரமாய் விருத்தியடைவதைக் குறித்து பிரஸ்தாபித்து, ஜனங்களின் க்ஷேமாதிசயத்தை உத்தேசிக்கும்போது, பணம் தேவையாயிருப்பவர்கள் மாத்திரமேயல்லாமல் அது தேவையாயில்லாதவர்கள்கூட சங்கங்களில் மெம்பர்களாய்ச் சேரவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னார். இந்த கான்பரன்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்களுக்குள்ளே சர்க்கார் ஊழியத்தில் அமர்ந்திருப்பவர்கள் சகல கூட்டுத்தொழில் சங்கங்களிலும் மெம்பர்களாய்ச் சேர்வதற்காக அவர்களுக்கு அனுமதி கொடுக்கும்படி சென்னபட்டணம் கவர்ன்மெண்டாரைப் பிரார்த்திக்கவேண்டுமென்பதும் ஒன்று. கூட்டுத்தொழில் கோட்பாடுகளை எல்லா எலிமென்டரி பாடசாலைகளிலும் கற்பிப்பதும் கூட்டுத்தொழில் விஷயத்தைக்குறித்துத் தகுதியான பாடபுஸ்தகம் தயார் செய்வதற்கு கவர்ன்மென்டார் ஒரு வெகுமதி கொடுக்கவேண்டியதும் யுக்தமென்று இந்தக் கான்பரன்ஸ் அபிப்பிராயப் படுவதாக இன்னொரு தீர்மானம் செய்யப்பட்டது. கூட்டுத்தொழில் சம்பந்தமான விஷயங்களைக் கீழ்வங்காளத்திலும் ஆஸாமிலும் வழங்கும் பாடபுஸ்தகங்களில் ஏற்கனவே சேர்த்திருக்கிறதென்பதை இங்கே எடுத்துச் சொல்லலாம்.

திம்மன்செர்லா கான்பரன்ஸானது அனந்தபூர் ஜில்லாவில் நடந்த இரண்டாவது கான்பரன்ஸாகும். இந்த ஜில்லாவிலிருக்கிறதைப்போல் அத்தனை சங்கங்கள் இந்த ப்ரெஸிடென்ஸியைச் சேர்ந்த வேறெந்த தனித்த ஜில்லாவிலும் கிடையா. இந்தக் கான்பரன்ஸ் 1911-ம்ஞு ஏப்ரல்மீ 16உ ஆனரபில் மிஸ்டர் கேசவபிள்ளை யவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கூடிற்று. அப்போது ஜமாபந்தி சமயமாயும் பருத்திப் பயிர்க் காலமாயும் இருந்தும், கான்பரன்ஸுக்கு சுமாராய் ஜனங்கள் வந்திருந்தார்கள். கான்பரன்ஸுக்குப் பிடித்த செலவை திம்மன்செர்லா சங்கத்தின் அக்கிராசனாதிபதியும் காரியதரிசியும் கொடுத்துதவினார்கள். இந்த ஜில்லாவிலே 120 சங்கங்கள் இருக்கின்றன; இந்த ப்ரெஸிடென்ஸியிலே வேறெந்த ஜில்லாவிலும் உள்ள சங்கங்களைக் காட்டிலும் இவை எத்தனையோ மடங்கு அதிகமாயிருக்கின்றன; இத்தனை சங்கங்களை ஏற்படுத்தினதே இந்த ஜில்லாவாசிகள் அநுபோகரீதியாய்க் காரியம் நடத்தும் விவேகிகளென்பதற்கு நிதர்சனமாயிருக்கிறதென்று அக்கிராசனாதிபதியவர்கள் சாலவும் மெச்சிப் பேசினார். அவர் கூட்டுத்தொழிலினால் ஜனங்களுக்குண்டாகும் நன்மையைக் குறித்து விஸ்தாரமாய்க் கூறி, இந்த தேசத்தில் அந்த முயற்சியை ஆதரிப்பதில் ப்ரிடிஷ் கவர்ன்மென்டார் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பதைப்பற்றிப் புகழ்ந்து பேசினார்.

நீடாமங்கலத்தில் கூடின கான்பரன்ஸ் 1911-ம் ஞு மேமீ 28உ ஆரம்பமாகி, அடுத்த நாள் மாலை வெகு நேரம் வரையில் நடந்தது. தஞ்சாவூர் ஜில்லாவில் நடந்த கூட்டுத்தொழில் கான்பரன்ஸுகளிலே இதுவே முதன்மையானது. இதற்கு அந்த ஜில்லாவிலுள்ள மிகவும் பிரமுகர்களான சிலருள்பட 200க்கு அதிகமான ஜனங்கள் வந்திருந்தார்கள். சங்கங்களுக்குப் பிரதிநிதிகளாக 40 பேர் ஹாஜராயிருந்தார்கள். கான்பரன்ஸுக்குப் பிடித்த செலவாகிய 217 ரூபாயும் அநேகமாய் பொது ஜனங்களிடத்திலிருந்து சந்தாவாக வசூல் செய்யப்பட்டது. அந்தக் கான்பரன்ஸில்

ஹைகோர்ட வகீல் ம-ா-ா-ஸ்ரீ, டி. ரங்காசாரியர் பி. எ. பி. எல். அவர்கள் அக்கிராஸனாதிபதியாயிருந்தார். அரும், வரவேற்புக் கம்மிட்டியின் சேர்மனான ராவ்பஹதூர் வி. கே. ராமாநுஜாசாரியர் அவர்களும், தஞ்சாவூர் ஜில்லா இந்த முயற்சியில் பின்தங்கியிருப்பதைக் குறித்து மிக்க விசனப்படுவதாய்ச் சொன்னார்கள். அக்கிராசனாதிபதி சொன்னதென்னவென்றால்,—"இவ்விஷயத்தில் பின்தங்கியுள்ள சேலம் முதலிய ஜில்லாக்களிலும் எழ்மை மிகுந்த செங்கல்பட்டு முதலிய ஜில்லாக்களிலும் கூட இப்படிப்பட்ட வேலையை ஊக்கத்துடன் செய்ய இஷ்டமும் சக்தியுமுள்ள பொதுநலப்பிரியர்கள் இருப்பது அந்த ஜில்லாக்களுக்கு எவ்வளவோ பெருமையாயிருக்கிறது. நமது ஜில்லாவிலோ (முதல்தரமான தேச பரிபாலனகர்த்தர்களாகவும், ராஜதந்திரிகளாகவும், சிறப்பு வாய்ந்த நீதிநிபுணர்களாகவும், நியாயவாதிகளாகவும், சமர்த்தர்களான வைத்தியர்களாகவும், டாக்டர்களாகவும், பெயர் பெற்ற சங்கீதவித்வான்களாகவும் இப்படி) சகல விதமான ஜீவனோபாயத் துறைகளிலும் மேன்மை பெற்றவர்கள் தோன்றியிருந்தும், இந்தக் கூட்டுத் தொழில் முயற்சியிலே ஊக்கம் விசேஷமாய்க் குறைந்திருப்பது நம்மெல்லோருக்கும் தாழ்மையாயிருக்கிறது" என்றார். தஞ்சாவூர் ஜில்லா வாசிகள் தங்களுடைய முன்னாளைய சிறப்புக்குக் குறைவு வாராத விதமாக நடந்துகொள்வதோடு அவர்கள் வேறு துறைகளில் உழைத்து வெற்றி பெற்றதுபோல் இந்த முயற்சியிலும் பெறுவார்களென்று நம்புகிறோம்.

இது சம்பந்தமாக நமது வாசகர்களை இந்த சஞ்சிகையில் இன்னோரிடத்தில் பிரசுரம் செய்திருக்கும் எக்ஸ்ட்ராக்டை கவனமாய்ப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்; அதில் ஜில்லா கான்பரன்ஸுகளை ஏற்படுத்துவதற்காக ஐர்லண்ட் தேசத்திய அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் விவசாய சங்கத்தார் நிர்ணயித்திருக்கும் நூதன பத்ததி விளக்கப்பட்டிருக்கிறது. ஏதோ சில காரணங்களை முன்னிட்டு இந்த முயற்சியில் சேராமல் எந்த சங்கங்கள் ஒதுங்கி நிற்கின்றனவோ அவைகளை இந்த முயற்சியில் சேரும்படி தூண்டுவதான மிகவும் பொருத்தமுள்ள வேலையை ஜில்லா கான்பரன்ஸ் கம்மிட்டியின் ஏஜெண்டுகளுக்கு இந்த பத்ததியிலே ஏற்படுத்தியிருக்கிறது. இந்த முயற்சியினால் நன்மை உண்டாகுமென்று மாத்திரம் தங்களுக்கு நிச்சயமாய்த் தோன்றும் பட்சத்தில் இதில் அத்தியந்தமான உற்சாகத்துடன் உழைக்கக் கூடியவர்கள் நூற்றுக்கணக்காய் இத்தேசத்தில் இருக்கிறார்களென்பது திண்ணம். இந்த முயற்சியினால் இத்தேசத்தின் எந்த விசேஷ பாகத்துக்காவது நிலையான நன்மை கைகூட வேண்டுமானால், ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களடங்கிய சங்கம் வேலை செய்வதோடுகூட, ஸர்க்கார் உத்தியோகத்தில் இராதவர்களும் ஒரு கூட்டமாகச் சேர்ந்து தேசமெங்கும் சென்று இம்முயற்சியைப் பரவச்செய்து வரும்படியான ஓர் ஏற்பாடு இருக்கவேண்டும். இந்த அபிப்பிராயத்தை ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஸர்க்கார் உத்தியோகத்திலிராத மகாஜனங்கள் இது விஷயமாய் ஏற்கனவே உபகாரம் புரிந்திருக்கிறார்களென்று நாங்கள் தெரிந்துகொண்டிருந்தும், இதில் இதுவரையில் ஊக்கமாய் உழையாமலிருப்பவர்களை இன்னும் அதிகமாய் ஒத்துழைக்கும்படிக் கேட்டுக்கொள்வது எங்கள் கடமையென்று நினைக்கிறோம்.

இந்தியாவில் கூட்டுத்தொழில்.

(டாக்டர் ஊல்ப் எழுதியது.)

(ஐரிஷ் ஹோம்ஸ்டெட் என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது.)

இந்த முயற்சி 1905-ம் ஸுத்தில் ஆரம்பமானதேயாகிலும், அது எவ்வளவு சீக்கிரமாய் அபிவிருத்தி அடைந்திருக்கிறதென்பதை அடியில் கண்ட சூசிகையினால் தெரிந்து கொள்ளலாம்:—

நாணயச்சங்கங்கள்.	1906-7.	1907-8.	1908-9.	1909-10.
சங்கங்களின் சங்கியை ...	843	1,357	2,008	3,498
மெம்பர்களின் சங்கியை ...	90,844	1,49,160	1,84,889	2,30,698
மூலதனம்.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
மெம்பராயிராதவர்களிடமிருந்து கடன் வாங்கின தொகைகள் ...	6,56,092	12,43,495	24,93,814	34,82,691
(முக்கியமாய் ஸென்ட்ரல் அல்லது ஜில்லா பாங்கிகளாயுள்ள)மற்ற சங்கங்களிலிருந்து கடன் வாங்கின தொகைகள்	2,40,425	5,84,765	15,96,611	30,15,106
பங்கு மூலதனம் ...	5,55,805	9,35,928	14,77,254	23,08,342
மெம்பர்கள் டிபாஸிட் செய்திருக்கும் தொகைகள் ...	5,76,025	9,19,523	16,18,018	25,33,317
ஸர்க்கார் சகாயம் ...	2,84,738	6,51,816	6,86,143	7,21,775
சேம நிதி ...	58,598	78,559	1,93,271	3,36,451
மொத்த மூலதனம் ...	23,71,683	44,14,086	80,65,111	1,23,97,682
செலவு.				
மெம்பராயிராதவர்களுக்குத் திருப்பிச் செலுத்தின கடன் தொகைகள் ...	1,51,158	4,01,976	14,10,323	16,64,257
மெம்பர்களுக்குக் கொடுத்த கடன் தொகைகள் ...	23,83,971	36,93,018	59,99,924	79,52,365
இயற்கைப்பொருள்களும் சாமான்களும் வாங்கினது...	3,15,679	3,90,655	6,74,383	7,55,328
லாபம் ...	1,12,614	1,80,916	3,26,265	4,71,906
மொத்த செலவு ...	29,63,449	46,66,565	84,10,895	1,07,83,886

சென்ற வருஷத்துக்குள் இரண்டு மாகாணங்களிலே பாங்கிகளின் சங்கியை கிட்டத்தட்ட இரட்டித்திருக்கிறது. இவைகளில் பஞ்சாப் மாகாணம் ஒன்று; இதில் இந்த சங்கியை இரட்டத்தனைக்கு அதிகமாயிருக்கிறது.

இந்த சூசிகையிலே சர்க்கார் சகாயம் வெகு கொஞ்சமாயிருப்பதையும் மற்ற தொகைகளுடன் ஒப்பிடும்போது வரவர அளவில் சுருங்கி வருவதையும் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்கார் சகாயம் தற்காலத்துக்கு இன்னும் இன்றியமையாததாய் வேண்டியிருக்கிற பிரதேசங்கள் இருக்கின்றன; ஆனால், அப்படிப்பட்ட சகாயமில்லாமலே பூர்த்தியாய் நடைபெற்று வரக்கூடுமென்று பல மாகாணங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது; பஞ்சாப் மாகாணத்தில் ஸர்க்கார் சகாயமாகக்கொடுக்கும் 1 லக்ஷத்தோடு சங்கங்கள் தாமாகவே 13 லக்ஷம் சேகரித்துக்கொண்டிருக்கின்றன. சங்கங்கள் அவைகளுக்கு வேண்டிய பணத்தை டிபாஸிட்டுகள் மூலமாகவும், மெம்பராயிராதவர்களிடமிருந்து கடன் மூலமாகவும், பாங்கிகளிலிருந்து அதிகப்பற்று மூலமாகவும் பெறுகின்றன. இப்படி செய்வதே முறையாகையால், கவர்ன்மெண்டார் இந்த நடவடிக்கையை அங்கீகரிக்கிறார்கள்.

மேலும், இதில் சர்க்காரார் தலையிடுவதில்லை; ஏனெனில், ரெஜிஸ்ட்ரார்கள் போதிப்பதையும் மேற்பார்வை செய்து வருவதையும் ஸர்க்கார் தலையிடுவதாக நான் எண்ணமாட்டேன். அப்படி தலையிடுவதை விலக்க ரெஜிஸ்ட்ரார்களே முயன்று வருகிறார்கள். பொலிடிகல் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் தலையிடுவதில்லை. சென்ற ஜனவரி மாதம் அல்லஹாபாத்தில் நடைபெற்ற ரெஜிஸ்ட்ரார்களின் வருஷாந்த கான்பரன்ஸிலே மிஸ்டர் மாக்ஸ்கன் அக்ராசனாதிபதியாக வீற்றிருந்து செய்த ஆரம்ப பிரசங்கத்தில் தமது உத்தியோக முறைமையைத் தழுவி பின்வருமாறு வற்புறுத்திச் சொன்னார்:— "மேற் பார்வையிடும் காரியம் திறமையாயிருக்கவேண்டுவதேயாயினும், அப்படிப்பட்ட மேற்பார்வையிடும் காரியத்தைச் சங்கங்கள் தாமாகவே ஏற்படுத்திக் கொள்வது சாத்தியமாயிருக்கக்கூடிய வழிகளை அனுசரித்து அவைகள் அபிவிருத்தியடைந்து வருகின்றனவா வென்று ஜாக்கிரதையாய்ப் பார்க்க வேண்டும். கூட்டுத்தொழில் சங்கங்களை மேற்பார்வை யிடுவதற்காக ஒரு உத்தியோகஸ்த வர்க்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற உத்தேசம் கவர்ன்மெண்டாருக்கு எள்ளளவும் இல்லை." ரெஜிஸ்ட்ரார்கள் ஒருவர் தப்பாமல் எல்லோரும் இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். சங்கங்களை மேற்பார்வையிடுங்காரியத்தை அச்சங்கங்களே தங்கள் யூனியன்களைக்கொண்டு செய்துகொள்ள வேண்டுமென்பது அவர்களின் விருப்பம்.

ஷை ரெஜிஸ்ட்ரார்களின் கான்பரன்ஸ் நடவடிக்கைகளைக் குறித்த கிரந்தத்தின் அச்சிட்ட ப்ரூப் காபிகள் எனக்கு முன்னதாக அனுப்பப்பட்டு இப்போதுதான் கிடைத்தன. அதைப் படிக்க எவ்வளவோ மநோஹரமாயிருக்கிறது. இது விஷயமாய் உண்டாயிருக்கும் அபிவிருத்தி, தைரியம் தருவதாயிருக்கிறதென்பது மாத்திரமல்ல; ரெஜிஸ்ட்ரார்கள் காட்டியுள்ள சிரத்தையையும் விவேகத்தையும் பார்த்தால், இன்னும் எவ்வளவோ நன்மை விளையக்கூடுமென்று நம்பத்தக்கதாயுமிருக்கிறது. ரெஜிஸ்ட்ரார்கள் வெகு

காலமாய் ஏற்பட்டு வழக்கத்தில் வந்திருக்கும் ஏதோ ஒருவழியையே கண்மூடித்தனமாய் அனுசரித்து வேலைசெய்து வந்திருக்கிறார்களென்று சொல்வதற்குச் சிறிதும் இடமில்லை. அவர்கள் ஒரு நூதன உலகத்தில் வேலைசெய்ய வேண்டியிருக்கிறபடியால், அதன் நிலைமைகளுக்குத் தக்கபடி தாங்கள் நடக்கவேண்டிய முறையைப் பலவகையான வழிகளில் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்: அப்படியிருந்தும் சாதாரணமாய் என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்கிறதொன்று தவிர மற்றெல்லா விஷயங்களிலும் பூர்ணசுதந்தரத்துடன் நடந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி நூதன முறைகளை அனுசரித்து நடப்பதில் சுய விவேகத்தினால் ஊஹித்துச் செய்யும் அம்சம் விசேஷமாயிருக்கிறதென்பதைக் காண சந்தோஷமாயிருக்கிறது. இந்த நூதன முறைகள் சிலவற்றில் அபாயமென்பதே சுத்தமாயில்லை யென்று நான் சொல்லமாட்டேனாயினும், ரெஜிஸ்ட்ரார்கள் மாத்திரம் பிரதானமான கோட்பாடுகளை உறுதியாய்ப் பின்பற்றி நடந்திருக்கிறார்கள். அல்லாமலும் அவர்கள் எவர்களுடைய மத்தியில் வேலைசெய்யவேண்டியிருக்கிறதோ அந்த மகாஜனங்கள் சொன்னபடி கேட்கிறவர்களாய் இருப்பது வெளிப்படையே. இந்த நூதன முறைகள் பிரயோஜனகரமானவை யென்பதை நிதானித்தறிந்துகொள்வதற்கு இம்மகாஜனங்களுக்குப் பெருந்தருணங்கள் ஏற்கனவே வாய்த்திருக்கிறபடியால், அவர்கள் அம்முறைகளுக்குத் தக்கபடி தங்கள் எண்ணங்களையும் செய்கைகளையும் மாற்றிக்கொள்ளுகிறார்கள்.

கூட்டுத்தொழிலைப்பற்றிய இந்து தேசத்து ஆக்ட் கூடிய சீக்கிரத்தில் திருத்தமடையப் போகிறதென்று தெரிய சந்தோஷமாயிருக்கிறது. அப்படி திருத்தமுண்டாவது அவசியமே. ஆனால் அது விஷயமாய் இப்போது ஆலோசனையிலிருக்கும் ஒரு மசோதாவின் பிரகாரம் செய்ய உத்தேசித்திருக்கும் மாறுதல் பலவற்றுள், "நகர" சங்கங்களுக்கும் "நாட்டு" சங்கங்களுக்குமுள்ள மூடத்தனமான வித்தியாசம் எடுபட்டுப்போவதுடன், சங்கங்கள் யூனியன்களாகச் சேர்ந்தமைவதும் சாத்தியமாகும். நகரச் சங்கங்களுக்கும் நாட்டுச் சங்கங்களுக்குமுள்ள ஷை வித்தியாசம் இங்கிலாந்திலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அன்றியும் நாணய சம்பந்தமான கூட்டுத்தொழிலைப் போலவே இதரவிதமான கூட்டுத்தொழில்களுக்கும் இடங்கொடுக்கவேண்டுமென்று பிரதம ஆக்டில் சீர்திருத்தம் செய்ய ஸர் ஜேம்ஸ் வில்ஸன் உத்தேசித்திருந்தது விஷயமாய் இந்த மசோதாவில் இன்னும் அதிகமாய் திருத்தமுண்டாகிறது. ஏதோ ஒரு தப்புணர்ச்சியினால் இந்த திருத்தம் பிரதம ஆக்டிலே விலக்கப்பட்டுப் போயிற்று. பிரதம மசோதா மட்டுக்குமிஞ்சி அதிக விரிவாயிருந்தது. அதைக் கூட்டுத்தொழிலுக்கு பிரயோகப்படும்படி சுருக்கிவிட வேண்டுமென்று நான் யோசனை சொன்னேன் (அதில் மித்திர சங்கங்களைக்குறித்தும் இன்னும் பற்பல சங்கங்களைக் குறித்தும் சொல்லியிருந்தது); அதற்குக் காலஞ்சென்ற ஸர். சர். பெர்னார்ட் துரை ஐக்கிய நாணயம் என்று மாத்திரமே அர்த்தமென்று வியாக்கியானம் செய்தார். இதர விதமான

கூட்டுத்தொழில்கள் நடப்பதற்கும் இந்தியாவிலே இடமிருக்கிறது; ஆனால் அவைகள் இதுவரையில் மந்தமாகவே விருத்தியடைந்திருக்கின்றன.

ஸைப்ரஸ் தேசத்தில் ஐக்கிய நாணய பாங்கிகள் ஏற்படுத்துவதற்கு அதிகாரங் கொடுப்பதற்கான ஒரு மசோதா சட்டமும் ஜாரியாவதற்கு கலோனியல் (குடியேற்ற நாடுகளுக்குரிய) ஆபிஸில் ஹோம் கவர்ன்மென்டாரின் அனுமதியை எதிர்பார்த்திருக்கிறதென்று தெரிந்துகொள்ள உங்கள் பத்திரிகா வாசகர்களுக்கு ஸ்வாரஸ்யமாயிருக்கும். ஸைப்ரஸில் விவசாய உதவி டைரெக்டராயிருக்கும் எனது சிநேகிதராகிய மிஸ்டர் டப்ளியூ பேவன் என்பவர் அந்த தேசத்திலே ரெய்பெய்ஸன் முறைப்படி நாணயச் சங்கங்கள் ஏற்படுத்த சில ஆரம்பப் பிரயத்தனங்கள் செய்திருக்கிறார்; அவைகள் சீக்கிரம் கைகூடுமென்றே நம்பலாம்; ஆனால் சட்டம் இப்போதிருக்கிறபடி இந்த பிரயத்தனங்களுக்கு அதிக அனுகூலமாயில்லை; ஏழ்மையும் விசேஷமாகவே இருக்கிறது. புதிய மசோதா ஆக்டில் ஸேவிங்க்ஸ் பாங்கிகளின் பணத்தை விவசாய விஷயமான கடன்களின் நிமித்தம் உபயோகிக்க உத்தேசித்திருக்கிறது.

ஐர்லாந்து தேசத்து நாணயச் சங்கங்கள்.

(ஐர்லாந்து தேசத்து அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் சங்கத்தின் 1910-ம்வருஷத்திய ரிபோர்ட்டிலிருந்து).

பிரஸ்தாப வருஷத்திலே சங்கங்களின் காரியம் ஸ்திரமாயும் நஷ்டமில்லாமலும் நடந்து வந்திருக்கிறது; கையிருப்புக் கணக்குகளை சென்ற வருஷக் கணக்குகளோடு ஒத்திட்டுப்பார்க்கையில் விருத்தியாச மொன்றும் காணவில்லை. மொத்தத்தில் சங்கங்களின் காரியம் ஜாக்கிரதையாகவே நடத்தப்பட்டு வருகிறது. பொதுவாக இந்த சங்கங்களின் வேலை பழுதற்றதாய் இருக்கிறதென்றும், ஐக்கிய நாணயத்தினால் கற்றுக் கொள்ளவேண்டிய விஷயங்களை ஜனங்கள் இன்னும் கற்றுக்கொண்டே வருகிறார்களென்றும் சங்க ஸ்தாபகர்கள் அனுப்பியுள்ள ரிபோர்ட்டுகளால் தெரியவருகிறது. நாணயச் சங்கங்களை நிர்வாகஞ்செய்யும் கமிட்டியார்களென்ன, அவைகளிலிருந்து கடன் வாங்குகிறவர்களென்ன, இவ்விருவகையார் விஷயத்திலும் ஷை சங்கங்கள் செய்து வரும் வேலை திரண்ட பலனளித்து மிக்க பிரயோஜனகரமாயிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. கமிட்டியார்கள் ஏற்றுக்கொள்ளும் உத்தரவாதங்களை அவர்கள் நிறைவேற்றுகிற விதத்தை பார்த்தால், அவர்கள் பின்பற்றும் முறை பழுதற்ற தென்றும், அந்த சங்கங்களை நடத்தக் குடியானவர்

கள் சமர்த்தர்களென்றும் நிச்சயமாய் ஏற்படுகிறது. சில சங்கங்களில் தவறுகள் உண்டாயிருக்கின்றனவென்பது வாஸ்தவமே. மெய்ப்பராயிராதவர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டதென்று ஒரு சங்கத்தின் விஷயத்தில் மாத்திரந்தான் தெரியவந்திருக்கிறது; ஒரு பாங்கியிலே திரவிய விருத்திக்குச் சம்பந்தப்படாத காரியங்களுக்காக, அதாவது, வாடகை கொடுப்பதற்காகவும் உடுப்பும் பைவிநல்களும் வாங்குவதற்காகவும்—கடன் கொடுத்திருக்கிறது. அப்படி கொடுப்பதற்கு இடங் கொடுக்கக் கூடாதென்பது வாஸ்தவமே; அதற்குக் கொஞ்சங்கூட இடங் கொடுப்பது மில்லை. இவ்வழக்கம் இங்குமங்கும் வெகு கொஞ்சமாய்க் காணப்பட்டாலும், எதன் நிமித்தம் மெம்பர்கள் கடனை நாடி வருகிறார்களோ அந்தக் காரியங்கள் ரெய்பெய்ஸன் உத்தேசித்த வகையைச் சேர்ந்தவைகளே என்பது நிச்சயம்.

வெவ்வேறு வகைகளில் நஷ்டங்கள் நேர்ந்திருக்கின்றன; அவைகளெல்லாம் தடுக்கக்கூடியவைகளே:—

(a) இருநூறு பவுன் போல் மூலதனமாக வைத்துக் கொண்டு வேலை நடத்தும் பாங்கிகள் செய்துவரும் லேவாதேவிகளில் கிடைக்கக்கூடிய லாபம் கொஞ்சமே; அந்தக் கொஞ்ச லாபமும் இந்த பாங்கிகளுக்குப் பிடிக்கும் சொற்ப செலவுக்கே போதாமல் போய்விடுகிறது. இந்த பாங்கிகளுக்குண்டாகும் பெரும்பான்மையான நஷ்டங்களுக்குக் காரணம் இதுவே.

(b) விவசாய இலாகாவிலிருந்தோ அல்லது கன்ஜெஸ்டெட் டிஸ்ட்ரிக்ட் போர்ட்டிலிருந்தோ நிஷ்கரிஷையான தொகைகளைக் கடன் வாங்கி வேலை நடத்தும் சில பாங்கிகள் அந்தக் கடன் மூலதனத்தை அவைகளைச் சேர்ந்த மெம்பர்களுக்குக் கடன் கொடுக்காமல் அதை பாங்கியிலேயே வைத்துக்கொண்டதனால் வட்டி ஏறி நஷ்டம் உண்டாயிருக்கிறது. இந்த பாங்கிகள் தங்களுக்குத் தவணை கடந்தும் செலுத்தப்படாமலிருக்கிற கடன்களைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று கவலைகொண்டு அதன் நிமித்தம் கடன் கொடுக்கும் வேலையைச் சிறிது காலத்துக்கு நிறுத்திவிட்டபடியால், மேலே கண்டபடி ஒருவேளை நஷ்டம் உண்டாயிருக்கலாம்.

(c) நஷ்ட முண்டாவதற்கு மேலே சொன்னது போன்ற மற்றொரு காரணம் என்னவென்றால், சில சந்தர்ப்பங்களிலே பாங்க் காரியதரிசிகள் - கடன் தொகைகள் திருப்பிச் செலுத்தப்படும்போது அவைகளை, அதிகப்பற்றாக கடன் கொடுத்திருக்கிற பணத்துக்குப் பர்த்தியாக, பாங்கியில் உடனே திருப்பிக் கட்டிவிடாமல் கையிருப்பாக வைத்துக்கொள்வதற்கு இடங்கொடுப்பதேயாம்.

(d) சிற்சில சந்தர்ப்பங்களிலே வாடகை, நெருப்பு முதலியவைகளுக்காக செலவு செய்திருக்கிறது; சிறிது முன்யோசனை செய்திருந்தால் இந்தச் செலவுகளை வெகுசாய்த் தடுத்திருக்கக்கூடும். அநேகமாய் ஒவ்வொரு ஜில்லாவிலும்

கூட்டங் கூடுவதற்கு இடம் அகப்படுவது சாத்தியமே; மாதந்தோறும் நடக்கும் கம்மிட்டி மீட்டிங்குகளில் விறகுக்காக அதிகச் செலவு எதுவும் பிடிக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

(e) சொற்ப மூலதனமுடைய சங்கத்துக்கு நஷ்டமுண்டாக்கக்கூடிய மற்றொரு செலவு காரியதரிசிக்குச் சம்பளம் கொடுப்பதனால் ஏற்படுவதாகும்.

ஐரோப்பா கண்டத்தில் கூட்டுத்தொழில்.

(ப்ராட்போர்ட் கூட்டுத்தொழில் காங்க்ரெஸுக்கு வந்திருந்த பிரதிநிதிகளின் ரிபோர்ட்டுகளிலிருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ட்ராக்டுகள்).

நார்வேயில் இந்த முயற்சி.

நார்வேயிலுள்ள யூனியன் சங்கம் மொத்த சரக்கு வியாபாரம் செய்யும் சங்கமாயிருந்தது; அதில் சேர்ந்த சங்கங்கள் அப்போதைக்கு இன்னும் அறுபதுக்கு மேலில்லை; அந்த சங்கங்களில் சுமார் 16,000 மெம்பர்கள், அதாவது நார்வேயிலுள்ள சகல சங்கங்களையும் சேர்ந்த மெம்பர்களில் ஆறில் ஒரு பங்குக்குச் சமமான சங்கியையுள்ள மெம்பர்கள் இருந்தார்கள். என். சே. எல். என்னும் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சங்கங்களில் 1910-ம் ஹுத்தில் சுமார் 55 லக்ஷம் க்ரோனருக்கு வியாபாரம் நடந்து, சுமார் 4,00,000 க்ரோனர் நிகர லாபமாகக் கிடைத்தது. மொத்த வியாபார சங்கத்தின் வர்த்தகம் 1909-ம் ஹுத்தில் 6,44,000 க்ரோனருக்கு நடந்தது. 1910-ம் ஹுத்தில் சுமார் பத்துலக்ஷம் க்ரோனருக்குப் பெருகிற்று, அதாவது 100க்கு 49 வீதம் அதிகமாயிற்று. மெம்பர்கள் மிகுத்திவைக்கும் பணத்தைக் கூட்டுத்தொழில் வேலையில் வட்டிக்குப் போட்டு வைக்கும்படி அவர்களைத் தூண்டக்கூடுமென்னும் நம்பிக்கையுடன் ஷை சங்கத்தார்கள் கீழ்க்கடையில் ஒரு பாங்கிப்பிரிவு ஏற்படுத்தினார்கள். மேலும் அவர்கள் இந்த சமயத்தில் முத்துத் தொழிற் சாலையொன்றை வாங்கி அதன் மூலமாய் லாபங் கொடுக்கும்படியான முயற்சி செய்யத் தொடங்கினார்கள். இந்த விதத்தில் அவர்கள் செய்த முதல் முயற்சி இதுவே. அன்றியும், அவர்கள் தங்கள் தேசத்தின் மேற்கிலும் கிழக்கிலுமுள்ள சங்கங்களை மத்திய சங்கத்தில் சேர்த்துக்கொள்வதற்காக மொத்த வியாபார சங்கத்துக்குக் கிளைச்சங்கங்களை அந்த பாகங்களில் ஸ்தாபிப்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

ஸ்வீடனில்.

இத்தேசத்தில் வசிக்கும் 55 லட்சம் ஜனங்களுக்குள்ளே கூட்டுத்தொழில் முறையை அனுசரித்துச் சில்லறை வியாபாரம் செய்யும் சங்கங்கள் 790

இருந்தன. இவைகளில் 300, விவசாயிகளுக்குள் வேலைசெய்யும் சங்கங்களாயும், 400, வெண்ணெய் உற்பத்தி செய்யும் சங்கங்களாயும் இருந்தன. கோவாபரேடிவ் பார்பண்டெட், கோவாபரேடிவ் யூனியன், மொத்த வியாபார சங்கம்—இவைகளைச் சேர்ந்த சில்லறை வியாபாரம் செய்யும் சங்கங்கள் 470; இவைகளில் 78,500, மெம்பர்கள் இருந்தார்கள். இவைகளில் 336 சங்கங்களிலே சென்ற வருஷம் நிகரமாக 2,38,71,393 க்ரௌன், அதாவது 13,26,188 பவுனுக்கு விற்பனை நடந்து, 13,76,711 க்ரௌன் அல்லது 76,483 பவுன் பங்கு மூலதனத்தின் மேல் 9,66,273 க்ரௌன் அல்லது 53,681 பவுன் நிகரலாபம் கிடைத்தது. கூட்டுத்தொழில் மொத்த வியாபார சங்கத்தில் 45,13,028 க்ரௌன் அல்லது சுமார் 2,50,723 பவுனுக்கு நிகரமாக விற்பனை நடந்து, 70,838 க்ரௌன் அல்லது 4,000 பவுன் நிகர லாபம் கிடைத்தது. அவர்களுடைய 'கோவாபரேடொரென்' என்னும் பத்திரிகைக்கு 17,000 கையொப்பக்காரர்களும், கூட்டுத்தொழில் சம்பந்தமான பஞ்சாங்கத்துக்கு 66,000 கையொப்பக்காரர்களும் இருந்தார்கள். 1910-ம் ஹுத்திலே கூட்டுத்தொழில் விஷயங்களைப் பரவச்செய்வதற்காக 750 பிரசங்கங்கள் நடந்தன.

ஜர்மனியில்.

சில்லறை வியாபாரஞ்செய்யும் சங்கங்களடங்கிய ஜெர்மன் யூனியன் போன வருஷத்தில் அதிக அபிவிருத்தி அடைந்திருந்தது. அவைகளில் 1,25,000 புதிய மெம்பர்கள் இருந்தார்கள்; மொத்தத்தில் அவைகளில் 1,200,000 மெம்பர்கள் இருந்தார்கள்; அந்த யூனியனில் 1,100 சங்கங்கள் இருந்தன. அவைகளின் விற்பனையின் மொத்தம் 3,070 லக்ஷம் மார்க்குகள் ஆயிற்று, அதாது, 335 லக்ஷம் மார்க்குகள் அதிகமாய் ஆயிற்று. அவைகளுக்குச் சொந்தமான உற்பத்தி சாலைகளில் செய்யப்பட்ட சாமான்களின் மதிப்பானது 535 லக்ஷம், மார்க்குகள் ஜெர்மன் ஹோல்ஸேல் என்னும் மொத்த வியாபார சங்கமானது போன வருஷத்திலே மொத்தத்தில் 890 லக்ஷம் மார்க்குகளுக்கு வியாபாரம் செய்தது. அதற்கு முந்தின வருஷத்தில் அதே சங்கம் 750 லக்ஷம் மார்க்குகளுக்குத்தான் வியாபாரம் செய்தது; ஆகவே போன வருஷத்தில் நூற்றுக்கு 18·4 வீதம் அதிகமாய் வியாபாரம் செய்தது. தொழிற் சம்பந்தமான காரியங்களுக்காக, ஜர்மனியிலுள்ள ஸோப் செய்யப்படும் தொழிற் சாலைகளுக்குள் மிகவும் சிலாக்கியமானது மொத்த வியாபார சங்கத்தைச் சேர்ந்த ஸோப் தொழிற்சாலை தான். தவிரவும், மூன்று சுருட்டுத் தொழிற்சாலைகளிருந்தன. மொத்த வியாபார சங்கமானது வேறு பல்வேறு தொழிற்சாலைகள் ஏற்படுத்த பிரயத்தனம் செய்துகொண்டிருந்தது. அந்த சங்கத்தின் பாங்க் இலாகாவும் இன்ஷ்யூரான்ஸ் இலாகாவும் தீவிரமாய் விருத்தியடைந்து வந்தன. ஸெண்ட்ரல் யூனியனைச் சேர்ந்த பென்ஷன் பண்ட் இலாகாவில் 5000 மெம்பர்கள் இருந்தார்கள்; இந்த பண்டில் 15 லக்ஷம் மார்க்குகளிருந்தன; முதல் பென்ஷன் இந்த வருஷத்தில் கொடுக்கப்பட்டது; இவை

களினால் ஜனசமூகத்துக்கு அதிக பிரயோஜன முண்டாயிருக்கிறது. இந்த விஷயங்களிலிருந்து இந்த முயற்சியானது ஜர்மெனியில் அபிவிருத்தி யடைந்துவருகிறதென்று தெரியவரும். இப்படி அபிவிருத்தி அடைவது சகஜமே.

இடலியில்.

"லெகா நாஷனேல் டெல்லெ கோஆபரேடிவ் இடாலியேன்" என்னும் சங்கத்தில் 2000-ஐக்கிய நாணயச்சங்கள் அடங்கியிருந்தன. மிஸ்டர் மப்பி என்பவர் இதன் பொதுக்காரியதரிசி. ஷை சங்கத்தார் இந்த வருஷத்திலே இடலியில் தங்களுடைய ஜாதிய புனருத்தாரணத்தின் பதினைந்தாவது வருஷோத்ஸவம் கொண்டாடினதை ஞாபகமூட்ட விரும்பினார்கள்.

ஜப்பானில்.

ஜப்பானிலுள்ள சங்கங்களைப்பற்றிய ஆக்ட் பத்து வருஷங்களுக்கு முந்திதான் அமுலுக்குவந்தது; ஆனால் ஏற்கனவே 7000 சங்கங்களுக்கு மேல் இருந்தன; அவைகள் அநேகமாய் விவசாய சம்பந்தமானவையா யிருந்தாலும் ராஷ்டேல் என்பவர் ஏற்படுத்தின முறைப்படி சாமான்களை மொத்தத்தில் வாங்கி மெம்பர்களுக்குச் சில்லறையில் விற்பனைசெய்யும் 2000 சங்கங்கள் அவைகளில் அடங்கியிருந்தன.

இந்தியாவில்.

ஐக்கிய மகாணங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர். எஸ். எச். பிரீமாண்டில் என்பவர் அவருடைய 1907-08-ம்வருஷத்திய ரிபோர்ட்டிலே பங்கு மூலதனத்துடன் வேலைசெய்யும் நாட்டு பாங்கிகளின் ஒரு மாதிரியை விவரித்திருக்கிறார்; இந்த மாதிரியை அனுசரிப்பது உசிதமாகும்.

இந்த மாகாணங்களிலே முதலில் ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் ரெய்பெய்ஸென் முறையை அனுசரித்திருந்தன; பிரதி சங்கத்தையும் ஏற்படுத்துபவர் சொற்ப மூலதனத்தைக் கடனாகக் கொடுப்பார். மெம்பர்கள் நாலு அணா கட்டணம் செலுத்தவேண்டியதைத் தவிர வேறு யாதொரு சிரமமும் எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. வாஸ்தவமாய் அநேக இடங்களில் இந்த ஏற்பாட்டில் சந்தேகம் தோன்றினதுமல்லாமல் ஜனங்களை மெம்பர்களாகும்படிக்கும் கடன்கள் வாங்கும்படிக்கும் தூண்டுவது கஷ்டமாயு மிருந்தது. சங்கங்களின் மெம்பர்களுக்காவது அவைகளை ஏற்படுத்துபவர்களுக்காவது கூட்டுத்தொழில் பாங்கிகளை நடத்தும் வழிகளையும் அவைகளின் நோக்கங்களையும் கற்பிப்பதில் சிறிதேனும் பிரயத்தனம் செய்யப்படவில்லை கடன்கள் வாங்கும்பொழுது, கடன்வாங்குபவர்கள் சங்கம் அதைச் சேராத ஒரு பரோபகாரிக்குச் சொந்தமானதென்று கருதினார்கள்; சங்கத்தை ஏற்படுத்தினவர் சாய்காலுள்ளவரும் ஊக்கமுடையவருமாயிருந்தால், கொடுத்த கடன்களை வசூல்செய்து விடுவார்; அப்படி யில்லாவிட்டால் அந்தக்கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படாமலே நின்றிருக்கும். எப்படியானபோதிலும்,

கடன் வாங்குபவர்கள் – சங்கத்தின் அபிவிருத்தியில் தாங்கள் எவ்விதத்திலும் அக்கரை பாராட்டவேண்டியவர்களென்று நினைப்பதில்லை. ஆக்ட் ஜாரிசெய்யப்பட்டு, இந்த சங்கங்களின் நிலைமையைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டிவந்தபொழுது, மெம்பர்களுக்குத் தங்கள் சங்கத்தின் விவகாரங்களில் அக்கறை யில்லாமையைப்பார்த்து எனக்கு முன் ரெஜிஸ்ட்ராராயிருந்தவர் ஆச்சரியப்பட்டு அதுவிஷயமாய் ஒரு புதிய முறையை வழக்கத்துக்குக் கொண்டுவந்தார்; அதன்படி எல்லா மெம்பர்களும் அவரவர்களின் நிர்வாகத்துக்குத் தக்கபடியாவது அவர்கள் வாங்கியிருக்கும் கடன் தொகைகளுக்குத் தக்கபடியாவது ஒவ்வொரு அறுவடைகாலத்திலும் ஒரு சுவல்ப தொகையை டிபாஸிட்டாகக் கட்டிவைக்க ஒப்புக்கொள்ளவேண்டும். இப்படி ஒரு முறையை ஏற்படுத்தினதால் அவர் இஷ்டப்படி சிறிதுமட்டில் காரியம் நிறைவேறிற்று. இந்த முறைப்படி மெம்பர்கள் தொகை டிபாஸிட் செய்யக் கூடியவர்களே; ஏனென்றால், அந்தப்படி டிபாஸிட் செய்யவேண்டிய தொகை அவர்கள் வட்டியில் மிகுத்துவதைவிட எப்போதும் குறைவாகவே யிருக்கும்; மேலும், அவர்கள் டிபாஸிட் செய்வதற்கு இஷ்டப்படுவதனால் பாங்கியிலிருந்து தங்களுக்குக் கிடைக்கும் அநுகூலங்களை அவர்கள் இப்போது நன்றாய்த் தெரிந்துகொண்டிருப்பதாகவும் காணப்படுகிறது. ஆனால் இந்த ஏற்பாடு முழுவதும் திருப்திகரமாயில்லை; ஏனென்றால், ஒருவர் தாம் மெம்பராயிருந்துகொண்டே தம்முடைய டிபாஸிட்தொகைகள் முழுவதையும் வாபஸ் பெற்றுக்கொள்ளக்கூடுமானால், அவருக்கு அந்த சங்கத்தில் அக்கறையற்றுப் போய்விடும்; அதுவுமல்லாமல், விசேஷமாய் வரும் சில்லறை டிபாஸிட்டுகளைப் பதிவதனாலும் அவைகளின் பேரில் வட்டி கணக்கிட்டு அதை தொகை கட்டினவருக்குச் செலுத்துவது அல்லது மூலதனத்துடன் சேர்ப்பதனாலும் கணக்குவேலை விசேஷமாய்ப் பெருகிவிடுகிறது. பஞ்சாபில் அமுலிலிருந்துவரும் ஏற்பாட்டின்படி பங்குத்தொகைகளைத் தவணைகளாகச் செலுத்தும் முறையை அனுசரிப்பதனால் பிரஸ்தாப ஏற்பாட்டினால் உண்டாகும் அநுகூலங்களைப் பெறுவதோடுகூட இதர அநுகூலங்களையும் பெறக்கூடுமென்று இப்போது நான் அபிப்பிராயப்படுகிறேன்; ஆகவே அம்முறையை இந்த மாகாணங்களிலுள்ள சங்கங்களிலே அமுலுக்குக் கொண்டுவர முயன்றுகொண்டிருக்கிறேன் நமது சங்கங்களில் பெரும்பான்மையானவற்றைச் சேர்ந்திருப்பவர்கள் நிலத்தில் சொத்துவ பாத்தியதையில்லாத பாயக்காரிகளாகவே யிருக்கிறார்கள், அவர்களுடைய கைப்பற்றுகளும் சாதாரணமாய் சொற்பமாகவே யிருக்கின்றன. ஆகவே ஒரு பங்குக்காகச் செலுத்தவேண்டிய தொகை பஞ்சாபிலுள்ளதைவிடக் குறைவாயிருக்க வேண்டும். நான் ஏரொன்றுக்கு 10-ரூ அல்லது 20-ரூ ஆக நிஷ்கரிஷை செய்து அதை முறையே 8 அணா அல்லது 1 ரூபாயுள்ள பத்து அரைவருஷத் தவணைகளாகச் செலுத்த தக்கதாய் ஏற்படுத்தி யிருக்கிறேன். ஒவ்வொரு மெம்பரும் ஒருபங்கு எடுத்துக்கொள்ளவேண்டும்; இரண்டு அல்லது பல ஏருடையவர் இரண்டு அல்லது பல பங்குகள் எடுத்துக்கொள்ள

லகும். இந்தத் தவணைத்தொகைகளின் பேரில் பங்குகளுக்காக வட்டி எதுவும் செலுத்த வேண்டியதில்லை; ஆனால் பத்துவருஷத்துக்குப் பிறகு பங்குத் தொகைகள் முழுவதும் செலுத்தப்பட்டதன்மேல் (நூற்றுக்கு 10 வீதத்துக்கு மேற்படாத) ஒரு சவுத்தொகை கொடுக்கக்கூடிய அளவுக்கு லாபம் கிடைத்திருந்தால் அப்படி கொடுக்கப்படும். இந்த ஏற்பாட்டினால் உண்டாகும் அநுகூலங்கள் அநேகம்.

முதலாவது:—ஒவ்வொரு மெம்பரும் சங்கத்தில் ஒரு பங்குக்காரர் அல்லது ஹிஸ்ஸாதாரராகிறபடியால், இந்த வியாபாரம் லாபகரமாக நடந்து வருவதில் தாம் உள்ளபடியே அக்கறைகொள்ள வேண்டுமென்று அறிந்து கொள்ளுகிறார்.

இரண்டாவது:—8 அணா தவிர ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகை எதுவும் இல்லாதபடியினாலும் வட்டி எதுவும் கணக்கிட வேண்டியதில் லாமையாலும், கணக்குகள் சுலபமாக்கப்பட்டிருக்கின்றன.

மூன்றாவது:—பங்குகளுக்காகச் செலுத்தும் தவணைத் தொகைகளின் பேரில் தொடர்வட்டி ஏறிக்கொண்டு வருமாறையால், மூலதனம் சீக்கிரமாய்ப் பெருகும். (உதாரணமாக, பங்கு 1க்கு 20 ரூபாயாக 50 பங்குகளுக்கு 1 ரூபாய் வீதம், அரை வருஷத்தவணைகளாகத் தொகை செலுத்தி வருவதாகவும், அதன்மேல் நூற்றுக்கு 10 வீதம் சராசரியில் வட்டி கிடைப்பதாகவும் வைத்துக்கொண்டால், அப்படிப்பட்ட சங்கத்துக்கு 10 வருஷத்தில் 1600 ரூபாய்க்கு அதிகமாக மூலதனம் இருக்கும்.)

நான்காவது:—சங்கத்திலிருந்து மெம்பர்களுக்குச் செலுத்துவது லாபத்திரஷியமே யொழிய வட்டி யல்லவாகையால், மகம்மதியர்களுக்குள் வட்டி வாங்குவதற்கு இஷ்டப்படாத ஒரு வகுப்பினர் சொல்லும் ஆட்சேபம் ஒழிந்து போகிறது.

சங்கங்களைக் குறித்து.

தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த 76-ம் நெம்பர் செங்காளிபுரம் நாட்டு நாணயச்சங்கத்தார் மகுடாபிஷேகம் கொண்டாடினது.

மாட்சிமைதங்கிய மஹாராஜ சக்ரவர்த்தி ஐந்தாவது ஜார்ஜ், மஹாராணி சக்ரவர்த்தினி மேரி இவர்களின் மகுடாபிஷேகத்தைக் கொண்டாடுவதற்காக, 76-ம் நம்பர் செங்காளிபுரம் நாட்டு நாணயச்சங்கத்தின் ஆதரவில், ஜூன் மீ 22உ செங்காளிபுரத்திலே ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. தேவாலயங்களில் பூஜைகளும் அபிஷேகங்களும் நடத்தப்பட்டன. "மகுடாபிஷேக மண்டபம்" என்னும் பெயரால் ஒரு கட்டிடம் நிர்மாணம் செய்வதற்காகக் கையொப்பங்கள் வசூல் செய்யவேண்டுமென்று ஜனங்கள் ஒரு தீர்மானம் செய்தார்கள். கற்கண்டு விநியோகமானவுடன் கூட்டம் கலைந்தது.

காஞ்சீபுரம் நெசவுத்தொழில் செய்வோரின் ஐக்கியச் சங்கத்தினுடைய வேலையைப்பற்றின வியாக்கியானக் குறிப்பு.

("இந்தியன் பேட்ரியட்" என்னும் இங்க்லிஷ் பத்திரிகையிலிருந்து அமைத்தெழுதப்பட்டது.)

ஐக்கியநாணய ஏற்பாட்டினால் காஞ்சீபுரத்தில் நெசவுத்தொழில் செய்வோர் பெற்றிருக்கும் நன்மைகளிலிருந்து அவ்வேற்பாட்டினால் பொதுவாய் உண்டாகக்கூடிய பலன்களைப்பற்றி நமது பிரதிநிதி விசேஷமாய்ப் புகழ்ந்து வர்ணித்தார். இவர்கள் வேலைசெய்யும் முறையின் விவரங்களையும் ஒழுங்கையும் நுட்பமாய்க் கவனித்து, காஞ்சீபுரம் நெசவுத்தொழில் செய்வோரின் கூட்டுத்தொழில் யூனியன் காரியதரிசியுடன் தர்க்கித்துச் சம்பாஷிக்கும் பாக்கியம் நமது பிரதிநிதிக்குக் கிடைத்தபடியால், அந்த சங்கத்தை ஏற்படுத்தியவர்களையும் அதை நடத்திவருபவர்களையும் பற்றி அவர் பேசுவது புகழ்ச்சியாகவே யிருக்கிறது. நெசவுத்தொழில் செய்வோர் திருப்தியடைந்து சுகமாயிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கிறது; தகுந்த கூலி கிடைக்கிறது; அதோடுகூட ஒரு பெருத்த வியாபாரத்தில் பொறுப்பேற்றுச் சேர்ந்திருக்கிறோமென்னும் திருப்தியும் உண்டாயிருக்கிறது. இவையெல்லாவற்றுக்கும் மேலாக, அவர்கள் பூர்ண சுவந்தரமுடையவர்களாயும் வட்டி வியாபாரியின் பயமில்லாமலே வாழ்நாளைக் கழி

த்து விடலாமென்று நம்பிக்கை கொள்ளக்கூடியவர்களாயும் இருக்கிறார்கள். ஐக்கியநாணய ஏற்பாட்டைக்கொண்டு இதை யெல்லாம் சாதிக்க உத்தேசிக்கப்பட்டதென்பது நாம் அதன் அபிவிருத்தியைப்பற்றி சிறிது காலத்துக்கு முன் பிரசுரித்த ரிபோர்ட்டிலிருந்து விசதமாகும். அப்படி சாதிப்பதில் அதற்குச் சித்தியுண்டானதே, காஞ்சீபுரம் யூனியனுடைய அனுபோகம் மற்ற இடங்களிலும் கூட கைகூடுமென்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறது. அங்குள்ள நெசவுத்தொழிலோருக்கு ஜீவனம் போய்விட்டதென்றே எண்ணப்பட்டது. சந்தேகமின்றி அவர்களுள் அநேகருக்கு ஜீவனம் வாஸ்தவமாகவே போய்விட்டது. ஆனால் கூட்டுத்தொழில் பாவவே, மற்றவர்களின் பிழைப்புக்கும் நஷ்டமுண்டாகாதபடி தடுக்கும் காரியம் சித்தி பெற்றது.

இந்த யூனியன் ஆரம்பிக்கப்பட்டபோதிருந்த நிலைமைகளையும் இப்போது அது நடத்தப்படுகையிலுள்ள நிலைமைகளையும் நமது பிரதிநிதி கஷ்டப்பட்டுத் தெரிந்து கொண்டதுமல்லாமல் அம்மாதிரியான நிலைமைகளே தேசத்தின் பல பாகங்களிலும் பெரும்பான்மையான அளவுக்கு இருக்கின்றனவென்றும் அவருக்கு நிச்சயமாய் ஏற்பட்டது. காஞ்சீபுரத்திலேயே இவ்விதமான யூனியன்கள் இன்னும் அதிகமாய் வேண்டுமென்று ஜனங்கள் கேட்கிறார்களென்றும், இப்போதிருப்பதைவிட இன்னும் அதிகமான மெம்பர்களைச் சேர்ப்பதில்லை யென்று யூனியனார் சொல்வதனால் மற்ற நெசவுத் தொழிலோர் தங்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றம் உண்டானதாகக் கொள்ளுகிறார்களென்றும் அவர் சொல்லுகிறார். புத்திசாலிகளான நெசவுத் தொழிலாளிகள் தங்களுடைய புத்தியை முதலாளிகளுக்குப் பிரயோஜனகரமாய் உபயோகிப்பதற்குப் பதிலாக தங்களுடைய சொந்த அனுகூலத்துக்கும் லாபத்துக்கும் உபயோகிக்க அவர்களுக்குத் தருணம் கிடைக்கும்; யூனியனில் செய்யப்பட்ட சாமான்கள் உயர்தரமானவை யென்று எல்லோரும் ஒப்புக்கொள்வதற்கு வெகுசாய் இதுவே காரணமாகும். கஷ்டப்பட்டுத் தளர்ச்சியில்லாமல் ஒரே ரீதியாய் வேலை செய்வதை இவ்விடத்தில் ஆதரிப்பதுபோல் மற்ற இடங்களில் ஆதரிப்பதில்லை. சொந்த தறிகளை வைத்துக்கொண்டு தாங்கள் செய்யும் சரக்குகளை விற்று ஜீவனம் செய்யும் சுவாதீனப் போக்குள்ள நெசவுத் தொழிலாளிகள் சொற்பமாகவே யிருக்கிறார்கள்; அவர்களின் சங்கியையும் வேகமாய்க் சுருங்கிக் கொண்டுவருகிறது.

யூனியனுடைய காரியத்தைச் செய்வதில் அதன் காரியதரிசி காட்டும் தன்னல மறுப்பும் விசேஷ சிரத்தையுமே அதன் காரியசித்திக்குக் காரணமென்று நமது நிருபநேசர் கூறுவர். இப்படிப்பட்ட காரியங்களை ஏற்பாடு செய்து நடத்திவருவதற்கு மாத்திரமே யல்லாமல் அப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதனால் நெசவுத் தொழிலாளிக்கு லாப முண்டாகுமென்று முதலில் அவர்கள் மனதில் படும்படி சொல்வதற்குக்கூட மனிதர்கள் வேண்டி

யிருக்கிறார்கள். காஞ்சீபுரத்தில் ஒரே சங்கத்திற்குண்டான காரியசித்தியினால் இந்த எண்ணம் ஜனங்கள் மனதில் பட்டிருக்கிறது; நாளாவர்த்தியில் இன்னும் பல யூனியன்களை அங்கே ஏற்படுத்தக்கூடும். ஆனால் அந்த சங்கத்துக்குண்டான காரியசித்தி எல்லாருக்கும் தெரியாது. சுகமாயும் திருப்தி பெற்றும் இருக்கக் காஞ்சீபுரத்து நெசவுத் தொழிலாளிக்கு எவ்வளவு பாத்தியதை இருக்கிறதோ அவ்வளவு சேலத்திலும் மதுரையிலுமிருக்கும் நெசவுத் தொழிலாளிகளுக்கும் உண்டு. காஞ்சீபுரத்திலுள்ளவை போன்ற கூட்டுத்தொழில் யூனியன்கள் அவர்களுக்கு இருந்தால் அவர்களும் சுகமாயும் திருப்தியுள்ளவர்களாகவும் இருப்பார்கள்; அப்படிப்பட்ட வேலையை விருப்பத்துடன் செய்யத் தயாராயுள்ள மனிதர்கள் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்குள்ளும் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்படலாம்.

பிரசங்கங்களிலிருந்தெடுத்த விஷயங்கள்.

———:(o):———

மதுராந்தகத்தில் நடந்த 1911-ம்வருஷத்திய செங்கற்பட்டு ஜில்லாவின் மூன்றாவது கூட்டுத்தொழில் கான்பரன்ஸ்.

ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வி. சங்கரன் நாயரின் அக்ராஸநாதிபத்ய உபந்யாஸம்:—

கனவான்களே,

எனக்குமுன் பேசினவர்கள் தமிழில் பேசினதுபோல் நான் உங்களுக்கு அந்த பாஷையில் உபந்யாஸம் செய்ய முடியாமையைப்பற்றி மிகவும் விசனிக்கிறேன். ஆகையால் நான் இங்கிலீஷ் பாஷையில் பேசுவதற்காக என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும். இன்று காலையில் நீங்கள் மிகுந்த சிரத்தையுடன் என்னை வரவேற்றதற்காகவும் சிறிது நேரத்துக்குமுன் நீங்கள் என்னைப்பற்றிப் பட்சமாய்ப்பேசி நல்வரவு கூறியதற்காகவும் உங்களுக்கு மனப்பூர்வமாய் வந்தனம் செய்கிறேன்; இந்தக் கூட்டத்தில் அக்ராஸனம் வகிக்கும்படி என்னைத் தெரிந்தெடுத்ததற்காகவும் உங்களுக்கு வந்தனம் அளிக்கிறேன்.

இந்தக் கூட்டத்தின் அக்ராசனாதிபதியாயிருக்கும்படி என்னைக் கேட்டபோது, எவ்விதமான கூட்டுத்தொழில் சங்கத்தின் வேலையைப் பற்றியும் எனக்கு அனுபவ பூர்வமான பரிசயம் இல்லாமையால் அதற்குச் சம்மதிக்கச் சிறிது சங்கோசமாகவே யிருந்தது; ஆனால் இந்தச் சங்கங்களில்

சேராத ஒருவர் சிநேக பாவத்தோடும் அபிமானத்தோடும் தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்பட்சத்தில், அதைத் தற்சமயம் ஜனங்கள் நன்கு மதிப்பார்களென்று எனக்கு உறுதியாய்ச் சொன்னபடியால் நான் இங்கு வரச் சம்மதித்தேன்.

இந்த இராஜதானியில் நடந்துவரும் கூட்டுத்தொழில் முயற்சியைக் குறித்துப் பொதுவாகப் பேசுங்கால், சென்ற வருஷத்தில் இம்முயற்சியானது அதிசயிக்கத்தக்க விதமாக அபிவிருத்தி அடைந்திருப்பதைப்பற்றி நாம் சந்தோஷிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். 1909-10ஞ் வருஷத்தின் ஆரம்பத்திலே 3 ஸென்ட்ரல் சங்கங்களும், 2 அர்பன் (நகர) சங்கங்களும், 153 ரூரல் (நாட்டு) சங்கங்களும் இருந்தன; அந்த வருஷத்தில் 5 அர்பன் சங்கங்களும் 103 ரூரல் சங்கங்களும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன; ரூரல் சங்கங்கள் ஒன்றுக்கு இரட்டத்தனைக்கு மேலாக அதிகரித்திருக்கின்றன. மெம்பர்களின் சங்கியை 15,597 லிருந்து 30,085 ஆக உயர்ந்திருக்கிறது. இவர்களுக்குள் 16,670 பேர் விவசாயமே தொழிலாக உடையவர்கள். குண்டூர் அர்பன் கோஆபரேடிவ் ஸ்டோர்ஸ் என்னும் ஒரே சங்கம் கலைந்துபோய் விட்டது. எழுபத்தாறு மெம்பர்கள் தள்ளிவிடப்பட்டார்கள். செலுத்தி விடப்பட்ட பங்குமூலதனம் 2,09,266 ரூபாயிலிருந்து 3,62,921 ரூபாயாக அதிகரித்தது. இந்தவருஷத்தில் மெம்பர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட டிபாஸிட்தொகைகளின் மொத்தம் 8,62,000 ரூபாய் ஆயிற்று. கையிருப்பிலிருந்த டிபாஸிட்டுத் தொகைகளின் மொத்தம் 5,05,850 ரூபாயிலிருந்து 7,89,889 ரூபாயாக அதிகரித்தது. மெம்பராயிராதவர்கள் செலுத்திய டிபாஸிட்டுத் தொகையின் மொத்தம் ரூ. 5,29,081 கையிருப்பிலிருந்த டிபாஸிட்தொகை 3,04,144 ரூபாயிலிருந்து 5,52,116 ரூபாயாக உயர்ந்தது. 15,56,786 ரூபாய் வரையில் கடன்கொடுக்கப்பட்டது; இந்த தொகையில், பாபத்து ஒன்றுக்கு ரூ. 250 க்கு மேற்பட்ட கடன் தொகைகள் 3,25,524 ரூபாய்க்கு மாத்திரமே கொடுக்கப்பட்டன; மற்றவையெல்லாம் அந்த தொகைக்குக் குறைந்தவைகளே. சுவல்ப சங்கங்கள் தவிர மற்ற எல்லா சங்கங்களிலும் நிர்வாக கர்த்தர்கள் காலதாமசமின்றி தொகைகளை வசூல்செய்தார்களென்றும், மெம்பர்களும் அப்படி காலதாமசமின்றியே தொகைகளை செலுத்தி வந்தார்களென்றும் முந்தின வருஷத்திய ரிபோர்ட்டிலே ரெஜிஸ்ட்ரார் சொல்லுகிறார். லாபமுண்டாகும்படியான காரியங்களுக்கு உபயோகிப்பதற்காக 8,92,678 ரூபாயும், முந்திய கடன்களைத் தீர்ப்பதற்காக 6,75,465 ரூபாயும், சுபாசுப கர்மங்கள் செய்வதற்காக 40,792, ரூபாயும், வியாஜ்ஜிய காரியங்களுக்காக 470 ரூபாயும், இதர காரியங்களுக்காக 2,582 ரூபாயும் கொடுக்கப்பட்டன. கொடுத்தகடனைத் திரும்ப வசூலிப்பதில் பொதுவாய் எவ்வித கஷ்டமும் ஏற்படவில்லை. இந்த சங்கங்களால் ஏராளமான நன்மைகள் உண்டாயிருக்கிறதென்பதை ஸ்தாபிப்பதற்கு மேலேகாட்டிய கணக்குகளே போதுமானதா யிருப்பதோடுங்கூட, அந்த சங்கங்களால் உண்டாகும் பிர

யோஜனங்களை ஜனங்கள் நன்குமதிக்கத் தொடங்கியிருக்கிறார்களென்றும் அவைகளால் ஏற்படுகிறது. வட்டியில் மாத்திரம் தள்ளிக் கொடுத்திருப்பது காரணமாக கடன்வாங்கினவர்களுக்குச் சென்றவருஷம் உண்டாயிருக்கும் லாபத்தை நாம் கவனிக்கும்பட்சத்தில், அந்த லாபமானது என் மதிப்புபிரகாரம், சென்ற வருஷத்தில் கடன் கொடுக்கப்பட்ட தொகையின்பேரில் 3,00,000 ரூபாய்க்குக் குறைபாமல் ஆகிறது. சர்க்கார் தீர்வை முன்னிலும் அதிக துரிதமாய்ச் செலுத்தப்படுகிறதாம்; பல இடங்களில் பூஸ்திதியின் மதிப்பு ஏறியிருக்கிறது. கடன் வாங்குகிறவன், ஸாவ்காரின் கையிலிருந்து தப்பித்துக்கொண்டு, ஒரு சங்கத்தில் சேர, அதில் தன்னைப்போலவே சேர்ந்திருக்கிற இதர மெம்பர்கள் கடன்வாங்கவேண்டி வரும்போது தன்னுடைய உதவியை அபேட்சிக்கக் கூடுமாகையால், அவன் அந்த சங்கத்திலிருந்து கடன் வாங்கும்போது முன்னிலும் அதிக சுதந்தரமாய்ச் பிரவர்த்திக்கும் குணமுள்ளவனாகிறான். இந்த முயற்சி கைகூடுமாவென்று பிரதமத்தில் உண்டான பயமானது சென்ற ஆறுவருஷ காலத்தில் உண்டான அபிவிருத்தியினால் ஒழியக்கூடியதாயிருக்கிறது. அதிகாரம் வகித்திருப்பவர்களின் செல்வாக்கில்லாமல் எதுவும் செய்வது சாதகியமாகாதென்று முதலில் எண்ணப்பட்டது. சட்ட நிரூபணசபையில் இது சம்பந்தமான சட்ட விஷயத்தில் விசாரணை வகித்திருந்த ஸர் டி. இப்பெட்ஸன் இதைப்பற்றிப் பேசினபோது "ஜில்லா அதிகாரி இந்தப் புதிய சட்டத்தின் அர்த்தத்தை விளக்கிக் கூறி இந்தப் புதிய சுவிசேஷத்தை போதிக்கவேண்டுமென்றும், இந்த முயற்சியை எங்கே செய்து பார்த்தால் வெகுசாய்க் காரியசித்தி உண்டாகுமோ அப்படிப்பட்ட இடங்களை அவரே பொறுக்கி யேற்படுத்த வேண்டுமென்றும், கூட்டுத்தொழில் முயற்சியென்னும் செடி உறுதியாய் வேரூன்றி வேறே சகாயமில்லாமல் தானே தலையெடுத்து நிற்கும்படி பலமுள்ளதாகிறவரையில், மற்ற இடங்களில்கூட ஜில்லா அதிகாரியின் இடைவிடாத சகாயமும் ஆதரவும் அவசியமாகுமென்றும்" சொன்னார். எப்படியிருந்தாலும் இந்த ராஜதானியில் மாத்திரம் இப்படிப்பட்ட சகாயம் அநாவசியமென்று ஏற்பட்டுவிட்டது கவர்ன்மென்டாரின் முக்கிய சகாய மில்லாவிட்டால் இம்முயற்சி கைகூடுவது கஷ்டசாத்தியமென்று சட்டசபையிலுள்ள நமது பிரதிநிதிகள் கூடபயப்பட்டார்கள். பங்கு மூலதனமாகவும் டிபாஸிட்டுகளாகவும் மெம்பர்களிடமிருந்து வசூலாகும் தொகையுடன் ஒரு உச்ச அளவுக்கு தாங்களும் திரவிய சகாயம் செய்து அதற்கு வட்டி கணக்கிடுவதாக நமது சென்னப்பட்டணம் கவர்ன்மென்டார் வாக்குத்தத்தம் செய்தார்கள். அதனால் சில மெம்பர்கள் கொஞ்சம் பணம் டிபாஸிட்டாகக் கட்டிவைப்பதற்குத் தூண்டுதல் உண்டாயிற்று. இந்த டிபாஸிட்டுத் தொகைகளையும் கவர்ன்மென்டார் செய்த திரவிய சகாயத்தையும் வைத்துக்கொண்டு சங்கங்கள் வேலை ஆரம்பிக்கலாயின. சென்ற வருஷம் கவர்ன்மென்டாரிடமிருந்து கடன்வாங்கவேண்டிய ஆவசியகம் எவ்விதத்திலும் ஏற்படவில்லை. அதுமாத்திரமல்லாமல் கவர்ன்மென்டார் கொடு

த்திருக்கும் கடன்கள் கிரமமாய்த் தீர்க்கப்பட்டும் வருகின்றன: திரவியரூப மாக சர்க்காரின் சகாயம் யாதொன்றும் இந்த சங்கங்களுக்கு இனி வேண்டிய தில்லையென்று ரெஜிஸ்ட்ரார் ரிபோர்ட் செய்யும்படியாக அவ்வளவு நம்பி க்கை இந்த சங்கங்களில் ஜனங்களுக்கு உண்டாயிருக்கிறது. வட்டி வியாபாரி கள் இதற்கு பலத்த விரோதம் செய்வார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. வட இந்தியாவிலே சில இடங்களில் வட்டிவியாபாரிகள் இந்த சங்கங்களை யும் இவைகளிடமிருந்து கடன் வாங்குகிறவர்களையும் பஹிஷ்காரம் செய்கி றார்களென்று ரிபோர்ட்டுகளிலிருந்து தெரியவருகிறது. நமது ராஜதானியி லும் ஸாவ்கார்கள் இந்த சங்கங்களுக்கு விரோதமாய்த் தங்கள் செல்வாக்கைச் செலுத்தி யிருக்கிறார்களென்பதற்கு இரண்டொரு திருஷ்டாந்தங்களுண்டு. இப்படிப்பட்ட விரோதம் இப்போதிருப்பதைவிட இன்னும் எவ்வளவோ அதிகமாயிருந்தால்கூட அதற்காக நாம் ஆச்சரியப்படும்படியானதொன்று மில்லை; ஆனால் அவ்விதமான விரோதமுண்டான சந்தர்ப்பங்கள் மிக சொற்ப மாகவே யிருப்பதைக் காண சந்தோஷகரமாயிருக்கிறது. அயலூர்களிலிருந்து வந்திருந்த சில ஸாவ்கார்கள் தாங்கள் வட்டி வியாபாரம் நடத்திவந்த கிரா மங்களை விட்டுப்போய்விட்டார்கள்; ஆனால் பெரும்பான்மையான சந்தர்ப் பங்களிலே, அதிலும் முக்கியமாய் அவர்கள் அந்தக் கிராமவாசிகளாகவே யிருக்கும் பட்சத்தில், அவர்கள் இப்போது நடத்திவரும் வியாபாரத்தில் உண்டாகும் ஆபத்துகளுக்கு உட்படுவதைக் காட்டிலும், வரையறுக்கப் படாத உத்தரவாதமுடைய மெம்பர்கள் சேர்ந்திருக்கும் சங்கத்திலிருந்து கூடியவரையில் சுமாரான வட்டி கிடைப்பது நிச்சயமாயிருப்பதால் அதையே நிஸ்ஸந்தேகமாய் உத்தமமெனக்கொண்டு அப்படிப்பட்ட சங்கத்தில் தங்கள் பணத்தை வட்டிக்குப் போட்டார்களென்று தெரிய திருப்திகரமாயிருக்கிறது. விவசாயிக்குக் கடன்கொடுக்கிற வட்டி வியாபாரிக்கு, தன் கடன் தீர்வத ற்கு அறுவடை போதாமலிருக்கும் பட்சத்தில், தன் பணத்தை வசூல் செய் வது கஷ்டமாய் விடுகிறது. கடன் வாங்கினவன் பேரில் மாத்திரமல்லாமல் அவன் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் பேரிலும் வழக்குத் தொடரும் படியான கஷ்டம் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் உண்டாகிறது. வட்டி ஷரத்துகள் அநியாயமாயிருக்கும்போதெல்லாம், ஸாவ்கார் தனக்குக் குறைந்த வட்டி வருவதாயிருந்தால் கூடத் தன் கடனை வசூல் செய்யும் காரி யத்தை இப்போது சங்கத்தாருக்கு விட்டுவிடுகிறான். இந்தச் சட்டமானது சொற்ப ஆஸ்தியுடைய விவசாயிகள், கைத்தொழிலாளிகள் முதலியவர்களுக் குப் பிரயோஜனகரமா யிருக்கும்பொருட்டு உத்தேசிக்கப்பட்டது. கடன் பட்டிருக்கும் விவசாயியையும் கைத்தொழிலாளியையும் வட்டி வியாபாரி களின் கையிலிருந்து எவ்விதத்திலாவது தப்புவிப்பது சாத்தியமாவென்ற ஆரம்பத்தில் பயப்பட்டுவந்தார்கள்; ஏனென்றால், ஒரு சங்கத்தின் சமு தாய நாணயத்தை அவனுடைய சொந்த பிரயோஜனத்துக்காக உபயோகப் படுத்திக்கொள்ளும்படியான சௌகரியத்தை அவனுக்குச் செய்துகொடுத்

கும்பட்சத்தில், சுலப வட்டிக்குக் கிடைக்கும் பணத்தை அவன் மட்டுக்கு மிஞ்சி செலவழிக்கும் நிலைமைக்கே வந்துவிடுவானென்று சிலர் வாதித்தார் கள். லாபகரமான காரியங்களுக்காக மாத்திரமேயல்லாமல் விவாக முத லான லாபகரமல்லாத காரியங்களுக்கும் (நஷ்டத்தை உண்டாக்கக்கூடிய காரியங்களுக்காகக்கூட) கடன் வாங்குவதற்கு அவனுக்குச் சட்டம் இடங் கொடுக்கிறதென்பதில் சந்தேகமில்லை. விவாகங்களுக்காக வாங்கின கடன் மொத்தம் ரூ. 40,792 ஆயிற்று; இந்தத் தொகையைக் கடன் கொடுத்திரா விட்டால், மெம்பர்கள் வட்டி வியாபாரியினிடம் போய்க் கடன் வாங்கி யிருப் பார்களென்றும், அந்த மெம்பர்கள் சம்பந்தப்பட்டவரையில், அவர்கள் சங் கத்தில் மெம்பர்களாய்ச் சேர்ந்திருப்பதால் உண்டாகும் இதர லாபங்களை இழந்திருப்பார்களென்றும் என்னிடம் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். அப் படிப்பட்ட காரியங்களுக்காக அவர்கள் கடன் வாங்கினபோது, இதர வித மான கடன்களெவையும் வாங்காமல், தங்களுக்குள்ளதை வைத்துக்கொண்டு அதற்குள்ளாகவே செலவு செய்துவர சாதாரணமாய் முயன்றிருப்பதாக எனக்குத் தெரிகிறது. முக்கியமாய் அப்படிப்பட்ட சமயங்களிலே மெம்பர் களிடத்தில் சங்கத்தார்கள் தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி வட்டி வியாபாரிகளிடம் அவர்கள் போகாமலிருக்கும்படி அவர்களைத் தப்புவிப்பார் களென்று நான் நம்புகிறேன். இது விஷயமாய் நமக்குள்ள அனுபவம் கொஞ் சமேயாயினும், அதைக்கொண்டு பார்க்கும்போது, சுலப வட்டிக்குக் கடன் கிடைப்பதென்னும் காரணத்தினால் மெம்பர்கள் இப்படிப்பட்ட காரியங் களில் மட்டுக்கு மிஞ்சிச் செலவு செய்யும்படியான ஸ்திதிக்கு வந்துவிட வில்லை யென்று தெரியவருகிறது. அதற்கு மாறாக, மெம்பர்கள் தாங்கள் மிகுந்தும் சொற்பத் தொகைகளை, வட்டிக்குப் போட்டுவைப்பதற்கு உப யோகமுள்ள சாதனமில்லையே யென்று அவைகளைத் தாறுமாறாய்ச் செல வழித்துவிடாமல் சாதாரணமாய்ச் சங்கங்களில் கட்டிவைத்தபடியால், அவர் கள் சிக்கனத்தில் பழகுவதற்கு ஷை சங்கங்கள் பின்னும் தூண்டுதலாயிருந் தன. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி, பங்கு மூலதனமும் மெம்பர் களிடமிருந்து வந்த டிபாஸிட்டுத் தொகைகளும் கிரமமாய் விருத்தியாயிருக் கின்றன. இந்த வருஷத்தில் பங்கு மூலதனத்தின் மொத்தம் ரூ. 89,889-2-0 ஆகிறது. இந்த இரண்டு பயபத்துகளினின்றும் சென்னபட்டணம் மெஸ் ட்ரல் சங்கத்தின் பங்கு மூலதனமான 82,000 ரூபாயையும் மெம்பர்களின் டிபாஸிட்டுத் தொகையான 4,93,041 ரூபாயையும் கழித்துவரும் நிலுவை யைப் பார்த்தால், மற்றவர்களை விட ஏழைகளாகவே யிருக்கும் மெம்பர்கள் தாங்கள் மிகுந்தும் சொற்பத்தொகைகளை வட்டிக்குப் போட்டு வைப்பதற் குக் கூட்டுத்தொழில் சங்கங்களை விசேஷமாய் உபயோகித்திருக்கிறார் களென்று காட்டுவதற்கு ஷை நிலுவையத்தொகை யோதமானபடி பெருத்த மொத்தமாயிருக்கிறது. வட இந்தியாவிலே சில இடங்களில் அநேக ஸ்திரீ கள் வகைகளுக்குப் பதிலாய் மணமாகவே தங்களுக்குச் சீர் வரிசை

கள் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தி அந்தத் தொகையைக் கூட்டுத்தொழில் சங்கங்களில் போட்டுவைக்கிறார்களாம். லயால்பூர் கிராமத்திலுள்ள சங்கத்தில் அவ்விடத்திலிருக்கும் ஏறக்குறைய எல்லா ஸ்திரீகளும் சேர்ந்திருக்கிறார்களாம். எந்த வகுப்பார்களுக்கு இதனால் நன்மை புரிய வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டதோ அவர்கள் தங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கை யில்லாமையினால் ஒத்துழைப்பார்களோ மாட்டார்களோ வென்று சிலர் சந்தேகித்தார்கள். இந்த தேசத்து ஜனங்களுக்கு ஒத்துழைப்பதிலுள்ள சாமர்த்தியத்தைப்பற்றி அவர்களை அறிந்தவர்களுக்குள் மேற்சொன்னபடி யல்லாமல் வேறே அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. ஒரு சங்கம் ஏற்படுத்துவதற்கு கொஞ்சம் எண்ணிக்கையுள்ள நபர்களே வேண்டி யிருந்தபடியால், சங்கங்கள் ஏற்படுத்துவதில் அதிக கஷ்டமிராதென்று அவர்கள் நினைத்தார்கள். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சகலர்களும் எவ்வளவு தூர பந்துத்துவ முள்ளவர்களா யிருந்தபோதிலும், அவர்களை ஒன்றாய்க்கூடி வாழும்படி செய்யும் கட்டுப்பாடு பலமுள்ளதாயிருப்பதனாலும், விவாக சம்பந்தத்தால் ஏற்படும் பந்துத்துவம் பல குடும்பங்கள் வரையில் விஸ்தாரமாய் வியாபித்திருப்பதனாலும், வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களும் ஒருவருக்கொருவர் பற்பல இன்றியமையாத சகாயங்களைச் செய்ய வேண்டியவர்களா யிருப்பதனாலும், பரஸ்பர லாபத்தின் பொருட்டு ஜனங்கள் ஒன்று சேர்வதனால் அவர்களுக்கு அனுகூல முண்டாவதாயிருக்கும் போது அவர்களை ஒத்துழைக்கும்படி சேர்ப்பது கஷ்டமல்ல வென்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இந்த முயற்சியின் சாதகபாதகங்களை ஆராய்ந்தவர்கள் இதனால் நன்மையே விசேஷமாய் விளையுமென்று கொண்டிருந்த எண்ணம் சரியானதே யென்று இதுவரையில் நமக்குண்டான அனுபவத்தினால் ஏற்படுவது மல்லாமல், இதனால் பாதகம் விளையுமென்று எண்ணினவர்களுடைய பயமும் ஒழிந்துபோய்விட்டது. இது விஷயத்தில் கஷ்டமிருந்ததென்பதற்கு சந்தேகமில்லை. கூட்டுமுயற்சியின் ஆவசியகத்தைப் பற்றி ரெஜிஸ்ட்ரார் ஜனங்களுக்கு போதிக்கவேண்டியிருந்ததோடு அவர்களுக்கு இதில் அக்கறை உண்டாகும்படி செய்வதற்காகத் தம்முடைய சாய்காலையும் நேராய்ச் செலுத்தவேண்டியிருந்தது. கிராமங்களிலுள்ள ஜனங்களின் மத்தியில் வசித்துக்கொண்டு, அவர்களுடைய சொந்த பாஷைகளில் அவர்களுடன் சிநேகமாய்க் கலந்துபேசி, தாங்கள் அவர்களுக்குச் சொல்லும் யோசனைகளில் அவர்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கும்படி செய்யக்கூடிய சுதேச ரெஜிஸ்ட்ரார்கள் சென்னை ராஜதானியிலே நமக்குக்கிடைக்கும்படி வாய்த்தது. இதனால் உண்டான பலன் என்ன வென்றால், இப்போது ரெஜிஸ்ட்ரார் படுகிற கஷ்டம் ஜனங்களைச் சங்கங்கள் ஏற்படுத்தும்படி தூண்டுவதைப்பற்றினதாயிராமல், அவரே சொல்லுகிறபடி "பைசலாகாமல் கட்டுக்கட்டாய்க் குவிந்துபோயிருக்கும் விண்ணப்பங்களுக்குள்" எவைகளை ஜாரி செய்வ தென்பதைப் பற்றினதாகவே இருக்கிறது. இந்த சங்கங்கள் எவர்

களுக்காக உத்தேசிக்கப்பட்டதோ அந்த வகுப்பார்கள் - அவர்களை நன்றாய் அறிந்துகொள்ளாதவர்கள் முதலில் எதிர்பாராத அளவுக்கு கூட்டுத்தொழில் செய்வதில் தங்களுக்குத் திறமை யுண்டென்பதைக் காட்டியிருக்கிறார்கள். நன்றாய் வேலை செய்து வருவதாகக் காணப்படாத சங்கங்களைக் கலைத்துவிட ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் ஏற்படுத்தியிருக்கிறது. ஒரே ஒரு சங்கத்தைத்தான் அவர் கலைக்கும்படி நேரிட்டது; அதுவும் குண்டூர் ஸ்டோர்ஸ் என்னும் ஒரு நகரச் சங்கமே. இன்னொரு சங்கமும் கலைந்துபோய்விட்டதென்றாலும், அது தானாகவே செய்து கொண்ட காரியம். ஆகவே இது விஷயமாய் எதிர்பார்க்கப்பட்ட கஷ்டங்கள் கூட்டுத்தொழிலின் வளர்ச்சியைச் சிறிது காலத்துக்கு நின்று போகும்படி செய்யத்தக்க அவ்வளவு பலமுள்ளதாயிருக்கவில்லை; மேலும், நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி, சங்கங்களை ஏற்படுத்தினதனால் மெம்பர்கள் ஏற்கனவே விசேஷ லாபம் அடைந்திருக்கிறார்கள். வேறே சில பிரயோஜனங்கள் உண்டாகுமென்றுகூட எதிர்பார்க்கப்பட்டது. ஒரு சங்கத்தில் சாதாரணமாய் அக்கம்பக்கத்திலுள்ளவர்களே மெம்பர்களாகச் சேர்ந்திருப்பதனால், சங்கத்திலுள்ள மெம்பர்களில் ஒவ்வொரு மெம்பருக்கும் மற்றவர்களின் நிலைமை பூர்ணமாய்த் தெரிந்திருக்கும்; மேலும், எந்தத் தனி மெம்பரின் நன்மைக்காகவும் சங்கத்தின் சமுதாயநாணயம் அவசியமாகையால், மெம்பர்களை அவர்கள் இஷ்டப்படி நடக்கவிடாமல் எல்லாருடைய யக்ஷேமத்தையும் உத்தேசித்துச் சங்கம் அவர்களை அடக்கிவருமென்று இந்த சங்கங்களை ஏற்படுத்துவதற்குச் சட்டநிருபணஞ் செய்யப் பொறுப்பேற்றவர்கள் கோரினார்கள். இந்த கோரிக்கைகூட நிறைவேறி வருகிறதைத் தெரிந்து சந்தோஷிக்கிறேன். மெம்பர்களை விலக்கிவிட விதிகளின்படி சங்கங்களுக்கு அதிகாரம் உண்டு; அதன்படியே அவைகள் சில மெம்பர்களைத் துர்நடத்தையுள்ளவர்களென்று விசேஷித்துக் கெட்ட பெயர் வாங்கியதற்காக விலக்கியிருக்கின்றன. ஒரு மெம்பர் குடியனாயிருந்ததற்காக விலக்கப்பட்டார். குடியில் விருப்பங்கொண்ட இதர மெம்பர்கள் தங்கள் குடிப்பழக்கத்தை விட்டுவிடப் பிரயத்தனம் செய்திருக்கிறார்கள்; அந்த பிரயத்தனமும் சாதாரணமாய்க் கைகூடியிருக்கிறது. பொதுவாக இந்தச் சங்கங்கள் மதுபானத்தை மிதப்படுத்துவதற்கும் முற்றிலுமே குடி வழக்கத்தை நிவர்த்திப்பதற்குங்கூடச் சார்பாகத் தங்கள் செல்வாக்கைச் செலுத்தி வருகிறதாக எனக்குத் தெரியவருகிறது. கடனை லகுல் செய்வதற்காகச் சங்கங்களைக் கோர்ட்டுக்கு இழுத்துவிட்ட மெம்பர்களை அந்த சங்கங்கள் விலக்கியிருக்கின்றனவென்றும் நான் அறிகிறேன். இது மிகவும் அவசியம யிருப்பது மல்லாமல் அப்படிச் செய்ய வேண்டியது சங்கத்தின் க்ஷேமத்துக்கு ஸர்வோத்தமமாகவும் இருக்கிறது. கம்மாளம்பூண்டி நாட்டு நாணயச் சங்கத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் ஒரு ரெவினியு ஸெட்டில்மெண்ட் ஆபிஸரின்முன் பொய் வாக்குமூலம் கொடுத்ததற்காக அந்த சங்கத்தார்கள் அவரை நீக்கிவிடத் தீர்மானித்தார்களென்றும், ஆனால், அவர் தாம்

செய்த குற்றத்துக்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டதன்பேரில் அவரை மன்னித்து பஞ்சாயத்து சபையில் அவருக்கிருந்த ஸ்தானத்தை ராஜினாமா கொடுத்துவிடும்படி கட்டாயப்படுத்தினார்களென்றும் ஷை சங்கத்தாரின் ரிபோர்ட்டினால் தெரிகிறது. இந்த முறைகளையே அனுசரித்துச் சங்கங்கள் வேலை செய்துவருமென்று நான் நம்புகிறேன்; அப்படி செய்து வரும்பட்சத்தில், ஒரு சங்கத்தில் மெம்பராயிருப்பதே கௌரவ முடைமைக்கு நிஸ்ஸந்தேகமான அதிகார முத்திரையாய் ஏற்படும். ஆகையால், மொத்தத்தில், இதுவரையில் நமக்குண்டாயிருக்கும் அனுபவம் தைரியங் கொடுப்பதாயிருப்பதோடு, இனி வருங்காலத்திலும் நன்மை உண்டாகு மென்று நம்பிக்கை கொள்ளக்கூடிய தாயிருக்கிறது. நமக்கு எவ்வளவு மூலதனம் வேண்டியிருந்தாலும், நமது இப்போதைய தேவைகளுக்காவது போதுமான மூலதனம் ஸென்ட்ரல் பாங்கியிலிருந்தும் அர்பன் சங்கங்களிலும் ரூரல் சங்கங்களிலும் இருக்கும் டிபாஸிட்டுத் தொகைகளிலிருந்தும் கிடைக்கிறது. ஜனங்கள் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கு ஆவலாயிருக்கிறார்கள்; கடன் வாங்கின தொகைகள் முன்னிலும் சீக்கிரமாய்க் காலதாமதமின்றி திருப்பிச் செலுத்தப்பட்டு வருகின்றன; மேலும் இந்த சங்கங்களால் உண்டாகும் அனுகூலங்களைப் பெற்ற வகுப்பாருக்குள் விசேஷ அபிவிருத்தி உண்டாயிருக்கிறது. இந்த முயற்சியினால் நன்மை உண்டாகுமா உண்டாகாதா என்று பரீட்சித்துப்பார்க்கும் தசையைக் கடந்து இது வின்னும் செல்லவில்லை யென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஆகவே நான் சொல்லுகிற பிரகாரமும் ரெஜிஸ்ட்ரார்கள் ஏற்கனவே உங்கள் மனதில் நன்றாய்ப் படும்படி சொல்லியிருக்கிற பிரகாரமும், திறமையாய் வேலை செய்து அவசியமென்பதை ஏற்கனவே மெம்பர்களாயிருப்பவர்கள் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே நமக்குள் ஏற்பட்டிருக்கும் சங்கங்கள் சாத்தியமான வழிகளிலெல்லாம் தங்கள் வேலை நடத்து முறைகளையும் அமைப்பையும் சீர்திருத்திக்கொள்வது மிகவும் முக்கியமாகும். மிக ஜாஸ்தியான சங்கியையுள்ள சங்கங்கள் இருக்கவேண்டு மென்பது அவ்வளவு முக்கிய மல்ல. நன்றாய் வேலைசெய்யும் சங்கங்கள் சில இருந்தாலும், அவைகளால் இந்த முயற்சி முழுமைக்கும் ஒரு பெருமையுண்டாகி, ஜனங்களுக்கும் அதனிடத்திலுள்ள கௌரவம் உயருமென்பதற்கு சந்தேகமில்லை. இதை முன்னிட்டு மெம்பர்கள் தங்கள் விவகாரங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ள முயலவேண்டும். ஒரு சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களே அதில் அக்கறை பாராட்டாமலிருந்துவிட்டால், ரெஜிஸ்ட்ராராவது இன்ஸ்பெக்டராவது இன்னும் வெளியாராவது எவ்வளவு தான் மேல் விசாரணை செய்துவந்தாலும், அந்த சங்கத்தின் காரியம் சித்திபெறாது. மெம்பர்களும் தங்களுக்குத் தெரியவேண்டியவைகளை ரெஜிஸ்ட்ரானிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு அவருடைய சகாயத்தைப் பெறலாம். அப்படிப் புத்திமதி கூறி சகாயம் செய்வதற்கு அவர் எப்போதும் தயாராயிருப்பார். சங்கத்தின் கூட்டங்கள் நடக்கும்போது

உற்சாக மூட்டுவதும், மோசமும் நிர்வாக ஊழலும் நேராதபடி தடுக்கும் பொருட்டுக் கணக்குகளைத் தணிக்கை செய்வதும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கடமையேயாயினும், மெம்பர்கள் சங்கத்தின் நிர்வாகத்தைத் தாமே ஏற்றுக்கொண்டாலொழிய சகலப்பிரயத்தனமும் நிஷ்பிரயோஜனமாகி சங்கத்தைக் கலைத்துவிட வேண்டியுமிருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்கனவே மெம்பர்களாய்த் தாம் செய்ய வேண்டிய வேலையைச் சாமர்த்தியத்துடன் செய்யக்கூடியவர்களும் சிரத்தை யுள்ளவர்களுமான ஜனங்கள் இருக்கிறார்கள்; அவர்கள் எந்த முகாந்தரத்தினாலும் அதைச் செய்யப் பின்வாங்க மாட்டார்களென்று நான் நம்புகிறேன். சங்கங்களை நிர்வாகம் செய்வது உங்கள் கையிலேயே இருக்கிறது. ஒவ்வொரு சங்கத்தின் கம்மிட்டியையும் காரியதரிசியையும் அந்த சங்கமே நியமிக்கக்கூடும். அவர்கள் செய்யவேண்டிய வேலையும் விசேஷமாயில்லை. ஒவ்வொரு மெம்பரும் தன்னுடையதும் இதர மெம்பர்களுடையதுமான சமுதாய நன்மைக்காக சங்கநிர்வாகத்தைத் தம்தம் வரிசைக்கிரமமாக ஏற்றுக்கொள்வது அவருடைய கடமையாகும். விதிகளைக் கண்டிப்பாய் அனுசரித்து காரியங்கள் நடந்து வரும்படியாக ஒவ்வொரு மெம்பரும் பார்த்துக்கொண்டு, ஸ்வப்பிரயோஜன நாட்டம் சங்கத்தின் காரியத்துக்குத் தடையாயிருப்பதற்கு இடங் கொடாமலிருக்க வேண்டும். கடன் வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளுகிற ஒவ்வொருவருடைய நிலைமையும், அவர் கடன் வாங்குவதற்குள்ள ஆவசியகமும், அவர் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடியவரா அல்லவாவென்பதும் இவைபோன்ற மற்ற விஷயங்களும் கம்மிட்டியாருக்குத் தெரியும். கடன் கேட்கும் ஒவ்வொருவருடைய சந்தர்ப்பங்களை அனுசரித்து கடன் தொகையை இந்தப்படி திருப்பிச் செலுத்தவேண்டுமென்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும்; ஒரு கடனைக் கொடுத்தவுடனே எதற்காக அது வாங்கப்படுகிறதோ அந்த காரியத்துக்காகவே அதை உபயோகிக்க வேண்டுமென்று அவர்கள் கட்டாயப்படுத்த வேண்டும். ரெஜிஸ்ட்ரார் எனக்குக் கொடுத்த ரிபோர்ட்டுகளை யெல்லாம் படித்தேன்; வட இந்தியாவில் சில இடங்களிலே கடன் வாங்கினவர்கள் தாங்கள் வாங்கின தொகையை விண்ணப்பத்தில் காணாத காரியங்களின் பொருட்டு உபயோகித்ததாகத் தெரியவந்தாலும், இந்த ராஜதானியிலே அப்படி நடந்ததாக வரும் முறைப்பாடுகள் அபூர்வமாகவே இருந்திருக்கின்றன. வாங்கின கடனை துர்விநியோகப்படுத்தினது 9 பேர்களே; இந்த 9 பேர்களும் விலக்கப்பட்டார்கள். டிபாஸிட்தொகை கட்டி யிருப்பவர்களின் க்ஷேமத்தை மாத்திரமல்லாமல், கடன் வாங்கினவர்களின் க்ஷேமத்தையும் கூட உத்தேசித்து கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதைக் குறித்த விதியைக் கண்டிதமாய் வற்புறுத்தி வரவேண்டும். சங்கத்தின் விதிகளைத் தவறி நடப்பவர்கள் அதனுடன் தங்களுக்குள்ள சம்பந்தத்தை அகற்றிக் கொள்வதே சாதாரணமாய் அந்த சங்கத்துக்கு நன்மையாகும். கண்டிப்

பாய் நிர்வாகம் செய்து வருவதனாலும், அப்படி நிர்வாகம் நடக்கிறதென்று பெயர் வருவதனாலுமே, டிபாஸிட்டுத் தொகைகள் தாராளமாய் வந்துவிழும்; ஆகவே ஜனங்களுக்குள் நம்பிக்கையை உண்டாக்கி டிபாஸிட்டுத் தொகைகள் கட்டும்படி அவர்களை ஆகர்ஷிப்பது நமது கடமைகளில் ஒன்றாகும். சில சங்கங்களிலே விண்ணப்பதாரர்களுக்கு 12 மாதத்துக்கு ஒரு தடவை பணம் கடன் கொடுக்கப்படுவதாகவும், பிறகு, ஸெண்ட்ரல் பாங்கிலிருந்து பெற்றுக் கொள்ளும் தொகைகளை இன்னொரு தடவை கடன் கொடுப்பதற்காக மற்றொரு மீட்டிங்கு கூடுகிறவரையில் சங்கங்களின் வேலையெல்லாம் அநேகமாய் நிறுத்திவைக்கப்படுகிறதாகவும் நான் படித்தேன்; ஆயினும் அந்த சங்கங்கள் இந்த ஜில்லாவைச் சேர்ந்தவையல்ல. இப்படி செய்வது சற்றேனும் உதவாது. மெம்பர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும், டிபாஸிட்டுத் தொகைகளை வாங்கிக்கொள்வதற்கும் மற்ற கிரமமான வேலைகளைப் பார்ப்பதற்கும் சங்சங்களில் அடிக்கடி கூட்டங்கள் கூடவேண்டும். விவசாயிகளாயிருந்து, எந்த சங்கத்தையும் சேராமலும் கடன் பட்டும் இருப்பவர்களுக்கு புத்தி புகட்டுவதாயும் தைரிய மூட்டுவதாயுமுள்ள சில வார்த்தைகளை அவர்களை நோக்கிச் சொல்ல விரும்புகிறேன். "வெகுசாய் நீங்கள் எல்லோரும் கலியாணமானவர்களாயும் உங்கள் குடும்பங்களுக்காக உழைக்க வேண்டியவர்களாயும் இருக்கிறீர்கள். உங்கள் தகப்பன்மார் தப்பித்துக்கொள்ள வழியின்றிக் கடனில் மூழ்கிப் போயிருந்தார்களென்றும், உங்கள் அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் அப்படியே இருக்கிறார்களென்றும் உங்களுக்குத் தெரிகிறது. உங்களுக்கோ இந்த கடன் கட்டிலிருந்து தப்ப வழியில்லை யென்று நீங்கள் எண்ணி, வேறே விதியில்லை யென்று கருதி முணு முணுக்காமல் அதற்கு உள்ளாகிறீர்கள். இந்த சந்தர்ப்பங்களிலே, நீங்கள் அஜாக்கிரதையாகவும் அசிரத்தையாகவும் இருப்பது சகஜமே. ஆனால் உங்களைச் சுற்றிலும் நடப்பதைப் பார்ப்பீர்களானால், நீங்களிருக்கும் நிலைமையைப் போன்ற நிலைமையிலே இருந்தவர்களில் சிலர் தங்களுடைய தடுமாற்றமான ஸ்திதியிலிருந்து தங்களை எப்படி விடுவித்துக் கொண்டிருக்கிறார்களென்பது தெரியவரும். அவர்களில் சிலர் தங்கள் கடன்களை முழுவதும் தீர்த்து விட்டார்கள்; மற்றவர்களோ தங்கள் கடன் சுமையை விசேஷமாய்க் குறைத்து விட்டார்கள். நீங்களும் அதே மாதிரியாக ஏன் செய்யக் கூடாது? வட்டி வியாபாரியை எந்நாளும் நாடும்படியான ஆவசியகம் உங்களுக்கு எது வரையில் இருந்து கொண்டிருக்கிறதோ அதுவரையில், நீங்கள் சுதந்தரமாயாவது சந்துஷ்டியோடாவது இருக்க முடியாது. கடன்களை எப்படித் தீர்க்கலா மென்பதைத் தவிர வேறெதைப்பற்றியும் சிந்திக்க உங்களால் முடியாமற்போகும். உங்கள் குழந்தைகளுக்குக் கீழ்த்தரப் படிப்புகூட சொல்லிவைக்க உங்களால் முடியாது. உங்கள் நிலங்களை நன்றாய்ப் பயிர் செய்ய முடியாமலிருப்பீர்கள்; அதனால், உங்கள் சம்பாத்தியம் முன்னிலும் அதிகமாகப் படிப்படியாய்க் குறைந்து கொண்டேவர நீங்கள் முன்னிலும் அதிகமாய் துர்த்தசையிலும் கடனிலும்

முழுகிப் போவீர்கள். உங்களுக்கு நீங்களே சகாயம் செய்து கொள்ள முயன்றாலொழிய, ராஜப்பிரதிநிதிமுதல் அவருக்குக் கீழுள்ள சகல சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் உங்களுக்கு சகாயம் செய்ய முன்வந்தால் கூட, நிஷ்பிரயோஜனமே யாகும். நீங்கள் மாத்திரம் இஷ்டப்பட்டால் உங்களுடைய நிலைமையைச் சீர்ப்படுத்திக்கொள்ளவும், நாளாவர்த்தியில் கடனைத் தீர்த்துக் கொள்ளவும் கூடியவர்களாகும்படி உங்களைச் செய்யக்கூடிய சாதனங்கள் சமீபத்திலேயே இருக்கின்றன. உங்களுடைய கடன்களைத் தீர்த்தபிறகு, கிணறுகளெடுப்பதனாலும், உங்கள் நிலங்களைச் சீர்திருத்துவதனாலும், முன்னிலும் நல்ல கால்நடைகளை வாங்குவதனாலும் இப்போது உங்களுக்குக் கிடைப்பதைவிட அதிகமும் சிறந்ததுமான மாசூலை உற்பத்தி செய்யக் கூடியவர்களாயிருப்பீர்கள். நீங்கள் செலுத்தவேண்டிய பணத்துக்காக உங்கள் மாசூலை ஆத்திரப்பட்டும் அகாலத்திலும் விற்கவேண்டி யிராது. உங்கள் பிரகிருத ஸ்திதியை உத்தேசித்து யாருக்குக் குறைந்த விலைக்கு விற்கும்படி பலவந்தமாய் நேரிடுகிறதோ அவர்களுக்கு உங்கள் மாசூலை முன்னதாய் விற்கும்படியான ஆவசியகம் உங்களுக்கு ஏற்படாது. இப்போதிருப்பதை விட சுகமாகவும் நன்றாகவும் வாழ்வதற்கான வழிவகைகளை நீங்கள் தேடிக்கொள்வதில் யாதொரு அப்பியந்தரமு மில்லை; அப்படி செய்வதற்கு இந்தத் தருணங்களை யெல்லாம் நீங்கள் உபயோகிக்க முயலா விட்டால், தோஷம் உங்களுடையதே யாகும். இது விஷயமாக கவர்ன்மெண்டார் உங்களுக்கு எவ்வளவோ அனுகூலம் செய்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் உங்களுக்காக ஏற்படுத்தக்கூடிய சிறந்த புத்தி சாமர்த்தியமுள்ள இந்தியர்கள் உங்களுக்கு போசனை சொல்வோர்களாயிருக்கிறார்கள்." கடன் பட்டிராமலும், கடன் வாங்கவேண்டிய அவசியமில்லாமலு மிருக்கும் விவசாயிகளுக்கு நான் சொல்வ தென்ன வென்றால்: "ஒரு சங்கத்தைச் சேர்வதனால் உங்களுக்கு மாத்திரமே யல்லாமல் பிறருக்கும் அளவற்ற நன்மையை நீங்கள் செய்யலாம். உங்கள் பணத்தை சங்கங்களில் போட்டுவைத்தால் பத்திரமாயிருக்கும். மற்ற இடங்களில் கிடைப்பதை விட சுலபமான வட்டிக்கு சங்கங்களிலிருந்து பணம் கடன் வாங்கி, அதைக்கொண்டு உங்கள் நிலங்களின் சாகுபடியைச் சீர்திருத்தலாம். வட்டி வியாபாரியினிடம் கடன் வாங்கும்போது நேரிடுவதுபோல, ஒரு சங்கத்திலிருந்து கடன் வாங்குவதனால் உங்களுடைய தன்மதிப்புக்கு குறைவு வராது. சங்கத்திலிருந்து கடன் வாங்கும் பட்சத்தில், உங்களுக்குள் சாமானிய விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடியதைவிட அதிகமான தொகைகள் உங்களுக்குக் கடனாகக் கிடைக்கக் கூடும். அப்படிக் கடன் வாங்கின தொகைகளை, வடிகால் கட்டுவதற்கும் கிணறுகளெடுப்பதற்கும், ஏரிக் கரைகள் கட்டுவதற்கும், நல்ல கால்நடைகளும் நல்ல கருவிகளும் வாங்குவதற்கும், புதிய பயிர் வைப்பதற்கும், நூதன விவசாய முறைகளைக் கைக்கொள்வதற்கும் நீங்கள் உபயோகிக்கலாம்; மேலும், பணத்தை விவேகத்துடன் செலவிடும் பட்சத்தில், நீங்கள் உங்கள் கடன்களைத் தீர்த்து விட்டு இன்னம் அதிக

செல்வமுள்ளவர்களாகக் கூடும். உங்களுக்குக் கடன் வாங்கவேண்டியதா யிராவிட்டால், உங்கள் பணம் உங்கள் அயலார்களின் நன்மைக்காக உபயோகி க்கப்படும். அது மிகவும் உபயோகரமான தர்மமாகும். தடுமாற்றமான ஸ்திதியிலுள்ளவர்கள் உங்களுக்கு நஷ்டமாவது தொந்தரவாவது இல்லாமலே உங்களுடைய டிபாஸிட்டுத் தொகைகளைக்கொண்டு தங்களையும் தங்கள் குடும்பங்களையும துக்கத்திலிருந்து விடுவித்துக்கொண்டு சுகமாயும் சந் துஷ்டியாயும் வாழக் கூடியவர்களாகிறார்கள். ஒரு சங்கத்தில் சேர்ந்து அதன் காரியம் சித்தியாவதற்கு உங்கள் சக்தியாலானதைச் செய்வதனால் நீங் கள் செய்யும் உபகார மிவ்வளவென்பது மாத்திரம் உங்கள் புத்தியில் படும் பட்சத்தில், அதைச் சேர்வதற்கு நீங்கள் ஒரு நிமிஷங்கூடத் தாமசம் செய்ய மாட்டீர்களென்று எனக்குத் தோன்றுகிறது".

ஐக்கிய நாணய சபைகள்.

(சென்னபட்டணத்தில் நடந்த 18-வது சென்னை மாகாணக் கான்ப ரன்ஸில் ராவ் பஹதூர் ம-ா-ா-ஸ்ரீ. வி. கே. ராமாநுஜாசாரியரவர்களின் அக்கிராஸநாதிபத்ய உபந்யாஸத்திலிருந்து எடுத்த அம்சம்.)

கடன் பட்டிருக்கும் விவசாயிகளின் கஷ்ட நிவர்த்திக்காக ஐக்கிய நாண யச் சங்கங்களைக் குறித்த ஆக்டானது 1904-ம் வருஷத்தில் ஜாரி செய்யப் பட்டது. அதன் பயனாக, இந்த ராஜதானியிலே 1910-ம் வருஷம் ஜூன் மாசக்கடைசியில் 3 ஸென்ட்ரல் சங்கங்களும், 28 நகரச் சங்கங்களும், 346 நாட்டுச் சங்கங்களும் இருந்தன. அன்றோடு முடிவான வருஷத்திலே 16,867 பேர்களுக்கு ரூ. 15,56,787 கடனாகக் கொடுக்கப் பட்டிருந்தது; இதில் 8,883 கடன் தொகைகள் 50 ரூபாய்க்குக் குறையாமலும் 100 ரூபாய் க்கு மேற்படாமலும் இருந்தன. 100 ரூபாய்க்கு மேற்பட்டும் 250 ரூபாய்க்கு அதிகப்படாமலும் கொடுத்த கடன்களின் சங்கியை 2,791; 781 கடன் களே 250 ரூபாய்க்கு மேற்பட்டு கொடுக்கப்பட்டவை. சங்கங்கள் செய்த நல்ல வேலை இவ்வளவென்று ஷை கணக்கினால் விளங்குகிறது. இவ்விதமான சில்லறைக் கடன்களுக்கு வட்டி வீதம் வெகு அதிகமாயிருக்கும்; ஆனால் சங்கங்கள் விதித்து வாங்கின சாதாரண வட்டி வீதம் வருஷ மொன்றுக்கு நூற்றுக்கு $9\frac{3}{8}$ ஆகவே இருந்தது. இந்த சங்கங்களின் காரியத்துக்குச் சம் பந்தப்பட்ட ஊர்களைக்குறித்து ரெஜிஸ்ட்ரார் சொல்வதாவது: "ஸர்க்கார் தீர்வை முன்னிலும் சுலபமாய்ச் செலுத்தப்படுகிறது; வியாஜ்ஜியம் செய்வது முன்னிலும் குறைந்திருக்கிறது; குடியானவர்கள் முன்னிலும் அதிக தென் பான மனத்துடன் உழைக்கிறார்கள்". இப்போது, ரெஜிஸ்ட்ராருடைய ரிபோ ர்ட்டின் 34-வது பக்கத்திலுள்ள கோஷ்வாராவைப் படித்துப்பார்த்ததால் இது விஷயமாய் அநந்தபூர், செங்கற்பட்டு, சேலம் ஜில்லாக்களிலேதான் முக் கியமாக அபிவிருத்தி யேற்பட்டிருக்கிறதென்று தெரியவரும்; 346 நாட்டுச்

சங்கங்களுக்குள் 235 சங்கங்கள் இந்த மூன்று ஜில்லாக்களில் இருக்கின்றன. தஞ்சாவூரில் பன்னிரண்டு நாட்டுச் சங்கங்களே இருக்கின்றன; கோதாவரி யில் அஞ்சும் கிருஷ்ணாவில் ஏழும் இருக்கின்றன. அபிவிருத்தியானது எங் கும் ஒரே மாதிரியாயிராமல் இப்படி வித்தியாசப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? ஷை ரிபோர்ட்டின் 4-வது பாராவைத் திருப்பிபார்த்தால், ரெஜி ஸ்டர் செய்வதற்காக ரிஜிஸ்ட்ராரிடம் செய்து கொள்ளப் பட்ட விண்ணப் பங்களிலே 600 விண்ணப்பங்கள் இன்னும் பைஸலாகாமலிருந்தனவென் றும், அவையனைத்தையும் கவனிக்க அவருக்கு அசாத்தியமாய்க் காணப் பட்டதென்றும், அவைகளுக்குள் எவற்றைப் பொறுக்கி யெடுக்கலா மென்ப தற்கு அவர் ஒரு வழி யோசித்துக் கொண்டிருந்தாரென்றும் தெரியவரும். இந்த ஆக்டினால் உண்டாகும் நன்மைகளை எத்தனை கிராமங்களுக்குச் சாத்திய மோ அத்தனைக் கிராமங்களுக்குப் பரவச்செய்வதற்காக, ஒவ்வொரு ஜில்லா விலும் இதன்பொருட்டுத் தாங்களாக இஷ்டப்பட்டு உழைக்கக்கூடிய கூட் டத்தார் வேண்டியிருக்கிறது. அவர்கள் பற்பல கிராமங்களுக்கும் சென்று இந்த ஆக்டின் கோட்பாடுகளை விவரித்துச் சொல்லி கிராமத்தார்களைக் கொண்டு சங்கங்கள் ஏற்படுத்துவிக்கவேண்டும். சங்கங்களின் சங்கியை அதிகமாய்விடும் பட்சத்தில், செங்கல்பட்டு ஜில்லாவில்செய்யப்பட்டதுபோல் அவைகளைச் சேர்த்து யூனியன்களாய் அமைக்கவேண்டும்; அப்படி அமைக் கும் பட்சத்தில், யூனியன் உத்தியோகஸ்தர்கள் ஷை யூனியனைச் சேர்ந்த சங்கங்களின் வேலையை மேற்பார்வையிட்டு அவைகளின் கணக்குகளைத் தணிக்கை செய்யலாம்.

கடிதங்கள்.

கூட்டுத் தொழில் முயற்சியை நடத்திவருவதில் அக்கறையுள்ளவர்கள் எழுதியனுப்பும் விஷயங்களைப் பிரசுரிப்பதற்காக இந்த இடத்தை விடுவதில், ரெஜிஸ்ட்ரார்ன் நோக்க மென்னவென்றால் கூட்டுத் தொழில் சங்கங்களின் காரியங்களில் உண்மையான அக்கறை காட்டி எழுதப்படும் எந்த கடிதத்தை யும் இந்த பாகத்தில் பிரசுரிக்க வேண்டுமென்பதேயாம். மதுரை வாசி யாகிய மிஸ்டர் கே. ராமஸ்வாமி ஐயர் பி. எ., பி. எல். அவர்களால் எழுதப் பட்டு இந்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற வியாசத்தைப்போல் கூட் டுத் தொழிலுக்குரிய விஷயங்களைப்பற்றி விஷயதானம் செய்வோர் எழுதும் வியாசங்களுக்கு இந்த பத்திரிகையில் எப்போதும் இடம் கிடைக்குமென்றும் ரெஜிஸ்ட்ரார் சொல்ல விரும்புகிறார். பிரசுரிக்கப்படாத கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பி விடும்படி அவைகளை அனுப்பியவர்கள் கோரும்பட்சத் தில், அவைகள் அப்படியே அவர்களுக்கு திருப்பிவிடப்படும்.

விமர்சனங்கள்.

இந்தியாவில் ஐக்கிய நாணயம்.

(இன்னோரிடத்தில் காணப்படும் டாக்டர் ஆல்ப் துரையின் வியாசத்தின்மேல் "ஐரிஷ் ஹோம்ஸ்டெட்" என்னும் பத்திரிகை வெளியிட்ட அபிப்பிராயக் குறிப்பு.)

விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழிலை அபிவிருத்தி செய்வதில் இந்தியா கவர்ன்மெண்டார் அனுசரிக்கும் ஏற்பாட்டை மிஸ்டர் ஹென்றி ஆல்ப் சிறிது விளக்கி எழுதுகிறார். அந்த கவர்ன்மெண்டைச் சேர்ந்த அதிகாரிகள் ஜனங்களுக்குத் தம்முடைய சக்தியிலேயே ஒருவித நம்பிக்கை ஏற்படுமாறு தங்களாலியன்றமட்டும் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவையும் செய்திருப்பதிலும், சபைகளின் வேலையை மேல்விசாரணைசெய்யும் பொறுப்பைச் சங்க யூனியன்களின்மேல் சுமத்திருப்பதிலும் நன்றாய் ஆலோசித்தே செய்திருக்கிறார்கள். விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழிலை அபிவிருத்திசெய்ய இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டதற்கு முன், அவர்கள் இது விஷயமாய் ஐரோப்பாவில் செய்யப்பட்டிருப்பதை யெல்லாம் ஆராய்ச்சிசெய்து அவ்விதமான ஐரோப்பிய அனுபவத்தைக்கொண்டு, தாங்கள் அனுசரிக்கவேண்டிய பத்ததியை அமைத்துக்கொண்டார்கள். இது விஷயமாய்க் கிடைக்கக்கூடிய கடைசியான கணக்குகளை மிஸ்டர் ஹென்றி ஆல்ப் எடுத்துக்காட்டியிருக்கிறார். அங்கே அனுசரிக்கப்பட்ட முறைகளால் எவ்வளவு காரியசித்தி உண்டாயிருக்கிறதென்பது அந்தக் கணக்குகளினால் தெரியவரும். 1908-09-ம்ஹூத்தில் ரெய்பெய்ஸன் முறையை அனுசரித்த ஐக்கிய நாணயச் சங்கங்கள் 2,008 இருந்தன; அவைகளில் 1,84,889 மெம்பர்கள் இருந்தார்கள்; 1909-10-ம்ஹூத்தைப் பற்றிய கணக்குகள்தான் இப்போது கடைசியாய்க் கிடைக்கக் கூடியவையா யிருக்கின்றன; அவைகளின்படி இந்த முயற்சி இன்னும் அதிக அபிவிருத்தி அடைந்திருப்பதாகத் தெரிகிறது. இப்போதுள்ள சங்கங்களின் சங்கியை 3,448; மெம்பர்களின் சங்கியை 2,30,543; டிபாஸிட்டுத்தொகைகள் அநேகமாய் இரட்டத்தனையாயிருக்கின்றன. இந்த ஏற்பாட்டில் நம்பிக்கை அதிகப்பட்டு வருகிறதென்பதற்கு இதுவே ஒரு அறிகுறியாகும். சங்கங்களை விருத்திக்குக் கொண்டு வருவதில் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் ஊக்கத்துடன் உழைப்பதுமல்லாமல், துரைத்தனத்தாரின் உதவி இனி வேண்டியிராமல் இந்த முயற்சி தன் சக்தியைக்கொண்டு தனக்குத்தானே ஓங்கி வளரக்கூடிய நிலை

மைக்கு அவைகளைக் கொண்டுவருவதற்காகத் தங்களால் கூடியதையெல்லாம் செய்துவருகிறார்கள். இது ஹோம் கவர்ன்மெண்டார் பின்பற்றத்தக்க ஏற்பாடாகும். இந்தியாவிலே அபிவிருத்தியில் மிக்க பின்தங்கியிருக்கும் ஜன சமூகத்தார்களை தன்முயற்சியுள்ளவர்களாயும், வெளியார்கள் தலையிடாமலே தங்கள் வேலையைத் தாங்களே நடத்தக்கூடியவர்களாகவும் செய்யவேண்டுமென்னும் முக்கிய கருத்துடன் அவர்களுக்குள் ஒழுங்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது; இந்த ப்ரிடிஷ் தீவுகளிலோ குடியானவர்கள் எத்தனையோ மடங்கு அதிகமாய் அபிவிருத்தி யடைந்தவர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய தன்முயற்சியினாலும் தமக்குத்தாமாகவே முன்வந்து உழைப்பதனாலும் கூட்டுத்தொழில் ஏற்பாடு முதன்முதல் ஆரம்பமாகித் தலையெடுத்திருக்கிறது. அப்படி யிருந்தும், இந்தத் தீவுகளின் துரைத்தனத்தார் இங்குள்ளவர்களை சுவாதீனம் பெறும்படி உற்சாகப்படுத்துவதைவிட்டு, இப்போது அவர்கள் வேலையில் அனாவசியமாய்த் தலையிட்டு அதை மேற்பார்வையிடவும் அதன் மேல்'விசாரணை'யை வகிக்கவும் விரும்புவதாகத் தோற்றுகிறது.

ஜப்பான் தேசத்தில் கூட்டுத்தொழில் சங்கங்கள்.

'தி அக்ரிகல்சுரல் ஜர்னல் ஆவ் இந்தியா' என்னும் இந்துதேசத்து விவசாயப் பத்திரிகையின் ஏப்ரல் மாதத்து சஞ்சிகையில் மேற்கண்ட தலைப்பின் கீழ்ப் புத்தி புகட்டத்தக்க வியாசமொன்று எழுதப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எடுக்கப்பட்ட அடியிற்கண்ட பாராக்கள் படிப்பதற்கு ஸ்வாரஸ்யமாயிருக்கும்:—

ஐக்கிய நாணய முயற்சியானது ஜப்பானிலே 1900-ம்ஹூத்தில் ஆரம்பமாகி இப்போதைக்கு விசேஷ காரியசித்தியடைந்திருக்கிறது. "நடுத்தர வகுப்பாரைவிடத் தாழ்ந்த நிலைமையிலிருப்பவர்களுக்குக் குறைந்த வட்டிக்கு மூலதனம் கொடுப்பதும், பரஸ்பர லாபங்களை அதிகப்படுத்துவதும், பொருளாதார விஷயமாயும் பொருளுற்பத்தி விஷயமாயும் அபிவிருத்தியுண்டாக்குவதுமே" நாணயச் சங்கங்களின் நோக்கமாகும். அச்சங்கங்கள் நால்வகையானவை:—

(a) நாணயச் சங்கங்கள்—மூலதனத்தைச் விருத்திசெய்வதற்காகவும் பணம் மிகுத்துவதை சுலபப்படுத்துவதற்காகவும்.

(b) விற்பனைச் சங்கங்கள்—சரக்குகள் பூர்த்தியாய் செய்து முடிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி, இல்லாவிட்டாலுஞ்சரி அவைகளை விற்பனை செய்வதற்காக.

(c) விலைக்குவாங்கும் சங்கங்கள்—சங்கத்தின் மெம்பர்களுக்காக பொருளுற்பத்தித் தொழிலுக்கவசியமான சரக்குகளை விலைக்கு வாங்குவதற்காக.

(d) பொருளுற்பத்திச் சங்கங்கள்—மெம்பர்களால் சிறிதுமட்டில் செய்யப்பட்ட சரக்குகளைப் பூர்த்திசெய்வதற்காக, அல்லது மெம்பர்கள் செய்யும் கைத்தொழிலுக் கவசியமான சரக்குகளை அவர்களுக்குக் கொடுத்துதவுவதற்காக.

இந்த சங்கங்களைச் சேர்ந்த மெம்பர்களுக்கு வருமான வரி கிடையாது; அவர்கள் ஜாமீன் பத்திரங்களைக் கட்டி வைக்காமலே லோகல் பாங்கிகளிலிருந்து பணம் வாங்கலாம். இந்தச் சங்கங்களின் சங்கியை இப்போது 5,500; இவைகளின் வசத்தில் இருக்கும் மூலதனம் 4,00,00,000 யென் அல்லது 600 லக்ஷம் ரூபாய். இந்தச் சங்கங்கள் பின்னும் சமுதாயங்களாகச் சேர்ந்திருக்கின்றன; ஆகவே நாணயச் சங்கங்கள் சேர்ந்த சமுதாய சபை ஒன்றும், விற்பனைச் சங்கங்களும், விலைக்குவாங்கும் சங்கங்களும், பொருளுற்பத்தி சங்கங்களுமாக ஒவ்வொன்றுக்கும் ஒரு சமுதாயசபையும் இருக்கின்றன.

ஜப்பானிய துரைத்தனத்தார் செய்திருக்கிற வேலையைப்பற்றி இன்னும் விஸ்தரித்துச் சொல்வதற்கு இந்த வியாசத்தில் இடம் போதாது. கூட்டுத்தொழில், நாணயம் என்னும் இவ்விரண்டு கோட்பாடுகளையும் அனுசரித்து வேலைநடத்தினதனாலேயே இந்த முயற்சியில் காரியசித்தியுண்டானதென்பதற்குச் சந்தேகமில்லை. விவசாயாபிவிருத்திக்குச் சாஸ்திரீய ஆராய்ச்சியும் கல்வியுமே சர்வபிரதானமான சாதனங்களாயினும், அவைகளுடன் கூட்டுமுயற்சியும் நாணயமும் கூடக் கலந்திருப்பது அவசியமென்று ஜப்பான் தேசத்தின் அனுபவத்தினால் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. "விவசாயம் செய்பவர்களைப் பிடிப்பதெப்படி" என்பதே ஜப்பானிலிருப்பதுபோல் இந்தியாவிலும் ஏற்பட்டிருக்கும் பெருத்த சிக்கான விஷயமாய் இருக்கிறது. அதை சாதிப்பதற்குக் கூட்டுமுயற்சியுடன் நாணயத்தையும் கலந்து வேலை செய்வதுதான் ஒரே வழி யென்று தீர்மானமாக நிரூபணமாயிருக்கிறது. இதற்கு ஆராய்ச்சியும் விவசாயக் கல்வியும் பலத்த துணைச்சாதனங்களாய் அமைகின்றன. ஜப்பான் தேசத்திலே அனுசரிக்கப்பட்டு விசேஷ காரியசித்தி யளித்துவரும் ஏற்பாடே இத்தேசத்திலும் அனுசரிக்கப்பட்டு வருவதானது இந்தியாவிலும் இக்காரியம் கைகூடுமென்பதற்குச் சுப சூசகமாயிருக்கிறது. இத்தேசத்திலும் அதற்குச் சமமான காரியசித்தி யுண்டாகுமா என்பது இனி தெரிய வேண்டிய விஷயம். சகலவிதமான துரைத்தனதிட்டங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் எல்லாவற்றிலும் பலிஷ்டமான ஆதாரமா யமைந்திருக்க வேண்டியது ஜாதீய நன்னடக்கையே.

குறிப்புகள்.

கூட்டுத்தொழில் செய்வோர்களின் ராஜவிசுவாசமும் தேசபக்தியும்.

(கோ-ஆபரேடிவ் நியூஸ் என்னும் பத்திரிகையிலிருந்து.)

வெஸ்ட்மின்ஸ்டர் ஆபியில் மகுடாபிஷேக சம்பந்தமாய் நடந்த தேவாராதனத்துக்கு மிஸ்டர் டபிலியூ. இ. டட்ல்யும், மிஸ்டர் எ. ஒயிட்ஹெட்டும் கூட்டுத்தொழில் செய்வோரின் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். பிராதான்யத்திலும் வைபவத்திலும் நிகரற்ற ஒரு ஜாதீயக் கூட்டத்துக்குக் கூட்டுத்தொழில் செய்வோர்களின் பிரதிநிதிகளை வரவழைப்பது தகுமென்று உயர்ந்த உத்தியோக பதவியில் இருப்பவர்களுக்குத் தோற்றியது இந்த முயற்சியின் சரித்திரத்தில் இதுதான் முதல் தடவை. இந்த கௌரவமானது ஆலசியமாய் வந்தபோதிலும், கூட்டுத்தொழில் செய்வோர்களாகவும் நகரப் பிரஜைகளாகப் பிரவர்த்திக்கும் சந்தர்ப்பத்திலும் தேச சம்பந்தமாய்த் தங்களுக்கேற்பட்டிருக்கிற கடமையையும் பொறுப்பையும் தாங்கினவர்களாய் ஜன சமூகத்தில் அதிகப்பட்டு வரும் இந்தப் பெருத்த வகுப்பாருக்கு இதனால் திருப்தி யுண்டாகும். இந்த கௌரவத்தை நாம் நன்குமதிப்பதற்குக் காரணம், இது கிடைக்காவிட்டால் நமக்குக் காரியம் நடவாதென்பதல்ல; ஆனால் கூட்டுத்தொழிலானது இப்போது நம்முடைய ஜாதீய சக்திகளில் ஒன்றென்பதையும், ஆகவே தேசஜனங்கள் கவனித்துப் பெருமைப்படுத்த வேண்டியதற்குரிய ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இம்முயற்சியின் பிரதிநிதிகள் அழைக்கப்படுவதற்கு அர்ஹர்களென்பதையும் இந்த கௌரவம் காட்டுகிறதென்பதே யாம்.

கூட்டுத்தொழில் செய்வோர் அனுப்பிய மங்கல வாழ்த்துகளை ஐந்தாவது ஜார்ஜ் மஹாராஜா அங்கீகரிப்பது.

சென்றவாரம் மாஞ்செஸ்டரில் மகுடாபிஷேகத்தைக் கொண்டாடுவதற்குக் கூடிய கூட்டத்தில் அக்ராஸனம் வஹித்த (பெலான் தெருவில் பூட் டிபார்ட்மெண்டுக்குத் தலைவராகிய) மிஸ்டர் ஹென்றி ஜாக்ஸனுக்கு பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து அடியிற்கண்ட தந்தி வந்தது:—

"பக்கிங்ஹாம் அரண்மனை."

மாஞ்செஸ்டர், பெலூன் தெருவில்
கூட்டுத்தொழில் மொத்த வியாபார சங்கம்,
மிஸ்டர் ஹென்றி ஜாக்ஸன் அவர்களுக்கு.

"கூட்டுத்தொழில் செய்வோர் சபைகூடித் தாங்கள் அனுப்பிய தந்தியின் மூலமாய்த் தெரிவித்த ராஜவிசுவாசச் செய்திக்காகவும் மங்கல வாழ்த்துகளுக்காகவும் அவர்களுக்கு நன்றி கூறும்படி மஹாராஜா என்னை ஆஞ்ஞாபித்திருக்கிறார்.

Bigge."

மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மஹாராஜாவுக்கும் மேரி மஹாராணிக்கும் அவர்களுடைய மகுடாபிஷேகம் ஜயம்பெற நிறைவேறின சமயத்தை முன்னிட்டு, போல்டன் சங்கத்து மெம்பர்களின் சார்பில், மங்கலவாழ்த்து கூறி ராஜவிசுவாசத்தை அறிவிக்கும் வர்த்தமானம் அனுப்பும்படி ஷை சங்கத்தின் நிர்வாஹக் கம்மிட்டியார் தங்கள் காரியதரிசிக்குக் கட்டளையிட்டார்கள். அதற்கு அடியிற்கண்ட பதில் கிடைத்தது.

"பக்கிங்ஹாம் அரண்மனை.

"தங்களுடைய தந்திக்காகவும் குசல பிரச்னத்துக்காகவும் தங்களுக்கு நன்றி கூறும்படி ராஜதம்பதிகள் எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

(கையொப்பம்) Bigge."

நாடார் பாங்கிகள்.

(மதராஸ் மெயில் பத்திரிகையிலிருந்து.)

ஆனரபில் ஜஸ்டிஸ் ஸி. சங்கரன் நாயர் ஸி. ஐ. இ. அவர்கள் நாடார் மஹாஜன சங்கத்தில் பிரசங்கம் செய்துகொண்டுபோகையிலே அடியிற்கண்டபடி பேசினார்:—

நான் சொல்ல விரும்பும் இன்னொரு யோசனை என்ன வென்றால், நாடார்களின் நன்மைக்காக கூட்டுத்தொழில் பாங்கிகளாவது இதர விதமான பாங்கிகளாவது ஏற்படுத்தக்கூடாதா என்பதே. கூட்டுத்தொழில் ஏற்பாடு நடந்தேறிவரும் விதம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடியால் அதைப்பற்றி நான் பேசவேண்டிய அவசியமில்லை. யோக்கியமாய் நடக்குமொருவனுக்கு ற்ற இடங்களில் கிடைப்பதைவிட சுலபமான வட்டிக்குப் பணம் கொடுக்கக் டிய பாங்கியாவது வேறே ஸ்தாபனமாவது இருக்கும பட்சத்தில், உங்கள் இனத்தாரில் ஏழைகள் விவசாயத்திலும் வர்த்தகத்திலும் விருத்தியடையக் கூடும். உங்களுக்குள்ளாகவே வியாபாரம் நடப்பதற்கு வேண்டிய திரவிய சம்பந்தமான சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய ஒரு பெரிய ஸ்தாபனம் இருந்தால், உங்கள் வியாபார விஷயமாய் உங்களுக்குச் சகாயம் செய்வதற்கும் அது சாதனமாயிருக்குமென்று நான் எண்ணுகிறேன்.

வெண்ணெய்த் தொழிற்சாலைகளை மேல்விசாரணை செய்யும் ஏற்பாடு.

(ஐரிஷ் ஹோம்ஸ்டெட் என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்தெழுதப்பட்ட அம்சம்.)

ஐர்லாந்திலே இப்போது கூட்டுத்தொழில் முறையை அனுசரித்து ஏற்படுத்தப்பட்டிருக்கும் வெண்ணெய்த் தொழிற் சாலைகளின் சங்கியை 390; அவைகளிலே 20,00,000 பவுன் மதிப்புள்ள வெண்ணெய் வருஷந்தோறும் தயார் செய்யப்படுகிறது. ஆகவே ஐர்லாந்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் வெண்ணெயில் கிட்டத்தட்ட பாதிபங்கு கூட்டுத்தொழில் முயற்சியின் மேல்விசாரணையின் கீழ் தயார் செய்யப்பட்டுவருகிறதென்று ஏற்படும். நமது வெண்ணெய் ஏற்றுமதியில் கூட்டுத் தொழில் மூலமாய்ச் செய்யப்படும் பாதி பங்கு, வெவ்வேறு முகாந்தரங்களால் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்படும் மற்ற பாதியைவிட குணத்தில் சிறந்திராவிட்டாலும் அதற்குச் சமமாகவாவதிருக்கிறதென்று சந்தேக மில்லாமல் சொல்லுவோம். கூட்டுத்தொழில் முறையை அனுசரித்து முதன் முதல் வெண்ணெய்த் தொழிற்சாலை ஏற்பட்டது தொடங்கி இந்த முயற்சியை நடத்தி வருகிறவர்கள், உலகமெங்கும் பரவி யதிகரித்து வரும் போட்டியின் மத்தியில் இந்த ஐர்லாந்து தேசத்து வெண்ணெய்க் கைத்தொழில் தலையெடுக்க வேண்டுமானால் அவர்கள் உற்பத்தி செய்யும் வெண்ணெயின் குணம் என்ன விதமாக உயர்ந்திருக்கவேண்டுமோ அந்த விதமாக அதைச் செய்யக் கூடுமென்றும் செய்ய வேண்டுவதவசிய மென்றும் உணர்ந்து அப்படி செய்வதற்கு ஏதேனும் ஓர் உபாயம் கண்டு பிடிக்க முயன்று வருகிறார்கள். பண்ணைகளில் புராதன முறைகளை யொட்டி வேலை நடந்து வருகிற வரையில், வெண்ணெய்க் கைத்தொழிலில் காரியசித்தி சம்பூர்ணமாய் உண்டாகுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆகையால் ஒவ்வொரு வெண்ணெய்த் தொழிற்சாலையிலும் செய்யப்படும் சரக்கை உத்தம குணமுள்ளதாய் ஆக்கி, சாஸ்திர அறிவையும் நவீன யந்திரங்களையும் பிரயோகித்து அந்த உத்தம குணத்தை சாத்தியமான உயர்ந்த ஸ்திதியில் வைத்துவரக்கூடிய ஓர் ஏற்பாடு அவசியமென்று ஸ்பஷ்டமாய்ப் புலப்பட்டது. இந்தப் பலன் கைகூடுவதற்கு இரண்டு வழிகள் இருப்பதாகத் தோற்றியது. அவற்றுள் ஒரு வழியாவது-ஐர்லாந்து தேசத்திலுள்ள எல்லா வெண்ணெய்த் தொழிற் சாலைகளையும் ஒரு மத்திய ஸ்தலத்திலுள்ள சங்கத்தின் அதிகாரத்துக்குட்படுத்துவதாகும்; இந்த சங்கமானது அவைகளின் வேலையைஒழுங்குபடுத்துவதற்காக விதிகளேற்படுத்தி, அந்தவேலை நடந்தேறி வருவதை மேற்பார்வையிட்டு, அந்தத்தொழிலை நிர்வாகஞ் செய்யும் வேலையை அநேகமாய்த் தானே ஏற்றுக் கொள்ளும். மற்றொரு வழியாவது - குடியானவர்களே தங்கள் வெண்ணெய்த் தொழிற்சாலையில் வேலை நடத்துவற்கான சிறந்த பத்ததி யொன்றை ஆலோசித்து அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதாகும்; இந்த பத்ததியைக்கொண்டு செய்யவேண்டிய பல காரியங்களில் உத்தமான பால் கிடைக்கும்படி செய்வதும் ஒன்றாகும்.

முப்பது கூட்டு முயற்சி வெண்ணெய்த் தொழிற்சாலைகள் இப்போது ஒரு பத்ததியை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதில் உழைத்து வருகின்றன; அதனால் ஐர்லாந்திலே வெண்ணெய் செய்யும் தொழிலில் ஒரு புரட்சி உண்டாகலாம். இந்த சங்கங்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து "ஐர்லாந்து தேசத்துக் கூட்டு முயற்சி வெண்ணெய்த் தொழில் மேல்விசாரணைச் சங்கம்" என்னும் பெயர் கொண்ட கூட்டமாய் அமைந்திருக்கின்றன.

வெண்ணெய்த் தொழிற்சாலைக்குச் செல்லும் ஒவ்வொரு வழியையும் கண்ணுக்குத் தெரியாத அங்குரக் கிருமிகள் பதுங்கியிருந்து அபாயம் செய்யக்கூடாத விதமாய் காப்பாற்றும்படி மேற்படி மேல்விசாரணைப் பத்ததி ஏற்பட்டிருக்கிறது. வெண்ணெய்த் தொழிற்சாலையில் எல்லாவற்றையும் சர்வ ஜாக்கிரதையாய்ச் சுத்தமாக வைத்திருப்பதே முதன்மையாய்க் கவனிக்கப்படும்விஷயம்; பிறகு பாலேட்டை ஒரு நிதானத்தின்படி புளிக்க வொட்டாமல் வைப்பது; பிறகு லாக்டிக் ஆஸிட் அங்குரக்கிருமிகளைச் சுத்தமாய் வளர்த்து அதிலிருந்து தயாராகும் 'ஸ்டார்டரை' உபயோகிப்பது; பிறகு சரியான சீதோஷ்ண ஸ்திதியில் கடைவது; கடைசியாக, கழுவுங் காரியங்களுக்கு சுத்த ஜலத்தை உபயோகிப்பது. இவ்விதமாய்ச் செய்யப்படும் வெண்ணெய் சுத்தமாயிருக்கும். அது நீடித்திருப்பதனால் நல்ல விலைக்குப்போய் சித்தமாய் விற்பனையாகும். இந்த முன்னெச்சரிக்கைகளைக் கைக்கொள்ளாவிட்டால், செய்யப்படும் சரக்கு ஒரே விதமாயில்லாமலும் ருசி, அமைப்பு, நீடித்திருக்கும் தன்மை, இவைகள் விஷயமாய் நம்பத்தகாததாயும் முடியும்.

இந்த ஏற்பாட்டில் கலந்து வேலை செய்யும் வெண்ணெய்த் தொழிற்சாலைகள் அடிக்கடி பார்வையிடப்படுகின்றன; அந்தத் தொழிற்சாலைகளில் நடக்கும் வேலையின் பலிதங்களைக் காட்டும் மாதவாரிக் கணக்குகள் அந்தச் சாலைகளிலிருந்தே அனுப்பப்படுகின்றன. இந்தக் கணக்குகளுக்கு ஐரிஷ் அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் ஐர்லாந்து தேசத்து விவசாய சங்கத்தார் சங்கிரகங்கள் தயார் செய்து ஒவ்வொரு வெண்ணெய்த் தொழிற்சாலைக்கும் அனுப்புகிறார்கள்; அந்தந்த தொழிற்சாலைகளில் நடக்கும் வேலையின் பலிதங்களை இந்தக் கணக்கில் காட்டியிருக்கிற பலிதங்களுடன் ஒத்திட்டுப் பார்த்துக்கொள்வதற்காகவே இந்த சங்கிரகங்கள் இப்படி அனுப்பப்படுகின்றன. சுத்தமான லாக்டிக் ஆஸிட்டில் வளர்க்கப்பட்ட அங்குரக் கிருமிகளும் இடையிடையே கிரமமாய் சர்பரா செய்யப்படுவதோடு, அங்குரக்கிருமி சாஸ்திரீதியாய்ப் பரீட்சித்து ரிபோர்ட் செய்வதற்காக வெண்ணெயின் மாதிரிகளும் பிரதிமாதத்திலும் இரண்டுதடவை டப்ளின் பட்டணத்துக்கு அனுப்பப்படுகின்றன. கழுவுவதற்காக உபயோகிக்கும் தண்ணீரின் மாதிரிகளும் பரிசோதனைக்காக அனுப்பப்படுகின்றன. இந்தப்படி இதற்குமுன் எப்போதும் நடந்ததில்லை; மானேஜர்களும் கம்மிடியார்களும் தாங்கள் உற்பத்திசெய்யும் சரக்குகளிலுள்ள குறைவுகளுக்குக் காரணம் இன்னதென்று தெரியாமல் இதுவரையில் குருட்டுத்தனமாய் தடவவேண்டியதா யிருந்

தது; இப்பொழுதோ அப்படிப்பட்ட காரணங்கள் இன்னவையென்று திட்டமாய் நிஷ்கர்ஷைசெய்யப்பட்டு காலதாமச மில்லாமல் நிவர்த்திக்கப்படுகின்றன. இப்படி குறைவுகளைக் கண்டுபிடிக்கும் வேலை வெண்ணெய்த்தொழிற்சாலைக்கு வெளியே முழுவதும் செய்யப்படுவதில்லை. ஒவ்வொரு தடவையும் கடைந்தெடுத்த வெண்ணெய்க்கு ஒரு மாதிரியை மானேஜர் தம்மிடம் நிறுத்திக்கொண்டு பரீட்சையில் வைக்கிறார்; மேலும் இது விஷயமாய்ச் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் ஜாக்கிரதையாயும் நுட்பமாயும் சோதிக்கப்படுகிறது. மேல்விசாரணை சங்கத்தாருடைய ஒழுங்குகளின்படி செய்யும் வெண்ணெய்க்கு ஒரு சீட்டு ஒட்டப்படுகிறது. அந்தச் சீட்டிலே மேல்விசாரணைச் சங்கத்தாரின் வர்த்தகக் குறியும் இந்தத் தொழிற்சாலையில் செய்யப்பட்டதென்றும் இன்னபடிதான் கடையப்பட்டதென்றும் அடையாளங் கண்டுபிடிக்கக் கூடியவிதமாய் ஒரு பொருளடையாளக் குறியும் இலக்கமும் போட்டிருக்கும். இந்த ஏற்பாட்டில் கலந்து வேலைசெய்யும் வெண்ணெய்த் தொழிற்சாலைகள் இந்தச் சீட்டுகளை உபயோகிக்கும் சுதந்தரத்துக்காக ஒரு ஹண்ட்ரட்வெயிட் எடைக்கு இரண்டு பென்ஸ் விழுக்காடு கட்டணம் செலுத்துகின்றன; இந்த வேலை எவ்வளவு முக்கியமானதென்பதையும் இதனால் உடனே உண்டாகும் லாபத்தையும் யோசிக்கும் பக்ஷத்தில் இந்த வரி சொற்பமே என்பது நிச்சயம். சரக்கின் குணத்தில் எவ்வித குறைவாவது இருதப்பாக வெண்ணெய்த் தொழிற்சாலையில் காணப்பட்டாலுஞ்சரி, பரிசோனைப செய்யும்போது வெளிப்பட்டாலுஞ்சரி, உடனே இவ்விஷயங்கள் சீர்ப்படுத்தப்படுகிறவரையில் மேல்விசாரணைச் சங்கத்தாரின் சீட்டுகளை உபயோகிக்கக் கூடாதென்று சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்படுகிறது; ஏனென்றால், இந்த ஏற்பாட்டில் கலந்து வேலைசெய்யும் ஒவ்வொரு வெண்ணெய்த் தொழிற்சாலையாரும் ஐர்லாந்து தேசத்திய இந்த வர்த்தகக் குறியின் பிரக்கியாதியை ஸ்தாபிக்கவேண்டி, அந்தப் பிரக்கியாதியைக் காப்பாற்றிக்கொள்வது, அவர்கள் சேர்ந்துள்ள கூட்டு வியாபார சங்கத்துக்குச் செய்யவேண்டிய கடமையென்பதை நன்றாய் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் அப்படிக்கல்லாமல் வேறே விதமாய் நடப்பது மற்றப் பங்குக்காரர்களுக்கு துரோகம் செய்வதுமல்லாமல் தங்களுடைய நல்லபெயருக்கே பிரமாதமான ஹானிசெய்துகொண்டதாயுமாகும். விசாரணைச் சங்கத்திலிருக்கும் முப்பது தொழிற்சாலைகளும் கூட்டுமுயற்சி வெண்ணெய்த் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் மொத்த சரக்கில் கிட்டத்தட்ட நாலில் ஒரு பாகத்துக்கு ஜவாப்தாரியாயிருக்கின்றன. மிகவும் நன்றாய் நிர்வஹிக்கப்பட்டு உத்தமமான காரியசித்திபெற்றிருக்கும் தொழிற்சாலைகளில் சில இவைகளில் அடங்கியிருக்கின்றன; அவைகள் கூட இந்த விசாரணைச் சங்கத்தில் சேர்வதற்காகத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய முஸ்தீப்புகள் விஷயமாயும் திறமையாய்வேலை நடத்துவது விஷயமாயும் உயர்ந்த பரீட்சை திட்டங்களைத் தாமே ஏற்படுத்தி அவைகளில் தேறவேண்டியதாகவும் இந்தக் காரியங்களை விழிப்பாய்க்

கவனித்துவரும் மிஸ்டர் பான்ட் (Fant) என்பவர் சொல்லுகிறபடி திருப்திகரமாய் செய்யவேண்டியதாகவும் இருந்தது; அந்தத் தொழிற்சாலைகளின் மானேஜர்களில் ஒவ்வொருவரும் தேர்ந்த அனுபவசாலிகள்.

கூட்டுத்தொழில் முறையாய்ச் சரக்குகளை உற்பத்திசெய்வதும் பங்கிட்டுக் கொடுப்பதும்.

(கோ-ஆபரேடிவ் நியூஸிலிருந்து எடுத்தது.)

கூட்டுத்தொழில் முறையாக சரக்குகளை மொத்தமாய் வாங்கி மெம்பர்களுக்குச் சில்லறையாய் விற்பது சம்பந்தப்பட்டவரையில் அதற்குத் திரவிய சம்பந்தமாய் பலத்த ஆதாரமாயிருப்பது போட்டியின்மேல் சரக்குகளை வாங்கி விற்பனை செய்வதில் பிடிக்கும் அநாவசியமான வீண் செலவே யென்று நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளை வேண்டியவர்களுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்காக எவ்வளவோ பணம் இப்போது செலவாகிறது. இந்தப் பணத்தைக் கூட்டுத்தொழில் செய்வோர்கள் தாங்களே அடைகிறார்கள்; அதுவரையில் நல்லது தான். ஆனால் இந்த முகாந்திரத்தினால் வரும் லாபத்தை ஒரு பெரிதாய் நீங்கள் எண்ணக்கூடாது; மேலும் ஈவுத்தொகையால் உண்டாகும் முக்கிய பிரயோஜனம் என்னவென்றால் நமது வரும்படிகள் வேறே விதமாய்க் கிடைப்பதைவிட கொஞ்சம் அதிகமாய்க் கிடைக்கும் என்பதே. இதை நாம் ஞாபகத்தில் வைப்பது நலம். யார்க்ஷைர் கிழவன் சொன்னதுபோல, தின்பதாலும் குடிப்பதாலும் நாம் பணக்காரராகலாமென்றாலும், நாம் தின்பதற்கும் குடிப்பதற்கும் செலவிட வேண்டிய பணத்தை வீட்டில் சேர்த்து வைத்திருக்கும் சொத்திலிருந்தெடுக்காமல் வேறே இடங்களில் போய்ச் சம்பாதிக்கவேண்டும். இந்தப் பணத்தைக் கூட்டு முயற்சியினால் சம்பாதிக்க வேண்டியதாயிருந்தால், நாம் பங்கிட்டுக் கொடுப்பதற்கான கூட்டுமுயற்சியை விட்டு பொருளுற்பத்தி செய்வதற்கான கூட்டு முயற்சியைக் கைப்பற்றவேண்டும். அதாவது, பங்கிட்டுக் கொடுக்கும் வேலையால் செய்ய முடியாததை உற்பத்திசெய்யும் வேலையைக்கொண்டு சாதிக்க முடியும்; ஆகையினால் தான் அது முக்கியமாயிருப்பது. இந்த விஷயத்தை நீங்கள் ஒருதரம் நன்றாய்க் கிரஹித்துக் கொண்டால், ஸ்டோர் வைப்பது ஒரு லக்ஷியத்தை யடைவதற்காக ஏற்பட்ட சாதனமே யென்று, அதாவது அதிலும் பெரிய காரியமாகிய உழைப்புக்காகவும் புதியதும் சீர்திருந்தினதுமான தொழிலேற்பாட்டை ஸ்தாபிப்பதற்காகவும் வேண்டிய மூலதனத்தை சம்பாதிப்பதற்கேற்பட்ட ஒரு சாதனமே யென்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். இம்முயற்சியை முதலில் ஆரம்பித்தவர்கள் தாங்கள் தீர்மானிக்கிற எவையேனும் சரக்குகளைத் தயார் செய்யத் தொடங்கக் கூடியதாயிருப்பதற்காகவும், வேலை வேண்டுமென்று கேட்கும் மெம்பர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய நிலைமையி லிருப்பதற்காகவுமே ஸ்டோர்களை காரியஸித்தி யுண்டாகும்

படி நடத்த விரும்பினார்களென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆகவே கைத்தொழில் செய்வோர்களின் லாபத்தை நாமே அடைகிறோம்; செய்யப்படும் சரக்குகளை எந்த ஷரத்துகளுக்குட்பட்டு உற்பத்திசெய்ய வேண்டுமென்று சொல்லும் அதிகாரம் நம்மவர்களின் கையிலேயே இருக்கிறது; நம்மிடத்தில் மிகுந்திருக்கும் மூலதனத்தை விநியோகிக்க நமக்கு ஒரு வழி கிடைக்கிறது; மேலும் அப்படி உற்பத்தி செய்யப்படும் சரக்குகளை வாங்குகிறவன் தனக்கு இன்ன சரக்குகள் தான் கொடுக்கப்படுகிறதென்று அறிந்து கொள்ளுகிறான். சரக்குகளை வாங்கிச் சில்லறையாக விற்பதில் நாம் அனுசரிக்கும் ஏற்பாட்டினால் வர்த்தக முறையையே நாம் மாற்றிவருகிறோம், மாற்றி விட்டோமென்றும் சொல்லலாம்; இப்போது அதைவிட பெரிய காரியமான தொழில் முறையையும் மாற்றப்போகிறோம். போட்டியேற்பாட்டின்படி வேலை செய்ய இஷ்டமில்லாதவர்களுக்கு நம்முடைய தொழிற்சாலைகளிலேயே வேலை கொடுக்கும்படியான நிலைமையில் நாம் இருக்கவேண்டும்; இனி நம்மைச்சேர்ந்த மெம்பர்களின் தேவைகளுக்கு அவசியமானவைகளை யெல்லாம் அவர்களின் உபயோகத்துக்காக இந்த முயற்சியைக் கொண்டே உற்பத்தி செய்து கொடுக்கும்படியான நிலைமை ஒரு தரம் ஏற்பட்டுவிடும்பட்சத்தில், வெளியிலுள்ள கடைகளிலே வர்த்தகர்கள் சொன்ன விலைக்கே சரக்குகளை வாங்கும் நிர்ப்பந்தமில்லாமல் நமக்கு அனாவசியமான இன்னும் அநேக வஸ்துக்களும் நமக்கு இனி வேண்டியதில்லை யென்று நிம்மதியாயிருக்கலாம்.

ஸென்ட்ரல் கோ-ஆபரேடிவ் பாங்கிகள்.

பாங்கிகளுக்கு ஓர் ஒத்தாசை.

(ஐரிஷ் அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைட்டியின் 1909-10-ம் வருஷத்திய ரிபோர்ட்டிலிருந்து.)

ஸென்ட்ரல் கோ-ஆபரேடிவ் பாங்கி ஒன்றை ஸ்தாபிப்பது சில பாங்கர்களுக்குத் தங்கள் வியாபாரத்தின்மேல் த்வஜமெடுத்ததாகத் தோன்றக்கூடும். பிரகிருதத்தில் ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் பாங்கி அப்படிப்பட்டதாயிருக்க வேண்டுமென்பது சொஞ்சங்கூட என்னுடைய உத்தேசமல்ல. அப்படிப்பட்ட பாங்கி ஸ்தாபிக்கப்பட்டால் ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகள் அங்கங்குள்ள சங்கங்களின் உபயோகார்த்தமாய் இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் பத்திரமாகவும் திருப்திகரமாகவும் பணம் கடன் கொடுக்கக் கூடியவைகளாயிருக்கு மென்றும், நபர் ஜாமீன்தாரர்களின் மேல் வழக்குத்தொடர வேண்டிய ஆட்சேபத்துக்கிடமான ஆசாரம் நின்று போகுமென்றும் நிரூபிக்கக் கோருகிறேன். கோ-ஆபரேடிவ் ஸென்ட்ரல் பாங்கிகளே மூலதனத்துக்கு உற்பத்தி ஸ்தானமென்று நான் சொல்ல வரவில்லை; ஆனால் அவைகள் செய்யும் வேலை யென்னவென்றால், மூலதனத்தை அதன் உற்பத்தி

ஸ்தானத்திலிருந்து நாட்டின் எந்த பாகத்தில் அது அதிகமாகத் தேவையா யிருக்கிறதோ அந்த பாகத்துக்கு பத்திரமாக பரவச் செய்வதே யாகும்.

ஒரு ஏற்பாடு.

ஸென்ட்ரல் பாங்கியை இண்டஸ்ட்ரியல் அண்ட் ப்ராவிடென்ட் சங்கங்களைக் குறித்த ஆக்டின்படியாவது கம்பெனிகளைக் குறித்த ஆக்டுகளின்படியாவது சட்டரீதியாயமைந்த கூட்டமாகச் செய்துகொள்ளவேண்டும். டிபாவிட் செய்கிறவர்களுக்கு நியாயமான ஒரு ஜாமீன் தொகையை ஏற்படுத்துவதற்குப் போதுமான பங்கு மூலதனம் அந்த பாங்கிக்குக் கையொப்பம் செய்யப்பட்டிருக்க வேண்டும். அதில் போதுமான பாகம் நடைமுதல் லேவாதேவிக்கு வேண்டிய ரொக்கம் ஏற்படுத்தி வைப்பதற்காகச் செலுத்தப்பட்டிருக்கவேண்டும். இந்த பாங்கியில் சேரக்கோரும் ஒவ்வொரு சங்கமும் அதற்கு நாணயம் ஏற்படுவதற்காக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுக்குக் கிட்டத்தட்டச் சமமான ஒரு தொகைக்குப் பங்குகள் எடுத்துக்கொள்வதாக விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியதாயிருக்கும். பிரதமத்திலும், பாங்கி ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்படுகிறவரையிலும் ப்ரெஃபரென்ஸ் (preference) பாகஸ்தர்களாகவாவது ஜாமீன் தாரர்களாகவாவது சில தனி நபர்களின் சகாயத்தைச் சம்பாதித்துக்கொள்வது வெகுசாய் ஆவசியகமாயிருக்கும். ஐர்லாந்து தேசத்துக்கு வெளியே இந்த உபாயம் எப்போதும் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது; அப்படி கைக்கொண்டதனால், பாங்கியின் கூட்டு முயற்சித் தன்மைக்கு முடிவில் எவ்வித ஊனமும் உண்டாகவில்லை. காலம் செல்லச் செல்ல, சமுதாயமாய்ச் சேர்ந்துள்ள சங்கங்களிலிருந்து மூலதனமும் வந்து சேரச் சேர, தனி நபர்களிடத்திலிருந்து அப்படிப்பட்ட சகாயம் கோருவதை நிறுத்திவிடலாம்; ஆனால் ஐக்கிய நாணய விவகாரம் அபாயமற்றிருந்தபோதிலும், ஸென்ட்ரல் கோ-ஆபரேடிவ் பாங்கானது, அளவு கடந்த லாபத்தை நாடித் துணிந்துசெய்யும் வியாபாரத்தில் பிரவர்த்திக்காமலிருக்கிறபடியால், அதன் லாபசம்பாதன சக்தி மட்டுப்பட்டேயிருக்கும் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஆகவே, சேமநிதிகள் சேர்த்து வைக்கப்படுகிறபடியால் ஸென்ட்ரல் பாங்கியின் வசூலாகாதிருக்கும் மூலதனமும் பிரத்தியேகமான ஜாமீன்தாரர்களின் தொகையுந்தான் டிபாவிட்தார்களுக்கு ஜாமீன் தொகையாயிருக்கவேண்டுமென்று இதனால் ஏற்படுகிறது.

இப்போது ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் ஸென்ட்ரல் பாங்கியானது சமுதாயமாய்ச் சேர்ந்துள்ள சங்கங்கள் தெரிந்தெடுக்கும் கம்மிட்டியாரால் நிர்வகிக்கப்படும்; தனி நபர்கள் ஜாமீன்தாரர்களாக அந்த பாங்கியில் சேர்ந்திருக்கவேண்டிய ஆவசியகம் இருக்கிற வரையில் ஜாமீன்தாரர்களின் பிரதிநிதிகளும் ஷே கம்மிட்டியில் சேர்ந்திருக்கவேண்டும். இந்த பாங்கி அங்கங்குள்ள சங்கங்களுக்கு முன்பணம் கொடுப்பதையும் கடன்

களும் டிபாஸிட் தொகைகளும் பெற்றுக்கொள்வதையும் மேல்விசாரணை செய்வதே இந்தக் கம்மிட்டியின் அலுவலாகும்.

பல சங்கங்கள் ஒரு சமுதாய சபையாய்ச் சேர்வதால் உண்டாகும் பிரயோஜனங்கள்.

அப்படிப்பட்ட பாங்கியானது, சங்கங்களில் மிகுதியாய்ச் சேர்ந்திருக்கும் தொகைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அந்தத் தொகைகளை, எந்த சங்கங்களுக்கு உள்ளூரிலேயே கிடைக்கக் கூடியதை விட அதிகமான மூலதனத்தை லாபகரமாய் விநியோகிக்க முடியுமோ அந்தச் சங்கங்களுக்குத் திரும்பவும் கடன் கொடுப்பதற்காகவும் ஏற்பட்ட மத்தியஸ்தாபனமாயிருக்கும்.

2. இப்போது சில ஜனங்கள் தங்களுக்குப் பணம் இருக்கிறதென்று தங்கள் அங்கம்பக்கத்தாருக்குத் தெரிந்துவிடுவதைக் காட்டிலும் தாங்கள்மிகுத்தும் தொகையைப் புதைத்து வைப்பதே உத்தமமென்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்டவர்களையும் டிபாஸிட் கட்டும்படி செய்வதற்கு இந்த பாங்கி ஒரு தூண்டுதலாயிருக்கும்.

3. அங்கங்குள்ள சங்கங்கள் சேமநிதிகளை சேர்த்து வைப்பது மிகவும் விரும்பத்தக்கதாகையால் அந்த சேமநிதிகளை வட்டிக்குப் போட்டுவைக்க இந்த பாங்கி பந்தோபஸ்தான இடமாயிருக்கும்.

4. ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகளும், விவாசாய டிபார்ட்மெண்டும், கஞ்ஜெஸ்டெட் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளும் பணத்துக் கபாயமில்லாமல் அங்கங்குள்ள சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதற்கு இந்த பாங்கி ஒரு மத்தியஸ்தாபனமாயிருக்கும்.

5. கடைசியாக, இந்த ஸென்ட்ரல் பாங்கியானது, சமுதாயமாய்ச் சேர்ந்த நாணயச் சங்கங்கள் கடன் தொகைகளை உபயோகிப்பது சம்பந்தமாய் அவசியமான விதிகளை ஏற்படுத்தவும், அவைகளைப் பார்வையிடவும், திரவிய சம்பந்தமாகவும் பொதுவாகவும் அவைகளின் நிலைமையைப்பற்றி ரிபோர்ட் செய்யவும், இவ்விதமாக அவைகளின் மெம்பர்களுக்கும் அவைகளுக்குக் கடன் கொடுப்பவர்களுக்கும் மிகவும் வாஸ்தவமான பாதுகாப்பு அமைக்கவும் கூடிய நிலைமையிலிருக்கும். நாணயச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களுக்காக இந்த சங்கங்களே உத்தரவாதமேற்கவேண்டுமே யொழிய, அப்படிப்பட்ட பொறுப்பை யேற்றுக் கொள்ளக்கூடிய வேறே ஸ்தாபனம் பிரதிருதத்தில் எதுவுமில்லை.

ஹாலண்ட் தேசத்தில் துரைத்தனத்தாரும் பிரஜைகளும்.

(ஐரிஷ் ஹோம்ஸ்டெட் என்னும் பத்திரிகையிலிருந்து.)

ஜனங்கள் செய்யும் முயற்சிகளில் தலையிடாமல் அவர்கள் பாட்டில் அவர்களை விட்டுவிட வேண்டுமென்னும் கொள்கையை நிர்த்தாக்ஷிண்யமாய் போதித்து வந்த மிஸ்டர் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவர், கைத்தொழில் விஷயங்களில் பிரவர்த்திக்க துரைத்தனத்தாரைக் காட்டிலும் பிரஜைகளுக்கே அதிக அதிகாரம் உண்டென்று சித்தாந்தப் படுத்துவதற்காக இருபது முப்பது வருஷங்களுக்கு முன் ஒரு புஸ்தகம் எழுதினார். இப்பால் துரைத்தனத்தின் உபய கக்ஷியாரும் "சம்மதித்து" ஜாரி செய்திருக்கும் சட்டங்களில் மிகப் பெரும்பான்மையானவற்றைப் பார்த்தால் அவருக்கு எவ்வளவு கோரமாய் அவை தோற்றியிருக்குமோ அதை நாமே மனதில் ஊஹித்துக்கொள்ளலாம். வேறெங்கேயாவதிருந்தால் வெகு காலத்துக்கு முன்னமே கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போயிருக்கக்கூடிய ஹாலண்ட் என்னும் சிறிய தேசத்தை அற்புதமான ராஜ்யமாக நிர்மாணம் செய்திருக்கும் தைரிய சாகசமுள்ள ஜாதியில்தோன்றிய ஆண்மைகொண்ட புருஷர்கள் (ஸ்திரீகள் கூடவென்று சொல்ல எமக்கு ஆத்திரமுண்டாகிறது), துரைத்தன மென்னும் அந்த திவ்யமான பெயரில் ஏதோ விசித்திரமான மந்திர சக்தி இருக்கிறதென்றும், உத்தியோகஸ்த வர்க்கத்தார் ஆளும்படி இடங்கொடுக்கிற ஒரு தேசமானது அதில் வாழும் பிரஜாகோடிகளின் சமஷ்டியைவிட அதிக உயர்வை யடைந்து விடுகிறதென்றும் தப்பபிப்பிராயம் கொள்வார்களென்று எண்ணுவதற்கு சிறிதேனும் இடமிருப்பதாகத் தோற்றவில்லை. இப்படிப்பட்ட தப்பபிப்பிராயம் உண்டாகுமானால் இன்னம் அநேக தேசங்களுக்கு அபாயமாய் முடியும். ஹாலண்டும் பெல்ஜியமும் சேர்ந்த நெதர்லண்ட்ஸ் கவர்ன்மென்டாருக்கும் அத்தேசங்களின் விவசாயத் தொழிலுக்குமுள்ள சம்பந்தங்களைப்பற்றி மிஸ்டர் ஆடம்ஸ் என்பவரும் மிஸ்டர் பான்ட் (Fant) என்பவரும் சேர்ந்தெழுதியுள்ள ரிபோர்ட்டில் ஏற்கனவே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால் அவர்கள் சொல்லிக்கொண்டு வந்திருப்பதெல்லாம், அதற்கு உற்பத்திஸ்தானமான டாக்டர் வான் ரயன் என்பவரின் வியாசத்தில் வலியுறுத்தப் பெற்றிருப்பதைக் காண எமக்கு சந்தோஷமாயிருக்கிறது. இதை நிரூபிக்க இரண்டு மேற்கோள்களை அதிலிருந்து இங்கே எடுத்துக்காட்டுகிறோம்:—"வெண்ணெய் எடுக்கும் தொழில் வெகு முக்கியமானதென்பதை கவர்ன்மென்டார் பூர்த்தியாய் அறிந்து, பொதுவாக பயிர்த்தொழிலையும் முக்கியமாய் வெண்ணெய் எடுக்கும் தொழிலையும் முன்னுக்குக் கொண்டுவருவதற்காகக் குடியானவர்கள் செய்யும் பிரயத்தனத்தில் அவர்களுக்கு சகாயம் செய்யும் பொருட்டு மிகவும் பிரயோஜனகரமான வேலை செய்துகொண்டு வருகிறார்கள். குடியானவர்கள் செய்யும் பிரயத்தனத்தில் அவர்களுக்கு சகாயம் செய்யும் பொருட்டு என்று வேண்டுமென்றே இவ்விடத்தில் சொல்லுகிறேன். ஏனெ-

னில், குடியானவர்களே முதலில் முயலத்தொடங்கி, என்ன திட்டங்களை ஏற்படுத்த வேண்டுமோ அவைகள் அவசியமென்று அவர்கள் மனதில் நன்றாய்ப்பட்டாலன்றி, கவர்ன்மென்டார் இதற்காக முன்வராமலிருப்பதே அநேக வருஷங்களாய் அவர்கள் பின்பற்றிவரும் முறையாயிருந்து வருகிறது." வெண்ணெய் எடுக்கும் தொழிலை மேல் விசாரணை செய்வதற்காக ஜனங்களே முதலில் முன்வந்து முயன்றதையும், கடைசியில் கவர்ன்மென்டார் அதைத் தாங்கி முன்னுக்குக் கொண்டுவந்ததையும்இதற்கு திருஷ்டாந்தமாக அவர் கூறுகிறார். அவரே இன்னோரிடத்தில் சொல்வதாவது: "ஏற்கனவே நாம் சொல்லியிருக்கிறபடி, வெண்ணெய் எடுக்கும் தொழிலுக்கு கவர்ன்மென்டார் அவசியமானபோது சகாயம் செய்கிறார்களென்றாலும், குடியானவர்களின் தன்முயற்சியே அவர்களுடைய க்ஷேமலாபங்களை விருத்திப்படுத்துவதற்குப் போதுமானதென்று நினைக்கக் கூடியதாயிருந்தால் அப்போது திரவிய சகாயம் செய்வதற்கு கவர்ன்மென்டார் இஷ்டப்படுவதில்லை. உள்ளபடியே, குடியானவர்களுக்குள் சங்கக்கட்டுப்பாடு பலமாயிக்கும் மாகாணங்களிலே, வெண்ணெய்த் தொழிற்சாலைச் சங்கங்கள் கவர்ன்மென்டாரிடமிருந்து திரவிய சகாயம் பெறும்பட்சத்தில், அவைகளின் விவகாரங்களில் கவர்ன்மென்டார் சற்றுத் தலையிடும்படி அவசியமாய் நேரிடக்கூடுமாகையால் அப்படிப்பட்ட திரவிய சகாயம் பெறுவதற்கு ஷை சங்கத்தார்கள் சம்மதிப்பதில்லை.....ஆயினும், கல்வியபிவிருத்தியைக் கவனிப்பது துரைத்தனத்தாரின் கடமையென்று கருதப்படுகிறபடியால், வெண்ணெய் எடுக்கும் தொழிலைக் கற்றுக்கொடுப்பவர்கள் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களாயிராவிட்டாலும், அவர்களை நியமிக்கிற சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தைக் கொண்டு அவர்களுக்குச் சம்பளங் கொடுப்பதே அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. இப்படி ஜனங்களில் அவரவர்கள் செய்யும் பிரயத்தனத்தோடு துரைத்தனத்தாரின் ஆதரவையும் விவேகமாய்க் கலந்து இவைகளுடன் விவசாயிகளின் ஒத்துழைப்பையும் (இதையே டாக்டர் வான் ரயன் விசேஷமாய்ச் சுட்டிப்பேசுகிறார்.) ஒன்றாய்ச் சேர்த்திருப்பதனால்தான், ஹாலண்ட் தேசத்து வெண்ணெய் எடுக்கும் தொழிலுக்கு எவ்வளவோ ஆபத்தான கஷ்டங்கள் நேரிட்டும், அவைகளுக்கெல்லாம் தப்பித்துக்கொண்டு அந்தத் தொழில் தலை யெடுத்திருக்கிறது. ஐர்லாந்து தேசத்திலும் ப்ரிட்டன் தேசத்திலுமுள்ள ராஜதந்திரிகள் இதைக் கவனித்து நோக்குவார்களா?

விவசாய சம்பந்தமாய்ச் செய்யும் கூட்டுமுயற்சியின் பிராதான்யம்.

(கோ-ஆபரேடிவ் ந்யூஸ் என்னும் பத்திரிகையிலிருந்து)

கைத்தொழில் விஷயமாய்க் கூடிமுயல்கிறவர்கள் நிலத்தைச் சேர்ந்தமாக வைத்திருப்பதைப் பற்றிய ஷரத்துக்களையாவது யொருமுறைப்பதி செய்

கிற விஷயத்தில் அதற்குள்ள சக்தியையாவது கவனிக்காமல் அசட்டை செய்வது அவர்களுக்குக் கூடிவராது. கூட்டுத்தொழில் கொள்கையை நிலவிஷயமாகவும் நாட்டுப்பிரதேசங்களில் வேலைசெய்பவர்கள் விஷயமாகவும் விரிவாய்ப் பிரயோகிக்க நாம் எத்தனப்படும்போது மேற்சொன்ன விஷயம் முக்கியமென்பது பிற்காலத்தில் இன்னும் அதிகமாய் விளங்கும். ஆனால் கூட்டுத்தொழில் விஷயமாய்ப் பரீக்ஷைசெய்து பார்ப்பதற்கு அது எவ்வளவோ சிறப்பான துறையாகும். தினேதினே விருத்தியடைந்துவரும் அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி என்னும் சங்கம் சம்பந்தப்படுகிற மட்டில், நாட்டு பிரதேசத்து ஜனங்களுக்கு இன்னும் அதிகமாய்க் கல்விபுகட்டுவது, சாஸ்திரீய முறையை இன்னும் அதிகமாய் அனுசரித்துப் பயிர்செய்வது, விளைச்சலின் பண்பை இன்னும் திருப்திகரமாய் இருக்கும்படி செய்வது, சரக்குகளை இன்னும் போதுமான அளவுக்கும் துரிதமாகவும் விற்பனை செய்வதற்கேற்ற சாதனங்களை ஏறபடுத்துவது—என்னும் இவ்விஷயங்களிலே சீர்திருத்தங்கள் இன்னும் செய்யவேண்டி யிருக்கிறது. ஆயினும் இதில் செய்து முடிக்க சாத்தியமாகாதது ஒன்று மில்லை; டென்மார்க்கில் செய்யப்பட்டிராத விஷயமும் இதில் வாஸ்தவத்தில் ஒன்றுமில்லை. இதற்குத் தடங்கலாக சில கஷ்டங்கள் இருப்பது வாஸ்தவமே யானாலும், துரபிமானமும் சிரத்தையின்மையுமே இவற்றுள் பெருத்த இடையூறுகளென்று எமக்குத் தோன்றுகின்றது. மிஸ்டர் ந்யூஜெண்ட் ஹாரிஸைப் போன்றவர்கள் கஷ்டப்பட்டுச் செய்துவரும் புகழ்ச்சிக்குரிய பிரயத்தனத்தை எதிர்க்க ப்ரைவேட் வர்த்தகர்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டார்க ளென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், நாட்டுப் பிரதேசங்களில் கூட்டுத்தொழிலால் முக்கியமாய் பிற்காலத்தில் விளையக்கூடிய பிரயோஜனங்களை நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி கைத்தொழில் முயற்சி செய்வோரைத் தூண்டிவிடும்பட்சத்தில் மேற்சொன்ன இடையூறுகளையும் அவைபோன்ற மற்ற இடையூறுகளையும் சீக்கிரத்தில் ஒழித்துவிடக் கூடும். சங்கக்கட்டுப்பாட்டினால் இந்த வழியில் அத்புதமான காரியங்களைச் செய்யக்கூடுமென்பது வாஸ்தவமே. தற்காலத்திலே ஆங்கிலேயரின் ஜனத்தொகையை நோக்க, அவர்கள் ஐரோப்பிய தேசத்தார்களுக்குள்ளே விவசாயத் தொழிலில் மிகவும் பின்னிடைந்தவர்களா யிருக்கிறார்கள். ஆகவே நாங்குப் போனதுபோக மிகுந்திருப்பதைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மாத்திரமல்லாமல் அதை விருத்தி பண்ணுவதற்கும் கூட்டுத்தொழிலை வழக்கத்துக்குக் கொண்டுவரவேண்டும்; அப்படி செய்யாவிட்டால், நம்முடைய க்ஷேமத்துக்காக நமது தேசத்தில் அமைந்திருக்கும் மிகச்சிறந்த பொருளாதாரங்களில் ஒன்றை இழக்கும்படியான மிகப் பிரமாதமான ஆபத்துக்குள்ளாவோம்.

கூட்டுத்தொழில் விஷயமாய் சீவ் ரெஜிஸ்ட்ராரின் ரிபோர்ட் சிறிது காலத்துக்குமுன் பிரசுரமாகி யிருக்கிறது; அதிலிருந்து இந்த முயற்சி மிகவும் பலப்பட்டுத் தழைத்து வருவதாய் வெளியாகின்றது. வர்த்தக ரீதியாய்ப்

பார்க்கும் பட்சத்தில், இந்த ரிபோர்ட்டில் கண்ட கணக்குகளால் வெளியாகும் ஏராளமான தொகை மொத்தங்கள் ஆச்சரியகரமாயும், கூட்டுத்தொழில் முயற்சியில் உண்டான அபிவிருத்தியானது சர்வவிதத்திலும் புகழ்ச்சிக்கு அடங்காததாயும் இருக்கின்றன. கூட்டுத்தொழில் முறையாய்ச் செய்யப்படும் பாங்கிங் வேலையென்னும் ஓர் அம்சமே மற்ற பெருத்த அம்சங்களுடன் ஒப்பிடும்போது அளவுக்கு மிஞ்சி யிருக்கிறது; ஆகவே கூட்டுத்தொழில் பாங்கிங்வேலைக்கும் கூட்டுத்தொழில் விவசாயத்துக்கும் எவ்வளவு நெருக்கமான சம்பந்தம் இருக்கிறதென்பதை நாம் யோசிக்கும்போது, நம்முடைய உழைப்பை விஸ்தரித்து விநியோகிக்க மிகவும் விசாலமான துறை இருக்கிறதென்று நமக்குத் தெரியவரும். சிறு கைப்பற்று நிலங்களை வாங்கி மெம்பர்களுக்குப் பிரித்துக்கொடுப்பதற்காக 146 சங்கங்கள் இருக்கின்றன; மெம்பர்களின் சங்கியை 7925; மேலும் சில்லறைக் கைப்பற்றுகளாக 4,761-ஏகராக்களும் மொத்தப்பங்கு மூலதனமாக 6000 பவுனும் சம்பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆரம்பம் சொற்பமாகவே யிருந்தாலும் தைரியம் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது; இனி கூட்டுத்தொழிலை அனுசரித்து பாங்கிங் வேலையை நாட்டுப்பிரதேச ஜில்லாக்களில் பரவச் செய்யும்பட்சத்தில், கூட்டுத்தொழிலைக் குடியானவர்களுக்குள் கைகூடும்படி செய்வதில் பெரும் பிரயத்தனம் செய்யக்கூடுமென்றும், அதனால் உண்டாகும் பலிதங்கள் இந்த முயற்சியில் உழைப்பவர்களுக்குத் திருப்திகரமாய் இருப்பதோடுகூட தேச முழுமைக்கும் நன்மை விளைப்பவையாகுமென்றும் நம்புகிறோம். கூட்டுத்தொழில் முயற்சியைக்கொண்டு விவசாயத்தையும் நாட்டுபுறத்து மற்ற தொழில்களையும் தலை யெடுக்கச் செய்வது அசாத்தியமன்று.

மனிதர்களும், யந்திரங்களும், கூட்டுத்தொழிலும்.

(கோ-ஆபரேடிவ் ந்யூஸிலிருந்து)

நமக்குத் தேவையாயிருப்பதை யெல்லாம் மனிதர்களின் சகாயமின்றி யந்திரங்களைக்கொண்டே செய்துகொள்ளக்கூடிய ஒரு காலம் வருமென்று எண்ணுவது எவ்விதத்திலும் அசங்கதமாகாது.

இது உழைப்பாளிக்கோர் கஷ்டமான விஷயம். நூதன கல்பிதங்களை நிறுத்த நம்மாலாகாது; நிறுத்த நமக்கு இஷ்டமுமில்லை. ஆனால், தொழிற்சாலைகளில் யந்திரங்களைக் கொண்டு வேலைநடத்தப்படுவதனால், எத்தனை ஸ்திரீகளும் புருஷர்களும் வேலை யில்லாமல் தவிக்க நேர்ந்தாலுஞ்சரி, தொழிலாளிகளின் குறைகள் நாளாவர்த்தியில் தீர்ந்து அவர்கள் நல்ல நிலைமைக்கு வந்து விடுவார்கள் என்னும் நம்பிக்கையில் குருட்டுத்தனமான விசுவாசம் குறைந்துவரும்படி பார்ப்பதே நமது நோக்கமா யிருக்கவேண்டும். சென்ற இருபதுவருஷ காலத்துக்குள் மாத்திரம் பொருளுற்பத்தி செய்வதற்கான யந்திர சாதனங்கள் அபிவிருத்தி யடைந்து சீர்திருத்தமுற்று வருவதனால் உழைப்பாளி வகுப்பாருக்குள் லக்ஷக்கணக்கான குடும்பங்

கள் துக்ககரமான நிலைமைக்கு வந்துவிட்டன. ஆயினும் பிற்காலத்தில் யந்திரங்களால் விளையும் பலிதத்துடன் இந்த நிலைமை வெகுசாய் ஒப்பிடத் தக்கதாயிராது. பொருளுற்பத்தி சாதன விஷயத்திலே, பிற்காலத்தில் இன்னது விளையுமென்பது பெரும்பாலும் எண்ஜினீர்களையும் ரசாயன சாஸ்திரிகளையும் பொறுத்திருக்கிறது; அவர்கள் இந்த கஷ்டமான விஷயத்தில் பிரவர்த்திப்பதில் முதலாளிகளின் சௌகரியத்தைக் கவனிப்பதைத் தவிர மற்றப்படி அதனால் தேசத்தின் திரவிய சம்பந்தமான நிலைமை எவ்விதமாக பாதிக்கப்படுமென்பதை யோசிக்காமலே தங்கள் சிறந்த விவேகத்தையெல்லாம் அதற்கு உபயோகிப்பார்கள். இந்த திரவிய சம்பந்தமான நிலைமையை உழைப்பாளி வகுப்பார்களின் ஸ்தானத்திலிருந்து நோக்கும் போது அவர்களுக்கு அது ஆழ்ந்த கவலையை உண்டாக்கக் கூடியது. அவர்கள் ஜீவனத்துக்குப் பிறருடைய தானதர்மத்தை அபேக்ஷிக்கப் போகிறதில்லையென்பது வாஸ்தவமே; அவர்களை தர்மார்த்தமாகக் காப்பாற்றவேண்டுமென்று சட்டதிட்டங்கள் ஏற்படுத்தினால் கூட அவர்கள் அந்த தர்மத்தை விரும்ப மாட்டார்கள். அதை விட்டால் அவர்களுக்குப் பிரயோஜனப்படக் கூடிய வேறேவழி கூட்டுத் தொழில் முறையாக யந்திரங்களைச் சொந்தத்தில் உடைத்தாயிருப்ப தொன்றே யெனத் தோற்றுகிறது.

கூட்டுத்தொழிலின் லக்ஷியங்கள்.

(கோ-ஆபரேடிவ் ந்யூஸிலிருந்து).

கூட்டுத் தொழிலின் லக்ஷியங்களை நிறைவேற்ற இஷ்டப்படுகிறவர்களையே எந்த சங்கத்திலும் மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்று தோற்றுகிறது. அப்படிப்பட்ட மெம்பர்கள் இருக்கும் பட்சத்தில், சங்கங்கள் எவ்வித யூனியனுகச் சேர்ந்தாலும், அந்த யூனியனுக்கு அடங்கி நடக்கும். ஒவ்வொரு சங்கத்திலிருந்து ஒரு மெம்பர் விழுக்காடு சேர்ந்து ஒரு ஐக்கிய நாணய யூனியன் ஏற்பட்டால், அது எந்த விஷயத்தையும் தர்க்கித்துப் பரிசீலனை பண்ணுவதற்கு வேண்டிய விரிவுடையதாயிருக்கும்; அது செய்யும் தீர்மானங்கள் முடிவானவைகளாயிருப்பது மல்லாமல் அவைகளை யனுசரித்தே சங்கங்கள் விசுவாசத்துடன் காரியங்களை நடத்தும். ஒவ்வொரு மெம்பரும் ஒவ்வொரு சங்கமும் யூனியனிடத்தில் உண்மையான விசுவாசத்துடன் நடந்து வருப்பட்சத்தில், பற்பல சங்கங்களும் தேசிய யூனியனுகமாத்திரமல்லாமல் பலதேசங்களோடு பரஸ்பர சம்பந்தமுள்ள யூனியனுகவும் சேரும்படியான ஒற்றுமையுண்டாகு மென்பதற்கு அதிக நம்பிக்கை ஏற்படும். அப்படிப்பட்ட யூனியன்களுக்கு எவ்வளவு விரோதமிருந்தபோதிலும், அவைகள் ஏற்பட வேண்டிய தவசியமே; அவை ஏற்பட்டே தீருமென்பதற்குச் சந்தேக மில்லை; ஆனால் அவைகளைச் சேர்ந்த அந்தந்த சங்கங்களின் க்ஷேமலாப விஷயங்களிலே அவைகள் தலையிடுவது கூடாது. ஒவ்வொரு சங்கமும் அதற்குள்ள சுயாதீனத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது

மல்லாமல், கூடுமானவரையில் தன் காரியங்களைப் பிறர் சகாயமின்றித் தானே நிர்வகித்துக் கொள்வதாயிருக்க வேண்டும். மெம்பர்களின் உபயோகார்த்தமாகப் பொருளுற்பத்தி செய்வதேசங்கத்தின் லக்ஷியமாயிருக்க வேண்டும்; ஒவ்வொரு மெம்பரையும் அவருடைய சங்கமே வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டியதோடு அவரும் அந்த சங்கத்திலேயே வேலை தேட வேண்டும். அப்படிப்பட்ட ஜன சமூகத்திலே பணத்தின் உபயோகத்தை நிறுத்திவிடலாம் ஏனென்றால், ஜீவனத்துக்கு அவசியமான வஸ்துக்களை அவர்கள் பண்டமாற்று செய்துகொள்வதைவிட வேறொன்றும் வேண்டியிராது. அப்படிப்பட்ட உத்தம லக்ஷணமமைந்த ஜனசமூகத்திலே அவசியமாய்ச் செய்யவேண்டிய வேலைகளைச் செய்வது சந்தோஷகரமாயிருக்கும்; (உலகவாழ்க்கைக்கு அநாவசியமான) உல்லாச பதார்த்தங்கள் செய்யப்படமாட்டா. அப்படிப்பட்ட சமூகத்திலே படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் நடத்தையை ஒழுங்காய் அமைத்துக் கொள்வதற்கும் சாவகாசமிருக்கும்; அதனால் உண்டாகும் பிரயோஜனம் சுற்றுப் பக்கங்களிலெல்லாம் பரவி ஜனங்களின் மனதில் நன்றாய்ப் பதிந்து விளங்கும்.

அப்படிப்பட்ட உத்கிருஷ்டமான நிலைமை வரவேண்டுமென்று நாம் கோருவது மாத்திரமல்லாமல் அதற்காக உழைக்கவும் வேண்டும்; இப்போது அமைந்திருக்கிறபடி. ஒவ்வொரு சங்கத்திலுமுள்ள சில மெம்பர்கள் கருத்திலும் செய்கையிலும் ஒருமனப்பட்டு வேலை செய்யத் தொடங்குவார்களாகில், தங்கள் குணத்தைச் சங்கமுழுவதிலும் சீக்கிரம் பரவும்படி செய்வார்கள்.

உண்மையான கூட்டுத் தொழில் இன்னதென்றறிந்து அது நிலைபெறப் பார்க்க வேண்டுமென்று கவலை கொண்டிருப்பவர்கள் சிலர் இருக்கிறார்களென்பது கூட்டுத் தொழில் சம்பந்தமான பத்திரிகைகளைப் படிப்பவர்களுக்குத் தெரியாதிருக்கமுடியாது; அப்படிப்பட்ட சிலர் ஒவ்வொரு சங்கத்திலும் இருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஆகவே அவர்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்யட்டும்; தங்கள் லக்ஷியத்தை அனுசரித்து அவர்கள் நடப்பார்களாகில், தக்க காலத்தில் அவர்கள் முயற்சி சித்திபெறும். வேலை தொடங்குவதற்கு மூலதனம் வேண்டியிருக்குமாகையால், அவர்கள் சங்கத்திலிருந்து தங்களுக்கு வரும் ஈவுத்தொகையை வாங்கிக் கொள்ளாமல் அதைத் தாங்கள் லக்ஷியத்தில் கொண்ட கருத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு நிதியாய்ச் சேர்த்து வருவது மல்லாமல் அதற்காக வட்டி கொடுக்கும்படி கேட்கவும் கூடாது. இதற்கு வேண்டியது தன்னயம் பாராட்டாமலிருப்பதே யாகும்; ஆனால் இப்படிப்பட்ட பெருங்காரியத்தில் இறங்குகிறவர்கள் சிறிது மட்டில் தன்மறுப்பும் காட்டலாமல்லவா?

கூட்டுத்தொழிலின் மூன்று நோக்கங்கள்.

கூட்டுத் தொழிலின் பொதுவான மூன்று நோக்கங்கள் எவை யென்றால்:—

(1) சரக்குகளை வாங்கி விற்பதற்கான கூட்டுத் தொழில்.

(2) உற்பத்தியான பதார்த்தங்களைச் சேகரித்து விற்பனைக்கு வைப்பதற்கான கூட்டுத் தொழில்.

(3) நாணயத்தை உண்டாக்கி கொடுக்கல் வாங்கலுக்கு சௌகரியங்கள் ஏற்படுத்துவதற்கான கூட்டுத்தொழில்.

அத்தியந்தமான காரியசித்தி பெற்ற கூட்டுத்தொழில் முயற்சிகளுக்கு மகத்தான பலன்கள் கிடைத்திருப்பது மேற்கண்ட 2-வது, 3-வது இலக்கமிட்டலாபோற்பத்திக்குற்ற நோக்கங்களிலிருந்தேயாம்; ஆனால் இந்த முயற்சிகளெல்லாம் 1-ம் இலக்கமிட்ட கூட்டுத்தொழிலிலிருந்தே ஆரம்பமாயினவென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது; இந்தக் கூட்டுத் தொழில் ராஷ்டேலில் முதலில் ஏற்பட்டு விருத்தி யடைந்த கூட்டுத் தொழிலின் மாதிரியை அனுசரித்ததாகும். "ஆகவே, சரக்குகளை வாங்குவதற்காக ஏற்பட்ட கூட்டுத் தொழிலே இந்த முயற்சி சகஜமாய் ஆரம்பமாவதற்கு அடிப்பீடமென்று தோற்றுகிறது. இதற்குள்ள பலகாரணங்களில் ஒன்றென்னவெனில், சரக்குகள் வாங்குவதற்கான கூட்டுத் தொழிலினால் உண்டாகும் பலன்கள் கூட்டுத் தொழிலாளிகளுக்குப் பெரும் தைரியத்தை ஊட்டுகின்றன வென்பதே; ஏனென்றால், இந்த பலன்கள் உடனே கிடைப்பவைகளாகவும் நன்றாய்த் தெரியக்கூடியவைகளாகவுமிருக்க, பொருளுற்பத்திக்காகச் செய்யும் பிரயத்தனத்திலிருந் துண்டாகும் பலன்கள் கிடைக்க நெடுங்காலம் பிடிப்பதுமல்லாமல், ஆரம்பத்தில் அவைகளைப்பற்றி அதிக சந்தேகமும் உண்டாகிறது."

ஜில்லா கான்பரென்ஸ் ஏற்பாடு.

(ஐர்லார்ந்து தேசத்து அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி சம்பந்தமானது)

ஐர்லாந்து தேசத்து அக்ரிகல்சுரல் ஆர்கானிஸேஷன் ஸொஸைடி லிமிடெட் என்னும் விவசாய சங்கத்தார் மேற்கண்ட விஷயத்தைப்பற்றிச் செய்திருக்கும் முடிவுகளை அடியிற்கண்டபடி சங்கிரகமாய்க் கூறுகிறோம்:—

1. கூட்டுத்தொழில் முயற்சி அபிவிருத்தியடைந்திருப்பதனாலும், சங்கங்கள் பிரதிநிதிக் கமிஷனர்களைக்கொண்டு கூட்டுத் தொழில் சம்பந்தமாய் ஒழுங்கான ஏற்பாடுகள் செய்வதற்குப் பொதுப்பணம் கிடைக்கக் கூடியதாயிருப்பதனாலும், கான்பரென்ஸ் கூடும் ஜில்லா சபையேற்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்வது மிகவும் அவசியமாய் விட்டது. ஐ. அ. ஆ. ஸொ. என்னும் சபைக்கும் சங்கங்களுக்கும் கூடுமான மட்டில் நெருங்கிய சம்பந்தம் இருக்கும்படி செய்யும்பொருட்டு அவ்வவ்விடத்து முக்கியமான விஷயங்களைத் தர்க்கித்துப் பேசவேண்டு மென்பதே பிரதமத்தில் கொண்ட நோக்கமாயிருந்தது. சங்கங்களிலிருந்து பொறுக்கியெடுத்த மெம்

பர்கள் சேர்ந்து கிரமமாய்க் கான்பரென்ஸுகள் நடத்திவரும் பட்சத்தில், அவர்கள் விசாரணைக்குட்பட்ட விவகாரங்களுக்குச் சம்பந்தித்த விஷய மொவ்வொன்றையும் பற்றிப் பேசுவதில் அவர்களுடைய அனுபவபூர்வமான அறிவு பயன்படுவதா யிருப்பதுடன் பிரதான சங்கத்தின் பரியாலோசனைக்காக அவர்கள் ஜாக்கிரதையாய்ச் சிந்தித்து யோசனை சொல்லுவார்கள்.

2. புதிய சங்கங்களை ஏற்படுத்துவது விஷயமாயும் ஒரு சபையின் காரியங்கள் மற்றொரு சபையின் காரியங்களோடு கலந்து குழப்ப மடைவதைத் தடுப்பது விஷயமாயும் யோசிப்பதற்காகவும் சபையேற்படுத்து வோர்களுக்கு அவர்களுடைய வேலையில் ஒத்தாசை செய்வதற்காகவு மென்றே ஜில்லா கான்பரென்ஸுகள் ஏற்படுத்தப்பட்டன.

3. இந்த சங்கங்களில் வெகு நன்றாய் நடக்கக்கூடிய இன்னொரு காரியம் என்னவென்றால் ஐ. அ. ஆ. ஸொ. என்னும் சபைக்கு பிரதிநிதிகளைப் பொறுக்கி யெடுத்தனுப்புவதாகும்.

4. ஜில்லாவிலுள்ள எல்லா சங்கங்களையும் பிரதான சபையுடன் சேர்த்துக்கொள்வது நான்காம் நோக்கமாகும்; இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு ஜில்லா சபைகளை ஸ்திரமான ஏற்பாட்டின் பேரில் அமைப்பது முக்கியமாகும். பிரதான சபையுடன் சேர்க்கப்படாத சங்கங்களை அதில் சேரும்படி செய்வதில் சபையேற்படுத்துகிறவர்கள் செய்யும் காரியத்தைவிட சேர்த்துக்கொள்ளப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் செய்யும் காரியமே வெகுசாய்ப் பிரயோஜனகரமானதாயிருக்கும்.

5. கடைசியாக, காரிய நிர்வாக முறையைப்பற்றிய சகல விஷயங்களையும் முடிவுசெய்வதில் ஐ. அ. ஆ. ஸொ. என்னும் சபையே மேலான அதிகாரத்தை வகிக்கவேண்டும்; ஆயினும் இதுபோன்ற முயற்சிகளில் சர்வசாதாரணமாய் ஏற்பட்டிருக்கும் அனுபவம் என்னவெனில், இந்த முயற்சிகள் வளர்ச்சி பெற்று வருந்தோறும், ஒவ்வொரு சங்கமும் எந்த முயற்சியைச் சேர்ந்திருக்கிறதோ அதன் முக்கிய பாகமாக இருக்குந்தன்மையில் அதற்குற்ற பொறுப்புகள் முழுவதையும் அது நன்றாய்த் தெரிந்துகொள்ளும் பொருட்டு அதிகாரப் பிரிவினை அதிகமாய் ஏற்படுவது அவசியமாகிறது. மேலும் இந்த சங்கங்கள் எந்த முயற்சியில் பிரவர்த்தித்திருக்கின்றனவோ அந்த முயற்சியினது வேலையின் பெரும்பாகம் தேசிய விவஹாரங்களுக்குச் சம்பந்தப்பட்டதென்பதை இந்த சங்கங்கள் தெரிந்து கொள்வதும் முக்கியமாம்.

இந்த ஏற்பாட்டின் விவராம்சங்கள்.

சங்க ஒழுங்கைப்பற்றிய அலுவல்கள்:—

1. பிரதிநாத்திலுள்ள சங்கங்களைத் தொகுப்பாய்ச் சேர்த்து சௌகரியமான ஒரு மத்தியஸ்தானத்தில் அவைகளுக்கு ஒரு தலைமைச் சபையை

ஏற்படுத்த வேண்டும்; நல்ல ரெயில்வே சௌகரியங்கள் அமைந்து வியாபாரம் நடக்கும் பட்டணங்களை இப்படிப்பட்ட மத்தியஸ்தானங்களாக ஏற்படுத்துவது உத்தமம். அப்படிப்பட்ட மத்தியஸ்தானத்துச் சபைக்கு "..... .....ஜில்லா கூட்டுத்தொழில் கான்பரென்ஸ்" என்று பெயரிடவேண்டும்.

2. பிரஸ்தாப வருஷத்தில் டிஸ்ட்ரிக்ட் கான்பரென்ஸில் ஒவ்வொரு சங்கங்கத்துக்கும் பிரதிநிதிகளாயிருக்க இரண்டு அல்லது பல டெலிகேட்டுகளை நியமிக்கும்படி அந்த சங்கத்துக்கு ஐ. அ. ஆ. ஸொ. என்னும் சபையார் முதலில் எழுதிக் கேட்கவேண்டும். இந்த டெலிகேட்டுகளில் ஒருவரை ".....ஜில்லா கூட்டுத்தொழில் கான்பரென்ஸ் கம்மிட்டி" யென்னும் பெயருடன் கூடிய கம்மிட்டியின் மெம்பராயிருக்கும்படி ஒவ்வொரு சங்கத்தாரும் ஏற்படுத்தி யனுப்பவேண்டும்.

3. ஜில்லாவிலுள்ள சங்கங்களுக்குப் பிரதிநிதிகளாக இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட மெம்பர்களும் ஐ. அ. ஆ. ஸொ. கம்மிட்டி மெம்பர்களும் நம்பிக்கையுள்ள சங்க ஸ்தாபகரொருவரும் சேர்ந்து ஜில்லா கான்பரென்ஸின் அங்கத்தினராவார்கள்.

4. ஜில்லா கான்பரென்ஸின் அலுவல்கள் அடியிற்கண்டவைகளாகும்:-

(a) கான்பரென்ஸில் சேர்ந்துள்ள சங்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களை யோசிப்பதும், ஐ. அ. ஆ. ஸொ. என்னும் சபையாரால் தர்க்கிக்கப்பட்டு கூட்டுத்தொழில் முயற்சியின் பொதுவான க்ஷேமலாபங்களுக்குப் பொருத்தமானவை யென்று அங்கீகரிக்கப்படுவதன்பேரில் ஜில்லாவில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரத் தக்கவைகளாய் அனுபவத்தை யொட்டின ஆலோசனைகளை எடுத்துச் சொல்வதும்.

(b) ஒப்புக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் நடந்தேறுவதை மேல் விசாரணை செய்வதும் முற்படுத்துவதும்.

(c) ஜில்லாவிலுள்ள எல்லா சங்கங்களையும் சேர்த்துக் கொள்வதற்காகப் பிரயத்தனம் செய்வது.

(d) அவ்வவ்விடங்களில் நியாயஸ்தலமாய்ப் பிரவர்த்திப்பது; ஐ. அ. ஆ. ஸொ. என்னும் சபையாரின் மத்தியஸ்தத்துக்காக அனுப்பவேண்டியவைகளென்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற விவாதங்களைத் தவிர, சங்கங்களுக்குள் பரஸ்பரம் நேரும் மற்ற எல்லா விவாதங்களையும் ஷை நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோகலாம்.

(e) ஜில்லாவுக்காக ஏற்பட்டுள்ள சங்கஸ்தாபகருக்கு கூட்டங்கள் கூட்டுவிப்பதிலும் கூட்டுத்தொழில் முயற்சியைப் பரவச் செய்வதிலும் கூடுமான சகல சகாயமும் செய்வது.

மற்ற பாகங்கள் நடவடிக்கை முறைக்குரிய விவரங்களுக்குச் சம்பந்தப்பட்டவை.

ஒரு கூட்டுத்தொழில் கான்பரென்ஸ்.

("மதராஸ் மெயில்" பத்திரிகையிலிருந்து எடுத்தமைக்கப்பட்டது).

ஊத்தங்கரை தாலூகாவில்.

பைர்நத்தம், ஸெப்டெம்பர் மீ 3வ.—சேலம் ஜில்லா ஊத்தங்கரை தாலூகாவிலுள்ள கூட்டுத்தொழில் சங்கங்களின் கான்பரென்ஸ், அதற்காக பைர்நத்தத்தில் போடப்பட்ட விசாலமான பந்தலில் கூடிற்று. ஷை தாலூகாவிலுள்ள பதினேழு சங்கங்களையுஞ் சேர்ந்த மெம்பர்கள் ஏராளமாய்க் கூடியிருந்தார்கள்; அவர்களைத் தவிர ஷை ஜில்லாவிலுள்ள இன்னும் சுமார் இருபது சங்கங்களிலிருந்து டெலிகேட்டுகளும் பிரதிநிதிகளும் கூட வந்திருந்தார்கள். அந்தக் கான்பரன்ஸுக்கு விஜயமானவர்களில் கலெக்டர் மிஸ்டர் பார்ட்ஸ்வெலும், அஸிஸ்டன்ட் கலெக்டர் மிஸ்டர் ப்ரிக்ஸ்டோக்கும், ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் ஹார்டிங்கும், ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் திவான் பஹதூர் எல். டி. ஸ்வாமிகண்ணு பிள்ளையும் இருந்தார்கள்.

வரவேற்புக் கமிட்டியின் சேர்மனாகிய மிஸ்டர் கே. சேஷகிரி ராவ் வந்தனோபசார பத்திரிகை வாசிக்கவும் கான்பரென்ஸின் நடவடிக்கை ஆரம்பமாயிற்று. மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் கான்பரென்ஸில் அக்கிராசனம் வகிக்க வேண்டுமென்று கான்பரென்ஸின் காரியதரிசியாகிய மிஸ்டர் வி. காசிராவ் பிரேரேபித்தார். சம்பைகல்லூர் மிட்டாதார் மிஸ்டர் கே. ராமசந்திரராவால் அந்தப் பிரேரேபனை ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் கரகோஷத்துடன் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் சபைத்தலைமை வகித்துத் தமது அக்ராசனாதிபத்ய உபந்யாசத்தைச் செய்தார்.

கோபால்புர வாசியாகிய மிஸ்டர் வெங்கடாசாரியார் கூட்டுத்தொழில் சங்கங்களால் உண்டாகும் நன்மைகளைக் குறித்துப் பிரசங்கம் செய்தார். நெய்யக்காரபட்டி நாட்டு நாணயச் சங்கத்தின் சேர்மனாகிய மிஸ்டர் குப்புசாமி ஐயர் லோகல் டிபாஸிட்டுகளைப்பற்றி ஒரு வியாசம் எழுதி வாசித்தார். நீடாமங்கலம் பாங்கியின் காரியதரிசியாகிய மிஸ்டர் ஏ. ஸேதுராமய்யர் "கூட்டுத் தொழிலிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடிய சில விஷயங்கள்" என்பதைப்பற்றி வாக் சாதுரியமாக ஒரு பிரசங்கம் செய்தார்; பிறகு கூட்

டுத்தொழில் சங்கங்களின் லீனியர் இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் என். கிருஷ்ணராவ் நாணய விஷயமாக மாத்திரமல்லாமல் கிராமவாழ்க்கையின் இதர அம்சங்களில் கூட கூட்டுத்தொழில் சங்கங்களினால் உண்டாயிருக்கும் அபிவிருத்தியைக் குறித்துத் தெலுங்கில் பேசினார்.

பிறகு கூட்டுத்தொழில் முயற்சியின் பற்பல அம்சங்களைக் குறித்து திவான் பஹதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை தமிழில் பேசினார். அவர் ஐரோப்பிய தேசங்களில் வழங்கிவரும் தாழ்ந்த வட்டி வீதங்களை இந்த தேசத்திலிருக்கும் உயர்ந்த வீதங்களுடன் ஒப்பிட்டு, இந்த வித்தியாசத்துக்குக் காரணமாயிருக்கும் திரவிய சம்பந்தமான கோட்பாடுகளைப்பற்றிப் பேசினார். பிறகு, காலந்தவறாமல் வேலைசெய்யப் பழகுவதன் அவசியத்தைப்பற்றியும் அதனாலுண்டாகும் அனுகூலங்களைப்பற்றியும் சிறிது கூறினார். இதைக் கவனியாதிருப்பதே பல சங்கங்களிலுமுள்ள கெடுதி என்று சொன்னார். ஒரு புதிய சங்கத்தை ரெஜிஸ்டர் செய்வதற்குமுன் அந்த சங்கத்தார் ஸென்ட்ரல் பாங்கிக்குக் கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்துவது முதலிய விவகாரங்களில் காலந்தவறாமல் சரியாய் நடந்துகொள்ள வேண்டுமென்று அதை ஏற்படுத்துபவர்களிடமிருந்து வாக்குத்தத்தம் பெற்றுக்கொண்டால் நன்றாயிருக்கும். லோகல் டிபாஸிட்டுகளின் ஆவசியகத்தைப் பற்றியும் ரெஜிஸ்ட்ரார் பேசினார். மேலும், வேண்டியது பெருந்தொகைகளல்லவென்றும் ரயத்துகள் மிகுத்தும் சிறு தொகைகளே மிகச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் அவர் சொன்னார். ப்ராவிடென்ட் (எதிர் காலத்துக்குதவும்படியான) டிபாஸிட்டுத் தொகைகளை மெம்பர்கள் செலுத்துவதற்காக ஒரு சகாயச் சட்டத்தை ஒவ்வொரு சங்கமும் ஏற்படுத்திக்கொண்டால் வெகு நன்றாயிருக்கும்.

அடியிற்கண்ட தீர்மானங்கள் கான்பரென்ஸில் எல்லோராலும் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டன:—

விவசாய இலாகா டைரெக்டரால் அப்போதைக்கப்போது (சுதேசபாஷைகளில்) பிரசுரிக்கப்படும் துண்டுப் பத்திரிகைகளென்ன, வர்த்தமானிகளென்ன இவைகளின் பிரதிகளை இலவசமாக நாட்டுச் சங்கங்களுக்குக் கொடுக்கும்படி கவர்ன்மெண்டாரைப் பிரார்த்திக்கவேண்டும்.

கூடிய சீக்கிரத்தில் மத்திய சங்கங்களின் சமுதாய சபையொன்றை ரெஜிஸ்டர் செய்யும்படி கவர்ன்மெண்டாரைப் பிரார்த்திக்க வேண்டும்.

35-ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் வாங்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூட்டுத்தொழில் சங்கங்களில் பணம்கட்டி வைப்பதைக்குறித்த நிர்ப்பந்தத்தை ரத்துசெய்ய வேண்டும்.

இரண்டாம் வேளை தாகசாந்தி செய்வதற்காக கான்பரென்ஸ் நிறுத்தப்பட்டு பகல் 3½-மணிக்கு மறுபடியும்கூட அப்போது அடியிற்கண்ட நான்கு தீர்மானங்கள் எல்லோராலும் ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டன:—

சங்கங்களின் கணக்குகளை மாசத்துக் கொருமுறையாவது தணிக்கைசெய்வது அவசியமென்று இந்தக் கான்பரென்ஸ் வலியுறுத்துவது மல்லாமல், பிற்காலத்தில் இந்தச் சங்கங்களை யூனியன்களாகச் சேர்க்கும், நோக்கத்துடன் அவைகளைத் தொகுப்புகளாக அமைப்பதும், அவைகளைப் பரிசோதிக்கும் அதிகாரிகளை நியமிப்பதுமாகிய ஏற்பாட்டையும் அங்கீகரிக்கின்றது.

அந்தந்த இடங்களில் மூலதனம் சேர்ப்பது முக்கியமென்பதையும் எதிர்கால சகாயத்துக்காகவாவது வேறே உத்தேசத்தைக் கொண்டாவது மிகுந்த பணத்தைச் சேர்த்துவைக்கும்படித் தூண்டுமாறு சங்கங்களுக்கு புத்திமதி கூறுவதும் செட்டாய்ச் செலவு செய்யும்படி போதிப்பதும் அவசியமென்பதையும் இந்தக் கான்பரென்ஸ் ஒப்புக்கொள்ளுகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஜனங்கள் அந்யோந்யமாய்க் கூடிப் பழகுவதற்காகவும் கூட்டுத்தொழில் வர்த்தமானிகளையும் விவசாயப் பத்திரிகைகளையும் படிப்பதற்காகவும் உதவும்படியான பொழுதுபோக்குச் சபை ஒன்றிருக்க வேண்டுமென்று இந்தக் கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

சங்கங்களின் மெம்பர்களுக்குள் பரஸ்பரம் உண்டாகும் விவாதங்களைக் கோர்ட்டுகளுக்குக் கொண்டுபோகக் கூடாதென்றும் பஞ்சாயத்து சபைகளே அவைகளைத் தீர்மானம் செய்யவேண்டுமென்றும் இந்தக் கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

இந்தத் தீர்மானங்களை அக்கிராசனாதிபதி தமிழில் விவரமாய் விளக்கிக் கூறினார்.

பிறகு ரெஜிஸ்ட்ரார் எழுந்து பேசத்தொடங்கி, வெகுதூரத்திலிருந்து வந்த டெலிகேட்டுகள் கான்பரென்ஸின் தீர்மானங்களை ஜாரிசெய்ததுடன் மாத்திரம் திருப்தியடையாமல் அவைகளைத் தம்தம் சங்கங்களின் நடவடிக்கைகளிலும் பிரயோகித்து அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவார்களென்று தாம் நம்புவதாகச் சொன்னார்.

ஸர்க்யுலர்களும் இலாகா உத்தரவுகளும்.

ஸர்க்யுலர் ந. 21.

கடன்கள் கொடுப்பதும் அவைகளைத் திருப்பிச் செலுத்தவேண்டிய காலத்தை அதிகப்படுத்துவதும்.

ஒரு கடனை ஜாரிசெய்யும் பொழுது, அதைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய காலத்தை ஆரம்பத்திலேயே ஒரு வருஷத்துக்கு அதிகமாக நிச்சயிப்பது ஒருபோதும் கூடாது. ஆரம்பத்தில் இந்தக் காலத்தை நிச்சயிக்கும் பொழுது, அது முடிவாகும் மாதமானது, கடன் வாங்குபவர் தொகையை செள்கரியமாய்த் திருப்பிச் செலுத்தக்கூடியகாலமாய், அதாவது, சாதாரணமாய் அவர் மாசூலை விற்கும் மாதமாயிருக்கும்படி பார்க்க வேண்டும்.

சில கடன்கள் விஷயத்தில், அவைகளை உபயோகிப்பதால் கிடைக்கும் லாபமானது முதல் வருஷத்திலேயே அசல்தொகைக்குச் சமானமாயிராது. உதாரணமாக, ஏற்கனவே இருந்த கடன்களைத் தீர்ப்பதற்காக வாங்கப்படும் கடனை எடுத்துக் கொள்வோம். பழைய வட்டி வீதம் நூற்றுக்கு 13 ஆயிருந்து, நீங்கள் நூற்றுக்கு 9 வீதம் வட்டி வாங்கினால், சங்கத்தினால் கடன் வாங்குபவருக்கு ஏற்படும் லாபம் நூற்றுக்கு $8\frac{5}{8}$ தான் ஆகிறது. அப்படிப்பட்ட விஷயங்களில், கடன் வாங்குபவர்களை அசல்தொகை முழுவதையும் ஒரு வருஷத்துக்குள் திருப்பிச் செலுத்தும்படி செய்வது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்கும். கண்டிதமாய்ப் பேசுங்கால், அவருக்குச் சுமார் 10 வருஷகாலம் கொடுக்கவேண்டும். அப்படி கொடுக்கும்பட்சத்தில் அவர் ஸாவ்காருக்கு வட்டியாகக் கொடுத்துவந்த மாதிரி நூற்றுக்கு 18 வீதம் செலுத்தி, கடன் தொகையின் அசலும் வட்டியும் சேர்த்து 10 வருஷத்துக்குள் அவர் திருப்பிச் செலுத்திவிடக் கூடும். ஆனால் 10 வருஷம் மிகவும் நீண்ட காலமானபடியால், கூட்டுத்தொழில் முயற்சியானது ஆரம்ப தசையிலிருக்கும்பொழுது நாம் அவ்வளவு அதிக காலம் கொடுக்கக் கூடாது; ஆகையினால்தான் சகாயச் சட்டங்களில் ஐந்து வருஷம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. உங்களுக்கு நிர்வாகசக்தி இருக்கிறதென்று ஏற்பட்டால் அதற்குமேல் அதிக காலம் கொடுக்கலாம். ஆயினும், அதிக காலம் கொடுக்கவேண்டுமென்று கேட்க கடன் வாங்குபவருக்கு சுவயமாகவே பாத்தியதையில்லை என்பதை ஞாபகத்தில் வையுங்கள். அவர் சகாயச்சட்டங்களின் நியந்தனைகளின்படி நடக்கிறாரா வென்றும், அவருடைய நடத்தை சீராயிருந்து வருகிறதாவென்றும்,

அவருடைய சொத்து மதிப்பு குறையாமலிருக்கிறதா வென்றும் ஜாக்கிரதையாய்க் கவனித்து வரவேண்டும். சிறிதேனும் சந்தேகம் ஏற்பட்டால், பாக்கியாயிருக்கும் தொகை முழுவதையும் உடனே வசூல் செய்துவிடவும்.

சில கடன்கள் விஷயத்தில், ஒரு வருஷத்துக்குள் கடன் தொகையளவுக்கு லாபம் கிடைக்கவேண்டுமென்ற உத்தேசத்துடனே அவைகள் கொடுக்கப்படுகின்றன; விதைத்தானியம் வாங்குவது, கிஸ்திப் பணம் செலுத்துவது, முதலிய காரியங்களுக்காகக் கொடுக்கப்படும் கடன்களை இதற்கு உதாரணமாக எடுத்துச் சொல்லலாம். எவ்வித சங்கமுமில்லாவிட்டாலும், கடன் வாங்குபவர் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாமலிருப்பதில்லை; அதே மாதிரி சங்கத்துக்கு அவர் ஏன் திருப்பிச் செலுத்தக்கூடாது? அப்படி அவர் திருப்பிச் செலுத்தாவிட்டால், கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக உபயோகித்திருக்க வேண்டிய பணத்தை வேறே காரியத்திற்காக அவர் உபயோகிக்கிறாரென்று ஏற்படுகிறது. இதற்கு இடம் கொடுக்கக்கூடாது. எதற்காக அவர் அதைச் செலவிடுகிறாரோ அது நல்ல காரியமாயிருந்தால், சங்கத்திலிருந்து அவர் அதற்காகப் பிரத்தியேகமாகக் கடன் வாங்கலாம். அப்படிப்பட்ட விஷயங்களில் கடன் வாங்குபவருக்கு அதிக காலம் கொடுப்பது அவரிடத்தில் பொய்யன்பு பாராட்டுவதாகும்; ஏனெனில் அடுத்த வருஷத்திலே அதற்கு இரட்டத்தனை தொகை அவர் கொடுக்கவேண்டி வரும்.

விதைத்தானியம் வாங்குவதற்காகக் கடன்வாங்கி அந்தத் தானியம் நஷ்டமாய்ப் போவது வெகு அபூர்வம். அப்படி நேரிட்டாலுங்கூட, கடன் வாங்கினவர்களின் அனுகூலத்தையே உத்தேசித்து, அவருடைய இதர ஆஸ்தியிலிருந்து கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்த வேண்டும். அப்படிப்பட்ட ஆஸ்தி அவருக்கு ஒன்றுமில்லாமலிருந்து அப்படி கொடுக்கும்படி அவரை வற்புறுத்துவது கஷ்டமாகுமானால், அவர் போதுமான ஜாமீன் காட்டக் கூடியவராயிருக்கும் பட்சத்தில், சகாயச் சட்டங்களை அனுசரித்து அவருக்குக் காலத்தை அதிகப்படுத்திக் கொடுக்கலாம்; ஆனால் அப்படிக் கொடுப்பது மிகவும் அரிதாயிருக்கவேண்டும்.

ஸர்க்யுலர் ந. 22.

ஐக்கியநாணயச் சங்கத்தின் பிரயோஜனங்களும், ரெஜிஸ்ட்ராரும் அவருடைய சிப்பந்திகளும் செய்யும் வேலையும்.

(இந்தத் தலைப்புடன் ஒரு ஸர்க்யுலர் பர்மா ரெஜிஸ்ட்ராரால் பிரசுரிக்கப்பட்டது; அதை அவ்வவ்விடத்திய நிலைமைகளை அனுசரித்து சில மாறுதல்களுடன் அடியில் எடுத்தெழுதி யிருக்கிறது.)

ஒரு ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்படுத்துவதன் நோக்கம் என்னவெனில்:நாணயத்தை உண்டாக்கி சுலபவட்டிக்குக் கடன் கிடைக்கும்படி செய்வது; மெம்பர்களுக்கு எவ்வளவு தொகை வேண்டுமோ அவ்வளவு மாத்திரமே யல்லாமல் அதற்கு அதிகமாய் ஒரு போதும் கொடுக்காமலிருப்பது; பொருளுற்பத்தி செய்வதற்கான பிரயோஜனகரமாயுள்ள காரியங்களுக்கே பணம் கடன்கொடுப்பது மாத்திரமல்லாமல் அந்த காரியங்களுக்கே அதை உபயோகிக்கும்படியும் வற்புறுத்துவது; கடனாளியாயிருக்கும் வழக்கத்தை வேரறுப்பதுடன், ஜனங்களை முந்திய வருஷத்தின் லாபங்களைக் கொண்டு வேலை நடத்தும்படி செய்வது: இப்படி செய்வதனால், மற்றப்படி அவர்கள் இதரர்களுக்கு வட்டியாகக் கொடுக்கநேரிடும் தொகையை மிகுத்தக்கூடும்; ஜனங்கள் பழைய கடன்களை தீர்த்துவிடக் கூடியவர்களா யிருக்கும்பொருட்டு, பரஸ்பர சகாயத்தையும் ஆலோசனையையும் விருத்திசெய்து, நாளாவர்த்தியில் கடன் வாங்குவதே அனாவசியமாகும்படி செய்துவிடுவது; கடன் விஷயமாய் அதி வேலை நடத்துவது சங்கத்துக்கு அவசியமில்லாமலிருந்த போதிலும், பஞ்சம், மாசூல் சேதம், கால்நடைவியாதி, நெருப்பு அல்லது இதுபோன்ற ஆபத்துகளினால் எப்பொழுதாவது கடன் வாங்குவது அவசியமாகும்பட்சத்தில் அப்பொழுது பெருந்தொகைகள் கடன்வாங்கக்கூடியதாயிருக்கும்பொருட்டு சங்கமானது நல்லபெயர் வாங்குவது; கடைசியாக ஜனங்களிடமிருந்தும் தொகைகளைப் பத்திரமாய்க் கட்டிவைப்பதற்கு ஓரிடம் ஏற்படுத்துவது.

இப்படிப்பட்ட சங்கங்களின் நோக்கங்களைப்பற்றியும் அவைகளை விருத்திசெய்வதில் கவர்ன்மெண்டின் உத்தேசங்களைப்பற்றியும் பல தப்பபிப்பிராயங்கள் உண்டாயிருக்கின்றன. உதாரணமாக, நிலையான டிபாஸிட்டுகளை கவர்ன்மெண்டாரே கட்டுகிறார்களென்றும், அவைகள் பாங்கிகளாலும் கடன் கொடுப்பதற்குப் பணம் வைத்திருக்கும் திரவியவந்தர்களாலும் கட்டப்படுகின்றனவென்று கவர்ன்மெண்டார் பாசாங்கு செய்கிறார்களென்றும் சிலர் எண்ணுகிறார்கள். இது பிசகு; ஏனெனில், ஐக்கிய நாணயச் சங்கங்களைப்பற்றிய ஆக்டின்படி நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் சங்கங்கள் ஏற்படுத்தக்கூடும்; அவைகளெல்லாவற்றுக்கும் போதுமான நிதி ஏற்படுத்திக் கொடுக்கலாமென்று கவர்ன்மெண்டார் எதிர்பார்ப்பது வாஸ்தவத்தில் அசம்பாவிதமாகும்.

கவர்ன்மெண்டார் பாங்கிகளுக்கும் திரவியவந்தர்களுக்கும் தங்கள் பணத்தை வட்டிக்குப் போட்டுவைப்பதற்குரிய ஒரு சாதனம் ஏற்படுத்திக் கொடுப்பதில் ஒத்தாசை செய்கிறார்களென்று மற்றும் சிலர் நினைக்கிறார்கள். ஆனால், பாங்கிகளும் திரவியவந்தர்களும் இதுவரையில் செய்துவந்ததுபோலவே இப்பொழுதும் தங்கள் பணத்தை, பத்திரத்துக்கு யாதொரு குறைவுமில்லாமலே, செட்டிமார்களிடத்தும் இதர இடங்களிலும் வட்டிக்குப் போட்டுவைக்கிறார்கள்; இதனால், எவ்வளவு வட்டி கிடைக்கிறதோ அது சங்கங்

களில் போட்டு வைப்பதனால் கிடைக்கும் வட்டியை விடக் குறைந்ததல்ல; ஆகவே, கவர்ன்மெண்டார் இவர்களுக்கு ஒத்தாசைசெய்யவேண்டிய அவசியம் சிறிதேனுமில்லை. எந்த பணத்தை அவர்கள் மாதமொன்றுக்கு நூற்றுக்கு பன்னிரண்டு அணா வட்டிக்கு செட்டிமார்களிடம் போட்டு வைக்கிறார்களோ அதே பணம் தான் கடைசியில் பயிரிடுவோனுக்குக் கிடைக்கிறது. ஆனால் அது எப்படி கிடைக்கிறதெனில், டைரெக்டர்கள் அந்த தொகையை ரங்கூனிலுள்ள பெருத்த செட்டிக் கடைகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள்; இந்த செட்டிகள் அதை 1 ரூ. வட்டிக்கு இதர செட்டிகளுக்குக் கொடுக்கிறார்கள்; இவர்கள் அதை ரூ. 1-4-0. வட்டிக்கு ஜில்லா செட்டிகளுக்குக் கடன்கொடுக்க, பின்னவர்கள் அதை ரூ. 1-8-0 முதல் ரூ. 2 வரையில் வட்டிக்குப் பெரும் வர்த்தகர்களுக்கும் வட்டி வியாபாரிகளுக்கும் கொடுக்கிறார்கள்; இந்த வர்த்தகர்களும் வியாபாரிகளும் இந்த தொகையை மாத மொன்றுக்கு நூற்றுக்கு ரூ. 2-8-0, 3, 4 அல்லது 5 வீதம் கூட பயிரிடுவோருக்குக் கடனாகக் கொடுக்கிறார்கள்.

பயிரிடுவோருக்குப் பணம் இவ்வளவு கிராக்கியா யிருப்பதற்குக் காரணம், அது அவர்களுக்கு நேரில் கிடைக்காமல் பல கைகள் மாறி வரவேண்டியிருப்பதும், அப்படி வரும்பொழுது நாலு அல்லது ஐந்து தரகர்கள் இடையில் அதனால் லாபமடைவதுமேயாம். ஆகவே பணம் வேண்டியவர்களுக்கு அது கிடைப்பதற்கான ஏற்பாடு ஒழுங்காயில்லை; ஆகையினால், சங்கங்களுக்கும் பாங்கிக்கும் அல்லது திரவியவந்தர்களுக்கும் நேரில் லேவாதேவி ஏற்படுத்துவது ரெஜிஸ்ட்ராரின் வேலை யாகும்; அப்படி செய்வதனால், இடையில் லாபமடைந்து வந்த தரகர்களை யெல்லாம் ஒழித்துவிட்டு பிரதம வட்டியான நூற்றுக்குப் பன்னிரண்டணா வீதத்துக்கே சங்கத்துக்குக் கிராமத்தில் பணம் கிடைக்கக் கூடியதாகும்.

சங்கமானது கிராமத்திலேற்பட்டுள்ள ஒரு பணக்கடை யென்றும், அது தழைக்க வேண்டுமானால் அதில் பெருத்த கடன் வியாபாரம் நடக்க வேண்டுமென்றும், ஆகையினால் தான் ஒவ்வொரு சங்கமும் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு அதிகமாய்ப் பணம் வாங்கிக் கடன்கொடுப்பது மல்லாமல் இந்தக் காரியத்துக்காக பிரதி வருஷமும் தொகையை அதிகப்படுத்திக் கொண்டே வரவேண்டுமென்று கவர்ன்மெண்டார் விரும்புகிறார்களென்றும் மற்றும் சிலர் நினைக்கிறார்கள். இது சுத்த பிசகு. ஒரு சங்கமானது பிரதி வருஷமும் பயிரிடும் காலம் ஆரம்பிப்பதற்கு முன் அதன் மெம்பர்களுக்கு என்னென்ன தேவையாயிருக்கும் என்பதைப்பற்றி ஜாக்கிரதையாய் யோசிக்க வேண்டும். பிரதி மெம்பரையும் அவர் எந்தெந்த விஷயங்களுக்காகக் கடன் வாங்க வேண்டுமோ அவைகளைப்பற்றித் தீர விசாரித்த பிறகு ஒவ்வொரு விஷயத்திலும் குறைந்தது எவ்வளவு தொகை தேவையோ அவ்வளவு மாத்திரமே கொடுப்பதாக வாக்குறுதி செய்யவேண்டும். ஒருவருக்கு ரூ. 90

போதுமானால், அவருக்கு ரூ. 100 கொடுப்பதாக ஒருபோதும் வாக்கு கொடுக்கக்கூடாது. ஒருவர் மிகவும் பலத்த காரணங்களிருப்பதாக எடுத்துக் காட்டினாலொழிய, அவருக்கு முந்திய வருஷத்தில் எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டதோ அதே அளவுக்கு அடுத்த வருஷத்திலும் கடன் கொடுக்கக் கூடாது; நயமான வட்டிக்குக் கடன் வாங்கினதால் அவர் கொஞ்சம் பணம் மிகுத்தி முன்னிருந்ததைவிட நல்ல தசையிலிருக்க வேண்டும்; ஆகவே அவ்வளவு கடன் வாங்கவேண்டிய அவசியமிராது.

அவரவர்களுக்கு எவ்வளவு வேண்டியிருக்குமென்று நிச்சயிக்கும் விஷயத்தை, அந்தந்த வருஷத்தில் கொடுக்கப்பட்ட கடன்கள் சங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்கப்படுவதற்கு முன் ஒரு ஜெனரல் மீட்டிங்கில் முடிவு செய்யவேண்டும்; மேலும், கமிட்டியார், புதிய மெம்பர்களின் தேவைகளைப்பற்றி யோசித்தபிறகு, அடுத்த வருஷத்துக்கு அவர்களுக்கு எவ்வளவு பணம் வேண்டியிருக்குமென்பதை நிஷ்கரிஷையாய்த் தீர்மானித்து, அதிகப்படியாய்த் தொகை வேண்டியிருந்தால் அப்படி எவ்வளவு வேண்டியிருக்கும் அல்லது டிபாஸிட் செய்திருப்பவர்களுக்கு எவ்வளவு தொகை திருப்பிக் கொடுக்கலாம் என்று பார்க்கவேண்டும்.

புதிய மெம்பர்கள் ஏராளமா யிராவிட்டால், நெருப்பு அல்லது கால்நடை வியாதி முதலிய ஆபத்தான சம்பவங்களினால் சங்கத்தின் நிதியைச் சிறிதுகாலத்துக்கு அதிகப்படுத்துவது அவசியமானாலொழிய, அந்த நிதியை வருஷத்துக்கு வருஷம் குறைத்துக்கொண்டேவர முயலவேண்டும்.

ஒவ்வொரு சங்கத்தாரும் அறியவேண்டிய மிகவும் முக்கியமான விஷயமென்னவென்றால், ஒரு சங்கமானது கடன்வாங்கும் வழக்கத்தை வேரோடொழிப்பதற்கான ஓர் மருந்தேயல்லாமல் அந்த வழக்கத்தை விருத்திசெய்வதற்கேற்ற ஓர் சாதனமல்லவென்பதே. அதெப்படியெனில், அபினி தின்னும் வழக்கமுள்ள வொருவனுக்கு அவ்வபினியையே பின்னும் கொடுக்காமல் அந்த வழக்கத்தை ஒழிப்பதற்கான மருந்தைக் கொடுப்பது போலாம். ஒருவன் இந்தவழக்கத்தை ஒரே வருஷத்தில் விட்டுவிடக் கூடாதவனா யிருக்கலாம்; ஆனால், அவன் கடன்வாங்கும் தொகையை வருஷத்துக்கு வருஷம் குறைத்துக்கொண்டே வந்து அவனுடைய பணத்தை ஜாக்கிரதையாய் வினியோகிக்கும் பட்சத்தில், பல வருஷங்களில் அவனுடைய கடனை முழுவதும் ஒழித்துவிடலாம்.

ஆகையினால், அப்போதைக்கப்போது புதிய மெம்பர்கள் சேர்ந்துகொண்டே வந்து அதிக பணம் தேவையாயிருந்தாலொழிய, ஒரு சங்கமானது மெம்பர்களுக்குக் கொடுக்கும் கடன் தொகைகளை க்ரமேணு குறைத்துக்கொண்டேவந்து, அவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் லாபங்களைக் கொண்டே வேலைசெய்யும்படி ஒத்தாசை செய்யும்பட்சத்தில், அந்த சங்கம்

வெளியில் கடன்வாங்கும் தொகையானது பல வருஷங்களில் படிப்படியாய்க் குறைந்துகொண்டே வருமாகையால், கிராமத்தில் அவசியமா யிருக்கும் சொற்ப கடன்களுக்கு அதன் சேமநிதியே போதுமானதா யிருக்கக்கூடிய காலமும் வரும்.

ஒரு சங்கத்தின் முக்கிய நோக்கமென்ன வெனில், அதன் மெம்பர்கள் கடன் வாங்காமலே வேலை செய்யக்கூடியவர்களா யிருக்கவேண்டு மென்பதே. செட்டிக் கடையைப்போல் அது லாபத்தை உத்தேசித்து ஸ்தாபிக்கப்பட்ட வியாபாரமல்ல. கடன் வாங்குவதை ஓர் மருந்தாகக் கருதலாம்; மருந்தின் அவசியமே யில்லாமல் நிடகாத்திரமாயிருப்பது ஸர்வ சிலாக்கியமே; ஆனால், தேக அசௌக்கியம் ஏற்பட்டால், மருந்தும் உபயோகமாயிருக்கிறது. ஆயினும், எத்தனை தினங்களுக்கு அவசியமோ அதற்குமேல் ஒரு தினம் கூட மருந்து சாப்பிடுவது பெருத்த பிசகாகும்.

உதாரணமாக, சிங்காய்ங் சங்கத்தின் விஷயத்தில், நல்ல மாசூல் கிடைத்து நல்ல விலைக்குவிற்ற ஒரு வருஷத்திலே, அதற்கு முந்திய வருஷத்தில் நிலையான டிபாஸிட்டாக அதில் கட்டப்பட்டிருந்த 2000 ரூபாயில் 1000 ரூபாய் மாத்திரமே அதற்குத் தேவையாயிருப்பதாகத் தெரியவந்தபடியால், 1000 ரூபாயை அது திருப்பிக் கொடுத்துவிட்டது. இந்த வருஷத்திலும் மாசூல் விஷயமாய் அந்த சங்கத்துக்கு அதிருஷ்டமுண்டாகும் பட்சத்தில் பாக்கி 1000 ரூபாயையும் அடுத்த வருஷத்தில் அது திருப்பிவிடக் கூடும்.

ஒரு சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களில் எத்தனைபேர் அந்த சங்கத்திலிருந்து ஜாக்கிரதையாய்க் கடன் வாங்குவதனால் கடைசியில் கடன் வாங்காமலே தங்கள் வேலையை நடத்தக்கூடிய நிலைக்கு வந்திருக்கிறார்களோ அதையும், உள்ளூரார் மிகுத்துவைத்த ஐவேஜில் எவ்வளவு தொகையை அந்த சங்கம் ஆகர்ஷிக்கக் கூடியதாயிருந்ததோ அதையும் ஒட்டியே அந்த சங்கத்தின் காரிய சித்தியை நிதானிக்க வேண்டுமே யன்றி, அதன் ஐவேஜுத் தொகையைக் கொண்டாவது அதற்குக் கிடைத்த லாபங்களைக் கொண்டாவது நிதானிக்கக்கூடாது.

ரெஜிஸ்ட்ராரும் அவருடைய சிப்பந்திகளும் செய்யவேண்டிய அலுவல்களைக் கூட பல இடங்களில் ஜனங்கள் சரியாய் அறியவில்லை.

பர்மாவிலிருப்பதுபோலவே ஜர்மெனி, ஆஸ்ட்ரியா, இடலி, டென்மார்க் முதலிய தேசங்களிலும் ராயத்துகளுக்குள் நிலச்சுவான்தாரர்கள்ஏராளமாயிருக்கிறார்கள்; ஆகவே, இந்த தேசங்களிலெல்லாம் சங்கங்கள் கடனை வேரறுத்தும் சுபிக்ஷத்தை உண்டாக்கியும் பலிதத்துடன் வேலை செய்துவந்திருப்பதை உத்தேசித்து கவர்ன்மென்டார் பர்மாவும் அதேமாதிரி ப்ரயோஜனத்தை அடைவதற்குத் தகுந்த அவகாசமிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால், கிராமவாசிகளுக்கு சங்கங்களை எப்படி ஏற்படுத்துவதென்றும் அவை

களை எப்படி நடத்துவதென்றும் கற்பித்தாலொழிய சங்கங்களை ஏற்படுத்துவது சாத்திபமாயிராது.

ஆகையினால், கவர்ன்மென்டார், ஒரு கலெக்டரை ரெஜிஸ்ட்ராராக நியமித்து இதையெல்லாம் ஜனங்களுக்கு விவரித்துச் சொல்வதற்காக அவருக்கு உதவி உத்தியோகஸ்தர்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ரெஜிஸ்ட்ரார் வழிகாட்டியாயிருக்கிறார். ஜனங்கள் அவர்காட்டும் வழியே நடந்தாலும் நடக்கலாம், நடக்கா விட்டாலும் விடலாம்; அது அவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது. அவர் காட்டின் வழியே நடந்தவர்கள் சங்கங்களை ஏற்படுத்தி சுகஜீவிகளாயிருக்க, அந்த வழியே செல்லாததனால் தாங்கள் தட்டுக்கட்டு அலைந்து தங்கள் வாழ்நாளில் அநேக கஷ்டங்களுக்கு ஈடுகொடுக்க வேண்டியதாயிருப்பதாக சிலர் பிற்பாடு அறிந்தால், அதற்கு அவர்களே உத்தரவாதிகளாவார்கள்.

ஆகவே ரெஜிஸ்ட்ராரும் அவருடைய சிப்பந்தியும் செய்யவேண்டிய வேலை யென்னவென்றால், வழியைக் காட்டுவதும், அதில் இன்னின்ன இடங்களில் திரும்பக்கூடா தென்றும், இன்னின்ன இடங்களில் போக வொட்டாமல் தடுக்கும் இடைஞ்சல்கள் இருக்கின்றன வென்றும் குறிப்பிட்டு அவைகளினின்று எப்படி விலக்கிக் கொள்ளலா மென்பதை எடுத்துச் சொல்லுவதுமாகும். மாதிரி சகாயச்சட்டங்களை அவர் ஏற்படுத்திக் கொடுத்து, அவைகளின் நோக்கம் கடனை முழுவதும் ஒழிப்பதேயன்றி லாபத்தை உத்தேசித்த கடன் கடை யொன்றை ஸ்தாபித்து மெம்பர்களை அதில் சிக்கவைத்து அவர்கள் முன்னிருந்ததைவிட அதிக கடன்காரர்களாகும்படி செய்வதல்ல வென்பதை விவரித்துச் சொல்வார்.

ஒரு கிராமத்திலுள்ளவர்கள் அவருடைய புத்திமதியைக் கேட்டு ஒருசங்கத்தை ஏற்படுத்தும்படி நிச்சயித்தால், பஞ்சாயத்தார்கள் கெட்ட பேர்வழி-சங்கத்தில் சேருவதைத் தடுக்கும் பொருட்டும் மெம்பர்களெல்லாம் சேர்ந்து மொத்தத்தில் சுமார் இவ்வளவு பொறுப்புள்ளவர்களென்று தீர்மானிக்கும் பொருட்டும் அவர்களின் யோக்கியதையைப் பற்றி நிதானிக்கவேண்டும்.

அதன்மேல், பஞ்சாயத்தார்- மெம்பர்களுக்கு இன்னின்னது வேண்டியிருக்கு மென்பதைப் பற்றி ஜாக்கிரதையாய் விசாரிப்பது மல்லாமல், அவர்கள் உள்ளூரிலுள்ள சாவ்கார்களை நாடித் தங்களுக்குக் கிடைக்கும் லாபங்களில் பெருந் தொகைகளை அதிக வட்டி கொடுத்தே வீணாக்குவதனின்றும் அவர்களைத் தப்புவித்து அவர்களுக்குத் தேவையான திரவிய சகாயம் செய்வதற்காக சங்கம் எவ்வளவு கடன் வாங்கவேண்டு மென்பதைப்பற்றியும் கவனிக்க வேண்டும்.

பிறகு அவர்கள் சங்கத்தின் சொத்தையும், கண்ணியத்தையும், பொதுவான யோக்கியதையையும் உத்தேசித்து என்னென்ன தேவையோ அதைப் பற்றிக் கவனித்து, ஸென்ட்ரல் பாங்கிகளிலிருந்து எவ்வளவு தொகை கடன் வாங்கவேண்டு மென்பதை நிச்சயிக்கவேண்டும்.

ஷை பஞ்சாயத்தார்-கடன்கள் சரியானபடி பட்டுவாடா செய்யப்படுகின்றனவா வென்றும், மெம்பர்களிடத்திலிருந்து போதுமான ஜாமீன் வாங்கப்படுகிறதா வென்றும், பாங்கிக்கோ டிபாஸிட்செய்திருக்கும் தனிநபருக்கோ அவருடைய பணம் வட்டியுடன் பாக்கியாகும் தேதியில் திருப்பிச் செலுத்தப்படுகிறதா வென்றும் பார்க்கவேண்டும்.

பயிரிடுவோருக்கு சுலப வட்டிக்குப் பணம் கிடைக்கும்படி உதவிசெய்து அவர்கள் கடனிலிருந்து மீண்டு க்ஷேமமாயிருக்கும்படி செய்வதற்காகக் கவர்ன்மென்டார் ஏன் இவ்வளவு கவலை யெடுத்துக்கொள்ளவேண்டு மென்று சிலர் கேட்கலாம்.

அவர்கள் இந்த விஷயத்தைக் குறித்து யோசித்துப் பார்த்தால், கடனில் முழுகி அதிருப்தியுடன் ஜீவிக்கும் ஜனங்களைக் காட்டிலும் திருப்தியுடன் க்ஷேமமாய் வசிக்கும் ஜனங்களை ஆளுவதே சுலப மென்றும், கடன் ஒழிந்தால் குற்றங்களும் லிடிகேஷன்களும் குறைவு மென்றும், அதிக பணக்காரர்களாயுள்ள நிலச்சுவான்தார்கள் சிலரும் ஏழ்மைபால் வருந்தும்குடித்தனக்காரர்கள் பலரும் இருப்பதைவிட ரயத்துகளுக்குள் செல்வ நிலைமையிலுள்ள நிலச்சுவான்தார் அநேகரிருப்பது தான் கவர்ன்மென்டுக்கு நல்லதென்றும் அவர்கள் அறிவார்கள். சுருங்கச் சொன்னால் ஆளுவோரின் க்ஷேமமானது ஆளப்படுவோரின் க்ஷேமத்தையே பொறுத்ததாகும்.

பாங்கிகள் அல்லது டிபாஸிட் செய்யும் நபர்களுக்கும் சங்கத்துக்கும் லேவாதேவி ஏற்படுத்துவதற்கு முன்னமே சங்கத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் வற்புறுத்துவானேன் என்று சிலர் கேட்கலாம். ஒரு பாங்கியையோ அல்லது ஒரு திரவியவந்தரையோ தனியே ஒரு குடியானவனுக்காவது பத்து குடியானவர்களுக்குக் குறைந்துள்ள ஒரு சங்கத்துக்காவது பணம் கடன் கொடுக்கும்படி ரெஜிஸ்ட்ரார் கேட்டால், அந்த பாங்கியார் அல்லது திரவியவந்தர் உடனே கொடுக்கமாட்டோமென்று மறுத்துவிடுவார்கள்; ஒரு தனி நபராயிருந்தாலுஞ்சரி, சிலர் ஒரு கூட்டமாய்ச்சேர்ந்திருந்தாலுஞ்சரி, அவர்கள் இறந்து விடலாம், அல்லது ஓடிப்போய் விடலாம், அல்லது பணத்தை அடித்துக்கொண்டுபோய் விடலாம்; ஆகையினால் அவர்களை நம்பமாட்டோம் என்று அவர்கள் சொல்லுவார்கள்; மேலும், நூறு அல்லது இருநூறு ரூபாயைப்போல் சிறிய தொகைகளைக் கடன் கொடுக்க அவர்கள் இஷ்டப்பட மாட்டார்கள். காட்டுப்பசுக்கள் ஒரு மந்தையாயிருக்கும்போது எப்படி பலமுள்ளவையாய்ப் புலிகளின் பயமில்லாமல் பத்திரமாயிருக்குமோ, தனிக் குச்சிகள் பலவீனமா யிருந்தாலும் எப்படி பல குச்சிகள் சேர்ந்த ஒரு கட்டானது பலமுள்ளதா யிருக்குமோ அப்படியே ஒரு சங்கத்திலும் பலமுண்டு.

கிராமத்தில் தற்போது கடன் வாங்கவேண்டிய அவசியமிராத பணக்காரர்கள் எதற்காக சங்கத்தில் சேரவேண்டுமென்று மற்றும் சிலர் கேட்க

லாம். தங்களைவிட எளிய நிலமையிலிருக்கும் தங்கள் சகோதரர்களுக்கு உதவி செய்வதனால் அவர்களுக்குக் கிடைக்கும் நல்ல பெயர் ஒரு பக்கமிருக்கட்டும்; ஒரு சிப்பாய் தன்னுடைய ரெஜிமென்டுடன் எவ்வளவு சேர்ந்திருக்கலாமோ அவ்வளவு சேர்ந்திருப்பதனால் தனக்குத் தானே உதவிசெய்து கொள்வது போல அவர்கள் சங்கத்தில் சேருவதனால் தங்களையும் தாங்கள் இருக்கும் கிராமத்தையும் பலப்படுத்திக் கொள்கிறார்கள். ஒரு கிராமம் மனுஷதேகத்தை ஒத்திருக்கிறது; அதில் ஏதாவதொரு அவயவம் தன்னுடைய வேலையைச் செய்ய மறுத்தால், அந்த அவயவம் மாத்திரமேயல்லாமல் தேகம் முழுவதும் அதனால் கஷ்டப்படும். ஒரு பணக்காரனுக்கும் துரதிருஷ்டதசை ஏற்பட்டு ஒரு காலத்தில் கடன் வாங்கும்படி நேரிடலாம்: அவன் ஒரு சங்கத்தில் சேர்ந்திருந்தால், அவனுக்கு வேண்டியிருக்கிற பொழுது கடன் கிடைப்பது நிச்சயம். அன்றியும் சிலர் பணக்காரராயிருப்பதற்கு அவர்களுடைய புத்திசாலித் தனமே காரணமாயிருந்திருக்கலாம்; ஆகையினாலேயே அவர்கள் தங்களைவிட ஏழையாயுள்ளவர்களுக்கு புத்தி புகட்ட விசேஷயோக்கியதையுடையவர்களாயிருக்கிறார்கள்.

சங்கத்தில் சேருவதனால் அவர்களுக்குப் பத்திர மேற்படுகிறது; ஏனெனில், சங்கத்தின் வேலையை நடத்துவதில் அவர்களே முன்னின்று, எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே கடன் கொடுக்கும்படி ஜாக்கிரதையாயிருப்பதாலும் அந்தக் கடன்கள் சரியானபடி லாபகரமான காரியங்களில் உபயோகிக்கப்படுகின்றனவா வென்று பார்ப்பதாலும் அவர்கள் தவறுதல்களும் நஷ்டங்களும் நேரிடாதபடி சுலபமாய்த் தடுக்கலாம்.

1910-1911-ம் கோ-ஆபரேடிவ் வருஷத்துக்கு

சென்னை ஸென்ட்ரல் அர்பன்பாங்கி (லிமிடெட்) யின்

தணிக்கை ரிபோர்ட்.

18-ம் ந. உள்ள சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி (லிமிடெட்) யின் கணக்குகளைத் தணிக்கை செய்யும்படி எனக்கு உத்தரவு செய்து 1911-ம் ஆண்டு மேமீ 17உ நீங்கள் பிறப்பித்த 1628-ம் ந. ஸர்க்யுலரின் பிரகாரம், 1911-ம்வரு ஜூன்மீ 30உ யோடு முடிவாகிற வருஷத்தில் இந்த பாங்கியின் வேலையைப்பற்றி அடியிற்கண்ட ரிபோர்ட்டை நான் அனுப்புகிறேன்.

2. முந்தின வருஷத்தின் முடிவில் பாங்கியிலே 133 மெம்பர்கள் இருந்தார்கள். இந்த வருஷத்தில் இரண்டு மெம்பர்கள் புதிதாய்ச் சேர்க்கப்பட்டார்கள்; ஒரு மெம்பர் இறந்துவிட்டார்; 3 மெம்பர்கள் தங்கள் பங்குகளை மாற்றிக்கொண்டார்கள். ஆகவே இந்த வருஷத்தின் முடிவில் இருந்த மெம்பர்களின் சங்கியை 131.

3. வருஷ ஆரம்பத்தில் தொகை செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 82,000; இந்த வருஷத்தில் வசூலிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 18,000; ஆகவே வருஷமுடிவில் பங்கு மூலதனம் என்னும் தலைப்பின்கீழ் பாங்கியின் கடன் 1,00,000 ரூபாயாயிற்று.

4. பாங்கியிலே வருஷ ஆரம்பத்தில் மெம்பர்களால் 4,96,041-0-0 ரூபாயும் மெம்பரல்லாதவர்களால் 3,20,084-15-1 ரூபாயும் நிலையான டிபாஸிட்டாகக் கட்டப்பட்டிருந்தன; ஆகவே இந்தபாபத்தில் பாங்கியின் மொத்த கடன் ரூ. 8,16,12 -15-1 ஆயிற்று இந்த வருஷத்தில் வரப்பெற்ற டிபாஸிட்டுகள் மெம்பர்களிடத்திலிருந்து ரூ. 6,01,082-5-0, மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து ரூ 2,33,892-15-1; இதர கடன் தொகைகளில் 1911-ம் ஆண்டு ஜூன்மீ 30உவன்று செலுத்தப்படாமல் பாக்கியாய் நின்றது ரூ. 83,413-13-10. இந்த வருஷத்தில் திருப்பிக்கொடுக்கப்பட்ட தொகை ரூ. 4,42,519-11-4; ஆகவே வருஷ முடிவில் பாக்கியாய் நின்ற கடன் தொகையின் மொத்தம் ரூ. 12,94,995-6-6.

5. டிபாஸிட்டுகளின் மேலும் பாங்கி வாங்கும் இதர கடன்களின்மேலும் அது வருஷத்துக்கு நூற்றுக்கு 2 முதல் 6 வரையில் வட்டி கொடுக்கிறது.

6. இந்த வருஷத்தில் பாங்கியால் வாஸ்தவமாய்க் கொடுக்கப்பட்ட வட்டியின் தொகை ரூ. 51,957-14-8; கொடுக்கவேண்டியதாய் பாக்கியாகி இன்னும் செலுத்தப்படாமலிருந்த வட்டியின் தொகை ரூ 32,170-7-9. முந்தின வருஷத்தின் முடிவில் இன்னும் செலுத்தப்படாமல் நின்ற வட்டியின் தொகை ரூ. 23,536-3-8. ஆகவே, லாபநஷ்ட கணக்கில் செலவாகக் காண வேண்டிய தொகை ரூ. 60,542—2—9

7. இந்த வருஷத்தில், கிரமமான தேதிகளில் வட்டியைச் செலுத்தத் தவறினதன் பொருட்டு அபராத வட்டியாக 208-5-8 ரூபாயும், சங்கம் முதலியவைகளுக்குப் பணம் அனுப்பும் விஷயத்தில் இன்ஷ்யூரன்ஸ், ரெஜிஸ்ட்ரேஷன், மணியார்டர் கம்மிஷன், இவைகளின் பொருட்டு பிடித்த செலவுக்காகக் கொடுக்கப்பட்ட கட்டணங்களாக 636-2-0 ரூபாயும் பாங்கி வரப்பெற்றது. இந்த வருஷத்தில் 4 பங்குகள் ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டதால் பாங்கிக்கு ட்ரான்ஸ்பர் கட்டணமாக 20 ரூபாய் கிடைத்தது.

8. வருஷ ஆரம்பத்தில் கடன்கள் என்னும் தலைப்பின்கீழ் பாங்கிக்கு பாக்கியாயிருந்த தொகையின் மொத்தம் ரூ. 9,-1,65?; இதில் மெம்பர்களுக்கு 8 கடன்களும், 1904-ம்வருஷத்து 10-வது ஆக்டாகிய ஐக்கிய நாணயச்சங்கங்களைப்பற்றிய ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள சங்கங்களுக்கு 465 கடன்களும் கொடுக்கப்பட்டன; மெம்பர்களுக்கு கடன்கொடுத்த மொத்தம் ரூ. 15,450; சங்கங்களுக்குக் கடன்கொடுத்த மொத்தம் ரூ. 9,06,200. இந்த வருஷத்தில் மெம்பர்களுக்கு 39,400 ரூ. மொத்தமுள்ள 21-கடன்களும், சங்

கங்களுக்கு 8,16,550 ரூபாய் மொத்தமுள்ள 381 கடன்களும் கொடுக்கப்பட்டன. மெம்பர்களிடத்திலிருந்து 30,600 ரூபாய் மொத்தமுள்ள 19 கடன்களும் சங்கங்களிடத்திலிருந்து 3,09,050 ரூபாய் மொத்தமுள்ள 79 கடன்களும் இந்தவருஷத்தில் வசூல் செய்யப்பட்டன. வருஷக்கடைசியில் மெம்பர்களால் 24,250 ரூபாய் மொத்தமுள்ள 10 கடன்களும் சங்கங்களால் 14,13,700 ரூபாய் மொத்தமுள்ள 767 கடன்களும் வசூலாகாமல் பாக்கியாய் நின்றன. வருஷக்கடைசியில் கடன்கள் பாபத்தில் பாங்கியின் ஆஸ்தி ரூ. 14, 37,950.

9. சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின்மேல் வருஷத்துக்கு நூற்றுக்கு 7½ வீதமும், மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின்மேல் வருஷத்துக்கு நூற்றுக்கு 7 வீதமும் வட்டி வாங்கப்பட்டது.

10. இந்த வருஷத்தில் பாங்கிக்குக் கிடைத்த வட்டியின் தொகை ரூ. 80,234-2-5 ; பாக்கியாய் வசூலிக்கப்படாமல் நின்ற வட்டியின் தொகை ரூ. 28,745-10-8. முந்தின வருஷக் கடைசியில் வசூலிக்கப்படாமல் நின்ற தொகை ரூ 17,965-10-4. ஆகையினால், லாப நஷ்டக் கணக்கில் வரவு வைக்கக்கூடிய தொகை ரூ. 91,014-2-9.

11. சிப்பந்தி செலவுகளுக்காக இந்த வருஷத்தில் பிடித்த தொகை ரூ. 118. வருஷக்கடைசியில் பட்டுவாடாசெய்யாமல் நின்றிருந்த தொகை ரூ. 103. முந்தின வருஷக் கடைசியில் பட்டுவாடா செய்யாமல் நின்றிருந்த தொகை ரூ. 43. ஆகையினால், லாப நஷ்டக்கணக்கில் சிப்பந்தி செலவு என்னும் தலைப்பின்கீழ் செலவாக காணக்கூடிய தொகை ரூ. 1,178-0-0.

12. கன்டின்ஜென்ட் செலவுகளுக்காக இந்த வருஷத்தில் பிடித்த தொகை ரூ. 1,672-4-0 ; இதில், ரூ. 601-3-0 பணமனுப்புவதற்காகவும், ரூ. 165-13-9 தபால் செலவுகளுக்காகவும், ரூ. 320-5-3 அச்சிடுவதற்காகவும், காகிதம் பேனா முதலியவை வாங்குவதற்காகவும், ரூ. 132-10-0 கணக்குப் புஸ்தகங்கள் வாங்குவதற்காகவும், ரூ. 75 ஒரு பைசிகில் வாங்குவதற்காகவும், ரூ. 47-11-0 விளம்பரம் பிரசுரிக்கும் செலவுகளுக்காகவும், ரூ 210 நிர்வாக சபையைச் சேர்ந்த மெம்பர்கள் மீடிங்குகளுக்கு வருவதற்கான கட்டணங்களுக்காகவும் பிடித்தது; இதுபோக சமிதியாயுள்ளது அவசியமான இதர சில்லரை செலவுகளுக்காகப் பிடித்த தொகைகளாகும். இந்தசெலவுகளெல்லாம் நியாயமானவையாயும் தவிர்க்கக்கூடாதவைகளாயுமிருந்தன.

13. இந்த வருஷத்தில் பாங்கியின் நிகர லாபம் ரூ. 28,787-5-[illegible] 17-ம் நெ. சகாயச்சட்டத்தின்படி, இதில் கால்பாகத்தை, அதாவது, 7,196-13-4 ரூபாயை, சேமநிதியுடன் சேர்த்து, எட்டிலொரு பாகத்தை, அதாவது, 3598-6-8 ரூபாயை, உதவி காரியதரிசிக்கு கௌரவ சம்மானமாக கொடுக்கவேண்டும்; பாக்கியிருக்கும் எட்டில் மூன்றுபாகத்தை, அதாவது, 17992-1-2 ரூபாயை, வருஷாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்

கப்படுகிறபடி ஈவுத்தொகையாகவோ, உபகாரத்திரவியமாகவோ அல்லது வேறே விதமாகவோ பங்கிடு செய்யலாம்.

14. மூன்றாவது வருஷத்தின் கடைசி தினத்தில் பாங்கியின் சேமநிதி 2,330-5-0 ரூபாயாயிருந்தது. போன வருஷத்து தணிக்கை உத்தரவின்படி 8,517-11-0 ரூபாய் அதனுடன் சேர்க்கப்பட்டது. ஆகையினால் ஏற்கனவே சேர்க்கப்பட்டிருக்கும் சேமநிதியின் மொத்தம் ரூ. 10,848. இந்த வருஷத்தில் லாபங்களிலிருந்து சேமநிதிக்காக வரவுவைக்கவேண்டிய தொகை ரூ. 7,196-13-4. ஆகவே, 1911-ம் ஜூன்மீ 30உயன்று சேமநிதியின் மொத்தம் 18044-13-4 ரூபாயாகும்.

15. இந்த வருஷத்தில் ஒரு பொதுக் கூட்டமும் 12 டைரெக்டர்களின் மீட்டிங்குகளும் நடந்தன; இவைகளில் எதுவும் கோரம் (quorum) சேராத காரணத்தினால் தள்ளிவைக்கப்படவில்லை.

16. பாங்கியின் வேலை முழுவதும், வழக்கம்போல், காரியதரிசியினாலேயே திறமையாய் நிர்வஹிக்கப்பட்டு வருகிறது. பாங்கியின் லேவாதேவிகள் தினே தினே விருத்தியாய்க்கொண்டுவருவதை உத்தேசித்தால், கணக்குகள் சரியாய் வைக்கப்படுவதற்காகத் தன்னுடைய முழுகாலத்தையும் இந்த வேலைக்கே உபயோகப்படுத்தக்கூடிய ஒரு ஹெட் அக்கௌன்டன்ட் அல்லது மானேஜரை நியமிப்பது அவசியமென்று நான் நினைக்கிறேன். 1910-1911-ம் வருஷத்துக் கணக்குகளை தணிக்கை செய்யும்பொழுது தவறுதல்களாகவும் விட்டுப் போனவைகளாகவும் எனக்குத் தென்பட்ட விஷயங்களைக் குறித்து பிரத்தியேகமாக ஒரு ரிபோர்ட்டு அனுப்புகிறேன்.

சென்னை
1911-ஞு ஜூலைமீ 27உ

(ஒப்பம்) பி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை,
ஸ்பெஷல் டெப்யுடி கலெக்டர்.

வரவு.

	ரூ.	அ.	ப.
பங்குக்காக செலுத்தப்பட்ட தொகைகள்	18,000	0	0
பிரவேச கட்டணம்...	...	...	...
மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள்	6,04 082	5	4
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கப்பட்ட கடன்கள் ...	3,17,806	12	11
மெம்பர்களால் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள்	30,600	0	0
இதர சங்கங்களால் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் ...	3,09,050	0	0
வரப்பெற்ற வட்டி	80,234	2	5
சரிக்கட்டுவதற்கான தலைப்புகள்	1728	2	2
இதர வரும்படி	987	10	9
மொத்த வரும்படி	13,61,989	1	7
ஆரம்பத்தில் கையிருப்பு	4 513	0	7
ஆரம்பத்தில் கையிருப்புட்பட வரவுகளின் பெருமொத்தம் ...	1366502	2	2

செலவு.

	ரூ.	அ.	ப.
வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்ட பங்கு மூதலனம்	...	...	...
வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்ட டிபாஸிட்டுகள்	3,81,761	4	4
மெம்பரல்லாதவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள்.	60,758	7	0
மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள்	39,400	0	0
இதர சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள்	8,16,550	0	0
கடன்களின் மேலும் டிபாஸிட்டுகளின் மேலும் கொடுக்கப்பட்ட வட்டி	51,957	14	8
செலுத்தப்பட்ட ஈவுத்தொகையும், உபகார நிரவியமும், கௌரவ சம்மானமும்	4,417	9	10
சிப்பந்தி செலவும் கன்டின்ஜென்ட் செலவுகளும்	2,790	4	0
சரிக்கட்டுவதற்கான தலைப்புகள்	3	8	4
சேமநிதியுடன் சேர்க்கப்பட்டது (வாஸ்தவமாய்ச் செலுத்தப்பட்டது)	8,517	11	0
மொத்த செலவு	13,66,156	11	2
காரியதரிசியின் கையிலிருக்கும் முடிவுக் கையிருப்பு... ...	345	7	2
முடிவுக்கையிருப்பு உட்பட செலவின் பெருமொத்தம் ...	13,66,502	2	2

லாபம்.

	ரூ.	அ.	ப.
கிடைத்த வட்டி	91,014	2	9
இதர பாபத்துகள்	1,372	1	2
மொத்தம்	92,386	3	11

நஷ்டம்.

	ரூ.	அ.	ப.
வட்டியாகச் செலுத்தப்பட்டதும் பாக்கியாயிருப்பதும் ...	60,542	2	9
சிப்பந்திகளுக்காகவும் கன்டின்ஜென்ட் செலவுகளுக்காகவும் கொடுக்கப்பட்டதும் பாக்கியாயிருப்பதும்	2,850	4	0
இதர பாபத்துகள்	206	8	0
மொத்தம் ...	63,598	14	9
நிகரலாபத்தைக் கூட்டுக ...	28,787	5	2
	92,386	3	11

ஆஸ்தி.

	ரூ.	அ.	ப.
கையிலிருக்கும் ரொக்கம்	345	7	0
மெம்பர்களால் பாக்கியாயிருக்கும் கடன்கள்	24,250	0	0

	ரூ.	அ.	ப.
இதர சங்கங்களால் பாக்கியாயிருக்கும் கடன்கள்	14,13,700	0	0
பாக்கியாயிருக்கும் வட்டி	28,745	10	8

இதர பாபத்துகள்.

	ரூ.	அ.	ப.			
சேமநிதி...	10,848	0	0			
10-வது பாராவில் விவரிக்கப்பட்ட பலவகைப்பட்டவை	384	6	5			
சரிக்கட்டுவதற்கான தலைப்புகள்	3	8	4	11,235	14	9
மொத்த ஆஸ்தி				14,78,277	0	5

கடன்.

	ரூ.	அ.	ப.
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள் ...	5,76,638	5	0
பாக்கியாயிருக்கும் வட்டி	8,464	4	11
பங்கு மூலதனம்	1,00,000	0	0
மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள்	7,18,362	1	0
மெம்பர்களின் டிபாஸிட்டுகளின் மேல் வட்டி	23,706	2	10
மெம்பர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஈவுத்தொகை ...	20	11	1
கொடுக்கப்படாமல் பாக்கியில் நிற்கும் சிப்பந்திச் செலவும் கன்டின்ஜென்ட் செலவுகளும்	103	0	0

இதர பாபத்துகள்.

	ரூ.	அ.	ப.			
23-வது பாராவைப் பார்க்க	1,728	2	2			
24-வது ,, ...	206	8	0			
27-வது ,, ...	9,417	8	3			
				11,352	2	5
சேமநிதி ...				10,848	0	0
மொத்த கடன் ...				14,49,489	11	3
லாபம் ...				28,787	5	2
மொத்தம் ...				14,78,277	0	5

ரெஜிஸ்ட்ராரின் தணிக்கை உத்தரவு.

1911-ம் ஆம் ஜூன்மீ 30உ யோடு முடிவாகிற வருஷத்துக்கு சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியின் கணக்குகளை, ஸ்பெஷல் டெப்யுடி கலெக்டர் ம-ா-ா-ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் விவரமாய்த் தணிக்கை செய்திருக்கிறார். (1) வரவு செலவுகளைப்பற்றியும் (2) வருஷத்தின் லாப நஷ்

டத்தைப்பற்றியும் (3) 1911-ம் ஜூன் மீ 30உ யன்றைய கையிருப்புச் சீட்டைப்பற்றியும் அவர் ஸ்டேட்மெண்டுகள் அனுப்பியிருக்கிறார்.

2. பிரஸ்தாப வருஷத்தில், பாங்கிக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 28,787-5-2. பாங்கியின் 17-ம் நெ. சகாயச்சட்டத்தின்படி, நிகர லாபத்தில் நாலிலொரு பங்கை, அதாவது, 7,196-13-4 ரூபாயை சேமநிதியில் வரவு வைக்க வேண்டும். ஏற்கனவே யிருக்கும் சேமநிதியாகிய, 10,848 ரூபாயுடன் இதைச் சேர்த்தால், பாங்கியின் சேமநிதி 18,044-13-4 ரூபாயாக உயரும். 7196-13-4 ரூபாயை இந்த பாங்கியானது சென்னையிலுள்ள மதராஸ்பாங்கியில் வட்டிக்குப் போட்டுவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். நிகரலாபத்தின் எட்டிலொரு பாகத்தை, அதாவது 3,598-6-8 ரூபாயை போர்ட் ஆவ் டைரெக்டர்ஸ் கட்டளையிடுகிறபடி காரியதரிசிக்கோ அல்லது உதவி காரியதரிசிக்கோ கொடுக்கவேண்டும். பாக்கித் தொகையாகிய 17,992-1-2 ரூபாயை ஈவுத்தொகையாகவோ, உபகார நிதியமாகவோ மற்றப்படியோ பாங்கியார் தீர்மானிக்கிற பிரகாரம் பங்கிடுவதற்கு உபயோகப்படுத்தலாம்.

3. பாங்கியானது, அதற்குரிய வேலையில் பல துறைகளிலும் அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறது; அல்லாமலும், அதன் விவகாரங்கள் சில விஷயங்களில் இதற்கு முந்திய நான்கு வருஷத்தில் நடந்த விவகாரங்கள் எல்லாவற்றையும் விட அதிகமாயும், இதர விஷயங்களில் இதற்கு முந்திய இரண்டு வருஷங்களில் நடந்த விவகாரங்களனைத்தையும் விட அதிகமாகவோ அல்லது அதே அளவுக்கோ நடந்திருக்கின்றன. பாங்கியானது இதர சங்கங்களுக்குக் கடன்கொடுத்த தொகை 1908-1909-ம்ஆண்டில் 4·24 லக்ஷம் ரூபாயாகவும் 1909-1910-ம் ஆண்டில் 5·58 லக்ஷம் ரூபாயாகவும் இருக்க அது 1910-1911-ம் ஆண்டில் 8·16 லக்ஷம் ரூபாயாக இருந்ததே இதற்கு உதாரணமாகும்.

4. மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகளாலும் மெம்பரல்லாதவர்களால் கொடுக்கப்பட்ட கடன்களாலும் பாங்கிக்கு ஏற்பட்ட கடன் மொத்தமானது 1908-1909-ம் ஆண்டிலும் 1909-1910-ம் ஆண்டிலும் சேர்ந்து 12·62 லக்ஷம் ரூபாயாக இருந்தது; 1910-1911-ம் ஆண்டின் முடிவில் இந்த இரண்டு பாபத்துகளாலும் ஏற்பட்ட கடனானது 12·95 லக்ஷம் ரூபாய் ஆயிற்று. இந்தக் கடனுக்கு ஈடாக பாங்கிக்கு இதர சங்கங்களால் பாக்கியாயிருந்த தொகை 1910-1911-ம் ஆண்டின் முடிவில் 14·13 லக்ஷம் ரூபாய்; இதே பாபத்தில் 1909-1910-ம் ஆண்டில் பாக்கியிருந்தது 9·06 லக்ஷம்ரூபாயும் 1908-1909-ம் ஆண்டில் பாக்கியிருந்தது 4·57 லக்ஷம் ரூபாயும் தான். ஸென்ட்ரல் அர்பன் பாங்கியால் நடத்தப்படும் வேலையில் வசூலிக்க முடியாத கடன்களெதுவும் இருப்பதாக அநேகமாய் ஏற்படாமையாலும், அதிலிருந்து கடன் வாங்கின சங்கங்கள் 1908-1909-ம் ஆண்டின்

முடிவில் 1·39 லக்ஷம் ரூபாயும், 1909-10-ம் ஆண்டின் முடிவில் 1·09 லக்ஷம் ரூபாயும் 1910-11-ம் ஆண்டின் முடிவில் 3·09 லக்ஷம் ரூபாயும் திருப்பிச் செலுத்திவிட்ட படியாலும் (உடன்படிக்கையின்படி ஒரு சங்கமானது அது வாங்கின கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை அதிகப் படுத்தும்படி கேட்டுக் கொள்வதற்கு அந்தக் கடனில் நூற்றுக்கு 10 வீதம் கொடுப்பதே போதுமானது) பாங்கியானது அதற்கு வரவேண்டிய தொகைகளை வசூலிப்பதில் மாத்திரமே யல்லாமல், புதிய சங்கங்கள் ரெஜிஸ்டர் செய்யப்படுவதனால் அது சமாளிக்கவேண்டிய தொகைகள் அதிகப்பட்டுக் கொண்டே வர அதற்குப் போதுமான நிதியைச் சேகரிப்பதிலுங்கூட கார்யசித்தியடைந்திருக்கிறதென்று நன்றாய் ஏற்படுகிறது.

5. நிர்வாககர்த்தர்கள் சிரமத்தைக் கொஞ்சமேனும் பாராமல் வேலை செய்திராவிட்டால், கூட்டுத்தொழில் முயற்சிக்கு இவ்வளவு லாபமும் பிரயோஜனமும் உண்டாக்கத்தக்க பலன்கள் கிடைத்திரா; ஆகையினால், சென்னை ஸென்ட்ரல் பாங்கியால் அனுகூல மடைந்த சகல கூட்டுத்தொழில் சங்கங்களும், அதன் காரியதரிசியாகிய ஸர். வி. ஸி. தேசிகாசாரியாரவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றன. பாங்கி ஈடுகொடுக்க வேண்டிய அம்சங்கள் இது வரையிலிருந்தது போலவே இனிமேலும் சமீபகாலத்தில் வெகுசாய் அதிகரிக்கலாம்; பாங்கியின் வேலையை இதுவரையில் வெகு திறமையாய் நடத்திவந்த அதன் நிர்வாககர்த்தர்கள் இனிமேலும் அது இந்த ராஜதானியில் கூட்டுத்தொழில் முயற்சிக்கு பலமான ஆதாரமாயிருக்கும்படி செய்வார்களென்று கோறுவோம்.

6. பாங்கியின் விவகாரங்கள் விருத்திபாய்க் கொண்டே வருவதால் அதிலுள்ள சிப்பந்திகளுக்கும் வேலை அதிகமாகிறதென்று போனவருஷத்திய தணிக்கை உத்தரவிலேயே குறிப்பிட்டிருந்தது; இப்பொழுது முடிந்த வருஷத்திலும் பாங்கியின் விவகாரங்கள் அதிகப்பட்டிருப்பதனாலும் அதன் கணக்குகளைப்பற்றி ஸ்பெஷல் டெப்யுடி கலெக்டர் அனுப்பியிருக்கும் ரிபோர்ட்டினாலும் மேலே குறிப்பிட்ட அபிப்பிராயம் மிகவும் சரியானதென்று ஏற்படுகிறது; இந்த ரிபோர்ட்டின்மேல் பிரத்தியேகமாய் உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். நிர்வாக சபையார் இந்த விஷயத்தைக் குறித்துக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியின் கணக்குகளைப் பரிசோதித்துத் தணிக்கை செய்வதில், ஸ்பெஷல் டெப்யுடி கலெக்டர், மாண்-ஸ்ரீ பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் பி. ஏ. மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார்; இந்தக் கஷ்டமான வேலையை, இந்த டெப்யுடி கலெக்டர் விசேஷ திறமையுடன் செய்து முடித்திருக்கிறாரென்பதே என்னுடைய அபிப்பிராயம்.

8. இந்த வருஷத்தில் பாங்கியால் விதித்து வாங்கப்பட்ட அபராத வட்டியின் தொகையானது 208-5-8 ரூபாயாயிற்று; இதே பாபத்தில் முந்திய வருஷத்தில் கிடைத்த தொகை 50-3-0 ரூபாய்தான். மாதமொன்றுக்கு நூற்றுக்கு ½ வீதம் கணக்கிட்டு வாங்கப்பட்ட அபராத வட்டியைப் பார்த்தால், வருஷத்தின் பாங்கிகளில் நூற்றுக்கு 13 வீதம்தான் ஒரு பாதத்தில் கட்டத்தவறின தொகையின் மொத்தமென்று ஏற்படுகிறது. பணத்தைக் காலந்தவறாமல் செலுத்தும்படி செய்வதையே முக்கிய நோக்கமாகவுடைய ஐக்கியநாணயச் சங்கங்களுக்கு இந்த வீதம் அதிகம் தான்; ஆகையினால் இதில் சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர்கள், கடன் வாங்கும் சங்கங்களின் பஞ்சாயத்துக்கள், மற்றும் எல்லாரும் இந்த விஷயத்தைப்பற்றிக் கவனிக்க வேண்டும்.

சென்னை,
1911-ம் வரு ஆகஸ்ட்மீ 6உ (ஒப்பம்) எல். டி. ஸ்வாமிக்கண்ணு,
ரெஜிஸ்ட்ரார்.

151-ம் நெ. உள்ள சேலம் ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட். என்னும் பாங்கியின் 1910-11-ம் வருஷத்துக் கணக்குகளைப்பற்றிய தணிக்கை ரிபோர்ட்.

1911-ம்வரு ஜூன்மீ 30உயோடு முடிவாகிற கோ-ஆபரேடிவ் வருஷத்துக்கு 151-ம் நெ. உள்ள சேலம் ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட், என்னும் பாங்கியின் கணக்குகளை தணிக்கை செய்து அடியிற்கண்ட ரிபோர்ட்டை நான் வினயத்துடன் அனுப்புகிறேன். இந்த ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷமானது இந்த பாங்கி ஏற்படுத்தப்பட்டு மூன்றாவது வருஷமாகிறது.

2. முந்திய வருஷத்தின் முடிவில், பாங்கியிலே 85-மெம்பர்கள் இருந்தார்கள். இந்த வருஷத்தில் 2-மெம்பர்கள் இறந்துபோகவே, அவர்களின் வாரிசுகள் இறந்துபோனவர்களின் பாத்தியதைகளுக்குப் பிரதிநிதிகளாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பங்கு மூலதனம் மாற்றப்பட்டதுகாரணமாக இரண்டு மெம்பர்கள் சேர்க்கப்பட்டார்கள். பதினொன்று மெம்பர்கள் தங்கள் பங்குகளை வாபஸ் வாங்கிக்கொண்டபடியால் பாங்கியிலிருந்து விலகிவிட்டார்கள். ஆகவே, வருஷக் கடைசியிலிருந்த மெம்பர்களின் சங்கியை 73.

3. வருஷ ஆரம்பத்தில் தொகை செலுத்தப்பெற்ற பங்கு மூலதனம் 24,900 ரூபாயாயிருந்தது. இந்த வருஷத்திலே இந்த பாபத்தில் 7950 ரூபாய் வந்தது. இதில் மூன்றாவது தடவை பங்குக்காகத் தொகை செலுத்தும்படி கேட்டதில் வருவானது ரூ. 5150; பங்குகள் மாற்றப்பட்டதனால் கிடைத்தது ரூ. 2800. பங்கு மூலதனத்தில் இந்த வருஷத்திலே திருப்பிச் செலுத்திவிடப்பட்ட தொகை ரூ. 2850. ஆகவே வருஷக்கடைசியில் தொகை செலுத்தப்பெற்ற பங்கு மூலதனம் 30,000 ரூபாயாயிருந்தது. இந்த வருஷத்தில் பங்குக்காகத் தொகை செலுத்தும்படி பாங்கியின் பங்குக்காரர்களை மறுபடியும் கேட்கவில்லை.

4. முந்திய வருஷங்களிலிருந்ததுபோலவே, நாட்டுச் சங்கங்கள் கேட்கும் பிரதிகடனையும் ரெஜிஸ்ட்ரார் ஜாரிசெய்தவுடனே அதற்கு வேண்டிய நிதியைச் சேகரித்துக் கொடுப்பதில் இந்த பாங்கிக்கு எவ்வித கஷ்டமு மேற்படவில்லை என்பது சந்தோஷிக்கத்தக்க விஷயமே. அடியிற்கண்ட தொகைகள் பாங்கியால் இந்த வருஷத்தில் கடன் வாங்கப்பட்டன:—

	ரூ.	அ.	ப.
மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள்	10,550	4	0
சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி, லிமிடெட்	41,000	0	0
இதர கூட்டுத்தொழில் சங்கங்கள்	50,000	0	0
மெம்பரல்லாதவர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள் ...	30,000	1	8
(இந்தத் தொகையில், சேலம் ஜில்லாவிலுள்ள கூட்டுத் தொழில் சங்கங்களின் சேமநிதிகளும் அடங்கியிருக்கிறது)			
சேலம் அர்பன் கோ-ஆபரேடிவ் ஸொஸைடி, லிமிடெட், என்னும் சங்கத்தால் கட்டப்பட்டிருக்கும் நடைமுதல் டிபாஸிட்	23,940	4	5
இந்தியன் பாங்கி, லிமிடெட்	43,500	0	0
...	2,02,090	6	1

இந்த வருஷத்தில் அடியிற்கண்ட தொகைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன:—

மெம்பர்களின் டிபாஸிட்டுகள்	4,570	0	0
சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி, லிமிடெட்	37,800	0	0
இதர கூட்டுத்தொழில் சங்கங்கள்	20,000	0	0
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகள்	4,421	1	8
சேலம் அர்பன் கோ ஆபரேடிவ் ஸொஸைடி, லிமிடெட், என்னும் சங்கத்தின் நடைமுதல் டிபாஸிட்டுகள்	25,174	0	5
இந்தியன் பாங்கி, லிமிடெட்	1,14,500	0	0
மொத்தம் ...	2,56,465	5	1

டிபாஸிட்டுகளாகவும் இதர விதமாகவும் பாங்கி கடன் வாங்கின தொகைகள் வருஷ ஆரம்பத்திலும் முடிவிலும் அடியிற்கண்டபடி இருந்தன:—

1910-1911-ம் வருஷத்தின் ஆரம்பத்தில்.

மெம்பர்களின் டிபாஸிட்டுகள்	27,770	0	0
சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி, லிமிடெட்	52,800	0	0
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகள்	17,880	8	9
சேலம் அர்பன் கோ-ஆபரேடிவ் ஸொஸைடி, லிமிடெட், என்னும் சங்கத்தின் நடைமுதல் டிபாஸிட்டுகள்	2,050	0	0
இந்தியன் பாங்கி, லிமிடெட்	2,29,500	8	9
மொத்தம் ...	3,29,500	8	9

செம்பராக இல்லாமலே டிபாஸிட்டுகள் கட்டியிருந்த சிலர் மெம்பர்களாய்விட்டதனால், 'மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகள்' என்னும் தலைப்பிலிருந்து 11,900 ரூபாய் 'மெம்பர்களின் டிபாஸிட்டுகள்' என்னும் தலைப்புக்கு மாற்றப்பட்டது.

1910-1911-ம் வருஷத்தின் முடிவில்.

மெம்பர்களின் டிபாஸிட்டுகள்	33,750	0	0
சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி, லிமிடெட்	9,000	0	0

	ரூ.	அ.	ப.
இதர கூட்டுத்தொழில் சங்கங்கள்	30,000	0	0
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகள்	43,559	5	9
சேலம் அர்பன் கோ-ஆபரேடிவ் ஸொஸைடி, லிமிடெட், என்னும் சங்கத்தின் நடைமுதல் டிபாஸிட்டுகள்	816	4	0
இந்தியன் பாங்கி, லிமிடெட்	1,58,000	0	0
...	2,75,125	9	9

மெம்பர்களின் டிபாஸிட்டுகளிலும் மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகளிலும் இந்த வருஷத்தில் முறையே 5980-ரூபாயும் 25,678-13-0 ரூபாயும் அதிகப்பட்டிருக்கிறதென்று மேலே கண்ட ஸ்டேட்மெண்டுகளிலிருந்து தெரியவரும்.

5. இரண்டு வருஷத்து டிபாஸிட்டுகளின்மேல் நூற்றுக்கு 6 வீதமும், இதர டிபாஸிட்டுகள் மேல் நூற்றுக்கு 3,4,5,5¼ வீதமும், இந்தியன் பாங்கியிலிருந்தும் சென்னை ஸென்ட்ரல் பாங்கியிலிருந்தும் இதர கூட்டுத்தொழில் சங்கங்களிலிருந்தும் வாங்கும் கடன்களின்மேல் நூற்றுக்கு 7 வீதமும் இந்த பாங்கியார் வட்டி கொடுக்கிறார்கள்.

இந்த வருஷத்தில் வட்டியாக கொடுக்கப்பட்டதும் பாக்கியானதுமான தொகை அடியிற்கண்டபடி யிருந்தது.

	கொடுக்கப்பட்டது			வருஷமுடிவில் கொடுக்க வேண்டியதாக பாக்கியாய் நின்றது.		
	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.
மெம்பர்களின் டிபாஸிட்டுகள்	1,893	2	9	685	15	8
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள்	1,192	5	10	1,890	4	8
சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியும் இதர கூட்டுத்தொழில் சங்கங்களும் ...	3,422	5	9	557	3	5
இந்தியன் பாங்கி, லிமிடெட்	14,910	10	0	1,948	14	8
	21,423	8	4	5,082	6	5

வருஷக்கடைசியில் எந்த வட்டியும் பாக்கியாக நிற்கவில்லை.

6. வருஷ ஆரம்பத்தில் 2,49,740 ரூபாய் மொத்தமுள்ள 299-கடன்கள் சங்கங்களால் பாக்கியாய் நின்றன; இந்த வருஷத்தில் 64,533-2-0 ரூபாய் மொத்தமுள்ள 31 கடன்கள் கொடுக்கப்பட்டன. 74,768-2-0 ரூபாய் மொத்தமுள்ள 41 கடன்கள் முழுவதும் திருப்பிக்கொடுக்கப்பட்டன; கடன்களுக்கு சிறிதுமட்டில் செலுத்தவைக்கப்பட்ட தொகை ரூ. 29,818-8-0; ஆகவே, வருஷக்கடைசியில 3,09,686-8-0 ரூபாய் மொத்தமுள்ள 219 கடன்கள் பாக்கியாய் நின்றன. இவைகளில் 7,886 8-0 ரூபாய் மொத்தமுள்ள 6 கடன்கள் திருப்பிக்கொடுக்கவேண்டிய காலம் கடந்தும் கொடுக்கப்படாமல் பாக்கியாய் நின்றன. கடன்களைத் திருப்பிக் கொடுக்கத்தவறின சங்கங்கள் அடியிற்கண்டவை:—

1. 104-ம் நம்பர் தாராமங்கலம் நாட்டு நாணய சங்கத்தின் பாக்கி ரூ. 4,986-8-0
2. 168-ம் நம்பர் பள்ளிப்பட்டு நாட்டு நாணய சங்கத்தின் பாக்கி ரூ. 1,000.
3. 119-ம் பாலகோட்டு நாட்டு நாணய சங்கத்தின் பாக்கி ரூ. 1,900

7. இந்த வருஷத்தில் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் மொத்தம் ரூ. 900; வருஷ ஆரம்பத்தில் பாக்கியாயிருந்த தொகை ரூ. 2,850. மொத்த தொகையில், 3,300 ரூபாய் மெம்பர்களால் திருப்பிச்செலுத்திவிடப்பட்டபடியால், வருஷக்கடைசியில் 450 ரூபாய் மாத்திரமே மெம்பர்களால் பாக்கியாய் நின்றது.

8. இந்த வருஷத்தில் வசூலிக்கப்பட்ட வட்டியின் தொகை ரூ. 26,463-10-10; வருஷக்கடைசியில் வசூலிக்கப்படாமல் பாக்கியாய் நின்ற வட்டியின் தொகை ரூ 5031-10-4; பிந்திய தொகையில் ரூ 382-8-0 அதற்குப் பிறகு வசூல் செய்யப்பட்டது.

9 பாங்கியில் மாதமொன்றுக்கு 15 ரூபாய் சம்பளத்தில் ஒரே குமாஸ்தா தான் இருக்கிறார். இந்த பாங்கியார் இன்னுமொரு குமாஸ்தாவை நியமிப்பது மிகவும் உசிதமாகும். சிப்பந்திச் செலவுக்காக இந்த வருஷத்தில் பிடித்த தொகை ரூ. 195.

10. இந்த வருஷத்தில் பாங்கியில் கன்டின்ஜென்ட் செலவுகளுக்காக 163-7-7 ரூபாய் பிடித்தது. ஒவ்வொரு விஷயத்திலும் ரசீதுகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

இந்த தலைப்பின் கீழ் செலவழிந்த பாபத்துகள் எவை யென்றால்.—

		ரூ.	அ.	ப.
1.	வீட்டு வாடகை	60	0	0
2.	தபால் செலவுகள்	28	13	5
3.	ஆபிஸை சேலத்திலிருந்து சென்னைக்கும் மறுபடியும் சென்னையிலிருந்து சேலத்துக்கும் மாற்றினதில் பிடித்த செலவுகள்	24	12	0
4.	ஆபிஸ் செலவுகள்	16	10	0
5.	தொழில் வரி	6	0	0
6.	காகிதம், பேனாமுதலியன	13	9	2
7.	இதர செலவுகள்	13	11	0
	மொத்தம் ...	163	7	7

11. இந்த வருஷத்தில் பலவகையாய் சேர்ந்த வரவுகள் 151-15-0 ரூபாய் ஆயிற்று; இதில், 90 ரூபாய் பிரவேச கட்டணமாகக் கிடைத்தது; 32-8-0 ரூபாய் நாட்டு சங்கங்களால் அபராதங்களாகச் செலுத்தப்பட்டது. சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியில் கட்டி வைத்திருக்கும் சேமநிதியின்மேல் வட்டியாக 15-4-0 ரூபாய் கிடைத்தது; 14-3-0 ரூபாய் அதிகமாய்க் கொடுக்கப்பட்டு மறுபடியும் வசூல் செய்யப்பட்டது.

மேஜை, நாற்காலி முதலிய சாமான்களின் மதிப்புக் குறைவுக்காக இந்த வருஷத்தில் தள்ளப்பட்ட ரூபாய் 8-12-0.

12. மெம்பர்களுக்கு, அவர்களால் முழுவதும் தொகை செலுத்தப்பெற்ற பங்கு மூலதனத்தின் மேல் ஈவுத்தொகையாக ரூ. 1246-6-0 கொடுக்க வேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டது. இந்தத்தொகையில், ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்தில் வாஸ்தவத்தில் பங்கிடப்பட்ட தொகை ரூ. 1,128-12-0; ரூ. 103-14-0 நடக்கும் வருஷத்தில் பங்கிடப்படும். மிகுதி 13-12-0 ரூபாயை ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதியுடன் சேர்த்துவிடலாம்.

13. வருஷ ஆரம்பத்தில் பாங்கியின் சேமநிதி 205 ரூபாயாக இருந்தது; இந்த வருஷத்தில் அந்த நிதியுடன் சேர்க்கப்பட்டது ரூ. 720-5-3. ஆகவே வருஷக் கடைசியில் சேமநிதியின் தொகை ரூ. 1025-5-3.

14. இந்த வருஷத்தில் பாங்கிக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 4,122-7-4 இதில், கால்பாகமாகிய 1033-5-10 ரூபாயை சேமநிதியுடன் சேர்த்துவிட்டு, 300 ரூபாயை 19-ம் நம்பர் சகாயச் சட்டத்தின்படி காரியதரிசிக்குச் சம்மானமாகக் கொடுக்கவேண்டும். பாக்கியிருக்கும் தொகையிலிருந்து, முழுவதும் தொகை செலுத்தப்பெற்ற பங்கு மூலதனத்தின் மேல் நூற்றுக்கு 9 வீதம் ஈவுத்தொகை செலுத்த வேண்டுமென்று போர்ட் ஆவ் டைரெக்டர்ஸ் தீர்மானித்திருக்கிறார்கள். ஈவுத்தொகையாக கொடுக்கக்கூடிய தொகையானது அடியிற் கண்டபடி 2,642-7-0 ரூபாயாகிறது :—

					ரூ.	அ.	ப.
22,450	ரூபாயின்மேல்	12	மாதத்துக்கு	... ...	2,020	8	0
5,000	,,	11	,,	... ...	412	8	0
400	,,	10½	,,	... ...	31	8	0
1,100	,,	10	,,	... ...	82	8	0
900	,,	9	,,	... ...	60	12	0
150	,,	7	,,	... ...	7	14	0
150	,,	4	,,	... ...	4	8	0
500	,,	3	,,	... ...	11	4	0
550	,,	2	,,	... ...	8	4	0
300	,,	1	,,	... ...	2	4	0
150	,,	½	,,	... ...	0	9	0
			மொத்தம்	...	2,642	7	0

மிகுதியிருக்கும் 157-10-6 ரூபாயையும் போன வருஷத்து ஈவுத்தொகையில் (11-வது பாராவைப் பார்க்க) பங்கிடப்படாமல் நின்ற 13-12-0 ரூபாயையும் ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதியுடன் சேர்க்கவேண்டும். அப்பொழுது இந்த நிதியின் மொத்தம் 1,323-3-10 ரூபாயாகும்.

15. சேலம் கஸ்பாவில் ப்ளேக் வியாதி கண்டிருந்தது காரணமாக பாங்கியின் ஆபிஸ் சிலகாலத்துக்குச் சென்னபட்டணத்துக்கு மாற்றப்பட்டது; மீட்டிங்குகள் அதிகமாகக் கூடாததற்குக் காரணம் இதுதான்.——இந்த வருஷத்தில் ஒரு பொது மீட்டிங்கும் 8-கம்மிட்டி மீட்டிங்குகளும் தான் கூடின; இவைகளில் எதுவும் கோரம் (quorum) இல்லாத காரணத்தைக்கொண்டு தள்ளிவைக்கப்படவில்லை.

16. இந்த ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்தில், நாமக்கல் தாலூகாவை சேலம் ஜில்லாவிலிருந்து திருசிராப்பள்ளி ஜில்லாவுக்கு மாற்றிவிட்டபடியால், சேலம் ஜில்லா அர்பன் பாங்கியில் நாமக்கல் தாலூகாவிலுள்ள சங்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட கணக்குகள் திருசிராப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கிக்கு மாற்றிவிடப்பட்டன. இந்த வருஷத்தில் நடந்த விவகாரங்கள் கொஞ்சமாயிருப்பதற்கு இதுவே சிறிதுமட்டில் காரணமாகும். ஆனால் அதற்கு முக்கிய காரணம், சேலம் கஸ்பாவிலும் ஜில்லா முழுவதிலும் ப்ளேக் வியாதி கண்டிருந்ததேயாம். மொத்தத்தில், இந்த வருஷத்திலே பாங்கி நல்ல வேலை செய்திருக்கிறது. போர்ட் ஆவ் டைரெக்டர்ஸ் பாங்கியின் வேலையில் வாஸ்தவமாய் அக்கறை பாராட்டி வருகிறார்கள். ப்ரெஸிடென்டாகிய ம-ா-ா-ஸ்ரீ பி. வி. நரசிம்மய்யரும், காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ டி. ஆதிநாராயண செட்டியாரும் பாங்கியின் வேலையை பலித்தத்துடன் செய்துவந்ததற்காக நம்முடைய வந்தனத்தைப் பெற அர்ஹர்களாயிருக்கிறார்கள்; மேலும், இந்த வருஷத்தில் ம-ா-ா-ஸ்ரீ என். வி. க்ருஷ்ணய்ய செட்டியாரும் ம-ா-ா-ஸ்ரீ பி. எல். ராமஸ்வாமி நாயக்கரும் ஜில்லாவிலுள்ள அநேக சங்கங்களைப் போய்ப் பார்வையிட்டிருக்கிறார்கள்; அவர்களின் வேலையும் நாம் புகழத்தக்கதே.

17. வரவு செலவுகளைப்பற்றியும், லாப நஷ்டங்களைப்பற்றியும், ஆஸ்தி கடன்களைப்பற்றியும் ஸ்டேட்மெண்டுகள் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

வரவு.

	ரூ.	அ	ப.
பங்குக்காக செலுத்தப்பட்டவை	7,950	0	0
பிரவேச கட்டணங்கள்	90	0	0
மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள்	10,550	0	0
இதர சங்கங்களிலிருந்து வாங்கின கடன்கள்	9,400	0	0
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள் ...	97,540	6	1
மெம்பர்களால் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் ...	3,300	0	0
இதர சங்கங்களால் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் ...	1,04,586	10	0
வரப்பெற்ற வட்டி	26,463	10	10
சரிக்கட்டுவதற்கான தலைப்புகள்	1,82,672	11	4
இதர வரும்படி	61	15	0
மொத்த வரும்படி	5,27,215	5	3
ஆரம்பத்தில் கையிருப்பு	4,566	5	7
பெரு மொத்தம்	5,31,781	10	10

செலவு.

	ரூ.	அ	ப.
வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்ட பங்கு மூலதனம்	2,850	0	0
வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்ட டிபாஸிட்டுகள்	4,570	0	0
இதர சங்கங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் ...	1,07,800	0	0
மெம்பரல்லாதவர்களுக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன்கள்	1,44,095	5	1
மெம்பர்களுக்குக் கொடுத்த கடன்கள்	900	0	0
இதர சங்கங்களுக்குக் கொடுத்த கடன்கள்	64,533	2	0
கடன்களின்மேலும் டிபாஸிட்டுகளின்மேலும் செலுத்தின வட்டி	21,423	8	4
ஈவுத்தொகையாகவும் சம்மானமாகவும் கொடுக்கப்பட்டது	1428	12	0
[illegible]ந்தி செலவும் கண்டின்ஜென்ட் செலவுகளும்	358	7	7
சரிக்கட்டுவதற்கான தலைப்புகள்	1,82,687	12	7

	ரூ.	அ.	ப
சேமநிதியிடம் சேர்க்கப்பட்டது	720	5	3
மொத்த செலவு	5,31,367	4	10
முடிவில் கையிருப்பு	414	6	0
பெரு மொத்தம்	5,31,781	10	10

லாபம்.

கிடைத்தவட்டி	25,709	11	5
இதர பாபத்துகள்	151	15	0
	25,861	10	5

நஷ்டம்.

செலுத்தப்பட்டதும் பாக்கியாயிருப்பதுமான வட்டி... ...	21,345	6	6
சிப்பந்தி செலவுக்காகவும் கண்டின்ஜென்ட் செலவுகளுக்காகவும் கொடுக்கப்பட்டதும் கொடுக்க வேண்டியதும் ...	374	0	7
இதர பாபத்துகள்	8	12	0
மொத்தம் ...	21,728	3	6
நிகரலாபம் ...	4,133	7	4

1911-ம்வரு ஜூன்மீ 30உயன்று ஆஸ்தியும் கடன்களும்.

ஆஸ்தி.

கையிலிருக்கும் ரொக்கம்	414	6	0
சேலத்திலுள்ள மதராஸ் பாங்கியின் ப்ராஞ்சில் இருக்கும் ரொக்கம்	32	11	8
மெம்பர்களிடத்திலிருந்து பாக்கியாயிருக்கும் கடன்கள் ...	450	0	0
இதர சங்கங்களிடத்திலிருந்து பாக்கியாயிருக்கும் கடன்கள் ...	3,09,686	8	0
பாக்கியாயிருக்கும் வட்டி	5,081	10	4
இதர பாபத்துகள்	26	4	0
மொத்தம்	3,15,641	8	0

கடன்.

இதர சங்கங்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள்	39,000	0	0
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள் ...	2,02,875	9	9
மேலேகண்டதன்மேல் வட்டி	4,896	6	9
பங்கு மூலதனம்	30,000	0	0
மெம்பர்களின் டிபாஸிட்டுகள்	33,750	0	0
மெம்பர்களின் டிபாஸிட்டுகளின் மேல் பாக்கியாயிருக்கும் வட்டி	685	15	8
மெம்பர்களுக்கு ஈவுத்தொகை...	117	10	0
ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதி	1,151	13	4
சிப்பந்திசெலவிலும் கண்டின்ஜென்ட் செலவுகளிலும் பாக்கியாயிருப்பவை	15	9	0
இதர பாபத்துகள்	15	0	2
மொத்தம்	3,11,508	0	8
வருஷத்தின் லாபம்	4,133	7	4

சென்னை,
1911-ம் ஜூலைமீ 22உ

(ஒப்பம்) பி. டி. முத்துக்குமாரசுவாமி முதலியார்,
குமாஸ்தா, ஐக்கியநாணய சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் ஆபிஸ், சேப்பாக்கம், மதராஸ்.

ரெஜிஸ்ட்ராரின் தணிக்கை உத்தரவு.

சென்னையில் ஐக்கிய நாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் ஆபிஸ் குமாஸ்தாவாகிய, பி. டி. முத்துகுமாரசுவாமி முதலியாரால் தணிக்கை செய்யப்பட்டபடி, சேலம் ஜில்லா அர்பன் பாங்கியின் 1910–1911-ம்வருஷத்திய கணக்குகள் ஜாரி செய்யப்படுகின்றன.

2. இந்த வருஷத்தில் பாங்கிக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 4,133–7–4; இதை, 19-ம் நம்பர். சகாயச்சட்டத்தின் பிரகாரம் அடியிற்கண்டபடி பங்கிட வேண்டும்:—

	ரூ.	அ.	ப
சேமநிதி	1,033	5	10
காரியதரிசியிடத்திலிருந்து ரசீதுபெற்று அவருக்குக் கொடுக்கவேண்டிய சம்மானம்	300	0	0
ஈவுத் தொகையாகவும் உபகாரத் திரவியமாகவும் கொடுக்கவேண்டிய தொகை	2,800	1	6
மொத்தம் ...	4,133	7	4

3. நிர்வாக சங்கத்தார் பாங்கியின் தொகை செலுத்தப்பெற்ற பங்கு மூலதனத்தின்மேல் வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீதம் ஈவுத்தொகை கொடுக்கவேண்டுமென்று 1911–ம்வரு ஜூலைமீ 10உயன்று அவர்கள் கூடின மீட்டிங்கில் தீர்மானித்ததாகத் தெரியவருகிறது; இதற்கு ரூ. 2,642–7–0 வேண்டியிருக்கும்; மிகுதியிருக்கும் 157–10–6 ரூபாயை ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதியுடன் சேர்க்க வேண்டும்; இப்படி சேர்ப்பதனால் பின் சொன்ன நிதியானது 1,309–7–10 ரூபாயாகும்.

4. சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியில் ஏற்கனவே வட்டிக்குப் போட்டு வைத்திருக்கும் தொகையின்மேல் 1911-ம் வரு ஜூன்மீ 30உ வரையில் அந்த பாங்கியார் கணக்கிட்டுள்ள வட்டி ரூ. 27; ஆகவே 1,033–5–10 ரூபாயில் இந்த 27-ரூபாய் போக பாக்கி 1006–5–0 ரூபாயை இந்த பாங்கியானது ஷெஸென்ட்ரல் அர்பன் பாங்கிக்கு அனுப்பவேண்டும்; அப்பொழுது சேமநிதிக்காக வரவுவைக்கப்பட்ட தொகையின் மொத்தம் 2,058–11–1 ரூபாயாகும்.

5. இந்த வருஷத்தில் ப்ளேக் வியாதி காரணமாக பாங்கியின் வேலை பொதுவாய் சிறிதுகாலம் நிறுத்தப்பட்டதனால் அதற்கு நஷ்டமேற்பட்டது; ஆனால் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ டி. ஆதிநாராயண செட்டியாரவர்கள் இந்தக் காலத்தில் சென்னையில் தங்கியிருந்ததனால் பாங்கியின் வேலையை சென்னையிலேயே நடத்தினார். 9-சங்கங்களுள்ள நாமக்கல் தாலூகாவைத் திருசிராப்பள்ளி ஜில்லாவுக்கு மாற்றிவிட்டதனால், சங்கங்களுக்குக் கொடுத்த கடன்கள் விஷயமாகவும் மெம்பர்களாலும் மெம்பரல்லாதவர்களாலும் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள் விஷயமாகவும் பாங்கியில் நடந்த வேலையின் அளவானது அதிகரிப்பதை விட்டுக் குறைந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும்; ஆயினும், காரியதரிசியானவர் பொதுவாய்க் கூட்டுத்தொழில் முயற்சியின் நன்மைக்காக ஊக்கத்துடன் வேலைசெய்துகொண்டே வந்தார்; கிராம சங்கங்களுக்கும் புத்திபுகட்டி அவைகளுக்கு வழிகாட்டுவதில் அவர் தம்முடைய காலத்தின்

பெரும்பாகத்தைக் கழித்தார். இந்த விஷயத்தில் நிர்வாக சங்கத்தைச்சேர்ந்த இதர மெம்பர்களும் அவருடன் ஒத்துழைத்ததனால், சேலம் ஜில்லாவிலுள்ள சங்கங்கள் அவருக்கு மாத்திரமேயல்லாமல் அந்த மெம்பர்களுக்கும் நன்றி பாராட்ட வேண்டியவைகளாயிருக்கின்றன.

சென்னை,
1911-ம் ஆகஸ்ட் மீ 5உ

(ஒப்பம்) எல். டி. ஸ்வாமிக்கண்ணு
ரெஜிஸ்ட்ரார்.

1911-ம் ஹு ஜூன்மீ 30உ யோடு முடிவாகிற கோ-ஆபரேடிவ் வருஷத்துக்கு திருசிராப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட், என்னும் பாங்கியின் தணிக்கை ரிபோர்ட்.

1911-ம் ஜூன்மீ 30உ யோடு முடிவாகிற பன்னிரண்டு மாதங்களுக்கு 178-ம் நம்பருள்ள திருசிராப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட், என்னும் பாங்கியின் கணக்குகளைத் தணிக்கைசெய்து அடியிற்கண்ட ரிபோர்ட்டை அனுப்புகிறேன். இந்த ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட காலமானது இந்த பாங்கி ஏற்படுத்தப்பட்டு இரண்டாவது வருஷமாகிறது. வருஷ ஆரம்பத்தில் பாங்கியானது குளித்தலையில் இருந்தது; ஆனால் இந்த ஸ்தாபனத்தின் பிரயோஜனத்தை அங்கிருப்பவர்கள் எவ்வளவு நன்றாய் அறிய வேண்டுமோ அவ்வளவு நன்றாய் அறிந்ததாக ஏற்படாததால், மூன்று சென்னையில் ஐக்கியநாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராயிருந்த ம-ா-ா-ஸ்ரீ திவான் பகதூர் ஆர். ராமசந்திரராவ் அவர்களின் அபிப்பிராயப்படி அது 1910-ம் ஹு நவம்பர்மீ 12உ திருசிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டது.

வருஷ ஆரம்பத்திலே இந்த பாங்கியில் 64 பங்குகளுடன் 45 மெம்பர்கள் இருந்தார்கள்; இந்த ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்தில் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட மெம்பர்களின் சங்கியை 16; இவர்கள் 36 பங்குகள் எடுத்துக்கொண்டார்கள். இவர்களில் 2 பங்குக்காரர்கள் இறந்து போனார்கள்; ஒருவர் இந்தியாவை விட்டு ஸிலோனுக்குப் போய்விட்டார். ஷை 2 பங்குகளையும் இன்னும் எவரும் எடுத்துக்கொள்ளவுமில்லை; இறந்துபோன பங்குக்காரர்களுடைய வாரிசுகளும் பிரதிநிதிகளுமாயிருப்பவர்கள் ஷை பங்குகளைத் தாங்கள் வைத்தக் கொள்ளுகிறார்களா அல்லது வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறார்களா வென்பதைப்பற்றி இன்னும் தெரிவிக்கவுமில்லை மெம்பராவதற்காக விண்ணப்பம் செய்துகொண்ட ஒருவர் பிரவேச கட்டணத்தைச் செலுத்தியும் பங்கை எடுத்துக்கொள்ளாமையினால், அந்தப் பங்கு மற்றொருவருக்குக் கொடுக்கப்பட்டது.

1910-ம் ஹு ஜூன்மீ 30உ யோடு முடிவாகிற கோ-ஆபரேடிவ் வருஷத்தில் பங்கொன்றுக்கு 50 ரூபாய் வீதம் செலுத்தும்படி ஒரு தடவை கேட்கப்பட்டு, 3,200 ரூபாய் பங்கு மூலதனமாக வசூலிக்கப்பட்டது. நிர்வாக சங்கத்தார் இந்த வருஷத்தில் பங்குக்காக தவணைத் தொகைகள் செலுத்தும்படி மற்றும் இரண்டு தடவை கேட்டார்கள்; ஆனால், இரண்டாவது தடவையில் 4,400 ரூபாய் மாத்திரமே பங்கு மூலதனமாக வசூலிக்கப்பட்டது. 1911-ம் ஹு ஜூன் மீ 25உ யன்று சபையின் காரியத்தைப்பற்றி நடந்த கடைசி மீட்டிங்கில் மூன்றும் தடவை பங்குக்காகத் தொகை செலுத்தும்படி கேட்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆகவே இந்தவருஷக் கடைசியில் மெம்பர்களின் பங்கு மூலதனமாக 7,600 ரூபாய் இருந்தது.

முந்திய வருஷத்தைப்போலவே இந்த வருஷத்திலும் ஒவ்வொரு கடனும் ஜாரி செய்யப்பட்டவுடனே நாட்டுச் சங்கங்களுக்கு வேண்டிய திரவிய சகாயம் செய்வது பாங்கிக்குச் சாத்தியமாயிருந்தது. இந்த ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்தில் பாங்கியில் அடியிற்கண்ட தொகைகள் கடன் வாங்கப்பட்டன:—

	ரூ.	அ.	ப.
மெம்பர்களின் டிபாஸிட்டுகள்	41,955	3	0
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகள்	84,620	7	0
சங்கங்களின் சேமநிதி	6,033	0	10
இண்டியன் பாங்கி லிமிடெட்...	20,000	0	0
நாட்டுச் சங்கங்கள்	4,700	0	0
சேலம் ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட்	23,833	2	0
	1,81,141	12	10

இந்தக் கடன்களுக்காக இந்த வருஷத்தில் அடியிற்கண்ட தொகைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

மெம்பர்களின் டிபாஸிட்டுகள்...	26,000	0	0
மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகள்	1,250	0	0
நாட்டுச் சங்கங்கள்	5,200	0	0
சேலம் ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட்	23,833	2	0
	56,283	2	0

போன வருஷத்துக் கணக்குகளுடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது, மெம்பரல்லாதவர்களின் டிபாஸிட்டுகளில் ரூ. 81,623-11-2 (75,590-10-4 ரூபாயுடன் 6033-0-10 ரூபாயும் சேர்த்து) அதிமாயிருக்கிறதென்றும், மெம்பர்களின் டிபாஸிட்டுகளில் ரூ. 32,394-13-0 குறைந்திருக்கிறதென்றும் தெரியவருகிறது. ப்ரெஸிடென்டாகிய ம-ா-ா-ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கடேசராவ் அவர்களிடத்திலிருந்து வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 7 வீதம் கடன் வாங்கின 20,000 ரூபாயையும் டிபாஸிட்டாக பாவித்ததனால்தான் போன வருஷத்தில் மெம்பர்களின் டிபாஸிட்டுகள் என்னும் தலைப்பின் கீழ் அவ்வளவு பெரிய தொகை காணப்பட்டது. வருஷ முடிவில் மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து டிபாஸிட்டுகள் ஏராளமாய் வந்துவிழ ஆரம்பித்தன; ஆகையினால் பாங்கி அடைந்திருக்கும் அபிவிருத்தியைப் பார்த்தால், சங்கத்தின் தலைமைஸ்தானத்தை திருசிராப்பள்ளிக்கு மாற்றினது முழுவதும் நியாயமே என்று ஏற்படுகிறது. காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் ஒய். நாராயண ராவ் அவர்கள் சிறிதேனும் சிரமத்தைப் பாராமல் ஊக்கத்துடன் உழைத்துவந்ததன் பலனாகத்தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாரால் ஒரு லக்ஷம் ரூபாய் வரையில் டிபாஸிட்டுகள் கட்டப்பட்டது; இன்னும் டிபாஸிட்டுகள் கட்டப்படுமென்றும் தெரியவருகிறது. நடைமுதல் கணக்குகள் வைக்க ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; ஆனால், இந்த ஏற்பாட்டின் முழு பலனையும் ஜனங்கள் இன்னும் அடையவில்லை.

6 மாத காலத்துக்கும் அதற்கு மேலும் கட்டப்படுகிற டிபாஸிட்டுகளின் மேல் இந்த பாங்கியானது வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 6 வீதம் வட்டி கொடுக்கிறது. இண்டியன் பாங்கி, லிமிடெட், என்னும் பாங்கியுடன் 50,000 ரூபாய்க்கு கொடுக்கல்

வாங்கல் கணக்கொன்று ஏற்படுத்தப்பட்டு, 20,000 ரூபாய்க்குக் குறையாமல் லேவாதேவி நடத்த வேண்டுமென்றும், வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 7 வீதம் நாளுக்கு நாள் வட்டி கணக்கிட வேண்டுமென்றும் நிபந்தனை செய்துகொள்ளப்பட்டது. இதுடன், ப்ரெஸிடென்டிடத்திலிருந்து அதே வீதப்படி கடன் வாங்கப்பட்ட 20,000 ரூபாயையும் சேர்த்தால், வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 7 வீதப்படி சங்கத்தால் கடன் வாங்கப்பட்ட தொகையின் மொத்தம் 40,000 ரூபாயாகிறது. இதுபோக சங்கத்தின் மிகுதி கடன்களில் பெரும்பாலும் சேர்ந்திருப்பது நூற்றுக்கு 6 வீதம் பாங்கியில் கட்டியிருக்கப்பட்ட டிபாஸிட்டுகளும் நாட்டு நாணயச்சங்கங்களால் வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதம் அதில் வட்டிக்குப் போட்டுவைக்கப் பட்டிருக்கும் சேமநிதியுமேயாம்.

வருஷ ஆரம்பத்தில் ஜில்லா பாங்கியினால் திரவிய சகாய மடைந்து வந்த சங்கங்கள் 24; இது 38 ஆக அதிகரித்தது; இதில் 6 சங்கங்கள் இந்த ஜில்லாவிலே இந்த வருஷத்தில் புதிதாய் ஏற்படுத்தப்பட்டவை; 7 சங்கங்கள் நாமக்கல் தாலூகாவுடன் சேலம் ஜில்லாவிலிருந்து இந்த ஜில்லாவுக்கு மாற்றப்பட்டவை. இந்த வருஷத்தில் ஜாரி செய்யப்பட்ட கடன்களெல்லாவற்றையும் பாங்கியார் தாமதமில்லாமல் உடனுக்குடனே பட்டுவாடா செய்துவந்தார்கள்; இது மிகவும் சிலாகிக்கத்தக்கதே; மேலும் பாங்கியார் அதன் செலவுக்கு மிஞ்சி நின்ற 67000, ரூபாயையும், சேலம் ஜில்லா அர்பன் பாங்கி (ரூ. 30,000) யிலும் கோயமுத்தூர் ஜில்லா அர்பன் பாங்கி (ரூ. 37,000) யிலும் நூற்றுக்கு 7 வீதம் வட்டிக்குப்போட்டு வைக்கக் கூடியவர்களாயிருந்தார்கள். இந்த வருஷத்தில் ஜில்லா பாங்கியினால் பட்டுவாடா செய்யப்பட்ட கடன்களின் மொத்தம் ரூ. 1,44,760. வருஷ ஆரம்பத்தில் ரூ. 67,050 பெறுமானமுள்ள கடன்கள் பாக்கியாயிருந்தன. நாட்டுச் சங்கங்களால் திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்களின் தொகை ரூ. 11,244-10-0; ஆகவே, இந்த வருஷத்தின் முடிவில் ரூ 2,00,565 பெறுமானமுள்ள கடன்கள் பாக்கியாய் நின்றன. இந்த பாங்கியிலிருந்து கடன் வாங்கின எந்த சங்கமும் அதன் தவணைத் தொகைகளைச் செலுத்துவதிலாவது அரை வருஷ வட்டியைக் கொடுப்பதிலாவது தவறவேயில்லை.

சிற்சில விஷயங்களில் தொகை செலுத்துவதிலே கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது; ஆனால், ஜில்லா பாங்கியார் விதித்த சொற்ப அபராதமே இந்த கெட்ட வழக்கத்தை ஒழிப்பதற்குப் போதுமானதாயிற்று. இந்த தலைப்பின் கீழ் வசூலானது ரூ. 3-14-0. பாங்கியாரும் பாக்கியாகும் சகல தொகைகளுக்கும் அந்தந்த காலத்தில் ஞாபகக் கடிதங்கள் அனுப்பி, அவைகளை வசூலிப்பதற்காகத் தீவிரமான ஏற்பாடுகள் செய்கிறார்கள்.

டிபாஸிட்டுகளின் மேலும் இதர கடன்களின் மேலும் இந்த பாங்கி வட்டியாகக் கொடுத்த தொகை ரூ. 3,230-12-8; இந்த பாபத்துகளின்மேல் ரூ. 4,983-14-1 வட்டியாகச் சேர்ந்திருந்தும் அது ஜூன் மீ 30உ யிலேயே செலுத்தப்பட வேண்டியதாயில்லை. ஆகவே வாஸ்தவமாய்ச் செலுத்தப்பட்ட வட்டியும் பாக்கியாய் செலுத்தப்படாமல் நின்ற வட்டியும் சேர்ந்து ரூ. 8,214-10-9 ஆயிற்று. வருஷ ஆரம்பத்தில் பாக்கியாய் செலுத்தப்படாமல் நின்ற வட்டியிலிருந்து 1,395-8-0 ரூபாயைக் கழித்தால் லாப நஷ்டக் கணக்கில் காணவேண்டிய தொகையானது 6,819-2-9 ரூபாயாகிறது.

இந்த பாங்கிக்கு அதன்கடன்களின் மேல் கிடைத்த வட்டி ரூ. 6,498-3-6; இதுதவிர, கடன்களின் மேல் பாக்கியாய் நின்ற வட்டி ரூ. 3,188-8-9; ஆனால் இந்தத் தொகையானது வருஷம் முடிவதற்குள்ளாகவே செலுத்த வேண்டியதாகவில்லை.

ஆகையினால் இந்த வருஷத்தில் பாங்கிக்குக் கிடைத்த வட்டியின் மொத்தம் ரூ. 9686-12-3; இதிலிருந்து வருஷ ஆரம்பத்தில் வசூலாகாமல் நின்ற தொகையாகிய 1,192-8-0 ரூபாயைக் கழித்துவிட்டால், லாப நஷ்டக் கணக்கில் காணவேண்டிய தொகையானது 8494-4-3 ரூபாயாகிறது.

இந்த வருஷத்தில் கன்டின்ஜென்ட் செலவுகளுக்காக பாங்கியால் வினியோகிக்கப்பட்ட தொகை ரூ. 110-3-5; இதில் ரூ. 69-12-6 அச்சிடுவதற்காகவும், காகிதம் பேனா முதலியவை வாங்குவதற்காகவும் செலவழிக்கப்பட்டன. சிப்பந்திக்காகவும் ஆபிஸ் வாடகைக்காகவும் பிடித்த செலவு ரூ. 120.

இந்த வருஷம் ரூ. 1632-12-1 நிகரலாபத்துடன் முடிந்தது. இதில் கால் பாகமாகிய 408-3-0 ரூபாயை 17-ம நம்பர் சகாயச்சட்டத்தின்படி சேமநிதியுடன் சேர்த்து, எட்டிலொருபாகமாகிய 204-1-6 ரூபாயைக் காரியதரிசிக்குச் சம்மானமாகக் கொடுக்கவேண்டும். மிகுதி 1,020-7-7 ரூபாயை மெம்பர்களுக்கு உபகாரத் திரவியமாகப் பங்கிடுவதற்கு உபயோகிக்கலாம். இந்தத் தொகையில், நிர்வாக சங்கத்தார்—தொகை செலுத்தப்பெற்ற பங்கு மூலதனத்தின்மேல் நூற்றுக்கு 10 வீதம் ஈவுத் தொகை கொடுத்து மிகுதியை ஈவுத்தொகையைச் சமப்படுத்துவதற்கான நிதியுடன் சேர்ப்பது உசிதமாகும்.

நிர்வாக சங்கம் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறபடி அதன் மெம்பர்கள் ஜில்லாவில் பல இடங்களில் சிதறி யிருக்கிறார்கள்; ஆகையினால் இந்த சங்கத்தின் மீட்டிங்குகளுக்கு மெம்பர்களில் அநேகர் வருவது அசாத்தியமாயிருப்பதாகக் காணப்பட்டது. இந்த வருஷத்தில் 6 கம்மிட்டி மீட்டிங்குகளும் சபையின் மெம்பர்கள் எல்லாரும் வந்திருக்கக்கூடிய 3 மீட்டிங்குகளும் நடந்தன; இவைகளெல்லாவற்றுக்கும் கொஞ்சம் மெம்பர்களே வந்திருந்தார்கள்.

பாங்கியின் கணக்குகள் சரியாகவும் சீராகவும் வைத்து வரப்பட்டு, சம்பந்தப்பட்ட ரெஜிஸ்டர்களில் ஒன்றில் மற்றொன்றைப் பார்க்கும்படி போடப்பட்ட குறிப்புகளால் தணிக்கை உத்தியோகஸ்தரின் வேலை மிகவும் சுலபமாக்கப்பட்டது. வேண்டியிருந்த சகல சங்கதிகளும் உடனுக்குடனே கிடைக்கக்கூடியவையாயிருந்தன. சங்கத்தில் நடக்கும் விவகாரங்கள் அதிகரித்திருப்பதையும் அதனால் அக்கௌன்டன்டின் வேலை அதிகமாயிருப்பதையும் உத்தேசித்து, அவருக்கு இப்பொழுது கொடுக்கும் சம்பளத்துக்கு மேல் மாதமொன்றுக்கு ரூ. 10 அதிகமாய்க் கொடுக்கலாமென்று நான் சிபாரிசு செய்கிறேன்.

ப்ரெஸிடென்டாகிய ம-ா-ா-ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேசாராவ் அவர்களும், காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் ஒய். நாராயணராவ் அவர்களும், திருசிராப்பள்ளியில் தென் இந்தியா ரெயில்வே கம்பெனியாரின் முக்கிய தணிக்கை உத்தியோ ஸ்தராயும் இப்பொழுது பாங்கியின் டைரெக்டராகவுமிருக்கிற மிஸ்டர் டப்ஸ்லு. எம். ஸிம்ப்ஸன் துரையும் இச்சங்கத்தின் அபிவிருத்தியில் மிகவும் சிலாகிக்கத்தக்க விதமாய் அக்கரை பாராட்டி வந்திருக்கிறார்கள்; இவர்களின் வேலை முக்கியமாய் நாம் தவனிக்கத்தக்கதாகும். வழக்கமாய் அனுப்பப்படும் மூன்று ஸ்டேட்மெண்டுகளும் சேர்த்தனுப்பப் பட்டிருக்கின்றன.

திருசிராப்பள்ளி,
1911-ாவு ஜூலை மீ 8உ

(ஒப்பம்) கே. விஜயராகவாசாரியார்,
ஸ்பெஷல் டெப்யுடி கலெக்டர்.

ரெஜிஸ்ட்ராரின் தணிக்கை உத்தரவு.

1911-ம்ஞு ஜூன்மீ 30உ யோடு முடிவாகிற வருஷத்துக்கு திருசிராப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட், என்னும் பாங்கியின் கணக்குகள் விசேஷடெப்யுடி கலெக்டர் ம-ா-ா-ஸ்ரீ கே. விஜயராகவாசாரியர் எம். ஏ. அவர்களால் தணிக்கை செய்யப்பட்டபடி ஜாரி செய்யப்படுகின்றன.

பரிசீலனைக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்தில் பாங்கிக்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 1,632-12-1; இதை 17-ம் சகாயச்சட்டத்தின் பிரகாரம் அடியிற்கண்டபடி பங்கிடவேண்டும்.—

	ரூ.	அ.	ப.
i. சேமநிதி	408	8	0
ii. காரியதரிசிக்குச் சம்மானம்	204	1	6
iii ஈவுத்தொகையாகவும் உபகாரத் திரவியமாகவும் பங்கிடக்கூடிய தொகை	1,020	7	7
மொத்தம் ரூ. ...	1,632	12	1

கால்நடைகளை உற்பத்திசெய்யும் விஷயத்தில் நம்மவர்கள் ஒரு போதும் எவ்வித கவனமும் செலுத்துவதில்லை. பொலியெருதுகள் கிடைப்பதே அரிதாயிருக்கிறது. இதனால் விளையும் பலன் என்னவெனில் நாட்டுப்புறங்களில் பிறக்கும் கால் நடைகள் நல்ல ஜாதியாய் இருப்பதில்லை.

பாலையும் அதிலிருந்து உற்பத்தியாகும் சரக்குகளையும் விற்கும் விஷயத்திற்கூட இதே கஷ்டந்தான் உண்டாகின்றது. ஒவ்வொரு குடியானவனும் அவன் பெண்சாதியும் பால், நெய் முதலியவைகளை எங்கே கொண்டுபோய் விற்க வேண்டுமென்பதை அவர்களே தேடிக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கிராமங்களில் பால் அதிகமாய் வேண்டி யிருப்பதில்லை. வாரத்துக்கொரு தடவையோ அல்லது இரண்டு வாரத்துக்கொரு தடவையோ குடியானவனுடைய பெண்சாதி நெய்யைச் சேகரம் செய்து பட்டணங்களுக்குக் கொண்டுபோய்த் தெருவில் விற்கிறாள். அந்த நெய் மிகவும் இளப்பமாய் இருப்பதனால், பட்டணங்களில் விற்கும் நெய்யைவிட இந்த நெய் குறைந்த விலைக்கே போகிறது. அநேக இடங்களிலே தரகர்கள் இந்த நெய்யை அதிகலப விலைக்கு வாங்கி அதில் கலப்பு வஸ்துக்களை விசேஷமாய்க் கலந்து அதை பட்டணங்களிலே மிகவும் உயர்ந்த விலைக்கு விற்று விடுகிறார்கள்.

ஒரு சங்கமானது தினந்தோறும் கிடைக்கும் பாலைச் சேகரம் செய்து அதை சுத்தமான பாத்திரங்களிலே பட்டணங்களுக்கு அனுப்பக்கூடும்; அப்படி செய்வது சாத்திய மில்லாவிட்டால், அந்தப்பாலை நெய்யாகச்செய்து அதை மிகவும் சமீபத்திலுள்ள கடைத்தெருவுக்கு அனுப்பலாம். இப்படி செய்யும்பட்சத்தில் நாட்டுப் புறங்களிலுள்ள பல ஏழைக் குடித்தனங்களுக்கு காலமும் உழைப்பும் எவ்வளவோ கூடுதலாகும்.

இந்த வழியில் நம் தேசத்திலே கூட்டுத்தொழில் முறையை அனுசரித்து வேலை செய்வதற்கு எவ்வளவோ இடமிருக்கிறபடியால், நமது தேசத்தில் கற்றறிந்தவர்கள் இந்த விஷயத்தில் சிறிது கவனம் செலுத்தி அவர்கள் வசித்து வரும் பட்டணங்களிலும் கிராமங்களிலும் கூட்டுத்தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தும்படி அவர்களை சிரத்தையுடன் பிரார்த்திக்கிறேன்.

———:(o):———

ஸேவிங்ஸ் பாங்கிகளும் கூட்டுத்தொழிலும்.

(ம-ா-ா-ஸ்ரீ ஆர். திருமலை ஐயங்கார், பி. எ., அவர்கள் எழுதியது.)

ஸேவிங்ஸ் பாங்கிகளென்பவை சிறு பணத்தொகைகளை டிபாஸிட்டாகப் பெற்றுக்கொண்டு, டிபாஸிட் செய்தவர்களின் லாபத்தின்பொருட்டு அவைகளை வட்டிக்குப் போட்டுவைக்கும் ஸ்தாபனங்களாகும். சாமானிய ஜனங்கள் செட்டாய்க் குடித்தனம் செய்து மிகுத்துவதை மூலதனமாகச் சேர்ப்பதற்கு எவ்வித ஏற்பாடும் செய்து கொடாதபட்சத்தில் எந்த கவர்ன்மெண்டும் தனக்குரிய எல்லாக் கடமைகளையும் செலுத்தியதாகக் கருதப்படமாட்டாதென்னும் கொள்கையை ஆதாரமாகக்கொண்டு கவர்ன்மெண்டாரால் பராமரிக்கப்பட்டு வரும் ஸேவிங்ஸ் பாங்கிகள் பெருத்த லேவாதேவி வேலை நடந்துவரும் மத்தியஸ்தானங்களாய் விட்டிருக்கின்றன.

முதலில் ஏற்பட்ட ஸேவிங்ஸ் பாங்கியானது ப்ரன்ஸ்விக் என்னும் ஊரிலே 1765-ம்வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது; இரண்டாவது ஸேவிங்ஸ் பாங்கி ஹாம்பர்க்கில் 1778-ம்வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கிலாந்திலே 1803-ம்வருஷத்தில் உவேக்பீல்ட் துரைசானி ஒரு ஸேவிங்ஸ் பாங்கியை ஸ்தாபித்தாள். ப்ரான்ஸ் தேசத்தில் ஏற்பட்ட முதல் பாங்கி பாரிஸ் பட்டணத்திலே 1818-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனங்களால் உண்டான காரியசித்தி எவ்வளவோ விசேஷமா யிருந்தபடியால் இந்த ஸேவிங்ஸ் பாங்கிகளின் சங்கியை அதிகரித்துக்கொண்டே வந்தது. மேலும் ஏழை வகுப்பார்கள் தங்கள் பணத்தை சிக்கனமாய்ச் செலவிட்டு மிச்சம் பிடித்து அதை மூலதனமாய் உபயோகிக்காமலிருந்ததற்குக் காரணம், தக்க சந்தர்ப்பமும் சௌகரியமும் இல்லாமையே யொழிய அப்படி செய்வதற்கு சாதனமில்லாமலிருந்ததல்லவென்று ஏற்பட்டது. இங்கிலாந்திலே ஸேவிங்ஸ் பாங்கியை தபால் இலாகாவுடன் சேர்த்தது க்ளாட்ஸ்டன் துரையின் சிறந்த விவேகத்தைக் காட்டுகிறது. ஸேவிங்ஸ் பாங்கிகளினால் உண்டாகும் காரியசித்தி மேற்றிசைநாடுகளிலே சம்பூர்ணமாயும் நிர்விவாதமாயும் நிரூபிக்கப்பட்டிருப்பதைக்கண்டு இந்துதேசத்து ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் ஜனங்களின் மிகுதிப்பணத்தைச் சேர்த்துவைத்து பிரயோஜனகரமாய் உபயோகிப்பதற்குச் சாதனமா யிருக்கக்கூடிய ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தத் தீர்மானித்தார்கள். 1882-ம் வருஷத்திலே இந்தியாவில் ஸேவிங்ஸ் பாங்கிகள் ஏற்படுத்தப்பட்டு தபால் இலாகாவுடன் சேர்க்கப்பட்டன; அப்போதுகூட இந்த ஸேவிங்ஸ் பாங்கி வேலையல்லாமல் மற்ற விஷயங்களிலே தபால் இலாகாவில் ஏராளமான வேலை நடந்து வந்தது. ஷை ஸேவிங்ஸ் பாங்கி ஏற்பாடு 1883-ம் வருஷத்திலே சென்னபட்டணத்துக்கும் கொண்டுவரப்பட்ட போதிலும், சென்னபட்டணத்திலுள்ள பற்பல பாங்கிகளின் டைரெக்டர்கள் இந்தப் புதிய ஸ்தாபனம் ஜனங்களுக்குள் பிரபலப்பட்டுத் தங்கள் வியாபாரத்துக்கு பாதகமாய் முடியுமென்று அச்சங்கொண்டபடியால், இதற்கு ஆக்ஷேபஞ் செய்யாமலிருக்க வில்லை. சுவல்ப முயற்சியாய் ஆரம்பமாகி தபால் இலாகாவுடன் சேர்க்கப்பட்ட இந்த ஸேவிங்ஸ் பாங்கிகள், அவைகளை ஏற்படுத்தினவர்கள் கனவிலும் கருதியிராத அவ்வளவு பெருத்த வேலையை இப்போது செய்து வருகின்றன. 20-ம் நூற்றாண்டின் ஆரம்ப வருஷத்திலும் அதற்கடுத்த இரண்டு வருஷங்களிலும் இந்த ஸ்தாபனம் அடைந்திருக்கும் அபிவிருத்தியை கவனிப்பது பிரயோஜனகரமாகும். ஒத்திட்டுப் பார்க்கும் காரியத்துக்காக, 1901–02, 1908–09, 1909–10 இந்த வருஷங்களுக்குரிய கணக்குகள் இதன் கீழே காட்டப்படுகின்றன. ஸேவிங்ஸ் பாங்கிகள் ஏற்பட்ட 20 வருஷ காலத்துக்குள், அதாவது 1882–ம் வருஷம் முதல் 1901–ம் வருஷ வரையில் மூன்று முக்கிய ராஜதானிகளிலே இவைகள் அடைந்த அபிவிருத்தியைக் காட்டும் பொருட்டும், ஒரு பத்தாண்டிலும் வருஷா வருஷமும் ஷை அபிவிருத்தியின் கதி சராசரியில் இவ்வளவென்பதை நிதானிக்கும்பொருட்டும் இந்த வருஷங்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டிருக்கின்றன.

போஸ்டர் ஸர்க்கில்களின் பெயர்.	பாங்கிகளின் சங்கியை.	மிகுதியிருக்கும் கணக்குகளின் சங்கியை.	ஆரம்பத்தில் கையிருப்பு.	டிபாஸிட்டுகளும் வட்டியும்.	வாபஸ் வாங்கிக் கொள்ளப் பட்டவை.	கையிருப்பு.	ஒவ்வொரு பாங்கியிலும் டிபாஸிட் கட்டியிருப்பவர்களின் சராசரி சங்கியை.	ஒவ்வொரு பாங்கியிலும் சராசரி கையிருப்பு.	டிபாஸிட் கட்டியிருக்கும் ஒவ்வொருவர் பேரிலும் வரவு வைக்கப்பட்டிருக்கும் சராசரி கையிருப்பு.
				1901—02.					
பம்பாய்	906	165,075	267·45 லக்ஷம்	111 லக்ஷம்	93·48 லக்ஷம்	284·97 லக்ஷம்	182·29	31456·34	172·64
வங்காளம்	1204	189,136	20·47 ,,	92·9 ,,	85·42 ,,	212·03 ,,	157·08	17610·83	112·10
சென்னை	1417	133,078	80·49 ,,	63·2 ,,	59·42 ,,	84·28 ,,	93·01	5948·13	63·33
				1908—09.					
பம்பாய்	1299	271,604	441·7 லக்ஷம்	161·2 லக்ஷம்	172·7 லக்ஷம்	430·28 லக்ஷம்	209·09	33123·97	158·42
வங்காளம்	1641	279,487	281·4 ,,	126·7 ,,	124·8 ,,	283·39 ,,	170·32	17269·76	101·39
சென்னை	1663	208,248	117·8 ,,	88·7 ,,	87·07 ,,	118·59 ,,	125·22	7191·38	57·43
				1909—10.					
பம்பாய்	1318	285,013	430·28 லக்ஷம்	170·8 லக்ஷம்	159·1 லக்ஷம்	441·9 லக்ஷம்	216·25	33582·60	155·0[illegible]
வங்காளம்	1636	296,425	283·39 ,,	131·1 ,,	119·04 ,,	295·5 ,,	181·19	18063·47	99·69
சென்னை	1799	201,551	119·59 ,,	91·5 ,,	90·49 ,,	120·6 ,,	112·04	6705·29	59·85

மேலே கண்ட அட்டவணையிலுள்ள இலக்கங்களைப் பார்க்கால் சில்லறை விவகாரங்களில் பல முதலைகள் இருக்கிறபடியினாலும், பொதுத்தத்தில் இந்த வருஷம் வெகுதூரம் அபிவிருத்தி யாவிட்டிருக்கிறபடியினாலும் வெகுவிரைவிலும் ஆரம்பித்தில் விஷயத்தில் 50-வருஷங்களுக்கு முன்னிருந்த விஷயத்திலும் மாறுதல் விஷயத்திலும் 50-வருஷங்களுக்கு முன்னிருந்த இந்த தேசங்களில் வைக்கும் பாங்கிகளில், இந்த பதிவுகளின் விஷயமாய் வருபடியான அபிவிருத்தியானது மிகவும் அதிகமாய் வருபடியான வருஷம். 1901-02-ம் வருஷத்தில் கணக்குகளின்படி சுமார் ஸ்பஷ்டமாய் வருபடியான வருஷம் 1908-09-ம் வருஷத்தில் ஒன்றாயிருக்கிறது. ஆனால் கணக்குகளை ஒப்பிடுகையில் இந்த தேசங்களில் உண்டாயிருக்கிற பதிவுபடியான ஆலைகளுக்கு ஒரு ஆண்டாகவோ நடந்துவரும் சீட்டுப்பணம் ஒருவருக்கு பதிவுபடியான ஆலைகளுக்கு வரவிட்டாலும், இக்கலாத்தினால் ஏற்பட்டிருக்கிற விஷயங்களை பல வளர்ச்சிக்கடுத்து முயற்சியாய் இருக்கவேண்டியதாகக் கூடிய சில்லறை கணக்குகளை பதிவுபடியான கணக்குகளாக மாற்றுவதற்கு வரவு செலவு அவசரமாகவாகிலும் செலவழிக்க ஆயத்தமாய் மாறுபடுகிறவர்களில் உபயோகப்படுகிறவர்களாகிலும் செலவழிக்க ஆயத்தமாய் வரவுக்கு இருக்கவும் இந்தச் சீட்டுப்பணம் ஒருவருக்குச் சம்பிரதியில்லை. இந்தச் சம்பிரதியானது மிகவும் ஜனங்களை தாங்கள் மிருதுவாக உதாரணங்களை சம்பாதிப்பதற்கு வேண்டிய கணக்குகளை ஏற்படுத்தி வரவுக்கு விவரங்களை பதிவுபடுத்தி வருகிறார்கள். இனி கணக்கு விவரங்களை பதிவுபடுத்தியிருக்கிறவர்கள், மூன்று மாதங்களுக்கு ஒரு தரம் சேர்ந்து வியாபாரத்தில் 1901-02-ம் வருஷத்திலே (தமிழ்வருஷம் 4,87,289 கணக்குகளும் இருந்ததாகவும் அவைகளில் மாபாலிட் விவகாரங்கள் சுமார் 2-கோடியே 67-லக்ஷம் ரூபாய்க்கு நடந்ததாகவும், 2-கோடியே 38-லக்ஷம் லாபமாகவும் அவைகளில் இருப்பதாகவும் கொடுக்கப்பட்டதாகவும், இவை பேபாக (வருஷாவருஷம்) இருந்த வரவுபடியே 5-கோடியே 81-லக்ஷம் ரூபாய் அவைகளின் வரவுபடியில் இருந்ததாகவும் நமக்குத் தெரியவருகிறது. 1901-ம் வருஷம் 1909-ம் வருஷங்களில், அதாவது, பதினாலு வருஷங்களுக்குள் இந்த பாங்கிகளின் சங்கியை பமபாயில் மாற்றுக்கு 42 விகிதமாகவும், வங்காளத்தில் மாற்றுக்கு 36-விகிதமாகவும், சென்னையிலட்டு 11-விகிதமாகவும் அதிகரித்திருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்தின் உண்மையான அபிவிருத்தி சொன்னபடியில் வெகுமாறுபடும், இந்த பாங்கிகளினால் ஏற்படும் பிரயோஜனங்களை

னும் சென்னை ராஜதானியில் கட்டப்பட்ட டிபாஸிட் தொகைகள் 63-ஸ்ட்சத்திலிருந்து 88-லட்சமாக, அதாவது நூற்றுக்கு 39-வீதம் பெருகியிருக்கின்றன. இது அவ்வளவு இகழ்ச்சியாய்க் கருதத்தக்க விஷயமல்ல 1909-10ம் ஸுத்திய கணக்குகளை 1908-9-ம் ஸுத்துக் கணக்குகளுடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது முதற் கண்ட வருஷத்தில் பம்பாய், வங்காளம், சென்னை ராஜதானிகளிலே டிபாஸிட்டுத் தொகைகள் முறையே $9\frac{3}{5}$,$4\frac{2}{5}$,$2\frac{3}{4}$-லக்ஷங்களாக அதிகரித்தன. வாபஸ் பெற்றுக்கொண்ட தொகைகள் சென்னை ராஜதானியில் தவிர மற்ற ராஜதானிகளிலே 1908-09-ம் ஸுத்தி லிருந்ததைப் பார்க்கிலும் குறைவாயிருந்தன. ஒவ்வொரு பாங்கியிலும் உள்ள சராசரி கையிருப்புத் தொகைகளும் டிபாஸிட் கட்டியிருக்கிற ஒவ்வொருவரிடத்திலிருந்தும் சராசரியில் வரவு வந்திருக்கிற தொகைகளும் திருப்திகரமா யிருக்கின்றன.

ஆகவே கவர்ன்மென்டாரின் முயற்சியினால் அதிக தொகை மிகுத்து வது, எனவே, மூலதனத்தைப் பெருக்குவது சாத்தியமாகி யிருக்கிறதென்று நன்றியறிதலுடன் அங்கீகரிக்கப்படு மாயினும், இந்த அபிவிருத்தியானது எவ்வளவு அதிகமா யிருந்திருக்கக்கூடுமோ அவ்வளவு அதிகமாயு மில்லை, இதா தேசங்களிலுண்டாயிருப்பதுபோல் அவ்வளவு அதிகமாயுமில்லை யென்பதை நாம் அறியாதவர்கள்போலிருக்கமுடியாது.

தேசத்தின் பெயர்.	டிபாஸிட் செய்தவர்களின் சங்கியை.	டிபாஸிட் செய்யப்பட்ட தொகை.	ஜனத்தொகையின் தலை ஒன்றுக்கு இவ்வளவென்பது.	பாங்கிகளின் சங்கியை.
ப்ரான்ஸ்.	75,57,133	13,50,61,740	72 ரூ. 2 பை.	2042
அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கிய நாடுகள்	76,96,229	326,12,36,119	39 17	1287
க்ரேட் ப்ரிடனும் ஐர்லாந்தும்.	99,63,049	15,21,11,140	பவுன் 3-11-0	
இந்தியா.	13,78,916	15,86,71,785	ரூ. 0-8-7	8767

இந்தியாவிலும், ப்ரான்ஸிலும், க்ரேட்ப்ரிடனும் ஐர்லாந்தும் சேர்ந்த தேசத்திலும் டிபாஸிட் செய்த ஒருவரிடத்திலிருந்து வரவுவந்து சராசரி கையிருப்பாயுள்ள தொகை முறையே ரூ. 115-11-0, S. 17-18-0 (ரூ 268-8-0) பவுன் 15-15-4 (ரூ 229) என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே ஸேவிங்ஸ் பாங்கிகளின் அபிவிருத்தியானது மற்ற தேசங்களிலுள்ளதைப் பார்க்கிலும் குறைவாயிருக்கிற தென்பது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. ஜனத்தொகை முழுவதையும் எடுத்துக் கணக்கிட்டால், தலையான்றுக்கு சராசரி வருஷவாரி சேர்த்துவைக்கும் தொகை ரூ. 0-8-7

ஆகிறது. சாமானிய ஜனங்களின் வறுமையும் கல்வியறிவின்மையும் சிறிது மட்டிலும், பாங்கிகளின் சங்கியை இந்த தேசத்தின் விஸ்தீர்ணத்துக்கர்வது குடி ஜனத்துக்காவது போதுமான அளவுள்ளதாயில்லாமை சிறிது மட்டிலும் இதற்குக் காரணமா யிருக்கிறது. நாம் முக்கியமாய் அக்கறைகொண்டிருக்கும் சென்னை ராஜதானியிலே 79 சதுர மைலுக்கு, அதாவது 21,251 ஜனங்களுக்கு ஒரு பாங்கிக்கு அதிகமாக இல்லை. 189 பேரில் ஒருவன் தன் பணத்தை டிபாஸிட்டாகக் கட்டி வைக்கிறான்; இந்தக் கணக்கின்படி பார்த்தால் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 52 பேர்தான் டிபாஸிட் செய்கிறவர்களா யிருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் தலை யொன்றுக்கு சராசரியில் மிகுதியாய்ச் சேர்த்துவைக்கும் தொகை இந்தியா முழுவதிலும் 8-அணா 7-பையாயிருக்க, அந்தத்தொகை இந்த ராஜதானியிலே $5\frac{1}{2}$-அணாவாகிறது. இது சிறிதேனும் திருப்திகரமா யில்லை; இதற்குக் காரணம் இந்த மகாணத்தில் ஸேவிங்ஸ் பாங்கிகள் எத்தனை யிருக்கவேண்டிய தவசியமோ அத்தனை இல்லாமலிருப்பதேயாமென்று நாம் சந்தேகிக்கவேண்டி யிருக்கிறது. இந்த விஷயத்தில் தான் கூட்டுத்தொழில் சங்கங்கள் இந்த தேசத்துக்கு உண்மையான ஊழியம் செய்யலாகும். தபால் ஆபிஸுகள் இல்லாத இடங்களில் இவைகள் வேலைசெய்யத் தொடங்கலாம்; தபாலாபிஸுகள் இருக்கும் இடங்களில் கூட பணம் மிகுத்தவேண்டுமென்கிற சுபாவம் வெகு இலாகாவினால் ஜனங்களுக்குள் உண்டாயிருக்கிறபடியால் அதை இந்த சங்கங்கள் உபயோகித்துக் கொள்ளலாம்.

மைசூரில் நடந்த முதல் கோ-ஆபரேடிவ் (கூட்டுத்தொழில்) கான்பரன்ஸ்.

(மைஸூர் கோ-ஆபரேடிவ் கான்பரன்ஸின் காரியதரிசியாகிய மஹாராஜஸ்ரீ. இ. ராமராவ் அவர்கள் எழுதியது)

மைசூரிலே கூட்டுத்தொழில் முயற்சியானது ஆறு வருஷகாலமாக நடந்து வருகிறபடியால் இந்த ஆறு வருஷகாலத்தில் ஏற்பட்டு வெவ்வேறு அபிவிருத்தி தசைகளை யடைந்திருக்கிற 140 சங்கங்களும் ஒருங்கு சேர்ந்து முக்கியமான பலவகை விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு அவைகளுக்கு ஓர் அவகாசம் கொடுக்கும் பொருட்டு ஒரு கான்பரன்ஸ் கூட்டுவது உசிதமாகுமென்று சென்ற ஆகஸ்டு மாதத்தில் கருதப்பட்டது. அந்தப் பிரகாரமே மைசூரில் முதல் கோ-ஆபரேடிவ் கான்பரன்ஸானது 1911-ம் ஸு ஸெப்டெம்பர் மீ 26, 27, 28 தேதிகளிலே தலைசிறந்த முறையில் நடத்தப்

பட்டது. மைசூர் ஸம்ஸ்தானத்தில் கௌன்ஸிலராயிருந்து பென்ஷன் பெற்று வருகிறவராகிய ராஜமந்திர ப்ரவீண ஸ்ரீ. ஸி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அதில் அக்ராஸனம் வஹித்தார்; கான்பரன்ஸின் கடவடிக்கைகள் முடிந்த போது அவர் பேசிய பேச்சு இன்னோரிடத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

2. இந்தக் கான்பரன்ஸை ஸெப்டெம்பர் மீ 26 உ யில் ஸ்ரீ மைசூர் யுவராஜா அவர்கள் திறந்து டெலிகேட்டுகளுக்கு இனிமைவாய்ந்த கன்னடபாஷையில் நல்வரவு கூறிச் செய்த பிரசங்கத்திலே அவர்களுடைய வேலையில் அவர்களுக்கு தைரிய மூட்டி, கூட்டுத்தொழில் முயற்சியை விருத்தி செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்தினார். அந்த பிரசங்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்து இன்னோரிடத்தில் பிரசுரித்திருக்கிறது.

3. இந்தக் கான்பரன்ஸுக்கு எழுபத்தாறு டெலிகேட்டுகளும் அவ்வளவுக்கதிகமான மெம்பர்களும் மற்றும் கல்விகேள்விகளில் தலைமை பெற்ற பலகனவான்களும் வந்திருந்தார்கள். திவானும் கௌன்ஸிலர்களும் உள்பட ஸம்ஸ்தானத்து உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலோரும் ஹாஜராயிருந்ததோடு கூட, மாஜி ரெஜிஸ்ட்ராராகிய எம். சாமராவ் எம். ஏ. அவர்களும் பிரகிருதத்தில் அபிஷியேடிங் ரெஜிஸ்ட்ராராயுள்ள எம். ஏ. நாராயண ஐயங்கார் பி. ஏ., பி. எல். அவர்களும் வந்திருந்தார்கள். அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மிகவும் முக்கியமானவைகளாவன:—

(1) ஸம்ஸ்தானத்தின் நாட்டுப்பிரதேசங்களில் சங்கங்கள் அதிகரித்து வரவர, அவைகளின் உள்விவகாரங்களை மேற்பார்வையிடவும் திரவிய சம்பந்தமான விஷயங்களில் விசாரணை வஹிக்கவும் இரண்டு அல்லது அதற்கதிகமான சங்கங்களை யூனியன்களாகச் சேர்ப்பதற்குரிய ஏற்பாடு செய்யவேண்டும்.

(2) சங்கங்கள் வெளியாரிடத்திலிருந்து கடன் வாங்குவதற்கு முன் பங்குகள் மூலமாகவாவது டிபாஸிட்டுகள் மூலமாகவாவது இவ்விரண்டின் மூலமாகவாவது உள்ளூரிலேயே சாத்தியமானமட்டில் மூலதனத்தைச் சேகரிக்கவேண்டும்

(3) ஒவ்வொரு சங்கத்துக்கும் பிரதி நாலுமாதத்துக்கொரு தடவை துணிக்கை நடக்கும்படியாக, இன்னும் சிறிது காலம் வரையில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் மேற்பார்வை இருந்து வரவேண்டும்; மேலும், இந்த வேலையை ரெஜிஸ்ட்ரார் செய்யக்கூடியவராய் இருக்கும் பொருட்டு அவருடைய சிப்பந்தியிலுள்ள இன்ஸ்பெக்டர்களின் சங்கியையைத் தக்கபடி அதிகப்படுத்தவேண்டும்.

(4) சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கையில், முந்தின கடன்களைத் தீர்ப்பதற்குக் கூடப்பணம் கிடைக்கக்கூடியதாயிருந்தாலன்றி மற்றப்படி, சாத்தியமான வரையில் லாபகரமான காரியங்களுக்காக மட்டுமே வெ கடன்களைக் கொடுக்கவேண்டும்.

(5) பங்குகளின்மேல் பங்கிட்டுக் கொடுக்கும் ஈவுத்தொகைகளின் விஷயத்தில் உயர்ந்தது இவ்வளவுக்குமேல் கொடுக்கக் கூடாதென்று ஒரு வரையறை விதிக்கவேண்டும்; இந்த வரையறையை ஒவ்வொரு சங்கத்தின் சகாயச் சட்டங்களைக்கொண்டு நிர்ணயிக்கவேண்டும்;

(6) காரியதர்சிகளும் மற்ற உத்தியோகஸ்தர்களும் உள்பட ஒரு சங்கத்தின் நிர்வாக கமிட்டியிலுள்ள மெம்பர்களனைவரும் கூடிய மட்டிலும் எவ்விதமான பிரதிபலனும் பெற்றுக்கொள்ளாமல் கௌரவார்த்தமாக வேலைசெய்கிறவர்களாயிருக்க வேண்டும்; ஆனால் சங்கத்தின் குமாஸ்தாவுக்காவது அக்கௌண்டன்டுக்காவது வர்த்தனை கொடுப்பதற்கு இது தடையாகமாட்டாது.

(7) சென்னபட்டணம் டெய்ரி இஸ்லாம் சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கிறதை பொத்த மாடெல் டெமன்ஸ்ட்ரேஷன் பார்ம்ஸ் என்னும் மாதிரிப்பண்ணைகளைப் ஸ்தாபிப்பதைப் போல் கமிட்டியாரால் நிர்ணயிக்கப்பட்ட அவ்வவ்விடத்து சமுதாயபிரயோஜனங்களுக்காக ஒவ்வொரு சங்கத்தின் லாபத்திலிருந்து ஒரு பாகத்தைப் பிரத்தியேகமாய் எடுத்து வைக்கவேண்டும்.

(8) ரெஜிஸ்ட்ராரானவர்-1907-ம் வரு மேமீ 18உயில் பிறந்த ஜே. 3507 லெஜிஸ், 21—06—ம் நெ விளம்பரத்தில் கவர்ன்மென்டாரால் தமக்குக் கொடுக்கப்பட்ட ஸம்மேரி (சுருக்க வகையாய்க் கேஸுகளைப் பைசல் செய்யும்) அதிகாரங்களின்படி ஒரு சங்கத்துக்கும் அதன் பழைய அல்லது தற்காலத்து மெம்பர்களுக்கும் உண்டாகும் வியாஜ்ஜியங்களில் டிக்ரிகள் கொடுக்கும் அதிகாரமுடைய வராயிருப்பதோடுகூட, அப்படிப்பட்ட டிக்ரிகளை நேரில் நிறைவேற்றவோ, அல்லது தமக்கு யுக்தமாய்த் தோற்றினால், டிக்ரிகளை நிறை வேற்றுவது சம்மந்தமான கடவடிக்கை குறிப்புகளை ரெவினியு அதிகாரிகளுக்கு அனுப்பவோ அதிகாரமுடையவராகவும் இருக்கவேண்டும்.

(9) கூட்டுத்தொழில் சங்கங்களின் கான்பரென்ஸ் ஒன்றை வருஷந்தோறும் மைசூரிலே தஸரா பண்டிகைக் காலத்தில் நடத்தவேண்டும்.

(10) இங்கிலீஷிலும் கன்னடத்திலும் ஒரு கூட்டுத்தொழில் வர்த்தமானியை மூன்று மாதத்துக்கொருமுறை பிரசுரிக்கும்படி ரெஜிஸ்ட்ராரைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

4. ஸ்ரீ யுவராஜா அவர்கள் ஸெப்டெம்பர் மீ 29உ காலையில் கான்பரென்ஸின் டெலிகேட்டுகளோடும் மெம்பர்களோடும் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொள்வதற்காக உட்கார்ந்து அதன் மூலமாய் இந்த முயற்சியில் தமக்குள்ள அக்கறையை இன்னும் அதிகமாய்க் காட்டினார்.

கிழக்கு வங்காளத்திலும் ஆஸாமிலுமுள்ள ஐக்கிய நாணயச்சங்கங்களின் முதல் கான்பரென்ஸ்.

(1911-ம் வரு மார்ச்மீ 18உயில் நடந்தது.)

கிழக்கு வங்காளம்-ஆஸாம் மாகாணத்தில் நடந்த ஐக்கியநாணயச் சங்கங்களின் முதல் மாகாணக்கான்பரென்ஸின் நடவடிக்கைகளைப் பற்றிய ரிபோர்ட் சிறிது நாளைக்குமுன் கிடைத்தது. அதைப் பார்க்கும்போது, இந்தக் கான்பரென்ஸ் வெகு சிறப்பாய் நடந்தேறியதாகத் தெரிகிறது. பற்பல கூட்டுத்தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் மாத்திரமே யல்லாமல், கிழக்கு வங்காளம்-ஆஸாம் லெப்டினெண்ட் கவர்னர், ரெவினியூ போர்ட் முதல் மெம்பர் ஆகிய இவர்களைப்போன்ற மாகாணத்து உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் சிலரும், பிரபு வர்க்கத்தாருள் தலைமை வகித்த பெரிய மனிதர் பலரும் அந்த சபைக்கு விஜயம் செய்தனர். ஸ்வாரஸ்யமான பலவகை விஷயங்கள் வாதத்துக்குக் கொண்டுவரப்பட்டன. கூட்டுத்தொழில் சங்கங்களை ஏற்படுத்தும் காரியத்தில் கௌரவார்த்தமாய் உழைப்பவர்களை நியமித்துக்கொள்வது முக்கிய மென்பதைப்பற்றி எல்லோரும் ஒரே யபிப்பிராயமுள்ளவர்களா யிருந்ததாகத் தெரிகிறது. அப்படி கௌரவார்த்தமாய் வேலை செய்பவர்களுக்கு பிரயாணிகள் தங்குவதற்காக லோகல் போர்டாரும் மராமத்து இலாகாதாரும் ஏற்படுத்தியிருக்கும் சாவடிகளில் வாடகை யில்லாமல் குடியிருக்கச் சுதந்தரம் கொடுக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு மாகாண கெஜெட்டுகளையும் ரிபோர்ட்டுகளையும் பேபர்களையும் இலவசமாய் அனுப்ப

வேண்டுமென்றும் எழுத்துவேலை பார்ப்பதற்காக ஒருத் தணிக்கை குமாஸ்தாவைக் கொடுக்க வேண்டுமென்றும் இந்தக் கான்பரென்ஸில் பேசின ஒருவர் அபிப்பிராயப்பட்டார். லாபோத்பத்திக்குச் சம்பந்தப்பட்டதும் மற்றும் இதர வகைகளுக்குச் சம்பந்தப்பட்டதுமான கூட்டுத்தொழில் விஷயமாகக் கவனம் செலுத்துவதற்கு இது தக்க காலமென்று இன்னொருவர் சொன்னார். அவர் இன்னும் என்ன சொன்னாரென்றால்: "நெசவுக்காரர்களைப் போன்ற ஜனங்களுக்குள் கைத்தொழில் சங்கங்கள் ஏற்பட்டுச் செய்யவேண்டிய வேலை விசேஷமாய் இருக்கிறது; ஜன சங்கியையிலும் தொழிலின் முக்கியத்தன்மையிலும் கிருஷிகர்களுக்கு இரண்டாவதாக இந்த வகுப்பார்களையே சொல்லவேண்டும். அவர்களுடைய வேலையின் தற்கால நிலைமையிலே அவர்களுக்கு வரும் லாபத்தில் பெரும் பகுதியானது மிறத்தியாருக்குப் போய் விடுகிறது. அது அவர்களுக்கு அநியாய வட்டிக்குப் பணம் கடன் கொடுத்த ஸாவ்கார்களிடத்திலோ, அதிக விலைக்கு நூல் கொடுத்த கடைக்காரர்களிடத்திலோ, அவர்களுடைய சரக்குகளை விற்றுக்கொடுத்த தரகர்களிடத்திலோ போய்ச்சேர்ந்து விடுகிறது. உயர்தரமான கருவிகளை வாங்க அவர்களிடத்தில் பணமில்லை. இந்தியாவின் மிகவும் விசேஷமான கைத்தொழில்கள் ஏழைகளின் குடிசையில் செய்யப்படும் கைத்தொழில்களா யாகையால் உள்ளடங்கி யிருந்தபோதிலும் இந்தியா விலெங்கும் பரவியிருக்கிற கூட்டுத்தொழில் உற்சாகத்தைக்கொண்டு இந்தத் தொழில்களை நடத்தும் பட்சத்தில் சிறந்த நன்மை விளையாமற்போகாது. பாரங்கா நெசவுத் தொழிலோரின் பாங்கி ஏற்கனவே திருப்திகரமாக விருத்திமுகம் காட்டிவந்தது. அந்த பாங்கியார் கல்கத்தாவிலும் உள்ளூரிலும் ரொக்கத்துக்கு நூல் வாங்கி அதை மெம்பர்களுக்குச் சில்லறையில் விற்றார்கள்; அதுமட்டுமே யன்றி அந்த மெம்பர்கள் உற்பத்திசெய்த சரக்குகளையும் அந்த பாங்கியார் வாங்கி அவர்களுக்காக விற்றுக் கொடுத்தபடியால், அவைகளை விற்பதற்காக அந்த மெம்பர்கள் அக்கம் பக்கத்திலுள்ள குடிசைகளுக்குப் போய்ப் பல நாள் வீணாகத்திரிய வேண்டிய சிரமம் நீங்கினதோடு தரகர்களின் லாபமும் குறைந்தது."

இந்தக் கான்பரென்ஸில் பேசினவர்கள் சுருக்க வகையான நடவடிக்கை முறையை சங்கங்கள் அனுசரிக்க வேண்டுமென்னும் ஓர் அம்சத்தைக் குறித்து அடிக்கடி பேசினார்கள். இதைப்பற்றி கிழக்கு வங்காளம், ஆஸாம் மாகாணத்து ஐக்கியநாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் டீ என்பவர் பிரஸ்தாபித்து, அசிரத்தையாய் வேலை செய்வதற்கு இந்த ஏற்பாடு இடங்கொடுக்குமென்பதே இதற்குமுக்கியமான ஆட்சேபமென்று சொன்னார். கடன் வாங்கவேண்டிய ஆவசியகத்தையும் அதன் தொகையையும் கடன்வாங்குவோரின் நிலைமையை உத்தேசித்து நிர்வாகக் கமிட்டியார் ஜாக்கிரதையாய் ஆலோசிக்க வேண்டியது அவர்களது கடமையேயாயினும் அவர்கள் இனி அந்தப்படி விசாரிக்கமாட்டார்களென்று சொன்னார். இவரோ ஆக்ஷேப

மென்னவென்றால், பெற்ற டிக்ரியை நிறைவேற்றுவது முக்கியமான கஷ்டமே யொழிய டிக்ரி பெறுவதில் எவ்வித கஷ்டமுமில்லை; இந்தக்கஷ்டம் சுருக்க வகையான நடவடிக்கையை அனுசரிப்பதால் நீங்கமாட்டாது. ப்ரைமரி பாடசாலைகளில் உபயோகிக்கும் பொருட்டுக் கூட்டுத்தொழிலைப்பற்றிய பாட புஸ்தகமொன்று தயார் செய்ய வேண்டுமென்று கான்பரென்ஸுக்கு வந்திருந்தவர்களில் ஒருவர் எடுத்துச்சொல்ல, இது விஷயமாய் அபிப்பிராயங்கள் சதா மாறிக்கொண்டே வருகிறபடியால் இவ்வளவு சீக்கிரத்தில் ஷை பாடபுஸ்தகம் தயார்செய்வது உசிதமல்லவென்று ஆனரபில் மிஸ்டர் மைலீடஸ் பதிலுரைத்தார். ப்ரைமரி பாடசாலைகளிலும் மத்தியதர பாடசாலைகளிலும் புதிதாய் உபயோகிக்கப்படும் பாட புஸ்தகங்களிலே ஐக்கிய நாணயத்தைப் பற்றிய சிறு வியாசங்களைச் சேர்க்கும்படி வித்யா இலாகா அதிகாரிகள் ஏற்கனவே கட்டளையிட்டிருப்பதாக மிஸ்டர் டீ என்பவர் சொன்னார். சங்கங்களுக்கு திரவிய சகாயம் செய்வதிலுள்ள கஷ்டம் தனக்குத் தானாகவே சரிப்பட்டுவருவது திருப்திகரமாயிருக்கிறதென்று ஆனரபில் மிஸ்டர் மைலீடஸ் தம்முடைய பிரசங்கத்தின் முடிவுரையில் கூறினார். இப்போது ஏற்பட்டிருக்கும் சங்கங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் லாபகரமாக பணத்தை உபயோகிக்கக்கூடியவைகளாயிருக்கின்றனவோ அவ்வளவு சீக்கிரமாகப் பணமும் வந்து கொண்டிருக்கிறது. மகா ஜனங்களின் கையிலிருந்து பணம் வராமலும், கௌரவார்த்தமான சங்க ஸ்தாபகர்களும் இன்ஸ்பெக்டர்களும் செய்வதற்கு வேலையின்றி சும்மா இருப்பதாகவும், இந்த முயற்சிக்கு துரைத்தனத்தாரிடமிருந்து இன்னும் திரவியசகாயரூபமான தூண்டுதல் வேண்டியிருப்பதாகவும் எப்போதேனும் நேரிடும் பட்சத்தில், தாராளமாய்க் கடன் கொடுக்கும்படி கவர்ன்மெண்டாருக்குச் சொல்லத் தாம் பின்னிடையமாட்டாரென்றும் அவர் உறுதிகூறினார். ஆயினும் மகாஜனங்களினிடத்திலிருந்து பணம் வருவதைப்பற்றித் தமக்கு சந்தேகமில்லையென்றும் மேல் விசாரணைக்கு ஏற்பாடு செய்வதே மிகவும் கஷ்டமான காரியமென்றும் சொன்னார்.

மேல் விசாரணைக்காகப் பிடிக்கும் செலவைக் கவர்ன்மெண்டார் கொடுப்பதானால் சர்க்கார் பணம் மட்டுக்குமிஞ்சி செலவழிந்துபோகும். இப்போது சங்கங்கள் 450-க்குக் குறையாமலும் 500-க்கு அதிகப்படாமலுமிருக்கின்றன; இன்னும் சில வருஷங்களில் இவைகளின் சங்கியை இன்னும் பத்துமடங்காகப் பெருகி அதற்கு விசேஷ ஏற்பாடு வேண்டியிருக்கும். லர்க்கார் உத்தியோகஸ்தரல்லாதவர்கள் மெம்பர்களாகச் சேர்ந்து டிஸ்ட்ரிக்ட் ஸென்ட்ரல் பாங்கிகளையும் ஸப் டிவிஷன் ஸென்ட்ரல் பாங்கிகளையும் ஏற்படுத்தி டிஸ்ட்ரிக்ட் அல்லது ஸப் டிவிஷன் தலைமை யதிகாரியை அவைகளுக்குச் சேர்மனாக நியமித்தாலும் முக்கியமாய் அவர்களே அவைகளை நடத்தும் பட்சத்தில் அந்தந்த ஸப் டிவிஷன்களிலுள்ள சங்கங்களை மேல் விசாரணை செய்யும் வேலையை ஷை பாங்கிகள் ஏற்றுக்கொள்ளுமாகையால், அப்போது இந்தச் சிக்கான விஷயம் சுலபமாய்த் தீர்ந்துபோய்விடுமென்று உபந்யாஸகர் அபிப்

பிராயப்பட்டார். சட்ட நிரூபண சபையின் கமிட்டியில் சுருக்கமாய் விவரிக்கப்பட்ட புதிய ஸர்க்கில் பத்ததியைப்பற்றிய பிரேரேபணைகளைக் கான்பரென்ஸார் கவனிக்கவேண்டுமென்று அவர் கோரினார். இந்த பத்ததியின்படி பிரதி ஸர்க்கிலின் விசாரணையும் ஒரு ஸப் டெப்யுடி கலெக்டரின் வசத்திலிருக்கும்; இந்த ஸர்க்கில் சிறிய பிரதேசமாகவே யிருக்கும்; இந்த ஸர்க்கில் அதிகாரியும், அவருடைய ஆதரணையின்கீழ் விருத்தியாக வேண்டியிருக்கிற உத்தியோகஸ்தரல்லாதவர் சேர்ந்த கிராமஸ்தாபனங்களும் அவ்வவ்விடத்திய சங்க விவகாரங்களை மேல் விசாரணை செய்வதற்கு உத்தமமான சாதனங்களாக அமையக்கூடும். மேல் விசாரணை யென்பது மிகவும் விரிந்த பொருள்கொண்ட வார்த்தை. காரிய நிர்வாகம் முதல் அதிகாரச்செலுத்தி விவகாரங்களை நடத்துவது வரையில் அதில் அடங்கியிருக்கின்றன. சங்கங்களை யூனியன்களாகச் சேர்த்து ஒவ்வொரு யூனியனுக்கும் ஒவ்வொரு ஸூபர்வைஸரை நியமிக்கும்படி மிஸ்டர் டீ அவர்கள் கூறிய ஏற்பாடு காரிய நிர்வாக ரூபமான மேல் விசாரணையை விஸ்தாரமாய்ச் செய்வதற்கேற்ற சிறந்த யோசனை யாகுமென்று உபந்யாஸகர் கருதினார். அதனால் காரியசித்தி யுண்டாகுமென்று அவர் கோரினார்; ஆனால் இந்த எல்லையைக் கடந்து சங்கத்தின் விவகாரங்களை அடக்கி நடத்தும் அதிகாரத்துக்குக் கிட்டதட்ட சமானமான மேல் விசாரணையை வகிக்கும் விஷயத்திலே கவர்ன்மெண்டாரின் சம்பந்தத்தை நிறுத்திவிடும்படியான காலம் இன்னும் வரவில்லையென்று அவர் நினைத்தார்.

சேலம் கூட்டுத்தொழில் கான்பரென்ஸ்.

("மதராஸ் ஸ்டாண்டர்ட்" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

இந்த மாசம் 14-வது 15-வது தேதிகளில் சேலத்தில் நடந்த சேலம் கூட்டுத்தொழில் கான்பரென்ஸுக்கு கௌரவார்த்தமான சங்க ஸ்தாபகர்களும் மற்றோர்களும் அனுப்பிய வியாசங்களை வேறோரிடத்தில் அச்சிட்டிருக்கிறோம். கூட்டுத் தொழிலாளருக்குள் விவாதத்திலிருந்த விஷயங்களை தர்க்கித்தாராயவேண்டிய காரியம் ஷை இரண்டு தினங்களிலும் விசேஷமாயிருந்தபடியால், ஷை வியாசங்கள் கான்பரென்ஸில் படிக்கப்பட்ட வைகளாகக் கருதப்பட்டன; கூட்டுத்தொழில் விஷயமாய் உழைப்பதில் பிரசித்தி பெற்றவர்களான கும்பகோண வாசியாகிய ராவ்பகதூர் பி. கே. ராமாநுஜாசாரியார் பி. ஏ., மதுரைவாசியாகிய கே. ராமஸ்வாமி [illegible] பி. ஏ., பி. எல்., நீடாமங்கலவாசியாகிய என். ஸேதுராம ஐயர், இ[illegible]ப்போன்ற கனவான்கள் மாத்திரம் தமிழில் உபந்யாஸம் செய்வதே [illegible]மனக்கருதி அவ

வாறே செய்தனர். இந்த கான்பரென்ஸில் வாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இரண்டு விஷயங்களைப் பற்றியே முக்கியமாய்த் தர்க்கம் நடந்தது. அவைகளில் ஒன்று, ஸென்ட்ரல் பாங்கிகளை சமுதாயமாய் (பெடெரேஷனாய்ச்) சேர்ப்பதைப் பற்றியது; திருச்சினாப்பள்ளி ஜில்லா பாங்கியின் காரியதரிசியாகிய ராவ்பகதூர் ஒய். நாராயணராவ் இது விஷயமாய் ஓர் உபந்யாசம் எழுதி வாசித்தார். மற்றது, ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சங்கங்களில் மெம்பர்களாகவும் டிபாஸிட் செய்பவர்களாகவும் இருப்பதற்குள்ள நிர்ப்பந்தங்களை நீக்குவதைப் பற்றியது; இது விஷயமான தீர்மானத்தை சேலம் வாசியாகிய ஸ்ரீமான் கே. ஜி. வேங்கட சுப்பய்யர் பி. ஏ., பி. எல்., எல். டி. அவர்கள் பிரேரேபித்தார். முதல் பிரேரணையின் கருத்தென்னவெனில், இப்போது நாட்டுக் கூட்டுத்தொழில் சங்கங்களுக்கு திரவிய சகாயம் செய்து வரும் சென்னை, சேலம், திருச்சினாப்பள்ளி, கோயமுத்தூர், தெனாலி என்னும் இடங்களிலுள்ள ஐந்து ஸென்ட்ரல் பாங்கிகளும் தங்களிடத்தில் மிகுதியாய் நின்றுள்ள ஐவேஜை ஒன்றாய்ச் சேர்த்துக் இந்த ராஜதானியின் எந்த பாகத்திலாவது பணம் அவசரமாய் வேண்டியிருந்தால், அந்த பாகத்துக்கு அதைக் கிடைக்கும்படி செய்வதேயாகும். இக்கருத்து சிறந்ததே யென்றாலும், மதுரை வாசியாகிய ஸ்ரீமான் கே. ராமஸ்வாமிஐயர் பி. ஏ., பி. எல்., அவர்கள் கூட்டுத்தொழில் சம்பந்தமான நியாயங்களை ஆதாரமாகக்காட்டி இதற்கு ஓர் ஆக்ஷேபம் கூறினார். இப்போதுள்ள ஸென்ட்ரல் பாங்கிகள் தங்கள் காரிய நிர்வாகத்தில் நாட்டுச் சங்கங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறதில்லையாகையால், அவைகள் கூட்டுத்தொழில் முறையை அநுசரித்து நடப்பவைகளாகாவென்றும், அப்படிப்பட்ட பாங்கிகளை ஒன்றாய்ச் சேர்ப்பதனால், கூட்டுத்தொழில் பாத்தியதைகள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டதென்னும் தப்பெண்ணமுண்டாகுமென்றும், அப்படி அந்த பாத்தியதைகளை ஒன்றாய்ச் சேர்ப்பதாக வாஸ்தவத்தில் உத்தேசிக்கவில்லையென்றும் அவர் சொன்னார். கடைசியில் இந்த பிரேரணை சிறிது மாறுதலுடன் அங்கீகரிக்கப்பட்டது. ஸென்ட்ரல் பாங்கிகளை சமுதாயமாகச் சேர்ப்பது உசிதமென்று மாத்திரம் இதில் கவர்ன்மெண்டாருக்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

எல்லா அந்தஸ்துகளிலுமுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூட்டுத்தொழில் சங்கங்களில் மெம்பர்களாகச் சேருவது விரும்பத்தக்கதா என்னும் இரண்டாம் விஷயத்தைப் பற்றிப் பேசுங்கால், உயர்ந்த அந்தஸ்துகளிலுள்ள ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களைச் சேர்த்துக்கொள்ளும் பட்சத்தில் நாட்டுச் சங்கங்களின் சுவாதீனப் பான்மைக்குக் கேடு உண்டாகுமென்று (தஞ்சாவூர்) ஆலங்குடி நாட்டுச் சங்கத்தின் காரியதரிசி கூறியது மிக்க புத்திசாலித்தனமாயிருந்தது. இதே காரணவான் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களிடத்திலிருந்து டிபாஸிட் பெற்றுக்கொள்வதற்கு மாத்திரம் ஆக்ஷேபம் பண்ணவில்லை. இப்படி ஆக்ஷேபம் செய்யாமல் அங்கீகரித்தது, சேர்மனாகிய ஆனரபில் மிஸ்டர் ஜே. என். அட்கின்ஸன் கூறியதுபோல், சங்கங்களின் நன்மையை உத்தே

சித்து வெகு ஸகஜமேயாயினும், டிபாஸிட் செய்யும் சுதந்தரமானது நிலை பெறுவதோ தள்ளுண்டு போவதோ சங்க நிர்வாகத்தில் பாத்தியதை பெறுவதையொட்டியே ஏற்படவேண்டுமென்பது எங்கள் அபிப்பிராயம்; எங்கள் பத்திரிகா வாசகர்களும் இதை வெகுசாய் ஒப்புவார்களென்று எண்ணுகிறோம். சேர்மனுடைய உட்கருத்தும் இதுவேயெனத் தோற்றுகிறது. இந்தக் கான்பரென்ஸின் முதல் தினத்தில் ஹாஜராயிருப்பதற்கு மாத்திரமே ஆனரபில் மிஸ்டர் ஜே. என். அட்கின்ஸனுக்குச் சாத்தியமாயிருந்தது; அன்றையதினம் அவர் அக்ராஸனம் வகித்து சபையின் காரியங்களை நடத்தினார். அத்புதமான விதத்தைப்பற்றிக் கடைசியாக ஒரு வார்த்தை சொல்லவேண்டியது எங்களுடைய கடமையாகும். கூட்டுத்தொழில் விஷயங்களில் ஆலோசனை சொல்லும் உத்தியோகஸ்தரென்று அவரை கவர்ன்மெண்டார் நம்பியிருக்கிறபடியால், இந்த மகாசபையில் கொண்டுவரப்பட்ட பற்பல கேள்விகளுக்கும் அவர் முன்பின் யோசனையின்றி ஆமென்றோ, அல்லவென்றோ அந்த நிமிஷத்தில் பதில் சொல்லுவது சாத்தியமாயில்லை. ஆனால் ஸிவில் ஸெர்விஸில் வெகு காலத்துக்கு முன்னிருந்த ஒரு பிரசித்திபெற்ற துரைச்சி எந்த விஷயத்தையும் யைஸல் செய்யும் பிரியமான முறையாயிருந்த 'ஆலோசனை செய்வதாக வாக்களிக்கிறோம்' என்னும் வாக்கியத்தையே அட்கின்ஸன் துரையும் சொல்லிவிடாமல் தர்க்கிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் தம்முடைய உண்மையான அபிப்பிராயத்தைச் சொன்னதுமன்றி அந்த சபையில் பிரஸ்தாபிக்கப்பட்ட இரண்டு மூன்று அம்சங்களைப் பற்றி, 1912-ம் வருஷத்தின் முற்பகுதியில் ஜாரி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்பட்ட புதிய ஆக்ட் அமுலுக்கு வருகிறவரையில் கூட்டுத்தொழிலாளர் காத்திருக்கவேண்டுமென்றும் புத்திமதி கூறினார்.

உபந்நியாஸங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

———:-:———

1911-ம் ஸு அக்டோபர் மீ 14, 15 தேதிகளில் நடந்த சேலம் ஜில்லா கூட்டுத்தொழில் கான்பரென்ஸில் அக்கிராசனாதிபத்தியம் வஹித்து கனம் ஜே. என். அட்கின்ஸன் துரையவர்கள் செய்த உபந்நியாஸம்.

இந்த சந்தர்ப்பத்தில் அக்கிராசனாதிபத்தியம் வஹிக்கும்படி என்னைக் கேட்டு கௌரவப்படுத்தினதற்காக உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். கூட்டுத்தொழில் முயற்சியானது சமூக வாழ்க்கையிலும், பொருளாதார விஷயமாயும், கல்வி சம்பந்தமாயும் இந்த தேச ஜனங்களின் முன்னேற்றத்துக்கு, வாஸ்தவத்தில் ஒழுக்கத்திலும் சம்பத்திலும் அவர்கள் அபிவிருத்தி யடையத்தக்க ஒவ்வொரு வழியிலும், எல்லையற்ற நன்மை செய்யக்கூடிய தாகையால், அந்த முயற்சி விருத்தியடைவதற்குரிய முக்கிய ஸாதனங்களெவையென்பதைப்பற்றி யோசிப்பதற்கான ஒரு கூட்டத்தில் அக்கிராசனாதிபதியாயிருக்கும்படி அழைக்கப்படுவதே ஒருவருக்குக் கௌரவத்தையும் சந்தோஷத்தையும் கொடுப்பதாகும். சேலம் ஜில்லாவில்தான் இந்த முயற்சியானது அதி விசேஷமான பலித்தத்துடனும், மிகவும் தீவிரமாயும் விருத்தியடைந்து வந்திருக்கிறதென்பது பிரஸித்தியான விஷயம்; ஆகவே இந்த ஜில்லாவிலிருந்து அழைப்புப்பத்திரம் வந்ததென்றால், அதற்குரிய கௌரவம் இன்னும் அதிகமேயாம்.

சென்னையில் இந்த முயற்சியின் பூர்வ சரித்திரத்தை நோக்குங்கால், இந்த சரித்திரத்தின் முதல் அத்தியாயமானது ஆறு வருஷத்துக் குள்ளேயே ஆரம்பிக்கப்பட்டதென்பது கவனிக்கத்தக்கது. ஆதிமுதல் கூட்டுத்தொழில் பத்ததியைப் பரவச்செய்வதில் சேலம் ஜில்லாவே தலைமை பூண்டிருந்ததாகத் தெரிகிறது. இந்த ராஜதானியில் செங்கல்பட்டு ஜில்லாவில்தான் முதலில் ஐக்கியநாணயச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன; இவைகள் என்ன சந்தர்ப்பங்களில் ஸ்தாபிக்கப் பட்டனவென்பது எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. இந்த முயற்சியோ அப்பொழுது புத்தப்புதிது; பழைய ஆசாரங்களில் அதிக பிடிப்புள்ள தேசங்களுக்குள் முதன்மைபெற்ற இத்தேசத்தில் மற்றப்புதுமைகளைப்போலவே ஜனங்களும் இதுவிஷயமாய் அசிரத்தையோ, சந்தேகமோ, அல்லது வாஸ்தவத்தில் பகைமையோ காட்டத்தொடங்கினார்கள். அப்பொழுதிருந்த ரெஜிஸ்ட்ரார் ஜனங்களை இந்தப்புதிய விஷயத்தை கைக்கொள்ளும்

படி செய்வதற்காகத் தம்முடைய போதனாசக்தி முழுவதையும் பிரயோகிக்க வேண்டியதாயிற்று; மேலும் அவர் ஆரம்பத்தில் எந்தெந்த இடங்களில் தம்முடைய போதனைகள் ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளப் படுமென்று அவருக்கு நம்பிக்கை யிருந்ததோ அந்த இடங்களிலேயே தம்முடைய முழுகவனத்தையும் செலுத்தினார். ஆகையினால்தான், செங்கல்பட்டு ஜில்லாவில் முதலில் ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் வேலைசெய்யத் தொடங்கின பிறகு ஒரு வருஷத்துக்கு மேலாகிறவரையில் இந்த சேலம் ஜில்லாவில் இம்முயற்சியானது உயிருடனிருப்பதாகவே தெரியவில்லை. சேலத்தில் முதன் முதல் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கம் நாமக்கல் அர்பன் பாங்கி; இது 1905-ம்ஸு நவம்பர்மீ 4உ ஏற்படுத்தப்பட்டது; ஒரு வாரத்துக்குள், 1905-ம் ஸு நவம்பர் மீ 10உயன்று வேலூரில் ஒரு சங்கம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. இவையிரண்டும் தான் சேலத்தில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்கள்; 1905-06-ம் ஸுத்தில் இவைகளைத் தவிர வேறு யாதொரு சங்கமும் ஏற்படுத்தப்பட வில்லை. அடுத்த இரண்டு வருஷங்களில் இம்முயற்சியின் அபிவிருத்தி நிதானமாகத் தானிருந்தது; 1906-07-ம் ஸுத்தில் நான்கு பாங்கிகள் மாத்திரமே ஏற்படுத்தப்பட்டன; 1907-08-ம் ஸுத்தில் இரண்டு ஸ்தாபிக்கப்பட்டன; பிந்திய வருஷக்கடைசியில் இராஜதானி முழுவதிலுமுள்ள சங்கங்களின் மொத்தம் 101 ஆகயிருக்க, இந்த ஜில்லாவிலே மொத்தத்தில் 8 சங்கங்கள் தான் இருந்தன.

அடுத்த வருஷத்தில், அதாவது 1908-09-ம் ஸுத்தில், ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. அப்பொழுதுதான் சேலம் ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட், என்னும் பாங்கி ஏற்படுத்தப்பட்டது; ம-ா-ா-ஸ்ரீ ஆதிநாராயண செட்டியாரவர்கள் சிரமத்தைப் பாராமல் உழைத்து வந்தது காரணமாகவும் முக்கியமாய் இந்த பாங்கி ஸ்தாபிக்கப்பட்டதன் பலனாகவும் நகர சங்கங்களும் நாட்டுச்சங்கங்களும் முறையே 2-ம், 6-ம் ஆக இருந்தவை 9-ம், 40-ம் ஆக ஏககாலத்தில் அதிகரித்தன; அடுத்த வருஷத்தில் நாட்டுச் சங்கங்களின் சங்கியை 78 ஆயிற்று.

நாட்டுச்சங்கங்கள் இவ்வளவு தீவிரமாய் அதிகரித்து வந்தது மிகவும் சந்தோஷப்படத்தக்க விஷயமேயாம். ஆனால் நான் இப்படி சொல்வதனால் நகர பாங்கிகளை விருத்திபண்ணுவதற்கு விசேஷ ஆவசியகமில்லை யென்று நான் எண்ணுவதாகக் கொள்ளக்கூடாது. முக்கியமாய் இரண்டு வழிகளில் கூட்டுத்தொழில் கோட்பாட்டை அனுசரிப்பது தற்காலத்தில் மிகவும் அவசியமென்று நான் நிச்சயமாய் எண்ணுகிறேன்; அதாவது, இந்த ஜில்லாவில் அதிகமாயிருக்கும் நெசவுத் தொழிலாளருக்குள் சரக்குகளை உற்பத்தி செய்வதும், அவைகளைப் பங்கிடுவதுமேயாம்.

இது நிற்க, சேலம் ஸெண்ட்ரல் பாங்கியானது கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்திக்கு எவ்வளவு சகாயம் செய்திருக்கிறதென்பதைப்பற்றி நான்

முக்கியமாய் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு கூட்டுத்தொழில் சங்கமும் ஆரம்பதசையில் ஈடுகொடுக்கவேண்டிய பெருங் கஷ்டங்களில் ஒன்று. அது வேலை நடத்துவதற்கான மூலதனத்தைச் சேகரிப்பதேயாம். ஒவ்வொரு தேசத்திலும் அனுபவத்தில் எப்பொழுதும் நேரிட்டிருக்கும் இந்த கஷ்டமானது இந்தியாவிலே இந்த முயற்சியின் ஆரம்பதசைகளில் விசேஷமாய்க் காணப்பட்டது; இது சகஜமே; ஏனெனில் அப்பொழுது நமக்கு கடன் எவ்வளவு வேண்டியிருக்கிறதோ அதற்குக் குறைவாகவே கிடைப்பதாயிருக்கும். வேலை நடத்துவதற்கான மூலதனம் சாதாரணமாய் பங்கு மூலதனத்தைக் கொண்டும் டிபாஸிட்டுகளைக் கொண்டும் சேகரிக்கப்படுகிறது; "டிபாஸிட்டுகள்" என்னும் பதத்தில் மெம்பர்களால் கட்டப்படும் வால்தவமான டிபாஸிட்டுகள் மாத்திரமல்லாமல் இதர சங்கங்களிலிருந்தும் மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்தும் வாங்கப்பட்ட கடன்களும் அடங்கும்படி இப்பொழுது நான் உபயோகித்திருக்கிறேன். 1905-06-ம் ஸுத்தில் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடியதாய் சேலம் ஜில்லாவிலுள்ள சங்கங்களிலெல்லாம் சேர்ந்திருந்த பங்குமூலதனம், டிபாஸிட்டுகள், ஆகிய இவைகளின் மொத்தம் ரூ. 7,148; இதில் ரூ. 5,920 மாத்திரமே கடன் கொடுக்கப்பட்டது. 1906-07-ம் ஸுத்தில் வேலை நடத்துவதற்காக கிடைக்கக்கூடிய மூலதனம் ரூ. 39,357; இதில் ரூ. 38,895 கடன் கொடுக்கப்பட்டது; 1907-08-ம் ஸுத்தில் வேலை நடத்துவதற்காக கிடைக்கக்கூடிய மூலதனம் ரூ. 72,577; கடன் கொடுக்கப்பட்ட தொகையின் மொத்தம் 66,343 ரூபாய் ஆயிற்று. மூன்று வருஷத்தில் வேலை நடத்துவதற்கான மூலதனமானது ஒன்றுக்கு பத்தாக அதிகரித்துவிட்டது; ஆனால் கடனாகக் கேட்கப்பட்ட தொகையின் மொத்தமும் அதேமாதிரி அதிகரித்துக்கொண்டே வந்தது; அதனால் நாணயம் இன்னும் தீவிரமாய் அதிகரிப்பது தேசத்துக்கு அத்தியாவசியமான விஷயமென்று ஸ்பஷ்டமாய் ஏற்பட்டது. அடுத்த வருஷமாகிய 1908-09-ம்ஸுத்தில், சேலம் ஜில்லா அர்பன் பாங்கி, லிமிடெட், என்று வழங்கும் ஸென்ட்ரல் பாங்கியானது ஸ்தாபிக்கப்பட்டது; அதன் நோக்கங்களில் ஒன்று அதைக்காட்டிலும் சிறிய நகர சங்கங்களுக்கும் நாட்டுச் சங்கங்களுக்கும் திரவியசகாயம் செய்வதே; இதை அநேகமாய் அதன் முக்கிய நோக்கமென்று சொல்லலாம்; அந்த வருஷத்தில் வாஸ்தவமான ஐக்கிய நாணயச் சங்கங்களாகிய இச்சிறிய சங்கங்களின் வேலை நடத்துவதற்கான மூலதனமானது 2,92,798 ரூபாயாக அதிகரித்தது; இதில், ரூ. 2,08,359 ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடனாக வாங்கப்பட்டது; இச்சங்கங்கள் வெளியில் கடனாக கொடுத்ததொகையோ 2,80,018 ரூபாயாயிற்று. 1909-10-ம்ஸுத்தில் அவைகளின் வேலை நடத்துவதற்கான மூலதனம், ரூ. 4,75,810; இதில் ரூ. 3,82,246 ஸென்ட்ரல் பாங்கியால் கடனாகக் கொடுக்கப்பட்டது; அவைகள் வெளியில் கொடுத்த கடன்களின் மொத்தம் ரூ. 4,63,952; 1910-11-ம் ஸுத்தில் அவைகளின் வேலை நடத்துவதற்கான மூலதனம் 4,15,423 ரூபாயும், அவைகள் வெளியில் கடன்கொடுத்த தொகையின் மொத்தம் 4,00,691 ரூபாயும் ஆயிற்று; இந்த வருஷத்துத் தொகைகள் முந்திய வருஷத்தியவைகளைக் காட்டிலும் குறைந்திருப்பதற்குக் காரணம் ஒரு நகரச் சங்கமும் ஆறு நாட்டுச்சங்கங்களும் அடங்கிய நாமக்கல் தாலுகாவைத் திருச்சினாப்பள்ளி ஜில்லாவுக்கு மாற்றிவிட்டதேயாம். மூன்று ஆயிரக்கணக்காய் வியாபாரம் செய்துவந்த நாட்டுச் சங்கங்களும் நகரச் சங்கங்களும் ஸென்ட்ரல் பாங்கி ஏற்பட்டது காரணமாக லக்ஷக்கணக்காய் வியாபாரம் நடத்தக் கூடியவைகளாயிருக்கின்றனவென்றே சொல்லலாம். கனவான்களே, இது நாம் மிகவும் பெருமைபாராட்டத்தக்க பலனேயாம். இதைப்பற்றி ஒரு நிமிஷம் யோசித்துப்பாருங்கள். நாணயம் என்பது திரவியத்தைச் சம்பாதிப்பதற்கான சக்தி; ஆகவே, இந்த ஐக்கிய நாணயச் சங்கங்களை ஸ்தாபித்து ஸென்ட்ரல் பாங்கியின் உதவியை அவைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதன் பலனாக திரவியத்தைச் சம்பாதிப்பதற்கான சக்தியை உண்டாக்குவது. அல்லது இன்னும் சுலபமாய்ச் சொல்லுங்கால், வருஷமொன்றுக்கு லக்ஷக்கணக்காய் பொருளைச் சேகரித்தது சாத்தியமாயிருக்கிறது. டெமாஸ்தனிஸ் என்பவர் சொல்லுகிறபடி "பொருள் இரண்டுவகையாம்; பணம்ஒன்று; பொதுநாணயம்மற்றொன்று; இவ்விரண்டில் நாணயமே பெரிது." டானியல் வெப்ஸ்டர் என்பவரோ நாணயமே நவீன வர்த்தகத்தின் பிராணவாயு. உலகமுழுவதிலுமுள்ள சகல சாம்ராஜ்யங்களைக் காட்டிலும் இந்த நாணயமே ஜனங்களை செல்வவான்களாக்குவதற்கு ஆயிரக்கணக்காக எவ்வளவோ உதவிசெய்திருக்கிறது" என்று கூறுகிறார். ஜனங்களுக்குள் இருக்கும் நாணயத்தை ஜாக்கிரதையாய் உபயோகப்படுத்துவதனால் உண்டாகக் கூடிய பெருத்த அனுகூலங்களை இந்தியாவிலுள்ள நாம் அறியவேண்டுமென்பதற்குப் போதுமான காரணமிருக்கிறது; ஆனால் நம்மவர்களில் கோடிக்கணக்காயுள்ள தொழிலாளிகளுக்குள் கடனுக்கு ஈடுகொடுப்பதற்கான அபார சக்தி எங்குபார்த்தாலும் வெளிக்குத் தெரியாமல் சிதறிக் கிடக்கிறது. இந்த சக்தியைக்கொண்டு மூலதன மேற்படுத்தி அதிலிருந்து லாபம் சம்பாதிப்பதற்கு நாம் கடந்த ஆறு வருஷத்துக்குள்ளேதான் ஒழுங்கான ஒரு பத்ததியை அனுசரித்து பிரயத்தனப்பட்டு ஆரம்பித்திருக்கிறோம். இந்த வேலை இன்னும் ஆரம்பதசையிலேயே இருக்கிறது. 1910-11-ம்ஸுத்தில் ஸென்ட்ரல் பாங்கியைத் தவிர்த்து இந்த ஜில்லாவில் 75 சங்கங்கள்தான் இருந்தன; ஆயினும் அவைகளால் 4 லக்ஷம் ரூபாய் வரையில் திரவியம் சம்பாதிப்பதற்கான சக்தி, அதாவது பொருள், உண்டாயிற்று. இராஜதானி முழுவதிலும் 596 சங்கங்கள் வேலை நடத்திவந்தன; 600-புதிய சங்கங்களை ரெஜிஸ்டர் செய்வதற்கான விண்ணப்பங்கள் இந்த நிமிஷத்தில் தம்மிடத்தில் பைசலாகாமல் கிடக்கின்றனவென்று ரெஜிஸ்ட்ரார் சொல்லுகிறார். காலம் செல்லச்செல்ல, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நாட்டு பாங்கி ஏன் ஏற்படக்கூடாதென்பதற்கு காரணமெதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை; இதுநிற்க, நகரபாங்கிகள், சாக்குகளை உற்பத்தி செய்யும் சங்கங்

கள், அவைகளை மொத்தமாய் வாங்கி சில்லரையாய்ப் பங்கிடும் சங்கங்கள், இலைகளின் சங்கியை இனி வெகு வேகமாய் அதிகரிக்கு மென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. சில தினங்களுக்கு முன்தான் விவசாய இன்ஸ்பெக்டர் ஜெனரலாக வேலைபார்த்துவரும் மிஸ்டர். பர்நார்ட் கவென்ட்ரி என்பவர் எழுதிவைத்த குறிப்பில் அடியிற்கண்ட விஷயம் எனக்குத் தென்பட்டது:— "ஐக்கிய நாணய சங்கங்களால் பயிரிடுவோனுக்கு உதவி ஏற்படுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்; சில சீர்திருத்தங்களைச் செய்வதற்கு மூலதனம் வேண்டியிருக்கிறது; இதற்கு இந்த உதவியையே நாங்கள் அதிகமாய் நம்பியிருக்கிறோம்." ஒன்றாய்ச் சேருவதனால் பயிரிடுவோருக்கு உண்டாகக்கூடிய உதவிக்கு உதாரணமாக, கடந்த ஆகஸ்ட்மீ 24உ பிரசுரிக்கப்பட்ட இந்தியன் ட்ரேட் ஜர்னல் என்னும் பத்திரிகையில் "ப்ரான்ஸிலுள்ள எண்ணெய்க் கூட்டுத்தொழில் சங்கங்களை"ப்பற்றி எழுதியிருக்கும் ஒரு வியாசத்தை எடுத்துச் சொல்லலாம். ப்ரான்ஸ் தேசத்தில் ஒலிவை மரங்களை வைத்து வளர்த்துவருபவர்கள் எண்ணெய் விதைகளிலிருந்து எடுக்கப்பட்ட இதரதேசத்திய எண்ணெய்களின் போட்டியால் சிலகாலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்ததாக இந்த வியாசத்தினால் ஏற்படுகிறது. இப்படி போட்டி போடுகிறவர்களுக்குள் இந்த ராஜதானியில் விளையும் வேர்க்கடலையிலிருந்து எண்ணெய் எடுப்பவர்களும் இருந்திருக்கலாம்; இந்த எண்ணெய்கூட ப்ரான்ஸ்தேசத்தில் செய்யப்படும் மிகவும் நேர்த்தியான ஒலிவை எண்ணெயுடன் ப்ரான்ஸ் தேசத்திலேயே போட்டி போடக்கூடுமென்பதைப் படிக்க சந்தோஷமாயிருக்கிறது. இதுநிற்க, ப்ரான்ஸ்தேசத்திய ஒலிவை எண்ணெய்த் தொழிலானது இந்த அன்னிய தேசச் சரக்குகளின் போட்டியால் அழிந்து போய்விடும்போலிருந்தது; அந்த சமயத்தில், புத்திசாலியான யாரோ ஒருவர் ஒலிவை மரங்கள் வைத்து வளர்ப்பவர்களை கூட்டுத்தொழில் கோட்பாட்டை அனுசரிக்கும்படி செய்தார். இதன் பலன் என்னவென்றால், நாம் இத்தேசத்தில் நன்றாய் அறிந்திருக்கும் மாதிரியாயுள்ள கரடுமுரடான மரச் செக்குகளுக்குப் பதிலாக ஜலயந்திரத்தினாலோ நீராவியினாலோ இயக்கப்பட்ட செக்குகள் ஸ்தாபிக்கப்பட்டன; எண்ணெய் எடுப்பதற்குப் பிடிக்கும் செலவு குறைக்கப்பட்டது; லாபங்கள் அதிகரித்தன; இதைப்பற்றிய ரிபோர்ட்டின் முடிவில் சொல்லியிருக்கிறதென்னவெனில்: "ஆகையினால் ப்ரான்ஸ்தேசத்திய மத்தியதரைக் கடற்கரையில் எண்ணெய்த் தொழிலை, மறுபடியும் உயிர்ப்பிப்பதற்குப் பெரும்பாலும் கூட்டுத்தொழிலே உதவிபுரியுமென்று நான் நிச்சயமாய் நம்புவது பிசகாகாது".

ப்ரான்ஸில் செய்திருப்பதை இந்தியாவிலும் செய்யக்கூடும்; கூட்டுத்தொழில் முறையாயுள்ள சரக்குகளை உற்பத்திசெய்யும் வழிகளை நீங்கள் புத்திசாலித்தனமாய் அனுசரித்து அதனால் கிடைக்கக்கூடிய லாபத்தை அடைவீர்களென்று நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இந்த ஜில்லாவில் கூட்டுத்தொழிலின் அபிவிருத்தியைப் பற்றி நான் கோர்வையாகவும் போதுமான அளவுக்கும் விவகரிக்கவில்லை. என்னுடைய வியாசத்தைத் தயார்செய்வதற்கு இதுவரையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பத்திரிகைகளில் கிடைக்கக்கூடிய விஷயங்களையே நான் ஆதாரமாகக் கொண்டிருக்கிறேன்; இது விஷயமாய் எனக்கு அவ்வளவு நெருங்கிய பரிசயமுமில்லை; இதன் விவரங்களைக் குறித்து ஆதிநாராயண செட்டியாரவர்களைப் போல் எனக்கு நேரிலும் தெரியாது; இதைப்பற்றி செட்டியாரவர்களுக்குள்ள அனுபவ ஞானமானது அவர் ஊத்தங்கரை தாலூகா கூட்டுத்தொழில் கான்பரென்ஸில் செய்த அதி சிலாக்கியமான உபந்நியாசத்தில் நன்றாய் வெளியாயிற்று. இந்த உபந்நியாசத்தை நான் ஆழ்ந்த அக்கறையுடன் படித்தேன்; இதற்குக் காரணம், இந்த கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்திக்கு நேரிடக்கூடிய பல அபாயங்களைக் குறித்து அந்த உபந்நியாசத்தில் குறிப்பிட்டிருப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. இப்படிப்பட்ட அபாயங்கள் நேரக்கூடுமென்பதை நாம் கவனிக்காமலேயிருப்பது முழு மூடத்தனமாகும். "பழையகாலத்திலும் இக்காலத்திலும் நமக்குத் தெரிந்திருக்கும் சகல தேசங்களுக்குள்ளேயும் ஐக்கியநாணய முறையை அனுசரிப்பதற்கு விசேஷமாய் ஏற்றது இந்தியாவைப்போல் எத்தேசமுமில்லை"—என்று மிஸ்டர் ஊல்ப் என்பவர் எழுதுகிறார். இம்முறையை அனுசரிப்பதனால் எவ்வளவுக் கெவ்வளவு அனுகூலங்கள் உண்டாகுமென்று நாம் எதிர்பார்க்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு கூட்டுத்தொழில் சங்கங்களை எப்பொழுதும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் மோசடியான நோய்கள் அவைகளை அனுகாதபடி நாம் ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்ள வேண்டும்.

ஆதிநாராயண செட்டியாரவர்கள் ஊத்தங்கரையில் செய்த உபந்நியாசத்தில், கூட்டுத்தொழில் முறையானது இந்த ஜில்லாவிலே ஆறு விஷயங்களில் நோயால் பீடிக்கப்படுகிறதென்று தாம் தம்முடைய விசேஷ அனுபவத்தில் கண்டிருப்பதாகச் சொன்னார். இவ்வொரு விஷயத்திலும் உங்கள் காரியதரிசியானவர் நோய் இன்னதென்று நிஷ்கரிஷையாய்ப் பரிசோதித்தறிந்து அதற்கு இன்ன சிகிச்சை அவசிய மென்பதை அதற் கேற்றபடி வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். ஆயினும், இப்படிப்பட்ட நோய்கள் எக்காலத்திலாகிலும் மறுபடியும் காணக்கூடுமாகையால், ஆதிநாராயணசெட்டியாரவர்களின் உபந்நியாசத்தில் சொல்லியிருக்கும் சில விஷயங்களை மறுபடியும் நான் எடுத்துச் சொல்வதற்காக என்னை மன்னிப்பீர்களென்று கோருகிறேன். மேலேகண்ட ஆறு வகையான நோய்களையும் சௌகரியமாய் இரண்டு பெருந்தலைப்புகளின்கீழ்க் கொண்டுவரலாமென்று நினைக்கிறேன். இவைகளில் மூன்று தராசை என்னும் மிக்க இழிவான வியாதியிலிருந்து உண்டாகின்றன; அவை எவையெனில், பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று கேட்பதும், சேமநிதிகளை அதிக லாபம் கிடைக்கும்படியாய் வட்டிக்குப் போட்டுவைக்க வேண்டுமென்று கேட்பதும், சேமநிதிகளைப் பங்கிட வேண்டு

மென்று கேட்பதுமேயாம்; இக்கடைசி விஷயத்தைச் சொல்ல எனக்கே வெட்கமாயிருக்கிறது.

இச்சபையிலுள்ள அனைவருக்குமேயில்லாவிட்டால் அவர்களில் பெரும்பாலோருக்காவது, பொதுவாய் கூட்டுத்தொழில் பாங்கி வியாபார முறைகள் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். எந்த நோக்கத்துடன், எதற்காக ஒரு கூட்டுத்தொழில் சங்கம் ஏற்படுத்தப்படுகிறதென்பது உங்களுக்குத் தெரியும்; அது தெரிந்தால், மேலே கண்ட மூன்று விஷயங்களில் ஒவ்வொன்றும் எந்த ஸ்தாபனத்தைக் கொண்டாடுவதற்காக இன்று இங்கு கூடியிருக்கிறோமோ அதன் உத்தேசத்துக்கே முழுவதும் விரோதமாயிருக்கிறதென்று நீங்கள் அறிவீர்கள். பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்ற கூக்குரலை எடுத்துக்கொள்வோம். உங்களில் பாங்கியில் உத்தியோகஸ்தராயிருப்பவர்கள் உங்கள் வேலைக்காக பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்றும், மீட்டிங்குகளில் ஹாஜராயிருப்பதற்கான கட்டணங்கள் கொடுக்க வேண்டுமென்றும், டைரெக்டர்களுக்கான கட்டணங்களும், சம்பளங்களும், இன்னும் என்னென்னவோ கொடுக்கவேண்டுமென்றும் கேட்கிறீர்கள். எதற்காக நீங்கள் உங்கள் பாங்கியை ஏற்படுத்தினீர்கள்? உங்களுடைய சொந்த ஒத்தாசைக்காகவே யல்லவா? அப்படி உங்களுக்கே ஒத்தாசை செய்துகொள்வதற்காக உங்கள் சொந்த பணத்திலிருந்து உங்களுக்கே கட்டணங்கள் கொடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தேசிக்கிறீர்களே; அப்படி செய்தால் இந்த பாங்கியினால் உங்களுக்கு எப்படி ஒத்தாசை ஏற்படுமென்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? உங்களுக்கு உதவி ஏற்படுவது நாணயத்தைப் பொறுத்ததல்லவா? நீங்கள் சுலபவட்டிக்குப் பணம் கடன் வாங்கக்கூடியவர்களாயிருக்க வேண்டுமென்று விருப்புகிறீர்கள். அந்த விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டுத் தான் உங்களுடைய வேலைக்கு பிரதிபலன் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறீர்கள் போலும்! பாங்கியின் செலவுகள் கண்டிப்பாய்க் குறைக்கப்பட்டாலொழிய சுலபவட்டிக்குக் கடன் வாங்குவது சாத்தியப்படாதென்று எவ்வளவு சாமான்ய புத்தியுள்ளவர்களுக்கும் தெரியவேண்டுமே. மிஸ்டர் ஊல்ப் என்பவரின் வியாசத்திலிருந்து முன்னமே சில விஷயங்களை எடுத்துச் சொன்னேன்; மறுபடியும் அடிக்கடி அதிலிருந்து எடுத்துச்சொல்லப் போகிறேன்; அவர் சொல்லியிருக்கிறதாவது:—"கூட்டுத்தொழில் சங்கமென்பது சில நபர்கள் ஒன்றுசேர்ந்த கூட்டம். இந்த நபர்கள், ஒரு ஜாயின்ட் ஸ்டாக் பாங்கியின் பங்குக்காரர்களைப்போல், இதரர்களிடத்திலிருந்து லாபம் சம்பாதிப்பதற்காக ஒன்று சேர்ந்தவர்களல்ல. அவர்கள் தங்களுக்குள்ளேயே வியாபாரம் நடத்துகிறார்கள். அவர்கள் ஒன்று சேருவது சரக்கு வாங்குபவர்களாகவேயல்லாமல் வர்த்தகர்களாகவல்ல. அவர்கள் கோருவது சகலருக்கும் ஒரே மாதிரியாய் உபயோகப்படும்படியாயுள்ள நயமான பாங்கி வர்த்தகமேயன்றி லாபமல்ல." கூட்டுத்தொழிலைப் பற்றிய விஷயம் முழுவதும் மேலே கண்ட சொற்களில் சங்கிரகமாய் அடங்கி

யிருக்கிறது. செலவுகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து சுலப வட்டிக்குக் கடன் வாங்குவதற்கு உங்களுக்கு ஏற்படும் அனுகூலங்களைப் பிரதிபலனாக பாவிப்பதே உங்களுக்குள் கூட்டுத்தொழில் பாங்கிகளில் பங்கு எடுத்துக் கொண்டிருப்பவர்களின் வேலையாகும். ஒரே உத்தியோகஸ்தர் தான், அதாவது காரியதரிசி, பிரதிபலன் கொடுக்க வேண்டுமென்று கேட்க பாத்தியதை யுடையவராவர்; அவருக்குக் கொடுக்கும் தொகையும் மிகவும் குறைந்த சம்மானமாகவே யிருக்கவேண்டும் சாதாரண நாட்டு பாங்கியில் அவசியமான கணக்குகள் மிகவும் சுலபமானவைகளேயாம்; அவைகளை யாதொரு பிரதிபலனையும் எதிர்பாராமல் வைத்துவருவதற்கு அநேக இடங்களில் ஒரு ஸ்கூல் வாத்தியாரோ, அல்லது போஸ்ட்மாஸ்டரோ அல்லது போதுமான படிப்புள்ள ஒரு ரயத்தோ அகப்படுவது சாத்தியமாகுமென்றே நான் நினைக்கிறேன். இது எப்படியாயினும் சரி; ஒரு ஐக்கிய க்ஷேமச் சங்கத்தின் மெம்பர்களாக உங்களுக்கு நியாயமாய்க் கிடைக்கக்கூடிய பிரதிபலன் சுலப வட்டிக்குக் கடன் வாங்கக்கூடிய சக்திதான் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். கட்டணங்களும் சம்பளங்களும் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் கேட்டால் நீங்கள் கூட்டுத்தொழிலாளர்கள் ஆகமாட்டீர்கள்; ஆகவே நீங்கள் அப்படிப்பட்டவர்களாக வேஷம் போடுவதை இனி விட்டு வீட்டுத் தொழில் நடத்தும் பாங்கியின் மெம்பர்களாகவோ அல்லது வாஸ்தவத்தில் ஸாவ்காரர்களாகவேயோ வெளிவருவது யோக்கியதையாயிருக்கும்.

அடுத்தபடி சேமநிதிகளைப் பற்றிய பிரசினையைக் கவனிப்போம். உங்களுடைய சேமநிதிகளை ஸென்ட்ரல் பாங்கியில் டிபாஸிட்டாகக் கட்டிவைக்கும்படி வற்புறுத்துவதைப் பற்றியும் அதன்மேல் நூற்றுக்கு 5-வீதம் அற்ப வட்டி கொடுக்கப்படுவதைப் பற்றியும் நீங்கள் முணுமுணுப்பதாக ஆதிநாராயண செட்டியாரவர்கள் சொல்லுகிறார்; ஆனால் இப்படி முணுமுணுப்பது சேலம் ஜில்லாவிலுள்ள நீங்கள் மாத்திரமல்ல, இந்த இராஜதானியிலே ஒவ்வொரு ஜில்லாவிலும் உங்களைப்போல் அநேகர் இருக்கிறார்கள். நூற்றுக்கு 5-விதமா? ஐயோ தெய்வமே! அதுவே துணிகரமானதும் அபாயத்துக்கிடமானதுமான வட்டி வீதமாயிற்றே. கூட்டுத்தொழில் விஷயங்களில் பெரும் பிரமாணமாய்க் கொள்ளக்கூடிய மிஸ்டர் ஊல்ப் என்பவர் இவ்விஷயத்தைக்குறித்து என்ன சொல்லுகிறாரென்பதைக் கேளுங்கள். அவர் எழுதுகிறதாவது:—"சேமநிதியின் முக்கியத்தையைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது அநாவசியம். ஆனால் பாங்கிக்குச் சொந்தமான ஒரு நிதி ஏற்படுகிறது; மேலும் அது அதிசௌகரியமான உருவமாய் அமைந்திருக்கிறது; ஏனெனில், அது விஷயமாய் எந்த நபருக்கும் பிரத்தியோகமான பாத்தியதை கிடையாது. அந்த நிதியானது அந்த பாங்கிக்கு மாத்திரமே சொந்தமானது; மேலும் அது ஒரு கூட்டுச் சங்கமாக அந்த பாங்கிக்குரியதே யல்லாமல், அதைச் சேர்ந்த மெம்பர்களுக்குப் பிரத்தியோகமாய்ச் சொந்தமானதல்ல. அது பாங்கியின் காரியங்களுக்காகவே சேமித்து வைக்கப்படுகிறது. ஆக்

காலத்திலாகிலும் அதற்கு வட்டி எதுவும் கிடைக்காவிட்டால், அதனால் எவருக்கும் யாதொரு நஷ்டமுமில்லை. எந்த விஷயத்திலும் எவருக்கும் அதைக்குறித்து முறையிட பாத்தியதையில்லை. கடன்களின்மேல் கொடுக்கப் படும் வட்டியைக் குறைப்பதற்காக சேமநிதியை உபயோகப் படுத்தலாம்; அப்படி உபயோகப் படுத்தவும் வேண்டும். மெம்பர்களுக்கு இதர அனுகூலங் கள் செய்து கொடுப்பதற்காகவும் அதை உபயோகப் படுத்தலாம். எதிர்பா ராத யாதொரு நஷ்டத்தினால் ஏதேனும் குறைவு நேரிட்டால், அதைப் பூர்த்திசெய்யும் பொருட்டு அதை உபயோகப் படுத்தலாம். ஆனால் அதைப் பங்கிடக்கூடாது. ஒரு பாங்கியின் சேமநிதி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமா யிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த பாங்கி திரவிய சம்பந்தமாய் நல்ல ஸ்திதியிலிருக்கிறதென்று நிச்சயமாய்க் கொள்ளலாம். அதனால் மெம்பர்கள் பாங்கியிலேயே இருப்பதற்கு நேரில் ஒரு அக்கறை ஏற்படுகிறது. பாங்கி வேலைநடத்தும் யாதொரு சங்கமானது கலைந்துவிட்டால்கூட அதன் சேம நிதியைப் பங்கிடக் கூடாதென்று விதி ஏற்பட்டிருக்கிறபடியால், அந்த சங் கத்தைக் கலைப்பதில் எவருக்கும் யாதொரு அக்கறையும் இல்லை." மேலே கண்ட முக்கியமான வார்த்தைகளின் அர்த்தத்தை நன்றாய் அறிந்து மனதில் பதியவையுங்கள். எவன் சேமநிதியை தனதாங்கிக்கொள்ள உத்தேசிக்கி றானோ அவன் உங்களுடைய வீட்டுக்குள்ளேயே இருக்கும் பகைவன் என் றும், கூட்டுத்தொழில் முறைக்கே அவன் ஒரு துரோகி என்றும் அறியுங் கள்; இது மாத்திரமல்ல; இந்தியாவின் அபிவிருத்திக்கே கூட்டுத்தொழி லானது ஒரு முக்கியமான அம்சம் என்பதை கவனிக்கும்போது அவன் இந்தியாவுக்கே துரோகியாகிறான்.

சேமநிதியைப் பங்கிட்டுக்கொள்ளும் விஷயமாய் நீங்கள் சொல்வதெல் லாம் சரிதான்; ஆனால் ஸென்ட்ரல் பாங்கியில் நாங்கள் டிபாஸிட்டாகக் கட் டும் சேமநிதியின்மேல் எங்களுக்கு நூற்றுக்கு 5 வீதம் வட்டி கிடைக்கும் பொழுது, அந்த பாங்கியிலிருந்து நாங்கள் வாங்கும் கடன்களுக்கு மாத்திரம் நூற்றுக்கு "7½—வீதம் வட்டி கொடுத்துக்கொண்டு வரவேண்டுமா என்று நீங்கள் கேட்கலாம். இதோ கொஞ்சநேரத்துக்கெல்லாம் அதைப்பற்றியும் சில விஷயங்கள் சொல்லுகிறேன்.

இந்த ஜில்லாவிலே முணுமுணுப்பவர்களின்மேல் ஆதிநாராயண செட்டி யாரவர்கள் சாற்றும் மற்ற மூன்று குற்றங்களைப்பற்றி இப்பொழுது பேசத் தொடங்குகிறேன்; அவைகளை அசிரத்தை என்னும் குணத்தின் பிரத்தி யேகமான மூன்றுவித ரூபங்களாகச் சுருக்கிச் சொல்லலாமென்று நான் நினைக்கிறேன். சில சங்கங்களை நிர்வஹிக்கும் பொறுப்பேற்றவர்கள் தங்கள் வேலையை விவசாரீதியாய் நடத்தவில்லையென்றும் மிகவும் உபேட்சையா யிருக்கிறார்களென்றும் அவர் முறையிட்டார். இந்தப் பெரிய மனிதர்களில் சிலருக்குத் தங்களுடைய அலுவல்களைச் செய்ய அவகாசம் அகப்படவில்லை

யென்றும் உள்ளூரிலேயே டிபாஸிட்டுகள் சேகரிப்பதில் ரொம்பவும் பின் னிடைந்திருக்கிறார்களென்றும் அவர் முறையிடுகிறார்.

கூட்டுத்தொழிலினால் இந்தியா அடையக்கூடிய உத்கிருஷ்டமான பலன் களைப்பற்றி மிஸ்டர் ஊல்ப் என்பவரின் அபிப்பிராயத்தை சில நிமிஷங் களுக்குமுன் உங்களுக்கு எடுத்துச் சொன்னேன். ஐக்கியநாணய விவகா ரத்தைப்பற்றி அவர் சொல்லியிருக்கிறார்; அவருடைய அர்த்தமென்ன வெனில், சகலராலும் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின்படிக்கான விவகார மென்பதே; எந்த விஷயத்திலும் கண்டிதமாயும் காலந்தவறாமலும் நடக்க வேண்டுமென்பதை விட மூலாதாரமான விதி வேறொன்றுமில்லை. இந்த ஐக்கியநாணய முயற்சியின் சம்பந்தமாய் உற்சாகத்தைப் பற்றியும், ஔதார்ய த்தைப் பற்றியும் பிறருடைய க்ஷேமத்தில் இச்சையைப்பற்றியும் ஆத்மசுக பரித்தியாகத்தைப்பற்றியும் அதிகமாய்க் கேள்விப்படுகிறோம். இந்த முயற்சியானது அதை முன்னுக்குக்கொண்டு வருவதற்காகவும், அதற்காக உழைப்பதற்குப் புதிதாய் சேவகர்களைத் தயார்செய்வதற் காகவும், அதன் வேலையை தேசம் முழுவதும் வியாபிக்கும்படிச் செய்ய தற்காகவும் விருப்பத்துடனும் அக்கறையுடனும் உழைப்பவர்கள் அகப் பட்டாலொழிய, முன்னேற்றமடைந்துவரும் முயற்சியாகாதென்றும், அது இடையில் தயங்கிநிற்க நேரிடுமென்றும், முழுவதும் நின்றுபோய் பின் னடையவும் கூடுமென்றும் சொல்லப்படுகிறது. ஈசன் கிருபையால் இது வரையில் அப்படிப்பட்ட உழைப்பாளிகள் கிடைக்காமற்போகவில்லை. இந்த முயற்சியை உற்சாகத்துடன் பரவச் செய்வதற்கான உழைப்பாளிகள் எங்கெங்கு அவசியமாய் வேண்டியிருந்ததோ அவ்வவ் விடத்திலெல்லாம் போதுமான அளவுக்குக் கிடைத்துக்கொண்டே வந்தார்கள். உங்களுடைய கௌரவகாரியதரிசியாகிய ஆதிநாராயண செட்டியாரவர்கள் அப்படிப்பட்ட வர்களில் ஒருவர். ஆதிநாராயண செட்டியாரவர்கள் முறையிட்டது, தனி சங்கங்களை நிர்வஹிப்பதற்குப் பொறுப்பேற்றவர்களின் அசிரத்தையைப்பற் றியே யன்றி மேலே குறிப்பிட்ட உழைப்பாளிகளின் அசிரத்தையைப்பற்றி யல்ல. பாங்கி உத்தியோகஸ்தர்களுக்குக் கண்டிப்பாய் வேலை நடத்தும் வழக்கம் அவசியமென்பதைப்பற்றி மிஸ்டர் ஊல்ப் என்பவரின் கிரந்தங்களி லிருந்து மறுபடியும் சில பாகங்களை எடுத்துக் கூறுகிறேன். அவர் சொல் லுவதாவது:—"எப்படியிருந்தாலும் ஆரம்ப தசையிலும் அதற்கப்புறம் நெடுங்காலம் வரையிலும் வாஸ்தவமாய் மூலதனத்தைக் காட்டிலும் முக்கிய மானது வேலையும், ஜாக்கிரதையும், சிரத்தையுமே."* * * "மெம் பர்களைப் பொது மீடிங்குகளில் ஆஜராயிருக்கும்படியும் மற்றப்படி பாங்கி யின் விவகாரங்களில் ஊக்கத்துடன் உழைக்கும்படியும் தூண்டுவதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்யவேண்டும். பாங்கி யைச் சேர்ந்தவர்களில் ஒவ்வொருவர் மனதும் அதன் வேலையிலே அக்கறை பாராட்ட வேண்டும்."* * * "ஒந்த விஷயத்திலும் உத்தேசத்தி

லிருக்கும் நோக்கம் நிறைவேறவேண்டுமானால், ஜாக்கிரதையும், எவ்வித குற்றங் குறைகளையும் கண்டுபிடிக்கக் கூடிய நுண்ணறிவும் அத்தியாவசியமாகும்; இந்த சங்கங்களின் மெம்பர்களும் நிர்வாஹக் கூட்டத்தாரும் ஏற்றிருக்கும் பொறுப்பு வரையறையற்றதா யிருப்பதால் தான் அவர்கள் அப்படிப் பட்ட ஜாக்கிரதையுடனும் நுண்ணறிவுடனும் வேலையை நடத்துகிறார்கள்." * * * "கஷ்டமான காலங்கள் வரும்பொழுதோ அல்லது பார்வைக்கு அற்பமாய்த் தோற்றும் முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகளைக் கூட கவனிக்காமல் விடும்பொழுதோ கூட்டுத்தொழில் பாங்கிகளுக்கு என்ன பெரும் ஆபத்துகள் நேருமோ வென்பது நமக்கு இப்பொழுது தெரியவில்லை. (ஐரோப்பாவில் நேரிட்டது போலவே) இவ்விடத்திலும் அதே மாதிரியான அஜாக்கிரதையினாலும், மோசத்தினாலும், முன் யோசனையில்லாமையினாலும் அங்கு நேரிட்ட கெடுதியே நேரிடலாம். அப்படிப்பட்ட சம்பவங்கள் சாதாரணமாய் எதிர்பாராத சமயத்திலேயே நேரிடும். அவைகள் நேராமல் காப்பதற்கு சகல விதங்களிலும் தயாராயிருப்பதையும் எப்பொழுதும் நம்முடைய ஜாக்கிரதையைத் தளரவிடாமலிருப்பதையும் தவிர வேறு வழியொன்றுமில்லை." * * * "கூட்டுத்தொழில் பாங்கிகள் நிஷ்ப்பலமாய்ப்போன விஷயங்களிலெல்லாம் விசாரித்ததில், பத்துக்கு ஒன்பது பாங்கிகளிலே நிர்வாக சங்கமே இல்லாம லிருந்ததோ அல்லது அந்த சங்கத்தார் தம்முடைய வேலையைச் சரிவரச் செய்யாமலிருந்ததோ அதற்குக் காரணமென்று ஏற்படுகிறது." * * * "உபேட்சை, மோசம், கடன் கொடுக்கும் விஷயத்திலும் கடனுக்காக வாங்கும் ஜாமீன் போதுமானதா வென்று பார்க்கும் விஷயத்திலும் அலக்ஷியம், இவைகள் ஏற்படுவதற்கு எவ்வளவோ இடமிருக்கிறது; இந்தக் குறைவுகள் நேரிடாதபடி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்." கூட்டுத்தொழில் முறையாய் பாங்கிங் வேலை நடத்துவதற்கான கோட்பாடுகளைப்பற்றியும் பத்ததியைப்பற்றியும் படிப்பதிலேயே தன் ஜீவகால முழுவதையும் கழித்தவரும் உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் அந்த முயற்சியின் சரித்திரத்தையும் அபிவிருத்தியையும் குறித்து நிகரற்ற அனுபவமுடையவருமான ஒருவரால் மேலே கண்ட வாக்கியங்கள் கூறப்பட்டுள்ளன; ஆகையினால் அவருடைய புத்திமதியை நீங்கள் பிரமாணமாய்க் கொள்ளலாம்.

வடத்தங்கரைக் கான்பரென்ஸில் செட்டியாரவர்கள் செய்த உபந்நியாசத்தின் கடைசி அம்சத்தை, அதாவது டிபாஸிட்டுகள் வசூலிக்கும் விஷயத்தில் இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிக யுக்தியுடன் உழைக்க வேண்டுமென்ற புத்திமதியைப்பற்றி இப்பொழுது நான் பேசப் போகிறேன். இந்த மாதிரி புத்தி கூறுவதற்கு ஆவசியக மிருப்பதாகவே ஒருவருக்கும் படவில்லை. எந்த பாங்கிக்கும் வேலை நடத்துவதற்கான மூலதனம் வேண்டும்; இப்படிப்பட்ட கூட்டுத்தொழில் விவசாய பாங்கிகள் வேலை நடத்துவதற்கான மூலதனத்தைச் சேகரிப்பதற்குச் சரியானவழி

டிபாஸிட்டுகளை ஆகர்ஷிப்பதுதான். இந்த விஷயமாய் ஆதிநாராயண செட்டியாரவர்கள் சொல்லியிருக்கும் மிகவும் பொருத்தமுள்ள வார்த்தைகளைப் படிக்கும் பொழுதும், டிபாஸிட்டுகளை ஆகர்ஷிப்பதனால் நீங்கள் உங்கள் பாங்கிக்கு வேலை நடத்துவதற்கான மூலதனத்தைச் சேகரித்துக் கொள்வது மாத்திரமல்லாமல் டிபாஸிடர்களை சிக்கனமா யிருக்கும்படியான வழக்கத்துக்கும் கொண்டு வருகிறீர்களென்பதை அவர் மிகவும் தெளிவாய் விளக்கியிருப்பதைப் பார்க்கும்பொழுதும் நான் அதிக சந்தோஷமடைந்தேன்.

ஆரம்பத்தில் கஷ்டமிருக்கிற தென்பது எனக்கும் தெரிந்ததுதான். உலகமுழுவதிலும் ஜனங்கள், முக்கியமாய் சொற்ப திரவிய முடையவர்கள், தங்களுடைய பணத்தை இதரர்களிடத்தில் நம்பிக் கொடுத்து வைப்பதற்குப் பயப்படுகிறார்கள்; நூற்றாண்டு நூற்றாண்டாய் ஏற்பட்டு அழிந்துபோகும் துரைத்தனங்களையும் அராஜகத்தையும் சமுதாய கலவரங்களையுமே கண்டிருக்கும் இந்தியாவிலோ இது மிகவும் வாஸ்தவமான விஷயம். ஆயினும், இந்த விஷயம் நிராசையாய் விட்டுவிடத் தக்கதல்ல. செட்டியாரவர்கள் சொல்லியிருக்கிறபடி, உங்களுடைய கிராமாந்தரப் பிரதேசங்களில் வட்டிக்குக் கேட்பாரில்லாமல் பணம் ஏராளமாய்க் கிடக்கிறது. ஜனங்களைச் சிறிது உற்சாகப்படுத்தும் பக்ஷத்தில், இந்தப் பணம் உங்கள் பாங்கிகளின் சொக்கப் பெட்டிகளில் வந்து சேரும்படி செய்யலாம்; ஜனங்களுக்கு பாங்கியிலுள்ள நம்பிக்கை அதிகமாக ஆக டிபாஸிட்டுகள் ஏராளமாய் வந்துவிழ ஆரம்பிக்குமென்று எனக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறது.

டிபாஸிட்டுகள் வசூலிப்பதைக்காட்டிலும் ஸென்ட்ரல் பாங்கிகளிலிருந்து உங்களுக்குக்கிடைக்கக்கூடிய பணத்தைக்கொண்டு மூலதனம் சேகரிப்பது சுலபமாயிருப்பதே டிபாஸிட்டுகள் வசூலிப்பது கஷ்டமாயிருக்கிறதென்று சொல்லப்படுவதற்குக் காரணமென்று நான் சந்தேகிக்கிறேன். ஒருகிராமத்தில் வீடு வீடாய்ப் போய் இரண்டொரு ரூபாய் டிபாஸிட்டாகக் கட்டும்படி கெஞ்சிக் கூத்தாடுவது மிகவும் சிரமமாயிருக்கிறது; வேண்டியிருக்கிற மூலதனம் முழுவதையும் ஸென்டரல் பாங்கியிலிருந்து கடனாகப்பெறுவதோ மிகவும் சுலபமாயிருக்கிறது. கடனுக்கான ஒரு விண்ணப்பக் கடிதமும் ஒரு ரசீதும் அனுப்ப வேண்டியதுதான் தாமதம்; வேலை முடிந்துவிடுகிறது! அதற்காக நீங்கள் வட்டி கொடுக்கிறீர்களல்லவா? நூற்றுக்கு 7½ வீதம் கொடுக்கிறீர்களென்று நினைக்கிறேன்! இதைப்பற்றியும் நீங்கள் முணுமுணுப்பதற்காகத்தான் ஆதிநாராயண செட்டியாரவர்கள் உங்களைக் கண்டித்திருக்கிறாரென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். நான் சில நிமிஷங்களுக்குமுன் உங்களுக்குக் கூறின புத்திமதி என்னவெனில் ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன் வாங்குவதையே சுத்தமாய் விட்டு விடுங்கள் என்பதே. இப்பொழுது என்னுடைய அர்த்தம் உங்களுக்குத் தெரிகிறதா? ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன் வாங்குவதை விட்டு டிபாஸிட்டுகளை வசூலிப்பதனால் நீங்கள் வேலை நடத்துவதற்கான மூலதனத்தைச் சேகரித்துக் கொள்ளுங்கள். டிபாஸிட்டுகளின் மேல்

நீங்கள் நூற்றுக்கு 1½ வீதம் வட்டி கொடுக்கவேண்டியதில்லை; நூற்றுக்கு 2, 3, 4 அல்லது 5 வீதமே டிபாஸிடர்களை ஆகர்ஷிப்பதற்குப் போதுமானது; அந்த பணத்தை நீங்கள் மறுபடியும் அதே வட்டிக்காவது அதற்குக் கொஞ்சம் அதிகமான வட்டிக்காவது கடன் கொடுக்கலாம். ஆகவே, ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன் வாங்குவதை நிறுத்திவிட்டு நீங்கள் வேலை நடத்துவதற்கான மூலதனம் முழுவதையும் டிபாஸிட்டுகள் ரூபமாகவே சேகரித்தால் உங்களுடைய சொந்த லாபத்தையே தேடிக்கொண்டவர்களாவீர்கள்.

நான் சொல்வதை நம்புங்கள்; இதர ஸ்தாபனங்களிலிருந்து கடன் வாங்கும் இந்த வழக்கமானது வீண் விரயத்தை உண்டாக்குவதனால், சிக்கனமென்னும் வாஸ்தவமான கூட்டுத்தொழில் கோட்பாட்டுக்கு விரோதமாயிருப்பதுமல்லாமல், துர்மார்க்கமானதும் ஆபத்துக் கிடமானதுமான வழக்கமுமாகும். எவ்வளவுக் கெவ்வளவு நீங்கள் அவ்வித கடனை நம்பியிருக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு டிபாஸிட்டுகளை ஆகர்ஷிப்பதில், அதாவது சிக்கனத்தையும் கூட்டுத்தொழிலையும் விருத்திசெய்வதில், உங்களுக்கு சிரத்தைக்குறைவு ஏற்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. நான் சற்று முன் சொன்னபடி நீங்கள் கூட்டுத்தொழில் பத்ததிக்கே துரோகிகளாய் ஸாவ்காரர்களாக மாறி விடுவீர்கள்.

என்னுடைய உபந்நியாசத்தின் ஆரம்பத்தில் கூட்டுத்தொழில் முயற்சியானது இந்த ஜில்லாவில் எவ்வளவுதூரம் அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்பதைப்பற்றி சுருக்கிச் சொன்னேன். விசேஷமாய் டிபாஸிட்டுகள் சம்பந்தப்பட்டமட்டில் அந்த அபிவிருத்தி என்னமாயிருக்கிறதென்பதைக் குறித்து மறுபடியும் சுருக்கிக் கூறுகிறேன். 1905–06-ம் ஸுத்தில் இந்த ஜில்லாவிலுள்ள இரண்டு பாங்கிகளிலும் இருந்த டிபாஸிட்டுகளின் மொத்தம் 3,193 ரூபாய்; அதாவது ஒவ்வொரு பாங்கியிலும் சராசரி 1590 ரூபாயிருந்தது. 1906–07-ம்ஸுத்தில் ஆறுபாங்கிகள் இருந்தன; அவைகள் டிபாஸிட்டுகளாக வசூலித்த தொகை ரூ. 9,376; அதாவது, ஒவ்வொரு பாங்கியின் சராசரி ரூ. 1560. 1907–08-ம்ஸுத்திலிருந்த எட்டு பாங்கிகளும் வசூலித்த டிபாஸிட்டுகளின் மொத்தம் ரூ. 22,274; அதாவது, ஒவ்வொரு பாங்கியின் சராசரி ரூ. 2780. 1908–09-ம்ஸுத்தில் ஏற்பட்ட வித்தியாசத்தைக் கவனியுங்கள்; இந்த வருஷத்திலே 4½-பாங்கிகள் டிபாஸிட்டுகளாக 4,530 ரூபாய் மாத்திரமே வசூலித்தன. ஆகவே ஒவ்வொரு பாங்கியின் சராசரி 960 ரூபாயாகக் குறைந்துவிட்டது; 1909–1910-ம்ஸுத்திலோ விஷயம் இன்னும் இளப்பமாய் விட்டது; ஏனெனில், இந்த வருஷத்தில் 81-பாங்கிகள் சேர்ந்து ரூ. 58,600-தான் வசூலிப்பது சாத்தியமாயிற்று; அதாவது ஒவ்வொரு பாங்கியின் சராசரி 720-ரூபாயாகக் குறைந்துவிட்டது. டிபாஸிட்டுகள் இப்படி குறைந்துகொண்டே வந்ததற்குக் என்ன காரணமென்று நான்

விசாரித்துப் பார்க்கவில்லை. அவநம்பிக்கையினாலுண்டு நாணயக் குறைவினாலாவது இது நேரவில்லையென்று கோறுகிறேன். ஆனால் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது; ஸென்ட்ரல்பாங்கி ஏற்படுத்தப்பட்டு அது இதர பாங்கிகளுக்குத் திரவியசகாயம் செய்வதாய் ஏற்றுக்கொண்ட காலமும் டிபாஸிட்டுகள் இப்படி குறைய ஆரம்பித்த காலமும் ஒத்திருக்கிறது. வேலை நடத்துவதற்கான மூலதனத்தைச் சேகரிப்பதற்கு உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கும் மேலேகண்ட சுலபமான வழியே உங்கள் நாட்டு பாங்கிகளின் நிர்வாக சக்கத்தாரை டிபாஸிட்டுகள் சேர்க்கும் சிரமமான வேலையினின்றும் மயக்கி இழுத்து விட்டதென்று நான் வாஸ்தவமாய்ச் சந்தேகிக்கிறேன். இப்படிப்பட்ட சம்பவங்கள் இதற்குமுன்னமும் நேரிட்டிருக்கின்றன. விவசாய பாங்கிகளுக்கு வேண்டிய வேலை நடத்துவதற்கான மூலதனத்தில் குறைவேற்பட்டதனால் அதற்கு ரூ.ானியா கவர்ன்மெண்டார் ஸர்க்கார் நிதியைக் கொண்டு உதவிசெய்யவே, உள்ளூரில் டிபாஸிட்டாக தொகை கட்டியிருந்தவர்கள் தங்கள் பணத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளவும் அதனால் அந்த பாங்கிகளுக்கு வேண்டிய திரவியமுழுவதையும் கவர்ன்மெண்டாரே கொடுத்துதவும்படியும் நேரிட்டது. ஸென்ட்ரல்பாங்கி ஏற்பட்டபிறகு சங்கங்களின் சங்கியை அதிகரித்திருக்கிறதென்று சொல்லி அதன்வேலையை, நான் சிலாகித்தது வாஸ்தவமே. அதை நான் தாராளமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆயினும், இந்த 70 அல்லது 80 சங்கங்களும் ஸென்ட்ரல் பாங்கியார் கொடுக்கும் கடன்களை நம்பியிருக்காமல் டிபாஸிட்டுகள் வசூல்செய்து அதனால் தங்கள்வேலையை நடத்துவதற்கான மூலதனத்தைச் சேகரித்துக்கொண்டிருந்தால் அது ஸர்வ சிலாக்கியமாயிருந்திருக்கும். இச்சங்கங்கள் கூட்டுத்தொழில் சிக்கனம் என்னும் தங்கள் தர்மபத்தினியைக்கைவிட்டு ஒரு வைப்பாட்டியின்மேல் காதல்கொண்டன; இந்த வைப்பாட்டியின் அன்பு அபரிமிதமாயிருந்தாலுங்கூட அவளுடைய காதல் இழிவானதேயாம்; அல்லாமலும், அவளுக்குச் சௌகரியமாயிருக்கக்கூடிய எந்த நிமிஷத்திலேனும் அவைகளை அவள் வஞ்சித்துவிடுவள். இந்த விஷயத்தைப்பற்றி மிஸ்டர் ஊல்ப் என்பவர் என்னசொல்லுகிறாரென்பதை கடைசி முறையாக எடுத்துச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

"திரவிய சகாயம் செய்யும்" யாதொரு ஸ்தாபனத்தைக்கொண்டு கிடைக்கக்கூடிய பணமானது,—அந்த ஸ்தாபனம் எவ்விதமானதாயிருந்தாலுஞ்சரி—முழுவதும் அதன் வசத்திலேயே இருக்கமுடியாது; ஏனெனில், அதை எப்பொழுது வேண்டுமென்றாலும் வாபஸ் வாங்கிக்கொள்ளக்கூடும்; அநேகமாய் மெத்த அசௌகரியமான காலத்திலே இது நேரிடக்கூடும். நியாயமான ஒப்பந்தத்தின்படியல்லாமல் தாட்சண்ணியத்தினால் கிடைக்கும் பணமானையால், அது பத்திரக்குறைவா யிருப்பதன்றி அவமானத்துக்கிடமானதுமாகும். 'நகர' பாங்கிகள் அவைகளுடன் 'சேர்க்கப்பட்ட' நாட்டுப்புற பாங்கிகளுக்குத் திரவிய சகாயம் செய்யவேண்டுமென்று சில வேளைகளில் பிரேரேபிக்கப்படுகிறது; இம்மாதிரி நாட்டு பாங்கிகளுக்கு வேறொரு கூட்டுத்

தொழில் பாங்கியினால் கடனாகக் கொடுக்கப்பட்ட பணமானது இன்னும் பத்திரக் குறைவானதாகும். ஏனென்றால், எந்த பாங்கியாரும் தங்களுடைய பணத்தை இவ்வளவு காலம்வரையில் அயலார்களிடத்தில் விட்டுவைக்க முடியுமென்று நிச்சயமாய்ச் சொல்வது சாத்தியமாகாது. அவர்கள் தங்களுடைய சொந்த செலவுக்கு வேண்டியதைச் சேகரித்துக்கொள்ளவேண்டியிருக்கும். இந்தப் பழக்கத்தைக் கண்டிப்பாய் ஒழித்துவிடவேண்டும். இம்மாதிரி "மொத்தமாய்" பணம் கடன் வாங்குவதில், அதிலும் முக்கியமாய் இதரர்களைக் காட்டிலும் சுலபமான ஷரத்துகளின்மேல் கடன் வாங்குவதில், மற்றொரு பாதிகூலமும் உண்டு; அதாவது, எவ்வித கஷ்டமும் இல்லாமல் இந்தப் பணம் கிடைப்பதனால், இதை அஜாக்கிரதையாய் விநியோகிக்க இடமேற்படும்.

* * * "ஸென்ட்ரல் பாங்கிகளைப்போன்ற சங்கங்கள்—அவ்வவ்விடத்திலுள்ள கூட்டுத்தொழில் பாங்கிகளின்நிலைமை சமமாயிருக்கும்படி செய்வதற்கான மத்தியஸ்தாபனங்களாகமாத்திரமேயல்லாமல் அந்தபாங்கிகளுக்குஅதே ஷ்டமாய் பணம்தேவையாயிருக்கும் காலங்களில் அவைகளுக்கு விஷயத்திலும் அவைகளில் அபரிமிதமாய்ப் பணம் சேர்ந்திருக்கும் காலங்களில் அதை வட்டிக்கு வாங்கிக்கொள்ளும் விஷயத்திலும் அவைகளுக்கு மிகவும் உபயோகமுள்ளவைகளாக இருக்கலாம். ஆனால் அவைகளை அவசியமான பொழுது உதவிசெய்பவைகளாக மாத்திரமே, அதாவது, எம். ட்ரூராண்ட் என்பவர் சொன்னபடி, கோயாளிகளுக்கு அவசியமான 'ஆஸ்பத்திரிகளாக' மாத்திரமே, கருதவேண்டும். அவைகள் அவசியமான பொழுது உபயோகிக்கக் கூடிய கைத்தடிகளேயல்லாமல் ஸதா வைத்துக்கொண்டிருக்கும் கக்கதண்டங்களாகா. அவ்வவ்விடத்திலுள்ள பாங்கிகள் வேலை நடத்துவதற்கான மூலதனத்துக்காக அவைகளையே நம்பியிருக்கக் கூடாது.

"ஒவ்வொரு பாங்கியும்- ஆரம்பதசையில் அதற்கு நேரிடக்கூடிய கஷ்டங்கள் நிவர்த்தியான பிறகு, சாதாரணமாய் அதன் காரியங்களுக்குத் தேவையானபணத்தை அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்தலத்திலேயே தன் சொந்த பொறுப்பின்மேல் டிபாஸிட்டுகள், இதிலும் முக்கியமாய் ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள், வசூலித்து அதன் மூலமாய் சேகரித்துக்கொள்ளக்கூடியதாயிருக்கவேண்டும்; அப்படியிருந்தால்தான், வேறொரு சங்கத்தின் சகாயத்தினாலோ அல்லது அப்படிப்பட்ட சகாயமில்லாவிடினும் வேறொரு சங்கத்தை ஆதாரமாகக் கொண்டோ ஜீவிக்காமல் அந்த பாங்கி தன்வேலையை ஸ்வாதீனமாய் நடத்தி வரக் கூடும். அப்படி நடத்துவதால் அதன் பிரதம நோக்கத்தைப் பூர்த்தி செய்வதாகுமே பொழிய வேறல்ல. ஏனெனில், அது நாணய பாங்கியாக மாத்திரமேயன்றி சிக்கனபாங்கியாகவு மிருக்கவேண்டு மென்பதே உத்தேசம். ஆகையினால் பெம்பர்களையும் அவர்களுக்கு அக்கம்பக்கத்திலுள்ளவர்களையும் அதன் விவகாரத்தை நடத்துவதற்கு அவசியமாய் வேண்டியிருக்கக்கூடிய

பணத்தைச் சேமித்து வைக்கும்படி தூண்டுவது அதன் கடமையாகும்; இந்தப்பணம் பல வருவாய்களிலிருந்து சேகரிக்கப் படுவதனால், மொத்தமாய்க் கடன் வாங்கும் தொகையைக் காட்டிலும் ஸ்திரமானதும் நம்பத்தக்கதுமான நிதியாகும்."

நீங்கள் பொறுமையுடன் இதுவரையில் என்னுடைய உபந்நியாசத்தைக் கேட்டுக்கொண்டிருந்ததற்காக நான் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். என்னுடைய ஸ்வாரஸ்யமற்ற பேச்சினால் உங்களுக்கு அதிக சிரமம் கொடுத்திருப்பேனென்று பயப்படுகிறேன். அப்படி நேரிட்டிருந்தால் அந்த தப்பு என்னையே பொறுத்ததாகும். நான் எடுத்துக்கொண்ட விஷயத்தின் முக்கியத்தையைப்பற்றியும் அதனால் ஏற்படக்கூடிய அனுகூலத்தைப்பற்றியும் மிகைப்படக் கூறுவது சாத்தியமல்ல. ராய்பெய்ஸென் முறைப்படி பாங்கிகள் ஏற்படுத்தப்பட்ட இடங்களிலெல்லாம் சோம்பேரிகளான ஏழைகளிடத்திலிருந்து சிக்ஷார்த்தமாய் வேலைவாங்கும் தொழிற்சாலைகள் ஒழிந்துபோய்விட்டன என்று ஐரோப்பாவில் ஒரு பழமொழி உண்டு. கூட்டுத்தொழில் முறையை சரியானபடி அறிந்து கிரமப்படி அனுஷ்டித்து வந்தால் அது ஜனங்களை செல்வவான்களாக்கி முன்னேற்றம் அடையும்படி செய்வதற்கு மானிட சக்தியாலாகக் கூடிய சாதனங்களில் மிகவும் முக்கியமானதென்று நான் நம்புகிறேன்.

கனந்தங்கிய மைசூர் இளவரசின் பேச்சு.

———:(*):———

(1911-ம்வரு ஸெப்டம்பர்மீ 26வ யன்று மைசூரில் நடந்த முதல் கூட்டுத் தொழில் கான்பரென்ஸைத் திறக்கும் பொழுது.)

கனவான்களே,

இந்த ராஜ்ஜியத்தில் கூடும் முதல் கூட்டுத்தொழில் கான்பரென்ஸாகிய இதற்கு உங்களை அதிக சந்தோஷத்துடன் நான் வரவேற்கிறேன்; இதன் நோக்கமானது இத்தேசத்தின் பொருளாதார நிலைமையைச் சீர்திருத்துவதற்கு மிகவும் முக்கியமானது.

2. விவசாயம் மாத்திரமே யல்லாமல் பொருளை உற்பத்திசெய்து பங்கிடுவதை நோக்கமாகவுடைய பல தொழில்களும் பலிதத்துடன் நிறைவேற வேண்டுமானால் மூலதனம் அவசியம். வாழ்க்கைத்துறைகள் ஒவ்வொன்றிலும் யோக்கியர்களாயும் உழைப்பாளிகளாயு முள்ளவர்கள் அநேகரிருக்கிறார்கள்; ஆனால் அவர்களெல்லோரும் தரித்திரர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய வேலையை நடத்துவதற்கு எங்குபார்த்தாலும் பணம் வேண்டியிருக்கிறது. ஜனசமூகம் முழுவதுக்கும் விசேஷ லாபம் கிடைக்கக்கூடிய விதமாய் தொழிலாளிகளுக்கு நேரே மூலதனம் கிடைக்கும்படி செய்வதற்கு இது வரையில் எத்தனையோ வழிகளில் பிரயத்தனம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி செய்வதற்குத் தொழிலாளிகள் தங்களுடைய பரஸ்பர லாபத்தை உத்தேசித்து ஒன்றுசேருவதே ஸர்வ சிலாக்கியமான மார்க்கமென்று ஜர்மெனி, டென்மார்க், இங்கிலண்ட் முதலிய மேனாட்டுத் தேசங்கள் தங்களுடைய அனுபவத்தில் கண்டுபிடித்திருக்கின்றன.

3. கூட்டுத்தொழில் என்னும் கருத்துக்கு ஆதாரமாயிருப்பது தன் முயற்சியும் ஒன்று சேரும் சக்தியுமேயாம். இதார்களுக்கு உதவி புரிவதற்குரிய மார்க்கங்களில் தங்களுக்குத் தாங்களே சகாயம்செய்து கொள்ளும்படி அவர்களுக்குக் காட்டுவதே ஸர்வ சிலாக்கியமானதென்று சொல்லப்பட்டிருக்கிறது; இது வாஸ்தவமான விஷயம். நம்முடைய பகவான் ஸ்ரீ கிருஷ்ணனும் பகவத் கீதையில் இப்படியே சொல்லியிருக்கிறார்; அதாவது 'நமக்கு நாமே சினேகிதனும் பகைவனுமாகிறோம்' என்று "ஐக்கியமே பலம்" என்னும் வாக்கியத்தை நீங்கள் அறிவீர்கள். ஒன்று சேரும் சக்தி ஏற்பட்டால் பரஸ்பர நம்பிக்கை உண்டாகிறது. தன் முயற்சியும் பரஸ்பர லாபத்தின் பொருட்டு ஒன்று சேருவதும் நாம் சமூகவாழ்க்கையில் முன்னேற்றமடைவதற்கு அத்தியாவசியமானவை; திரவிய சம்பந்தமாய் நம்முடைய லாபத்தை உத்தே

சித்து நம்முடைய கூட்டுத்தொழில் சங்கங்கள் இவ்விரண்டு சக்திகளையும் ஒன்றாய்ச் சேர்க்கின்றன; இதை முழு மூடனாயிருப்பவன் கூட அறிந்து, இதற்காக உழைத்து லாபமடையலாம்.

4. உங்களில் அநேகர் கூட்டுத்தொழில் பத்ததியில் கௌரவார்த்தமாய் உழைப்பவர்களாகையால், உங்களுக்கெல்லாம் கூட்டுத்தொழில் சங்கங்களைப்பற்றித் தெரியும். ஆறு வருஷத்துக்கு முன் தான் அவைகளை விருத்தி செய்வதற்கான ரெகுலேஷன் சட்டமாக்கப்பட்டது, இப்பொழுது இங்கு 10,107 மெம்பர்களுடன் 140 சங்கங்கள் இருக்கின்றன; இவைகளில் வேலை நடத்துவதற்கான மூலதனம் 3,86,650 ரூபாயும், தொகை செலுத்தப்பெற்ற பங்கு மூலதனம் 2,29,726 ரூபாயும் இருக்கிறது. இந்த ஆறு வருஷத்தில், 30,00,000 ரூபாய் வரையில் குறைந்த வட்டிக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டது; 6,00,000 ரூபாய் மதிப்புள்ள இயற்கைப் பொருள்களும் பண்டங்களும் விற்கப்பட்டன; 45,000 ரூபாய் மெம்பர்களுக்கு லாபமாய்க் கிடைத்தது; 10,961 ரூபாய் சேமநிதியாகச் சேர்ந்திருக்கிறது. இந்தக்கணக்குகளிலிருந்து கூட்டுத்தொழில் விஷயம் எவ்வளவுதூரம் அபிவிருத்தியடைந்திருக்கிறதென்று நன்கு விளங்கும்.

5. இவ்வளவு வேலை செய்திருக்கும் நீங்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி உங்களுடைய அனுபவங்களை ஒத்திட்டுப்பார்த்து இந்த முயற்சியை பத்திரமான துறைகளில் விருத்தி செய்வதற்கு என்னென்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றிக் கவனிக்க வேண்டியது அவசியமே. இம்மாதிரி கான்பரென்ஸில் பல ஊர்களின் அனுபவங்களைத் தெரிந்துகொள்வதும், சந்தேகமான விஷயங்களைத் தெளிவுறச்செய்வதும், இந்த முயற்சிக்கே ஒரு நவீன சக்தியை உண்டாக்குவதும் சாத்தியமாகும் நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களைப்பார்த்தால், நீங்கள் பற்பலதுறைகளில் விசாரணை நடத்தலாமென்று ஏற்படுகிறது; நீங்கள் விஷயங்களைப்பற்றித் தர்க்கித்தான பிறகு, தவறுதல்கள் நேராமலிருக்கும்படிக்கும் கூட்டுத்தொழில் முயற்சி நிஷ்பலமாகாதபடி முன் ஜாக்கிரதையாயிருப்பதற்கும் உதவி செய்யக்கூடிய உறுதியான முடிவுகளுக்கு வருவீர்களென்று நம்புகிறேன். எந்த வேலையை நாம் ஆரம்பித்தாலும் அதை விருத்திசெய்வதற்கு முயலுமுன் அதை நன்றாயும் ஸ்திரமாயும் ஸ்தாபிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்.

5. வருஷக்கணக்காய் ஊக்கத்துடன் விடாமல் உழைத்து வந்தாலொழிய எந்தப் பெருத்த வேலையையும் ஆரம்பித்து நடத்துவது கூடாது. கூட்டுத்தொழில் முயற்சி விருத்திபடைய வேண்டுமானால், கூட்டுத்தொழில் கோட்பாடுகளை நன்றாயறிந்து அவைகளைப் பழக்கத்துக்குக் கொண்டு வருவதில் முழுமனதுடன் சிரமமெடுத்துக் கொள்ளக்கூடிய புத்திசாலிகளான உழைப்பாளிகள் அநேகமாய் ஒவ்வொரு கிராமத்திலும் இருப்பது அவசியம். நமக்குப் போதுமான அளவுக்கு ஸ்வதேசாபிமானம் இல்லையா? நம்முடைய

சகோதரர்களுக்குள் கல்வியறிவில்லாதவர்களின் ஜீவனங்களைச் சீர்திருத்தி அவர்களுடைய க்ஷேமத்தை விருத்திசெய்வதில் நமக்குக் கவலையில்லையா? இதரர்களின் நன்மைக்காக செய்யப்படும் பரோபகாரமான காரியங்களையும் பிரயோஜனகரமான வேலையையும் நாமெல்லோரும் சிலாகிக்க வில்லையா? இவையெல்லாம் வாஸ்தவமானால், கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்திக்காக நம்முடைய காலத்தையும் மனதையும் சக்தியையும் சிறிதுமட்டில் உபயோகிப்போம்; அப்படி உபயோகிப்பதனால் நம்மைச் சுற்றி தரித்திரத்தினால் பீடிக்கப்படும் ஜனங்களின் நிலைமை சீர்திருந்துவதில் சந்தேகமேயில்லை. கூட்டுத்தொழில் முயற்சியைக் காட்டிலும் உயர்ந்ததும் நீங்கள் கவனிப்பதற்கு அர்ஹமாயுள்ளதுமான கைத்தொழில் சம்பந்தமான முயற்சி வேறெதுவுமில்லை. விவகார முறைகளிலும் தங்கள் வேலைகளைத் தாங்களே நிர்வஹிப்பதிலும் பயிற்சியடைவதற்கு ஒவ்வொரு கிராமத்தாருக்கும் இந்த முயற்சியானது இடந்தரும் என்று எனக்குப்படுகிறது. கூட்டுத்தொழில் முயற்சியானது நிலையாய் பலிதமடைவது ஜனங்களையே பொறுத்ததென்பதை உங்கள் மனதில் நன்றாய்ப் பதியும்படி நான் ஆவலுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். புத்தி புகட்டுவதும் தைரிய மூட்டுவதுமான இந்த வார்த்தைகள் இந்தக் கான்பரென்ஸ் சம்பந்தமாய் நீங்கள் நடத்தப்போகும் வேலையை ஆரம்பிப்பதில் உங்களுக்கு ஒத்தாசையாயிருக்குமென்று நான் மனதார நம்புகிறேன்.

அக்கிராசனாதிபத்திய உபந்நியாசம்.

——(:-:)——

ம-ா-ா-ஸ்ரீ ராஜமந்த்ர ப்ரவீண ஸி. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் (1911-ம் ஆண்டு ஸெப்டெம்பர் மீ 27, 28வ களில் நடந்த) மைசூர் மாகாண கூட்டுத்தொழில் கான்பரென்ஸின் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து அடியிற் கண்ட உபந்நியாசத்தைச் செய்தார்:—

கனவான்களே,

சில தினங்களுக்கு முன் ஐக்கியநாணயச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் இந்தக் கூட்டத்தில் அக்கிராசனாதிபத்தியம் வஹிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டபொழுது, கூட்டுத்தொழில் முயற்சியைப்பற்றி பூரண ஞானமில்லாத ஒருவன் அந்த ஸ்தானத்தை வஹிப்பது கான்பரென்ஸைச் சேர்ந்த மெம்பர்களுக்கு அங்கீகாரமாயிருந்தால், அவருடைய வேண்டுகோளுக்கு இணங்குவது என்னுடைய கடமையென்று கருதி நான் அவரிஷ்டப்படி செய்யத் தயாராயிருப்பதாய் சந்தோஷத்துடன் உரைத்தேன். முறைமைப்படி நான் அக்கிராசனாதிபத்தியம் வஹிக்க ஆரம்பித்தபிறகு கான்பரென்

ஸின் நடவடிக்கைகளை நான் மிகுந்த அக்கறையுடன் கவனித்துக்கொண்டு வந்திருக்கிறேன். நான் சில சிறந்த உபந்நியாசங்களைக் கேட்டதுமன்றி மிக்க உபயோகமுள்ள ரிபோர்ட்டுகளிலிருந்தும் சில பாகங்களை எடுத்துப் படிக்கவும் கேட்டேன்; அல்லாமலும், சிறந்த புத்தி புகட்டத்தக்க சில தர்க்கங்களில் உங்களுடன் கலந்து வாதித்தேன்; ஆகையினால், முடிவில் ஒரு உபந்நியாசம் செய்யவேண்டுமென்ற கடமையை நான் நிறைவேற்றுவதானால், எனக்கு முன் பேசினவர்கள் என்னைக் காட்டிலும் அதிக உருக்கத்துடன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய விஷயங்களில் பெரும்பாகத்தை நான் மறுபடியும் எவ்வளவு நன்றாய் ஒப்பிக்கக்கூடுமோ அவ்வளவு நன்றாய் ஒப்பிக்கவேண்டியிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது.

கான்பரென்ஸுகளின் உபயோகம்.

ஜனங்கள் பரஸ்பர லாபத்தை உத்தேசித்து ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பது விரும்பத்தக்கதென்பது வேறு அத்தாட்சியில்லாமலே பிரத்தியக்ஷமாய் ஏற்படுகிற விஷயமாகையால் சிலருக்கு இம்மாதிரி கூட்டங்கள் அனாவசியமாகத் தோற்றலாம். ஆனால், கூட்டுத்தொழில் முயற்சியைப்பற்றி எனக்குத் தெரிந்தது கொஞ்சமேயாயினும் அதிலிருந்து நான் அறிந்தது என்னவென்றால், அதற்குச் சம்பந்தப்பட்ட பிரசினைகள் பலவகையுள்ளவையாயும் சிக்கானவையாயும் இருப்பதனால் அவைகளைப் புத்திசாலித்தனமாய் அறிந்து அவைகளின் சாராம்சத்தைக் கிரஹிப்பதற்கு இவ்விதபொதுக்கூட்டங்கள் எவ்வளவு அடிக்கடி கூடினாலும் போதாது என்பதே. இதுவுமன்றி, இந்த முயற்சிக்காக ஊக்கத்துடன் உழைத்து வருபவர்களும் இதில் நேராகவோ மற்றப்படியோ அக்கறை பாராட்டுபவர்களும் உத்தேசத்திலிருக்கும் நோக்கத்தை, சம்பந்தப்பட்ட சகலருக்கும் திருப்திகரமாயிருக்கும்படி, சீக்கிரத்தில் பலிதத்துடன் நிறைவேற்றுவது சுலபமாயிருக்கும்பொருட்டு, தங்களுடைய குறிப்புகளை ஒத்திட்டுப்பார்ப்பதற்காகவும், கஷ்டங்கள் இன்ன சந்தர்ப்பங்களில் நேரிடுகின்றன வென்று நிச்சயப் படுத்துவதற்காகவும், அவைகளுக்குத் தக்க பரிகாரங்களை எடுத்துச் சொல்வதற்காகவும் சாத்தியமான வரையில் அடிக்கடி கூடுவது மிகவும் முக்கியமானது. சுருக்கிச் சொல்லுங்கால், இப்படிப்பட்ட கான்பரென்ஸுகளில் பலவகைக் கைத்தொழில்களின் பிரதிநிதிகளுக்குள் ஒருவருடைய அபிப்பிராயங்களை மற்றவர்கள் தாராளமாய் அறிவதற்கு இடமேற்படுவது மல்லாமல், அவர்கள் பரஸ்பரம் தங்களுக்கு வேண்டியவைகளைச் சேகரித்துக் கொள்வதற்கும் பரஸ்பரம் தங்களுடைய அனுகூலத்தைத் தேடிக்கொள்வதற்கும் சிறந்தமார்க்கம் எதுவென்று தெரிந்து கொள்வதும் இந்த கான்பரென்ஸுகளால் சுலபமாகிறது. அந்த கான்பரென்ஸில் செய்யப்பட்ட மிகவும் உபயோகமான வேலையைப்பற்றி யோசிக்கும்போது, முக்கிய விவகாரங்களும் தீங்கற்ற விளையாட்டுகளும், பெருத்த வே

லைகளும் உற்சவ விசேஷங்களும் சுகமாய்க் கலந்து வருஷந்தோறும் நடக்கும் தசரா என்னும் பிறந்தநாள் பண்டிகையில் நிலையான ஒரு அம்சமாயிருக்கும் படியான ஒரு பாத்தியதை அதற்கு நிராட்சேபமாய் ஏற்பட்டு விட்டதென்று எனக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறது.

கூட்டுத்தொழில் முயற்சியின் சரித்திரம்.

'ஒத்துழைப்பது' என்னும் பதத்துக்கு நாம் கொண்டிருக்கும் குறுகிய அர்த்தத்தின்படி, பலபேர் பரஸ்பர லாபத்தின்பொருட்டு ஒன்றுகூடி முயல்வதுஎன்று பொருள் ஏற்படுகிறது. 'ஒத்துழைப்பது' என்னும் விஷயமானது அதன் சாஸ்திரிய அர்த்தத்தின்படி இதர இடங்களில் பலரூபங்களில் காணப்படுகிறது; இந்தியாவிலுங்கூட வர வர அம்மாதிரி காணப்படுகிறது: ஆனால் அவைகளையும் அவைகளின் முக்கிய அம்சத்தையும் உங்களுடைய விசேஷ கவனத்துக்குக் கொண்டுவருவதற்கு முன், இந்த முயற்சி எப்படி ஆரம்பித்ததென்பதைப் பற்றியும் இப்பொழுதிருக்கும் அளவுக்கு எப்படி விருத்தியடைந்ததென்பதைப் பற்றியும் சுருக்கமாய் உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறேன்; கேளுங்கள். விவசாயம் உள்பட எல்லாக் கைத்தொழில்களையும் நடத்துவதற்கு, மூலதனம், உழைப்பு என்ற இரண்டு அம்சங்கள் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் அவசியமானவை. சிலகாலத்துக்கு முன் வரையில் இந்த இரண்டு அம்சங்களும், நேர்விரோதமான பாத்தியதைகளையுடைய வேவ்வேறான இரண்டு வகுப்பைச் சேர்ந்த நபர்களால் சவதரிக்கப்பட்டு வந்தன. மூலதனத்தைச் சவதரித்தவர்கள் வாஸ்தவத்தில் மற்றவர்களைவிட பலவான்களாயிருந்ததால் லாபத்தின் பெரும்பாகத்தைத் தாங்களே எடுத்துக்கொள்ளவே, அவர்களைக் காட்டிலும் பலவீனர்களாயிருந்த உழைப்பைச் சவதரித்த கூட்டாளிகளுக்கு ஜீவனத்துக்கு அத்தியாவசியமான விஷயங்கள் மாத்திரமே கூலிகள் ரூபமாய்க் கிடைத்துவந்தன. ஆயினும், பின்னவர்களுக்குள் அறிவு பரவவே, லாபத்தைப் பங்கிடுவதில் நடக்கும் அநியாயத்தை இவர்கள் அறிந்து, இந்த விஷயத்தைச் சீர்திருத்துவற்காக, தங்களுடைய பாத்தியதைகளைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டும், தங்களுடைய உழைப்பினால் கிடைக்கும் பலன்களில் இதுவரையிலிருந்ததைக்காட்டிலும் அதிகமாய்ப் பங்கு பெறும்பொருட்டும் ஒன்றுசேர ஆரம்பித்தார்கள். ட்ரேட் யூனியன் என்னும் வர்த்தகக் கூட்டங்களும், தொழிலாளிகளின் சங்கங்களும் இன்னும் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களெல்லாம் இதற்கப்புறம்தான் உண்டாயின. ஆனால் இந்த ஸ்தாபனங்களெல்லாம் உழைக்கும் வகுப்பாரின் பாத்தியதைகளைமட்டும் எடுத்துச் சொல்லக்கூடுமே யொழிய, அவர்கள் மூலதனத்தைச் சவதரிப்பவர்களிடத்திலிருந்து விடுபட்டு ஸ்வதந்திரமாயிருக்கும்படி செய்வதற்கு எவ்விதத்திலும் உதவி புரிய முடியாது. இந்த திக்கற்ற நிலைமையிலிருந்து அதிருப்திகரமான அநேக விளைவுகள் உண்டாயின; இவைகளால் வர்த்தகத்துக்குக் குந்தகம் நேரிட்டு சம்பந்தப்பட்ட சகலருக்கும் நஷ்டமும் அசௌகரியமும் உண்டாயிற்று;

இதில் அதிகமாய்க் கஷ்டப்பட்டவர்கள் உழைப்பாளிகள்தான். நேர் விரோதமான பாத்தியதைகளுள்ள மூலதனம், உழைப்பு என்ற இரண்டு அம்சங்களையும் ஒன்றாய்ச் சேர்க்கவேண்டுமென்ற எண்ணம் உதித்தது, கடந்த நூற்றாண்டின் பின்பாதியில்தான். இந்த பிரம்மாண்டமான வேலையானது ஜெர்மனியிலுள்ள அதிமேதாவிகளான இரண்டு நபர்களால் செய்து முடிக்கப்பட்டது; இந்த கஷ்டமான விஷயத்தை இவர்கள் அற்புதமாய்ச் சிக்கறுத்துவிட்டதைப் பார்த்து, ஐரோப்பாவிலுள்ள இதரதேசங்களும் வரவர இதை அனுஷ்டிக்க ஆரம்பித்து, அதனால் மிகவும் பிரயோஜனகரமான பலன்கள் உண்டாயிருக்கின்றன. இந்த பத்ததியில் நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள ஏழை ஜனங்களை ஒன்று சேர்த்து, சங்கங்கள் ஸ்தாபித்து, அவர்கள்--தங்களுக்குள்ளிருந்தே மூலதனத்தைச் சேகரித்துக்கொண்டு அதை மெம்பர்களுக்கு அவசியமான காரியங்களுக்காகக் கடன் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது; இப்படி செய்வதனால், கடன் கொடுப்பவர்களே கடன் வாங்குபவர்களாகி, இந்த இரண்டு வகுப்பாருக்கும் இருந்த பாத்தியதை விரோதம் ஒழிந்துபோய்விடுகிறது. இந்த சிலாக்கியமான பத்ததி காரிய ரூபமாய் மாறும் பொழுது அதில் அளவற்ற பேதங்கள் காணப்படுகின்றன. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் ஆதாரமாயுள்ள கோட்பாடு ஒன்றேயாம்; அதாவது, மெம்பர்கள் மெதுவாய்க் கொடுத்தாலும் விடாமல் கொடுத்துவரும் சந்தாக்களால் தங்களுக்கே மூலதனமொன்று ஏற்படுத்திக்கொண்டு, இந்த நிதியிலிருந்து கடன்கள் கொடுப்பதனால் தங்களைப்போன்ற நிலைமையிலேயேயுள்ள சகோதரர்களுக்குத் தாங்கள் ஒத்தாசை செய்தும் அவர்களால் தாங்கள் ஒத்தாசை செய்யப்பெற்றும் வருகிறார்களென்பதே; இந்த நிதியின்பொருட்டு வட்டிவியாபாரமே தொழில்களுடையவர்களைத் தேடவேண்டிய அவசியமே இனி இல்லை. இந்த முயற்சி பயன்படுவதற்கு, இதர விஷயங்களுடன், ஏழைகள் மாத்திரமேயல்லாமல், பணக்காரர்களும் ஒன்றுசேருவது அவசியமென்பதை இங்கு எடுத்துச்சொல்வது அசம்பாவிதமாகாது. இது சிறிது ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம். அனுகூலமடையவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்ட நபர்கள் ஏழைகளாயிருக்க அவர்களுடன் பணக்காரர்களும் எதற்காக ஒத்துழைக்க வேண்டுமென்ற கேள்வி பிறக்கலாம். பர்மாவில் ரெஜிஸ்ட்ரார் சிறிது காலத்துக்குமுன் பிறப்பித்த ஒருசுற்று விளம்பரத்தில் சொல்லியிருக்கும் வார்த்தைகளே இதற்குச் சரியான மறுமொழியாம். அவர் சொல்லியிருக்கிறதாவது: "அவர்கள் (பணக்காரர்கள்) தங்களைவிட பலவீனமான சகோதரர்களுக்கு உதவி புரிவதால் பெறும் புண்ணியத்தைத்தவிர, ஒரு சிப்பாய் தன் சக்திக்கு எட்டினமட்டில் தன்னுடைய ரெஜிமெண்டுடன் ஐக்கியப்படுவதனால் எப்படி தனக்குத்தானே உதவிபுரிந்தவனாகின்றானோ அதேமாதிரி தங்களையும் தாங்கள் இருக்கும் கிராமத்தையும் பலப்படுத்திக் கொள்கிறார்கள். ஒரு கிராமமானது மானிடதேகத்தை ஒத்திருக்கிறது; அதில் எந்த அங்கமாவது தன்வேலையைச் செய்யத்தவறினால், அந்த அங்கம் மாத்திரமேயல்லாமல்

தேகமுழுவதும் அதனால் கஷ்டப்படும். பணக்காரனுக்கும் ஒருவேளையில் துரதிர்ஷ்டம் ஏற்பட்டு கடன்வேண்டியிருக்கலாம்; ஒரு சங்கத்திலிருந்தால் அவனுக்கு வேண்டியபொழுது கடன் கிடைக்குமென்பதைப்பற்றி அவன் நிச்சயமாயிருக்கலாம். பணக்காரராயிருப்பவர்கள் விவேகிகளாயிருந்ததனால் தான் அப்படி ஆயிருக்கக்கூடும்; ஆகவே தங்களைவிட ஏழையாயுள்ளவர்க்குப் பத்திமதிகூற அவர்களுக்கு விசேஷ யோக்கியதை உண்டு. அவர்கள் சங்கத்தின் நிர்வாகத்தில் முதன்மை பெற்றிருப்பார்களாகையால், வேண்டிய அளவுக்குமாத்திரமே கடன்கள் கொடுப்பதில் ஜாக்கிரதையா யிருப்பதனாலும், அந்தக் கடன்கள் பிரயோஜனகரமாய் விநியோகிக்கப்படுகின்றனவா வென்று பார்ப்பதனாலும் தவறுதல்களும் நஷ்டங்களும் நேரிடாமல் தடுப்பது சுலபமாகும்; ஆகையினால் அவர்கள் சங்கத்திலே சேருவதில் பத்திரமேயொழிய வேறல்ல.''

இந்தியாவில் கூட்டுத்தொழில் முயற்சி.

1903-ம் வருஷத்தில் இந்தியாவிலே கூட்டுத்தொழில் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது; அந்த சமயத்தில் இந்த முயற்சி எப்பொழுதேனும் இத்தேசத்தில் நிலையாய் வேரூன்றி அதன் ஜனங்களுக்கு பெரும் பேறாகுமென்று எவராயினும் சொல்லியிருப்பாரானால் அவர் துணிகரமான தீர்க்கதரிசியென்றே கருதப்பட்டிருப்பார். ஆயினும், இன்னும் ஆரம்பதசையிலேயே இருக்கும் இந்த முயற்சியானது அதிர்ஷ்டவசத்தால் இவ்வளவு சீக்கிரத்திலே விருத்தியாகத் தொடங்கிவிட்டதால், சிறிதுகாலத்துக்குள் பலமாய் வளர்ந்தோங்குமென்று நிச்சயமாய் எதிர்ப்பார்க்கலாம். ஏற்கனவே 3000 சங்கங்கள் வரையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன; அவைகளில் இரண்டுலக்ஷம் மெம்பர்களும், வேலை நடத்துவதற்கான மூலதனமாய் ஒரு கோடி ரூபாயும் இருக்கின்றன. இது மிக்க சுபசூசகமான அறிகுறியாம்; ஏனெனில் ஐரோப்பாவிலே இந்த பத்ததியை சர்வ ஜனங்களும் திடசங்கல்பத்துடன் அங்கீகரித்து இது சம்பந்தமாய் பிரத்தியக்ஷமான எவ்வித காரியமும் நிறைவேறுவதற்கு அநேக வருஷங்கள் பிடித்தது.

மைசூரில் கூட்டுத்தொழில் முயற்சி.

கூட்டுத்தொழில் சம்பந்தமாய் நாம் தான் எல்லாரைக்காட்டிலும் முன்னதாய் வேலைசெய்யத் தொடங்கினோம் என்று சொல்லலாம்; ஏனெனில், இறந்துபோன ஸர். கே. சேஷாத்ரி அய்யரவர்கள் 1892-ம்வருஷத்திலே ராய்பெய்ஸென்மாதிரியை அனுசரித்த விவசாய பாங்கிகள் ஏற்படுத்தின பொழுதே கூட்டுத்தொழில் விதையை விதைத்துவிட்டார். அக்காலத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் விவசாய பாங்கிகளையும் கூட்டுத்தொழில் சங்கங்களையும் ஏற்படுத்துவதைப்பற்றி யாதொரு முடிவுக்கும் வராமல் தயங்கிக்கொண்டேயிருந்தார்கள். ஆகவே மைசூர் கவர்ன்மெண்டார் தங்களுக்கு ஸகஜமான

முன்ஜாக்கிரதையுடன் பொதுஜனங்களுக்கு உபயோகமான காரியங்களைச் செய்ய முன்னமே ஆரம்பித்து விட்டார்கள். இப்பரோபகாரமான முறையை கவர்ன்மெண்டார் அனுஷ்டிக்க ஆரம்பித்ததன் பலனாக, விவசாய பாங்கிகளைத் தொடர்ந்தே கூட்டுத்தொழில் முயற்சியும் தலையெடுத்து தற்போது 140-சங்கங்கள் வரையில் நம்மவர்களுக்குள் ஸ்தாபிக்கப்பட்டு மிகவும் நன்றாய் வேலைசெய்து கொண்டு வருகின்றன; இது நாம் சந்தோஷிக்கத் தக்க விஷயமேயாகும். மிஸ்டர். எம். சாமராவ் என்பவர் நம்முடைய முதல் ரெஜிஸ்ட்ராராய் ஏற்பட்டது நமது அதிர்ஷ்டமே. இவர் மைசூரில் இந்த முயற்சி பலிதமடையுமாறு சிரமத்தைப் பாராமல் பலவருஷங்கள் உழைத்து வந்தார்; அவருக்குப் பிறகு இந்த வேலையை இப்பொழுது பார்த்துவரும் மிஸ்டர் எம். ஏ. நாராயண அய்யங்காரும் அதே யோக்கியதையும் உற்சாகமுமுடையவரா யிருக்கிறார்.

விவசாய பாங்கிகள்.

இம்மாதிரி முதலில் ஏற்படுத்தப்பட்ட விவசாய பாங்கிகள், ராய்பெய்ஸன் முறைப்படியே ஸ்தாபிக்கப்பட்டாலும், மைசூரில் நன்றாய் வேலைசெய்யாமற்போனது நமது துரதிர்ஷ்டம்தான். இதற்குக்காரணம் சிலமுக்கியமான விவரங்களைக் கவனிக்காமல் விட்டுவிட்டதே யொழிய இந்த பத்ததியே பிசகா யிருக்கிறதென்பதல்ல; ரயத்துகள் கடனில் முழுகியிருந்தார்கள்; பூஸ்திதிகளின் மேல் கடன்கள் ஏராளமாய் ஏறியிருந்தன; சொத்தின் மதிப்பு அஜாக்கிரதையாய்ப் போடப்பட்டது; கவர்ன்மெண்டார் பெருந்தொகைகள் கொடுத்துதவியுங்கூட, கடன்கள் முழுவதும் ஒழியவில்லை; கிடைத்த லாபமான்று அவசியமான செலவுகள்போக கேவலம் ஜீவனத்துக்குவேண்டிய தொகை மிகுவதற்குக் கூட போதுமானதாயில்லை; இதுவே இப்படியிருக்க இன்னும் பாக்கியாயிருக்கும் பழைய கடன்களைச் சிறிது சிறிதாகத் தீர்த்துக் கொண்டுவருவது எப்படி சாத்தியம்? கடைசியாக பாங்கிகள் சரியாக நிர்வகிக்கப்படவுமில்லை; மேல் விசாரணையும் பலமானதாயில்லை. இந்த சந்தர்ப்பங்களில், வாஸ்தவத்தில் சிக்கனம் ஏற்பட்டு கடன்களை ஒழிப்பது சாத்தியமேயில்லை. நிலைமை இவ்வளவு சீர்கேடா யிராவிட்டால், கூட்டுத்தொழில் சங்கங்களைப்போலவே விவசாய பாங்கிகளும் திறமையுடன் வேலை நடத்துவது ஏன் கூடாதென்று எனக்குத் தெரியவில்லை; இவ்விருவகை ஸ்தாபனங்களும் ஒரே கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டு ஒரே மாதிரியான நோக்கத்தை உத்தேசித்து வேலைசெய்கின்றன.

ரொக்கபாங்கிகளுக்கும் கூட்டுத்தொழில் சங்கங்களுக்குமுள்ள வித்தியாசம்.

கவர்ன்மெண்ட் ஒத்தாசையுடன் நடத்தப்படும் கூட்டுத்தொழில் சங்கங்களால் ரொக்கபாங்கிகளை மூடிவிடவேண்டி வந்துவிட்டதென்று இந்த பாங்கிகளை நடத்துவோர் முறையிடுவதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; அதா

வது, இவர்கள் சொல்லுவதென்னவென்றால், ரொக்கபாங்கிகள் வேலை நடத்தி வந்த இடத்திலெல்லாம் கூட்டுத்தொழில் சங்கங்கள் ஏற்பட்டு அந்த பாங்கிகளின் வேலையை சாத்தியமில்லாமல் செய்துவிட்டன வென்பதே. இதைவிட பெரும்பிழை வேறெதுவுமில்லையென்பது எனது அபிப்பிராயம். நல்ல ஸ்திதியிலுள்ள ரொக்கபாங்கிகள் இல்லாதிருப்பதும், நியாயமான ஷரத்துகளின்மேல் இதர இடங்களில் கடன் கிடைப்பது கஷ்டமாயிருப்பதுமே விவசாய வகுப்பாரையும் கைத்தொழிலாளிகளையும் இந்த சீர்கேடான நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டுவிட்டது; இதிலிருந்து அவர்கள் மீளவேண்டுமானால் கூட்டுத்தொழில் முயற்சியைத்தவிர அவர்களுக்கு வேறுகதியில்லை. இத்தேசத்தில் விவகார முறைப்படி நன்றாய் வேலைநடத்திவரும் சில பெருத்த ரொக்க பாங்கிகள் எவ்வித குறையும் கூறுவதற்கு இடமில்லை. இவ்வளவு திருப்திகரமாய் வேலைசெய்யாத பாங்கிகள் விஷயத்தில் தான், அவர்களுடைய வியாபாரத்துக்குக் குந்தகம் நேரிட்டிருக்கிறது; ஆனால், இது மிகவும் சரியான விஷயமே; இதைப்பற்றி நாம் சந்தோஷப்படவேண்டுமே யொழிய விசனப்படுவதற்கு கிஞ்சித்தும் இடமில்லை. ரொக்க பாங்கிகளே இல்லாத இடங்களிலும், அவைகள் இருந்தும் நன்றாய் வேலைசெய்யாத இடங்களிலும் ஒத்தாசை பெற அர்ஹர்களாயுள்ளவர்களுக்குத் திரவிய சகாயம் செய்வதற்குரிய நிராட்சேபமான உபாயங்களை சாத்தியமானவரையில் அனுசரிப்பது அவசியமாம்; ஆகையினால் கூட்டுத்தொழில் சங்கங்களும் அவைகளைச் சேர்ந்த ஜில்லாபாங்கிகளும் ஸென்ட்ரல் பாங்கிகளும் அனுவசியமாகவாவது அநியாயமாகவாவது ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களாகா; அவைகளை ஸ்தாபித்தது அவசரப்பட்டு செய்ததுமாகாது. நியாயமாயுள்ள சகலவித பாங்கிங் விவகாரங்களையும் நடத்திவர இத்தேசத்தில் போதுமான இடமிருக்கிறது; ஒவ்வொன்றும் அதற்குரிய வேலையையே செய்து வரவேண்டும். இவைகளில் யாதானு மொன்றுக்கு ஜனங்கள் அதற்குரிய கௌரவத்தைக் காட்டிலும் அதிக கௌரவம் கொடுக்கிறார்களென்றோ அல்லது ஜனங்களால் ஆதரிக்கப்படுவதற்கு அர்ஹதையுள்ள இதர வியாபாரங்களை அதைக்கொண்டு கெடுக்கவாவது ஒழித்துவிடவாவது உத்தேசிக்கப்படுகிறதென்றோ நினைப்பது பிசகாகும். கூட்டுத்தொழில் முயற்சியானது சிறிது விசேஷமாய் ஆதரிக்கப்படுகிறதென்றால், அதற்குக் காரணம் இப்போதைய சந்தர்ப்பங்களில் இப்படி செய்வது அத்தியாவசியக மென்பதைத்தவிர வேறல்ல. இந்த முயற்சியை முன்னேற்ற மடைந்துவரும் பொதுவான ஒரு கைத்தொழில் முயற்சியின் பாகமாகக் கருதவேண்டுமேயல்லாது கேவலம் எங்கோ ஒவ்வோரிடத்தில் கிளம்பி நிர்ப்பந்தமாய் வளர்க்கப்பட்டு நிலையாயிருப்பதற்கு ஸர்க்கார் தயவை நம்பியிருக்கும் திரவிய சம்பந்தமான ஒரு காட்சி என்று எண்ணக்கூடாது. கைத்தொழிலின் புராதன நிலைமையானது எங்கு பார்த்தாலும் நவீன முறைகளால் மாற்றப்பட்டு வருகிறதென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே. இந்தியாவிலும் இவ்வித புரட்சி நேரிட ஆரம்பித்து விட்டது.

ஆனால் நாகரீகமான இதரதேசங்கள் இவ்விஷயத்தில் எவ்வளவுதூரம் முன்னேற்ற மடைந்திருக்கின்றனவோ அவ்வளவு இந்தியா அடையவில்லை, கைத்தொழில் சம்பந்தமாய் அபிவிருத்தி ஏற்படுவதற்குத் திடமான ஆதாரங்களாயிருப்பவை, முன் ஜாக்கிரதையும், சுய நம்பிக்கையும், ஊக்கமுமேயாம்; ஸர் வசிலாக்கியமான இந்த மூன்று குணங்களும் கூட்டுத்தொழில் முயற்சியினால் தான் நன்றாய் விருத்தி செய்யப் படுகின்றனவாகையால் இந்த முயற்சியை சகல விதத்திலும் விருத்திக்குக் கொண்டுவருவது பொருந்தும்.

கூட்டுத்தொழிலின் வகைகள்.

கூட்டுத்தொழிலில் பலவகைகள் இருக்கின்றன; இவைகளுக்குள் பொதுவாய் நன்மை செய்யக்கூடியவைகளைப்பற்றி மாத்திரமே நான் இப்பொழுது இரண்டொரு வார்த்தைசொல்ல உத்தேசிக்கிறேன். கட்டிடங்களைக் குறித்தும் விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் அவசியமான கருவிகளையும் மற்றவைகளையும் குறித்தும் இதுபோன்ற இதர விஷயங்களைக்குறித்தும் மாத்திரமே பிரவர்த்திக்கிற சங்கங்கள் சில விசேஷப் பிரதேசங்களுக்கு அல்லது சில குறித்த ஜனவகுப்பாருக்கே நன்மை செய்யக் கூடியன்வாகையால், அவைகளைப்பற்றி நான் அதிகமாய்ச் சொல்லப் போகிறதில்லை. இவைகள் தங்கள் வேலைக்குச் சம்பந்தப்பட்ட மட்டில் நன்மை செய்கின்றன வென்பது வாஸ்தவமானாலும், அடியிற்கண்ட மூன்றுவித சங்கங்களைப்போல் அவ்வளவு முக்கியமானவையல்ல; ஆகவே பின்னவைகளைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லவேண்டியது அவசியமாகிறது. இவையாவன:—

(1) நாணயச் சங்கங்கள்
(2) உற்பத்திச் சங்கங்கள்
(3) விற்பனைச் சங்கங்கள்

முதல் வகைச் சங்கங்களின் நோக்கமானது, அவைகளைச் சேர்ந்த மெம்பர்களுடன் நாணயத்தின் மேல் கொடுக்கல் வாங்கல் கணக்கேற்படுத்திக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட காரியங்களுக்காகவும் நியாயமான வட்டி வீதப்படியும் அவர்களுக்குக் கடன்கள் கொடுப்பதேயாம். மற்ற இரண்டு வகைச் சங்கங்களைப்போல் இவை அவ்வளவு சிக்கில்லாம விருப்பதுமன்றி அவைகளைக்காட்டிலும் இவைகளைத் திறமையுடன் நிர்வகிப்பது அதிக சுலபம். இரண்டாவது வகுப்புச் சங்கங்களின் நோக்க மென்னவெனில், அவைகளைச் சேர்ந்த மெம்பர்கள் ஒன்று சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ உற்பத்தி செய்த சாமான்களை அவர்களுக்குக் கூடியவரையில் அதிகலாபம் கிடைக்கும்படி விற்பனைசெய்வதே. கூட்டுத்தொழிலின் நோட்பாட்டை இந்த முறையில் பிரயோகித்து பலிதத்துடன் வேலை செய்வதற்கு ஐரோப்பாவில் இருப்பதைப்போல் இந்தியாவில் சந்தர்ப்பங்கள் அவ்வளவு அநுகூலமாயில்லை; ஐரோப்பாவில்கூட இவ்வகுப்புச் சங்கங்கள், அவைகளைப்பற்றி

நான் புஸ்தகங்கள் மூலமாய் அறிந்தவரையில், நன்றாய் வேலை செய்யவில்லை என்றே சொல்லவேண்டும்; ஆயினும், கூட்டுத்தொழிலின் இவ்வகையைச் சுற்றியிருக்கும் கஷ்டங்களை நிவர்த்தி செய்து நமது கைத்தொழில் வகுப்பாருக்கு உதவிபுரிய மும்முரமான பிரயத்தனங்கள் ஏன் இத்தேசத்தில் செய்யக்கூடாதென்பதற்கு இது சரியான காரணமாகாது. முதல் வகைச் சங்கங்களும் மூன்றும் வகைச் சங்கங்களும் எந்த வகுப்பாருக்கு அனுகூலம் செய்யவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்களைவிட இந்தக் கைத்தொழில் வகுப்பார்தான் அதிகமாக உதவிபெற அர்ஹராயிருக்கிறார்கள். இவ்வித முயற்சி ஒன்று சென்னை இராஜதானியைச் சேர்ந்த நெசவுத் தொழிலுக்கு முக்கியமான ஓரிடமாகிய காஞ்சீபுரத்தில் செய்யப்பட்டு வருவதாக நான் அறிகிறேன்; இதுவரையில், அதன் பலங்கள் அநேகமாய் திருப்திகரமாகவே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட இடங்கள் மைசூரில் அநேகம் இருக்கின்றன; இவ்விடங்களில் நெசவுத் தொழில் மாத்திரமேயல்லாமல் அவசியமான வேறு பல சிறிய தொழில்களும் ஆதரிப்பாரில்லாமல் அழிந்து போகும் ஸ்திதியிலிருக்கின்றன. இந்த விஷயமாய் மைசூரில் ஏற்கனவே சில காரியங்கள் செய்யப்பட்டு வருகிறதென்று நம்புகிறேன்; ஆனால், தலையெடுக்கமாட்டாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் கைத்தொழில்கள் முன்னுக்கு வருமாறு நாம் எவ்வளவுக் கெவ்வளவு உதவி செய்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு பொதுவாய் தேசத்தின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்தவர்களாவோம். இந்தக் கான்பரென்ஸில் படிக்கப்பட்ட உபந்நியாஸங்களிலே இந்த விஷயத்தைப்பற்றி முக்கியமான அநேக சங்கதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன; அவைகளை நாம் ஜாக்கிரதையாய் உபயோகித்துக்கொண்டு இந்தச் சிறந்த துறையில் நாம் இன்னும் அதிகமாய் அபிவிருத்தி அடையக்கூடாதா என்பதைப்பற்றி நாம் கவனிப்பது நம்முடைய கடமையாகும்.

மூன்றும் வகைச் சங்கங்களின் நோக்கமென்னவென்றால், இயற்கைப் பொருள்கள், ஜீவனத்துக்கு அவசியமான வஸ்துக்கள் முதலியவைகளை மொத்தமாய் வாங்கி மெம்பர்களுக்கு அவைகளைச் சில்லறையாய் விற்பதேயாம்; இப்படி செய்வதனால், கிடைக்கக் கூடிய சாமான்களில் மிகவும் சிறந்தவைகள் மெம்பர்களுக்கு அனுகூலமான விலைகளுக்குக் கிடைப்பது மல்லாமல், ரொக்கம் கொடுத்து வாங்கும் வழக்கமும் சிக்கனமும் அவர்களுக்குப் படிகிறது. சாமான்களைச் சேகரித்து வைப்பதற்கும் சிப்பந்திகளுக்கும் பிடிக்கும் செலவு அதிகமாயிருப்பதனாலும் இதர காரணங்களினாலும், சென்னை இராஜதானியில் அநேக இடங்களில் இந்த ஏற்பாடு அவ்வளவு திருப்திகரமாய் நிறைவேறவில்லையென்று நான் கேள்விப் படுகிறேன்; இப்படியிருந்தாலுங் கூட, இரண்டாம் வகைச் சங்கங்களிலிருக்கும் சிக்கல்கள் இவைகளிலில்லை. ஆயினும் பலகிளைகளுடன் திருவல்லிக்கேணியில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்டோர்ஸ் என்னும் சங்கமானது மிகவும் நன்றாய் வேலைசெய்து வந்திருப்பதனால் அதிலிருந்து நாம் அநேக விஷயங்களைக் கற்கலாம். இந்தீ இராஜ்ஜியத்தில் பெங்களூரிலும் மைசூர் பட்டணத்திலுமுள்ள ஸ்டோர்கள் திவ்வியமாய் விருத்தி அடைந்து வந்திருக்கின்றன; அதே மாதிரி சங்கங்களை இதர பட்டணங்களிலும் ஸ்தாபிப்பது முழுவதும் அசாத்தியமாயிருக்காதென்று நம்புகிறேன்.

மைசூர் ரெகுலேஷனும் அதன் முன்னேக்கும்.

ப்ரிடிஷ் இந்தியாவில் இப்போது அமுலிலிருக்கும் சட்டத்தின்படி நாணயச் சங்கங்கள் மாத்திரம்தான் ஏற்படுத்தலாம்; உற்பத்திச் சங்கங்களையாவது விற்பனைச் சங்கங்களையாவது ஏற்படுத்துவதற்கு இந்தச் சட்டம் அதிகாரம் கொடுக்கவில்லை. ஆயினும், இந்த விஷயமாயும் இதர சில்லறை பாடுத்துகளிலும் இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று உத்தேசிக்கப் பட்டு வருகிறது. இப்படி திருத்தப்பட்டால், இச்சட்டத்தினால் ஏராளமான நன்மை உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. இது இப்படியிருக்க, மைசூரிலோ நாணயச் சங்கங்கள் மாத்திரமேயல்லாமல் உற்பத்திச் சங்கங்களும் விற்பனைச் சங்கங்களும் கூட ஸ்தாபிக்கப் படுவதற்கு இடம் கொடுத்திருப்பதனால், நாம் கூட்டுத் தொழில் முயற்சி அபிவிருத்தி அடைவதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்திருக்கிறோம். இந்த இராஜ்ஜியத்தில் ஏற்கனவே 20 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன; இவை-சாமான்களைச் சேகரித்து விற்பனை செய்யும் வேலையையும், நெசவுத் தொழிலையும், அரக்குச்சாயம் போடும் தொழில்களையும் பரீட்சார்த்தமான பண்ணைகளையும் விருத்தி செய்வதாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன. மைசூரில் ஒரு ஸென்ட்ரல் பாங்கியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; இதில் ஜில்லாக்களில் ஸ்தாபிக்கப்படும் சங்கங்கள் மெம்பர்களாகச் சேரலாம்.

கூட்டுத்தொழிலும் செல்வநிலைத்திறனும்.

——:(o):——

பாதர் பின்லே என்பவரால் செய்யப்பட்ட முக்கியமான ஒரு உபந்நியாஸம்.

1911-ம் ஆண்டு ஜூன்மீ 16உ யன்று கில்கெனி கூட்டுத்தொழில் ஜில்லா கான்ப்ரென்ஸில் பாதர் பின்லே என்பவர் செய்த உபந்நியாசத்தை அடியில் விவரமாய் எடுத்தெழுதி யிருக்கிறது.

I. A. O. S. என்னும் சங்கத்தின் வைஸ்ப்ரெஸிடென்டாகிய ரெவ். டி. ஏ. பின்லே என்பவர் சொன்னதென்னவென்றால்:

நான் இப்பொழுது உங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவரப்போகும் ஏற்பாட்டின் விவரங்களைப்பற்றி தர்க்கிப்பதாய் உத்தேசமில்லை. இதுதான்

களுடைய சொந்த யுக்தி புத்திகளைக்கொண்டு நீங்களே தீர்மானித்துக்கொள்ளலாம். நான் செய்ய உத்தேசித்திருப்பது என்னவெனில், கில்கெனியிலுள்ள கூட்டுத்தொழில் முயற்சியின் பிரதிநிதிகளுக்கு சங்கமாய்ச் சேருவதன் அனுகூலங்களைப்பற்றி மறுபடியும் எடுத்துச்சொல்லி, கூட்டுத்தொழில் சங்க ஏற்பாட்டைப்பற்றிய முறைகளைப் பலிதத்துடன் நிறைவேற்ற வேண்டுமானால் அவர்கள் என்னென்ன செய்யவேண்டுமென்பதை அவர்களுக்குக் குறிப்பிடுவதேயாம். முதலில், சில நபர்கள் தனித்தனியே வேலை செய்தால் நடத்தக்கூடாத ஒரு காரியத்தை அவர்களே ஒன்றாய்ச்சேர்ந்து செய்தால் முடிக்க முடியுமென்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம் (கேளுங்கள்; கேளுங்கள்) ஒரு கல்லையோ அல்லது ஒரு மரத்துண்டையோ தூக்குவதைப்போன்ற ஒரு சுலபமான வேலையை எடுத்துக்கொள்வோம். இந்த வேலையை 3 பெயர்கள் ஒருவர் பின் ஒருவராய் செய்தால் அதைக் களைப்ப முடியவே முடியாது; ஆனால், அதேவேலையை மூன்றுபெயரும் சேர்ந்து செய்தால் அதை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு புரட்டித்தள்ளுவது சுலபமான காரியமாகும். ஒன்று சேர்ந்து உழைப்பதனால் ஏற்படும் அனுகூலத்தை எடுத்துக்காட்டுவதற்கு இதைவிட சுலபமான உதாரணம் கிடையாது. மேலே சொன்ன உதாரணத்தினால் என்ன ஏற்படுகிறதென்றால், ஒரு வேலைக்காக மூன்று பெயர்கள் தங்கள் சக்தியை ஒன்று சேர்த்து உபயோகித்தால், செய்யப்பட்ட வேலையின் அளவு ஒன்றுக்கு மூன்றத்தனையாக அதிகரிக்கிறதென்பதல்ல; மூன்று பெயர்களும் சேர்ந்துழைப்பதனால் கிடைக்கும் பலனானது ஒரே மனிதன் செய்யக்கூடிய வேலையைவிட எவ்வளவோ மடங்கு அதிகமாகுமென்பதே. ஒருவன் செய்த வேலையினால் கிடைக்கும் பலனுக்கு மூன்றத்தனை கிடைப்பதற்குப் பர்த்தியாக, பத்தாயிரம் மடங்கு பிரதிபலன் கிடைக்கக்கூடும். ஒன்று சேர்ந்துழைப்பதனால் இவ்வளவு அனுகூலம் உண்டாகிறது. நாம் இப்பொழுது இன்னும் ஒரு அடி முன்செல்வோம். ஒன்றுசேர்ந்துழைப்பதும் சங்கமாய்ச் சேர்ந்து வேலைசெய்வதும் ஒன்றல்ல. நான் எடுத்துக்காட்டின உதாரணத்தில் சங்கமாய்ச்சேர்ந்து வேலைசெய்யும் தன்மை யில்லை. மூன்றுபேரும் ஒன்றாய்ச்சேர்ந்தார்கள்; ஒவ்வொருவனும் தனியாய் எவ்வளவு வேலை செய்திருப்பானோ அவ்வளவு வேலையைத்தான் செய்தான். ஆனால், சங்கமாய்ச் சேர்ந்து வேலை செய்வதில் பலபெயர்கள் ஒன்று சேருவது மாத்திரமேயல்லாமல் ஒவ்வொருவனும் வெவ்வேறு விதமான வேலையைச் செய்கிறான். சங்கமாய்ச் சேர்ந்து வேலை செய்வதற்கு ஒன்று சேர்ந்தே ஆகவேண்டும்; ஆனால், ஒன்று சேருவதற்கு சங்கமாய்ச்சேர்ந்து வேலைசெய்ய வேண்டியதில்லை. சங்கமாய்ச் சேர்ந்து வேலைசெய்வது எப்படியென்று உங்களுக்குத் தெரிவிப்பதற்காக ஒரு சிறிய உதாரணம் எடுத்துக்காட்டுகிறேன். ஒரு துணித் துண்டைத் தயார்செய்து முடிப்பதற்கு மூன்றுவித வேலைகள் அவசியமென்று வைத்துக்கொள்வோம்; அதாவது, நூற்பதும், நெய்வதும், சாயம்போடுவதும்; மற்ற வேலைகளைப்பற்றி இப்பொழுது கவனிக்கவேண்டியதில்லை.

ஒரே மனிதன் தனக்காக ஒரு துணித் துண்டைத் தயார் செய்து முடிக்க வேண்டுமென்று எண்ணலாம்; இவ்விஷயத்தில், அவனே இம்மூன்றுவித வேலைகளையும் செய்யவேண்டியிருக்கும். அவனே நூலை நூற்றுத் துணியை நெய்து கடைசியில் சாயமும் போடவேண்டிவரும். இப்படி வேலை செய்தால் ஒரு குறித்த அளவுள்ள துணியை அவன் தயார் செய்வான். அது மிகவும் பெரிதா யிருக்காது. அதன் மாதிரியும் அவ்வளவு சிலாக்கிய மானதாய் இராது. இதே வேலையை மூன்று பெயர்கள் செய்யக்கூடும்; அப்படி செய்தால் ஒருவன் எவ்வளவு துணி தயார்செய்தானோ அதற்கு மூன்றத்தனை அளவுக்கு அவர்கள் தயார் செய்யக்கூடும்; இவ்விஷயத்திலுங்கூட, தயார் செய்யப்பட்ட மொத்த அளவானது அவ்வளவு அதிகமா யிராது; அதன் மாதிரியும் அநேகமாய் சிலாக்கியமானதாய் இருக்காது. ஆனால், ஒவ்வொரு மனிதனும் தனியே ஒரு துணித்துண்டைத் தயார் செய்வதற்குப் பாத்தியாக, இம்மூவரும் துணி தயார் செய்யும் வேலையை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு, ஒருவன் நூற்பதையும் மற்றொருவன் நெய்வதையும் வேறொருவன் சாயம் போடுவதையும் கவனித்து வந்தால் அதனால் முன்னிருந்த நிலைமையே மாறி புதிய பலிதங்கள் உண்டாகின்றன. இந்த ஏற்பாட்டினால் என்ன பலன் கிடைக்கிறது? முன்னே மூன்று பெயர்கள் வேலை செய்தார்கள்; அவர்களில் ஒவ்வொருவனும் ஒரு நூல் நூற்கும் யந்திரத்தையும் ஒரு நெசவுத் தறியையும் சாயம்போடும் தொட்டி. ஒன்றையும் வைத்திருந்தான். புதிய ஏற்பாட்டின்படி செலவு மெத்த குறைந்து விட்டது; ஏனெனில், ஒரே நூல் நூற்கும் யந்திரமும், ஒரே தறியும், ஒரே சாயம் போடும் தொட்டியும் இப்பொழுது போதுமானதா யிருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் மூன்று பெயர்கள் சதா வேலை செய்துகொண்டு வந்தார்கள்; அவர்களிடத்தில் ஒன்பது யந்திரங்கள் இருந்தன; இவைகளில் மூன்று எப்பொழுதும் உபயோகப் படுத்தப்பட்டும் ஆறு சும்மாவும் இருந்தன. இப்பொழுதோ எந்த யந்திரமும் சும்மா யிருப்பதில்லை; எல்லா யந்திரங்களும் உபயோகப் படுத்தப்பட்டு சதா வேலைசெய்து கொண்டே இருக்கும். முன் எவ்வளவு யந்திரங்கள் இருந்தனவோ அதில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டு முன் செய்த அளவுக்கே வேலை நடத்துவது சாத்தியமாகிறது; அதே அளவுக்கு மாத்திரமல்ல; அதற்கு ஒன்றுக்குப் பன்னிரண்டத்தனை அல்லது ஒன்றுக்கு நூறத்தனைகூட செய்யக்கூடும். இந்த முறையில் ஒவ்வொரு மனிதனும் ஓரே விதமான வேலையைச் செய்து வருவான்; அந்த வேலையில் அவன் நிபுணனாய், சிறிது காலத்தில் வழக்கத்தால் ஏற்படும் ஹஸ்தலாகவத்துடனும் வெகுதீவிரமாயும் தன்னுடைய வேலையை செய்து முடிக்கக் கூடியவனாவான். இதனால் விளைவதென்னவென்றால், இந்த மூன்று பேரும் ஒழுங்கான ஒரு பத்ததியை அனுசரித்து வேலை செய்ததனால் உண்டாக்கிய வஸ்துவின் அளவுக்கும் தன்மைக்கும், இவர்களே தனித்தனியே வேலை செய்த பொழுது அவர்களால் உண்டாக்கப்பட்ட வஸ்துவின் அளவுக்கும் தன்மைக்கும் எவ்வள

வோ வித்தியாசம் ஏற்படும். வேலையைப்பற்றிய இந்தக் கோட்பாட்டை முதலில் எடுத்துக்கூறியவர் 1776-ம்ஞுத்தில் ஜீவித்திருந்த ஆடம் ஸ்மித் என்பவர்; அவர் காலத்துக்குமுன் ஜனங்கள் கைத்தொழில்களை நடத்திவந்தாலும், தாங்கள் நடத்திவந்த சர்வ சாதாரணமான கைத்தொழிலுக்கும் ஆதாரமாயிருந்த கோட்பாடுகளைக் குறித்தும் மானிட முயற்சியால் வஸ்துக்களை உற்பத்திசெய்யும் சக்தியைப்பற்றிய விதிகளைக் குறித்தும் அவர்கள் ஆராய்ந்து அறியவில்லை. இந்த ஆடம் ஸ்மித் என்பவர் தான் மேலே கண்ட ஆதாரமான கோட்பாடுகளை விவரித்துக் காட்டியவர். நான் உங்களுக்கு எடுத்துக்காட்டி யிருக்கும் உதாரணங்கள் அற்பமானவைகளும் மிகவும் சாதாரணமானவைகளுமென்று சொல்லக்கூடும்; அது வாஸ்தவமே; ஆனால், அற்பமாயும் சாதாரணமாயுமுள்ளவிஷயங்களில்தான் ஆதாரமாயுள்ள கோட்பாடுகளை அறிந்து கிரஹிக்கக்கூடும்; ஆதாரமாயுள்ள கோட்பாடுகளை நீங்கள் நன்றாய்க் கிரஹித்துக் கொண்டால், அநேக ஜனங்களுக்குப் பிரயோஜனப்படும்படியாய் அவைகளைப் பிரயோகிப்பது சாத்தியமாகும் (கேளுங்கள்: கேளுங்கள்) ஸர்ஐஸாக் நியூடன் என்பவரின் சரித்திரத்தைப்பற்றிக் கேட்டிருப்பீர்களென்று நினைக்கிறேன். ஈடன் தோட்டத்திலுள்ள ஆப்பில் மரங்களிலிருந்து அம்மரங்கள் வைக்கப்பட்ட காலமுதல் பழங்கள் விழுந்துகொண்டேயிருந்தன. ஈடன் தோட்டத்திலுள்ள ஆப்பில்கள் பூமியில் விழுந்துகொண்டிருந்தனவா இல்லையா யென்று அறிவதற்கு பைபிலில் ஒன்றும் சொல்லப்படவில்லை; ஆனால், ஒரு பழம் மாத்திரம் பறிக்கப் பட்டதென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். (சிரிப்பு) அந்தக் காலத்திலிருந்து ஸர் ஐஸாக் நியூடன் காலம் வரையில் அவைகள் விழுந்துகொண்டே இருந்தன. ஆனால், இப்படி ஆப்பில்கள் விழுவதிலிருந்து ஸர் ஐஸாக் நியூடனுக்கு உதித்த எண்ணம் அதுவரையில் வேறெவருக்கும் தோன்றவில்லை. ஆப்பில் ஏன் விழுகிறது என்ற கேள்வியை அவர் தன்னையே கேட்டுக்கொண்டார். இந்தக் கேள்விக்கு மறுமொழியைத் தேடுங்கால், பூமியின் ஆகருஷண சக்தியைப் பற்றிய விதியை அவர் கண்டுபிடித்தார். இதனால், மானிட அறிவிலேயே ஒரு புரட்சி உண்டாயிற்று. பிரபஞ்ச முழுவதையும் இயக்கிவரும் இந்த மூலாதாரமான விதியானது சோதனைச் சாஸ்திர விஷயமாய்க் கண்டு பிடித்திருக்கப்பட்ட அம்சங்களில் மிகப் பெருத்ததாகும். இதனால் தெரியவரும் நீதி என்னவெனில், மிகவும் அற்பமான விஷயங்களிலிருந்தும் அதிமுக்கியமான சங்கதிகளைக் கண்டு பிடிக்கலா மென்பதேயாம்; இந்தக் காரணத்தைக் கொண்டுதான் நான் பார்வைக்கு சர்வ சாதாரணமாயுள்ள விஷயங்களை உதாரணமாக எடுத்துக்காட்டியது. சாத்தியமான வேறெந்த ஏற்பாட்டினாலாவது சூழ்ச்சினாலாவது உழைப்புக்கு ஏற்படமுடியாத ஒரு திறமையானது ஜனங்கள் சங்கமாய்ச் சேர்ந்து வேலை செய்வதனால் உண்டாகிறதென்பதை இந்த உதாரணங்களிலிருந்து நீங்கள் சுலபமாய் அறியலாம். நீங்கள் உலகமுழுவதும் சுற்றிப்பார்த்து, தினேதினே பரவிக்கொண்டுவரும் பெருங்

கைத்தொழில் ஏற்பாடுகளையும் வர்த்தக முறைகளையும் கவனித்தீர்களானால், ஒவ்வோரிடத்திலும் உழைப்புக்கு வாஸ்தவமான திறமையை உண்டாக்கி, நவீன காலங்களில் அதற்கு ஏற்பட்டிருக்கும் செல்வவுற்பத்திச் சக்தியை அதற்குக் கொடுத்தது சங்கமாய்ச் சேர்ந்து வேலைசெய்யும் பத்ததியே என்று நீங்கள் காண்பீர்கள். அல்லாமலும், காலம் செல்லச்செல்ல இவ்வுலகத்தில் நாகரீகம் அபிவிருத்தியாகும் பட்சத்தில் சங்கமாய்ச் சேர்ந்து வேலைசெய்யும் இந்த பத்ததியை இன்னும் அதிகமாய் அனுசரிப்பதற்குத் தூண்டுதல் விசேஷமாய் உண்டாகு மென்றும் உங்களுக்குத் தெரியவரும். காலை போஜனத்தின் போது நம்முடைய ரொட்டியை அறுக்கும் கத்தியைச் செய்து முடிப்பதற்கான கைத்தொழில்முறைக்குக் காரணபூதமாயிருந்த சங்கசக்தியைப்பற்றி ஒரு நிமிஷம் யோசித்துப் பாருங்கள். சுரங்கத்திலிருந்து வெட்டி யெடுத்தது முதல் இந்த உலோகமானது எத்தனை கைகள் மூலமாய் மாறியிருக்கிற தென்பதைக் கணக்கிட்டு, அதனுடன், அந்த உலோகம் எங்கிருந்து வெட்டியெடுக்கப்பட்டதோ அந்த இடத்தில் பிரவேசிப்பதற்கும் அதற்குப் பிறகு மேஜையின்மேல் பிரதிதினமும் சௌகரியமாய் உபயோகிக்கக்கூடிய ஓர் கருவியாக அது செய்து முடிக்கப்பட்ட வரையில் அதில் என்னென்ன வேலைகள் செய்யப் பட்டனவோ அவைகளிலும் சங்க சக்தியைக்கொண்டு செய்த உழைப்பைச் சேருங்கள். இந்த வேலையைச் செய்து இந்தச் சாமானை உற்பத்தி செய்வதற்காக உதவிபுரிந்த நபர்களின் சங்கியையானது அதைக் கணக்கிட முயலும் மனிதனுடைய மனது திக்பிரமை கொண்டு தியங்கும்படி அவ்வளவு அதிகமாயிருக்கும். உங்கள் மேஜையின்மேல் உபயோகிக்கும் தேத்தண்ணீரை உண்டாக்குவதில் அனுசரிக்கப்பட்ட பெருத்த வர்த்தக சங்க ஏற்பாடுகளைக் கவனிப்பீர்களாயின், இந்த போகசாதன பதார்த்தத்தை நமக்குக் கிடைக்கும்படி செய்வதற்காக எடுத்துக்கொண்ட உழைப்பானது சங்கமாய்ச் சேர்ந்து வேலைசெய்யும் பத்ததியைக் கொண்டு விசேஷமாய் ஒழுங்குபடுத்தப்பட்டதென்பதை அறிவீர்கள். இதைப்பற்றி விசாரணை செய்வதாக நீங்கள் முயல்வீர்களாயின், அந்தத் தேயிலையை உற்பத்தி செய்வதற்கு எத்தனைபேர் வேண்டியிருந்ததென்பதையும் சங்கசக்தியைக் கொண்டு எவ்வளவு தூரம் உழைக்கவேண்டி யிருந்ததென்பதையும் சரியானபடி கணக்கிட்டறிய முடியுமோவென்று நிராசை கொள்வீர்கள். பொருளுற்பத்தி முழுவதையும் தன் வசப்படுத்திக்கொண்டு உன்னதமான நாகரீகநிலைக்கு ஒரே அடிப்பீடமாய் விளங்கும் ஆற்றலமைந்த சாதன மென்று சொல்லக்கூடியது சங்கமாய்ச் சேர்ந்து வேலைசெய்யும் முறையேயாம் (கேளுங்கள்; கேளுங்கள்).

அல்லாமலும், மேலேகண்டபடி கைத்தொழிலுக்காக உழைத்திருப்பவர்களில் பலர், பலவிஷயங்களில் அக்கறைகொண்டு வேலைசெய்திருக்கிறார்கள்; கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் இவ்வித வெவ்வேறான விஷயங்களை ஒப்படி நிறைவேற்றி வந்தார்களென்று நீங்கள் நினைத்தீர்களானால், சங்க

மாய்ச் சேர்ந்து வேலைசெய்வதே அவர்கள் நம்பியிருந்த சக்தி யென்று நீங்கள் காண்பீர்கள். இதன் முடிவு என்னவெனில், நீங்கள் கைத்தொழில் வகுப்பாரின் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களா யிருந்தாலுஞ்சரி, உங்கள் பாதுகாப்புக்கும் உங்களுடைய வேலைகளைச் செய்து முடித்துக்கொள்வதற்கும் இந்த ஆயுதத்தை நம்பியிருந்தாலொழிய நீங்கள் க்ஷீணித்துப்போக வேண்டிவரும் (கேளுங்கள், கேளுங்கள்). கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் சம்பந்தப்பட்ட பெருத்த அம்சங்கள் இரண்டுள; அவைபே மூலதனமும் உழைப்பும். இந்த இரண்டு அம்சங்களும் ஒரு விதத்தில் ஒன்றுக்கொன்று ஒத்தாசை செய்யக்கூடியவையாயிருந்தாலும் ஒரு விதத்தில் நேர் விரோதமான உரிமையுடையவைகளாகவுமிருக்கின்றன. அதெப்படியென்றால், செல்வத்தை உண்டாக்குவதற்கு இவ்விரண்டு அம்சங்களும் ஒத்துழைக்கவேண்டியது அவசியமாயினும், அந்த செல்வத்தைத் தங்களுக்குள் பங்கிடத்தொடங்கும் பொழுதே அவைகளுக்குள் வித்தியாஸம் ஏற்பட்டு விடுகிறது. இங்கும் ஒன்று சேரும் வழக்கமும் சங்கமாய்ச்சேர்ந்து வேலைசெய்யும் வழக்கமும்தான் உதவிபுரிகின்றன. மூலதனத்தைவைத்துக்கொண்டிருப்பவர்கள் ஒன்றுசேருவதில்தான் தங்களுக்குச் சக்தி ஏற்படுகிறதென்பதை நன்றாய் அறிந்திருந்தார்கள். பெருத்த ரெயில்வே கம்பெனிகள், பெரிய கப்பற் கைத்தொழில்கள், உலக முழுவதிலுமுள்ள பெரும் வர்த்தகக் கூட்டங்கள், இவைகளெல்லாம் வரவர ஒன்று சேருவது என்னும் கோட்பாட்டையே அனுசரித்து வந்தன. மேலேகண்ட வகுப்பார்கள் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் தங்களுக்கு ஒரு சக்தி ஏற்படவேண்டுமானால், அது தாங்கள் எவ்வளவுதூரம் எவ்வளவு ஐக்கியத்துடன் ஒன்று சேரக்கூடுமோ அதையே பொறுத்ததாகு மென்பதை உணர்ந்திருந்தார்கள். ஆகவே வேறுபாடு ஏதேனும் ஏற்பட்டால், ஒரேவிதமான பாத்தியதையுள்ள சகலரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உழைக்கிறார்கள். மூலதனம் வைத்திருப்பவர்கள் ஒன்று சேருவதன் அனுகூலத்தை எவ்வளவு நுட்பமாய் அறிந்திருக்கிறார்களென்பதை 'ட்ரஸ்ட்ஸ்' என்னும் வர்த்தக சம்பந்தமான மேனாட்டு ஏற்பாட்டின் சரித்திரத்திலிருந்து ஒருவாறு அறியலாம். இவைகளுக்குள், 'ஸுகர் ட்ரஸ்ட்' என்னும் இரும்பு சம்பந்தமான ட்ரஸ்ட் ஏற்பாட்டுக்கு, பிரபஞ்சத்தில் எவ்வெவ்விடத்தில் இரும்பு வியாபாரம் நடந்து வருகிறதோ அவ்விடங்களிலெல்லாம் ஏராளமான சாய்காலிருக்கிறது. எண்ணெய் சம்பந்தமான பெரும் ட்ரஸ்ட் ஏற்பாடானது உலகமுழுவதிலுமுள்ள எண்ணெய்த்தொழிலைத் தன்கைவசப்படுத்திக் கொண்டிருக்கிறதனால், அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேசத்தின் கவர்ன்மெண்டார் மட்டுக்கு மிஞ்சி வளர்ந்துவிட்ட இந்த பூதத்துக் கெதிராய்த் தங்களுடைய ஸ்வாதீனத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கே போராடவேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது. இந்த ட்ரஸ்டின் சரித்திரத்தினால், மூலதனம் வைத்திருப்பவர்கள் தாங்கள் சங்கமாய்ச் சேர்ந்துழைப்பதனாலுண்டாகக்கூடிய அனுகூலத்தை எவ்வளவு நன்றாய் அறிந்திருந்தார்களென்று தெரியவரும். இது

இப்படியிருக்க, உழைப்பாளியும் தன்னுடைய சுதந்தரங்களைக் காத்துக்கொள்வதற்காக சங்கமாய்ச் சேரும் பத்ததியை அனுசரித்து வந்தான்; இதன் பலனாகத்தான் நாகரீகமடைந்த உலகமுழுவதும் பரவியுள்ள ட்ரேட் யூனியன்ஸ் என்னும் வர்த்தக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இப்பொழுது உழைப்பாளிகள் கண்டிதமான ஒழுங்கினால் கட்டுப்படுத்தப்பட்டவர்களாய் மூலதனம் வைத்திருப்பவர்களுக்கு எதிர்நின்று போராடத் தயாராயிருக்கிறார்கள். மூலதனம் வைத்திருப்பவர்களால் உழைப்பாளிகளின் பாத்தியதைகளுக்குக் குந்தகம் நேரிடாதபடி பின்னவர்களைக்காப்பதும், அதிககூலி வீதங்கள் கொடுக்கவேண்டுமென்றும் வேலைசெய்யும் பொழுது இன்னும் சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் போராடுவதும், தாங்கள் கேட்பவைகளையெல்லாம் கொடுக்கும்படி தங்களுடைய கட்டுப்பாட்டினால், 'வேலைநிறுத்தம்' எனப்படும் துக்ககரமான உபாயத்தினால் மூலதனம் வைத்திருப்பவர்களை வற்புறுத்துவதும் உழைப்பாளிகளின் வேலையாம். மூலதனம் வைத்திருப்பவர்கள் ஒரு பக்கம் கட்டுப்பாடாய் ஒன்று சேர்ந்திருக்க, உழைப்பாளிகளும் மற்றொரு பக்கத்தில் அதேமாதிரி ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்; ஆனால் இந்த ஏற்பாட்டிலே துரதிர்ஷ்டமான அம்சம் என்னவெனில், மூலதனமும் உழைப்பும் தனித்தனியே நின்று தங்களுடைய நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டி யிருப்பதால், எந்த இரண்டு பாபத்துகள் ஐக்கியப்படுவது தனி நபர்களின் க்ஷேமத்தையும் ஜாதீய புஷ்கலத்தையும் உண்டாக்குவதற்கு அவசியமாமோ அவ்விரண்டு பாபத்துகளும் ஒன்றுக்கொன்று விரோதமாய் நிற்பதேயாம் (கேளுங்கள்; கேளுங்கள்.) நீங்கள் தற்போது அனுஷ்டித்துவரும் பத்ததியில் இதுவே பெருங்குறையா யிருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு சாதாரண அறிவுள்ள எந்த மனிதனுக்கும் தோன்றக்கூடிய வழிகள் இரண்டேயுள. முதலாவது, நாட்டிலுள்ள செல்வம் ஜன சமூகத்தில் எல்லாருக்கும் சமமாயிருக்க வேண்டுமென்று வாதாடும் அபேதவாதிகளின் வழியாகும். இதைப்பற்றி வரவர நாம் அதிகமாய்க் கேள்விப்படுகிறோம். இந்தவழி என்னவெனில், பிரபஞ்ச முழுவதிலும் மூலதனம் வைத்திருப்பவர்களையெல்லாம் ஒழித்து விடுவதேயாம். இப்படிச் செய்துவிட்டால் அவர்களுடைய ஸ்தானத்தை யார் வகிப்பது? இதற்கு அபேதவாதியின் மறுமொழி என்னவென்றால், 'ஸர்க்காரே ஸகலத்துக்கும் சொந்தக்காரர்களாய் ஒவ்வொரு மனிதனும் தனக்கு வேண்டியபடி மூலதனத்தை உபயோகிக்க வேண்டும்' என்பதே. ஐர்லாண்ட் தேசத்துக் குடியானவர்களுக்கு இந்த பத்ததி சுத்தமாய்ப் பிடிக்கவே பிடிக்காதென்று நான் நினைக்கிறேன். (கேளுங்கள்; கேளுங்கள்.) இதற்குமுன் நம்முடைய வேலைகளில் ஸர்க்காரார் போதுமானவரையில் தலையிட்டிருக்கிறார்கள்; ஐர்லாண்ட் தேசத்துக் குடியானவர்கள் ஏராளமாய் நஷ்டப்பட்டும் பகீரதப் பிரயத்தனம் செய்து தங்கள் தாங்கிக்கொண்ட நிலத்தின் சொத்துவத்தை இஷ்டத்துடன் இதரர்களுக்கு விட்டுவிடும் காலம் நேருவதற்கு இடமேயில்லை (கேளுங்கள்; கேளுங்கள்.)

இதைப்பற்றி நான் அதிகமாய்த் தர்க்கிக்கப் போவதில்லை. ஜனசமூக அபேத வாதிகளின் கோட்பாட்டுக்கு மேன்மேலும் உண்டாகிவரும் வெற்றியினால் பிரபஞ்சத்திலுள்ள இதர தேசங்களுக்குப் பெரும் ஆபத்து நேரிடக் கூடும்; ஆனால் ஐர்லாண்டிலிருப்பவர்களுக்கு அவ்வித ஆபத்து நேரிடுவதற்கு வெகுகாலம் செல்லுமென்று நினைக்க நான் சந்தோஷிக்கிறேன்; ஐர்லாண்டின் நிலைமை இப்படியே யிருக்குமென்று கோருகிறேன். மூலதனத்துக்கும் உழைப்புக்குமுள்ள விரோதத்தை ஒழிப்பதற்கு இது ஒரு வழியாகும். இதற்கு மற்றொரு வழியுமுண்டு; அதுதான் கூட்டுத்தொழில் என்பது. உழைப்பாளிகளிடத்திலேயே மூலதனமும் இருக்கும்படி செய்வதனால், உழைக்காமல் மூலதனம்மாத்திரம் வைத்திருக்கும் வகுப்பாரை ஒழித்துவிட்டு, இருதிறத்தாரையும் ஒன்றாக்கிவிடுவதனால் அவர்களுக்குள்ளிருந்த விரோதத்தை அழித்துவிடவேண்டும் (கேளுங்கள்; கேளுங்கள்.) இப்படி செய்யும்பட்சத்தில், உற்பத்தி செய்யப்பட்ட பொருளைப் பங்கிடுவதில் எவ்வித சச்சரவும் நேரிடாது. கூட்டுத்தொழில் பத்ததியிலுள்ள விசேஷ அனுகூல மென்னவெனில், உலகத்திலிருக்கும் கவர்ன்மெண்டாரை யெல்லாம் இப்பொழுது கலவரப்படுத்திக்கொண்டிருக்கும் கஷ்டமான விஷயங்களனைத்தும் இதனால் ஒழிந்துபோமென்பதே. தொழிலாளியினுடைய உழைப்பின் பலனுக்கு வேறெந்த பத்ததியிலும் ஏற்படமுடியாத ஒரு பாதுகாப்பும் உத்தரவாதமும் ஐக்கியத்தினாலும் சங்கசக்தியினாலும் ஏற்படுகின்றன. உங்களுக்கு ஐர்லாண்டில் இந்த பத்ததியைப்பற்றி சிறிது அனுபோகம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பரவச்செய்வதற்காக நீங்கள் இருபது வருஷத்துக்கு மேலேயே உழைத்து வந்திருக்கிறீர்கள்; வரவர கூட்டுத்தொழிலைப் பற்றிய எண்ணமானது ஜனங்களின் மனதில் பதியத் தொடங்கி, இப்பொழுது அவர்கள் அதன் கோட்பாடுகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிறார்கள். இந்த எண்ணத்தை அவர்களில் அநேகர் வெகு திறமையுடன் நிறைவேற்றியு மிருக்கிறார்கள். இன்னும் நீங்கள் வெகுதூரம் சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கும்; ஆனால், நீங்கள் அபிவிருத்தி யடைந்துதான் வருகிறீர்கள்; கூட்டுத்தொழில் கருத்தை ஆதாரமாகவுடையசங்கஏற்பாட்டை வருஷத்துக்கு வருஷம் அதிக கட்டுப்பாடுடையதாக்கவும் பலமுள்ளதாகவும் செய்து வருகிறீர்கள் (கேளுங்கள்; கேளுங்கள்.) இத்தேசத்தில், குடியானவர்களின் பாத்தியதைகள் மற்றவர்களின் பாத்தியதைகளைக் காட்டிலும் முக்கியமானவை; இத்தேசஜனங்களின் செல்வநிலையானது பயிரிடும்தொழிலின் அபிவிருத்தியையும் அதனால் குடியானவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அதிக லாபத்தையும் பொறுத்ததாகும் (கேளுங்கள்; கேளுங்கள்.) இத்தேசத்தில் ஒவ்வொரு வகுப்பாரின் க்ஷேமமும் குடியானவர்களின் க்ஷேமத்தையே ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. இது இப்படி யிருப்பதனாலும், சங்கமாய்ச்சேர்ந்துவேலைசெய்வதிலும் ஒன்றாய்ச்சேர்ந்து உழைப்பதிலும் நான் மேலே விவரித்தபடி அனுகூலங்கள் இருப்பதனாலும், பயிரிடும் வகுப்பார் இந்த பத்ததியினால்

ஏற்படும் ஒவ்வொரு பிரயோஜனத்தையும் உபயோகித்துக்கொள்வது அவர்களுடைய நன்மையை உத்தேசித்து அத்தியாவசியமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. ஐர்லாண்ட் தேசத்துக் குடியானவர்கள் மாத்திரமேயல்லாமல், அத்தேச ஜனங்கள் மொத்தமும் க்ஷேமமடையும் பொருட்டு நீங்கள் இந்த பத்ததியை சாத்தியமானவரையில் அனுசரிப்பது உங்களுடைய கடமையாகுமென்று தெளிவாய் ஏற்படுகிறது (கேளுங்கள்; கேளுங்கள்).

கூட்டுத்தொழில் சங்கங்கள் சம்பந்தமான விதிகள் தேச முழுவதும் இப்பொழுது நன்றாய்த் தெரிந்திருக்கிறது; ஆகவே இந்தக் கூட்டுத்தொழில் பத்ததியை அனுசரித்து வேலை நடத்துவதாக முன்வரும் நபர்கள், தங்கள் எண்ணம் காரியசித்தி யடையவேண்டுமானால், என்னென்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி சில வார்த்தைகள் கூறுகிறேன். முதலாவது, இவர்கள் புத்திசாலிகளாய், கைத்தொழில் முறைகளிலும் வர்த்தக முறைகளிலும் ஸர்வ சிலாக்கியமானவைகளை தெரிந்துகொள்ளக் கூடியவர்களாயிருப்பது அவசியம். புத்தி விஷயத்திலே, ஐர்லாண்ட் தேசத்துக் குடியானவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் யாதொரு குறைவுமில்லை; ஏனெனில், அதேவகுப்பைச் சேர்ந்தவர்களாய் உலகமுழுவதிலுமுள்ள ஜனங்களுக்குள் அவர்களே மிகவும் சிறந்தவர்களா யிருக்கிறார்கள் (கேளுங்கள்; கேளுங்கள்). இது கில்கெனியைச் சேர்ந்த செல்வம்நிறைந்த ஜில்லாக்களில் மாத்திரமே யல்லாமல் ஐர்லாண்டிலுள்ள வறுமைமிகுந்த பிரதேசங்களில்கூட வாஸ்தவமே. வடபாகத்திலுள்ள மலைப்பிராந்தியங்களில்கூட பிரபஞ்சத்தில் அதி உன்னத நிலையிலுள்ள வர்த்தக வகுப்பாருக்கும் கௌரவத்தைக்கொடுக்கத்தக்க ஞானமும், அக்கறையும், சூக்ஷ்ம புத்தியும் காணப்படுகின்றன (கேளுங்கள்; கேளுங்கள்). சிலவாரங்களுக்குமுன் அவர்களுடைய சங்கங்களி லொன்றின் மீடிங்குக்கு நான் போயிருந்தேன்; அந்த சங்கத்தில் 400-மெம்பர்களுக்கு மேலே இருந்தார்கள்; அவர்களில் ஏறக்குறைய ஒவ்வொருவரும் அங்கு வந்திருந்தார். அந்த ஜில்லாவிலுள்ள ஜனங்கள் பரம ஏழைகள்; ஆனால் ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியதும் பரிதாபத்தை உண்டாக்கக் கூடியதுமான சுவாதீனப்பான்மையும் மனோதிடனும் சிறப்புற்ற நோக்கமும் அவர்களிடத்தில் விளங்கின. போனவருஷ வெள்ளத்தின் போது இவர்களில் ஒருவருடைய நிலம் முழுவதும் சமுத்திரத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டது. உடனே இந்த கோரமான விபத்தைப்பற்றிய முழு விவரங்களும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு பொது ஜனங்களுக்குள் அனுதாபமும் தர்மசிந்தையு முள்ளவர்களெல்லாம் இந்த சந்தர்ப்பத்தில் அன்புடன் உதவிபுரிய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப் படுமென்று நான் நினைத்தேன். அப்படி யாதொன்றும் செய்யப்படவில்லை. நாணயத்திலும் கெட்டுப்போய்விட்ட இந்த மனிதனுக்காக அக்கம்பக்கத்திலுள்ளோர் ஒரு நிதி வசூலித்து அதைக்கொண்டு அவனுக்கு வேறொரு நிலம் வாங்கிக்கொடுத்து அவன் மறுபடியும் சுவாதீனமாக ஜீவனம் நடத்தும்படியாய்ச் செய்தார்கள் (கேளுங்கள்; கேளுங்கள்).

ஐர்லாண்டின் பெரும்பாகத்தில் அவசியமாய் வேண்டியிருக்கும் குணமானது விழிப்பாயிருத்தலேயாம். தேசமுழுவதிலும் நீங்கள் ஏற்படுத்தியுள்ள சங்கங்களின் ரிடர்ன்களையும் ரிபோர்ட்டுகளையும் பார்க்கும்போது, அநேக ஜில்லாக்களில் கமிட்டியின் வேலைமுழுவதும் சங்கத்தை நிர்வஹிக்கும் காரியமும் வாஸ்தவத்தில் இரண்டு அல்லது மூன்று நபர்களால்தான் செய்யப்படுகிறதென்று ஏற்படுகிறது. அந்தக் கம்மிட்டிகளிலிருக்கும்படி தெரிந்தெடுக்கப்பட்ட நபர்கள் தங்களைக் கௌரவப்படுத்தும்பொருட்டு அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் தங்களை நியமித்திருப்பதாகக் கருதுகிறார்களென்று எண்ணுகிறேன். தங்களுடைய பொறுப்பு இன்னதென்பதைப்பற்றி அவர்கள் கிஞ்சித்தும் கவனிக்கவில்லை என்றும் தோன்றுகிறது; தங்கள் வேலையைப்பற்றி அவர்கள் எவ்வித சிரமும் எடுத்துக் கொள்ளுகிறதில்லை. இந்த வருஷத்தில் நடந்த மீடிங்குகளில் அவர்கள் ஹாஜராயிருந்த நாட்கள் மிகவும் கொஞ்சமே. இதனால் விளைந்ததென்னவெனில், வேலை நடத்தப்பட்டுவந்த இடங்களிலெல்லாம், கபடில்லாமல் நம்பிக்கையாய் தங்கள் கடமையை நிறைவேற்ற இஷ்டப்பட்ட இரண்டு மூன்று நபர்கள்தான் அவ்வேலையைச் செய்துவந்தார்கள். நீங்கள் செய்யவேண்டிய மாறுதல்களிலொன்று என்னவென்றால், உங்களுடைய கம்மிட்டிகளுக்கு நபர்களைத் தெரிந்தெடுக்கும்பொழுது, கம்மிட்டியிலிருந்து வேலைசெய்வதாக வாக்குக் கொடுக்கையில் தாங்கள் ஏற்றுக்கொள்ளும் பொறுப்பு இன்னதென்பதை அறிந்திருக்கும் நபர்களையே பொறுக்கியெடுக்க வேண்டும். அக்கம்பக்கத்தி லுள்ளவர்களின் முக்கியமான பாத்தியதைகளெல்லாம் அவர்கள் வசத்தில் விடப்படுகின்றன; அவர்கள் கையில் அக்கம்பக்கத்திலுள்ளவர்களால் நம்பி ஒப்புவிக்கப்பட்டிருக்கிற அலுவல்களையெல்லாம் அவர்கள் கபடில்லாமல் செய்யவேண்டும்.

மற்றொரு அம்சத்திலும் நீங்கள் அபிவிருத்தி யடையவேண்டும்; அதாவது, கமிட்டிகளின் வேலையை நிர்வஹிப்பதிலும் சங்கங்களின் வேலையை நடத்துவதிலும் முழுவதும் சங்கங்களின் அனுகூலத்தை உத்தேசித்தே நடப்பது அத்தியாவசியமாகும். இன்று சங்கங்களின் பிரதி நிதிகளாய் இங்கு கூடியிருப்பவர்களைப்பற்றி நான் தூஷணையாய் ஒன்றும் சொல்லவில்லை; ஏனெனில், கில்கெனியிலுள்ள சங்கங்களின் நிலமையைக்குறித்து எனக்கு நன்றாய்த்தெரியும். ஆனால் சங்கங்களை நிர்வஹிப்பவர்கள் சங்கங்களுக்கு வாஸ்தவத்தில் அனுகூலமானதென்று தங்களுடைய புத்திக்குத் தோற்றும் மார்க்கத்தைப் பேணாமல் அவரவர்களுடைய ஸ்வப்பிரயோஜனங்களை உத்தேசித்து வேலைசெய்கிறார்களென்று நான் காண்கிறேன். சங்கத்தின் கம்மிட்டிக்கு ஒருவரைத் தெரிந்தெடுக்கும்பொழுது, அவருடைய பகையையோ விசுவாசத்தையோ காட்டுவதற்காக அப்படித் தெரிந்தெடுப்பதில்லை. எவனொருவன் சங்கத்தின் ஊழியத்தில் மானேஜர் ஸ்தானத்துக்கு நியமனம் செய்யும்பொழுது சங்கத்தின் அனுகூலத்தைத் தவிர வேறெந்த பிரதிபலனையாவது உத்தேசித்துச் செய்கிறானோ அவன் நம்பிக்கைத் துரோகம் செய்தவனாவான்

(கேளுங்கள்; கேளுங்கள்). எவன் தன்னுடைய சொந்தத்தை விருப்பு வெறுப்புகளை அனுசரித்து சங்கத்தின் அனுகூலத்துக்கு விரோதமாய் நடக்கிறானோ அவனுடைய நடத்தை ஸ்பஷ்டமாய் நம்பிக்கைத் துரோகமாகு மென்பதை உங்களுடைய சங்கங்களை நிர்வஹிக்கும் கம்மிட்டிகள் உணரும்படி நீங்கள் செய்யவேண்டும். இதேகாரணத்தினால் சிறிதுகாலத்துக்குமுன் ஒருசங்கம் அழிந்துபோனதையும் மற்றொருசங்கம் க்ஷீணமடைந்து வருவதையும் காண எனக்கு மிகவும் விசனமா யிருந்தது. உங்களுடைய வெண்ணெய்த் தொழிற்சாலைகளில் மிகச்சிறந்தவைகளுள் ஒன்றின் மானேஜர் அடுத்தாப்போல் வேறொரு வேலையையும் எடுத்துக்கொண்டார். அவர் விவாகம் செய்துகொண்டு வெண்ணெய்த் தொழிற்சாலைக்கு ஐந்து அல்லது ஆறுமைல் தூரத்தில் வசிக்க ஆரம்பித்து, தமக்குச் சௌகரியமா யிருக்கும்பொழுது தொழிற்சாலையில் புகுந்து வேலை என்னமாய் நடக்கிறதென்று பார்த்து வந்தார். சிறிது காலத்துக்குள், கணக்குகளெல்லாம் தாறுமாறாய் இருப்பதாக ஏற்பட்டு, சங்கத்தை அப்படியே விற்று விடுவதைத்தவிர அதுவிஷயமாக வேறுவிதமாய்ப் பிரவர்த்திப்பது சாத்தியமில்லையென்று மெம்பர்களுக்குத் தெரியவந்தது. இந்த விபத்துக்குக் காரணமென்னவென்பது சங்கத்தைச்சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தெளிவாய்ப் புலப்பட்டது. இது பல வருஷங்களாக நடந்துகொண்டே வந்திருக்கிறது; ஸ்தாபனம் முழுவதுமே தினே தினே க்ஷீணித்துக்கொண்டு வந்திருப்பதாக கம்மிட்டியார் அறிந்தார்கள். அப்படியிருந்தும், சம்பந்தப்பட்ட நபரிடத்தில் அவர்களுக்கு மதிப்பிருந்ததால் இப்படி இனிமேல் நடக்கக் கூடாதென்று சொல்ல அவர்களுக்குத் தைரிய முண்டாகவில்லை. இன்னும் கேலிக்கிடமானதும் நகைப்பை யுண்டாக்கக் கூடியதுமான விஷயமென்னவென்றால், ஒரு ஜெனரல் மீடிங்குகூடி அதில் வந்திருந்த ஒவ்வொருவருக்கும் இந்த சங்கம் அழிந்துபோகும் நிலமையி லிருப்பதற்குக் காரணம் இன்னதென்று தெரிந்திருந்தும், பெரும்பாலோர் விவகாரம் முன்னிருந்த நிலமையிலேயே இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப் பட்டதேயாம். இதற்கு என்னகாரணம்? அயலானுடைய பிள்ளையை வேலையைவிட்டு நீக்கிவிட அவர்களுக்கு இஷ்டமில்லாமலிருந்ததே (சிரிப்பு). அயலானுடைய பிள்ளையா யிருப்பதால் நான் அவனுக்கு ஆட்சேபனை செய்யவில்லை; ஆனால் அயலானுடைய பிள்ளை ஒரு சங்கத்தை நாசமாக்குவதற்கு நான் ஆட்சேபனை செய்கிறேன் (கேளுங்கள்; கேளுங்கள்). முக்கியமானகேள்வி என்னவெனில், அயலானுடைய பிள்ளை ஒருவன் சங்கத்தை நிர்வஹித்து வருகிறானென்ற காரணத்தைக் கொண்டே அந்தசங்கம் அழிந்துபோவதற்கு இடங்கொடுக்கப் போகிறீர்களா இல்லையா என்பதேயாம். அயலானுடைய பிள்ளையினிடத்திலிருக்கும் மதிப்புக்காக தன்னுடைய சங்கம் நாசமாய்ப் போவதற்கு இடங்கொடுக்கும் ஒருவன் தன்னிடத்தில் நம்பி விடப்பட்ட ஒரு விஷயத்தில் மோசம் செய்தவனாவான். நான் இப்பொழுது முக்கியமாய்க் கம்மிட்டியைப் பற்றியே பேசுகின்றேன்; ஏனெனில், ஒரு சங்கம் காரியசித்தியுடன் வேலைசெய்வதும் செய்யாததும் அதன் கம்மிட்டி மெம்பர்களையே பொறுத்ததாகும்.

சங்கத்தின் மெம்பர்களைப்பற்றிப் பேசுங்கால், அவர்கள் சங்கத்துக்கு அனுகூலமாகவே யிருக்கும்படி முயலவேண்டும் (கேளுங்கள்; கேளுங்கள்). எவனொருவன் தன்னுடைய சங்கத்துக்கு அனுகூலமாய் வேலைசெய்து அதை ஆதரிக்கத் தயாரா யிருக்கவில்லையோ அவன் அதில் மெம்பராகச் சேராமலே யிருப்பது சங்கங்களுக்கு எவ்வளவோ நன்மை பயக்கும். ஒரு சங்கத்தில் நூறுமெம்பர்களிருந்து அவர்களில் பாதிபெயர்கள் அதற்குவிரோதமாயிருப்பதைவிட அதற்கு அனுகூலமாய் வேலைசெய்யும் இருபது அல்லது முப்பது மெம்பர்கள் மாத்திரமே இருந்தால்கூட அந்த சங்கம் ஏராளமான அபிவிருத்தி யடையும். துரோகம் செய்யக்கூடிய ஒருவனிருந்தாலும் ஆபத்துக்கிடமானதாகு மென்பதில் சந்தேகமில்லை. கோழி வாத்து முதலியவைகளை வளர்ப்பதற்கான ஒரு சங்கத்தில் மெம்பராயிருந்த ஒருவன் அந்த சங்கத்தின் விதிகளை அனுசரிப்பதைவிட்டு அந்த ஜந்துக்களின் விலையையோ அவைகளுடைய முட்டைகளின விலையையோ உயர்த்துவதற்காக அந்த சங்கத்தை உபயோகித்ததை ஒரு உதாரணமாக வைத்துக்கொள்ளலாம். இவன் கூட்டுத்தொழில் கருத்துக்கே துரோகம் செய்தவனாகிறான்; சங்கத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து செய்யவேண்டிய ஸர்வசிலாக்கியமான விதி என்னவெனில், இப்படிப்பட்ட மெம்பரை யாதொரு யோசனையுமில்லாமல் தள்ளிவிட வேண்டுமென்பதே (கேளுங்கள்; கேளுங்கள்). அந்தமெம்பர் ஜனசமூகத்தின் அனுகூலத்துக்கும் லாபத்துக்கும் விரோதமாய்த் தன்னுடைய சொந்த லாபத்தின் பொருட்டே சங்கத்தை உபயோகிக்கிறானாகையால் அவனால் சங்கத்துக்கு நிச்சயமாய் ஆபத்து விளையும். உங்களுடைய வெண்ணெய்த் தொழிற்சாலைகளில்கூட சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களனைவரும் அதற்கனுகூலமாகவே உழைக்கும்படிசெய்வது கஷ்டமாயிருக்கிறது. இவ்வித கஷ்டங்களையெல்லாம் நீங்களே கண்டுபிடித்து நிவர்த்திக்கவேண்டும். மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பிரதி ஸ்தாபனத்திலும் கஷ்டங்கள் இருந்துகொண்டுதா னிருக்கின்றன; காலமிருக்கிறவரையில் இக்கஷ்டங்கள் இருந்துகொண்டுதானிருக்கும். உங்களுடைய சங்கங்களையும் அவைகளுக்கு ஆதாரமாயுள்ள சங்க ஏற்பாட்டையும் சாத்தியமானவரையில் குறைவற்றவையாய்ச் செய்வதற்கும், கஷ்டங்கள் நேரும்போதெல்லாம் அவைகளுடன் ஈடுகொடுப்பதற்கும், தினே தினே கூட்டுத்தொழில் கோட்பாடுகளைப்பற்றிய அறிவை முற்றச்செய்து குடியானவர்களின் நிலைமையைச் சீர்திருத்துவதற்காக இக்கோட்பாடுகளை எவ்விதமாய் உபயோகிக்கலா மென்பதைத் தெரிந்துகொள்வதற்கும் ஐர்லாந்திலுள்ள நீங்கள் ஊக்கத்துடன் உழைக்கவேண்டும். இவைகளையெல்லாம் நீங்கள் செய்து தேசத்திலுள்ள குடியானவர்களுக்குள் கூடிமுயலும் வழக்கம் விருத்தியானால், பயிரிடும் தொழிலே தேசத்தின் முக்கியமான தொழில் என்று ஏற்பட்டு (கேளுங்கள்; கேளுங்கள்) ஐர்லாண்ட் தேசவாசிகளின் க்ஷேமாபிவிருத்தியைப் பாதிக்கக்கூடிய சகல பெருத்த விஷயங்களிலும் ஞானமும் புத்தியும்படைத்த அத்தேசத்துக் குடியானவனுடைய அபிப்பிராயமானது தக்க கௌ

ரவத்துடனே ஏற்றுக்கொள்ளப்படும் காலமும் வருமென்று நான் உறுதியாய்க் கூறுவேன் (கேளுங்கள்; கேளுங்கள்). நீங்கள் படிப்படியாய் இந்த ஸ்திதியையடைந்து வருகிறீர்கள்; ஆனால் இந்த ஏற்பாட்டுக்கவசியமான கோட்பாடுகளையும் விதிகளையும் நீங்கள் ஸ்திரியமாய் அனுசரிப்பதுமல்லாமல் உங்களுடைய சொந்த அனுகூலத்தை உத்தேசித்தாவது விருப்பு வெறுப்புகளை ஆதாரமாகக் கொண்டாவது வேலைசெய்வதை ஒழிக்கவேண்டும். வர்த்தகமுறையில் மனச்சாட்சியுடன் வேலை செய்யும் வழக்கத்தை நீங்கள் பின்பற்றி வந்தால் உங்களுக்கு அதனால் லாபமும் அனுகூலமும் உண்டாவதைத்தவிர உங்கள் ஜாதீய ஆஸ்தியையே ஏராளமாய் விருத்தி செய்ததாகும் (கேளுங்கள்; கேளுங்கள்). கில்கெனியிலுள்ள உங்கள் சங்கங்களுக்கு மாத்திரமே நான் மேலே சொன்னவையெல்லாம் விசேஷமாய் அவசியமானவையென்று நான் நினைக்க இடமில்லை; ஆனால், இவ்வித கஷ்டங்கள் இது வரையில் நேராவிட்டாலும் இனிமேல் நேரக்கூடுமாகையால், இவைகளைப்பற்றிப் பேசுவது நலமென்று எனக்குத் தோற்றியது. மிகவும் நன்றாய் நிர்வஹிக்கப்பட்டுவரும் சங்கத்தில்கூட சீர்கேடான ஒரு அம்சம்தோன்றி அதனால் அந்த சங்கம் நிலைத்திருப்பதே கஷ்டசாத்தியமாய் விடலாம்; ஆகையினால் இன்ன ஆபத்து நேரக்கூடுமென்று முன்னெச்சரிக்கையாயிருப்பதே அதனின்றும் தப்புவதற்கு ஆயத்தமாயிருப்பதாகும் (கரகோஷம்).

நீடாமங்கலத்தில் 1911 ஞு மேமீ 28, 29-ம் தேதிகளில் நடந்த முதலாவது தஞ்சாவூர் ஜில்லா கூட்டுத்தொழிலாளரின் கான்பரென்ஸுக்கு வரவேற்புக் கம்மிட்டியின் சேர்மனாயிருந்த ராவ் பகதூர் வி. கெ. இராமானுஜாசாரியார் பி. ஏ. அவர்களால் படிக்கப்பட்ட வந்தனோபசார பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

ஐக்கிய நாணயம்.—அநேகமாய் நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படியைக்கொண்டே ஜீவிக்கும் ஜனங்களுக்கு அப்போதைக்கப்போது முன்னதாகப் பணம் வேண்டி யிருக்கும் என்பது சகலருக்கும் தெரிந்த விஷயமே. அவர்கள் விதையும் உழவுமாடுகளும் வாங்கவேண்டும்; எருவைச் சேகரித்துக்கொள்ளவேண்டும்; ஸர்க்கார் கிஸ்தியைச் செலுத்தவேண்டும். அவர்களுக்குள் அநேகருக்கு கையில் எப்பொழுதும் பணமிருப்பதில்லை; ஆகவே யாரிடத்திலாவது முன்னதாகப் பணம்வாங்கி அதை அறுப்புக்குப்பிறகு திருப்பிக் கொடுக்கவேண்டி யிருக்கும். இப்படி கடனாக வாங்கவேண்டிய தொகைகள் அநேகமாய் அற்பதொகைகளாகவே யிருக்கும்; ஆனால் சாதாரணமாய் வட்டி வியாபாரி இவைகளுக்கு உயர்ந்த வட்டி வீதங்கள் கேட்கிறான். பணமும் தேவையான சமயத்தில் அகப்படுகிறதில்லை. வட்டி வியா

பாரியானவன் மொத்தத்தொகையையும் ஒரே தடவையாய்த் திருப்பிவிட வேண்டுமென்று வற்புறுத்துவதுமல்லாமல், குறித்த சிலகாலத்துக்குமுன் அதைத் திருப்பிக் கொடுக்கக்கூடாதென்றும் நிபந்தனை ஏற்படுத்திக்கொள்ளுகிறான். கிராமத்தார்கள் ஒன்றுசேர்ந்து சொற்ப பங்கு மூலதனத்துடன் ஒரு ஐக்கிய நாணயச்சங்கத்தை ஸ்தாபிக்கும் பட்சத்தில், அவர்களுக்குக் கடன்கள் கிடைப்பதிலுள்ள கஷ்டங்களெல்லாம் அறவே ஒழிந்துபோம். சரியானபடி நிர்வஹிக்கப்பட்டுவரும் சங்கங்களுக்கு ஜனங்கள் தாராளமாயும் சுலபவட்டிக்கும் பணம் கடன் கொடுக்கத் தயாராயிருக்கிறார்களென்று அனுபவத்தில் ஏற்படுகிறது. ஆகையினால் பணம் விஷயமாய் எவ்விதகஷ்டமுமிருக்காது. அவசியமான சமயத்தில் நியாயமான வட்டிவீதங்களின்படி கடன்கள் வாங்கி, இப்படி வாங்குபவர்களின் சௌகரியத்தைஅனுசரித்து பலதவணைகளில் அக்கடன்களைத் திருப்பிக்கொடுக்கலாம். நம்முடைய நிலச்சுவான்தார்கள் சதா கடனாளிகளாயிருப்பதை உணர்ந்து, நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் இப்படிப்பட்ட ஐக்கிய நாணயச்சங்கங்களை ஸ்தாபிப்பது சுலபமாயிருக்கும் பொருட்டு 1904-ம் வருஷத்தில் ஒரு ஆக்டை ஜாரிசெய்தார்கள். முதலிரண்டு ரெஜிஸ்டர்களாகிய, திவான் பகதூர் பி. இராஜகோபாலாசாரியாரவர்களும், திவான்பகதூர் ஆர். ராமசந்திரராவ் அவர்களும் இந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில் மிகுந்த அனுதாபத்துடன் வேலை நடத்தினதால், 1910-ம் வரு ஜூன்மீ முடிவில் இந்த இராஜதானியில் 377 நாணயச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இந்த ஆக்டைப்பற்றிய வேலை அதிக கரியசித்தியடைந்தது, செங்கல்பட்டு, அனந்தபூர், சேலம் ஜில்லாக்களில்தான். நமது ஜில்லாவில் பன்னிரண்டு கிராமச்சங்கங்கள் மாத்திரமே இருக்கின்றன; ஆகவே இங்கு வந்திருப்பவர்களெல்லோரும் தங்கள்தங்கள் கிராமத்தில் தங்களுடைய சிநேகிதர்களுடன் கலந்துழைத்து அடுத்தகான்பரென்ஸுக்குள் இன்னும் எத்தனை சங்கங்கள் ஸ்தாபிக்க முடியுமோ அத்தனையும் ஸ்தாபிப்பது அவர்களுடைய கடமையாகும். இப்போதைய ரெஜிஸ்ட்ராராகிய திவான்பகதூர் ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை அவர்கள் நம்மில் ஒருவராய் இங்கு வந்திருப்பது உங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்; இவரும் அவருக்கு முன்னிருந்தவர்களின் குணத்தையே பின்பற்றி, இந்த விஷயத்தில் நமக்கு வேண்டிய சகல உதவியும் புரிந்து நம்மை உற்சாகப்படுத்தி வருவாரென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

இதுநிற்க, கூட்டுத்தொழில் முறையாய் உற்பத்திசெய்வதைப்பற்றி இப்பொழுது பேசுவோம். விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் அநேக விவசாயக்கருவிகளைப்பற்றி பரிகூத்து வருகிறார்கள்; இவைகள் உபயோகமானவையென்று நிச்சயிக்கப்பட்டால், ரயத்துக்கள் அவைகளை வாங்குவதனால் தங்களுக்கு அனுகூலம் ஏற்படுமென்று காணுவார்கள். ஆனால் இந்த கருவிகளின் விலையோ, மிதமாயிருந்தாலுங்கூட ரயத்துக்கள் கொடுக்கக்கூடிய அளவுக்கு மிஞ்சியிருக்கிறது. இவ்விஷயத்தில் ஒன்றுசேர்ந்துழைப்பதற்கு சிறந்த சம

பம் வாய்த்திருக்கிறது. ஒரு ரயத்து தனியாய் வாங்கமுடியாத ஒரு கருவியை நாலு அல்லது ஐந்துபேர் சேர்ந்து வாங்கக்கூடும்; அதை ஒவ்வொருவனும் தனக்கு அவசியமானபொழுது உபயோகித்துக்கொள்ளலாம். பசுந்தாள் எருவின் முக்கியதையானது இப்பொழுது இந்த ஜில்லாவில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே அவுரி, காவாளை, சணல், தக்கைப்பூண்டு முதலியவைகளின் விதைகளை வாங்க ரயத்துக்கள் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொருரயத்தும் தனியே விதையைவாங்குவதாயிருந்தால் அதனால் அசௌகரியம் ஏற்படுவதுமல்லாமல், விலையும் அதிகமாயிருக்கும். ஆனால் அவர்கள் ஒன்றுசேர்ந்தால், குறைந்தவிலைக்கு விதையைவாங்கி சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் அந்தப் பங்கிட்டுக்கொள்ளலாம். அதேமாதிரியாய் அறுவடையானபின் தானியத்தை விற்பனை முதலியவை செய்வதில், ரயத்துக்கள் அதை அதிகவிலைகளுக்குவிற்று அதிலிருந்து எவ்வளவுலாபம் பெறக்கூடுமோ அவ்வளவையும் பெறலாம்.

அடுத்தபடி கவனிக்கவேண்டிய விஷயம் கூட்டுத்தொழில் முறையாய் சரக்குகளை மொத்தமாகவாங்கி மெம்பர்களுக்கு சில்லறையாய் விற்பதேயாம். ஒரு கிராமத்திலுள்ள ஒவ்வொருவனும் தன்வேலையை மாத்திரம் கவனிக்கும் பட்சத்தில், அவனுக்கு வேண்டிய சரக்குகளை வாங்குவதற்காக தூரத்திலுள்ள ஒரு பட்டணத்துக்குப்போய் அங்குள்ள ஒரு சில்லறை வியாபாரியிடம் அவைகளைப் பெறவேண்டும். கிராமத்தாரனைவரும் ஒரு கூட்டுத்தொழில் சங்கமாய்ச் சேரும்பட்சத்தில், அந்த சங்கத்தின் நிர்வாஹ உத்தியோகஸ்தர் ஒரு மொத்த வியாபாரியிடத்திலிருந்து சரக்குகளை சௌகரியமான விலைக்கு வாங்கக்கூடும்; கிராமத்தார்களும் தங்களுக்கு அசௌகரியமில்லாமலே சரசமான விலைக்கு நல்ல சரக்குகளைப் பெறக்கூடும். கூட்டுத்தொழில் முறையாய் சரக்குகளை மொத்தமாய் வாங்கிச்சில்லறையாய் விற்பதற்கான சங்கங்கள் பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன; இவைகளில் நாம் முக்கியமாய் கவனிக்கத்தக்கது, சென்னை திருவல்லிக்கேணியில் ஏற்படுத்தப்பட்டு இராஜதானிப்பட்டணத்தில் அநேககிளைகளுடன் வேலைநடத்திவரும் சங்கமேயாம்.

கடைசியாக, கூட்டுத்தொழில் முறையாய் கிராமபரிபாலனம் செய்வதைப்பற்றி பேசுவோம். கிராமத்தாரெல்லாம் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் தலைமை பூண்டவர்களை, கிராமத்தின் விஷயங்களைப் பரிபாலிப்பதற்காக ஒரு பஞ்சாயத்தாக நியமிப்பது உசிதமாகும். கிராமத்தில் உண்டாகிற அற்ப ஸிவில் வழக்குகளையும் க்ரிமினல் விவகாரங்களையும் விசாரித்துத் தீர்ப்பு சொல்லும் வேலையை இப்பஞ்சாயத்தாரிடம் ஒப்புவிக்கலாம்; இப்படி செய்வதனால், வியாஜ்ஜியங்களில் அனாவசியமாய்ச் செலவிடப்படும் பணம் மிகுதி ஆகும். கிராமத்தின் சுகாதாரத்துக்கு அவசியமான விஷயங்களைப்பற்றியும், ஜலசர்ப்பராவை விருத்தி செய்வதைப்பற்றியும், கிராமத்திலுள்ள பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வி புகட்டுவதற்காக மூலாதாரபாடசாலைகளை வைத்

தாதரிப்பதைப்பற்றியும் கவனிக்கும்படி இப்பஞ்சாயத்தாருக்கு அதிகாரம் கொடுக்கலாம். நமக்கு ஏற்கனவே ஏராளமான நன்மை செய்திருக்கும் நமது கவர்ன்மெண்டார்கூட கிராமப் பஞ்சாயித்துகள் ஸ்தாபிக்கும் விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்; நாமும் அவர்களுடன் ஒத்துழைக்கத்தயாராயிருந்தால் அவர்களுடைய வேலையை நாம சுலபமாக்குவது மல்லாமல் அது பலிதமடையும்படியும் செய்யலாம்.

என்னுடைய பேச்சை நான்முடிப்பதற்குமுன், பரஸ்பர ஸகாய நிதிகள் என்று சொல்லப்படும் கூட்டுத்தொழில் சங்கங்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல அனுமதி வேண்டுகிறேன். இந்த நிதிகளில் ஒருபங்கு எடுத்துக் கொள்ளும் மெம்பர் மாதமொன்றுக்கு ஒரு ரூபாய்வீதம் நாற்பத்தைந்துமாதங்களுக்குச் சந்தாசெலுத்தினால் அந்தக்காலமுடிவில் அவர் செலுத்தின நாற்பத்தைந்து ரூபாயுடன் வட்டியாக ரூபாய் ஐந்து சேர்த்து அவருக்குத்திருப்பிக் கொடுக்கப்படுகிறதென்று உங்களுக்கு அநேகமாய்த் தெரிந்திருக்கலாம். இப்படி வசூலித்தத் தொகையிலிருந்து நிதியானது வருஷமொன்றுக்கு நூற்றுக்கு $6\frac{1}{4}$ வீதம் வட்டிக்கு அதன் மெம்பர்களுக்கு மாத்திரம் கடன் கொடுக்கிறது. இப்படி வட்டி வீதம் குறைந்திருந்தபோதிலும் அதற்கு எதிராக அநேக பிரதிகூலங்கள் இருக்கின்றன. ஒரு பிரதிகூல மென்னவெனில், கடன் வாங்கும் மெம்பர் தன்னுடைய கடனுக்காக மாதந்தோறும் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது; அப்படி கொடுக்கத்தவறினால், பாக்கியாகும் வட்டியின் மேல் மாதமொன்றுக்கு ரூபாய்க்கு மூன்று தம்பிடி வீதம் வட்டி விதிக்கப்படுகிறது; இது வருஷத்துக்கு நூற்றுக்கு $18\frac{3}{4}$ வீதம் ஆகிறது. ஒரு கூட்டுத்தொழில் சங்கத்திலோ அரை வருஷத்துக் கொருதரம் தான் வட்டி செலுத்தவேண்டும். இரண்டாவது பிரதிகூலம் யாதெனில், மாதச்சந்தாவை நிர்ணயிக்கப்பட்டுள்ள கெடுவுக்குள் காலந்தவறாமல் செலுத்தவேண்டும்; இதைச் செலுத்தத்தவறினால், வருஷமொன்றுக்கு நூற்றுக்கு $12\frac{1}{2}$ வீதம் அபராத வட்டி விதிக்கப்படுகிறது. மாதந்தோறும் சம்பளம் பெறும் நபர்களுக்கும் பிரதிதினமும் சரக்குகளை வாங்கிவிற்பதனால் எப்பொழுதும் கையில் பணம் வைத்துக்கொண்டேயிருக்கும் வியாபாரிகளுக்கும் மாதாமாதம் பணம் செலுத்துவது எளிது. பயிரிடுவோருக்கோ, அறுவடைக்குப் பிறகுதான் பணம் கிடைக்கிறது; ஆகையினால் இவர்கள் மாதாமாதம் பணம் செலுத்துவது சாத்தியமேயில்லை. மூன்றாவது ஒவ்வொரு அச்சிட்ட நமூனாவையும் ரசீது புஸ்தகத்தையும் அதன் சரியான விலைக்கு அதிகமாகவே கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. கடைசியாய் ஒரு நிதியிலிருந்து கடன் கிடைப்பதில் மட்டுக்கு மிஞ்சி காலதாமதம் ஏற்படுகிறது. கடன்கள் சாதாரணமாய் நிலம் அல்லது வீடுகளின் ஈட்டின்மேலேயே கொடுக்கப்படுகிறபடியால் ஈட்டுச் சொத்தை அளந்துபார்க்க வேண்டியிருக்கிறது; அதற்குச் சம்பந்தப்பட்ட பாத்தியதைகளைப்பற்றி விசாரித்தறியவேண்டி யிருக்கிறது; கடனை ஜாரிசெய்வதற்காக டைரெக்டர்களின் மீடிங் ஒன்று கூடவேண்டியிருக்கிறது.

ஐக்கிய நாணய சங்கத்திலோ, பிரதி நபருடைய செல்வநிலையும் அந்தஸ்தும் ஏற்கனவே தெரிந்திருக்கிறபடியால், கடன் வாங்கியவர் மற்றொரு நபரைத் தம்முடன் ஜாமீனாகச் சேர்த்துக்கொண்டால், கடனை உடனே ஜாரிசெய்யலாம். பரஸ்பர ஸகாயநிதிகளை நான் தாழ்த்திப் பேசுவதாக நீங்கள் எண்ணக்கூடாது; ஏனெனில் அவைகள் உபயோகமான வேலையையே செய்துவருகின்றன. என்கருத்து என்னவென்றால், பரஸ்பர ஸகாய நிதியைவிட கிராமக் கூட்டுத்தொழில் சங்கத்தில் பல அனுகூலங்களிருக்கின்றன வென்பதும் இச்சங்கம் கிராமவாசிகளின் தேவைகளுக்கு மிக்கப் பொருத்த முள்ளது யென்பதுமே.

1911-ம் வரு மேமீ 28, 29-ம் தேதிகளிலே நீடாமங்கலத்தில் நடந்த தஞ்சாவூர் கூட்டுத்தொழில் கான்பரேன்ஸில் அக்கிராசனாதிபதியாயிருந்த மிஸ்டர் டி. ரங்காசாரியருடைய உபந்நியாஸத்திலிருந்து எடுக்கப்பட்டது.

தஞ்சாவூர் ஒரு பின்னிடைந்த ஜில்லா.

கூட்டுத்தொழில் முயற்சியைப் பரவச்செய்யும் விஷயத்தில் நமது ஜில்லா பின்னிடைந்து நிற்பதைக் காண எனக்கு மிகவும் வெட்கமாயிருக்கிறது. மொத்தத்தில் இந்த ராஜதானியிலே இம்முயற்சி விஷயமாய் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியை நோக்குங்கால், நாம் பெருமை பாராட்டக் கூடியதாகவேயிருக்கிறது; கடைசியாகக் கிடைத்திருக்கும் கணக்குகளால் இவ்வபிவிருத்தியின் விசேஷம் தெளிவாய் ஏற்படுகிறது. இந்த சட்டம் ஆறுவருஷங்களாக அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. முதல் வருஷமாகிய 1904–05-ம் வருஷத்தின் முடிவில் ரெஜிஸ்ட்ரார் மூன்று சங்கங்களின் வேலையைப் பற்றித்தான் ரிபோர்ட்டுசெய்து சந்தோஷிக்க வேண்டியிருந்தது; இம்மூன்று சங்கங்களும் செங்கல்பட்டு ஜில்லாவிலேயே இருந்தன. போனவருஷம் பல ஜில்லாக்களில் பரவியிருந்த 377 சங்கங்களைப்பற்றி ரிபோர்ட் செய்யவேண்டியிருந்தது. சென்ற ஒரு வருஷத்திலேயே விசேஷ அபிவிருத்தி உண்டாயிற்று. வருஷ ஆரம்பத்தில் 180 சங்கங்கள் தானிருந்தன; இவைகள் வருஷ முடிவில் 377 ஆக அதிகரித்ததுமன்றி 600 விண்ணப்பங்கள் பைசலாகாமல் பாக்கியாய் நின்றன. கூட்டுத்தொழிலாளரின் சங்கியை 15,597 ஆகயிருந்தது 30,085 ஆகவும், வேலை நடத்துவதற்கான மூலதனம் 18 லக்ஷமாகவிருந்தது 38 லக்ஷமாகவும் அதிகரித்தன. இவ்வளவு அபிவிருத்தியும் சுபாவமாய் ஏற்படாத எவ்விததூண்டுதலினாலும் உண்டாகவில்லை யென்பது கவனிக்கத்தக்கது. ஆனால் தஞ்சாவூர் ஜில்லாவுக்குச் சம்பந்தப்பட்ட கணக்குகள் அவ்வளவு திருப்திகரமாயில்லை. முதல் வருஷத்தில் மூன்று சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன;—இவைகளில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டது இவ்வூரிலிருக்கும் விவசாய பாங்கி என்பதைப் பார்க்க நான் சந்தோஷிக்கிறேன்—போன வருஷக்கடைசியில் 15 சங்கங்கள் தான் வேலைநடத்திவந்தன; இவைகளின் வியாபாரம் மொத்தத்தில் 40 கிராமங்களுக்குச் சம்பந்தப்பட்டிருந்தது. கடைசி

யாய்க் கிடைத்த ஸர்க்கார் ரிபோர்ட்டிலிருந்து நான் என்னுடைய கணக்குகளை எடுத்திருக்கிறேன். மொத்த பங்கு மூலதனமாகிய 3½ லக்ஷம் ரூபாயில் இந்த ஜில்லாவின் பங்கு மூலதனம் 26,000 ரூபாய்தான்; அதேமாதிரி டிபாஸிட்டுகளின் மொத்தமாகிய 8 லக்ஷத்தில் இங்கு வசூலிக்கப்பட்டிருப்பது 20,000 ரூபாய்தான். சேலத்தைப்போன்ற பின்னிடைந்த பிரதேசங்களிலும் செங்கல்பட்டைப் போன்ற எளிய ஜில்லாக்களிலும் இப்படிப்பட்ட வேலையை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு செய்து முடிக்கக்கூடிய பொதுநலப் பிரியர்களிருக்கும் பொழுது, (முதல்தரமான இராஜ்ய பரிபாலகர்களாகவும் இராஜதந்திரிகளாகவும் சிறந்த நியாய சாஸ்திர பாரங்கதர்களாகவும் நியாய வாதிகளாகவும் திறமை வாய்ந்த வைத்தியர்களாகவும் பெயர்போன சங்கீத வித்வான்களாகவும்) பற்பல துறைகளில் பிரமுகர்களாயுள்ளவர்களை உண்டாக்கியிருக்கும் நமது ஜில்லாவானது இந்த முயற்சி விஷயத்தில் மிகவும் பின்னிடைந்திருக்கிறதானது நம்மெல்லோருக்கும் அவமானத்துக்கிடமானது. பொதுநலப்பிரியம் என்னும் குணமே நம்முள் அரிதான ஒரு பண்டமாயிருக்கிறது; ஆகையினால், இப்பொழுதிருக்கும் அளவுக்காவது அபிவிருத்தி ஏற்படுவதற்குக் காரணபூதர்களாய் இங்கும் ஜில்லாவில் மற்ற விடங்களிலும் உழைத்துவந்தவர்களை நாம் கௌரவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்; ஏனெனில், தஞ்சாவூரில் பிரமுகர்கள் இருப்பது வாஸ்தவமேயானாலும் சமுதாய வாழ்க்கை என்பது அந்த ஜில்லாவில் சிறிதேனுமில்லை யென்று தகுந்த காரணத்துடனேயே ஏற்பட்டிருக்கும் வசைச்சொல்லை நீக்குவதற்காக இவர்கள் தங்களாலானமட்டும் முயன்று வருகிறார்களல்லவா? நாம் முழுவதும் குறைவற்ற வகுப்பாரல்லவென்பதை நமக்குத் தெரிவிப்பதற்கு அந்தர்முக சக்தி அதிகமாய் வேண்டியதில்லை; ஆகவே நிலைமை இவ்வாறிருக்கிறதென்பதை இந்த ஜில்லாவிலுள்ள பிரமுகர்களும், தலைவர்களும் அறியும்படி இந்த கான்பரென்ஸ் செய்யும்பட்சத்தில், அதனால் பெரும்பேறு விளைந்ததாகும்; அப்படியே செய்யுமென்று நான் நம்புகிறேன். இதர துறைகளில் அதாவது ராஜீய விஷயமாயாகிலும், சமூகவாழ்க்கை சம்பந்தமாகவாகிலும், மதவிஷயமாயாகிலும் பொதுநலத்தை உத்தேசித்து உழைப்பதில் அதிகஉற்சாகம் உண்டாகக்கூடும்; ஏனென்றால் அப்படி வேலைசெய்பவர்களுக்கு, பலர் தங்களை இன்னாரென்று அறியும்படி தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்கும் அதனால் தாங்கள் உலகத்தில் முன்னுக்கு வருவதற்கும் அநேக சமயங்கள் வாய்க்கின்றன; இதிலும் மேலான காரணமென்னவெனில் எழுதுவது அல்லது பேசுவதைத்தவிர செய்யவேண்டிய வேலை அதில் வேறொன்றுமில்லை; ஆனால், கூட்டுத்தொழில் முயற்சியைப்பரவச்செய்வதற்காக உழைப்பவர்கள் ஈடுகொடுத்து நிவர்த்திக்கவேண்டிய கஷ்டங்களையும் சிரமத்துடன் படிப்படியாய்க் கட்டிடம் அமைப்பது போல் செய்து முடிக்கவேண்டிய வேலைகளையும் கவனிக்கும்போது, இந்த கான்பரென்ஸையும் இதைப்போன்ற இதர கான்பரென்ஸுகளையும் கூட்டி அதன் மூலமாய் கூட்டுத்தொழிலின் அனுகூலங்களை எல்லோ

ரும் அறியும்படி நிதர்சனப்படுத்திக்காட்டும் வேலையில் அமர்ந்திருப்பவர்களைப்பற்றி நாம் பெருமை பாராட்டுவதற்கு தக்க நியாயமிருக்கிறது. உத்தரமல்லூரைச் சேர்ந்த வெங்கடநாத அய்யங்கார் என்பவர் இது சம்பந்தமாய்ச் செய்திருக்கும் வேலையிலிருந்து, ஒருவர் எவ்வளவு தாழ்மையான நிலைமையிலிருந்தபோதிலும் (இவர் ஒரு தெருப்பள்ளிக்கூட வாத்தியார் தானென்று நான் அறிகிறேன்) அவர் கூட்டுத்தொழிலுக் கவசியமான சிரத்தையும், நேர்மையும், விவகார சம்பந்தமான திறமையும் உடையவராயிருக்கும்பட்சத்தில், எவ்வளவு வேலைசெய்யக்கூடும் என்பது நன்றாய் ஏற்படுகிறது. உத்தரமல்லூரிலும் அதைச் சுற்றிலும் இந்த முயற்சி பலிதமடைந்திருப்பதற்கான கௌரவத்தில் பெரும்பாகம் இவருக்கே உரியதாகும்; இப்படி பலிதமடைந்திருப்பதற் கறிகுறியாக சங்கங்களின் முதல் யூனியன் அங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கூட்டுத்தொழில் முயற்சி பரவுவதனால் ஜனங்களுக்குப் படியும் பெருந்த குணங்களாகிய சிக்கனமும், செட்டும், தன் முயற்சியும், பரஸ்பர நம்பிக்கையும் விசுவாஸமும் நம்மைச் சோம்பலைவிட்டு வேலைசெய்யும்படி தூண்டுவதற்குப் போதுமான கருவிகளாகும். மதுராந்தகம் கான்பரென்ஸில் மிஸ்டர் ராமசந்திரராவ் 1940-ம் வருஷத்தில் இம்முயற்சி இன்ன நிலைமையிலிருக்குமென்று தெளிவாய் எடுத்துக் கூறியிருக்கிறார்; இது மனக்கற்பிதமாயிருந்தாலுங்கூட வாஸ்தவமாய் நேருமென்றே நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். அல்லாமலும், அவர் கேட்டுக்கொண்டபடியே ஜனங்கள் செய்யப் பின்னிடையார்களென்றும் நான் நம்புகிறேன்.

புதிய மசோதாஆக்ட்.

இந்த கான்பரென்ஸில் நம்முடைய கவனத்துக்குப் பாத்திரமாகப்போகிற விஷயங்களுக்குள், சென்ற மார்ச்சுமாதத்தில் ஏகாதிபத்திய சட்ட சபையிலே கொண்டுவரப்பட்ட புதிய சட்டமாகிய ஐக்கிய நாணயச் சங்கங்களைப்பற்றிய சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா ஆக்டே மிகவும் முக்கியமானது. 1904-ம் வருஷத்திய ஆக்டானது முக்கியமாய் விவசாயிகளின் நன்மையை உத்தேசித்தே ஜாரி செய்யப்பட்டது; ஆனால் நாணயம் விவசாயிகளுக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு பலவித கைத்தொழில் வகுப்பாருக்கும் அவசியமென்பது இப்பொழுது சகலராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. நூற்றுக்கு 36 வீதமும் அதற்கு அதிகமாயும் வட்டிவாங்கும் சௌகார்களிடத்தில் அகப்பட்டு கடனைத் தீர்க்கச் சக்தியற்றிருந்த வெள்ளி வேலைசெய்யும் ஒரு தட்டான் தன்னைக் கைதுசெய்யப் படுவதனின்றும் காப்பாற்றும்படி பிரார்த்தித்துக் கொடுத்துக்கொண்ட ஒரு மனுவானது வெகேஷன் ஜட்ஜ் மிஸ்டர் சுந்தரய்யரவர்கள் முன் முந்தாநாள் விசாரணைக்கு வந்தது. அது விஷயமாய்த் தீர்ப்பு சொல்லும்பொழுது அவர் இப்படிப்பட்ட நபர்களுக்கும் கூட்டுத்தொழிலின் அனுகூலங்கள் பிரயோகப்படும்படி செய்யவேண்டுமென்று சொன்னார். நமது கவர்ன்மெண்டார் பற்பல வகுப்பைச்சேர்ந்த தங்களுடைய பிரஜைகளின் ஜாதியமுன்னேற்றத்தை விரும்பி எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொள்கிறார்க

ளென்பதற்கு 1904-ம் வருஷத்திய ஆக்டே பிரத்தியக்ஷமான ருஜுவாகிறது; பரோபகாரமானதும் ராஜதந்திர நிபுணத்துவத்தைக் காட்டுவதுமான இந்தச் சட்டத்தின் அனுகூலங்களனைத்தையும் ஜனங்கள் அறிந்து பயன் படுத்தி வருகிறார்களென்று சகலராலும் அங்கீகரிக்கப்படுகிறது. இந்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்டபொழுது, இது பயன்படுவதும் பயன்படாமற் போவதும் ஜனங்களையே பொறுத்ததென்று வெளிப்படையாய்ச் சொல்லப்பட்டது. இந்தப் பொறுப்பை வஹிக்கும்படி துரைத்தனத்தார் ஜனங்களைக் கேட்கவே, ஜனங்களும் அதை பூர்ணசிரத்தையுடன் ஏற்றுக்கொண்டார்கள். இது வரையில் செய்யப்பட்டிருக்கும் வேலையிலேயே சிலாகிக்கத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது; இனிமேலும் இம்முயற்சியானது தேசமுழுவதும் மென்மேலும் ஓங்கி வளருமென்று எண்ண இடமிருக்கிறது; ஆகையினால் தேசத்துக்கு வாஸ்தவமாய் நன்மை செய்யக்கூடிய சகல விஷயங்களிலும் எப்பொழுதும் விழிப்பாகவேயிருக்கும் நமது துரைத்தனத்தார் இந்தக் கூட்டுத் தொழில் முயற்சியைப் பின்னும் விருத்தி செய்வதற்கேற்ற ஒரு சட்டத்தை ஜாரிசெய்ய முன்வந்திருப்பது அதிசயமல்ல.

கூட்டு முயற்சியினால் ஐரோப்பாவில் விவசாயத்திலும் இதர கைத்தொழில்களிலும் விசேஷ மாறுபாடு உண்டாகி, அதன் பலனாக விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் அநேகமாய் நீங்கி அவர்கள் மெத்த சுகமடைந்திருக்கிறார்களென்று சமீபகால சரித்திரத்தினால் நமக்குத் தெரிகிறது. அதைவிட அதிகபலன்கள் உண்டாகாவிட்டாலும் அதேமாதிரி பலன்கள் நமது தேசத்தில் ஏன் உண்டாகக்கூடாது? நமது வருங்காலம் சந்தோஷகரமாயிருக்குமென்று நாம் நிச்சயமாய் நம்பலாம்; அதிலும், இத்தேசத்தில் சிரமத்துடன் உழைத்தும் ஏழ்மையால் பீடிக்கப்பட்டு வருந்தும் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு உண்மையாய் அனுகூலம் செய்யக்கூடியவற்றிலெல்லாம் கண்ணும் கருத்துமாயிருக்கும் தூரதிருஷ்டியுள்ள ஒரு கவர்ன்மெண்டார் இந்த முயற்சியை ஆரம்பித்து நடத்தி வருகிறபடியால், இவ்வாறு நல்லகாலத்தை எதிர்பார்ப்பதற்கு விசேஷ நியாயமிருக்கிறது.

சமூக செல்வநிலையைப்பற்றிய சாஸ்திர பரிபாஷையில் கூட்டு முயற்சி என்னும் பதத்துக்கு ஒரு விசேஷ அர்த்தம் உண்டு; அதாவது, (a) ஜனங்களின் உபயோகத்துக்காக சரக்குகளை வாங்கி விற்பதிலோ, அல்லது (b) சரக்குகளை உற்பத்திசெய்வதிலோ, அல்லது (c) மெம்பர்களுக்குள் மூலதனம் கடன் வாங்குவதிலும் கடன் கொடுப்பதிலுமோ பரஸ்பர லாபத்தை உத்தேசித்து பல நபர்களாவது சங்கங்களாவது ஒன்றுசேருவது என்பதே. வேலைப்பிரிவினையே அதாவது, ஒரு வேலையின் பலபாகங்களைப் பலர் தனித்தனியே பிரித்துச் செய்வதே, கூட்டுத்தொழில் முயற்சிக்கு அதிக வலுவைக்கொடுக்கிறதென்று சொல்லப்படுகிறது; இந்த வேலைப் பிரிவினையில் ஐக்கியமும் பண்டங்களை ஏராளமாய் உற்பத்தி செய்யும்பொருட்டு உழைப்பைப் படிப்படியாய் ஒழுங்கு

படுத்துவதும் கலந்திருக்கிறது. கூட்டு முயற்சியானது இதுவரையில் ஏற்படுத்தப்பட்டு அமுலிலிருக்கிற சமூகவாழ்க்கையைப்பற்றிய மூலாதார விதிகளுக்கு விரோதமில்லாமல், ஒரு விஷயத்தில் பொதுவான அக்கறைகொண்டு ஒன்று சேர்ந்து எண்ணிக்கையில் விருத்தியாய்வரும் பலரையும் ஒரே மனதுடன் உழைக்கும்படி செய்து அதனால் சமூக நிலைமையை சீர் திருத்த முயல்கிறது.

ஐரோப்பாவில் இந்தச் சங்கங்கள் செய்யும் வேலையைக் கவனிக்கும்பொழுது அவைகளைப் பொதுவாய் மூன்று வகுப்பாகப் பிரிக்கலாமென்று ஏற்படுகிறது. (1) சரக்குகளை வாங்கி மெம்பர்களுக்கேயாவது மெம்பர்களுக்கும் மெம்பரல்லாதவர்களுக்கு மாவது விற்பதை நோக்கமாகவுடைய விற்பனைச் சங்கங்கள், (2) மெம்பர்கள் ஒன்று சேர்ந்தோ தனித்தனியாகவோ உற்பத்தி செய்த வஸ்துக்களை விற்பனை செய்வதை நோக்கமாகவுடைய உற்பத்திச் சங்கங்கள், (3) கொடுக்கல் வாங்கல் வியாபாரம் செய்யும் நாணயச் சங்கங்கள். 1904-ம் வருஷத்திய ஆக்டானது, அதன் பெயராலேயே ஏற்படுகிறபடி, மேலேகண்ட மூன்று வகுப்புகளில் கடைசி வகுப்புச் சங்கங்களுக்கு மாத்திரமே பிரயோகப்பட்டது. கூட்டுத்தொழில் விற்பனைச் சங்கங்களுக்காவது உற்பத்திச் சங்கங்களுக்காவது இந்த ஆக்ட் பிரயோகப்படவில்லை; ஆயினும் ஒரு சங்கமானது மெம்பர்களுக்கு நாணயத்தின்மேல் கொடுக்கல் வாங்கல் செய்ய சௌகரியங்கள் ஏற்படுத்திக்கொடுப்பதுடன் ஜீவிப்பதற்கவசியமான பதார்த்தங்கள் அவர்களுக்கு நயமாய்க் கிடைக்கும்படி செய்யவும் பிரயத்தனப்படும்பட்சத்தில், அந்த சங்கம் இந்த ஆக்டின் வியாபகத்துக்குள் படங்குமென்னும் கருத்துடன் கவர்ன்மெண்டார் சில விற்பனைச் சங்கங்களையும் உற்பத்திச் சங்கங்களையும் கூட ரெஜிஸ்டர் செய்வதற்கு அனுமதிகொடுத்தார்கள். பலிதத்துடன் வேலைசெய்யும் ஒரு விற்பனைச் சங்கத்துக்கு உதாரணமாக திருவல்லிக்கேணி நகர சங்கத்தையும் உற்பத்தி சங்கத்துக்கு உதாரணமாக காஞ்சிபுரம் நகர நெசவுக்காரர்களின் சங்கத்தையும் எடுத்துச் சொல்லலாம். பின் சொன்ன சங்கமானது இன்னும் பரீக்ஷார்த்தமாய் நடத்தப்பட்டு வருகிறதேயல்லாமல் உறுதியாய் அமையவில்லை. விற்பனைச் சங்கங்கள் விஷயத்தில் இங்கிலாண்டும், உற்பத்திச் சங்கங்கள் விஷயத்தில் ப்ரான்சும், நாணயச் சங்கங்கள் விஷயத்தில் ஜர்மெனியும் தலைமை வஹித்து நிற்கின்றன.

புதிய மசோதாவில் சகலவித கூட்டுத்தொழில் சங்கங்களும் அடங்கியிருக்கும்படி நிபந்தனைகள் ஏற்படுத்துவதாய் உத்தேசித்திருக்கிறது; இது ஆக்டாக ஜாரிசெய்யப் படும்பொழுது, 'நாணயம்' என்னும் பதத்தை விட்டுவிட்டு, கூட்டுத்தொழில் சங்கங்களாக்ட் என்றே வழங்கப்படும். பொதுவான கூட்டு முயற்சியைக்கொண்டு மெம்பர்களின் செல்வநிலையை விருத்தி செய்வதை நோக்கமாகவுடைய எவ்வித சங்கமும் இந்த ஆக்டின்கீழ் ரெஜிஸ்செய்யப்படலாம். இது சந்தோஷத்துடன் சகலரும் ஏற்கக்கூடிய அபிவிருத்தி என்பதில் சந்தேகமில்லை; ஏனெனில், நமது தேசத்திலேயே ஸ்தாபித்

கப்படும் கைத்தொழில்கர் விருத்தியடைவதற்கு இதனுல் சிறந்த சமயம் வாய்ந்திருப்பது மல்லாமல், சரக்குகளை விற்பனைசெய்யும் விஷயத்திலும் உற்பத்தி செய்யும் விஷயத்திலும் கூட்டுத்தொழில் முயற்சியைப் பிரயோகித்து இதுவகர செய்யப்பட்டிருக்கும் வேலையானது சொற்பமே யானுலும் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப் படுகிறதென்று இதனுல் ஏற்படுகிறது. இப்பொழுது இந்த இராஜதானியில் ஒரு உற்பத்திச் சங்கமும் ஆறு விற்பனைச் சங்கங்களும் வேலைசெய்து வருகின்றன. தொழிலாளிகளுக்கு, ஒன்று சேருவதனுல் தங்களுக்கு ஒரு வியாபாரம் ஏற்படுத்திக்கொண்டு அதை ஸ்வதந்திரமாய் தாங்களே நடத்துவதற்கு யோக்கியதை உண்டாவென்பது இனி மேல்தான் ருஜுவாகவேண்டும். இதனுல் ஏற்படக்கூடிய அனுகூலங்களுக்கும் இதில் நீக்கவேண்டிய ஆபத்துக்கிடமான தவறுதல்களுக்கும் பிரத்தியக்ஷமான உதாரணமாயிருப்பது திருவல்லிக்கேணி நகர தையற்கார சங்கத்தின் சரித்திரமே. சில வருஷங்களாய் தையற்காரரின் "பரிதாபமான நிலைமை"யைச் சீர்படுத்திவந்த இந்தப் பிரயோஜனகரமான ஸ்தாபனமானது வாஸ்தவமான கூட்டுறவு ஏற்படாததனுல் அழிந்துபோனதைப் பார்க்க துக்ககரமா யிருக்கிறது. எவர்கள் அந்த சங்கத்தின் மூலமாய் அதிக லாப மடைந்தார்களோ அந்த வேலைக்காரர்களே அதிலிருந்து வெளியாகி தனித்தனியே கடைகள் வைத்து அதன் வாடிக்கைக் காரர்களையெல்லாம் ஆகர்ஷித்துக் கொண்டார்கள். கூட்டுத் தொழிலின் உட்கருத்து என்னவெனில், ஒரு சங்கத்தின் மெம்பர்கள் மாத்திரமேயல்லாமல் பல கூட்டுத்தொழில் சங்கங்களும் கூட ஒரே நோக்கத்துடனும் அக்கறையுடனும் வேலைசெய்வதுமன்றி லாபம் கிடைத்தாலுஞ்சரி நஷ்டம் ஏற்பட்டாலுஞ்சரி அதை சமபாகமாக எல்லோரும் ஏற்க வேண்டுமென்பதே. இதை உத்தேசித்தே, ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களில் இதர சங்கங்கள் மெம்பராகலா மென்று இந்த மசோதாவில் நிபந்தனை ஏற்படுத்தி, இதனுல் பல சங்கங்கள் யூனியனுகச் சேருவதற்கு இடங் கொடுத்திருக்கிறது. இப்படி யூனியன்களை ஸ்தாபிப்பதற்கு இப்போதைய சட்டத்தின்படி விசேஷ உத்தரவின்மேல் ரெஜிஸ்டர் செய்யவேண்டியிருக்கிறது. ஸர்க்கரைச் சேராத நபர்களைக்கொண்டு சங்கங்களைப் பார்வையிடுவதும் மேல் விசாரணை செய்வதும் சாத்தியமாயிருக்கும்பொருட்டும், சங்கங்கள் தாங்களாகவே தொகைகள் சேகரிப்பதும், தங்களிடத்தில் பணம் மிகுதியாயிருந்தால் அதை ஒருவிதமாய்ச் சரிக்கட்டுவதும் சுலபமாயிருக்கும் பொருட்டும் இப்படிப்பட்ட யூனியன்களை ஸ்தாபிப்பதற்கு இடந்தருவது அவசியம். யூனியனுய்ச் சேர்ந்த சங்கங்கள் வாங்கும் கடன்களுக்கெல்லாம் அந்த யூனியனில் அடங்கியுள்ள சங்கங்களிலிருக்கும் மெம்பர்களெல்லாம் சேர்ந்து ஜாமீனுக நிற்பார்கள்; இதனுல் ஒரு குறித்த விஸ்தீர்ணத்துக்குள் எவ்வளவு பொறுப்பு ஏற்படக்கூடுமோ அவ்வளவும் ஏற்படும். பொதுவாக முக்கியமாயிருக்கக்கூடிய விஷயங்களை யெல்லாம் அவைகள் தீர்மானித்துவிடும். சில நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு கடன்கள் ஜாரிசெய்யும் அதி

காரம் கூட யூனியனுக்குக் கொடுக்கப் படுமென்று நான் எதிர்பார்க்கிறேன்; இந்த வேலை இப்பொழுது ரெஜிஸ்ட்ராரால் செய்யப்பட்டுவருகிறது. பார்வையிடும் அதிகாரமும் அதற்கு ஏற்படும்; ஆனுல், தனி சங்கங்களின் உள் விவகாரங்கள் சம்பந்தப்பட்டவரையில் அவைகளின் சுவாதீனத்துக்கு யாதொரு குந்தகமும் நேரிடாது. துரைத்தனத்தாரின் தலையிடுதலை எவ்வளவு குறைக்கக் கூடுமோ அவ்வளவு குறைக்கவேண்டுமென்பதை நாம் எல்லோரும் அங்கீகரித்தாலும் அது கேவலம் மாயையாய் விடக்கூடாதென்பதும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமேயாம். கூட்டுத்தொழில் முயற்சியானது இன்னும் ஆரம்ப தசையிலேயே இருக்கிற தென்பதையும் அது வலிவுடன் செழித்தோங்கியிருப்பதற்கு இச்சங்கங்களை ஸர்க்காரார் பரிபாலித்து வருகிருர்களென்று ஜனங்களுக்குள் சாதாரணமாய் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையே காரணமென்பதையும் மறக்கக்கூடாது. இன்னும் சில வருஷங்களுக்காவது ஒரு குறித்த அளவுக்கு கவர்ன்மெண்டாரின் மேல் விசாரணை இருந்து வருவது அவசியம்; இந்த அளவை எப்பொழுதும் குறைக்கவே கூடாது; ஆகையினுல், புதிய மசோதாவில் கவர்ன்மெண்டார் கட்டணமில்லாமல் தணிக்கை செய்வதையே எடுத்துவிட்டதானது பெருத்த ஆட்சேபனைக் கிடமாகிறது.

தணிக்கை மூலமாய் ஸர்க்கார் மேல்விசாரணை இருந்துகொண்டே இருக்க வேண்டும். இதனுல் கவர்ன்மெண்டுக்கு ஏற்படும் செலவு மிகவும் சொற்பமேயாகும். இது வருஷத்தின் மொத்த விவகாரங்களில் நூற்றுக்கு 0·611 தானுகிறது. ஏழை வகுப்பாரின் பொது திரவியத்தைப் பாதுகாக்கும் விஷயத்தில் இந்த இராஜதானி முழுவதுக்கும் வருஷமொன்றுக்கு ரூ. 50,000 அல்லது ரூ. 60,000 செலவழிப்பது அதிகமாகாது.

செய்ய உத்தேசித்திருக்கும் மற்றொரு முக்கியமான மாறுதலென்னவெனில், சங்கங்களை வகைவகையாகப் பிரிப்பதைப் பற்றியதேயாம். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் முக்கியமான வகைகள் நாட்டுச் சங்கங்களும், நகரச் சங்கங்களுமே; இதில் நாட்டுச்சங்கங்கள் சாதாரணமாய் வரையறுக்கப்படாத பொறுப்பேற்றிருப்பவைகள். பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கிறது இல்லையா என்பதே வாஸ்தவமான வித்தியாசத்துக்குக் காரணமாகிறது. திறமையான கூட்டுத்தொழில் பரவுவதற்கு வரையறுக்கப்படாத பொறுப்பே சிலாக்கியமானது. பொறுப்பு வரையறுக்கப்படா திருந்தால், கண்டிதமான மேல்விசாரணை ஏற்படுவதுடன் வேலையும் ஜாக்கிரதையாய் நடத்தப்படும்; ஆகவே, நஷ்டம் முதலிய அபாயம் நேரிடுவது கூடியவரையில் மட்டுப்பட்டு, சங்கத்தின் அங்கத்தினர்கள் எவ்வளவு தூரம் உத்தரவாதம் ஏற்கக் கூடுமோ அவ்வளவையும் ஏற்பார்கள்; சகல கூட்டுத்தொழில் முயற்சிகளிலும் இவ்விரண்டு பெரிய அம்சங்களைத்தான் லக்ஷியமாகக் கொள்ளவேண்டும்.

புதிய மசோதாவில் நாணயச் சங்கங்களல்லாத இதர கூட்டுத்தொழில் சங்கங்கள் மெம்பரல்லாதவர்களிடத்தும் விவகாரம் வைத்துக்கொள்ளலா

மென்று குறிப்பாய் நிபந்தனை அமைத்திருப்பதானது மேற்கண்டபடி நேரிடக் கூடிய அபாயம் முன்னினும் அதிகமா யிருக்குமென்ற ஆட்சேபனைக் குட்பட்டதாகும். மசோதாவில் நீங்கள் கவனிக்கவேண்டிய இதர நிபந்தனைகள் இருக்கின்றன; இவைகளில் முக்கியமானவை இவ்விருவகைச் சங்கங்களும் தங்கள் லாபங்களைப் பங்கிடுவதற்குச் சம்பந்தப்பட்டவை. லாபத்தின் ஒரு பாகத்தைத் தருமகைங்கரியங்களுக்குக் கொடுப்பதை அனுமதிக்கும் நிபந்தனையானது தங்களுடைய லாபங்களில் ஒரு பாகத்தை தருமார்த்தமாய்க் கொடுக்கும் மகமைகளுக்காக எடுத்துவைப்பதை அனுதி சம்பிரதாயமாய் அனுஷ்டித்து வரும் நமது ஜனங்களின் கருத்துக்கு மிகவும் இசைந்ததாகும்.

இவ்விராஜதானியிலுள்ள அநேக நிதிகளை ரெஜிஸ்டர் செய்வதற்கு யாதொரு நிபந்தனையும் ஏற்படுத்தாமலிருப்பதைப்பற்றியும் பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புதிய மசோதா விஷயமாய் உண்டாகக்கூடிய சகல வித பிரசினைகளைக் குறித்தும் இந்த கான்பரென்ஸார் ஜாக்கிரதையாய் போசித்து கவர்ன்மெண்டாருக்கு சரியானபடி ஆலோசனை சொல்லுவார்களென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

மெம்பர்களைச் சங்கத்திலிருந்து நீக்கி விடுவதற்கான பிரயோஜனமுள்ள விதியானது சென்ற வருஷத்தில் தான் முதன் முதலாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதென்று நான் அறிகிறேன்; கொடுக்கப்பட்ட தொகைகளை துர்விநியோகப் படுத்தினதற்காக ஒன்பது மெம்பர்களும் பகிரங்கமாய் அயோக்கிய ஜீவனம் செய்து வந்ததற்காக ஒன்பது மெம்பர்களும் நீக்கி விடப்பட்டார்கள்; 58 மெம்பர்கள் அவர்கள்மேல் கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடர நேரிட்டது காரணமாக நீக்கப்பட்டார்கள். இது மிகவும் நன்மை பயக்கக்கூடிய விதியாகையால் அதைக் கண்டிப்பாய்ப் பிரயோகிக்கவேண்டும்.

உபயோகமுள்ள ஓர் விதி.

தனிநபர்களாயினுஞ்சரி ஸ்தாபனங்களாயினுஞ்சரி இதரர்கள் செய்யும் வாக்குதத்தங்களை நிறைவேற்றும்படி வற்புறுத்துவதைத் தாமதப்படுத்துவது அவர்களிடத்தில் பொய்யன்பு பாராட்டுவதாகும். நிர்வாக சங்கத்தார் பாக்கியாகும் தொகைகளை உடனுக்குடனே வசூல் செய்தாலும், மெம்பர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய தொகைகளை தாமதப்படுத்தாமல் செலுத்திவந்தாலுமொழிய கூட்டுத்தொழில் சங்கங்களைப் பலிதத்துடன் நடத்துவது சாத்தியமாகாது. செய்யவேண்டிய காரியங்களை உடனுக்குடனே செய்துவருவதே தவறுதல்கள் நேரிடாமல் தடுப்பதற்கு ஸர்வ சிலாக்கியமான உபாயமென்பதை சகலசங்கங்களும் அறிந்து அததன் சகாயச்சட்டங்களை நிறைவேற்றுவதில் எந்தக் காரணத்தைக்கொண்டும் காலஹரணம் செய்யாமலிருக்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில், அநேக சங்கங்களில் பொதுவாய்க் காணப்படும் ஒருகுறைவை எடுத்

அபாத்திரர்களுக்கு இடங் கொடுப்பது.

துச்சொல்ல அனுமதிவேண்டுகிறேன்; அதைப்பற்றி பொறுப்பேற்ற சில மனிதர்கள் என்னிடத்தில் பிரஸ்தாபித்திருக்கிறார்கள்; அது என்னவெனில், கடிதப்போக்குவரத்து விஷயங்களில் அவைகள் மிகவும் மெதுவாயிருக்கின்றனவென்பதும் விவகாரங்களைத் தீவிரமாய் நடத்தும் பழக்கம் இன்னும் விருத்தியாகவில்லை யென்பதுமே. பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய பரிசீலனைக் குறிப்புகளில் இந்த விஷயத்தைப்பற்றி தங்களுடைய அபிப்பிராயத்தைக் கண்டெழுதுவதை முக்கியமானதாகக் கருதவேண்டும்.

அனுபவத்தில் ஏற்படும் சில பிரசினைகள்.

யாதொரு நகரச்சங்கமாவது நாட்டுச் சங்கமாவது வாஸ்தவமாய்ச் செய்யும் வேலையைப்பற்றி எனக்கு எவ்வித பரிசயமுமில்லாமையால், அப்போதைக்கப்போது அனுபவத்தில் ஏற்பட்டிருக்கிற பிரசினைகளைக் குறித்து என்னுடைய அபிப்பிராயமாக நான் எதையும் உங்களுக்கு எடுத்துச்சொல்லக் கூடாதவனாயிருக்கிறேன். சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கி கொடுக்கும் கடன்களுக்கு உயர்ந்த வீதப்படி வட்டி வாங்கியும், அந்த பாங்கியிலேயே குறைந்த வட்டிக்கு நாட்டுச் சங்கங்கள் தங்கள் சேமநிதிகளைப் போட்டு வைக்க வேண்டுமென்று அவைகளை நிர்ப்பந்தப்படுத்துவதனால் அவைகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறதென்று அடிக்கடி குறை கூறப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில், ஸென்ட்ரல் பாங்கியார் தங்களுடைய சேமநிதியின்மேல் நூற்றுக்கு 4 வீதம் தான் வட்டி பெறுகிறார்களென்பதை மாத்திரம் நான் எடுத்துச்சொல்ல வேண்டியிருக்கிறது. சேமநிதி வைத்து வருவதே அவசியமா இல்லையா என்ற கேள்வியும் பிறந்திருக்கிறது; ஆனால் பெருத்த சேமநிதி அவசியமென்பதை ருஜுப்படுத்துவதற்கு அதிகமாய் நியாயங்கள் எடுத்துக் கூறவேண்டியதில்லை. காரிய நிர்வாகம் நன்றாயிருக்கிறதென்பதற்கு இதுவே சந்தேகிக்க இடமில்லாத ஸ்வதஸ்ஸித்தமான சாட்சியமாகும். எப்பொழுதாவது நஷ்டம் ஏற்பாட்டாலுஞ்சரி தொகைகளைத் திருப்பிக் கொடுக்கும்படி நேரிட்டாலுஞ்சரி அதை சேமநிதியிலிருந்து சரிப்படுத்தலாம். அதனால் நாணயம் அதிகமாகும்; ஜனங்களும் தங்கள் பணத்தை நிர்ப்பயமாய் டிபாஸிட்டாகக் கட்டுவார்கள்; இதனால் டிபாஸிட்டுகளின் தொகையும் அதிகரிக்கும் உயர்ந்த நாணயம் ஏற்படுவதே முக்கியமாய் விரும்பத்தக்கது. கடைசியாக, சேமநிதி விருத்தியாய்க் கொண்டே போனால், லாபம் சம்பாதிப்பதற்கான ஆவசியகமும் குறைந்து கொண்டேவரும். வாஸ்தவத்தில், ஒரு தசைக்குப்பிறகு லாப முழுவதையும் மூலதனமாக உபயோகித்து, வெளியில் கொடுக்கும் கடன்களின்மேல் வாங்கப்படும் வட்டி வீதத்தைக் குறைக்கவுங்கூடும். நாட்டுச் சங்கங்கள் சென்னை ஸென்ட்ரல் பாங்கியின்மேல் இதர புகார்களும் செய்கின்றன; இவைகளெல்லாம் திருப்திகரமாய்க் கவனிக்கப்பட்டிருக்குமென்றே நம்புகிறேன். ஸென்ட்ரல் பாங்கியார் தாங்கள் கொடுக்கவேண்டிய வட்டியை வருஷத்துக்கொருமுறை செலுத்தினாலும் தங்களுக்கு வாவேண்டிய வட்டியை மாத்திரம் வருஷத்துக் கிரு

முறை வசூல் செய்கிறார்களென்றும் அவர்களிடத்திலிருந்து வாங்கும் கடனைத்திருப்பிக் கொடுப்பதற்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் இரண்டுவருஷ காலம் மிகவும் குறுகிய கெடுவென்றும் சொல்லப்படுகிறது. ஸென்ட்ரல் பாங்கிக்கு ஜீவனும் ஆத்மாவுமென்று சொல்லக் கூடிய ஸர். வி. வி. தேசிகாசாரியாருடன் இந்த விஷயங்களைப்பற்றி தனித்துப் பேசிக்கொண்டிருந்தேன்; அவர், இந்த அம்சங்களில் ஒவ்வொன்றுக்கும் திருப்திகரமான சமாதானம் கூறுகிறார். ஒரு சங்கமானது தன்னுடைய கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு வாஸ்தவத்தில் தன்னாலான பிரயத்தனம் செய்கிறதென்று தெரிந்திருக்கும் வரையில் இரண்டு வருஷ கெடுவைப்பற்றி எப்பொழுதும் நிர்ப்பந்தம் செய்வதில்லையாம். எல்லாச் சங்கங்களின் சேமநிதிகளையும் சேர்த்தால்கூட அது பாங்கியில் வட்டிக்குப் போட்டு வைக்கப் பட்டிருக்கும் தொகைகளின் ஒரு சிறிய பாகமேயாகிறதாம். அரை வருஷத்துக் கொருதரம் வட்டி கொடுக்கவேண்டுமென்று கேட்பவர்களுக்கு ஸென்ட்ரல் பாங்கியார் அப்படியும் கொடுக்கிறார்களாம். அவர்களே சிலசமயங்களில் தாங்கள் கடன் வாங்கும் தொகைகளின் மேல் மூன்று மாதத்துக் கொருதரம் வட்டி கொடுக்கவேண்டியிருக்கிறதாம். ரெஜிஸ்ட்ராரும் ஸென்ட்ரல் பாங்கியாரும் ஒன்றென்ற தப்பபிப்பிராயத்தினால் சங்கங்கள் ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களை அடிக்கடி பாங்கியாருக்கு அனுப்பி விடுகின்றனவென்று அவர் முறையிடுகிறார். கூட்டுத்தொழில் சங்கங்களில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மெம்பர்களாவதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று சில சங்கங்கள் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்வது மிகவும் நியாயமான வேண்டுகோளேயாகும்; இந்த அனுமதி இன்னும் கொடுக்கப் படாதிருப்பதற்குக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. கூட்டுத்தொழிலையும் ஐக்கியநாணயத்தையும் பற்றிய வாஸ்தவமாயுள்ள சரியான கோட்பாடுகளை, அதற்கென்று தயார் செய்யப்பட்ட பாட புஸ்தகங்களைக்கொண்டு, பிரதம பாடசாலைகளிலும் இதர கல்விச் சாலைகளிலும் கற்பிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்வதும் நியாயமான பிரார்த்தனையேயாம். கூட்டுத்தொழில் சங்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட தஸ்தவேஜுகள் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்கான சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் விஷயத்திலுங்கூட கவர்ன்மெண்டார் அனுதாபத்துடன் கவனம் செலுத்தவேண்டும்.

ஜாதியைப்பற்றிய அல்லது வகுப்பைப்பற்றிய கூட்டுத்தொழில் சங்கங்கள் ஏற்படுத்துவது உசிதமாவென்பதைக் குறித்தும் சாத்தியமாவென்பதைக் குறித்தும் இந்தக் காலத்தில் யோசிப்பது பிரயோஜனகரமாயிருக்குமென்று எனக்குத் தோற்றுகிறது. இப்படிப்பட்ட சங்கங்களைப் பட்டணங்களில் ஸ்தாபிப்பது சிலாக்கியமென்று நான் நினைக்கிறேன்; ஏனெனில், பட்டணங்களில்தான் இவ்வகைக் கூட்டுத்தொழிலாளர் அதிகமாயிருப்பார்கள். சாதாரணமாய் ஒவ்வொரு தொழிலைச் செய்பவர்களும் ஒரு

ஜாதி அல்லது உபஜாதியைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள்; பொன் வேலை, வெள்ளிவேலை செய்யும் தட்டாரையும், பித்தளைவேலை செய்பவரையும், தச்சரையும், நெசவுக்காரர்களையும் இதற்கு உதாரணமாக எடுத்துச்சொல்லலாம். கிராமாந்தரங்களில் இவ்வகைத் தொழிலாளர் சொற்பமாயிருப்பார்கள்; ஆகையினால் அவ்விடங்களில் ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்களுக்காக சங்கங்கள் ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லை. ஆனால், கைத்தொழில்களைச் செய்பவர்களின் விஷயத்திலே, முக்கியமாய் கைத்தொழில்கள் செழித்தோங்கும் பத்தியன்தலங்களில், ஒவ்வொரு வகுப்புக்கும் பிரத்தியேகமான சங்கங்கள் ஸ்தாபிப்பதால் இன்னும் சிலாக்கியமான விளைவுகள் உண்டாகக்கூடும்; இவ்விடங்களில், ஒரே தொழிலைச்செய்வதனாலேற்படும் ஒற்றுமையைப் பிரயோஜன முண்டாகும்படி உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

வெவ்வேறிடத்திலுள்ள இரண்டு சங்கங்களுக்கு மத்தியில் திரவிய சம்பந்தமான விவகாரங்கள் ஏற்படும்பொழுது, அவைகளை உடனுக்குடனே முடிப்பதைச் சுலபமாக்கும் பொருட்டு சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியார் முறையே 5 ரூபாய்க்கும் 50 ரூபாய்க்கும் டிபெஞ்சர் கடன் பத்திரங்கள் பிறப்பிக்க அதிகாரம் பெறவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது; இந்த விஷயமும் நீங்கள் கவனிக்கத்தக்கதேயாம்.

1905-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட மூன்று சங்கங்களில் முதலதாகிய நீடாமங்கலம் விவசாய பாங்கியைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை முடிக்கிறேன். வருஷா வருஷம் பிறப்பிக்கப்படும் தணிக்கைக் குறிப்பைக் கவனிக்கும் பொழுது, இந்த பாங்கி இந்தப் பக்கங்களில் மிகவும் சிலாகிக்கத்தக்க வேலை செய்திருக்கிறதென்று ஏற்படுகிறது. அதன் வேலை சரியான முறைப்படி நடத்தப்பட்டு வருகிறது; சேமித்துவைக்கும் டிபாஸிட்டுகளைக் கட்டிவைப்பதற்கான அதன் பிரிவானது மிகவும் உபயோகமானது; அதனால் உள்ளூரில் வாங்கப்படும் வட்டி வீதம் குறைந்திருக்கிறது. காரிய தரிசியாயிருக்கும் மிஸ்டர் சேதுராமய்யர் தம்முடைய அலுவல்களைத் திறமையுடன் செய்துவந்ததற்காக ஜனங்களுடைய வந்தனங்களைப்பெற அர்ஹராகிறார். பாங்கியின் விவகாரங்கள் பெருகுவதைவிட்டுக் குறுகும் போலிருப்பது விசனகரமான விஷயமாயிருக்கிறது. ரெஜிஸ்ட்ரார் தம்முடைய கடைசி தணிக்கைக் குறிப்பில் சொல்லியிருப்பதுபோல், இந்தச் சிறந்த சங்கமானது இப்பொழுதிருப்பதைப் போலவே இனிமேலும் ஊக்கத்துடன் வேலைசெய்து வருமென்றும் காரியதரிசியும் எப்பொழுதும்போல் அக்கறையுடன் உழைத்து வருவாரென்றும் நாமும் கோருவோம்.

உள்ளூரிலுள்ள பாங்கி.

1911-ம் வரு ஆகஸ்ட்டு 1உ நடந்த 3-வது நெல்லூர் ஜில்லா கான்பரென்ஸில் கனம். எல். ஏ. கோவிந்தராகவய்யரவர்கள் செய்த அக்கிராசனாதிபத்திய உபந்நியாசத்திலிருந்து எடுக்கப்பட்டது.

ஐரோப்பாவில் ஐக்கியநாணயச் சங்க ஏற்பாடு நிலையாய் வேரூன்றியிருக்கும் தேசங்களின் அனுபவத்தினால் ஏற்படுகிறதென்ன வென்றால், சொற்ப ஜீவேஜனுள்ளவர்களும் விவசாயம் அல்லது இதர கைத்தொழில்களின் குறித்த பாகங்களை விருத்திசெய்து அது சம்பந்தமாய்ப் பெருத்த அளவில் வியாபாரம் செய்வதற்காக ஒன்று சேரக்கூடுமென்பதே. ஐக்கியநாணயச் சங்கங்களிலுள்ள ஒரு விசேஷ மென்னவெனில், புத்தி புகட்டுவதிலும் மேல் விசாரணை செய்வதிலும் ஏதேனுமொரு சமயத்தில் கடன்கள் கொடுப்பதிலும் தவிர மற்றப்படி வெளியாரின் உதவி அவைகளுக்கு அவசியமேயில்லை யென்பது மாத்திரமல்லாமல் அப்படிப்பட்ட உதவியினால் அச்சங்கங்கள் விருத்தியாவது தடைப்படு மென்பதேயாம்; இது மிகவும் முக்கியமான விஷயம்; இதைப்பற்றி ரெஜிஸ்ட்ராரும் அதிகமாய் வற்புறுத்தியிருக்கிறார் இச்சங்கங்களிலுள்ள மற்றொரு விசேஷத்தைப் பற்றியும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்; அதாவது, இந்த சங்கங்கள் தருமம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் நடத்தப்படவில்லை யென்பதே. திரவிய வந்தர்கள் பரோபகாரார்த்தமாகச் செய்யும் காரியங்களால் தேசத்துக்கு என்ன நன்மை விளைந்தாலும், தங்கள் ஜீவனத்தை நடத்துவதற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஏழை ஜனங்கள் தருமம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் வேலைசெய்வார்களென்று எதிர்பார்ப்பது வியர்த்தமாகும். பொதுவாய்த் திரவியம் சம்பாதிக்கும் விஷயத்தில் அவர்களுக்குண்டான சக்தியை அதிகப்படுத்துவதே அவசியமானது; தன் முயற்சியையும் சுய நம்பிக்கையையும் விருத்திசெய்து, பூர்ணசிரத்தையுடனும் முழு விசுவாஸத்துடனும் பரஸ்பரம் கூடி முயலும் வழக்கத்தை உண்டுபண்ணவேண்டும். இந்த இராஜதானியில் நமது அதிர்ஷ்டவசத்தால், ஐக்கியநாணயச் சங்கங்களாக்டானது-இப்பொழுது திருவாங்கூரில் திவானாயிருக்கும் திவான்பகதூர் பி. இராஜகோபாலாசாரி யவர்களையும், உங்களுடைய அபிமானத்தையும் கௌரவத்தையும் பெற்றிருக்கும் கலெக்டராகிய திவான்பகதூர் ஆர். இராமசந்திரராவ் அவர்களையும் போன்ற யோக்கியதையையும் நுண்ணறிவுமுடையவர்களால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. சிறந்த திறமையுடன், ஜனங்களின் குணகுணங்களைப்பற்றி நெருக்கமான பரிசயமும், போகப்போக இன்னின்ன சமயத்தில் இவையிவை அவசியமா யிருக்குமென்பதை முன்னமே ஊஹித்தறியும் அதிசய சக்தியும் இவர்களுக்கு இருந்தன. இராமசந்திரராவ் அவர்களின் 1909-10-ம்வருஷத்திய ரிபோர்ட்டில் விஷயங்கள் நிறைந்திருப்பதுடன், இந்த இராஜதானியில் இச்சங்கங்களின் பிற்காலகதி நன்று யிருக்குமென்று நம்புவதற்கு இடமிருப்பதாகவும் இதனால் ஏற்படுகிறது,

---

ஐக்கியநாணயச் சங்கங்களின் ரெஜிஸ்டரார் சேலம் ஜில்லா கூட்டுத்தொழில் கான்பரென்ஸில் செய்த உபந்நியாசம்.

சேலம், செங்கல்பட்டு இந்த இரண்டு ஜில்லாக்களிலும் நடந்திருக்கும் கூட்டுத்தொழில் வேலையை ஒத்திட்டுப் பார்ப்பது.

கான்பரென்ஸின் காரியதரிசியானவர் என்னை ஒருவியாசம் எழுதிப் படிக்கும்படி கேட்டுக்கொண்டார்; அப்படி நான் படிப்பதாக ஏற்றுக்கொண்ட வியாசத்தில் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசுவதைக் காட்டிலும் முறையே சேலம் ஜில்லா கூட்டுத்தொழிலாளரும் செங்கல்பட்டு ஜில்லா கூட்டுத்தொழிலாளரும் செய்திருக்கும் வேலையை ஒத்திட்டுப்பார்ப்பதையே நீங்கள் விரும்புவீர்களென்று எண்ணினேன். நீங்கள் உங்களைப்போலவே இதர ஜில்லாக்களில் இம்முயற்சிக்காக உழைத்து வருபவர்களை இந்தக் கான்பரென்ஸுக்கு வரும்படி அழைத்தீர்கள்; அதின் பலனாக, செங்கல்பட்டு, திருசிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயமுத்தூர், மதுரை இந்த ஜில்லாக்களிலுள்ள முக்கியமான கூட்டுத்தொழிலாளரெல்லாம் வந்திருக்கிறார்கள். மேலே கண்ட இதர ஜில்லாக்கள் சம்பந்தப்பட்ட வரையில், இந்த சபையானது, சிநேக பாவமுள்ள சில இராஜ்ஜியாதிபதிகள் ஒன்று சேருவதை ஒத்திருக்கிறது; ஏனெனில், இவ்வதிபதிகளைப் போலவே இங்குவந்திருப்பவர்களும் சிநேகிதர்களாக மாத்திரமே யல்லாமல் ஒருவருடன் ஒருவர் போட்டிபோடுகிறவர்களாகவு மிருக்கிறார்கள். அவர்கள் வந்திருப்பது எவ்விதகுறையுமின்றி நீங்கள் செய்யும் உபசாரத்தை ஏற்பதற்கு மாத்திரமேயல்ல; அவர்களுடைய வேலையும் உங்களுடைய வேலையும் இனி முன்னிலும் நன்றாய்ச் செய்யப்படும் பொருட்டு நீங்கள் செய்திருக்கும் வேலையைப்பற்றிக் குறிப்புகள் எடுத்துக்கொண்டு போவதற்காகவும் அவர்கள் வந்திருக்கிறார்கள். இந்த சபையில் நீங்கள் பரஸ்பர சிநேகபாவத்துடன் சேர்ந்திருப்பதாக நான் சொன்னாலும் போட்டிபோடும் எண்ணத்துடன் கூடியிருப்பதாக நான் சொன்னாலும் ஒன்றேயாம்; ஏனென்றால், நாம் போட்டிபோடும் எண்ணத்துடன் கூடும் கூட்டங்களில்கூட ஐக்கியம், கூட்டுறவு,என்னும் இரண்டு அம்சங்களும் சந்தோஷகரமாகக் கலந்தே யிருக்கின்றன. ஆகையினால் எப்படி ஒவ்வொரு சங்கத்தின் எல்லைகளுக்குள் அதைச் சேர்ந்த பிரதி மெம்பரின் குணகுணங்களைப்பற்றி மற்ற மெம்பர்களெல்லாம் தாராளமாய்த் தர்க்கிப்பது சாத்தியமாகிறதோ, அதே மாதிரியாய் நாமும் நம்முள் ஒவ்வொருவரின் குணகுணங்களைப் பற்றியும் தாராளமாய்த் தர்க்கிக்கலாம்; இந்த சுதந்தரத்தைக் குறித்து எவரும்கோபம் கொள்ளமுடியாது; அப்படி கோபம் கொள்ளவு மாட்டார்கள், கோபம் கொள்ளவும் கூடாது.

மற்றொரு காரணத்துக்காகவும் இப்படி ஒத்திட்டுப் பார்ப்பது நல்லதென்று எனக்குத் தோற்றியது. நடக்கும் வருஷமாகிய 1910-11-ம்வருஷத்துக்கு இந்த இலாகாவின் பரிபாலன ரிபோர்ட் இப்பொழுதுதான் தயாராயிருக்

கிறது ; இன்னும் ஒரு மாதத்துக்குள் அநேக நல்கள் சகல சங்கங்களுக்கும் சேர்ந்துவிடும்; ஆனால் நம்முடைய சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த விஷயம் தெரியாது; அப்படி தெரிந்தவர்களுக்கும், பரிபாலன ரிபோர்ட்டிலுள்ள கணக்குகளையும் ஸ்டேட்மெண்டுகளையும் அறிந்துகொள்வது, அது விஷயத்தில் அவர்கள் பழக்கப்பட்டிருந்தாலொழிய, கஷ்டமாயிருக்கும். பரிபாலன ரிபோர்ட்டின் முக்கியநோக்க மென்னவெனில், முதலாவது, வெவ்வேறு சங்கங்கள் செய்திருக்கும் வேலையை ஒருங்கே எடுத்துச் சொல்லுவதும், இரண்டாவது, அந்த வேலையை ஒத்திட்டுப் பார்ப்பதுமேயாம். ஒரு சங்கமானது ஜீவித்திருக்கும் ஒரு ஸ்தாபனம்; அது ஒரு மரம் அல்லது பிராணியைப் போல் தினே தினே வளர்ந்துகொண்டே வருகிறது; ஜீவித்திருக்கும் வஸ்துக்கள் நாம் அவைகளை ஒத்திட்டுப்பார்க்கும் காலத்தில் வளர்வது சாத்தியமில்லாததைப்போல் சிறிதுநேரம் நிலையாய் நிற்பதாக எண்ணினாலொழிய, அவைகளை ஒத்திட்டுப் பார்ப்பது மிகவும் கஷ்டமாகுமென்பது சகலருக்கும் தெரிந்தவிஷயம். இதுவே ஒப்புப் பரியாணங்கள் ஏற்படுத்திக்கொள்வதன் நோக்கமாகும். இப்படிப்பட்ட யாதொரு பரியாணத்தை ஊன்றிக் கவனித்தால், அது ஒரு விஷயத்தில், வாஸ்தவமாயிருந்தாலும் மற்றொரு விஷயத்தில் வாஸ்தவமாகாதென்று நீங்கள் காண்பீர்கள்; எப்படியெனில், குறித்த ஒரு காலத்தில் விஷயங்கள் என்ன ஸ்திதியிலிருந்ததென்பதை அது சரியாகக் காட்டினாலும், ஒத்திட்டுப்பார்க்கும் காரியங்களுக்காக அந்த சிறிதுகாலம்வரையில், விஷயங்கள் அதே ஸ்திதியிலிருப்பதாக அது பாவிக்கிறது. ஒப்புப்பரிமாணத்துக்கு இவ்விரண்டு தன்மைகளும் உண்டென்பதை விளக்குவதற்கு யாவர்க்கும் தெரிந்த விஷயமாகிய ஒரு (பொடக்ராப்) புகைப்படத்தை விட சிறந்த உதாரணம் நான் எடுத்துக்காட்டமுடியாது. நேற்று நம்மெல்லோரையும் வைத்து ஒரு புகைப்படம் பிடித்தபொழுது, படம் பிடிப்பவன் நம்மில் ஒவ்வொருவரையும் ஒரு குறித்த வரிசையிலிருக்கச்செய்து ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு வஸ்துவும் ஒரு நிமிஷநேரம் "அசைபாமல்" இருக்கவேண்டுமென்று விரும்பினான். அந்த நிமிஷத்தில் நமக்கு உண்டாகும் உணர்ச்சியைப் பற்றி நாமெல்லோரும் அறிவோம்; ஜீவனானது ஒவ்வொரு நிமிஷமும் மாறிக்கொண்டே யிருக்கிறதனால், அந்த நிலைமை வாஸ்தவமானதல்லவென்றும் அது ஜீவித்திருப்பதைக் குறிக்கவில்லையென்றும் நாம் உணர்கிறோம்; ஆயினும், வாஸ்தவத்திலே பிற்காலத்தில் ஆராய்ந்து ஒத்திடுப் பார்ப்பதற்காக நிலையான ஒரு வடிவம் ஏற்படும் பொருட்டு படம் பிடிப்பவனுடைய உத்தரவுபடி நாம் நடக்கிறோம். பரிபாலன ரிபோர்ட் விஷயத்திலும் இப்படியேதான் நேரிடுகிறது; ஆனால், இதில் உயிருடனிருக்கும் படங்களுக்குப் பர்த்தியாக உயிரற்ற இலக்கங்களைக்கொண்டு வேலை நடத்தவேண்டி யிருக்கிறது. பரிபாலன ரிபோர்ட்டில் விவரிக்கப்பட்டுள்ள நிலைமையானது ஒரு நிமிஷத்தில், அதாவது கூட்டுத்தொழில் வருஷத்தின் கடைசி தினமாகிய ஜூன்மீ 30வென்று, இருந்த நிலைமையாகும். பரி

பாலன ரிபோர்ட்டி லடங்கியுள்ள ஸ்டேட்மெண்டுகளில் அநேகம் அந்த நிமிஷத்தில் இருந்த நிலைமையையே குறிக்கின்றன; இந்தப் படம் பிடிக்கும் முறையினால் அந்த நிமிஷத்தில் இருந்த கோர்வையான சில விஷயங்களை நாம் கவனத்தில் வைத்து அதைப்பற்றியே யோசிப்பது சாத்தியமாகிறது. 'பொதுவான அபிவிருத்தி,' 'ஆஸ்தியும் கடனும்,' 'கையிருப்புச்சீட்டு,' 'லாபமும் நஷ்டமும்,' 'பாக்கியும், வசூலும், நிலுவையும்,' என்ற தலைப்புகளின் கீழுள்ள ஸ்டேட்மெண்டுகள் இத்தன்மையானவை. 'வரவும் செலவும்' என்ற தலைப்பின் கீழ் மற்றொரு ஸ்டேட்மெண்டும் உண்டு; இதில், வருஷத்தின் கடைசி நிமிஷத்தில் இருந்த நிலைமையைக் கண்டே நாம் ஏமாற்ற மடைந்து, அதையே ஆதாரமாகக்கொண்டு விஷயங்களை நிதானிப்பதற்கு இடமில்லாம லிருக்கும் பொருட்டு வருஷ முழுவதிலும் நடந்த விவகாரங்களின் மொத்தம் கண்டிருக்கிறது.

நான் உங்களுக்குக் கொடுத்திருக்கும் ஒத்திட்டுப் பார்ப்பதற்கான ஸ்டேட்மெண்டில் சேலத்திலும் செங்கல்பட்டிலும் விசேஷமாய் ஒன்றை யொன்று ஒத்திருக்கும் சில அம்சங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும் பல அம்சங்களும் இருக்கின்றன. இந்த விசேஷ ஒற்றுமையானது ஸ்டேட்மெண்டின் ஆரம்பத்திலேயே காணப்படுகிறது; அதாவது, வருஷ ஆரம்பத்தில் இருந்த சங்கங்களின் சங்கியை செங்கல்பட்டில் 71-ம் சேலத்தில் 72-ம் ஆக விருந்தது. ஒற்றுமையாயுள்ள வேறொரு அம்சமும் ஸ்டேட்மெண்டின் நடுவில் காணப்படுகிறது; அதாவது, "செங்கல்பட்டில் மெம்பர்களுக்கு பாக்கியாயிருக்கும் தொகையின் மொத்தம்" 66,411 ரூபாயாகவும் "சேலத்தில் மெம்பர்களுக்குப் பாக்கியாயிருக்கும் தொகையின் மொத்தம்" 64,491 ரூபாயாகவும் இருந்தது. ஒற்றுமையாயுள்ள மற்றொரு அம்சமும் வேறோரிடத்தில் காணப்படுகிறது; அதாவது, "ஜில்லாவிலுள்ள நாட்டுச் சங்கங்களுக்கெல்லாம் பாக்கியாயுள்ள வட்டி"யானது செங்கல்பட்டில் 13,713 ரூபாயாகவும் சேலத்தில் 12,826 ரூபாயாகவும் இருந்தது; அதேமாதிரி "நாட்டுச் சங்கங்களுக்கு இந்த வருஷத்தில் கிடைத்த வட்டி"யானது செங்கல்பட்டில் 38,318 ரூபாயாகவும் சேலத்தில் 37,023 ரூபாயாகவும் இருந்தது. கடைசியாக, செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள நாட்டுச் சங்கங்களுக்குக் கிடைத்த நிகரலாபத்தின் தொகை 10828 ரூபாயாயிருக்க, சேலத்திலுள்ள நாட்டுச் சங்கங்களுக்கு 10,994 ரூபாய்க்குச் சொஞ்சம் அதிகமாக லாபம் கிடைத்ததென்று காண்கிறோம். ஒற்றுமையாயுள்ள விஷயங்கள் இவைகள்தான்; வித்தியாசமேற்படும் விஷயங்களைக்காட்டிலும் இவைகளே பரிஷ்காரமாய்த் தெரிகின்றன. அடியிற்கண்ட விஷயங்களில் வித்தியாச மேற்படுகிறது:—"மெம்பர்களால் பாக்கியாயுள்ள கடன்கள்" செங்கல்பட்டில் $5\frac{1}{4}$ லக்ஷமாகவும் சேலத்தில் $3\frac{3}{4}$ லக்ஷமாகவும் இருந்தது. "மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கின கடன்களும் அவர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகளும்" என்கிற தலைப்பின்கீழ் (சில்லறைகளை விட்டு விட்டு ஆயிரக்கணக்காகப் பார்க்கும்பொழுது) செங்கல்

பட்டில் 34000 ரூபாய் இருக்க, சேலத்தில் 4000 ரூபாய்தான் இருந்தது; பங்கு மூலதனம் செங்கல்பட்டில் 31,000 ரூபாயாகவும் சேலத்தில் 51,000 ரூபாயாகவும் இருந்தது; கடைசியாக "மெம்பர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள்" செங்கல்பட்டில் 34,000 ரூபாயாக விருக்க சேலத்தில் இந்த பாபத்தில் 13,000 ரூபாய்தான் இருந்தது.

1910-11-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் செங்கல்பட்டில் எத்தனை சங்கங்களிருந்தனவோ அத்தனை சங்கங்கள் தான் சேலத்திலும் இருந்தன; ஆனால் அந்த வருஷத்திலே செங்கல்பட்டில் 42 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட, சேலத்தில் ஒரே ஒரு சங்கம் தான் ஏற்படுத்தப்பட்டது. ஆயினும், செங்கல்பட்டில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள 113 சங்கங்கள் 180 கிராமங்களிலே விவகாரம் நடத்துகின்றன; சேலத்திலுள்ள 73 சங்கங்களோ 202 கிராமங்களில் விவகாரம் நடத்துகின்றன. ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்திலே சேலம் ஜில்லாவில் வேலை அவ்வளவு நன்றாய் நடவாததற்குக் காரணமென்னவென்று நம்மெல்லோருக்கும் தெரியும்; நடக்கும் வருஷத்தில் இது வரையில் நமது அதிர்ஷ்ட வசத்தால் ப்ளேக் வியாதினால் யாதொரு குந்தகமும் ஏற்படாததால், சேலம் ஜில்லாவிலுள்ள சங்கங்களின் சங்கியை வாஸ்தவத்தில் அதிகரிக்குமென்று நாம் கோரலாம். 1911-ம் வருஷ ஜூன்மீ 30உ யன்று செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள சகல சங்கங்களுக்கும் பங்கு மூலதனமாக 31,000 ரூபாய் தானிருந்தது; அதே தினத்தில் சேலத்திலுள்ள சங்கங்களுக்கு 51,000 ரூபாய் பங்கு மூலதனமிருந்ததாகக் காண்கிறோம். பங்கு மூலதனத்தில் இந்த வித்தியாசமிருந்ததனால்தான், "மெம்பர்களின் டிபாஸிட்டுகள்" என்னும் தலைப்பின்கீழ் உள்ள வித்தியாசம் மறைந்துபோய், வருஷக் கடைசியில் "மெம்பர்களுக்குப் பாக்கியாயிருக்கும் மொத்தமானது" இரண்டு ஜில்லாக்களிலும் ஒரே மாதிரியாய் ஏறக்குறைய 65,000 ரூபாயாக விருந்தது.

பங்கு மூலதன விஷயத்தில் செங்கல்பட்டைக் காட்டிலும் சேலத்துக்கு ஒரு விசேஷ அனுகூலமிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை; இந்த அனுகூலம் எத்தன்மையது என்பதைப்பற்றிச் சற்று நிதானித்து யோசிப்போம். ஒரு சங்கத்தின் வேலை நடத்துவதற்கான மூலதனத்தில் அடங்கியுள்ள சகல அம்சங்களிலும் பங்கு மூலதனமே ஸர்வ சிலாக்கியமானது. வேலை நடத்துவதற்கான மூலதனத்தில் பங்கு மூலதனமும், மெம்பர்களால் கொடுக்கப்பட்ட கடன்களும் கட்டப்பட்ட டிபாஸிட்டுகளும், மெம்பரல்லாதவர்களால் கொடுக்கப்பட்ட கடன்களும் கட்டப்பட்ட டிபாஸிட்டுகளும், இதர சங்கங்களிடத்திலிருந்து வாங்கப்பட்ட கடன்களும், கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட கடன்களும் அடங்கியிருக்கின்றன. வேலை நடத்துவதற்கான மூலதனத்தைச்சேர்ந்த வெவ்வேறான இந்த அம்சங்களுக்குள் பங்கு மூலதனமே மிகவும் சிரேஷ்டமானது; ஏனெனில், அது ஒவ்வொரு மெம்பரும் தானாகவே வேண்டுமென்று எடுத்துக்கொண்ட பங்கே யொழிய கடனல்ல. ஒரு மனிதன் தானாகவே சேமித்துவைத்த ஒரு ரூபாவுக்கும் அன்

றைய செலவுக்காக அவனால் கடன் வாங்கப்பட்ட ஒரு ரூபாவுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறதோ அதே வித்தியாசம்தான் பங்கு மூலதனத்துக்கும் கடன் வாங்கப்பட்ட மூலதனத்துக்கும் இருக்கிறது. முதல் சொல்லப்பட்ட ரூபாயானது அவனுக்குச் சொந்தமாகையால் அதை அவன் இஷ்டப்படி விநியோகிக்கலாம்; மற்றொரு ரூபாயோ அவன் எப்பொழுதும் திருப்பிக் கொடுக்க வேண்டியதாகும்; வாஸ்தவத்தில் அதைத் திருப்பிக் கொடுக்கிற வரையில் அவனுக்கு நிம்மதியே கிடையாது, அவன் நிம்மதியாயிருக்கவும் கூடாது. பங்கு மூலதனமானது சங்கத்துக்குச் சொந்தமான திரவியமாயிருந்தாலும், எப்பொழுதாகிலும் அதை வாபஸ் வாங்கிக்கொண்டு அதன் தொகையைத் திருப்பிவிடும்படி கேட்க ஒரு மெம்பருக்குச் சுதந்தரமிருக்கும்பட்சத்தில், அது அவ்வளவு பெறுமானமுள்ள சொத்தாகாது. ஆகையினால் எல்லா சங்கங்களும் தங்களுடைய சகாயச் சட்டங்களில் குறைந்தது 5 வருஷத்துக்காவது ஒரு மெம்பர் தன்னுடைய பங்கை வாபஸ் வாங்கிக்கொள்ளக் கூடாதென்று நிபந்தனை ஏற்படுத்தி யிருக்கின்றன; ஆகவே, சங்கமானது குறைந்தது 5-வருஷத்துக்காவது தன்னுடைய வேலையை நடத்துவதற்கான மூலதனத்துக்காக ஒவ்வொரு மெம்பரின் பங்கும் உபயோகப்படுமென்று நம்பியிருக்கலாம். நான் கணக்கிட்டுப் பார்த்ததில், நாட்டுச் சங்கங்கள் வாங்கும் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு, வட்டியையும் அசலின் தவணைத் தொகையையும் காலந்தவறாமல் கிரமமாய்ச் செலுத்தி வரும்பக்ஷத்தில், 12-வருஷகாலம் கெடுவு கொடுக்கப்பட்டிருந்தாலும், அவைகள் 5-வருஷத்துக்குள் தங்களுடைய கடன்களைத் திருப்பிக் கொடுத்து விடுகின்றனவென்று காண்கிறேன். ஒரு சங்கத்தின் வேலைநடத்துவதற்கான மூலதனம் முழுவதும் பூராவும் தொகை செலுத்தப்பெற்ற பங்குகளாயிருந்தால், அது சகலவிதத்திலும் சிரேஷ்டமான நிலைமையாகும்; ஏனென்றால், பங்கு மூலதனத்தை மெம்பர்கள் திருப்பிக் கேட்கக்கூடிய காலம் வருமுன், வேலை நடத்துவதற்கான மூலதனத்தின் அளவுக்கு மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடன்கள் சங்கத்துக்கு திரும்பி வந்துவிடும். கடன் வாங்கின திரவியத்தைக் கொண்டு நீங்கள் வியாபாரம் நடத்தும்பொழுது, நீங்கள் ஸ்திரமான பூமியின்மேல் நிற்பதாக எண்ணக்கூடாது; ஏனெனில், உங்களுக்கு அந்தப் பணத்தைக் கடனாகக் கொடுத்தவன் அதை எப்பொழுது திருப்பிக் கேட்பானென்பது உங்களுக்குத் தெரியாது; அல்லாமலும், ஒவ்வொரு கடன் விஷயத்திலும் அதை எப்பொழுது திருப்பிக் கொடுக்கவேண்டி யிருக்குமென்று உங்களுக்குத் தெரிந்திருந்தாலுங்கூட, உங்களுடைய வேலைநடத்துவதற்கான மூலதனத்தை நீங்கள் 5-வருஷத்துக்கு வெளியில் கடன் கொடுத்திருப்பதாலும், உங்களுடைய கடன்காரன் தன்னுடைய பணத்தைக் கேட்கும் சமயத்தில் இந்த மூலதனம் உங்களுக்குக் கிடைப்பது சாத்தியமில்லாமலிருக்கலாமாகையாலும், அதை அப்பொழுதே திருப்பிக்கொடுக்கக் கூடுமென்று நீங்கள் நிச்சயமாய் எண்ண முடியாது.

வேலை நடத்துவதற்கான மூலதனத்தில் பங்கு மூலதனம் எவ்வளவு அதிகமாயிருப்பது சாத்தியமாகுமோ அவ்வளவு அதிகமாயிருப்பது மிகவும் நல்லதாகும். ஆயினும் இப்படி இருப்பதனால் மெம்பர்களுக்கு, அதிலும் முக்கியமாய் ஏழை மெம்பர்களுக்கு, அதிக கஷ்டம் ஏற்படுகிறது; இந்த கஷ்டமானது ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கும் சமயத்தில் இன்னும் விசேஷமாய் வெளியாகிறது; ஏனெனில், அப்பொழுதுதான் ஒவ்வொருவரும் பழைய கடன்களை ஒழித்து விடுவதற்காகப் பணம் கடன்வாங்க வேண்டுமென்கிறார்கள். ஆகையினால் ஒரு சங்கமானது சொற்ப பங்கு மூலதனத்துடன் அல்லது பங்கு மூலதனமே இல்லாமல் வேலைசெய்யத் தொடங்க வேண்டுமென்றும், கூடிய வரையில் விரைவாய்த் தன்னுடைய சேமநிதியைச் சேகரித்துக்கொள்ள வேண்டுமென்றும் சகாயச்சட்டங்களில் நிபந்தனை ஏற்படுத்திருக்கிறது; இந்த சேமநிதியை 5 வருஷத்துக்குப் பிறகோ அல்லது 10 வருஷத்துக்குப் பிறகோ திருப்பி வாங்கிக்கொள்வது சாத்தியமில்லையாகையால் அது பங்கு மூலதனத்தைக் காட்டிலும் பெறுமானமுள்ள சொத்தாகும். இந்தக் காரணத்தைக் கொண்டுதான் உங்களுடைய சகாயச் சட்டங்களுள் பலவற்றில் சேமநிதியைப் பங்கிட்டுக் கொள்ளலாகாதென்று நிபந்தனை கண்டிருக்கிறது. இந்த சகாயச்சட்டம் இல்லாத சகல சங்கங்களிலும் இதை ஏற்படுத்துவது உங்களுக்கு நல்லதாகும்.

பங்கு மூலதனம் அதிகமாயிருப்பது சிலாக்கியமான விஷயமாகும்; சேலத்திலுள்ள சங்கங்கள் இவ்வளவு பங்கு மூலதனம் வைத்திருப்பது நல்லதே. இவைகள் இந்த மூலதனத்தை இன்னும் அதிகமாக்கப் பிரயத்தனப்படுவதுமல்லாமல், தங்களால் இயன்ற வகையில் விரைவாய் தங்களுடைய சேமநிதியையும் விருத்திசெய்ய முயலவேண்டும்; ஏனென்றால், இனி வரும் வருஷங்களில் சிறிது காலத்துக்கு நேரிடக்கூடிய கஷ்டங்களால்—இவ்வித கஷ்டங்கள் இந்த ஜில்லாவில் எப்பொழுதும் நேரிடக்கூடும்—சங்கங்களின் வேலையை சில நாட்களுக்குத் தள்ளிவைக்கவோ அல்லது நிறுத்திவைக்கவோ நேருமென்ற பயம் ஏற்படும்பொழுது, இந்த நிதி மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும்.

நாட்டுச் சங்கங்களின் விஷயத்திலே சேமநிதிக்கும் நிகரலாபத்துக்கும் நெருங்கின சம்பந்த மிருக்கிறது; ஏனெனில், ஒரு நாட்டுச் சங்கத்தின் நிகரலாப முழுவதும் சேமநிதியுடன் சேர்க்கப்பட வேண்டுமென்று ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறது. சேலம் ஜில்லாவிலுள்ள நாட்டுச் சங்கங்களின் வேலை நடத்துவதற்கான மூலதனமானது செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள நாட்டுச் சங்கங்களின் வேலை நடத்துவதற்கான மூலதனத்தில் ஐந்தில் நாலு பங்குக்குக் குறைந்திருந்தாலும், முன்னைய சங்கங்களின் நிகரலாபம் பின்னைய சங்கங்களின் நிகர லாபத்தைக்காட்டிலும் அதிகமாயிருப்பதாகக் காண்கிறோம். இது மனதில் கலக்கத்தை உண்டாக்கத்தக்க விஷயமேயாம்; ஆனால் இதற்குக்

காரணம் என்னவென்றால், வருஷ ஆரம்பத்தில் செங்கல்பட்டில் எத்தனை சங்கங்களிருந்தனவோ அத்தனையே சங்கங்கள் தான் சேலத்திலும் இருந்தனவென்றாலும், செங்கல்பட்டு சங்கங்களைக் காட்டிலும் சேலம் சங்கங்களுக்கு பங்கு மூலதனம் அதிகமாக விருந்ததேயாம்; செங்கல்பட்டு சங்கங்கள் இந்த வருஷத்தில் தங்கள் வேலை நடத்துவதற்கான மூலதனத்தை சேலம் சங்கங்களைவிட $1\frac{1}{2}$ லக்ஷம் அதிகமாக்கிக் கொண்டாலும், இந்த அதிகப்படியான தொகை ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்தின் பிற்பாகத்தில் தான் சம்பாதிக்கப்பட்டதாகையால், செங்கல்பட்டு சங்கங்கள் அதன்மேல் ஏராளமாய் வட்டி சம்பாதிப்பதற்கு அது போதுமான காலம் உபயோகத்திலில்லை. அடுத்த வருஷம் செங்கல்பட்டில் அதிகப்படியாய் சேகரிக்கப்படக்கூடிய வேலை நடத்துவதற்கான மூலதனம் வருஷ முழுவதும் அனுபோகத்திலிருக்குமாகையால், அதற்குள் சேலத்திலுள்ள சங்கங்களும் தாங்கள் செய்யாது விட்டிருந்த வேலையைப் பூர்த்திசெய்தாலொழிய, இந்த சங்கங்களைக் காட்டிலும் செங்கல்பட்டிலுள்ள சங்கங்களுக்கு அதிக நிகரலாபம் கிடைக்கும்.

இடையில், இந்த விஷயத்திலிருந்ததுபோல் மற்ற விஷயங்களிலும் மேலாகத் தென்படும் அம்சங்கள் மாற்றத்தை யுண்டாக்கக் கூடியவையாயிருக்கலாமாகையால், நிகரலாபத்தைக் கொண்டே சங்கங்களின் ஸ்திதியை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாதென்றும் இந்த உதாரணத்தினால் ஏற்படுகிறது.

பங்கு மூலதனத்துக்கு அடுத்தாப்போல் முக்கியமாயிருப்பவை, மெம்பர்களாலாயினுஞ்சரி மெம்பர்களல்லாதவர்களாலாயினுஞ்சரி கொடுக்கப்பட்ட கடன்களும் கட்டப்பட்ட டிபாஸிட்டுகளுமேயாம். மெம்பர்களால்கட்டப்பட்ட டிபாஸிட்டுகளுக்கும் மெம்பரல்லாதவர்களால் கட்டப்பட்ட டிபாஸிட்டுகளுக்கும் ஆக்டில் கண்டிருக்கும் வித்தியாசமென்னவென்றால், கடன் வாங்குவதற்கு சங்கத்துக்குள்ள உச்ச சக்தியை முன்னது பாதிக்காது, ஆனால் பின்னது பாதிக்குமென்பதே. டிபாஸிட்டுகள் எவ்வளவுக் கெவ்வளவு பங்கு மூலதனத்தை ஒத்திருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு உபயோகமுள்ளவையாயிருக்கும்; அவைகள் பங்கு மூலதனத்தை மிகவும் ஒத்திருப்பது எப்பொழுதெனில், அதைப்போலவே 5-வருஷத்துக்குக் கட்டப்பட்டிருந்தாலேயாம்; வேறுவிதமாய்ச் சொல்லுங்கால், நீண்ட காலத்துக்குக் கட்டப்பட்ட டிபாஸிட்டுகள் சிறிதுகாலத்துக்குக் கட்டப்பட்ட டிபாஸிட்டுகளைக் காட்டிலும் சிரேஷ்டமானவை; ஏனெனில், மேலே சொல்லப்பட்டதுபோல் டிபாஸிட்டுகள் நீண்ட காலத்துக்குக் கட்டப்பட்டால், சங்கமானது தன்னுடைய கடன்காரர்களுக்கு உத்தரவுசொல்வதில் அவைகளை உபயோகப்படுத்திக் கொள்வது சாத்தியமாகும். ஒரு சங்கம் நல்ல ஸ்திதியிலிருக்கிறதா வென்பதைக் காட்டுவதற்கு, அதில் கட்டப்பட்டிருக்கும் டிபாஸிட்டுகளின் தொகையும் காலமுமே தகுந்த அத்தாட்சியாம். இராஜதானியிலுள்ள 600 சங்கங்களுக்குள் 40 நாட்டுச் சங்கங்களில்தான் நீண்ட காலத்துக்கோ சிறிது காலத்

துக்கோ கட்டப்பட்ட டிபர்ஸிட்டுகள் 1000 ரூபாய்க்கு மேலிருக்கின்றன. இச் சங்கங்கள் இன்னின்னவை யென்று நான் பரிபாலன ரிபோர்ட்டில் விவரித்திருக்கிறேன்; இவைகளை முதல்தர சங்கங்களென்று நான் சொல்லுவேன்; இதற்குக் காரணங்கள் இப்பொழுது வியக்தமாய் ஏற்படுமென்று நம்புகிறேன். இந்த யோக்கிதையுடைய சங்கங்கள் சேலம் ஜில்லாவில் மூன்றுதான் இருக்கின்றன; அவை-8180 ரூபாய் டிபாஸிட்டுகள் கட்டப்பெற்றுள்ள சேலம் தாலூகாவிலிருக்கும் அய்யம்பட்டி சங்கமும், 1676 ரூபாய் டிபாஸிட்டுகள் கட்டப்பெற்றுள்ள க்ருஷ்ணகிரி தாலூகாவிலிருக்கும் ஜக்கலமுத்திரம் சங்கமும், 1606 ரூபாய் டிபாஸிட்டுகள் கட்டப்பெற்றுள்ள ஓமலூர் தாலூகாவிலிருக்கும் ஓமலூர் சங்கமுமேயாம். சேலம் ஜில்லாவிலுள்ள பாக்கி 70 நாட்டுச் சங்கங்களும் எவ்வளவு வேலை செய்யவேண்டுமென்று இப்பொழுது நமக்கு நன்றாய்த் தெரிகிறது. அவைகளெல்லாம் தாங்கள் வேலை நடத்துவதற்கான மூலதனமாக உபயோகப்படுத்தும் பொருட்டுப் போதுமான அளவுக்கு டிபாஸிட்டுகள் ஆகர்ஷிக்க முயலவேண்டும்.

சங்கங்களை இரண்டாந்தரமானவைகளாய் இருப்பதாக நிச்சயிப்பதற்கு எந்த விஷயத்தை ஆதாரமாகக் கொள்ளலாமென்று யோசிக்குங்கால் எந்தெந்த சங்கங்கள் ஒருவருஷத்தில் 100 ரூபாய் நிகரலாபம் சம்பாதித்தனவோ அவைகளையே இந்த வகுப்பில் சேர்ப்பது சிலாக்கியமென்று எனக்குத் தோற்றியது. இப்படிப்பட்ட சங்கங்கள் இந்த இராஜதானியில் 116 இருக்கின்றன; இந்த 116 சங்கங்களில் 40 க்குக் குறையாமல், அதாவது மூன்றில் ஒரு பங்கு, சேலத்திலிருக்கிறது; செங்கல்பட்டிலோ 16 சங்கங்கள்தான், அதாவது இரண்டாம் வகுப்புச் சங்கங்களின் மொத்த சங்கியையில் ஏழில் ஒரு பாகம்தான், இருக்கிறது. இன்று நான் ஒப்பிட்டுக்காட்டிய விஷயங்களில் இந்த அம்சத்தைப் பற்றி சேலம் பெருமை பாராட்டக்கூடும்; ஏனெனில், சேலம் சங்கங்களின் சேமநிதியானது செங்கல்பட்டு சங்கங்களின் சேமநிதியைக் காட்டிலும் மிகவும் அதிகமாயிருக்கிறதென்று இதனால் ஏற்படுகிறது. இதுடன் அவைகளுடைய பங்கு மூலதனமும் அதிகமென்பதை நாம் ஞாபகத்தில் வைத்தால், சேலத்தில் இப்பொழுதிருக்கும் சங்கங்களின் சங்கியையும் வேலை நடத்துவதற்கான மூலதனத்தின் மொத்தமும் மிகவும் குறைந்திருந்தாலும், பங்கு மூலதனம் விஷயத்திலும் நிகரலாபம் விஷயத்திலும் அது செங்கல்பட்டை மிஞ்சிவிட்டதென்று நமக்குத் தெளிவாய் ஏற்படும்.

சேலம்.

சங்கங்களின் சங்கியை 73

(202 கிராமங்கள்)

	ரூ.	அ.	ப.
ஆஸ்தியும் கடனும்	11,833	11	0
மெம்பர்களால் பாக்கியாயிருக்கும் கடன்கள்	3,71,530	15	3
ஜில்லாவிலுள்ள சங்கங்களுக்கெல்லாம் பாக்கியாயிருக்கும் வட்டி	12,826	7	11

1910-11-ம்வருஷத்தில் வரவுகள்.

	ரூ.	அ.	ப.
சங்கங்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள்	54,500	0	0

கடன்கள்.

மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள் ...	4,112	0	0
இதர சங்கங்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள்	3,09,426	8	0
பங்கு மூலதனம்	50,915	0	0
ஜில்லாவிலுள்ள சகல சங்கங்களாலும் பாக்கியாயிருக்கும் வட்டி	5,145	11	3
மெம்பர்களால் கட்டப்பட்டிருக்கும் டிபாஸிட்டுகள்	13,300	7	4
மெம்பர்களுக்குப் பாக்கியாயிருக்கும் தொகைகளின் மொத்தம்	64,491	13	4
மொத்த கடன்கள்	3,87,870	2	8
நிகரலாபம்	10,994	14	7

லாபமும் நஷ்டமும்.

கிடைத்த வட்டி	37,023	8	5
இதர பாபத்துகள்	789	5	5
மொத்தலாபம்	37,812	13	10
வட்டியில் செலுத்தப்பட்டதும் பாக்கியா யிருப்பதும் ...	25,896	1	7
சிப்பந்தி முதலியவை	857	4	1
மொத்தம்	26,817	15	3
நிகர லாபம்	10,994	14	7

செங்கல்பட்டு.

சங்கங்களின் சங்கியை 71+42=113 (180 கிராமங்கள்).

ஆஸ்தியும் கடனும்:—

	ரூ.	அ.	ப.
ஆஸ்தி.			
கையிலிருக்கும் ரொக்கம்	25	15	7
	7,471	4	8
	7,497	4	3
மெம்பர்களால் பாக்கியாயிருக்கும் கடன்கள்	2,244	0	0
	5,25,993	6	0
	5,28,237	6	0
ஜில்லாவிலுள்ள சகல சங்கங்களுக்கும் பாக்கியாயிருக்கும் வட்டி	78	18	1
	18,634	5	3
	18,713	2	4

	ரூ.	அ.	ப.
1910-1911-ம்ஞுத்தில் வரவுகள். சங்கங்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள்	1,97,328	2	3
கடன்கள்	1,050	0	0
மெம்பரல்லாதவர்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள் ...	33,618	14	7
	34,668	14	7
இதர சங்கங்களிடத்திலிருந்து வாங்கின கடன்கள்	4,30,254	15	4
ஜில்லாவிலுள்ள சகல சங்கங்களிலிருந்தும் பாக்கியாயிருக்கும் வட்டி	15	11	2
	7,999	9	4
	8,015	4	9
பங்கு மூலதனம்	350	0	0
	30,670	0	0
	31,020	0	0
மெம்பர்களால் கட்டப்பட்டிருக்கும் டிபாஸிட்டுகள்	504	0	0
	33,997	2	3
	34,481	2	3

இதர தேசங்களில் இந்த முயற்சியின் அபிவிருத்தி.

———:o):———

ருஷியா.

செல்வ நிலைக்கும் சமூகவாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட சமாசார சங்கத்தாரின் புல்லெடின் என்னும் வர்த்தமானியிலிருந்து எடுக்கப்பட்டது.

கூட்டுத்தொழில் முறையாய் பாற்கட்டி முதலியவை செய்வதற்கான தொழிற்சாலைகளின் அபிவிருத்தி.

கூட்டுத்தொழில் கோட்பாடானது பாற்கட்டி முதலியவை செய்வது விஷயமாய் பிரயோகிக்கப்பட்டிருக்கிற அளவுக்கு ருஷியாவில் விவசாய சம்பந்தமான வேறெந்த கைத்தொழில் விஷயமாயும் இதுவரையில் பிரயோகிக்கப்படவில்லை.

சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டு கூட்டுத்தொழில் முறையாய் நடத்தப்படும் வெண்ணெய்த் தொழிற் சாலைகள் ஸைபிரியாவில் விசேஷ அபிவிருத்தி யடைந்திருக்கின்றன.

குடியானவனுடைய வரும்படியையும் செலவையும் கூட்டுத்தொழில் எப்படி பாதித்ததென்பது.

எம். ஸாகௌல்ஸ்கி என்பவர் தம்முடைய விசாரணையி லிருக்கும் கூட்டுத்தொழில் முறையான வெண்ணெய்த்தொழிற் சாலைகளைப்பற்றிய கணக்குகளைத் தயார் செய்திருக்கிறார்; அதிலிருந்து ஏற்படுகிறதென்னவெனில், இந்த தொழிற் சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டது காரணமாக, அவைகளில் மெம்பர்களாக சேர்ந்துள்ள குடியானவர்களுக்குத் தங்களுடைய பாலுக்குக் கிடைக்கும் விலை அதிகமாகாமலிருக்கவில்லை யென்பதே. சராசரிக் கணக்குகள் அடியிற் கண்டபடி யிருக்கின்றன:—

	1899	1900	1901	1902	1903	1904	1905
பால் சர்ப்பரா செய்வதிலிருந்து குடியானவனின் வீட்டுக்குக் கிடைத்த வருஷாந்த வரும்படியின் சராசரி.	43·13	53·24	60·33	84·72	70·65	64·93	72·90
பசுவொன்றுக்கு சராசரி வரும்படி.	8·59	11·40	12·94	17·65	15·28	15·03	16·20
ஒவ்வொரு பசுவின் பாலுக்குச் சராசரி (பௌண்ட்)	27·2	29·8	29·4	34·1	31·1	33·2	33·1
ஒரு பௌண்ட் பாலுக்குக் கிடைத்த சராசரி விலை (கோபெக்குகள்.)	34·0	41·2	44·0	46·3	47·8	44·7	48·1

ஜர்மெனி.

செல்வநிலைக்கும் சமூக வாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட சமாசார சங்கத்தாரின் புல்லெடின் என்னும் வர்த்தமானியிலிருந்து எடுக்கப்பட்டது.

1870-ம்ஆவு முதல் 1879-ஆவு வரையிலுள்ள பத்து வருஷங்களில் தான் ஜர்மெனியில் கூட்டுத்தொழில் முறையாய் பாற்கட்டி முதலியவை செய்வதற்கான தொழிற்சாலைகள் முதன் முதல் ஏற்படுத்தப் பட்டன. இப்பொழுது, அவைகள் கூட்டுத்தொழில் முறையாய் உற்பத்தி செய்வதற்கான விவசாய சங்கங்களுக்கு வேண்டிய வஸ்துக்களில் பெரும்பாகத்தை சர்ப்பரா செய்கின்றன.

முதலாவது பாற்கட்டி முதலியவை செய்வதற்கான தொழிற்சாலையானது கீழ் ப்ரூஷியாவில் 1873-ம்ஆவுத்திலே ஸ்தாபிக்கப்பட்டது. கூட்டுத்தொழிலின் இந்தப் பிரிவு அதுமுதல் அதிசயிக்கத்தக்க விதமாய் அபிவிருத்தி யடைந்திருக்கிறது; இந்த அபிவிருத்தியானது, சங்கங்களின் சங்கியையினாலும், அவைகளால் விற்கப்பட்ட சரக்குகளின் தொகையினாலும், அவைகளில் உபயோகிக்கப்பட்ட பாலின் அளவினாலும் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

ஒன்று சேர்ந்து உழைப்பதனால் உற்பத்தியின் இந்தப்பிரிவில் எவ்வளவு லாபம் கிடைக்கக்கூடுமோ அவ்வளவும் கிடைக்கும்படி செய்வதே இந்தக் கூட்டுத்தொழில் சங்கங்களின் நோக்கமென்பது சகலருக்கும் தெரிந்த விஷயம்.

குறித்த ஒரு அளவுக்கு மாத்திரமே பால் உற்பத்திசெய்துவரும் குடியானவனொருவன் பாற்கட்டி முதலியவை செய்யும் தொழிலுக்கு இப்பொழுது அவசியமாயிருக்கும் திருத்தமடைந்த சாஸ்திரீய முறைகளைத் தனியாகவே அனுஷ்டிப்பது எப்பொழுதும் சாத்தியமாகாதென்பது சகஜமேயாம்.

ஜன சங்கியை விசேஷமாய் அதிகரித்திருப்பது காரணமாக பாலினின்றும் செய்யப்படும் சரக்குகள் வரவர அதிகமாக தேவையாயிருப்பதே இவ்வகைக் கூட்டுத்தொழில் சங்கத்தை நடத்துவதற்கு மிகவும் வலுத்த தூண்டுதலாயிருந்ததென்பதில் சந்தேகமில்லை.

லெபில்ட் என்பவரால், 1876-ம்ஆவுத்தில், வட்டைப் பிரித்தெடுப்பதற்கான ஸெண்ட்ரிப்யூகல் க்ரீம் ஸெபரேடர் என்னும் யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன் பலனாக, பாற்கட்டி முதலியவை செய்யும்தொழில் முழுவதிலும் சாதாரண நிலைமையிலுள்ள குடியானவனுடைய சக்திக்கு மிஞ்சின விலையுயர்ந்த கருவிகள் உபயோகிக்கப்படலாயின.

பெரிய பட்டணங்கள் அதி தீவிரமாய் விருத்தியடைந்து வந்ததனால் பாலும் வரவர அதிகமாய் வேண்டியிருந்தது. பால் விற்பனையானது அதிக

லாபகரமா யிருந்ததென்னமோ வாஸ்தவமே; ஆனால், பட்டணங்களில் கூட்டுத்தொழில் சங்கங்கள் ஸ்தாபித்து அதனால் நடுவிலுள்ள தரகர்களை ஒழித்துவிட்டால்தான் குடியானவர்கள் பட்டணங்களுக்குப் பால் சர்ப்பரா செய்வது சாத்தியமா யிருந்தது.

வருஷம்.	பாற்கட்டி முதலியவை செய்வதற்கான தொழிற் சாலைகளின் மொத்தம்.
1890	638
1895	1,222
1900	1,917
1905	2,832
1908	3,032
1909	3,279
1910	3,364

பெரும்பான்மையான கூட்டுத்தொழில் சங்கங்களில் (நூற்றுக்கு 60-ல்) பொறுப்பு வரையறுக்கப்படா திருக்கிறது; நூற்றுக்கு 38 சங்கங்களில் அது வரையறுக்கப்பட் டிருக்கிறது; நூற்றுக்கு 2 சங்கங்களில், அவசியமான பொழுது சங்கத்தார் தங்களுடைய கடன்காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளைச் சேகரிப்பதற்காக, மெம்பர்களின் உத்தரவாதம் வரையறுக்கப்படா திருக்கவேண்டு மென்னும் கோட்பாடே அனுசரிக்கப்படுகிறது.

பொறுப்பு வரையறுக்கப்படா திருக்கவேண்டு மென்னும் கோட்பாடைப்போல் ஐக்கிய நாணயச் சங்கங்களுக்குப் பொருத்த முள்ளது வேறெதுவு மில்லாததுபோல, எந்தக் கூட்டுத்தொழில் சங்கங்களின் மூலதனம் சிறிது மட்டில் சாஸ்திரீயக் கருவிகளை வாங்குவதில் உபயோகப் படுகிறதோ அந்தச் சங்கங்களின் விஷயத்தில் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கவேண்டு மென்னும் கோட்பாடே மிகவும் அனுகூலமா யிருப்பதாகக் காணப்படுகிறது. இந்த விஷயத்தில் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதனால், மெம்பர்களுக்குள் சங்கத்தின் ஊழியத்தில் அதிக சிரத்தை யெடுத்துக் கொள்பவர்களுக்கும் கொஞ்சம் சிரத்தை யெடுத்துக் கொள்பவர்களுக்கும் ஒரேவித உத்தரவாதம் ஏற்படுகிறது; மேலும், பொறுப்பு வரையறுக்கப்பட் டிருக்கவேண்டு மென்னும் கோட்பாட்டை அனுசரிப்பதனால், உற்பத்தி செய்வதற்கான கூட்டுத் தொழில் சங்கங்களில் சேரும் பணக்கார நிலச்சுவான்தார்களின் சங்கியையும் அதிகமாய்க் கொண்டே வருகிறது.

ப்ரான்ஸ்.

சகல சங்கங்களும் செய்த வேலையைப்பற்றிய சங்கிரகம்.

(செல்வ நிலைக்கும் சமூக வாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட சமாசார சங்கத்தாரின் புல்லெடின் என்னும் வர்த்தமானியி லிருந்து எடுக்கப்பட்டது.)

சங்கங்களின் தன்மை.	சங்கங்களின் சங்கியை.	மெம்பர்களின் சராசரி சங்கியை.	மூலதனத்தின் தொகை	மூலதனத்தின் சராசரி தொகை.	சர்க்கார் கடன்களின் தொகை	கடன்களுக்கான செலவுகளின் சராசரி.
பாற்கட்டி முதலியவை செய்யும் தொழிற் சாலைகளும் வெண்ணெய்த் தொழிற் சாலைகளும்	30	6009	856,810	28,560	1,334,930	12
பழச்சாலைகளும் பாலேட்டுத் தொழிற்சாலைகளும் ...	21	992	297,412	14,162	460,800	15
சாராய மிறக்கும் சங்கங்கள்.	27	2515	676,627	25,062	9[illegible]2,603	18
சாராயத்திலும் எண்ணையிலும் வர்த்தகம் செய்யும் சங்கங்கள்...	5	403	62,050	12,410	103,250	18
எண்ணெய் யந்திரச்சாலைகள்	5	484	50,187	10,037	68,250	17
திராவகம் இறக்குவதற்கான சாலைகள்	10	809	324,355	32,435	521,965	16
யந்திரங்களையும் விவசாய கருவிகளையும் வாங்கி மொத்தமாய் உபயோகிப்பதற்கான சங்கங்கள்	16	686	66,175	4,135	120,442	10
கூழ்ப்பசை தயார் செய்வதற்கான தொழிற்சாலைகள் ...	2	356	74,000	37,000	52,000	22
பலவகைப்பட்ட சங்கங்கள் ...	7	841	356,570	50,938	547,940	
மொத்தம்.	123	13095	2,764,185		4,132,180	

ஆஸ்ட்ரியா.

[செல்வ நிலைக்கும் சமூகவாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட சமாசார சங்கத்தாரின் புல்லெடின் என்னும் வர்த்தமானியிலிருந்து எடுக்கப்பட்டது.]

1907-ம் ஹுத்துக்கு முன்னேயே, விவசாய சம்பந்தமான சங்கங்களும் விவசாய சம்பந்தமில்லாத சங்கங்களுமுட்பட கூட்டுத்தொழில் சங்கங்கள் வருஷவாரியில் 800முதல் 900 வரையில் அதிகப்பட்டுக்கொண்டு வந்ததாகக் காணப்பட்டது; 1907-ம்ஹுத்தில் 1200 சங்கங்கள் அதிகமாய் ஏற்படுத்தப்பட்டன; அதற்கடுத்த இரண்டு வருஷங்களில், அதிகப்படியான சங்கங்களின் சங்கியை முறையே 1457-1537 ஆயிற்று. 1910-ம் ஹுத்தில் இப்படி அதிகரித்த சங்கங்களின் சங்கியை 1626 ஆகவிருந்தது, அதாவது நூற்றுக்கு 10·8 வீதம் ஆயிற்று; ஆனால் எடுத்து விடப்பட்ட சங்கங்களின் சங்கியையோ நூற்றுக்கு 1·8 வீதம் தான் ஆயிற்று.

கூட்டுத்தொழிலின் பற்பல வகைகள் எந்த சங்கியா பரிமாணப்படி அபிவிருத்தி யடைந்திருக்கின்றன வென்பதைப்பார்த்தால், அதிலிருந்து இந்த அபிவிருத்தி முறையில் விவசாய சம்பந்தமான கூட்டு முயற்சியின் நிலைமை எவ்வாறிருக்கிறதென்பதை அறியலாம்.

ஷுல்ஜ் டெலிட்ஷ் பாங்கிகள் நூற்றுக்கு 12·3 வீதமும், ராய்பெய்சென் பாங்கிகள் நூற்றுக்கு 7·2 வீதமும் விவசாய சம்பந்தமான இதர கூட்டுத்தொழில் சங்கங்கள் நூற்றுக்கு 14·8 வீதமும், அதிகரித்திருக்கின்றன; கூட்டுத்தொழில் முறையாய் சரக்குகளை மொத்தமாய் வாங்கி சில்லறையாய் விற்பதற்கான சங்கங்கள் நூற்றுக்கு 10·9 வீதம் அதிகரித்திருக்கின்றன. மொத்தத்தில் விசேஷமாய் அதிகரித்திருப்பவை (511) ராய்பெய்சென் பாங்கிகள் தான்; இவைகளுக்குள் எடுப்பட்டுப் போனவைகளின் சங்கியை மிகவும் குறைவாயிருக்கிறது; அவைகளின் ஸ்திரத்துவமும் பலமான ஒழுங்கேற்பாடுமே இதற்குக் காரணம். இதர கூட்டுத்தொழில் சங்கங்களின் சங்கியையும் அதிகரித்திருக்கிறது (379); ஆகவே இப்போது ஆஸ்ட்ரியாவிலிருக்கும் சகல கூட்டுத்தொழில் சங்கங்களிலும் சுமார் நூற்றுக்கு 64 விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழில் சங்கங்களாயிருக்கின்றன. விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழில் சங்கங்களி விஷயமாய் நாம் கவனிக்க வேண்டியது அவைகளின் சங்கியையில் ஏற்பட்டுள்ள விசேஷ அதிகரிப்பு மாத்திரமேயல்ல; அவைகளுக்குள் எடுபட்டுப்போனவைகளின் சங்கியை மிகவும் குறைவாயிருப்பதையும் நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டும். ஆனால் முக்கியமாய் சொற்ப கைத்தொழிலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் கைத்தொழில் சம்பந்தமான இதர கூட்டுத்தொழில் சங்கங்களுக்கும் கடன் கொடுப்பதையே நோக்கமாகவுடைய ஷுல்ஜ் டெலிட்ஷ் பாங்கிகளோ வெனில் இவைகளைவிட ஜாஸ்தியாக அதிகரித்திருக்கின்றன வென்றாலும், அவைகளில் எடுபட்டுப்போனவை

களின் சங்கியையும் அதிகமாகவே யிருக்கிறது. வாஸ்தவத்தில், ராய்பெய்ஸென் பாங்கிகளில் புதியவைகளின் சங்கியை 511 ஆகவும் எடுபட்டுப் போனவைகளின் சங்கியை 13 ஆகவும், இதர கூட்டுத்தொழில் சங்கங்களில் புதியவைகளின் சங்கியை 379 ஆகவும் எடுபட்டுப் போனவைகளின் சங்கியை 74 ஆகவும், இருக்க, ஷூல்ஜ் டெலிட்ஷ் பாங்கிகளில் இதே சங்கியை 364 ஆகவும் 66 ஆகவும் கைத்தொழில் சம்பந்தமான கூட்டுத்தொழில் சங்கங்களில் இதே சங்கியை 133 ஆகவும் 61 ஆகவும் இருக்கிறது.

ராய்பெய்ஸென் பாங்கிகளைத்தவிர பொறுப்பு வரையறுக்கப்பட்டிராத மற்ற எல்லா புதிய கூட்டுத்தொழில் சங்கங்களின் விஷயத்திலும் அவைகளின் சங்கியை படிப்படியாய்க் குறைந்துகொண்டே வருவது கவனிக்கத்தக்க விஷயமாம். 1910-ம் வருஷத்தில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட 1625 கூட்டுத்தொழில் சங்கங்களிலே மூன்றிலொருபங்கு, அதாவது 538 சங்கங்கள், பொறுப்பு வரையறுக்கப்படாமல் ஏற்படுத்தப்பட்டன; ஆனால் இவைகளிலிருந்து 511 ராய்பெய்ஸென் பாங்கிகளைக் கழித்துவிட்டால், பொறுப்பு வரையறுக்கப்படாத புதிய கூட்டுத்தொழில் சங்கங்கள் 27 தான் பாக்கிநிற்கின்றன; இவைகளில், ஷூல்ஜ் டெலிட்ஷ் பாங்கிகள், 22 விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழில் சங்கங்கள், 4 கூட்டுத்தொழில் முறையாய் சரக்குகளை மொத்தமாய் வாங்கி சில்லரையாய் விற்பதற்கான சங்கம் 1.

பெல்ஜியம்.

1911-ம் ஹு ஜனவரிமீ 21உ யன்றும் மார்ச் மீ 29உ யன்றும் நடந்த ப்ரஸ்ஸெல்ஸ் டெய்ரி காங்க்ரெஸின் விஷயமாய் செல்வ நிலைக்கும் சமூக வாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட சமாசார சங்கத்தாரைச்சேர்ந்த புல்லெடீன் என்னும் வர்த்தமானியிலடங்கிய ரிபோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

பெல்ஜியம் தேசத்திலே பாற்கட்டி முதலியவை செய்யும் தொழிலில் கூட்டு முயற்சியானது விசேஷமாய் அனுஷ்டிக்கப்படுகிறதென்பது யாவர்க்கும் தெரிந்தவிஷயம்; மேலேகண்ட காங்ரெஸ்ஸானது இந்த விஷயத்தைக் குறித்து அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறது. பெல்ஜியத்தில், அதிலும் முக்கியமாய் லிம்பர்க், லக்ஸெம்பர்க், ப்ரபாண்ட், இரண்டு ப்ளாண்டர்ஸ், இந்த மாகாணங்களில், பாற்கட்டி முதலியவை செய்வதற்கான கூட்டுத்தொழில் சங்கங்கள் நிறைந்திருக்கின்றன. 1908-ம் ஹு த்தில் இந்த சங்கங்களின் சங்கியை 609 ஆக விருந்தது; இதில், 506 சங்கங்கள் நன்றாய் வேலைசெய்துகொண்டிருந்தன; இவைகளில், 47,185 மெம்பர்களிருந்தது மல்லாமல், இவைகளின் வசத்தில் 1,36,803 பசுக்களுமிருந்தன. இவைகளால் விற்கப்பட்ட சரக்குகளின் விலை மதிப்பு 33,458,953 ப்ராங்குகளாயிற்று; இதில் 31,917,852 ப்ராங்குகள் வெண்ணெய்க்காகக் கிடைத்தது. இந்தத் தொழிற்சாலைகளிலே 537 ல் கையினால் வேலைசெய்யப்படுகிறது; சிறிய கூட்டுத்தொழில் சங்கங்கள் இந்த மாதிரியையே பின்பற்றி யிருக்கின்றன; லிம்பர்க்கிலும்

வடக்கு ப்ரபாண்டிலும் இந்த மாதிரியானது வெகுதூரம் பரவியிருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பதற்கு 1500 ப்ராங்குகள் முதல் 4000 ப்ராங்குகள் வரையில் பிடிக்கிறது. மற்ற தொழிற்சாலைகளில் நீராவியைக் கொண்டு வேலை நடத்தப்படுகிறது; இவைகளிலுள்ள ஏராளமான யந்திரங்கள் 3000 லிடர்கள் பால்முதல் 20,000 லிடர்கள் பால் வரையில் பாற்கட்டி முதலியவை செய்வதற்காக உபயோகிக்கக் கூடியவையா யிருக்கின்றன. இவைகளை ஸ்தாபிப்பதற்கு 15000. ப்ராங்குகள் முதல் 50,000 ப்ராங்குகள் வரையில் பிடிக்கிறது; சில வேளைகளில் இதற்கு அதிகமாகவும் பிடிக்கிறது. இந்த நீராவித் தொழிற்சாலைகள் ஹைநௌட்டிலும், ப்ரபாண்டிலும், கீழ் ப்ளாண்டர்ஸிலும், மேல் ப்ளாண்டர்ஸிலும் அதிகமாய்க் காணப்படுகின்றன.

இந்தியாவில்.

1910–1911-ம் ஹு த்துக்கு பர்மாவின் வருஷாந்த பரிபாலன ரிபோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

நகரச்சங்கங்கள்.—வருஷமுடிவில் 1788 மெம்பர்களுடனும் சராசரியில் 10,000 ரூபாய் மூலதனத்துடனும் 27 நகரச்சங்கங்களிருந்தன. இவைகளில் 10 சங்கங்கள் குமாஸ்தாக்களும் இதர ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் சேர்ந்துள்ளவை; இவைகளின் நிர்வாஹத்திலும் நிலைமையிலும் எதிர்பாராத விதமாய் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் பிரதமத்தில் எதிர்காலசகாய நிதிகள் என்பதை இவைகள் அறிய ஆரம்பித்திருக்கின்றன. இதன் பலனாக, சில காலத்துக்கு முன் மிக்க ஊழலான நிலைமையிலிருந்த க்ரௌளக்ஸ் சங்கம் இப்பொழுது 3000 ரூபாய் மிகுத்தி அப்பர் பர்மா ஸென்ட்ரல் பாங்கியில் டிபாஸிட்டாகக் கட்டியிருக்கிறது. ஸகாய்ங்கில் நடவடிக்கை முறையே மாறிவிட்டது; அங்கு இப்பொழுது பாக்கி என்பதேயில்லை; அதுவும் தன்னுடைய நிதிகளில் ஒரு பாகத்தை ஸென்ட்ரல் பாங்கியில் டிபாஸிட்டாகக் கட்டியிருக்கிறது. மௌபின் ப்பாலீஸ் சங்கமானது மறுபடியும் ஒழுங்காயமைக்கப்பட்டு இப்பொழுது நன்றாய் நிர்வஹிக்கப்பட்டு வருகிறது.

1910–1911-ம் ஹு த்துக்கு வங்காளத்தின் வருஷாந்த ரிபோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

பொது அபிவிருத்தியின் சங்கிரகம்.

4. இந்த வருஷத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியானது அடியிற்கண்ட அட்டவணைகளில் கண்டிருக்கிறது.

சங்கங்கள்.

	ஸென்ட்ரல்	நகரம் வரையறுக்கப்பட்டது.	நகரம் வரையறுக்கப்படாதது.	நாட்டு ரொக்கம்	நாட்டு தானியம்	மொத்தம்.
1909—10	4	25	22	456	4	511
1910—11	8	34	19	650	4	715

மெம்பர்கள்.

	ஸென்ட்ரல் வரையறுக்கப் பட்டது	நகரம் வரையறுக்கப் படாதது.		நாட்டு ரொக்கம்	தானியம்	மொத்தம்.
1909—1910	96	3,145	461	18,883	286	22,871
1910—1911	335	4,269	466	29,903	277	35,250

வேலை நடத்துவதற்கான மூலதனம்.

	ஸென்ட்ரல் ரூ.	நகரம் வரையறுக்கப் பட்டது	வரையறுக்கப் படாதது.	நாட்டு ரொக்கம்	தானியம்	மொத்தம்.
1909—1910	1,00,710	1,46,639	9,043	4,40,601	591	6,96,993
1910—1911	1,89,933	2,20,137	6,792	6,78,517	617	10,95,379

சங்கங்களின் சங்கியையானது 511 லிருந்து 715 ஆக அதிகரித்திருக்கிறது. முப்பத்திரண்டு ரெஜிஸ்டர் செய்ததற்கான ஸர்டிபிகேட்டுகள், முக்கியமாய் சித்ரபூரில், ரத்து செய்யப்பட்டன. நம்முடைய வேலையில் தவறுதல்கள் நேராமலிருக்கவுமில்லை; சிற்சில சமயங்களில் நாம் பிசகாக வேலையை ஆரம்பிக்காமலிருக்கவு மில்லை; வங்காளத்தில் இந்த முயற்சியை ஸர்க்கார் உத்தியோகஸ்தரல்லாதவர்களே முழுவதும் விருத்தி செய்து மேற்பார்வையிட்டு வருவதால், சில சமயங்களில் இந்த மேல் விசாரணை போதாமலிருப்பதும், சில விஷயங்களில் ஊக்கம் குறைவாயிருப்பதும் நாம் எதிர்பார்க்க வேண்டிய விஷயங்கள் தான். ஒரு பிரதேசத்தில் மாத்திரம், அதாவது சித்ரபூரில் இந்த முயற்சி பலிதமடைய வில்லையென்று நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம்; இங்கு சுமார் 100 சிறிய சங்கங்களை எடுத்து விடுவதற்கு ஏற்பாடுகள்செய்யப்பட்டு வருகின்றன. இதரபிரதேசங்களிலே, சாதாரணமாய் பூர்ண ஞானமில்லாததனாலாவது மேற்பார்வைக் குறைவினாலாவது ஒவ்வோரிடத்தில் வேலை சரியாக நடத்தப்படவில்லை. நன்றாய் வேலை செய்யாத சங்கங்கள் இருப்பதனால் இந்தமுயற்சியின் அபிவிருத்தியே தடைப்படுமாகையால், நான் இன்னும் 30 சங்கங்கள் முதல் 50 சங்கங்கள் வரையில் எடுத்துவிட வேண்டுமென்று யோசித்திருக்கிறேன். மார்ச் மீ 31உ யன்று வாஸ்தவத்தில் பலிதத்துடன் வேலைசெய்து வந்த சங்கங்களின் சங்கியை ஏறக்குறைய 550 ஆயிற்று.

மெம்பர்களின் சங்கியையானது 22,871 லிருந்து 35,250 ஆக, அதாவது 12,379 அதிகரித்திருக்கிறது; வேலை நடத்துவதற்கான மூலதனமும் 6,96,993 ரூபாயிலிருந்து 10,95,379 ரூபாயாக, அதாவது நாலுலக்ஷம், அதிகரித்திருக்கிறது. இந்தத் தொகையில் ரூ. 1,69,340 ஸென்ட்ரல் சங்கங்களால் மூலதனமாகச் சவதரிக்கப்பட்டது. மெம்பர்களால் சவதரிக்கப்பட்ட தொகையானது 2,21,956 ரூபாயிலிருந்து 3,82,330 ரூபாயாக அதிகரித்திருப்பது திருப்திகரமான விஷயமாகும். உள்ளூரிலேயே மூலதனத்தைச் சேகரிக்கும் விஷயத்தில் சிறிதுமட்டில் அபிவிருத்தி யேற்பட்டிருக்கிறது;

ஆனால் உள்ளூரிலுள்ள திரவியவந்தர்கள் பணம்கொடுக்க இன்னும் பின்வாங்குகிறார்கள். ஆயினும் கொஞ்சகாலம்போனால் வட்டிக்குப் பணம்போட்டுவைப்பதற்கு இச்சங்கங்கள்தான் மிகவும் பத்திரமான ஸ்தாபனங்களென்பதை அவர்களே ஒப்புக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அப்படி அவர்கள் ஒப்புக்கொள்ளும்வரையில், நாம் முக்கியமாகப் பொதுவாய்க் கிடைக்கக்கூடிய திரவியத்தையே நம்பியிருக்கவேண்டி யிருக்கிறது. நமது அதிர்ஷ்டவசத்தால் மூலதனம் கொடுப்பதாய் முன்வருபவர்கள் இல்லாமற் போகவில்லை; நமக்குவேண்டிய அளவுக்கு அதிகமாகவே நமக்குப் பணம்கிடைக்கக்கூடியதாயிருக்கிறது.

இலக்கங்களைக்கொண்டு கணக்கிடக்கூடியதாய் ஸ்பஷ்டமாய்த் தெரியும் அபிவிருத்தியைப்பற்றி இதுவரையில் சொன்னோம். வெளிப்படையாய்த் தெரியாமலும் அநேகவிஷயங்களில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. முன்னிலும் பூர்த்தியாயுள்ள திரவிய சம்பந்தமான ஏற்பாட்டை அதி விஸ்தாரமாய் அனுசரிப்பது ஒவ்வொரு வருஷமும் சாத்தியமாய்க்கொண்டு வருகிறது. சங்கங்கள் மெம்பர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு உபயோகமுள்ளவை யாகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவைகள் திறமையுடன் பரிபாலிக்கப்படுகின்றன. வேலை இப்பொழுது முன்னிலும் புத்திசாலித்தனமாய் நடத்தப்பட்டு வருகிறது; மேல்விசாரணையும் முன்னிருந்ததைக்காட்டிலும் நன்றாயிருக்கிறது. திரவிய சம்பந்தமான காரியங்களுக்காகவும் மேல்விசாரணைக்காகவும் சங்கங்களை ஒன்றுசேர்த்து மத்தியஸ்தாபனங்களை ஏற்படுத்துவதன் நோக்கத்தை இப்பொழுது ஜனங்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஸென்ட்ரல் பாங்கிங் யூனியன்களின் சங்கியையானது 4 லிலிருந்து 8 ஆக அதிகரித்திருக்கிறது; அவைகளின் வேலையும் மொத்தத்தில் திருப்திகரமாகவே யிருக்கிறது; இந்த வேலையிலிருந்து இம்மாதிரி ஸ்தாபனங்களை இன்னும் அதிகமாய் ஏற்படுத்திப் பார்க்கலாமென்று தோன்றுகிறது. ஆகவே மாகாண முழுவதிலும் பிரயோஜனகரமாய் வேலை செய்யக்கூடிய கூட்டுத்தொழில் முறையொன்றை நாம் அனேகமாய்க் கண்டுபிடித்து விட்டோமென்றே சொல்லலாம். கடைசியாக, பொது ஜனங்களின் சிரத்தையும் சந்தேகமில்லாமல் விருத்தியாய்க்கொண்டு வருகிறது. யாதொரு பிரதி பலனுமில்லாமல் எனக்கு ஒத்தாசை செய்வதாக ஏராளமான நபர்கள் இதுவரையில் முன்னுக்கு வரவில்லை; ஆனால் எனக்குப் பின்வருபவர்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட கௌரவார்த்தமான உதவி யேற்படுமென்று கோருகிறேன். இவ்வித ஒத்தாசை யிருந்தாலொழிய இந்த முயற்சி நிலையான சக்தியுடையதாக மாட்டாதென்பது நிச்சயம்.

கூட்டுத்தொழிலின் இதர வகைகள்.

கூட்டுத்தொழிலின் இதர வகைகளைப் பின்வரும் தலைப்புகளின்கீழ் பிரிக்கலாம்; அவையாவன; கூட்டுத்தொழில் முறையாய் சர்ப்பரா செய்வது,

கூட்டுத்தொழில் முறையாய் விற்பனைசெய்வது, கூட்டுத்தொழில் முறையாய் உற்பத்தி செய்வது. இதர மாகாணங்களில் சில கூட்டுத்தொழில் முறையான ஸ்டோர்கள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றனவென்று நான் அறிகிறேன். 1904-ம்வருஷத்து 10-வது ஆக்டின்படி அப்படிப்பட்ட சங்கங்களை ரெஜிஸ்டர் செய்யக் கூடாதென்று இந்த மாகாணத்தின் லீகல் ரீமெம்பரென்ஸர் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார். ஆகையினால், மாதிரிக்காக சகாயச் சட்டங்களைத் தயார் செய்வதற்குமேல், கூட்டுத்தொழிலின் இதர வகைகளை விருத்திசெய்வதற்காக நான் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த மாகாணத்தில் சில கூட்டுத்தொழில் முறையான ஸ்டோர்கள் இருக்கின்றன; அவைகளில் பெரும்பாலானவை எந்த ஆக்டின்படியும் ரெஜிஸ்டர் செய்யப்படவில்லையென்று நான் நினைக்கிறேன். பாருய்பூரில் ஊக்கத்துடன் வேலைசெய்துவரும் சங்கத்தால் சென்ற நவம்பர் மீத்தில் ஸ்டோர்ஸ் சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது. 2500 ரூபாய் மூலதனத்துடன் அது மிதமாய் வேலைசெய்யத் தொடங்கி, முதல் அரை வருஷத்திலேயே 2000 ரூபாய்க்கு வியாபாரம் நடத்திற்று. இனி மேலும் அது நன்றாய் வேலைசெய்யுமென்று தோன்றுகிறது. டாகியிலுள்ள சங்கமானது திருத்தப்பட்ட ஆக்ட் ஜாரியானவுடனே ஒரு ஸ்டோர் ஏற்படுத்துவதாக எண்ணங்கொண்டிருக்கிறது; மற்ற சங்கங்களும் இம்மாதிரி ஸ்டோர்கள் ஸ்தாபிக்க ஆரம்பிக்குமென்பதில் சந்தேகமில்லை. பாதர் ஹாப்மன்என்பவர் இதைவிட அதிகபலன் கொடுக்கக்கூடிய ஒருகாரியத்தைச் செய்திருக்கிறார்; அதாவது, சோடாநாக்பூரிலுள்ள பூர்வீக குடிகளின் நிலைமையைச் சீர்படுத்துவதற்காக அவர்செய்திருக்கும் ஏற்பாட்டை அனுசரித்து அவருடைய நாணயச் சங்கத்துடன் கலந்து வேலை செய்யும்படி ஒரு வர்த்தக சங்கத்தையும் ஸ்தாபித்திருக்கிறார். இந்த பூர்வீக குடிகளுக்கு திரவிய சம்பந்தமாய் எவ்வளவு ஸ்வாதீனம் இருப்பது சாத்தியமோ அவ்வளவும் இருக்கும்படி செய்யும் நோக்கத்துடன், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளைக் கூட்டுத் தொழில் முறையாய் விற்பது, ஜீவனத்துக்கவசியமான சாமான்களைக் கூட்டுத்தொழில் முறையாய்ச் சர்ப்பரா செய்வது, ஆகிய இவ்விரண்டு வேலையையும் தானே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அது உத்தேசித்திருக்கிறது. விற்பனையைப் பற்றிய விவகாரம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை; ஏனெனில், அதற்கு பெருத்த மூலதனமும், போக்குவரத்துக்குரிய போதுமான சாதனங்களும், விற்பனை செய்வதற்கான ஒரு சிப்பந்தியும் அவசியம். ஆனால், கூட்டுத்தொழில் முறையாய்ச் சாமான்களைச் சர்ப்பராசெய்யும் விஷயத்தில் விசேஷ அபிவிருத்தி யேற்பட்டிருக்கிறது. கிராமாந்திரங்களில் ஸ்டோர்கள் ஸ்தாபிப்பதைப் பற்றி இப்பொழுது யோசிப்பதற்கே இடமில்லை ஜனங்களுக்கு அவைகளை நிர்வஹிக்கக் கூடிய சக்தியென்னமே ஜனங்களுக்கு இல்லை அப்படியிருந்தாலுங்கூட அவைகளை நடத்துவது சாத்தியமாயிருப்பதற்கு எவ்வளவுமட்டில் அவைகளின் ஆவசியகத்தை ஜனங்கள்

தெரிந்துகொண் டிருக்கவேண்டுமோ அவ்வளவுமட்டில் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. ஆகையினால், ரஞ்சியில் ஒரு ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸும் மிஷனைச் சேர்ந்த வெவ்வேறு வட்டங்கள் முழுவதிலும் கிளைகளுமே இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது கஷ்டமான வேலை; அதிலும் இந்தப் பூர்வீக குடிகளுக்குள் வாலிபர்களை வர்த்தக முறையாய் வேலைசெய்யும்படி பயிற்றுவிப்பதே மிகவும் கஷ்டமான விஷயமாயிருக்கிறது. ஆயினும், பாதர் ஹாப்மன் இந்தக் கஷ்டங்களுடன் போராடி ஜெயிப்பாரென்றே நான் நம்புகிறேன். நான் விவரங்களைப் பற்றிப் பேசக்கூடிய ஸ்திதியிலில்லை; ஆனால் ஸ்டோர்ஸானது ஏற்கனவே ஏராளமான வேலை நடத்துகிறதென்று அறிகிறேன்.

கூட்டுத்தொழில் முறையாய் விற்பதும் உற்பத்தி செய்வதும் இது வரையில் அனுசரிக்கப்பட வில்லை. என்னுடைய சொந்த அபிப்பிராயமென்னவெனில், இந்த மார்க்கங்களில் சிலகாலம் வரைக்கும் அதிக அபிவிருத்தி ஏற்படாதென்பதே. நம்முடைய நாணயச்சங்கங்கள் அப்போதைக்கப்போது விவசாயத்தின் நிலைமையைக் குறித்து மாத்திரமே கவனிக்கவேண்டி யிருக்கிறது; இந்த சுலபமான வேலைக்கும் பற்பல சரக்குகளில் வியாபாரம் நடத்தும் சிக்கலான விஷயங்களையும் வர்த்தக சம்பந்தமாய் அனுஷ்டிக்கப்படும் முறைகளையும் கவனிப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. ஆயினும் நாணயத்துக் கடுத்தாப்போல் விவசாய இந்தியாவுக்கு அத்தியாவசியமான விஷயம் கூட்டுத்தொழிற் முறையாய் விற்பனை செய்வதற்கான ஏற்பாடேயாம்; ஏனெனில், விவசாயி அறுவடை செய்யும் பயிர்களில் பலவற்றிற்கு முழு விலையும் அவனுக்குக் கிடைப்பதில்லையென்பது நன்றாய்த் தெரிந்த விஷயம். கலிம்பாங்கில் செய்யப்படும் விலையுயர்ந்த ஏலக்காய்ப் பயிர் விஷயத்தில் இது வெட்ட வெளிச்சமா யிருக்கிறது; இந்தப் பயிர் சம்பந்தமான வர்த்தகம் முழுவதும் உள்ளூரிலுள்ள மஹாஜனங்கள் (ஸௌகார்கள்) வசத்திலே யிருக்கின்றன. இந்த வருஷத்தில், விற்பனை சங்கமொன்றை ஸ்தாபிப்பது சுலபமா யிருக்குமாறு சிறிதுமட்டில் கூட்டுவிற்பனை செய்து பார்த்து பார்ப்பதாய் உத்தேசிக்கிறேன்.

கூட்டுத்தொழிலின் பலன்கள்.

ஒரு கிராமச் சங்கமானது ஸௌகாரின் ஸ்தானத்திலிருக்கக் கூடிய திருத்தமடைந்த ஸ்தானமா யிருப்பது மாத்திரமே யல்லாமல், அது மெம்பர்களின் நல்லொழுக்கத்தைப் பலப்படுத்தி அவர்களுக்குப் புதிய எண்ணங்களுண்டாகும்படி தூண்டி, ஊக்கத்தை விருத்திசெய்து, பொது வாழ்க்கை முன்னிலும் நன்றாயிருப்பதையும் கிராம பரிபாலனம் முன்னிலும் திறமையுடன் நடத்தப் படுவதையும் சாத்தியமாக்குகிறதென்றும் சொல்லப்படுகிறது. திரவிய சம்பந்தமாய் மாத்திரம் அதனால் ஏற்படும் அனுகூலங்களைப் பற்றி அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. மெம்பர்களுக்கு அவை ஸ்பஷ்ட

மாய்த் தெரிந்திருக்கின்றன. அநேகர் ஸௌகார்களால் நாமகார்த்தமாய் விதித்து வாங்கப்படும் வட்டியைக் காட்டிலும் அதிக வட்டி வீதங்களின்படி கூடங்களுடைய கடன்களை சங்கங்களிடத்தில் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று ஆவல் கொண்டதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள்—சங்கத்தார் கபடில்லாமல் அனுதாபத்துடன் விவகாரம் நடத்தும் கடன்காரர்களென்பதையும், தங்களுக்கு எவ்வளவு நாணய மிருக்கிறதோ அவ்வளவுக்கு அவர்கள் கடன் கொடுப்பார்க ளென்பதையும், வட்டிமேல் வட்டி சுமத்தமாட்டார்க ளென்பதையும், பொதுவாய் அமுலிலுள்ள வீதத்தைக் காட்டிலும் மிகவும் குறைந்த வீதத்துக்குத் தானிய ரூபாய் தொகை செலுத்தவேண்டு மென்று கேட்க மாட்டார்களென்பதையும், அறுவடைப் புலத்திலிருந்தே மாசூலை எடுத்துக்கொண்டு போய்விடமாட்டார்களென்பதையும், தங்களுடைய மாசூலை நஷ்டத்துக்கு விற்கும்படி நிர்ப்பந்திக்க மாட்டார்க ளென்பதையும், ஸௌகாரின் வட்டியை அதன் நாமகார்த்தமான வீதத்தைக் காட்டிலும் மிகவும் அதிகப்படுத்தும் வேறெவ்வித இடைஞ்சல்களையும் செய்யமாட்டார்க ளென்பதையும் அறிவார்கள். மனிதனை ஒரே அமுக்கமாய் அமுக்கிவிடக்கூடிய கடன்பளுவைத் தீர்த்துவிட்டதற்கும், நிலம் குதுவையிலிருந்து மீட்கப்பட்டதற்கு அல்லது விற்பனை செய்யப்படுவதனின்றும் காக்கப்பட்டதற்கும், கடனைத் தீர்க்கச் சக்தியில்லாமல் இன்ஸால்வெண்டாகும் ஸ்திதியிலிருந்தவர்கள் புதிய ஊக்கத்துடன் ஜீவனம் நடத்த ஆரம்பித்ததற்கும், செல்வநிலை சம்பந்தமாய் ஏற்பட்ட நூற்றுக் கணக்கான இதர அனுகூலங்களுக்கும் நான் அநேக உதாரணங்கள் எடுத்துக் காட்டக்கூடும். ஆனால் கேவலம் செல்வநிலை சம்பந்தமாய் மாத்திரமன்றி வேறு வழிகளிலும் சங்கத்தினால் அனுகூலம் ஏற்பட்டிருக்கிறது. படிக்கவேண்டுமென்ற ஆசை அதிகரித்து வருகிறது; அநேக சங்கங்கள் தங்களுடைய கிராமப் பள்ளிக்கூடங்களுக்கு மாதாமாதம் சந்தா செலுத்தி வருகின்றன; சுகாதார விஷயமாயும் இதர விஷயமாயும் கிராமத்துக்கு அவசியமாயுள்ளவைகளையும் கிராமத் தொழில்களையும் அந்த கிராமத்தில் அனுஷ்டிக்கப்படும் விவசாயசம்பந்தமான ஏற்பாட்டையும் போன்ற விஷயங்களைக் குறித்து மிகவும் புத்தி சாதுரியத்துடன் தர்க்கித்துத் தீர்மானங்கள் செய்யப்படுவதை நான் அடிக்கடி கண்டிருக்கிறேன். சீர்திருத்தமான முறைகளைப்பற்றிய ஞானத்தைப் பரவச் செய்வதில் விவசாய இலாகாவுக்கு போகப்போக இந்த சங்கங்கள் அதிக உபயோகமுள்ளவைகளா யிருக்குமென்று எனக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறது. நாவாடாவில், உள்ளூரிலிருக்கும் விவசாய சங்கமொன்றை ஸென்ட்ரல் யூனியனுடன் சேர்ப்பதற்கு எத்தனம் செய்யப்பட்டுவருகிறது. ஜனங்களின் வாழ்க்கையை சங்கம் எப்படி பாதிக்கிறதென்பதற்கு உதாரணமாக, நெடுநாளாய் ஏற்பட்டிருந்த கிராமச் சண்டைகள் தீர்க்கப்பட்டுப்போய் ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்த உபய கக்ஷிகளும் ஒரே சங்கத்தில் அன்னியோன்யமாய் உழைப்பதை நான் எடுத்துக் காட்டக்கூடும். பஞ்சாயத்தாரின் அலுவல்கள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. விவாதங்கள் எங்கெங்கே நேருகின்றனவோ அவ்வவ்விடத்திலேயே

அவைகளை மத்தியஸ்தர் மூலமாய்த் தீர்த்துவிடும் வழக்கம் சகஜமாய்க் கொண்டுவருகிறது; இப்படி தீர்க்காவிட்டால் இந்த விவாதங்களெல்லாம் கோர்ட் வரையில் போகக்கூடியவை. சில விஷயங்களில் மாஜிஸ்ட்ரேட்டுகள் விவாதங்களைத் தீர்மானிப்பதற்காக பஞ்சாயத்தாரிடத்தில் அனுப்புகிறார்கள். பங்கியிலுள்ள பல சங்கங்களில், பஞ்சாயத்தார் பொதுஜனங்களின் சம்மதத்தின்மேல் உள்ளூரில் ஏற்படும் அற்ப கேசுகளை எடுத்துக்கொண்டு, சிறிய அபராதங்கள் விதித்து, அதனால் கிடைக்கும் தொகையை ஒரு நிதியாகச் சேர்த்து, அந்த ரோட்டுகள் விஷயமாகவும் இதரவிஷயமாகவும் கிராமத்தில் அற்ப சீர்திருத்தங்கள் செய்வதற்காக உபயோகிக்கிறார்கள். இந்த சம்பவங்களிலிருந்து இனி செல்வநிலை செழித்தோங்கு மென்றும் கிராமவாழ்க்கையானது பலப்பட்டு அதன் விவகாரங்கள் முன்னிலும் நன்றாய் நடந்தேறுமென்றும் எதிர்பார்ப்பது எதையும் நம்பும் ஸ்வபாவத்தினால் எந்த காரியமும் நன்மையே பயக்குமென்று எண்ணுவதாகாது.

பொதுஜனங்களின் அபிப்பிராயம்.

இந்த வருஷம் ஜனங்கள் இந்த முயற்சி விஷயமாக அதிக கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள்; அங்கங்கே சிற்சிலர் இது சம்பந்தமாய்ப் பொதுவான அக்கறையுடன் விசேஷமாய் உழைத்து வந்திருக்கிறார்கள். சமாசாரப்பத்திரிகைகளிலும் இந்த விஷயத்தைக்குறித்து ஸ்வாரஸ்யமான வியாசங்கள் வெளிவந்திருக்கின்றன; பணம் வட்டிக்குப் போட்டுவைப்பதற்கான விண்ணப்பங்கள் அதிகமாயிருப்பதிலிருந்து இந்த முயற்சியில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கை விருத்தியாய்க்கொண்டு வருகிறதென்று தெரிகிறது; கூட்டுத் தொழிலினால் இந்தியாவிலிருக்கும் ஜனங்களுக்கு என்னென்ன அனுகூலங்கள் ஏற்படுமென்பதையும் என்னென்ன விளைவுகள் உண்டாகுமென்பதையும் சகலரும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; கூட்டுத்தொழிலுக்கு ஒரு நிலையான சக்தி ஏற்படவேண்டுமானால், அது ஜனங்களின் சொந்தப்பிரயத்தனத்தினால் நடத்தப்பட்டு ஸர்வஜன சம்மதமான ஒரு முயற்சியாயிருக்க வேண்டுமென்பதை எவரும் மறுப்பதில்லை. இப்படியிருந்தும், பிரத்தியக்ஷமாய் ஏற்பட்டிருக்கும் விளைவுகளிலிருந்து, கூட்டுத்தொழில் விஷயமாய் உழைப்பதில் ஜனங்கள் இன்னும் சிரத்தை யெடுத்துக்கொள்ள வில்லையென்றே ஏற்படுகிறது. வாஸ்தவத்தில் அனுஷ்டானத்திலிருக்கும் சகல ஏற்பாட்டுகளிலும் இந்தியாவுக்குப் பிரயோஜனகரமான நன்மைசெய்யக்கூடிய ஒரு முயற்சியானது இந்தியர்களுக்குள் படித்தவர்கள் அதற்காகத் தங்களுடைய காலத்தைச் சிறிதுமட்டில் உபயோகிக்க இஷ்டப்படாததனால் முன்னேற்ற மடையாமலிருக்கிறதென்று காண்கிறோம். இந்த வேலை சம்பந்தமாய் உழைத்து வரும் சகலரும் நம்முடைய வந்தனத்தைப்பெற அர்ஹர்களாகிறார்கள். ஆனால் இப்படி உழைப்பவர்களின் சங்கியை இன்னும் கொஞ்சமாகவே யிருப்பதைப்பற்றி விசனிக்க வேண்டியிருக்கிறது. இந்த விஷயமானது ஜனத்தலைவர்கள் வாஸ்த

வத்தில் உற்சாகத்துடன் ஆதரிக்கப்பெறுவதற்கு அர்ஹதையுள்ளதென்பதில் சந்தேகமில்லை.

பம்பாயில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியைப் பற்றிய சங்கிரகம்.

(1910-1911-ம் வருஷத்து வருஷாந்த ரிபோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது).

பலிதமுண்டாவதைப்பற்றி சந்தேஹிக்கக்கூடிய விஷயங்களில் பணத்தையும் காலத்தையும் செலவழிப்பதைக் காட்டிலும், நல்ல மத்தியஸ்தலங்களில் மாத்திரமே நம்முடைய கவனத்தைச்செலுத்தி ஏற்கனவே நன்றாய் வேலைசெய்து கொண்டிருக்கும் சங்கங்களைக் குறைவற்றவையாகும்படி தூண்டுவதே நாம் அனுசரிக்க வேண்டிய ஸர்வ சிலாக்கியமான முறையாகும். ஸாடாரா ஜில்லாவிலுள்ள பழைய சங்கங்களைச் சுற்றியிருந்த கெட்ட அம்சங்களை யெல்லாம் ஒழித்துவிட்டு, புதிய சங்கங்களை ஸ்தாபிப்பதற்கான விண்ணப்பங்களை நான் மறுத்துக்கொண்டிருக்கிறேன்; இந்த ஜில்லாவில், சிறிதுமட்டில் கிராமங்களிலே படித்த நபர்கள் இல்லாததனாலும் சிறிதுமட்டில் அரைப்பசிப் புள்ளவர்கள் திருப்திகரமாய் நடந்து கொள்ளாததனாலும், வேலை நடத்துவது முக்கியமாய்க் கஷ்டமாயிருக்கிறது. ஆயினும் இந்த ஏற்பாடு எல்லா பாகங்களுக்கும் பிரயோகப்படும்; மேலும், கூடிய சீக்கிரத்திலோ சிறிது காலம் கழித்தோ நிராசையாய் விட்டுவிட வேண்டிய சங்கங்கள் பல பாகங்களில் அநேகம் இருக்கின்றன.

இப்படி வெவ்வேறான பல பாகங்களில் இந்த விஷயமாய் பரிக்ஷை பார்த்து அனுபோகம் பெறுவதில் நாம் அதிர்ஷ்டசாலிகளென்றே சொல்ல வேண்டும். இந்த இராஜதானியைச் சேர்ந்த 19 ஜில்லாக்களில், ஐக்கிய நாணயச்சங்கம் இல்லாத ஜில்லா ஒன்றுகூட இல்லை. (பஞ்சமஹால்களிலிருப்பதைப் போல்) ஒரே ஒரு சங்கம் இருக்கும் இடத்தில்கூட, உள்ளூரில் விசாரித்ததிலும் நேரில் பார்வையிட்டதிலும் இந்த சங்கத்தின் மூலமாய் ஜில்லாவின் நிலைமையே சீர் திருந்துவது சாத்தியமென்று நான் நினைப்பதற்கு நியாயமிருக்கிறது.

நாம் பழகும் ஜனங்களில் வேற்றுமையில்லாமலுமில்லை. பழைய "பம்பாய் அர்பன்" சங்கத்தில் பணக்காரர்களுடன் விவகாரம் நடத்தினும், "தேவராஷ்டா தங்கார்ஸ்" சங்கத்தில் ஏழை ஜனங்களுடன் விவகாரம் நடத்தினும்; இரண்டும் கடன்கொடுக்கும் சங்கத்துக்கும் கடன்வாங்கும் சங்கத்துக்கும் முறையே நல்ல உதாரணங்களாகும். பிராம்மணனுக்காக ஒரு சங்கமும் பங்கிகளுக்காக ஒரு சங்கமும் திருப்திகரமாய் வேலை செய்து வருகின்றன. வர்த்தக சம்பந்தாயும் கைத்தொழில் சம்பந்தமாயும் மாத்திரமல்லாமல் விவசாய சம்பந்தமாயும் நாம் பிரவர்த்தித்திருக்கிறோம். பட்டிதாரர்களுக்கும்

படில்களுக்கும், தேடுகளுக்கும் மஹார்களுக்குமாக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்திரீகளுக்கென்றும் ஒரு சங்கம் இருக்கிறது. 'ஸ்டோர்ஸ்' வைத்து நடத்துவதும் "தானியத்தில்" வியாபாரம் செய்வதும்கூட நம்முடைய வேலைகளில் சேர்ந்ததாய் விட்டன. நம்முடைய திரவியத்தை வினியோகிப்பதற்கு நாம் நல்ல மார்க்கத்தையே பின் பற்றியிருக்கிறோம்; இது ஒன்றே நாம் இனி செய்யவேண்டிய வேலையில் நமக்குத் தைரியம் கொடுக்கக்கூடிய விஷயமாகும்.

நம்முடைய வேலையின் தன்மையும் ஏறக்குறைய நன்றாகவே யிருந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. (உதாரணமாக) "ஷாமராவ்விடல்" சங்கத்திலும் அதன் கிளைகளிலும் நடக்கும் வேலையையும் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியையும் நேரில் பார்வையிட்டிருக்கும் எவரும் வாஸ்தவமான வஸ்துவே கிடைத்து வினியோகிக்கப்பட்டிருக்கிறதென்றும் இப்படிப்பட்ட விஷயங்களில் நம்முடைய வேலை பூர்த்தியாகவே யிருந்திருக்கிறதென்றும் உணராதிருக்க மாட்டார். இந்த முயற்சியின் அபிவிருத்தியானது ஜனங்களின் குணத்தையே ஆதாரமாகக் கொண்டதாகுமென்று நான் மறுபடியும் சொல்லுகிறேன்.

ஆனால் ஒரு சங்கத்தைப்பற்றி மாத்திரமாவது இரண்டு அல்லது மூன்று சங்கங்களைப்பற்றி மாத்திரமாவது விசேஷமாய் எடுத்துச் சொல்லுவதால் துவேஷ முண்டாகலாம்; ஆயினும், சரித்திரத்தில் சாதாரணமாய் உத்தமமான விஷயங்களைப்பற்றியும் அதமமான விஷயங்களைப்பற்றியும் மாத்திரமே கவனித்து, நடுத்தரமான அநேக விஷயங்களைப்பற்றி கவனிக்காமல் விட்டுவிடுவதே சகஜமா யிருக்கிறது. மிஸ்டர் ஹல்ப் என்பவர் நம்முடைய சங்கங்களுக்குள் சுத்தமாய் உபயோகமற்றிருப்பவைகள் எப்படி யிருக்குமென்பதை முன்னமே சூசிப்பித்திருக்கிறார். நாமும் இது வாஸ்தவமே யென்று ஒப்புக்கொள்ளுகிறோம். இதற்கு எதிராக வாஸ்தவத்தில் சிலாக்கியமான விளைவுகள் உண்டாகுமென்று எதிர்பார்க்கக்கூடிய விஷயங்களைக் குறித்து எடுத்துச் சொல்வது சந்தோஷமாயிருக்கிறது. ஒவ்வொரு சங்கத்தின் வருஷாந்த ரிபோர்ட்டையும் (அதில் அக்கரையுள்ளவர்கள்) படித்துப் பார்ப்பது உசிதமாகுமென்று சென்ற வருஷத்தில் சொன்னது போலவே மறுபடியும் நான் எடுத்துச் சொல்லுகிறேன். "சதர்ன் மராடா," "பார்ஸி," அல்லது "பெட்காரி"யைப்போன்ற நகரச் சங்கங்களின் ரிபோர்ட்டுகளையும். "ஹால்கோடி," "ஹுடப்ஸார்," அல்லது 'ஸான்ஸெக்" கைப்போன்ற நாட்டுச் சங்கங்களின் ரிபோர்ட்டுகளையும் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த ரிபோர்ட்டுகளில பெரும்பான்மையானவை சுதேச பாஷையில் (சாதாரணமாய் மூன்று சுதேச பாஷைகளுக்குள் ஏதேனு மொன்றில்) எழுதப்பட்டிருப்பதானது அவைகளின் பிரயோஜனத்தை அதிகப் படுத்துகிறதே யொழிய குறைக்கவில்லை. படிப்படியாய் உயர்ந்துகொண்டே போகின்ற இலக்கங்களை அட்டவணை ரூபமாய் அமைத்திருப்பதால் இந்த ரிபோர்ட்டுகள் மிகவும் உபயோகமுள்ளவையாகின்றன.

நம்முடைய சங்கங்களின் மொத்த சங்கியை சென்ற வருஷக் கடைசியில் 208 ஆகவும் இந்த வருஷக்கடைசியில் 252 ஆகவும் இருந்தது. ஆகவே ஸ்பஷ்டமாய் 44 சங்கங்கள் அதிகமாயிருக்கின்றன. வாஸ்தவத்தில் ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்திலே 55 புதிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன; 10 பழைய சங்கங்கள் (மூலதனமில்லாதவை) எடுத்துவிடப்பட்டன. போன வருஷத்திலே ஒரு சங்கம் எடுத்துவிடப்பட்டதைப் பற்றி அந்த வருஷத்திலேயே சொல்லப் படாததனால், அதையும் இப்பொழுது சேர்த்துக்கொண்டு முடிவான மொத்தம் 252 ஆகிறது.

புதிதாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள 55 சங்கங்களில், 41 நாட்டுச் சங்கங்களாகவும் 14 நகரச் சங்கங்களாகவு மிருக்கின்றன. இவைகளைச் சாஸ்திரீதியாய்ப் பிரிக்க வேண்டுமென்றால் பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்கள் 54 ஆகவும் பொறுப்பு வரையறுக்கப்பட்டது ஒன்றாகவும் பிரிக்கலாம். எடுத்துவிடப்பட்ட சங்கங்களில் ஒன்றைத்தவிர மற்றவையெல்லாம் நாட்டுச் சங்கங்கள்; இந்த ஒன்றும் பொறுப்பு வரையறுக்கப்படாத ஒரு நகரச்சங்கம். ஆகவே இப்பொழுது சங்கங்களின் மொத்தம் 252 ஆகிறது. இவைகளை, 183 நாட்டுச் சங்கங்களும் 69 நகரச் சங்கங்களுமாகவாவது, 225 பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களும் 27 பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களுமாகவாவது பிரிக்கலாம்.

மெம்பர்களின் மொத்த சங்கியை 19,798 ஆகிறது; இதனால் 252 சங்கங்களில் ஒவ்வொன்றுக்கும் 83 மெம்பர்கள் ஆகிறது. பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களின் சராசரி 61 ஆகவும், பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பவைகளின் சராசரி 226 ஆகவும் இருக்கிறது. சோம்பேரித்தனமாய் தூங்கிக்கொண்டிருக்கும் இன்னும் பன்னிரண்டு சங்கங்கள் இருக்கின்றன; அவைகள் செய்யும் வேலையோ மிகவும் கொஞ்சம்; அவைகள் அதிக சிரமும் கொடுக்கிறதில்லை; ஆனால் அவைகளால் ஸ்திரமான விளைவுகள் எவையும் உண்டாகவில்லை. மெம்பர்களின் மொத்த சங்கியையையும் சங்கங்களின் மொத்த சங்கியையையும் கணக்கிடுவதில்தான் இவைகள் உபயோகமாகின்றன; மற்றப்படி இவைகளால் யாதொரு பிரயோஜனமுமில்லை. அவைகளால் எவ்வித கெடுதியும் நேருவதற்கு இடமில்லை. சங்கங்கள் தங்களுக்குத் தெரியாத விவகாரங்களில் பொறுப்பை வஹிக்க ஆரம்பிக்கும்பொழுதோ அல்லது பொறுப்பு வரையறுக்கப்படாதிருப்பதை வரையறுப்பில்லாமல் செலவிடலாமென்று அர்த்தஞ்செய்யும் பொழுதோதான் ஆபத்து நேரத்தொடங்குகிறது. இவ்விதமான நுண்ணிய குதர்க்கங்களின் விளைவுகளைப் பூர்த்தியாய்க் கிரஹித்து இந்த முயற்சியில் ஏற்படும் கஷ்டங்களை அறிந்திருப்பது கூட்டுத்தொழில் சம்பந்தமான அறிவானது விசேஷ அபிவிருத்தி யடைந்திருப்பதைக் குறிப்பிடுகிறது: இந்த அறிவு எவ்வளவு சீக்கிரம் உண்டாகிறதோ அவ்வளவுக்கு செலவுகள் குறையும். எடுத்துவிடப்பட்ட சங்கங்களெல்லாம் "சோம்பேறி" வகுப்பைச் சேர்ந்தவை. இப்படிப்பட்ட சங்கங்கள் இன்னும் சில

விருப்பதாக சீக்கிரத்தில் வெளிவரலாம். நாம் இப்பொழுது சங்கங்களை மொத்த மொத்தமாய் எடுத்துவிடக்கூடும்; ஏனெனில், இதனால் இவைகளின் வேர் பாதிக்கப்படாதென்று முன்னிலும் நிச்சயமாய் நாம் நம்பியிருக்கலாம்.

இந்த வருஷத்தில் வேலை நடத்துவதற்கான மூலதனத்தின் மொத்தம் 13,47, 416 ரூபாயாக விருந்தது. இதில், 7,27,149 ரூபாய் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களுடையது, 6,20,267 ரூபாய் பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களுடையது; ஆகவே முன்னைய சங்கங்களின் விஷயத்தில் ஒவ்வொரு சங்கத்தின் சராசரி 26,931 ரூபாயாகவும், பின்னைய சங்கங்களின் விஷயத்தில் ஒவ்வொரு சங்கத்தின் சராசரி 2,756 ரூபாயாகவும் இருந்தது. ஆகையினால், சராசரியில் சங்கத்தின் ஒவ்வொரு மெம்பரும், அந்தச் சங்கத்தின் பொறுப்பு வரையறுக்கப் பட்டிருந்தால் 119 ரூபாயும் அதன் பொறுப்பு வரையறுக்கப் படாதிருந்தால் 45 ரூபாயும் கடனாகப் பெறக் கூடியவரா யிருந்தார்.

இந்த பன்னிரண்டு மாதங்களிலும் வரவுகளின் மொத்தம் 17,95,222 ரூபாயாயிற்று. இதன் விவரங்களைப் பார்க்கும்பொழுது, பங்குகளாக 1,03,355 ரூபாயும், பிரவேசக் கட்டணங்களாக 3,825 ரூபாயும், சந்தாத் தொகைகளாக 934 ரூபாயும், டிபாஸிட்டுகளாக 5,97,440 ரூபாயும், கவர்ன்மெண்டிடத்திலிருந்து கடன்களாக 52,100 ரூபாயும், இதர நபர்களிடத்திலிருந்து கடன்களாக 64,540 ரூபாயும் வசூலிக்கப்பட்டதாக ஏற்படுகிறது.

செலவின் மொத்தம் 17,11,819 ரூபாயாகிறது. இந்தத் தொகையில், வேலை நடத்துவதற்காகப் பிடித்த செலவுகள் 8,072 ரூபாயாகிறது; ஆகவே பின்னைய அம்சமானது மொத்த செலவில் நூற்றுக்கு 0·5 ஆகவும் (இதற்கு முந்திய பாராவில் மொத்தம் காட்டியிருக்கும்) வேலை நடத்துவதற்கான மூலதனத்தில் நூற்றுக்கு 0·68 ஆகவும் இருக்கிறது.

(மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட) கடன்கள் 11,68,945 ரூபாய் ஆயிற்று. வசூலானதொகைகளின்மொத்தம் 7,40,030 ரூபாயாயிற்று. 11,20,102 ரூபாய் இனிமேல் வசூலாக வேண்டிய தொகையாக இந்த வருஷத்துக் கணக்கில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. "பழைய கடன்களைத் தீர்ப்பது" என்னும தலைப்பின்கீழ் 1,24,606 ரூபாய் கண்டிருக்கிறது; இதே அம்சம் சென்ற வருஷத்தில் 40,124 ரூபாயாகவும், அதற்கு முந்திய வருஷத்தில் 20,561 ரூபாயாகவும் இருந்தது.

இந்த வருஷத்தின் லாபம் 58,014 ரூபாயாகிறது. மூன்று சங்கங்களுக்குத்தான் நஷ்டம் ஏற்பட்டது; இந்த நஷ்டத்தின் மொத்தம் 97 ரூபாய். இரண்டு சங்கங்களின் விஷயத்தில்தான் மொத்தத்தில் 20 ரூபாய்க்கு ஆஸ்தியை காட்டிலும் கடன் அதிகமாயிருந்தது. ஆஸ்தியின் மொத்தம் 14,23,650 ரூபாயாயிருக்க, கடனின் மொத்தம் 13,65,756 ரூபாயாயிருக்

கிறது. பிந்திய தொகையில், மெம்பர்களுக்கு 9,20,089 ரூபாயும், கவர்ன்மெண்டுக்கு 2,11,640 ரூபாயும், இதரர்களுக்கு 85,692 ரூபாயும் பாக்கியாகிறது.

"சேமநிதி"க்காக வரவுவைக்கப்பட்ட தொகையின் மொத்தம் 21,344 ரூபாயாகிறது. இதில், ரிபோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்தில் வரவு 15,585 ரூபாய்; இதே பாபத்தில் சென்ற வருஷத்தில் வரவு 16,557 ரூபாயாகவும், அதற்கு முந்திய வருஷத்தில் வரவு 11,265 ரூபாயாகவும் இருந்தது. கணக்குப் "புஸ்தகத்தில்" மாத்திரம் தொகைகளை அதிகமாகக் காட்டும் வழக்கத்தை நாம் இப்பொழுது ஜாக்கிரதையுடன் ஒழித்து வருகிறோம்.

"கைத்தொழில்கள்" என்னும் பதத்துக்கு ஸ்பஷ்டமான அர்த்தமில்லாமலிருந்தாலும், சம்பார்களுக்கும், நெசவுகாரர்களுக்கும் அப்படிப்பட்ட இதர வகுப்பாருக்குமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள நமது சங்கங்களின் விசேஷாம்சத்தைக் குறிப்பிடுவதற்காகவே நான் இந்ததலைப்பை உபயோகிக்கிறேன். அநேக விஷயங்களில் இந்த சங்கங்களுக்கும் சாதாரணமான "ரொக்க" சங்கங்களுக்குமுள்ள வித்தியாசத்தை விளக்கிக் காட்டக்கூடிய அம்சங்கள் இவைகளில் இருக்கின்றன. உதாரணமாக ஒரு "தார் (தோல் பதனிடுபவர்கள்) சங்கத்தின் மூலதனமானது பதனிடப்படாத தோலாகவோ அல்லது அப்படிப்பட்ட வேறே வஸ்துவாகவோ இருக்கும்; இப்படிப்பட்ட மூலதனம் இருக்கிறதா இல்லையா வென்பதைத் தெரிந்துகொள்வதற்காக ஒருவர் நேரில் பார்வையிடுவதைக் காட்டிலும் அது இருக்கிறதென்று நம்புவதையே உசிதமென்று கொள்ளுவார். சம்பார் சங்கங்கள் சிலவற்றிற்கு கடைகளிருக்கின்றன; ஒரு கடையில் (பூனாவிலிருக்கும் ஹாரல்யார்ஸ்) பூட்ஸுகளும் ஜோடுகளும் இங்கிலீஷ் ஷாப்புகளிலிருப்பதைப்போல் ஒழுங்காய் வைத்துக்காட்டப்படுகின்றன. மொத்தத்தில் பதனிடுபவர்களின் சங்கங்கள் ஐந்தும் சம்பார்களின் சங்கங்கள் பன்னிரண்டும் இருக்கின்றன.

1910-1911-ம் வருஷத்துக்கு மத்திய மாகாணங்களுக்கும் பேராருக்கும் சம்பந்தப்பட்ட ரிபோர்ட்டிலிருந்து.

நாட்டுச் சங்கங்களின் சங்கியை போன ரிபோர்ட்டிலடங்கிய காலத்தின் முடிவில் இருந்ததைக்காட்டிலும் இப்பொழுது இரட்டத்தனைக்குமேல் அதிகரித்திருக்கிறது. மெம்பர்களின் சங்கியை பாதிக்குமேலும் வேலை நடத்துவதற்கான மூலதனம் முக்காலுக்குமேலும் அதிகரித்திருக்கிறது. இதே மாதிரி ஸென்ட்ரல் பாங்கிகளின் செல்வத்திலும் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இவைகளைச் சேர்ந்த மெம்பர்களின் சங்கியை இந்த பன்னிரண்டு மாதங்களில் 640 லிருந்து 705 வரையில் தான் அதிகரித்திருக்கிறது; ஆனால் வேலை நடத்துவதற்கான மூலதனமோ, பாலாகாட் ஸென்ட்ரல் பாங்கியின் விவகாரங்களையும் பாலாகாட் யூனியன்களின் விவகாரங்களையும்

சேர்க்காமலே, 82,135 ரூபாயாக விருந்தது 1,74,517 ரூபாயாக அதிகரித்திருக்கிறது; இந்த பாலாகாட் பாங்கியானது விருஷக்கடைசியில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டபடியால், அதன் விவகாரங்களைக் கணக்கில் கொண்டுவருவது சாத்தியமில்லாமல் போய்விட்டது. இந்த முயற்சிக்கு வலுத்த மத்தியஸ்தானங்களாயிருந்த இடங்களெல்லாம் விருத்தி செய்யப்பட்டு பலவீனமாயிருந்த மத்தியஸ்தானங்களெல்லாம் பலப்படுத்தப்பட்டன. ஹோஷங்காபாத்திலும் மர்வாராவிலும்போல் இம்முயற்சி புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட இடங்களில்கூட அநேகமாய் காரியசித்தியுடன் வேலை நடந்திருக்கிறது. இந்த வேலையில் அக்கறையுள்ளவர்களெல்லோரும் நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் உழைத்து வந்தார்கள்; அபிவிருத்தியும் பொதுவாய்க், குறிப்பிடத்தக்க விதமாயிருந்தது.

1910-11-ம் வருஷத்தில் பொது அபிவிருத்தி.

இன்ன வகைச் சங்க மென்பது.	சங்கங்களின் சங்கியை.		மெம்பர்களின் சங்கியை.		வேலை நடத்துவதற்கான மூலதனம்.		ஷரா.
	வருஷ ஆரம்பத்தில்	வருஷ முடிவில்	வருஷ ஆரம்பத்தில்	வருஷ முடிவில்	வருஷ ஆரம்பத்தில்	வருஷ முடிவில்	
1	2	3	4	5	6	7	
ஸென்ட்ரல் சங்கங்கள் ...	5	12	663	804	82135-7-10¾	174516-9-6¾	
நகரச் சங்கங்கள்.	8	8	1186	1247	69430-6-8½	79534-0-3½	
நாட்டுச் சங்கங்கள்.	139	280	4859	7203	140535-3-9	248030-11-7	

சங்கங்களை மேற்பார்வையிடுவதற்கான கம்மிட்டிகள்.

4. ஸென்ட்ரல் பாங்கியில் சம்பளம் பெறும் ஒரு மானேஜரும் ஊரூராய்ச் சுற்றிவரும் ஒரு குமாஸ்தாவும் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கவர்ன்மெண்ட் தணிக்கை உத்தியோகஸ்தரின் உதவியைப் பெற்றுங்கூட வெவ்வேறிடத்தில் சிதறிக்கிடக்கும் 130 கிராமங்களின் விவகாரங்களையும் விடாமல் கவனிப்பது சாத்தியமாயில்லை. ஆகையினால் என்னுடைய தூண்டுதலின்மேல், ஆர். பி. ஷுக்லா என்பவர், எந்த நாட்டுச் சங்கங்களின் வேலையை நிர்வாஹ டைரெக்டர்கள் நேராய்ப் பார்த்துவர வில்லையோ அப்

படிப்பட்ட சங்கங்களின் நாணயம் இவ்வளவென்பதை அறியவும் அவைகளைப் பற்றி மற்றப்படி ரிபோர்ட் செய்யவும் ஸென்ட்ரல் பாங்கிக்கு உதவி புரியுமாறு தாசிலின் எல்லைகளுக்குள் மேற்பார்வையிடுவதற்கான கம்மிட்டிகள் ஏற்படுத்துவதற்காக ஒரு ஸ்கீம் தயார் செய்தார். இதனால் கிராமச் சங்கத்தின் மெம்பர்களுக்கு அருகாமையில் ஒரு பிரதிநிதி ஏற்படுகிறார். அவரை அவர்களே பொறுக்கியெடுத்து அவசியமானபொழுது அவருடைய புத்திமதியையோ படிப்பினையையோ கோரலாம். கடைசியாக எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமான விஷயமென்னவெனில், அப்படிப்பட்ட கம்மிட்டி ஒன்றிருப்பதனால் உள்ளூரில் சாய்காலுள்ள அநேகர் கூட்டுத்தொழில் முயற்சி சம்பந்தமாய் வேலைசெய்வது சாத்தியமாகிறது. இந்த ஏற்பாட்டை அனுசரித்து வேலை செய்யும் விஷயத்தை எனக்குப் பின்வருபவரின் கையில்விட எனக்கு இஷ்டமில்லாததனால் நான் இதை ஸிஹோராவிலே வாஸ்தவத்தில் அமுலுக்குக் கொண்டுவரவில்லை; ஆனால், விசேஷமாய் இந்தத் தாசிலுக்கு அதி முக்கியமாயிருக்கிற மேற்பார்வை சம்பந்தமான பிரசினையைப் பரிகரிப்பதற்கு ஓர் உபாயமாக இதை இங்கே எடுத்துச் சொல்லலாம்.

கட்டாய டிபாஸிட்டுகள்.

8. முக்கியமாய் மத்தியமாகாணங்களைச் சேர்ந்த நாட்டுச் சங்கங்களிலெல்லாம், பயிரிடுவோனுடைய வருஷாந்த குத்தகைத் தொகையில் சாதாரணமாய் ரூபாய்க்கு ஒன்று அல்லது இரண்டணா வீதம் கட்டாய டிபாஸிட்டுகள் வசூலிக்கும் வழக்கத்தை நாம் உண்டாக்கியிருக்கிறோம். இந்தத் தொகைகள் ஒரு மெம்பர் தான் கடன்வாங்கின தொகையைக்கொண்டு அந்த வருஷத்தில் அடைந்த லாபத்திலிருந்து கழித்து வாங்கப்படுகின்றனவே யொழிய மிஸ்டர் ஊல்ப் என்பவர் எண்ணுவதுபோல் "மெம்பர்கள் வாங்கும் கடன்களிலிருந்து" விதித்து வாங்கப்படுவதில்லை. நாட்டுச் சங்கங்கள் எவ்வளவுக்கெவ்வளவு தங்களுடைய மெம்பர்களின் டிபாஸிட்டுகளைக் கொண்டே விவகாரம் நடத்துகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு கூட்டுத்தொழில் முறையான பாங்கிங் வேலையின் தன்மை சிலாக்கியமாயிருக்கு மென்பது ஸ்பஷ்டமாய் ஏற்படும் விஷயம்; இந்தக் கட்டாய டிபாஸிட்டுகள் சம்பந்தமாய் சில சமயங்களில் ஏற்பட்ட சந்தேகத்தையும் துரபிப்பிராயத்தையும், இந்தத்தொகை முழுவதையும் கிராமத்தாருடைய கையிலேயே அடிக்கடி விட்டுவைக்கும் சுலபமான உபாயத்தினால் அறவே ஒழித்து விடலாமெனத் தோற்றியது. ஆகவே, ஒவ்வொரு மெம்பரும் தன்னுடைய வருஷவாரிக் கடன்களைத் திருப்பிக் கொடுக்கும்பொழுது கட்டாய டிபாஸிட்டுகளும் கட்டவேண்டுமென்று பாலாகாட்டில் மிஸ்டர் ஊ. என்பவருடன் ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டது. இந்த டிபாஸிட்டுகள், இதுவரையில் செய்யப்பட்டதுபோல் யூனியனின் இதரபொது நிதியுடன் சேர்த்துவிடப்படாமல், சந்தாதாரர்களின் பிரதிநிதிகளடங்கிய கிராமக்கம்மிட்டியினிடம் உடனுக்குடனே கொடுத்துவிடப்படுகின்றன, இந்த கம்மிட்டியார் அதை, சங்கத்தைச்சேர்ந்த மெம்பர்களில் ஒருவருக்கோ

பலருக்கோ வரப்போகிற வருஷத்தில் புதிதாய்க் கடன் கொடுப்பதற்காக உபயோகப்படுத்துகிறார்கள். இதர மெம்பர்களுக்கு முழுவதும் பிரத்தியேகமான விவகாரமாக யூனியனிடத்திலிருந்து ஒரு தொகை கடன் வாங்கப்படுகிறது. இம்மாதிரியாக, சங்கமானது கட்டாய டிபாஸிட்டுகள் விஷயத்தில் எப்பொழுதும் கவனம் செலுத்தாம லிருப்பதேயில்லை. இந்த டிபாஸிட்டுகள் யூனியன் மூலமாக வாராததனால், அவைகளின்மேல் அதிக வட்டிகிடைக்கிறது. மெம்பர்கள் தங்களுடைய டிபாஸிட்டுகள் பத்திரமாயிருக்குமா வென்பதைப்பற்றி யாதொரு கவலையும் படவேண்டியதில்லை; மேலும், அவர்கள் தங்களுடைய சொந்த திரவியம் வருஷாவருஷம் அதிகரித்துக்கொண்டே போவதையும், அதனால் மெம்பர்களுக்குள் பரஸ்பரம் ஏற்படும் அக்கறை வரவரநெருக்கமாவ துமல்லாமல் ஸென்ட்ரல் பாங்கியிலிருந்தும் யூனியனிலிருந்தும் அவர்கள் கடன் வாங்குவதை ஒழித்து ஸ்வாதீனமாயிருக்கவும் கூடுமென்பதைக் கவனித்துவரலாம். இவ்விதமான கட்டாயடிபாஸிட்டுகள் வாஸ்தவத்தில் நெடுநாளைக்கு கட்டாயமாயிருக்கமாட்டா; இந்த மாதிரி சுலபமான ஒரு உபாயத்தைக்கொண்டு லாபம் சம்பாதிக்கக் கூடுமென்பதை மெம்பர்கள் நாளாவட்டத்தில் அறிந்து, இப்பொழுது சகாயச் சட்டங்களின்படி அவர்கள் நிர்ப்பந்தமாய்க் கட்டவேண்டிய (ஒரு வருஷத்தில் சாதாரணமாய் இரண்டு ரூபாய்க்கு மேற்படாத) சொற்ப சேமிப்புத் தொகைகளைக்காட்டிலும் பெருத்த தொகைகளைத் தாங்களாகவே டிபாஸிட் செய்வதற்கு இஷ்டப்படுவார்கள். இந்த சுலபமான உபாயமானது லால்பாரா யூனியனிலும் காடெங்கி யூனியனிலும் ஏற்கனவே நன்றாய்ப் பலித்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது; மேலும் இது வருங்காலத்தில் மிகுந்த உபயோகமானதாகுமென்று நான் நம்புகிறேன்; ஏனெனில், சொந்த அக்கறைக்கும் ஸ்வாதீன புத்திக்கும் சம்பந்தப்பட்ட எந்த எண்ணங்கள் தற்போது மெம்பர்களிடத்தில் குறைவாயிருக்கின்றனவோ அந்த எண்ணங்கள் உண்டாவதற்கு இந்த உபாயம் காரணபூதமாயிருக்கிறது.

ஸென்ட்ரல் பாங்கிகள் கூட்டுத்தொழில் முறையைப் பின்பற்றும்படி செய்வது.

13. * * இந்த வருஷத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஸென்ட்ரல் பாங்கிகளைப்பற்றிய ஏற்பாட்டிலே, அவைகளின் அமைப்பில் கூட்டு முயற்சியை முன்னினும் அதிகமாய் அனுசரிப்பதற்கு இடமிருக்கும் பொருட்டு, ஒரு புதிய அம்சம் சேர்க்கப்பட்டது. அவைகளால் திரவியசகாயம் செய்யப்பெற்ற ஒவ்வொரு நாட்டுச்சங்கமும் அது சேமநிதியாக முதலில் சேர்க்கும் தொகையை ஸென்ட்ரல் பாங்கியில் ஒரு பங்கு எடுத்துக்கொள்வதற்காக உபயோகப்படுத்த வேண்டுமென்று அதன் சகாயச் சட்டங்களில் நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. போகப்போகக் கூட்டு முயற்சியைப்பற்றிய அறிவு பரவுவதன்மேல், நாட்டுச் சங்கங்களின் மெம்பர்கள் தாங்களே ஸென்ட்ரல்

பாங்கியின் நிர்வாஹ சபையில் மிக்க சாய்காலுள்ளவர்க ளாவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. எல்லோரும் விரும்பத்தக்க இந்த நிலைமை வருவதற்கு அநேக வருஷங்கள் செல்லக்கூடும்; ஆனால் இந்தக் கோட்பாடென்னமோ மிகவும் சிறந்ததேயாம். நான் சொல்லுவது ஒன்றுதான்; அதாவது, ஹர்டாவிலும் ஹொஷங்கபாத்திலும் இருப்பதைப்போல் ஸென்ட்ரல் பாங்கியின் பங்குகளின் தொகை அதிகமாயிருக்கும்பட்சத்தில், நாட்டுச்சங்கங்கள் சேமநிதியாக முதலில் சேர்க்கும் தொகைகளை பங்கு எடுத்துக்கொள்ளுவதற்கே உபயோகப்படுத்தக் கூடாதென்பதேயாம். நாட்டுச் சங்கத்துக்குத் தன்னுடைய புதிய சேமநிதியைக் குறைக்காமலே ஸென்ட்ரல் பாங்கியில் பங்கு எடுத்துக் கொள்வதற் கவசியமான திரவியம் கிடைக்கக் கூடியதாயிருக்கிற வரையில் இப்படி பங்கு எடுத்துக்கொள்வதைத் தள்ளிவைக்கவேண்டும்.

கூட்டுத்தொழில் சங்கங்களின் வேலை பலவகையா யிருக்கவேண்டு மென்பது.

19. * * ஒரு நாணய சங்கத்துக்கு அதன் மெம்பரின் நோக்கங்களும் பாத்தியதைகளும் பலவகையினவா யிருப்பது ஸர்வ சிலாக்கியமானதென்பது தெளிவான விஷயம். அதனால் பணம் வேலையில்லாமல் சும்மா கிடப்பதுபோய், ஒரு பருவத்தில் ஒரு வியாபாரத்துக்காக வினியோகிக்கப்பட்ட திரவியத்தை அடுத்த பருவத்தில் மற்றொரு வியாபாரத்துக்காக உபயோகிப்பது சாத்தியமாகிறது. இம்மாதிரி ரொக்கம் சர்ப்பா செய்வதுதான் ஸென்ட்ரல் அர்பன் சங்கத்தின் ஸ்பஷ்டமான வேலைபாகும். இது இப்படியிருக்க, கிளைச்சங்கங்களில் ஒரே வியாபாரம் செய்கிற அல்லது ஒரே விதபாத்தியதையுள்ள நபர்களே சேர்ந்திருப்பது அவசியமாகும். அவைகள் இயற்கை உற்பத்திச் சரக்குகளை மொத்தமாய் வாங்கி, தங்களுடைய சாமான்களை உற்பத்தி செய்வதிலும் பங்கிடுவதிலும் ஒன்று சேர்ந்து உழைக்கும். ஆகவே எந்த கோட்பாட்டை அனுசரித்து ஒரு பெருத்த நகரச்சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது இப்பொழுது நன்றாய்த் தெரிகிறது. இதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது கூட்டு முயற்சியைப்பற்றிய அறிவு பரவுவதைப் பொறுத்ததாகும். இது சம்பந்தமாய் ஹட்டாவில் ஸ்வாரஸ்யமான இரண்டு பரீக்ஷைகள் செய்து பார்க்கப்பட்டன. இது பாலாகாட்டிலுள்ள சங்கத்தைவிடச் சிறியது; ஆனால் ஒவ்வொரு மெம்பருக்கும் கிடைக்கக்கூடிய வேலை நடத்துவதற்கான மூலதனத்தின் தொகையானது பாலாகாட்டிலுள்ள சங்கத்தின் விஷயத்தில் இருந்ததைக்காட்டிலும் இதில் இரட்டத்தனையாயிருக்கிறது. இது திருப்பிக்கொடுக்க வேண்டிய தொகைகளெல்லாம் காலந்தவறாமல் திருப்பிச் செலுத்திவிடப்படுகின்றன. கணக்குகள் மிகவும் நன்றாய் வைக்கப்பட்டு வந்திருக்கின்றன; மெம்பர்களும் உற்சாகத்துடன் உழைத்து வந்திருக்கிறார்கள். வர்த்தக சம்பந்தமான இரண்டு தொகுப்புகள் ஏற்கனவே ஜில்லா சங்கங்களாகப் பிரத்தி

யேகப் படுத்தப்பட்டிருக்கின்றன; இவைகள் வரையறுக்கப்படாத உத்தரவாதத்தின்மேல் அர்பன் பாங்கியிலிருந்து கூட்டாய்க் கடன் வாங்குகின்றன. முதல் தொகுப்பு பித்தளைவேலை செய்பவர்களாலானது; இது உள்ளூரிலுள்ள காஸாரின் ஸ்வபாவமான சோம்பேறித்தனத்தினால் நன்றாய் வேலை செய்வதில்லையென்று தெரிகிறது. ஒருவேளை புதியமாதிரி வேலைகளைச் செய்வதில் ஓர்வித துரபிமானம் இருக்கக்கூடும்; இதை ஒழிக்க வேண்டுமானால் இப்பொழுதிருப்பதைவிட அதிகபோட்டி ஏற்படவேண்டும். ஆனால் நெசவுக்காரர்கள் சேர்ந்த இரண்டாவது தொகுப்பானது மிகவும் நன்றாய் வேலை செய்வதாக எனக்குத் தோற்றியது. உள்ளூரில் இந்தத் தொழிலினால் இதுவரையில் இரட்டத்தனை லாபமடைந்து வந்த சாயம்போடுபவனும் வட்டி வியாபாரியும் இப்பொழுது ஒதுக்கப்பட்டு போய்விட்டார்கள். வேண்டிய நூலை மொத்தமாய் ஹாங்காங்காட்டுக்கு எழுதி வரவழைக்கப்போகிறார்கள்; பரோடா தொழில் வித்தியாசாலையிலிருந்து சாயம்போடும் வேலையில் தேர்ச்சிபெற்ற ஒருவரை குறைந்த வீதங்களின்படி நூலைச் சாயம்போடுவதற்காக நியமித்திருக்கிறது. ஹட்டாவில் செய்யப்பட்டிருக்கும் அபிவிருத்திக்குரிய இந்த காரியங்களை ஜனங்கள் ஆவலுடன் கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

சேமநிதிகள்.

22. இந்த மாகாணங்களில் அனுசரிக்கப்படும் முறையென்னவெனில், சேமநிதியானது வேலைநடத்துவதற்கான மூலதனத்திலிருந்து முழுவதும் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்படுகிறது. வேறு சில மாகாணங்களிலே நாட்டுச் சங்கங்கள் விஷயத்தில் இந்த முறை அனுஷ்டிக்கப்படுகிறதில்லை; ஆனால், சேமநிதியைக்கொண்டு என்னென்ன வேலைகள் நடத்தக்கூடுமோ அவைகளையெல்லாம், இந்த நிதியானது பிரத்தியேகமாய் வட்டிக்குப்போட்டு வைக்கப்பட்டு சொற்ப கெடுவுக்குள் கிடைக்கக் கூடியதாயிருந்தாலொழிய க்ஷாமகாலங்களிலாவது திரவிய சம்பந்தமாய் கஷ்டமேற்படும் காலங்களிலாவது எப்படி பூர்த்தியாய்ச் செய்யமுடியுமென்று தெரியவில்லை. இப்படி பிரத்தியேகப்படுத்துவதை நெடுந்தூரம் கொண்டு போகலாம்; உதாரணமாக, இது ஒரு நாட்டுச் சங்கத்தின் ஆரம்பதசையில் அனாவசியமாகும்; ஆனால், ஒரு கூட்டுத்தொழில் பாங்கிக்கு மிகவும் முக்கியமான விஷயம் அது பத்திரமாய் வேலை நடத்துவதேயாகையால், நம்முடைய சங்கங்கள் திரவிய சம்பந்தமான நெருக்கடி நேரும்பொழுது எப்படி தப்பித்துக் கொள்கின்றன வென்பதை நாம் அறிகிறவரையில், மட்டுக்கு மிஞ்சி ஜாக்கிரதையாயிருப்பதே மிகவும் விவேகமான முறையாகும். வருஷம் முடிந்த பிறகுதான் லாபமானது சேமநிதிக்கும் இதர விஷயங்களுக்கும் பங்கிடப்படுகிறது. ஆகையினால் இப்பொழுது கிடைக்கக்கூடிய கணக்குகளிலிருந்து 1909-1910-ம்ஞுத்தில் நடந்த வேலையினால் சேமநிதி எவ்வளவு விருத்தியாயிற்றென்று ஏற்படுகிறதே யொழிய ரிப்போர்ட்டுக்கு சம்பந்தப்பட்ட வருஷத்தில் செய்யப்பட்ட வேலையினால் சேமநிதி எவ்வளவு விருத்தியாயிற்

றென்பது ஏற்படவில்லை. ஆயினும், நாட்டுச் சங்கங்களின் விஷயத்தில் இது 5,855 ரூபாயிலிருந்து 12,356 ரூபாயாகவும், நகரச் சங்கங்களின் விஷயத்தில் 4,472 ரூபாயிலிருந்து 7,152 ரூபாயாகவும், (பாலாகாட்டைத்தவிர) ஸெண்ட்ரல் சங்கங்கள் விஷயத்தில் 1,171 ரூபாயிலிருந்து 1421 ரூபாயாகவும் அதிகரித்திருக்கிறதென்பதைக் காண சந்தோஷமாயிருக்கிறது. கடைசியில் சொன்ன கணக்குகள்தான் அதிக அதைரியம் கொடுக்கக்கூடியவையாயிருக்கின்றன; ஆனால் க்ராஸ்த்வெய்ட் ஸெண்ட்ரல் பாங்கியில் மாத்திரமே 1910-1911-ம் வருஷம் முடிந்த பிறகு 1500 ரூபாய் சேமநிதியுடன் சேர்க்கப்பட்டதென்று நமக்குத் தெரியுமாகையால், இனி முன்னேற்றத்தின் போக்கு அதி தீவிரமாயிருக்குமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

திரவிய வருவாய்கள்.

இந்த வருஷத்தில் மாகாணங்களிலுள்ள எந்த சங்கத்துக்கும் ஸர்க்கார் கடன் எதுவும் கொடுக்கப்படவில்லை. கவர்ன்மெண்டார் திரவிய சகாயம் செய்யும் வழக்கமே கெட்டதென்று இப்பொழுது அபிப்பிராயம் ஏற்பட்டு வருகிறது; இந்த வருஷ முடிவில் கவர்ன்மெண்டாரால் உபகரிக்கப்பட்டுத் திருப்பிக் கொடுக்கப்படாமல் நின்றிருந்த தொகை 6,050 ரூபாய்தான். மூலதனத்துக்கான இதர வருவாய்களைப்பற்றியோ வெனில், ஸெண்ட்ரல் பாங்கிகள் எந்த பத்ததியை அனுசரித்து ஸ்தாபிக்கப் பட்டனவோ அதையே பின்பற்றி வந்திருக்கின்றனவென்று சொல்வதே போதுமானதாகும். எவ்விடத்திலும் அவைகளுக்கு சாதாரணமாய்ப் போதுமான அளவுக்குத் திரவியம் கிடைக்காமற் போகவில்லை; ஒருவேளை சிரோஞ்சாவில் மாத்திரம் அப்படி கிடைக்கவில்லை யென்று சொன்னாலும் சொல்லலாம்; க்ராஸ்த்வெய்ட் ஸெண்ட்ரல் பாங்கி பலிதத்துடன் நடத்தியிருக்கும் வேலையை நோக்குமிடத்து, இந்த ஏற்பாடானது பெருத்த முதலாளிகளுக்கும் முழு நம்பிக்கை யுண்டாகும்படிசெய்யும் யோக்கியதையுள்ளதென்று ஏற்படுகிறது. ஸெண்ட்ரல் பாங்கிகள் தங்களுடைய வசத்தில் விடப்பட்டிருக்கும் நாட்டுச் சங்கங்களுக்குத் திரவிய சகாயம் செய்வதில் எவ்வளவு தாராளமாயிருந்தாலும், மிஸ்டர் ஹல்ப் என்பவர் சொன்னதுபோல் ஸெண்ட்ரல் பாங்கியானது பெற்றோரைப்போலல்லாமல் வைத்தியரைப்போ லிருக்கவேண்டு மென்ற, அதாவது, அன்றாடம் ஜீவனத்துக்கு ஆதாரமாயில்லாமல் நோய்காணும்பொழுது மாத்திரம் உதவி செய்பவரைப்போ லிருக்கவேண்டுமென்ற சிறந்த நோக்கத்தையே இடைவிடாமல் கவனத்தில் வைத்து வந்திருக்கின்றன; இதுவே ஐரோப்பிய தேசங்களி லெல்லாம் ஸ்பஷ்டமாய் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடாகும். இந்த காரணத்தைக் கொண்டுதான் நான் இந்த ரிபோர்ட்டில் நாட்டுச் சங்கங்களை முன்னிலும் அதிகஸ்வாதீனமாய் வேலைசெய்யும்படி உற்சாகப்படுத்துவது அவசியமென்று வற்புறுத்திக்கூறுவதுமல்லாமல், டிபாஸிட்டுகள் கட்டாயமாய்க் கட்டப்பட்டு சங்கத்தின் கையிலேயே இருப்பது அதி முக்கியமான விஷயமென்றும் அபிப்பிராயப் படுகிறேன். இதனால் சிக்கனமும், ஸ்வாதீனப்பான்மை

யும் ஏற்படுவதுமன்றி, பாங்கிங் விவகாரம் நடத்துவதில் பழக்கமும், பொறுப்பு வரையறுக்கப்படாத நாட்டுச் சங்கங்களில் பங்குகள் எடுத்துக்கொள்ளும் ஆட்சேபனைக்கிடமான பத்ததியை அனுசரிக்காமல் சேமித்துவைத்த தொகைகளை வட்டிக்குப் போட்டுவைக்கும் வழக்கமுங்கூட உண்டாகுமென்று நான் நம்புகிறேன்; கடைசியாகச் சொல்லப்பட்ட பத்ததியானது இந்தியாவின் இதர பாகங்களில் அதிகமாய் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. கிராமாந்தரங்களிலுள்ள மெம்பர்களுடைய டிபாஸிட்டுகளின் விஷயத்திலே இந்த வருஷத்தில் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது; அவைகளின் மொத்தம் 16,014 ரூபாயிலிருந்தது 22,406 ரூபாயாக அதிகரித்திருக்கிறது.

சண்டையும் கோர்ட் விவகாரமும்.

இந்த வருஷத்தில், சங்கங்களின் நிர்வாஹ விஷயமாய் எவ்வித முரணும் ஏற்படவில்லை. பர்ஹாம்பூரில் சகாயச் சட்டங்களின்படி நடக்கத்தவறின மெம்பர்கள் மேல் ஒன்பது வியாஜ்ஜியங்கள் தொடரவேண்டி யிருந்தது; பீடல் ஜில்லாவிலும் சில வியாஜ்ஜியங்கள் தொடரப்பட்டன. ஆனால் இவ்விரண்டு விஷயங்களிலும், சங்கங்களை மறுபடியும் ஒழுங்காயமைப்பதற்குமுன் செய்யவேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாய்ச் செய்யும்பொருட்டு மிகவும் கண்டிப்பாயிருப்பது அவசியமா யிருந்தது. மறுபடியும் ஒழுங்காயமைக்கும் ஏற்பாடு அபிவிருத்தியடைய அடைய இவ்வித முறைகளை அனுசரிப்பதற்கான ஆவ்சியகம் விரைவாய்க் குறைந்து கொண்டே வரும்.

இந்த முயற்சி சம்பந்தமாய் மத்தியமாகாணங்களிலும் பீகாரிலுமுள்ள ஜனங்களின் அபிப்பிராயம்.

28. நான் கவனித்தவரையில் ஜனங்கள் கூட்டு முயற்சியை எங்கும் சினேக பாவத்துடனும் உற்சாகத்துடனும் ஆதரித்து வந்திருக்கிறார்கள். சில ஜில்லாக்களிலே இந்த வேலையில் ஏற்கனவே நம்பிக்கை ஏற்பட்டு வருகிறது. இதர ஜில்லாக்களில் இதனால் என்னபலன்க ளுண்டாகுமென்பதைப் பற்றி ஜனங்களுக்கு இன்னும் முழுநம்பிக்கை ஏற்படவில்லை, ஆனால் எவ்விடத்திலும் இதுவிஷயமாய் ஜனங்கள் சந்தேஹிக்கிறதாக எனக்குத் தென்படவில்லை. அப்போதைக்கப்போது ஒரு ஊரிலுள்ள கூட்டுத்தொழில் பாங்கிக்கு இன்னின்ன வட்டி வியாபாரி ஜன்மவிரோதியா யிருக்கிறாரென்று சொல்லப்படுகிறது. ஆனால் இதுவரையில் இந்த விரோதத்தினால் அதை ஒரு பொருட்டாக நினைக்கும்படி அவ்வளவு கெடுதி எதுவும் நேரிடவில்லை. இந்த முயற்சியின் ஆரம்பதசையில் இதை வட்டி வியாபாரியானவன் கவனிக்கிறதேயில்லை; இது ஒருதடவை நிலையாய் வேரூன்றியபிறகோ அதை அசைக்க அவனால் முடியாது. ஸெண்ட்ரல் பாங்கிகளிலோ அல்லது நாட்டுச்சங்கங்களிலோ மெம்பர்களாயிருப்பவர்களே சில சமயங்களில் தங்களுடைய யோக்கியதையில் நம்பிக்கையற்றிருப்பதனால் இதரர்களுடைய நம்பிக்கையைப் பெறு

மல் போகிறதைக் காணலாம். ஆனால் பொதுவாய் ஜனங்கள் இந்தமுயற்சியை பொறுமையுடனும் நல்லெண்ணத்துடனும் ஆதரித்து வந்திருப்பதாகவே தெரிகிறது. இதற்கு ஊக்கத்துடன் உதவிபுரிந்தவர்களின் ஜாபிதா மிகவும் நீண்டதேயாம். இந்த வேலை சம்பந்தமாய் உழைப்பவர்களில் மிகவும் முக்கியமாயிருப்பவர்களின் பெயரை ஜில்லாவாரியாய் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும் சேர்ந்து 47 கனவான்களுக்குக்குறையாமல் இந்த வருஷத்திலே கூட்டுத்தொழில் சம்பந்தமான வேலையில் உதவி புரிந்ததற்காக ஜனங்களின் வந்தனத்தைப்பெற அர்ஹர்களாகிறார்களென்று தனித்தனியே ரிபோர்ட்டுகளில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் இங்கே சௌகரியமாய் எடுத்துரைக்கக்கூடிய சில பெயர்களை மாத்திரம் பொறுக்கிக் கூறுவது அசம்பாவிதமான காரியமாகும்.

——(*)——

ஆராய்ச்சிக் குறிப்புகள்.

அல்லஹாபாத் விவசாய கான்பரென்ஸ்.

மத்திய மாகாணங்களில் டைரெக்டர் ஆவ் லாண்ட் ரெகார்ட்ஸ் அண்ட் அக்ரிகல்சர் என்னும் உத்தியோகத்தை வகிக்கும் மிஸ்டர் டபிள்யூ. எச். மோர்ஹௌட், ஸி. ஐ. இ., ஐ. ஸி. எஸ், என்பவர், ஒரு பொருட்காட்சி சம்பந்தமாய் அல்லஹாபாத்திலே சமீபத்தில் கூட்டப்பட்ட விவசாய கான்பரென்ஸைப்பற்றி அக்ரிகல்சுரல் ஜர்னல் ஆவ் இந்தியா என்னும் பத்திரிகையின் ஜூலை மாதத்துச் சஞ்சிகையில் ஸ்வாரஸ்யமான விபாசமொன்று எழுதியிருக்கிறார். நிலச் சுவான்தாரர்களின் பிரதிநிதிகள் அநேகரை ஒன்றாய் வரவழைத்து, அவர்கள் விவசாய சம்பந்தமாயுள்ள சிக்கலான விஷயங்கள் இன்னின்னவை யென்றும் அவைகளை இன்னவிதமாய்ச் சிக்கறுக்கலா மென்றும் ஆராய்ந்தறியக் கூடிய மார்க்கத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டுவதே இந்தக் கான்பரென்ஸின் நோக்கமாகும்.

இந்தக் கான்பரென்ஸுக்கான பல அழைப்புப் பத்திரங்கள் உத்தியோக சம்பந்தமில்லாத அநேகர்களிடத்தில் அவர்களிஷ்டப்படி வேண்டியவர்களுக்குக் கொடுக்கும்படி அனுப்பப்பட்டன. முதல் வகுப்பில், (1)சட்ட சபை மெம்பர்களும், (2) மாகாணத்தில் கௌரவபட்டம் பெற்றவர்களில் முக்கியமானவர்களும், (3) இந்தியாவில் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும், ப்ரொவின்ஷியல் கோர்ட் ஆவ் வார்ட்ஸால் நியமிக்கப்பட்டுள்ள மானேஜர்களும் சேர்ந்து அநேக உத்தியோகஸ்தர்களும், (4) விவசாய காலேஜின் கவர்னர்களையும் பல விவசாய ஸ்தாபனங்களைப் பார்வையிடுவதற்காக கௌரவார்த்தமாய் நியமிக்கப் பட்டவர்களையும் போல் விவசாய இலாகாவைச்சேர்ந்த உத்தியோகஸ்தரல்லாதவர்களும், (5) விவசாய மண்டபத்தில் பொருள்கள் சேகரித்திருப்பவர்களின் பிரதிநிதிகளும், (6) பலவழிகளில் இந்த இலாகாவுடன் பலிரங்கமாய் ஒத்துழைக்கும நபர்களும் சேர்ந்திருந்தார்கள்.

இரண்டாவது வகுப்பில், அப்பர் இந்தியா சேம்பர் ஆவ் கர்மர்ஸ் என்னும் வர்த்தக சங்கத்தாரும், பல விவசாய சங்கங்களும், ஜில்லா பொருட்காட்சி கம்மிட்டிகளும், நியமித்தனுப்பிய நபர்கள் சேர்ந்திருந்தார்கள்.

இரண்டொரு முக்கியமான விஷயங்களுக்காக ஒவ்வொரு நாள் நிச்சயிக்கப்பட்டு, இந்த விஷயங்களின் மூன்று அல்லது நான்கு அம்சங்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டு அவைகளைப்பற்றி விவரமாய்ப் பேசவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜனவரி மீ 13உ யன்று மாகாணத்தின் லெப்டெனென்ட் கவர்னராகிய ஸர் ஜான் ஹியூவெட்டின் அக்கிராசனத்தின் கீழ் கான்பரென்ஸ் ஆரம்பிக்

கப்பட்டு, ஆறுநாட்களுக்கு விடாமல் நடந்தது. விவசாயிகளுக்கு அனுபவத்தில் உபயோகமாயிருக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி பேச்சுகள் நடந்ததுடன் விவசாயத்தில் யந்திரங்களைக்கொண்டு வேலைசெய்வது விஷயமாய்ப் பிரேரேபணைகள் கவனிக்கப்பட்டன. மூன்றும் நாள் கூட்டு முயற்சியைப்பற்றி கவனிக்கப்பட்டது. அன்று அக்கிராசனம் வகித்தவர் ரிவினியூ போர்ட் மெம்பர் மிஸ்டர் டி. வி. பெய்லி. "இதில் கூட்டுத்தொழில் சங்கங்களை ஸ்தாபித்து நிர்வகிப்பதில் அனுபவ ஞானமுள்ள அநேகர் அவரவர்களின் அபிப்பிராயங்களை எடுத்துச் சொன்னார்கள்; உதாரணமாக, ராய் இஷார் ஸாஹாய் புகதூர் என்பவர் பதேபூரில் தான் பலிதத்துடன் செய்திருக்கும் வேலையைப்பற்றிச் சொன்னார்; மிஸ்டர் ஏ. ஜி. முகர்ஜி என்பவர் காசி கூட்டுத்தொழில் பாங்கியின் மானேஜர் ஹோதாவில் தம்முடைய அனுபோகத்தைக்குறித்தும், மிஸ்டர். ஏ. எச். வி. ஹாமில்டன் என்பவர் ப்ரயாக் (அல்லஹாபாத்) நகரச்சங்கத்தின் வேலையைப்பற்றியும், விவரித்துக் கூறினார்கள். (ஸந்திலாவைச் சேர்ந்த) முன்ஷி காபூல் ஆமெடாலும், (மெய்ன்புரியைச்சேர்ந்த) முன்ஷி கங்கப்ரஸாத்தாலும் (புனேவோவைச்சேர்ந்த) ராய் காளிசாரன் ஸாஹிபாலும் ஸ்வாரஸ்யமான வியாசங்கள் படிக்கப்பட்டன; மொத்தத்தில் இந்த கான்பரென்ஸில் நடந்த விவாதத்திலிருந்து கூட்டுத்தொழில் முயற்சியானது எவ்வளவுதூரம் ஏற்கனவே ஜனங்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறதென்று தெரியவந்தது."

மிஸ்டர் மோர்ஹெட் தம்முடைய குறிப்பின் கடைசி பாராவில் "இந்த கான்பரென்ஸை நடத்தினதால் ஏற்பட்ட சிரமத்துக்கேற்ற பிரயோஜனம் அதனால் உண்டாகுமா?" என்னும் பிரசினையைப்பற்றிச் சொல்லுகிறார். அவருடைய பதிலை அடியிற் கண்டிருக்கிறது; கான்பரென்ஸுகளால் ஏதேனும் உபயோகமுண்டாவென்று சந்தேகிக்கும் நபர்களுக்கு அது சரியான மறுமொழியாம்.

"இந்த கேள்விக்குப் பதிலைக் கேவலம் கான்பரென்ஸில் நடந்த விவகாரங்களிலிருந்தே அறிய முயல்வது கூடாது; இந்தக் கான்பரென்ஸினால் பலன் ஏதேனு முண்டாவென்பதை அறிவதற்கு, அதன் நடவடிக்கைகளில் நேரில் கலந்து வேலை செய்யாத பெரும்பாலான மெம்பர்களுக்கு இதனால் என்ன பிரயோஜன முண்டாயிற்று என்று பார்க்கவேண்டும்; இந்தப் பிரயோஜனம் உடனே ஸ்பஷ்டமாய்த் தெரிவது அபூர்வம். ஆனால், கான்பரென்ஸ் நடந்த பொழுதும் அதற்குப் பிறகும் விசாரணை செய்ததில் அதனால் ஏராளமான நற்பயன் உண்டாயிருப்பதாகவே ஏற்படுகிறது. இப்பொழுது விவேகிகள் அநேகர் தாங்களிருக்கும் பிரதேசங்களில் விவசாய சம்பந்தமாய் ஏற்பட்டுள்ள சிக்கலான பிரசினைகளைப்பற்றி யோசிக்கத் தொடங்கி, கான்பரென்ஸில் இது விஷயமாய்த் தாங்கள் கேட்ட பரிகாரத்தைத் தேடுவதில் விவசாய இலாகாவின் உதவியைக் கோருகிறார்கள்; இப்பொழுது பொதுஜன அபிப்பிராயமே பல வழிகளில் பாயாமல் ஒரே நோக்கங் கொண்டதாய் முன்னிருந்

ததைக் காட்டிலும் வியக்தமான மார்க்கங்களில் செல்லுகிறதென்று சொல்லுவது மிகைப்படக் கூறுவதாகாதென்று எனக்குத் தோன்றுகிறது. விவசாய இலாகா சம்பந்தப்பட்ட வரையில், இந்தக் கான்பரென்ஸானது மிகவும் உபயோகமுள்ளதா யிருந்திருக்கிறது; எப்படியெனில், இலாகா உத்தியோகஸ்தர்கள் விவசாயத்தின் அபிவிருத்தியை முன்னிட்டுத் தாமாகவே உழைத்து வந்திருக்கும் பலருடன் நெருங்கிப் பழகுவதற்கும், ஜனங்களின் அபிப்பிராயத்தையும் எந்தெந்த விஷயங்களில் அவர்களுக்கு ஸர்க்காரின் உதவி அவசியமென்பதையும் இந்த உத்தியோகஸ்தர்கள் அறிவதற்கும் இந்தக் கான்பரென்ஸால் ஒரு அவகாசம் ஏற்பட்டது."

டென்மார்க் கூட்டுத்தொழில் மசோதா.

"செல்வ நிலைக்கும் சமூக வாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட சமாசார சங்கத்தாரின் புல்லெடின்" என்னும் வர்த்தமானியின் மே மாத்திய சஞ்சிகையில், டென்மார்க் கவர்ன்மெண்டாரால் டேனிஷ் பார்லிமெண்டிலே சமீபத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு புதிய மசோதாவைப்பற்றி ஒரு வியாசம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவிலே, ஒரு சங்கத்தின் விதிகளில் வேறே விதமாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அதன் மெம்பர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தும் தனித் தனியாகவும் அதன் விவகாரங்களுக்காக அதன் கடன்காரர்களுக்கு உத்தரவாதிகளாவார்களென்றும், ஆனால், அந்தக் கடன்காரர்கள் சங்கத்திலிருந்தே தங்களுடைய கடன்களை வசூலிக்கப் பிரயத்தனப்பட்டு அது சாத்தியமில்லாமற் போனாலொழிய மெம்பர்களைத் தனித் தனியே உத்தரவாதிகளாக்கக்கூடிய எவ்வித நடவடிக்கையும் நடத்தக்கூடாதென்றும் நிபந்தனைகள் கண்டிருக்கிறது. சங்கங்கள் மெம்பரல்லாதவர்களுடன் வியாபாரம் செய்வதற்கு இந்த மசோதா தாராளமாய் இடங்கொடுக்கிறது; மேலும் மெம்பர்களின் சங்கியையும் இவ்வளவுக்குமேல் இருக்கக் கூடாதென்று இதனால் வரையறுக்கப்படவில்லை. பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களில் மெம்பர்கள் தனித் தனியே எவ்வளவு தூரம் உத்திரவாதம் ஏற்றவர்களாவார்களென்னும் விஷயமாயும் இதில் நிபந்தனை கண்டிருக்கிறது.

ப்ரெஞ்ச் கூட்டுத்தொழில் சங்கங்கள்.

மேலே சொல்லப்பட்ட பத்திரிகையில் "ப்ரான்ஸ்" தேசத்தைப் பற்றி ஒரு வியாசம் இருக்கிறது; அதில், உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்குமான ப்ரெஞ்ச் விவசாய சங்கங்கள் மூன்று வருஷத்தில் தங்கள் விவகாரங்களை நடத்துவதற்காக மிகவும் அனுகூலமான ஷரத்துகளின்படி நாற்பது கோடி ப்ராங்குகளுக்கு மேல் (160,00 பௌண்டுகளுக்குமேல்) கடன் கொடுத்திருக்கிறதாகக் காண்கிறோம். ப்ரான்ஸில் கிராமாந்தரங்களிலுள்ள கூட்டுத்தொழிலாளருக்குள்ளிருக்கும் ஒழுங் கேற்பாட்டினால் இடைவிடா

மல் கவர்ன்மெண்டை நெருக்குவது சாத்தியமாகிறது; இதன் பலனென்ன வெனில், பட்டணங்களுக்கு அனுகூலமாயும் நாட்டுப் பிரதேசங்களுக்குப் பிரதிகூலமாயும் செய்யப்படும் சட்டங்கள் அவர்களைப் பாதிப்பதில்லை யென்பது மாத்திரமல்லாமல், கூட்டுத்தொழில் விஷயமாய் அக்கறையுடன் வேலை செய்வதற்கும் கிராமத்தார்கள் அவர்களுக்குள்ளிருக்கும் குடியானவர்களின் சங்கங்கள் மூலமாய் ராஜாங்கத்தாரின் நாணயத்தின்மேல் கடன் வாங்கும்படியும் சட்டநிரூபண ஸ்தாபனத்தின் வாஸ்தவமான அனுதாபத்தைப் பெறும்படியும் செய்வதற்கும் ராஜாங்கத்தாரின் உதவியை நம்பியிருக்கவுங்கூடும்.

விவசாய சம்பந்தமான யந்திரங்களில் கூட்டுத்தொழில் முறையாய்ச் சொத்துவம் பாராட்டுவது.

கில்கோமனிலும் கில்மாலாக்கிலும் விவசாய காரியங்களுக்காக கூட்டு முயற்சியை அனுசரிப்பதற்குக் குடியானவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றி ஐரிஷ் ஹோம்ஸ்டெட் என்னும் பத்திரிகையின் நிருபரொருவர் ஒரு ஸ்வாரஸ்யமான வியாசம் எழுதி யிருக்கிறார். தங்களுடைய தொழிலுக்கேற்ற யந்தரங்களை யெல்லாம் வாங்குவதற்கு அவசியமான மூலதனத்தைச் செலவு செய்யக்கூடியவர்கள் வாஸ்தவத்தில் மிகவும் சிலரே. அப்படி அவர்கள் வாங்கக் கூடியவர்களா யிருந்தாலும், யந்திரங்கள் விஷயமாய்க் கைத்தொழில் முறையில் சொத்துவம் பாராட்டுவதனால், ஒரு வருஷத்தில் பெரும்பாகத்துக்கு இவ்விதமாக செலவு செய்யப்பட்ட மூலதனமானது எதற்கும் பிரயோஜனப்படாமல் சும்மாயிருப்பதுடன் விருத்தியும் அடையாது. ஒரு கூட்டுத்தொழில் சங்கமோவெனில், அந்த வேலைக்காக மெம்பர்களுக்கு அவசியமா யிருக்கக்கூடிய யந்திரங்களை வாங்கி அவைகளை உபயோகிக்க விரும்புகிறவர்களுக்குக் கடனாகக் கொடுக்க ஏற்பாடு செய்யக்கூடும். இது சம்பந்தமாய் அமுலிலிருக்கும் விதிகளில் அடியிற்கண்டவை சிலவாகும்.

1. யந்திரங்களை வாடகைக்கு வாங்கிக்கொண்டவர் தெரிந்து அஜாக்கிரதையா யிருந்தாரென்று கம்மிட்டியார் நினைக்கும் விஷயங்களில் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் சகல மராமத்துகளும் சங்கத்தின் செலவிலேயே செய்யப்பட்டன.

2. மாசூலை அறுவடைசெய்யும் பொழுது, எந்தக் குடியானவன் ஒரு குறித்த பயிரை அதிக விஸ்தீரணத்தில் பயிரிட்டிருக்கிறானோ, அவன், சங்கத்தின் மெம்பரா யிருந்தாலுஞ்சரி, இல்லாவிட்டாலுஞ்சரி, அவனுக்கே யந்திரங்களை உபயோகிக்க முன்னதாக அனுமதி கொடுக்கப்படும். யந்திரங்களின் உபயோகத்துக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் இரண்டு நபர்கள் ஒரே அளவுள்ள விஸ்தீரணத்தில் பயிர் செய்திருந்தால், எவர் முன்னதாக விண்ணப்பம் செய்து கொள்ளுகிறாரோ அவருக்கே அனுமதி கொடுக்கப்படும்; ஒரே அளவுள்ள விஸ்தீர்ணத்தில் பயிர் செய்துள்ள இரண்டு அல்லது

அதற்கு மேற்பட்ட நபர்கள் ஏககாலத்தில் விண்ணப்பம் செய்துகொண்டால், ஒரு நாணயத்தைத் தூக்கிப்போட்டு அது எந்தப் புக்கம் திரும்பி விழுகிறதென்று பார்ப்பதால் இவர்களுக்குள் எவருக்கு யந்திரங்களை உபயோகிக்க அனுமதி கொடுக்கலாமென்பது நிச்சயிக்கப்படும். ஆயினும் தோற்றுப்போனவர் சாதாரண மாதிரியாகத் தம்முடைய மாசூலை அறுவடைசெய்யத் தொடங்கும் பொழுட்டு ஜயித்தவர் அவருக்குத் தம்மாலான வலரியில் குதிரைகளாவது ஆட்களாவது கடனாகக் கொடுக்கவேண்டும்.

3. விவாதத்திலுள்ள சகல விஷயங்களும் மூன்று பேரடங்கிய ஒரு கம்மிட்டிக்கு அனுப்பப்பட வேண்டும்.

யந்திரங்களைச் சரியான நிலைமையில் வைத்திருப்பதற்காகவும் அவசியமான மராமத்துகளைச் செய்வதற்காகவும் சங்கத்தார் தேர்ச்சி பெற்ற ஒருவனை நியமித்தார்கள். இந்த ஏற்பாட்டிலுள்ள விசேஷ அனுகூலமென்னவெனில் சிக்கனமே. போட்டி மிகவும் அதிகமாயிருக்கும் இந்த காலத்தில் கண்டிதமாய்ச் செட்டாயிருந்தாலொழிய பயிரிடுந்தொழிலை பிரயோஜனகரமாய்ச் செய்து முடிப்பது சாத்தியமாகாது. உழவுத் தொழிலில் ஜனங்களுக்கு உற்சாகமுண்டாக வேண்டுமானால், கூட்டுத்தொழில் முறையாய் யந்திரங்களை வாங்கும் வழக்கம் பரவவேண்டும். மேலே சொல்லப்பட்ட பத்திரிகையிலுள்ள குறிப்பிலே, "இந்தப் புதிய ஏற்பாட்டினால் கூட்டுத்தொழில் சங்கமானது அதன் மெம்பர்களுக்கு ஒரு பெருத்த அனுகூலம் செய்வதுமல்லாமல், அதன் லாபத்தையும் அதிகப்படுத்திக் கொள்ளுகிறது" என்று கண்டிருக்கிறது.

எதையும் ஒன்றாய்ச் சேர்க்கும் காலம்.

["எதையும் ஒன்றாய்ச் சேர்க்கும் காலம்" என்னும் விஷயத்தைப்பற்றி படித்தற்குரிய ஸ்வாரஸ்யமான அடியிற்கண்ட வியாசமானது ஐரிஷ் ஹோம்ஸ்டெட் பத்திரிகையிலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறது. அதன் சிறப்பே அதை முழுவதும் நாம் இங்கு எடுத்தெழுதுவதற்குக் காரணமாகும்].

இது எதையும் ஒன்றாய்ச் சேர்க்கும் காலம். கவர்ன்மெண்டானது தன்னுடைய குடிகளையெல்லாம் தனது வேலைக்காகவே ஆகர்ஷித்துக் கொண்டிருக்கிறது; இன்னும் இரண்டு நூற்றாண்டுகளில், நாமெல்லோரும் கவர்ன்மெண்டிடத்திலிருந்து சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களாகாமற் போகும் பட்சத்தில், துரைத்தனத்தார் எப்படி வேலை செய்யச் சொல்லுகிறார்களோ அப்படியே நாமனைவரும் வேலை செய்யவேண்டியவர்களாவோம். அமெரிகாவில் புருஷன் காலைமுதல் மாலைவரையில் கஷ்டத்துடன் உழைத்து சம்பாதிக்கும் திரவியத்தை அவனுடைய மனைவி எவ்விதமாக வீட்டிலிருந்தே ராஜரீதியாய்ச் செலவழிக்கின்றாளோ அவ்விதமாகவே இனிமேல் ஒரு மனிதன் ஸர்க்காருடன் பிணைக்கப்பட்டுப் போவானாகில் அவன் கஷ்டப்பட்டு உழைக்

கவும் ஸர்க்கார் அவனுடைய திரவியத்தைச் செலவழிக்கவும் நேரும். ஒன்றுச் சேர்க்கப்பட்ட சங்கங்களெல்லாவற்றிலும் ராஜாங்கமே மிகுந்த பசித்தன்பத்தால் வருந்துவதால், கடைசியில் அவைகளெல்லாவற்றையும் விழுங்கிவிடும்; இப்படி நடந்துகொண்டுவருவதை நாம் ஆயிரம்வழிகளில் காண்கிறோம். பாதரட்சைதைக்கும் தொழிலைத் தனியே செய்து கொண்டிருந்தவன் பூட்ஸ் தொழிற்சாலையிலும், கம்மாளன் இருப்புத் தொழிற்சாலையிலும், தையற்காரன் உடனே உபயோகிக்கக்கூடிய உடுப்புகள் செய்து விற்கும் தொழிற்சாலையிலும் எப்படி ஐக்கியமாய் விட்டானென்பதைப்பற்றி ஒருவாரத்துக்கு முன் எடுத்துச்சொன்னோம். முன்னே தபால் வண்டிகளை ஓட்டிக்கொண்டிருந்தவன் இப்பொழுது ரெயில்வேயில் வேலையாளாயிருக்கிறான்; முன்னே ஐந்து அல்லது ஆறு வண்டிகளை ஓட்டிக்கொண்டிருந்தது போய் இப்பொழுது நூற்றுக் கணக்கான வண்டிகளை ஏககாலத்தில் ஓட்டுகிறான். ஆறுகளில் செல்லத்தக்க சிறு மரக்கலங்கள்போய் மகா சமுத்திரங்களிலே குறித்த சில மார்க்கங்களில் கடைசிவரையிலும் செல்லத்தக்க ஓஷன் லைனர்ஸ் என்னும் பெரும் நீராவிக்கப்பல்கள் பிரபலமாய்விட்டன; இந்த ஓஷன் லைனர்களின் சொந்தக்காரர்களெல்லாம் சமுத்திர முழுவதும் அதிகாரம் வஹிப்பவர்களாகி அந்தந்த மார்க்கங்கள் வழியாய்ச் செல்லுபவர்களிடத்திலிருந்து தங்களிஷ்டப்படி வாடகை வசூல் செய்யும் நோக்கத்துடன் விரைவாய் ஒன்று சேர்ந்து வருகிறார்கள். காலம் மெல்ல மெல்லச் செல்லும் அநாகரீகமான நாட்டுப்புறத்து ஜில்லாக்களில்கூட எதையும் ஒன்றுய்ச் சேர்க்கும் பத்ததி ஆரம்பிக்கப்பட்டு, அந்தந்த புலத்தில் தனி நபர்களால் சிறு சிறு அளவாக வெண்ணெய் தயார் செய்யப்படுவதுபோய் வெண்ணெய்த் தொழிற்சாலைகளில் மொத்தமொத்தமாய் வெண்ணெய்த் தயார்செய்வது ஸகஜமாய்விட்டது. 18-ம் நூற்றுண்டில் ஸ்தாபிக்கப்பட்ட சிலபாரிஷுகளில் (கிராமங்களில்) "கான்பின்மான்" என்று சொல்லப்பட்ட ஸாவ்கார் இன்னும் தலைகாட்டிக்கொண்டிருந்தாலும், வட்டி வியாபாரமே முழுவதும் ஜாதிபத் தொழிலாய்வருவதற் கறிகுறியாக பெருத்த ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகளுக்கு பிரதி கிராமத்திலும் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. ராஜதந்திரத்தைப்போல் மனதுக்கு வேலை கொடுக்கும் விஷயங்களில்கூட தனி நபரின் புத்தியும் நேர்மையும், கக்ஷிப் பிரதிகக்ஷியினால் பலவீனப்பட்டுப் போயிருந்தும், சகலத்தையும் தனக்குள் அடக்கிக்கொள்ள விரும்பும் பொது அபிப்பிராயத்தில் கலந்து போவதை நாம் காண்கிறோம்; ஆனால் இந்தப் பொது அபிப்பிராயமானது ஷெல்லி-யெனும் பண்டிதையின் மாயாவிகளைக் குறித்தப் பிரபந்தத்தில் 'ப்ரான்கென்ஸ்டீன்' என்பவனால் மானிடக் கூறுகளைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்ட விகாரமான பூதத்தைப்போல் பயமுறுத்துகிறதேயொழிய அதிலிருந்து மானிட அறிவினால் ஏற்படக்கூடிய பயனொன்றும் உண்டாகவில்லை யென்று தெரிகிறது. இந்த போக்குகளைப்பற்றி யெல்லாம் நாம் நினைத்துப்பார்த்தபொழுது, அவைகளால் உண்டாம் பயன்கள் நமதிஷ்டம்போலிருந்தாலுஞ்சரி இல்லா

விட்டாலுஞ்சரி, இது தடுக்கமுடியாத ஸகஜமான ஒரு போக்கென்றும், அதனாலும் சில நற்பயன்கள் உண்டாகுமாகையால், அதற்கு எதிராகப் போராடுவதில் பிரயோஜன மில்லை யென்றும், ஒரு தேனீயானது தனியே தனது இறக்கைகளாலும் கொடுக்குகளாலும் ஒரு கூண்டு கட்டுவதையும் அதன் அறுகோண வீடுகள் ஒரே மாதிரியாயிருப்பதையும் தடுக்க முயல்வது எப்படி பிரயோஜனப்படாதோ அப்படியே இதுவும் பிரயோஜனப்படாதென்றும் நமக்குத் தெரியவந்தது. மானிட சமூகமே அதற்கேயுரிய கூண்டையும் சிறு வீடுகளையும் கட்டத் தொடங்கியிருப்பதால், அந்த வேலையில் நாமனைவரும் கலந்து அவைகளால் உண்டாகும் பிரயோஜனத்தைப் பூர்த்தியாய் அனுபவிக்கவேண்டும். நாம் அதற்காக வேலைசெய்யாமல் சோம்பேறிகளாயிருப்போமாயின் கூண்டு கட்டிமுடியுமுன் நாம் தனியே நின்றுபோய் நசிக்க வேண்டிவரும்.

மானிட வியல்பை நோக்குங்கால், மனிதனால் செய்யப்படும் வேலைகளை ஒன்றுய்ச் சேர்ப்பதனால் நற்பயன்களே உண்டாகுமென்று தோன்றுகிறது. ஜனங்கள் தங்களுடைய ஐக்கியபாவத்தை உணர்ந்து ஒருவருக்கொருவர் உத்தரவாத மேற்கவேண்டுமென்பதை அறிந்து வருகிறார்கள். தேனீக்கூண்டுக் கருகாமையில் தேனீயொன்றை ஒரு குழந்தை துரத்தினால், மற்ற ஈக்களெல்லாம் எப்படி வெளிப்புறப்பட்டு தங்களுடைய கொடுக்குகளால் அக்குழந்தையின் தேகமெல்லாம் கொட்டி அது கண்ணீர் வடித்துக்கொண்டே ஓடும்படியாகச் செய்யுமோ அப்படியே ஒரு தனி நபர் ஜாதிய ஐக்கியத்தில் ஈடுபட்டு வளர்ந்து வருங்கால் அவனுக்கு ஏதேனும் கெடுதி சம்பவிக்கும் பக்ஷத்தில், அதனால் ஜாதிய உணர்ச்சியே பாதிக்கப்பட்டு, ராஜாங்கமானது அதன் ஸ்வபாவமான நிதானத்துடன் அத்தனிநபரின் காப்புக்காக முன்வரும். சிறுவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கும் பத்ததியே இந்த ஜாதியஉணர்ச்சி இருந்துகொண்டிருக்கிறதென்பதற் கோர் அறிகுறியாகும். நாஷனல் இன்ஸுரென்ஸ் மசோதாவானது, ஐரிஷ் ஜனங்களின் ஸ்திதியை உத்தேசித்து நோக்குங்கால், மிகவும் சீர்கேடாய் அமைக்கப்பட்டிருந்தாலுங்கூட, ஐக்கியப்படும் பத்ததி அபிவிருத்தி யடைந்து வருவதாலும், அது காரணமாக தேச முழுவதும் அதன் பிரஜைகளுக்காக ஜவாபுதாரியாகவேண்டு மென்ற உணர்ச்சி ஏற்பட்டுவருவதாலும் உண்டான விளைவேயாம். மனிதனின் சக்திகளை ஒன்றுய்ச் சேர்ப்பதனால், உழைப்பிலும் அதிக சிக்கனம் ஏற்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளியும் தனியே தன் வீட்டில் பூட்ஸ் செய்யும் தொழிலைச் செய்து, ஒவ்வொரு சக்கிலியும் பிரத்தியேகமான பாதரட்சையச்சு வைத்துக்கொண்டு வேலை செய்வதனால் தயார் செய்யக்கூடிய பூட்ஸுகளைக் காட்டிலும் ஐந்நூறு வேலையாட்கள் ஒரு பூட்ஸ் தொழிற்சாலையில் யந்திரத்தின் சகாயத்தினால் வேலைசெய்யும்பட்சத்தில் ஐந்நூறு மடங்கு அதிகமாய் பூட்ஸுகளும் ஜோடுகளும் தயார் செய்வதுமல்லாமல் தனித்தொழிலாளி செய்வதைக்காட்டிலும் நயமாகவும் செய்யக்கூடும். நாம் நடந்து ஓரிடத்துக்குப் போகவேண்டுமா

னால் எவ்வளவு செலவும் காலமும் பிடிக்கக்கூடுமோ அதைக் காட்டிலும் ஸாஸமாயும் அதிவிரைவாயும் நம்மையெல்லாம் இப்பொழுது ரயில் கொண்டு போகிறது. இதை எழுதுகிறவர் சென்றவாரம் இரண்டுமணி நேரத்தில ரயில்மார்க்கமாய்ப் போயிருந்த ஓரிடத்துக்குத் தாம் நடந்துபோயிருந்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய சிரமத்தை நினைக்கும் பொழுதே அவருடைய மனம் சோர்வடைகிறது. இரண்டாயிர வருஷங்களுக்குமுன் சிறு சிறு ராஜ்ஜியங்களில் வசிக்கும் ஜனங்களுடன் ஆச்சரியகரமானதும் அறிதற்கரியதுமான உலக மொன்றிருந்த தென்பதிலும், இந்த ஜனங்கள் தாய் தந்தையரின் கைகளில் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள் கண் பார்வைக் கெட்டிய பிரதேசத்துக்கப்பால் எப்பொழுதும் பிரயாணம் செய்ததில்லை யென்பதிலும் சந்தேகமேயில்லை. இப்பொழுது டப்ளின் பட்டணத்திலிருக்கும் டாட்டர் என்பது நமக்கு ஒரு சிறிய நீர்க்குட்டையாகத் தென்படுகிறது; ஆயினும் புராதன கதை யொன்றில் இந்தக் குட்டையே "கரைகளின் இடையில் துள்ளியோடும் தெய்வீக டாட்டர்" என்று சொல்லப்பட்டிருப்பது நமது கியாபகத்துக்கு வருகிறது. இக்கதையை எழுதினவருக்கு ப்ரபஞ்ச முழுவதிலும் இதைத் தவிர வேறு நதியே யில்லையாகையால், அவர் தனக் கருகாமையிலிருக்கும் விஷயங்களின் ரஹஸ்யார்த்தத்தையும் சிறப்பையும் சிலாகித்திருப்பது ஸகஜமேயாம்; ஆனால் டாட்டர் நதியின் நகித்துப்போன தெய்வீகத் தன்மையை மீண்டும் அடைவதற்காக கூட நாம் இந்த புராதன பௌராணிகரின் காலத்தை விரும்புகிறோமில்லை. காலத்தின் போக்கை அனுசரித்தே நாம் நடக்க வேண்டுமென்றும் மானிட உழைப்பை மிதப்படுத்துவதும் சாத்தியமான இடங்களிலெல்லாம் எதையும் ஒன்றுசேர்த்து ஐக்கியப்படுத்துவதுமே நமது வேலையென்றும் மனதுக்குள் நிச்சயம் செய்துகொண்டு, செலவைக் குறைக்கும் நோக்கத்துடனும், நிஷ்பிரயோஜனமும் அநாவசியமுமானவற்றையெல்லாம் தூரத்தில் விட்டெறிந்துவிடும் உத்தேசத்துடனும் நாட்டுப்புறத்து வீதிகளின் வழியே நடந்து சென்றோம்.

இப்படிச் செல்லும்பொழுது நம்முடைய கவனத்தை அதிகமாய்க் கவர்ந்தது சிறிய கடைகளின் ஏராளமான சங்கிலியேயாம். இக்கடைகள் வழிப்புறத்தில் இங்குமங்குமாக ஏராளமாய்ச் சிதறிக்கிடந்தன; ஆனால் ஐந்தாறுவீடுகள் நெருங்கியிருப்பதனால் பெயருக்கு மாத்திரம் கிராமமாயிருந்த ஒவ்வோரிடத்தில் அங்கிருக்கும் சொற்ப ஜனங்களைச் சுற்றி நம்புதற்கரிய அத்தனை கடைகள் இருந்தன. இந்தச்சிறிய கடைகளெல்லாம் என்ன செய்துகொண்டிருந்தன? அவை அங்குள்ள குடியானவர்களுக்கு தேயிலையும் சர்க்கரையும் மாவும் எண்ணெயும், சாராயத்துக்குப் பதிலாக ஐரிஷ் ஜாதியார் உபயோகிக்கும் வஸ்துவும், அதையும் தேத்தண்ணீரையும் விட்டு சாப்பிடுவதற்கான கோப்பைகளும் டப்பிகளும் சர்ப்பரா செய்துவந்தன; அச்சிறு கடைகளில் ஒவ்வொன்றும் சகல வஸ்துக்களையும் சர்ப்பரா செய்யக்கூடியதாயிருந்தது. அவைகளில் ஒவ்வொன்றுக்கும் வியாபார சம்பந்தமான ஒழுங்கேற்பாடு

இருந்தது; ஒவ்வொன்றுக்கும் டப்ளினிலுள்ள மொத்த வியாபார ஸ்தலங்களுடன் லேவாதேவியு மிருந்தது. அவைகளில் ஒவ்வொன்றும் தன் மாவு மூட்டைகளையும், "கின்னெஸ்" டப்பாக்களையும், எண்ணெய்ப் பீப்பாக்களையும், சாராயத்துக்குப் பதிலாய் ஐரிஷ் ஜாதியார் உபயோகிக்கும் வஸ்துவையும் பிரத்தியேகமாக இதரர்களிடத்திலிருந்து வரவழைத்துக் கொண்டிருந்தது. அதற்கு வேண்டிய தேயிலை, சர்க்கரை, திராக்ஷை வற்றல்கள், பானைகள், தட்டுகள், ஆணிகள், ட்வைன் கயிறு முதலிய சகல சாமான்களும் சிறு சுமைகளுக்கு அதிக வீதங்கள் கொடுத்து வரவழைக்கப்பட்டன. இவைகளுக்காக வர்த்தகர்களின் வண்டிகள் ஸ்டேஷனுக்குப்போய் ஜீவனத்துக் கவசியமான இப்பொருள்களையெல்லாம் விசேஷ செலவுடன் ஓரிடத்தில் கொண்டு சேர்த்தன. பாதரட்சை செய்பவர்கள் பூட்ஸ் தொழிற் சாலைகளிலும் கம்மாளர் இரும்புத் தொழிற்சாலைகளிலும் ஐக்கியமாய் விட்டதைப்போல் இதர தொழில்களிலும் ஒன்றுசேரும் பத்தி உலகமுழுவதும் பரவிவந்தாலும், இந்த சிறு கடைகள் மாத்திரம் இதில் சேராமல் விடுபட்டுப்போயின; இவைகளை ஒன்றுசேர்க்கவாவது, மானிட உழைப்பை மிதப்படுத்தவாவது, ஜீவனத்துக் கவசியமான பொருள்கள் நயமாய்க் கிடைக்கும்படி செய்பவாவது எவரும் பிரயத்தனப்படவில்லை. சாமான்களை ஜனங்களுக்குள் பகிர்ந்து கொடுக்கும் வேலையானது ஒருவருடன் ஒருவர் போட்டிபோடும் பலவகையான சொற்ப வர்த்தகர்களால் செய்யப்படுகிறது; இவர்கள் தங்கள் வரையிலே சாத்தியமான மட்டில் சிக்கனமாய் வேலை செய்கிறார்களே யொழிய ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டிலே இவர்களால் அதிக செலவுதான் நேரிடுகிறது; ஜில்லாவுக்கு அனுகூலமாய் இவர்கள் வேலை செய்வதில்லை. ஐர்லாண்ட் தேசத்து நாட்டுப்பிரதேசங்களில் விவகாரம் எப்பொழுதும் இப்படியே இருப்பது சாத்தியமாவென்று நம்மை நாமே கேட்டுக்கொண்டோம்; ஒன்றுச்சேரும்படியும் ஒழுங்கேற்பாடுகள் செய்யும்படியும் தூண்டும் சக்தியானது இவைகளைப் பாதிக்காமலே போய்விடுமா? 500-கடைகளையோ அல்லது 1000-கடைகளையோ தாங்களே சொந்தமாக வைத்து நடத்தும் பெருத்த கம்பெனிகள் பட்டணங்களின் வியாபார மனைத்தையும் தம் வசப்படுத்தியபின் நாட்டுப்பிரதேசங்களில் பிரவேசித்து அவ்விடத்திய வியாபாரத்தையும் கைக்கொள்வதை நாம் சிக்கிரத்தில் பார்க்கவொண்ணாதா? இப்படியே நேருமென்பதில் சந்தேகமேயில்லை. பெரும் நகரத்துக் கடுத்துள்ளப் பிரதேசங்களும் சிறிது தூரத்திலிருக்கும் பட்டணங்களும் ஏற்கனவே இந்த நகரங்களுடன் சேர்க்கப்பட்டு அங்கங்கே கிளையாபீஸுகள் ஏற்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம்; இனி அடுத்தபடி நடக்கவேண்டிய விஷயம் கிராமாந்திர வியாபாரத்தைக் கைக்கொள்வதுதான். நாட்டுப்பிரதேசங்களில் உற்பத்தி சம்பந்தமான தொழில்களுக்காக, சொந்தக்காரர்களால் வைத்து நடத்தப்படும் பன்றியிறைச்சிச் சாலைகளும் வெண்ணெய்த் தொழிற்சாலைகளும் செய்திருக்கும் வேலையை, ஐர்லாண்ட் தேசத்து நாட்டுப்பிரதேசங்களில் பொருள்களைப் பகிர்ந்து கொடுக்கும் வியாபாரத்துக்காக திறமைசாலியான எந்த முதலாளி

யும் இன்னும் செய்யாதிருப்பது நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது. இந்த பலமற்ற சொற்ப கடைக்காரர்களாலன்றி மற்றப்படி எவரும் பிரவேசிக்காதிருக்கும் ஒரு புது வியாபாரமேனத்தையும் பெருத்த அளவில் சாமான்கள் வாங்கிவிற்கும் முதலாளி சீக்கிரத்தில் தன் கைவசப் படுத்திக்கொள்வது ஸர்வ ஸகஜமான விஷயமாய்த் தோன்றுகிறது. பாடுபட்டுழைக்கும் திடகாத்திரமுள்ள குடியேற்ற நாட்டான் ஹாட்டென்டாட்டுகளையும் புஷ்மான்களையும் ஒதுக்கிவிடுவது எப்படி தவிர்க்க முடியாததோ அப்படியே இந்த சொற்ப வர்த்தகர்கள் ஒதுக்கப்பட்டுப்போவதும் தவிர்க்கமுடியாத விஷயமாகும்.

நாட்டுப் புறத்து வியாபாரத்தை முதலாளி கவர்ந்து கொள்வதற்குப் பர்த்தியாக செய்யக்கூடிய ஏற்பாடு வேறேதேனுமிருக்கிறதா? ஆம், இருக்கிறது; இது பழைய பத்ததியை அப்படியே வைத்துக்கொள்வதைக் காட்டிலும் அல்லது பெருத்த கம்பெனிகள் தம் கிளைகளுடன் பிரவேசிப்பதைக் காட்டிலும் ஸந்தோஷத்துடன் ஏற்கத் தக்கதாகும். இத்தகைய நீண்ட வெற்றுரைகளைப் பிதற்றிக்கொண்டு தற்கால வாழ்க்கையாகியகாட்டில் வீணே கதறுகிறோமென்னும் அபவாதம் எங்களைச் சாராதிருக்கும் பொருட்டு, வஸ்துக்களைக் கொள்வோர்களே சொந்தக்காரர்களாய் ரூரல் ஸ்டோர்ஸ் ஏற்படுத்தி, அவைகளைத் தாங்களே நிர்வஹித்துத் தாங்களே லாபமடைவதுதான் இதற்குப் பிரதியான ஏற்பாடென்பதை உடனே சொல்லி விடுகிறோம். உள்ளபடியே நாம் விரும்புவதென்ன வெனில், டெம்பில்க்ரோன், எனிஸ்கார்தி, லாம்பார்ட்ஸ்டௌன் என்னும் இடங்களிலிருப்பதைப் போல் குடியானவர்களின் சங்கங்கள் ஐர்லாண்ட் தேசத்தின் நாட்டுப்புறப் பிரதேசங்கள் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு, இவைகள் கூட்டுத்தொழிலின் உட்கருத்தை அறிந்து அனுசரிக்கத் தொடங்கிய பிறகு, அதைத் தங்களுடைய வியாபாரத்தைச் சேர்ந்த வாங்குவது, விற்பது, உற்பத்தி செய்வது முதலிய பற்பல பிரிவுகளிலும் பிரயோகித்து, விவசாயிகள் இல்லாவிட்டால் எவ்விதக் கடைகளாவது கிராமவாழ்க்கையாவது இராதாகையால், முழுவதும் அந்த விவசாயிகளின் லாபத்தின் பொருட்டே ஐர்லாண்ட தேசத்தின் நாட்டுப்புறத்து வியாபாரத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பதேயாம். இத்தகைய கூட்டுத்தொழில் பத்ததியை அனுசரித்து வியாபாரம் செய்வதில் அநேக அனுகூலங்கள் உள; டெம்பில்க்ரோனையே உதாரணமாக எடுத்துக்கொள்ளவாம்; இங்கு, வியாபார அனுபவமும் ஸ்டோர்களை வைத்து நிர்வஹிக்கும் சக்தியுமில்லாத நூற்றுக்கணக்கான சொற்ப விவசாயிகள் இதை ஆரம்பித்து, நீண்ட அனுபோகமுள்ள வட்டி வியாபாரியுடன் நெருங்கிப் போட்டிபோட வேண்டியிருந்துங்கூட, சில வருஷகாலத்துக்குள் பன்னிரண்டாயிரம் பௌண்டுகளுக்கு மேலேயே வியாபாரம் நடத்தக்கூடியவர்களாய், ஏராளமான லாபம் சம்பாதித்து, விற்பனையின்மேல் நூற்றுக்குப் பத்துவீதம் ஈவுத்தொகை கொடுக்கக் கூடியவர்களானார்கள்; இதோடு நிற்காமல், அவர்கள் இன்னமும் அபிவிருத்தியடைந்து, சுற்றுப் புறத்திலுள்ள ஜில்லாக்களில்

புதிய ஸ்டோர்கள் ஸ்தாபித்துக்கொண்டு வருகிறார்கள். ஒருவனைத் தன்னுடைய வரும்படியின் செலவாவதற்கான சக்தியானது நூற்றுக்கு 10 வீதம் அதிகமாவது அவனுக்கு இஷ்டமா என்று கேட்டால், அதற்கு "ஆம்" என்று தயங்காமல் உடனே பதில் சொல்லாத மனிதனும் உளனோ? நல்லது; இதுதான் கூட்டுத்தொழில் பத்ததியும் அதை அனுசரிக்கிற மெம்பர்களுக்கு செய்யும் அனுகூலம். ஒரு மத்திய ஸ்தாபனத்துடன் பிணைக்கப்பட்டுள்ள கூட்டத்தொழில் சங்கமானது எவ்வளவு பெருத்த மூலதனத்துடன் கூடிய கம்பெனியுடனும் தைரியமாய்ப் போட்டி போடக்கூடும். இதன் ஐக்கிய சபையானது யாதொரு கம்பெனியைப்போலவே பெருத்த அளவிலும் நயமாயும் பொருள்களை வாங்கமுடியும்; உள்ளூரிலுள்ள சங்கங்கள் 12 சிறிய கடைகளின் வியாபாரத்தையும் தங்களதாக்கிக்கொண்டு, வஸ்துக்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோவதற்காகவும் காரியநிர்வாஹத்துக்காகவும் பிடிக்கும் செலவில்மாத்திரமேயல்லாமல் தங்களுடையசாமான்களின் அசல் விலை சம்பந்தமாய்கூட சிக்கனமாய் வேலை செய்வது சாத்தியமாகும்; ஷை லாபங்களும் மிதச்செலவினால் கிடைக்கும் பலிதங்களும் சங்கத்துடன் அவரவர்கள் செய்யும் லேவாதேவிக்குத் தக்கபடி அந்தந்த மெம்பர்களுக்குச் சேரும்; இதனால், வெண்ணெய்த் தொழிற்சாலைகளிலும் இதர உற்பத்தி சங்கங்களிலும் கூட்டுத்தொழில் முறையான பத்ததியை அனுசரிக்கத் தொடங்கியதனால் விவசாயிகளுக்குக் கிடைத்திருக்கும் செல்வம் பின்னும் அதிகரிக்கும். இதைப் படிப்பவர்கள் நாம் எழுதியிருப்பதைப் பற்றி யோசனை செய்வார்களென்று நம்புகிறோம். சரக்குகளை ஜனங்களுக்குள் பகிர்ந்து கொடுப்பதில் இப்பொழுது நாம் அனுசரித்து வரும் கர்ஞடக பத்ததியைக் கண்டால் நமக்கு அருவருப்பாயிருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதர தேசத்தார்கள் கட்டுப்பாடுகள் ஏற்படுத்திக்கொண்டு, தம் வாழ்க்கை மநோகரமாயும் சுகமாயும் செல்வம் தழைத்தோங்குவதற் கனுகுணமாயும் இருக்குமாறு, தம் நாடுகள் முன்னேற்றமடையும்படி உற்சாகத்துடன் உழைத்துக் கொண்டிருக்க, ஐர்லாண்டின் நாட்டுப்புறப் பிரதேசங்கள் இன்னும் பண்டைக்காலத்துப் பத்ததிகளை அனுசரித்துக்கொண்டு, யுக யுகாந்தரம்போல் நீண்டு ஆழ்ந்திருக்கும் பள்ளத்தாக்கில் சோம்பலுடன் படுத்துக்கிடந்து சிறிதேனும் சலனமின்றி யிருப்பதைப் பார்க்கும்பொழுது எமக்கு வெட்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஐர்லாண்டின் நாட்டுப்புறப் பிரதேசங்களில் சுறு சுறுப்பு ஏற்படும்படி செய்வது எப்பொழுதோ?

——(10:)——

குறிப்புகள்.

மிகவும் தகுந்த கௌரவம்.

ஒரு கூட்டுத்தொழிலாளரின் வேலை அங்கீகரிக்கப்படுவது.

ஸர் நியூஜென்ட் எவரார்ட் என்பவர் தமது தேசத்துக்கும் விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழிலுக்கும் செய்திருக்கும் ஊழியத்தைத் தக்கபடி அங்கீகரித்திருப்பதைப்பற்றி ஐர்லாண்ட், இங்கிலண்ட், ஸ்காட்லாண்ட், ஆகிய இத்தேசங்கள் முழுவதுமுள்ள கூட்டுத்தொழிலாள ரனைவரும் தங்கள் மனதார சந்தோஷிக்கிறார்கள். மாட்சிமை பொருந்திய மஹாராஜா அவர்கள் அவருக்கும் அவருடைய சந்ததிக்கும் பாரன் என்ற பட்டம் அளித்திருக்கிறார். தேசாபிமானம் நிறைந்து பிரயோஜனகரமான கைங்கரியங்கள் செறிந்துள்ள அவருடைய குடும்பத்தின் பூர்வ சரித்திரத்தை நோக்குங்கால், அதில் எங்கும் நியூஜென்ட் எவரார்ட் என்பவர் கூட்டுத்தொழிலாளராகச் செய்திருக்கும் வேலையைப்போல் அவருடைய தேசத்தாரின் கவனத்தைக் கவரக்கூடிய விஷயம் வேறெதுவுமில்லை. ஐ. ஓ. ஏ. எஸ். என்னும் ஸ்தாபனத்தின் ப்ரெஸிடென்டாகவும் கூட்டுத்தொழில் ஏற்பாட்டுக்கான ஜாயிண்ட் போர்டின் மெம்பராகவும், அவர்—விவசாய சம்பந்தமான கூட்டுத் தொழிலின் அபிவிருத்திக்காக ஒரு நல்ல ஐரிஷ்மான் எவ்வளவு வேலைசெய்யக் கூடுமோ அவ்வளவும் செய்திருக்கிறார். ஐர்லாண்டில் புகையிலைப் பயிரிடும் தொழிலுக்கு மறுபடி உயிருண்டாக்குவதில் அவர் மிகுந்த உற்சாகத்துடன் உழைத்திருக்கிறார்; மேலும், அக்ரிகல்சுரல் போர்ட் என்னும் விவசாய சபையிலும் அவருடைய தேசத்தின் க்ஷேமாபிவிருத்திக்காக ஸ்தாபிக்கப்பட்ட இதர சபைகள் ஒவ்வொன்றிலும் மெம்பரா யிருந்ததில் அவர் விவேகத்துடன் புத்திகூறியும் ஊக்கத்துடன் உழைத்தும் வந்திருக்கிறார்.

கட்டிடங்கள் கட்டுவதற்கான சங்கங்கள்.

லண்டனிலுள்ள கூட்டுத்தொழில் முறையாய்க் கட்டிடங்கள் கட்டுவதற்கான சங்கத்தில் மிஸ்டர் ஆர்தர் உவெப் என்பவர் "வீடுகள் சம்பந்தமாயுள்ள சிக்கலான பிரசினைகள்" என்னும் விஷயத்தைப்பற்றி படித்த ஸ்வாரஸ்யமான ஒரு வியாசத்திலே, அடியிற்கண்டபடி கூறியிருக்கிறார்:—

அநேக சங்கங்கள் தங்களுடைய மெம்பர்களுக்கு வீடுகள் கட்டியாவது கொடுத்திருக்கின்றன, வீடுகளின்மேல் பணமாவது கடனாகக் கொடுத்திருக்கின்றன; ஆனால் நான் ஒரு புதியவழி எடுத்துக்கூறுவேன். அதாவது, சங்

கங்கள் நிலத்தை வாங்கும் விலகாரத்தை மாத்திரம் ஏற்றுக்கொண்டு அதன் மேல் மெம்பர்கள் தாங்களே கட்டிடங்கள் கட்டிக்கொள்வதனால் ஒரு பூஸ்திதி ஏற்படுத்துவதற்கான பத்ததியொன்றைத் தீர ஆலோசித்துத் தயார்செய்ய வேண்டுமென்பதே. இதனால் சிக்கனம், அதிக வெளிச்சம், நல்லகாற்று, பெரும் தோட்டம்—இவைபோன்ற அநேக அனுகூலங்கள் ஏற்படுகின்றன. அந்த சொத்தில் எல்லோருக்கும் பொதுவாய்ப் பாத்தியதையுண்டென்கிற உணர்ச்சியுண்டாகும்; அதனால் எந்த நோக்கங்களுடன் கூட்டுத்தொழில் ஆரம்பிக்கப்பட்டதோ அவைகளி லொன்றுக்காக சங்கம் அதிகமாக உழைத்ததாகும். நிலங்களைக் குத்தகைக்கு விடுவதா அல்லது அவரவர்கள் சொந்தமாய் அனுபவிக்கும்படி விட்டுவிடுவதா என்னும் விஷயம், உள்ளூரிலுள்ளவர்களின் இஷ்டத்தைப் பொறுத்ததாகும். இரண்டு வழிகளுக்கும் அனுகூலமானவாதங்கள் அநேகமிருக்கின்றன; அவைகளில் சிலவற்றை நான் எடுத்துச்சொல்லுகிறேன். சங்கங்கள் அவைகளின் மெம்பர்களுக்குத் திரவிய சகாயம் செய்வதைவிட வேண்டிய அளவுக்கு அதிகமாயிருக்கும் தங்கள் மூலதனத்தைக் கூட்டுத்தொழில் முறையாய் நிலையான கட்டிடங்கள் கட்டுவதற்கான சங்கத்தைப்போல் கொடுத்த பணத்தைச் சுலபமாய்த் திருப்பிவிடக்கூடிய ஸ்தாபனத்தில் வட்டிக்குப்போட்டு வைப்பதால் அவர்களுக்கு அதிக உதவி புரிந்தனவாகும்; ஏனெனில், தனிமெம்பர்கள் வீடு கட்டுவதற்காவது வீடு வாங்குவதற்காவது வேண்டிய தொகையை இந்த ஸ்தாபனத்திலிருந்து கடனாக வாங்கிக்கொள்ள கூடும். முடிவில், அந்த சங்கம் எப்படி வேலைசெய்ததென்பதைப் பற்றிச் சொன்னார்.

பம்பாய் ஸென்ட்ரல் கூட்டுத்தொழில் பாங்கி.

ப்ராஸ்பெக்டஸ் (விவரப் பத்திரிகை)

பம்பாய், 1911—ம் ஞு அக்டோபர் மீ 10உ.—ஸர் விடல்தாஸ் தாமோதர் தாகர்ஸே என்பவர், கவர்ன்மெண்டாரின் அனுமதியைப் பெற்று, ஸ்தாபித்திருக்கும் பம்பாய் ஸென்ட்ரல் கூட்டுத்தொழில் பாங்கியின் ப்ராஸ்பெக்டஸில் மூலதனம் 7 லக்ஷம் ரூபாயாகக் கண்டிருக்கிறது; இது பங்கொன்றுக்கு 50 ரூபாய் வீதம் 14,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த பாங்கி ஐக்கியநாணயச் சங்கங்களுக்கு மாத்திரமே கடன் கொடுக்கும்; ஏனெனில் எல்லாத் தேசங்களிலும் இச்சங்கங்கள் அதிபத்திரமான ஸ்தாபனங்களென்று அனுபவத்தில் ஏற்பட்டிருக்கிறது. பாங்கியார் சங்கங்களின் நிலைமையைப்பற்றியும் திரவிய சம்பந்தமான போக்கியதையைப் பற்றியும் தாங்களே விசாரிப்பதுடன், சகல கடன்கள் விஷயத்திலும் ஐக்கியநாணயச் சங்கத்தின் ரெஜிஸ்டாருடைய சிபாரிசும் அவசியமென வற்புறுத்துகிறார்கள். டிபெஞ்சர் பத்திரங்களினால் ஏற்படும் கடன் தானே தீர்ந்து விடுமாறு [illegible] பண்டுகள் எனும் நிதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. டிபெஞ்

சர் பத்திரங்களின்மேல் கவர்ன்மெண்டார் நூற்றுக்கு 4 வீதம் கொடுப்பதாக உத்தரவாதம் செய்வதால், டாங்கியார் தங்களுக்கு அனுகூலமாகவே இவைகளின்மேல் பணம் சேகரிப்பது சாத்தியமாகும். அக்டோபர் மீ 16உ சந்தா வசூலிக்க ஆரம்பித்து 21உ யுடன் இது நிறுத்தப்படும். ஸர் விடல் தாஸ் தாகர்ஸேயும், மிஸ்டர் லாலுபாய் ஸாமால் தாஸும் தவிர, மிஸ்டர் ஷாபூர்ஜி பாரோசாவும், கனந்தங்கிய மிஸ்டர் கோகலேயும், மிஸ்டர் பாஜிபாய் ஏறிம்பாயும், டாக்டர் ஸ்டான்லி ரீடும், மிஸ்டர் நாரோடம் மொராஜியும் மிஸ்டர் கோகுல்தாஸும் இன்னும் பம்பாயிலுள்ள வர்த்தகப் பிரமுகர்கள் சிலரும் இதில் டைரெக்டர்களா யிருக்கிறார்கள்.

1911-ம் வரு ஸெப்டெம்பர் மீ 27உயிலும் 29உயிலும் நடந்த மைசூர் கூட்டுத்தொழில் கான்பரென்ஸில் கவனிக்கப்பட்ட விஷயங்களின் ஜாபிதா.

1. கூட்டுத்தொழில் சங்கங்களின் பிரயோஜனங்கள்.

2. கூட்டுத்தொழில் சங்கங்கள் சகல தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸுகளிலும், பெருத்த கிராமங்களிலும் கிராமத் தொகுப்புகளிலும் விபாபிக்கும்படி செய்வது.

3. ஸென்ட்ரல் பாங்கிகளும், ஜில்லா பாங்கிகளும் கூட்டுத்தொழில் யூனியன்களும்: அவைகளின் பிரயோஜனமும், அவைகளுக்குள்ளிருக்க வேண்டிய சம்பந்தமும்.

4. இன்ஸ்பெக்டர்களும், கௌரவ சங்க ஸ்தாபகர்களும், ஸுபர்வைஸர்களும், அவர்களால் என்ன பிரயோஜன முண்டாகிறதென்பதும்.

5. பஞ்சாயத்தார், டைரெக்டர்கள், சங்க உத்தியோகஸ்தர்கள்—இவர்களின் வேலை.

6. பலவித சகாய சட்டங்களும், அவைகளில் மாறுதல் அவசியமானால் அதுவும்.

7. வரையறுக்கப்பட்ட பொறுப்பின் தன்மையும் வரையறுக்கப்படாத பொறுப்பின் தன்மையும், இவ்விரு நிலைமையிலும் ஏற்படும் அனுகூலங்களும்.

8. கணக்குகளும் ரெஜிஸ்டர்களும் இன்ன நமூனாப்படி யிருக்கவேண்டுமென்பதும், அவைகள் ஒரே மாதிரியாயிருக்கும்படி செய்து அவ்வகளைச் சீர்திருத்துவதும்.

9. டிபாஸிட்டுகளை ஆகர்ஷிக்கும் வழியும் அதற்குச் சம்பந்தமான விதிகளும்.

10. மூலதனமும், அதன் தன்மையும், அதை விருத்தி செய்யும் மார்க்கமும்.

11. சேமநிதியும் அதன் உபயோகங்களும்.

12. மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களும், அவைகள் இன்னின்ன வகையானவை யென்பதும், அவைகள் என்ன காரியத்துக்காக, எவ்வளவு காலத்துக்கு, எந்த ஜாமீன்மேல், என்ன வட்டி வீதங்களின்படி கொடுக்கப் படுகின்றனவோ அதுவும்.

13. பங்குகளின் மேல் சம்பாதிக்கக்கூடிய ஈவுத்தொகை இவ்வளவுக்கு மேல் இருக்கக்கூடாதென்று வரையறுப்பது அவசியமா இல்லையாவென்பது.

14. காரியதரிசிகளுக்கும் சங்கங்களின் இதர கம்மிட்டி மெம்பர்களுக்கும் கௌரவ சன்மானங்கள் செய்வதும், இதை எவ்வளவு தூரம் தடுக்கவேண்டு மென்பதும்.

15. சங்கங்களாலும் சங்கங்களின் மேலும் தொடரப்படும் வியாஜ்ஜியங்கள், ஸிவில் விவகார நடவடிக்கை உசிதமா அல்லது ரிவினியூ நடவடிக்கையா உசிதமா வென்பதும் ரெஜிஸ்ட்ராரே டிக்ரிகள் கொடுத்து, அவைகளை சுருக்க வகையாய் நிறைவேற்ற வேண்டுமா வென்பதும்.

16. மைசூர் ஸமஸ்தானத்தில் விவசாய பாங்கிகள் பலித முடையாமற் போனதற்குக் காரணங்களும், இதிலிருந்து கூட்டுத்தொழில் சங்கங்கள் கற்கவேண்டிய படிப்பினைகளும்.

17. ஸ்டோர்ஸ் சங்கங்களும், அவைகளின் தற்கால நிலைமையும், அவைகளால் உண்டாகும் அனுகூலங்களும் பிரதி கூலங்களும்.

18. நெசவுக்காரர்களின் சங்கங்களும், அவைகள் நெசவுத்தொழிலுக்கு எவ்வளவு தூரம் உதவி செய்திருக்கின்றன வென்பதும்.

19. கட்டிடங்கள் கட்டுவதற்கான சங்கங்களும் அவைகளின் உபயோகமும்.

20. கூட்டுத்தொழில் முறையாய் கைத்தொழில்களை விருத்தி செய்வது:—(a) சன்னபட்டணத்தில் அரக்கு சாமான் செய்யும் தொழில், (b) ஸாலிக்ராமத்தில் நெசவு வித்தியாசாலை, (c) டி. நரிசிபூரிலும், சன்னபட்டணத்திலும், மால்வல்லியிலும் பட்டுத்தொழில்.

21. ஜில்லா கைத்தொழில் சங்கங்களைக் கொண்டும் விவசாய சங்கங்களைக்கொண்டும் விவசாயத்தை விருத்திசெய்வது.

22. கூட்டுத்தொழில் சங்கங்களைக்கொண்டு நிரூபணப் பண்ணைகள் ஸ்தாபிக்கத் தொடங்குவது.

23. கான்பரென்ஸில் கொண்டுவரப்படக்கூடிய இதர விஷயங்கள்.

வங்காளத்தில் ஐக்கிய நாணயம்.

1910-1911-ம் ஸுத்துக்கு ரெஜிஸ்ட்ரார் தயார் செய்திருக்கும் வருஷாந்த ரிபோர்ட்டில் கண்டுள்ள வங்காளத்திலிருக்கும் ஐக்கிய நாணயச் சங்கங்களின் அபிவிருத்தியைப் பற்றிய குறிப்பானது ஒரு வழியில் திருப்திகரமா யிருந்தாலும் மற்றொருவழியில் ஏமாற்றத்தை உண்டாக்கக் கூடியதா யிருக்கிறது. 1905-06-ம்ஸுத்திலே 2,606-மெம்பர்களுடனும் 32000-ரூபாய் மொத்த மூலதனத்துடனும் 57-சங்கங்களிருந்தன. 1909-10-ம் ஸுத்துக்குள் சங்கங்களின் சங்கியை 511-ஆகவும் மெம்பர்களின மொத்த சங்கியை 22,871-ஆகவும் அதிகரித்தது; இவைகளின் மூலதனமும் மொத்தத்தில் 7-லக்ஷமாயிற்று. சென்ற வருஷத்தின் கணக்குகளிலிருந்து பின்னும் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்தது; ஏனெனில், சங்கங்களின் சங்கியை 715-ஆகவும், அவைகளிலுள்ள மெம்பர்களின் சங்கியை 35,250-ஆகவும், அவைகளின் மூலதனத்தின் மொத்தம் 11-லக்ஷம் ரூபாயாகவும் அதிகரித்திருந்தது. ஆகவே இதிலிருந்து ஏற்படும் அபிவிருத்திப் பரிமாணமானது மிகவும் தைரியமூட்டக் கூடியதாகவே யிருக்கிறது. ஆனால், இச்சங்கங்களின் வேலை ஸந்தேகமில்லாமல் ஸர்வ சிலாக்கியமானதா யிருந்தாலுங் கூட, இந்த மாகாணத்திலுள்ள 525-லக்ஷம் ஜனங்களில் கேவலம் சிலரே அதனால் லாபமடைகிறார்கள். இதன் காரணத்தை அறிவதற்கு நெடுந்தூரம் போகவேண்டியதில்லை. மிஸ்டர் பூசன் தம்முடைய ரிபோர்ட்டில் இந்த முயற்சியானது இந்த வருஷத்திலே விசேஷமாய்க் கவனிக்கப்பட்டதென்றும் பொது ஜனங்களுக்கு இதிலுள்ள அக்கறை அங்கங்கே குறிப்பிடத்தக்க விதமாய் அதிகரித்திருக்கிறதென்றும் சொல்லுகிறார். கூட்டுத் தொழிலினால் இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்களென்னமோ சகலராலும் அங்கீகரிக்கப் படுகின்றன. ரெஜிஸ்ட்ரார் சொல்லுவதென்னவெனில் "இப்படி

யிருந்தும், பிரத்தியக்ஷமாய் ஏற்பட்டிருக்கும் விளைவுகளிருந்து, கூட்டுத் தொழில் விஷயமாய் உழைப்பதில் ஜனங்கள் இன்னும் சிரத்தை யெடுத்துக் கொள்ள வில்லையென்றே ஏற்படுகிறது. வாஸ்தவத்தில் அனுஷ்டானத்திலிருக்கும் சகல ஏற்பாட்டுகளிலும் இந்தியாவுக்குப் பிரயோஜனகரமான நன்மைசெய்யக்கூடிய ஒரு முயற்சியானது இந்தியர்களுக்குள் படித்தவர்கள் அதற்காகத் தங்களுடைய காலத்தைச் சிறிதுமட்டில் உபயோகிக்க இஷ்டப்படாததனால் முன்னேற்ற மடையாமலிருக்கிறதென்று காண்கிறோம். இந்த வேலை சம்பந்தமாய் உழைத்துவரும் சகலரும் நம்முடைய வந்தனத்தைப் பெற அர்ஹர்களாகிறார்கள். ஆனால் இப்படி உழைப்பவர்களின் சங்கியை இன்னும் கொஞ்சமாகவே யிருப்பதைப்பற்றி விசனிக்கவேண்டி யிருக்கிறது. இந்த விஷயமானது ஜனத்தலைவர்களால் வாஸ்தவத்தில் உற்சாகத்துடன் ஆதரிக்கப் பெறுவதற்கு அர்ஹதையுள்ளதென்பதில் சந்தேகமில்லை" இந்த முறைப்பாடில் புதிய விஷயமொன்றுமில்லை. வருஷாவருஷம் படித்த வகுப்பார் அவர்கள் செய்யக்கூடிய பெருத்த வேலைகளைப்பற்றி ஞாபகப்படுத்தப் படுகிறார்கள். ஆனால், சமாசாரபத்திரிகைகள் நடத்துவதிலும் சாமாரியாய்ப் பிரசங்கங்கள் செய்வதிலும் பெயர்போன நபர்களிருக்கும் உலகத்தின் வேறெந்த பாகத்தைக் காட்டிலும் வங்காளத்தில் "நமது ஜனங்களுடன்" அபிமானம் காட்டுவதாகச் சொல்வது எதேஷ்டமாயிருக்க, அந்தவட்டி கொடுக்கவேண்டி யிருப்பதனாலுண்டாகும் கஷ்டங்களிலிருந்து குடியானவனை மீட்கும் விஷயத்தில் உபந்நியாசகர்களும் பத்திரிகாசிரியர்களும் அவ்வளவுக் கவ்வளவு அசிரத்தையா யிருக்கிறார்கள். அல்லாமலும், இந்த மாகாணத்தில் ஐக்கிய நாணயச்சங்கங்களின் கௌரவ ஸ்தாபகர்களாயுள்ள பன்னிரண்டு நபர்களில் ஏழுபேர் ஐரோப்பியர் என்பதும் கவனிக்கத்தக்கதே. இந்த முயற்சியினால் இந்தியாவுக்கு உண்டாகக்கூடிய நன்மை நியாயமான ஷரத்துகளின்படி சுடன் கிடைப்பது மாத்திரமேயல்ல. வங்காளத்தில் கல்வியிலும் சுகாதாரத்திலும் அக்கறை உண்டானதற்கு இந்த முயற்சியே காரணமாகிறது; மேலும், கிராமப் பள்ளிகூடங்களுக்கு மாதச் சந்தா கொடுக்கும் சங்கங்களின் சங்கியையும் முன்னிலும் அதிகமாயிருக்கிறது. விவசாய அபிவிருத்தியானது சங்கங்கள் கவனிக்கும் மற்றொரு விஷயமாகும். அல்லாமலும், இந்த முயற்சியின் பலனாக நெடுநாளாய் ஏற்பட்டிருந்த கிராமச் சண்டைகள் தீர்க்கப் பட்டுப்போய் ஒன்றுக்கொன்று விரோதமா யிருந்த உபயகக்ஷிகளும் ஒரே சங்கத்தில் அன்னியோன்யமாய் உழைப்பதற்கு அநேக உதாரணங்கள் தான் எடுத்துக் காட்டக் கூடுமென்று மிஸ்டர் பூசன் கூறுகிறார். சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இடங்களிலெல்லாம் நேரிடும் விவாதங்களை உள்ளூரிலேயே மத்தியஸ்தர் மூலமாய்த் தீர்ந்துவிடும் வழக்கம் ஸகஜமாய்க்கொண்டுவருகிறது; ஆகையினால் ஜனங்கள் அதிக செலவு பிடிக்கக் கூடிய அற்ப வியாஜ்ஜியங்களில் தங்களுடைய ஆஸ்தியையெல்லாம் வீணாய் ஒழிப்பதில்லை. இதனால் "இனி செல்வநிலை செழித்தோங்குமென்றும்

கிராம வாழ்க்கையானது பலப்பட்டு அதன் விவகாரங்கள் முன்னிலும் நன்றாய் நடந்தேறுமென்றும்" வாஸ்தவமாய் நம்பலாம். தங்களுடைய கணக்குகளை சரியாய் வைத்து வராத சங்கங்கள் மிகவும் சிலவே யென்பதைக்காணத் தைரிய முண்டாகிறது. பஞ்சாயத்தாரின் கூட்டங்களில் நடந்த விஷயங்களைப்பற்றிய குறிப்புகள் ஆச்சரியகரமான புத்தி சாதுரியத்தைக் காட்டுகின்றனவென்று மிஸ்டர் பூசன் சொல்லுகிறார். மெம்பராகச் சேர்த்துக் கொள்ளுவதற்கான விண்ணப்பங்களைத் தள்ளிவிட்டதற்கும் மெம்பராயிருக்க யோக்கியதையற்றவர்களை நீக்கிவிட்டதற்கும் அநேக உதாரணங்கள் எடுத்துச் சொல்லக்கூடும்; இதனால், சங்கங்கள் தங்களுடைய பொறுப்பு இத்தன்மையதென்றும் கூட்டாய் உத்தரவாத மேற்பதன் அர்த்தல் இன்னதென்றும் அறிந்து கொண்டிருக்கின்றன வென்று ஏற்படுகிறது. கிராமச் சங்கங்களிலிருந்து என்ன நோக்கங்களுடன் கடன்கள் வாங்கப்பட்டன வென்பதைக் காட்டும் ஸ்டேட்மெண்டிலிருந்து, நூற்றுக்கு 35.6 கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்காகவும், நூற்றுக்கு 17·08 சாகுபடி செலவுகளுக்காகவும் நூற்றுக்கு 10·04 கால்நடைகள் வாங்குவதற்காகவும் பெற்றுக்கொள்ளப்பட்டன வென்று தெரிகிறது. விவாகச் சடங்குகளுக்காக கடன் வாங்கப்பட்ட தொகை நூற்றுக்கு 3·58 தான் ஆயிற்று. இந்தத் தொகை இவ்வளவு கொஞ்சமாயிருப்பதே சங்கங்கள் சடங்குகளுக்காகப் பிடிக்கும் செலவைக் குறைப்பதில் முன்னிலும் இப்பொழுது அதிக கண்டிப்பாயிருக்கின்றனவென்பதைக் காட்டுகிறது. கூட்டுமுயற்சி பலமாயிருக்கும் இடங்களில், கிராமத்தார்களுக்குப் பயந்து ஒருமனிதன் விவாகங்கள் விஷயமாய் மிதமிஞ்சிச் செலவுகள் செய்வதுபோய் அப்படிப்பட்ட காலங்களில் அக்கிராமத்தார்களே அவனை செலவுகளைக் குறைக்கும்படி செய்கிறார்களென்று போன வருஷம் எடுத்துக் காட்டப்பட்டது. கூட்டாய்ப்பொறுப்பேற்பதனால் இவ்வளவு நன்மைகளு முண்டாகின்றன. ரெஜிஸ்ட்ராருக்குத் தெரிந்து அநேகர். ஸௌகார்களால் நாமகார்த்தமாய் விதித்து வாங்கப்படும் வட்டியைக் காட்டிலும் அதிக வட்டி விதங்களின்படி கூட தங்களுடைய கடன்களைச் சங்கங்களிடத்தில் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று ஆவல்கொண்டிருக்கிறார்கள். சங்கத்தார் கபடில்லாமல் அனுதாபத்துடன் விவகாரம் நடத்தும் கடன்காரர்களென்றும், அவர்கள் வட்டிமேல் வட்டி சுமத்தமாட்டார்களென்றும், பொதுவாய் அமுலிலுள்ள விதங்களைக்காட்டிலும் மிகவும் குறைந்த விதத்துக்குத் தாணியரூபமாய்த் தொகைசெலுத்த வேண்டுமென்று கேட்கமாட்டார்களென்றும், அறுவடை புலத்திலிருந்தே மாசூலை எடுத்துக்கொண்டு போய்விடமாட்டார்களென்றும் கடனாளிகள் அறிந்திருப்பதுதான் மேலேகண்டபடி அவர்கள் ஆவல் கொள்கிறதற்குக் காரணமாகும். ஐரோப்பாவில் செல்வநிலை சிம்பந்தமாய் மிகவும் கேவலமான ஸ்திதியிலிருந்த ஜனங்களுக்குள் ஜனோபகார பாங்கிகளால் ஏற்பட்ட சீர்திருத்தத்தைப்பற்றி மிஸ்டர் ஹல்ப் என்பவர் மிகவும் சிலாகித்துக் கூறியிருக்கிறார். இதேமாதிரி மாறு

தல் வங்காளத்திலும் நடந்தேறுவதாக மிஸ்டர் பூசன் உதகரித்துக் காட்டுகிறார். "மனிதனை ஒரே அமுக்காய் அமுக்கிவிடக்கூடிய கடன் பளுவைத் தீர்த்துவிட்டதற்கும், நிலம் குதுவையிலிருந்து மீட்கப்பட்டதற்கு அல்லது விற்பனை செய்யப்படுவதிலிருந்தும் காக்கப்பட்டதற்கும், கடனைத் தீர்க்கச் சக்தியில்லாமல் இன்ஸால்வெண்டாகும் ஸ்திதியிலிருந்தவர்கள் புதிய ஊக்கத்துடன் ஜீவனம் நடத்த ஆரம்பித்ததற்கும், செல்வநிலை சம்பந்தமாய் ஏற்பட்ட நூற்றுக்கணக்கான இதர அனுகூலங்களுக்கும் நான் அநேக உதாரணங்கள் எடுத்துக் காட்டக்கூடும்" என்று அவர் கூறுகிறார். வாஸ்தவமாய் இவ்வளவு அனுகூலங்களுக்கும் காரண பூதமாயுள்ள ஒரு முயற்சிக்கு ஒரு மகாணத்திலுள்ள படித்த வகுப்பாரின் ஆதரவு மிகவும் சொற்பமாகவே யிருக்கிறதென்றால், அந்த மாகாணத்தில் பொது வுணர்ச்சியே மிகவும் குறைவாயிருக்கிறதென்றுதான் சொல்லவேண்டும்.

தி இண்டியன் அக்ரிகல்சுரிஸ்ட்.

1911-ம்வரு அக்டோபர்மீ 2உ.

நிருபங்கள்.

———:(*):———

சேலம் ஜில்லா பாங்கியின் காரியதரிசியாகிய,
ம-ா-ா-ஸ்ரீ ஆதிநாராயண செட்டியாரவர்களுக்கு
மிஸ்டர் எச். டப்ள்யூ. ஊல்ப் எழுதின கடிதம்.

ரிபாரம் கிளப்,
லண்டன் S. W.
1911-ம்ஆ செப்டெம்பர்மீ 18உ

பிரியமுள்ள ஐயா,

ஆகஸ்ட்மீ 15உ யன்று நீர் எழுதிய கடிதத்துக்காகவும் அதனுடன் சேர்த்து அனுப்பப்பட்ட உங்கள் பாங்கியின் ரிபோர்ட்டின் பிரதிக்காகவும் நான் உமக்கு மிகவும் கடமைப்பட்டவனாயிருக்கிறேன். இந்தியாவில் கூட்டுத்தொழில் பாங்கிகளின் அபிவிருத்தியைப் பற்றி கேட்க நான் மிகவும் சந்தோஷிக்கிறேன்; சமீப அனுபவத்திலிருந்து இந்த பாங்கிகள் இந்தியாவுக்கு அவசியமாய் வேண்டியிருப்பவையென்று மாத்திரமல்லாமல் அவைகள் பிரயோஜனகரமா யிருக்குமென்றும் ஏற்படுவதாகத் தெரிகிறது.

சகல விஷயங்களையும் கவனித்தால் சென்ற வருஷத்தில் ஏற்பட்ட கஷ்டங்களினின்றும் நீர் மிகவும் கெட்டிக்காரத்தனமாய்த் தப்பித்துக் கொண்டீரென்றே நான் சொல்லுவேன். அதனால் உமக்கு மெத்த சிரமம் ஏற்பட்டிருக்குமென்பதில் சந்தேகமேயில்லை. அந்த காலத்தில் உமக்கு எவ்வித நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும், அதை அடுத்த பண்ணிரண்டு மாதங்களில் சரிப்படுத்திவிடலாமென்று நினைக்கிறேன்.

உங்களுடைய பிரதேசத்தின் நிலைமையை யறியாமலே, இவ்வளவு தூரத்திலிருந்துகொண்டு நான் புத்திமதி கூறுவதாவது குற்றம் சொல்வதாவது வாஸ்தவத்தில் மிகவும் கஷ்டமான காரியமாயிருக்கிறது.

கூட்டுத்தொழில் முறையான நாணயம் மாத்திரமேயல்லாமல் கூட்டுத்தொழிலின் மற்ற வகைகளும் இந்தியாவில் விருத்தியடைய வேண்டுமென்று ஒவ்வொருவரும் விரும்புவார்களென்பதில் சந்தேகமில்லை. அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதில் எல்லாவற்றைக் காட்டிலும் சுலபமான விஷயம் சாமான்களை, அதாவது சம்சாரத்துக் கவசியமான வஸ்துக்களையும் ஆஹாராதி விஷயங்களையும், கூட்டுத்தொழில் முறையாய் பகிர்ந்து கொடுப்பதுதான்.

கூட்டுத்தொழில் முறையாய் உற்பத்தி செய்வதே மிகவும் கஷ்ட சாத்தியமான விஷயம்; இது இந்தியாவில் நன்றாய்ப் பலிக்குமெனத் தோற்றுகிறது; நீங்களும் உங்களுடன் மெம்பர்களாயிருக்கும் மற்றவர்களும் இந்த விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தி, சந்தர்ப்பங்கள் அனுகூலமாயிருக்கக்கூடிய இடங்களிலெல்லாம் இதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயலுவீர்களென்று நான் மனதாரக் கோரினும்

அப்படி செய்வதில் உற்பத்தி செய்யப்படும் சாமான்கள் விலை போகுமா என்பதைக் குறித்து முக்கியமாய் நீங்கள் ஜாக்கிரதையுடன் கவனிப்பீர்களென்றும் நான் கோருகிறேன். இந்த விஷயத்தில் நீங்கள் ஜாக்கிரதையாயிருந்தால் தான் உங்கள் வேலை பலிதமடையும்.

முக்கியமாய் விவசாய சம்பந்தமான கூட்டுத்தொழில் விஷயமாயும் விவசாய சம்பந்தமாய் சாஸ்திரீயக்கல்வி புகட்டுவது விஷயமாயும் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்று இந்தியாவில் ஜனங்கள் மிகுந்த ஆவலுடன் விரும்புவதைப் பார்க்க நான் சந்தோஷ மடைகிறேன். நான் கவனிக்கக்கூடிய வரையில் ஆழ்ந்த யோசனையுடன் நல்ல வேலை செய்வதற்கு இடமிருப்பதாகவே தோற்றுகிறது.

உம்முடைய புதுமாதிரியான ஸ்தாபனத்தால் சில சந்தர்ப்பங்களில் பலிதத்துடன் வேலை நடத்துவதற்கு மிகவும் சிலாக்கியமான அல்லது மிகவும் துரிதமான வழி காட்டப்பட்டாலும், நான் அதைப்பற்றி அறிகிற வரையில் அது தன்னைச் சுற்றி நாட்டுபோங்கிகள் ஸ்தாபித்து அவைகளுக்குத் திரவிய சகாயம் செய்யும் "நகர"பாங்கியாகாது. அநேகமாய் நாட்டுப்புறத்து ஜில்லாக்களில் உங்களுடைய சங்கங்களின் மெம்பர்கள் பட்டணங்களிலுள்ள மெம்பர்களைப்போல் விவகார விஷயங்களில் அவ்வளவு தேர்ந்தவர்களா யிருக்கமாட்டார்கள்; ஆகையினால் இந்த ஏற்பாட்டில், நாட்டு பாங்கிகளுக்குப் புத்தி புகட்டவும், அவைகளின் வேலையைச் சீர்தூக்கிப் பார்க்கவும், மேல் விசாரணை செய்யவும் உங்களுக்கு சிறந்த அவகாசங்கள் ஏற்படும். மேலும் அவைகளின் ஆரம்ப தசையில் அவைகளை மேற்பார்வையிடுவதும் கவனிப்பதும் மிகவும் அவசியமாகும்.

இதில் நேரக்கூடிய ஆபத்து என்ன வெனில், அவைகள் தாங்கள் நகரபாங்கியிலிருந்து திரும்பினத்த அம்சங்களென்றும் அதைச்சேர்ந்த பாகங்களென்றும் நினைத்துத் திரவிய சம்பந்தமாயும் தன்முயற்சி சம்பந்தமாயும் இதரர்களின் சகாயமில்லாமல் தாங்களே நிர்வஹித்துக் கொள்வதற்கு எவ்வித பிரயத்தனமும் செய்யாமலிருந்து விடலாம்; அவைகள் தங்களுடைய சொந்த பலத்தையே நம்பியிருக்க வேண்டியதுபோக அப்படியிராமல், நகரபாங்கியை, கஷ்டம் நேரும் பொழுதெல்லாம் தங்களுக்கு வேண்டிய நிதிகளையும் இதர விஷயங்களையும் கொடுத்துதவவேண்டிய "சிறுதெய்வமாக"க் கருதலாம்.

விஷயங்களை வேறுமார்க்கத்தில் திருப்பவேண்டும். நாட்டுபாங்கிகள் நகரபாங்கியை நிச்சயமாய் ஒத்தாசை செய்யக்கூடிய ஒரு சௌகரியமான ஸென்ட்ரல் பாங்கியாகக் கருதினாலும், காலக்கிரமத்தில் தங்களைத் தாங்களே நம்பியிருக்கக்கூடியனவாக வேண்டும். ஆனால் அவைகள் தங்களுடைய காரியங்களுக்காகவேண்டிய திரவியத்தைத் தாங்களே சேகரித்துக்கொண்டு, மேல் விசாரணைக்குட்பட்டு தங்களுடைய விவகாரங்களைத் தாங்களே நடத்தக் கூடியவர்களா யிருக்கவேண்டும்.

இப்படி செய்யாவிட்டால், நகர பாங்கியைச் சேர்ந்த நீங்களும் உங்களுடைய சொந்த ஆஸ்தியைக்கொண்டு ஈடு கொடுக்க முடியாத அவ்வளவு கடன் பளுவை நீங்களே ஏற்றுக்கொண்டு விட்டதாக ஒரு காலத்தில் காண்பீர்கள்.

நீங்கள் வருஷாந்த கான்பரென்ஸுகள் கூட்டும் வழக்கத்தை விடாமல் அனுசரித்து வருவதைக் காண எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. அவைகள் நன்மையே பயக்குமென்பதில் சந்தேகமில்லை; இவைகளில் நடக்கும் விவாதங்களெல்

லாம் மிக்க குதூகலத்துடன் நடத்தப்படுகின்றனவென்றே நினைக்கிறேன். ஏனெனில், ஐக்கிய நாணயத்தால் ஏற்படும் உபாயங்களை அனுஷ்டிப்பதற்கு இம்மாதிரி கான்பரென்ஸுகளில் விஷயங்களைப்பற்றி நன்றாய்த் தர்க்கித்துத் தீர்மானங்கள் செய்வது மிகவும் அவசியமாகிறது. விஷயங்களின் காரணத்தைக்குறித்து கவனிக்காமலே ஈசனையே நம்பி அவைகளைப் போனவழியே போகட்டுமென்று விட்டுவிடுவதைக் காட்டிலும், இந்த விஷயத்தில் ஸகஜமாய் ஏற்படக்கூடிய கஷ்டங்களை எடுத்துச்சொல்லி அவைகளைப்பற்றித் தீரயோசிப்பதுதான் நலம்.

தங்கள் விதேயன்,

(ஒப்பம்) ஹென்றி டபிள்யூ. ஊல்ப்.

——:-:——

அங்கங்கே பொறுக்கி யெடுக்கப்பட்ட விஷயங்கள்.

——:(*):——

"ஐரிஷ் ஹோம்ஸ்டேட்" என்னும் பத்திரிகைக்கு எழுதப்பட்ட ஒரு கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டது.

பிரியமுள்ள ஐயா,

உங்களுடைய பாங்கிகளை நிர்வஹிக்கும் ஸ்தாபனங்களுடன் கூடிய சீக்கிரத்திலோ கொஞ்சகாலம் கழித்தோ மேல் விசாரணை செய்வதற்கான அல்லது பார்வையிடுவதற்கான சபை யொன்றும் சேர்க்கப்பட வேண்டுமென்று அறுபது வருஷகாலமாய் எனக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தின்மேல் நான் எப்பொழுதும் வற்புறுத்தி வருகின்றேன்; இந்தப்படி உங்களுடைய பாங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்குமானால், நீங்கள் சொல்லுகிற தவறுதல்களில் பாதிகூட நேரிட்டிரா. இப்படிப்பட்ட தவறுதல்கள் நேராமல் தடுப்பதற்குத் தான் இந்த சபை உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நான் மறுபடியும் சொல்வதென்னவென்றால், நீங்கள் இந்த விஷயத்தில் அலக்ஷியப்படக் கூடாது. கூட்டுத்தொழில் சங்கங்கள் (ராய்பெய்ஸென் மாதிரியை அனுசரித்தவை மாத்திரமல்ல) எங்கெங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவோ அல்லது ஸ்தாபிக்கப்படப் போகின்றனவோ அங்கெல்லாம் இவ்வித கஷ்டங்கள் நேரிட்டிருக்கின்றன அல்லது நேரும். ஜனங்கள் சிரமமெடுத்துக்கொள்ளப் பின்வாங்குகிறார்கள். இந்தியாவில் தெய்வீகமான "பஞ்சாயத்தின்" வேலையைத் தணிக்கைசெய்வதற்காக வேறொருவரை நியமிப்பதாகச் சொல்லுவதே பஞ்சாயத்தாருக்குக் கௌரவக்குறைவென்று நினைக்கப்படுகிறது. நான் சொன்ன சபையிலிருப்பதற்கு யோக்கியதையுள்ள நபர்கள் அகப்படுவதே அடிக்கடி கஷ்டமாகிறது. கதவின் கைப்பிடி சரியாய் வேலைசெய்யும் பொழுது, பூட்டும் சாவியும்கூட எதற்காக உபயோகிக்க வேண்டும்? ஆயினும், எங்கெங்கே கூட்டுத்தொழில் பாங்கியின் வேலையில் தவறுதல்கள் நேருகின்றனவோ அங்கெல்லாம், இந்த பாங்கி எந்தமாதிரியைப் பின்பற்றியதாயிருந்தாலுஞ்சரி

அநேகமாய் இப்படிப்பட்ட மேல் விசாரணை சபை இல்லாததனாலோ அல்லது அந்த சபையின் அசிரத்தையினாலோ இந்தத் தவறுதல்கள் நேரிட்டனவென்று காணப்பட்டது; ஆனால் சில வேலைகளில் நிர்வாஹ ஊழலினாலும் தவறுதல்கள் நேரிட்டிருக்கின்றன வென்பதில் சந்தேகமில்லை. கடன்தொகைகள் திருப்பப்படாமல் நின்றிருக்கும்படி விட்டு வைப்பதுதான் நஷ்டம் நேருவதற்கு நிச்சயமான காரணமாகும்; இப்படி விட்டுவைப்பதை மேல்விசாரணை சபையார் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள். எம். லுஜ்ஜாடி என்பவர் பாங்கிகளைப் போய் பார்க்கும் பொழுது கேட்கும் முதற் கேள்வி என்னவெனில், பாங்கிக்குப் பாக்கியாயிருக்கும் தொகைகளில் எவ்வளவு தொகை இன்னும் செலுத்தப்படாமல் நின்றிருக்கின்றன வென்பதேயாம்; இந்த தொகை அதிகமாயிருந்தால், அவர் தம்முடைய அசம்மதத்தைத் தெரிவிக்கிறார். மேல் விசாரணை சபையார் நஷ்டமுண்டாகும்படி பணம் கடன் கொடுப்பதற்கு சம்மதிக்கமாட்டார்கள். உங்களுடைய மேல் விசாரணை சபை பெரியதாயிருந்தாலுஞ்சரி சிறியதாயிருந்தாலுஞ்சரி, ஒரு சபை இருக்கவேண்டிய தென்னமோ அவசியம். இந்த சபை பெரியதா யிருக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். அதன் மெம்பர்களின் சங்கியை அவ்வளவு பெருத்த விஷயமல்ல. நெடுந்தூரத்திலுள்ள பிலிப்பைன் தீவுகளில் ராய்பெய்ஸென் பாங்கிகளை ஸ்தாபிப்பதற்காக வேலைசெய்த மிஸ்டர் பிஸ்க் வாரென் என்பவர் மாஸாசுஸெட்ஸில் மூன்று பேரடங்கிய சபைகளுடன் தம்முடைய "ராய்பெய்ஸன் கில்டுகள்" ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார். ப்ரான்ஸ் தேசத்தின் தென்பாகத்திலுள்ள சில ராய்பெய்ஸென் பாங்கிகளிலும் இவ்வளவே பெயர்கள் தான் இருக்கிறார்கள். இந்த மூன்று பேரும் தங்களுடைய வேலையைச் செய்துவரும் வரையில் எல்லாம் நன்றாய்த்தானிருக்கும்.

இப்பொழுது விஷயங்களை மறுபடியும் ஒழுங்கா யமைக்கப்போகிறபடியால், இந்த அம்சத்திலும், இன்னும் இரண்டொரு அம்சங்களிலும் உங்களுடைய விதிகள் திருத்தப்படுமெனக் கோறுகிறேன்.

பணத்தைச் சும்மா வைத்திருப்பதனால் நேரிடக்கூடிய கெடுதியைப்பற்றி நீர் வற்புறுத்திக் கூறுவது மிகவும் நல்லதேயாம். அதனால் நஷ்டம் நேரவே நேரும். இங்கிலீஷ் சானலுக்கு இப்புறத்திலுள்ள லக்ஷாதிகாரிகளால் அனுசரிக்கப்படுகிற பத்ததிக்கு நான் முழுவதும் விரோதமாயிருப்பதற்குக் காரணம் இதுதான்; இந்தபத்ததி என்னவெனில், பணம்வேண்டி யிருப்பதற்கு முன்னமே இப்படிப்பட்ட விஷயத்தில் ஸென்ட்ரல் பாங்கியென்று தப்பாய்ச் சொல்லப்படும் ஒரு பாங்கியைக்கொண்டாவது ஸர்க்காரால் கொடுக்கப்படும் முன் பணங்களைக் கொண்டாவது வேறே விதமாயாவது பணத்தைச் சேகரித்து வைத்துக்கொள்வதேயாம். நாகரீகத்தின் உச்ச நிலையிலிருக்கும் லண்டன் நகரவாஸிக்கு கிராம வாழ்க்கை சம்பந்தமான விஷயங்களைப்பற்றி எவ்வளவு தெரியுமோ, அவ்வளவு தான் இந்த லக்ஷாதிகாரிகளுக்கு ராய்பெய்ஸென் ஏற்பாட்டின் முக்கிய கோட்பாடுகளைப்பற்றித் தெரியும். இந்த கெடுதி நேருவதைத் தடுக்கும் பொருட்டே, ராய்பெய்ஸென் பாங்கிகள் எப்பொழுது வேண்டுமென்றாலும் பணம்கிடைக்கக் கூடியதாயிருக்குமாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு வேண்டியது நாணயமேயொழிய ரொக்கமல்ல.

ஸர்க்கார் உதவியைப்பற்றிப் பேசுங்கால் இன்னொரு விஷயம் என் ஞாபகத்துக்கு வருகிறது; அதாவது, இந்த கடிதத்தை உம்முடைய சந்தாதாரர்கள் படித்துக் கொண்டிருக்கையில், நான் ஜர்மெனியிலுள்ள தாய் ராய்பெய்ஸென் பாங்கிகளின் வருஷாந்த காங்கிரஸில் ஆஜராயிருப்பேன்; இந்தகாங்க்ரெஸுக்கு நான் போவதன் நோக்

கமே, இந்த பாங்கிகளுக்கு ஸர்க்கார் உதவி அவசியமில்லாமலிருந்தபோதிலும் 1895-ம் வருஷத்தில் அவைகளுக்கு நிர்ப்பந்தமாய்க் கொடுக்கப்பட்டு சுமார் பதினைந்து வருஷ காலமாய் அவைகளுக்குப் பெரும்பளுவாயிருந்துவந்த ஸர்க்கார் உதவியை அவைகள் கடைசியில் தைரியத்துடன் உதறிவிட்டதைப் பற்றி அவைகளை மனதார வாழ்த்த வேண்டுமென்பதுதான்.

ஏறக்குறைய 4500 நாட்டு பாங்கிகள் ஸர்க்கார் சம்பந்தத்தை உதறிவிட்டு, அந்த சம்பந்தத்தின் அறிகுறியேயில்லாமல் வெறுப்புடன் ஒழித்து விட்டன. அவைகளுக்கு வேண்டிய பண முழுவதையும் வர்த்தக முறையில் அவைகள் வேறிடங்களில் பெறக்கூடும்.

உங்களைப்பற்றி மற்றொரு அம்சத்தைக் குறித்தும் நான் பேசுவதற்கு அனுமதி வேண்டுகிறேன். உங்கள் பாங்கிகளிலுள்ள மெம்பர்கள் ஒரே ஒரு விவகாரத்துக்காக மாத்திரம் வேலை செய்கிறதில்லை. நீடித்திருக்கவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்காக அவர்கள் வேலை செய்கிறார்கள். இதற்கு ஆரம்ப காலத்தில் சிறிது தன் மறுப்பு அவசியமாயிருக்கலாம். உங்கள் மெம்பர்கள், தங்களுடைய பாங்கி இதரர்களின் உதவியின்றி விவகாரம் நடத்துமாறு கொஞ்சம் அதிக வட்டி கொடுக்க இஷ்டப்படவேண்டும். அது நூற்றுக்கு 4 வீதப்படியாவது அதற்கும் குறைந்தாவது கடன் கொடுக்கக்கூடிய காலம் வரும். இடலியிலே லாரெஜ்ஜியாவெனுமிடத்தில் முதன் முதல் ஏற்படுத்தப்பட்ட ராய்பெய்ஸென் பாங்கிக்கு நூற்றுக்கு 5 வீதம் விஷயங்களைச் சரிக்கட்டிக் கொண்டுபோவது சாத்தியமென்று காணப்பட்டது. ஆனால் அதன் மெம்பர்கள் அதற்கு சேமநிதி யொன்றிருக்கவேண்டியது அவசியமென்று நினைத்தார்கள்; ஆகையினால், நூற்றுக்கு 6 வீதம் கொடுப்பதாக அவர்கள் ஏகோபித்துத் தீர்மானித்துக் கொண்டார்கள். இதனால் அவர்களுக்குக் கிடைத்தப் பிரதிபல னென்னவெனில், அவர்களுடைய பாங்கி திரவிய சம்பந்தமாய் முன்னிலும் நல்ல நிலைமையிலிருப்பதேயாம். உங்களுடைய பாங்கிகளில் சில இன்னும் கேவலமான ஸ்திதியிலிருக்கின்றன; ஏனெனில், ஒரு சரியான கையிருப்புச் சீட்டுத் தயார் செய்வதுகூட அவைகளுக்குச் சாத்தியமாயில்லை. அவைகள் இந்த அதிகப்படியான வட்டி கொடுக்க முணுமுணுக்கக் கூடாது. இது சிறிது காலத்துக்குத்தான் அவசியமாயிருக்கும்.

தங்கள் விசுவாசமுள்ள
ஹென்றி டபிள்யூ ஊல்ப்.

கூட்டுத்தொழிலின் உண்மையான உட்கருத்து.

நல்ல சாமான்களை உற்பத்தி செய்வதற்கும், சுத்தமான வஸ்துக்களை விற்பனை செய்வதற்கும், ஜனங்களின் உழைப்பினாலும் தொழிலினாலும் கிடைத்த பொருள்களை அவர்களுக்குள் பகிர்ந்து கொடுப்பதற்கும் மாத்திரமே நாம் இங்கிருக்க வில்லையென்றும், இந்த புகழுக்குரிய நோக்கங்களுடன் மனிதனை முன்னிலும் கல்வியில் தேர்ந்தவனாகவும் ஒரு தேசத்தின் பிரஜையாகத் தான் செய்யவேண்டிய அலுவல்களைச் செய்து முடிப்பதற்கு அதிக யோக்கியதை யுள்ளவனாகவும் செய்யும் பொருட்டு வேலை செய்வதற்காகவுங்கூட நாம் ஒன்று சேருகிறோமென்றும் நாம் அங்கீகரித்தால், இந்த முயற்சியின் சிறந்த கருத்துகளை நாம் அறிந்து நடப்பவர்களாவோம்.

(தி கோஆபரேடிவ் நியூஸ்)

சுற்று விளம்பரங்கள்.

1911-ஆ செப்டெம்பர்மீ 25வயில் கௌரவ சங்க ஸ்தாபகர்களுக்கு விடுத்த சுற்று விளம்பரம்.

கூட்டுத்தொழில் சங்கங்களை ஸ்தாபிப்பதற்கான காலம் ஆரம்பித்து விட்டதென்றும், இனி நடக்கப்போகிற அரை வருஷத்தில் டிபார்ட்மென்டின் கவனமெல்லாம் கூட்டுத்தொழில் சங்கங்களை ஸ்தாபிக்கும் வேலையிலேயே முக்கியமாய்ச் செலுத்தப்படுமென்றும் உங்களுக்கு நியாபக மூட்டுகிறேன். இந்த விஷயத்தில் நீங்கள் அனுதாபத்துடனும் உற்சாகத்துடனும் என்னுடன் ஒத்துழைக்க வேண்டுமாய்க் கோருகிறேன். இந்த முயற்சியின் பிற்காலகதியானது கௌரவ சங்கஸ்தாபகர்கள் டிபார்ட்மென்டின் வேலை விரைவாய் நடக்கும் பொருட்டு எவ்வளவு தூரம் உதவிபுரிகிறார்களோ அதையே பொறுத்ததாகு மென்ற விஷயம் சகலராலும் அங்கீகரிக்கப்பட் டிருக்கிறது.

2. இந்த ஆக்டை அனுசரித்து சென்ற ஆறு வருஷங்களாக வேலைசெய்து வந்ததில், சங்கங்களைப் பலிதத்துடன் நடத்தவேண்டுமானால் அடியிற்கண்ட விதிகளை அனுசரிக்கவேண்டியது அவசியமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.—

I. கூட்டுத்தொழில் சங்கங்களின் நோக்கங்கள்.

தனி நபர்களைக் கடனிலிருந்து விடுவிப்பது மாத்திரமேயல்லாமல் மொத்தத்தில் சமூகங்களுக்கே இவ்வித நன்மை செய்து அவைகளை சிக்கனத்தை அனுஷ்டிக்கும்படி செய்வதும் சங்கங்களின் நோக்கமாகு மென்றும், ஆகையினால் கடனில் முழுகியிருக்கும் நபர்கள் தங்களுக்குத் தற்சமயம் சிறிதுமட்டில் உதவி ஏற்படும் பொருட்டு சங்கங்கள் ஸ்தாபிக்கும்படி விடக்கூடாதென்றும் சங்கங்களில் மெம்பராய்ச் சேருவதற்கான விண்ணப்பம் செய்துகொள்பவர்களுக்கு ஸ்பஷ்டமாய் எடுத்துச் சொல்லவேண்டும். உதாரணமாக, 10,000 ரூபாய் கடனுள்ள ஒருவர், சங்கத்துக்குக் கொடுக்கப்படக்கூடிய கடனில் பெரும்பாகத்தைத் தன்னுடைய சொந்த கடன்களைத் தீர்க்கும் பொருட்டு நேராகவாவது வேறுவிதமாயாவது உபயோகித்துக் கொள்ளலாமென்கிற நோக்கத்துடன் தானும் ஏத்தனித்து ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கலாம். "இது ஸ்பஷ்டமாய், கெடுமதிரியை அனுசரித்த சங்கமாகும். எங்கே அதிகமான தாங்கள் உயர்ந்த வீதங்களின்படி வட்டி கொடுத்துக்கொண்டிருக்கும் தங்களுடைய சொந்த கடன்களைத் தீர்க்கும்பொருட்டு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறார்களோ அவர்கள் மத்தியில் சங்கம் ஸ்தாபிப்பதில் உற்சாகமூட்டவேண்டும்.

II. வேலைசெய்யும் வழி.

சங்கங்கள் ஸ்தாபிப்பதற்கான விண்ணப்பங்களைப் பைசல் செய்யும்பொழுது, கௌரவ சங்கஸ்தாபகர்கள் விண்ணப்பதாரர்களின் சங்கியை என்னவென்று விசாரிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள பத்து என்னும் சங்கியையானது அனுஷ்டானத்தில் போதாமலிருப்பதாகக் காணப்படுகிறது. மெம்பராவதற்காக விண்ணப்பம் செய்து கொள்பவர்களின் மொத்த ஆஸ்தி எவ்வளவென்பதும் அவர்களுக்கு எடுத்த வுடனே கடனாக எவ்வளவு தொகை வேண்டியிருக்கு மென்பதும் ரெஜிஸ்ட்ரார் கவனிக்கவேண்டிய விஷயங்களாகும். ஒரு பெரிய மனிதன் அல்லது ஒரு பெருத்த குடும்பம் கடனில் மூழ்கியிருக்கும் இடங்களில் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவதைத் தடுக்கவேண்டுமென்று மறுபடியும் எடுத்துக் கூறப்படுகிறது. முதல் தடவையில் கேட்கப்படும் கடன் தொகையானது சங்கத்துக்கு ஆரம்பத்திலிருந்த ஆஸ்தியின் ஈட்டின் மேலேயே மறுபடியும் கடன்கள் வாங்குவதற்கு இடங்கொடுக்கும்படியானதா யிருக்குமாறு கௌரவ சங்கஸ்தாபகர்கள் விசேஷ கவனம் செலுத்தவேண்டும்.

III. சங்கங்களுக்காக விண்ணப்பம் செய்துகோள்பவர்கள் அறியவேண்டிய கோட்பாடுகள்.

சங்கத்தைச் சேர்ந்த சகல விஷயங்களிலும் காலதாமதம் சிறிதும் நேராமல் நடப்பது அவசியமென்பதைக் கௌரவ சங்கஸ்தாபகர்கள் சங்கங்களுக்காக விண்ணப்பம் செய்துகொள்பவர்களின் மனதில் படும்படி சொல்லவேண்டும். இந்த முயற்சியினால் வட்டிவீதம் குறைக்கப்படுவதானது அவ்வளவு முக்கியமான விஷயமல்ல; ஜனங்களுக்குள் சிக்கனமாயும் காலந்தவறாமலும் நடக்கும் வழக்கத்தை விருத்திசெய்வதே முக்கியமானதாகும். இந்த முயற்சியினால் ஏற்படக்கூடிய திரவிய சம்பந்தமான அபிவிருத்தியைக் காட்டிலும் நன்னடைக்கை சம்பந்தமான சீர்திருத்தமேமுக்கியமானதாகையால், சங்கத்துக்காக விண்ணப்பம் செய்துகொண்டவர்களில் எவர்கள் சங்கத்தைப்பற்றி நினைப்பதற்குமுன் அநீதவட்டி வாங்குபவர்களுக்குக்கூடக் கிரமமாய் வட்டி செலுத்துவதில்லையோ அவர்களை விட்டுவிடுவதே நலமாகும்.

(b) சங்கங்களுக்காக விண்ணப்பம் செய்து கொள்பவர்கள்-பொறுப்பு வரையறுக்கப்படாதிருப்பதன் முழு அர்த்தத்தையும் அறிந்திருப்பது உசிதமாகும்; மேலும் பொறுப்பு வரையறுக்கப்படா திருப்பதானது ஒரு நாட்டுச் சங்கம் ஸ்தாபிப்பதற்காக யதார்த்தமாய் ஒன்றுசேரும் நபர்களுக்கு நாணயமேற்படுதற்கு ஓர் ஆதாரமாயும் திரவிய சம்பந்தமாய்ப் பலமுள்ள ஆதாரவாயுமிருந்தாலும், கெட்ட எண்ணங்களுள்ள மனிதர்களை அப்படிப்பட்ட சங்கத்தில் சேர்த்தாலும் அல்லது அப்படிப்பட்ட சங்கத்தை ஸ்தாபிக்கும்படி தூண்டினாலும் அதனால் ஆபத்தான விளைவுகள் உண்டாகலா மென்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நன்றாய் நிர்வஹிக்கப்பட்டவரும் ஒரு சங்கத்தில் பணக்காரர்கள் கூட தங்களுடைய வரையறுக்கப்படாத பொறுப்பை ஈடாகவைப்பதில் யாதொரு அப்பியந்தாமுமில்லை. வாஸ்தவத்தில் பணக்காரர்களைச் சங்கத்தில்

சேரும்படி தூண்டவேண்டும். வரையறுக்கப்படாத பொறுப்பேற்ற நாட்டுக் கூட்டுத் தொழில் சங்கங்களுக்கு அதி முக்கியமாயும் உபயோகமாயும் இருக்கவேண்டியவைகளெவையென்றால் சொற்ப பங்கு மூலதனமும், சொற்ப பிரவேச கட்டணங்களும், விண்ணப்பதாரர்கள் யோக்கியர்களாகவும் நல்ல நடத்தை யுடையவர்களாகவும் இருப்பதுமேயாம்.

IV. ரெஜிஸ்டர் செய்யும்படி சிபாரிசு செய்வதெப்படி.

எல்லா விஷயங்களும் தயாராயிருக்கும் பொழுது, சங்கத்தை ரெஜிஸ்டர் செய்யும்படி சிபாரிசு செய்வதில் தாமதமுண்டாவதனால் அதற்காக செய்த வேலையினால் விளையக்கூடிய நற்பயன்களெல்லாம் சில வேளைகளில் கெட்டுப்போய் விடுகின்றன கௌரவ சங்க ஸ்தாபகர்கள் இதை மனதில் வைத்து, சங்கத்தை உடனே ரெஜிஸ்டர் செய்வதற்குத் தடை எதுவும் நேரிடாதிருக்குமாறு அது சரியான சகாயச்சட்டங்களை சித்திரத்தில் ஏற்படுத்திக் கொள்ளும்படி செய்யவேண்டும். சகல சங்கங்களின் சகாயச் சட்டங்களிலும் ப்ராவிடென்ட் (வருங்காலத்தை உத்தேசித்துச் செய்யும்) டபாஸிட்களை கட்டுவதற்காக நிபந்தனை ஒன்று சேர்த்திருப்பது நல்லதென்று நான் நினைக்கிறேன். சங்கங்களின் ஸ்திரத்துவத்தை உத்தேசித்து, சேமநிதியைப் பங்கிட்டுக் கொள்ளக்கூடா தென்றும், ஒரு சங்கம் மூடிவிடப்பட்டு அதற்குப் பர்த்தியாக உடனே வேறொரு சங்கம் ஸ்தாபிக்கப்படாமலிருக்கும் பட்சத்தில், சேமநிதியைக் கிராமத்தில் பொதுஜனங்களுக்கு பிரயோஜனமா யிருக்கக்கூடிய ஒரு காரியத்துக்காக உபயோகிக்கவேண்டு மென்றும் ஒரு விதி ஏற்படுத்துவது அவசியமாகக் காணப்படுகிறது.

—:*:—

சென்னை மாகாண அரசாங்க ஆவணக்காப்பக நூலகம்

விளம்பரங்கள்.

பெரிய காஞ்சீபுரம் அர்பன் சாலியர் யூனியன்,
ராஜாதெருவு, பெரிய காஞ்சீபுரம்.

(ஸ்தாபிதமானது டிசம்பர் 1905.)

உத்தேசம்:—சாலியர்களுடைய பிழைப்பையும் குணத்தையும் நேராக்க வரும் லாபத்தை சாலிய மெம்பர்களுக்கு மட்டும் வீதித்துக்கொடுக்கப்படுகிறது.

நன்றாக நெய்ததும், நாள்கூடி வருவதுமான வேஷ்டி, சோமன் வகைகள் இந்த யூனியனிடமிருந்து பின்வரும் விலை வீதத்திற்கு வாங்கலாம்.

நூல் நெம்பர்	அகலம்	விவரம்.	கஜம் 1-க்கு விலை.	
80	54	ஈர்க்கம்பி, கோரஞ்சு அல்லது சாதா	0	8 6
60	54	,, ,, ,, ...	0	7 6
	49	,, ,, ,, ...	0	6 6
	45	,, ,, ,, ...	0	5 6
40	54	,, ,, ,, ...	0	6 3
	49	,, ,, ,, ...	0	5 9
	45	,, ,, ,, ...	0	5 3

அஞ்சுகளுக்குப் பட்டு அல்லது சரிகையென்றால் தக்கபடி விலை கூடும், வேறுவகை வேஷ்டிவகையாரு கேட்பவரிஷ்டம்போல் செய்து கொடுக்கப்படும். வியாபாரமுறை:—ரொக்கம் அல்லது வால்யூபேயெபிள் போஸ்டு.

யூனியன் பிறப்பித்திருக்கும் பத்திரங்கள் யாரிடமுண்டோ அவர்களுக்கு ரூபாய் 1-க்கு அணா 1 வீதம், மேற்சொல்லிய விலை விகிதங்களிலிருந்து குறைத்துக் கொடுக்கப்படும். மற்ற விவரங்கள் தெரியவேண்டுமானால் அடியிற் கையொப்ப மிட்டவருக்கு எழுதலாம்:—அதாவது, செகர்டெரி.

பி. ராமசந்திரன்.
செகர்டெரி.
22—12—1910.

மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்க்
(லிமிடெட்.)

1904-ம் வருஷத்திய இந்தியா ஆக்ட் 10வதுப்படி ரிஜிஸ்தரானது.)

கணக்குகள்—மதராஸ் கோஆபரேடிவ் நாணயச்சங்கங்கள் ரிஜிஸ்திரார் அவர்களால் தனிக்கை செய்யப்படுகிறது.

கடன் கொடுப்பது ரிஜிஸ்திராருடைய விசேஷ உத்தரவின்படிதான்.

பாங்கு டிபாசிட்டுகள் வேண்டுகிறது—நிபந்தனைகள் அறியவேண்டுவோர் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

வேண்டியவர், செகர்டெரி, பத்மவிலாஸம், லஸ், மைலாப்பூர் S., என் றெழுதவும்.

மதராஸ் புல்லடின் ஆப் கோஆபரேஷனில் விளம்பரம் செய்வோர் கொடுக்க வேண்டிய கட்டணவீதம்.

எப்போதாவது போடுவதற்கு:—

1 பக்கம்	ரூ. 12.
½ பக்கம்	ரூ. 6.
¼ பக்கம் அல்லது குறைந்ததற்கு	ரூ. 3.

நாலு நெம்பர்களில் தொடர்ச்சியாய்ப் போடுவதற்கு:—

1 பக்கம்	ரூ. 40
½ பக்கம்	ரூ. 20
¼ பக்கம் அல்லது குறைந்ததற்கு	ரூ. 10

1904-வருஷத்திய 10-வது ஆக்ட்டுப்படி ரிஜிஸ்தரான ஸொஸைட்டிகளின் விளம்பரங்கள், ரிஜிஸ்திரார்ரின் சந்தோஷத்தை யனுசரித்துக் கட்டணமில்லாமலே பிரசுரிக்கப்படும்.

சேலம் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்க்

(லிமிட்டெட்)

(1904-ம் வருஷத்திய இந்தியா ஆக்ட்டு 10-வதுப்படி ரிஜிஸ்தரானது.)

(மூலதனம் 100000 ரூபாய்கள்)

முழுதும் கொடுக்கப்பட்டுள்ளது.

வருஷந்தோறும் கணக்குகள் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களால் பரிசோதிக்கப்பட்டு வரவு செலவு கணக்கு சேலம் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யப்படுகிறது. வாங்கும் கடன் ஒன்றொன்றும் ஐக்கிய நாணய சங்க ரிஜிஸ்ட்ராரால் ஆமோதிக்கப்படுகிறது.

பாங்க் டிபாசிட்டுகள் பெற்றுக்கொள்ளுகிறது: நூற்றுக்கு ஆறுவீதம் பட்டி கொடுக்கிறது. டிபாசிட்டுகள் சேலத்து பாங்கு ஆபீசிலும் பட்டணம் இந்தியன் பாங்கிலும் செலுத்தலாம். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் இந்த பாங்கில் செலுத்தலாம்.

மற்ற ஏற்பாடுகள் கீழ் குறித்தவருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

செக்ரிடரி.

சேலம் ஜில்லா அர்பன் பாங்க், லிமிட்டெட், சேலம்.

161987

JC

XMm 211 N09

N09.2

PRINTED AT THE SOUTH INDIAN PRESS, 18, LINGHI CHETTY ST., G. T. MADRAS.